வெளியீடு—19—4—1972]
Issued—19—4—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1972 ஜனவரி 24
**Monday 24th January 1972**

தொகுதி XV—எண் 1
**Volume XV—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

61540

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th to 31st January and 1st February* 1972.

(Volume XV—Nos. 1 to 6)

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Monday, 24th January* 1972. | |
| Personnel of the Government of Tamil Nadu .. .. .. .. | i-iv |
| Principal officers of the Tamil Nadu Legislative Assembly .. | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies .. .. .. .. .. .. .. | vii-xii |
| 1. Obituary Reference—Thiruvalargal K. Periannan, S. K. Subramania Pillai and R. Raghava Menon, former M.L.As. .. .. .. | 1 |
| 2. Questions and Answers .. .. .. .. .. .. | 1-25 |
| 3. Felicitations to Hon. Thiru V. R. Nedunchezhiyan on confirment of Doctorate .. .. .. .. .. | 26-27 |
| 4. Announcements— | |
| (i) Business of the House .. .. .. .. | 27 |
| (ii) Panel of Chairmen .. .. .. .. | 28 |
| (iii) Receipt of amendments to Motion of Thanks to Governor's Address .. .. .. .. .. .. | 86 |
| 5. Discussion on the Governor's Address .. .. .. .. | 28-85 |
| 6. Papers laid on the Table .. .. .. .. .. | 86-90 |
| *Tuesday, 25th January* 1972. | |
| 1. Question and Answers .. .. .. .. .. .. | 109-130 |
| 2. Adjournment Motion—Clashes omong the workers of the Simpson Group of Companies .. .. .. .. .. .. .. .. | 140-154 |
| 3. Discussion on the Governor's Address—*cont.* .. .. | 154-206 |
| 4. Papers laid on the Table .. .. .. .. .. | 206-207 |

Pages.

*Friday, 28th January* 1972.

1. Questions and Answers .. .. .. .. .. .. 217–255

2. Point of Order—

Discussion on the reports submitted to the Government .. 255–256

3. Adjournment Motions—

(i) Police lathi charge on the workers of the Avadi Tank Factory .. .. .. .. .. .. .. 256–263

(ii) Attack on women folk and causing damages to properties by armed workers at the residence of Simpson Company Workers .. .. .. .. .. .. .. .. 263–266

(iii) Disturbances at political meetings as in the case of meeting held at Tiruchirappalli .. .. .. .. .. 267–270

(iv) Beardsell Company's stand resulting in unemployment of workers .. .. .. .. .. .. .. .. 271–274

4. Discussion on the Governor's Address—*cont.* .. .. .. .. 274–322

5. Papers laid on the Table .. .. .. .. .. .. 322–323

*Saturday, 29th January* 1972.

1. Questions and Answers .. .. .. .. .. .. 333–374

2. Adjournment Motion—

Police lathi charge on the workers of Avadi Factory resulting in injuries to Trade Union Leaders .. .. .. 374–384

3. Discussion on the Governor's Address—*cont.* .. .. .. .. 385–426
427–448

4. Statement— ..

Labour Minister's statement on B & C Mill workers strike and the steps taken by Government .. .. .. .. 426–427

5. Papers laid on the Table .. .. .. .. .. .. 448

*Monday, 31st January* 1972.

1. Obituary Reference—

Thirumathi Jagadambal Velayudham, former M.L.A. .. 455

2. Questions and Answers .. .. .. .. .. .. 455–493

3. Adjournment Motion—

Visit of Central Minister Thiru K. R. Ganesh to hospital to see certain labour leaders under detention .. .. .. 493–499

4. Government Bills—

The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. .. 499

5. Discussion on the Governor's Address—*cont.* .. .. 500–557

6. Papers laid on the Table .. .. .. .. .. 558



Pages.

*Tuesday, 1st February* 1972.

1. Obituary Reference—

King Mahendra of Nepal .. .. .. .. .. 559

2. Questions and Answers .. .. .. .. .. .. 559–597

3. Adjournment Motion—

Manhanding of a teacher and consequent closure of Nadar's High School, Tirumangalam .. .. .. .. .. 597–600

4. Calling Attention—

Non-payment of salary to the teachers of Singanallur Municipal School .. .. .. .. .. .. 600–601

5. Government Resolution—

Ratification of the Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971 .. .. .. .. .. .. .. 607–663

(ii) Amendments to Madras Cotton Transport Rules, 1950. 673–676

6. Point of Order—

Consideration of a Bill without giving sufficient time to go through it .. .. .. .. .. .. .. 663–665

7. Government Bill—

The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 .. .. .. .. .. .. .. .. 668–673

8. Papers laid on the Table .. .. .. .. .. 676–678

Pages.

How to use the Index.

The Index is arranged alphabetically. The Main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution. (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporation, etc., are consolidated under the said Main heading, i.e., Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like schools colleges, conferences, sports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main heading 'Papers laid on the Table'.

Rulings and Observations from the Chair are indexed under the Main heading 'Chair'.

A list of abbreviations used in the Index is given below:—

A.M.|Ad. Motion—Adjournment Motion.

Ann.—Announcement.

B.O.H.—Business of the House.

C.A.—Calling attention to a matter of urgent public important.

C.A.St.—Calling attention statement.

Consid.—Consideration stage of a Bill, This stage includes—

(i) Motion to refer to Select|Joint Select Committee.

(ii) Amendment to refer to Select|Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select| Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

Consid. Cl.—Consideration of clauses of a Bill.

D.E.E.—Demands for Excess Expenditure.



Dis. S.D. or D.S.D.—Discussion for Short Duration on an urgent matter of Administration. G.A.—Governor's Address.

D.S.G.—Demands for Supplementary Grants.
G.A.—Governor's Address.

G.D.—General Discussion.

H.A.H.
Dis.|H.H.D.—Hour-hour Discussion.

Int.—Introduction stage of a Bill.

L.A.—Legislative Assembly.

L.C.—Legislative Council.

M.—Motion.

P.M.—Privilege Motion.

R|Res.—R solution.

St.—Statement.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடி-நீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்த்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்,

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.**

### பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.**

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

### சட்டப் பேரவைச் செயலாளர் :

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள் :

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
| --- | --- |
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ. |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணாநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம். |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | ஹஊர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. | மங்கலூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ரம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. | முசையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில் |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிப்பாளையம் |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம் |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர் |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.) |
| 207 முத்தையா, திரு. கே. சே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கனுதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தோட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்) |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

**திங்கட்கிழமை, 1972 சனவரி 24.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. பெரியண்ணன், ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை, ஆர். ராகவ மேனன் ஆகியோர் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரம்பலூர், ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-இலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. பெரியண்ணன் அவர்கள் 16—12—1971-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தென்காசி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1952-லிருந்து 1957-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 9—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு கிராமப்புற பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1946-இலிருந்து 1952-ஆம் ஆண்டுவரை உறுப்பினராகவும், மற்றும் 1946-லிருந்து 1947-ஆம் ஆண்டுவரை திரு. பிரகாசம் அவர்களுடைய அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராகவும் இருந்த திரு. ஆர். ராகவ மேனன் அவர்கள் 20—1—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும், இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*(அவையினர் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)*

### 2. வினாக்கள்—விடைகள்

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**கோவை மருத்துவக் கல்லூரியில் பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி**

*1 **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரியில் பல் வைத்தியப் பிரிவு, கட்டாய உதவிச் சம்பளப் பயிற்சி திட்டத்தின் கீழ், பல்நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி ஒன்றை அளிக்கின்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியில் உள்ள பல் வைத்தியப் பிரிவில் பல் நல இயல் வல்லுநர்களுக்கான பயிற்சி அளிக்கும் திட்டம் இல்லாமலிருந்தாலும், தமிழகத்தில் வேறு எந்த மருத்துவக் கல்லூரியிலாவது அப்படிப்பட்ட திட்டம் நடைமுறையில் இருக்கிறதா ? வேறு மருத்துவக் கல்லூரிகளில் நடைமுறையில் இருந்தால், பிறகு அங்கும் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பல் நல உதவியாளர்களுக்கென்று இந்தப் பயிற்சி சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது. இதிலே பயிற்சி பெறுகிற மாணவர்கள் ஓராண்டுக்கு ஆறு பேர்கள்தான். அப்படிச் சில ஆண்டுகளாகப் பயிற்சி பெற்ற அனைவரும் கூட இன்னும் வேலையில் சேர்ந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. 'மெட்ராஸ் மெடிகல் காலேஜ்' என்று வழங்கப்படுகிற சென்னை மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்றிருக்கின்ற அந்த மாணவர்களுடைய எண்ணிக்கையே தேவைக்குப் போதுமானதாக இருக்கிறது. மேலும், அவர்களுக்கு மாத மொன்றுக்கு 50 ரூபாய் வீதம் உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. எனவே, வேறு பல இடங்களில் விரிவாக்கப்படுவது இயலாத ஒன்றாகும்.

**திரு. என். கிட்டப்பா :** பல் வைத்தியம் பார்க்கக்கூடிய டாக்டர்களை, நமது மாநிலத்தில் எல்லாத் தாலுக்காத் தலைநகரங்களிலும் உள்ள அரசு மருத்துவ மனைகளில் நியமிப்பது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது இந்தக் கேள்வியிலிருந்து எழுவதல்ல. உறுப்பினரவர்கள் டாக்டர்களைப்பற்றிக் கேள்வி கேட்கிறார். ஆனால், இது பல் நல உதவியாளர்களை (ஹைஜினிட்ஸ்) பற்றியது. இருந்தாலும், அப்படி தாலுக்கா மருத்துவ மனைகளில் அமைப்பதற்கான ஒரு பொது நோக்கம் இருக்கிறது. ஓராண்டுக்கு இத்தனை தாலுக்கா மருத்துவ மனைகளில்தான் ஏற்படுத்த முடியும் என்று திட்டம் இருக்கிறது. அதுபற்றி வேறு விதமான பரிசீலனையும் இருக்கிறது. அது முடிந்து அதற்கேற்ப அவர்கள் குறிப்பிடுகிற ஊர்களிலே அது தொடங்கப்படும்.

### கோவை அரசு தலைமை மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

* 2 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் தலைமை மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) ஆம் எனில் இக்குறையை நீக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) குடி தண்ணீர் தட்டுப்பாடு ஓரளவு இருந்தாலும் குறிப்பிட்ட நேரங்களில் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றைய தேவைகளுக்குச் சில மணி நேரங்



கள் கிணற்று நீர் வழங்கப்படுகிறது. கோவை மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சையரங்கத்திற்கும் இரத்த சேமிப்பு நிலையத்திற்கும் நாள் முழுவதும் நீர் வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையை மேலும் பெரிதாக்குகிறபொழுது கூடுதல் நீர்த் தேவையும் கருத்தில் கொள்ளப்படும்.

**திரு. சு. துரைசாமி :** சில நாட்கள் அங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக அங்கிருக்கும் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடு வராமல் அதற்குப் போதிய தண்ணீர் கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கோவை நகரத்தினுடைய குடி தண்ணீர்ப் பிரச்சினை பொதுவானது. பொதுவாக, கிடைக்கிற நல்ல குடி தண்ணீரைத்தான் மருத்துவ மனைக்குக் குடி தண்ணீராகப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படிப் பயன்படுத்துவதற்குச் சில மணி நேரங்கள் வரையறுக்கப்பட்டு ஒரு நாளைக்கு 5-½ மணி நேரம்—காலையில் 2 மணி நேரமும், இடைவேளையில் 1-½ மணி நேரமும், மாலையில் 2 மணி நேரமும்—குடி தண்ணீர் கிடைக்கும்படியும் மிச்ச நேரத்திற்குக் கிணற்றுத் தண்ணீர் கிடைக்கும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குடி தண்ணீரை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் முறையாக அவசியமான தேவைக்குப் பயன்படுத்துகிற முறை கையாளப்பட்டு, அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை இல்லாமல், அவர்களுடைய முழுத் தேவையும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### சென்னையிலுள்ள அரசு மருத்துவ மனைகள்

* 3 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இத்தேதியில் சென்னை மாநகரில் குளிர்சாதன வசதி கொண்ட அறுவை மருத்துவ சிகிச்சைக் கூடங்கள் உள்ள அரசு மருத்துவ மனைகள் எத்தனை ?

(இ) அவற்றிற்காகும் செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) சென்னை மாநகரத்தில் உள்ள மருத்துவ நிலையங்கள் 4 ஆகும்.

(இ) அவைகளுக்காக செலவாகிற தொகை ரூ. 8,63,697 (ரூபாய் எட்டு லட்சத்து அறுபத்து மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்று ஏழு மட்டும்).

**திரு. சு. துரைசாமி :** இராயப்பேட்டையிலிருக்கும் அரசு மருத்துவ மனையில் குளிர் சாதனம பொருத்தப்பட்டுள்ள அறுவைச் சிகிச்சை தியேட்டர்கள் போதாமலிருப்பதால் அவற்றை விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையில் இரண்டு ஆபரேஷன் தியேட்டர்களுக்குக் குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு ஆகியிருக்கும் செலவு ரூ. 1,10,600.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சர்க்காரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளிலெல்லாம் இம்மாதிரி ஏர்-கண்டிஷன்டு ஆபரேஷன் தியேட்டர்கள் வைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கேள்வி கேட்கிற மதிப்பிற்குரிய உறுப்பினரவர்கள் நாட்டினுடைய மொத்த வறுமையை உணர்ந்து அதை வலியுறுத்த வேண்டும். நாட்டின் மொத்த வறுமையை முதலில் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தற்போதுள்ள மொத்த வறுமை நிலையைக் கருத்தில் கொண்டால். எல்லா இடங்களிலும் குளிர் சாதனங்களை அமைப்பது என்பது இந்த அரசு மட்டுமல்ல, இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து வருகிற அரசாங்கத்தாலும் முடியாது.

* 4 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the electric fans in the general wards of Government General Hospital, Madras are regularly switched off between the months of September and March;

(b) if so, the reasons therefor; and

(c) the total revenue expenditure annually saved by the switching off of the fans during these six months in a year?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம்வரை பனிக்காலத்தை முன்னிட்டு மின் விசிறிகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

(உ) ரூபாய் முப்பத்தோராயிரத்து எண்ணூற்று அறுபத்தி நான்கு மட்டும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்த பான்களை குளிர்காலத்தில் நிறுத்துகின்ற காரணத்தினால், கொசு உபத்ரவம் நோயாளிகளால் தாங்க முடியாமல் இருக்கிறது. இதை உத்தேசித்தாவது பங்கா, பான்களுக்கு 'குளிர்காலத்தில் உபயோகப்படுத்தக்கூடாது' என்கிற தடையை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் இருந்தே குளிர் காலத்தில் மின்சார விசிறிகள், பங்காக்கள் உபயோகிப்பதை சிக்கனப்படுத்த வேண்டுமென்று எல்லா அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

All gazetted officers will be permitted the use of electric fans throughout the year but care should be taken not to use the fans unnecessarily. In offices or institutions where fans have not been installed, charges for punka-pulling will be permitted throughout the year. என்ற ஒரு கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போதும் கூட குளிர் காலத்தில் தேவையில்லை என்றாலும்—கொசு மிகுதியாக இருக்கிற நேரங்களில் தேவையானால் மின்சாரத்தைப் பயன்படுத்திக்



கொள்ளலாம். மேலும் 6 மாதங்கள் என்கிறபோது அக்டோபர், மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்கும் விலக்களிக்கப்பட்டு அந்தக் காலங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தும் இருக்கிறது.

## செஞ்சியிலுள்ள அரசு மருத்துவ மனை

* 5 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசினர் மருத்துவ மனையில் ஒரு கண்நோய் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** செஞ்சி மலைப் பகுதியாக இருப்பதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் அதிகமாக கண் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அப்போது கடலூர், விழுப்புரம் போன்ற பகுதிகளுக்கு அவர்கள் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதனை உத்தேசித்தாவது இந்த முடிவை மறுபரிசீலனை செய்து அங்கே ஒரு கண் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மருத்துவத்துறையில் உள்ள சிறப்புமிக்க ஸ்பெஷலிஸ்டுகளைப் போட்டு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினர் மாநிலத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பார்த்து எந்த எந்த தாலுக்கா மருத்துவ மனைகளில் எந்த எந்தப் பிரிவு மருத்துவத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதாக அறிக்கை தர இருக்கிறார்கள். அவர்களது அறிக்கையில் இந்தப் பகுதியில் கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டால் அதை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன:** தலைமை மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்டுகள் என்பதாக—அதுவும் சிறப்புத் துறையில் தலைசிறந்த நிபுணர்களாகக் கருதப்படுகிறவர்களே இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

* 6 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி அரசாங்க மருத்துவ மனையில் ரத்த பரிசோதனை நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி பகுதியில் இதை ஏற்படுத்தினால் இப்போது போக்குவரத்து வசதியில்லாது கஷ்டப் படுகிற அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்குமே, இதை யாவது கருதி மறுபரிசீலனை செய்து ரத்தப் பரிசோதனை நிலையத்தை அங்கே ஏற்படுத்த அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அண்மையில் நான் செஞ்சி மருத்துவ மனையைப் போய்ப் பார்த்தேன். அது அங்கத்தினருக்குத் தெரியாது. அந்த மருத்துவ மனையில் ஏற்கனவே லாபரெடரி அட்டெண்டண்ட் இரண்டாம் தரப் பயிற்சி பெற்றவர் ரத்தப் பரிசோதனைக்காக இருக்கிறார். அங்கே பெரிய லாபரெடரி ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், இதைப் போல இன்னும் பல இடங்கள் இருக்கின்றன. அந்த வரிசையில் ஏற்படுத்துகிறபோது செஞ்சியிலும் ஏற்படும். ஒருவேளை செஞ்சி அந்த வரிசையில் கடைசியில் தான் வரலாம்.

* 7 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) செஞ்சி அரசாங்க மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்ரே பகுதி ஏற்படுத்தப்படும் செயற்குறிப்பு அரசாங்க பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, செஞ்சி பகுதியில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு கைமுறிவு, கால் முறிவுகள் எல்லாம் ஏற்படு கின்றன. உடனே எக்ஸ்ரே எடுத்து போலீஸ் கம்ப்ளெயின்ட்டுகூடக் கொடுக்க முடியவில்லை. ஆகவே அதை உத்தேசித்தாவது அங்கே ஒரு எக்ஸ்ரே பிரிவை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ஆண்டு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த 10 லட்சம் ரூபாயில் அதிக படுக்கை வசதியுள்ள பத்து தாலுக்கா மருத்துவமனைகளில் இந்தப் பிரிவை ஏற்படுத்த முடிவு செய்திருக் கிறோம். குறிப்பாக அரக்கோணம், போளூர், ஹோசூர், நிலக்கோட்டை, உசிலம்பட்டி, நன்னிலம், மாயூரம், சீர்காழி போன்ற இடங்களில் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படுகிறது. வருகிற ஆண்டிலும் உறுப்பினர்கள் பரிசுச் சீட்டு விற்பனையை ஊக்குவித்தால் இன்னும் 20 படுக்கையுள்ள ஆஸ்பத்திகளுக்கும் விஸ்தரிக்கிறபோது செஞ்சிக்கும் வர முடியும்.

## *Labour strike in Madras Harbour*

* 8 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government are aware of the Labour strike in the Madras Harbour paralysing trade and industry in the State; and

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) சென்னைத் துறைமுகத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தது பற்றி அரசு அறியும். சென்னை துறைமுகத்தில் ஏற்படும் எல்லாவிதமான தொழில் தகராறுக்கும் சம்பந்தப் பட்ட அரசு மத்திய அரசு. ஆனால் இந்த வேலை நிறுத்தத்தினால் வர்த்தகமும் தொழிலும் நடை பெறாமல் முழுவதும் நின்றுவிட்டதா என்பது பற்றிய தகவல் எதுவும் இல்லை.

(இ) சென்னை கப்பல்தளத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்களும் சென்னை துறைமுகத்தில் உள்ள கடல் துறையைச் சேர்ந்த 1,300 தொழிலாளர்களும் 1970-71-க்கான தங்களது பூரிப்பூதியக் கோரிக்கையை வலியுறுத்தி முறையே 9—8—71-லும் 27—8—71-லும் வேலை நிறுத்தம் செய் தனர்.

(உ) தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (மத்திய பிரிவு) தொடங்கி வைத்த பேச்சுவார்த்தையின் பயனாக 3—9—1971-ல் இரு தரப்பினரிடை யேயும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, அன்றே வேலைக்குத் திரும்பினர்.

திரு. என். டென்னிஸ் : மாநில அரசு துறைமுக நல தொழிலாளர் போர்டு ஒன்றை அமைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை துறைமுகத்தில் நடந்த வேலை நிறுத்தம்—சம்பள போர்டு தீர்ப்பு சரியாக அமல்படுத்தப்படவில்லை, மத்தியஸ் தத்திற்கு விட்ட பிறகும் அமல்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால்தான் வந்தது என்பதை அரசு அறியுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்கான தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

## *Industrial disputes in Tamil Nadu*

* 9 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) number of disputes referred for adjudication after report under 12 (4) of the Industrial Disputes Act during 1970;

(b) the nature of disputes not referred for adjudication during the said period; and

(c) the number of cases which have been disposed of in six months?

THE HON. THIRU N. V. NATARAJAN : (a) Number of disputes referred for adjudication after report under 12 (4) Industrial Disputes Act during 1970—670.

(b) Number of disputes not referred for adjudication during 1970—318

(c) Number of cases which have been disposed of in six months—664.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 1970-ஆம் ஆண்டிலே ஆயிரம் டிஸ்ப்யூட்டுகள் அரசாங்கத்திற்கு வந்திருந்தும்கூட முந்நூறுக்கும் அதிகமான கேஸ்கள் எந்த முடிவுக்கும் அனுப்பப்படாமல் இருக்கிறதே, அந்தமாதிரியான நிலைமை சென்ற ஆண்டிலும் இருந்ததா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### சீரணிப்படையில் பெண்கள்

* 10 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு வட்டாரத்திலும், முழுவதும் பெண்களையே கொண்ட சீரணிப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** சீரணிப்படையின் நோக்கம் முழுமையாக ஈடேற வேண்டுமென்றால் கிராமங்களில் பெண்களையே இந்தப் படையில் சேர்த்துப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம். பரிட்சார்த்தமாகவாவது சில வட்டாரங்களில் பெண்களைக் கொண்டே இந்தப் படைகளை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சீரணிப் படையில்—சென்னையைப் பொறுத்தவரை 100 பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தச் சீரணிப்படையில் சேர்ந்து பணியாற்ற அதிகமான அளவில் முன்வரவில்லை. பெண்களைக் கொண்டே சீரணிப்படையை அமைக்கும் உறுப்பினருடைய அந்த எண்ணத்தைச் சமயம் வாய்க்கும்பொழுது பரிசீலனை செய்யலாம்.

### *Housing schemes for Harijans*

*11. *Q*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have come forward to finance the housing constructions for Harijan Colonies in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) மாநிலத்திட்டவரம்பில் அரிசனங்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவி மாநிலத்திட்டம் முழுமைக்கும் மொத்த மானியமாகவும் மொத்த கடனாகவும் விடுவிக்கப்படுகிறது. துப்புரவுப் பணிபுரியும் அரிசனங்களுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் மத்திய அரசின் ஆதரவுள்ள (Centrally sponsored) திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகையில் மத்திய அரசின் நிதி உதவி 50 சதவிகிதம் ஆகும்.



THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether the scheme will cover the entire State?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** என்டையர் ஸ்டேட் என்ற வகையில்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது திட்டங்கள் போட்டுச் செய்யும் சில இடங்களிலே செய்யப்படுகிறது, சில இடங்களிலே செய்வதற்குப் போதுமான இடம் கிடைக்காததால் செய்யமுடியவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are thousands of Harijans who are living in thatched huts and there is a great demand for houses for them. For the last two years I have been representing to the Government to take quicker steps to kindly see that they are provided with tile—roofed huts or good houses. May I know whether the scheme now started will apply to Dharmapuri district also?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மாநில அரசுத் திட்டத்தின் சார்பில் 940 ரூபாய் பெறுமானமுள்ள வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் கட்ட முடிகிறது. ஆனால், மேலே கூறிய இந்தத் திட்டம் மத்திய நிதி உதவி செய்யும் திட்டமாகும். துப்புரவு செய்யும் தொழிலாளர்களுக்கு மாத்திரம், நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மாத்திரம் அது தரப்படுகிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குத்தான் மத்திய அரசாங்கம் நிதியுதவி செய்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether the amount which we receive from the Central Government is by way of loan or grant?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மத்திய அரசாங்கத்திலிருந்து வாங்கிய மொத்த ஒதுக்கீட்டில் இன்னும் 8 லட்சம் ரூபாய் வரைக்கும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. 1971-72-ம் ஆண்டு வரையிலும் 72 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்ததில் 19.13 லட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது, மேற்கொண்டு இருக்கிற 8 லட்சம் ரூபாயை செலவு செய்ய முடியவில்லை. காரணம் சில நகராட்சி மன்றங்களிலே நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்கத் தேவையான இடங்கள் கிடைக்காத காரணத்தினாலே செலவழிக்கப்பட முடியவில்லை. அவற்றையும் விரைவிலே கட்டிமுடிக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுக்குள்ளாகச் செய்ய வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே பணம் மானியமாகக் கொடுக்கின்ற பர்சன்டேஜ் எவ்வளவு ? கடனாகக் கொடுக்கின்ற பர்சன்டேஜ் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 50 சதவீதம் என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். ஆனால் அது எல்லா அரிசனங்களுக்கும் இல்லை. அதிலிருந்து அன்கிளீன் ஒர்க்ஸ் செய்யக்கூடிய நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, 940 ரூபாய் அளவிலேதான் ஒரு வீட்டுக்கு ஒதுக்குகிறார்கள். அதன் காரணமாக சிறிய வீடுதான் கட்டிக் கொள்ளப்பட முடிகிறது. பெரிய வீடுகள் அவர்கள் தங்களுக்கென்று கட்டிக்

கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து போட்டுக் கட்டிக்கொள்ளலாம் என்று கேட்டால் அவர்களுக்கு அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே அப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டால், அதற்கு அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு **செய்யுமா?**

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு திட்டங்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கிறார்கள். 940 ரூபாய் கொடுப்பது என்பது மாநிலத்தின் திட்டம் ஆகும். அதில் எல்லா அரிசனங்களுக்கும் வீடுகள் கட்டித் தருகிறோம். அதிலே 750 ரூபாய் மானியமாகத் தருகிறோம். மீதியை கடனாகப் பெற்றுக்கொள்கிறார்கள். 940 ரூபாய்க்கு மேற்கொண்டு அவர்கள் போட்டு கட்டிக்கொள்ள வேண்டுமென்றால், அப்படிக் கட்டிக் கொள்ளலாம், அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

***திரு. எம். சுரேந்திரன் :*** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றால், நில ஆர்ஜிதம் செய்வதற்கு பணம் போதுமான அளவில் இல்லாததால் நில ஆர்ஜிதம் செய்வது நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று அதிகாரிகளுக்கு ஆணையிடப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** நில ஆர்ஜிதம் செய்வது கொஞ்ச காலம் நிறுத்தி வைக்கப்பட்டதுதான். 83 ஆயிரம் மனைகள் வரை அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்காமல் இருந்தன. அந்த நிலைமையில் மேலும் அரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக அர்ஜன்ஸி கிளாஸைப் பயன்படுத்தி கையகப்படுத்தி எங்கள் நிலங்களை எடுக்கிறார்கள், அவசரத்தை முன்னிட்டு எடுத்தாலும் வீடுகள் கட்டிக் கொடுக்காமல் ஆண்டுக் கணக்கிலே அப்படியே போட்டுவிடுகிறார்கள். எனவே அதன்மூலம் எடுக்க வேண்டாமென்று கேட்டார்கள். ஆகவே எடுத்திருக்கிற மனைகளில் வீடுகளை முதலில் கட்டிக்கொடுத்துவிடவேண்டும் என்ற முறையிலேதான் இடைக் காலத்திலே நில ஆர்ஜிதம் நிறுத்திவைக்கப்பட்டது, ஆனால் இப்பொழுது தொடர்ந்து செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. வீடுகளை விரைவிலே அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கின்ற வகையிலே கடந்த ஆண்டிலே மேலும் 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே கடைசிவரையிலும் அதைநிறுத்தி வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Landholdings*

* 12 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Director of Tenancy Records has recommended any probe into landholdings recently in this State; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** (அ) ஆம்.

(இ) சிறிய உழவர்களின் பொருளாதார நிலைமைகள், சிறு நிலவுடைமைகள் குறித்த பிரச்சினைகள், குத்தகையுரிமைகள் பதிவுச்சட்டத்தைச் செயல்



படுத்துவதில் உள்ள இடையூறுகள் ஆகியவைபற்றிய பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருத்துரைகள் முற்றிலும் ஏட்டளவே ஆகும்; அறிக்கையிலிருந்து உருவான பலன் ஏதும் விளையாது எனலாம்.

***திரு. ச. சங்குமுத்துத் தேவர் :*** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே என்னுடைய பகுதியில் இனும் கிராமங்கள் சர்வே செய்யப் படாமல் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களிலே புஞ்சைச் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த நிலங்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் அந்த நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் இனும்தாரர்களுடைய அனுபவத்தில் இருப்பதாக அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருப்பதால், அவற்றை பஞ்சாயத்திலே ஒப்படைப்பதற்கும் விவசாயிகள் பயனடைவதற்கும் அது தடையாகலாம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே அப்படித் தடைகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** இனாம் நோடிபிகேஷன் செய்தபிறகு அங்கே சர்வே வேலைகள் நிச்சயமாக நடைபெறும். அதன்பிறகு இவை நடக்கும்.

### *Tax on gases*

* 13 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether gas for use of catering is being taxed at source; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** (அ) ஆம்.

(இ) புர்சேன், கால்கேஸ், இன்டேன் போன்ற எரி பொருள் வாயுக்களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை நிலையில் 7 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது.

THIRU N. DENNIS: As it is an essential domestic article, may I know from the Hon. Minister whether tax would be collected in such a way as to save the purchasers from tax burden?

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :*** ஏற்கனவே பலமுனை வரியாக இருந்தது, இந்த மாமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது.

### நந்தியாலத்தில் மனு நீதித் திட்டம்

* 14 வினா—***திரு. கே. எ. வகாப் :*** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, வாலாஜா வட்டம், நந்தியாலம் கிராமத்தில் 1969-70-ல் மனு நீதித்திட்டம் நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை மனுக்கள் இன்று வரை பரிசிலனை செய்யப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) மொத்தம் 82 மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் 47 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பைசலாகியுள்ளன. மீதியுள்ள 35 மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இவற்றின்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பைசலாகியுள்ள 47 மனுக்களின் விபரம் பின்வருமாறு—

| | |
|---|---|
| பதிவு மாற்றம் சம்பந்தப்பட்டவை | 12 |
| பாலாறு பேசின் விதிகள் | |
| நில ஒப்படைப்பு | 10 |
| இதர விசயங்கள் | 25 |
| | 47 |

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, வாலாஜா வட்டத்தில் உள்ள இந்த நந்தியாலம் பகுதியிலே சாணாரம்பட்டு, மாங்குப்பம் கிராமங்களுக்குப் போய்வர சாலை வசதிகள் வேண்டுமென்று அந்தப் பகுதிகளிலேயுள்ள மக்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு மனிதர்கள் கால் நடைப் பாதை வழியாகவே நடந்து செல்லவேண்டும். வேறு வசதிகள் இல்லை. எனவே, பாதை வசதிகள் அங்கே ஏற்படுத்தித் தருவதற்கு அந்த மனுக்களிலே கேட்டுக்கொண்டுள்ளபடி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எல்லோரும் எல்லாக் கிராமங்களுக்கும் காலால்தான் நடந்து செல்லவேண்டும். அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

### நீதி மன்றங்கள்

* 15 வினு—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் ஓர் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, செஞ்சியிலிருந்து திண்டிவனத்திலிருக்கின்ற முன்சீப் கோர்ட்டிற்குச் சராசரியாக அதிகமான கேஸ்கள் சென்று கொண்டிருக்கின்றன. அங்கேயுள்ளவர்கள் எல்லாம் பல மனுக்கள் கொடுத்து செஞ்சியில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திண்டிவனத்திலே ஒரு அடிஷனல் முன்சீப் கோர்ட் ஏற்படுத்துவதற்குப் பதிலாகத் தனியாக செஞ்சியிலே ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** செஞ்சியிலிருந்து திண்டிவனம் 18 மைல் என்று கருதுகிறேன். அங்கே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் வைக்கலாம்





என்ற யோசனை உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் போதுமான அளவுக்குவேலை இருக்காது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

* 16 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் சப்-கோர்ட் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) 'இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்) குற்றவியல் (கிரிமினல்) நீதி மன்றங்களின் அதிகார வரம்பினை ஆராயும் குழு' இப்பொருள்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கரூர் ஒரு பெரிய நகரம். மேலும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் கரூரில் இருக்கிறது. அதைச் சுற்றிப் பல இடங்கள் இருப்பதால், இந்த சப்-கோர்ட் அமைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இந்த ஆராயும் குழுவிடத்தில் இந்தப் பிரச்னையை வைக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த சப் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் அமைப்பது சம்பந்தமாக வரதராஜன் கமிட்டி அமைத்து ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. அவர்கள் எப்பொழுது சிபார்சைக் கொடுப்பார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்கள் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆங்காங்கு பொதுமக்களையும், வழக்குரைஞர்களையும் சந்தித்துக் கருத்துக்களைச் சேகரிக்கிறார்கள். அவைகளெல்லாம் முடிந்தபிறகு விரைவில் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Release of prohibition offenders*

*17 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that prohibition offenders have been released around 4th week of August 1971 due to scrapping of prohibition throughout the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) மதுவருந்திய அல்லது மது வாங்கிய குற்றத்திற்காக அல்லது குடிபோதையில் இருந்த குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளுக்கு மட்டுமே தண்டனை குறைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. மொத்தத்தில் 802 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether it would not be proper to release all the prisoners who had been convicted previous to the repealing of the prohibition Act in the State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மதுவிலக்கு ரத்தானவுடன் மது குடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மது காய்ச்ச சட்டவிரோதமாக அனுமதிக்கப்படவில்லை. குடித்தவர்கள், மது வாங்கியவர்கள், குடிபோதையில் இருந்தவர்கள் இவர்களைமட்டும் விடுதலை செய்யலாம். மற்ற குற்றங்களைச் செய்தவர்கள் விடுதலை செய்யப்படவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

### வாலாஜாப்பேட்டையில் இரசாயனப் பொருள் உற்பத்தி ஆலை

*18 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜாப்பேட்டையில் சோடியம் டை கார்பனேட் என்ற இரசாயனப் பொருள் ஆலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மொத்த முதலீடு எவ்வளவு? அது எப்போது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ). சோடியம் டை குரோமைட் தயாரிப்பதற்கான ஆலை ஒன்று வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜாப்பேட்டையில் நிறுவப்பட்டு வருகிறது.

(இ) இத்திட்டத்தினால் அரசுக்குண்டான மீளாச்செலவு (Non-Recurring expenditure) ரூ. 4,65,000 நடைமுறைச் செலவு ஆண்டுக்கு ரூ. 2,90,000. இந்த ஆலை 1971 முடிவுக்குள் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த ஆலையில் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதால் ஒரு ஆண்டுக் காலமாகத் துவக்கப்படவில்லையென்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்த, அந்த காண்டிராக்டர்கள் பணத்தை முன்னாலேயே பெற்று விட்டதால் ரிப்பேர் செய்து கொடுக்காத நிலை இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? உடனடியாக அவைகளைப் பழுதுபார்த்து அவைகள் இயக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இருபற்றி அங்கத்தினர் கூறிய கருத்து ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது. அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே அவர்கள் இயந்திரங்களெல்லாம் அமைத்து அதற்கு 100-க்கு 90 சதவிகிதம் முன் பணமாகத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இயக்குநரின் சிபாரிசு அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதை 'டிரெயில்' செய்யும்பொழுது 'டீத்திங் டிரபிள்' எப்பொழுதும் தொழிற்சாலையில் வரும், அது வந்து இருக்கிறது. இன்னும் சில நாட்களுக்குள் சரிப்பட்டு உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





### திருவேடகத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை

*19 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை அமைக்க மதுரை மாவட்டத்திலுள்ள திருவேடகத்தில் இடம் பார்க்கப்பட்டுள்ளது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதுரை மாவட்டத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. போதுமான அளவு நீர்வசதியும் மின்சக்தியும் கிடைத்தால், மூலப்பொருள்கள் கிடைக்குமிடங்களுக்கும் உற்பத்திப் பொருளைப் பயன்படுத்தும் இடங்களுக்கும் அண்மையிலிருந்தல் மற்றும் இன்றியமையாத அடிப்படை வசதிகளும் போதுமான அளவில் போக்குவரத்து வசதிகளும் இருத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மதுரை மாவட்டத்தில் தகுந்த இடம் ஒன்று தொழிற்சாலை அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்படும்.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, அந்த பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலைக்கு மதிப்பீடு எவ்வளவு? எந்த இடத்தில் அதைத் துவக்குவதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுமார் 60 இலட்சம் அதற்கு ஆகும். மதுரைக்கும் மேலூருக்கும் இடையில் ஒத்தக்கடையிலே ஆரம்பிக்கலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### பஸ் டயர்கள் உற்பத்தி

*20 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பஸ் டயர்கள் செய்யும் புதிய தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலை எந்த இடத்திலே எவ்வளவு மூலதனத்தோடு அமைக்கப்படும்? அப்படி அமைக்கப்பட்டபிறகு இப்பொழுது இருப்பதுபோல் வெளிமார்க்கெட்டிலே அதிக விலைகொடுத்து டயர்கள் வாங்கக்கூடிய நிலை மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தத் தொழிற்சாலையிலே விரைவில் உற்பத்தி செய்ய நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுக்கிறது. ஆனால், அனுமதித்ததற்குப் பிறகு இதற்கு டெக்னிகல் கொலாபரேஷன் வேண்டுமென்று கேட்டபொழுது, பிற நாடுகளிலே அதை பெற்றுத்தர வேண்டும் மத்திய அரசாங்கம் இதிலே வெளிநாட்டுச் செலாவணி இருப்பதால் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. இதுபோன்ற அனுமதியைப் பல மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து 'டெக்னிக்கல் கொலாபரேஷன்' வெளிநாட்டிலிருந்து மத்திய அரசாங்கம் பெற்றுத் தரலாமா என்ற ஆராய்ச்சியை மத்திய அரசாங்கம் இப்பொழுது நடத்தி வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லா விலே இந்தத் தமிழ் மாநிலத்திலேயே அதிகமாக ரப்பர் விளைகிறது. ஆதலால் அந்தத் தொழிற்சாலையை அந்த ஜில்லாவிலே நிறுவ இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னொரு தொழிற்சாலை அப்படி வருமானால் அதைப் பரிசீலனை செய்யலாம். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மலேஷியா நாட்டிலிருந்து ஒருவர் சுமார் 75 இலட்சம் ரூபாய் அளவில் கொண்டு வந்து தொடங்கலாம் என்று இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைக்கொண்டு அதையும் தொடங்கலாம் என்று முயற்சி யெடுத்திருக்கிறார்கள். அதற்கு நம் அரசு ஆதரவு தந்திருக்கிறது. குமரி மாவட்டத்தில் இன்னொரு தொழிற்சாலையை அமைக்க முடியுமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும் பொழுது இந்தத் தொழிற்சாலை அமைய மத்திய அரசாங்கம் தாமதமாக்குவது தான் காரணம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது நம்முடைய நாட்டிலே பஸ் போக்குவரத்தை நாம் தேசியமயமாக்கி வருகிறோம். இந்த பஸ் போக்குவரத்திற்குத் தேவையான டயர்கள் நல்ல முறையிலேயும், விலை மலிவாகவும் கிடைக்க நமக்கு இந்த டயர் தொழிற்சாலை அத்தியாவசியமான ஒன்றாக இருக்கும் காரணத்தினால், மத்திய அரசாங்கத்தை உடனடியாக வற்புறுத்தி, இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த நம்முடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா? அத்துடன் மத்திய அரசாங்கம் சீக்கிரம் இதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டால், நம்முடைய அரசே இந்தத் தொழிற்சாலையை, டன்லப் போன்ற நிறுவனங்களோடு கூட்டு சேர்ந்து ஆரம் பிக்க முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டிலே ஓடும் பஸ்களை நாமே எடுத்து நடத்த மத்திய அரசாங்கத்தால்தான் அனுமதி தரப்படுகிறது. அந்த அனுமதியைப் பெற்றுத்தான் இப்பொழுது தேசியமயமாக்கினோம். அந்தச் சட்டத்திற்கு அனுமதி வாங்குவதற்குள் நாங்கள் பட்டபாடு பெரும் பாடு. இப்பொழுது இந்தத் தொழிற்சாலை. தொழிற்சாலைக்கு அனுமதிக் கிடைப் பதற்குப் பல ஆண்டுக்காலம் ஆகலாம். அனுமதி கிடைத்தபிறகு அதற்கு 'டெக்னிக்கல் நோ ஹௌ' பெறுவதிலே காலதாமதம். மத்திய அரசாங்கம் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

## கண்ணாடி புட்டிகள் உற்பத்தி

* 21 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கண்ணாடிப்புட்டிகள் (glass bottles தயாரி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளனவா?

(இ) இல்லையெனில் அரசு சார்பில் இத்தொழிற்சாலைகள் நிறுவும் உத்தேசமுண்டா?



மாண்புமிகு திரு. செ: மாதவன்: (அ) ஆம்.

(இ) அரசின் தமிழ்நாடு சிறுதொழில்கள் நிறுவனம் நடத்தும் கிண்டி கண்ணாடித் தொழிற்சாலையில் கண்ணாடிப் புட்டிகள் தயாரிக்கும் உத்தேசம் இருக்கிறது.

## பெரியாறு திட்டத்தின் நீர்மட்டங்கள்

* 22 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த மூன்று ஆண்டுகளாக, பெரியாறு கால்வாயில் தண்ணீர் திறக்கப் படும்போது பெரியாறு அணையின் நீர்மட்டம் எத்தனை கன அடியாக இருந்தது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: கடந்த மூன்று ஆண்டுகளின் பெரியாறு திட்டத்தின் நீர்த்தேக்க அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| பெரியாறு முக்கியக் கால்வாயைத் திறந்துவிடப்பட்ட நாட்களும் | | பெரியாற்றில் உள்ள மொத்த நீர்த்தேக்க அளவும். |
|---|---|---|
| 1—8—1969 | .. | 5,057 மில்லியன் கன அடி. |
| 1—6—1970 | .. | 3,754 ,, |
| 5—7—1971 | .. | 5,498 ,, |

திரு. பி. எஸ். மணியன்: தலைவரவர்களே, பெரியாறு பாசனப் பகுதியில் கடந்த 3 ஆண்டுக்காலமாக தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக ஒரு போக சாகுபடி செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திக்க அரசு சார்பிலே பெரியாறு அபிவிருத்தித் திட்டம் என்று மதிப்பீடு ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிறதே, அந்த மதிப்பீடு எத்தனை கோடி ரூபாய் அளவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது, எந்த ஆண்டு அது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றித் தனியாகக் கேள்விபோட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

## *State Farms Corporation*

* 23 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Seed Farms Corporation has sought the views of this Government in setting up of a farm in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) புதுடில்லி பண்ணை நிறுவனத்தால் பண்ணை ஆரம்பிப்பதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் மேல்சங்கம் ஆநந்தவாடி ஒதுக்கக் காட்டில் 10,000 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்படி இடத்தை நிறுவனத்திற்கு பண்ணை ஆரம்பிப்பதற்கு அளிக்குமாறு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பண்ணை 1971-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாள் மாண்புமிகு வேளாண்மை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

## *State Agricultural Council*

* 24 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an Agricultural Council has been set up in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, வேளாண்மை இயக்குநர் மாநில வேளாண்மை மன்றம் ஒன்றினை அமைத்துள்ளார். அதன் ஏற்புக் குறித்து, அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இத்தகைய வேளாண்மை மன்றங்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஆங்காங்கு மாவட்ட வேளாண்மை மன்றங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த வேளாண்மை மன்றங்களை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்படுபவர்கள் அதிகாரிகளா அல்லது அதிகாரப் பற்றற்றவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களைப் பரிசீலிக்கவும், செயல்களை ஒருமுகப்படுத்துவதற்கும் மற்றும், காலமுறைப்படி திட்டமுன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும் அரசு பல்வேறு பகுதிகளில் ஆராய்ச்சி நிலையங்களை ஏற்பாடு செய்து இருக்கிறது. அந்நிலையங்களை ஒரு முகப்படுத்துவதற்கு இந்த மன்றங்கள் பயன்படும்.

## *Taxis during night*

* 25 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the arrangements made by the Commissioner of Police, Madras for taxi travel for cinema goers during nights?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** "அண்ணாசிலை" "ஜெமினி" இவற்றிற்கு இடையேயுள்ள முக்கியத் திரைப்பட அரங்குகளுக்கு அருகில் வாடகைக் கார்களை நிறுத்திவைக்க அனுமதிக்கும்படி, போக்குவரத்துப் பிரிவிலுள்ள காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் கட்டளைகளிடப்பட்டிருக்கின்றன. இந்த வாடகைக் கார்கள் அங்கே நிறுத்தி வைக்கப்படுகின்றன. அவை, திரைப்பட அரங்குகளிலிருந்து வரும் பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கும் ஏற்றிச் செல்லுகின்றன.

## வந்தவாசியில் அரசுப் போக்குவரத்துத் துறையின் கிளைப்பணிமனை

* 26 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காட்டில் உள்ள வந்தவாசி பேரூராட்சியில் அரசு பஸ் டிப்போ ஏதும் செயல்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை பேர் வேலை செய்கின்றனர் ? எப்போது அது துவங்கப்பட்டது ?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் கிளைப்பணிமனை ஒன்று வந்தவாசியில் செயல்பட்டு வருகிறது.

(இ) இந்தப் பணிமனையில் 18 பேர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இது 20—1—1968 ஆம் நாளன்று செயல்படத் தொடங்கியது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வந்தவாசி அதிகமான பஸ்கள் (பேருந்துகள்) வந்து தங்கும் இடம். பஸ்ஸைத் தவிர வேறு ரயில் வசதி இல்லாத இடம். இப்போதுள்ள அரசாங்க பணிமனையில் பேருந்துகளைப் பழுதுபார்க்க போதுமான மெக்கானிக்குகள் இல்லை. இந்தப் பணிமனையில் உள்ள மெக்கானிக்குகள், மற்றும் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்போது 26 பேருந்துகள் அந்த வழியே செல்கின்றன, 6 பேருந்துகள் தான் அங்கே தங்குகின்றன. மொத்தம் 18 பேர் அங்கே பணிபுரிகிறார்கள். ஆகவே, உடனடியாக அங்கே உள்ள மெக்கானிக்குகள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

## அரசு பேருந்துகளில் பெண்கள் நியமனம்

* 27 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் டிரைவர்களாகவும், கண்டக்டர்களாகவும் பெண்களை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, பெண்களுக்காக மட்டுமே ஓடிக்கொண்டிருக்கிற அரசாங்க பேருந்துகளிலாவது பெண்களை டிரைவர்களாக, கண்டக்டர்களாக நியமிக்க அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பெண்களுக்காக ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் நெரிசல் நேரங்களில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை மட்டுமே ஓடுகின்றன. முழு நேரம் பணிபுரியக்கூடிய கண்டக்டர்களை நியமிப்பதற்கு வழியில்லை. அதே நேரத்தில், டிரைவர்களாக நியமிப்பதற்கு, டிரைவிங் லைசென்சு எல்லாம் தேவைப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகிற போது பெண்களை கண்டக்டர்களாக, டிரைவர்களாக நியமிப்பதற்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். பெண்கள் யாரும் முன்வராத காரணத்தால் இல்லையென்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்களா அல்லது வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முன்வருகின்ற ஆண்களுக்கே வேலை கொடுக்க முடியாத இந்த நேரத்தில், பெண்கள் வேலைக்கு வருகிறார்களா இல்லையா என்ற பிரச்சினை எழவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஆண்களுக்கே வேலை கொடுக்க முடியவில்லை. பிறகுதானே பெண்களுக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். பெண்கள் இந்த நாட்டின் ஜனத் தொகையில் பாதியிருக்கும்போது, அவர்களுடைய முன்னேற்றத்தில் இந்த அரசு நாட்டம் கொண்டிருக்கிறது என்று சொல்லும்போது, இரண்டு பேருக்கும் சமவாய்ப்பு கொடுக்க, அவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டியது அவசியமில்லையா ?.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பெண்கள் முன்னேற்றத்தில் இந்த அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதை அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இருக்கும் நல்லுறவை இப்படி பிரித்துப் பேசி பேதப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, என்னுடைய வினாவிற்கு அமைச்சரவர்கள் விடை தராமல் தப்பிக்கப் பார்க்கிறார்கள். பெண்களுக்கு வேலை வாய்ப்பு மிக மிக முக்கியமான விஷயம். பெண்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று சொன்னால், அவர்கள் முன்னேற்றத்தைக் காண முடியாது. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காகவாவது, அவர்களை கண்டக்டர் களாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலேயே பணி மனைகளில் பல்வேறு வேலைகளுக்கு பெண்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி பெண்களை கண்டக் டர்களாக, டிரைவர்களாக அமர்த்தப்படுவதைப்பற்றியதாகும். பெண்களை டிரைவர்களாக நியமிக்க வேண்டுமென்றால், அவர்கள் நல்ல உடற்கட்டு உள்ளவர்களாக இருக்க வேண்டும், ஹெவி வெகிகில்ஸ் டிரைவிங் லைசென்சு வைத்து இருக்கவேண்டும். அப்படி யாராவது இருப்பார்களானால், அவர்களை கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்க போக்குவரத்துத் துறைக்கு விண்ணப்பம் போடச் சொல்லலாம். கண்டக்டர்களைப் பொறுத்தவரையில் என்ன கஷ்டங்கள் இருக்கிறது என்றால், பல்வேறு நெரிசல் நேரங்களில் பலவகையான கஷ்டங்கள் இருப்பதால், பெண்களைக் கண்டக்டர்களாக நியமிப்பது என்பது முடியாது. இப்போதே மாணவர்கள், தொழிலாளர்கள் மோதல் என்று பல்வேறு தகராறுகள் வருகின்றன. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல் எந்த ஆர்ப்பாட்டம் என்றாலும், நீ வைத்தல் என்றாலும், கல் எறிவதற்கு என்றாலும், அரசாங்க பஸ்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் பெண்களை கண்டக்டர்களாக நியமிப்பது எவ்வளவு பொருத்தம் உடையதாக இருக்கும் என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பஸ்களில் பொதுவாக தகராறுகள் ஏற்படுவதற்கு காரணமே கண்டக்டர்கள் தான். அதிலும் குறிப்பாக டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் இடையே கூட ஒத்துழைப்பு, ஒற்றுமை கிடையாது. அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொள்கி றார்கள். ஆகவே, டிரைவர்கள் ஆண்களாகவும், கண்டக்டர்கள் பெண் களாகவும் போட்டால், இந்தப் பிரச்சினை வராது.





MR. SPEAKER : The words * * are expunged.

**திரு. நா. வீராசாமி :** பஸ் கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுவதற்காக பெண்களை கண்டக்டர் வேலைக்கு அமர்த்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கண்டக்டர்களுக்கும், டிரைவர் களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் ஆட்களை நியமனம் செய்வது இல்லை. பஸ்கள் ஓட வேண்டுமென்பதுதான் அரசாங் கத்தின் நோக்கம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பெண்கள் விஷயத்தில் அதிக அக்கறை காட்டி இருப்பதைப் பற்றி மகிழ்ச்சி, நன்றி. ஆனால் ஒரு 'எக்ஸ்பெரிமெண்டல் மெஷராக'வாவது பெண்களை கண்டக்டர்களாக எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்வரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அதை எக்ஸ்பெரிமெண்ட் செய்து பார்த்தபிறகு தான் அதிலே என்ன ரிசல்ட் என்று பார்க்க முடியுமே ஒழிய, அதைச் செய்வதற்கு முன்பாகவே முடிவு எடுப்பது அவ்வளவு உசிதம் அல்ல. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு ஒரு எக்ஸ்பெரிமெண்டல் மெஷராக டிரைவர்களாக பெண்களை எடுத்துக்கொள்ளாவிட்டாலும், கண்டக் டர்களாகவாவது அவர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு சோதனையாக இந்த பெண்களுக்காக ஓடும் பஸ்களி லாவது பெண்களை கண்டக்டர்களாக நியமிக்கலாமா என்று பார்த்தோம். அதிலே என்ன கஷ்டம் என்றால், ஒருவர் அந்தப்பதவியில் நியமிக்கப்பட்டால், ஒரு குறிப்பிட்ட நேரம், அதாவது 8 மணி நேரம், வேலை செய்யவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் நெரிசல் நேரங்களில் மட்டுமே, 2-3 டிரிப்புகள் இந்த பெண்களுக்கான பஸ்கள் போவதால் அதிலே நியமிக்க முடியாது. ஆகவே, அவர்களை நியமித்து விட்டு போதுமான வேலை தரமுடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இந்த முயற்சியை தற்காலிகமாக அரசு கைவிட்டு இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, பெண்கள் செல்லு கின்ற பேருந்துகளில் மாத்திரமல்ல, எல்லாப் பேருந்துகளிலும் பெண்களைக் கண்டக்டர்களாகப் போடவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சுமுகமாக சூழ்நிலை உருவாக்கின்ற வரை இந்த விஷப் பரீட்சையை நாங்கள் மேற் கொள்ளத்தயாராக இல்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இதுவரை எத்தனை பெண்கள் டிரைவர் வேலைக்கும், கண்டக்டர் வேலைக்கும் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள் என்ற விவரத்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தையும், அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த அப்ளிகேஷன்கள் எப்படி டிஸ்போசல் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் :** இதுவரை அப்படி வேலை கோரி எந்த மனுவும் வரவில்லை. பொதுவாக ஹெவி வெகில்ஸ் லைசென்சைப் பொறுத்தவரை பெண்கள் யாரும் எடுக்கவில்லை என்றுதான் தெரிகிறது. பெண்கள் பெரும்பாலும் கார் ஓட்டுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். வேறு விவரங்கள் தேவைப்பட்டால், தனிக் கேள்வி போடவும்.

**திரு. கு. காமாட்சி :** விமானங்களில் பணி புரிவதற்குப் பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பது போல் நெடுந்தூரப் பேருந்துகளில் பணிபுரிவதற்கு பெண்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விமானங்கள் சீக்கிரத்தில் போய்ச் சேர்ந்து விடுகின்றன. விரைவுப் பேருந்துகள் அவ்வளவு சீக்கிரத்தில் போக முடிவதில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** பேருந்துகளில் பெண்களை நியமிப்பதற்கு அரசாங்கம் அச்சம் காட்டுவதை நோக்குகின்ற முறையில் டிரைவர்களுடைய மனைவிகளையே கண்டக்டர்களாகப் போட்டுவிட்டால் பிரச்சினைக்கே இடம் இல்லாது இருக்கும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** டிரைவராகக் கணவனும், கண்டக்டராக மனைவியும் இருப்பார்களானால் குழந்தைகள்தான் பாசஞ்சர்களாக இருக்கும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பெண்களை கண்டக்டர்களாகவும், டிரைவர்களாகவும் போட இயலாததற்குக் காரணம் விளக்கமாகச் சொல்லப்பட்டது. ஆனால் பஸ் ஸ்டாண்டில் பெண்களும், ஆண்களும் மோதிக்கொண்டு ஏறுவதை மாற்றியமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

(விடை இல்லை)

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இங்கே கூறப்பட்ட பதிலிலிருந்து, பெண்கள் டிரைவர்களாகவும், கண்டக்டர்களாகவும் வேலை செய்யத் தகுதியுடையவர்கள் ஆகவில்லை என்ற பொருள்படும்படியாக அமைந்திருந்தது. இன்று பெண்கள் எல்லாத் துறையிலும் முன்னேறிக் கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களுக்கு இந்தத் தொழிலிலும் நடைமுறைப் பயிற்சியளித்து அவர்களிடமிருந்து இதற்கு விண்ணப்பங்கள் கோர அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசாங்கம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கான வேலை வாய்ப்புகள்—ஸ்டெட்ரெயின் அண்டு ஸ்ட்ரெஸ்—அதிகத் தொல்லையும், அதிகச் சிரமமும் இல்லாத வேலைகளாக இருக்க வேண்டும். ஓடுகின்ற பஸ்களில், அதிகமான மக்கள் ஏறி இறங்குகின்ற அப்படிப்பட்ட பேருந்துகளில் மற்றவர்களோடு போட்டியிட்டுக் கொண்டு ஏறுகின்ற அப்படிப்பட்ட நெருக்கடியான நேரங்களில் அவர்கள் தங்களுடைய பணியைச் செம்மையாகச் செய்ய முடியாது. அந்த நிலையில் டிக்கட் இல்லாமலே செல்லுகின்ற அத்தகைய மனப்பான்மையும் ஏற்படும். அரசாங்கத்திற்கும் இழப்பு



ஏற்படும். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பெண்களுக்குச் சிரமம் ஏற்படுவதைவிட, அலுவலகங்களிலே ஆற்றுகின்ற பணியைச் செய்வதற்குப் பெண்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு செயலாற்றி வருகிறது.

**திரு. கா. காளிமுத்து :** டிரைவர்கள், கண்டக்டர்களாகப் பெண்களை நியமிக்காவிட்டாலும் கூட, செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகப் பெண்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, செக்கிங், இன்ஸ்பெக்டர்கள் கண்டக்டர்களில் இருந்துதான் நியமிக்கப்படுகிறார்கள் .

**திரு. ஏ. எம். இராஜா :** இப்போது கார் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. பொதுவாக, பெண்கள் கார் ஓட்டுவதில் விபத்துக்கள் குறைவாக இருக்கிறதென்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஆகவே, விபத்துக்களைக் குறைக்கும் முகத்தான் பெண்களுக்கு டிரைவர்கள் பயிற்சி கொடுத்து அரசு போக்குவரத்தில் டிரைவர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இது பெண்கள் இனத்திற்குக் கிடைத்திருக்கும் நற்சான்று. விபத்துக்கள் அதிகமானதற்குப் பல காரணங்கள் உண்டு.

**திரு. எம். தேவராசன் :** பஸ்களில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது சில தாய்மார்களுக்குப் பிரசவம் ஏற்பட்டு விடுகிறது. அத்தகைய நிலையில் அவர்களுக்கு உதவி செய்ய என்ன திட்டம் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அடிக்கடி அப்படி ஒன்றும் பிரசவங்கள் பஸ்களில் நடைபெறுவதில்லை. அப்படி ஏற்படுமானால் மருத்துவ வசதிகள் உடனடியாக அளிக்கப்படுகிறது. இந்த மாதிரி காலத்தில் கூடுமான வரையில் பெண்கள் பஸ்களில் பிரயாணம் செய்வதைத் தவிர்ப்பது அவர்களுடைய கடமை.

**திரு. எம். சுரேந்திரன் :** மிக எளிதான வேலைகளை மட்டும் பெண்களுக்குத் தருவது என்ற முறையில் அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஒவ்வொரு கால கட்டத்திலும் வளர்ந்து வருகின்ற சூழ்நிலைகளுக்கேற்ப பெண்கள் எல்லாவற்றுக்கும் தகுதியுள்ளவர்கள் என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. சீஃப் எஞ்சினியர்களாகவும். விமான ஓட்டிகளாகவும், அமைச்சர்களாகவும், இன்னும் பல்வேறு துறைகளில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதே போன்று இந்தத் துறையிலும் அவர்களை ஈடுபடுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பெண்களுடைய தகுதியை அரசாங்கம் மதிக்கிறது. அவர்களுடைய அறிவாற்றலை மதிக்கிறது. அரசியல் துறையிலும் பெண்கள் மிகச் சிறந்தவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தியப் பிரதமர் அவர்கள் விளங்குகிறார்கள். தமிழ்நாட்டில் மிக உயர்ந்த பதவிகளில் பெண்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிவாற்றல், புத்தி நுட்பம், ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல் சாதுரியமான, திறமையான அலுவலக வேலைகளை அவர்கள் கவனித்து வருகின்றனர். மருத்துவத் துறையில் நர்ச

களாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். தொழில் திறமை தேவைப்படுகின்ற இடங்களில், டெலிபோன் எக்ஸ்சேஞ்சு போன்ற இடங்களில் பெண்கள் பணி புரிந்து வருகிறார்கள். உடலுழைப்பு மிகுந்த பணிகளில் பெண்களைப் பயன் படுத்த வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை; அது இந்தக் காலத்திற்கு ஏற்றதல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: என்.சி.சி.-யில் பெண்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மேல்நாடுகளில் பெண்கள் கண்டக்டர்களாகப் பணி யாற்றி வருகிறார்கள். அதேபோன்று நம்முடைய நாட்டிலும் பரீட்சார்த்த மாக ஏன் ஏற்படுத்தக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: என்.சி.சி.-யில் பயிற்சி பெற்றவர்கள் உடல் நலன் உள்ளவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன். அப்படி உடல் நலமுள்ள பெண்கள் போதுமான அளவில் பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களிடையே கிடைப்பது கடினம். இரண்டாவது இவை எல்லாம் சமுதாய சூழ்நிலையை ஒட்டி கருதப்பட வேண்டிய ஒன்று. மேல்நாடுகளில் பெண்களிடம் ஆண்கள் நடந்து கொள்ளுகின்ற முறையும், நம்முடைய நாட்டில் பெண்களிடம் ஆண்கள் நடந்து கொள்கின்ற முறையும், எண்ணு கின்ற முறையும் வேறு, வேறு என்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறியாதது அல்ல.

திரு. ப. முத்துசாமி: துரித வண்டிகளில் நெரிசல் குறைவாக இருக்கிறது. கண்டக்டர்களுக்கு உடலுழைப்பு அதிகம் தேவையில்லை. ஆகவே, துரித வண்டிகளில் பெண்களை கண்டக்டர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் அவர்கள் பெண்களுக்காக வாதாடுவதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். துரித வண்டியிலும் ஆற்ற வேண்டிய கடமைகளும், பொறுப்பும் அதிகம். இதுபற்றி எதிர்காலத்திலே சிந்திக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையில் நெரிசல் நேரங்களில் போடப்படு கின்ற ஸ்டாண்ட் கண்டக்டர்களாகப் பெண்களை போட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது அதிகமாக மறுக்கப்பட வேண்டிய கருத்து அல்ல. ஸ்டாண்ட் கண்டக்டர்களும், கூட்டம் அதிகமாக ஏறும்போது அவர்களைப் பிடித்து நிறுத்தும் பணியையும் செய்ய வேண்டியிருக்கிறது. இடையில் இருக்கும் பெண்கள் ஏற முடியாத நிலையில் அவர்களைப் பிடித்து நிறுத்தும் நிலையில் இன்னொரு பெண்ணையும் தள்ளி விடுவதற்கு அரசாங்கத் திற்கு உத்தேசம் இல்லை.

*Managers in Hindu Religious Endowment Commissionr's Office.*

* 28 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of Managers working in the office of the Commissioner of Hindu Religious and Charitable Endowments at Madras city;

(b) the number of years they have served in Madras City in various capacity at a time; and

(c) the reasons as to why they have not been transferred elsewhere?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் மேலாளர் என்ற பதவி இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, சென்னையில் அறநிலைய அலுவலகத்தில், பல ஆண்டுக் காலமாக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்களுக்கு மேல் உயர்வு கிடைக்காமல் இருக்கிறது. அதை அரசு உடனடியாக கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சென்னை அற நிலையப் பாதுகாப்பு அலுவலகத்தில் மேலாளர் என்பதற்குப் பதில், கண்காணிப் பாளர் என்று இருக்கிறார்கள். ஆகவே, கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு மேல் பதவி உயர்வுக்கு வழி இருக்கிறது. மேலும் தேவையில்லை.

*Temple Funds.*

* 29. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government have examined the suggestion of the East Thanjavur District Development Council for utilising the temple funds for improving sanitary facilities to the people?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அத்தகைய கருத்து கிடைக்கப் பெற வில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know whether the Thanjavur District Development Council has recommended the utilisation of all religious funds for this purpose or only the Hindu temple funds for this purpose?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிக் குழுவிடமிருந்து தகவல் அம்மாதிரி இந்த அலுவலகத் திற்கு வரவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்களைக் கேட்டதில், அப்படித் தீர்மானம் நிறைவேற்றப்பட வில்லை என்ற பதில் அளித்திருக்கிறார்கள்.

* 30 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறையின் சார்பில் மாவட்டந்தோறும் உயர்நிலைப்பள்ளிகள துவக்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (3) மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சரும், இந்தச் சட்ட மன்றத்திலே பத்தாண்டுக் காலமாக உறுப்பினராகவும், ஐந்தாண்டுகள் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு, மதுரைப் பல்கலைக் கழகம், அவர்களுடைய இலக்கிய சேவைகளைப் பாராட்டி, 'டாக்டர்' பட்டம் கொடுத்திருப்பதை, இந்த மாமன்றம் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்தப் பேரவையின் தலைவர் என்ற முறையிலும், இந்த மாமன்றத்தில் உள்ள எல்லோருடைய சார்பிலும், நாவலர் அவர்களுக்கு என்னுடைய நல் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் நான் தெரிவிக்கிறேன். (பலத்த கரவொலி).

மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்தப் பெரிய பெருமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, வைகையாற்றின் கரையில் புதிதாகத் தோன்றியிருக்கும் மதுரைப் பல்கலைக்கழகம், அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்ததன் காரணமாக தனக்கு ஒரு பெரிய பெருமையைத் தேடிக் கொண்டிருக்கிறது, கீர்த்தியைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன்.

நாவலர் அவர்களை நான் 30 ஆண்டுகாலமாக மிக நன்றாக அறிவேன். தமிழ் நாட்டில் இலக்கியத் துறையிலும், அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், இந்தத் தலைமுறையில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றால், நாவலர் அவர்களுடைய பங்கு அதில் மிகப் பெரிய பங்கு என்பதை இந்த நாட்டில் உள்ளவர்கள் அத்தனைபேரும் ஒப்புக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன். அதில் இரண்டாவது கருத்துக்குக் கொஞ்சங்கூட இடம் இருக்காது என்றும் நம்புகிறேன்.

அவர்களை நான் சிறந்த கல்வியாளராகக் கருதுகிறேன்; அவர்களை பெரிய, தமிழ் நாட்டில் எத்தனையோ தலைமுறையில் கிடைக்காத, சிறந்த பேச்சாளராகக் கருதுகிறேன்; பத்திரிகை ஆசிரியராக, நல்ல அரசியல் தொண்டராக, அரசியல் தலைவராக, இன்னும் பெரிய சமதர்ம வீரராக. பகுத்தறிவுக் கொள்கையின் மூலம் புதிய உலகத்தைச் சிருஷ்டிக்கும் புத்துலகச் சிற்பியாக நான் அவர்களை அறிகிறேன். தமிழ் நாடும் அறிந்திருக்கிறது.

நாவலர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மட்டுமல்ல, நாவலர் அவர்கள் தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கும் தலைவர்களில் பெரிய தலைவர் என்ற வகையில் சிறப்புற்று விளங்கும்போது, மதுரைப் பல்கலைக் கழகம் அவர்களுடைய இலக்கிய சேவைக்கு மட்டுமல்லாமல், வேறு எத்தனையோ அவர்களுடைய உதார குணங்களுக்காகவும் எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் சிறப்பித்திருக்கிறது என்பதைப் பார்த்துப் பெருமைப் படலாம். தமிழ் நாட்டின் அரசியலில், அரசியல் வாழ்வில், நாவலர் அவர்கள், மிகுந்த நிதானத்துடனும், அடக்கத்துடனும், 31 ஆண்டுக்காலமாக சேவை



செய்து வந்திருக்கிறார்கள். அரசியலைப்பற்றிச் சொல்லும்போது, அன்றைய நிலைமைகள் நினைவுக்கு வருகின்றன. 30 ஆண்டு காலத்திற்கு முன்பு, எந்த நிலையில் இருந்து, இன்றைக்கு எவ்வளவு முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு என்று எண்ணும்போது, நாவலர் அவர்களுடைய பணி போற்றத் தக்கது. எவ்வளவோ தடவைகள் அவர்கள் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். இந்த நாட்டில் வெயிலிலும், வாய்க்கால் ஓரத்திலும், தோப்பு துறவுப் பகுதிகளிலும், சண்டமாருதமென செயலாற்றிய சிற்பிகளாவார்கள் அவர்கள்.

ஒரு காலத்தில் இலக்கியம், கலை என்றாலே அவையெல்லாம் பல்கலைக் கழகத்தின் புத்தகப் பேழைகளில் இருக்கும் நிலைதான் இருந்தது. அந்த காலத்தில், தமிழ் என்றால், அல்லி அரசாணி கதை, நல்ல தங்காள், பெரிய எழுத்துக் கதைகள், என்ற அளவில் புரிந்து படிந்த நிலைதான் இருந்தது. சாதாரண, சிறிய ஏழை எளிய மக்களும் நல்ல வகையில் அறிந்து கொள்ளும் வகையில், கலிங்கத்துப்பரணி, புறநானூறு, போன்ற இலக்கியங்களை. வெளியுலகத்திற்குப் பரப்பிய சிற்பியாவார்கள் அவர்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதில் அவர்களுக்கு ஒரு பெரிய இடம், மகத்தான இடம் உண்டு என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

நிதானம் என்றால், மிக்க நிதானம் உள்ளவர்கள். மற்றவர்களுக்கு கோபம் வரும் அளவிற்கு, அவ்வளவு பெரிய நிதானத்தைக் கையாண்டு, கட்சிக்கு மட்டும் சொந்தக்காரர் என்பதில்லாமல், எத்தனையோ தலைசிறந்து வரும் தலைவர்களில் சிறந்தவர். அப்படிப்பட்ட நாவலர் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்து மிகப் பெரிய பெருமையைச் செய்கிறது என்பது அவர்களுக்கு இன்னமும் உற்சாகம் கொடுத்திருக்கிறது. சமுதாய முன்னேற்றத்திற்கு, மேம்பாட்டிற்கு, பொதுவுடைமைச் சமுதாயமாக வகுப்பதில் சிறந்த தொண்டாற்ற நல்ல இதயம் உள்ள பண்பாளரை மதுரைப் பல்கலைக்கழகம் சிறப்பித்திருப்பதை, உண்மையிலேயே இந்த மாமன்றத்தில் உள்ள எல்லாப் பகுதி உறுப்பினர்களும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு நாவலர் அவர்கள், இன்னும் பன்னெடுநாள், நீண்ட நெடுநாள் வாழ்ந்து, தமிழ்க் குலத்திற்கும், மனித சமுதாயத்திற்கும், ஒப்பற்ற சேவை களைச் செய்து நீடூழி வாழ வேண்டும் என்று நம்முடைய இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைச் சொல்லுகிறோம் என்று கூறி, இதை ஆமோதிக்கும் வகையில் எல்லோரும் கரவொலியின் மூலம் இந்தக் கருத்துக்களை ஆதரிப்பீர்கள் என்று கூறி அமர்கிறேன். (பலத்த கரவொலி).

### (4) அறிவிப்புகள்.

#### (அ) பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. 22—1—1971 அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சி ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபடி நடைபெறும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 6 (1) விதியின்படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களை பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

திரு. செ. கந்தப்பன்.

திரு. எஸ். முருகையன்.

திரு. பெ. மலைச்சாமி.

திரு. என். டென்னிஸ்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.

திரு. எம். சுரேந்திரன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் . . . . .

DR. H. V. HANDE : Sir, on a point of information. I have given notice of an adjournment motion with regard to Simpson Group of Companies. May I know whether it is going to be taken up to-day. Will the Hon. Speaker kindly indicate when it is going to be taken?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக் கொள்வதாக இருந்தால், உங்களிடத்தில் சொல்லியிருப்பேன். சொல்லாததால், எடுக்கவில்லை என்று பொருள்.

அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் திரு. எஸ். கந்தப்பன்.

### (5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்.

* திரு. செ. கந்தப்பன் : "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும்".

'1972-ம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்ட மன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'.

திரு. து. ப. அழகமுத்து : நான் இதை வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. செ. மாதவன் : அவை துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அவர்களுடைய உரையிலே இந்த அரசினுடைய நோக்கங்களைப் பற்றியும்,

* 93-99-ம் பக்கங்களில் முதல் இணைப்பாகவும், பேருரையின் தமிழாக்கம் 98-108-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளன.



செயல் முறைகளைப் பற்றியும் எத்தனை சுருக்கமாகச் சொல்லியுள்ள வரிகளை இங்கே முதலில் சுட்டிக்காட்டிவிட்டு நான் என்னுடைய உரையைத் துவக்க விரும்புகிறேன்.

இந்த அரசினுடைய நோக்கம ஏழை எளியவர்களின, பாமர மக்களின் விருப்பங்கள் நிறை வேற வேண்டும் என்பதுதான். பொது மக்களின் விருப்பத்தைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகவே இந்த அரசு செயலபட விரும்புகிறது. பொதுவாக பாமர மக்களின், குறிப்பாக இன்னலுக்கு ஆளாகிய ஏழை எளியவர்களின் வாழ்வில் ஏற்றம் பெறாத அவல வாழ்வு நீங்கி ஆனந்த வாழ்வு பெறுவதற்குத தன்னாலானவைகளையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்பணித்துக் கொள்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு இணங்க ஆளுநர் அவர்களுடைய உரை இந்த மன்றத்திலே ஆற்றப்பட்டது. சமுதாயத்தில் கீழாக இருப்பவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு பல நல்ல திட்டங்களை முதல் அமைச்சர் அவர்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். ஏழை எளிய மக்கள் இன்றைக்கு இருக்கின்ற அமைப்பிலே வாழ்ந்து சாகத்தான் வேண்டும், இது தான் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது, இதற்கு மேல் தங்களுக்கு நல்வாழ்வு இல்லை என்று நம்பிக் கொண்டிருந்த நிலை இன்று மாற்றப்பட்டு அவர்களும் ஒளி மிக்க வாழ்வு பெற முடியுமென்ற நம்பிக்கை நட்சத்திரமாகக் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டிருப்பதை நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.

அதே போல இந்தியத் துணைக் கண்டத்தில் குறிப்பாக கிராமப் புறங்களில் 100-க்கு 50 விழுக்காடு மக்கள் குடி தண்ணீர் கிடைக்காத காரணத்தால் உடல் நலிந்து, இளைத்துக் குன்றிப் போகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆபத்திலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்று நல் முயற்சி எடுக்கப்பட்டு இன்றைக்கு கிராமங்களில் குடி தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரந்துண்டு வாழ்ந்து வருபவர்களின் நல்வாழ்விற்காக மறுவாழ்வுத் திட்டம் தீட்டி சமீபத்திலே உளுந்தூர்பேட்டையிலே அவர்களுக்கென ஒரு நிலையத்தை திறந்து வைத்து இருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் உணவில் சுயதேவையைப் பெற முடியாது என்று சில ஆண்டுகளுக்கு முன்னால் நம்பப்பட்டது. ஆனால் இந்த அரசு நிறுவப்பட்ட பிறகு அது மாற்றப்பட்டு இன்றைய தினம் நமக்கு மிஞ்சி மற்றவர்களுக்கு வழங்கக் கூடிய அளவிற்கு உணவு தானியத்தில் தன்நிறைவு பெற்றிருக்கிறோம். 73 லட்சம் டன் இந்த ஆண்டின் உற்பத்தி என்கிற கணக்கை பார்க்கிறோம். இது நமக்குப் பெருமிதம் அளிக்கக்கூடிய நல்ல சாதனையாகும். இப்படி வேளாண்மை மேம்பாட்டுக்கும் மேலும் தொழில் மேம்பாட்டுக்கும் அடிப்படையாக இருக்கிற மின்சாரத் துறையிலே நாம் விரைவில் முன்னேற்றம் பெற்று மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய இருக்கிறோம்.

இன்றைக்குப் பொருளாதாரச் சிக்கலுக்கு வரி இனங்களை அதிகமாகப் பெருக்கச் செய்யமுடியாத அளவிற்கு அரசியல் அமைப்புச் சட்டம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள்ளே நின்று, மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள், ஒரு சில குறிப்பிட்ட இனங்களில் மட்டும்

[திரு. செ. கந்தப்பன்] [1972 சனவரி 24

வரி விதிக்கும் அதிகாரங்களை வைத்துக்கொண்டு நாம் இதைச் செய்து வருகிறோம் என்பதை புரிந்து கொள்வதற்காக ஒன்றை எடுத்துக்காட்ட முடியும். ஆளுநர் உரையில் விரிவாகச் சொல்லியிருப்பதை இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1971-72-ம் ஆண்டிற்கு மட்டும் நாம் அவர்களுக்குத் திருப்பித்தர வேண்டிய கடன் தொகை ஏறத்தாழ ரூ. 65 கோடி. இந்த 65 கோடியில் வட்டியாக மட்டும் 21.83 கோடி நாம் திருப்பிச் செலுத்துகிறோம் என்பது ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் இப்படி 65 கோடியை திருப்பிச் செலுத்துகின்ற நேரத்தில் நமக்கு அங்கிருந்து கிடைப்பதோ 40.40 கோடி தான் என்கிற கணக்கைப் பார்க்கிறபோது கொடிய மார்வாடியாக தில்லிப் பேரரசு நமக்குத் தெரிகிறது. இப்படி மத்திய அரசு மாநிலங்களிடம் நடந்து கொள்ளுமானால் மாநிலப் பொருளாதார வளர்ச்சி பெரிதும் குன்றிப் போகும் என்பதை நாம் அனைவரும் ஒருமித்த குரலில் தில்லிக்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் நமக்குத் தருவதைவிட நாம் அவர்களுக்குத் திருப்பித் தருவது அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நாம் நம்முடைய திட்டங்களை தீட்ட வேண்டியிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு வாதத்தை எழுப்புகிற நேரத்தில் இந்த அரசு மத்திய அரசிடமிருந்து பெறும் பணத்தை எந்த வகையிலே செலவு செய்கிறது என்ற கேள்வி எழுவது நியாயமாகும். நமதரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு சீராக, ஆக்கப் பூர்வமான காரியங்களுக்குத் தில்லியிலிருந்து பெறப்படுகிற தொகை செலவழிக்கப்படுகிறது என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. தான்தோன்றித் தனமாகவோ, தேவையற்ற காரியமாகவோ ஒரு சல்லிக் காசும் செலவழிக்கப்படவில்லை என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்து பத்திரிக்கையிலிருந்து ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் இந்துப் பத்திரிக்கையிலிருந்து சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்று சொல்வதற்குக் காரணம் அந்த ஏடு இந்த அரசோடு சம்பந்தப்பட்டிராத ஏடு. எனவே இந்த அரசினுடைய நிர்வாகச் செலவுகளைப் பற்றி அந்த ஏடு என்ன கருதுகிறது என்பது இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். 21—6—1971 தேதியிட்ட நாள் ஏட்டில் இந்தப் பத்திரிகையில் வந்திருக்கிற தலையங்கத்தின் ஒரு பகுதி. However a good part of the deficit reflects the aspiration of the Government to accelerate the tempo of its agricultural and industrial programmes. In the agricultural sector, the performance has been quite good so far and with the planned extension of power connection to another 60,000 pump-sets in 1971-72 and with the expansion of package farming practices associated with hybrid seeds, the outlook on the food front is even more encouraging அந்தத் தலையங்கத்தில் நம்முடைய பற்றுக் குறையைச் சுட்டிக்காட்டி இந்தப் பற்றுக்குறையிலும் தொழில், வேளாண்மை ஆகிய துறைகளில் முன்னேற்றங்களைச் செய்திருப்பதைப் பாராட்டி இருக்கிறது. இந்த முன்னேற்றங்களைத்தான் நாம் இன்றைக்கு பயனைக் கண்டு வருகிறோம் என்பதை ஆளுநர் அவர்களுடைய உரையில் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.



1972 சனவரி 24] [திரு. செ. கந்தப்பன்]

ஆக, இப்படிச் சிக்கனமாகவும், சீராகவும் இருப்பதும், நமக்குத் தேவையான நிதியை எவ்விதம் பெறுவது, பெற்ற நிதி வசதியை எவ்விதம் பயன்படுத்துவது என்று ஆராய்ந்து நம்முடைய அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்த அடிப்படைகளைப் புரிந்துகொண்டு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இதையே ஆளுநர் உரையிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடன் தொகையைப் பொறுத்து நல்ல முடிவுகளை மத்திய அரசு செய்ய வேண்டுமென்பது நம்முடைய வேண்டுகோளாகும். இது மிகவும் நியாயமான வேண்டுகோளாகும்.

அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிப்பதால் அரசினுடைய செலவு அதிகமாகிறது. மத்திய அரசு ஊதிய உயர்வு அளிக்கின்ற நேரத்தில் மாநில ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஊதிய உயர்வு தரப்படுகிற நேரத்தில் அது விலைவாசி ஏற்றத்தால் ஏற்படுகிறது. நம்முடைய சக்திக்கும் மீறி டில்லியால் வகுக்கப்படும் சில பொருளாதாரத் திட்டங்களின் விளைவு இது. இதனால் பெரிய பொருளாதாரச் சுமையைத் தாங்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். டில்லியில் ஏதாவது செய்தால் அது நமக்கு சில இழப்புகளை ஏற்படுத்தும் நிலைதான் இன்றைக்கு உள்ளது. இதைப்பற்றிப் பல பெரிய அரசியல் வல்லுனர்கள், பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும்போது மாநில அரசும் தன்னுடைய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே, இதை ஈடுகட்டும் வகையில் விகிதாசாரம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தொழில் துறையில் நம்முடைய மாநிலம் அடைந்திருக்கிற முன்னேற்றம் நமக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றாகும். அனுமதிக் கடிதம் பெற்று தொழில் துறையில் கடந்த சில மாதங்களில் மட்டும் நமது மாநிலத்தில் துவங்கி உள்ள தொழில்களின் மூலதனம் சுமார் 1.35 கோடி ரூபாயாகும் என்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இது வரவேற்கக்கூடியதாகும்; பாராட்டத் தக்கதாகும். இதற்கிடையில் தூத்துக்குடி சுற்று வட்டாரம் ரூ. 100 கோடியை உள்ளடக்கிய பல தொழில்களைக் கொண்ட பகுதியாக, பல தொழில் நிலையங்களைக் கொண்ட பகுதியாக உருவாக இருக்கிறது. இது நம்முடைய அரசின் மகத்தான சாதனையாகும். நான் இன்னொன்றையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் மாவட்டங்களைப் பொறுத்த அளவிற்கு குறிப்பாக தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம், அதையொட்டி சேதுக்கால்வாய் திட்டம் அமைவது இன்றியமையாத ஒன்றாகும். தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம் விரைவாக நிறைவேறி வருகிறது. அதேமாதிரி சேதுக்கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இது வருந்தக்கூடிய நிலையாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திரு. ஏ. ஆர். முதலியாரைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதற்கு முதலியார் கமிட்டி என்றே பெயர். அந்தக் குழு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக சேதுக்கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென திட்டவட்டமாகச் சொல்லிற்று. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் மத்திய அரசு இதைப்பற்றிக் கவனிக்காமல் இருப்பது வருந்தத்

தக்கது. முதலியார் கமிட்டியின் அறிக்கையைத் தொடர்ந்து 1965-ம் ஆண்டில் மதிப்பீட்டுக் குழு சேதுசமுத்திரத் திட்டம் பற்றிச் சொல்லியதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"The Committee would suggest that the development programme of Sethusamudram Project may be regulated in the light of phased programme to be drawn up by the Central Government for the development of Tuticorin as a major port."

தூத்துக்குடியை பெரிய துறைமுகமாக ஆக்குவதோடு, அதோடு இணைத்து சேதுக்கால்வாய்க்கான திட்டமும் போடப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்த 65-ம் ஆண்டு அறிக்கையைத் தொடர்ந்து 68-ஆம் ஆண்டைய மதிப்பீட்டுக் குழுவும் இதை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறது. இந்த அறிக்கையில் இன்னும் பலமாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு இப்பொழுது 1971-72-ம் ஆண்டில் வேறொரு அறிக்கை மதிப்பீட்டுக் குழுவினாலே தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மத்திய அரசு கொஞ்சம் நிதானமாகச் செல்லவேண்டும் என்று மத்திய அரசுக்கு புத்திமதி சொல்கின்ற விதத்திலே பரிந்துரையைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி நான்கு அறிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தரப்பட்டிருக்கின்றன. அப்படித் தரப்பட்டிருக்கின்ற எந்த அறிக்கையிலும் அது கைவிடப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை. மாறாக அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் அரசியல் சார்பற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் ஒருமித்த பரிந்துரையாக அது இருக்கிறது. நமது பாதுகாப்பிற்கு, கடல் எல்லையிலே பாதுகாப்பிற்கு அது தேவைப்படுகிறது. எப்படி வடக்கெல்லையிலே நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை இமயமலைப் பகுதியிலேயும் மற்றப் பகுதிகளிலேயும் செலவழித்து பாதை போடக்கூடிய நெருக்கடி இராணுவத் தேவை காரணமாக இருக்கிறதோ, அதேமாதிரி கிழக்கே இருக்கிற கடலுக்கும் மேற்கே இருக்கிற கடலுக்கும் பாதையில்லை என்பதையும், பெரிய வணிகக் கப்பல்களின் தொடர்புக்கும், நாவாய்களின் தொடர்புக்கும் இலங்கையைச் சுற்றித்தான் போய் வர வேண்டும் என்பதையும் நிச்சயமாக இந்திய அரசு கவனத்தில் கொள்ளவேண்டியதொன்றாகும். ஆரம்பத்திலே ரூ. 15 கோடித் திட்டமாக இருந்தது அண்மையில் 35 கோடி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தாமதப்படுத்திக்கொண்டே போவோமானால் இதனுடைய செலவு மேலும் அதிகமாகும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே, தூத்துக்குடி துறைமுகத்தின் லாப நட்டம் இந்தச் சேதுக்கால்வாய்த் திட்டத்தை ஒட்டி இருக்கிறது என்பதை இம்மாதிரி கமிட்டி அறிக்கைகளிலேயும், பின்னாலே வந்த மதிப்பீட்டுக் குழுக்களிலும்கூட அறிவுறுத்தியிருக்கிறார்கள். இந்த இரண்டு திட்டங்களையும் ஒருசேரக் கவனிக்கவேண்டும் என்றும், ஒன்றை மட்டும் தனித்துத் துவக்கினால் அதிலே இலாபம் இருக்காது என்றும், நட்டம் ஏற்படும் என்றும் பல்வேறு குழுக்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றன. இவ்வளவுக்கிடையிலேயும் அவை எடுத்துக்கொள்ளப்படாது இருப்பது வருந்தத்தக்கது என்பதை நமது மன்றத்தின் சார்பில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்



டாலன்றி தெற்கு மாவட்டங்களின் வளர்ச்சி ஒரு நிரந்தர வளர்ச்சியாக இருக்காது. உண்மையிலேயே தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்துடன் சேதுக்கால்வாய் திட்டத்தையும் நிறைவேற்றினால் எதிர் காலத்திலே இந்தியாவிலே இருக்கிற ஏனையத் துறைமுகங்களின் செல்வாக்கு மட்டுப்படும் என்று அஞ்சுகிறார்களோ என்றுகூட நினைக்கிறேன். தூத்துக்குடித் துறைமுகம் சேதுக்கால்வாய்த் திட்டத்தோடு இணைந்து ஆழ்கடல் துறைமுகமாக ஆக்கப்பட்டால் இந்தியாவிலேயே அது ஒரு முன்னோடித் துறைமுகமாக, இன்டர்நேஷனல் போர்ட் என்கிறார்களே அந்த வகையில் அது சேர்க்கப்படுகிற காலம் கண்டிப்பாகத் தொலைவிலே இல்லை. இந்த வாய்ப்புக்கூறுகள், நடுநிலையாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆய்வுக்குறிப்புகள் எல்லாம் பல ஏடுகளிலே எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் இந்தத் திட்டம் வலியுறுத்தப்படவேண்டும். இதை நான் இந்த மன்றத்தின் வாயிலாக வலியுறுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இனி நமது சேலம் இரும்பாலைத் திட்டம் துவக்கமாவதைப்பற்றி ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்புகள் இருக்கின்றன. இதிலே அந்த நேரத்திலே இரும்பு உருக்குக்கு அமைச்சராக இருந்த பகத் அவர்கள் தம்முடைய உரையில் சொல்லியிருக்கின்ற ஒரு கருத்தினைமட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரும்பாலைத் திட்டத்தை துவக்கம் செய்ய அவர் சேலம் வந்திருந்தபோது அவர் ஆற்றிய உரையிலேயிருந்து ஒரு பகுதி.

"In view of the iron ore deposit in this area, which has very low phosperous and sulphur content, it is ideally suitable for the manufacture of special steel. The demand for special steel in the country has increased with the growing sophistication of our industries. Much of this demand will arise in this part of this country, where, plants for manufacture of automobiles, their ancillaries as well as defence items have been set up."

அது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த, ஒரு தனித்தன்மை வாய்ந்த உருக்கு என்றும், இந்த உருக்குக்குத் தேவை நம்முடைய நாட்டிலே அதிகம் இருப்பதாகவும் தென் பகுதியிலேயும் இது நிரம்ப இருக்கிறது என்றும், எனவே விரைந்து ஆரம்பிக்கப்படவேண்டியதொன்று, இதனுடைய தேவை தெளிவானதொன்று என்ற வாசகங்கள் எல்லாம் அந்த உரையிலே வருகின்றன. அந்த நேரத்திலே இதையொட்டி வெளியிடப்பட்ட "இண்டஸ்டிரியல் எக்கானமிஸ்ட்" என்ற ஏட்டின் சிறப்பிதழில் இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. விசாகப்பட்டினம், ஹாஸ்பெட் போன்ற திட்டங்களுக்கு முன்னறிக்கைகள் இல்லாத காரணத்தாலே காலதாமதம் இருந்தாலும் சேலத்தைப் பொறுத்தவரையில் அது தேவையில்லை. நான்கைந்து ஆண்டுகளிலேயே அதை முடிக்க முடியும் என்று அந்த நேரத்திலே அந்த இதழிலே வலியுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இதையும் மத்திய அரசு கவனிக்க வேண்டும் என்று இந்த மன்றத்திலே நாம் வலியுறுத்தி ஒருமித்த குரல் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இனி, நம்முடைய ஆளுநர் உரையில் 9-ஆம் பக்கத்தில் தொழில் துறையிலே இருக்கிற அமைதியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தமிழ்நாட்டில் தொழில் துறையில் நீண்ட நெடுநாட்களாக அமைதி நிலவி வந்தது

எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்த போதிலும், கடந்த சில வாரங்களில் ஒரு சில வேண்டாத, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருப்பது குறித்து நான் வருந்துகிறேன். இம்மாநிலம் தொழில் துறையில் அமைதியும் நல்லுறவும் நிலைநிறுத்தும் பாதையில் விரைந்து முன்னேறுமென நான் நம்புகிறேன். தொழில் துறையில் தொழிற் சங்கங்கள் போட்டி மனப்பான்மையைத் தவிர்ப்பதன் அவசியம் குறித்து முதலமைச்சர் கூறிய கருத்துக்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்." இதற்கு அடுத்து நான் விலைவாசியைப் பற்றி ஆளுநர் குறிப்பிட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி இந்த இரண்டையும் ஒருசேர வைத்துப் பேச விரும்புகிறேன். "மத்திய அரசு எடுக்கும் முடிவுகளையொட்டியே விலைவாசி விவரம் அமையும் என்பது முன்னர் நிகழ்த்தப்பட்ட உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை இந்த அவையும் நன்கு அறியும். இந்த நிலையில் நாம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்றுதான். உற்பத்தியை இயன்ற அளவு பெருக்குவோம். அவசியம் ஏற்படின், இன்றியமையாப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாட்டினை எப்பொழுதும் தயாராக வைத்திருப்போம். வணிகச் சூதாடிகளின் சூழ்ச்சியினால் விலை ஏறி மக்கள் அவதியுறாமல் காப்புடன் இருக்கும் வண்ணம், முடையிருப்புகளை ஏற்படுத்தவும், உணவு தானியங்களும் பிற பொருள்களும் போதிய அளவில் கிடைக்கவும் வகை செய்யும் பொருட்டு உணவுப் பொருள் வழங்கல் துறையின் கீழ் தனிப்பட்ட அமைப்பொன்றை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. அதே நேரத்தில் விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தி நிலைப்படுத்த, பருத்தி, நெட்டிழைப் பருத்தி, உருக்கு, மருந்துப் பொருள்கள் போன்ற தொழிலியல் மூலப் பொருள்களைப் போதிய அளவில் இறக்குமதி செய்ய இந்திய அரசு உரிய காலத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தை நான், இந்த அரசின் சார்பாக வலியுறுத்த விழைகிறேன்." விலைவாசி ஏற்றத்திற்கும் தொழில் துறையிலே ஏற்படுகிற அமைதியின்மைக்கும் பெரிதும் தொடர்பு இருக்கிற காரணத்தாலே இந்த இரண்டையும் இங்கே நான் தொடர்புபடுத்திப் பேச விரும்புகிறேன். பொதுவாக விலைவாசி ஏற்றங்குறித்து நம்மாலே என்ன செய்ய முடியும் என்பதை ஆளுநர் உரையிலே இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு நினைவு இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு சிறிது பஸ் கட்டண உயர்வு ஏற்பட்ட நேரத்தில் இன்றைக்கு மத்திய அரசிலே ஆளுகின்ற கட்சியாக இருக்கிற அந்தக் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள்கூட ஒரு மறியல் போராட்டத்திலே கலந்துகொள்வதாக அறிவித்து, கலந்துகொண்டும் இருந்தார்கள். ஒரு பேருந்துக்கு தேவைப்படுகிற சாமான்களிலே ஒரு சின்ன மறுக்காணி விலையைக்கூட கட்டுப்படுத்துகிற சக்தி மாநில அரசுக்கு இல்லை. அதை ஓட்டுவதற்குப் பயன்படுத்துகிற எரிபொருளின் விலையைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை. இப்படிப்பட்ட நேரத்தில் விலையெல்லாம் ஏன் ஏறுகிறது என்பதற்கு மூலக் காரணத்தைக் கண்டாராயாமல் மாநில அரசின்மீது பாய்வது உண்மையிலேயே அறியாமையின்பாற்பட்டது. இது மக்கள் கவனத்தைத் தவறான பாதையிலே அது செலுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு அல்லது கோளாறுக்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்களை மக்கள் மத்தியிலே சுட்டிக்காட்டுவது அரசியல் தெளிவு ஏற்படுவதற்கு நன்றாக இருக்கும் என்று பணிவன்புடன் எடுத்துக்கூறிக்கொள்கிறேன். மாநில அரசு காரணமாக சில



பிரச்சினைகள் ஏற்படுமானால் அதைக் கண்டிப்பதிலே தவறில்லை. ஆனால் மத்திய அரசின் தவறுகள் காரணமாக குறைகள் ஏற்படுமானால் கண்டிக்கப் படவேண்டியது மத்திய அரசே தவிர மாநில அரசு அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உணவுத் தானியங்களைத் தவிர மற்றப் பொருள்களுக்கு மாநில அரசு—அது எந்த மாநில அரசாக இருந்தாலும்—இன்றைக்கு இருக்கிற அரசமைப்புச் சட்டத்தின் கீழிருந்து விலைவாசிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இதே காரணத்தைத் தான் அன்று முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்திலே பலமுறையும் எடுத்துக்கூறினார்கள். அப்பொழுது விலைவாசிப் போராட்டம் நடந்து பஸ்களை எரித்தார்கள். வேறுகாரியங்கள் எல்லாம்கூட நடந்ததே அப்பொழுது இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் அன்று எதிர்க்கட்சியாக இருந்தது. அதை ஒத்துக் கொள்கிறார்களா? அதே கொள்கையைத்தான் இப்பொழுதும் கூறுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. செ. கந்தப்பன்:** அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் எந்த வண்ணத்தில், எந்த ஓடத்திலே இருந்தார்களோ அதே வண்ணத்தில், அதே ஓடத்தில் இருந்தார்கள் மத்திய அரசிலே இருந்தவர்கள். இன்று மத்திய அரசில் இருப்பவர்கள் வேறு படகில் போய்க் கொண்டிருக்கிறார்கள், நாங்கள் வேறு படகில் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை நான் பணிவோடு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே விலைவாசி ஏற்றம் குறித்து அரசமைப்புச் சட்டத்தின்கீழ் இன்றைக்கு இருப்பதை மாற்ற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அது மாற்றப்பட்டாலொழிய விலைவாசியின் சகல நெருக்கடிகளையும் நோக்கி அதிலே உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க சக்தியற்றதாக மாநில அரசு இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இதற்கிடையில் பொதுவாகத் தொழில் வளர்ச்சியினுடைய தன்மையில் தொழிலாளர்கள் அடிக்கடி அமைதியற்ற நிலைமைக்கு ஆளாவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் நான் சில்லரையான மேலோடிக் காரணங்களை இந்த நேரத்திலே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தால் மூலமான சில காரணங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக விலைவாசி ஒரு முக்கியமான காரணமாக இருக்கிறது.

இதுபற்றி 'சென்சஸ் ஆஃப் மானுஃபாக்சர்ஸ் இன் இந்தியா', 'ஆனுவல் சர்வே ஆஃப் இந்தியா' என்ற இரு ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டில் தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது, வேலைவாய்ப்பு வசதிகள் எந்த அளவுக்கு பெருகியிருக்கின்றன என்பதை அவை தெளிவாக விளக்குகின்றன. 1951-52 லிருந்து 1964-65 வரையில் தொழில் வளர்ச்சியில், உற்பத்திப் பெருக்கத்தில் 138 விழுக்காடு அதிகரித்திருக்கிறது. ஆனால் தொழில்

வளர்ச்சிக்கேற்ற முறையில் வேலை வாய்ப்புகள் அதிகரித்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அதிலே 35 விழுக்காடு தான் அதிகரித்திருக்கிறது. இதிலே இருந்து நாம் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ளவேண்டும்.

வேலை வாய்ப்புகள் குறைந்ததற்கு முக்கியமான காரணம் பொருள்கள் உற்பத்தித் துறையில் தானியங்கி இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்தி வருவதேயாகும். அதனால்தான் நாம் 'ஆட்டோமேஷனை' எதிர்க்கிறோம். இந்த அரசும் அதை எதிர்க்கிறது. இதைத்தான் அந்த இரு ஏடுகளிலும் உள்ள புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு பக்கம் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. இன்னொரு பக்கம் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. உற்பத்தி துறைகளில் தானியங்கிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவையெல்லாம் ஒன்றாக இணைந்து சென்றால் தான் ஒரு சமூகமான நிலை உருவாகும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதிலே இன்னொன்று மிக நன்றாகத் தெளிவாக நமக்குத் தெரியக்கூடிய உண்மை கூலிப் பிரச்சனையாகும். 1951-52 லிருந்து 1964-65 வரை கூலி 76 விழுக்காடு உயர்ந்திருக்கிறது. இந்த 76 விழுக்காடு கூலியில் உயர்ந்திருக்கிற அதே நேரத்தில் விலைவாசிப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் 57 விழுக்காடு அது உயர்ந்திருக்கிறது. கூலி உயர்வான 76 விழுக்காட்டையும், விலை வாசி உயர்வான 57 விழுக்காட்டையும் கூட்டிக்கழித்துப் பார்ப்போமானால் மீதமுள்ள 19 புள்ளிதான் இருக்கிறது. இவ்வளவுதான் தொழிலாளர்களுக்குப் பதினைந்து ஆண்டுகளில் கிடைத்திருக்கிறது. ஆதாயத்தில் பெரும் பங்கு யாருக்குப் போயிருக்கிறது என்று பார்க்கும்போது The output per worker accruing to the employer after payment of wages was 2.3 per cent higher.

ஒரு தொழிலாளிக்குக் கிடைத்துள்ள ஊதிய உயர்வு 19 சதவிகிதம்தான். ஆனால் ஒவ்வொரு தொழிலாளியின் உழைப்பின் பேரிலும்—நிர்வாகத்திற்குக் கிடைத்துள்ள கூடுதல் ஆதாயம் 230 சதவிகிதமாகும். எனவே லாபத்தில் பெரும் பகுதி முதலாளிகளுக்கு அல்லது தொழில் முதலீட்டு பங்குதாரர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது என்ற கணக்கைப் பார்க்க முடிகிறது. பங்குதாரரைவிட நிர்வாகம் என்ற பெயரில் ஒரு சிறு கூட்டமே இதில் பெருங்கொள்ளை அடிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொழிலாளர்களுக்கு நல்ல வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். நான் இதைச் சொல்லும்போது, அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றேன். யாவரும் அதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். அதேபோல் தொழில் அமைப்புகளுக்கு அனுமதி வழங்குவதிலும் சில கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. அதைக் கவனித்து, ஆவன செய்வது மத்திய அரசினுடைய கடமையாகும். தொழில் துறையைப் பொறுத்தவரையில் தொழில் அமைதிக்கு நம்முடைய வரம்பிற்குட்பட்டு, என்னென்ன மேம்பாடுகளைச் செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய நமதரசு தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் உதாரணத்திற்கு தொழில் அமைதியைக் குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமது சென்ற நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



"தொழில் தகராறுகளைப் பொறுத்த வரையில், அத் தகராறுகளைத் தீர்த்து வைக்க வசதி செய்வதே, தொடர்ந்து அரசின் கொள்கையாய் இருந்து வருகிறது. தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை, தொழிலாளர்களுக்குப் பரிவு காட்டும் அதே நேரத்தில், தொழில் துறை உற்பத்தி குலையாமல் பார்த்துக்கொள்வதும், தொழில் நிர்வாகிகளின் நியாயமான நலன்கள் பாது காக்கப்படுவதும், நமது கொள்கையாக எப்போதும் இருந்து வந்துள்ளது. இம் மாநிலத்தில், தொழிலாளர்களுக்கும் தொழில் நிர்வாகத்தினருக்கும் இடையே இணக்கமான நல்லுறவுகள் நிலவிட, கடமையைச் செய்பவர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதிலும், உரிமை கேட்பவர்களுக்கு கடமையை உணர்த்துவதிலும் இந்த அரசு பொறுப்புடன் செயல்பட்டு வருகிறது."

இந்த வரிகளில் ஒரு இம்மியும் பிசகாமல் கடந்த காலத்தில் நம்முடைய நடவடிக்கைகள் இருந்து இருக்கின்றன என்பதைத் திட்ட வட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நானும் தொழிலாளர்களோடு கொஞ்சம் தொடர்பு உள்ளவன்தான். எல்லாத் தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களோடும் தொடர்பு கொண்டவன் என்று சிலரைப் போல சொல்லிக் கொள்ள முடியாவிட்டாலும், ஒரு சில தொழிற்சாலைகளின் தொழிலாளர்களோடு தொடர்புடையவன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களோடு நெருங்கிய தொடர்புள்ள, அவர்களின் சுக-துக்கங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஒருவர்தான் தொழிலாளர் தலைவராக இருக்கவேண்டும் என்பது மறுக்க முடியாத கொள்கையாகும்.

இப்பொழுது பெரிதாகப் பேசப்பட்டு வருகின்ற சிம்ஸன் கம்பெனியை எடுத்துக்கொண்டால், முன்பு தலைவராக இருந்தவர் விலகிக்கொண்ட பின்னால் வேறு ஒருவர் தலைவராக வந்தார்கள். அந்த நபர் இன்றைய ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கிறார்; எனவே, அவர் சிம்ஸன் தொழிற்சங்கத் தலைவராக வந்த முறை சரியல்ல என்று சொல்கிறார்கள். தேர்ந்தெடுத்த முறை சரியில்லை என்றால் அதை மாற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மரபு இருக்கிறது. தொழிலாளர் நிர்வாக அமைப்பு அதை மாற்ற வேண்டுமே தவிர இதிலே அரசு தலையிட்டு முடிவெடுக்க வேண்டுமென்று சொல்வது எப்படிப் பொருந்தும்? இதிலே அரசு என்ன முடிவு எடுக்கவேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தலைவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் குறைபாடு உள்ளது என்று சொல்கிறார்கள். ஒப்பந்தத்தில் குறைபாடு இருக்குமானால் அதைத் தீர்த்துக்கொள்வதற்கான வழிமுறைகளும் இருக்கின்றன. அந்த வழிமுறைகளைத் தேடாமல், அதையும் ஒரு பிரச்சனை யாக்கி, அரசாங்கத்தின்மீது பழி சுமத்துகின்றார்கள். இன்றைக்கு அந்த தலைவர் வெளியேறிவிட்டார். தலைவரை மாற்றவேண்டும் என்று கூறியவர்கள், தலைவர் வெளியேறிய பிறகும்கூட தகராறை விட்டபாடில்லை. இதைப் பார்க்கின்றவர்களுக்கு—என்னைப் போன்றவர்களுக்கு—இது தொழில் தகராறாகத் தெரியவில்லை. மாறாக இது அரசியல் நோக்குடன் நடத்தப்படுகிற தகராறு என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

இது சம்பந்தமாக ஒரு உடன்பாடு ஏற்படவில்லையானால் மாநிலம் பூராவும் இந்தமாதம் 11-ந்தேதி வேலை நிறுத்தம் செய்வதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் 10-ந்தேதியே உடன்பாடு ஏற்பட்டுவிட்டது. அந்தச் செய்தி ஆளும் கட்சியைச் சேராத சில பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. வானொலியிலும் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகும் மேட்டூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த தொழிற்சங்கங்களைத் தவிர, மற்ற தொழிற் சங்கங்கள் எல்லாம் கண்டன ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டன. உடன்பாடு ஏற்பட்டு விட்டதே என்று சொன்னபோது, அந்தத் தொழிற் சங்கங்கள் எங்களுக்குத் தகவல் வரவில்லை என்று கூறின. உடன்பாடு ஏற்பட்டது குறித்து பத்திரிகைகளிலும், வானொலியிலும் அறிவித்திருந்ததைச் சுட்டிக் காட்டியும் அவர்கள் கேட்கவில்லை. இம்மாதிரியான நிலை நீடித்தால் நமது மாநிலத்தில் அமைதி குலைந்து, தொழில் முடக்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப் பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமெரிக்க ஆதிக்கத்தை கண்டிப்பதற்கடையாளமாக "எஸ்ஸோ", "கால்டக்ஸ்" பெட்ரோல் விநியோகிக்குமிடங்களுக்கருகில் போராட்டம் நடத்தப்போவதாக ஒரு கட்சி அறிவித்துள்ளது. எஸ்ஸோ, கால்டக்ஸ் பங்கு கள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களிலே ஸ்டிரைக் செய்வதென்றால், முக்கிய மான எரிபொருள் வைத்திருக்கிற இடங்களிலே ஸ்டிரைக் செய்கிறார்கள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? வேண்டுமென்றே நாச வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதைத் தவிர வேறல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசியல் நோக்கத்தோடு சில எதிர்க்கட்சிகள் இன்று நெருப்பு விளையாட்டில் இறங்கத் துடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது. சிம்லனில் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தலாமா என்று நம்மைக் கேட்டார்கள். ஆனால் கேரளத்தில் இருக்கின்ற இடுக்கி பிராஜெக்ட்டில் வேலை நிறுத்தம் செய்தார் கள். அதனால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று கருதி, நேற்றைய தினம் மத்திய அரசு இந்திய பாதுகாப்பு சட்டத்தை அங்கு பிரகடனப்படுத்தி இருக்கிறது. இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் சில பத்திரிகைகளில் இச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கே படிக்க விரும்புகிறேன்.

This is from the 'Mail' under the heading "Ban on strike in Iddiki Project." It is stated as follows :—

"The Central Government has issued a notification under the Defence of India Rules prohibiting strike or other stoppage of work in the Iddikki hydel project for six months, according to information received by the State Government.

The notification which comes into force with immediate effect, also prohibits strike in any service connected with generation, distribution or transmission of electricity in Kerala."

மின்சார உற்பத்தி, விநியோகம் அல்லது மின்மாற்றம் தொடர்பாக எந்த இடத்திலும் வேலைநிறுத்தம் கூடாது. ஆறு மாத காலத்திற்கு வேலை நிறுத்தம் இருக்கக்கூடாது என்று இந்திய பாதுகாப்புச் சட்டம் 118-வது பிரிவின் கீழ் இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி கேரள அரசாங்கம் என்ன நினைக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் நம் மாநிலத்தில் பாதுகாப்புச் சட்டத்தைப் பிரகடனம் செய்தபோது, இது தேவையற்றது; தொழிலாளர்களை ஒடுக்குவதற்காகவே இந்தச் சட்டம்





பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கு அண்மையில் வந்திருந்த மத்திய அமைச்சர் ஒருவர் இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'இது நியாயமற்றது, விரும்பத்தகாதது, மத்திய அரசாங்கம் இதைப்பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது' என்றெல்லாம் கூறினர்.

நமது மாநிலத்தில் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன் படுத்தியதைக் கண்டித்துப் பேசியவர்கள், இடுக்கி நீர் மின்சாரத் திட்டத்தில் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்து எதுவும் பேசக் காணோம். இங்கே வந்து பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியதற்குக் கண்டனம் தெரிவித்துச் சென்ற மத்திய அமைச்சர், டில்லியிலிருந்து அதே சட்டத்தை மேற்சொன்ன நிறுவனங்கள்மீது பிரகடனப்படுத்தியிருக்கிறார். இதை யெல்லாம் பார்க்கும்போது இங்கே அமைதியான முறையிலே தொழிற்சாலை கள் இயங்கிவருவதைக் காணப்பொறாதவர்கள், அந்த அமைதியை சீர்குலைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசுத் தரப்பில் இருந்தோ அல்லது தாம் தலைமை வகித்து நடத்திச் செல்கிற பேரியக்கத்தின் சார்பிலோ சில அறிவிப்புகள் தருகிற போது அது பற்றி செய்யப்படுகிற விமர்சனங்களை கவனித்தால் அரசியல் உள்நோக்கம் அவற்றில் இருப்பதைத் தெரிந்துகொள்ள முடியும். குறிப்பாக அவர்கள் இந்தியாவின் ஒற்றுமையைப் பற்றிச் சொல்லும்போது "ஒற்றுமைக்கே முதலிடம் தருகிறோம்" என்று சொன்னார்கள். இதைப் பற்றிக்கூட அவர் சொன்னது அவரது உள்ளத்தில் இருந்து வந்ததா, இல்லையா என்பதை எல்லாம் தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. அதுவும் ஒரு பத்திரிகை மக்களிடத்தில் பயந்து கொண்டு அப்படிப்பட்ட அறிவிப்பைத் தந்தார்கள் என்கிறது. மக்களிடத்தில் அவருக்கு என்ன பயம்? செல்லாக் காசுகளாக்கப்பட்டு ஒதுங்கி இருப்பவர்கள்கூட துணிவாக மக்கள் முன் எதையும் சொல்லத் துணியும் போது, இதற்குமுன் எவரும் பெறாத செல்வாக்கைத் தமிழர்களுக்கு மத்தியில் பெற்று மிக்க பேரோடும், புகழோடும் இயங்கி வருகிற டாக்டர் கலைஞர் அவர்கள், மக்களுக்குப் பயந்து கொண்டு ஒரு அறிவிப்பைத் தரக் காரணம் என்ன? யாருக்கும் பயந்து கொண்டு அறிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. அவரது தூய எண்ணத்தை மதிக்காது கீழ்த்தரமான உணர்ச்சிக்குச் சிலபேர் பலியாகி வருகிறார்கள் என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. நம் இனத்தில் ஒருவர் மக்களிடத்தில் இத்தனை செல்வாக்குடனும், புகழுடனும் செயல்பட்டு வருகிறார் என்பதைக் கண்டு பெருமைப்படவேண்டியதிருக்க—மகிழ வேண்டியிருக்க அதைவிடுத்து அவர்கள் இன்றைக்கு இறங்குகிற கீழ்த்தரமான ஆராய்ச்சியைக் கண்டு வருந்த வேண்டியதாக இருக்கிறது. அதுவும், குறிப்பாக அவருக்கு டாக்டர் பட்டம் தருகிறபோது என்ன என்னவிதமான சர்ச்சைகளை எழுப் பினார்கள் என்பதை நாம் அறிவோம். 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 30 தேதி இந்தியன் எக்ஸ்பிரசில் வந்த செய்தி ஒன்றை இந்த மன்றத்தில் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூடியவரையில் பத்திரிகையில் இருந்து படிக்காமல் இருப்பது நல்லது.

**திரு. செ. கந்தப்பன் :** மன்னிக்க வேண்டும். நான் சொல்கிற கருத்துக்கு ஆதாரமான மேற்கோளைத்தான் பத்திரிகையில் இருந்து எடுத்துக் காட்டுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : It is not necessary to quote from newspapers. It is enough if the hon. Member refers to it.

**திரு. செ. கந்தப்பன் :** இது காண்ட்ரவர்ஷியல் மேற்கோள் அல்ல; "மதர் டெரஸ்ஸா ஆனர்டு" என்கிற தலைப்பில் in "Indian Express" dated 30th October 1971.

"The Catholic University of America today conferred on Mother Teresa the honorary degree of Doctor of Humane Letters for her work in the slums of Calcutta and other Indian cities and through her Order in several other countries." என்பதாக அந்த அம்மையாருக்கு, கல்கத்தாவில் இருக்கிற சில குடிசை பகுதிகளில் ஆற்றியிருக்கிற பணிகளுக்காக, டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறார்கள் என்கிற இந்தச் செய்தியை நான் சுட்டிக்காட்டுவதன் நோக்கம், இது போலக் கொடுப்பது என்றால் நம்முடைய கலைஞர் அவர்களுக்கு எத்தனை டாக்டர் பட்டங்கள் தந்திருக்க வேண்டும்? இருந்தும் அவருக்கு டாக்டர் பட்டம் அளிக்கிறபோது சில பிரச்சினைகளை கீழ்த்தரமாக எழுப்பினார்கள் என்றால் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இழிந்த தன்மையில் பிரச்சாரம் செய்வதும், மக்களின் போக்கைத் திசை திருப்புவதும் அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு வாதம் சமீபத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் பேசாமல் இருந்து விட்டு இன்றையதினம் மாநில சுயாட்சிக் கோரிக்கையை முதல்வர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்களே என்பதாக பொறுப்பான ஒருவர் பேசியிருக்கிறார். உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இந்த இயக்கம் தோன்றிய நாளில் இருந்தே மாநிலங்களுக்கு அதிக உரிமை வேண்டுமென்ற குரல் என்றைக்கும் நிறுத்திவைக்கப்படவில்லை. முதலில் விடுதலைக் குரலாக இருந்தது. பின்னர் இந்திய அமைப்புக்குள் இருக்கிற தன்னாட்சி கோரிக்கைக் குரலாக மாறிய போதிலும் தொடர்ந்து இருந்தே வருகிறது. இடையில் நாடு சிக்கலை எதிர்நோக்கிய அந்த நேரத்தில் அதை நிறுத்தினார்கள் என்பது தவறானால் அந்தத் தவறை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அப்படி நிறுத்தியிருந்த பெருந்தன்மையைப் பாராட்டாமல் "இடையில் பேசாமல் இருந்தார்களே, மறுபடியும் பேசுகிறார்களே" என்பது உண்மையில் பொருத்தமான வாதம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கிடையில் தோழமைக் கட்சியாகிய வலது சாரி பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தன்னாட்சிக் கோரிக்கை ஒற்றுமைக்கு முரண்பட்டது என்பதாக பத்திரிகையில் விடுத்திருந்த ஒரு செய்தியைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். மற்றவர்கள் முரண்பாடானது என்று சொன்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் self—determination என்பதையே அடித்தளமாகக் கொண்டவர்கள்—இப்போது கொஞ்சம் மிதமாகிக் கொண்டிருக்கக் கூடும்—நம்மைப்பார்த்து தன்னாட்சி கேட்பது முறை அல்ல என்பது வேடிக்கைக்குரியதாகும். பீப்பிள்ஸ் வார் என்ற ஜெர்னலில் 1944 அக்டோபர் 15-ல்





"The National Kernal of the Pakistan Demand" wrote Adhikari, is that "wherever people of the Muslim faith living together in a territorial Unit form a nationality . . . they certainly have the right to autonomy State existence just like other nationalities in India such as Andhras, Karnatakis, Marathas and Bengalis".

என்பதாக என்ன கருத்தை வெளியிட்டார்களோ அதே கருத்தைத் தான் ஏறத்தாழ இன்றைக்கும் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு இடத்தில் பி.ஸி. ஜோஷி என்பவர் அகில இந்திய அடிப்படையில் நேரு அவர்களுக்குப் பதில் தருகிறபோது

"After all the real issue which sharply devides us to-day is not people's war, but our advocacy of self-determination"

என்று மார்ச் 1946-இல் குறிப்பிட்டார்கள். "நாங்கள் self determination கேட்கிறோம். நேரு ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

"Self determination to nationalities, including the right of secession என்பதை ஒத்துக்கொண்டால் தகராறுக்கு இடமில்லை" என்றார்கள். தொடர்ந்து அந்தக் கருத்தைத்தான் பலகாலமாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். சமீபத்தில் டெல்லியில் நடந்த ஒரு கருத்து அரங்கில் கூட திரு. ஆலடி அருணா அவர்கள் வந்திருந்தார்கள். திரு. நம்பூதிரிபாட்டும் திரு. பூபேஷ் குப்தாவும் என்ன சொன்னார்கள் என்கிற விவரம் என்னிடம் இருக்கிறது. வேண்டுமென்றால் வாங்கிப் படித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அவர்கள் வேண்டுமென்றே கலைஞர் சொல்வது முரணானது என்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் எல்லோருக்கும் புரியட்டும் என்பதாக ஆங்கில வார்த்தைகளையே உபயோகப்படுத்தி "நாங்கள் கேட்பது செல்ப் டிடர்மினேஷன் அல்ல; அடானமி தான்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒன்றைச் சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். மத்திய மாநில பொருளாதாரப் பங்கீட்டு உறவுகளை வகைப்படுத்துகிற அரசமைப்புச் சட்டத்தின் வகையுரைகள் 268-ல் இருந்து 282 வரை—ஏறத்தாழ 1935 ஆண்டு வெள்ளையரால் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தையே அடிப்படையாகக்கொண்டது அந்தக் காலத்திய சூழ்நிலை என்ன? இங்கிலாந்து நாட்டில் பொருளாதார மந்தம் நிலவிய காலம்—போர் மேகங்கள் சூழ்ந்துகொண்டிருந்த காலம்—என்றைக்கும் நம்மை அடிமையாக அவர்கள் வைத்திருக்க நினைத்திருந்த காலம்—மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் என்பதாக நாம் அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு என்ன என்ன கடமைகளைத் தந்திருக்கிறோமோ அந்தக் கடமைகள் எல்லாம் சிந்திக்கப்படாமல் இருந்த காலம்—மத்திய அரசின் வருமானமே 90 கோடியாக இருந்த நேரம்—அந்த நேரத்தில் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டப் பிரிவுகளையே இன்றைக்கும் நாம் வைத்துக் கொண்டிருப்பது சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் ஏற்பட்டிருக்கிற கேடுகள் எவ்வளவுதூரம் மலிந்து போய்க் கிடக்கின்றன என்பதைப் பார்க்காது—சொல்கிற கருத்துக்கு உள் நோக்கம் கற்பிக்க முயல்வது சரியானதாகாது. திரு. பிரபதோஷ் குப்தா என்பவர் காபிடல் என்ற பத்திரிகையில் 1970 செப்டம்பர் 31-ஆம் தேதி இதழில் எழுதியிருப்பதைப் பார்க்கவேண்டும்.

[திரு. செ. கந்தப்பன்]

"If the levy is called by one name, the revenues go to the States and if it is called by other names. the Centre gets everything"

என்பதாக, ஒரு பெயரில் மாநிலங்களுக்குச் செல்லும் அதே வரி இன்னொரு பெயரால் அழைக்கப்படுகிறபோது மத்திய அரசுக்கே போய் விடுகிறது என்கிறார். நியாயமாக மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்காமல் அவர்கள் வசூலித்துக் கொண்டு போகிறார்கள். அதுவும் 282 வகையரையின்படி மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிக்கிற உதவித் தொகை எவ்வளவு தவருகப் பயன்படுத்தப்படுகிறது, அரசியல் சட்டத்திற்கு சம்பந்தம் இல்லாத பார்லிமெண்டின் அங்கீகாரம் பெருத திட்டக்குழு என்று உருவாக்கப்பட்டு அந்த அமைப்பின்கீழ் பரிந்துரைகளை வைத்துக்கொண்டு தான்தோன்றித்தனமாக ஒதுக்கீடுகள் மாநிலங்களுக்கு மத்திய அரசால் செய்யப்படுகிறது. அதனுலே நமக்கு ஏற்படுகிற விளைவுகள், அதனுலே மாநில அரசினுடைய தனித்தன்மை எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதெல்லாம் நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரியாததல்ல. இப்படி பட்ட சூழ்நிலைகளிலிருந்து தப்புவதற்கு மாநிலத்தினுடைய தன்னுட்சிதான் இன்றைக்குத் தீவிரமாக்கப்படவேண்டிய பிரச்னை என்பதை மட்டும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது நம்முடைய அரசு காட்டிவருகின்ற நிதானமும் பெருந்தன்மையும் காரணமாக பல நேரங்களிலே ஆளுகிற தரப்பிலே உள்ளவர்கள் தாம் நியாயமான உரிமைகளைப் பெறமுடியவில்லை என்ற நிலைமைகள் எல்லாம் இருக்கிறபோது, ஏதோ தாம் பாதிக்கப்படுவது போல அரசியல் நோக்கோடு மாற்றுத் தரப்பிலுள்ளவர்கள் செய்கிற சூழ்ச்சிகளைக் குறித்து அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மாநில அரசு பொருளாதார அளவில், அரசியல் ரீதியில் நிர்வாகத் துறையில் முழுமையாகச் செயல்படுவதற்கான உரிமைகள் அதற்கு அளிக்கப் படவேண்டுமென்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இறுதியாக ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லோரும் ஒப்ப முடிந்தது என்பதாலே நான் அதனை இறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசமைப்புச் சட்டத்தின் 15-வது பிரிவிலே "பண்டமன்டல் ரைட்ஸ்" என்ற ஒரு வகையுரை இருக்கிறது. இந்திய நாட்டிலே சில அடிப்படைகளிலே ஒருவருக்கும் மற்றொருவருக்கும் மாறுபாடு அல்லது வேறுபாடு இருக்கக்கூடாது என்ற வகையிலே அந்த வகையுரை அமைந்திருக்கிறது. அதிலே

Prohibition of discrimination on grounds of religion, race, caste, sex or place of birth

என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மேலும்,

"The State shall not discriminate against any citizen on grounds only of religion, race, caste. sex, place of birth or any of them."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே மத அடிப்படையிலோ அல்லது இன அடிப்படையிலோ அல்லது ஜாதி அடிப்படையிலோ அல்லது பால்—ஆண், பெண்—அடிப்படையிலோ எந்த இடத்திலே பிறந்திருக்கிறார்கள் என்ற அடிப் படையிலோ இந்தியர்களைப் பாகுபடுத்திப் பார்க்கக்கூடாது என்று திட்ட





வட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் எந்த அடிப்படையிலே இந்தியர்கள் இயல்பாகப் பிளவுபடுகிறார்களோ அந்த விதியை வேண்டுமென்றே அரசமைப்புச் சட்டத்திலே புறக்கணித்து இருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள்—யுனைடெட் நேஷன்ஸ்—சார்ட்டரிலே உள்ள வார்த்தைகளையெல்லாம் அப்படியே இதிலே எடுத்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால் மொழியின் அடிப்படையில் மாறுபாடு காட்டப்படக்கூடாது என்பது மட்டும் இந்திக்கு ஆதிக்கம் தரவேண்டுவதற்காக இதில் காட்டாமல் விட்டிருக்கிறார்கள். 14. 15 மொழிகள் வழங்குகின்ற ஒரு நாட்டிலே மொழி எவ்வளவு அழுத்தமான அடிப்படை, அந்த மொழி அடிப் படையிலே மக்கள் பிரிவுபட்டிருக்கிறார்கள். எனவே, அந்த மொழி வாசகத்தை அதிலே சேர்க்கவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தினர் நாடாளுமன்றத்திலே இரண்டு முறைகள் தீர்மானம் கொண்டுவந்து வலியுறுத்தியிருக்கிறோம். சாதாரணமாகப் பார்க்கின்றவர்களுக்கே கூட—துல்லியமாகக்கூடப் பார்க்கவேண்டாம்—தெரியும் இந்தியரிடையே மொழி அடிப்படையிலே பாகுபாடு அமைந்திருக்கிறது என்ற உண்மை ஒரு பகுதியிலே பிறந்த புண்ணியத்தைச் செய்தவர்கள் என்பதாலே மொழியுரிமை பெற்று பிறர்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு ஒரு பகுதியிலே பிறந்த பாவத்தைச் செய்தவர்கள் என்பதாலே நாம் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்ற நிலைமைதான் அடிப்படை உரிமைகளிலேயே இருக்கிறது. இப்படி முக்கிய காரணங்கள் இருக்கிற நேரத்திலே அரசியல் அடிப்படையிலேயும் நிர்வாக அடிப்படையிலேயும் மாநிலத்திற்கு அதிக உரிமைகள் தரப்படவேண்டுமென்ற நம்முடைய நியாயமான குரல் அரசியல் சட்டத்திற்கு அப்பாலே நின்று எல்லோராலும் வலியுறுத்தப்பட வேண்டுமென்று ஒருமித்த குரலில் கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து அமைகிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, while congratulating the Governor for his able representation of the State Government's views, I think we will be failing in our duty if we do not point out certain short comings that exist in the speech.

In the first page itself the Governor has been congratulating. Rather, there is more hero worship than actual statement of fact. Here he says:

"Neither superiority in arms nor treacherous moves of the unscrupulous enemy backed by some of the ill-informed powers could help th enemy to succeed in his nefarious deigns. Thanks to the valour of our armed forces . . ."

We join with that.

"and the dynamic, sober and astute leadership of Prime Minister Indira Gandhi, our commitment to democracy has been honoured."

We join with that. But apart from that, it is the entire nation that has helped to win the war. It is not a personal victory. It is a national victory, I have to point out first.

[Thiru K. M. Subramaniam] [1972 சனவரி 24

Then, coming to the second page, the Governor says:

"Instead of advising the military junta of West Pakistan to respect realities, some of the powers encouraged the mad gamble of this junta . . .

Why some of the powers? It was really the United States of America that led this mad gamble of the military junta. The Governor should have categorically mentioned, this Government should have categorically mentioned that United States of America has definitely encouraged the mad gamble of this junta which ultimately led to naked aggression against India. On these two points I think the entire House will agree with me that the Governor has failed to mention these two important points. One is that the nation has completely supported Indira Gandhi's leadership. Secondly, it was the United States of America that led this murderous attempt of Pakistan on the innocent Bangla Desh.

Coming to the economy of the country, here many pious words have been stated. The hon. Member Thiru Kandappan has also made a very able representation of how the economy of Tamil Nadu had been developed. I am sure that there has been a lot of things to be done. Whenever the economy goes wrong the State Government blames the Centre. If anything goes wrong the Centre says that the State Government is not doing things properly. The Centre is always harping on the view that the State Government does not utilise the funds properly. I do not particularly refer to Tamil Nadu State. There is more planned wastage than planned construction. What is happening we all know. But whatever it is, all the parties in this State will certainly support the ruling party when it says that we want more money to do our work. There are no two opinions about that. But what we should do with that money, how we should utilise it? These are important problems to be solved or tackled properly and scientifically.

Sir, we find of course that there have been good encomiums paid on the agricultural development. In the entire nation there is agricultural development. I think in 1947 when the British left India, India's agricultural production was about four crores of tonnes. To-day it is more than ten crores of tonnes. The entire country has developed. Of course, Tamil Nadu has also developed. The development is not due to the present Government alone, but also due to what the past Government did. Various dams have been constructed: various canals have been dug; various measures have been adopted; electricity generation has been developed. All these have led to the present fairly prosperous state of food production in this country. In spite of it, we are all afraid to-day as to what is going to happen to our rice problem.

Of course, 'rupee a measure' scheme has been completely forgotten. It was only promised in the election manifesto. It was only introduced in Madras and Coimbatore. That has all gone now. We are thinking of rationing. If production is high,



1972 சனவரி 24] [Thiru K. M. Subramaniam]

if production is improved and if there is no need for rationing, I do not know in the previous year what has led to the introduction of rationing or to the investigation whether rationing is necessary or not, in spite of this extra production. I leave it to the Government to answer.

Sir, now coming to the production of cotton, we all know that many mills are closed and one of the main reasons for the closure of the mills to day is the high price of cotton. The high price of cotton is due to the fact that the producion of cotton is not developing according to the needs of the country. Also, the yield per acre in this country is the lowest in the world so far as cotton is concerned. I think the Mill Onwers' Association of Bombay have suggested some experiments with regard to the production of cotton and how it could be increased te-fold. The State Government have been grossly neglecting that aspect and consequently mills are being closed. T day, the mills are closed mainly due to the non-availability of cotton and its high prices.

Sir, I am sorry to say that not a word is mentioned in the Governor's Address about 40 lakhs of persons employed in the handloom industry. To day these 40 lakhs of persons employed directly or indirectly in the handloom industry are the worst sufferers. In 1947 their family income was Rs. 48 and in 1970 their family income was Rs. 96. But the family income of other workers have gone up like anything. A labourer who was getting Rs 60 in 1947 is to day getting Rs 250 But, not a word has been mentioned in the Governor's Address about them and so much importance is not given to them as should be given by this Government.

Sir, it is stated in the Governor's Address—

'As the House is aware, we have taken a number of steps to ensure that the small farmers and landless peasants are given adequate attention in the planning process . . .'

I do not know what adequate attention has been given to the landless peasants. So far as loans are concerned, in spite of the nationalisation of banks and in spite of the tall promises made to the agriculturists, I know big landholders are able to borrow money at concessional rates and they re-lend them to the small landholders who are not able to get it directly from the banks. Also, if the small landholder wants money, he has to produce two sureties to the bank. These two sureties cannot borrow anywhere else. That means only one in three will get monetary help from the Scheduled Banks. Is that right? Is that fair and is that enough?

Now coming to industries, I am very much surprised at the attitude of the Tamil Nadu Government so far as the industrial policy is concerned. I am not referring to particular industries. The hon. Member, Thiru Kandappan has stated that unemployment is due to various factors including the industrial policy. The

industrial policy should be so based as to provide maximum employment to the people. Now, this Government have suddenly come to the conclusion that joint enterprise is the best form of enterprise because it associates the Government in this enterprise, as also experts. Who are the experts? These experts are not the intellectual experts. These experts are not the people who are actually engaged in the enterprise. The moneyed people who put Rs. 50 lakhs in an enterprise along with Rs. 50 lakhs put by the Government become experts and it is they who run the enterprise. It is those people who have been responsible for the economic downfall of the country. During the last 23 years they have been able to get into all parties and they have been able to occupy all sorts of position. They have been in the banks and they have been able to influence the nationalised credit policy of the country. It is these people who contribute only Rs. 50 lakhs—the share of the Government would be Rs. 3 crores—are in charge of management, sales, purchase etc. Why not the Government say, 'You, capitalists, it is your duty to pay the whole amount and we will supervise you.' Why should the Government help them with money? Some people might say that private sector is better than the public sector. But I would definitely say that so far as the public sector is concerned, the Legislatures have got a right to question it. But as regards the private sector, who is to question them? These private people manage the industry as they like. So, I think this policy of joint enterprise needs revision and the Government should find out how the employment potential could be increased by such a change of policy.

Now I want to suggest one thing with regard to economy of expenditure. Instead of utilising lorries for the conservancy work in the municipal streets having a width of 18', carts can be used. For every furlong these lorries have to stop and that means loss of petrol. I hope the Government will consider this aspect of the matter.

Now I come to automation. Whenever automation can be substituted by human power, it should be resorted to. Now what is happening in China—I am not a friend of China. In China more importance is given to human-power. There is a ceiling on the production of cars and people are asked to go by buses. When that is going to happen in our State? Now in the Madras City there is a mechanical sweeper and is that absolutely necessary when manpower is available? In regard to such small things, we can economise expenditure.

Sir, I am glad that many industries are going to be started. B.C.T. powder, Borax and Boric Acid, Calcium Carbide, Potassium Chlorate, Cigarettes, Steering gears and Cigarette tissue. We should start industries to give employment to the people. By starting non-essential industries we will only be inflating the prices of essential commodities. For instance take the cigarette industry. It may be that 400 extra persons may be employed in the cigarette industry but the goods produced by them are not as



essential as foodgrains. Of course there is a place for non-essential industries but those industries can be started only after meeting the demands for essential commodities. If I had any voice in the Government, I would certainly have asked the Central Government through this Government to stop issuing licences for all non-essential industries for at least some years to come and then only prices will come down.

We know production of rice is increasing but price is also increasing. When production is increasing, we find the peculiar phenomenon of prices also increasing. Here what we find is more production and more prices what is the reason : Even though there is more production, because of growth of population, we find more unemployment. Prices are also increasing. That is what we have been finding during the past several years. Let me not go into details.

I now come to the new theory of Tamil Nadu Government about labour union, viz. that there should be one union for one industry. If, Government had stopped with that political ideology, I have no quarrel, but when it goes on and says that the unions should be led by persons chosen from among workers themselves, when the Governor says so in his speech, I say there is a big catch, here, Mr. Deputy Speaker. One union for one industry is good. Call it by any name. Let the election of the leader be done by the entire electorate, the workers in the industry. But you now say, that the leadership should be chosen from among workers. Can he be a worker, who may be bought, who may be influenced, who may be murdered? Is that the way we are going to have one as President of the union of workers ? Will such a worker be able to deal with hundreds of problems affecting the workers ? Will he be able to negotiate with the Management with full details ? Take for instance the Transport workshop. Suppose in a machiery a bolt is ot fitted properly and suppose there is fall in production in that machine, is it the fault of the worker? The people in the middle sector will not be able to take the case to management; they will be afraid of the management. These are matters concerning big management and they may keep quiet. Will the union leader, who is a worker, be able to point out the defect in machine and fight with the management that it is not the fault of the labour? A worker may not be able to do that. He may not be able to exert that much pressure on the management.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The hon. Member is discussing about the role of worker leader, a leader in the union elected by workers. Such unions are functioning very well in the Transport Department because they know the work and the issues involved in the industry. I really take objection to the hon. Member's contention that workers' leaders can be bought, that they are passive, that they are inefficient. All these evils are there

not only among workers themselves but also in the society as a whole. Let me say to the hon. Member that so far as Transport Union is concerned, we have got a workers' leader in the Transport Union. He is able to give very good suggestions. Let me remind the hon. Member that these are days of labour participation in management. When such is the case, the hon. Member should not lose canfidence in the role of labour.

THIRU K. M. SUBRAMANIAM : I am extremely thankful to the Hon. Minister for Transport for the tuition about workers and their unions and the role of union leader chosen from workers. I have been also associated with industries for 37 years. Of course, my association may not be so intimate as that of the Hon. Minister. I did not say that workers should not participate in the management. As a matter of fact I want the workers to participate in management. I stated that Union leader may be a worker and that you should not impose that he should be only from workers. Freedom of choice should be there for workers to choose their leader. That is what I say. One union for one industry is good. The hitch comes only when you say that union leader should be only from workers. I just quoted the example of Transport. I did not mean anything against the Transport Minister or Transport Department because the functioning of the Department of Transport is well-known to the public of Madras they know how efficiently the transport is working in the City of Madras, how people are going about running after buses, etc. I am not going to discuss those things at all now. I am extremely sorry if I had offended the Hon. Minister for Transport. I only just quoted an example. I did not say that workers should not participate in management. In fact workers' participation in management is what I am after. Let it not be confused. What I say is that workers should have freedom of choice to choose their leader and the workers' hands should not be fettered, by saying that union leader should be chosen from among workers only.

On Page 9 of his address, the Governor has talked about a very big scheme of Government to tackle unmploymnt. He has said nearly 2,000 youth corps volunteers have been recruited 2,000? Is that a big number when we find several lakhs of people unemployed? Of course to this small extent it is good. But we must go into the root of the problem of unemployment and take measures to tackle it. I think, Mr. Kandappan (he reads everything thoroughly and he must have read this also which has come three days ago in the papers) must have read in the papers that the Statistical Department of the Government of India had estimated that there would be about 9 million unemployed in India in the next two years. When such is the huge figure, when such is the gigantic problem of unemployment facing us, is this provision of 2,000 jobs for youth corps volunteers such a big thing? What I say is, instead of tackling the problem piecemeal here and there, take some concrete measures to tackle unemployment. Take the



problem seriously. Let us remember one thing. Unless we tackle this problem of unemployment, we will be thrown out of employment in the next hree years and we won't be here after three years. We will be thrown in the streets; we may not be here in Asesmbly but somewhereelse. So I want that this D.M.K. Government must take this problem seriously. It is not a small problem. If you have 10 industries, it may give jobs to 10,000. If you have 12 industries, it may give employment to more. But what should be our aim? Nobody should be unemployed in this country. How can you achieve it? How did China achieve it? How could Gandhian economy achieve it? Have we gone into this question seriously? Unemployment is one of our ills and unless we have big schemes to tackle it, there is no use.

Let me come to the last point. Prices are increasing. When prices increased previously, Congress Ministry in the State was blamed. When prices are increasing now, we blame the Congress Ministry in the Centre. We are apportioning the blame on them. But fortunately or unfortunately, prices are increasing. Is it due to want of production? No. Is it due to method of distribution? No. Production has increased. But still prices are increasing ? Why ?

First of all our taxation policy alone is responsible to a considerable extent. In every commodity that is being produced four times tax is paid to the raw material. It is about 8 to 10 percent; Tax alone—sales-tax—in a commodity's price. I think like Britain if there is to be consumer tax instead of sales-tax, our prices would have gone down.

Take the interest charges. Many mills are closed now and people are asking for opening of the mills. Let me tell them why the mills are closed. When raw materials are bought in a mill, it takes four months to manufacture the raw materials and make them into cloth. Four months ' interest is 4 per cent today. After making the cloth it takes four months to pass it on the wholesaler. Interest is 3 per cent during that period. So, four plus three, seven per cent interest. The wholesaler pays to the Marwari 2 per cent per month and four months he keeps the stock. That means he pays 8 per cent for four months. So, what is the interest charge in this country ? No country in the world pays this much of interest charge in any business or industry. The total interest charges alone in this country works out to about 18 to 22 per cent on a commodity. I thought that when the banks were nationalised, the prices of commodities would collapse. But I find even after nationalisation of banks it continues as pleasantly as it was before nationalisation. Nothing has happened yet to the credit policy. I might be rightly or wrongly guiding. Even in wrong guiding there may be one simple truth. Will the Government think for a moment what is the incidence of the sales-tax on a

commodity, what is the incidence of interest charges on a commodity and what is the incidence of credit policy on a commodity. The prices will go down up to 30 per cent to-morrow if proper adjustment is made. I think nobody has taken this very seriously. Every one who has passed economics in agriculture is an economist from America or he is an economist from Germany. There is no economist from India. That is the whole trouble. The man who has lived with the people, who understands people, who understands the national character, who understands the nation's business, who understands the nation's industry—such people are not given any opportunity to think or to do as they want. People are brought from outside.

I am very happy to hear about metropolitan city. The Governor has stressed very well the importance of Madras City. But those who come from outside and stay in Madras, particularly in the Legislators' hostel and see Mount Road do not know what Madras is. If they walk about the streets of Mambalam they will see big rivers of sullage water flowing through the roads of Madras. I am not exaggerating. Anybody can come with me to my place and see for himself the flow of sullage water through the roads. They want a City beautiful and City clean. There is no City health. Sullage water is flowing through the roads on one side. One year back what was the brilliance of the lights—cut-out lights in Mount Road. Now you drive through Mount Road and see the brilliance of cut-out lights. It is faded. Many of my hon. Friends might have experienced that. In that way this City needs very good attention and very good progress. You may say that these are all civic problems. Ultimately every problem is passed on to the Government. It is not civic problem if civic administration goes wrong.

Sir, one more point I wish to refer to is this. How many times the tax has been increased in the City. You say 'Government without taxes'. Those who have been paying Rs. 100 as property tax in 1964 are now paying Rs. 300. So far as my division is concerned, for example, I am told that the total property tax for 106th Division in 1969 was Rs. 1,10,000 and today it is Rs. 2,80,000. In the course of two years it has been increased to that extent. We talk about unemployment. How can we get employment, how can we be able to bring down the prices of commodities when the taxes are increased ? The landlord increases the rent and he will not give receipt. These are the things that are happening. So, I take advantage of this opportunity to bring these matters to the notice of this Government. Although their powers are limited, they can do many things within their limited power. Instead of building Five Star hotels, if you give that money to Mr. Arangannal he would have actually provided houses to another 3,000 workers. Building Five Star hotels and effecting improvements in Tourist Centres—all these things can wait.

(திரு. எம். சுரேந்திரன் தலைமை.)





We want people to progres, we want socialism in practice, not in thought, not in posters, not in dramas and not in cinemas, but socialism in practice. I hope and trust that these things will be taken into consideration when the next year's Budget is prepared. I think it must have been prepared by this time, but it may be re-examined. At least some fmudamental changes in our policies be made so that wec an solve thep roblems to a considerable extent and Tamil Nadu will have the unique honour of being shown as the first in unemployment as is indicated by the Employment Exchange figures. I thank you very much.

* **திரு. எம். கந்தசாமி:** பேரவைத் மாற்றுத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து, அதை ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் தமிழக மக்களின் நிலைமையையும், தமிழக அரசின் கொள்கைகளையும் தன்னுடைய உரையிலே மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். சென்ற ஆண்டு கடைசி மாதத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் போர்க்கோலம் பூண்டு இருந்தபோது, சட்ட மன்றக் கூட்டத் தொடரில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் ஒத்து ழைப்பை, தமிழக சட்ட மன்றத்திலே தீர்மானமாக கொண்டு வந்து நிறை வேற்றியதோடு மட்டுமல்லாமல், அந்தப் போரிலே ஈடுபட்டு இருந்த வீரர்களுக் கும், இந்தியத் தலைமையமைச்சருக்கும் பாராட்டினைத் தெரிவித்து, போரில் மாண்ட வீரர்களின் குடும்பங்களுக்கு 3 எக்கர் நிலமும், ரூ. 5,000 பணமும் என்று சொன்னதோடு மட்டுமின்றி, டிசம்பர் 26-ம் தேதி தமிழகத் திலே உள்ள அத்தனை மாவட்ட தலைநகரங்களிலும் தமிழக அரசின் சார்பில் வங்கதேச விடுதலை வெற்றி விழாவும், வீரர்களின் குடும்பங்களுக்கு நிலமும், பணமும் அறிவித்தபடியே கொடுத்ததை தமிழக மக்கள் மறக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். அதற்காக தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே வேளாண்மைத் துறை, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் குறையாத வண்ணம் அதிகப்படி தொகையை ஒதுக்கியதோடு மட்டுமின்றி, உற்பத்திப் பெருக்கமும் அதிகமாகவே வந்து கொண்டிருக்கிறது. நமக்கெல்லாம் மகிழ்ச்சித் தரக்கூடிய ஒன்றாகும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 3 லட்சம் டன்கள் அதிகமாக, அதாவது 73 லட்சம் டன்கள் உற்பத்திப் பெருக்கம் என்று காணும்போது, உள்ளபடியே இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டுமின்றி, தமிழகத்திலே விவசாயிகளுக்கு இன்றையதினம் கூட்டுறவுக் கடன் வசதி மூலமாகவும், பொதுப்பணித் துறையின் நீர்ப்பாசன மூலமாகவும், அதே நேரத்தில் அவர்களுக்குத் தேவை யான மருந்துகள், பூச்சி மருந்துகள், உர வகைகள் இத்தனையும் கொடுத்த காரணத்தாலும் தமிழகத்திலுள்ள அத்தனை விவசாயிகளும், இன்றையதினம் தம்மால் முடிந்த அளவு, மற்ற மாநிலத்திலுள்ள விவசாயிகளைவிட மிகச் சிறப் பான முறையில் அவர்கள் பணியாற்றியதன் காரணமாக, இன்றையதினம் தமிழக அரசு—தமிழ்நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இருக் கிறது.

மேலும், தமிழக அரசு கோயம்புத்தூரில் விவசாயப் பல்கலைக் கழகத்தை நிறுவிய காரணத்தால், அதன் மூலமாக இன்றையதினம் விவசாயம் பெருக் வாய்ப்பு இருக்கிறது. அதோடு, நம்முடைய வேளாண்மை அமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி என்ற முறையிலே ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் சென்று, அங்கே உள்ள விவசாயிகளை நேரில் கண்டறிந்து, அவர்களுக்கு வேண்டியவற்றை முடிந்த அளவுக்கு செய்து கொடுத்த காரணத்தாலே, இன்றையதினம் நமக்கு உணவுத் துறையிலே தன்னிறைவு கிடைத்து இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அதுமட்டுமின்றி, கொள்முதல் எடுக்கப்பட்டு விட்டதால், எல்லா விவசாயி களும் அரசாங்க அதிகாரிகளுக்கு பயப்படாமல், முடிந்த அளவு இப்பொழுது நல்ல விலையும் விவாயிகளுக்குக் கிடைப்பதால், விவாயிகள் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மின்சார வசதியைப் பொருத்தவரையில், மற்ற மாநிலங்களைவிட, தமிழகம் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகவே செய்து கொண்டிருக்கிறது. பம்பு செட்டானாலும் சரி, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதானாலும் சரி, அதிகமாகவே செய்து கொண்டிருக்கிறது. கவர்னரின் உரையில் உள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால், 1966-67-ல் 25,000 கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டது என்றால் 1971-முடிய 48,137 கிராமங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1972-73-ல் 58,800 கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப் படும் என்கிற தன்னம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். பம்புசெட்டுக் களும், 1966-67-ல் ஏறத்தாழ 2,57,000 ஆக இருந்தது, இன்றையதினம், 1971-72-ல் 5,74,000 ஆக அதிகரித்திருக்கிறது. 1971-72-ல் 6.34 லட்சம் மின்சாரப் பம்புசெட்டுக்கள் கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பது, விவசாயிகள் சம்மந்தமாக இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டிவருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இருந்தாலும் திருச்சி மாவட்டத்தைப் பொருத்தவரையில், மின்சார வாரியம் எவ்வளவு அதிகமாகப் பணியாற்றி னாலும் கூட, அங்கே இருக்கும் சௌத் மெராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொ ரேஷன் பலவிடங்களில், நிர்வாகம் சரியில்லாமல், குறிப்பிட்ட நேரத்தில் விவசாயிகளுடைய பம்புசெட்டுக்களுக்கு கனெக்ஷன் கொடுக்காமல், கிராமங் களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்காமல் இருக்கிறது. அதை அரசாங்கம் உடனுக்குடன் கவனித்து, அதையெல்லாம் மின்சார வாரியத்தில் சேர்க்க வேண்டும் என்று திருச்சி மாவட்ட மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் தொழிற்சங்கங்களைப் பற்றி கிண்டலாகச் சொன்னார்கள். இது இந்த அரசின் கொள்கையா, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்று இருப்பது முடியுமா என்று தனக்குத் தெரிந்த அளவில் சொன்னார்கள். அதற்குப் போக்குவரத்து அமைச்சரவர்கள் தகுந்த பதிலையும் அளித்தார்கள். இதற்கு முன்பு இதே கொள்கையை இன்றையதினம் முதல்வராக இருக்கும் கலைஞர் அவர்களும், அதற்கு முன்னால் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர் களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகச் சொல்லியிருக்கி றார்கள். எல்லாப கட்சிகளும் ஒத்துக்கொண்டால், நானும் ஒத்துக்கொள்ளத் தயார் என்று, இன்று நேற்று அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலேயே அறிவித்திருக்கிறார்கள். அதைத்தான்





டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அரசின் மூலமாக இப்பொழுது தெரிவித் திருக்கிறார்கள். அடிக்கடி டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வது, உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கைக்கொடுப்போம் என்பது. போர் மூண்ட காலத்தில், பேரவையின் வாயிலாக கைகொடுத்தார்கள். பத்துக் கோடி ரூபாயை, எந்த மாநில முதல் அமைச்சருமே சொல்லாத அளவில், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் யுத்த நிதிக்காக பத்து கோடி ரூபாயைக் கொடுக் கிறோம் என்றார்கள். அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுக்கவும் தவற வில்லை. இங்கே சிம்சன் பிரச்சினை இருந்தபோது, மத்திய அமைச்சர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில், ஒரு சாதாரணமான பிரச்சினையை, ஒரு பெரிய பிரச்சினையாக

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆக்கி, அதை மத்திய சர்க்கார் தீர்க்க வேண்டும் என்கிற வகையில், தொழில் சங்கத் தலைவர்கள் அங்கே சென்று, நமமுடைய முதல் அமைச்சரையும் தொழிலாளர் நல அமைசசரையும் அங்கே அனுப்பவேண்டும் என்று கேட்ட போது, உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று, அந்தப் பிரச்சினை இங்கே தான் தீர்க்கப்படவேண்டும் என்று கூறப்பட்ட மக்கள் எண்ணத்தை, வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு, அவர்களை அங்கே அனுப்ப முடியாது என்று சொன்னதையும் தமிழகம் அறியும். அந்தப் பிரச்சினையை இங்கேயே மிக்க சுமுகமாக தீர்த்து வைத்திருப்பதற்காக உள்ளபடியே நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இன்னும் அறுவர் கமிட்டி இருந்தாலும், பலர் பலவிதமாக பேசிக்கொண்டிருந்தாலும், போர் நடக்கும் நேரத்தில் இப்படி ஒரு பிரச்சினையைத் தூண்டிவிட்டு இருப்பதற்காக உண்மையிலேயே தமிழக அரசின் சார்பில் டாக்டர் கலைஞர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த அரசு தொழிலாளிகளுடைய அரசு, தொழிலாளிகள் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்று முடிந்த அளவில் இந்தப் பிரச்சினையை சுமுகமாக அறுவர் கமிட்டிக்கு விட்டிருப்பதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, தமிழகத்தைப் பொருத்தவரையில், டாக்டர் கலைஞர் பிறந்த நாளில், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி என்று துவக்கி, ரூ. 40 லட்சத்திற்குத் திட்டமிட்டு இன்று ஒரு கோடிக்கு மேல் எட்டிய பிறகு அதற்கான பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு என்று நேற்று முன் தினம் ஒரு நிலையத்தைக் கட்டி, தென்னாற்காடு மாவட்டத்தில் திறந்து வைத்திருக்கிறார் கள். இன்னும் பல மாவட்டங்களிலும் இம்மாதிரித் திறக்கப்படவிருக் கின்றன. இதே மாதிரி எந்தக் காரியத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் தொட்டாலும், அது அதிகமாகவே நல்ல முறையில் வளருகிறது, மக்களுக்குப் பயன் படும் வகையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை, எதிர்க் கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றையதினம், மத்திய சர்க்காரில் அதிகாரங்கள் அதிகமாக குவிந்து கிடக்கின்றன. மாநிலங்களுக்கு அது பரிமாறப்படவேண்டும் என்கிற பிரச்சினை எல்லா மாநில முதல் அமைச்சர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. மைசூர் மாநிலத்திலும், அண்மையில் ஆளுநர் அவர்கள் மத்திய சர்க்கார் கொள்கையை மீறியிருக்கிறது என்று சொல்லும் அளவில்

அவர்கள் பேசி, உடனே மத்திய சர்க்கார் அவருக்குத் தாக்கீது அனுப்பி, அவர்களை இன்றையதினம் தான் பேசியது தவறு என்று சொல்லும் அளவில் மத்திய சர்க்கார் இயங்கிக் கொண்டு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசில் எந்தக் கட்சி இருந்தாலும், அது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் ஆனாலும் சரி முன்னாலே இருந்த நேரு அவர்கள் ஆண்ட போதிலும் சரி யார் வந்தாலும் சரி, மாநிலங்களுக்கு நிறைய அதிகாரங் களைத் தரவேண்டும் என்றும், அதே நேரத்தில் இந்திய ஒருமைப் பாட்டிற்கு குந்தகம் இல்லாமல் நடக்கும் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொருத்தவரையில், வேலையில்லாத் திண்டாட்டம் ஏதோ அதிகமாக இந்த மாநிலத்தில் மட்டும் இருப்பது போலவும், வேறு வேறு மாநிலங்களில் இல்லாதது போலவும் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் சொன்னார்கள். இரண்டாயிரம் பேர்களுக்கு "இளைஞர் அணி" என்று கொடுத்துவிட்டால் போதுமா என்று கேட்டார்கள். சென்ற ஆண்டு 6,500 ஆசிரியர்களுக்கு வேலை தரப்பட்டிருக்கிறது. அதே போல, இளம் பொறியாளர்களுக்கு 1,500 பேர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கு 2,000 இளைஞர்களுக்கு, படித்தவர்கள் வீணாகாமல் இருக்கவேண்டும் என்று பட்டதாரிகளுக்கு உதவிகொடுக்க இளைஞர் படை நிறுவப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நல்ல பயிற்சியினைக் கொடுத்திருப்பதை பாராட்ட மனம் இல்லா விட்டாலும், குறைகூறாமலாவது இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவேண்டுமென்றால் பல தொழிற்சாலைகள், அதுவும் மத்திய அரசின் அனுமதி பெற்று சீக்கிரம் தமிழகத்தில் ஏற்பட வேண்டுமென்ற முறையிலேதான் இன்றைய தினம் தொழில் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக மத்திய அரசின் அனுமதி பெற்று பல தொழில்களைத் துவங்க யோசனை இருப்பதாக கவர்னர் அவர்களின் உரையில் காண்கிறோம். அதே போல தூத்துக்குடி உரத் தொழிற்சாலை ஏறத்தாழ 100 கோடி ரூபாயிலே சீக்கிரமாக அமைக்கப்பட இருக்கிறது. அது அமைக்கப்பட்டால் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவிற்குத் தீரும். அதேபோல சேலம் உருக்காலைத் திட்ட வேலை சீக்கிரமாக நிறைவேற்றப்படுமானால், அது வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கும். இந்த அளவிலே தொழிற்சாலைகள் தமிழகத்திலே சீக்கிரமாகத் துவங்கி வேலை செய்ய ஆரம்பித்தால் முடிந்த அளவிற்கு நாம் சொல்லிய அளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு இந்தப் பகுதியிலே உள்ளவர் களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழகத்திலே இன்றையதினம் நல்ல அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் ஏதாவது செய்து தமிழக அரசிற்கு ஏதாவது கேடு விளைவிக்கின்ற எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல் சில பத்திரிகைகளும் இந்த காரியத்தில் ஈடுபட்டு வருகின்றன. பாதுகாப்பு நிதி வசூலுக்காக டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்கள் படத்தோடு, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி யவர்கள் படத்தையும் வெளியிட்டார்கள். எதிர்க்கட்சிக்காரர்களும், ஒரு சில பத்திரிக்கைகளும் இதைத் தவறாகப் நரிந்து கொண்டு சாதாரணமாகப்



போட்ட படத்தைப் பற்றித் தவறாகப் பிரசாரம் செய்தார்கள். இதற்கு முன்பு இது மாதிரி எதுவும் நடந்திராதது போலவும், இப்போது மட்டும் நடந்து விட்டது போலவும் குறை சொன்னார்கள். உடனே முதலமைச்சர் அவர்கள், அப்படி ஏதாவது முறை தவறி இருக்குமானால் அதற்காக வருத்தப் படுகிறேன் என்ற அளவில் அவருடைய பெருந்தன்மையைக் காட்டிக் கொண்டார்கள். இப்படி மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் ஏதாவது தகராறை ஏற்படுத்தி இங்கே அவருடைய ஆட்சியைக் கவிழ்த்து விடுவது என்ற முறையிலே செய்து வருகிறார்கள். நிச்சயமாக அப்படி எதுவும் செய்ய முடியாது. கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாகக் கலைஞர் அவர்கள் செய்துள்ள சாதனைகளை எண்ணிப் பார்க்கிற மக்கள் இன்றைய தினம் அவருக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவிற்கு முதல்வரும் அவர்களுடைய அமைச்சரவையும் தமிழகத்திலே செய்ய வேண்டிய காரியங்களை செய்து கொண்டு வருகிறது.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்பு கிறேன். திருச்சி மாவட்டத்தில் அதுவும் குறிப்பாக குளித்தலை, முசிறி, காவிரி பாலம் 20 ஆண்டு காலமாகப் பிரச்னையாக இருந்து வந்தது. கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இதைப் பற்றி வற்புறுத்தி வந்தார்கள். நான் அவரை வேண்டிக் கேட்டுக் கொண்டதின் பேரிலும் இன்றைய தினம் இதற்கு அவரே அனுமதி தந்து அதற்கு அவரே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அந்த வேலை துரிதமாக்கப்பட வேண்டும். அதே போல குளித்தலை நகரத்திற்குக் குடி தண்ணீர் வசதிக்காக குடிநீர் வாரியத்தின் மூலம் ஏறத்தாழ 13 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் தொடங்கியவண்ணமிருக்கின்றன. அதற்காக இந்த அரசிற்கு என் நன்றி யையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல காவிரி ஆற்றிலிருந்து மணப்பாறைக்கு ஏறத்தாழ 72 லட்ச ரூபாயில் குடிநீர் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அது செயல் வடிவம் பெற்று, அந்த வேலையை சீக்கிரம் தொடங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை மருத்துவமனை நீண்ட நாட்களாக சிறு மருத்துவ மனையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை விரிவு படுத்தி 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றப்பட வேண்டும். அதற்கான அனுமதியை அரசு சீக்கிரத்தில் அளித்து அந்த வேலையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மணப்பாறை நகரம் இன்றைக்குப் பெரும் நகராட்சியாக மாறி இருக்கிறது. அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள பகுதிகளிலிருந்து மாணவர்கள் பள்ளி இறுதி வகுப்பை முடித்துக் கொண்டு விட்டு திருச்சிக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த இடத்திலே அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர் களிடத்தில் தெரிவித்திருக்கிறேன். அங்குள்ள நகராட்சி மன்றமும் அரசிற்கு ஒரு வேண்டுகோளை அனுப்பியிருக்கிறது.

அதே போல தோகைமலைப் பகுதியில் சென்ற ஆண்டு பின் தங்கிய வகுப்பினர் மாணவர்களுக்காக ஒரு விடுதி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருந்தது. அது ஏதோ காரணத்தினால் தடைப் பட்டு இருக்கிறது. வரும் நிதி ஆண்டிலாவது அந்த விடுதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்களுடைய பிரதிபலிப்பாக, தமிழக மக்கள் எந்தெந்த நிலையிலே இருக்கிறார்கள், அவர்களுக்கு இந்த அரசு எந்த அளவிற்கு முடிந்ததைச் செய்யும் என்பதை மிகத் தெளிவாக ஆளுநர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இந்த உரை தமிழக மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளியவர்களுக்கு பயன்படக் கூடிய விதத்திலே இருக்கிற காரணத்தினால் இதை வரவேற்று என்னுடைய உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே வைக்கப்பட்டிருக்கிற ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த வருடம் நடந்த ஆளுநர் உரையின்மீது நடந்த விவாதத்தின் போது ஜனநாயகம் எப்படிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றி நான் அப்போது குறிப்பிட்டிருக்கிறேன். ஏனெனில் அப்போது தான் தேர்தல் நடந்து முடிந்து அதனுடைய முடிவு வெளியாகி அதன் விளைவாக ஜனநாயகம் எந்த வழியிலே செல்கிறது என்பதை மதிப்பிட முடிந்திருக்கிறது. அதற்குப் பின்னால் அந்த வருஷத்திற்கும், இந்த வருஷத்திற்கும் மத்தியில் இருக்கிற இடைக்காலத்திலே ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல் முறை மாத்திரமல்ல அதற்கு அப்பாலும் பல காரியங்கள் ஜனநாயக முறையிலே செயல்பட வேண்டியிருக்கிறது என்பதைப் புதிய அநுபவம் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது. ஆளுநர் உரையிலே வங்காள தேசம் ஏற்பட்டது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான, தொடர்பான காரியங்களை வரவேற்றிருக்கிறோம். அங்கே ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்த உத்திரவிடப்பட்டு, அந்த சர்வாதிகாரி தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ற நபர்கள் தேர்ந்து எடுக்கப்படாமல் தன்னுடைய விருப்பத்திற்கு மாறானவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டதால் அவர்களிடத்திலே அதிகாரத்தை ஒப்படைக்காமல் அவர்களை அடக்கி வைப்பதற்கான முறையிலே காரியங்களைச் செய்தார். ஆகவே, ஒரு தேர்தல் நடந்தால் மட்டும் போதாது, தேர்தலுக்குப் பின்னால் கட்சியிடத்திலே அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒரு கட்சியிடத்திலே அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மந்திரிசபை அமைத்துக் கொண்டதற்குப் பின்னாலே வரி வருமானங்களை தங்கள் மனம் போனபடி ஆடம்பரமாக எப்படி வேண்டுமானாலும் பணத்தைச் செலவிடலாம் என்று நினைப்பது ஜனநாயகத்திற்குப் பொருந்தியதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதோடு மாத்திரமல்ல; ஆட்சி பீடத்தில் அமர்ந்ததற்குப் பின்னால் சர்க்கார் ஊழியர்கள், மற்றச் சிப்பந்திகள், அதிகாரிகள் ஆகியவர்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப நடக்க வேண்டியவர்கள், அவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற முறையிலே நடத்துவது ஜனநாயகத்திற்குப் பொருத்தமானதாகுமா? ஆகாது என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம்.





அதற்கு அடுத்தாற்போல் தேர்தல் சமயத்தில் எல்லாக் கட்சிகளின் துணையோடு தேர்தல் போட்டியிட்டு அதிலே வெற்றி கண்ட பிறகு அரசாங்கம் அமைத்துக் கொள்கிற வாய்ப்புத் தங்களுக்குக் கிடைத்ததற்குப் பின்னால் மற்றக் கட்சிகளை ஏளனமாகப் பேசுவது, தங்களுடைய தயவிலே அவர்கள் வந்தார்கள் என்று சொல்வது என்பதெல்லாம் ஜனநாயகத்திற்குப் பொருந்துமா ? இல்லை என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். அதோடு மட்டுமல்ல தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தாங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டதற்குப் பின்னால் தாங்கள் எதிர்க்கட்சியினருக்கும் சேர்த்துப் பிரதிநிதியாக இருக்கிறோம் என்ற உணர்வோடு செயல்படுவதற்கு பதிலாக தங்கள் கட்சியினருக்கு மட்டும் காரியம் செய்வது ஜனநாயகத்திற்குப் பொருந்தியது அல்ல என்ற உண்மையை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். அதேபோலத் தான் அமைச்சர் அவையிலே இருக்கின்றவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சிக்காரர்கள் கொண்டுவருகிற பிரச்னையை ஏற்றுக் கொள்வது இல்லை, மாற்றுக் கட்சிக்காரர்கள் அழைத்தால் அந்தப் பகுதிக்கு வருவதில்லை தங்கள் கட்சிக்காரர்கள் சொன்னால் தான் வருவது என்ற முறையிலே நடந்து கொள்வது ஜனநாயகத்திற்கு பொருத்தமானது அல்ல என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். இப்படி ஜனநாயக முறை செழுமைப்பட வேண்டுமானால் ஒரு தேர்தல் நடைபெறுவதும், தேர்தலுக்குப் பின்னால் அதிகாரத்தைத் தேர்ந்தெடுத்தவர்களிடத்திலே ஒப்படைப்பதும், அந்த அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அதைச் செயல்படுத்துகின்ற விதத்திலே ஜனநாயகமாக நடந்துகொள்வதும் மிகத் தேவையான ஒன்று என்பதை நாம் இப்பொழுது புரிந்துகொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கத்திலே நாம் பார்க்கின்றபோது, இந்த ஆட்சி செய்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் ஏதாவது தகராறு ஏற்படும்போது இங்கே இருக்கிற அமைச்சர்கள் தம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பக்கத்திலே இருப்பது, தன்னை ஒரு கட்சிக்காரராக வைத்துக் கொள்வது என்பதும் ஜனநாயகம் அல்ல.

இங்கே பேசிய உயர்திரு கந்தப்பன் அவர்கள் கூறினார்கள். சிம்ப்சன் தொழிற்சாலையிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம், அதைத் தொடர்ந்து மாநில முழுதும் கண்டனம் அறிவிக்க வேண்டும் என்ற அறிவிப்பு, இது பின்னால் கைவிடப்பட்டது என்று சொன்னதற்குப் பின்னாலும் மேட்டூரிலே பெரிய ஊர்வலமும் கூட்டமும் நடந்தது என்று கூறினார்கள். உண்மை தான். மேட்டூரிலே ஊர்வலமும் கூட்டமும் நடந்தது, ஏதோ சிம்ப்சன் தொழிலாளர்கள்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள் இருக்கின்றதே அந்த நடவடிக்கைள் முறையானவையல்ல என்பதை சுட்டிக் காட்டுவதற்காக, அதைக் கண்டிப்பதற்காகத்தான் அங்கே கூட்டம் நடந்தது. அது கண்டனக் கூட்டமென்றால், ஒரு கூட்டம் மட்டுமல்ல, வேலை நிறுத்த மாகவும் மற்ற விஷயமாகவும் உருவாகி இருக்கக்கூடும். ஆனால் உருவாகாமல் வெறும் ஒரு ஊர்வலமும் கூட்டமும் நடந்ததைக்கூட உயர்திரு கந்தப்பன் அவர்கள் எடுத்துக்காட்டியதிலிருந்து நான் என்ன புரிந்து கொள்கிறேன் என்றால் தாங்கள் விரும்பியதற்குப் பதிலாக வேறு எந்தக் காரியம் நடந்தாலும் அதைத் தங்களால் சகித்துக்கொள்ள முடியாது என்பதைக் காட்டுகின்ற குணமாக அது இருக்கிறது என்று. அப்படி எடுத்துக் கொள்கின்ற முறை இருக்கின்றதே அதுவும் ஜனநாயக முறையல்ல என்று சொல்ல நான் ஆசைப் படுகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளை

ஆராய்ந்து அறிந்து அதை மாற்றிக் கொள்வதற்கும் திருத்திக் கொள்வதற்கும் அதை சகித்துக்கொள்வதற்கும், எதிரிகள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் ஏற்றுக்கொள்வதற்கும் தயாராக இல்லாதவர்கள் ஜனநாயகத்தை முறையாக செயல்படுத்த முடியாது என்பதை இப்பொழுது நாம் புரிந்துகொண்டிருக்கிறோம் என்று நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கே சிம்ப்சன் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது ஏதோ அரசாங்கத்தைக் கவிழ்க்க, ஏதோ அரசாங்கத்திற்கு வேண்டுமென்றே கெட்ட பெயரை உண்டாக்குவதற்காக பல பேர்கள் காரியம் செய்கின்றார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பொறுப்பான பலபேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படிப் பேசியதெல்லாம் நியாயமா என்று இப்பொழுது நடந்திருக்கிற சம்பவங்களைவைத்துப் பார்க்கின்றபோது, இதே, முறையை இதற்கு முன்னால் செய்திருந்தால் இம்மாதிரியான நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதை அன்றைக்குப் பேசினார்கள், இன்றைக்கும் அதுதான் பேசுகிறோம் என்றால் அதன் செயல்கள், அதன் விளைவுகள், அதன் பலன்கள் என்ன என்பதை சரியான முறையிலே கணக்கிட்டுப் பேசவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோலத்தான் இங்கே அதிகாரத்தைப் பரவல் செய்யவேண்டும் என்ற வாதம் வெகுநாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பரவல் செய்வதிலே யாருக்கும் எந்தவித அபிப்பிராய வித்தியாசமும் கிடையாது. நாட்டிலே இருக்கிற அதிகாரம் அங்கே ஒரு இடத்திலே குவிந்து அங்கே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் சென்று அந்த அதிகாரத்தை வாங்க வேண்டும் என்பதை சகித்துக்கொள்ள முடியாது. நாடு வளர்ந்து கொண்டிருக்கிற முறையிலே அதிகாரம் பரவல் செய்யப்படவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அந்த வாதத்திற்கு வலுவாக இந்த தமிழ்நாடு தனியாகப் பிரிந்துவிடவேண்டும், அப்படி பிரியாவிட்டால் ரத்தக்களறி ஏற்படும் என்று பேசுகிற முறை இருக்கிறதே அது எங்கே கொண்டு போய் விடும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இப்பொழுது 'வங்க தேசம்' ஏற்பட்டதற்குப் பின்னால் இங்கே இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இங்கே என்ன மாதிரியாகப் பெயர்சொல்லி அழைக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது, முஜ்புர் ரஹிமான் பெயரைச் சொல்லி ஆகா, தமிழ்நாட்டு தலைவர் ரஹ்மான் அவர்களே வாருங்கள் என்ற முறையிலே ஆங்காங்கு போஸ்டர்கள் போடுவதும், ஆங்காங்கு எழுதுவதும் பேசுவதும் செய்கின்றார்கள். ஆகவே, அதிலே அடங்கி இருக்கின்ற இன்னொரு அம்சத்தை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். பாகிஸ்தானிலே ரஹ்மானுக்கு எதிராக பூட்டோ இருந்ததைப்போல இங்கே இந்த ரஹ்மானுக்கு எதிராக இந்திரா காந்தி இருக்கிறார்கள் என்று சொல்கின்ற அர்த்தம் அதிலே தொக்கி இருக்கிறதே, அதைத் தலைவர் அவர்களே, எண்ணிப் பார்த்திருக்கின்றார்களா? என்று கேட்க ஆசைப்படுகிறேன். இம்மாதிரியான முறையிலே காரியங்கள் நடந்துகொண்டிருப்பது ஜனநாயகத்திற்கோ அல்லது அதிகாரத்தைப் பரவல் செய்வதற்கோ ஒரு பொருத்தமான காரியம் அல்ல என்று இந்த நேரத்தில் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அதோடு மட்டுமல்ல. ஒரு தொகுதிக்கு அமைச்சர்கள் வருகின்றபோது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், அங்கே இருந்தால் அவர்களுக்கு உரிய மதிப்பு கொடுக்க வேண்டும் என்று நடந்து கொள்வதுதான் ஜனநாயகமே தவிர, அவரைப் புறக்கணித்துவிட்டு, அந்தத் தொகுதியிலே இல்லாத வேறு தொகுதியிலே இருக்கின்றவர்களை அழைத்து அங்கே பொது நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிக்கும்படி செய்து, பெரும் பங்கு எடுத்துக்கொள்ளும்படிசெய்து, அங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்காமல் உரிய மரியாதை அளிக்காமல் இம்மாதிரியான காரியங்கள் செய்வது ஜனநாயகம் அல்ல என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் என்னுடைய தொகுதியிலே இரண்டு மூன்று பள்ளிக்கூட கட்டிடங்கள் திறப்பு விழாக்களுக்கு கட்டிட கமிட்டியைச் சேர்ந்தவர்கள் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரைத் தலைமை வகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, அது முடியாது, அவர் அப்படி தலைமை வகித்தால் அங்கே அமைச்சர் வரமாட்டார் என்று சொல்லி சேலத்தில் இருந்த வேறு நண்பர்களைக் கொண்டு தலைமை வகிக்க வைத்து கூட்டங்களை நடத்தி இருக்கிறார்கள்.

இன்னொரு பக்கத்திலே பொது நிகழ்ச்சியாக இருக்ககூடிய அரசாங்க நிலத்தைப் பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சிகளுக்கு இங்கே இருக்கின்ற மதிப்புக்குரிய கந்தப்பன் அவர்கள் தலைமை வகித்து அந்தக் காரியத்தை நடத்தி இருக்கின்றார்கள். ஆகவே, இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், யாராயிருந்தாலும் சரி, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சாமான்யர்களாக இருந்தாலும் சரி, அறிவிலே குறைந்தவர்களாக இருந்தாலும் சரி, எப்படி இருந்தாலும் சரி, அவர்கள் ஜனங்களுக்குப் பிரதிநிதியாக இருக்கிறார்கள். ஆகவே ஜனங்களுடைய பிரதிநிதியாக இருப்பவர்களுக்கு உரிய மதிப்பைத் தருவதுதான் ஜனநாயகமே தவிர, இம்மாதிரியான ஜனங்களுடைய பிரதிநிதிகளுக்கு மதிப்பளிக்கவில்லை என்றால், அங்கே வாக்களித்தவர்களை மதிக்கவில்லை என்றுதான் பொருள், ஜனங்களை மதிக்கவில்லை என்றால் ஜனநாயகம் பேசுவது எப்படி சரியானதாக இருக்கும் என்று நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆகவே, இம்மாதிரியான முறைகள் எல்லாம் படிப்படியாக வளர்ந்து ஜனநாயகம் செழுமையாக உருவாக வேண்டுமானால், ஜனநாயகத்தைப்பற்றி பேசுவதால் மட்டும் அது வராது. ஜனநாயகத்தின் உதவியைக் கொண்டு தானே எல்லாமாக தன்னுடைய காரியங்களை எல்லாமாக, தன்னுடைய ஆட்சியே எல்லாமாக செயல்படுவதற்கு அதைக் கருவியாக பயன் படுத்துகின்ற நிலை இருக்கிறதே அது சரியானதல்ல, அந்த நிலை சரியானதல்ல என்பதற்கு கேரளத்திலேயும் பல உதாரணங்கள் இருக்கின்றன. இப்படி வேறு பல நாடுகளிலேகூட உதாரணங்கள் இருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் காலத்திலே கொண்டு ஜனநாயகத்தை வளர்ப்பதற்கான முறையிலே வருங் மனதிலே கொண்டு ஜனநாயகத்தை வளர்ப்பதற்கான முறையிலே வருங் படுவார்கள் என்று நான் நம்புகிறேன். அம்மாதிரி நம்புகிற காரியத்தை இந்த நேரத்திலே குறிப்பிடுவதற்குக் காரணம் ஜனநாயகத்திலே மேலும் மேலும் வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. ஜனநாயகத்திலே மீண்டும் மீண்டும்

படிப்பினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் படிப்பினைகளையும், வளர்ச்சிகளையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, ஜனநாயகவாதிகளாக இருக்கின்றவர்கள், ஜனநாயகத்தைப்பற்றி உறுதியாகப் பேசுகின்றவர்கள் அதைச் செயல் படுத்த வேண்டும். வெறும் காகிதத்திலேயும், எழுத்திலேயும், பேச்சிலேயும் ஜனநாயகம் இல்லை என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையிலே வேறு தொழிலைப்பற்றி, விவசாயத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறதே தவிர, தம்முடைய மாநிலத்திலே இருக்கிற மிகப் பிரதானமான கைநெசவுப் பற்றி ஒன்றுமே அதிலே குறிப்பிடவில்லை. பல லட்சம் பேர் வாழ்கின்ற ஒரு தொழிலாக கைத்தறி தொழில் இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கைத்தறித் தொழில் இன்றைக்கு மிகவும் கஷ்டமான நிலைமையிலே இருந்துகொண்டிருக்கிறது. நூல் விலைகளும் பட்டு விலைகளும் ஏறிய காரணத்தினால் பல தறிகள் நின்றுவிட்டன. பலபேருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. இப்படி இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே அவர்களைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் என்ன என்பதைப்பற்றி இந்த உரையிலே ஒன்றுமே குறிப்பிடாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. இந்தக் கைத்தறி சம்பந்தமாக பல மாநிலங்களிலே அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அங்கே கரைபோட்ட வேட்டியும், கலர் புடவையும் கைத்தறிக்குத்தான் தரவேண்டும் என்ற திட்டத்தை மிக உறுதியான முறையிலே செயல்படுத்திக்கொண்டு வருகிற நிலைமையை நாம் இங்கே உருவாக்க வேண்டும். நாம் கைத்தறித் துணிகளை தோளிலே சுமந்து தூக்கி விற்பனை செய்த காலம் இருந்ததை நினைத்தாவது இன்றைக்கு அவர்களை பாதுகாக்க காரியங்களை உறுதியாக செய்வதற்கான வழிவகைகளை ஏன் ஆளுநர் உரையிலே இல்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதோடுமட்டுமல்ல, இங்கே இருக்கிற சிறுசிறு தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்றவர்களுக்குக்கூட குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் மாதம் 50, 60-கூட சம்பாதிப்பதில்லை. அவர்களுக்கு ஏன் குறைந்த பட்ச கூலியை நிர்ணயிக்கக் கூடாது, அப்படி நிர்ணயித்தால் என்ன தவறு ஏற்படும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தவில்லை என்பது எனக்கு வேதனைக்குரியதொன்றாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இங்கே பலவிடங்களிலே இப்பொழுது பவர்லூம்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரத்தால் இயங்கக்கூடிய தறிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 10, 20, 100, 200 தறிகள் என்று ஆங்காங்கே சிறுபகுதியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பேக்டரி துணி செய்கின்றது என்றால் அந்தத் துணி நெசவிலே எக்சைஸ் வரியாக வாங்குகின்றோம். ஆனால் இவர்களிடத்திலே இம்மாதிரியான வரிகளை வாங்காத காரணத்தால் அவர்கள் மற்றவர்களைவிட குறைந்த விலையிலே விற்பதற்கு முடிகிறது. அதனால் கைத்தறி நெசவாளர்கள் நிலைமை இன்னும் மிகக் கேவலமாக, மோசமாக அங்கே தங்கியுள்ள உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு முடியாத நிலைமையை சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே இவைகளையெல்லாம் பரிசீலித்து கைத்தறிப் பிரச்சினையை ஆளுநர் உரையிலே சேர்த்திருக்கவேண்டும் என்று நான் இங்கே கூற விரும்புகிறேன்.



அடுத்தபடியாக தொழிலாளர் பிரச்சனைக்கு வருகிறேன். இந்த பிரச்சினை ஒரு காலத்திலே யாராலும் எடுத்துக் கையாள முடியாத ஒன்றாக இருந்தது. தைரியசாலியானவர்களும், வைராக்கியமான குணமுள்ளவர்களும்தான் தொழிலாளர்களிடையே பணி செய்ய முடியும் என்றிருந்தது. தொழிலாளர்கள் ஒன்று சொன்னால் அவர்கள் கேவலமானவர்கள் என்றும் ஒரு காலத்திலே கருதப்பட்டு வந்தது. இந்த நேரங்களில் தொழிலாளர்களை ஒன்று சேர்த்து சங்கங்களை அமைத்து அவர்களின் தன்னம்பிக்கையும் அந்தஸ்தும் மேம்படுவதற்கு பல பெரியவர்கள் பாடுபட்டார்கள். இதனால் தொழிலாளர்களுக்காக பலச் சட்டங்கள் தோன்றின.

தொழிலாளர்களிலிருந்து ஒருவரை தொழிற்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கொள்கை வலுப்பெற முடியாது. அது வரவேற்கத் தக்கதுமல்ல. 1947-க்குப் பின்னால், சுதந்திர சர்க்கார் பொறுப்பேற்ற பின்னால் பல சட்டங்கள் செய்தார்கள். அதன்படி தொழிலாளர்கள் ஒரு பிரச்சனையை அணுகவேண்டுமென்றால் அந்தச் சட்டங்களின்படி அணுகி, அவர்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று செய்யப்பட்டு அப்படி வழிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுது இருந்த நிலைக்கேற்றவாறு நல்லெண்ணத்துடன்தான் அந்தச் சட்டங்கள் வகுக்கப்பட்டன. அதன் பலன் எதிர்பார்த்த அளவு கிட்டிருக்குமா என்று பார்த்தால் நிச்சயமாக இருக்காது. இன்றைக்கு பல சட்டங்கள் இருக்கின்றன. அதை கையாளுவதற்கு யாருக்கு வலு இருக்கிறதோ அவர்தான் அதன் பலனைப் பெற முடியும்; பெற்றுத்தர முடியும். சட்டங்களைக் கையாளுவதற்குரிய சக்தி இல்லாதவர், வலு இல்லாதவர் அதன் பலனை எப்படி அடைய முடியும்? அதன் பலனை அடைய முடியாதபோது அதனால் எப்படி தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட முடியும்?

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம்; அதற்கு ஒரு தலைவர்; அது தொழிலாளியாக இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவருவது நல்லதல்ல. தொழிலாளர்களின் பிரச்சினைகளை முதலாளிகளோடு சரிசமமாக உட்கார்ந்து பேசவேண்டுமானால், அது தொழிலாளியால் முடியாது. மூலதனமும் உழைப்பும் ஒரே மதிப்புடையது என்பதைக் கூட முதலாளிகளால் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. இந்த நிலையில் தொழிலாளர்கள் அல்லாதவர்கள் சங்கத் தலைவராக இருக்கக்கூடாது என்று சொல்வது தொழிலாளர்களுக்கு உதவியானதல்ல.

தொழிலாளர்கள் தான் தொழிற்சங்கங்களின் தலைவர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னால் திடீரென்று அந்தத் தொழிலாளியை ஏதாவது காரணம் காட்டி நிறுத்திவிடுகின்றனர். அப்படி நிறுத்திவிட்டால் சங்கத் தலைவராக இருக்க முடியாது. அதன் விளைவு எப்படியிருக்கும்? இது யாருக்கு உதவி செய்யும் என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் தொழிலாளியாக இருந்தேன்; தொழிற்சங்கத் தலைவராக இருந்தேன். இப்போது நான் வெளியே வந்துவிட்டதால் தலைவராக இருக்க முடியாது என்றால் நான் வகித்துவந்த பொறுப்புகளைத் தொடர்ந்து செய்யும் ஆற்றல் படைத்தவர் தலைவராக வரவேண்டும். அது உடனே முடியுமா? முதலாளிகளோடு சரிசமமாக உட்கார்ந்து பேசி, தனது பேச்சுக்களை முதலாளிகள் செவிமடுக்கச் செய்து, சட்டங்களை நுணுக்கமாகக் கையாண்டு, திறமையாக

வாதிடும் திறன் படைத்தத் தொழிலாளர்கள் ஒரு சிலரே இருப்பார்கள். அவ்வாறு இல்லையென்றால் முதலாளிகளோடு பேசி, தீர்வு காணமுடியாது. அப்படிப்பட்டவர்களைத்தான் தொழிலாளர்கள் விரும்புவார்கள். அவர்கள் தான் தொழிற்சங்கத் தலைவராக வரமுடியும். அப்படிப்பட்டவர்கள் சோஷலிஸ்ட் கட்சியிலே அல்லது கம்யூனிஸ்ட் கட்சியிலே அல்லது வேறு எந்தக் கட்சியிலே உள்ளவர்களாக இருந்தாலும், அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக வருவதை ஆதரிக்கவேண்டும் என்பதே என் கருத்து.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கையை 1967-லே அமைச்சரவை ஏற்பட்டவுடனே மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் வலியுறுத்திச்சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் இன்றுவரை அவர்கள் அந்தக் கொள்கையை நிறைவேற்றியிருக்கிறார்களா என்றால் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே பல போட்டிச் சங்கங்களை அமைத்து வருவதைப் பார்க்கிறோம். உங்கள் கொள்கைப்படி அல்லாமல் ஏன் வேறு சங்கங்களை அமைக்கிறீர்கள் என்று கேட்டால், மற்றவர்கள் எல்லாம் அதற்குத் தயாராக இல்லையே. மற்றவர்களும் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளத் தயாரானால், நாங்களும் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் தயாராக இல்லாததால் நாங்கள் புதுச் சங்கங்களை ஆரம்பித்தோம்; ஆரம்பிப்போம் என்கிறார்கள். இது சரியான வாதமாகப் படவில்லை. பல சங்கங்கள் இருப்பதைக்கண்டு தான் ஒரு சங்கம் செய்ய வேண்டுமென்ற பேச்சு வந்தது. அதைச் சொல்லிக் கொண்டே வேறு சங்கம் உண்டாக்க ஊக்கமளித்தால் அதன் பொருள் என்ன என்பது சபைக்குத் தெரியாமல் போய்விடாது.

நாம் தொழிலாளர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு அடிப்படை விதி, நியதி இருக்கவேண்டும். சென்னையிலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சனைகள் ஒரு அரசாங்கத்தினுடைய கருத்தாக ஏற்றுக்கொள்வது சாத்தியமல்ல. அதற்கான தனி விதியை, சட்டத்தை இயற்றி, அதன்படி செயல்பட வேண்டும். தொழில் துறையிலே இப்போது இருக்கின்ற குறைபாடுகளை மாற்றி, ஒழுங்குபடுத்த வேண்டும். அதுதான் அரசாங்கத்தின் கடமை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேட்டூரிலே தி.மு.க. வைச் சேர்ந்த ஊழியர்களைக் கொண்ட சங்கங்கள் தவிர மற்ற எல்லாத் தொழிற்சங்கங்களும் கண்டன ஊர்வலம் நடத்தின என்று உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கூறினார்கள். ஆனால் இப்பொழுது அங்கே ஒரு போராட்டம் அனைவரும் சேர்ந்து நடத்தும் நிலை உருவாகி இருக்கின்றது. மேட்டூர்பியர்சங் பஞ்சாலை நிறுவனத்தில் 14-ம் தேதியி லிருந்து இயந்திரங்களை நிறுத்தி உற்பத்தித் தடுப்பு வேலையை நிர்வாகம் செய்துவருகிறது. அதை எதிர்த்து தி.மு.க. உட்பட எல்லாச் சங்கங்களும் சேர்ந்து போராடி வருகின்றன. நியாயமான கோரிக்கைகளுக்கு ஒன்றாகச் சேர்ந்து போராட வேண்டும். எல்லாக் காரியங்களிலும் ஒன்றாகச் சேர்ந்து செயல்பட வேண்டுமென்று சொன்னால் அது முடியாது. எனவே, நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்த, போராட நாங்களும் வருகிறோம் என்று அவர்கள் சொன்னால் அவர்களோடு சேர்ந்து நாங்கள் போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம்.





இப்போது கூட திரு. காமராஜர் அவர்கள் ஊழலை எதிர்த்துப் போராட வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லா தரப்பினரும் அதில் ஈடுபட வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஊழல் அதிகப் படும்போது நியாயம் கிடைக்காமல் போய்விடுகிறது. நியாயம் கிடைக்காதவர்கள் ஏமாற்றமும் ஆத்திரமும் கொள்வது இயல்பு. இதிலிருந்துதான் நக்சலேட்டுகள் தோன்று கிறார்கள். இவர்களின் தோற்றம் ஜனநாயகத்தை அழித்துவிடுகிறது. அதனால் ஊழல்கள் வளராமல் தடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்காக ஒரு போராட்டம் நடந்தால் அதிலே அனைவரும் கலந்துகொள்ள வேண்டியதாகத்தான் இருக்கும். ஆனால் அது போன்ற ஒரு போராட்டம் நடக்கும்படியான நிலை உருவாவது நல்லதல்ல. அது பொருளாதார வளர்ச்சியை பின்னுக்குத் தள்ளி விடும்.

இம்மாதிரியான பொதுக் காரியங்களுக்கு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப் பதால், ஆளுங்கட்சியினர் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கு சதி செய்கி றார்கள்; இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்குச் சதி செய்கிறார்கள் என்று சொல்வதிலே பயன் இல்லை; அது பொருத்தமும் ஆகாது, குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்றும் கூறி இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூறி அமர்கிறேன், வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அண்மையிலே இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடந்த போரிலே நமது இந்திய நாடு மாபெரும் வெற்றியை அடைந்திருக்கிறது. இந்த வெற்றி எப்படி சாத்தியம் ஆயிற்று என்று சொன்னால் இந்த நாட்டிலே வாழக்கூடிய மக்கள் தங்களுடைய இனத்தை மறந்து, தங்களுடைய மொழியை மறந்து, வேற்றுமைகளை மறந்து ஒரே குரலாக இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய தலைமையின்கீழ் செயல்பட்டதாலே தான் நமது வீரர்கள் இந்த மாபெரும் வெற்றியை அடைந்தார்கள். ஒரே இயக்கம், ஒரே கொள்கை, ஒரே தத்துவம் என்ற முறையிலே நாம் ஒன்று சேர்ந்திருந்தோம். நாடு காப்பற்றப்பட வேண்டுமென்றால் இந்தக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும். அப்போதுதான் அது சாத்திய மாகும். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒரு சிறந்தத் தலைவராக வாழ்ந்து, இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவர் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்றுவிட்டார்கள். இந்த மாபெரும் வெற்றியைத் தேடித்தந்த திருமதி இந்திரா காந்தி அம்மையாரை நாம் மட்டும் பாராட்டவில்லை. இன்று உலகமே இந்திரா காந்தி அம்மையாரை வியந்து பாராட்டுகிறது. அந்தப் பாராட்டைக்கண்டு பொறாமைகொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த யுத்தகாலத்தில்--நாட்டை எதிர்நோக்கியே சோதனையை வென்றாக வேண்டிய பணியில்—நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீகும், அதன் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இல்மாயிலும், பொதுவாக முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களும் ஒரே குரலாக நின்று முடிந்த அளவு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில் பெரும் பங்கு

கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுகூற விரும்புகிறேன். முஸ்லீம் சமுதாயத்தினர் ஆற்றிய பெரும் பணிக்கு இந்திய ஜனாதிபதி அவர்களே காய்தே மில்லத் அவர்களிடம் பகிரங்கமாகத் தம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டமன்ற முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர்களும் தேசப்பாதுகாப்புக்குக் காட்டிய ஊக்கத்தையும், முயற்சிகளையும் பாராட்டி பம்பாயிலிருந்து வரும் லிங்க் பத்திரிகை எழுதியிருக்கிறதென்பதை இந்த நேரத்தில் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேசமயத்தில் இந்த யுத்தம் ஏன் வந்தது? எதற்காக வந்தது? வங்க தேசத்து மக்கள் அகதிகளாக 1 கோடிக்கு மேல் நம் தேசத்திற்கு ஓடி வந்ததும், அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 கோடிக்குமேல் நிவாரணம் அளித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் நம்மேல் சுமத்தப்பட்டதும் தான் இந்த யுத்தத்திற்கு அடிப்படைக் காரணம். வங்க மக்கள் பாகிஸ்தானோடு வேறுபட்டதற்குக் காரணம் உருதுமொழி பேசுபவர்கள் வங்க மொழியை அங்கீகரிக்க மறுத்ததும்—வங்கமொழியைப் பேச முடியாது, எழுத முடியாது உருது மொழியே ஆட்சிமொழி என்பதாக அவர்கள் மீது திணித்ததும் தான்—வங்க மக்களது அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்டன. யுத்தம் எழுந்தது. இதில் இருந்து உலக நாடுகள் அனைத்துக்கும் கிடைத்த ஒரு பாடம்—உலகின் எந்த பகுதியிலும்—எந்த நாடு ஒரு நாட்டை மொழி அடிப்படையில் அழித்துவிட முடியாது என்பதாகும். ஒருவரின் தாய்மொழியை அழித்து தங்களது மொழியை ஆட்சியாளர்களால் திணிக்க முடியாது என்பதுதான்—உலகத்திற்கே வங்க தேசம் இன்றைக்கு ஒரு சவாலாக விளங்குகிறது. தன்னுடைய வரலாற்றுப் புகழ்மிக்க சண்டையினால் உலக சாசனத்திலேயே இடம் பெற்றுவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் பேசும்போது—நம்முடைய போராட்டம் ஏழ்மையை ஒழிப்பதுதான் என்றார்கள். அதற்காக மனப்பூர்வமாக அவர்களைப் பாராட்டுகிறேன். இந்த அரசையும் பாராட்டுகிறேன். ஆம். ஒன்று பட்டு நின்று போர் முனையில் நாம் எப்படி மகத்தான வெற்றியைப் பெற்றோமோ அப்படியே ஒன்று பட்டு நின்று நம்முடைய நாட்டின் வறுமையை, ஏழ்மையைப் போக்குவதிலும் நாம் வெற்றிபெற்றாக வேண்டும். இன்றைக்கு கிராமப் பகுதிகளில் ஏழ்மைதான் நிலவுகிறது. மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக நாம் கிராமப் பகுதியில் உள்ள ஏழ்மையைப் போக்கியாக வேண்டும். அவற்றைச் செழிப்புள்ள—வளமிக்க பகுதிகளாக ஆக்கியாக வேண்டும்.

அடுத்தபடியாக விவசாயத்துறையில் கண்டுள்ள முன்னேற்றங்களை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள். நானும் அந்தப் பெருமையில் உண்மையிலேயே பங்கு கொள்கிறேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தோழமைக் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உணவுப் பொருளுக்கு மக்கள்பட்ட துயரம்—கேவலம் ஒரு படி அரிசிக்காக அவர்கள் எவ்வளவுதூரம் அலைந்தார்கள் என்பது எல்லாம் என் மனக்கண் முன்னால் வந்து நிற்கிறது. இன்றையதினம் நம்முடைய மாநிலம் உணவுப் பொருளில் தன்னிறைவு அடைந்திருப்பதோடு உபரிமாநிலமாக வெளியிடங்களுக்கும் அனுப்புகிறோம் என்றால் அதற்கு



அடிப்படையான காரணம் விவசாயத்துறையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட பல முற்போக்கான நடவடிக்கைகள்தான். மந்திர சக்தியால் இந்த அற்புதம் நிகழ்ந்துவிடவில்லை. இரவோடு இரவாக பொழுது விடிவதற்குள் ஏற்பட்ட ஆச்சரியம் இல்லை. முழுக்க, முழுக்க அரசு விவசாய மக்களுக்கு கடன் உதவி அளித்து, பொறுக்குவிதை அளித்து, உரம் அளித்து—நீர்ப்பாசன வசதிகளை எல்லாம்—மின்சார மோட்டார் அமைத்துக்கொள்ள வசதி செய்து கொண்டிருப்பதன் காரணத்தினால் தான் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது. அதற்காக விவசாயத்துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அவர்களுடைய காலத்திலேயே விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்றும் நம் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். இப்படி நான் சொல்லும்போது குறைகளே இல்லை என்று சொல்லவில்லை. நீர்ப்பாசன வசதி அற்ற—குறிப்பாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால்—மிகவும் பிற்போக்கான நிலைதான் காணப்படுகிறது. அந்த வறட்சிப் பகுதியை வளம் நிறைந்த பகுதியாக ஏன் உடனடியாகப் பல்வகையில் செய்திட முடியாது என்று தோன்றுகிறது. மக்களிடத்தில் உள்ள ஏற்றத்தாழ்வைப் போக்க நாம் எப்படித் திட்டங்கள் போடுகிறோமோ அப்படியேதான் பிராந்தியங்களிடையே காணப்படுகிற ஏற்றத்தாழ்வுகளையும் போக்க உடனடியாகப் பல திட்டங்களைப் போட்டாக வேண்டும். செழுமையாக உள்ள பகுதி மேலும் மேலும் செழுமையாகப் பல திட்டங்களைப் போடுவதோடு நின்றுவிடாது—பிற்பட்ட பகுதிகள் செழுமையாக—பிரத்தியேகத் திட்டங்களைப் போட்டு அதிக நிதி ஒதுக்கம் செய்து முன்னேற்றம் அடைந்திடச் செய்திடல் வேண்டும். எங்கள் பகுதியில் மக்கள் குடிதண்ணீர் வசதி கூடக் கிடைக்காது கஷ்டப்படுகிறார்கள். உடனடியாக குடிதண்ணீர் வசதியாவது செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு மின்சாரம் ஒரு முக்கியமான காரணம். குறிப்பாக 1966-67-இல் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 2.57 லட்சம் என்றால் 1971-இன் முடிவில் அதை 5.74 லட்சமாக உயர்த்தியிருக்கிறோம். இந்த மகத்தானதோர் பெரிய சாதனையே நம்முடைய பசுமைப் புரட்சியைப் பெரிதும் வெற்றிபெறச் செய்துள்ளது. அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

சேலம் உருக்காலையைப்பற்றி ஆளுநர் அவர்கள் வருத்தத்துடன் சொன்னார்கள். மக்கள் மத்தியில் ஒருவிதமான சந்தேகம் ஏற்பட்டு வருகிறது. நெய்வேலி நிலக்கரி அதற்குப் பயன்படாது, இதுவும் அவ்வளவு தரமுள்ளதாது அல்ல என்பதாக ஏதாவது சொல்லி அதைக் கைவிட்டுவிடுவார்களோ என்கிற அச்சம் மக்கள் மத்தியில் இருக்கிறது. நிச்சயமாக சேலம் உருக்காலை விரைவில் ஏற்பட்டாகவேண்டும் என்பதில் இந்த அரசு தீவிர கவனம் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். மேலும் விரைவிலேயே கொண்டுவர நமது அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில திட்ட ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்ட ஆணைக் குழுவுக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இதுவரை முன்னேற்றம் காணாத பகுதிகளில் கொஞ்சம் அதிக கவனம் அவர்கள் செலுத்தியாக வேண்டும். எங்கே நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்த முடியவில்லையோ அங்கெல்லாம் குறைந்த பட்சம் தொழில்களையாவது பெருக்கினால்தான்

அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்க்கை வளம் பெருகும். ஆகவே திட்ட ஆணைக் குழு எங்கெங்கு பிற்பட்ட பகுதியாக இருக்கிறதோ, அங்கெல்லாம் சிறு சிறு தொழில்களை ஏற்படுத்த வகை செய்தாகவேண்டும்.

அடுத்து ஒன்றை கடைசியாகச் சொல்ல விரும்புகிறேன். இது எனது இதயப்பூர்வமான வேண்டுகோள். அரசாங்க உத்தியோகங்கள் சிறுபான்மை யினராகிய எங்களுக்கு நியாயமான முறையில் கொடுக்கப்படுவதில்லை என்பது சிறுபான்மையினராகிய எங்கள் சமூகத்தினரின் மனக்குறை. இதை மறைத்துப்பேச நான் விரும்பவில்லை. தோழமைக் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இத்தகையை குறை இருப்பது நியாயம் அல்ல. என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்—டாக்டர் கலைஞர் அவர்களுக்கு —வேலைவாய்ப்புகள்—சிறு உத்தியோகத்தில் இருந்து பெரும் உத்தியோகம் வரை சிறுபான்மையினராகிய எங்கள் சமூகத்திற்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய பங்கை கொடுக்க வேண்டும். மக்கள் விகிதாசார அடிப்படையில் உரிய பங்கை மட்டும்—நான் சிறிது கூடக் கேட்கவில்லை—அது நியாமும் இல்லை—கொடுக்க வேண்டும். ஆளுநர் உரையில் சிறுபான்மையோருக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று கூறியிருந்தால் நான் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பேன். இந்தக் குறை நீக்கப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குடிசை மாற்று வாரியம் இன்னும் சென்னை நகரத் திலே மாத்திரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சென்னையிலே மாத்திரம்தான் ஏழைகள் இருக்கிறார்களா?. இங்கே உள்ளவர்களாவது சற்று வசதியுள்ளவர் களாக இருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் கிராமப்புறங்களிலே உள்ள வர்கள் மிகக் கேவலமாக இருக்கிறார்கள். எனவே குடிசை மாற்று வாரியத் திட்டங்களை அங்கேயும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சட்ட மன்றத் தொடர் கூட்டத்தில் அரிசன மக்களுடைய நலன்களைப் பெருக்க, குடிசை வாழ் மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அவர்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கூறியிருந்தோம். இந்த ஆண்டு அதிகமாக நிதி ஒதுக்கப் படும் என்று நம்பிக்கை வைத்திருக்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே பார்த்தால் அம்மாதிரி நம்பிக்கை துளிர்க்க இடம் இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் அவர்களுக்கு இழைத்த கொடுமை யினால் இன்று நல்ல நிலைமையில் இல்லாத அம்மக்களுக்கு ஒதுக்கிய தொகை போதாது, வேறு எந்தத் துறைக்கு அதிகமாகத் தொகை ஒதுக்கினாலும் ஒதுக்காவிட்டாலும் அரிசன நல மானியத் துறைக்கு அதிகமாக ஒதுக்கி, வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தும், தொழில் இல்லாதவர்களுக்கு சிறு சிறு தொழில்களையும் ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படிச் செய்வதன்மூலமாகத்தான் வாழ்க்கையிலே தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கின்ற அந்த மக்களும் மற்றவர்களுக்குச் சமமாகப் பீடுநடை போட்டு முன்னேறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப்பொருட்கள் விலைவாசிபற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நானும் இந்த அரசுக்குப் பணிவன்புடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே சில பொருட்களின் விலைகள்—தை மாத அறுவடை முடிந்த பிறகு விலைகள் குறைவது சகஜம், குறிப்பாக அரிசியின் விலை குறைவதுதான் வழக்கம்—



வழக்கத்திற்கு மாறாக விலை குறைவதற்குப் பதிலாக கூடிக்கொண்டே போகிறது. அதற்காக விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலை தரவேண்டு மென்று நான் சொல்லவில்லை. ஆனால் அதே சமயத்திலே பொதுமக்களும் பாதிக்காத அளவுக்கு விலைகளைச் சீரமைப்புச் செய்ய நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துணை நேரம் எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

Dr. M. Moses : Mr. Deputy Speaker, Sir, the present division of panchayats into town panchayats and village panchayats has resulted in many village panchayats finding it difficult to even pay their employees since the income is very limited. This has resulted in bad neglect of the roads. So many roads are not at all motorable. When somebody is taken severely ill and has to be hospitalised or a doctor to be called, in such cases of emergency, the condition of the road is such that the patients could not be taken nor could the doctor come. Such is the pitiable condition of the road. During marriage ceremony and temple festivals, the villagers find it extremely hard. So, I request that the Highways Department should take over all the Panchayat roads or Government should give a substantial sum as aid to the Panchayats for maintaining these roads. That must be given separately every year; every year we are putting up new roads but no money is spent on maintaining it with the result, the roads become so bad that they cannot be used.

In the district of Kanyakumari there is a very fertile crop of prawns and lopsters. At present these are bought by merchants from Kerala and from Kerala, they are exported. I hope that our Government will look into this matter and they themselves will purchase these things from fishermen and start exporting it. They could also start a canning industry not only for fish but also for fruits like pineapples and different varieties of plantain and jack fruits, which are plenty in our district. Such an industry will be very welcome in our district.

For post-settlement work in our district, Kanyakumari district, 4 Tahsildars, 4 Deputy Tahsildars, 4 Assistants and 17 Special Officers have been appointed. But since these posts have not been recognised by the Accountant-General's Office, these people are not paid their salary from September 1971. For many of them who depend solely on their salary for their sustenance, this is very inconvenient. I request that the office of the Accountant-General be more prompt in these matters.

Regarding school teachers who have put in service in aided schools prior to entering Government service I want to say a few words. By virtue of Second Pay Commission's report, our Government has accorded first grade posts to the teachers working in aided schools and District Board. In our district alone there are about 200 graduate teachers and about 500 secondary grade

teachers who have put in considerable period of service in aided schools prior to their entering Government service. These teachers would have been eligible for the First Grade scale of pay if they had continued in aided schools. They have passed all the Departmental tests after entering the Government service. But unfortunately, they are still drawing a much lower pay than their counterparts in aided schools. Hence I request that their service in aided schools be considered for the scale of pay and pension. The neighbouring State of Kerala has taken into account the aided school service for the abovesaid purpose.

At present selection grade is given to 10 per cent of teachers in aided schools and 30 per cent of teachers in Government schools in each district. When a teacher comes into this grade his pay scale is Rs. 400-650 whereas the pay scale of the ordinary teacher is Rs. 275—400. A teacher comes into the selection grade purely by virtue of his seniority. So in some districts they get it in say 10 years whereas in other districts they may have to wait for more than 20 years and quite a few do not get into this scale at all. They retire before that. So I request that a period of say 10 or 15 years of service be fixed after which the teacher automatically moves into that selection grade, so that before he retires he goes into the scale of Rs. 400—650 and gets the benefit in his pension, gratuity, etc. I hope the Government would do the needful in the matter.

While we fully appreciate and thank the Government for the interim relief given to the handloom industry, we find that there is often a poor market for the handloom products because of competition by Mill products. I request our Hon'ble Chief Minister to contact the other Chief Ministers and approach the Central Government again and to make it a law that certain varieties of cloths like say dhoties, lungees, bed-sheets and towels be made only by handloom and not by mill. This will provide full time employment for the weavers and also provide a lot of scope for their cottage industry.

Thank you, Sir.

திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின்மீது பேரவை உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த நன்றியுரைத் தீர்மானத்தைப் பாராட்டி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் இந்த உரையில் மிகத் தெளிவாக இந்த ஆட்சியினுடைய கொள்கையை, எண்ணத்தை இரத்தினச் சுருக்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசின் நோக்கமே ஏழை எளியவர்களான பாமர மக்களின் விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்பதுதான். பொதுமக்களின் விருப்பங்களைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாகவே இந்த அரசு விரும்புகிறது என்று ஆளுநர் அவர்கள் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே தமிழகத்திலே சிறப்பான நிலையான ஒரு





அரசை ஏற்படுத்தி நடத்திக்கொண்டு வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம். இதற்கு நேர்மாறான குற்றச்சாட்டுகளை இன்றைக்குச் சிதறிப் போயுள்ள எதிர்க்கட்சிகள் கூறுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எதிர்த்தரப்பில் பேசிய மேட்டூர் உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை முஜிபுர் ரஹிமான் என்று அழைப்பது நியாயமா என்ற கேள்வியைப் போட்டு, தமிழ்நாடு பிரிந்துபோகவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விரும்புகிறார்கள், பேசுகிறார்கள் என்ற அப்பட்டமான குற்றச் சாட்டை இந்த ஆட்சியின் மீது களங்கத்தைச் சுமத்தி, இந்த ஆட்சியினுடைய கொள்கைக்கு நேர்மாறாக இங்கே எடுத்துப் பேசிவிட்டுப்போயிருக்கிறார்கள். பிரிந்து போக வேண்டுமென்ற உரிமையைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையோ அல்லது தமிழகத்தின் முதலமைச்சரவர்களோ, பேரவை உறுப்பினர்களோ யாரும் ஆதாரத்தோடு சொன்னதாக அவர்களாலே நிரூபிக்க முடியாத ஒரு குற்றத்தை இங்கே சொல்லிவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம், இந்த ஆட்சியை நடத்தும் நாங்கள் 1962-ஆம் ஆண்டு சீனா படையெடுத்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைகளையெல்லாம் மறந்துவிட்டு, விடுதலையைக்கூட ஒத்திவைத்துவிட்டு, இந்திய நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரே ஆணையை, இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கு நம்முடைய கரத்தைக் கொடுப்போம் என்ற உறுதியினைக் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து 1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் படை எடுத்த நேரத்திலே அதே உறுதியைத் திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாக மத்திய அரசுக்கு இந்த மாநிலத்திலிருக்கும் எங்கள் இயக்கம் ஆதரவு தெரிவித்து வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்பொழுது வங்க தேசப் பிரச்னையை, மேற்கு பாகிஸ்தானுடைய அக்கிரமச் செயலைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில், வங்க மக்கள் விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வோடு, வங்க மக்களின் எழுச்சியை உணர்ந்து, மத்திய சர்க்கார் வங்க மக்களுடைய மொழி உணர்வை, வங்க மக்களின் பொருளாதாரக் கொள்கை, வங்கமக்களின் கோரிக்கை, 6 அம்சத் திட்டங்கள் நியாயமானது, ஜனநாயகத்தின் அடிப்படையிலே அவர்கள் கேட்கிறார்கள், அவர்களுக்குப் பூரண உரிமையை அளிக்க வேண்டுமென்ற முடிவை இந்திய பேரரசு எடுத்த நேரத்தில், பாகிஸ்தான் நம்முடைய நாட்டின் மீது படை தொடுக்கக் கூடிய நேரத்தில், வெளிநாடுகளுக்குச் சென்று, மேற்கத்திய நாடுகளின் ஆதரவைத் திரட்டிய நேரத்தில், நாம் மத்திய அரசு எடுத்த கொள்கைக்கு உறுதுணையாகயிருந்து, நம்மிடத்தில் எந்தவிதமான அப்பழுக்குமற்ற முறையில், கைமாறு பலனை எதிர்பார்க்காமல் இந்திய அரசுக்கு தமிழ் நாட்டிலேயிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக அரசு, நாங்கள் பரிபூரண ஆதரவு கொடுக்கிறோம், வங்க மக்களின் விடுதலைக்காக இந்தியப் பேரரசு என்ன நடவடிக்கை எடுக்கிறதோ அதற்கு நாங்கள் பரிபூரண ஒத்துழைப்பைத் தருகிறோம் என்று சொல்லி நம் தமிழக முதலமைச்சர் அவர்கள் நாட்டுமக்களை ஒரே அணியில், குறிப்பாக தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை ஒரு அணியில் சேர்த்துக்கொண்டு, இந்திய பேரரசுக்கு நல்ல ஆதரவைத் தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

இங்கே பேசிய திரு. சுரேந்திரன் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் விடுதலை உணர்வை அல்லது விடுதலை வித்தை விளைவிக்க வேண்டுமென்ற எண்ணத்திலிருந்தால் 1962-ஆம் ஆண்டிலிருந்து இப்பொழுது 1971-ஆம் ஆண்டுவரையில் நாட்டிலே ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களையும் வைத்துக்கொண்டு விடுதலை வித்துக்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் எங்கேயாவது விதைத்தார்கள் என்று அவர்களால் நிரூபித்து காட்ட முடியுமா ? நாங்கள் விடுதலையைக் கைவிட்டுவிட்டு இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக, அதே நேரத்தில் மாநிலத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதிலே மத்திய சர்க்காரோடு போராடிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கமாக, தமிழகத்தின் தன்மானத்தைக் காப்பாற்ற, தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, தமிழகத்தின் கலாசாரத்திற்காக பாடு பட்டுக்கொண்டுவரும் இயக்கத்தின்மீது இல்லாத ஒரு பழியை அரசியல் உணர்வோடு குறிப்பிடுவது மிகப்பெரிய தவறாகும்.

இங்கே தேர்தல் நேரத்தில் கூட்டணி என்று வைத்துக்கொண்டு, பிறகு ஆளுங்கட்சியாக வந்ததும் கூட்டணிக் கட்சிகளை மதிக்கவில்லை என்று திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னதும் உடனே திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தலையாட்டுகிறார்கள். அவருக்குச் சந்தோஷம். அவர்களுக்குள் ஏதாவது வராதா, அதைப் பார்த்து நாம் சந்தோஷப்படலாம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர்கள் பார்ப்பதெல்லாம், பல கீறல்கள் விழுந்த கண்ணாடி முன்னால் அவர்கள் முகத்தைப் பார்த்துவிட்டு இப்படித்தான் அவர்கள் முகமும் இருக்குமா என்று சிண்டிகேட் காங்கிரசிலே இருப்பவர்களும் வேறுசில உதிரிக் கட்சியிலே இருப்பவர்களும் நினைக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உதிரிக்கட்சி எந்தக் கட்சி என்று விளக்கம் தரலாமா ?

திரு. எஸ். ஆறுமுகம்: அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் கூட்டணி என்பது, முற்போக்கு எண்ணங்கள் கொண்டவர்கள், சோஷலிசக் கருத்துக்களைக் கொண்டவர்கள், ஜாதிமதபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க எண்ணுபவர்கள். தமிழ்நாட்டை ஜனநாயக வழியில் அழைத்துச் செல்லக் கூடியவர்கள் அத்தனைபேரும் ஒன்றுசேர்ந்து பிற்போக்குச் சக்திகளை ஒழித்துக்கட்ட வேண்டும், நாட்டின் பொருளாதாரத்திற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவர்களை ஆளுங்கட்சியாக அமர்த்தக் கூடாது என்ற அடிப்படையில் தேர்தல் கூட்டணியே தவிர, கூட்டணியிலே உள்ள கட்சிகளிலே இருப்பவர்கள் தங்கள் கட்சிகளை வளர்க்க ஆளுங்கட்சிக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் சிலர் பேசுவதை அல்லது அரசியல் நோக்கங்கொண்டு அரசியல் கட்சியை வளர்க்க முனைவதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது என்பதே எங்கள் தலைவரவர்களால் இன்றைக்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளே தவிர, ஏதோ நாங்கள் ஆளுங் கட்சிக்கு வந்து விட்டோம், ஆளுங்கட்சியாகவே தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற பதவி மோகத்தில் இருப்பதாகக் கூட்டணியிலே இருப்பவர்கள் நினைத்துக்கொண்டு இருந்தால், அது மிகப்பெருந்தவறு என்பதை நண்பர் திரு. சுரேந்திரன் போன்றவர்கள் உணரவேண்டுமென்பதை நான் இப்பொழுது கேட்டுக் கொள்கிறேன்.





இன்றைக்கு வேலைவாய்ப்புத் திட்டம் நம்முடைய பொருளாதாரத்திற் கேற்ப, நம்முடைய நிதிநிலைக்கேற்ப, நம்முடைய முதலமைச்சரவர்கள் பல்வேறு கட்டங்களில், படித்த இளைஞர்களுக்கு, உயர்நிலைப் பள்ளிகளிலே படித்தவர்களுக்கு, பொறியியல் பயிற்சிப் பெற்ற பட்டதாரிகளுக்குப் பல்வேறு கட்டங்களில் நம்முடைய சக்திக்கேற்பத் திட்டங்களை வகுத்து நாம் வேலை வாய்ப்பைக் கொடுக்கிறோம்.

அதேபோல் இன்றைக்கு மாநில அரசின் நிதி நிலைமைகளை ஆளுநர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றி ஏன் அந்த எதிர்த் தரப்பிலே இருக்கும் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், ஆளும்கட்சிக்கு மாறான கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று சொல்பவர்கள், நாட்டின் நன்மைக்காக நாங்கள்தான் பேசுகிறோம் என்று சொல்பவர்கள் ஏன் பேச மறுக்கிறார்கள் என்பது புரியவில்லை.

இங்கே நம்முடைய ஆளுநர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசுக்கு 154 கோடி ரூபாய் வரையில் தர வேண்டியிருக்கிறது. ஆனால் கால கட்டத்தில் நமக்கு வர வேண்டியது 141 அளவிலே வரும் என்று இங்கே தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்படி நாம் பார்த்தால் நம்முடைய பொருளாதார நிலைமை, ஒரு ஆண்டுக்கு 60 கோடி ரூபாய்க்குமேல் நாம் கட்ட வேண்டும், ஆனால் கிடைப்பதோ 40 கோடி ரூபாய் அளவுக்குத்தான் என்றால், எந்த அளவில் நம்முடைய பொருளாதார நிலைமை சீரழிந்து கொண்டிருக்கிறது. இதைச் செம்மைப் படுத்த வேண்டிய மத்திய அரசு ஒரு வட்டிக்கடைக்காரன் வட்டிக்குக் கடன் கொடுத்துவாங்குவதைப் போல இன்றைக்கு மாநில அரசை நடத்துவது நியாயமா ? ஒரு நாட்டின் பொருளாதாரம் குன்றும் நேரத்தில் அந்த நாட்டின் நிதி நிலைமைக்கான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்துவதற்கு ஊக்கம் கொடுத்து வளர்க்க வேண்டிய கடமை, நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இல்லையா ? மத்திய அரசை இந்த மாநில அரசு எத்தனைமுறை கேட்டிருக்கிறது ? நிதியைக் கூட்டித் தாருங்கள் என்று எத்தனைமுறை சொல்லியிருக்கிறது ? இத்தகைய கடன் களைக் கொடுத்துவிட்டு வட்டியாகக் கேட்கிறீர்களே, அந்த வட்டியையாவது குறைத்துக் கொள்ளுங்கள் என்று எத்தனைமுறை கேட்டிருக்கிறோம் ? இதற்கு மத்திய அரசு செவிசாய்த்திருக்கிறதா என்றால் செவி சாய்க்கவில்லை.

இதைக் கண்டிக்கின்ற மனப்பான்மை, எண்ணம் எதிர்க் கட்சியில் இருக்கக் கூடியவர்களுக்கு, அதுவும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சியில் இருக்கக் கூடியவர்களுக்கு வருவதில்லை. ஏன் ? 'அப்படி நிதிநிலைமை தமிழகத்தில் சரியாகிவிடுமானால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இன்னும் பல்லாண்டுக் காலம் ஆட்சியில் இருப்பவர்கள், நாம் என்னவது ? 15-ஆக இருந்தோம், 14-ஆக ஆனோம். இன்னும் சிலபேர் இல்லாமல் போகலாம்' என்ற அச்சந்தானே தவிர, வேறு அல்ல. மாநில அரசு தன்னுடைய கோரிக் கைகளை எடுத்து மத்திய அரசிடத்தில் வாதாடுவதிலே நாங்கள் என்றும் தயங்குவதில்லை. இங்கே பேசியவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள்.

சிம்ப்சன் கம்பெனி தொழிற்சங்கப் பிரச்சினை பற்றிச் சுட்டிக் காட்டிப் பேசினார்கள். அதிகமாக அந்தப் பிரச்சினையில் தலையிட்டுப் பேச விரும்ப வில்லை இருந்தாலும், இன்றைக்கு மத்திய அரசு இயற்றக்கூடிய தொழிற் சங்கச் சட்டங்களை மாநில அரசு நிர்வாக முறையில் செயற்படுத்தக்கூடிய

அமைப்பாகத்தான் இருக்கிறதே தவிர, தொழிலாளர்களுக்கென்று சட்டத்தை நாமே உருவாக்கி, தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய வழியில் சட்டத்தை உருவாக்கக் கூடிய அமைப்பாக மாநில அரசுக்கு அதிகாரமில்லை. நம்முடைய தமிழகத்தில் இருக்கக் கூடிய தொழிற்சாலைகளிலே தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையிலே தகராறுகள் ஏற்படுமானால், கருத்து வேறுபாடுகள் ஏற்படுமானால், அதிலே சமரசம் செய்து வைக்கக்கூடிய முறையிலே தான் மாநில அரசு இயங்க வேண்டுமே தவிர, வேறல்ல. தொழில்கள் நல்ல முறையில் நடக்க வேண்டும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும், தொழில் உற்பத்தி பெருக வேண்டும் என்ற முறையில் தொழிற் தகராறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் எல்லாம் நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் முதலாளிகளையும், தொழிலாளர்களையும் அழைத்து வைத்து, தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துவைத்து பேசி சுமுகமான தீர்வைக் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த ஆட்சி நிறைவேற்றி வந்திருக்கிறது.

ஆனால் சமீபத்தில் சிம்ப்சன் கம்பெனி பிரச்சினையில் மத்திய அரசின் அமைச்சர் ஒருவர் தமிழகத்திற்கு வருகிறார் என்றால், அவர் தமிழக முதலமைச்சரைச் சந்தித்து பிரச்சினையைப் பற்றிக் கேட்டிருக்க வேண்டும். தொழிலமைச்சரைச் சந்தித்துக் கேட்டிருக்க வேண்டும். முதலமைச்சர், தொழிலமைச்சர். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசி சுமுகமான தீர்வு காண முயற்சி எடுத்திருக்க வேண்டும். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டில் உள்ளபடியே அவர்களுக்கு அக்கறை இருந்திருக்குமானால் அப்படிச் செய்திருக்க வேண்டும். அதற்கு மாறாக அந்த அமைச்சர் நேரடியாக தொழிலாளர் மத்தியில் சென்று நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீதும், இந்த அமைச்சரவை மீதும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் தொழிலாளர்களைத் தூண்டிவிடுகின்ற முறையில் அவருடைய பேச்சு அமைந்திருந்தது என்று சொன்னால், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை எப்படி டில்லி அமைச்சர் காப்பாற்றினார் என்பதுதான் என்னுடைய கேள்வி. எந்த அளவுக்கு உண்மையோ தெரியவில்லை — இந்த ஆட்சியை ஆறு மாத காலத்தில் டிஸ்மிஸ் செய்து விடலாம் என்ற அளவுக்கு சில அரசியல்வாதிகளுடைய மனத்தில் எண்ணம் இருக்கிறது.

* * *

சேலம் இரும்பாலை பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதைப்பற்றி அந்தத் தரப்பிலே இருந்து யாராவது பேசுவார்களா என்று பார்த்தால் இல்லை. முழுக்க முழுக்க இந்த ஆட்சியைக் குற்றம் சொல்லுவதிலேயே இருக்கிறார்களே தவிர, நம்முடைய உரிமையைப் போராடிப் பெற டெல்லியிடத்திலே வாதாட அவர்கள் தயாராக இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :**

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** திரு. ஆறுமுகம் கூறிய அந்த வார்த்தைகளைச் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இதனைப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கக்கூடாது என்று உத்தரவிடுகிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. எஸ். ஆறுமுகம் :** 1952-ம் ஆண்டில் இருந்து சேலம் இரும்பாலை பற்றிப் பேசப்பட்டு, பிறகு அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்தெல்லாம் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அவர்கள் எல்லாம் பார்த்து, சேலம் கஞ்சமலை இரும்புத் தாதிலிருந்து நல்ல ரகமான இரும்பு தயார் செய்யலாம் என்றும், தொழில் அமைக்கலாம் என்றும், லாபகரமாக நடைபெறும் என்றும் அறிக்கை கொடுத்து, அதன்பேரில் தஸ்தூர் கம்பெனியை அறிக்கை தயாரிக்கச் சொல்லி 1963-64-ம் ஆண்டில் அவர்கள் அறிக்கை மத்திய அரசிடம் கொடுத்தார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தலாம் என்று அந்த அறிக்கையிலே கூறியிருந்தார்கள். அதன்படி 1964-ம் ஆண்டில் என்னுடைய வீரபாண்டி தொகுதியில் இரும்பாலைத் திட்டத்திற்கென 24,000 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு அரசு 4 (1) நோடிபிகேஷன் செய்தார்கள். தஸ்தூர் கம்பெனி அறிக்கையில் 24,000 ஏக்கர் தேவை என்று சொன்னதை வைத்துக்கொண்டு அந்த நோடிபிகேஷன் கொடுத்தார்கள். இதனால் அந்தப் பகுதி மக்கள் 1964-ம் ஆண்டில் இருந்து புதிய வீடுகள் கட்டிக் கொள்ள வழி இல்லை, விவசாயத்திற்கு மின்சாரத்தைப் பெற வழி இல்லை, தொழிலை நடத்த வழி இல்லை, குடிதண்ணீர் வசதியைத் தீர்த்துக் கொள்ள வழி இல்லை. நல்ல பள்ளிக் கட்டடங்களைக் கட்டி நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் படிக்க வசதி இல்லை. இப்படி பல்வேறு கட்டங்கள். அந்தப் பகுதி மக்கள் கடந்த பத்தாண்டுக் காலமாக தொல்லைகளைத் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சேலம் இரும்பாலைத் திட்டம் வந்தால் போதும் என்ற எண்ணத்தில் பொறுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது செய்த மதிப்பீட்டின்படி புஞ்சை நிலத்திற்கு 1,500 ரூபாய் என்றும், நஞ்சை நிலத்திற்கு 2,300 ரூபாய் என்றும் நஷ்ட ஈடு கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இன்றைய மதிப்பு ஐயாயிரம், ஆறாயிரம் அளவுக்குப் போயிருக்கிறது. எப்படி இருந்தாலும் நம்முடைய அரசு நம்மைக் கவனிக்கும், தமிழக அரசு காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். இந்தத் திட்டம் அங்கு வருவதால் அங்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு தமிழகத்தின் பொருளாதாரம் உயரும் என்ற நோக்கத்தில் அவர்கள் எந்த விதமான கிளர்ச்சியிலும் ஈடுபடாது தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு கடந்த செப்டம்பர் 1970-ம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டிச் சென்றிருக்கிறார்கள். இரும்பாலைத் திட்டத்திற்கான கால்கோள் விழாவெல்லாம் முடிந்த பிறகு இன்றையதினம் அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாமா ,கூடாதா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு எந்த அளவுக்கு மாநில அரசின், தமிழகத்தின் திட்டத்தைப் புறக்கணிக்கிறது என்பதை எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் திட்டத்தை டெல்லி அரசு நிறைவேற்றியே தீர வேண்டும், இதைச் செயல்படுத்தாவிட்டால் ஆளும் கட்சியோடு எதிர்க்கட்சியாகிய நாங்களும் ஒன்று சேர்ந்து வட புலத்தை நோக்கி உரிமைக்காகப் போராடுவோம் என்று சொல்ல மாட்டார்களா என்று பார்த்தேன், ஆனால் அவர்கள், இந்தத் திட்டம் நிறைவேறி விட்டால் இந்த ஆட்சிக்குப் பெருமை வந்துவிடும், வேலை

வாய்ப்பு பெருகிவிடும், அரசாங்கத்தின் பொருளாதாரம் உயர்ந்துவிடும், ஆகவே நாம் எதற்காக ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற அரசியல் உள்நோக்கத்தோடு அவர்கள் நடந்து வருகிறார்கள்.

நான் இன்றையதினம் டெல்லி அமைச்சர் அவர்களுக்கும், இந்திரா காந்தி அவர்களுக்கும் சேர்த்து, இந்த மன்றத்தின் மூலம் சொல்வேன், சேலத்திலே இரும்பாலை ஏற்பட வேண்டும், கஞ்சமலையில் இருக்கும் கல்லை எடுத்து அங்கேயே அதைக் காய்ச்சி இரும்பாக்க வேண்டும். அங்கே இருக்கும் கல்லை எடுத்துக்கொண்டு நெய்வேலிக்கோ அல்லது வேறு எங்கேயாவது கொண்டு போய் விடலாம் என்று மத்திய அரசு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மத்திய இரும்பு அமைச்சர், நினைப்பார்களேயானால், கஞ்சமலையில் இருக்கும் ஒரு கல்லை எடுத்துக் கொண்டு வெளி மாவட்டங்களுக்கு மட்டுமல்ல, வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டுமென்றால், அங்கே லட்சக்கணக்கான பிணங்களை மிதித்துக்கொண்டு தான் செல்லமுடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இது என்னுடைய கோரிக்கை மட்டுமல்ல, தமிழ் நாட்டின் நீண்ட நாளைய கோரிக்கை, சேலத்திலே தான் இரும்பாலை இருக்க வேண்டுமென்பது. அதை மத்திய அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் சிறப்பான ஒரு உரையை இங்கே நிகழ்த்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டின் உரிமைக்காக, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டின் கலாச்சாரத்திற்காக, தமிழ் மக்களை, 4½ கோடி மக்களை அழைத்துச் செல்லக்கூடிய நாயகனாக நம்முடைய தமிழ் நாட்டு முதலமைச்சர் இருப்பார்கள் என்ற மன நிறைவோடு, அவர்களுடைய உரையை பாராட்டி, வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையின் பேரில் நன்றித் தீர்மானம் கொடுக்கப்பட்டதற்குச் சில திருத்தங்களை நான் ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன். அது அநேகமாக உறுப்பினர்களுக்கு எல்லாம் சீக்கிரத்தில் கொடுக்கப்படும் என்று நம்புகிறேன். சுருக்கமாகச் சொல்லப்போனால், இந்த ஆளுநர் அவர்களின் உரையிலே குறிக்கப்படாத சில விஷயங்கள் என்று அந்தத் திருத்தத்திலே நான் கொடுத்திருக்கிறேன். யுத்த காலத்தில் அமெரிக்காவின் நிலை குறிக்கப்படவில்லை. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நிலச்சீர்திருத்தம் என்பதைப் பற்றிக்குறிப்பிடவில்லை, காவேரி விவகாரத்தைப் பற்றி என்ன நிலை என்பதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதே நேரத்தில், விலைவாசி சம்பந்தமாகவும், மூடிய மில்களைத் திறப்பது சம்பந்தமாகவும், மத்திய-மாநில அரசு உறவு பற்றியும் சில திருத்தங்களைக் கொடுத்து இருக்கிறேன். அந்தத் திருத்தத்தின் அடிப்படையில் ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேசலாம் என்று இருக்கிறேன். ஆளுநர் உரையின் மீது மிகத் தெளிவாகவும், அவர்களுடைய நிலையை வலியுறுத்திச் சொல்லக்கூடிய நிலையில் நன்றித் தீர்மானம் கொண்டு வந்த திரு. செ. கந்தப்பன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எழுப்பியுள்ள ஒன்றிரண்டு விஷயங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதும் என்னுடைய கடமையாக இருக்கிறது. அதற்கு நான் கடைசியில் வரலாம் என்று நினைக்கிறேன்.





கவர்னர் அவர்கள் உரையிலே யுத்தத்தைப் பற்றியும், அந்த யுத்தத்திலே நம்முடைய ஜவான்கள் வீரமாக போரிட்டதைப்பற்றியும் பாராட்டியிருக்கிறார்கள். அதேநேரத்தில் தமிழக அரசு அந்த ஜவான்கள் குடும்பத்திற்குச் செய்யக்கூடிய உதவிகளையும் பற்றிச் சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். இதிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அதை எல்லோரும் கண்டிப்பாக வரவேற்பார்கள். சோவியத் யூனியன் போன்ற நாடுகள் என்று குறிப்பிட்டு விட்டு, சில நாடுகள் தெரிந்தோ, தெரியாமலோ எதிராக நின்றார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறதே தவிர, இதே சபையில் நாம் வங்க தேசத்தை ஆதரித்து நிறைவேற்றிய தீர்மானத்தில் அமெரிக்கா எதிர்ப்பு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறோமே, இந்திய மக்களுக்கு மத்தியில் அமெரிக்கா இந்தியாவின் ஒரு எதிரி என்பதாக தெளிவாக்கி இருக்கிறோமே அதைக் குறிப்பிடவில்லை. நாம் நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தை தொடர்ந்து சில கஷ்டங்கள் நமக்கு கண்டிப்பாக உருவாகத்தான் செய்யும்.

நாம் அமெரிக்காவுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகை, அமெரிக்காவுக்கு கொடுக்க வேண்டிய கடனுக்குரிய வட்டி, இதையெல்லாம் உடனடியாக கொடுக்க வேண்டுமா, அல்லது, அதை எப்படி ஒத்திப் போட வேண்டும் என்பதைப்பற்றி மத்திய அரசு சில நிலைகளை இப்போது எடுத்திருக்கிறார்கள். அதே மாதிரியாக அமெரிக்காவிலிருந்து அவர்கள் இனிமேல் சாமான்கள் அனுப்பப்போவது இல்லை என்று சொன்னார்கள். அது தேவையில்லை. ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்காரம் செய்த பாரம்பர்யம் நமது நாட்டிற்கு உண்டு. பிரியமாக நமக்கு பணம் கொடுத்தாலும், பின்னால் இருந்து கொண்டு நம்மை கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்யும் நாட்டின் உதவி நமக்குத் தேவையில்லை. அந்த முறையில் வங்க தேசத்து மக்களுக்கு பண உதவி செய்கிறோம் என்று அமெரிக்கா சொன்னநேரத்தில், அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

பி.எல். 480 என்பது ஒரு பெரிய சர்ச்சை. நாடாளுமன்றத்தில் அநேகமாக எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் எழுப்பி இருக்கிறோம். அதிலே கிடைக்கிற பணம் 'இந்தியாவிலேயே நடமாடிக் கொண்டிருக்கிறது. அது அமெரிக்க லாபிக்கு பெரிய உதவியாக இருக்கிறது. மக்களை காப்ட் செய்யும் பெரிய சாதனமாக அது இருந்து கொண்டு இருக்கிறது. இந்த லாபி இன்னும் அதிகமாக வேலை செய்யும் என்ற காரணத்தால் பி.எல். 480 பணத்தை யாரும் உபயோகிக்கக்கூடாது என்ற அளவில் " That will have to be frozen " ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

அமெரிக்காவின் செயல்களை எதிர்க்கிறோம் என்பதற்காக அவர்கள் நமக்குத் தருகிற உதவிகளை நிறுத்தப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நிறுத்தப்போகிறோம் என்று நம்மை மிரட்ட வேண்டியது இல்லை. எப்படி நமக்கு மத்திய அரசின் கொள்கைகள் பிடிக்கவில்லை என்று சொன்னால், ரயில் நிலையங்கள் முன்பும், மத்திய சர்க்கார் அலுவலகங்கள் முன்பும், போஸ்டாபீஸ் முன்பும் மறியல் செய்கிறோமோ, ஆர்ப்பாட்டம் செய்கிறோமோ அதேபோல் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து அவர்கள் நாட்டு கம்பெனிகள் முன்பு, எஸ்ஸோ, கால்டாக்ஸ் முன்பு, பாங்குகள் முன்பு, மறியல், ஆர்ப்பாட்டங்கள் செய்வது என்று முடிவு எடுத்து இருக்கிறோம். ஆர்ப்பாட்டங்கள் செய்வது என்பது பலாத்காரத்தில் கொண்டுவிடும் என்று சொல்வது தவறு. அந்த இடங்களுக்குப் போகாமலேயே பலாத்காரம்

தோன்றக்கூடும். இன்றைக்குப் பல கட்சியினர் இப்படிப்பட்ட முடிவு எடுத்து இருக்கிறார்கள். ஆளுநர் உரையில் மாநில மக்கள் இப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்து இருக்கிறபோது, அதைக் குறிப்பிடாமல் இருந்தது, அதற்கு சற்று மாறாக இருக்கிறது என்று நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரையிலே, இந்திரா காந்தி அவர்கள் சொன்ன மாதிரி, "வார் அகென்ஸ்ட்-பாவர்ட்டி" என்று நான்காவது பாராவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கும் நிலைமையை எந்த அளவிற்குப் படம் பிடித்துக் காட்டமுடியுமோ அந்த அளவுக்கு படம் பிடித்துக் காட்டுகிறோம். இப்படி படம் பிடித்துக் காட்டுவதோடு நிறுத்தி விடமுடியாது. அதை மாற்றுவதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றியும் ஒரு அழுத்தமான, ஒரு விவேகமான நிலை எடுக்கவில்லை என்பதையும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, 5-6 பாராவிலே, நம்முடைய அரசு வேளாண்மைத் துறையில் உணவு உற்பத்தியில் 70 லட்சம் டன்னிலிருந்து 73 லட்சம் டன்னாக உயர்ந்து இருக்கிறது என்ற விவரம் இருக்கிறது. 3 லட்சம் டன் உயர்நது இருக்கிறது, இன்னும் அதிகமாக உயர்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது, அப்படி உயர்ந்து இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, ஒரு பக்கத்தில் விலையும் உயர்ந்து இருக்கிறது. மக்களுடைய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவது என்றால், சாதாரண மக்கள் அரிசி விலை உயர்ந்து இருப்பதாலே உண்மையிலேயே அதிர்ச்சி அடைந்து இருக்கிறார்கள். அதற்கான உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசின் கையில் இருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு எதையும் திட்டவட்டமாகச் செய்யமுடியும். அதைப்பற்றி விவரமாகவும் தான் எடுத்துச் சொல்லமுடியும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இருக்கிற உற்பத்தியை வைத்துக்கொண்டு, அன்று அண்ணா அவர்கள் இருந்த போது ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்தார்களே—அப்படி கொடுப்பது வேண்டுமானால் கஷ்டமாக இருக்கலாம் இப்போது—அதைப்போல் இன்றைக்கு இருக்கும் உற்பத்திச் செலவை வைத்துக்கொண்டு, சாதாரண விவசாயிக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 10 அதிகமாக கொடுத்து கூட, படி அரிசி ரூ. 1.40-க்கு விற்கமுடியும் என்பது என் கருத்து. அதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அந்தக் காரியத்தை கண்டிப்பாக அரசு துரிதமாகச் செய்ய வேண்டும். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சீனி பற்றியது. இந்த சர்க்கரையைப் பொறுத்தவரையில் அதிகமான விவரம் அரசுக்குத்தான் தெரியும். அதிலும் மத்திய சர்க்கார் இன்னும் அதிகமான விவரத்தை வைத்திருப்பார்கள். உற்பத்தியில் 60 சதவிகிதம் சர்க்கார் மூலம் வினியோகிப்பது என்றும், 40 சதவிகிதம் பகிரங்கமாக, மார்க்கெட்டில் உற்பத்தியாளர்களே வினியோகிப்பது என்பது, ஏற்பாடு. நான் அறிய விரும்புவது, இப்பொழுது மார்க்கெட்டில் இந்த 60-ம், 40-ம் முறையாக வினியோகிக்கப்படுகிறதா? எனக்குச் சந்தேகம், 40 சதவிகிதம் தான் நடமாடுகிறது. 60 சதவிகிதம் வெளியிலேயே வாரமல்



இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? யார் பொறுப்பு?

we will have to fix responsibility

அது அதிகாரியாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, அவர்கள் செய்வது நாட்டு மக்களுக்கு விரோதமான காரியம். ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். முன்புகூட இங்கே சீனி அம்மாதிரி வினியோகம் செய்யப்பட்டது. அரசே வினியோகம் செய்தது. 60 சத விகிதத்தை உபயோகம் செய்தபோது, முதலில் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் வருஷக் கடைசியில், லாபந்தான் வந்தது. அப்பொழுது ரூ. 1.70-க்கு ஒரு கிலோ என்று விற்றபோது, இதே தமிழக அரசு விற்றபோது, வருஷம் முடிவில் லாபம்தான் வந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இப்பொழுதும் ரூ. 1.75-க்கு ஒரு கிலோ என்று விற்று ஏன் இரண்டு கோடி ரூபாய் லாபம் காட்டக் கூடாது? நான் எண்ணெய், பருப்பு இவற்றின் விஷயத்திற்குப் போகவில்லை. அவையெல்லாம் மக்களுக்குத் தேவையானவை தான். ஆகவே. விலைவாசி சம்பந்தமாக இன்னும் கொஞ்சம் முனைப்பாக இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சர்க்கரையைப் பற்றி பேசினார்கள். 60 சதவிகிதம் சர்க்காருக்கு வருகிறது. அதை வேறு ஓட்டல்களுக்கோ, மற்றவர்களுக்கோ கொடுக்கவில்லை. வீடுகளுக்குத் தான் பிரித்துக் கொடுக்கிறோம். அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க முடியும். அதிலேயும், தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 60 சதவிகிதம் நமக்குக் கொடுப்பதில்லை. இந்தியா முழுவதிலும் உற்பத்தியாவதைக் கணக்கெடுத்து, அதில் ஒரு சதவிகிதத்தை நமக்குக் கொடுக்கிறார்கள். அதுவும் கொஞ்சம்தான். அப்படிக் கொடுத்ததிலே, சென்ற மாதத்தில் நமக்குக் கிட்டத்தட்ட 10,000 டன் கிடைத்தது, அதை எல்லா மாவட்டங்களுக்கும் கொடுத்து விநியோகம் செய்யச் சொல்கிறோம். ஒரு உத்தரவாதத்தைக் கொடுக்கிறேன். இப்படிக் கிடைக்கும் சர்க்கரையை, ஓட்டல்களுக்கோ, அல்லது ரொட்டி செய்பவர்களுக்கோ, ஐஸ் க்ரீம் செய்கிறவர்களுக்கோ, வேறு தொழில் செய்பவர்களுக்கோ கொடுக்கவில்லை. இது பூராவும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுத்து, கூடுமான வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நன்றி. அதே நேரத்தில் விலையைப் பற்றியும் அறிய விரும்புகிறேன். அதை பதில் சொல்லும்போது சொல்லலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சொல்லும்போது, நிலச் சீர்திருத்தம் என்பது அநேகமாக, முன்னேற்றக் கழகமும், மற்ற முற்போக்குக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கை. ஆனாலும், சில சில விஷயங்கள் வரும் போது, விதிவிலக்குகள் இருக்கின்றன என்றாலும், அவையும் ஒவ்வொன்றாக ரத்து செய்யப்பட்டு வருகின்றன. இன்றைக்குச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி என்றதிலிருந்து, மலைமீதிருக்கும் நிலங்கள் இப்படி விலக்கு ரத்தாகி யிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம், இன்றைக்கு கமிட்டி, கமிஷன் சொல்லித்தான் செய்யவேண்டும் என்ற நிலையை மாற்றி, சீக்கிரத்தில் அரசே ஒரு திருத்த மசோதாவைக் கொண்டு வந்து விவசாயிகளுக்கு வேண்டிய நிலம்

கிடைத்திருக்கிறதா, உழுது பயிரிடும் விவசாயிகளுக்கு வேண்டிய நிலம் கிடைத்திருக்கிறதா என்பது போன்ற விவரங்களைச் சேகரித்து சபைக்குக் கொடுத்தால் இன்னும் அதிகமாக நம்பிக்கை ஏற்படும்.

அதுமாத்திரமல்லாமல், இன்றைக்குக் கூட, இனும் சம்மந்தமாக அல்லது குத்தகை விவசாயிகள் சம்மந்தமாக நாம் போட்டிருக்கும் சட்டங்கள் அமல் நடத்தப்பட முடியாமல், சில அதிகாரிகள் அல்ல, சில ஜட்ஜுகள் என்று இருப்பவர்கள், தங்கள் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட சில காரியங்களைச் செய்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில், குத்தகைக்காரர் வெளியேற்றத்திற்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதை மீறி எல்லாக் கட்சிக்காரர்களும் நிலத்தை கையகப்படுத்துவது என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி காரியங்களில் வெகு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே விவசாயிகளுடைய ஸ்தாபனமே பலஹீனமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டப் போக்கின் காரணமாக, இண்ட்ரப்ரி டேஷன் காரணமாக, வெளியேற்றம் நடை பெறுகிறது. ஆகவே, விவசாயி களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் முறையில், சட்டம் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, விவசாயிகள் கொடுக்கும் வட்டி. ரிசர்வ் பாங்கியிலிருந்து 3 சத விகிதத்துக்கு வாங்கும்போது, எப்படி விவசாயிக்குக் கொடுக்கும் போது, கூட்டுறவு வங்கிகள் மூலம் கொடுக்கும் போது, 9 சதவிகிதம் ஆக உயருகிறது? அவர்களுக்குக் கொடுக்கும்போது, எந்த அளவுக்கு குறைத்துக் கொடுக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயிகளின் கடன் நிவாரணச் சட்டம் இப்பொழுதும் தேவை. 1938-ல் என்று நினைக்கிறேன். கடன் நிவாரணச் சட்டம் வந்தது. வாங்கிய கடனுக்கு மேல் வட்டி கொடுத்திருந்தால், அதன் பிறகு வட்டி கொடுக்க வேண்டியதில்லை என்று சட்டம் அப்பொழுது வந்தது. இப்பொழுதும் கடன் நிவாரணச் சட்டம் தேவைப்படுகிறது.

மின்சாரம் பற்றி ஏற்கனவே விவாதித்து இருக்கிறோம். நான் அப்பொழுது சொன்னேன், அரியானாவில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து விட்டதாகச் சொன்னாலும், அங்கே ஒளி கிடைத்தாலும், 'டெப்த்' கிடையாது என்று சொல்லியிருக்கிறேன். நாம் 72-க்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்போம் என்ற நிலை வந்திருக்கிறது. அதே நேரத்தில் கட்டணத்தை உயர்த்தவேண்டிய அவசியம் என்ன? இன்றைக்குக் கூட நாம் பல விஷயங்களைக் கட் பண்ணிக் கொண்டு, நான் கொடுக்கும் ரூ. 400 கோடி மூலதனத்தை வைத்துச் செய்யும்போது, மானியமாகவே விவசாயிகளுக்குக் கொடுக்கலாம். அதனால் நஷ்டம் ஏற்பட்டாலும் பாவாயில்லை என்ற முறையில் சிந்திக்க வேண்டும். எவ்வளவோ வாக்குறுதிக்குப் பிறகு 12½ பைசா, சர்சார்சும் சேர்ந்து ஒரு யூனிட்டுக்கு என்று வரும்போது, உண்மையிலேயே, ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் நான் சொல்வதை ஒப்புக் கொள்வார்கள். ஆனால் இங்கே பேசுவதில் தயக்கம் இருக்கலாம். அப்படிக் கூட்டியதன் காரணமாக ஜனங்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செய்த முறையே கூட, [illegible] 'நேஷனலைஸ்'. திருத்தி அமைக்க என்று கட்டணத்தை உயர்த்தி யிருக்கிறோம் என்ற நிலை ஏற்பட்டிருப்பது சரியில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





தொழில் சம்பந்தமாக, எங்கள் கொள்கையை வலியுறுத்திச் சொல்லியிருக் கிறோம். தனி முதலாளிகளோடு, அரசு நடத்தும், 'ஜாயிண்ட் செக்டார்' என்பதை நாங்கள் கொள்கை ரீதியில் எதிர்ப்பவர்கள். தனி முதலாளி களுக்குச் சலுகை கொடுப்பது அது. சிம்சனை எடுத்துக் கொண்டால் கூட, விவகாரம் ஒரு பக்கம் இருந்தாலும், எங்களுடைய கட்சி டெல்லியில் கூடிய போது, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நாட்டில் இருக்கும் 75 ஏகபோகக் குடும்பங்களில் இதுவும் ஒன்று.

7 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறார்கள். 1¾ கோடி ரூபாய் ஓவர் டிராப்ட் இப்போது கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன தேவை?

சிம்சன் தொழிற்சாலைகளில் உற்பத்தி ஆகும் சாமான்கள் பாதுகாப்புக்கு அவசியமான பொருட்கள். இது ஒரு கேந்திரமான தொழில். இந்தத் தொழிலை இன்னும் தனியார் வகையில் ஏன் விட்டு வைத்திருக்க வேண்டும். அரசாங்கமே இதை ஏன் நடத்தக்கூடாது. தனி முதலாளி கையில் இந்த தொழிலை எதற்காக விட்டு வைத்திருக்க வேண்டும். தனி முதலாளிக்கு ஊக்கம் கொடுப்பதை விட அரசாங்கமே இப்படிப்பட்ட தொழில்களை ஏற்று நடத்த வேண்டும். மத்திய சர்க்கார் இண்டஸ்டிரியல் பாலிசி ரெசல்யூஷன் போட்டிருக்கிறார்கள். 1948-ல் இருந்து 1956 வரையில் இதைச் சொல்லியிருக்கி றார்கள். தனியார் கையில் கேந்திரமான தொழில்கள் இருக்கக்கூடாது. பொதுத் துறையில் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த கொள்கைக்கு மாறாக இன்றைக்கு தூத்துக்குடியில் தனியார் கையில் தொழிற் சாலையை விட்டு வைத்திருக்கிறோம். இது பொதுத் துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். தனியார், ஏகபோக கோடீஸ்வரர்கள் பர்டிலைசர் பிளாண்டை அமைக்க அனுமதித்திருக்கிறோம். லட்சக்கணக்கில் பணம் போட்டு அமைக்கும் இப்படிப்பட்ட தொழில்கள் பொதுத் துறையில் வர வேண்டும். தனியார் கையில் இவைகள் இருப்பதனால் அவர்கள் தங்க ளுடைய மூலதனத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இப்போது "செல்ப் ரிலையன்ஸ்" "ஆண்டி மனாபலி" என்று கொள்கைகள் இந்தியா பூராவிலும் பூரணமாக வற்புறுத்தப்பட்டு வருகின்றன. எனவே இதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மில்களைப் பொறுத்தவரையில் அது ஒரு பெரிய புதிராக இருக்கிறது. கோயம்புத்தூரில் எத்தனை மில்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்றால், சில பேர் 28 என்று சொல்லுவார்கள். அது உண்மையல்ல. கோவையில் உள்ள மில்களோடு மற்ற இடங்களில் உள்ள மில்களைச் சேர்த்து மொத்தம் 12 மில்கள் தான் மூடப்பட்டிருக்கின்றன. கோவையிலே 6, மதுரையிலே 3, திருநெல் வேலியிலே ஒன்று, செங்கற்பட்டிலே ஒன்று, அதேமாதிரி இராமநாதபுரத்திலே ஒன்று என்று மொத்தம் 12 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசைப் பொறுத்தவரையில் இந்த மில்களைத் திறப்பதற்கு இரண்டு மூன்று விதமான கொள்கைகளை வகுத்திருக்கிறார்கள். ஒரு மில் "வயபில் யூனிட்"டாக தன்னுடைய சொந்தக் காலிலே நிற்கக் கூடியதா என்பது ஒன்று. இன்னொன்று அந்த நிர்வாகத்தில் உள்ள ஊழல்களைக் களைந்து விட்டால் அது "வயபில் யூனிட்"டாக இருக்க முடியுமா என்பது.

அடுத்து, சில மில்களுக்கு ரூ. 10 லட்சம் பெறுமானமுள்ள சாமான்களைக் கொண்டு வந்து புதிதாகச் செய்துவிட்டால் அந்த மில்களைத் திறப்பதற்கு முடியுமா என்று பார்ப்பது. இப்படிப் பல கொள்கைகளை வைத்திருக்கிறார்கள். கோவையைச் சேர்ந்த எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் அடுத்த மாதத்திற்குள் இந்த மில்களைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால், தாங்கள் ஸ்ட்ரைக் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் முழுமையாக ஏற்றுக்கொண்டு செயல்படவில்லையென்றால், மாநில சர்க்கார் பாதிப் பணம் போட்டு, மத்திய சர்க்காரைப் பாதிப் பணம் போடச் செய்து இந்த மில்களை எடுத்து நடத்தினால், அதன் மூலம் 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க முடியும். அவர்களுக்கு "ரிலீப்" கிடைக்கும். ஆளுநர் உரையில் இந்த மில்களைத் திறப்பதற்கு மத்திய அரசின் உதவி நமக்குச் சரியாகக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சரியான கொள்கையல்ல. இந்த மில்களை பிப்ரவரி 12-ம் தேதிக்குள் திறக்கவில்லையென்றால், உடனடியாக ஸ்ட்ரைக் செய்யப் போவதாக எச்சரித்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கும் வந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

இன்றைக்குத் தியாகிகளுக்கு மானியமாக 50 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு திரு. ஸி. சுப்பிரமணியம் அவர்கள் 200 ரூபாயாக கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எது உண்மை என்று தெரியவில்லை. 50 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறதா அல்லது 200 ரூபாய் கொடுக்கப்படுகிறதா என்று தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது மத்திய அரசு கொடுக்கவில்லை. இப்போது கொடுக்கப்பட்டு வரும் தியாகிகள் மானியம் நம்முடைய மாநில அரசினால் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் 200 ரூபாய் என்று கூறி இருக்கிறார். எங்கே கொடுக்கப்பட்டு வருகிறது என்று தெரியவில்லை. மூன்று மாதம் சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கும், 6 மாதம் சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கும் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அவர் எப்படிக் கூறினார் என்று தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : திரு. சுப்பிரமணியம் 200 ரூபாய் கொடுப்பதாகக் கூறி இருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது உறுதியாக இல்லை. நிச்சயமாக நாம் தான் இப்போது இதைக் கொடுத்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி ; அடுத்து நான் குறிப்பிட விரும்புவது சிம்சன் விவகாரம். இன்றைக்கு இந்த விவகாரம் கொஞ்சம் முடிவாகி இருந்தால் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள கொஞ்ச நாட்கள் ஆகும். தலைவர்கள் மட்டத்தில் விவகாரம் தீர்க்கப்பட்டு விட்டது. அங்கு ஒரு வேகம் கிளம்பி இன்றைக்கு அமைதி ஏற்பட கொஞ்ச நாட்களாகும். 1946-லே மதுரை மில்லிலே ஒரு தகராறு வந்தது. அங்கு அடிதடி எல்லாம் ஏற்பட்டு இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டு "மர்டர்" எல்லாம் கூட நடந்தது. அதிலே நாங்கள் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு ஜெயிலுக்குக் கூடப் போனோம். அந்த அளவிற்கு முடிந்தது. ஆனால் இன்றைக்கு விஷயம் என்ன என்று சொன்னால் சில தரப்புகள், சில கோஷ்டிகள்





இடையே தகராறு வரத்தான் செய்யும். மேலே இருக்கக் கூடிய தலைவர்கள் திருந்தி விட்டாலும் கீழே உள்ள தொண்டர்கள் மத்தியிலே அமைதி ஏற்பட சிறிது நாட்கள் ஆகும். லெனின் கூடச் சொன்னார்"

" what is obsolete for the party is not obsolete for the cause and what is obsolete for the cause is not obsolete for the people " நமக்கு தெளிவு ஏற்பட்டு விட்டது என்று சொன்னாலும், இன்னும் சில பேருக்குத் தெளிவு ஏற்படச் சில நாட்களாகும். அவர்களுக்குத் தெளிவு ஏற்படச் செய்வது நம்முடைய கடமை. இது நீண்டகாலமாக இருந்து வரும் உண்மை.

அடுத்து, இன்னொரு முக்கியமான விஷயம் இந்தக் கட்டத்திலே சொல்ல வேண்டியிருக்கிறது. நாட்டிலே பல கட்சியைச் சேர்ந்தவர்கள், பல தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களாக முடிவு செய்து அவர்கள் ஒரு தொழிற்சங்கத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்றால் அதில் ஆட்சேபணை இல்லை. மதுரையில் மகாலட்சுமி மில்லில் பார்வார்ட் பிளாக், கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி ஆக நான்கு கட்சிகளைச் சேர்ந்த 12 பேர் கொண்ட கமிட்டி போட்டு அங்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதுபோல சிம்சன் தொழிற்சங்கத்திலும் நடத்தப்படலாம். நான்கு சங்கங்களும் சேர்ந்து சந்தா வசூல் செய்து தங்களுக்குள் பிரித்துக் கொள்கின்றன. தொழிலாளர்களிடையே இதனால் ஒற்றுமை ஏற்பட்டு நல்ல விதமாக வளர்ந்து வந்துள்ளது. கட்சி வித்தியாசங்களினால் அவர்களுக்குள் போட்டியில்லை.

ஏ.ஐ.டி.யு.சி.யைப் பொறுத்தவரையில் ரகசிய ஓட்டெடுப்பு முறை மூலம் எந்தச் சங்கம் வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களோ, அந்தச் சங்கம் செயல்பட்டு வரலாம் என்பதை நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். 1952-ல் இருந்து இந்தக் கொள்கையைச் சொல்லிக்கொண்டு வருகிறோம். பொதுவாக தொழிலாளர்களே தங்கள் சங்கங்களை நடத்தி வர வேண்டும் என்பது நல்ல கொள்கைதான். என்னைப் போன்றவர்கள் அவர்களுக்காக பொது வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். தொழிலாளர்களே தங்கள் சங்கங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்வது என்றால் அதிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குகிற தொழிலாளியைப் பழிவாங்குகிற நிர்வாகம் இல்லாமல் இல்லை. தொழிலாளி தலைமை தாங்கட்டும் என்று விட்டு வைத்து இருக்கும் நல்ல நிர்வாகம் இன்றைக்கு இல்லை. இன்றைக்குத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குகிறவர்கள் முன்னால் அந்தந்தத் தொழிற்சாலைகளில் பணி செய்தவர்கள்தான். அவர்கள் வேலையிலிருந்து கட்டாயமாக நிர்வாகத்தினால் நீக்கப்பட்டார்கள், அல்லது அவர்களாகவே ராஜிநாமா செய்து விட்டு வந்தவர்கள். தோழர் கல்யாணசுந்தரம் இரயில்வேயில் வேலை பார்த்த தொழிலாளி. அந்த நிர்வாகத்தினால் பழி வாங்கப்பட்டவர். இன்றைக்கு ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்து தொழிற்சங்கத் தலைவராக வந்தாரென்றால் முதலாளி என்ன செய்வார்? ஒன்று அந்தத் தலைவரை விலைக்கு வாங்குவார்; அல்லது அந்தத் தலைவரை டிஸ்மிஸ் செய்வார் அல்லது மிரட்டி தொந்தரவு செய்வார்.

இன்றைக்கும் முதலாளிகள் தொழிற்சங்கத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை. அது ரொம்ப வருத்தப்படக்கூடிய விஷயம். ரொம்ப ரொம்ப அருமையான முதலாளிகள் எல்லாம் சங்கம் என்றால் கூடாது என்கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே ஒரு சிறப்பான அம்சம் இருக்கிறது. பெரும்பெரும் தொழிற்சாலைகளில் எல்லாம், சிம்சன் மெட்ராஸ் ரப்பர் பாக்டரி, சர்ஜிகல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பிராஜக்ட், சதர்ன் ஸ்டாக்சுரல்ஸ், என்பீல்டு போன்ற தொழிற்சாலைகளையெடுத்துக்கொண்டால், 1,000, 2,000, 3,000 தொழிலாளர்களுக்கெல்லாம் ஒரே சங்கம்தான். இரண்டாவது சங்கத்தை வைப்பதற்கு அந்தத் தொழிலாளர்களை அனுமதிப்பது கிடையாது. ஆனால் விவகாரம் எங்கே வருகிறது என்றால் ஒன்று இரண்டு வருடங்களுக்குப் பிறகு யாரைத் தேர்ந்தெடுப்பது என்று வருகிறபோது, அரசியல் வேகத்திலே தேர்தல் நடக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், நான் முன்பு சொன்னதிலேகூட திருத்தமாக இருக்கலாம், அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கட்டும். தொழிலாளிகளைத் தேர்ந்தெடுக்கட்டும், மாஜித் தொழிலாளிகளைத் தேர்ந்தெடுக்கட்டும், அல்லது வெளியே இருக்கிறவர்களைத் தேர்ந்தெடுக்கட்டும். பணியாற்றிக்கொண்டிருக்கிற தொழிலாளிகளைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லி சட்டத்தினால் கட்டுப்படுத்தக்கூடாது என்ற அளவுக்கு அந்தச் சட்டம் வந்தால்தான் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். இந்த மசோதாவைப்பற்றி ஸ்டேட் லேபர் அட்வைசரி கமிட்டியிலே விவாதிக்க அஜண்டா போட்டிருக்கிறார்கள். அங்கே இந்த ஆலோசனையைக் கொடுக்க இருக்கிறோம். இப்படி மசோதா வருவது தவறு அல்ல. இப்பேர்ப்பட்ட மசோதா ஏற்கனவே வங்காளத்திலே, கேரளாவிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது பஸ் போக்குவரத்து சம்பந்தமாக ஒரு சின்ன விவகாரம் இருக்கிறது. பஸ் போக்குவரத்து, டி.வி.எஸ்ஸும், ஏ.பி.டி. யும்—திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன்—காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தால் கண்டிப்பாக எடுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. ஏனென்றால் இந்தப் பெரிய பஸ் முதலாளிகள்தான் அவர்களுக்கு ரொம்ப பாதுகாப்பாக இருந்தார்கள். ரொம்ப அனுபவித்தவர்கள் நாங்கள். இந்த பஸ் தொழிலாளர்களுக்காக வேலை நேரம் நிர்ணயம் பண்ணவேண்டும் என்பதற்காக ஒரு மசோதா அங்கே டெல்லியிலே கொண்டுவந்து 1961-ஆம் வருஷம் நிறைவேற்றப்பட்டது. அதன்பேரிலே விதிகள் கொண்டுவரவேண்டும் என்பதற்கு முயற்சிசெய்து, விதிகள் வந்ததே 1967-க்குப் பிறகுதான். 6 வருஷம் அந்த விதிகளைக் கொண்டு வரவில்லை. ஏனென்றால் பஸ் முதலாளிகளைத் தங்களுடைய செல்லப் பிள்ளைகளாக ஆளுங்கட்சியினர் வளர்த்தார்கள். நாங்களெல்லாம் சங்கம் அமைத்து ஒரே சங்கமாக இருந்தால் அமைச்சர் அவர்களே வந்து ஒரு சின்ன பஸ் கம்பெனியிலேகூட தனி சங்கத்தை அமைத்துக்கொண்டிருந்தார்கள். இப்படி எல்லாம் நடந்தது. இன்றைக்குக்கூட அவர்கள் அதைத்தான் நினைக்கிறார்கள். பல பஸ் முதலாளிகள், அதிகாரத்திலே இருப்பவர்களை நாம் எப்படியும் வளைத்துப் போட்டுவிடலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி





நினைத்து அவர்கள் பல காரியங்களைச் செய்ய முனைகிறார்கள். நேற்று பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டது. மதுரையிலே ரொம்ப சிறப்பான விஷயம். அந்த டி.வி.எஸ். முதலாளி டி.வி.எஸ். கிருஷ்ணாவும் நானும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம். அவர்களுடைய தொழில் ஸ்தாபனத்தில்தான் நான் தொழிற் சங்கத்தை வைத்தேன். என்னுடைய பிரதான கோரிக்கையே அரசு இதை ஏற்று நடத்த வேண்டும் என்பதுதான். 1932-லே நான் முனிசிபாலிடியிலே இருந்தேன். இந்த ஸ்தாபனத்தை முனிசிபாலிடியே ஏற்று நடத்தவேண்டும் என்று சொன்னதற்காக லட்ச ரூபாய் செலவழித்து என்னைத் தோற்கடித்தார்கள். அந்த டி. எஸ். கிருஷ்ணா சொன்னார் "நீ விரும்பியது நடந்தது, ரொம்ப மன நிறைவோடு உட்கார்ந்திருக்கிறேன்" என்று. அவர்கள் கொடுத்துவிட்டார்கள். பெண் எடுத்த மாதிரி எடுத்தாலும் நாங்கள் அந்த அம்மாளுக்குக் கொடுக்க வேண்டிய சீர் வரிசையை எல்லாம் கொடுத்தாயிற்று, அந்த அம்மாளுக்குக் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். இலவசமாக அவர்கள் கொடுக்கவில்லை என்பதையும் சொன்னார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு சில பஸ் முதலாளிகள்—ஸ்வாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட் கதை எப்படி என்றால் 53 இருந்தது 50 என்று வைத்ததற்குப் பின்றாலே 48 ஆனது. அதற்குப் பிறகு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்தார்கள். மத்தியசர்க்காருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் 3 பஸ்களைப் பிடுங்கினார்கள். மாநில சர்க்கார் 4, 5 எடுத்துக் கொண்டது. மற்றவை சங்கத் தலைவர் கோபு கையிலே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 53 இருந்தது 50 என்று அறிவித்த பிறகு 48 ஆயிற்று என்கிறீர்களே, எந்த ஆதாரத்துடன் சொல்கிறீர்கள்?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எங்கள் ஆட்கள் சொன்ன விவரத்தை வைத்துத்தான் சொல்கிறேன். 53 வரையிலும் இருந்தது என்பதுதான் எனக்குக் கிடைத்த விவரம். அது குறைந்தும் இருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எனக்குக் கிடைத்த தகவல்படி இரண்டு மூன்று பஸ் விவகாரங்கள், தங்களுடைய ரூட் என்று ராமன் அண்ட் ராமன் வாதாடிக்கொண்டிருந்தார்கள். எஸ்.எம்.டி. ரூட் இல்லை எங்களுடையது என்று. 50 என்று நிர்ணயித்த பிறகு வாதாடியவர்களே அதைத் தங்களுடைய கையைவிட்டுப் போனால் போதும் என்று கருதுவதாகவும் தெரிகிறது. இவைகளையெல்லாம் தனியாகக்கூடப் பேசலாம். பல ரகசியங்கள் அதிலே இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த விஷயம் என்னவென்றால் 50 என்று சொன்னதற்குப் பிறகு 10 இருக்கிறது பாருங்கள், 10-க்கு மேலே இருக்கக் கூடிய பஸ் பர்மிட்கள் எல்லாம் காலாவதியானவுடனே அவர்கள் சரண்டர் பண்ணவேண்டும் என்றால், அவர்கள் சரண்டர் பண்ணத் தயாராக இல்லை. சரண்டர் பண்ணுவதற்குத் தயாராக இல்லாமல் சுந்தரம் டிரான்ஸ்போர்ட் என்று ஒன்று மதுரையிலிருந்து திருச்சிக்குப் போகக்கூடியது. அவர் பெரும் பணம் சேர்த்தவர். அவர் ஐக்கோர்ட்டிலே போய் டெம்ப்ரரி பர்மிட் வாங்கி விட்டால், அது ஒரு அபாயம் இருக்கிறது. பர்மிட் லேப்ஸ் ஆனால்கூட அந்த டெம்ப்ரரி பர்மிட் வாங்குவதற்கான வசதியும், வாய்ப்பும் அவர்களுக்கு

இருக்கிறது. அதனாலே என்னுடைய அபிப்பிராயம் படிப்படியாக தனியாருக்கு ஒரு பஸ்கூட இருக்கக்கூடாது. இப்பொழுது 50-லே ஆரம்பித்திருக்கிறோம். 10-லே போகும். 10-க்கு மேலே இருக்கிற பஸ்கள் எடுக்கப்படும் நிலை ஏற்படுமானால் 10-க்குள்ளே இருக்கிற பஸ்ஸை வைத்துக் கொள்ளட்டும், அதற்குள்ளே வைத்து யாரும நடத்தமுடியாது—அவர்களே கடைசியிலே சரண்டர் பண்ணுவார்கள். அந்த நிலைமை உண்டாக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 10 பஸ்ஸை வைத்து யாரும் நடத்த முடியாது, அவர்களே சரண்டர் செய்துவிடுவார்கள் என்பது ஹண்டே அவர்களுக்கு மிகவும் தேவையான வாதமாக இருக்கிறது. 10 தான் வேண்டும் என்று உச்சவரம்பு கொண்டுவர இதே காரணத்தைச் சொல்லி எதிர்த்தார்கள். தாங்கள் அதே காரணத்தை ஒத்துக்கொண்டு பேசுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் 10 பஸ்ஸே கூடாது என்கிறேன். பஸ்கள் பூராவும் தேசியமயமாக்கப்படவேண்டும். இன்னொரு விஷயத்தைக் கூட யோசிக்கலாம். அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லலாம் என்ற நினைக்கிறேன். குஜராத்திலே பஸ்கள் பூராவையும் நேஷனலைஸ் செய்துவிட்டார்கள். மகாராஷ்டிராத்திலேயும், ஆந்திராவிலேயும் ஏரியா வாரியாக நேஷனலைஸ் செய்துவிட்டார்கள். அந்த முறையிலே நாம் செய்தால் நன்றாக இருக்கும். 10 என்பதுகூட இருக்கக்கூடாது. முதலிலே 50, பிறகு 10-க்கு மேல் இருந்தால் சரண்டர் என்றால் எனக்குத் தெரியும் முதலாளிகள் எல்லாம் எப்படி என்று சொல்லக்கூடாது. ஜெயலக்ஷ்மி கம்பெனி என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அந்தக் கம்பெனி 10 பஸ்ஸாலேதான் பாதிக்கப்படுகிறது. ஆனால் உடனடியாகப் பாதிக்காப்படவில்லை. காரணம் அவர்கள் சரண்டர் பண்ண வேண்டியதே இன்னும் 3 வருஷம் கழிந்து இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டத்தாலே எந்தவித பாதகமும் இல்லை. எனவே, அந்த அளவிலே சொல்லி இதோடு இதை நிறுத்திக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு அரிஜனங்கள் சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சொல்லும்படி சொல்லி இருக்கிறார்கள். பல மகஜர்கள் வந்திருக்கின்றன. நமது சலவைத் தொழிலாளர்கள், மருத்துவத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் இவர்களெல்லாம் தங்களை அரிஜனங்களாக ஷெட்யூல்டு காஸ்டிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது பல மாநிலங்களிலே வேறு பெயர்களிலே போட்டு சேர்த்திருக்கிறார்கள் என்று. உத்திரப்பிரதேசத்திலே, ஆந்திரப்பிரதேசத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். அதேமாதிரி கிறிஸ்தவர்கள் ஆகிவிட்ட காரணத்தாலே இழந்துவிட்டவர்களையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். முன்பு மேல்சபையிலே எத்திராஜுலு சாகிற வரையிலேயும் இதைக் கேட்டுக்கொண்டே இருந்தார். அந்த சபையில் ஒவ்வொரு கூட்டத்திலேயும் எப்படியாவது இவர்களை ஷெட்யூல்டு காஸ்டிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். அதைக் கொஞ்சம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது ஸ்டேட் பிளானிங் கமிஷன், அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிட்டி—இவர்களுடைய செயல்பாட்டு முறை திருப்தி அளிப்பதாக இல்லை என்பதை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ரெவின்யூ போர்டை





ரத்து பண்ணிவிடுவது என்று ஏற்கெனவே அரசு முடிவு எடுத்திருக்கிறது. இந்த ரெவின்யூ போர்டு அபாலிஷன் குறித்த முடிவு ஏற்கெனவே எடுத்த முடிவாகும். இப்போது இது ஒத்திப்போடக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதேமாதிரி ஸ்டேட் பிளானிங் கமிஷன் இருக்கிறது. அதனுடைய செயல்களும் துரிதமாக இல்லை.

இப்போது மத்திய மாநில அரசு உறவு சம்பந்தமாகப் பல கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன. எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் திரு. கந்தப்பன் அவர்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1947-க்குப் பின்னால் படிப்படியாக பல திட்டங்களை வகுத்திருக்கிறோம். நாட்டின் முன்னேற்றத்திற்காக சட்டங்களைப் போட்டால் மட்டும் போதாது. அதற்குரிய முக்கியத்துவம் கொடுத்து அதை நிறைவேற்ற வேண்டும். இதை முக்கியமாக நாம் மனதில் கொள்ளவேண்டும். சுதந்திரம் கிடைத்த பிறகு மத்திய அரசு வலிவுள்ளதாக இருக்கவேண்டும். அதேநேரத்தில் மாநில அரசாங்கத்திற்கு, மத்திய அரசாங்கத்தில் அதிக அதிகாரங்கள் குவிந்திருக்காமல், அதிக அதிகாரங்கள் இருக்கவேண்டும். என்ன என்ன அதிகாரங்கள் என்பதைப்பற்றி ஒவ்வொரு தடவையும் சொல்லி வருகிறோம்.

எங்கள் கட்சிக்கு ஒரு திட்டம் உண்டு. அதன்படி எப்பொழுதும் நாங்கள் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறோம். எங்கள் கொள்கைப்படி டெவலப்மென்டல் ஆக்டிவிட்டீஸ், கல்ச்சுரல் ஆக்டிவிட்டீஸ், ஃபைனான்ஷியல் பொட்டன்ஷியாலிட்டீஸ் இவை சம்பந்தமான அதிகாரங்கள் மாநில அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். சில சமயங்களில் எங்கள் கட்சியிலும் இது சம்பந்தமாக சில சர்ச்சைகள் இருந்தன. இன்றைக்கு இருக்கின்ற அரசியல் சட்டத்தைப் பார்க்கும்போது இது இப்போதைக்கு சாத்தியமானதாகத் தெரியவில்லை.

எங்கள் கட்சியைச் சேர்ந்த மாநாடு ஒன்று கொச்சியிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிலே அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். அந்த நிலை எப்படி வருமென்று சொன்னால், உண்மையிலேயே இதை ஏழு கட்சிகளும் கூடிப் பேசி உருவாக்கவேண்டும். அப்படி ஒன்றுகூடிப் பேசினால்தான் ஒவ்வொருவரிடையேயும் இருக்கக்கூடிய வித்தியாசம் தெரியும். அதனால் பல நல்ல திட்டங்கள் உருவாகும். பழைய முறைப்படி பல சட்டதிட்டங்களை, கொள்கைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற, தற்பொழுது உதவாத சிலவற்றை, தப்பானவற்றை மாற்றியமைக்கவேண்டும். இப்போது நமக்கு கிடைக்கும் லோன் பொசிஷனை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

We must review the loan position. The Centre should consider **overdrafts.** They must convert them as grant or soft loan for socially beneficial schemes.

அந்த அளவுக்குச் செய்தால் நமக்கு ஓரளவு ரிலீஃப் கிடைக்கும். இன்னும் பல விஷயங்களைச் சொல்லவேண்டும். நேரம் இல்லாததால் இந்த அளவில் இதை முடித்துக்கொண்டு, நான் ஏற்கெனவே என்னுடைய திருத்தத்தில் சொல்லியுள்ள விஷயங்களையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

### (4) அறிவிப்புகள்.

*(இ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுப்பதுகுறித்து.*

MR. SPEAKER : I have to announce to the House that amendments, if any, to the Motion of Thanks to the Governor's Address may be sent to the Secretary, Legislative Assembly Department on or before 12 Noon on Friday 28th January 1972.

*இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவுற்றன. இப்பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.*

*பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

### (6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

£ 1. Notification issued with G.O. Ms. No. 2900, Home, dated the 24th October 1970, in regard to certain amendments to the Tamil Nadu Denatured Spirit Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

£ 2. Notification issued with G.O. Ms. No. 3398, Revenue, dated the 4th November 1971 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the Table of the House under section 535 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 3. Notification issued with G.O. Ms. No. 76, Excise and Prohibition, dated the 8th October, 1971 in regard to relaxation of rules relating to maximum limit of liquor for use of Foreign Delegates attending the Inter-Regional Seminar on Industrial Processing of Rice to be held in Madras in October 1971. [Laid on the Table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance No. 8 of 1971).]

£ 4. Notification issued with G.O. Ms. No. 2643, Home, dated the 22nd October 1969, in regard to an amendment to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

£ 5. Notification issued with G.O. Ms. No. 373, Home, dated the 3rd February 1971, in regard to certain amendments to the Tamil Nadu Spirituous Essences Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

£ 6. Notification issued with G.O. Ms. No. 779, Rural Development and Local Administration, dated the 26th March 1971, making the Madras Corporation Services (Classification, Control



and Appeal) Rules, 1970. [Laid on the Table of the House under section 348 (a) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

£ 7. Notification issued with G.O. Ms. No. 1137, Labour (Housing), dated the 7th September 1971, making the Tamil Nadu Slum Clearance Board (Control and Management of Properties) Rules, 1971. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971).]

£ 8. Notification issued with G.O. Ms. No. 2488, Local Administration, dated the 11th November 1971, in regard to constitution of Madurantakam Municipality in Chingleput District. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 9. Notification issued with G.O. Ms. No. 2489, Local Administration, dated the 11th November 1971, in regard to constitution of Suramangalam Municipality in Salem District. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 10. Notification issued with G.O. Ms. No. 2490, Local Administration, dated the 11th November 1971, in regard to constitution of Kumarapalayam Municipality in Salem District. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 11. Notification issued with G.O. Ms. No. 2491, Local Administration, dated the 11th November 1971, in regard to constitution of Golden rock Municipality in Tiruchirappalli District. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 12. Notification issued with G.O. Ms. No. 2492, Local Administration, dated the 11th November 1971, in regard to constitution of Sirkali Municipality in Thanjavur District. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 13. Notification issued with G.O. Rt. No. 1997, Revenue, dated the 5th November 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Madhava Association, Madras on 7th November 1971 at Paragon theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 Tamil Nadu Act X of 1939).]

£ 14. Notification issued with G.O. Rt. No. 1989, Revenue, dated the 4th November 1971 in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the

Secretary, Indra Dhanush on 13th November 1971 at Rajakumari theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 15. Notification issued with G.O. Ms. No. 1821, Home, dated the 27th July 1970, in regard to an amendment to the Tamil Nadu Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the TamilNadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

£ 16. Notification issued with G.O. Ms. No. 2433, Rural Development and Local Administration, dated the 4th November 1971, in regard to dissolution of Wallajah Panchayat Union Council with effect on and from the 4th November 1971 and reconstitution with effect on and from the 4th February 1972. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

17. Notification issued with G.O. Ms. No. 1848, (Public Services-A), dated the 11th June 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, published at pages 759 to 768 of Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 9th June 1954 as subsequently amended. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

B. *Reports, Notifications and Other Papers.*

£ 1. Notification issued with G.O. Ms. No. 2297, Revenue, dated the 31st August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of an endowment deed in favour of Annavinayagar Devasthanam College, Ganapathipuram in Agastheeswaram taluk of Kanyakumari District.

£ 2. Notification issued with G.O. Ms. No. 2398, Revenue, dated the 31st August 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the deed of declaration of trust in favour of the College Management Committee of the Mazharul Uloom College, Ambur.

£ 3. Notification issued with G.O. Ms. No. 2234, Revenue, dated the 11th August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the written undertakings executed by the Tamil Nadu Small Industries Development Corporation for obtaining loans and advances sanctioned by the Government of Tamil Nadu.

£ 4. Notification issued with G.O. Ms. No. 2747, Revenue, dated the 21st September 1971 in regard to an amendment to the Tamil Nadu Stamp (Prevention of undervaluation of Instruments) Rules, 1968.



£ 5. Notification issued with G.O. Ms. No. 1797, Revenue, dated the 22nd June 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the documents relating to the purchase of the properties in favour of Anna Arulagam, Cheyyar, North Arcot district.

£ 6. Notification issued with G.O. Ms. No. 2317, Revenue, dated the 21st August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deeds of immovable properties executed by Burma and Ceylon repatriates in favour of the Government for securing business loans.

£ 7. Notification issued with G.O. Ms. No. 2374, Revenue, dated the 30th August 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed in favour of the young Men's Christians Association, Madurai.

£ 8. Notification issued with G.O. Ms. No. 2837, Revenue, dated the 25th September 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the bonds to be executed by the Tamil Nadu Electricity Board for availing of the rediscounting facilities offered by the Industrial Development Bank of India from time to time

£ 9. Notification issued with G.O. Ms. No. 2134, Revenue, dated the 8th July 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the conveyance deed to be executed by the Principal of the Medical College, Palayamkottai in favour of the Muslim Orphanage Committee, Palayamkottai, Tirunelveli district.

£ 10. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 21st to 25th October 1971 (Fifth Assembly—Third Session First meeting).

11. Notification issued with G.O. Ms. No. 2636, Revenue, dated the 13th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed in favour of Mahatma Gandhiji Centenary Memorial Government Hospital Committee, Cumbum, Madurai district.

12. Notification issued with G.O. Ms. No. 3566, Revenue, dated the 9th November 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the deed of declaration of trust in favour of the South India Teachers Union Council of Educational Research.

13. Notification issued with G.O. Ms. No. 2750, Revenue, dated the 21st September 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of

1899) in respect of the sale deed to be executed in favour of the repatriates from Burma and Ceylon for running business by means of loans sanctioned to them by the Government.

14. Notification issued with G.O. Ms. No. 2406, Revenue, dated the 1st September 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed in favour of the Government of Tamil Nadu.

15. Notification issued with G.O. Ms. No. 2805, Revenue, dated the 24th September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed to be executed in favour of the Kanyakumari Educational Society.

16. Notification issued with G.O. Ms. No. 2759, Revenue, dated the 22nd September 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift settlement deeds to be executed in favour of Yadhava College, Madurai.

17. Notification issued with G.O. Ms. No. 2566, Revenue, dated the 9th September 1971 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the deed of exchange to be executed by Sri Ramakrishna Kudil of Tiruchirappalli district.

@ 18. Summary of the speech of Thiru I. Mahadevan, I.A.S., delivered at the Third International Tamil Conference held at Paris during July 1970 in connection with Assurance No. 956 of 1971.

& 19. Governor's Address to the Members of the Legislature on the 22nd January, 1972 (English and Tamil).

---

£ Despatched to Members on 10th January, 1972.

@ Despatched to Members on 21st January, 1972.

& Circulated to Members on 22nd January, 1972.



## APPENDIX I.

[*Vide* foot-note at page 28]
(Governor's Address)

Honourable Members of the Legislature,

It is my pleasant privilege to welcome you all to this joint session of the Legislature. This is the first occasion on which I am meeting you in a joint session. I greet you most warmly and pledge my support to you in the service of the people of Tamil Nadu.

2. We are meeting at a time when as a nation we can legitimately take pride in fighting for and upholding the principles of democracy and socialism. The heroism, devotion to duty and spirit of sacrifice of our armed forces will continue to inspire generations. Neither superiority in arms nor treacherous moves of the unscrupulous enemy backed by some of the ill-informed powers could help the enemy to succeed in his nefarious designs. Thanks to the valour of our armed forces and the dynamic, sober and astute leadership of Prime Minister Indira Gandhi, our commitment to democracy has been honoured. In the words of Rabindranath Tagore, we are proud to say that the insulted people of this continent have not only asserted their self-respect but also vindicated their honour and strengthened the foundations of democracy. We have proved to the world that our intention at no time was territorial aggrandizement but the survival of peace and democracy in our sub-continent in general and Bangala Desh in particular. On this proud occasion, on my behalf and on behalf of all of you, I salute the memory of those brave men of the armed forces who died so that India may live. I am happy to say that the Government of Tamil Nadu have announced measures and taken steps which will give utmost relief to their dependents who are entitled to every consideration as members of our family.

3. During the last year, millions of families were obliged to take shelter in India on account of the genocide committed by the military regime of Pakistan. The whole country stood as a man to sustain these helpless millions in their time of suffering. At the same time, we note with regret that the international community paid only lip service to the cause of these people. Continuous threats and provocative postures by West Pakistani military junta made it imperative for us to be prepared for all eventualities. Had it not been for the complete co-operation of the entire people of India, it would have been impossible to find the resources to bear these burdens. Instead of advising the military junta of West Pakistan to respect realities, some of the powers encouraged the mad gamble of this junta which ultimately led to naked aggression against India. I hope they will ere long correct their unjustified attitude and recognise the reality of Bangla Desh. At the same time, I am confident that I am expressing your sentiments fully when I say that as a nation

we are grateful to those countries, especially the U.S.S.R., which have stood by us during these troubled and difficult days.

4. The unity of the people in the recent struggle against the foreign invader has been unique and has changed the course of history. I have no doubt that in stepping up economy and in building prosperity the same unity will play a major role. The problems of peace are most important. They will have to be tackled with the same sense of unity of purpose and expedition. I am sure that in our war on poverty, this Government and the Central Government will act with the same spirit of dedication and commitment. This Government's aspirations mirror the desires of the common man. This Government re-dedicates itself to the well-being and uplift of the masses in general and the struggling people in particular.

5. During the year gone by, the State had, a good season on the agricultural front. The rainfall during the south-west monsoon was, by and large, normal excepting in parts of Madras, Chingleput, North Arcot, Tiruchirappalli and Nilgiris. During the north-east monsoon, almost all districts received insufficient rains. However, the earlier rainfall and the better distribution of later rains in certain districts have specifically helped our dry land areas. It is our estimate that the production of foodgrains will reach a target of 73 lakh tonnes representing an increase of 3.84 per cent over the last year's level of 70.3 lakh tonnes. This compares well with the level of 50.6 lakh tonnes in 1968-69. I need hardly point out that this has been the effect of continued and sustained emphasis on the provision of necessary inputs such as fertilisers, pesticides, better seeds, more credit and better water management. Nearly 44.93 lakhs of acres were covered under high-yielding varieties of paddy in 1970-71. This represents nearly two-thirds of the area under paddy. Our target for 1971-72 is to cover 50 lakhs of acres under high-yielding varieties of paddy. We have also stepped up our emphasis on multiple cropping. 12.99 lakh acres were brought under multiple cropping in 1970-71 as against 2.15 lakh acres in 1967-68. During the year, there was a sharp step-up in the demand for fertilisers. In fact, the total consumption of fertilisers has gone up to 1.73 lakh tonnes of Nitrogen, 0.72 lakh tonnes of Phosphorous and 0.51 lakh tonnes of Potassium. We have tried to improve the working of the co-operatives and increase the availability of short and medium-term credit from Rs. 31.41 crores in 1966–67 to Rs. 55.00 crores in 1971-72 and the long-term credit from Rs. 2.73 crores in 1966-67 to Rs. 21.00 crores in 1971-72. The revival and renovation of the co-operative movement continue apace.

6. Pursuant to the goal of self-reliance in cotton, we have taken up an intensive programme for expansion of long staple cotton varieties to cover about 2.50 lakh acres. The development



of the Kudumiamalai Agricultural Farm and the establishment of the Agricultural University at Coimbatore are important steps in the field of agricultural education and extension. As the House is aware, we have taken a number of steps to ensure that the small farmers and landless peasants are given adequate attention in the planning process. Small Farmers' Development Agencies and the Marginal Farmers' Development Agencies have started working in the districts of South Arcot, Madurai, Tirunelveli, North Arcot and Salem. Similarly, Dry Farming Projects have been started in Kovilpatti and Kudumiamalai.

7. It is well-known that rural electrification plays an important role in the modernisation of our countryside. Inspite of the paucity of financial resources and shortage of raw materials, we have increased the total number of villages electrified from 25,000 by the end of 1966–67 to 48,137 by the end of December 1971. If the present tempo of rural electrification continues we hope to be able to cover 58,800 villages and hamlets by the end of 1972-73. The number of pumpsets electrified in the State during the last year 1971 was 63,416. The total number of pumpsets electrified in the State would go up from 2.57 lakhs in 1966-67 to 5.74 lakhs by the end of 1971 and by the end of 1972, the total number of pumpsets electrified will be 6.34 lakhs.

8. This Government is aware of the importance of industrialisation of the State. The clearance of naptha as a feed-stock for the project for the manufacture of fertilisers at Tuticorin is an important milestone in our industrial development. The fertiliser project at Tuticorin will cost Rs. 71 crores and is expected to produce 352,000 tonnes of ammonia and 512,000 tonnes of urea. It will also sustain a Soda Ash-*cum*-Ammonium Chloride Project which is expected to cost roughly Rs. 10 crores. The project for Soda Ash will also be set up by Tamil Nadu Industrial Development Corporation and Southern Petro-Chemical Industries Corporation together. As the House is aware, a linked project which is coming up in Tuticorin is the heavy water project which was initiated with the help of the late Dr. Vikram Sarabhai, the Chairman of the Atomic Energy Commission. It is unfortunate, that a top scientist of the calibre and devotion of Dr. Vikram Sarabhai should have passed away when he was needed most. However, I am confident that this project for manufacture of heavy water will go on stream as scheduled and stand as a living monument to that great Scientist.

9. As a result of the earnest steps taken by this Government and with the assistance of Government of India and financial Institutions, an investment of nearly Rs. 100 and odd crores will take place in the Tuticorin area. We are also writing to the Government of India about the urgent necessity to set up an Industrial Refinery at Tuticorin so as to rid the country of defendence on imported naptha. Simultaneously, our request for the establishment of a massive petro-chemical complex at Manali continues to be validly reiterated. I hope that the Government

of India will take an immediate decision on this very important request. This project would enable the employment of a very large number of educated young emn and at the same time help to produce adequate quantities of plastics which would incidentally decrease to an extent our reliance on imports of non-ferrous metals.

10. In regard to the Salem Steel Plant, while the Consultants have submitted their report, I regret to say that action on this project continues to be rather slow. While I am aware that there is keen interest at the highest level in the Government of India in pushing through the project, I hope that this interest will be translated into expeditious action at all stages.

11. A number of letters of intent have been received as a result of the incessant efforts made by the Tamil Nadu Industrial Development Corporation during the last few months—thanks to the assistance of the Union Minister for Industrial Development The latest letter of intent which we have received is for production of 2,100 tonnes of nylon filament yarn. This is proposed to be set up in public sector. Other items covered by letters of intent are :—

B.C.T. powder, Borax and Boric Acid, Calcium Carbide Potassium Chlorate, Cigarettes, Steering gears and Cigarette tissue. These letters of intent altogether involve a total investment of more than Rs. 21.35 crores. Action has already been taken to establish these industries in the joint sector. As has been announced already, our policy in the field of industry is realistic and we wish to blend private initiative and Governmental control through the establishment of industries in the joint sector. We will consider most earnestly and sympathetically the approach of any entrepreneur inside the country with adequate managerial resources to participate in the expeditious establishment of new industries.

12. I am happy to say that the Southern Structurals Limited which had been revived under the Government management has today been put on a more sound footing and its order books have improved. The Textools Limited which the Government have taken over, has also revived. The Tamil Nadu Textile Corporation is doing well and expects to make a profit of Rs. 5.2 lakhs during 1971-72. In respect of six textile mills for which we had sought Government of India's concurrence to take over, we are still awaiting a positive response. The Small Industries Development Corporation which the Government had set up during the last year, is pursuing its policy of provision of scarce raw materials, technical consultancy and hire-purchase facilities for the purchase of machinery, besides construction of worksheds. The State Industries Promotional Corporation of Tamil Nadu has also commenced operations and will be the agency for routing incentives to industries, particularly in backward areas.



13. This Government attaches the highest importance to the maintenance of peaceful industrial relations. While I am happy to note that Tamil Nadu has had a record of industrial peace, in recent weeks there have been a few unpleasant developments. I hope and trust that the State will soon resume its steady path of peace and harmony in the industrial scene. In this context I wish to reiterate the views expressed by the Chief Minister regarding the imperative need to avert inter-union rivalry and to state that this Government believes in the policy of having one union for each industry. These unions should be led by persons chosen from amongst the workers themselves. Industrial disputes should be settled by mutual discussion and bargaining and not through confrontation and conflict.

14. During the year gone by, Government approached the problem of unemployment from a number of directions. One of the most important steps taken in this direction was the setting up of the Youth Corps. This move has been hailed both inside the country and outside as imaginative. Nearly 2,000 youth corps volunteers have been recruited and trained and from the first results that are coming to me, I am confident that they are proving valuable assets to the work of social development in the State. The scheme for giving a loan of Rs. 1,000 to those trained in the Industrial Training Institutes has also been put into operation. With a view to tackling the problem of the educated unemployed, Government propose to utilise the scheme of Government of India for enabling technical entrepreneurs to start new industries. A sum of Rs. 48 lakhs has been allocated this year out of which Rs. 20 lakhs will be set apart for enabling hire-purchase of indigenous machinery, Rs. 7½ lakhs for industrial estates, Rs. 5 lakhs for commercial estates, Rs. 3 lakhs for Technician's Co-operatives and Rs. 12.5 lakhs for providing Equity Capital for new industrial enterprises to be started by technically qualified persons. Besides, we have undertaken programmes for giving employment to the rural unskilled labourers through rural works projects. We have been able to secure clearance from the Government of India for an accelerated programme for rural works including the programme in chronically drought affected areas. In the current year alone, the total expenditure on these works will be Rs. 3.91 crores. Another important project which we have initiated is for the development of market complexes including roads in the districts of Thanjavur. Tiruchirappalli and South Aroct at a cost of Rs. 1.5 crores. During the current year, a sum of Rs. 50 lakhs will be spent on the development of roads and market complexes in these districts.

15. Government recognise that planned development creates stresses and strains in the metropolitan areas also. This is partly due to the rush of people from the villages to the city in search of employment. While our attempts continue in the shape of modernising the countryside so as to create opportunities for

employment outside the metropolitan areas, we have also to tackle the problem of slums within the city. The Slum Clearance Board which we had set up last year has so far spent Rs. 2.80 crores in building 7,000 tenements and is expected to incur an expenditure of Rs. 3.65 crores this year. We expect to expand its activities by generating its own resources and getting increased assistance from the Government of India. We also hope that the industrial units both in the Central and private sectors who employ large masses of people, will set apart adequate provision to assist the Slum Clearance Board.

16. We have also prepared a metropolitan development plan for the next twenty years, which takes into account the problem arising from the development of Madras City. The details of this plan have to be integrated with the perspective plan for the State under preparation. The broad strategy is to develop new nodes of urban growth and establish new towns around the city of Madras so as to alleviate the pressure on the city. Some of these details are under discussion with Government of India and we hope to initiate positive action on this plan expeditiously.

17. As the House is aware Government have extended a number of facilities to the Harijans and the Backward Classes. The amounts allocated by the State Government for Harijan Welfare has increased from Rs. 3.59 crores in 1966–67 to Rs. 5.32 crores in 1971-72 notwithstanding the fact that earmarked assistance from the Government of India for these schemes has been stopped with effect from 1969-70. The total provision of funds for the specific benefit of Backward Classes has also expanded from Rs. 0.91 crores in 1966–67 to Rs. 3.03 crores in 1971-72.

18. Due to various features of the national and international economic situation, the price situation has continued to cause anxiety. As mentioned in earlier addresses to this House, and as the House is aware this will depend on the decisions that are taken at the Central level. All that is feasible on our part is to keep the level of food production as high as possible and to ensure that when demand arises, there will be a system for controlled distribution of essential commodities which we can bring into action. Government have also taken a decision to establish a separate machinery under the Department of Civil Supplies to secure adequate quantities of foodgrains and other commodities and to establish buffer stocks so as to insulate the market to the extent possible from speculative influences. At the same time, I would like to reiterate, on behalf of this Government, the plea that timely decisions be taken by Government of India to import adequate quantity of industrial raw materials such as cotton and staple fibre, steel and drugs so that the price situation can be kept under control.



19. This Government believes that a co-ordinated price-wage-profit policy should be evolved in consultation with the States so that a realistic wage price structure can be produced. I would like to reiterate the view of this Government that the Centre should constantly keep in mind that its decisions on emoluments of employees have a direct impact on the emoluments of the State Government's servants. The financial resources of State Governments are under strain and do not have the same elasticity as those of the Centre.

20. The Administrative Reforms Commission and the State Planning Commission have commenced work. The Administrative Reforms Commission has set up a number of groups to examine the procedures of Government. The Planning Commission has set up a number of Task Forces to look into various aspects of the State's economy, and I am confident that the reports of these two bodies will play a vital role in modernising the administration of the State and meet their economic level of development. I am also happy to note that the establishment of the State Planning Commission has been welcomed by experts both inside and outside the Government, as also by the Government of India and that it has been held forth as a model for other States to follow. I am hopeful that it will now be possible to draw up plans also at district level, which will help us particularly to step up the income of the lower-income group and accelerate the pace of economic growth.

21. In earlier meetings, the Union Planning Commission and the State Government were not able to arrive at agreed decisions on the size of the Plan of the State. However, as a result of the discussions held by the Chief Minister with the Central Planning Commission and the Union Finance Minister in December 1971, it has been possible to arrive at certain agreed conclusions on the Plan for 1972-73. It is now expected that the agreed Plan of the State for the current year will be of the order of Rs. 115 crores and for 1972-73 it will be Rs. 117 crores.

22. You have been aware of the heavy financial burden arising from the repayment of debt to the Government of India. During the Five-Year Plan period, our total repayment to the Government of India comes to nearly Rs. 1,54.9 crores as against the anticipated loan from the Government of India of only Rs. 141 crores. This reverse flow of aid from the Centre to the State is one of the primary reasons for the financial stringency facing the State. Taking the year 1971–72 alone, our total repayment has come to a high figure of Rs. 43.03 crores on account of principal and Rs. 21.83 crores on account of interest. This has to be compared with the total Central assistance of Rs. 40.40 crores from the Government of India. The continuance of this imbalance in the flow of resources to the State has been high-lighted by the Chief Minister in his speech to the House while presenting the Interim Budget for 1971-72. I hope and trust that the Central Finance Ministry will set afoot an independent enquiry into the

problem of debt burden of the states so that the existing debts consolidated and that such part of debt as relates to financially unproductive but socially beneficial expenditure be written off as grants or converted into soft loans. This is only fit and proper because the benefits of these investments accrue not only to the State Government but also to the country as a whole.

23. In this short session, while you do not have a heavy agenda of legislation, you have the important Constitution (twenty-fifth Amendment) Bill, 1971 coming up for your approval.

24. Hon'ble Members are aware that we have to travel a long way before even the minimum requirements of the entire population can be met. It is only through the combined efforts of all of you that this difficult task can be fulfilled. This House has always upheld the highest norms of democracy and set an example of a disciplined and informed democracy. I am beholden to all of you for your continued co-operation and generous understanding. I have no doubt that you will rededicate yourselves to the task of reconstruction with the same fervour for values and welfare of our people and view with one another in upholding the noble traditions of this House. May I convey my best wishes for the success of your efforts?

## இணைப்பு 2.

### ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்.

[28-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். உங்கள் அனைவரையும் கூட்டவையில் ஒருசேரக் காணும் வாய்ப்பு இப்போதுதான் எனக்கு முதன் முதலாகக் கிடைத்துள்ளது. நான் உங்களை உளமார வரவேற்பதுடன், தமிழ்நாட்டு மக்களுக்குப் பணி புரிவதில் உங்களுக்கு உறுதுணையாய் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

2. ஜனநாயக-சமதர்மக் கோட்பாடுகளுக்காகப் போரிட்டு, அவற்றைக் கட்டிக் காத்தது குறித்து நமது நாடு நியாயமாகப் பெருமைப்படக்கூடிய பொன்னான நேரத்தில் நாம் இங்கு கூடியுள்ளோம். நமது முப்படையினர், போரிலே காட்டிய வியத்தகு வீரம், கடமை பற்றுறுதி, தியாக மனப்பான்மை ஆகியவை அடுத்து வரும் பல தலைமுறையினரை ஊக்குவிக்கும் பெற்றியின. நமது எதிரியிடம் சிறந்த படைக்கலன்கள் இருந்தபோதிலும், எதிரி நயவஞ்சகமாகத் திடீர்த் தாக்குதலை நடத்திய போதிலும், வரன்முறையற்ற விரோதிக்குப் பணபலமும் படைபலமும் மிக்க நாடுகள் சில, உள்ள நிலைமைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் உதவி செய்த போதிலும், மாற்றானின் படுமோசமான நோக்கம் நிறைவேறவில்லை; எண்ணம் ஈடேறவில்லை. ஜனநாயகக் கொள்கையைக் கட்டிக் காப்போம் என்று நாம் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளோம். நமது முப்படையினரின் வீரதீரத்தாலும் நமது பிரதம மந்திரி அவர்களின் ஒப்புவமையற்ற, பதட்டமடையாத தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது. இதையே இரவீந்திரநாத் டாகூர் அவர்களின் சொற்களில் சொல்வதானால் "இழிக்கப்பட்ட இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் தங்களை தன்மானத்தை நிலை நாட்டியுள்ளது மட்டுமின்றி, தங்கள் நாணயத்தைக் காப்பாற்றி ஜனநாயக அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளனர்" எனக் கூறிக் கொள்வதில் நாம் பெருமைப் படலாம். நமது குறிக்கோள் பிறநாட்டு நிலப்பரப்பு எதனையும் நமக்கெனப் பிடித்துக் கொள்வதல்ல; பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்திலும், குறிப்பாக வங்காள தேசத்திலும் அமைதியும் ஜனநாயகமும் நீடூழி நிலைத்து நிற்க வேண்டும் என்பதே நமது குறிக்கோளாகும் என்பதை உலகம் முழுவதற்கும் மெய்பித்து விட்டோம். நாம் எல்லோரும் பெருமைப்படக் கூடிய இந்த நேரத்தில், இந்திய நாடு வாழ இன்னுயிர் ஈந்த படையினர் பலருக்கும் என் சார்பிலும் உங்கள் அனைவரின் சார்பிலும் நினைவஞ்சலி செலுத்துகிறேன். இத்தகைய படையினரின் குடும்பத்தினரும் அவர்களை நம்பியுள்ளோரும் நமது குடும்பத்தினராகக் கருதப்படவேண்டும். அவர்களுக்கு எல்லாவகையிலும் உதவியளிக்கத் தமிழ் நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதெனக் கூறிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



3. கடந்த ஆண்டில் பாகிஸ்தான் படை ஆட்சியினர் நடத்திய இனக் கொலை காரணமாக இலட்சக் கணக்கான குடும்பத்தினர் இந்தியாவில் புகலடைய வேண்டி வந்தது. இலட்சக் கணக்கான மக்கள் அவதியால் அல்லலுற்று ஓடி வந்தபோது அஞ்சேல் என அவர்களுக்குத் தஞ்சமளித்துக் காப்பாற்றுவதற்கு இந்த நாடு முழுவதும் ஓரணியாகத் திரண்டு நின்றது. அதே நேரத்தில் அந்த மக்களின் ஆற்றொணாத் துயருக்கு உலக நாடுகள் வாய்ப் பேச்சளவில் கவலைப்பட்டனவேயன்றி செயலளவில் உருவான எதையும் செய்யவில்லை என்பதைக் கண்டு நாம் வருந்துகிறோம். மேற்குப் பாகிஸ்தானிய கொடுங்கோல் படை ஆட்சியினர் தொடர்ந்து நம்மைப் பயமுறுத்தி வந்தாலும், படையெடுப்பதற்கான முன்னோடி வேலைகளைச் செய்து வந்தாலும், எந்த நிலைமைக்கும் தயாராக இருக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது. இந்திய மக்கள் அனைவரும் மனமார்ந்து ஒத்துழைப்பு நல்கியிரா விட்டால், நமக்கு ஏற்பட்ட சுமையினைத் தாங்க, ஆதாரங்கள் அனைத்தையும் திரட்ட முடியாமற் போயிருக்கும். உள்ள நிலைமைகளுக்கு மதிப்பளித்து அதற்கேற்ப நடந்து கொள்ளும்படி மேற்குப் பாகிஸ்தானிய கொடுங்கோல் படை ஆட்சியினருக்கு அறிவுறுத்துவதற்குப் பதிலாக, பலம் பொருந்திய சில நாடுகள் மேற்குப் பாகிஸ்தானிய படை ஆட்சியினரின் பைத்தியக்காரத்தனமான இந்தச் சூதாட்டத்திற்குத் தூபம் போட்டு வந்தன. இதன் விளைவாக, பாகிஸ்தானியர் இந்தியா மீது வெளிப்படையாகப் படையெடுத்தனர். இவர்கள் விரைவிலேயே நியாயமற்ற தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு வங்காள தேசம் உதயமாகி விட்ட உண்மையை ஒப்புக் கொள்வர் என நான் நம்புகிறேன். அதே நேரத்தில், நெருக்கடி நிறைந்த காலத்தில் நமக்கு ஆதரவாக இருந்த நாடுகளுக்கு, முக்கியமாக சோவியத் யூனியனுக்கு, நாம் நன்றி உள்ளவர்களாக இருப்போம் என நான் அறிவிக்கும்போது, உங்கள் அனைவருடைய கருத்தையும் அப்படியே எதிரொலிப்பதாக எண்ணுகிறேன்.

4. நம் நாட்டின் மீது மாற்றான் படையெடுத்து வந்தபோது, மக்களனைவரும் என்றும் காணாத வகையில் ஒற்றுமையுடன் ஓரணியாகத் திரண்டிருந்தது, வரலாற்றின் போக்கையே மாற்றியுள்ளது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாட்டு வளத்தைப் பெருக்குவதிலும் இதே ஒற்றுமை பெரும்பங்கு வகிக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அமைதி காலப் பிரச்சினைகள் மேலும் முக்கியமானவை. இதே ஒற்றுமை உணர்வுடன் நாம் இப்பிரச்சினைகளை விரைந்து தீர்த்தாக வேண்டும். வறுமையின் மீது நாம் தொடுக்கும் இந்தப் போரில், இந்த அரசும் இந்திய அரசும் அதே ஈடுபாட்டுடனும், செயல்பொறுப்பு உறுதியுடனும் செயல்படும் என நான் உறுதியாகக் கருதுகிறேன். இந்த அரசின் நோக்கமே ஏழை எளியவரான பாமர மக்களின் விருப்பம் எல்லாம் நிறைவேற வேண்டும் என்பதுதான். பொதுமக்களின் விருப்பங்களைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக இருக்கவே இந்த அரசு விரும்புகிறது. பொதுவாகப் பாமர மக்களின், குறிப்பாக இன்னலுறும் ஏழை எளியவரின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு, அவல வாழ்வு ஆனந்த வாழ்வு ஆவதற்குத் தன்னால் ஆனதையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

5. கடந்து முடிந்த ஆண்டில், இம்மாநிலம் வேளாண்மைத் துறையில் பொதுவாக நல்ல வளர்ச்சியைக் கண்டது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகியவற்றின் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, தென் மேற்குப் பருவமழைக் காலத்தில் மொத்தத்தில் இயல்பான அளவுக்கு மழை பெய்தது. வடகிழக்கு பருவமழைக் காலத்தில், பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலுமே போதுமான அளவுக்கு மழை பெய்யவில்லை. எனினும், உரிய காலத்திற்கு முன்பே மழை பெய்தாலும் சில மாவட்டங்களில் பின்னர் பெய்த மழை பரவலாக இருந்ததாலும், குறிப்பாக நமது புன்செய் நிலப் பகுதிகள் பயனுற்றன. நமது உணவு தானிய உற்பத்தி 73 லட்சம் டன் என்ற குறிக்கோள் அளவை எய்தும் என்று நாம் மதிப்பிட்டுள்ளோம். அதாவது, சென்ற ஆண்டு உணவு தானிய உற்பத்தி அளவாக 70.3 லட்சம் டன்னைவிட 3.84 சத விதம் உயர்ந்திருக்கும் என நாம் மதிப்பிட்டுள்ளோம். 1968-69-ல் 50.6 லட்சம் விளைந்ததை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உற்பத்தி இப்போது எந்த அளவு உயர்ந்துள்ளது என்பது தெரியவரும். உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், தர விதைகள் போன்ற வேளாண்மைக்குத் தேவையான பொருள்களை வழங்குவது குறித்துக் கடன் வசதிகளைப் பெருக்குவது பற்றியும் நீரை மேலும் சிக்கன முறையில் பயன்படுத்துவது பற்றியும் தொடர்ந்து தீவிரமாக வலியுறுத்தி வந்ததன் விளைவே இது என்று நான் எடுத்துக் கூறவும் வேண்டுமா? 1970-71-ல் மிகு பயன் தரும் நெல்வகையின்கீழ் ஏறத் தாழ 44.93 லட்சம் ஏக்கர் கொண்டுவரப்பட்டது. இப்பரப்பளவு, நெல் பயிரிடப்படும் பரப்பளவில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதியைக் குறிக்கிறது. நெற் பயிர் விளைவிக்கப்படும் 50 லட்சம் ஏக்கரில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது 1971-72-ல் நமது குறிக்கோள் அளவாகும். பல்பயிர் திட்டம் குறித்தும் நாம் அதிக அளவில் வலியுறுத்தி வந்துள்ளோம். 1967-68-ல் 2.15 லட்சம் ஏக்கர் என்ற அளவிலிருந்து 1970-71-ல் 12.99 லட்சம் என்ற அளவிற்கு இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. நடப்பாண்டில், உரத் தேவை பெரிதும் உயர்ந்தது. இன்னும் சொல்லப்போனால், பயன்படுத்திய உரத்தின் மொத்த அளவு 1.72 லட்சம்





டன் நைட்ரஜன், 0.72 லட்சம் டன் பால்பால், 0.51 லட்சம் டன் பொட்டாசியம் என்ற அளவிற்கு உயர்ந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதை மேம்படுத்தி குறுகிய காலக் கடன் வசதிகளையும், நீண்ட காலக் கடன் வசதிகளையும் பெருக்கவும் நாம் முயன்றுள்ளோம். குறுகிய காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966-67-ல் ரூ. 31.4 கோடி என்றிருந்த அளவை 1971-72-ல் ரூ. 55.00 கோடியாக உயர்த்தியுள்ளோம். நீண்ட காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966-67-ல் ரூ. 2.73 கோடி என்று இருந்த அளவை 1971-72-ல் ரூ. 21.00 கோடியாக உயர்த்தி உள்ளோம். கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் அளிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6. பருத்தி விளைச்சல் தன்னிறைவு பெறும் குறிக்கோளையொட்டி, 2.50 லட்சம் ஏக்கரில் நீண்ட இழை பருத்தி வகைகளைப் பயிரிடுவதற்கான மும்முரத் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். குடுமியாமலை வேளாண்மைப் பண்ணையை மேம்படுத்தியதும், கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை நிறுவியதும், வேளாண்மைக் கல்வி வளர்ச்சி தொடர்பாக நாம் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளாகும். சிறு குடியானவர்களையும், நிலமற்ற உழவர்களையும் பொறுத்தவரையில், திட்டப் பணிகளின் மூலம் பயன்பெறச் செய்வதற்காக, நாம் [illegible]டிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதை அவையினர் அறிவர். தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, வட ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் சிறு நிலக் கிழார்கள் வளர்ச்சி அமைப்புகளும் ( Small Farmers' Development Agencies ) ஆதாயமில்லாத சிறு நிலக் கிழார்கள் வளர்ச்சி அமைப்புகளும் ( Marginal Farmers' Development Agencies ) செயல்படத் தொடங்கியுள்ளன. அதைப்போலவே கோவில்பட்டியிலும், குடுமியா மலையிலும் புன்செய் பயிர்த் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

61540

7. நமது நாட்டுப்புறப் பகுதிகளில் தற்கால வசதிகளைச் செய்து [illegible]ப்பதில் கிராம மின் வசதித் திட்டம் முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவர். நிதிப் பற்றுக்குறையும், மூலப்பொருள் தட்டுப்பாடும் நிலவியபோதும், மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்களில் மொத்த எண்ணிக்கையை நாம் உயர்த்தியுள்ளோம். அதாவது, 1966-67 முடிவில் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 25,000 ஆக இருந்ததை 1971 டிசம்பர் முடிவில் 48,137 ஆக உயர்த்தியுள்ளோம். கிராம மின் வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் தற்போதைய வேகம் தொடர்ந்து பின்பற்றப்பட்டால், 1972-73 முடிவிற்குள் 58,800 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்படும் என்று நாம் நம்புகிறோம். 1971-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 63,416 ஆகும். இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை, 1966-67-ல் 2.57 லட்சமாக இருந்தது, 1971 முடிவில் 5.74 லட்சமாக உயரும். 1972 முடிவிற்குள் அந்த எண்ணிக்கை 6.34 லட்சமாகிவிடும்.

8. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பெருகுவதன் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தூத்துக்குடியில் உரத் தயாரிப்புத் திட்டத்திற்கென நாப்தாவை மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம் என்று

அனுமதித்திருப்பது, நமது தொழில் வளர்ச்சியில் முக்கியமானதொரு மைல் கல்லாகும். தூத்துக்குடி உரத் திட்டத்திற்கு ரூ. 71 கோடி செலவாகும். 3,52,000 மெட்ரிக் டன் அம்மோனியாவையும் 5,12,000 மெட்ரிக் டன் யூரியா உரத்தையும் அது உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சோடா-ஆஷ்-அம்மோனியம் குளோரைடு திட்டமும் இதனால் உருவாகும். இத் திட்டத்திற்குத் தோராயமாக ரூ. 10 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சதர்ன் பெட்ரோ-கெமிகல் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் இவற்றின் மூலம் இத் தொழிற்சாலை நிறுவப் படும். தூத்துக்குடியில் நிறைவேற்றப்பட்டு வரும் மற்றொரு திட்டம் கனநீர் திட்டமாகும் என்பதை அவையினர் அறிவர். அத் திட்டம் அணுசக்தி ஆணைக் குழுவின் தலைவராயிருந்த காலஞ்சென்ற டாக்டர் விக்ரம் சாராபாய் அவர் களால் தொடங்கப்பட்டது. சிறந்த விஞ்ஞான அறிவாற்றலும், வேலையில் ஈடுபாடும் கொண்ட டாக்டர் விக்ரம் சாராபாய் அவர்களின் பணி நமக்கு மிகவும் தேவைப்படும் இத் தருணத்தில், அவர் திடீரென மறைந்தது உண்மை யிலேயே நமக்குப் பேரிழப்பாகும்.

9. இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, இந்திய அரசின் உதவியுடனும், நிதி உதவும் நிறுவனங்களின் உதவியுடனும், தூத்துக் குடிப் பகுதியில் ரூ. 100 கோடிக்குமேல் முதலீடு செய்யப்படும். இறக்குமதி யாகும் நாப்தாவை நமது நாடு நம்பியிருப்பதை அறவே தவிர்ப்பதற்கென, தூத்துக்குடியில் தொழில் பொருள்கள் தூய்மைத் தொழிற்சாலை ( Industrial Refinery )உடனடியாக நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்தும் நாம் இந்திய அரசுக்கு எழுதியுள்ளோம். அதே சமயத்தில், மணலியில் பெருமளவிலான பெட்ரோ-கெமிகல் தொழில் தொகுதி ஒன்றை நிறுவுமாறும் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். மிகவும் முக்கியமான இந்த வேண்டு கோளின்மீது இந்திய அரசு உடனடியாக முடிவு எடுக்கும் என்று நம்புகிறேன். இத்திட்டத்தினால் படித்த இளைஞர் பல்லோருக்கு வேலைவாய்ப்பு கிடைப்ப தோடு, போதிய அளவு பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியும் பெருகும். மேலும், இரும்பற்ற பிற உலோகங்களின் இறக்குமதியை நம்பியிருக்கும் நிலையை இது ஓரளவு மட்டுப்படுத்தவும் செய்யும்.

10. சேலம் உருக்காலையைப் பொறுத்த மட்டில், திட்ட ஆலோசகர்கள் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர் என்றாலும், இத் திட்டம் பற்றிய நடவடிக்கை தொடர்ந்து மெத்தனமாகவே உள்ளது என்பதை வருத்தத் துடன் கூறுகிறேன். இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்திய அரசு உயர் மட்டத்தில் மிகுந்த அக்கறை உள்ளதென்பது எனக்குத் தெரியும். எல்லா கட்டங்களிலும் விரைவான நடவடிக்கைகள் எடுப்பதன் வாயிலாக இந்த அக்கறை செயல்வடிவம் பெறும் என்று நம்புகிறேன்.

11. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இடையறாத முயற்சியினால் கடந்த சில மாதங்களாக அனுமதிக்கடிதங்கள் (Letters of intent) பல வந்தவண்ணமுள்ளன. இவ் வகையில் தொழில் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் செய்த உதவிக்கும் பெரிதும் நன்றியுடையோம். நமக்கு அண்மையில் கிடைத்த அனுமதிக்கடிதம் — 2,100 டன் நைலான் நூலிழை



உற்பத்தி பற்றியதாகும். இதனை அரசுத் துறையின் கீழ் அமைக்க எண்ணி யுள்ளோம். அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பெற்ற பிற இனங்கள் பின் வருமாறு :—

B.C.T. பொடி, போராக்ஸ், போரிக் ஆஸிட், கால்சியம் கார்பைடு, பொட்டாஷியம் க்ளோரேட், சிகரெட்டுகள், சிகரெட் வைக்கப்படும் மென்தாள். மொத்தமாக இந்த அனுமதிக்கடிதங்கள் குறித்த மொத்த முதலீடு ரூ. 21.35 கோடியாகும். கூட்டுத் துறையில் இவற்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே நாம் அறிவித்துள்ளபடி தொழில் துறையில் நமது கொள்கை நடைமுறைக்கேற்றதும் பயன் நாட்டமுடையதும் ஆகும். கூட்டுத் துறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதன் , வாயிலாக, தனியார் முயற்சியும் அரசு நிருவாகக் கண்காணிப்பும் நயம்பட இணைந்திருப் பதையே நாம் நனி விரும்புகிறோம். புதிய தொழில்களை விரைவாக ஏற்படுத்த, போதிய நிர்வாக, பிறவசதிகள் படைத்த நம் நாட்டின் தொழில் முனைவர் எவர் முன்வந்தாலும் அவரது முயற்சியைக் கருத்துடனும் கனிவுடனும் நாம் வரவேற்போம்.

12. அரசு நிர்வாகத்தின்கீழ் மீண்டும் தொடங்கப்பட்டுள்ள "லதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட்", இப்போது முன்னைவிட செவ்வையாக நடைபெறு கிறது என்பதையும் இந்த நிறுவனத்திடமிருந்து மற்றவர் கோரும் இயந்திர தேவைப்பட்டியல்கள் பெருகி வருகின்றன என்பதையும் எடுத்தியம்புவதில் நான் இறும்பூது எய்துகிறேன். அரசு மேற்கொண்ட டெக்ஸ்டூல்ஸ் லிமிடெட் நிறுவனமும் மீண்டும் நல்ல வகையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் திறம்பட நடைபெறுகிறது. இதற்கு 1971-72-ல் ரூ. 5.2 லட்சம் ஆதாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பஞ்சாலைகளை எடுத்து நடத்துவதற்கு இந்திய அரசிடம் இசைவு கோரியுள்ள ஆறு பஞ்சாலைகளைப் பொறுத்த மட்டில், அவர்களிடமிருந்து இசைவு இன்னும் நமக்கு வரவில்லை. கடந்த ஆண்டில் அரசு ஏற்படுத்திய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தவணைக் கொள்முதல் வசதிகள் அளிப்பதுடன், இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கு மூலப்பொருள்கள் வழங்குவதையும், தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதையும் கொள்கையாகப் பின்பற்றி வருகிறது. தமிழ் நாடு அரசினர் தொழிலாக்க முயற்சிக் கழகமும் ( SIPCOT ) பணியாற்றத் தொடங்கியுள்ளது.

பிணக்குகளைத் தொழிலதிபர்களும், தொழிற்சங்கங்களும் ஒருவருக்கொருவர் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி, சண்டை சச்சரவு மூலம் தீர்த்துக் கொள்வது சரியான முறையாகாது.

14. கடந்து முடிந்த ஆண்டில், வேலையில்லாப் பிரச்சினையை அரசு பல கோணங்களில் அணுகிப் பார்த்தது. இதில் மிகவும் முக்கியமானதாகக் கருதப் படுவது இளைஞர் அணி அமைக்கப்பட்டதாகும். இந்தச் செயல் திட்டம், நமது இனைச் செயல் வளத்துக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக, உள்நாட்டில் மட்டு மன்றி வெளிநாட்டிலும் பல்லோராலும் போற்றி வரவேற்கப்பட்டுள்ளது. இளைஞர் அணியில் ஏறத்தாழ 2,000 தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு நன்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். எனக்கு முதன் முதலாக வந்து கொண்டிருக்கும் தகவல்களிலிருந்து, மாநிலத்தின் சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பணி ஆற்ற வல்லவர்கள் என இவர்கள் மெய்ப்பித்து வருகின்றனர் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது. தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றோருக்கு ரூ. 1,000 தொழில் கடனுதவி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. படித்தவர்களிடையே நிலவிவரும் வேலையின்மையைப் போக்கும் பொருட்டு, தொழில் முனைவோர்கள் புதிய தொழில்களைத் தொடங்க, இந்திய அரசின் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் இவ்வரசு கருதுகிறது. இதற்கென ரூ. 48 லட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. இதில் ரூ. 20 லட்சம் உள்நாட்டு இயந்திரங்கள் தவணைக் கொள்முதலுக்காக ஒதுக்கப்படும். தொழில் பேட்டைகளுக்காக ரூ. 7½ லட்சம், வணிகப் பேட்டைகளுக்காக ரூ. 5 லட்சம், தொழில் நுட்ப வல்லுநர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்காக ரூ. 3 லட்சம், தொழில் நுட்பத் தகுதி பெற்றவர் களால் தொடங்கப்படும் புதிய தொழில் முயற்சிகளுக்கு நமது பங்கு மூலதன மாக ரூ. 12.5 லட்சம் ஒதுக்கப்படும். மாநிலமெங்கும் கிராமப் பணித் திட்டங்கள் மூலமாக, பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் நாம் திட்டங்கள் மேற்கொண்டுள்ளோம். வறட்சியால் வாடும் பகுதிகளுக்கென திட்டத்தைச் செயல்படுத்துவது உட்பட, கிராமப் பணிகளுக் கான விரைவுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் இந்திய அரசிடமிருந்து நாம் அனுமதி பெற்றுள்ளோம். நடப்பாண்டில் மட்டும், இப் பணிகள் குறித்த மொத்தச் செலவு ரூ. 3.91 கோடியாகும். நாம் தொடங்கியுள்ள மற்றொரு முக்கியமான திட்டம், ரூ. 1.5 கோடி செலவில் தஞ்சாவூர், திருச்சி, தென் ஆர்காடு மாவட்டங்களில் சாலைகள் மேம்பாடு உட்பட அங்காடிகள் அமைப்பு ஏற்படுத்துவது பற்றியதாகும். இம் மாவட்டங்களில் சாலைகள் பற்சிக்கும், அங்காடி அமைப்புக்கும் நடப்பாண்டில் ரூ. 50 லட்சம் செலவு டபடும்.

உயர் மட

கட்டங்கப்மிட்ட வளர்ச்சி, பெருநகர்ப் பகுதிகளிலும் பல வகையான அக்கறை டு ஏற்படுத்துகிறது என்பதை அரசு அறியும். வேலைவாய்ப்புத் தேடி ந்து மாநகரை நாடி மக்கள் ஓடிவருவதும் ஓரளவு இதற்குக்

11. தமிழ் பெருநகர்ப் பகுதிகளுக்கு வெளியே வேலைவாய்ப்பு கடந்த சில மாக்கும் வகையில், நாட்டுப்புறத்தைப் புதுமைப்படுத்துவதில் வந்தவண்ணமுயற்சிகள் மேற்கொண்டு வருகையில், மாநகருக்குள் வாழ் பகுதிகள் பிரச்சினையையும் நாம் தீர்க்க வேண்டி அமைச்சர் செண்டில் நாம் ஏற்படுத்திய குடிசை மாற்று வாரியம் 7,000 அண்மையில் கின்டிக் கொடுப்பதில் இதுவரை ரூ. 2.80 கோடி செலவு





செய்துள்ளது ; இவ்வாண்டில் ரூ. 3.65 கோடி செலவு செய்யுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. வருவாய் வாயில்களைப் பெருக்கியும், இந்திய அரசிட மிருந்து கூடுதல் உதவி பெற்றும் இவ்வாரியத்தின் நடவடிக்கைகளை விரிவு படுத்தக் கருதியுள்ளோம். மத்தியத் துறையிலும் தனியார் துறையிலும் பெருவாரியாக மக்களை வேலைக்கமர்த்திக் கொண்டுள்ள தொழில்கள் தங்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குடிசை மாற்று வாரியம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இயலும் வகையில் போதிய நிதி வசதியை அளிக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

16. அடுத்து இருபது ஆண்டுகளில் சென்னை மாநகரில் ஏற்படக்கூடிய வளர்ச்சியையும் அவ்வளர்ச்சி காரணமாக உருவாகக்கூடிய பிரச்சினைகளையும் கருத்தில்கொண்டு, பெருநகர் வளர்ச்சித் திட்டம் ஒன்றை நாம் வகுத்துள்ளோம். தயாரிக்கப்பட்டு வரும் மாநில நீண்ட காலத் திட்டத்துடன் இத் திட்டத்தின் விவரங்களை ஒருங்கிணைக்க வேண்டும். மாநகரத்தின் இடநெரிசலைத் தணிக்கும் வகையில் சென்னை மாநகரைச் சுற்றிலும் புதிய நகரங்களைத் தோற்றுவித்து, நகர வளர்ச்சிக்கான புதிய வழிமுறைகளை வகுப்பதே இச் சிக்கலுக்குத் தீர்வுகாண நாம் மேற்கொள்ளக் கருதியுள்ள செயல்முறைத் திட்டமாகும். இநத விவரங்களில் சில, இந்திய அரசுடன் விவாதிக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டம் குறித்து உருவான நடவடிக்கை விரைவிலேயே தொடங்க இயலும் என நாம் திண்ணமாக நம்புகிறோம்.

17. அரிசனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் பல வசதிகளை அரசு அளித்துள்ளது என்பதை இந்த அவை அறியும். அரிசன நலனுக்கான நிதி ஒதுக்கம் பெருகியுள்ளது. இத் திட்டங்களுக்கென்றே இந்திய அரசு தனிப்பட அளித்து வந்துள்ள உதவி 1969-70-லிருந்து நிறுத்தப்பட்டு விட்டபோதிலும் 1966-67-ல் அரிசன நலனுக்கான மாநில அரசின் நிதி ஒதுக்கம் ரூ. 3.59 கோடியாக இருக்க, 1971-72-ல் இந் நிதி ஒதுக்கம் ரூ. 5.32 கோடியாகப் பெருகி யுள்ளது பெருமிதத்திற்குரியதாகும். பின்தங்கிய வகுப்பினர்களுக்காக மட்டும் 1966-67-ல் மொத்தம் 0.91 கோடி ஒதுக்கியிருக்க, 1971-72-ல் அது ரூ. 3.03 கோடியாக உயர்ந்துள்ளது உவகைக்குரியது.

18. தேசிய நிலையிலும், அனைத்து நாடுகள் நிலையிலும், பொருளாதார அமைப்பில் இருந்து வருகிற பல காரணங்களால் விலைவாசி விவரம் கவலை தருவதாகவே இருந்து வருகிறது. மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை யொட்டியே விலைவாசி விவரம் அமையும் என்பது முன்னர் நிகழ்த்தப்பட்ட உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை இந்த அவையும் நன்கு அறியும். இந்த நிலையில் நாம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்றுதான். உற்பத்தியை இயன்ற அளவு பெருக்குவோம் ; அவசியம் ஏற்படின், இன்றி யமையாப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தும் நடை முறையைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாட்டினை எப்பொழுதும் தயாராக வைத்திருப்போம். வணிகச் சூதாடிகளின் சூழ்ச்சியினால் விலை ஏறி மக்கள் அவதியுறாமல் காப்புடன் இருக்கும் வண்ணம், முடையிருப்புகளை ஏற்படுத்தவும் உணவு தானியங்களும் பிற பொருள்களும் போதிய அளவில் கிடைக்கவும் வகை செய்யும் பொருட்டு, உணவுப்பொருள் வழங்கல் துறையின் கீழ் தனிப்பட்ட அமைப்பொன்றை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. அதே நேரத்தில் விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தி நிலைப்படுத்த, பரு

நெட்டிழைப் பருத்தி, உருக்கு, மருந்துப் பொருள்கள் போன்ற தொழிலியல் மூலப்பொருள்களைப் போதிய அளவில் இறக்குமதி செய்ய இந்திய அரசு உரிய காலத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தை நான், இந்த அரசின் சார்பாக வலியுறுத்த விழைகிறேன்.

19. நடைமுறைக்குகந்த ஊதிய-விலை அமைப்பு உருவாக்கப்படுவதற்காக, மாநிலங்களுடன் கலந்து, ஒருங்கிணைந்த விலை-ஊதிய-ஆதாயக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு நம்புகிறது. மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தும் வகையில் எடுக்கப்படும் முடிவுகள் மாநில அரசு ஊழியர்களின் ஊதியத்தை நேரடியாகப் பாதிக்கின்றன என்பதை மத்திய அரசு எப்பொழுதும் நாட்டத்தில் இருத்திக் கொள்ள வேண்டும் என்ற இந்த அரசின் கருத்தை இத் தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மாநில அரசின் நிதிநிலை பெருஞ்சுமைக்குள்ளாகியுள்ளது. மத்திய அரசின் நிதிநிலையைப் போல மாநில அரசின் நிதிநிலை நெகிழ்ச்சித் தன்மை பெற்றதல்ல.

20. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவும் மாநிலத் திட்ட ஆணைக் குழுவும், தங்கள் பணியைத் தொடங்கியுள்ளன. நிர்வாக ஆணைக்குழு, அரசு நடைமுறைகளைப் பரிசீலிக்க குழுக்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது. திட்ட ஆணைக் குழு, மாநிலப் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளை ஆய்ந்தறிவதற்காக பணிக் குழுக்கள் (Task forces) பலவற்றை ஏற்படுத்தியுள்ளது. இம் மாநிலத்தின் நிர்வாகத்தை காலத்திற்கேற்ற வகையில் சீரமைத்து, பொருளாதார வளம் காண இந்த இரு ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் பெரிதும் உதவும் என நான் திண்ணமாக நம்புகிறேன். மாநிலத் திட்ட ஆணைக் குழு உதயமாகியுள்ளதை, அரசு அமைப்பினுள்ளும் வெளியேயும் உள்ள வல்லுநர்களும் இந்திய அரசும் மனமுவந்து வரவேற்றுள்ளனர் என்பதும் பிற மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியாகப் பாராட்டப்பட்டுள்ளது என்பதும் எனக்குப் பேருவகை அளிக்கின்றது. மாவட்ட நிலையிலும் திட்டங்கள் தீட்ட இயலும் என நான் நம்புகிறேன். குறிப்பாக, குறைந்த வருவாய்த் தொகுதியினரின் வருவாயைப் பெருக்குவதற்கும் பொருளாதார வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்துவதற்கும் இது உதவியாக அமையும்.

21. இந்த மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டம் என்ன அளவினதாக இருக்க வேண்டும் என்பது குறித்து முந்தைய கூட்டங்களில், மத்தியத் திட்ட ஆணைக் குழுவும் இம் மாநில அரசும் உடன்பாடான முடிவுகளை மேற்கொள்ள இயலவில்லை. எனினும், மத்தியத் திட்ட ஆணைக் குழுவுடனும் இந்திய நிதி அமைச்சருடனும் டிசம்பர் 1971-ல் முதலமைச்சர் கலந்து பேசியதன் விளைவாக, இம் மாநிலத்தின் 1972-73 ஆண்டுத் திட்டம் குறித்து உடன்பாடான சில முடிவுகளை மேற்கொள்ள முடிந்தது. நடப்பு ஆண்டுக்கு இம் மாநிலத்தின் உடன்பாடான திட்டத்தின் அளவு ரூ. 115 கோடியாக இருக்குமென்றும் 1972-73 ஆண்டுத் திட்டம் ரூ. 117 கோடி அளவு இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

22. இந்திய அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் இம் மாநில அரசுக்கு இருந்துவரும் பெருத்த நிதிச் சுமையினை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஐந்தாண்டுக் கால அளவில் இந்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை ரூ. 154.9 கோடியாகும். ஆனால், இக் கால



அளவில் இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கிற தொகை ரூ. 141 கோடிதான். இவ்வாறு நாம் பெறுகின்ற தொகையைவிடத் திருப்பிக் கொடுக்கும் தொகை அதிகமாயிருப்பதே இம் மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள நிதி நெருக்கடிக்குத் தலையான காரணங்களில் ஒன்றாகும். 1971-72-ஆம் ஆண்டினை மட்டும் எடுத்துக் கொண்டால், அசல் கணக்கில் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை ரூ. 43.03 கோடியாகும். வட்டிக் கணக்கில் கொடுக்க வேண்டிய தொகை ரூ. 21.83 கோடியாகும். இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் மத்திய உதவித் தொகை ரூ. 40.40 கோடியுடன் இதனை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நமக்குக் கிடைக்கும் உதவித் தொகையைவிட நாம் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாயிருக்கிற இச் சீர்கேடான போக்கினை, முதலமைச்சர் 1971-72 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினைச் சட்ட மன்றத்தின் முன் வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். மாநிலங்களின் கடன்சுமை ஒருங்கு தொகுக்கப்படுவதற்கும், நிதி வகையில் ஆதாயம் அளிக்காத ஆனால் சமூக நீதி அடிப்படையில் செய்ய வேண்டிய செலவுக்காக வாங்கிய கடன் தொகையை மானியமாகக் கருதி கணக்கிலிருந்து கழித்து விடுவதற்காகவும் அல்லது திருப்பிக் கொடுப்பதற்கு எளிதான கடன்களாக்குவதற்காகவும், அக் கடன் சுமை குறித்து தனி விசாரணை ஒன்றை மேற்கொள்ள மத்திய நிதி அமைச்சு ஆவன செய்யும் என்று நான் நம்புகிறேன். இந்த முதலீடுகளின் பலன்கள் மாநில அரசுகளுக்குமட்டுமன்றி நாடு முழுவதற்குமே கிடைப்பதால், இவ்வாறு செய்வது தகவும் பொருத்தமும் உடையதாகும்.

23. குறுகிய இக் கூட்டத் தொடரில், சட்டமியற்றும் பணி பெருமளவில் இல்லையென்றாலும், முக்கியமான அரசியலமைப்பு (இருபத்தைந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றத்தின் ஏற்புக்கு வரும்

24. நமது மக்கள் அனைவரின் குறைந்த அளவுத் தேவைகளையேனும் நிறைவு செய்வதற்காக, நமது முன்னேற்றப் பாதையில் நாம் நெடுந்தொலைவு சென்றாக வேண்டும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவரும் அறிவர். உங்கள் அனைவருடைய கூட்டு முயற்சி மூலமாகவே, இக் கடுமையான பணியை நிறைவேற்ற முடியும். ஜனநாயகக் கொள்கையினை இம் மாமன்றம் எப்போதுமே பொன்னே போல் போற்றி வந்துள்ளது ; ஒழுங்கமைந்த அறிவார்ந்த ஜனநாயக அமைப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாக இது திகழ்ந்து வந்துள்ளது. நீங்கள் அரசுடன் தொடர்ந்து ஒத்துழைப்பதற்காகவும் நல்ல வகையில் புரிந்துகொண்டு நல்லாதரவு நல்குவதற்காகவும் உங்கள் அனைவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். இதே கொள்கைகளைக் கட்டிக்காப்பதற்காகவும் மக்களின் நல்வாழ்வுக்காகவும் நாட்டு ஆக்கப் பணிகளில் அதே துடிப்புடனும் எழுச்சி புடனும் ஆர்வத்துடனும் நீங்கள் மீண்டும் ஈடுபடுவீர்கள் என்பதிலும் இம் மாமன்றத்தின் உயரிய மரபுகளைப் போற்றிக் காப்பதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பணியாற்றுவீர்கள் என்பதிலும் எனக்கு எள்ளளவு ஐயமும் இல்லை. "உங்கள் நன் முயற்சிகள் வெற்றிகளைக் குவித் திடுக !" என்று இதயங் கலந்த நல் வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

*செவ்வாய்க்கிழமை, 1972 சனவரி 25.*

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## *1. வினாக்கள்—விடைகள்.*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

### *Crimes in Tamil Nadu*

* 31 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government is aware of the report of the Home Ministry released about 4th May 1970, about the incidence of high percentage of crimes in this State; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** *(அ) & (இ) மத்திய அரசு வெளியிட்டுள்ள இந்தியாவில் குற்றம் 1968 என்ற சிறு வெளியீடு வந்துள்ளதை இந்த அரசு அறியும். இம்மாநிலத்தில் குற்றங் களின் சதவீதம் அதிகமாயிருந்ததாக அந்த வெளியீடு குறிப் பிடவில்லை.*

### *Police Benevolent Fund*

* 32 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Police Benevolent Fund has been increased from the year 1971–72; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** *(அ) ஆம்.*

*(இ) தமிழ்நாடு காவலர் நல நிதியின் ஆண்டு மானியமான ரூ. 1 லட்சம் என்பது 1971-72-ஆம் ஆண்டிலிருந்து ரூ. 1½ லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.*

***திரு. என். டென்னிஸ்:*** *காவலர்களின் ஜீவிய காலத்திலேயே அவர்களுக்கு ஏதாவது நெருக்கடி நிலை ஏற்படும்போது இந்த நிதி வழங்கப்படுமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதற்காக அமைக்கப்பட்டுள்ள மத்தியக் குழு, 'தகுதி' என்று கருதுகிற நேரங்களில் காவல்துறைப் பணியாளர்களுடைய பொது நலனுக்காக அந்த நிதியை வழங்கும்.

## காவல்துறையில் முஸ்லீம்கள்

* 33 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் துறையில் முஸ்லீம்களுக்கு எத்தனை சதவீதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவல்துறையின் எல்லாப் பதவித்தரங்களையும் கருதிப்பார்க்கையில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் அந்தத் துறையில் 4.04 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவர் அவர்களே, இப்படி முஸ்லிம் சமுதாயத்திற்கு இன்னும் அதிகப்படியான பிரதிநிதித்துவம் போலீஸ் துறையில் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதுவும், பரந்த மனப்பான்மை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்களிடம் அந்தத் துறை இருக்கின்ற காரணத்தினால் இன்னும் அதிகமானதொரு பிரதிநிதித்துவத்தை அந்தச் சமுதாயத்திற்கு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முஸ்லிம்கள் என்று பார்த்து மத அடிப்படையில் இவைகளை அமைக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனாலும், பின்தங்கியவர்களுக்குச் சலுகைகளை அளிப்பது என்ற வகையில் 25 சதவீதம் என்பதை 31 சதவீதமாக ஆக்கியிருக்கிறோம். அந்த அடிப்படையில் பின்தங்கிய முஸ்லிம்களுக்கு இடங்கள் வழங்கப்படுவதற்கு இந்த அரசு எல்லாவகையான ஆதரவையும் தரும்.

**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் கூறும்போது முஸ்லிம்களுக்கு காவல்துறையில் 4.04 சதவீதம் பிரதிநிதித்துவம் கொடுத்து இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த 4.04 சதவீதம் என்பது, தமிழ்நாட்டின் மொத்த மக்கட்தொகையில் முஸ்லிம் சமுதாயத்தினரில் இது எத்தனை சதவீதம் என்பதை அறிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கட்தொகையில் 1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி முஸ்லிம் மக்களின் தொகை 21,05,053 ஆகும். இது தமிழ்



நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 5.11 சதவீதமாகும். காவல்துறையில் மாத்திரம் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்பட்டிருப்பது 4.04 சத வீதம் ஆகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஸப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு மேலாக உள்ள அதிகாரிகள் பதவிக்கு முஸ்லிம் மக்கள் எத்தனை சதவீதம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்னிடத்தில் உள்ள விவரப்படி, காவல்துறையில் முஸ்லிம் மக்கள் 4.04 சத வீதம்; காவல் துறை நிர்வாகப் பதவியில் (எக்ஸிக்யூடிவ் சர்வீஸ்) 4.06 சதவீதம்; எழுத்துப் பணிப் பதவிகளில் (மினிஸ்டீரியல் சர்வீஸ்) 4.04 சதவீதம்.

**திரு. ஆ. பரந்தாமன்:** இப்படி காவல் துறையில் கொடுக்கப்படுகின்ற பிரதிநிதித்துவம் மத அடிப்படையில் இல்லாமல், தகுதியின் அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு ஏதாவது உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஏற்கனவே அதற்குப் பதில் கூறிவிட்டேன்.

## முதியோர் உதவித் தொகை

* 34 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**திரு. சு. துரைசாமி:** முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகையோடு இன்னும் ஒரு பத்து ரூபாய் சேர்த்துக்கொடுத்தால் எவ்வளவு செலவு ஏற்படும் என்று தெரிவிக்க முடியுமா? அப்படி பத்து ரூபாய் உயர்த்திக் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே ஆண்டொன்றுக்கு முதியோர் உதவித் தொகை என்ற வகையில் ஒரு கோடி ரூபாய் அரசுக்கு செலவாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் அதை அதிகப்படுத்துவது இப்பொழுது இயலாத காரியமாக உள்ளது.

[1972 சனவரி 25

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகை ரூ. 20 அல்லது ரூ. 30 என்று நினைக்கிறேன். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு அவர்கள் காலத்தை நடத்த முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, இன்றைக்கு தியாகிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஐம்பது ரூபாயாக உயர்த்த முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாம் தியாகிகளையும் முதியோர்களையும் ஒன்றாகக் கருதுவது நல்லதல்ல.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, முதியோர்களுக்குக் கொடுக்கக்கூடிய பென்ஷன் தொகை மாதக் கடைசியில் தான் கிடைக்கிறது. அது மாத ஆரம்பத்திலேயே அவர்களுக்குக் கிடைத்தால் அந்த மாதத்தைக் கடத்துவதற்கு அவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது வாழ்வின் கடைசியில் கொடுக்கப்படுவதாக இருப்பதால் மாதக் கடைசியில் கொடுக்கப்படுகிறதோ என்னவோ ! (சிரிப்பு) இனி, அம்மையார் அவர்கள் கூறிய அந்தக் குறைபாடு நீக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும்.

### *Tamil Nadu Raffles*

* 35 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the proceeds from the sale of raffle tickets are to be allotted to medical institutions in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருத்துவ மனைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு லட்சம் ரூபாய் வீதம் பத்து மாவட்டங்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்து தனி விவரம் இப்பொழுது இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பரிசுச் சீட்டு மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@ 208–209 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1972 சனவரி 25]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுவரை பரிசுச் சீட்டின் மூலமாக அரசுக்குக் கிடைத்த தொகை 12½ கோடி ரூபாய்.

### *Cattle nuisance in Madras*

* 36 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to meet the cattle nuisance in Madras City?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பராரியாய்த் திரியும் கால்நடைகள் வளைத்துப் பிடிக்கப்பட்டு, சென்னை மாநகரில் பல்வேறு காவல் நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ள கால்நடைப் பட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சென்னை மாநகர் காவல் துறைச் சட்டத்தின் 71-வது பிரிவின் ( IX ) பகுதியின் கீழ், கால்நடை உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்படுகிற கால்நடை உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்படுகின்றனர்.

**திரு. என். டென்னிஸ் :** இதன் தொல்லையைப் போக்க கடுமையான நடவடிக்கை அடங்கிய சட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது விதிக்கப்படுகிற அபராதத் தொகை 50 பைசா, ஒரு ரூபாய் என்றுதான் இருக்கிறது. அதை 3 ரூபாய், 5 ரூபாய் என்று அதிகப்படுத்த திருத்தம் கொண்டுவரலாமா என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்தக் கால்நடைத் தொல்லையைப் போக்குவதற்கு சென்னை நகரத்தில் யாரும் கால்நடை வைத்துக் கொள்ளக் கூடாது என்பதாக சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரும் உத்தேசம் எதுவும் இல்லை. ஆனால் சில கால்நடைகள் கேட்பாரற்று—வளர்ப்பாரற்று—பட்டிகளில் அடைத்தாலும் விடுவித்துக்கொண்டு போவதற்கு யாரும் வராத முறையில் அனாதைகளாக அடைபட்டுக்கிடக்கிற நிலை இருக்கிறது. இது போன்ற கால்நடைகளை சென்னையில் உள்ள பண்ணைகளில் விட்டு விடலாமா என்கிற யோசனை அரசுக்கு இருந்து வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எஸ். பி. சி. ஏ. மூலம், அலைந்து திரியும் கால்நடைகளைப் பராமரிக்க வேண்டிய உதவி அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி :** எஸ். பி. ஸி. ஏ. கால் நடைகளுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அதற்கேற்ற நடவடிக்கைகளைத்தான் எடுத்து வருகிறது. இதுபோன்ற கால்நடைகளைப் பராமரிக்கவும் அவர்கள் யோசித்தால் அரசு அதற்கு ஆதரவு தர முன்வரும்.

### *Book Presentation Scheme*

* 37 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the United Kingdom Government has gifted books under the " Book Presentation Scheme " during September 1971 to the State Government; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தென் பிராந்திய மாநிலங்களிலுள்ள நாற்பது பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கு இங்கிலாந்து அரசு நாற்பது அடுக்குப் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளது. தமிழ் நாட்டில் 11 பல்துறைத் தொழில்நுட்பப் பள்ளிகள் (அரசினர் பள்ளிகள் 3, மானியம் பெறும் பள்ளிகள் 8) இந்த அன்பளிப்பை பெற்றன.

THIRU N. DENNIS : Sir, may I know whether any other country has gifted books under this scheme?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்ற ஆண்டில் இங்கிலாந்து அரசிடம் இருந்து மட்டும் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கான புத்தக அடுக்குகள் வந்தன. இதுபோல வேறு நாடுகளில் இருந்தும் புத்தகங்கள் வந்திருக்கின்றனவா என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

### *Development of Madras City*

* 38 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the United Nations assignee to the Delhi School of Architecture, has been invited to advice the State Government for recommending improvements to Madras City.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

THIRU N. DENNIS : Sir, may I know whether any remuneration is given to him?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னையினுடைய இயற்கை அமைப்பை எழில் பொருந்தியதாக ஆக்குவதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. போர்டு ஸ்தாபனத்தின் சார்பாக திரு. டேவின்ஸ் கின்னர் என்பவர் 13—10—1971 அன்று சென்னைக்கு வந்தபோது இதுபற்றி அவரும் ஆராய்ந்து சில யோசனைகளை இந்தக் குழுவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்தக் குழுவினர் பரிசீலித்து வருகிறார்கள். அதற்காக அவருக்கு ரெம்யூனரேஷன் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்கிற விவரம் குறிப்பில் இல்லை.





### பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள்

* 39 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 2,206 பேர்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

* 40 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### படிப்பிற்கிடையே தொழிற்பயிற்சி போதிக்கும் முறை

* 41 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள என்ஜினியரிங் கல்லூரிகளிலும் " சாண்ட்விச் படிப்பு முறை " (படிப்புக்கு இடையே தொழிற் பயிற்சி போதிக்கும் முறை) ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1972-73-ல் ஒன்று அல்லது இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படலாம்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த சாண்ட்விச் படிப்பு முறையின்படி எத்தனை மணி நேரம் படிப்பு, எத்தனை மணி நேரம் தொழில் பயிற்சி அளிக்கிற திட்டம் இருக்கிறது ? தொழிற்

பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்துவது எதிர்கால வேலைவாய்ப்புக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்குமல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய முழு விவரக் குறிப்பு கிடைக்கவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகம் இதற்காக ஒரு குழுவை அமைத்து ஆராயும்படி செய்திருக்கிறார்கள். பாலிடெக்னிக்கில் இந்த முறை நல்ல பலன் அளிக்கக் கூடியதாக இருப்பதால் பொறியியல் கல்லூரியிலும் மேலைநாடுகளில் உள்ளதுபோல இந்த முறையை நன்கு பரிசீலித்து நடைமுறைக்குக் கொண்டுவந்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்றே கருதப்படுகிறது. 1972-73-லாவது ஒன்றிரண்டு கல்லூரிகளில் இதைப் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரும் வகையில் இதுபற்றி இந்தக் குழுவினர் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் இந்தக் குழுவினர் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

*Teaching of Telugu in schools in Rajapalayam*

* 42 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been made by the Hon. Sri Subba Raja, a former Member of this House on the teaching of Telugu in Rajapalayam Educational Institutions about 10th April 1970; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பகுதி நேர தெலுங்கு பண்டிதர் ஒருவரை எஸ்.எஸ். அரசு (கழக) உயர்நிலைப்பள்ளியில் நியமித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are about 350 students who want to study Telugu in the High School at Rajapalayam. Before the introduction of the two-language scheme, they were getting tuition in Telugu in addition to Tamil during the school hours. I have made representation with regard to this matter, and also Thiru Subba Raja, a former Member of this House and the Chairman of the Rajapalayam Municipality. The qualified Telugu teacher was then transferred to some other work and has not been re-posted here. Now arrangements have been made it is said to teach Telugu after school hours and only a salary of Rs. 30 has been fixed for a Telugu Pandit. How can a Telugu Pandit work for Rs. 30? I have also received a letter that the Telugu Pandit has to retire in the month of July or so. So, may I request the Hon. Minister for Education whether he will take steps to transfer the Telugu Pandit to that school with reasonable pay and provide for the teaching of Telugu there?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவு மாணவர்கள் இருப்பார்களானால் தனியாகவே ஒரு ஆசிரியரைப் போடலாம் என்பதாக அரசு உத்தரவிட்டிருக்கிறது. தெலுங்கு ஆசிரியருக்கு நிர்ணயித்துள்ள சம்பளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்பதற்கும் பள்ளி கல்வி இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார். விரைவில் அதற்கான அனுமதியும் அளிக்கப்படும். இதற்குள் தெலுங்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருப்பார் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

*பள்ளி மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை*

* 43 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக்கூட மாணவர்களுக்கு கட்டாய வைத்திய பரிசோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) தற்பொழுது எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் கட்டாய வைத்தியப் பரிசோதனை கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை. அவ்வாறு கட்டாயமாக்ச் செய்ய இயலாவிடினும், எந்த வகையில் செய்யமுடியும் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்ற ஆரம்பப் பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளாவது இந்த மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்களா ? சிறு வயதிலேயே வியாதி இன்னதென்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் அந்தக் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படாதவாறு தடுத்துவிட முடியும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளி மாணவர்கள் 5 வயது முதல் 10 வயதிற்குள் இருப்பவர்கள் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் இப்போது 12 ப்ளாக்குகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மூலம் செயல்படுகிறது. மேலும் 6 ப்ளாக்குகளுக்கு விரிவுபடுத்த மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலைக் கேட்டிருக்கிறோம். அது தவிர சென்னை நகரத்தில் எல்லா மாணவர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவது என்று யோசிக்கிறபோது மிகப் பெரிய செலவுடைய திட்டமாக இது அமைகிற காரணத்தினால் சிறிது யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் ஐயாயிரம் மாணவர்களுக்கு ஒரு பைலட் திட்டத்தை சென்னை நகரத்தில் ' a pilot project for 5,000 school children ' என்பதாக செயல்படுத்த இருக்கிறோம். ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் [illegible] அத்தனை பேர்களையும் வைத்தியப் பரிசோதனைக்கு

உள்ளாக்குகிறபோது—பத்து லட்சம் மாணவர்களுக்காவது தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டியதாக இருக்கும். இதற்கு பல கோடி ரூபாய் தேவைப்படுகிற காரணத்தினால் இந்தத் துறையினர் இதற்கு என்ன செய்வது என்பதாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* இது அமலுக்கு வந்தால் ஒரு சிறப்பான திட்டமாக அமையும். இப்பொழுது பைலட் ஸ்கீமாகத்தான் போடமுடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை கார்ப்பரேஷனிலும், மதுரை கார்ப்பரேஷனிலும் மட்டுமாவது இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே அமல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* சென்னை மாநகரத்திலே தொடங்குகிற இத்திட்டம் ஏறத்தாழ பெரிய அளவிலே நடத்தப்பட வேண்டுமானால் 50, 60 லட்சம் ரூபாய் வரையில் தேவைப்படுகின்றது. தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தவேண்டுமானால், என்ன ஆகும் என்று ஆய்ந்த பொழுது 3 கோடி ரூபாய் அல்லது 4 கோடி ரூபாய் வரை தேவைப்படும் என்று தெரிகிறது. பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற முறையிலேதான் அரசாங்கம் இதில் ஈடுபடுகிறது. இந்த வகையிலேயினும் ஒரு வகையில் இதற்காக ஏற்படுகின்ற செலவை ஏற்றுக்கொள்வதற்காகப் பெற்றோர்கள் முன்வருவார்களானால் அரசாங்கம் இதைச் செய்துதருவதற்கு உதவியாக இருக்கும். இலவசம், இலவசம் என்ற சொல் இப்பொழுது அதிகச் செல்வாக்குப் பெற்றுவிட்ட காரணத்தினால் பெற்றோர்கள் பொதுவாகவே அரசாங்கம் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒப்புக்கொண்டால்—சமுதாயத்திலே ஒரு பிள்ளைக்காக இத்திட்டத்திற்காக ஆகும் செலவை ஒவ்வொரு குடும்பமும் ஆண்டுக்கு இவ்வளவு ரூபாய் என்ற அளவிலே வழங்கவேண்டும், அப்படிச் செய்தால் அரசாங்கம் மிச்சத் தொகையைப் போட்டு இந்தத் திட்டம் சிறப்பான முறையிலே நிறைவேற்றப்பட ஏற்பாடு செய்யலாம்—இதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஆதரவை நான் பெரும்பாலும் எதிர்பார்க்கிறேன்.

*திரு. சு. துரைசாமி:* தலைவர் அவர்களே, பண வசதியுள்ள நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட நகராட்சி மன்றங்களிலாவது தனியாக மருத்துவர் நியமித்து நோய்களைக் கண்டுபிடித்து சிகிச்சை தரக்கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* நகராட்சி மன்றங்களுடைய நிதி வசதிகளுக்கேற்ப அவர்கள் தாராளமாகச் செய்யலாம். ஆனால், நகராட்சி மன்றங்கள் இந்தத் திட்டங்களில் பணத்தை ஒதுக்கீடு செய்ய முன்வருவதில்லை. ஆஸ்பத்திரிகளை அரசாங்கமே





எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பதை முறையாகக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் நாற்பதாயிரம் ரூபாய் செலவில் இரண்டு நகரங்களில்—திருச்சி, கோயம்புத்தூர்—ஒவ்வொரு மருத்துவ யூனிட் ஏற்படுத்தி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டுமென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறது.

### *Mosquito menace in Madras*

* 44 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the steps taken by the Government to arrest the increasing menace of mosquitoes in Madras City?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* மலேரியா கொசு ஒழிப்புத் திட்டம் என்பது சென்னை நகரத்திலே முறையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. கொசு ஒழிப்புக்கான முன்னேற்பாடுகள் Aromax emulsion is used as an effective larvicide என்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது. வாராவாரம் கொசுத் தொல்லைகளை ஒழிப்பதற்காக மருந்துகள் குட்டைகளிலும் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களிலும் தெளிக்கப்படுகிறது. மழைகாலங்களில் தண்ணீர் (Storm-water drains) மருந்துகள் தேங்கியுள்ள இடங்களிலே தெளிக்கப்படுகின்றது. கொசு உற்பத்தி தடுக்கப்படுவதற்கு National Malaria Control Unit என்ற திட்டம் சென்னை நகரத்தில் தொடங்கப்படுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்:* சார், சட்டசபை விடுதியிலே இந்தக் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறார்கள்?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* சட்டசபை விடுதி இருக்கிற இடமும் மொத்தமாக சென்னை நகரத்தினுடைய பகுதியாகும், கொசுவைப் பொறுத்தவரையிலும். வேண்டுமானால் மற்ற வகைகளில் தனிப் பராமரிப்பு இருக்கும். கூவம் திட்டம் மிக வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமானால் கொசு ஒழிப்புத் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறோம். 12.84 லட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் தீவிரமாக்கப்படவேண்டுமென்று மாநகராட்சி மன்றம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் செலவில் ஒரு பங்கை மத்திய அரசு ஒப்புக்கொண்டால் தமிழக அரசு நிறைவேற்ற ஒப்புக்கொள்ளும்.

*திரு. ஏ. சுப்பிரமணியம்:* கொசு ஒழிப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் கொசுத் தொல்லைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்றுதான் செய்திகள் வருகின்றன. எனவே வேறு சில நாடுகளிலே இருப்பதைப் போன்று பொதுமக்களின்

ஒத்துழைப்பைப்பெற்று தீவிரத் தடுப்பு இயக்கம் நடத்த அரசாங்கம் ஆலோசனைசெய்துள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்படிப்பட்ட கடமைகளைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக மலேரியாத் தடுப்பு வாரம் நடத்தப்படுகிறது. இதைத்தவிர ஃபிலேரியா யூனிட்டுகள் எட்டு இடங்களில் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டன. இந்த ஆண்டும் அமைக்கப்பட்டு பொதுமக்கள் உணரத் தக்க வகையிலே நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். மிகப் பெரிய அளவிலே இதைச் செய்யவேண்டுமென்பது எதிர்க்காலத்திலே ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, நகரங்களிலே கொசுத் தொல்லைகளைக் காட்டிலும் கிராமப்புறங்களிலே கொசுத் தொல்லைகள் மிக அதிகமாக இருக்கின்றன. மலேரியா ஒழிப்புத் திட்டங்க்ள் கிராமப்புறங்களிலே நடத்தப்படுகின்றன என்றாலும் இன்னும் மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தீவிரமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யக்கூடிய வகையில் கிராமங்களிலும் இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசு உதவக்கூடிய ஒவ்வொரு துறையிலேயும் முழுத் தொகையும் பெற்றுத்தான் மாநில அரசு செய்துவருகிறது. அந்தத் தொகையை நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையிலும் இழந்துவிடவில்லை. அவர்களும் சில அடிப்படைகளை வைத்து ஓரளவுக்கு வழங்கிவருகிறார்கள். எனவே குறிப்பிட்ட வட்டாரங்களில் வட்டாரம் வட்டாரமாக நிறைவேற்றி வருகிறோம். ஏற்கனவே ஒருமுறை மலேரியா ஒழிப்புத் திட்டம் பல இடங்களில் நிறைவேற்றப்பட்டு அப்படிப் பட்ட பகுதிகள் எல்லாம் இப்பொழுது மெயின்டனன்ஸ் ஸ்டேஜ்க்கு வந்திருக்கின்றன. மறுபடியும் தீவிர ஒழிப்புத் திட்டம் எல்லா இடங்களிலும் செயல்படுத்தப்படவேண்டுமானால் அதற்கு இந்திய அரசினுடைய பொருளாதார நிலையும் தமிழக அரசினுடைய பொருளாதார நிலையும் இடம்தரக்கூடிய ஒன்றல்ல.

### கும்மிடிப்பூண்டியிலுள்ள இயங்கும் மருத்துவமனை

* 45 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :

டாக்டர் திரு. எச. வி. ஹாண்டே :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் செயல்படுகிற இயஹூர்தி மருத்துவமனை மூடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட இயங்கும் மருத்துவமனை கும்மிடிப்பூண்டியில் 8—1—1971 முதல் 31—8—1971 வரை இயங்கியது. அதற்குப் பின்னர் 1—9—1971 முதல் செங்கற்பட்டு மாவட்டம் காட்டான்குளத்தூரில் இயங்கிக் கொண்டுள்ளது.



DR. H. V. HANDE : Is it not a fact that this mobile dispensary was started sometime ago? Due to some unforeseen circumstances or due to some other cause, this was given up in the middle? If so, what are the reasons therefor?

THE HON. THIRU K. ANBAZHAGAN : I am not aware of such an instance with regard to the mobile dispensary. There is nothing like that in Gummidipoondi. It was working for a long time. In the beginning it was not functioning properly because necessary assistance was not given by other doctors. After a month, operation and other things were started. கும்மிடிப் பூண்டியில் இப்பொழுது இயங்கவில்லை, 6, 7 (மாதங்களுக்கு முன்னால் இயங்கியது.

MR. SPEAKER : The hon. Member Dr. Hande's point is whether it was suspended?

DR. H. V. HANDE : My point is why it was given up? Originally it was started there. I remember distinctly. It would go daily to Gummidipoondi. Original idea was from Stanley hospital it would go there. That is why it was called ' mobile '. It would be moving. It would not go there to one particular place and stop there. Once a week it would go to Gummidipoondi. That was the idea. But it was stopped. May I know the reason for the stoppage?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, the hon. Member has not distinguished between mobile dispensary and mobile hospital. This is a programme of mobile hospital. It is intended that most of the experts will be sent to a place for a long time, about a month or two and almost all the persons of that area will be attended to by the experts. The service is given there for two or three months and then the mobile hospital is transferred from one locality to another, so that the services of the specialists of the Medical College are made available to the villages. Therefore, it is not considered to be a mobile dispensary and therefore, there is no question of moving it every week or every day. But even if there is a question about this hospital, it is not able to move from that place where it is situated for about six months, but after convincing the people it is transferred from one place to another.

### சோழவந்தானிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை

* 46 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சோழவந்தானிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மதுரை மாவட்டம் நிலக் கோட்டை தாலுக்காவிலுள்ள சோழவந்தான் கேந்திரமான நகரம் என்ற அளவில் இருப்பதால் அங்கேயிருக்கும் ஆஸ்பத்திரியை அரசின் ஆஸ்பத்திரியாக ஆக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இதற்காக 'நான்-ரெக்கரிங்காக' தொடக்க நிலையில் 15,000 ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ மேலும் 33,600 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்த முழுத் தொகையையும் செலவு செய்ய அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இது எத்தனை மாதங்களாகப் பரிசீலனையில் இருக்கிறது, எப்பொழுது முடிவெடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, பொது வாக எந்தவிதமான ஒரு பஞ்சாயத்திலும், ஒரு மருத்துவ மனையை எடுப்பதாக இருந்தால் மருத்துவமனைக் கட்டடம் முழு அளவில் செம்மையாக வழங்கப்பட வேண்டும். அந்தக் கட்டடம் முழு அளவில் வழங்கப்படும் நிலையில் இல்லை. சிறு மாற்றம் தேவைப்படுகிறது. அவற்றையும் அவர்கள் செய்துதர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் தாங்கள் வழங்கும் பஞ்சாயத்தில் வழங்கும் தொகையை அதிகப் படுத்துவதாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். முதல் நிலைக்குச் செலவழிக்க அரசு ஏற்க வேண்டியதாயிருக்கிறது. பரிசீலனை நடந்து வருகிறது. காலதாமதம் ஆவதற்குக் காரணம் அதிக நிதி இல்லாததுதான்.

*Bonus for workers in Neyveli Lignite Corporation*

* 47 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that 18,000 workers in Neyveli Lignite Corporation have demanded bonus for the year 1970; and

(b) if so, how it was settled?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம். 1970-71-ஆம் ஆண்டுக்கான போனஸ் கோரிக்கையை வலியுறுத்தி 16—10—1971 நாளன்றோ, அதற்குப் பின்னரோ வேலைநிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தொழிற் சங்கங்கள் அறிக்கை விடுத்தார்கள்.

(இ) என் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக எல்லாத் தொழிலாளர்களும், 1970-71-ஆம் ஆண்டுக்கான வருவாயில் 4 சதவிகிதம் போனஸ் வாங்கிக் கொண்டுள்ளனர்.





**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், நெய்வேலியிலே தொழி லாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள், சுமார் 18,000 பேர் வரையிலே இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்த போனஸ் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்து இறுதியிலே அது சிக்கலாக முடிகிறதே. ஆகவே, இந்த ஆண்டு அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்னாலேயே முக்கிய சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு வைத்து இதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் கோரிக்கை வைத்தாலும் அது சுமுகமாக முடிந்து வருகிறது. இந்த ஆண்டும் அதைப்போலச் செய்ய அரசு ஆவன செய்யும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய தொழிலாளர் அமைச்சரவர்கள் எடுத்த முயற்சியின் காரண மாகத்தான் 4 சதவீத போனஸ் என்பது 5 சதவிகிதமாக கிடைத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் சொல்வது உண்மையாகும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது சம்பந்தமாக சமீப காலத்தில் பல விவாதங்கள் நடந்து 8.33 சதவிகிதம் போனஸ் வழங்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டு, நம்முடைய அரசாங்கமும் அது நியாயம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, இப்படி அரசாங்க நிறுவனங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு முதலிலே அதைச் செய்து மற்றவர்களையும் செய்யும்படி தூண்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** 8 1/3 என்ற சதவிகி தத்தில் போனஸ் தர வேண்டுமென ஐ.எல்.ஓ. மகாநாட்டில் டெல்லியிலே தமிழக அரசால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதே கொள்கையை மற்றும் பல தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்திய அரசு பரிசீலித்து வருகிறது. அது சட்டமாக்கப் பட்டவுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 48 அடிசன்ஸ் அண்டு கம்பெனியில் கதவடைப்பு பற்றியது. அதுபற்றி இங்கு வந்திருக்கின்ற ஒரு சில ஒத்திவைப்புத் தீர்மானங்களையொட்டி பின்னால் எடுத்துக்கொள்ளப்படலாம் என்று இருப்பதால் இந்தக் கேள்விக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

**வலையப்பட்டி கர்ணத்தின் மீது புகார்**

* 49 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள வலையப்பட்டி கர்ணத்தின் மீது அக்கிராம மக்களால் விண்ணப்பம்

28—9—1971 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இஃது மதுரை மாவட்ட அதிகாரியின் பரிசீலனையில் உள்ளது.

*Officials of Civil Supplies Department in Coimbatore district*

* 50 Q.—Thiru N. DENNIS : Will the hon. the Minister for Food and Revenue be pleased to state whether a number of officials of the Civil Supplies Department in Coimbatore district were suspended for being involved in complicity in the Fake Rice Cards Case?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி வணிகர்கள் மிகுதியாக அரிசி பெறுவதற்காக ஈடுபட்ட முறைகேடுகளில் பங்கு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு ஏழு அதிகாரிகள் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். இது குறித்துப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

Thiru N. DENNIS : May I know from the hon. Minister whether any such occurrence took place in any other place in the State?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது படியரிசித் திட்டம் நடந்த கோயம்புத்தூரில் நடைபெற்ற ஒரு மோசடி. எனவே மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் இருக்க நியாயம் இல்லை. அங்குதான் இது ஏற்பட்டு இருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், இதனாலே ரூரல் ஏரியாவில் அவர்கள் வைத்திருந்த உண்மையான கார்டுகள்கூட பறிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, போலி கார்டுகளைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் நான் அந்த மாவட்டத்திற்குச் சென்றிருந்தபொழுது அதிகாரிகளோடு பேசிவிட்டு வந்தேன். அதன்படி போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. உண்மையான நிலவரம் என்னவென்றால், இப்பொழுது 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சென்சஸ் கணக்குப்படி கோவை நகரத்திலும், அந்த நகர் சுற்றுப்புறத்திலும் முழுவதும் 6,69,825 ஆகும். ஆனால் 300 ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி கொடுப்பதாக அறிவித்திருந்தோம். மக்கள் பயன் அடைகிறார்களோ இல்லையோ கார்டுகள் எண்ணிக்கை 6,32,316 ஆகும். எனவே போலி கார்டுகள் அதிகமாக இருந்த காரணத்தால் கண்டுபிடிக்கப்பட்டன.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் தகவலை வெளியிட்டார்கள். என்றைக்கு சஸ்பெண்ட் செய்தார்கள்? விசாரணை எப்பொழுது முடியும் ? துரிதமாக முடிக்க அரசாங்கம் வேண்டிய தாக்கீதுகளை நல்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்ற ஆண்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். சீக்கிரத்திலே அவர்கள் மீது விசாரணையெல்லாம் நடைபெற்று முடியும்.

பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு

* 51 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டு பஞ்சாலைகளுக்கு ஆண்டுக்கு எவ்வளவு லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏறக்குறைய 13.19 லட்சம் பேல்கள்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே உற்பத்தியாகும் பஞ்சின் அளவு ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு ஆகும். தமிழ் நாட்டின் தேவைக்கான பஞ்சு பிற மாநிலங்களிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு வருகிறது. அந்தப் பஞ்சு வந்து இங்கே செய்ய வேண்டியிருப்பதால் பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி ஏற்படுகிறது. எனவே இதைத் தவிர்க்கும் முறையில் இங்கேயே பஞ்சை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ஐந்தாண்டுத் திட்டமிட்டு ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளில் ஏற்படுகின்ற தொல்லைகளுக்கான காரணங்களில் இது ஒன்று, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இதற்காக நம் வேளாண்மைத் துறையில் தனியாக ஒரு திட்டமிட்டு பருத்தி உற்பத்திக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதுபற்றி வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்டால் விவரம் சொல்லுவார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தமிழ்நாட்டுக்குத் தேவையாக இருக்கக்கூடிய இந்தப் பஞ்சு வட இந்தியாவில், குறிப்பாக மகாராஷ்டிராவில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பேல்கள் இறக்குமதி ஆகின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில வாரியாகப் புள்ளி விவரம் இல்லை. நம்முடைய தமிழ்நாட்டில் 5.3 லட்சம் கிடைக்கிறது. மீதி 8 லட்சம் வெளி நாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்கிறோம். வெளிநாட்டுப் பஞ்சைப் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு 16,240 பேல்கள் தேவைப்படுகின்றன.

[1972 சனவரி 25

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the increasing cost of production due to the high cost of cotton, has this Government represented that there should be price control of various types of cotton that is being used by the mills?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உற்பத்தியை அதிகமாக்காமல் விலையை மட்டும் கட்டுப்படுத்தினால் அது நிலைக்கும் என்று அரசாங்கம் நம்பவில்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தனியாக திட்டமிட்டு வேளாண்மைத் துறையினர் முயற்சி செய்து வருகிறார்கள். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டுக்கு பஞ்சுக்குப் பதிலாக செயற்கை நூல், ஸ்டேபிள் ஃபைபர் உற்பத்தி செய்வதற்கேற்ற வகையில் அதிகமாக வழங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம். அது பஞ்சுக்கு ஒரு சப்ஸ்டிடியூட் என்ற முறையில் நம்முடைய ஆலைகளுக்கு மூலப் பொருளாகக் கிடைப்பது நல்லது என்று கருதுகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that the popularity of the cloth produced out of staple fibre is going down and the popularity of the cloth produced out of artificial fibres is going up and if so, whether the Government have decided to encourage handloom weavers to use other types of fibres?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எனக்குத் தெரிந்த வரையில் ஸ்டேபிள் ஃபைபர், நைலான் ஆகியவற்றுக்கு அதிகச் சந்தை பெருகி வருகிறது. தமிழ்நாட்டிலும் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற ஆலைகளுக்குத் தனியாக அலாட்மென்ட் பெற வேண்டுமென்று கேட்டு இந்த ஆண்டு 52 டன் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பருத்தி உற்பத்தியோடு செயற்கை முறையில் மூலப் பொருள்கள் கிடைப்பதற்கும் வழி செய்யப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** ஸ்டேபிள் ஃபைபர் கிடைக்காத காரணத்தால் பல ஆலைகளில் பல மாதங்களாக வேலை முடங்கி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? மத்திய அரசாங்கத்திடம் கேட்டும் மற்ற மாநிலங்களிலிருந்து அதைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறைந்தபட்சம் நம்முடைய மூடப்பட்ட ஆலைகளுக்காவது ஸ்டேபிள் ஃபைபர் தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதினார்கள். மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஸ்டேபிள் ஃபைருக்கும் சிந்தடிக் ஃபைபருக்கும் அதிக கிராக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குறித்து மத்திய அரசாங்கத்தில் முறையிட்டுக் கொண்டும் அவர்கள் தரவில்லை என்று புகார் சொல்லுவதை விட இங்கேயே உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



1972 சனவரி 25]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உற்பத்தியை அதிகப் படுத்தவும் மத்திய அரசாங்கத்திடந்தான் சொல்ல வேண்டும்.

**திரு. சு. துரைசாமி :** தமிழ்நாட்டில் இன்னும் கூடுதலாக ஸ்டேபிள் ஃபைபர் யூனிட் போட யாராவது முயற்சிக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுவரை அந்த முயற்சி எடுக்கப்படவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழ்நாட்டில் பஞ்சு கிடைப்பதற்கும் பம்பாய் மார்க்கட்டில்தான் விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். தமிழ் நாட்டிலேயே இந்தப் பஞ்சை உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டிலேயே உற்பத்தியைப் பெருக்க தனியாக இந்த ஆண்டு வேளாண்மைத் துறையிலே ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

## *Powerlooms*

* 52 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries pleased to state the details regarding the phased increase of powerlooms and supply of the same to Handloom weavers of this State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் படிப்படியாக அனுமதிக்கப் படுவதற்கென ஒதுக்கப்பட்ட 12,500 விசைத்தறிகளில் 1,000 விசைத் தறிகள் 1970-71-ல் ஏற்கனவே கீழ்க்கண்ட வகையில் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்—500.
2. தனிப்பட்ட நெசவாளர்கள்—500.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the increasing competition from Surat and other places in the matter of powerlooms, will this Government take steps to convert immediately the handlooms in our State into powerlooms and give adequate financial assistance for such conversion?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விசைத்தறிகள் இந்த நாட்டில் முழுக்க முழுக்க கைத்தறிக்கு மாற்றாக அமைய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கூறிய யோசனையை இந்த மன்றத்தில் அவர்கள் கூறியதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன். வெளியே எதிர்ப்பதாகத் தெரிகிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரை கனம் அங்கத்தினர் யோசனையை ஏற்றுக் கொண்டு உடனடியாக எல்லாக் கைத்தறியையும் மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. நெசவாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மட்டும் விசைத் தறிகளைக் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாத அளவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வர வேண்டுமென்பதுதான் எங்களுடைய கொள்கை. கைத்தறியே வேண்டாமென்று சொன்ன கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

[1972 சனவரி 25

**திரு. சோ. அழகர்சாமி :** விசைத் தறியைப் படிப்படியாக அறிமுகப்படுத்துவதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறது. அவர்களுக்கு மாற்று வேலை தர அரசாங்கத்திடம் ஆலோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விசைத்தறியே வேண்டாமென்று சொல்லுவது இன்னொரு துருவம். அந்தத் துருவத்தில் பல ஆண்டுகளாக இருந்த காரணத்தால் நம்முடைய நாட்டில் உற்பத்தியாகிற நூலுக்கு வெளி மாநில, வெளிநாட்டுச் சந்தையை நம்பி இருக்கும் துர்ப்பாக்கியம் கடந்த 24 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் இருந்தது. விசைத் தறியைக் கொண்டு வருவதன் மூலம் நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படக் கூடாது என்ற காரணத்தால்தான் நெசவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மட்டும் விசைத் தறிகளைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாஸ்டர் வீவர்கள் அதை பெற்றுக் கொள்வதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகக் கூடாது என்ற முறையில் அரசாங்கம் கண்காணிப்பாக இருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழகத்தில் விசைத்தறி குறைவாக இருக்கும் காரணத்தால் மராட்டியம் போன்ற மாநிலங்களோடு போட்டி போட முடியவில்லை என்ற செய்தி உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் செய்தி உண்மைதான்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** விசைத்தறிகளைக் கூடுதலாக்கும்போது நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி ஒரு நிலை ஏற்படாத வகையில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பாக ஏதாவது முன்னேடித் திட்டத்தை அரசாங்கம் வகுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்குப் பதில் சொன்னதற்காக நன்றி.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** விசைத்தறி மொத்தமாக ஒதுக்கப்பட்டிருப்பதில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா? சாதாரணமாக அதிகந் தேவை இருக்கும் பகுதிக்கு அதிகமாக ஒதுக்க வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதுரை 98 ; கோவை 180 ; சேலம் 170 ; திருச்சி 52. பொதுவாக, இதற்கு வட மாவட்டங்களில் அதிகமாக கிராக்கி இருக்கிறது. தென் மாவட்டங்களில் ஏதோ ஒரு காரணத்தால் எதிர்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் அந்த எதிர்ப்பை மாற்றியமைத்து தென் மாவட்டங்களில் முன்னேற வாய்ப்புத் தருவார்கள் என்று நம்புகிறேன்.



1972 சனவரி 25]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 12,000 விசைத் தறிகள் வரை தமிழகத்தில் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 12,000 தறிகளுக்கு மேல் அதிகப்படியாக இருக்கின்றனவா? அப்படியானால் அந்தத் தறிகள் தமிழகத்தில் எப்படிப் புகுந்தன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 12,500 தறிகள் நம்முடைய தமிழ்நாட்டுக்கு நான்காவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டன. அதற்கு மேல் நம்முடைய தமிழ்நாட்டில் தறிகள் இருக்கத்தான் செய்கின்றன. சட்டப்படி உள்ள தறிகளும் இருக்கின்றன, சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் தறிகளும் இருக்கின்றன. இதெல்லாம் 1967-ம் ஆண்டுக்கு முன்னால் ஏற்பட்ட நிலை.

**திரு. எஸ். முருகையன் :** விசைத் தறிகளைக் கைத்தறி நெசவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குவதாகச் சொன்னார்கள். கைத்தறி நெசவாளர்கள் தாங்களாகவே முதலீடு செய்து அந்த விசைத்தறியை வாங்க முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது நாம் ஓரளவு அந்த உதவியைச் செய்து வருகிறோம். இதுபற்றி மறு பரிசீலனை செய்து இந்த விசைத்தறிகள் ஏராளமாக நெசவாளர்களுக்கும் கிடைக்கும் வழியை ஏற்படுத்த வேண்டுமென்று புனராலோசனை செய்து வருகிறது அரசு.

**Thiru K. M. SUBRAMANIAM :** Are the Government aware that conversion of handloom into powerloom will not create unemployment but it will only create facilities for work to the handloom weavers because production will be more conveniently going on, (it is not a big scale but only a small-scale industry), and by this conversion into powerlooms, there will be quicker work and more production and it is not a loss but a benefit to the handloom weaver?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நூற்பு ஆலைகளில் அனுபவம் பெற்ற திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்களை எல்லாம் இங்கே சொன்னார்கள். தமிழ் நாடு அதை ஏற்காது. விசைத் தறி வருவதால் கைத்தறி நெசவுக்கு பாதகம் வராது என்பது ஓரளவுக்கு உண்மைத்தான். அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற வேண்டுமே ஒழிய, கனம் அங்கத்தினர் சொல்வது மாதிரி உடனடியாக விசைத் தறியைக் கொண்டு வந்து நெசவைப் பெருக்க முடியாது. அங்கத்தினர் அவர்கள் கூறிய கருத்தை அவர்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே ஏற்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இப்போது இந்த விசைத்தறி அமைப்புகள் சிறு சிறு பகுதிகளாக ஒரே முதலாளிகள் பல இடங்களில் வைத்து, எக்ஸ்சைஸ் வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஒரு தோதாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதன்

காரணமாக கைத்தறி துணிக்கு கிராக்கி குறைந்து, அது இன்னும் மலிவாக விற்கிற நிலைமைக்கு வருகிறது. இம்மாதிரி ஒரே முதலாளிகளிடத்தில், ஒரே முதலாளிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் எவ்வளவு தறிகள் இருக்கின்றன ? ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் இருக்குமானுல் எக்சைஸ் டியூடி போட அரசாங்கம் கருதி அதைச் செய்வது நல்லது. இதில் அரசு என்ன கருத்து வைத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எக்சைஸ் டியூடி போடுவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது. மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டும். கைத்தறி நெசவாளர்கள் சார்பில் அகில இந்திய அளவில் மத்திய அரசுக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனை கூறப்பட்டிருக்கிறது.

### *Papanasam Paper Mills*

* 53 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether licence has been issued to the Papanasam Paper Mills in Tirunelveli district;

(b) if so, when;

(c) whether the factory has gone into production; and

(d) the total quantity of production proposed per month and per year?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) 1960-ம் ஆண்டு ஜுலை மாதம்.

(உ) இன்னும் இல்லை.

(எ) மாதம் 250-லிருந்து 375 டன்கள் வரை, ஆண்டுக்கு 3,000-லிருந்து 4,500 டன்கள் வரை.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, இந்த பாபநாசம் காகித ஆலை எந்தப் பக்கத்தில் நிறுவப்பட்டு இருக்கின்றது? அந்த லைசென்சு யாருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது? இதற்கு மத்திய அரசின் உதவி ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு அனுமதி 1960-ம் ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு இன்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனிலிருந்து ரூ. 5 லட்சம் கேட்டு இருக்கிருர்கள். நம் அரசாங்கமும் அதைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து உதவி கேட்டு இருப்பது பற்றித் தகவல் இல்லை.





**திரு. ச. சங்குமுத்து தேவர் :** எந்தப் பகுதியில் நிறுவப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இன்னும் தொடங்கவே இல்லை என்று சொன்னேன்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இவ்வளவு நாள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு முக்கிய காரணம் என்று அவர்கள் சொல்லி இருப்பது ' இடா ரிட்ஸ் a pilot project for கிடைப்பது காலதாமதம் ஆகிறது என்பது தான். வேறு காரணம் பற்றி அரசாங்கத்தில் தகவல் இல்லை.

### *Tamil names for Government buildings*

* 54 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether Tamil names are being given to Government buildings situated inside Government Estate, Mount Road, Madras; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை@ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### துறைமுகங்கள்

* 55 வினு.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எந்த எந்த துறைமுகங்களை விரிவு படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) கடலூர்.

(இ) கடற்பாலம் ஒன்று கட்டுவதற்கும், இரண்டு மணல் வாரி பம்புகள் போடுவதற்கும் ரூ. 1,39.24 லட்சம் செலவில் திட்டமிடப் பட்டு, 1964-ம் வருஷம் தொடங்கப்பட்ட வேலைகள் இப்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, கடலூர் துறைமுகத்தை இப்போது வர்த்தக துறைமுகமாக விரிவுபடுத்த ஏதேனும் மத்திய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? சேது சமுத்திரம் திட்டத்தின் நிலை எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 102-103-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1972 சனவரி 25

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தனிக் கேள்வி போடுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, குளச்சல் துறைமுகம் சம்பந்தமாக முன்பு அரசாங்கம் ஏதோ நடவடிக்கை எடுத்தார்களே அது என்ன நிலையில் இருக்கிறது? மத்திய அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தில் ரூ. 53,000 செலவில் ஒரு ரோடு சீரமைப்பு வேலை நடந்து கொண்டு வருகிறது. இன்னும் 2 மாதத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்கின்ற வகையில் ஒரு ரோடு போடுவதாக அமைச்சர் சொன்னார்கள். ரோடு போடுவது துறைமுக அபிவிருத்திக்கு அவசியப்பட்ட வேலையாக இருந்தாலும், அது துறைமுக அபிவிருத்தி வேலையாக கருத முடியாது. ஆகவே, அந்தத் துறைமுகத்தின் அவசியத்தை ஒட்டி அங்கே உள்ள இலுமினைட், மானேசைட் உலோகப் பொருள்கள் வெளிநாட்டுக்குப் போக வேண்டிய முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அதை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் வகுத்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இப்போது சீரமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட துறைமுகங்களில் ஒன்று கடலூர் என்று சொன்னேன். குளச்சல் துறைமுகத்திலே இப்போது செய்யப்படுகின்ற வேலை துறைமுகத்தை வளர்ச்சி செய்யாது என்று சொன்னார்கள். அது சரியல்ல. துறைமுக வேலைகள் இரண்டு வகைப்படும். ஒன்று ஷோர் ஒர்க்ஸ். இன்னொன்று சீ ஒர்க்ஸ். ஷோர் ஒர்க்ஸ் என்பது துறைமுகத்தை ஒட்டிய வேலை. ரோடு போடுவதும் துறைமுகத்தை ஒட்டிய வேலை தான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கடற்பாலம் அமைப்பது என்பது ஒரு சிறிய திட்டம் தான். முன்பு இருந்ததே ஒரு திட்டம், அது என்ன ஆயிற்று? அந்தத் திட்டத்தைப் பற்றி இப்போது புனராய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த வேலை முடிந்த பிறகு அந்தத் திட்டத்தைப்பற்றி மேற்கொண்டு ஆராயவேண்டும். தமிழகத்தில் சீரமைப்பதற்கு எடுத்துக்கொண்ட துறைமுக வேலைகள் முடிந்த பிறகு, அதுபற்றி ஆய்வு செய்யப்படும். குளச்சலில் போர்ட் ஒன்று தேவை என்பதை அரசு உணர்கிறது.



1972 சனவரி 25]

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் உத்தேசம் உண்டா? அந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக்கொள்ள முடியும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நாகப்பட்டினத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, குளச்சல் துறைமுகத்தை மத்திய அரசாங்கத்தின் ஒரு அமைச்சர் வந்து சமீபத்தில் பார்வையிட்டு விட்டு, அந்தத் திட்டத்தை அதிவிரைவில் நிறைவேற்றித் தருவதாகக் கூறிச்சென்று இருக்கிறார் என்று அங்குள்ள மக்கள் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் அதற்கு இத்தகைய ஆதரவு அளிக்கும்போது, இந்த அரசாங்கம் அந்த அளவுக்கு ஆதரவு காட்டவில்லையே என்று அங்கே உள்ள மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, துறைமுகங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, மைனர் போர்ட், இன்னொன்று, மேஜர் போர்ட். மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டது மேஜர் போர்ட். மைனர் போர்ட்டுகள் எல்லாம் மாநில அரசின் ஆளுகைக்கு உட்பட்டவை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே கடலூரில் துவக்கப்பட இருக்கும் துறைமுக வேலைக்கு, தமிழ்நாட்டின் பங்கு என்ன, மத்திய அரசாங்கத்தின் பங்கு என்ன? மத்திய அரசாங்கத்தின் பங்கு இல்லை என்று சொன்னால், அதற்கு நம் அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மொத்தம் எவ்வளவு செலவாகிறது என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இருக்கிறது, என்று ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசின் பங்கு எவ்வளவு, தமிழக அரசின் பங்கு எவ்வளவு என்ற புள்ளிவிவரம் தற்போது என் கைவசம் இல்லை.

**• 56 Q.**—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there are proposals to convert Tengaipattinam in Kanyakumari district into a minor port?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் சரித்திரப் புகழ் பெற்ற துறைமுகமாக இருப்பதால், அதைத் துறைமுகக் கமிட்டியினர் பார்வையிட்டார்களா ? அவர்கள் ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம் நிச்சயமாக சரித்திரப் புகழ் பெற்றது என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அது குளச்சலிலிருந்து எட்டு மைல் தொலைவில் தான் இருக்கிறது. ஆகவே, குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்

போது. அது தேங்காய்ப்பட்டணத்தின் பகுதிக்கும் அனுகூலமாக அமையும். ஆகவே, தனியாக இதற்கென்று சிறைமைப்புத் திட்டம் இப்பொழுது இல்லை.

### தனியார் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்.

*** 57 வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் குறைந்த வருவாயுள்ளவர்களுக்கு வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தற்போது உள்ள குறைந்த வருவாய் உள்ளோர்க்கான வீட்டு வசதித் திட்டம் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் உள்பட குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீட்டு வசதிக்கு வழிவகை செய்கிறது.

DR. H. V. HANDE : Sir, may I know whether it is possible for the Government to insist upon a few companies or industrial concerns in Tamil Nadu to see at least that a portion of their profits is mobilised towards building houses for the employees who are working in their concerns, whether the Government can persuade them and if the Government have so far persuaded, may I know whether they had met with any good results?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, தனியார் துறையில் உள்ள வருமானவரி செலுத்தத் தகுந்த தொழிலகங்களில் இரண்டொன்றுதான் இந்தக் கருத்துக்கு இசைவு தந்திருக்கின்றன. 1966-71 வரையில் தனியார் தொழிலதிபர்கள் எட்டு பேர்கள்தான் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். சக்தி சுகர்ஸ் நிறுவனத்தாரும் டால்மியா நிறுவனத்தாரும் இப்படிக் கட்ட முன்வந்து, கோயம்புத்தூரில் சக்தி நிறுவனத்தார் 120 சின்ன ஈரறைகள் கொண்ட வீடுகள் கட்ட முன்வந்திருக்கிறார்கள். டால்மியாபுரத்தில் 36 சின்ன அறைகள் கொண்ட வீடுகள் கட்ட முன்வந்திருக்கிறார்கள். மற்றவர்கள் சொந்தச் செலவில், விஸ்கோஸ் பாக்டரிக்காரர்கள் போன்றவர்கள். தொழிலாளிகளுக்கு வீடு கட்டுகிறார்கள். சக்தி நிறுவனத்தார் போன்றவர்களுக்கு கடன் உதவியும் கேட்டு, கொடுக்கப்படுகிறது. ஆனால் இதில் உத்வேகமான நிகழ்ச்சிகள் இல்லை.

DR. H. V. HANDE : May I know whether it is possible for the Government, just as they have constructed some houses at Thiru Vi. Ka. Nagar and Perambur for the employees of B. & C. Mills to construct houses, whether this Government is prepared to do so or is it possible for the Government to build a few more houses just like those at Thiru Vi. Ka. Nagar for the employees





of the private firms, at least for some of them, either within the City or outside, whether any such scheme is with the Government and if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, தற்போது, திட்டங்கள் இல்லை. திட்டங்கள் ஏதாவது வந்தால், அதை பரிசீலிக்கத் தயார்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது, சக்தி சர்க்கரை நிறுவனத்தாருக்கு வீடுகள் கட்ட கடன் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். கடன் தொகை எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** கோயம்புத்தூரில் சக்தி ஷுகர் என்ற தனியார் நிறுவனத்திற்கு, இந்த அரசு 120 ஈரறைகள் கொண்ட வீடுகள் 120 கட்ட ரூ. 3,06,000 கடனாகவும் ரூ. 1,53,000 மானியமாகவும் தந்திருக்கிறது.

**திரு. எ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் ஒரு சில தனியார் நிறுவனங்கள் மட்டும் முன்வந்திருப்பதாகச் சொன்னார்கள். அரசாங்கத்திடம் தனியார்கள் பல சலுகைகளைக் கேட்டு, உதவிகள் கேட்டு அடிக்கடி வருகின்ற காரணத்தால், அந்தமாதிரி சமயங்களில், சட்ட ரீதியாகச் செய்யாவிட்டாலும், ஒரு நிபந்தனையாக விதித்து, வேறு வகைகளில் சொல்லி,—அரசாங்கத்திற்கு எவ்வளவோ வகைகள் இருக்கின்றன—அப்படிச் செய்து வலியுறுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இதிலே வருமான வரி அதிகமாகக் கட்ட வேண்டியவர்கள், அப்படிப்பட்ட நேரத்தில் அவர்களாகவே முன்வருகிறார்கள். சுமுகமாகவே இது நடக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. நாங்களும் அவர்களை அணுகி உற்சாகம் கொடுத்து வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the fact that we have not even touched the fringe of the housing problem of these people, will the Government seriously think of giving some incentives to low income group house construction for employees employed in private firms or industrial concerns like giving exemption from property tax for three years if the total cost is less than Rs. 15,000 or 20,000 or exemption from income tax or recommend exemption from income tax to the Central Government, if people come forward to construct houses for their workers? Incentives like that were given in England after the Second World War. Will this Government think of that?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இது பற்றி ஹவுசிங் மினிஸ்டர்ஸ் கான்பரன்சில் பரிசீலிக்கப்பட்டது. எல்லா மாநில அமைச்சர்களும் ஒத்துக்கொண்டார்கள். மத்திய சர்க்காரில் வரிச் சலுகை துறையைச் சேர்ந்த அமைச்சர் ஒத்துக்கொண்டார். ஆனாலும், மத்திய சர்க்காரின் நிதித் துறை அமைச்சர் அதை ஏற்கவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், தற்போது, தனியார் நிறுவனம் இப்படி முன்வரும்போது, நம்முடைய அரசாங்கம் என்னென்ன மாதிரி சலுகைகள் கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு துறையின் மூலம் வீடுகள் கட்டினால் கடனாக 65% ம், 35% மானியமாகவும் கொடுக்கிறோம். தனியார் துறையில் என்றால் 50% கடனாகவும், 25% மானியமும் கொடுக்கிறோம். 25% அவர்களாகவே கொடுக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மூலக் கேள்வி தனியார் தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வீடுகள் கட்ட என்ன ஏற்பாடுகள் என்பது. இதுவரையில் ஒரே ஒரு முறை திரு. வி. க. நகர் என்ற இடத்தில் இத்திட்டத்தை அரசாங்கம் அமைத்தார்கள். அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் வந்த பிறகு, எவ்வளவு நாங்கள் வலியுறுத்தியும், அப்படிப்பட்ட அருமையான திட்டத்தை இந்த அரசாங்கம் கைவிட்டிருக்கிறது. விரிவுபடுத்த வேண்டிய திட்டம், அதை கைவிட்டதற்குக் காரணம் என்ன? உறுப்பினர்கள் இவ்வளவு வலியுறுத்திச் சொல்லும் காரணத்தால், மீண்டும் அதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அப்படிப்பட்டத் திட்டத்தை தமிழக அரசு கைவிடவில்லை. இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்பது உறுப்பினருக்கும் நன்றாகத் தெரியும். இது போன்று திருப்பூரில் வீடு கட்டும் திட்டம் போட்டிருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : The Hon. Minister for Industries stated that these matters have been discussed by the Ministers at a Conference. But I would like to know what is there to prevent the State Government from giving exemption from property tax for those people who construct houses valued up to Rs. 15,000 or does it need any sanction from the Central Government to exempt these people as a means of incentive for them to construct small houses for their employees.

THE HON. THIRU K. RAJARAM : Property tax is levied by the Corporation of Madras and not by the Government of Tamil Nadu.

THIRU K. M. SUBRAMANIAM : Not only Corporation of Madras, but all the municipalities. They can exempt with the permission and approval of the State Government.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்துதான் விடை அளிக்க வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசாங்கத்திடமிருந்து கடன் தொகைகளை பெற்று, வீடுகள் கட்டுவதற்குப் பதிலாக, வேறு வகைகளில் செலவு செய்கிறார்கள். இதை மேற்பார்வை செய்து பார்த்துத் தடுக்க, வழிவகை இருக்கிறதா?





**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையில் யாராவது வீடு கட்ட வாங்கிய பணத்தை வேறு வழியில் பயன்படுத்தாமல் இருக்க அரசு கண்காணித்து வருகிறது. தவறாக யாராவது செய்தார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரிந்தால், உடனடியாக அந்தப் பணத்தைத் திரும்ப வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 58 ஒத்திவைக்கப்படுகிறது.

*Temples in Bhavani Taluk*

* 59 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of temples under the administration of Hindu Religious and Charitable Endowments Department in Bhavani and Gobichettipalayam taluks in Coimbatore district at present; and

(b) the number of acres of dry, garden and wet lands separately owned by each of the above institutions?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

(அ) பவானி தாலுக்கா—70;

கோபிச்செட்டி பாளையம் தாலுக்கா—117.

(இ) விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையிலே பவானி தாலுகாவிலே இந்தக் கோவில்களுக்குச் சொந்தமாக, 70 கோவில்களுக்குச் சொந்தமாக நஞ்சை 710 ஏக்கராகவும், தோட்ட பூமியாக 37 ஏக்கராவும் ,வறண்ட பூமியாகச் சுமார் 623 ஏக்கராவும் இருப்பதாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல கோபியிலே நஞ்சை நிலம் 425 ஏக்கரா, தோட்ட நிலம் 31 ஏக்கரா, வறண்ட பூமி 160 ஏக்கரா இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பவானி, கோபி வட்டத்திலே இப்படி நஞ்சை பூமி குறைந்தது 1,000-ல் இருந்து 1,500 ஏக்கரா இருப்பதாகவும், இவைகள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன என்ற கணக்கு இருக்கிறது. இவைகளில் இருந்து சுமார் 11½ லட்ச ரூபாய் வருமானம் கிடைக்க வேண்டும். அந்த அளவிற்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. அந்த அளவிற்குக் கிடைப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, பட்டியலில் கண்டுள்ள நிலங்களில் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தால், கோவில்களின் ஆளுகைக்கு உட்படாமல் இருந்தவைகளை இன்றைக்கு அறநிலைய ஆணை நிர்வாகத்தின் கீழ்

---

@ 211–215ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, பொதுவாக கோவில் நிலங்களிலிருந்து வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு ஒரு கமிட்டி அமைக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கோவில் நிலங்களில் இருந்து வருகின்ற வருமானத்தை அதிகப்படுத்த அறநிலையத் துறை தக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகின்றது. குத்தகை கொடுக்க வேண்டிய குத்தகைதாரர்கள் பேரிலே ஏராளமான வசூல் நிலுவை பாக்கி இருக்கிறது. இவற்றை வசூல் செய்யவும் குத்தகையை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

**திரு. ஈ. எம். நடராசன் :** தலைவரவர்களே, பவானி வட்டத்திலே பல கோவில்களுக்கு டிரஸ்டிகள் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. அதற்கான ஏற்பாடுகளை அரசு விரைவில் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அறநிலைய ஆணைத் துறையின்கீழ் வந்து இருக்கிற எல்லாக் கோவில்களுக்கும் அறங்காவலர்களை நியமித்து இருக்கிறோம். அப்படி ஏதாவது நியமிக்கப்படாமல் விட்டுப் போயிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகவல் கொடுத்தால் அவைகளுக்கு அறங்காவலர்களை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. எம். சுரேந்திரன் :** கோவில் நிலங்களையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு கோவில்களைப் பராமரிக்கின்ற செலவுகளை அரசாங்கமே அளிப்பது நல்லது அல்லவா என்பதைப் பற்றி அரசு யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இது நல்ல யோசனைதான். ஆனால் காலம் கனிய வேண்டும்.

*Idols unearthed in Tiruvathigai*

* 60 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of idols were unearthed in Tiruvathigai near Cuddalore about 9th November 1971 ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை. 11—10—71-ல் திருவதிகை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் கோயில் அலங்கார மண்டபத்தின் தளம் அப்புறப்படுத்தப்பட்டபொழுது இரு வெண்கல நடராஜர் விக்ரகங்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டன.



**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, இன்னும் பல சிலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். நடராசர் சிலை எடுக்கப்பட்டது. இப்படி எடுக்கப்பட்ட நடராசர் சிலைகள் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கின்றனவா அல்லது அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டவர்கள் பாதுகாப்பில் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இந்த இரண்டு சிலைகளும் கோவிலுக்குள்ளேயே கண்டு பிடிக்கப்பட்டன. இந்த இரண்டு நடராசர் விக்கிரங்களும் திருவதிகை திரு வீரட்டேஸ்வரர் கோவில் அலங்கார மண்டபத்தைப் புதுப்பிப்பதற்காகத் திருப்பணிக் குழுவினர் திருப்பணியில் ஈடுபட்டபோது அங்குள்ள அலங்கார மண்டபத்தின் தளவரிசைக்குக் கீழே கண்டு பிடிக்கப்பட்டன. இந்தச் சிலைகள் மீண்டும் கோவிலிலேயே வைக்கப்பட்டுள்ளன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, இப்படிப் பழைய கால சிற்பங்கள் செஞ்சிக் கோட்டையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றைத் தோண்டி எடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டையிலே சிலைகள் இருப்பது பற்றி நமக்குத் தெரியாது. செஞ்சித் தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள் தகவல் தெரிவித்து இருக்கிறார் ஆகவே இது பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.

**திரு. கா. காளிமுத்து :** இவ்வாறு தோண்டி எடுக்கப்படுகின்ற விக்கிரகங்கள் காட்சியிலே வைக்கப்படுகின்றன. அவற்றை பொருட்காட்சியிலே வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருவதிகை திருவீரட்டேஸ்வரர் கோவிலில் தோண்டி எடுக்கப்பட்ட விக்கிரகங்கள் கோவிலுக்குள்ளேயே தோண்டி எடுக்கப்பட்ட காரணத்தினால் கோவிலுக்குள்ளேயே பழையபடி வைக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் தோண்டி எடுக்கப்படுகிற சிலைகள் கண்காட்சியில் வைக்கப்படுகின்றன. பாதுகாப்பான முறையிலே சில இடங்களில் தொல் பொருள் ஆராய்ச்சி இலாகாவிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1972 சனவரி 25

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

சிம்ஸன் கூட்டுக் கம்பெனி தொழிலாளர்களிடையே மோதல்கள் ஏற்பட்டதாக வந்துள்ள செய்தி குறித்து.

MR. SPEAKER : The hon. Member, Dr. Hande has given notice of the following adjournment motion under Rule 42 of the **Tamil Nadu Legislative Assembly Rules**:

'I move that the business of the House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the break of violence and the prevalence of a sense of insecurity among a vast section of employees belonging to the Simpson Group of Companies in Madras City.'

I have also received another notice of the following adjournment motion from the hon. Member Thiru K. T. K. Thangamani :

'The serious clash in the Sembium Units of Simpson Group yesterday 24th January 1972 causing serious doubts in the minds of workers about continued peaceful work inside the factory and need to enforce rights of 6-man Committee."

The hon. Member Thiru R. Ponnappa Nadar has also given notice of the following adjournment motion :—

'The reported clash among workers of Simpson Group of Companies at Sembium on 24th January 1972 resulting in injuries which causes grave concern for industrial peace."

The hon. Member Thiru James has also given notice of a similar motion.

Now, I call upon the hon. Member Dr. Hande to briefly explain how it comes within the purview of an adjournment motion.

DR. H. V. HANDE : Sir, I wish to refer only to a few points in support of my adjournment motion. During the last three or four months in the Simpson Group of Companies, there has been a sense of insecurity among the vast sections of the workers. I have made representations both in this House and outside and also to the Hon. Minister for Labour and the Hon. Chief Minister that the Government and the Hon. Minister should see that the activities of the particular elements which are responsible for violence are neutralised so that they can get a good name for themselves. Personally I am not interested in exploiting the situation and I do not want the Government to get a bad name. I perfectly know the mind of the Hon. Chief Minister and he abhors violence and if anybody were to say that he believed in violence I would immediately contradict him by saying that he has not properly understood him. The Hon. Chief Minister has not been properly briefed by the police officials or the officials concerned as



1972 சனவரி 25] [Dr. H. V. Hande]

to what exactly is happening. There are a group of persons who are unnecessarily holding the vast sections of the workers to ransom. Even on the 16th instant when the workers were going for duty, this group gave a lot of trouble to them and they abused them and threw soda bottles at them and the police were watching them. I would have been happy if the Hon. Chief Minister would see that the activities of this group of persons are put an end to. They might belong to D.M.K. or any other party. But they would bring discredit to the Government. I do not want to bring discredit to the ruling party.

Even yesterday morning I had a telephone call about these happenings. I had given the adjournment motion two days earlier but the Hon. Speaker had to wait for the return of the Hon. Chief Minister. Yesterday morning I had a telephone call. As the person was telephoning, suddenly he told me 'Sir, see through the glass some people are marching'; he immediately sat down and the conversation stopped. After the marching had gone, he again telephoned and told me what exactly was happening.

Day before yesterday a small section of persons, about 250 persons, were standing within the gate of Sembium. The Police were good enough and standing outside and protecting workers to enter the gate for work. But once the workers entered inside the gate, the police could not give protection. What happened? The workers were threatened by these people, 250 persons. Many of them are not even employees of Simpson and Company. They produced cycle chains and started beating. A lot of trouble took place. A serious situation had taken place. That is one thing.

There is the police station and people go and complain whenever trouble arises. But political parties go on exploiting the situation. I can give the names. I will give to the Hon. Chief Minister afterwards so that he will have a clear picture of the whole thing and so that it will enable him to take proper action, after considering the whole matter. People go to the Police Station, thereaten the Sub-Inspector or Inspector. I have got in my file the name of the person against whom the complaint was filed. I know the name of the person who had tried to exploit the situation. Things are going on like this. On December 16 a short-notice question was given by me and on December 18 it was answered by the Hon. Chief Minister. What I say is, the situation is developing because of a small group of persons creating trouble and all our discussions become infructuous even our bringing in this adjournment motion and discussions thereunder. My main idea is to place all facts before the Hon. Chief Minister. We are giving one version and the Hon. Chief Minister might be getting another version of the happenings. Let him weigh things and come to a definite conclusion.

On December 16 when the Police Commissioner was discussing with trade union leaders, and when Section 41 of the Police Act was in force, this small group of people defied the Police ban on procession and marched in procession right before the office of the Police

Commissioner. The Inspector-General of Police had asked the Commissioner of Police to take action to stop the procession. What I say is, when the ban is there, when Section 41 of the Police Act is in force, this small group of people defied the ban and marched in procession, and that too, right in front of the Office of the Police Commissioner. How did this take place? I request the Government to consider this and see that something is done to neutralise this small group, trying to create trouble.

There are some mischevous elements. In a sincere way I am telling this. I do not want to bring discredit to the ruling party. If anybody tried to bring discredit to this Government on this question, I will go the whole hog to oppose it. I will not allow others to exploit the situation and bring discredit to the Government. What I want is the Hon. Chief Minister should take prompt action to neutralise this small group creating mischief and then all the workers will be able to go to the work peacefully. If on December 16 itself, Government had acted on my suggestions, things would not have come to this stage. At that time, the workers were in a mood to return to the work, after DIR came into force. Vast majority of workers, it was not a minority, were willing to return to work. But prompt action was not taken in time. Therefore what I say is, after what had taken place yesterday, let us have proper discussion of this problem. Let the House be adjourned and let the Hon. Chief Minister hear our side. I am making this request with the best of intentions. I am personally interested in the peaceful solution of problems and I know that the Chief Minister is also interested in such a peaceful solution. I am not interested in political parties trying to exploit the situaion. I am far from it.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஸ்பீக்கர் சார், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததில் பிரதானமாக உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது நேற்று செம்பியத்தில் நடந்த சம்பவங்களையும், பல நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் அரசு தலையிட்டு, இதையெல்லாம் நடத்துவதற்காக அறுவர் கமிட்டி ஏற்பட்டது என்ற பின்னணியிலே வைத்து அடுத்து நடக்க வேண்டிய விஷயங்கள் முறையாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதையும் தான். நேற்று காலையில் நடந்த நிகழ்ச்சியினுடைய முழு விவரத்திற்கு நான் போகவில்லை. காரணம் அந்த நிகழ்ச்சியில் நேரடியாக ஐ.ஜி. அவர்களே இருந்து அதைப் பூராவும் பார்த்திருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் மூலமாக என்ன நடந்தது, யார் இம்மாதிரியாக அமைதியான முறையிலே சிம்ப்ஸன் குரூப்பிலே வேலை செய்யக்கூடாது என்று விரும்புகிறார்கள் என்பதெல்லாம் தெரிவிக்கப்படும்.

10-ம் தேதி இரவு 9 மணிக்கு மேல் தமிழக அரசினுடைய முக்கியமான அமைச்சர்களெல்லாம் சேர்ந்து மத்திய தொழிற்சங்கத் தலைவர்களோடு பேசி ஒரு அறுவர் கமிட்டியை அமைத்து, அவர்கள்



எல்லாக் காரியத்தையும் கவனிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையிலே அறுவர் கமிட்டி திருமதி அனந்தநாயகி அம்மையாரை கன்வீனராகப் போட்டு அவர்கள்தான் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த 6 பேரும் பொறுப்புள்ள தலைவர்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அப்படி அவர்கள் செயல்படுவதற்கு இடைஞ்சலாக யார் என்ன நடவடிக்கை எடுத்தாலும் இது சிக்கலைத்தான் அதிகமாக உண்டாக்கும். அம்மாதிரியான சம்பவங்கள் ஒரு தரப்பிலிருந்து வந்தது என்று மட்டும் சொல்ல முடியாது. அது இரு தரப்பிலிருந்தும் தீவிரமாக வந்திருக்கிறது. நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. மதுரையிலிருந்து நமது தொழிலாளர் நல அமைச்சர் விட்ட அறிக்கை இதற்கு உதவி செய்யவில்லை. ஒரு பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள் இவ்வளவு ஏற்பாடு செய்த பிறகு இதைச் சொல்வார்களானால் அது மேலும் சிக்கலைத்தான் உண்டாக்குகிறது. ஆகவேதான் நேற்று கூடிய கூட்டத்திலே இந்த அறுவர் குழு விடுத்த அறிக்கை இருக்கிறதே அது மிகப் பொருத்தமானதாகும். அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்பதற்கும், தொழிலாளர்கள் எல்லோரும் திரும்பி வேலைக்குப் போகவேண்டும், எங்களை நம்புங்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களிடம் இந்த ஆபிசை ஒப்படைத்து அடுத்து தேர்தலோ மற்ற விஷயங்களோ எல்லாவற்றையும் அவர்களே நடத்துவதற்கான முறையிலே அரசு ஏற்பாடு செய்தால் தான் உதவியாக இருக்கும். இந்த ஏற்பாடு செய்வதிலே தயக்கம் காட்டக்கூடாது என்பதைத்தான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இந்த சிம்ப்சன் விஷயம் பலமுறைகள் எழுப்பப்படுவதால் இந்த சபையை ஒத்தி வைத்து இரண்டு மணி நேரமாவது விவாதித்தால் பல அம்சங்களைச் சொல்வதற்கும் அடுத்தாற்போல் மேலும் சிக்கல் வராமல் இருப்பதற்கும் உதவியாக இருக்கும் என்பதால் இந்த சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

இன்று மத்தியானமே 12½ மணி முதல் 2 மணி வரையிலும் விவாதம் நடத்தலாம். அந்த முறையிலே நீங்கள் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை அனுமதிப்பீர்களானால் இன்றே இரண்டு மணி நேரம் விவாதிக்க முடியும் என வற்புறுத்திக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: The dispute in Simpson group of companies has assumed alarming proportions and it has marred the industrial peace of Tamil Nadu. It has created anxiety to the public of Tamil Nadu.

Sir, on 24th January 1972 there was reported to be a clash in which 54 persons were said to have been injured and it is also stated that out of this the condition of 32 persons is said to be serious and

[Thiru R. Ponnappa Nadar] *[1972 சனவரி 25*

some of them were admitted in General Hospital and some in E.S.I. Hospital. This has to be considered seriously and let me state briefly how it comes under Rule 42.

On 24th January 1972 it is reported that stone-throwing started near the canteen where about 3,000 employees who had reported for duty after the week-end holidays, were said to have been pelted by a group of persons who were near the canteen and it is said that the pelting became so violent that there has been a clash and there has been use of all kinds of deadly weapons. That is also reported.

It is also reported that about 300 persons gathered outside the main gate and they are alleged to have pelted the police and the vans also which were parked there. Whether all these allegations are true or not, I am not entering into the merits, but suffice it for me to say that the situation has assumed very bad and ugly proportions and it would not be proper on the part of the Government and of well-meaning trade union workers and leaders to allow the condition to drift like that. I would appeal to the Government to take prompt and effective steps for averting this trouble.

Sir, again the industrial units are also closed on account of the tension and I am sure that the six-man committee which is functioning there will have to be given more co-operation and there is lack of co-operation. I request that the Government may take prompt steps to avert all these troubles. Sir, there is no use apportioning blame on either party and I am sure that this has caused some ill-feeling among the workers and they should be protected well. I am sure that the Government would take all steps in this regard. I would request that the business of the House may be adjourned for discussing this urgent matter of public importance and the recurrence of these things may be avoided. With these words, I conclude, Sir.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டுள்ள இந்த மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களும் ஒரே விஷயத்தைப் பற்றியதும், அதில் அரசு இன்னும் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகின்ற தன்மையும் அமைந்த தீர்மானங்கள் ஆகும். இந்த விவகாரம் நீண்ட நெடுநாட்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு விவகாரம் ஆகும். டிசம்பர் 10 அல்லது 11-ம் தேதி அளவில் இந்த விவகாரத்தைப் பற்றி அனைத்துக் கட்சிகளுடையத் தலைவர்கள் மட்டத்திலும், சிம்ப்சன் நிறுவனத்தார் தொழிலாளர்கள் மட்டத்திலே அமைக்கப்பட்ட ஆக்ஷன் கமிட்டியினுடைய உறுப்பினர்கள் இடையிலும் கலந்து நான் பேசவேண்டுமென்று சட்ட மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்களும் எடுத்துச்சொன்னதின் அடிப்படையில் அவர்களையெல்லாம் நானும் தொழிலாளர் நல அமைச்சரவர்களும். தொழில் துறை அமைச்சரவர்களும், டிசம்பர் 10, 11 தேதிகளில் தொடர்ந்து



*1972 சனவரி 25]* *[டாக்டர் மு. கருணாநிதி]*

ஓரிரண்டு நாட்கள் சந்தித்து, அவர்கள் இன்னின்ன உறுதி மொழிகள் தேவை என்று கேட்டதற்கிணங்க அந்த உறுதி மொழிகளை எல்லாம் அளித்து, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விட்டுவிட்டு, ஒரு சாரார் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டுமென்ற எனது வேண்டுகோளையும் நான் விடுத்தேன்.

அதற்குப் பிறகு, என்னைச் சந்தித்த தலைவர்கள், தொழிலாளர்களைச் சந்தித்து, அவர்களையெல்லாம் வேலைக்குத் திரும்புமாறு செய்த முயற்சிகளுக்கு நான் அப்போது நன்றி தெரிவித்துள்ளேன். இன்னும் கூட நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் 16-ந் தேதி அன்று அவர்கள் வேலைக்குத் திரும்புகின்றபோது ஊர்வலமாகச் சென்ற காரணத்தால் அவர்கள் எழுப்பிய முழக்கங்களும், ஏற்கனவே தொழிற்சாலைக்குள் இருந்த வேறு தொழிலாளர்கள் எழுப்பிய முழக்கங்களுமே கலவரத்திற்குக் காரணமாக அமைந்தன. கலவரம் ஏற்பட்டு, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் தொழிற்சாலையிலிருந்து உடனடியாக வெளியேறி, மற்றவர்கள் தொழிற்சாலைக்குள்ளே இருந்து, குழப்பம் விளைவித்திருக்கிறார்கள். அதனால் இலட்சக் கணக்கான ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அப்போது நான் இரண்டு லட்சம் ரூபாய் சேதம் என்று சொன்னேன். அதற்குப் பிறகு எடுத்த கணக்கின்படி ஆறு, ஏழு லட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த விபரங்களையெல்லாம் நான் சட்டப் பேரவையிலும், மேலவையிலும் 17-ந் தேதி அன்று விளக்கிக் கூறிய பிறகும் கூட இவ்வளவு அமளிகள் நடைபெற்றிருக்கின்றன.

நான் அளித்த உறுதிமொழிகள் இன்னும் இருக்கின்றன. வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கின்ற பகுதியினர் மீண்டும் இந்த உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டு வேலைக்குத் திரும்ப வேண்டும். அமைதி காத்திட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன் அந்தக் கலவரத்திற்கு காரணமானவர் யார் யார் என்று கூட காவல் துறையினர் தேட முயற்சி செய்யவில்லை. அப்படி தேடும் முயற்சியில் ஈடுபட்டால் அது கூட அந்த நேரத்தில் மீண்டும் ஒரு அமளியை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்துவிடும் என்பதற்காக காவல் துறையினர் அந்த கலவரத்திற்கு யார் யார் காரணம் என்று தேடும் முயற்சியில் ஈடுபடவில்லை. நான் இப் பேரவையிலும், மேலவையிலும் அளித்த விளக்கத்தின்போது இந்தக் கருத்தையும் குறிப்பிட்டிருக்கிறேன்.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சேதம் அடைந்த பகுதிகளைப் பார்வையிட்டு வந்தார்கள். அங்கு ஏற்பட்டிருக்கின்ற சேதத்தைப் பார்க்கும்போது, அதை செப்பனிட்டு சரி செய்வதற்கு ஒரு வார காலமாவது ஆகும் என்று சொன்னார்கள். ஆகவே, ஒவ்வொரு தொழிற்சாலையாகத் திறக்கப்படும் என்று சொன்னேன். அதை இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 சனவரி 25

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்றவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அதேபோல் மேலவையிலே பேசும்போது, அவர்களும் அதை ஏற்றுக் கொண்டதோடு, மேலவைத் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் ஒரு திருத்தத்தையும் சொன்னார்கள். பணியிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்ற திருத்தத்தைச் சொன்னார்கள். தொழிற்சாலைக்கு உள்ளே காவல் துறை—போலீசார் பாதுகாப்பு உடனடியாக வேண்டும் என்று என்னிடத்தில் கூறினார்கள். நான் உடனடியாக சொன்னேன், போலீஸ் பாதுகாப்புத் தரப்படுமென்று. ஒவ்வொரு தொழிற்சாலையாகத் திறக்கப்படும் என்பதையும், வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு--போலீஸ் பாதுகாப்பு—தரப்படும் என்பதையும் எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

இவ்வளவும் நடந்து முடிந்த பின்னால், 'இவர்கள் கொடுத்த உறுதிமொழிகளால் நாம் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதா ?' என்ற உள்நோக்கத்தோடோ அல்லது வேறு காரணம் கற்பித்தோ வெளியே உள்ள தலைவர்கள், தொழிற்சாலைக்கு உள்ளே போலீஸ் இருக்கக்கூடாது; எல்லாத் தொழிற்சாலைகளையும் ஒன்றாகத் திறக்க வேண்டும்; ஒவ்வொரு தொழிற்சாலையாகத் திறக்கப்பட்டால் நாங்கள் வேலைக்குத் திரும்பமாட்டோம் என்று அறிக்கைகளை வெளியிட்டார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். 16-ந் தேதி சம்பவத்திற்குப் பின்னால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 16-ந் தேதியையொட்டி நான் அளித்த உறுதிமொழிகளும் திரும்பப் பெறப்படவில்லை.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கருத்துப்படி, அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, பணிபுரிவோர்க்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. நான் ஏற்கெனவே அளித்த உறுதிமொழிகளுக்குப் புறம்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக வெளியே உள்ள தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிற்சாலைக்கு உள்ளே போலீஸ் இருந்தால் ஒழுங்காக பணியாற்ற முடியாது ; ஒவ்வொரு தொழிற்சாலையாகத் திறக்கப்பட்டால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்காது ; அதனால் யாரும் வேலைக்குச் செல்லத் தேவையில்லை என்றெல்லாம் கூறினார்கள். அதனால் மீண்டும் தொழிலாளர் நல அமைச்சரவர்களும் நானும் 'நாங்கள் ஏற்கெனவே அளித்துள்ளபடி எல்லா பாதுகாப்பும் அளிக்கப்படும். வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள்' என்ற வேண்டுகோளை விடுத்து நல்ல முறையிலே கேட்டுக்கொண்டோம் வேண்டுகோள் விடுத்து நான்கு நாட்கள் ஆகியும் யாரும் வேலைக்குச் செல்லவில்லை.

பிறகு பத்திரிகை நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள், 'நீங்கள் விடுத்த வேண்டுகோளுக்குப் பிறகும் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லையே. இனி என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார்கள். என் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாமல்



1972 சனவரி 25] [டாக்டர் மு. கருணாநிதி]

போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்; அதனால் அது என் கையை விட்டு போய்விட்டதாகத்தான் அர்த்தம் என்று நான் சொன்னேன். அதன் பிறகு சிம்ப்சன் தொழில் நிறுவனத்தார், வேலைக்குத் திரும்பாத தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக நோட்டீஸ் விட்டார்கள். அதன்படி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் நான்கு ஆயிரம் அல்லது ஐயாயிரம் தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

280 தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து, வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். மேற்கொண்டும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தார்கள். உடனடியாக சிம்ப்சன் தொழில் நிறுவனத்தாரோடு தொடர்பு கொண்டு, எல்லா தொழிலாளர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன் பிறகு மீண்டும் நடவடிக்கை எடுப்பதை நிறுத்திக்கொண்டார்கள்.

இதற்கிடையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள், அடுத்து உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார்கள். உண்ணாவிரதம் இருப்பதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் அறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு அருகில்—சிலையின் அடித்தளம். எந்தக் கட்சிக்காரர்களுக்குக் கோபம் வந்தாலும் அறிஞர் அண்ணா அவர்கள் சிலைதான் அவர்கள் கண்ணில் படுகிறது. அதுதான் போராட்டம் நடத்துவதற்குரிய இடமாக அவர்களுக்குத் தென்படுகிறது. உள்ளபடியே இது எனக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கின்றது.

ஒரு நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டு நலிந்துகொண்டிருந்த அந்த காலத்திலேயும் சட்டசபைக்கு வந்து செல்வார்கள். ஒரு சமயம் காங்கிரஸ் நண்பர்கள் ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலத்தில் வந்தவர்கள் அண்ணா அவர்களின் சிலைக்கருகில் வந்தவுடன் கறுப்புத் துணியைத் தலையில் போட்டு, முக்காடிட்டுக் கொண்டு வந்தார்கள். அன்று அண்ணா அவர்கள் சட்டசபையிலே பேசுகின்றபோது, "நான் இறந்துபோன பிறகு எப்படி என்னுடைய துக்கத்தைக் கொண்டாடுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்கு ஒத்திகை பார்ப்பது போல் இந்த ஊர்வலம் அமைந்திருக்கிறது" என்று உருக்கமாகச் சொன்ன அந்த வார்த்தைகளை நான் இன்னும் மறந்துவிடவில்லை; இந்த மன்றமும் மறந்திருக்காது ; அரசியல் நாகரிகம் தெரிந்தவர்களும் அதை மறந்திருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். அதைப் போலவேதான் இப்போதும் அண்ணா சிலைக்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பது என்கிற அளவுக்கு ஒரு தீர்மானத்தைத் தீட்டிக் கொண்டு அண்ணா சிலைக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். அண்ணா சிலை அவ்வளவு புனிதமானதா, அவ்வளவு மரியாதைக்குரியதா, அவ்வளவு மதிப்புக்குரியதா என்பதாக எல்லாம் வாதாடு

கிறவர்கள்—நான் அதைப்பற்றிக்கூட இங்கே வாதாட விரும்பவில்லை. ஆனால் அன்றைக்கு இருக்கிற இடம் எவ்வளவு நெருக்கடியான இடம் என்பதை நாம் அறிவோம். ஐம்பது பேர் அங்கே உண்ணாவிரதம் இருந்தால் அதைப் பார்க்க ஐநூறு அறுநூறு பேர்கள் கூடினால் அது போக்குவரத்து நெரிசலை எந்த அளவுக்கு உண்டாக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும். ஆகவேதான் அங்கே உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து பல பஸ்கள் ஒன்றுக்கும் பயனற்றதாகப் போகக்கூடிய அளவில் கொளுத்தப்பட்டன.

அந்தச் சமயத்தில் மத்தியில் இருந்து ஒரு அமைச்சர் வந்தார். மாண்புமிகு மோகன் குமாரமங்கலம் அவர்கள்தான் வந்தார்கள். பொதுவாக இது போன்ற கிளர்ச்சிகள் நடக்கும்போது மத்தியில் இருந்து வருகிற அமைச்சர்கள் என்ன சொல்வார்கள்? "இது போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டாம்" என்று அறிக்கை விடுவதைத்தான் நாம் கேட்டுப் பழக்கம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த காலத்தில் மத்தியில் இருந்து வந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கூட வானொலியில் "இது போன்ற கிளர்ச்சியில் ஈடுபடவேண்டாம், பஸ்களைக் கொளுத்துவது, ரயிலைக் கொளுத்துவது என்கிற செயலில் ஈடுபடாதீர்கள்" என்பதாகத்தான் பேசினார்கள். இன்னமும் எனக்கு நினைவு இருக்கிறது. ஒரு வேளை இங்கே ஆளுகிற கட்சியாக இருப்பதே மத்தியிலும் ஆளும் கட்சியாக இருந்தால்தான் அப்படிப் பேசத் தோன்றும் போலிருக்கிறது. அங்கு ஒரு கட்சி—இங்கு ஒரு கட்சி என்கிற நிலையினாலோ என்னவோ—மத்தியில் இருந்து வந்த அமைச்சர், எப்போது வந்தாலும் எங்களை நேரில் சந்தித்துப் பேசுவதை வழக்கமாக உடையவர்—இந்த முறை அந்த வழக்கத்தைக் கைவிட்டு நேரிடையாகத் தொழிலாளர்களிடத்தில் சென்று "எல்லாம் மத்திய அரசு பார்த்துக் கொள்ளும்" என்பதாக தொழிலாளர்களை மேலும் தூண்டிவிடுகின்ற வகையில் பேசிச் சென்றார்கள். தொழிலாளர்களும் "மத்திய அரசின் ஆதரவு நமக்கு இருக்கிறது" என நினைந்து கிளர்ச்சியில் ஈடுபடும் வேகத்தையே காட்டத் தொடங்கினார்கள்.

அதற்குப் பிறகு ஏற்பட்ட சலசலப்பு—சம்பவங்கள்—அதன் காரணமாக டெல்லியில் உள்ளவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி மத்திய தொழிற் சங்கத் தலைவர்கள்—டெல்லியில் இருந்து வந்தவுடன் என்னையும் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களையும், தொழிலாளர் நல அமைச்சர் என். வி. என். அவர்களையும், தொழில் அமைச்சர் மாதவன் அவர்களையும் சந்தித்துப் பேசி—நாங்கள் ஒரு முடிவுக்கு வந்த நிலையில், அறுவர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அறுவர் குழுவும் பணியாற்றும், யூனியனும் இருக்கும் என்பது அப்போதே முடிவு செய்யப்பட்டது. மேலும் தனித்தனியாக யாரும் எதுவும் பத்திரிகைகளில் அறிக்கை விடுவது இல்லை



என்றும் எதைப்பற்றியும் பேசி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு பொதுவாக செய்தியாகப் பத்திரிகைக்கு அறிக்கை அளிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால் மறுநாளே வெற்றி விழா என்று தொடங்கினார்கள். பிறகு அதைப் பற்றி விமர்சனங்கள் எல்லாம் வந்தன. தொழிலாளர்களிடத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக கிளர்ச்சி மனப்பான்மையை ஏற்படுத்த இந்த அறிவிப்புகள் காரணமாக இருந்தன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இதற்கிடையில் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, தொழிலாளர்கள் அமைதியான முறையில் இனி வேலை செய்வார்கள் என்று நினைத்திருந்த நேரத்தில் தான் 'க்ரூப் லீடர்கள் வேலை செய்வதில்லை, அவர்களும் வேலை செய்ய வேண்டும்' என்கிற குற்றச்சாட்டு எழுந்தது.

ஆனாலும் இது பற்றி அறுவர் குழு கன்வீனர் திருமதி அனந்தநாயகி அவர்கள் என்னிடத்தில் நேரில் வந்து கேட்ட போது கூட நான் சொன்னேன், "க்ரூப் லீடர்கள் வேலை செய்வது உண்டா இல்லையா என்கிற விஷயம் எனக்குத் தெரியாது. க்ரூப் லீடர்கள் இது வரை வேலை செய்வது இல்லை என்றால் இப்போது அவர்களை வேலை செய்யச் சொல்வது--பின்னால் க்ரூப் லீடர்கள் வேலை செய்தே ஆகவேண்டும் என்கிற நிலைக்குக் கொண்டுபோய் விட்டாலும் விடும். ஆகவே, இதைப் பற்றி விசாரித்து நான் கூறுகிறேன்" என்பதாக.

உடனேயே அதுபற்றி நிர்வாகிகளை அழைத்துப் பேசினேன். அவர்கள் "க்ரூப் லீடர்கள் வேலை செய்வதும் உண்டு. வேலை செய்யாமல் இருப்பதும் உண்டு. ஆனால் க்ரூப் லீடர்களும் வேலை செய்ய வேண்டும் என்பதுதான் சட்டம்" என்று சொன்னார்கள். நான் உடனேயே அவர்களிடம் "இப்போது மரபு பற்றி எதுவும் பேச வேண்டாம். க்ரூப் லீடர்களும் வேலை செய்ய வேண்டும் என்பது சட்டமானால் சட்டப்படியே செய்யுங்கள். வேலை செய்யாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக அறிவித்து விடுங்கள்" என்று சொன்னேன்.

அவர்களும் 20-ஆம் தேதி "யார் வேலை செய்யாவிட்டாலும்—க்ரூப் லீடர்கள் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட கிளர்ச்சியை மனதில் வைத்துக்கொண்டே—அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்பதாக நோட்டீஸ் போர்டில் அறிவிப்புச் செய்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகும் 21, 22 ஆம் தேதிகளில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது. வேலைநிறுத்த காலத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் வெளியே நிற்பதும்—வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் உள்ளே இருப்பதும் வழக்கமாகிவிட்ட ஒன்றாகி விட்டது.

நான் போலீஸ் கமிஷனரிடத்தில் அறுவர் குழுவைக் கலந்து கொண்டு ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்குங்கள் என்று சொன்னேன். அவரும் அறுவர் குழுவினருடன் பேசி இருக்கிறார்கள். வந்து உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்கிறவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டபோதும், எங்களைக் கலந்து வேலைநிறுத்தம் நடைபெறவில்லை. நாங்கள் வந்து சொன்னால் எங்கே கேட்கப் போகிறார்கள், நாங்கள் வருவதற்கு இல்லை என்று கூறிவிட்டார்கள்.

அதற்குப் பிறகுதான் ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்கிற அடிப்படையில் திரு. ராமமூர்த்தி அவர்களைக் கூப்பிட்டு கொஞ்சம் வந்து அமைதியை ஏற்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். அவரும் அன்றைக்குச் சென்று தொழிலாளர்களுடன் பேசியிருக்கிறார். தொழிலாளர்கள் இரவு வெளியே வர மறுத்தபோது அவரும் அவர்களுடன் இரவு அங்கே தங்க தக்க வசதிகள் எல்லாம் அவருக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. காலையில் தான் வெளியே வந்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காகத்தான் யூனியன் தலைவர் காட்டூர் கோபால் அமைதி ஏற்பட வழிவிட வேண்டும் என்பதாக யூனியன் தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொண்டுவிட்டார்கள்.

அதற்குப் பிறகு நேற்றையதினம் தொழிற்சாலையைத் திறந்தால் அமைதியான முறையில் செயல்படுமா என்பதை அறுவர் குழு கன்வீனரைக் கலந்து பேசிய பிறகுதான் அந்தத் தொழிற்சாலை அதிபர் அதைத் திறக்க முடிவு செய்தார். அதன்படி நேற்றைக்குத் தொழிற்சாலை திறக்கப்பட்டது.

நம் எல்லோருடைய கையையும் மீறி சிலபல காரியங்கள் நேற்று நடைபெற்று இருக்கின்றன. அதை யார் எந்த வகையில் சொன்னாலும் சிலவற்றை நாமே சொல்ல முடியாத நிலையில் இருப்பதனால்தான் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து உட்கார்ந்து பேசினால் ஒருவருக்கொருவர் உண்மை நிலையை நன்றாகப் புரிந்துகொண்டு ஒரு அமைதியையும், ஒழுங்கையும் உருவாக்க முடியும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று நடந்த சம்பவத்தைப் பார்த்தால் தெரியும். முதல் ஷிப்டில் வேலை செய்பவர்கள் மட்டும் வரவில்லை. 3 ஷிப்டிலும் வேலை செய்பவர்கள் சேர்ந்து மூவாயிரம் பேர்களாக முன் கூட்டியே பேசி திட்டமிட்டுக்கொண்டுதான் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் 200 பேர்கள் ஊர்வலமாக வந்ததாகச் சொன்னார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். ஊர்வலமாக வரக்கூடாது என்கிறதடை இருந்தும் கூட காவல்துறையினர் அவர்களைப் பாதுகாப்பாகத்தான் அழைத்து வந்திருக்கிறார்கள். உள்ளே நுழைந்தார்கள். கலவரம் ஏற்பட்டது. இன்றையதினம் 54 பேர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மற்ற கட்சியைச் சார்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள் என்றால் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் போடுகிறார்கள். ஆனால் தாக்கப்பட்டவர்களில் 50 பேர்களுக்கு மேல் தி.மு.க. சார்புடைய தொழிலாளர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. பெயர்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. நாம் தொழிலாளர்களிடையே தி.மு.க., கம்யூனிஸ்டு, காங்கிரஸ், சுதந்திரா என்று பிரித்துப்பார்க்க வேண்டியதில்லை. ஐம்பது பேர்களுக்கு மேல் தொழிலாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தி.மு.க. சார்புடைய தொழிலாளர்கள் பெரும்பாலானவர்கள் இங்கே தாக்கப்பட்டிருக்கிறபோது அதை மூடி மறைக்க வெகு முனைப்பாக கெட்டிக்காரத்தனமாக இருக்கிற பத்திரிகைகளைப் பொறுத்தவரையில்—அவர்களது கெட்டிக்காரத்தனத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் நோக்கத்தோடு சில பேர்கள் இந்த அறுவர் குழுக்கூட சரியான முறையில் செயல்படக்கூடாது என்று காரியங்கள் செய்கிறார்கள். இந்த அறுவர் குழுவில் தமக்கு இடமில்லையே என்கிற காழ்ப்பு உணர்ச்சியோடு செய்யப்படுகிற காரியங்களையும் நான் அறியாமல் இல்லை. அறுவர் குழுவில் உள்ளவர்களுக்கே இந்த உண்மை தெரியும் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கு உண்மை தெரியும் என்பது எங்களுக்கும் தெரியும்.

நேற்று காலையில் கூட அறுவர் குழு கன்வீனர் என்னைச் சந்தித்தார்கள். அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். நான் அப்போதே அவர்களிடம் சொன்னேன். என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நீங்களே சொல்லுங்கள் என்பதாக—எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் என்று தீர்மானம் போடப்போவதாகவும் சொல்லிச் சென்றார்கள். அத்தகைய தீர்மானம் வரும் என்று மாலைப் பேப்பரையும் பார்த்தேன். காலைப் பேப்பரையும் பார்த்தேன். ஆனால் பொதுவான தீர்மானம் தான்—அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இருக்கிறது. என்ன நடவடிக்கையை அரசு எடுப்பது? ஏதாவது எடுத்தால் உடனேயே நாளைக்கு அரசு இதுபோன்ற கடுமையான நடவடிக்கையை எடுத்தது சரியல்ல என ஒத்திவைப்புத்தீர்மானம் வரலாம். ஒழுங்கு, அமைதி ஏற்படவேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம்.

நம்முடைய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அரசு துரிதமாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு மேலும் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து நீடிக்குமானால் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையிலும், சட்டங்கள் இருந்தாலும்.

'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற அளவுக்குத்தான் கைது செய்யப்பட்டவர்களையெல்லாம்—யாரும் கோரிக்கை விடுவதற்கு முன்பே—விடுதலை செய்வதற்கும், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களையெல்லாம் நிர்வாகிகளை அணுகி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டு மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளச் செய்திருக்கிறது, அதேபோன்று சஸ்பென்ட் செய்யப்பட்டவர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அளவில் நிர்வாகிகளோடு பேசி அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்து இருக்கிறோம். இவ்வளவுக்கும் பிறகு நேற்றைய நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னார் இன்னார் தாக்கினார்கள் என்ற விவரங்கள் வருகின்றன, ஒருவருடைய பெயர் நாடோடி ஜெயராமன் என்ற தகவல் வந்திருக்கிறது. எனவே, சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறுவர் குழு ஆலோசனையின்படி அதனை அரசு ஆலோசித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு மேலும் இதிலே விவாதங்கள் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். **வணக்கம்.**

DR. H. V. HANDE : Sir, I would be very happy if the Hon. Chief Minister would give a reply on this point. The procession which I mentioned was not intended to incite anybody. The processionists were little scared or afraid that if they came in singles or two's they would be beaten and that is why they came in a procession. I quite agree with the Hon. Chief Minister that procession should be avoided. But he should give an assurance that no such thing will take place.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** ஊர்வலத்திற்கு வருகின்றவர்கள்—அவர்களே சொன்னார்கள், சிலவற்றைத் தெரிந்துகொள்வதற்காக வாய்ப்பும் வசதியும் முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு என்று—எனவே நான் சொல்கிறேன் அவர்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும்—ஊர்வலத்திலே வருகின்றவர்கள் முன்னாலேயே என்ன என்ன செய்யவேண்டுமென்று பேசி முடிவெடுத்துக்கொண்டு தான் வந்திருக்கிறார்கள். 54 பேர்கள் வரையில் காயமுற்றிருக்கிறார்கள். ரத்தம் தோய்ந்த சட்டையோடு கோட்டைக்கு வந்தார்கள், நாங்கள் பார்த்தோம். அவர்களிலே இரண்டு, மூன்று பேர்கள் படுகாயப்பட்டு இருக்கிறார்கள். 50 பேர்கள் சிறு சிறு காயங்கள் பட்டிருக்கிறார்கள். எனவே. அவர்கள் கூடிப்பேசிக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள். கேட்டால் கல் எறிந்தார்கள். அடித்தோம் என்று சொல்கிறார்கள். யார் யார் குற்றவாளிகள் என்று கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அறுவர் குழு மீண்டும் சந்தித்து—வேண்டுமானால் எங்களையும் மீண்டும் சந்தித்து—எடுக்கவேண்டிய முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



THIRU R. PONNAPPA NADAR : Sir, there is lack of co-operation among the six-men Committee. So will this Government take prompt and effective steps to see that the election for the Union is conducted at least before March!?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** தேர்தல் விரைவில் நடைபெறவேண்டுமென்ற முறையிலேதான் யூனியன் தலைவர் கோபால் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்து அவரும் நிர்வாகிகளும் பதவியிலிருந்து விலகியிருக்கிறார்கள். தேர்தல் மார்ச்சு மாதம் நடைபெறவேண்டுமென்றுதான் அவரும் சொன்னார். நான் ஏற்கனவே அறிவித்தபடி—மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்று அறிவித்திருந்தேன்—அவர்களும்தான் அறிவித்தார்கள். அதைக்கூட எப்படி அவர் அறிக்கை விடலாம் என்று பலத்த கண்டனங்கள் தெரிவித்தார்கள். இப்படி ஒருவருக்கு ஒருவர் அறிக்கைகள் விடுவது—அறுவர் குழுவிற்கு உறுப்பினர்களை வழங்கியவர்கள் விடுவது தான்--தவறான எண்ணங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

***திரு. கே. டி. கே. தங்கமணி :*** திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்கள் சார்பில் இந்தக்குழுவில் இடம்பெறுகின்ற திரு. மா. வெ. நாராயணசாமி அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்களா? அவரைத் தொடர்ந்து பணியாற்றும்படி அரசு கேட்டுக் கொள்ளுமா?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து பணியாற்றுவேன் என்று. இன்று காலையிலே கூட தொடர்ந்து பணியாற்றுவேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். அறுவர் குழு என்று ஒரு குழுவை நியமித்துவிட்டு அதனுடைய தலைவர்கள் தனித்தனியாக அறிக்கைகள் விடுவது நல்லதல்ல என்றுதான் தெரிவித்திருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று. மதுரையிலே சில நிருபர்கள், எல்லோரும் அல்ல, சில நிருபர்கள் பற்றி அவர்களுக்கே தெரியும் அவரைக் கேட்டிருக்கிறார்கள். உடனே நான் அவரோடு தொடர்பு கொண்டு என்ன அறிக்கை வெளியிட்டீர்கள் என்று கேட்டேன். அவர்களும் சொன்னார்கள். குரூப் லீடர்கள் வேலை செய்யலாமா வேண்டாமா என்பது எனக்குத் தெரியாது, சென்னையிலே பார்த்துத்தான் சொல்லவேண்டுமென்று சொன்னேன் என்று சொன்னார்கள். எனவே அதைத்தான் பத்திரிகைகள் தவறுதலாகப் போட்டு இருக்கின்றன. நாராயணசாமி தொடர்ந்து பணியாற்றுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திருமதி த. ந. அனந்தநாயகி :*** அறுவர் குழுவின் கன்வீனர் என்ற முறையிலே சிலவற்றை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள், எல்லோரும் சுமுகமாக வேலைக்குச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளாமல் இருக்கிறார்கள்,

என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் அவர்கள் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், எல்லா தொழிற் சங்கத் தலைவர்களையும் தொழிலாளர்களையும் தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். யார் தகராறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் தெரிவித்திருக்கிறோம். தேர்தல் சுமுகமாக நடப்பதற்கு அரசாங்கம் எல்லாவிதமான ஒத்தாசைகளையும் செய்யவேண்டும். வோட்டர் லிஸ்ட் எல்லாம் அவர்களிடத்திலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் பெற்றுத் தரவேண்டும், தேர்தல் சுமுகமாக நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா ஒத்தாசைகளையும் செய்துகொடுத்தால் அதைப்பெற்றுக் கொண்டு தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு அறுவர் குழு காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் கோபால் ராஜிநாமா செய்தார்கள், யூனியன் நிர்வாகிகளும் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். உடனே அறுவர் குழுவினர் என்னையோ அல்லது தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையோ யூனியன் கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டிருந்தால் செய்திருக்கலாம். அப்படிச் செய்வதற்கு முன்பே திரு. மணிவர்மா அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். 'ஏன் ஒப்படைக்கவில்லை?' என்று. நாங்கள் ஒப்படைத்த பிறகு நாங்கள் சொல்லித்தான் ஒப்படைத்தோம் என்று காட்டிக்கொள்வதற்காகத்தான் அப்படிச் செய்கிறார்கள். சுமுகமாக தேர்தல் நடைபெறுவதற்கு அறுவர் குழுவுக்கும் அரசாங்கம் எல்லா ஒத்துழைப்பையும் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, அவற்றிற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

### (3) ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கொண்டுவந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை ஆதரித்து . . .

(திரு. எம். சுரேந்திரன் அவர்கள் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுரேந்திரன் அவர்கள் இப்படி எழுந்து கொள்ளக்கூடாது. அவசரத் தீர்மானங்கள் என்பது சபாநாயகர் அவற்றை அவசரத் தீர்மானம் என்று கருதினால்தான் இந்த அவைக்கே கொண்டுவரலாம். நான் கொஞ்சம் தாராளமாக இதைப் பரிசீலனை செய்யலாமா என்று காட்டுகிற பெருந்தன்மையை ஒரு உரிமையாகக் கருதிக்கொண்டால் அவசரத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று ஆகிவிடுகிறது.





**திரு. எம். சுரேந்திரன் :** ஏதாவது அவசர காரணங்கள் இருக்கும் பொழுதுதான் அவசரத் தீர்மானங்கள் கொண்டு வருகிறோம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய அவசரத் தீர்மானம் என்னுடைய அறையிலேயே நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரம் உங்களுக்கு வந்து சேரும்.

**திரு. எம். சுரேந்திரன் :** நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குச் சொல்லியிருந்தால் நான் இங்கே எழுப்பியே இருக்க மாட்டேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விதிமுறைகள் இருக்கின்றன. உங்களை இப்பொழுது பேச அனுமதித்ததே சபாநாயகர் செய்த பெரிய குற்றம். இன்னும் கொஞ்சம் தாராளமாகப் பார்க்கலாமா என்று எண்ணியிருந்த தாராள பெருந்தன்மையை உரிமையாகக் கொண்டுவிட கூடாது, உங்களை மட்டும் சொல்லவில்லை, பொதுவாக எல்லா உறுப்பினர்களுக்குமே சொல்லிக் கொள்கிறேன். அவசரத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது என்றால், அந்த விவரம் இனிமேல் வேகமாக உறுப்பினர்களுக்கு வந்து சேரும். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட 'என்னுடைய அவசரத் தீர்மானம் என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று' என்று கேட்டார்கள், அப்படிக் கேட்பதற்கான விதிமுறைகள் கிடையாது. சபாநாயகர் அறையிலே நடப்பதெல்லாம் அம்பலத்திற்கு வரக்கூடாது. அறையிலே முடிய வேண்டியதை அம்பலத்திலே சொல்வதைப்போலத்தான் அமைந்திருக்கிறதே தவிர உரிமையின்பாற்பட்டதாக வராது. உங்கள் தீர்மானத்தைப் பற்றிய தகவல் உங்களுக்கு ரொம்ப சீக்கிரமாக வந்து சேரும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கொண்டு வந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் பேச விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் முதலில் நாட்டிற்கு ஏற்பட்ட தொல்லையையும், நாடு அந்தத் தொல்லையிலிருந்து விடுவிக்கப்பட்டதையும் குறிப்பிட்டு அடுத்த முதல் கட்டமாக ஆளுநர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், வேளாண்மைத்துறையில் நமது அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பயனாக கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 3 இலட்சம் டன்னுக்கு மேலாக உணவு தானிய உற்பத்தியில் நமது அரசு வெற்றிபெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் சொல்ல வேண்டுமென்றால். அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெரு முயற்சிதான் ஆகும். உரம் வழங்குதல், தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வழி செய்தல், நீண்ட கால, குறுகிய காலக் கடன்கள் வழங்குதல் போன்ற கடன்களை விவசாயிகளுக்கு

[திரு. என். இராஜாங்கம்] [1972 சனவரி 25

அளித்ததன் மூலம் நமக்கு 3 லட்சம் டன் அளவிற்கு உணவு உற்பத்தியில் அதிகமாகக் கிடைத்திருக்கிறது என்று நாம் பெருமை கொள்ளலாம்.

அடுத்து, வேலை வாய்ப்பிற்குரிய அரசாங்கத்தின் கொள்கைகள். வேலைவாய்ப்புக்கு இரண்டாயிரம் பேர்கள். இரண்டாயிரம் பேர்கள் என்று அழுத்தந்திருத்தமாக ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். 2,000 என்றால் சாதாரணமாக நினைத்து விடுகிறார்கள். இரண்டாயிரம் பட்டதாரிகளுக்கு அவர்கள் வாழ்வதற்கு ஆதாரங்களைச் சேகரித்துக் கொள்ள, வறுமையிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு வழிகாட்ட அரசாங்கம் பெருமுயற்சியெடுத்துக்கொண்டால் அதற்கு மேலும் மேலும் ஊக்கம் கொடுக்காமல் கேலியாகப் பேசுகின்ற முறையில் உள்ளதை இந்த மன்றம் அறியும். ஆனால் அதுபோதுமானது என்று அரசு கருதுகிறதா என்றால், இல்லை. இன்னும் எத்தனையோ பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகளுக்கு, இடைப்படிப்புக்காரர்களுக்கும் தொழில்வாய்ப்பைச் செய்ய வேண்டிய நிலை இந்த அரசாங்கத்திற்கு மட்டும் அல்ல, இந்திய உப கண்டத்திற்கே இருக்கிறது, ஏன் இந்திய அரசுக்கும் இருக்கிறது. உலகத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை நாடு அறியும். இருந்தாலும் நமது தமிழக அரசு எந்த அளவிற்குத் தன்னுடைய நிதி வசதி இருக்கிறதோ அந்த அளவிற்குள்ளேயிருந்து அதிலே முன்னேற்றமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்கு முதல்படியாகத்தான் இந்த 2,000 இளைஞர்களுக்கு அளித்து வழிகாட்டியாக இப்பொழுது அமைந்திருக்கும் திட்டம் இருக்கிறது.

வேலைவாய்ப்புக்களைப் படித்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற மற்றொரு திட்டமும், பொதுத்துறையில் சுமார் ரூபாய் 21.35 கோடிக்கு முதலீடு செய்து அதன் பயனாக வேலைவாய்ப்புகளை ஓரளவிற்குச் சரி செய்து கொள்ளலாம் என்ற திட்டத்தை நம்முடைய அரசு உருவாக்கி இருக்கிறது.

அடுத்து, பெரும் திட்டம் ஒன்றை நமது தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது தூத்துக்குடி உரத்தொழிற்சாலைத் திட்டம். அதிலே கிடைக்கும் உபபொருள்கள் ஆகியவற்றிலே 100 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்வதாக இப்பொழுது நிலை ஏற்பட்டிருக்கிறது. 100 கோடிக்குமேலே நாம் முதலீடு போட்டு அந்தத் திட்டத்தை உருவாகினால் எத்தனையோ பல்லாயிரக்கணக்கான வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்று நமது அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

(திரு. எஸ். முருகையன்—தலைமை)

அதுமட்டுமல்லாமல் தொழில்துறையில் தொழிலில் எப்படி அமைதி நிலவுகிறது என்பதற்கு நம் உபகண்டத்தில் உள்ள எல்லா மாநிலங்களையும் எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் தொழில்



1972 சனவரி 25] [திரு. என். இராஜாங்கம்]

துறையில், எங்கோ ஒன்றிரண்டு தற்பொழுதைய நிகழ்ச்சிகளாகயிருந்தாலும் கடந்த ஆண்டு தொழில் தன்மை எப்படியிருந்தது, இப்பொழுது தொழில் கூடங்களை எப்படி அமைக்க இருக்கிறோம் என்பதையும் நாடு மறப்பதற்கில்லை.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு காட்டி வரும் சலுகைகள், இப்பொழுது நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குத் தெரிவித்த அந்தத் தகவல்களிலிருந்து தமிழக அரசு தொழிலாளர் நலனில் எப்படி நடந்து கொள்கிறது என்பதற்கு அதுவே நமக்கு எடுத்துக்காட்டாக அமையும் என்பதை நாடு அறிந்திருக்கிறது.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்கு அரசாங்கம் செய்யும் உதவிகளையும், மேலும் செய்து கொடுக்க திட்டங்களையும் நமது அரசு தீட்டி வருகிறது என்பதை அறிவோம். பொருளாதார நிலையிலே தாழ்ந்த பிற்பட்டவர்களுக்கு, பள்ளியிலே, படிப்பிலே, தொழிலிலே, உத்தியோகத்திலே உயர்வு தர வேண்டுமென்ற சமதர்ம நிலையில், அந்தக் கொள்கையை உருவாக்கி பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒரு நல இலாக்காவை நிறுவி, அந்த இலாக்கா மூலம் படிப்பதற்கான வசதி. தொழில் வசதி மற்ற உத்தியோக வசதிகளை அந்த இலாக்கா, 20, 25 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே செய்திருக்க வேண்டிய ஒன்றை நமது அரசாங்கம் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறது என்று பிற்பட்ட மக்களின்பால் நல்லெண்ணம் கொண்டவர்கள் நமது அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, தொழில்துறையில் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கும் முக்கியமான அம்சம், ஏற்கனவேயிருந்த இந்த நாட்டை ஆண்டவர்கள் இங்குமங்கும், மத்திய அரசிலும் மாநில அரசிலும் இரண்டிலும் ஒரே கட்சியாக இருந்ததால் இவர்கள் கேட்காத முறையிலே 1962-லே படித்துப் பட்டம் பெற்று 1966-ஆம் ஆண்டு வரையிலும் வேலை கிடைக்காமல் இருந்தவர்களுக்கு 1967-68-ஆம் ஆண்டில், நான் குறிப்பிட வேண்டுமானால் செகண்டரி கிரேடில் 7,000 ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இது இந்தக் குறிப்பில் இல்லாவிட்டாலும் இதை மறந்துவிடுவதற்கில்லை. ஒரே ஆண்டில் 7,000, 8,000 செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்திய பெருமை வேறு எப்பொழுதும் கிடையாது என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அப்படியெல்லாம் சமயம் கிடைத்தபோதெல்லாம் இருக்கும் நிதிநிலையை வைத்துக் கொண்டு எப்படியாவது வேலையில்லாத் திண்டாட்டத்தை, வேலைவாய்ப்பின்மையை ஒழிக்க வழிவகைகளை எடுத்த முயற்சிகளில் இது ஒன்றாகும்.

அடுத்துச் சொல்ல விரும்புவது, பொருளாதார நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் சிறு தொழில் செய்ய கடன் வசதிகளைக் செய்து கொடுத்து அவர்கள் எப்படியும் பொருளாதார

நிலையில் முன்னேற, படிப்பை மட்டும் படித்துவிட்டு உத்தியோகத்தில் இருந்தால் உத்தியோகம் பார்ப்பவர்கள் தாங்கள் மட்டும் தங்கள் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ள ஏதுவாகச் செய்கிறார்கள், ஆகவே பொருளாதாரத்தில் தொழில்துறையில் ஈடுபட்டு சம அந்தஸ்து கொள்ள பல கூடங்களை நிறுவினால் வாய்ப்பாக இருக்கும் என்று அரிஜன இலாக்கா மூலம் சிறு தொழில்களைச் செய்ய கடன்களைத் கொடுத்து, பல தவணைகளின்மூலம் சிறுசிறு பங்காகச் செலுத்த வகை செய்து ஊக்குவிக்கிறது.

பல ஆண்டுகளாக எனக்குத் தெரியும், 100-க்கு 25 சதவிகிதம் ஸ்காலர்ஷிப் வாங்கிய பிற்பட்ட மக்கள் இன்றைக்கு 60 சதவிகிதம் ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட மக்களின் படிப்பிலே பார்க்கும்பொழுது பிற்பட்ட மக்களின் கல்வித்தரம், கல்வியின் வளர்ச்சி அதிகமாக ஆகிக் கொண்டிருக்கிறது. இது மேலும் வளர இன்னும் பல கோடி ரூபாய்களை பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்க வேண்டும், அதற்கு அமைச்சரவையும், முதலமைச்சரும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கூறினார்கள், இந்தப் படியரிசித் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டது, ஆகவே, விலைவாசிகள் உயர்ந்து விட்டது, என்றெல்லாம் கூறினார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டம் ஏன் வந்தது என்பதை அவர்கள் உள்ளபடியே படித்துப் பட்டம் பெற்றவர்கள், அனுபவம் உள்ளவர்கள் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நம்புகிறேன். இருந்தாலும் எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பதால் அப்படிச் சொன்னார்களே தவிர வேறில்லை? நாங்களெல்லாம், உணவு தானியங்களின் விலை அதிகமாகி உச்சநிலைக்கு வந்தபொழுது விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும், விலையைக் குறைக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது அந்த நிலையில் இப்பொழுது அவர்கள் சொன்னது உண்மையா என்பதைப் பார்க்க வேண்டும். 10 அணைவிற்கு ஒரு பெரிய படி அரிசி கிடைத்தது, நம்முடைய சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 1968-ல் ஒரு படி அரிசிக்கு 3 ரூபாய் நாம் கொடுத்தோம். படியரிசியின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் அப்பொழுதிருந்த முதலமைச்சரும் மற்றவர்களும் சொன்ன காரணம், ஜனப் பெருக்கம் அதிகமாகிவிட்டது, விளைச்சல் இல்லை, நிலம் இருந்த இடத்தில் தான் இருக்கிறது, ஆனால் மக்கள்தொகை அதிகமாகிவிட்டது, விளைச்சலின் பயனை அடைய மக்களுக்கு சக்தி அதிகமாக இருப்பதால் விலை ஏறுகிறது என்று ஒரு காரணத்தைச் சொன்னார்கள். இரண்டாவது காரணம் வாங்கும் சக்தி அதிகமாகி விட்டது, பணப்புழக்கம் அதிகமாகி விட்டது, எனவே, விலை அதிகமாக இருக்கிறது என்றார்கள். அப்பொழுது நாங்கள் சொன்னோம். விலையைக் குறைக்க முடியா விட்டாலும் அரிசியையாவது எங்கிருந்தாவது வாங்கி அரிசி





கிடைக்கவாவது வழி செய்யுங்கள் என்று போராட்டம் நடத்திய காலத்தில், ஏன் உண்ணாவிரதமே இருந்த காலத்தில், உண்ணாவிரதம் இருப்பது உடம்புக்கு நல்லது என்ற போர்டை எழுதி வைத்துக் கொண்டிருந்தது தெரியும். அதை உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். நாங்கள் எடுத்த போராட்டத்திற்குக் காரணம், இங்கே ஆள்கிற கட்சியும், மத்தியிலே ஆள்கிற கட்சியும் ஒரே கட்சியாக இருந்ததால், இவர்கள் சொல்லும் அந்த எண்ணங்களை, வேண்டுகோள்களை அங்கிருக்கும் மத்திய ஆட்சி ஏற்றுக் கொள்ளும் என்ற ஒரு காரணம்.

இரண்டாவது, விலைவாசியைக் குறைக்க முடியாத நிலை இருந்தாலும் பண்டங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று போராட்டத்தில் ஈடுபட்டோம். இப்போது ஓரளவு விலை உயர்ந்திருக்கிறது என்பதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் அது நீங்கள் விட்டுச் சென்ற மூன்று ரூபாய்க்கு மேல் போயிருக்கிறதா என்றால் இல்லை. இந்த அரசாங்கம் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நிலச்சுவான்தார்கள் அங்கே போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அதற்கும் இவர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில் உணவுப் பண்டங்கள் கிடைக்க முடியாத நிலை இருந்தது. இப்போது உணவுப் பண்டங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இப்போதுள்ள விலைகளையும் குறைப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்து இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஓ. என். சுந்தரம் :** தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு சட்டப் பேரவை மேலவைக் கூட்டுத் தொடர் கூட்டத்தில் மேன்மை தங்கிய ஆளுநர் அவர்கள் அளித்த அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி.

சாதாரணமாக, ஆளுநர் அறிக்கையின் மீது பேசுகின்றபோது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஆளுநர் உரையை ஆதரித்தும், நன்றி தெரிவிக்கும் முறையிலும் பேசுவதும், என்னைப் போன்ற எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் பரிந்துரைகளையும், கருத்துரைகளையும் திருத்தங்களையும் கூறுவதும் சம்பிரதாய முறையாகும். இந்த அறிக்கையின்மீது எங்கள் கட்சியைப் பொறுத்தவரை ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு மிகப் பெரிய மெஜாரிடியை வைத்திருக்கிறது என்றாலும், எங்கள் கட்சிக்குப் போதுமான உறுப்பினர்கள் சபையில் இல்லை என்றாலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அடுத்தபடியாக அதிகப் படியான வாக்குகளைப் பெற்று, 54 லட்சம் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறோம் என்ற முறையில் நாங்கள் சொல்லக்கூடிய

பரிந்துரைகளை அமைச்சரவை உதாசீனப்படுத்தி விடாமல், தட்டி விடாமல், செவி சாய்த்துக் கேட்டு வேண்டிய நன்மைகளையும், மற்றக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை விடுக்கிறேன்.

ஆளுநர் அறிக்கையிலே, நம்முடைய கடன் நிலுவைகளுக்கு மத்திய சர்க்கார் மானியமாகவும், நீண்ட காலத் தவணைகளில் திருப்பிச் செலுத்தவும் வழிவகை செய்ய வேண்டுமென்ற வகையில் கருணை மனுவை அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதிலிருந்து நம்முடைய கஜானா காலியாக இருக்கிறது என்று கருத வேண்டியிருக்கிறது. இது வருங்காலத்திற்கு எச்சரிக்கையாகவும் தோன்றுகிறது. நம்முடைய பட்ஜட் சமர்ப்பிக்கப்படும் போது எவ்வளவு கோடி ரூபாய்க்கு எத்தனை இனங்களில் வரிகள் உயர்த்தப்படுமோ என்ற அச்சமும் மக்கள் மனதில் ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு வரிச் சுமை ஏறுமோ என்ற அளவில் விலைவாசி ஏற்றங்கள் தென்படுகின்றன.

இந்த அறிக்கையில் உணவு உற்பத்தி நல்ல முறையில் பெருகி இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். சென்ற பத்தாண்டுக் காலமாக, நம்முடைய முன்னாள் முதல்வர் காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து படிப்படியாக உணவு உற்பத்தி நிலை பெருகி வந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி பல தீவிர சாகுபடித் திட்டங்கள், உணவு உற்பத்தித் திட்டங்கள் கொண்டுவந்த காரணத்தால்தான் 1968–69-ல் 50 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி. சென்ற ஆண்டில் 70.3 லட்சம் டன்னாக உயர்ந்து, இன்று 73 லட்சம் டன் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது பெருமைக்குரியது, வரவேற்கத்தக்கது. இந்த அளவுக்கு உற்பத்தி பெருகியிருந்தாலும் மக்கள் மத்தியில் விலைவாசிகள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை. கோவை, சென்னை போன்ற நகரங்களில் படியரிசித் திட்டம் கைவிடப்பட்டது என் என்று புரியவில்லை. இன்று எங்களுடைய சிறு நகரமாகிய திண்டுக்கல்லில் கூட படியரிசி மூன்று ரூபாய் விற்கிறது. படியரிசி ரூ. 2.70-லிருந்து ரூ. 3 வரை விற்கிறது. (மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது நம்ம ஊர் அரிசியாக இருக்காது) அரிசி விலை உயர்ந்திருக்கிறது. விலைவாசிகள் குறைக்கப்படாது மேலும் வரிச்சுமை மக்கள் மேல் போடப்படுமானால் மிகுந்த கஷ்டம் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வேலை வாய்ப்பு நிலையை எடுத்துக் கொண்டால் இன்று படித்த வாலிப சமுதாயம் பெரும் கவலையில் ஆழ்ந்து இருக்கிறது. படித்து விட்டு வருஷக் கணக்கில் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. அவர்கள் கிளர்ச்சி போன்ற போராட்டங்களில் ஈடுபடும் நிலை இருக்கிறது.

தொழிலாளர்களைப் பொறுத்தவரை பரபரப்பான சூழ்நிலை தென்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இது பற்றி விளக்க அறிக்கை ஒன்று கொடுத்தார்கள். இம்மாதிரி





நிலைமைகள் ஏற்படாதவாறு தொழிலாளர்கள், முதலாளிகள் மத்தியில் சுமுகமான நிலைமைகளை உண்டாக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகத்திற்காக 100 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்க இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். பல நிறுவனங்களும் துறைமுகத் திட்ட வேலைகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதை எல்லாம் வரவேற்கிறேன். இந்த தூத்துக்குடி துறைமுகத்திற்கு கப்பலோட்டிய வ. உ. சிதம்பரனார் பெயரை வைக்க வேண்டுமென்று இந்தச் சபையின் சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய திண்டுக்கல் நகரத்தைப் பொறுத்தவரை வளரும் நகரம், வியாபார நகரம். தொழில் பெருக வாய்ப்புள்ள நகரம். பல புதிய தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துகின்ற நேரத்தில் எங்கள் பகுதியில் சர்க்கார் பல தொழில்களை ஆரம்பிக்க முன் வரவேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பாக விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தும்போது பல பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

திண்டுக்கல் நகரத்தைப் பொறுத்தவரை சுகாதாரக் கேடுகள் அதிகமாக இருக்கின்றன. முதல் பிரையாரிடி கொடுத்து விரைவில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரத்தில் ஒரு பெண்கள் கல்லூரி மிகச் சந்தடி நிறைந்த நெரிசலான இடத்தில் இருக்கிறது. போதுமான மாணவிகள் படிக்க வாய்ப்பு இல்லை. அதற்காக ஏற்கனவே ஒரு இடம் ஒதுக்கப்பட்டு நிதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் விரைவில் பெண்கள் கல்லூரிக் கட்டடங்களையும், விடுதிக் கட்டடங்களையும் கட்டி கல்லூரியை அந்த இடத்திற்கு மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

***திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கவர்னர் பெருமானின் உரைக்கு நன்றித் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்படையாகவே, அறிக்கையில் தமிழகத்தின் உணவு உற்பத்தி அதிகரித்து இருப்பது பற்றியும், மின்சார உற்பத்தியில் காட்டப்பட்டிருக்கின்ற வேகம்பற்றியும், தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு எடுத்து வருகின்ற சிறந்த முயற்சிகள் ஆகியவற்றையையும் குறிப்பிட்டு இருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் தமிழக அரசினைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மின்சாரம் 1967-க்கு பிறகு தமிழ் நாட்டில் அதிகமான அளவுக்கு விவசாயத்திற்கும், தொழிற்சாலைக்கும், வீடுகளுக்கும், வீதிகளுக்கும் நல்ல முறையில் சீராகவும், தட்டுப்பாடின்றியும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்தியாவே அறியும். பக்ரா-நங்கல் அணைத் திட்டத்தின் மூலம் இந்திய மின் உற்பத்தியில் 10-ல் ஒரு பங்கு உற்பத்தியாயிருக்கிறது. அத்தகைய பஞ்சாப் மாநிலத்தில் கூட மின்சாரத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்பட்டு இருக்கிறது. அங்கு தொழிற்சாலைகள் வருஷத்திற்கு 3-4 மாதங்கள் மூடிக்கிடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்தியாவின் பிற பகுதிகளில் இருக்கிற மின்சார உற்பத்தியின் மூலதனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நம்முடைய மூலதனம் குறைவாக இருந்தாலும்கூட, மூலப் பொருள்களில் தட்டுப்பாடு இருந்தாலும்கூட, நம்முடைய தமிழக அரசின் மின்சார வாரியம் நல்ல முறையில் பணியாற்றி மக்களின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து இருக்கிறது, என்பதை நான் மிகப் பெருமையோடு குறிப்பிட்டுக் காட்ட ஆசைப் படுகிறேன்.

வேலையில்லாத்திண்டாட்டம் என்பது ஒரு மிகப்பெரிய பிரச்னை. இது இன்று விஸ்வரூபம் எடுத்து இருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலும் எல்லோருடனும் பழகும் வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும்—என்னைவிட அதிகமாக மற்ற உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஒரு நாளைக்கு 18 மணி நேரத்திற்கு மேல்கூட சில நேரங்களில், வேலை தேடித் தாருங்கள் என்று கூறுவோருக்குப் பதில் சொல்லவே சரியாகப் போய்விடுகிறது. விழிகளிலே கண்ணீர் விட்டுக்கொண்டு, இருதயத்தில் இருளை வைத்துக்கொண்டு, நம்பிக்கை அற்ற வாழ்வைக்கொண்டிருக்கும் லட்சக்கணக்கான பட்டதாரிகள், லட்சக்கணக்கான எஸ்.எஸ்.எல்.சி. படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். விடிந்து எழுந்தால் 100 பேர் வந்து வேலை கேட்கிறார்கள், எங்களுக்கு என்ன வேலை வாங்கிக்கொடுத்தாலும் செய்யத் தயார் என்று கேட்கிறார்கள். தங்களுடைய படிப்புக்குக் குறைவான எந்த வேலையானாலும் செய்வதற்குந் தயார் என்று கூறுகிறார்கள். இந்தப் பிரச்னை எத்தகைய விஸ்வரூபம் எடுத்து இருக்கிறது என்பதை விளக்க நான் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன். 1967-ம் ஆண்டுக்கு முன்பு பிரதமர் இந்திராகாந்தி அவர்களுக்கு ஒரு எம்.காம். படித்த மாணவன் கடிதம் எழுதியிருந்தான். அது பத்திரிகைகளிலும் வந்து இருந்தது. "நான் எம்.காம். படித்து இருக்கிறேன். தந்தை, தாயை காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறேன். தங்கைக்கு திருமணம் செய்து வைக்க வேண்டிய நிலை இருக்கிறது. சொத்து இல்லை, சுகம் இல்லை. வேலையில்லை. வேலை தருவதற்கு அரசாங்கத்தில் வாய்ப்பு இல்லை. இனியும் இந்தப் போக்கே நீடித்தால் நான் ஒன்று ரயில் கொள்ளைக்காரனாக மாறவேண்டும். அல்லது வங்கிகளில் கொள்ளையடிக்க வேண்டும். அதற்கு தகுந்த ஆற்றல் இருக்கிறது. ஆனால் மனச்சாட்சிக்குப் பயந்து பேசாமல் இருக்கிறேன். எனவே





இத்தகைய உணர்வுகளை இளைஞர்களிடத்தில் வளரவிடாதீர்" என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். இன்று வேலையில்லாதோருக்கு சமுதாயத்தின் மீது ஒரு வகையான வெறுப்பே கூட ஏற்பட்டு இருக்கிறது என்பதை நாம் உணர முடிகிறது. அதனால் சமுதாய விரோத காரியங்களை செய்கிற அளவுக்குக் கூட துணிந்து விடுகிற போக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியிருக்கிறது. இந்த மிகப் பெரிய விஷயத்தை மிகவும் சிறப்பாகவும், முக்கியமாகவும் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய தமிழக அரசின் மூலமாக வேலை வாய்ப்புத் தருவதற்கு பல்வேறு துறைகளில் முயற்சி எடுத்து வருகிறார்கள் என்பதை அறியும் போது உள்ளபடியே என் இதயம் விம்முகிறது.

கடந்த ஆண்டு நாங்கள் பம்பாய் மாநிலத்திற்குச் சென்று இருந்தோம். அப்போது நம்முடைய கலைஞர் அவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில் 'அப்பிரண்டிஸ் டீசர்ஸ்' என்று ஏற்படுத்தி 6,000 பேருக்கு ஆசிரியர் வாய்ப்புத் தருவதைப் பத்திரிக்கையில் பார்த்துவிட்டு பம்பாய் மாநில மேலவைத் தலைவர் அவர்கள் அது பற்றி எங்களைக் கேட்டார்கள். நாங்களே அப்போதுதான் பத்திரிக்கையில் அந்தச் செய்தியைப் பார்த்தோம். அவர்கள் எங்கள் மாநிலத்திலும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாங்கள் தீட்டலாம் என்று இருக்கிறோம் என்று சொல்லி, அதைப்பற்றி தகவல் கேட்டு நம்முடைய தமிழக அரசுக்குக் கூட எழுதி விபரம் கேட்கப் போவதாகக் குறிப்பிட்டார்கள்.

இன்று இன்ஜினீயர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் மின்சாரம் பயின்ற 500 பட்டதாரிகளுக்கு அண்மையில் அரசு வேலை வாய்ப்பு தந்துள்ளது. இது பாராட்டத்தக்கது. மேலும் டெக்னிஷன்கள் ஐ.டி.ஐ. படிப்பு படித்துவிட்டு வேலைவாய்ப்புத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ரூ. 1,000 கடன் உதவி அளித்து சர்க்கார் அவர்களையே தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த ஊக்குவித்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து நான் மனமார பாராட்டி அந்த திட்டத்தை வரவேற்கிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தக்குழுவின் அறிக்கையைப் பற்றி ஒரு வரி இதில் எழுதப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகச்சீர்திருத்தக்குழு என்ற பெயரில் பல்வேறு மாநிலங்களில் குழுக்கள் அமைக்கப் பட்டு, அறிக்கைகள் தரப்பட்டு இருப்பதை நாம் அறிவோம். நிர்வாகத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டியது 'ஊழல்' தான். தாலுக்காமட்டத்தில் ஆகட்டும், ஆர்.டி.ஓ. மட்டத்தில் ஆகட்டும், கலெக்டர் மட்டத்தில் ஆகட்டும் ஊழல் கீழ்மட்டத்தில் ஏற்பட வாய்ப்பில்லை. அது மேலே இருந்துதான் கீழே வருகிறது. எனவே மேல் நிலை அதிகாரிகள்தான் கீழ்நிலை அதிகாரிகள் தவறு செய்ய, ஊழல் புரிய வழிவகை செய்து தருகிறார்கள். இந்தக் கருத்து

[திரு. ஜே. எஸ். இராசு] [1972 சனவரி 25

பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களும் அதை தெரிந்து கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். நாங்களே கூட எங்கள் இதயம் திறந்து இதை ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் இந்த ஊழலுக்குக் காரணம் கீழே நிச்சயமாக இல்லை, அது மேலே இருக்கும் அரசு அலுவலர்களால்தான் துவக்கப்படுகிறது என்பதை உணர்கிறோம். எனவே, நிர்வாகத்தை சரியான முறையில் சீர்திருத்தியமைக்க, அப்படிப் பட்ட குழுக்கள் கூடுகின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களையும் அதில் போட்டு, எங்களுடைய அபிப்பிராயங்களையும் ஓரளவுக்குக் கேட்டால், அந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை நல்ல முறையில் உருவாகவும், அதனால் தமிழக மக்களுக்கு பல சீர்திருத்தங்களை செய்யமுடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேச்சிலேயே என்னுடைய தொகுதியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நான் பேசுகிறபோது எல்லாம் மாண்புமிகு கலைஞர் அவர்கள் சந்தர்ப்பவசத்தால் மன்றத்தில் இல்லாமல் போய்விடுவது எனக்கு ஒரு குறையாகவே இருந்தது. இப்போது நம்முடைய கலைஞர் அவர்கள் இங்கு இருப்பதால் என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பெரம்பலூர் பகுதி, பெரம்பலூர் வட்டம் மத்திய அரசினால், பின் தங்கியபிரதேசம் ஆகவும் பிற்பட்டப் பகுதியாகவும், நீர் வசதி அற்றப் பகுதியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. தலைமைச்செயலகத்தில் இருக்கும் அதிகாரிகளும், என்னுடைய தொகுதிக்கு வந்து பார்த்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் எங்களைப் பார்த்துப் பேசுகிறபோது கூட பெரம்பலூர் பகுதி பின்தங்கிய பகுதி ஆயிற்றே ஏதேனும் முன்னேறியிருக்கிறதா என்று கேட்பார்கள். அது மாறவில்லை அப்படியேதான் இருக்கிறது என்று பதில் சொல்லி வருகிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒன்றும் என்னுடைய தொகுதிக்கு அதிகமாக எதையும் கேட்கவில்லை. ஆறு லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம் வடகரை—வெண்பாவூர் இடையே கல்லாற்றில் கட்ட வேண்டும் என்பதுதான். சட்டமன்ற உறுப்பினன் என்ற வகையில் என்னென்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்து, ஏ.இ. ஆபிசிலிருந்தும். இ.இ. ஆபிசிலிருந்தும், சீஃப் இன்ஜினியர் ஆபீசிலிருந்தும் அந்த பைலை நகரச் செய்து தலைமைச் செயலகத்திற்கு கொண்டுவந்திருக்கிறேன். அதை கலைஞராகப் பார்த்து செய்தால் தான் உண்டு; இல்லாவிட்டால் நிச்சயமாக இல்லை என்பதை நான் உணர்வேன். இது மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னை தீராததால், பெரம்பலூர் வட்ட மக்கள், பெரம்பலூருக்கு வருவதற்காக சேலம் மாவட்டம் ஆத்தூர் சென்று சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. இதனால் நேரக்கேடு, அதிகச் செலவு ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டிலேயே கல்லாற்றில் பாலம் கட்ட அரசு அனுமதி வழங்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1972 சனவரி 25] [திரு. ஜெ. எஸ். இராசு]

இறுதியாக ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். காவேரி போன்ற ஆறுகள் எங்கள் பகுதியில் இல்லை. நீர் வளம் நிரம்பிய ஆற்றுப பகுதியும் இல்லை. ஏரிகள் நிறைந்த பகுதியும் அல்ல. பெரும்பாலும் கிணற்றுப் பாசனத்தின் மூலமாகத்தான் விவசாயம் செய்ய வேண்டும். எனவே, சில ஏரித் திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு வெள்ளைக்காரன் காலத்திலிருந்து நாங்கள் போராடி வருகிறோம், ஆறு, ஏழு திட்டங்கள் நீண்ட நாட்களாக ஆய்வில் இருக்கின்றன. சில மட்டுமே தலைமைச்செயலகத்திற்கு வந்திருக்கின்றன. அவற்றைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, நூத்தபூர், நெற்குணம், மேலப்புலியூர். தழுதாளை, வெங்கனுதபுரம், புதுநடுவலூர், கலிங்கவுடை போன்ற திட்டங்கள் நீண்ட நெடுங்காலமாக ஆய்வில் இருந்து வருகின்றன. வறட்சிப் பகுதியாக இருக்கும் எனது பகுதிக்கு ஒரு தனிக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தனிக் கவனம் நிச்சயமாக நம்முடைய கழக அரசு காலத்திலேயே, கலைஞர் அவர்களின் காலத்திலேயே கிடைக்கும் என்று நானும் எனது தொகுதி மக்களும் நிரம்ப நம்பிக் கொண்டிருக்கிறோம். எனவே, நான் குறிப்பிட்ட இத்திட்டங்கள் அனைத்தையும் அரசு நிறைவேற்றித்தரவேண்டும் எனக்கேட்டு, இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரைமீது பேசும்போது, நம்முடைய முதல் அமைச்சருடைய புதிய ஆட்சி தொடங்கிய பிறகு இரண்டாவது உரை என்ற வகையில், இதில் இந்த அரசு சோஷலிச குறிக்கோளை நோக்கி இந்த மாநிலத்தை இட்டுச் செல்கின்ற அளவில் புதிய பல அறிவிப்புக்கள் இருக்கும் என்று ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். என்னுடைய ஆசை நிறைவேறவில்லை என்பதைக் கண்டு வருந்துகின்றேன், என்பதனை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு சில விஷயங்களைப் பற்றி மட்டும் பேச விழைகிறேன்.

முதலாவதாக தொழிற்சங்கங்களைப் பற்றி. ஆளுநர் அவர்கள் இந்த அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனை மிகச் சாதாரணமான மொழியில் குறிப்பிட்டிருந்தாலும், அதிலுள்ள அபாயங்களைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன். ஆளுநர் சொல்லியிருக்கிறார்கள்,

Government attaches the highest importance to the maintenance of peaceful industrial relations

என்று சொல்லிவிட்டு,

These unions should be led by persons chosen from amongst workers themselves

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்து மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், மிக நல்ல கருத்துப்போல இருக்கும். ஆனால் இந்தக் கருத்து இன்று சொல்லத் தொடங்கியது அல்ல.

வெகு காலமாக ஒரு சாரார் இதைச் சொல்லிவருகிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் இருக்கிற முதலாளிகள். அவர்கள் தொழில் சங்கங்களில் வெளியார் தலைவர்களாக இருக்கக் கூடாது என்று சொல்லிவருகிறார்கள். காரணம் நமக்குத் தெரியும். காரணம் என்ன ? வெளியார் இருப்பார்களேயானால், அவர்களை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது. தொழிலாளிகளே என்றால், தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருப்பவர்கள், ஆகவே தொழிலாளி மீது தக்க நடவடிக்கை எடுக்க, அப்படி நடவடிக்கை எடுத்து துரத்தவோ கட்டுப்படுத்தவோ சாத்தியம், வெளியாராக இருந்தால், அப்படி இயலாமல் போகுமே என்கிற ஆத்திரத்தில் முதலாளிகள் சொல்லிவருகின்ற கருத்து அது. துரதிர்ஷ்ட வசமாக அந்தக் கருத்து நம்முடைய ஆளுநர் அவர்களுடைய அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. இதற்கு முன்னமேயே, தொழில் அமைச்சரும் ஒரு கூட்டத்தில் இதைச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே வேதனையையும், ஆச்சரியத்தையும் கொடுக்கிறது. ஒன்றை ஒப்புக் கொள்வேன். தொழிற்சங்கத்தின்மீது எந்த அரசியல் கட்சிக்கும் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவன் நான். ஆனால் அந்த லட்சியத்தை எய்துவது அவ்வளவு எளிதானது அல்ல. தொழிற்சங்க வரலாற்றைப் பார்த்தால் தெரியும். அதற்கு ஒரு பாரம்பரியம் உண்டு. அரசியல் கட்சித் தலைவர்களே இந்நாட்டில் தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்கினார்கள். வேறு யாரும் இல்லை என்பதால், வேறு யாரும் முன்வராத காலத்தில் அரசியல் தலைவர்களே தொழிற் சங்கங்களை தோற்றுவித்தார்கள். அப்படி அரசியல் தலைவர்கள் தொழிற்சங்கங்களுக்கும் தலைமை தாங்கிய நேரத்தில், கடுமையான சோதனைகள் நேர்ந்தன. கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் கண்டோம்.

இன்றைக்கு இருக்கும் நிலையில், நாட்டின் அரசியல் நிலையில், தொழிலாளர்கள் கோரிக்கைகள் ஓங்கிநிற்கும் நிலையில், தொழிலாளர்களுடைய சட்டங்கள் இயற்றுவதில் அவர்கள் அவற்றில் பங்கு பெறவேண்டும் என்று கூறும் நிலை இருக்கிறது. அப்படி வரும்போது, அரசியல் வாதிகள் தொழிற்சங்கங்களில் தலைமைப் பொறுப்பை ஏற்பது தவிர்க்கமுடியாத ஒன்று. தவறுகள் நேருகின்றன. இல்லை என்பதில்லை. ஆனால் எதோ ஒன்று இரண்டு விவகாரங்களை வைத்துக் கொண்டு இதைச் சொல்வது சரியாக இருக்காது. இன்றைக்கு சிம்ப்சன் பிரச்சினையை வைத்துதான் அமைச்சர் இப்படிக் கூறினார்கள் என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு விவகாரத்தை வைத்து இப்படிப்பட்ட முடிவைச் செய்வது என்பது சரியானதாக இருக்காது. அது மட்டுமல்லாமல், ஒரு கருத்து சொல்லப்படுகிறது. அமைச்சர்களும் பேசுகிறார்கள். முன்னே இருந்த அமைச்சர்களும் பேசிவந்தார்கள். அரசியல் ஆதிக்கம் கூடாது என்று சொல்லும்போது, "எங்களைத் தவிர மற்றவர்கள் அரசியல் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்" என்ற கருத்துப்படச் சொல்லப் படுகிறது. தனிப்பட்ட கட்சி என்றில்





லாமல், எல்லோரும் தான் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆளுங் கட்சிக்காரர்களும் தான் இன்றைக்கு பலவிடங்களில் சங்கங்களைத் தோற்றுவிக்கிறார்கள். அமைச்சர் ஆதரவு கொடுத்து காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய சங்கத்திலேயே, கழகத் தோழர்கள், தனியாகப் பிரிந்து போகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னார்கள், உங்கள் பேரில் எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் எங்கள் கட்சிக்கென்று தனிச் சங்கம் வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோம்; அதனால் தான் போகிறோம் என்று. ஆகவே எல்லோரும் தான் அப்படிச் செய்துவருகிறார்கள். யாரோ எதிர்ப் பக்கத்திலே இருப்பவர்கள் மட்டும் செய்கிறார்கள் என்பதில்லை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பிரிந்து சென்றார்கள் என்று சொன்னார்கள். தொழிற்சங்க வாதிகளுக்கு அரசியல் கூடாது என்று சொல்லவில்லை. தொழிலாளிகளுக்கு அரசியல் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால் தொழிற்சங்கங்களில் அரசியலை புகுத்தக் கூடாது என்றுதான் சொல்கிறோம். அதுதான் அரசாங்கத்தின் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. நாங்கள் சமீப காலத்தில் தான் தொழிற்சங்கங்கள் அமைத்தோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் முதலிலே தொடங்கவில்லை என்றார்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த அணியில் சேர்ந்திருக்கிறது. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

எல்லோரும் தான் இருக்கிறார்கள். ஆகவே, அதற்கான பரிகாரத்தைச் சொல்லும்போது, 'தொழிற்சங்கங்களில் வெளியார் இல்லாமல் இருப்பதே பரிகாரம் போல் சொல்வது தவறானது. அரசியல் வாதிகளே தவறு செய்கிறார்கள். மக்களுக்கு தவறான வழி காட்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுச் சொல்லப்படுகிறது. அப்படியானால் அரசியல் வாதிகளே இல்லாத அமைப்பை, ஆட்சியை உருவாக்கவேண்டும், அரசியல்வாதிகளே கூடாது என்று சொல்லிவிடலாமா ? அப்படித்தான் பாகிஸ்தானில் அயூப்கான். இந்தோனேஷியாவில் சுகர்னோவும் 'பேஸிக் டெமாக்ரஸி' என்கிற புதிய தத்துவத்தைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தொழிற்சங்கத்திற்கு தொழிலாளி இருக்கவேண்டும். அரசியல் கட்சிக்கு அரசியல் வாதி இருக்க வேண்டும். அரசியல் கட்சிக்கு அரசியல் வாதி வேண்டாம் என்று சொல்லலாமா ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அதற்கு பின்னால் பதில் சொல்லுகிறேன். அந்த இரண்டு பேர்களும் 'போலித் தொழிலாளி' என்றார்கள். அதன் பொருள் என்ன? முதலில் என்ன வந்தது? அது சர்வாதிகாரத்திலிருந்து மறுபடியும் வந்தது. தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைவர்களாக இருக்க வேண்டும் என்பது 'உடோபியா', எய்தவேண்டிய லட்சியம். ஆனால் அடைவதற்கு முன் பல ஏற்பாடுகள், அமைப்புகள் முன்னேற்பாடாக வர வேண்டும். பல தொழிற்சங்கங்களில் முதலாளிகளோடு பேசும் போது, நாற்காலி கொடுத்து உட்கார் சொல்லிப் பேசக்கூட பல முதலாளிகள் தயாராக இல்லை. பல இடங்களில் தொழிலாளிகளுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. இந்திய தொழிற்சங்கச் சட்டத்தின்படி 7 பேர்கள் சேர்ந்தால் ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், தொழிற்சங்கம் தொழிலாளர்களின் அடிப்படை உரிமை என்று முதலாளிகள் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஒன்று. இன்னொன்று இன்றைக்குத் தொழிற்சங்க வேலை என்பது முன்னைப் போல அல்ல. முன்பு தொழிற்சங்க வாதி என்பவருக்கு முதலாளியோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும், போராட்டம் நடத்துவதற்கான திண்மை, தியாகம் செய்வதற்கான உள்ளம் ஆகியவைகள் தான் முக்கியமாகத் தேவைப்பட்டன. இன்றைக்குத் தொழிற்சங்க வாதி இதற்குமேலே பலவற்றைத் தெரிந்து இருக்க வேண்டும். வழக்காட வேண்டியிருக்கிறது. ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக்கிறது. நட்பான பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. இவ்வளவும் இன்றைக்குத் தொழிற்சங்க வாதிகளுக்குத் தேவைப்படுகின்றன. சாதாரண தொழிலாளிகளால் இவைகளைச் செய்ய முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொதுவாக இந்தக் கருத்து வலியுறுத்தப்படுமானால் இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வரப்படுமானால் அது எங்கே கொண்டு போய் விடும்? தொழிலாளிகளை நிர்க்கதியாக்கிவிடும். பெரும்பாலான தொழிலாளிகள் கல்வியறிவற்றவர்களாக இருக்கிறார்கள். "ஒயிட் காலர்டு" என்று அழைக்கப்படும் படித்த தொழிலாளிகள் வேண்டுமானால் இம்மாதிரி தொழிற்சங்க வேலைகளை நடத்துவதற்குத் திறமையும் பெற்றவர்களாக ஆற்றல் பெற்றவர்களாக இருக்கலாம். பெரும்பாலான தொழிலாளிகளுக்கு இந்த ஆற்றல் இல்லை. அவர்கள் படிப்பறிவு அற்றவர்கள். எனவே தொழிற்சங்கங்களுக்கு வெளியார் தலைவர்களாக இருக்கக் கூடாது என்று சொல்வது முதலாளிகள் என்ற ஓநாய்களுக்கு தொழிலாளரைத் தீனியாகப் போடுவதற்குத்தான் ஆகும்.

இன்றைக்கு தொழிற்சங்கச் சட்டத்திலே பாதிக்கு மேற்படாதவர்கள்தான் நிர்வாகக் குழுவில் வெளியாராக இருக்கலாம் என்று கட்டுத் திட்டங்கள் போடப்பட்டு இருக்கின்றன. இன்றைக்குத் தொழிற்சங்கத் தலைவர்களாக இருப்பவர்களின் பெரும்பாலோர்





ஏற்கெனவே தொழிலாளர்களாக இருந்தவர்கள் அல்லது முதலாளி களால் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள். இது சம்பந்தமாக நேஷனல் லேபர் கமிஷன் விரிவாக ஆராய்ந்து அதனுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு உதவி சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது முதலாளிகள் என்ற ஓநாய்க்குத் துணை போவதாகும் என்று குறிப்பிட்டார்கள். அது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஓநாய்கள் என்று சொல்லுவதிலே தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உங்கள் வாதத்திலே இப்பொழுது வெளியார் பெரும்பாலோர் இல்லை என்று சொன்னீர்கள். அந்தத் தொழிற்சங்கங்கள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்று விளக்க வேண்டுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பெரும்பாலான சங்கங்களில் இல்லை. ஒன்றிரண்டு சங்கங்களில் தொழிலாளர்களே தேர்ந்து எடுக்கப்பட்டு அவைகள் திறம்பட நடத்தப்பட்டு வருகின்றன என்பது என்னுடைய அநுபவம்.

நேஷனல் லேபர் கமிஷன் சொல்லுகிறது—

"We are conscious that unions being democratic and voluntary institutions, the basis on which a union should be organised is a matter to be determined by workers themselves, in the light of their own needs and experience. We also recognise that unions regard this right as basic to their democratic functioning. They also influence their structure. The political environment within which unions work, and the wider range of services which their members will require them to provide also influence their structure. It is, therefore, not our intention to draw up a scheme for structural reform of unions. They have to grow according to the dictates of their members, but within the constraints set on them by the laws of the land."

மீண்டும் சொல்கிறது :

"In every society it has been recognised that in discharging the basic functions, unions have to operate on many fronts; social, economic, civic and political. To the extent possible, they have to influence policy decisions in the interests of workers and also explain to their members the limits within which their interests can be served by the union. Legislative support which the unions require for realisation of some of their objectives and achievement of their long-term interests takes them into the region of politics. They have to formulate a stand on social and economic objectives of the community/country as a whole and participate in activities to make

their view-point heard in the policy-making bodies so that the choices eventually made and the priorities adopted subserve the best interests of the workers. Of late, trade unions are not content to rest merely with their contribution in framing policies; their experience has been that once the policies are framed, their implementation has also to be diligently watched. Unions have come to realise that unless their voice and weight is brought to bear upon the Government, the workers' interests are likely to suffer. In several countries, therefore, the political process of Government and participation in it have been attracting the interests of unions increasingly. Whether a union should get directly associated with a political party or have its own wing would depend upon the circumstances in each country. Considering that such political action/association is legitimate, the Trade Unions Act, 1926 permits the constitution of a separate fund to facilitate political action by a union."

மீண்டும் தெளிவாக சொல்கிறது தேசிய லேபர் கமிஷன் :

"To understand the problem of outsiders, it is important to recognise the other side of the picture too. While in manufacturing industries more and more educated labour is being recruited, in employments like mines, plantations, ports and docks, and construction, the workers are generally illiterate. Though the fear of standing up to an employer of the type referred to by the Whitley Commission may be less in evidence now, difficulties in the emergence of strong inside leadership still exist. The complicated nature of industry makes the unions require the services of educated or technical personnel, not necessarily connected with the plant, as helpers/well wishers. Industrial negotiations have become more complex on account of the legal frame-work and procedures under which they are to be carried on. Unions must have whole-time office-bearers and their own expertise. More affluent unions can afford to pay for them, but others have to depend upon outsiders."

மேலும் சொல்கிறது அந்த கமிஷன் ;

"Our attention has also been drawn to the view that politics and the trade union movement cannot work in mutually exclusive compartments. Political action for bettering its own position cannot be denied to labour just as labour support is necessary for any political party. Further in a democracy, no public organisation can be isolated from extraneous influences and certainly not an organisation which deals with a large body of workers. It cannot be said that even a total ban on outsiders will necessarily insulate a union from political influences. The employee-office-bearers cannot be prevented from being interested in and connected with political parties, or from seeking the assistance of one political group or the other when such assistance is needed."

லேபர் கமிஷன் இவைகளை ஆய்ந்து பரிசீலனை செய்து, பல்வேறு தரப்புகளின் கருத்துக்களைக் கேட்டு அவர்கள் அறிவித்து இருக்கிற முடிவுகள் இவைகள். இன்னொன்றையும் குறிப்பிட



விரும்புகிறேன். என்னுடைய அனுபவத்திலே கண்டவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கும் இது தெரியும். பல இடங்களில் வேலை நிறுத்தம் நடக்கிறது. இந்த வேலை நிறுத்தங்களில் பல தொழிலாளர்கள் தாங்களாகவே தொடங்குகின்ற வேலைநிறுத்தங்களாகும். வெளியாரோ, அன்றி தொழிற் சங்கத் தலைவர்களோ சொல்லாமல், அவர்களுக்குத் கூடத் தெரியாமல் பல வேலை நிறுத்தங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றை "கேட் கால் ஸ்டிரைக்ஸ்" என்று சொல்வார்கள். இவைகள் இங்கே மட்டுமல்ல. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் நடைபெறுகின்றன. மிகப் பெரும்பாலான ஸ்டிரைக்குகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால் அவைகள் இப்படிப்பட்ட ஸ்டிரைக்குகளாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களைத் தடுப்பதற்காக வெளியார் தொழிற்சங்கங்களில் தலைவர்களாக இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கருத்து இருக்கிறதே அதற்கு அடிப்படையில்லை என்பதைச் சுட்டிக் காட்டத்தான் இதனைக் குறிப்பிட்டேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்து, அமெரிக்கா போன்று இந்நாட்டில் தொழிற்சங்க இயக்கம் தொடங்குவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே தொழிற் சங்க இயக்கம் தோன்றி வெகுவாக வளர்ந்திருக்கின்ற நாடுகளிலே கூட தொழிற்சங்கங்களின் தலைவர்களாக வெளியார் இருந்து வருகிறார்கள். பெரும்பாலான தொழிற்சங்கங்களின் தலைவர்களாக வெளியார் இன்றைக்கும் இருந்து கொண்டு வருகிறார்கள். இன்றைக்கும் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தில் பெரும் தொழிற்சங்கத் தலைவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அரசியல் வாதிகள்தான் இங்கெல்லாம் தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து வருகிறார்கள். அரசியல் வாதிகள், தொழிற் சாலையில் வேலை செய்யாதவர்கள் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக இருக்கக் கூடாது என்பதை முதலாளிகள் சொல்லட்டும். அவர்கள் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் அந்த வாதத்திற்கு அரசு பலியாகி விடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னை நாளைக்குத் தொழிலாளிகள் கல்வி அறிவு பெற்று அவர்களாக தங்களுக்கு தாங்களே தலைவர்களாக இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும்போது செய்து கொள்ளட்டும். அதற்காக நாம் இப்போது ஒரு மசோதாவை நிறைவேற்ற வேண்டாம். யார் தங்களுக்குத் தேவையானவர்கள் என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு நன்கு தெரியும், தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் செய்வார்கள்.

அடுத்து, இன்னொன்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாநில சுயாட்சி பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த. . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்கள் தொழிற்சங்கங்களுக்கு வெளியார் தலைவர்களாக இருக்க வேண்டாமென்று முதலாளிகள் சொல்வது போல அரசாங்கம் சொல்ல

வேண்டாமென்றும், இதற்காக ஒரு மசோதா கொண்டு வர வேண்டாமென்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறார்களா இல்லையா என்பதைக் குறிப்பிடவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் தான் இருக்க வேண்டும் என்பதை நாலும் நான் சார்ந்து இருக்கிற எச்.எம்.எஸ். அமைப்பும் நீண்ட நாட்களாகச் சொல்லி வருகிறோம். ஆனால் அந்த முயற்சிகள் இன்னும் வெற்றி பெறவில்லை. விரைவில் வெற்றிபெறும் என்று நம்புகிறேன்.

மாநில சுயாட்சிபற்றி சொல்லப்படுகிறது. என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையிலே மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வழங்கவேண்டும் என்பதனை ஆதரிக்கிறோம் என்று மட்டும் நான் சொல்லமாட்டேன், இந்தக் கருத்தினை இந்த நாட்டிலே முதன் முதலிலே சொல்லத் தொடங்கியவர்களே நாங்கள்தான். 1949-ஆம் ஆண்டிலேயிருந்தே அதிகாரங்கள் கீழே பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை, அப்பொழுதுதான் ஜனநாயகம் உண்மையான பொருள் படைத்ததாக இருக்கும் என்பதை நாங்கள் சொல்லிவருகிறோம். ஆனால் இங்கே அப்படிச் சொல்லும்போது, மத்திய அரசிடத்திலேயிருந்து அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வர வேண்டும் என்பது மட்டுமல்ல, மாநில அரசின் அதிகாரங்களும் கீழே வரவேண்டும். சாதாரண கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்யும்பொழுதுதான் மக்கள் ஜனநாயகத்திலே பங்கு பெறமுடியும். ஆகவே மத்தியிலேயிருந்து மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக வர வேண்டும் என்று சொல்வதோடு நிறுத்தாமல், மாநிலங்களிலேயிருந்து அதிகாரங்கள் கீழே வரவேண்டும் என்றும் சொல்ல வேண்டும். மாநிலங்களிலே அதிகாரங்கள் குவிந்து கிடப்பதை நாம் பார்க்கிறோம். கீழே இருக்கிற அதிகாரங்கள்கூட மாநில அரசிலே குவிகின்ற போக்கினைப் பார்க்க முடிகிறது. எப்படி மத்திய அரசிலே அதிகாரக் குவியல் போக்குத் தெரிகிறதோ அதேமாதிரி மாநிலங்களிலே அதிகாரங்கள் குவிகின்ற போக்கும், கீழே இருக்கின்ற கிராமங்களுக்கு எந்த விதமான வசதியும் அற்றுப்போகும் நிலையும் இருக்கிறது. ஆகவே அதைத் தவிர்த்து, இந்த அதிகாரங்கள் பரவலாக கீழே வர வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படுமானால், அதற்கு நிச்சயமாக என்னுடைய கட்சி துணையாக இருக்கும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசிகள் சம்பந்தமாக இந்த ஆளுநர் உரையிலே சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னதான் திட்டங்கள் போட்டு மக்களிடத்திலே வருவாயைப் பெருக்கினாலும் விலைவாசிகள் ஏறுமேயானால் அந்த வருவாய்ப் பெருக்கின் பயன் அற்றுப்



போகும் என்பது எல்லோருக்குமே தெரியும். இன்றையத்தினம் ஒரு புறத்திலே பசுமைப் புரட்சி வெற்றி பெறுகிறது, உற்பத்தி பெருகுகிறது. அதே நேரத்திலே உணவுப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிற காட்சியினை நம்மாலே பார்க்க முடிகின்றது. இதை யார் செய்கிறார்கள்? நடுவிலே உள்ள மொத்த வியாபாரிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிடிப்பிலேயிருந்து இந்த மொத்த வியாபாரத்தை எடுத்துவிட்டால்தான் விலைவாசிகளை இஷ்டம்போல் ஏற்றுகின்ற முறை, இந்தத் தீமை, ஒழிக்கப் படும் என்று நான் கருதுகின்றேன். ஆகவே மொத்த வியாபாரத்தை, குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்களிலே யிருக்கிற மொத்த வியாபாரத்தை அரசு மேற்கொள்கிற நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

* **திரு. சோ. கருணைநாதன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது திரு. சே. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஒட்டி ஒரு சில வார்த்தைகளை நான் கூற ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த சில ஆண்டுகளாக, பொறுப்பேற்ற பின்பு, நாட்டு மக்களுக்கு அது ஆற்றியிருக்கின்ற பணிகளை, ஏழை எளியவர்களுடைய கண்ணீர்களை துடைத்து அவர்களுக்காக அல்லும் பகலும் ஆற்றுகின்ற பணியினை, நாட்டு மக்களெல்லாம் பாராட்டுகின்றார்கள். இந்த நேரத்திலே நமக்குப் பல சோதனைகளையும், இந்த ஆட்சி பீடத்தைக் கவிழ்ப்பதற்காக பலர் பலவிதமான சூழ்ச்சிகளையும் செய்கின்ற நேரத்தில் அது நாட்டு மக்களிடத்திலே பொருத்தமில்லாத ஒன்றாகப் போய் விடுகின்றது. ஆளுநர் உரையில் அதைச் சொல்லவில்லை, இதைச் சொல்லவில்லை என்று சொல்கின்றார்கள். அதே நேரத்தில் ஆற்றி யிருக்கின்ற சாதனைகள் முழுவதையும் சொல்ல இயலாமல் போய் விடுவதை நாம் அறிய வேண்டும். இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பொருத்த வரை ஒரு சில குறைகளை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல் நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை தவறியதால் உருளைக் கிழங்கு சாகுபடி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. காலையிலிருந்து மாலைவரை பனியிலும் குளிரிலும் அரும்பாடுபடும் அந்த பிற்பட்ட சமுதாயத்தினருக்கு உருளைக் கிழங்கு மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. விளைந்த உருளைக் கிழங்குக்கும் விலை இல்லாமல் போய் விட்டது. இந்த நிலையில் இந்த ஆண்டும் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்கு அருள் கூர்ந்து இந்த ஆண்டு சர்க்கார் கடன்களையும், கூட்டுறவுக் கடன் களையும் வாய்தாவாகத் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு இந்தக் கடன்களை வாய்தா தருவதோடு அவர்கள் மீண்டும் நல்ல முறையிலே சாகுபடி செய்து

[திரு. சோ. கருணைநாதன்] [1972 சனவரி 25

சர்க்காருக்கு வேண்டிய கடன்களை செலுத்தத் தக்க வகையில் அவர்களுக்கு மேலும் கடன் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்களுக்கு மீண்டும் கடன் தருவதன் மூலம் அவர்கள் விதைகளையும் உரங்களையும் பெற்று அந்தச் சாகுபடியை நல்ல முறையிலே செய்ய முடியும். ஆகவே அரசாங்கம் அதற்கான உதவியினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நமது மின்சாரத் திட்டம் நல்ல முறையிலே அங்கே ஈடேறி வருகிறது. அதே நேரத்தில் தொழிலாளர்களின் வீடுகளுக்கெல்லாம் மின்சார விளக்குகள் போடவேண்டும் என்ற திட்டத்தின் கீழ் அங்கே கடந்த வாரத்தில் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட ஒரு தோட்டத்தில் அந்த மின் விளக்குகளை ஏற்றி வைத்தார்கள். ஆனால் எல்லா முதலாளிகளும் அப்படிப்பட்ட காரியங்களிலே தயக்கம் காட்டுகின்றார்கள். அவர்களை அரசு வலியுறுத்தி அவர்களுக்கு கூடிய விரைவிலே மின் வசதியைச் செய்துதர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தற்போது நாட்டிலே மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கின்ற காரணத்தால் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அங்கே கோத்தகிரிப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இப்பொழுது நடந்துவருகின்றன. அங்கே விளைகின்ற பேரி, பிளம்ஸ், உருளைக் கிழங்கு முதலியவற்றைக்கொண்டு நல்ல தரமான ஆல்கஹாலை தயாரிக்க முடியும். அப்படி தரமான ஆல்கஹாலைத் தயாரிப்பதன் மூலமாக நாம் மற்ற மாநிலங்களிலேயிருந்து பெறுகின்ற அந்த செலவினைத் தவிர்க்க முடியும். ஆகவே அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதன் மூலம் வேலை வாய்ப்பு நமக்கு கிட்டும். அதே நேரத்தில் அந்தப் பகுதியும் வளர்ச்சியடையும் என்ற முறையில் இந்த தொழிற்சாலையைத் திறக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I thank you very much for giving me an opportunity to say a few words about the Governor's Address given to the Joint Session of the Legislature on the 22nd of this month.

In the very beginning of his Address, His Excellency the Governor has pledged his support to the Members in the House in the service of the people of Tamil Nadu. Really it is meaningful and I thank His Excellency the Governor for his solemn promise.

Next, the Governor has paid tributes to the valour of our armed forces and also the leadership of the Prime Minister of our country, Tirumathi Indira Gandhi. He has also remembered the services of the people who stood as one man at the time of the war both behind



1972 ஜனவரி 25] [Thiru K. S. Kothandaramiah]

the Central Government as well as the State Government. He has also not forgotten to express his thanks to the countries like U.S.S.R. and others that stood by us during the troubled period. He has also mentioned the measures taken by the State Government during the war and also the relief measures provided by this Government for the success of the war. He has also not forgotten to mention about the unfortunate and untimely death of Dr. Vikram Sarabhai, Chairman of the Atomic Energy Commission. The entire nation mourned at his demise and the Government of India have taken steps to appoint Dr. H. S. Sethna as the Chairman of the Atomic Energy Commission.

Coming to other points, I wish to state that with regard to the poverty of our country, His Excellency the Governor has stated, that after the successful termination of the war, we have to wage war on poverty. Everyone of us know that the war on poverty is more important and in regard to this matter he has clearly stated—

"I am sure that in our war on poverty, this Government and the Central Government will act with the same spirit of dedication and commitment. This Government's aspirations mirror the desires of the common man. This Government re-dedicates itself to the well-being and uplift of the masses in general and the struggling people in particular and I hope this spirit would be kept up ".

Regarding seasonal conditions and rainfall, he has stated—

" The rainfall during the south-west monsoon was, by and large, normal excepting in parts of Madras, Chingleput, North Arcot, Tiruchirappalli and Nilgiris. During the north-east monsoon, almost all districts received insufficient rains........."

Here I wish to point out that parts of Dharmapuri district Hosur and Denkanikottah taluks, did not get rainfall during the south-west monsoon up to the middle of September last year. A report in that regard on 20th September was sent to the Government by the Revenue authorities there. I myself have also sent a memorandum to the Government. In that petition I stated that due to failure of rains, crops like Gingelly, etc., have failed.

But it is unfortunate that this point has not been mentioned here in this speech and the name of Dharmapuri is left out. I hope this will be noted and the point will be mentioned in the coming budget speech and justice will be done.

Coming to the next point, steps are being taken by the State to improve agricultural production and extending electricity to villages. Electricity is being readily extended in our State to all the villages and as per the assurance given by the Government, I hope it will be kept up and by 1972-73 the entire State will be electrified and it will be an achievement to the Government and also to the people.

With regard to dry farming, I wish to say that the dry farming scheme has been introduced in Koilpatti taluk and Kudimiamalai taluk. When the Hon. Union Minister for Planning and Hon. Minister for Backward Classes, Tamil Nadu came to Dharmapuri recently they said that dry farming would be introduced in Dharmapuri district and that Dharmapuri is the best place for introducing dry-farming; and I hope Government would take steps to introduce dry-farming there.

With regard to industries, His Excellency the Governor has stated that a number of factories would be started in the State. With regard to cigarette factory, we do not know where it will be started. I would like to say that Hosur taluk has been the centre for producing excellent Virgina tobacco and it has good climate and soil for that. I request the Government to see that the Cigarette factory is located in Hosur taluk.

With regard to the Planning Commission in the State, I read from the newspapers that Central Government is going to introduce State Planning Committees in other States also after elections. With regard to district planning, I wish to state that more representation should be given to the M.L.As. and other representatives of the people. In one speech the Hon. Minister for Planning Union Government has mentioned about the necessity for grass-root planning; that means that planning should start from the bottom and not from the top. That means more representation should be given to the local M.L.As., the representatives of the people.

About the debt position, it is stated we have repaid about Rs. 150.9 crores during the last five years to Union Government and also received Rs. 140 crores from the Central Government. During 1971–72 the Government has paid Rs. 43 crores to the Centre by way of principal and Rs. 21.83 crores on account of interest. We have received Rs. 40.40 crores as Central assistance. Therefore what we receive from the Centre is less than what we pay back to them as debt repayment. That is why our Government have said that loans to unproductive socially beneficial schemes be written off as grants or converted into soft loans.

In this connection I want to say that rural indebtedness has also grown abnormally and small ryots with 1 or 2 acres are facing lot of difficulties in repaying the debts. I request Government to see that such small ryots' debts may be written off. I have already explained this in the District Development Council meetings and as such the Government may consider to write off the debts of small ryots. I hope the Government would do the needful in the matter.

The address of His Excellency is fine and I think His Excellency the Governor for such an address and I support the motion of thanks for the Governor's Address.

*** திரு. தொ. ப. சீனிவாசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது



உறுப்பினர் திரு. எஸ். கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது கவர்னர் பெருமான் அவர்கள் தமிழகத்திலே, தமிழ்நாடு அரசு நடத்திவருகின்ற பல அரிய சாதனைகளைப்பற்றி சிறப்பாக, எந்தெந்த வகையிலே செய்து வருகின்றது என்பதை இரத்தினச் சுருக்கமாக, மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் நடந்து முடிந்த போர் காலத்திலே தமிழ்நாடு அரசினுடையப் பங்கு எந்தெந்த வகையில் இருந்தது, பாதுகாப்பு நடவடிக்கைகளிலே தமிழ்நாட்டு முதல்வர் கலைஞர் அவர்களும், தமிழக மக்களும் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் காட்டினார்கள், எந்தெந்த வகையிலே போர் வீரர்களுக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பதைப்பற்றி மிகச் சிறப்பாக தமது உரையிலே கூறியிருக்கின்றார்கள். இதைப் பார்க்கும்போது கவர்னர் பெருமான் அவர்கள், தமிழக அரசு எந்தெந்த நேரங்களில் அரசியல் நோக்கம் பேசப்படுகிறதோ அந்த நோக்கோடு சரி; வேறு நேரத்தில்—நெருக்கடி நேரத்திலே நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார் என்று நினைக்கும்போது உள்ளபடியே நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

போர்க்களத்திலே வீரப்போராடி, வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு—அவர்களின் குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கும் சிறப்புத் திட்டம் தமிழ்நாட்டில் மட்டுமே இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் இல்லை. மாங்கல்யம் இழந்து நிற்கும் வீரர்களின் மனைவிகளுக்கு, அவர்தம் குடும்பங்களுக்கும் ஆறுதல் அளிக்கும் விதத்தில் நமது மாநில அமைச்சர்கள் சில இடங்களில் உதவித் தொகையான ஐயாயிரம் ரூபாயை நேரிலே கொடுத்திருக்கிறார்கள். இவ்வேற்பாடு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி செய்துள்ளது என்பதைச் சொல்லிக்கொள்வதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன்; கலைஞர் ஆட்சியை பாராட்டுகிறேன். நாலரைக் கோடி தமிழ் மக்களும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

வீர மரணம் எய்திய வீரர் ஆறுமுகம் அவர்களைப் பற்றிய செய்தியை கேட்கும்போது நம் உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன. எதிரியின் தாக்குதலுக்கு ஆட்பட்டு, உயிர் பிரிந்துகொண்டிருந்த நேரத்திலும், எதிரியின் விமானம் வீழ்ந்துவிட்டதா என்றுதான் கேட்டார். எதிரி விமானம் எரிந்துகொண்டிருக்கிறது என்பதைக் கேட்டுக்கொண்டே வீர மரணம் அடைந்துள்ளார். அந்தக் கடைசி நேரத்திலும் கருவுற்றிருக்கும் தன் மனைவியைப் பற்றி ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை; எதிரி விமானம் வீழ்ந்துவிட்டதா என்றுதான் கேட்டிருக்கிறார். அப்படிப்பட்ட வீரர் ஆறுமுகத்திற்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டுமென்று சட்டமன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, உணவு உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது, தமிழ்நாடு அரசு பல வகைகளில் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உணவு பற்றாக்குறையை சமாளித்திருக்கிறது என்று கவர்னர் பெருமான் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு தமிழ்நாடு அரசு தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலே பலவகை நவீனப் பயிர்முறைகளை கையாண்டு, நல்ல முறையில் ஊக்கத்தோடு செயலாற்றியிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. மறைக்கவும் முடியாது. அரசின் திட்டத்தைத் திறமையோடு செயல்படுத்திய விவசாயப் பெருங்குடி மக்களை இந்த நேரத்திலே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து என் தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். வேறு தொழிலே அங்கு கிடையாது. சுற்றிச்சுற்றி எங்கே பார்த்தாலும் விவசாயம்தான். விவசாயத்திற்கு அடுத்து, பணப் பயிராகிய கரும்பு சாகுபடி செய்வதற்கு வேண்டிய வசதிகள் ஏராளம் உள்ளன. எனவே, அங்கு ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவேண்டுமென்று அமைச்சரவர்களை ஆர்வத்தோடு கேட்டோம். அமைச்சரவர்களும் ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் வந்து பார்வையிட்டார்கள். இறுதியில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு டில்லியைக் கேட்டிருக்கிறோம்; உங்களுக்கு நிச்சயமாக சர்க்கரை ஆலை கிடைக்கும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

நான் சென்ற சட்டமன்ற தொடரில் இது சம்பந்தமாக ஒரு கேள்வி போட்டேன். அப்போது போளூரில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டத்தை டில்லி கைவிட்டுவிட்டது; அனுமதி கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இது அப்பகுதி மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. எனவே, சர்க்கரை ஆலை அமைக்க முடியாவிட்டாலும் வேறு தொழிற்சாலை—சிறு தொழிற்சாலைகளாவது அமைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜவ்வாது மலைப் பகுதியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பகுதி நம் மாநிலத்திலே வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவுக்கு சிறந்த வளம் கொழிக்கும் பகுதியாகத் திகழ்கிறது என்பதை நான் அடிக்கடி இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறேன். அங்கே சந்தனக்காடுகள் நிரம்ப உள்ளன. காடுகளில் ஏராளமாக மூங்கில் மரங்கள் வளருகின்றன. மூங்கிலைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை அமைக்கலாம். சந்தன மரங்கள் நிரம்ப உள்ளதால் அது சம்பந்தமான சிறு தொழில்களைத் தொடங்கலாம். இப்படிப்பட்ட சிறு தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதால், அந்தப் பகுதி





மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் பொருட்டு, சிறு தொழிற்சாலைகளை அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று மிகப்பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி வெறும் விவசாயப்பகுதி—அதற்குத் தேவையான நீர்ப்பாசனத் திட்டங்களை செய்து கொடுக்கவேண்டும் என்பதற்காக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால்தான் மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சரிடம் வேதனையுடன் கேட்டுக் கொண்டேன்.

குறிப்பாக என் பகுதியில் கோட்டப்புத்தூர் ஏரி என்று இருக்கிறது. அது இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் உடைந்து விட்டது. இன்னமும் சரிசெய்யப்படவில்லை. மாறாக ஏரிக்குள்ளேயே நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்கிறார்கள். அது பற்றிய வரலாற்றுச் சான்றுகள்—ரெக்கார்டுகளை எல்லாம் அதிகாரிகளிடத்திலேயே காண்பித்தேன். 2½ லட்சம் செலவு செய்தால் அற்புதமான டாம் ஒன்றை அந்த ஏரியை மையமாக வைத்தே கட்டிவிடலாம் என்றார்கள். ஒரு பக்கம் ஜவ்வாது மலை—மறு பக்கம் இரண்டு மலைகள்—நடுவே நீர்த்தேக்கம் என்கிற அளவில் அந்த ஏரி செப்பனிடப்படுமானால் ஏராளமான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரலாம். கமண்டலநாகநதியும் தொடர்பாக அமைந்திருக்கிறது. இதற்கு ஆவது மிகச் சிறிய தொகைதான். ஆகவே இந்த ஏரியைச் செப்பனிட்டு—அந்த டாமைக் கட்டித்தர வேண்டும் என்று இந்த அரசை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்னமேயே அந்தப் பகுதியில் சண்பகத்தோப்பு அணை என்பதாக ஒன்றைக் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. ஆயினும் சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து அந்தப் பகுதியில் இருந்து திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற காரணத்தினால் காங்கிரஸ் ஆட்சியில் இந்தத்திட்டம் நிறைவேற்றப் படாமலேயே கைவிடப்பட்டிருந்தது. நான் அரசியலுக்காகச் சொல்லவில்லை—அதன் பயனைக் கருதி உடனடியாக நம்முடைய தி.மு.க. ஆட்சியில் அந்தச் சண்பகத்தோப்புத் அணைத்திட்டத்தைச் செயல்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் என் தொகுதியில் பல பகுதிகள் நீர்ப்பாசன வசதியை பெறக்கூடும். அதேபோல வடபாதிமங்கலம் ஏரி உடைந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அதைச் செப்பனிடுவதற்கான அனுமதி சீக்கிரத்திலேயே கிடைத்துவிடும் என்று சொன்னார்கள். வரவில்லை. நிலக்காரர்களிடம் இருந்து அனுமதி வேண்டியிருக்கிறது என்றார்கள்—அதைக்கூட நான் அவர்களிடத்தில் சென்று பெற்றுத் தந்திருக்கிறேன். உடனடியாக என் தொகுதியில் இதுபோன்ற பல நீர்ப்பாசன வசதிகளை உடனடியாகச் செய்துதரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1972 சனவரி 25

அடுத்து, என்னுடைய தொகுதியில் 2 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒன்று சேத்துப்பட்டு ஊராட்சி மன்றம். மற்றொன்று போளூர் ஊராட்சி மன்றம். ஜனங்களுக்கு அடிப்படைத் தேவையாக இருக்கக்கூடிய ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, பள்ளி வசதி ஆகியவற்றை எல்லாம் ஊராட்சி மன்றங்களின் மூலமே செய்து கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஆனால் ஊராட்சி மன்றத்தில் போதுமான பொதுநிதி இல்லாத காரணத்தினால் செய்ய முடியவில்லை. ஊராட்சிகளுக்கு செஸ் மூலமே பணம் வரவேண்டியதாக இருக்கிறது. போதுமான அளவு வராத காரணத்தினால் பொது நிதி இல்லாத அளவில் இந்த இரண்டு ஊராட்சிகளும் சங்கட நிலையில் இருக்கின்றன. ஆகவே, அரசே நேரிடையாக இந்தப் பகுதியில் முழுச் செலவில் ரோடு வசதி, பள்ளி வசதி, குடிதண்ணீர் வசதி ஆகியவற்றைச் செய்து தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். சாலை வசதி இல்லாத காரணத்தினால் மண்டகுளத்தூர், திருமலை ஆகிய இடங்களுக்கு இன்றையதினம் நாங்கள் பத்து மைல், பதினைந்து மைல் சைக்கிளிலேயே போகவேண்டியதாக இருக்கிறது.

குடிதண்ணீர் வாரியம் போளூருக்கு பல லட்சம் செலவில் குடிதண்ணீர் வசதியை—அடிக்கல் நாட்டுவிழாவில் இருந்து 101 நாட்களுக்குள் செய்து கொடுத்திருப்பதற்காக வாரியத் தலைவரைப் பாராட்டுகிறேன். காப்புறுதி மூலம் கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க கடன் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எர்னஸ்டு டெபாசிட் என்பதாக 12 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதிக அளவில் செலவாகக் கூடிய திட்டங்களுக்கு வேண்டுமானால் 12 ஆயிரம் எர்னஸ்டு டெபாசிட் கேட்கலாம். ஆனால் கிராமங்களைப் பொறுத்த சிறு திட்டங்களுக்கு அந்தத் தொகையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த டெபாசிட்டுக்கு பணமாகக் கட்ட முடியாத நிலையில் பல இடங்கள் இருக்கின்றன. சர்க்கார் பாண்டாக வைத்துள்ளவர்கள் இருக்கிறார்கள். அந்த பாண்டை டெபாசிட்டாகக் கட்டினாலும் ஏற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் தொழிற்சாலைகள்—தொழிலாளர் என்கிற பிரச்சினை இல்லாவிட்டாலும் சென்னை கம்பெனி தொழிலாளர்கள் சம்பந்தமாக மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் மிக உருக்கமாக, இரக்கமாக பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதை எதிர்க்கட்சிக்காரர்களும் இங்கே ஆதரிக்கிறார்கள். ஆனால் பத்திரிகையில் வருகிற அறிக்கைகளைப் பார்க்கிறபோது மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன்தான், அந்த யூனியன் தலைவராகவும் அந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களிலேயே ஒருவர் வரவேண்டும் என்கிற கருத்தை ஆளுநர் அவர்கள் சூசக



1972 சனவரி 25] [திரு. தொ. ப. சீனிவாசன்]

மாக தன் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். அதை வாய்ப்பாக வைத்து எல்லாத் தரப்பினரும் ஏற்க முன்வரவேண்டும் என்று சொல்லி பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

*** திரு. எஸ். வடிவேல்** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நடந்து முடிந்த பாகிஸ்தான் பாரதப் போர் நமக்கு எதிரி யார், நண்பன் யார் என்பதைப் படம் எடுத்துக் காட்டியிருக்கிறது. எல்லோரும் இந்த யுத்தத்தைப் பற்றிச் சொல்கிறபோது நமக்கு நண்பராக இருந்த நாட்டைச் சொல்வதோடு கூட எதிரியாக இருந்தவர்களையும் சொல்லியிருக்கலாம். "பலம் பொருந்திய சில நாடுகள் உள்ள நிலைமைகளை சரிவரப் புரிந்து கொள்ளாமல் உதவி செய்த போதிலும்", என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் போரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் பாகிஸ்தானுக்கு பின்பலமாக இருந்துகொண்டு யுத்தத்தைத் தூண்டியது என்பது நாடு அறிந்த உண்மை. இதைத் தெளிவாகவே சொல்லிவிடுவதில் என்ன தயக்கம் என்பதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்து, இந்த அரசின் நோக்கம் ஏழை எளியவரான பாமர மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என்பதை எடுத்துக்காட்ட வருகிறபோது "பாமர மக்களின் குறிப்பாக இன்னலுறும் ஏழை எளியவரின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு, அவல வாழ்வு ஆனந்த வாழ்வு ஆவதற்குத் தன்னால் ஆனதையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1942-ல் நான் சுயமரியாதை இயக்கத்தில் இருந்தபோதே டாக்டர் கருணாநிதி அவர்களுடைய பேச்சைக் கேட்டு—நாடு நகரங்கள், பட்டிதொட்டிகள், சந்துபொந்துகள் எல்லாம் விழிப்புற்றபோது நானும் விழிப்புற்றேன். ஏழைகளின் உள்ளத்தைக் கவர்ந்த பெரும் தலைவராக இருந்தார் என்பது உண்மை. ஆனால் ஏழை எளியவர்களின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு அடிப்படையாக உள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் அவல வாழ்வு ஆனந்தவாழ்வாக மாறுவதற்கு ஏதாவது திட்டத்தை அறிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை. அடிப்படை நிலச்சீர்திருத்தம் ஒன்றுதான் ஏழைகளின் அவல வாழ்வை ஆனந்த வாழ்வாக மாற்றக் கூடியது. காங்கிரஸ்காரர்கள் காலத்தில் துண்டு துண்டாகப் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பது நாடறிந்த உண்மை. ஜமீன் ஒழிப்புச் சட்டம். ஜமீன் இனாம் பாதுகாப்புச் சட்டம், அறுபது நாற்பது வாரச்சட்டம், நியாயக் கூலிச் சட்டம், உச்சவரம்புச் சட்டம் என்பதாகப் பல சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அண்ணா அவர்கள் அன்றைக்கே உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது இது உச்சவரம்புச் சட்டம் அல்ல, மிச்ச வரம்புச் சட்டம் தான்

என்றார்கள். அவர்கள் 30 ஏக்கரா என்று வைத்திருந்ததை இந்த ஆட்சியில் 15 ஏக்கரா என்று குறைத்தார்கள் என்பது என்னவோ உண்மை. ஆனால் இந்த நாள் வரை இந்த உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கரா நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன, நிலம் இல்லாத ஏழை எளிய விவசாயிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்கிற விவரத்தை இன்னமும் அறிவிக்கவில்லை. காங்கிரஸ்காரர்களாவது 13 ஆயிரம் ஏக்கராவுக்கு மேல் நிலக் காரர்களிடம் இருந்து நிலத்தை எடுத்து விவசாயிகளுக்கு அளித்ததாக அறிவித்தார்கள். இன்றையதினம் நிலப்பரப்புக்கள்—வயிற்றில் இருக்கிற பிள்ளைகளில் இருந்து—குளத்தில் கிடக்கிற கல்லு வரையில் நிலத்தைப் பிரித்து—டிரஸ்ட் என்ற பெயரால் மாற்றி அமைத்துக்கொண்டிருப்பது நம் எல்லோருக்குமே தெரியும். இந்த நிலையில் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா உச்சவரம்பு என்று கொண்டு வந்த காரணத்தினால் அவல வாழ்க்கையில் இருக்கும் ஏழை எளிய விவசாயிகளில் எத்தனைபேர் ஆனந்த வாழ்வை அடைந்தார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதாக இந்தச் சமயத்தில் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரண நிலையில் இருக்கக்கூடிய தொழிலாளி பயன் அடையக் கூடிய விதத்தில் நியாயக்கூலிச் சட்டத்தை மேலத் தஞ்சைக்கும் விஸ்தரிக்க அரசு தயங்குகிறது. தயக்கம் இல்லாமல் தமிழ்நாடு பூராவுக்கும் அதை விஸ்தரிக்கவேண்டும். கணபதியா பிள்ளை அறிக்கையை கலைஞர் அவர்களும் எல்லோரும் படித்திருப்பார்கள். அதிலே 131 நாட்கள் பெண்களுக்கும், 186 நாட்கள் ஆண்களுக்கும் வேலை கிடைக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு பார்த்தால் வருடத்திற்கு 300 ரூபாய்க்கும் குறைந்த அளவிலே வருமானத்தை வைத்துக்கொண்டு கால மெல்லாம் அவர்கள் வாழ்க்கை நடத்தவேண்டியவர்களாக இருக் கிறார்கள். வறுமையிலிருந்து தொழிலாளர்கள் மீளவேண்டு மென்றால் நம்முடைய அரசு இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தி பெருகினால்தான் பல் வேறு துறைகளிலும் முன்னேறமுடியும். எனவே, அந்த வகை யிலே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு இந்த உயர் விலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சேலம் இரும்பாலை ஏற்படுத்துவதில் மத்திய அரசு தாமதம் செய்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டு அவர்கள் தாமதம் செய்கிறார்கள் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்



கிறேன். நம்முடைய முன்னேற்றத்திற்கு தடையேற்படுத்த முனைந்திருக்கிறார்கள் என்றால் நாம் ஒருமுகமாக அதை நிறை வேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

மேலும் ஆறு பஞ்சாலைகளைத் திறப்பதற்கு இன்னும் மத்திய அரசிடமிருந்து இசைவு வரவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார் கள். இந்த ஆறு பஞ்சாலைகள் மட்டுமல்ல, மூடியிருக்கிற மில்களை யெல்லாம் திறப்பதற்கு மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி திறப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே 90 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கவில்லை யென்றாலும்கூட நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யிலே குறைந்தது 4 லட்சம் பேர்களாவது வேலையில்லாமல் இருக் கிறார்கள். பி.ஏ. படித்துவிட்டு, எம்.ஏ. படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஓட்டிய படை இளைஞர் படைதான், அதேபோன்று அகம் பாவம் பிடித்த சிலரை அகற்றியதும் இந்த இளைஞர் படைதான். அதையெல்லாம் உணர்ந்து நம்முடைய கலைஞர் அவர்கள், வேலை கிடைக்காமல் இருக்கிறவர்கள் யாரை நம்புவது என்ற தேக்கம் ஏற்பட்டிருக்கிறதால், அதைபோக்கி வேலை கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ். எஸ். எல். சி. படித்த ஒருவருக்கு பியூன் வேலை கிடைப்பதற் காக நான் எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுக்குச் சென்றிருந்தேன். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவருக்கு பியூன் வேலை கொடுக்க கூடாது என்று உத்திரவு இருப்பதாகச் சொல்கிறார்கள் பாஸ் பண்ணவில்லை யென்றாலும் வேலை கிடைத்தால் போதும் என்று தான் நினைக்கிறார்கள். இப்பொழுது இரண்டாயிரம் பேர்களுக்கு வேலைகொடுக்க அரசு முன்வந்தாலும் இன்னும் துரிதப்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்த அவல நிலைமையை அகற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன வகுப்பினர் முன்னேற்றத்திற்காக 1967-ஆம் ஆண்டிலே 3.55 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு 5.32 கோடியாக உயர்த்தப்பட்டிருந்தாலும் அவர்கள் அன்றைக்கிருந்த எண்ணிக் கையையும் இன்றைக்கு உள்ள எண்ணிக்கையையும் பார்த்தால் அது போதாது. எனவே ஒதுக்கீடு செய்யும்பொழுது இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் கிறித்துவ அரிசனங்களுக்குக் கிடைப்பதில்லை. கல்வியிலேதான் இருக்கிறது. எல்லாச் சலுகைகளையும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இந்து மதத்திலே இழைக்கப்பட்ட கொடுமைகள் தாங்கமாட்டாமல்தான் பல்வேறு மதங்களுக்குச் சென்றார்கள்.

ஏதோ உழுத மாடு பரதேசம் போனாலும் அங்கேயும் ஏர்கட்டி அடிக்கிற மாதிரி சலுகைகள் இல்லாமல் இருக்கிறது. எனவே அவர்களுக்கும், அரிசனங்களுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாச் சலுகைகளும் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் இவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே இணைக்கவேண்டுமென்றும், அவர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் அவர்கள். எனவே அவர்களையும் இந்தப் பட்டியலிலே சேர்த்து சலுகைகளைப் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சலவைத் தொழிலாளர், இவர்களையெல்லாம் தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதை எதிர்க்கட்சியில் உள்ள அரிசன உறுப்பினர்களும் அரிசன வகுப்பைச் சார்ந்த தலைவர்களும் ஒத்துக்கொண்டு அரசுக்கு ஆலோசனை எழுதியனுப்பினால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** எங்களைப் பொறுத்தவரையிலும் ஏற்றுக்கொள்கிறோம். மற்றக் கட்சிக்காரர்களை நீங்கள் கேளுங்கள்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. கொள்ளிடத்தின் தென்கரையிலே 28.62 ரூபாய் விற்கிற நெல் கொள்ளிடத்தின் வட கரையிலே 38.62 ரூபாயாக விற்கிறது. நெல் விலை ஏறுவதும் இறங்குவதுமாக நிலைமை இருக்கிறது. உழவர்களுக்குப் போதுமான விலை கிடைக்கவில்லை. அதேநேரத்தில் நெல்லைப் பிடித்து வைத்து இருந்து வணிகச் சூதாட்டம் ஆடக்கூடியவர்கள் 40 ரூபாய் 50 ரூபாய் என்ற அளவுக்கு வறுமைக்காலங்களில் விற்று விடுகிறார்கள். அரிசி விலையும் ஏறிவிட்டது. 28 ரூபாய்க்கு நெல் வாங்கினால் 68 காசுக்கு 70 காசுக்கு அரிசி கொடுக்கலாம். ஆனால் அரிசியின் விலையும் உயர்ந்து விட்டது. இதன் காரணமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கும் போதிய பணம் கிடைக்கவில்லை, வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் அதிகவிலை கொடுத்துக் கஷ்டப்படுகிறார்கள். இந்த இரண்டு நிலைமைகளுக்கும் இடையேயுள்ள வணிகச் சூதாடிகள் சம்பாதித்துக்கொள்கிறார்கள். இந்த நிலைமையைத் தடுத்த அரசாங்கமே இதை ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.க்களுடைய பிரச்னை மோசமாக இருக்கிறது. சம்பளம் உயர்த்திக்கொண்டே போவதிலே பிரயோசனம் இல்லை. விலைவாசிகளும் கூடிக்கொண்டே இருந்தால் சம்பளம் ஏற்றிப் பிரயோசனம் இல்லை. 7 ரூபாய் சம்பளம் உயர்த்திவிட்டு, 15 ரூபாய் விலைவாசி ஏறிவிடுகிறது என்றால் சம்பளம் உயர்த்தியும்





பிரயோசனமில்லை. எனவே இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே என்னுடைய பெயரையும் இணைத்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்துச் செரு முனையிலே நம்முடைய வீரர்கள் காட்டிய வீரத்தைப் புகழாரம் சூட்டி, புதிதாக உருவாகி இருக்கிற வங்காள தேசத்தை வாழ்த்தி, கீழத் திசையிலே நம்பிக்கை ஒளியூட்டும் நட்சத்திரமாக விளங்குகிற வங்காள தேசத்திற்குத் துணை நின்ற இந்திய மக்களின் ஒத்துழைப்பையும் புகழ்ந்து, உறுதுணையாக இருந்த சோவியத் நாடு தந்த ஒத்துழைப்பையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நாமும் நம்முடைய சட்டமன்றத்திலே உடல் புல்லரிக்க, உள்ளமெலாம் பொங்குமாகடலாக, கண்கள் குளமாக புதியதாக உருவாகிய வங்காள தேசத்தை வாழ்த்தி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். போர் வீரர் வீரத்தினைப் புகழ்ந்து விட்டு ஏர்முனையிலே நம்முடைய அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையும் அவர்கள் குறிப்பிடத் தவறில்லை.

நம்முடைய வேளாண்மைத் துறையும், பொதுப்பணித் துறையும், மின்சாரத் துறையும், கூட்டுறவுத் துறையும் எந்த அளவுக்கு இணைந்து பணியாற்றுகின்றன என்பதை நடுநிலையைப் புரிந்து கொண்டவர்கள் தெளிவாக அறியமுடியும். எங்களுடைய முகவை மாவட்டத்தின் மேற்குப் பகுதி வளம் குறைந்திருக்கிறது. அங்கே நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால்தான் அங்குள்ள விவசாயிகளின் வாழ்விற்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தை நிச்சயமாகக் காண முடியும். சங்கரநத்தம் அணைத் திட்டம் நிறைவேறியிருக்கிறது. இன்னும் வைப்பாறு திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதையும் விரைவில் நிறைவேற்றினால்தான் அங்குள்ள பகுதி வளமாக ஆவதற்கு ஏதுவாகயிருக்கும். நாடு முழுவதும் மழைபெய்து பசுமை ஏற்பட்டிருக்கும் இந்த புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இன்றும் வறட்சி இருக்கிறது. நிலையிலும் எங்கள் பகுதியில் என் பகுதியிலுள்ள திருவில்லி சோலை வனத்திற்கிடையில் ஒரு பாலைவனத்தைப் போல அது இருக்கிறது. அங்கு கூட்டுறவுத் துறையில் தவணை முறையில் கட்டுகின்ற கடன்களையும், அரசாங்கக் கடன்களுக்குக் கட்டுகின்ற தவணைகளையும் அதிகமாக்கித் தர அரசு முன் வரவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முகவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் வங்காளவிரி குடாக்கடல் ஒரு பகுதியிலேயும், மேற்குத் தொடர்ச்சி மலை ஒரு பகுதியிலேயும் கொண்டதாக இருக்கிறது. எங்கள் மாவட்டத் தலைநகரைப் பார்க்காத மக்கள் எங்கள் மாவட்டத்தில் ஏராள மானவர்கள் இருக்கிறார்கள். காந்தியைப் பார்க்காத காங்கிரஸ்

காரர்களைப்போல. ஆகவே நிர்வாக சீர்திருத்தமுறையில் மாவட்டத்தைச் சீர்திருத்தி அமைக்க முன்வர வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் இந்த அரசு ஏழை எளியவர்களின் பக்கத்தில் தன் கவனத்தைத் திருப்பியிருக்கிறது என்று சிறப்பாக எடுத்துக் காட்டினார்கள். 1967-இல் தமிழகத்தில் ஆட்சியில் ஏற்பட்ட மாறுதல்களுக்குக் காரணத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு, 1967 வரையில் ஆட்சிப்பொறுப்பிலேயிருந்த காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப்பீடத்திலேயிருந்து நீக்கப்பட்டதற்கும், ஆட்சியாளர்களை உருவாக்குகின்ற மக்களின் உள்ளத்திலேயிருந்து நீக்கப்பட்டதற்கும் காரணம், 1968-இல் இந்த மாமன்றத்தில் பேசிய எங்கள் பேராசிரியர் திரு. எஸ். ஆர். நாயுடு அவர்கள் சிறப்பாகச் சுட்டிக் காட்டினார்கள். காங்கிரஸ் அரசு ஏழை எளியவர்களின்பால், குறைசொல் மக்களின்பால் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த மறந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, இந்த அரசு ஏழை எளியவர்களின் உள்ளத்திலே பார்க்கும் பொழுது கண்மணியாக விளங்குகிறது என்பதை ஆளுநர் அவர்கள் துல்லியமாக புரிந்துகொண்டு எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குகின்ற முழுக் கடமையும் மத்திய சர்க்காரைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்றாலும், எதாவதொரு துணிச்சலான பங்கையேற்று அதிலே எப்படியாவது எதிர் நீச்சல் போட்டு வெற்றி காண வேண்டுமென்று இளைஞர் அணியை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும், அதே நேரத்தில் அந்த இளைஞர்களைப் பயன்படுத்தி சமுதாயத்தில் சில முக்கியமான சீர்திருத்தங்களையும் செய்து, மடமை இருளைப் போக்க அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திருச்சியில் நடைபெற்ற இளைஞர் அணி துவக்கவிழாவில் முதலமைச்சரவர்கள், சென்று வருக, வென்று வருக என்று வாழ்த்துரைத்தார்கள். அந்த வாழ்த்து இன்று மெய்ப்பிக்கப்பட்டு இளைஞர் அணி நல்லமுறையில் செயல் பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது என்பதை ஆளுநர் அவர்கள் காட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, முழுக்க முழுக்க இயந்திரங்களையே பயன் படுத்தாமல் கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பை வழங்குகின்ற முறையில் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே இயந்திரங் களையே அதிகமாகப் பயன்படுத்துவோமேயானால் பலருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகும் என்று அண்ணல் காந்தி கூறினார்கள். இயந்திரங்களைக்கொண்டே நாம் எல்லா வேலைகளையும் செய்யத் தீர்மானித்துவிட்டால் நாட்டில் பெரும்





பாலோர் தற்கொலை செய்து கொள்ள வேண்டிவரும் என்று காந்தி யடிகள் குறிப்பிட்டார்கள். ஆகவே அதைப்புரிந்துகொண்டு, காந்தியடிகளின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் கிராமப் புறவேலைவாய்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு அங்கே பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் விவசாயம் மட்டும்தான் இருக்க முடியும் என்ற நிலையை மாற்றி அங்கேயே புதிய தொழில்களை துவங்கி, நகர்ப்புறத்திலேயுள்ள இளைஞர்களும் கிராமப்புறங்களுக்குச் செல்ல வேண்டுமென்கிற அளவில் வாய்ப்பு களைக் கொடுக்க இந்த அரசு நல்ல திட்டங்களை உருவாக்கி யிருக்கிறது.

நம்மைப்பொறுத்தவரையில் நாம் எந்தப்பிரச்னையைச் சுட்டிக் காட்ட முன்வந்தாலும் அதிலேயிருக்கிற சிக்கலை நாம் எடுத்துக் காட்ட முன்வந்தால் அதிலே மத்திய மாநில உறவுதான் முன்னாலே வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை. விலைவாசி ஏறுகிறது என்றாலும்கூட விலைவாசி ஏற்றத்திற்குக்காரணம் பொருள்களின் உற்பத்தியைக் காட்டிலும் பணப்புழக்கம் அதிகமாகி விட்டால் விலைவாசி அதிகமாகும் என்பது அடிப்படை பொருளாதாரம். ஆகவே மத்திய சர்க்காரும் ஒரு காரணம் என்பதை ஆளுநர் அவர்கள் இங்கே குறிப்பிடத் தவறவில்லை. ஆனால் எல்லையிலே தொல்லைகள் வரும் நேரத்திலேதான், எல்லையிலே பீரங்கிகள் முழக்கம் கேட்கிற நேரத்திலேதான் மத்திய சர்க்கார் நமக்கு நினைவிற்கு வருகிறதேதவிர மற்ற நேரத்திலே, சட்டம் ஒழுங்குப் பிரச்னை எழும் நேரத்திலும், தொழில் துறையில் ஏற்படுகின்ற சிக்கல்களானாலும் அத்தனை பிரச்னைகளையும் மாநில அரசுதான் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மாநில அரசு இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு, பிரச்னையைப் போக்குவதற்கு அதற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. கிராமத்தைப் பொறுத்தவரையிலும் சொல்வது உண்டு, ஒரு குளத்தில் ஒரு கல்லை விட்டெறிந்தால், கல் விட்டெறிந்த இடத்தைச்சுற்றி ஒரு சிறிய வட்டம் தோன்றும், அந்தச் சிறிய வட்டத்தைச் சுற்றி ஒரு பெரிய வட்டம் தோன்றும், பிறகு அதைச் சுற்றி ஒரு வட்டம் தோன்றும். இப்படி குளம் முழுவதும் சுற்றுகின்ற அளவில் மிகப்பரிய வட்டம் தோன்றும். அந்த நிலைமையில் அடிப்படையை உருவாக்க வேண்டுமே தவிர, ஓரேயிடத்திலே பிரமிடுபோல குவித்து வைத்துக்கொண்டிருந்தால் நாடு நன்னிலை பெறாது. அந்த வகையிலேதான் மாநில சுயாட்சி என்ற முழக்கத்தை எழுப்பினோம். அமெரிக்காவில் பல ராஜ்யங்கள் இருக்கின்றன. பல ராஜ்யங்கள் இருந்தாலும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. தனித்தனி கொடியும், தனித்தனி தேசிய கீதமும் கூட இருக்கிறது. அதுபோல் மலேசியா நாட்டில் 14 ராஜ்யங்கள் இருக்கின்றன. அவர்களுக்குத் தனித்தனி கொடி, தனித்தனி தேசிய கீதம். தனித்தனியாக அவர்களுக் கேற்ற அதிகாரம் இருக்கிறது. நம்முடன் அடிமைப்பட்டு,

நமக்குப் பின்னால் விடுதலை பெற்ற சமஷ்டி நாடாகிய மலேசியாவில் இப்படிப்பட்டவகையிலே முன் உதாரணமாக இருக்கிறது. ஆகவே நாம் மாநில சுயாட்சி என்று சொல்வது இந்த நாட்டின் நன்மைக்கு. தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக நாம் கூறிக் கொண்டிருக்கிறோம்.

நேற்று இந்த மாமன்றத்தில் பேசிய திரு. சுரேந்திரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் இந்த அவையில் இப்பொழுது இல்லாத காரணத்தால் நான் அதைப்பற்றி விரிவாகப் பேசவிரும்பவில்லை. கலைஞர் அவர்கள் சில இடங்களுக்கு வரும் நேரத்தில் அவர்களை, தமிழ் நாட்டின் முஜிபுர் ரகிமான் அவர்களே வருக என்று வரவேற்பதாகக் குறிப்பிட்டார்கள். இதைக் கேலிக்கு உரியதாக, கேள்விக்கு உரியதாக அவர்கள் ஏன் ஆக்கினார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தோடு தோழமை கொண்ட ஒரு நாட்டின் தலைவர், ஒரு நாட்டு மக்களின் எழுச்சிச் சின்னமாக இருக்கும் தலைவர், அவரை நாம் குறிப்பிடுகிறோமே தவிர கலைஞர் அவர்களைத் தமிழ்நாட்டின் பூட்டோ என்றோ, யாஹ்யாகான் என்றோ அழைத்தால்தான் அதிலே திரு சுரேந்திரன் அவர்கள் வேதனைப்பட வேண்டும். முஜிபுர் ரகிமான் வங்க மக்களின் எழுச்சிச் சின்னம் அதைப் போலவே, தமிழகத்தில் தங்கள் நெஞ்சத் தலைவரான கலைஞர் அவர்களை அந்தப் பெயரிலே அழைக்கிறார்கள். ஒருவேளை சுரேந்திரன் அவர்கள் சந்தேகப்படக்கூடும். முஜிபுர் ரகிமான் அவர்கள் விடுதலை அல்லவா கேட்டார். அதைப்போல் கலைஞர் அவர்களும் அதற்கு அடித்தளம் அமைக்கிறார்களோ என்று சந்தேகப் படக்கூடும். ஆனால் முஜிபுர் ரகிமான் அவர்கள்கூட மாநில சுயாட்சி என்பதைத்தான் கேட்டார்கள். அவர் பேசிய கூட்டங்களில் இறுதியில் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கத்தைத்தான் முழங்கினார்கள். மேற்கு பாகிஸ்தானும், கிழக்கு பாகிஸ்தானும் பாகிஸ்தானின் இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகளாக விளங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள் ஆனால் நிலைமை முற்றிப்போய், யாஹ்யாகானின் படைகள் வங்க தேசத்தில் அடி வைத்து, அங்குள்ள மக்களின்மீது துப்பாக்கி ரவைகளைப் பாய்ச்சி இதயத்தைச் சல்லடைக் கண்களாக ஆக்கிய பிறகுதான் விடுதலை முழக்கம் ஏற்பட்டது. ஆகவே கலைஞர் கருணாநிதி அவர்கள் முஜிபுர் ரகிமானாக மாறிவிடுவார்கள் என்று பயப்பட வேண்டாம். ஒருவேளை இந்திரா காந்தி யாஹ்யாகானாக மாறினால் கலைஞர் அவர்கள் முஜிபுர் ரகிமானாக மாறக்கூடும். ஒருவேளை மாநிலங்களை இந்திரா காந்தி காலிலே போட்டு மிதித்துப் புறக்கணித்தால், அலட்சியப்படுத்தும் நிலைமை ஏற்பட்டால் முன்னேற்ற கழகமும் முக்தி வாகினியாக மாறும். ஆனால் அந்த நிலை நிச்சயமாக ஏற்படாது என்று நம்புகிறோம். இந்திரா காந்தி அவர்கள் ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள். இந்திரா காந்தி அவர்கள் வங்க தேசத்திற்காக அதனுடைய சுயாட்சிக்காக, அதனுடைய நியாயமான நோக்கத்திற்காக உலக நாடுகளுக்கெல்லாம் சென்று பரிந்து பேசியவர்கள் ஆகவே இந்திரா காந்தி





இந்திரா காந்தியாக இருக்கும் வரையில் கருணாநிதி கருணாநிதியாகவேதான் இருப்பார் என்று கூறி திரு. சுரேந்திரன் அவர்கள் சந்தேகப்பட தேவையில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே மாநில சுயாட்சி பற்றி திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். சுயாட்சி இலட்சியத்தை நீங்கள் மட்டுமா கேட்டீர்கள், நாங்கள் கேட்கவில்லையா, நாங்கள் தான் ஆரம்பித்தோம் என்று சொன்னார்கள். ஆகவே, மாநில உரிமைகளைக் கேட்கிறோம். இதில் கட்சிக் காய்ப்புகளை மறந்து, உரிமைகளைப்பெற்று இந்த நாடு முன்னேற, வளர்ச்சிப் பாதையிலே அடியெடுத்து வைக்க, இந்த நாட்டு மக்களின் மொழிப்பண்பாட்டையும், பெருமையையும் காக்க கட்சி வேறுபாடுகளை மறந்து, காவிரிப் பிரச்னையிலே எப்படி அனைவரும் ஒன்று சேர முழங்கினோமோ அதைப்போல மாநில சுயாட்சியையும் பெற முழங்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது முதலமைச்சர் அவர்களை முஜிபுர் ரகிமானைச் சொல்லுவது சரியா இல்லையா என்ற முறையில் பேசியதாகச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களை முஜிபுர் ரகிமானோடு ஒப்பிட்டுச் சொல்லும்போது பாகிஸ்தானின் யாஹியாகான் போன்று இந்திரா காந்தி இருப்பது போன்ற பொருள் தருவதாக இருக்கிறதே, அதைப் புரிந்து கொண்டு சொல்லுகிறார்களா என்றுதான் சொன்னேன்.

**திரு. கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, முஜிபுர் ரகிமான் என்று சொல்லுவது ஒரு எழுச்சியின் சின்னமே தவிர வேறல்ல. ஒரு மாபெரும் தலைவனை எடுத்துக் கொண்டு அதே போன்ற தலைவன் என்று சொல்லுவதில் தவறு இல்லை. காமராஜர் அவர்களை காலா காந்தி என்று குறிப்பிடுவதைப் போல் கலைஞர் அவர்களை இப்படிக் குறிப்பிடுகிறோமே தவிர, முஜிபுர் ரகிமானாகவே மாற வேண்டும், அப்படி மேக்கப் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அவர் ஒரு தத்துவம், எழுச்சியின் சின்னம் என்ற முறையில்தான் குறிப்பிட்டோம் என்பதை அருமை நண்பர் சுரேந்திரன் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது இன்னொருவரையும் குறிப்பிட்டதாக மனத்தில் வைத்துக் கொண்டால் அதிலே அர்த்தம் இல்லை. ஒருவரைக் காந்தி என்று சொல்லும்போது மற்றவர்களை எல்லாம் கோட்ஸே என்று கருதிக் கொள்வதில்லை.

*** திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் உரையின்மீது ஒருசில வார்த்தைகளைப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமக்குப் பின்னால் விடுதலை பெற்ற சமஷ்டி நாடாகிய மலேசியாவில் இப்படிப்பட்டவகையிலே முன் உதாரணமாக இருக்கிறது. ஆகவே நாம் மாநில சுயாட்சி என்று சொல்வது இந்த நாட்டின் நன்னிலைக்கு. தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக நாம் கூறிக் கொண்டிருக்கிறோம்.

நேற்று இந்த மாமன்றத்தில் பேசிய திரு. சுரேந்திரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் இந்த அவையில் இப்பொழுது இல்லாத காரணத்தால் நான் அதைப்பற்றி விரிவாகப் பேசவிரும்பவில்லை. கலைஞர் அவர்கள் சில இடங்களுக்கு வரும் நேரத்தில் அவர்களை, தமிழ் நாட்டின் முஜிபுர் ரகிமான் அவர்களே வருக என்று வரவேற்பதாகக் குறிப்பிட்டார்கள். இதைக் கேலிக்கு உரியதாக, கேள்விக்கு உரியதாக அவர்கள் ஏன் ஆக்கினார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தோடு தோழமை கொண்ட ஒரு நாட்டின் தலைவர், ஒரு நாட்டு மக்களின் எழுச்சிச் சின்னமாக இருக்கும் தலைவர், அவரை நாம் குறிப்பிடுகிறோமே தவிர கலைஞர் அவர்களைத் தமிழ்நாட்டின் பூட்டோ என்றோ, யாஹ்யாகான் என்றோ அழைத்தால்தான் அதிலே திரு சுரேந்திரன் அவர்கள் வேதனைப்பட வேண்டும். முஜிபுர் ரகிமான் வங்க மக்களின் எழுச்சிச் சின்னம் அதைப் போலவே, தமிழகத்தில் தங்கள் நெஞ்சத் தலைவரான கலைஞர் அவர்களை அந்தப் பெயரிலே அழைக்கிறார்கள். ஒருவேளை சுரேந்திரன் அவர்கள் சந்தேகப்படக்கூடும். முஜிபுர் ரகிமான் அவர்கள் விடுதலை அல்லவா கேட்டார். அதைப்போல் கலைஞர் அவர்களும் அதற்கு அடித்தளம் அமைக்கிறார்களோ என்று சந்தேகப் படக்கூடும். ஆனால் முஜிபுர் ரகிமான் அவர்கள்கூட மாநில சுயாட்சி என்பதைத்தான் கேட்டார்கள். அவர் பேசிய கூட்டங்களில் இறுதியில் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கத்தைத் தான் முழங்கினார்கள். மேற்கு பாகிஸ்தானும், கிழக்கு பாகிஸ்தானும் பாகிஸ்தானின் இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகளாக விளங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள் ஆனால் நிலைமை முற்றிப்போய், யாஹ்யாகானின் படைகள் வங்க தேசத்தில் அடி வைத்து, அங்குள்ள மக்களின்மீது துப்பாக்கி ரவைகளைப் பாய்ச்சி இதயத்தைச் சல்லடைக் கண்களாக ஆக்கிய பிறகுதான் விடுதலை முழக்கம் ஏற்பட்டது. ஆகவே கலைஞர் கருணாநிதி அவர்கள் முஜிபுர் ரகிமானாக மாறிவிடுவார்கள் என்று பயப்பட வேண்டாம். ஒருவேளை இந்திரா காந்தி யாஹ்யாகானாக மாறினால் கலைஞர் அவர்கள் முஜிபுர் ரகிமானாக மாறக்கூடும். ஒருவேளை மாநிலங்களை இந்திரா காந்தி காலிலே போட்டு மிதித்துப் புறக்கணித்தால், அலட்சியப்படுத்தும் நிலைமை ஏற்பட்டால் முன்னேற்ற கழகமும் முக்தி வாகினியாக மாறும். ஆனால் அந்த நிலை நிச்சயமாக ஏற்படாது என்று நம்புகிறோம். இந்திரா காந்தி அவர்கள் ஜனநாயகத்தை விரும்புகிறவர்கள். இந்திரா காந்தி அவர்கள் வங்க தேசத்திற்காக அதனுடைய சுயாட்சிக்காக, அதனுடைய நியாயமான நோக்கத்திற்காக உலக நாடுகளுக்கெல்லாம் சென்று பரிந்து பேசியவர்கள் ஆகவே இந்திரா காந்தி





இந்திரா காந்தியாக இருக்கும் வரையில் கருணாநிதி கருணாநிதியாகவேதான் இருப்பார் என்று கூறி திரு. சுரேந்திரன் அவர்கள் சந்தேகப்பட தேவையில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே மாநில சுயாட்சி பற்றி திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். சுயாட்சி இலட்சியத்தை நீங்கள் மட்டுமா கேட்டீர்கள், நாங்கள் கேட்கவில்லையா, நாங்கள் தான் ஆரம்பித்தோம் என்று சொன்னார்கள். ஆகவே, மாநில உரிமைகளைக் கேட்கிறோம். இதில் கட்சிக் காய்ப்புகளை மறந்து, உரிமைகளைப்பெற்று இந்த நாடு முன்னேற, வெற்றிப் பாதையிலே அடியெடுத்து வைக்க, இந்த நாட்டு மக்களின் மொழிப்பண்பாட்டையும், பெருமையையும் காக்க கட்சி வேறுபாடுகளை மறந்து, காவிரிப் பிரச்னையிலே எப்படி அனைவரும் ஒன்று சேர முழங்கினோமோ அதைப்போல மாநில சுயாட்சியையும் பெற முழங்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது முதலமைச்சர் அவர்களை முஜிபுர் ரகிமானைச் சொல்வது சரியா இல்லையா என்ற முறையில் பேசியதாகச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களை முஜிபுர் ரகிமானோடு ஒப்பிட்டுச் சொல்லும்போது பாகிஸ்தானின் யாகியாகான் போன்று இந்திரா காந்தி இருப்பது போன்ற பொருள் தருவதாக இருக்கிறதே, அதைப் புரிந்து கொண்டு சொல்லுகிறார்களா என்றுதான் சொன்னேன்.

**திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, முஜிபுர் ரகிமான் என்று சொல்லுவது ஒரு எழுச்சியின் சின்னமே தவிர வேறல்ல. ஒரு மாபெரும் தலைவனை எடுத்துக் கொண்டு அதே போன்ற தலைவன் என்று சொல்லுவதில் தவறு இல்லை. காமராஜர் அவர்களை காலா காந்தி என்று குறிப்பிடுவதைப் போல் கலைஞர் அவர்களை இப்படிக் குறிப்பிடுகிறோமே தவிர, முஜிபுர் ரகிமானாகவே மாற வேண்டும், அப்படி மேக்கப் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அவர் ஒரு தத்துவம், எழுச்சியின் சின்னம் என்ற முறையில்தான் குறிப்பிட்டோம் என்பதை அருமை நண்பர் சுரேந்திரன் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது இன்னொருவரையும் குறிப்பிட்டதாக மனத்தில் வைத்துக் கொண்டால் அதிலே அர்த்தம் இல்லை. ஒருவரைக் காந்தி என்று சொல்லும்போது மற்றவர்களை எல்லாம் கோட்ஸே என்று கருதிக் கொள்வதில்லை.

*** திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் உரையின்மீது ஒருசில வார்த்தைகளைப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரை வழக்கம்போல் வரக்கூடிய உரையாகத்தான் இருக்கிறது. இதிலே ஒன்று மட்டும் புதிதாகத் தெரிய வருகிறது என்னவென்றால் மத்திய அரசுக்கு ஒரு கருணை மனு கொடுத்தது போன்று என தோன்றுகிறது.

என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் விவசாய நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் மூலமாக ஏற்பட்டு வருகின்ற தொல்லைகளைப் போக்குகின்ற வகையில் அரசு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. விவசாயச் சீர்திருத்தச் சட்டங்கள், இனும் ஒழிப்புச் சட்டங்கள் காரணமாக அந்தப் பகுதி விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்பது பற்றி கவர்னர் உரையிலே ஒன்றும் விளக்கப்படவில்லை. அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு எவிக்ஷன் ஆர்டர் கொடுக்கப்பட்டு நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

கவர்னர் அவர்கள் உரையிலே முதலாவது வங்க தேசப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையிலேயே எங்கள் பகுதியைப் பார்க்கும்போது வங்க தேசப் பிரச்சினை மாதிரி அங்கு இருக்கிறது. அந்த அளவுக்கு இனாம்தாரர்கள் விவசாயிகளுக்குத் தொல்லை செய்து கொண்டிருக்கிறார்கள். இது பற்றி பல மனுக்கள் மூலமாக அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோம். அவற்றை விரைவில் கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இனாம் கிராமங்களில் பல பஞ்சாயத்துக்களில் அபிவிருத்தி வேலைகள் எதையும் செய்ய முடியவில்லை. அரசாங்கத்திலிருந்து கொடுக்கக்கூடிய நன்மைகளை அந்தப் பகுதி மக்கள் அனுபவிக்க முடியவில்லை. கிராமங்களில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை சர்வே செய்யாத காரணத்தால் எந்தெந்தப் பகுதி புறம்போக்கு என்று திட்டவட்டமாக ஒப்படைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ரோடு போடுவது, குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி செய்வது ஆகிய நல்ல காரியங்களைச் செய்ய முடியவில்லை. பஞ்சாயத்து யூனியன் மூலம் இரண்டொரு ரோடுகள் போட்டார்கள். அந்த ரோடுகளுக்கெல்லாம் இனாம்தார்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய நிலை வந்துள்ளது. இவ்வாறு பல தொல்லைகள் இருந்து வருகின்றன.

அடுத்தபடியாக குடி-தண்ணீர்ப் பிரச்சினை. எங்கள் பகுதியில் அம்பாசமுத்திரம் டவுன் பஞ்சாயத்தில் நீண்ட காலமாகக் குடி-தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் இருந்து வருகிறது. அதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சில கிராமங்களில் குடி-தண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க வேண்டிய நிலை இருந்து வருகிறது அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்திற்குத் தண்ணீர் விடுவதைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியில் தாம்பிரபரணியில் இருந்து வரும் வடக்கு





கோடை மேல் அழகியன் நியூ மாடல் ஸ்கீம் வேலை முடிந்த பிறகும் அந்தக் கால்வாயில் முறை சிஸ்டம் இருந்து வருகிறது. கீழ்ப் பகுதி விவசாயிகளுக்குப் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. சமீபத்தில் ஒரு மாத காலமாகச் சரியாக தண்ணீர் விடப்படாத நிலையில் அணையில் போதிய தண்ணீர் இருந்தும் கால்வாயில் தேவையான தண்ணீர் விடமுடியவில்லை. அந்தக் கால்வாயில் லைனிங் வேலை செய்தால்தான் கீழ்ப் பகுதியில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீரைக் கொடுக்க முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சமீபத்தில் மழையின் காரணமாகப் பெரும் வெள்ளம் ஏற்பட்டு தருவை தாம்போதியில் போக்குவரத்து சுமார் 10 நாட்களாக ஸ்தம்பித்து விட்டது. நீண்ட நாட்களாகக் கோரிக் கொண்டிருக்கிறோம். இந்த தாம்போதி பாலத்தை மேம்பாலமாக அமைத்துத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் பகுதியில் கல்லூரிக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு சமீபத்தில் கல்வியமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் கல்லூரியில் கடந்த ஆறு மாத காலமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருந்து வருகிறது. கல்லூரி ஸ்தம்பித்து நிற்கக் கூடிய அளவில் இருக்கிறது. நல்ல முறையில் அது நடைபெற அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை நன்கு ஆராய்ந்து அலசிப் பார்க்கின்றபோது ஆளுநர் அவர்கள் இந்தத் தமிழக அரசினுடைய ஆட்சிக் காலத்திலே தமிழக மக்கள், ஏழை எளிய மக்கள் முன்னேற்றம் எந்த வகையில் அமைய வேண்டுமென்று ஆராய்ந்து, அந்த மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இந்த அரசு பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்.

மேதகு கவர்னர் அவர்கள் சமீபத்தில் நடந்து முடிந்த போரைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் இந்த ஜனநாயக சமதர்மப் போரிலே இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும், ஒற்றுமையாக இருந்து. இந்தப் போரிலே தங்களுடைய கலாசாரங்களை எல்லாம் மறந்து இந்தியத் திருநாடு வெற்றி பெற வேண்டுமென்ற வகையில் நல்லதொரு முயற்சியை எடுத்தமைக்காகப் பாராட்டி இருக்கிறார்கள். இந்தப் போரிலே தமிழக மக்கள் எல்லா வகையான ஒத்துழைப்பையும் கொடுத்துள்ள நிலையில் தமிழகத்திலுள்ள முஸ்லிம்களும் தங்களால் இயன்ற எல்லா வகையான ஒத்துழைப்பையும் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்காக இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளைப் பற்றி மிக விளக்கமாகக் கூறி இருக்கிறார்கள். இந்த நாட்டிலே வாழ்கிற மக்களிலே நெசவாளர் மக்கள் அதிகம் இருக்கிறார்கள். அந்த நெசவாளர் மக்கள் முன்னேற்றத்திலே இந்த அரசு மேலும் நல்ல முறையில் சலுகைகளைக் கொடுத்து, நசுங்கி இருக்கிற அந்த நெசவாளர்களுடைய வாழ்வு முன்னேறுவதற்கு எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத்துறையைப் பொறுத்த வரையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டு வேளாண்மைத்துறையில் தமிழ்நாடு சென்ற ஆண்டைவிட இப்போது தன்னிறைவு பெற்று, சென்ற ஆண்டைவிட 3.84 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்து இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த உற்பத்திக்குக் காரணம் பல புது வகையான விதைகளையும், மற்ற ரசாயன உர வகைகளையும் ஆராய்ந்து தந்ததன் மூலமாகத்தான் என்பதை எல்லோரும் அறிவோம். வேளாண்மைத்துறை முன்னேறி இருக்கிறது என்று குறிப்பிடுகிறபோது வேளாண்மைத் துறைக்கு மிக அவசியமாகத் தேவைப்படுவது நீர் வசதியாகும். அந்த நீர்ப்பாசன வசதியைக் குறிப்பிடுகிறபோது என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு வார்த்தை குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில், என்னுடைய தொகுதியாகிய மேலப்பாளையத்தில் நாங்குநேரி தாலுக்காவில் பல ஆண்டுகாலமாக பச்சையாற்றுத் திட்டம் என்று தயாரிக்கப்பட்டு, அது அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்திற்கும் வந்து, கிட்டத்தட்ட 6 ஆண்டுகளாகி இருக்கும் என்று நினைக்கிறேன். அதனுடைய நிலையை அரசு உடனடியாகக் கவனித்து, அங்கே அந்த நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமானால், நிச்சயமாக கிட்டத்தட்ட 5,600, 6,000 ஏக்கர் நிலங்கள் விவசாயத்தில் முன்னேறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

விலைவாசியைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் பேசப்பட்டது. விலைவாசி ஏற்றம் என்று வருகிறபோது, குறிப்பாக எல்லோரும் எடுத்துக் கொள்வது அரிசியினுடைய விலையைத்தான். இன்றைய தினம் பேசிய உறுப்பினர் மதிப்பிற்குரிய ஓ. என். சுந்தரம் அவர்கள் கூட இந்த விலைவாசியைப் பற்றிப் பேசும் போது அரிசியின் விலை ஏறியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் விலைவாசி ஏற்றம் வருகிறபோது அரிசியினுடைய விலையை மட்டும் எடுத்துக்கொள்ளாமல், ஏனைய பொருள்களின் விலையும் உயர்ந்து இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். அரிசியினுடைய விலையை மட்டும் கட்டுப்படுத்திவிட்டால், வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு விவசாயம் செய்யும் மக்களின் முயற்சியில் தடை ஏற்படும். மற்ற பொருள்களின் விலைகள் அதிகமாகும் போது, அரிசியின் விலை மட்டும் குறைந்து இருந்தால், வேளாண்





மைத்துறையில் ஈடுபட்டு இருக்கிற எல்லா விவசாயிகளுக்கும் நன்மை கிடைக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் குறுகிய காலக் கடன், நீண்டகாலக் கடன் என்று சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உதவி அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்னுடைய தொகுதியில் பல இடங்களில் சென்ற ஆண்டில் பருவ மழை தவறிய காரணத்தாலும், வறட்சி ஏற்பட்டு விட்ட காரணத்தால், திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்தக் கடன்களை திருப்பிக் கட்டுவதற்குக் கொஞ்சம் தவணை கொடுத்து வசூல் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இப்போது அதிகமாக முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. இந்த 72-வது ஆண்டு முடிவதற்குள்ளாக மின்சாரமே இல்லாத கிராமங்கள் இல்லை என்ற நிலை வரவேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியிலே சில கிராமங்கள் மின்சார இணைப்பு இல்லாமல் இருக்கிறது என்ற குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலை பற்றிக் குறிப்பிடுகிறபோது, திட்ட ஆலோசகர்கள் அதற்கு நல்ல அபிப்பிராயம் கொடுத்து இருந்தும், அந்த சேலம் உருக்காலை அமைப்பதற்கு மத்திய அரசின் அனுமதி வரவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசின் முன்னேற்றக் கொள்கையை எந்த அளவுக்கு புறக்கணிக்கிறது என்பது இதனால் விளங்குகின்றது. இந்த மாநில முன்னேற்றத்திற்கு சேலம் உருக்காலை வந்துதான் தீர வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கடிதம் எழுத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் இரும்பாலையைக் கொண்டுவந்தால்தான், தமிழ் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். இதை நம்முடைய அரசு மீண்டும் மீண்டும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முயற்சியால், அனுமதிக் கடிதங்கள் மூலம் கிட்டத்தட்ட 2,100 நைலான் நூல் இழை உற்பத்தி செய்கிற வாய்ப்பைப் பெற்று இருக்கிறோம். அந்த உற்பத்தி தொழிற்சாலையை என்னுடைய தொகுதியிலே அமைப்பது மூலம் அங்கு வாழ்கிற மக்களில் மிகுதியான பேர்கள் நெசவுத் தொழிலை நம்பியிருப்பவர்களுக்கு நன்மையாகும் என்பதோடு அங்கு கிட்டத்தட்ட 10, 15 ஆயிரம் பேர் நெசவுத் தொழிலை நம்பியிருக்கிறார்கள். நெசவுத் தொழிலின் நிலை தற்போது மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 60 கூட சம்பளம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. நெசவுத் தொழிலை நம்பியிருக்கிற, அதிலே ஈடுபட்டு

இருக்கிற மக்களின் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டு இருக்கின்ற இந்தத் தமிழக அரசு. அந்த நைலான் நூல் உற்பத்திச் செய்யும் ஆலையை, இந்த நெசவாளப் பகுதியில் ஏற்பாடு செய்யுமானால், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு அது உறுதுணையாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்காத வகையில் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 1,000 வரை கடன் கொடுத்து உதவுகிற திட்டம் குறிப்பிடத்தக்கதாகும். இந்த ரூ. 1,000 கடன் கொடுப்பது சில நேரங்களில் போதவில்லை. இயந்திரங்களின் விலை ரூ. 1,500 என்றால் மேற்கொண்டு ரூ. 500 கிடைக்காத நிலையில் அவர்கள் தங்களுடைய தொழிலை ஆரம்பிக்க முடியாமல் போய் விடுகிறது. ஆகவே, அவர்கள் பயின்ற தொழில்களுக்கு ஏற்ப அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கடன் தொகைகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியம் சென்னை நகரத்தில் மட்டும் இல்லாமல். மற்ற ஏனைய மாவட்டங்களிலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன்களுக்கும், பின் தங்கியோருக்கும் சலுகை அளிப்பதில் இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவையாகும். முஸ்லிம்களில் லப்பைகளுக்குக் கொடுக்கப்படுகிற சலுகையைப் போன்று, உருது மொழி பேசும் மக்களுக்கும் சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாக ஆணைக்குழு, மாநில திட்டக்குழு என்று அமைத்து இருக்கிறார்கள். இந்தக் குழுக்களை மாவட்டங்களில் ஏற்படுத்துவதன் மூலம் அந்தந்த மாவட்டங்களில் கல்வி, தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படும். அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆணைக்குழுக்கள் இதைச் செய்வதன் மூலம் அங்கே இருக்கும் குறைகள் நீக்கப்படும். அவ்வாறு நீக்கப்படுகிற போது, எல்லா மாவட்டங்களும் தொழில்துறையிலும், கல்வித்துறையிலும், தன்னிறைவு பெற முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, மாநில அளவில். திட்டக்குழு. நிர்வாக ஆணைக்குழு ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த வேலை வாய்ப்புத் திட்டங்களைப் பொறுத்த வரையில் என்னுடைய இந்திய யூனியன் முஸ்லிம் கட்சி கேட்டுக்கொள்வது எல்லாம் வேலை வாய்ப்பு அளிக்கிற நிலையில் எங்களுக்கு உள்ள பிரதிநிதித்துவப்படி. முஸ்லிம்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு தோழமை கட்சி ஆட்சி ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு அப்படிச் செய்யும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கவர்னர் அவர்களின் உரையில் தமிழக அரசின் எல்லா நல்ல கருத்துக்களும், எண்ணங்களும், பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது





என்பதைக் கூறிக் கொண்டு. இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Respected Deputy Speaker, Sir, I thank you for giving me an opportunity to say a few words on the address delivered by His Excellency the Governor of Tamil Nadu to the joint session of the Legislature on the 22nd of this month.

Regarding agricultural development it has been mentioned in the address—

'Small Farmers' Development Agencies and the Marginal Farmers' Development Agencies have started working in the districts of South Arcot, Madurai, Tirunelveli, North Arcot and Salem. Similarly, Dry Farming Projects have been started in Kovilpatti and Kudumiammlai.'.

In this connection, I want to stress that mixed farming also should be introduced in our State especially in the districts like Dharmapuri which are purely dependent on rainfall. Also, such schemes should be introduced in areas where there are no industries and where only agricultural operations are carried on. Dharmapuri district and some other areas have been neglected and I request the Government to see that such schemes are implemented and the people there are benefited.

Secondly, regarding electrification............

THE HON. THIRU Si. Pa. ADITANAR: May I inform the hon. Member that far from the Dharmapuri district being neglected, it is one of the most favoured districts so far as the Central schemes are concerned. The Central schemes relate to Small Farmers, Marginal Farmers and drought prevention. For small farmers in Tirunelveli, Madurai and South Arcot districts a sum of Rs. 1½ crores has been given. For marginal farmers in North Arcot and Salem districts, a sum of Rs. 1 crore has been given. For the Dharmapuri district it is Rs. 2 crores.

THIRU B. VENKATASWAMY: I thank the Hon. Minister for enlightening me. My point is that the under-fed child should be brought up to the level of the well-fed child.

Regarding electrification, the Government have stated that they would electrify all the villages by the end of 1972. But in several areas we find that electric connections are not given to pumpsets and that they are only concentrating on giving connections to street lights. I request the Government to see that electric connections are given to pumpsets first.

As regards industries, there is a slow process of industrialisation in our State. There is a lot of unemployment in our State and that should be solved. Only a few industries are going to be started and

that is not going to solve the unemployment problem. So, I request the Government to start more industries so that more people can get employment.

Regarding planning, apart from State Planning and district planning, I would suggest that block planning also should be included. Foundation should start from the bottom and not from the top. The suggestions made at the block level in regard to planning should also be taken into consideration, and that is more important.

Then I come to school drop-outs. Those who are not in a position to study upto S.S.L.C. drop out from the schools and they do not go back to their original occupation. They do not have any worldly knowledge and they are not also educated enough to get any employment. Such children should be absorbed and opportunities must be created to provide employment for them.

Then I come to slum clearance. It has been mentioned in the Governor's Address that importance is given to slum clearance in cities. At the same time it is also stated that the people in the rural areas are attracted to the towns. That is because they feel that if they construct a hut in a town, after some time a pucca or semi-permanent house will be constructed for them. That is what is being done to the slum-dwellers in the City. Such a scheme has not been implemented in the villages so far. 75 per cent of the rural people live in huts and so a scheme should be started for them. Also if the Government want to stop the influx of people from the villages to towns, more facilities must be given to the villages so that they may not come to towns.

I come to the debt relief scheme. Our Government should ask the Central Government for financial assistance in that regard. As my hon. Friend, Thiru Kothandaramiah, has pointed out, so many small farmers have sold their two or three acres of land to repay the loans given to them. I request the Government to write off these loans as bad debts as they are not in a position to repay them. With regard to loans from a private agency also, such a scheme should be extended.

Then, I come to my constituency. It is a very backward area and it is also a drought affected area. A sum of Rs. 2 crores has been sanctioned and some improvement is being made. In this connection, I want to say that dry farming and some industries should be started in that area.

Regarding education, for the last three years we have been requesting the Government to start a college in Hosur. So far no college has been started. I request the Government to permit at least the Collector to collect funds for the starting of the college through a College Committee. I hope the Hon. Chief Minister will do it. I also request the Hon. Minister for Backward Classes to do the needful in the matter.



Then I come to desilting of tanks. Our district is a slopy area and all the tanks there have been silted up. They should be desilted. In this connection, I want to point out that these tanks were constructed years, years ago and they have not been desilted so far. I request the Government to approach the Central Government for financial assistance to desilt these tanks. If they are not desilted, there is no use in having these tanks.

Next is the 'green revolution'. We have succeeded in that to some extent. I like to stress that we must have 'white revolution', i.e., we have to produce more milk in our State. The Hon. Minister for Animal Husbandry told during budget session last time that we were having a low stock and that we will have to change the entire stock of animals. I do not know whether any such scheme to change our stock of milch animals and poultry has been put into effect. Something should be done in that direction. We must have 'white revolution', by importing milch animals from outside. I understand that some central project is going to be started in Hosur. I request that central project should be started early in Hosur and implemented quickly.

Lastly I request that Dharmapuri district should be given priority in all respects. That is the only way in which we can come up to the level of other districts.

(Mr. Speaker in the Chair.)

I thank the Chairman for giving me an opportunity to participate in the discussion.

**திரு. கே. கந்தசாமி:** கௌரவமிக்கப் பேரவைத் தலைவரவர்களே, பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக ஆளுநர் அவர்கள் தெரிவித்த உரையின் மீது நன்றி தெரிவித்துப் பேச நான் முயல்கிறேன்.

ஆளுநர் அவர்கள் அவர்களுடைய உரையிலே மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் பாரதத்தின் கடந்த கால, சமீப யுத்தத்திலே நிலைநாட்டிய வெற்றியைப் பாராட்டியும், தமிழகத்தின் கடந்த கால சாதனைகளைப் பற்றியும், விரிவாகக் கூறியிருக்கிறார்கள். பாராட்டுகின்ற வகையில் தமிழகத்திற்கு வருவதற்கு முன்னால் பாரதத் துணை கண்டம் கடந்த பல ஆண்டுகளாக, சுதந்திரம் வாங்கியதற்குப் பிறகு 20 ஆண்டுகளுக்கு மேலாக, ஆசியாவின் ஜோதி நேரு அவர்கள் ஆண்ட காலத்தில், மறைந்த மாமேதை சாஸ்திரி அவர்கள் காலத்தில் சாதிக்காத சாதனைகளையெல்லாம் "பொலிடிக்கல் சைல்ட்" என்று பெரியவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட அரசியல் குழந்தையாகிய இந்திரா காந்தியவர்கள் மாமனிதர்கள் சாதிக்காத, செய்து காட்டாத காரியங்களை இந்த 14 நாட்கள் நடந்த பாரத யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றி கண்டது போல வெற்றி கண்டதன் மூலமாக 57 கோடி மக்களின் தனித் தலைவியாக, பாரதத்தின் செல்வப் புதல்

வியாக விளங்கிப் பெருமை அடைந்ததோடு மட்டுமல்லாமல் மறைந்து கிடந்த, மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தியாவின் பழம் பெருமையினை உலகத்திற்கே எடுத்துக் காட்டிவிட்டார்கள். முப்படை தளபதிகளின் பாராட்டுதலையும், 56 கோடி மக்களின் ஏகோபித்த அபிப்பிராயம் ஒருங்கே திரண்டு பாராட்டுகின்ற முறையிலே இந்தியா வெற்றி பெறத் தக்க விதத்திலே நடத்திக் காட்டினார்கள். இந்த மக்களின் நல்வாழ்விற்காக, ஏழை எளியவர்களின் நல்வாழ்விற்காகத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன், அந்த முயற்சியிலே மரணம் ஏற்படுமானால் அதையே பெருமையாக, ஒரு விழுப்புண்ணை ஏற்றுக் கொள்கிறேன் என்று கோஷத்தைக் கிளப்பி அவர்கள் பாமர ஏழை மக்களுக்காகத் தியாகம் செய்கிறேன் என்று தெரிவித்தது மட்டுமல்லாமல், பாரதத்தின் செல்வாக்கை உயர்த்தியது. அந்தச் செல்வாக்கிற்கும் அப்பால் தேசத்தில் நெருக்கடி ஏற்பட்டபோது இந்தத் துணைக் கண்டத்தை அதில் இருந்து காப்பாற்றியதன் மூலம் இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற பெரிதும் பாடுபட்டார்கள். தேசத்தில் நெருக்கடி என்றாலும், உண்மையிலே அது பெரிய அளவில் நெருக்கடி என்று இல்லாவிட்டாலும் உலகத்திலே உள்ளவர்கள் எல்லாம் பாரதம் எப்படி நடந்து கொள்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்த போது இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், சோஷலிசத்தை நிலை நாட்டவும், இந்தத் தத்துவத்தோடு, இந்த உயர்ந்த நோக்கத்தோடு போன்போடு நமது இந்திரா அவர்கள் பாகிஸ்தான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர் முரசு கொட்டி பாரத வெற்றியை நிலை நாட்டினார்கள்.

அன்றே நேதாஜி அவர்கள் சொன்னார்கள். இன்றைய சந்தர்ப்பத்திலே அதைக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்குமென்று அதை இப்போது நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். நேதாஜி அவர்கள் சொல்கிறபோது Pakistan is not the ambition of Muslims but it is the creation of the British.
இதையே பின்னால் வந்த தேவர் பெருமகனாரும் குறிப்பிட்டார்கள்.

Pakistan is going to be the war base of muslims in future wars in Asian continent.

என்று சொன்னார்கள். பாகிஸ்தான் என்பது ஆங்கிலோ-அமெரிக்கா வாதிகளால் திணிக்கப்படுகிறதே தவிர இஸ்லாமியர்களின் அபிலாஷை அல்ல என்று நேதாஜி காந்தியை எதிர்த்து போராடும் போது தெரிவித்தார்கள். இப்படிப் பிரிவினை என்பது ஒன்றாக இருப்பவர்களை மதத்தின் பேரால் பிரிப்பதாகும். ஆங்கிலோ அமெரிக்கா ஏகாதிபத்திய வாதிகளின் சூழ்ச்சியால் பாகிஸ்தான் உருவாக்கப்படுகிறதே தவிர முஸ்லீம்களாக விரும்பி ஏற்படுவதில்லை என்றார்கள். ஆங்கிலோ-அமெரிக்கா ஏகாதிபத்தியங்கள் தங்களுடைய ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டுவதற்கு அந்தக் கொள்கையின் அடிப்படையில், ஒரு "வார் பேசாக" அந்த தளமாக பாகிஸ்தான் உருவாக்கப்படுகிறது என்று





தேவர் பெருமகனார் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு இந்தக் கருத்து அலட்சியப்படுத்தப்பட்டது. ஆனால் இந்தக் கருத்து உண்மையானது என்பது இப்போது நிலை நாட்டப்பட்டு விட்டது. மறைந்த சாஸ்திரி அவர்கள் பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்கிய போது அதை "நேகட் அக்கிரஷன்" என்று சொன்னார்கள். உலகத்தில் உள்ள ஜனநாயக நாடுகளெல்லாம் இந்தியாவிற்கு ஆதரவாகப் பேசின. ஆனால் காமன்வெல்த் நாடுகளுக்குத் தலைமைதாங்குகிற இங்கிலாந்து நாட்டுத் தலைவி, ராணியார் என்ன சொன்னார்கள். இந்தியாதான் பாகிஸ்தானை ஆக்கிரமிப்பு செய்தது என்றார்கள். இதன் மூலம் தாங்கள் யார் பக்கம் என்பதை வெளிப்படுத்திக் கொண்டார்கள். இப்போது நடந்த யுத்தத்திலே பாகிஸ்தானுக்குச் சாதகமாக அமெரிக்கா தன்னுடைய ஆயுதங்களைக் கொடுத்து உதவியது. "அன் ஆர்ம்ட் பீபிள்" மீது தாக்குதல் செய்கின்றவர்களுக்குத் துணையாக, பாகிஸ்தான் அதிபர் யாயாகானுக்குத் துணையாக அமெரிக்கா ஏகாதிபத்தியம் நின்றது. கடந்த கால சம்பவங்களும், கடந்த கால யுத்தங்களும் ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவாக, இந்தியாவிற்கு விரோதமாக தங்களுடைய ஆயுதங்களையும் மற்ற உதவிகளையும் கொடுத்து உதவியதில் இருந்து ஆங்கிலோ அமெரிக்கா ஏகாதிபத்தியங்கள் தேவர் பெருமகன் சொன்னது போல இந்தியாவில் யுத்தத்தை ஏற்படுத்துவதற்குத் தான் பாகிஸ்தான் என்ற ஒரு நாடு மதத்தின் பேரால், முஸ்லீம்கள் விரும்பா விட்டாலும், அவைகளால் ஏற்படுத்தப்பட்டன என்ற உண்மை நிலைநாட்டப்பட்டது. ஆசியாவில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்க வேண்டும். இந்தியா வளர்ச்சியடையாமல் இருக்க வேண்டும் என்ற ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் சதியை முறியடித்து நமது பாரம்பரியப் பண்பைக் காப்பாற்றிய தற்காகத் திருமதி இந்திராகாந்தியவர்களைப் பாராட்டுகிறேன். கவர்னர் அவர்கள் மிகத் தெளிவாகப் பாராட்டி இருக்கிறார்கள். பாரதத்தின் பெரு வெற்றிக்கு திருமதி இந்திராகாந்தியவர்களுக்கு ஒத்தாசையாக 4½ கோடி மக்களின் தனித் தலைவராக உள்ள நமது கலைஞர், டாக்டர் அவர்கள் தமிழர்களின் சார்பாக தமிழக அரசின் ஒத்துழைப்பை அறிவித்தார்கள். கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தைத் தொடும் வகையில் இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காக நம்முடைய வீரர்கள் செய்த தியாகங்களை எடுத்துச் சொன்னார்கள். ஆறுமுகம் போன்றவர்கள் செய்த தியாகத்தின் மூலம் தமிழகத்தின் பெருமை, தியாக உணர்வு நிலை நாட்டப்பட்டிருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் போரில் உயிர் துறந்த வீரர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து தலைவணங்குகிறேன். பாகிஸ்தான் என்பது மதத்தின் பேரால், ஜாதியின் பேரால் ஏற்படுத்தப்பட்டது. அது நிலைத்து நீடிக்காது என்பதற்கு உதாரணம்தான் இப்போது பாகிஸ்தான் உடைந்து வங்காள தேசம் என்று புதிதாக உருவானதாகும்.

It has to-day become an interrogation in the minds of international politicians. அது இன்றைக்கு ஒரு கேள்விக்குறியாக மாறி விட்டது. பாகிஸ்தான் இல்லை என்ற நிலை உருவாகப் போகிறது. தேவர் அவர்கள் இதை முன்பே குறிப்பிட்டார்கள். அது இன்றைக்கு மெய்யாகி விட்டது. மதத்தின் பேரால் முஸ்லீம்களின் விருப்பத்திற்கு மாறாக, ஆங்கிலோ-அமெரிக்கா ஏகாதிபத்தியவாதிகளால் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது பாகிஸ்தான். இவைகளை நான் சுட்டிக் காட்டக் காரணத்தைப் பின்னால் கூறுகிறேன். ஹைதராபாத்தை எடுத்துக் கொண்டால் அங்கே 100-க்கு 99 பேர் இந்துக்கள். ஆனால் பெரும்பாலான இந்துக்களுக்கு அரசராக இருப்பவர் நிஜாம். முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்தவர். இந்த இந்துக்கள் ஒரு முஸ்லீம் அரசரை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஒரு கணம் நினைத்தால் என்ன ஆகும்? அதே போல காஷ்மீரத்தில் 100-க்கு 99 பேர் முஸ்லீம்கள். ஆனால் அங்கே அரசராக இருந்தவர் ஒரு இந்து. அவர்கள் இந்து அரசரை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருந்தால் என்ன ஆகும் நிலைமை? இவற்றை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் இந்துக்களும், முஸ்லீம்களும் பரம்பரை, பரம்பரையாக சகோதரர்களாக பழகியவர்கள், வளர்ந்தவர்கள். இதை நிலை நாட்டிக் காட்டி விட்டது சமீபத்திய பாகிஸ்தான் யுத்தம். அதேபோல இங்கே சில கொள்கைகளை, சில தவறான கோட்பாடுகளை, இந்த மண்ணிற்கும், இந்த மண்ணின் கலாசாரத்திற்கும், தேசியத்திற்கும் மாறான முறையில் வேறு சில கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் வேறு சில காரணங்களையும் காட்டி மக்களை திசை திருப்ப நினைக்கிறார்கள். தேசத்தின் ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார்கள். அதற்கு எடுத்துக் காட்டுதான் சமீபத்தில் நடந்த சிம்சன் விவகாரம் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இந்தியப் பிரதமர் இந்திரா அவர்கள் துப்பாக்கி வெடிக்கும் சத்தம்தான் நின்று விட்டதே யொழிய யுத்தம் முடிந்து விடவில்லை. யுத்தம் முடிந்து விட்டதாகக் கருத வேண்டாம் 56 கோடி மக்களும் விழிப்போடு, பாதுகாப் போடு இந்த நாட்டைக் காக்கும் பணிக்குத் தங்களை அர்ப் பணிக்கும் தியாக எண்ணத்தோடு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்று எச்சரித்திருக்கிறார்கள்.

மேடை தவறாமல் மக்கள் அத்தனைபேரும் Vigilance is the price of eternal liberty என்ற தத்துவத்தை அவர்கள் எடுத்துக் காட்டி, அத்தனை மக்களும் உள்நாட்டுப் பூசல்கள் சண்டை சச்சரவுகள் அத்தனையையும் மறந்து 'இண்டஸ்ட்ரியல் பீஸ்', தொழிலாளர் அமைதியோடு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடுங்கள் என்று கூறுகிறார் இந்த நிலை இருக்கிறபோது, சர்வதேச அரசியல் புரிந்தவர்கள் இந்தியாவின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் என்ன செய்கிறார்கள்?



சிம்சன் விவகாரத்தில் என்ன நடந்துவிட்டது? காட்டூர் கோபால் இருந்தால் என்ன அல்லது இன்னொரு தலைவர் இருந் தால் என்ன? கட்சி சார்பற்ற முறையில் தேசத்தைப் பாதுகாக்கும் பணியில் இருக்கின்ற நேரத்தில் அங்கே போய் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் தொழிலாளர்கள்மீது வற்புறுத்தித் திணிக்கப் படவில்லை. ஒப்பந்தம் செய்தால், அது தொழிலாளர் நலனுக்கு விரோதமாக இருந்தால், தொழிலாளர்கள் ஒப்புக்கொள்ள மறுக் கின்றார்கள். இன்னும் சில மாதங்களுக்கு அந்த முடிவை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றோம், பின்னால் வருகிறபோது சுபிட்சமாக நல்ல முறையில் செய்துகொள்ளலாம் என்று தலைவர்கள் ஆலோசனைக் கூறி உற்பத்திப் பெருக்கத்திற்கு வேலையில் ஈடுபடும் படி அறிவுரை வழங்குவதற்குப் பதிலாக அங்கே அரசியல் காரணங்களுக்காக, அங்கே பெரிய சச்சரவுகளையும், அடிதடி களையும் உண்டு பண்ணினார்கள். அதற்கு உண்மையிலேயே நான் வருத்தப்படுகின்றேன்.

நான் இவ்வாறு சொன்னால் கழகத்திற்கு ஆதரவாக இருக்கிற கட்சியின் காரணமாக ஏதோ கந்தசாமி பேசுகிறானே என்று கூட சில நண்பர்கள் நினைக்கலாம். நான் ஆதரவாக இருக்கிறேன் என்றால் தலைமை தாங்கும் கலைஞர் அவர்கள் இருக்கிறபோது கழக ஆட்சி வாழ்கிறபோது அதற்கான அத்தனை தியாகத்தையும் செய் வதற்கு பார்வார்டு பிளாக் கட்சிக்காரர்களும் இருக்கிறபோது ஆதரிக்கிறேன். தொழிலாளர் நலனுக்காக வாழ்கிறவர்கள் இவ்வளவு காலங்கடந்து தொழிலாளர் சமாச்சாரத்திலே அங்கே போனவர்கள், தென் துருவம், வட துருவம் போல் வாழ்ந்து கொண்டிருந்தவர்களெல்லாம், பல மாதக்கணக்காக, இரவு பகலாக சந்தித்துப் பேசினார்கள். தேசத்திற்காக நன்கொடை வேண்டும் என்று கலைஞர் அவர்கள் வந்திருக்கிறபோது, அங்கே தொழிலாளர் தலைவர்கள் என்று கூறிக்கொள்கிறவர்கள் தொழிலாளர் கூட்டத்தைப் போட்டு நன்கொடை கொடுக்கக் கூடாது என்று ரகசியமாகப் பேசினார்கள். இதையெல்லாம் நான் அறிவேன். அவசியம் ஏற்பட்டால் அதைச் சுட்டிக்காட்டவும் விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலே தொழிலாளர் நலனின் பெயரால் தொழிலாளர்களுக்காக தியாகத்தை, ஏதாவது கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள யாராவது தயாராக இருக்கிறோம் என்று கூறுவார் களானால், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக இந்த மாமன்றத்திலே மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். பார்வார்டு பிளாக் கட்சி தொழிலாளர் நலனுக்காக, ஏழை விவசாயிகளுக்காக எந்த தியாகத்தையும் செய்வதற்கு தயாராக இருக்கிறது. எந்தக் கட்சி, கட்சி சார்பற்ற முறையில் நல்ல நோக்கத்தோடு தியாகம் செய்ய இருக்கிறார்களோ அவர்களோடு ஒத்துழைக்க தயாராக இருக்கிறது என்ற விவரத்தைக் கூறி அந்தத் துறையை முடித்து அடுத்தப்படியாக தமிழக அரசு சாதனையைப்பற்றி என்னுடையத் தொகுதியைப்பற்றி சில கூறுகிறேன்.

தமிழக அரசு சாதனையைப் பொறுத்த அளவிலே, விவசாயத்தை கிரீன் ரெவல்யூஷன் என்ற பசுமைப் புரட்சியை, மிக மகத்தான

சாதனையை சாதித்திருக்கிறார்கள். அதிலே என்றும் இல்லாத உற்பத்திப் பெருக்கத்தை, தன் நிறைவை எட்டியிருப்பதை நான் பாராட்டுகிறேன். சிறு விவசாயிகளுக்கு எல்லாவித நன்மைகளையும் செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். மற்றவர்களுக்குப் பாதுகாப்பு இருப்பதைப் போல்"

Vigilance is the price of eternal liberty.

இந்தியப் பொருளாதாரம் குறிப்பாக விவசாயத்தின் தன்மையைப் பொருத்த பொருளாதாரமாக இருக்கிறது.

Indian economy is essentially based on agriculture.

என்று காந்தியடிகள் சொன்னார்கள்.

Agriculturists are the back bone of India. More than 80 per cent of the population of India are rural villages. They are all agriculturists. Therefore, I request that a major portion of the Government's attention should be diverted towards development of modern, scientific agricultural side.

ஆகவே நவீன முன்னேற்ற சாதனைகளையெல்லாம் விஞ்ஞானத் துறையிலே இன்னும் அதிகமாக விருத்தி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு இன்னும் அதிகமாக சலுகைகள் வேண்டும். பருவக்காற்றை எதிர்பாராது, மிக அன் எக்கனமிக் ஹோல்டிங்சை வைத்திருப்பவர்கள், மழை தவறிய காலத்தில் கடன் கப்பிகளையெல்லாம் வாங்கி நிலத்தில் போட்டு விளையாத போது நிலமும் எலத்திற்குப் போகவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே கிராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கலைஞர் அவர்களும் விவசாய அமைச்சர் அவர்களும் கருணையோடு பரிசீலனை செய்து கொண்டு வந்தால் உதவியாக இருக்கும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இன்னும் கடன்களுக்கு நில டெவலப்மெண்ட் பாங்க் மூலமாக 20 சத வீதம் காண்ட்ரிபூஷன் என்ற நிபந்தனை வந்திருக்கிறது. அதன் மூலம் பலவித சிக்கல் இருக்கிறது. அதையும் அவசியம் ஏற்படுகிறபோது ரெப்ரசெண்ட் பண்ணத் தயாராக இருக்கிறோம். அதனையும் தனிக் கவனத்தோடு பரிசீலனை செய்து நடைமுறைச் சிக்கலையும் தவிர்க்க வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி உசிலம்பட்டி. முதுகளத்தூர் தொகுதியும் உசிலம்பட்டி தொகுதியும் வெகு காலமாகவே, பல்லாண்டுகளாகவே புறக்கணிக்கப்பட்ட பகுதி. நம்முடைய தேசத்தின் விடுதலை வீரர்களில் தலைசிறந்த தென்னாட்டு வீரராக விளங்கிய தேவர் திருமகனின் தொகுதி முதுகளத்தூர் தொகுதி. அவர் தேச நன்மைக்காகச் சொன்ன சில உண்மைகளுக்காக, வேண்டாத காலத்தில் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் மட்டும் பழிவாங்கப்படவில்லை. அவர்களைச் சார்ந்த வீரப்பெருமக்களை எல்லாம் கண்ணையும் கையையும் கட்டி





வைத்து இந்த ஜனநாயகம் நாகரிகமாக வளர்கிற காலத்திலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற விவரத்தையெல்லாம் இந்த மாமன்றம் அறியும். கலைஞர் அவர்களும், மற்றத் தலைவர்களும் அறிவார்கள். அப்படி பழிவாங்கப்பட்ட மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அதேபோல உசிலம்பட்டி மக்களும் வாழ்கிறார்கள். அறியாமையும், வறுமையும் இரு கண்களாக இருக்கிற வகையிலே துரதிர்ஷ்டவசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் மின் விளக்கை நாட்டிலே ஏற்றுவதைப்போல் அவர்களுக்குக் கண்ணொளி தரவேண்டும். கலைஞர் அவர்கள் பேசுகிற போது ஏழைகளிடத்தில் கருணையோடு பேசுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அதைத் தேவர் திருமகனின் தொண்டர்களெல்லாம் பெருமையோடு வரவேற்கிறார்கள். ஒரு தாயிடம் குழந்தை எதிர்பார்ப்பதைப்போல் தேவர் திருமகனைப் பின்பற்றுகின்ற மக்கள் கலைஞர் அவர்களை எதிர்பார்க்கிறார்கள். அதைத் தான் எங்களுடைய பெருந்தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களும், ஏ.ஆர்.பி. அவர்களும் எல்லா இடங்களிலேயும் சொல்லி வருகிறார்கள்.

உசிலம்பட்டியிலே டி.பி., குஷ்டம் போன்ற நோய்கள் மிகக் கடுமையாக மக்களை பாதித்திருக்கிறது. இது சம்பந்தமாக நானும் அமைச்சர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருக்கிறேன். அதைப் போக்க உடனடியாக ஆவன செய்ய வேண்டும். இன்னும் உசிலம்பட்டி ஆஸ்பத்திரி, நான் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் இருந்த நிலையிலேதான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அபிவிருத்திக்காக சில திட்டங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். சுகாதார அமைச்சர் அவர்கள் மிகக் கருணையோடு அதற்குரிய அபிவிருத்தியையும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 'அன் எம்ப்லாய்மெண்ட்' பிராப்ளத்தைப் பற்றி சொல்லும்போது, சிரணித் திட்டம், மற்ற அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை நல்ல முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஜாப் ஓரியன்டட் எஜுகேஷனாக இருக்க வேண்டும்.

Job-oriented education should mainly be based on agriculture because we are having major portion of our population dependent upon agriculture alone.

ஆகவே, விவசாயத்தை பெரும்பான்மையாக நாம் வைத்திருக்கிற காரணத்தால் விவசாயத் தொழிலிலே நம்பியிருக்கிற மெஜாரிடியான மக்கள் இருக்கிற காரணத்தால் விவசாயத்தைப் பெருமைப் படுத்த, அதனுடைய பெருமையை அடிப்படையமாக வைத்து வர்க்கத்திற்கு எடுத்துச்சொல்ல வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட வகுப்பைப் பொருத்த அளவில் அங்கே குறிப்பாக முக்குலத்தோர்களுக்கெல்லாம் சில வேலைகள் செய்ய வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. அபுசாலி:** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவாகளே, ஆளுநர் உரையை ஆதரிக்கும் வகையில் இரண்டொரு கருத்துக்களை முஸ்லிம் லீக் சார்பாகச் சொல்ல நான் ஆசைப் படுகிறேன்.

குறிப்பாக, இப்பொழுது நடந்த யுத்தத்தில் என்னுடைய தொகுதியும் காஜா மொய்தீன் என்பவர் பாகிஸ்தான் ஆக்கிரமிப் பாளரில் ஒரு கூட்டத்தையே சுட்டு வீழ்த்தியிருக்கிறார். அந்த உண்மையைப்பற்றி அவர் தன்னுடைய தாயாருக்கு ஒரு லெட்டர் எழுதினார். அதைமட்டும் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். அவருக்குக் கல்யாணம் ஏற்பாடு செய்து நிச்சயதாம்பூலம்கூட நடந்துவிட்டது. அந்தத் தாயார், ஒரே மகனுக்குக் கல்யாணம் நெருங்கிவிட்டது, யுத்தக் களத்தில் இருந்தால்கூட ஒரு 10 தினமாவது லீவ் எடுத்துக்கொண்டு வந்தால் உன்னுடைய கல்யாணத்தை முடித்துவிடலாம், பிறகு போகலாம் என்று அவருக்கு லெட்டர் எழுதியிருக்கிறார். அதற்கு அந்த வாலிபர், 'நான் பாகிஸ்தானை முறியடித்துவிட்டு அந்த எல்லையில் கால் வைத்துவிட்டுத்தான் வருவேன்' என்று தன்னுடைய தாயாருக்குப் பதில் எழுதினாராம். அந்த லெட்டர் வந்த மூன்று தினங்களுக்குப் பிறகு அவர் பாகிஸ்தான் துருப்புகளால் கொல்லப்பட்டார் என்ற செய்தியைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. இதை அறிந்து நாங்கள் எல்லாம் அவருடைய வீட்டுக்குச் சென்று, அவருடைய தாயாரைப் பார்த்து ஆறுதல் கூறினோம். வீர மரண மடைந்த தங்கள் மகனின் சாதனைக்காக தமிழக அரசு மூலம் ஐயாயிரம் ரூபாய் கிடைக்கும் என்று சொன்னோம். அதைக் கேட்டு அந்தத் தாயார் அழுததைப் பார்க்கும்போது பரிதாபமாக இருந்தது. எங்களைப் பற்றி, இந்திய முஸ்லீம் மக்களைப்பற்றி சிலருக்கு பலவித ஐயப்பாடுகள் இருக்கின்றன. இதற்குப் பின்னும் அந்த ஐயப்பாடு இருக்க நியாயமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழ் கிறார்கள். பரங்கிப்பேட்டையில் ஆறாயிரம் மீனவர்களுக்குமேல் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சற்றேறக்குறைய 50 அல்லது 60 படகுகள் இருக்கின்றன. அவைகளில் எஞ்சின்கள் சரியாக இல்லை. அந்த என்சின்களை மாற்றி அமைக்கவேண்டுமென்று நமது மீனளத்துறை அமைச்சர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பி இருக் கிறார்கள். அதற்கு சுமார் எட்டாயிரம் அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை தொகை அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஏழை மக்கள் 'டியூ'வை செலுத்து வதற்குக் கூட மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு நமது அமைச்சரவர்களிடத்தில் ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதிகமாகக் கொடுக்கக்கூடிய பணத்தை அவர்களது 'டியூ'வில் சேர்த்து சரிக்கட்ட வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.





எல்லா இடங்களிலும் தண்ணீர் இல்லை. தண்ணீர் பற்றாக் குறையாக இருக்கிறது; தண்ணீர் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்பார்கள். ஆனால் புவனகிரி பகுதியில் தண்ணீர்ப் பெருக்கினால் சேதம் ஏற்படுகிறது. வீராணம் ஏரி நிரம்பி வழிகிறது. அந்தப பகுதியில் உள்ள குறைந்தது இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஏக்கர் நிலம் வெள்ளப் பெருக்கால் பாழாகிக்கொண்டிருக்கிறது. இந்தச் சேதத்தைத் தடுக்க வெள்ளாற்றக்கரையில் ஒரு அணை கட்டி, கொள்ளிடம் நதியில் விடவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

குறிப்பாக, காட்டுமன்னார், சிதம்பரம், புவனகிரி இந்த மூன்று பகுதிகளிலுள்ள மக்களும் வீராணம் நீர் பெருக்கத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்களும் மனு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, முஸ்லீம் மக்களுக்குப் போதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கவில்லை. மற்ற இனத்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுபோல் முஸ்லீம் மக்களுக்கும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில நாட்களாக எங்கள் மத்தியிலே சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. அதை வைத்துக்கொண்டு முஸ்லிம்கள் ஏதோ தப்பாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை உருவாக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களைப் பற்றி நன்றாகத் தெரியும். எங்களுக்கும் கழகத்திற்கும் இடையில் சில கோளாறுகள் ஒருசமயத்தில் ஏற்பட்டதை வைத்துக்கொண்டு, சில நபர்கள் ஏதோ தவறாக நினைத்துக் கொண்டார்கள். உண்மை யிலேயே என்னைப்போன்ற உறுப்பினர்கள் இருக்கும் வரையில் எங்களையும் கழகத்தையும் பிரிக்க முடியாது. பிரிவு ஏற்படாது என்று திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் இதைச் சொல்லும் போதே முதலமைச்சர் அவர்கள் சிரிக் கிறார்கள். அது அவருடைய கருணை உள்ளத்தைக் காட்டுகிறது. இன்னும் அதிகமாக பேச வாய்ப்பு இல்லை என்பதால் இரண்டொரு வார்த்தைகளை மட்டும் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்த போது நாங்கள் 150 பேருக்குமேல் மாலையுடன் ஒரு மணி முதல் மாலை 7 மணி வரை காத்திருந்தோம். அப்போது முதலமைச்சர் அவர்கள் வந்தார்கள். மாலையுடன் காத்திருந்த எங்களைப் பார்த்து "உங்கள் மாலை எல்லாம் வேண்டாம். இந்த நெருக்கடியான நேரத்தில் இந்திராகாந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்துங் கள். உங்களுக்கு நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறி போய்விட்டார்கள். அவர்களுடைய அந்த வார்த்தைகளைக் கேட்டதும் எங்களையும் அறியாமலே அவர்கள்மேல் ஒரு பற்றும் பாசமும் ஏற்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட ஒரு தலைவருக்காக

எங்கள் உயிரையும் விடத் தயாராக இருக்கிறோம் என்று கூறி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் வெள்ளிக் கிழமை 28—1—1972 அன்று காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (4) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

18. Notification issued with G.O. Ms. No. 2205, Home, dated the 10th August 1971, in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

19. Notification issued with G.O. Ms. No. 3197, Public (Services-A), dated the 22nd October 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the posts of Scientific Assistants Grade I and II in the Tamil Nadu Chemical Examiner's Laboratory Subordinate Service within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

20. Notification issued with G.O. Ms. No. 3196, Public (Services-A), dated the 22nd October 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Exhibition Assistant, Mobile Unit under Health Education Bureau, within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

21. Notification issued with G.O. Ms. No. 1138, Labour (Housing), dated the 7th September 1971 making certain rules under sections 35 and 36 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971. [Laid on the Table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971).]

### *B. Reports, Notifications and other Papers.*

20. Notification issued with G.O. Ms. No. 244, Labour, dated the 21st February 1970, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

21. Report of the Tamil Nadu Livestock Development Committee, 1970.





* 22. The Constitution (Twenty-Fifth Amendment) Bill, 1971 as introduced in the Lok Sabha.

* 23. The Constitution (Twenty-Fifth Amendment) Bill, 1971 as passed by the Houses of Parliament.

* 24. Lok Sabha Debate on the Constitution (Twenty-Fifth Amendment) Bill, 1971.

* 25. Rajya Sabha Debate on the Constitution (Twenty-Fifth Amendment) Bill, 1971.

---

* Despatched to Members on 21st January 1972.

## இணைப்பு-1

[112ம் பக்கத்தில் 35-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

பரிசுச் சீட்டு விற்பனை தொகையிலிருந்து மக்களின் நலனுக்கான குறிப்பிட்ட திட்டவட்டமான பணிகளின் செலவு குறித்து ஒதுக்க "தமிழ் நாடு சிறப்பு நல நிதி" என்கிற சிறப்பு நிதி ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் மருத்துவ வசதிகளுக்கு வகை செய்யவும் அவ்வசதிகளை விரிவுபடுத்தவும் 1970-71-இல் அரசு இந்நிதியிலிருந்து ரூ. 75 லட்சம் ஒதுக்கியுள்ளது.

மருத்துவ நிலையங்களுக்குச் சிறப்பு நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளதைக் காட்டும் விவர அறிக்கை—

கிராமப்பகுதிகள்—

| தொடர் எண். | விவரம். | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு மருந்துகள் வழங்குதல். | 10.00 |
| 2. | வட்டத்தலைமையிட மருத்துவ மனைகளில் 'எக்ஸ்' கதிர் பிரிவுகளை அமைத்தல். | 10.00 |
| 3. | வட்டத்தலைமையிட மருந்தகங்களை மருத்துவ மனைகளாக உயர்த்துதல். | 3.00 |
| 4. | தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் மேம்பாடுகள் செய்தல். | 2.00 |
| 5 | மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் மேம்பாடுகள் செய்தல். | 5.00 |
| 6. | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் 2 லட்சம் வீதம் பத்து மாவட்டங்களுக்கு. | 20.00 |
| | | 50.00 |

சென்னை மாநகர்—

| | | |
|---|---|---|
| 1. | ஏழு மருத்துவ மனைகளுக்காகக் கட்டிடங்கள் கட்டுதல், மேம்பாடுகள் செய்தல். | 22.50 |
| 2. | அடையாறில் உள்ள புற்றுநோய் நிலையம் ஆரம்பச் சுகாதார சிறு நிலையம், ஆந்திர மகளிர் சபை ஆகியவற்றுக்கு. | 2.50 |
| | | 25.00 |

The Government have constituted a special fund termed as the "Tamil Nadu Special Welfare Fund" from the sale proceeds of the Raffle tickets, with a view to earmark the proceeds for specific and clearly identifiable programmes for the benefit of the people. The Government have allotted Rs. 75 lakhs during 1970–71 from the "Fund" for provision and expansion of Medical facilities in Tamil Nadu.





*Statement showing the allotment to Medical Institutions from the Special Welfare Fund.*

RURAL AREAS—

| Serial number. | Details. | Rupees in lakhs. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Supply of Medicines to Panchayat Union Dispensaries. | 10·00 |
| 2. | Provision of X-ray Units in Taluk Headquarters Hospitals. | 10·00 |
| 3. | Upgrading Taluk Headquarters Dispensaries into Hospitals. | 3.00 |
| 4. | Improvements in Government Hospital, Thanjavur. | 2.00 |
| 5. | Improvements in Erskine Hospital, Madurai. | 5.00 |
| 6. | At the rate of Rs. 2 lakhs for each district, for 10 districts. | 20.00 |
| | | 50.00 |

MADRAS CITY—

| | | |
|---|---|---|
| 1. | For the construction of building and improvements to the 7 Hospitals. | 22.50 |
| 2. | For Cancer Institute, Adyar, Mini Primary Health Centre and Andhra Mahila Saba. | 2.50 |
| | | 25·00 |

## இணைப்பு-2

[131-ம் பக்கத்தில் 54-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(*B*) Particulars of Tamil names given to the buildings in the Government Estate, Mount Road, Madras- 2, are furnished below :—

| | |
|---|---|
| Milk Men's quarters .. .. | மேகலை. |
| Bombay Model House .. .. | பம்பை. |
| Ferriers quarters .. .. .. | பாரிவேள். |
| Public Works Stores I .. .. | பொதுப்பணிக் கிடங்கு 1 |
| Public Works Stores II .. .. | பொதுப்பணிக் கிடங்கு 2 |
| Coschen Blocks 1 to 13 .. .. | அணி |
| Assistant Surgeons' quarters 14 | சித்தர் |
| Manager's quarters 15 .. .. | நிலவு |
| Band Master's quarters 16 .. | பேகன் |
| Old ADC Block I floor quarters 17. | மெய்க்காப்பு |
| C. I. D's quarters R 1 .. .. | சீயம் |

| | |
|---|---|
| Stable Superintendent quarters North R 2. | செந்தமிழ் |
| Stable Superintendent quarters South R 3. | செந்தாமரை |
| Guests Servants Line West 1 to 6 R 4 to R 9. | கங்கைகொண்டான் அணி |
| Stable Converted as quarters R 10. | சேரமான் |
| Garden Fisheries Stores R 11 .. | கரிகாலன் |
| Narrow Room attached to Stables R 12. | நேரு இல்லம் |
| Guest Servants Line East 1 to 5. | கடாரங்கொண்டான் அணி |
| Garden Overseer's quarters R 18 | காந்திமனை |
| Kitchen near Guest Servant Line East 1 to 5. R 19. | கிள்ளை |
| Bandlines 1 to 14, S 1—S 14 .. | பாண்டியன் அணி |
| Band School S 15 .. .. .. | பண்பகம் |
| Band Practicing Shed S 16 .. | பணியகம் |
| Laundry Superintendent quarters S 17. | இளங்கோ |
| Lower Secondary School S 18 .. | ஔவை |
| New Nurses quarters S 19 .. .. | புதுமனை |
| Chepauk House T 1 .. .. | செம்பியம் |
| Old Sub-Divisional Officers' quarters. | ஒளியகம் |
| Residential Block I R 3—T 8 1 to 6. | அண்ணா அணி |
| Residential Block II T 9—T 14 1 to 12. | அன்பு அணி |
| Quarters behind State Guest House T 22—T 23. | கடமை—கண்ணியம் |
| Garde Superintendent's quarters T 15. | வாடா மல்லிகை |
| Police Beat House U 1 .. | பொலிவகம் |
| Lodge U 2 .. .. .. .. | அருளகம் |
| Guardn Room U 3 .. .. .. | காவிரி |
| Visitors Book Room U 4 .. .. | வில்லவன் கோதை |
| Cooum House U 5 .. .. | கூவம் இல்லம் |
| Garden tool shed U 6 .. .. | கனிமொழி |
| Kitchen Block West V 1 .. .. | இனி மொழி |
| Kitchen Block East V 2 .. .. | கலையகம் |
| Stewards quarters (G. F.) V 3 .. | சுவைத்தமிழ் |
| Stewards 1st Floor V 4 .. .. | சூரியகாந்தி |
| T.U.C.S. V 247 .. .. .. | தேனகம் |
| A 1 to A 24 .. .. .. .. | அணி 1 |
| A 25 to B 38 .. .. .. | அணி 2 |
| C 39 to C 60 .. .. .. | அணி 3 |



| | |
|---|---|
| D 61 to D 84 .. .. .. | அணி 4 |
| E 85 to E 98 .. .. .. | அணி 5 |
| F 99 to F 103 .. .. .. | அணி 6 |
| G 103 A to G 109 A .. .. | அணி 7 |
| H 110 to H 119 .. .. | அணி 8 |
| I 120 to I 129 .. .. .. | அணி 9 |
| J 130 to J 138 .. .. .. | அணி 10 |
| K 139 to K 148 .. .. .. | அணி 11 |
| L 149 to L 158 .. .. .. | அணி 12 |
| M 159 to M 166 .. .. .. | அணி 13 |
| N 167 to N 175 .. .. .. | அணி 14 |
| O 176 to O 178 .. .. .. | அணி 15 |
| P 179 to P 181 .. .. .. | அணி 16 |

## இணைப்பு-3

[131-ம் பக்கத்தில்-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க].

### STATEMENT SHOWING THE DETAILS OF LANDED PROPERTIES OWNED BY THE RELIGIOUS INSTITUTIONS IN BHAVANI TALUK.

| Serial number. | Name of the temple and village. | Total extent (in acres) held. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 1 | Sri Gettivinayagar temple, Anthiyur .. | 33·76 | Dry. |
| 2 | Sri Badrakaliamman temple and Kariakaliamman temple, Appakudal. | 11·22 | Wet. |
| 3 | Endowment created by Ananthanarayana Ayyengar attached to Sri Baladhandayuthapaniswamy temple. | 9·27 | Wet. |
| 4 | Sri Sellandiamman temple, Bhavani .. | 9·48 | Dry. |
| 5 | Sri Sangameswarar temple, Bhavani .. | 7·06 | Wet. |
| | | 25·68 | Dry. |
| 6 | Sri Lakshminarayanaperumal temple, Brammadesam. | 1·71 | Wet. |
| | | 22·07 | Dry. |
| 7 | Sri Pongaliamman temple, Brammadesam | 19·57 | Wet. |
| 8 | Sri Varadarajaperumal temple, Boodapadi. | 7·16 | Dry. |
| 9 | Sri Adinarayanaperumal temple, Chettipalayam. | 10·90 | Dry. |
| 10 | Sri Venkatesaperumal, Kariakaliamman temple, Ennamangalam. | 21·12 | Dry |

| Serial number. (1) | Name of the temple and village. (2) | Total extent (in acres) held. (3) |
|---|---|---|
| 11 | Sri Badrakaliamman temple, Jambai .. | 27·12 Wet. |
| | | 11·74 Dry. |
| 12 | Sri Varadarajaperumal and Ellaperumal temple, Kannampalli. | 23·19 Dry. |
| 13 | Sri Chockanachiamman temple, Kuruchi. | 26·25 Wet. |
| 14 | Sri Varadarajaperumal Madeswarar and Vinayagar temple | 76·41 Wet. |
| 15 | Sri Kariakaliamman temple, Kuppandampalayam. | 13·89 Dry. |
| 16 | Sri Muniappar temple, Molagoundanpudur (Pattampalayam) | 14·61 Dry. |
| 17 | Sri Paruvachiperumal temple, Mylambadi | 18·08 Dry. |
| 18 | Sri Thiru Alangadu Immudi Agora Dharma Sivacharya Ayira Vysia Math, Nerinjipettai | 400·00 Wet. |
| | | 205·00 Dry. |
| 19 | Sri Mettumariamman temple, Nerinjipettai. | 37·13 Garden. |
| 20 | Sri Chockanachiamman temple, Olagadam. | 28·93 Dry. |
| 21 | Sri Olageswamaswamy temple, Olagadam. | 0·37 Dry. |
| 22 | Sri Checkanachiamman temple, Paruvachi | 12·45 Dry |
| 23 | Sri Ulagalandaperumal temple, Paruvachi. | 10·06 Dry. |
| 24 | Sri Chenroyaperumal temple, Patlur .. | 12·45 Dry. |
| 25 | Sri Semmuniswarar temple, Patlur .. | 22·36 Dry. |
| 26 | Sri Vageeswarasamy temple, Patlur .. | 37·57 Dry. |
| 27 | Sri Devendrappaswamy temple, Pachampalayam. | 1·98 Dry. |
| 28 | Sri Someswarasamy temple, Pachampalayam. | 9·97 Dry. |
| 29 | Sri Mariamman and Kariaperumal temple, Periapuliyur. | 8·73 Dry. |
| 30 | Sri Gurunathasamy temple, Pudupalayam. | 18·88 Dry. |
| 31 | Sri Chockanachiamman temple, Ponnachi. | 10·07 Dry. |
| 32 | Sri Mariamman temple, Senthampalayam. | 6·18 Dry. |
| 33 | Sri Lakshminarayanaperumal temple, Singapetti. | 24·48 Wet. |
| 34 | Sri Mariamman temple, Thairpalayam | 3·64 Dry. |
| 35 | Sri Chockanathasamy temple, Oorachikottai. | 16·00 Wet. |
| 36 | Sri Vedanarayanaperumal temple, Oorachikottai. | 19·76 Wet. |
| 37 | Sri Neelaperumal temple, Oorachikottai | 6·36 Wet. |
| 38 | Sri Varadarajaperumal and Centrayaperumal temple, Vellithiruppur. | 17·38 Dry. |



| Serial number. (1) | Name of the temple and village. (2) | Total Extent. (in acres) held. (3) |
|---|---|---|
| 39 | Sri Adinarayanaperumal temple, Oddarpalayam (Olagadam P.O.). | 4·95 Dry. |
| 40 | Sri Nanjappagounder kattalai attached to Sri Erikarai Muniappan temple. | 32·64 Wet. |
| 41 | Sri Brammeswarasamy temple, Brammadesam. | 31·72 Wet. |

## STATEMENT SHOWING THE DETAILS OF LANDED PARTICULARS OWNED BY RELIGIOUS INSTITUTIONS IN GOBICHETTIPALAYAM TALUK.

| Serial number. | Name of the temple and village. | Total extent (in acres) held. |
|---|---|---|
| 1 | Sri Angalamman temple, Andipalayam | 4·44 Dry. |
| 2 | Sri Nattarayaswamy temple, Andipalayam. | 4·37 Dry. |
| 3 | Sri Varadarajaperumal, Mariamman, Mahaliamman and Botroyasamy temple, Dasaripalayam. | 2·00 Dry. |
| 4 | Sri Kulandaivelayathasamy temple, Gobichettipalayam town. | 5·00 Dry. |
| 5 | Sri Visalakshisamedhaviswesware-samy temple, Veerapandi. | 6·77 Wet. |
| 6 | Sri Mukkiyapranasamy alias Sri Anjaneyasamy temple, Hanumantharayar Koil Street, Gobichittypalayam Town. | 5·02 Wet. |
| 7 | Sri Sengapidariammen temple, Elur hamlet of Pullappanaickenpalayam. | 1·92 Dry. |
| 8 | Sri Siddivinayagar temple, Gobichettipalayam. | 1·12 Dry. |
| 9 | Sri Muthuvelappagounder kattalai attached to Sri Kariakaliamman temple, Kasipalayam. | 1·10 Wet. |
| 10 | Sri Kariakaliamman temple, Kalingiam. | 32·42 Wet |
| 11 | Sri Varadarajaperumal temple, Kanakkampalayam. | 120·87 Wet. |
| 12 | Sri Ponmalaiandavar temple, Kondapalayam. | 38·24 Dry. |
| 13 | Sri Mallikarjunasamy temple, Kongayamhalli. | 7·25 Dry. |
| 14 | Sri Nithyapadikattalai and to Sri Mathyapuriswarar temple, Kugalur. | 33·85 Wet. |
| 15 | Sri Alagunachiamman temple, Kugalur. | 13·63 Wet. |
| 16 | Sri Karivaradarajaperumal and Venugopalaswamy temple, Koilpudur hamlet of Punjaipuliampatti. | 30·28 Dry. |
| 17 | Sri Kariakaliamman, Vinayagar, Mariamman and Madhyapuriswararar temple, Kadathur. | 6·40 Dry. |

| Serial number. (1) | Name of the temple and village. (2) | Total extent (in acres) held. (3) |
|---|---|---|
| 18 | Sri Pongaliamman and Mariamman temples, Kurumandur. | 27·98 Wet. |
| 19 | Sri Basuweswarar temple, Kadathur .. | 15·e0 Dry. |
| 20 | Sri Bagavathiamman temple, Mulliampatti, hamlet of Panayampalli. | 21·81 Dry. |
| 21 | Sri Thanthoniamman and Thiruvikramanarayanaperumal temple, Nambiyur. | 10·68 Dry. |
| 22 | Sri Karithimmarayasamy and Karivaradarajaperumal temple, Nanjai puliampatti. | 8·09 Wet. |
| 23 | Sri Bajanaimadam and Venugopalaswamy temple, Nanjaipuliampatti. | 2·80 Wet. |
| 24 | Sri Thimmarayasamy temple, Nathipalayam. | 6·30 Dry. |
| 25 | Sri Vinayagar temple, Nallur .. .. | 7·62 Dry. |
| 26 | Sri Venugopalasamy temple, Nallagoundanpalayam. | 5·01 Dry. |
| 27 | Sri Kariakaliamman temple, Nanjaithuraiampalayam. | 10·75 Wet. |
| 28 | Sri Kariakaliamman temple, Nallur | 1·19 Dry. |
| 29 | Sri Unjaladipattappasamy temple, Perunthalaiyur, hamlet of Mettupalayam. | 3-50 Wet. |
| 30 | Sri Vigneswarar and Hanumantharayasamy temple, Periakodiveri. | 3-94 Wet. |
| 31 | Sri Centrayaperumal temple, Periakodiveri. | 16·16 Wet. |
| 32 | Sri Ponnachiamman and Kannimar temple Perunthalaivur. | 19·07 Wet. |
| 33 | Sri Dhandayuthasamy temple, Punjaipuliampatti. | 19·73 Wet. |
| 34 | Sri Mathalakombuganesar temple, Pettaikarai. | 0·84 Dry. |
| 35 | Sri Madippanalluramman temple, Periakalipatti. | 13·59 Dry. |
| 36 | Sri Badrakaliamman temple, Pudupalayam, hamlet of Nallur. | 6·61 Dry. |
| 37 | Sri Meenakshisundareswarar temple, Sathyamangalam. | 4·76 Dry. |
| 38 | Sri Venugoplasamy, etc., temples, Sathyamangalam. | 5.06. Dry. |
| 39 | Sri Kannikaparameswari temple, Sathyamangalam. | 5·34 Dry. |
| 40 | Sri Parameswaran and Vinayagar temple, Sundakkampalayam. | 5·04 Dry. |
| 41 | Sri Badrakaliamman temple, Sellapalayam. | 16·62 Dry. |



| Serial number. (1) | Name of the temple and village. (2) | Total extent (in acres) held. (3) |
|---|---|---|
| 42 | Sri Ramalingachowdeswariamman temple, Savakkattupalayam. | 21.64 Dry. |
| 43 | Sri Alagurayaperumal temple, Thalkuli. | 29·81 Wet. |
| 44 | Sri Kumarasamy and Subramaniasamy temple, Thittamalai. | 50·92 Dry. |
| 45 | Sri Sentrayaperumal temple, Thadappalli, Kasipalayam P.O. | 4.11 Dry. |
| 46 | Sri Vinayagar temple, Uthandiyur. | 27·33 Wet. |
| 47 | Sri Karivaradarajaperumal Badrakaliamman and Kumarasamy temple. | 2·74 Dry. |
| 48 | Sri Mariamman and Kariakaliamman temple, Velankoil. | 12·52 Dry. |
| 49 | Sri Nanjundeeswarar temple, Velankoil. | 9·73 Dry. |
| 50 | Sri Pavalamalaimuthukumarasamy temple, Vellalapalayam. | 52.15 Wet. |
| 51 | Sri Sentrayaperumal, Kariakkaliamman, Vinayagar and Mariamman temples, Kondappanaichenpalayam | 9·31 Garden. |
| 52 | Sri Kuppeeswarar temple, Basanur | 16·22 Dry. |
| 53 | Sri Ayyan temple, Puduchooripalayam | 1·43 Dry. |
| 54 | Sri Uthukuliamman temple, Punjaipuliampatti. | 21·31 Garden. |
| 55 | Sri Mariamman temples, Punjaipuliampatti. | 9·63 Dry. |
| 56 | Sri Kariakaliamman temple, Punjaipuliampatti. | 4 36 Dry. |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 சனவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Arrest of eve teasers near Sembiam.*

* 61 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of eve teasers were apprehended near Girls' High School, Sembiam, Madras, during the last week of August 1971; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம்.

(இ) செம்பியம், ஊர்து பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர் மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர், எம். எச். சாலையில் உள்ள பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றிக்கு அருகில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எழும்பூர் கௌரவ சிறப்பு மாநகர மாஜிஸ்ட்ரேட்டினால் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டு அபராதம் விதிக்கப் பட்டார்கள்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, கல்விச்சாலைகளில் 'கோ-எஜுகேஷன்' 'யூனிஃபார்ம்' ஆகியவற்றைப் புகுத்துவது, பெண்களைக் கேலி செய்வதைத் தடுக்க வழிவகுக்கும் அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது ஒரு யோசனை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** செம்பியம் பகுதியில் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளில் பெண்களைத் துன்புறுத்தியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது; எங்களுக்கு நேரிலும் தகவல் வந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் கேள்விக்கு பதில் அளித்தது உண்மை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்வது கற்பனை.

## திரைப்பட அரங்குகள்

***62. வினா—திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Semi Permanent Theatre...... கள் துவக்குவதற்கு எங்கெங்கு அரசு அனுமதி கொடுத்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. எஸ். மணியன்** : செமி-பர்மனென்ட் தியேட்டர்கள் நடத்துவதற்கு எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து அனுமதி தரப்படுகிறது, அரசு சார்பில் தரப்படக்கூடிய கடன் தொகை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இந்தத் தியேட்டர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு உரிமம் வழங்கப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக தங்கள் விருப்பம்போல் வரையறை செய்ய அவர்களுக்கு அதிகாரம் எதுவும் தரப்படவில்லை. இதற்கு லட்ச ரூபாய் அளவு கடன் தரப்படுகிறது.

## *Permission for manufacture of liquor*

* 63. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to permit manufacture of liquor in private sector; and

(*b*) if so, details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : (அ) & (ஆ) இந்தியாவில் அந்நிய மது வகைகளைத் தயாரிப்பதற்காக தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சவுத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்சீஸ்) லிமிடெட், சென்னை. அருணா சுகர்ஸ், சென்னை, ஓரியன் இண்டஸ்ட்ரீஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், சென்னை, ஆகியவைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. வடிசாலைகள் (ப்ரூவரீஸ்) தொடங்குவதற்கு எம்.எஸ்.எம். சுல்தான் மரக்காயர் அண்டு சன்ஸ், சென்னை. கோத்தாரி அண்டு சன்ஸ், சென்னை, நேஷனல் கம்பெனி, சென்னை, ஆகியவற்றிற்கும் திருவாளர்கள் ஏ. எல். சீனிவாசன், சென்னை, கே. ஆர். நடராசன், பொள்ளாச்சி, ஆகியோருக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

Thiru N. DENNIS : May I know whether the Government will come forward to start such liquor production in the co-operative sector?

---

இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அப்படியொன்றும் இப்பொழுது உத்தேசம் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : 'அன்னிய மது வகை' என்பதில் 'ஒயினும்' சேரும் என்று நினைக்கிறேன். மதுரை மாவட்டத்தில் திராட்சை அதிகமாக உற்பத்தியாகும் பகுதியில் ஒயின் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையொன்றை அமைக்க வாய்ப்பு இருப்பதால் அதற்கு அனுமதியளிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அதுபற்றி விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : இந்த ஆலைகளில் தயாரிக்கும்பொழுது சாராயத்தின் விலை என்ன, அதை வெளியே அனுப்புகின்றபோது அதனுடைய விலை என்ன, அதை லைசன்ஸ்தாரர்கள் விற்பனை செய்கின்றபோது அதனுடைய விலை என்ன ஆகிறது என்பதை முதலமைச்சரவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இன்னும் இந்த ஆலைகளெல்லாம் தொடங்கப்படவில்லை. அதற்குப் பிறகுதான் அதனுடைய விலைகளெல்லாம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : கூட்டுறவுத் துறையில் இம்மாதிரி விண்ணப்பங்கள் வந்தால் அவற்றை அனுதாபத்துடன் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : கூட்டுறவுத் துறையில் இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்கின்ற உத்தேசம் இப்பொழுது அரசுக்கு இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன்.

## *Quality control for toddy, etc.*

* 64. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the steps taken by the Government to have quality control for toddy and arrack in this State?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : விற்பனைக்கான அல்லது விற்பனைக்காக வைத்து வரப்படுகின்ற கள்ளும் சாராயமும் நல்ல தரமுள்ளதாகவும், கலப்படமில்லாததாகவும் இருக்கவேண்டுமெனப் பார்த்துக்கொள்ள கட்டளைகள் உள்ளன. போதை அதிகம் ஊட்டுவதற்கோ, வேறு எந்த நோக்கத்திற்கோ மதுவுடன் எந்தப் பொருளும் சேர்க்கப்படக்கூடாது. ஆய்வு அதிகாரிகள் எடுக்கும் கள் மாதிரிகள் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக்கூடத்தில் பரிசோதிக்கப்படுகின்றன.

சாராயத்தைப் பொறுத்தமட்டில், நெல்லிக்குப்பம், திருச்சி, வடிசாலைகளில்—தயாரிக்கப்படுகிற சாராய மாதிரிகள் சென்னையில் தமிழ்நாடு ஆயத்துறை—மதுவிலக்கு ஆய்வுக்கூடத்தில், இவை

இந்தியத்தர விவரக்குறிப்புகளுக்கிணங்க உள்ளனவா என்று பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. வடிசாலைகளில் சாராயம் தயாரிக்கப்பட்டு ஆயத்துறை அதிகாரிகள் முன்னிலையில் வழங்கப் படுகின்றன. சாரயத்தின் திண்மையைச் சோதிக்க நீர் அளவிகள் (Hydrometers) அதிகாரிகளுக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. சாரயத்தை வெளியே அனுப்புமுன் வடிசாலைகளும் தங்கள் பொறுப்பில் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்கின்றன.

THIRU N. DENNIS : Is this Government aware that in spite of the measures, adulteration takes place?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மூலக் கேள்விக்கு நான் அளித்த பதிலில் இந்த விவரங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : திருச்சியிலும் நெல்லிக்குப்பத் திலும் தான் இந்த சாராய வடிசாலைகள் இருக்கின்றன. இப் பொழுது தென் மாவட்டங்களுக்கு வேண்டியது திருச்சி வடி சாலையிலிருந்துதான் வருகிறது. அதனுடைய 'க்வாலிடி' நெல்லிக்குப்பத்தினுடைய மாதிரி இல்லை என்று சொல்லுகிறார் களே இதில் ஏதாவது உண்மை உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இந்தப் புகார் பற்றி கவனிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : வார்னிஷ் போன்றவற்றை அருந்தி பலர் மாண்டதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இதுமாதிரி நிகழ்ச்சிகள் வராமல் தடுக்க அர சாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இங்கு சென்னையைப் பொறுத்த வரையில் ஒருவர் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. டில்லியில் 80 பேருக்கு மேல் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. இரண்டும் இந்தியாவிலேயே இருந்தாலும் டில்லி வேறு, சென்னை வேறு. ஏனென்றால், சென்னையில் ஏதாவது நடந்தால் அது பெரிய அமர்க்களப்படுகிறது. அந்த வகையில் ஒருவர் இறந்ததுபற்றி அவர் கவலை தெரிவித்தார். ஒருவர்கூட இறக்கக்கூடாது என்பது தான் அரசாங்கத்தின் எண்ணமாகும். இவைகளையெல்லாம் தடுப்பதற்கேற்ற வகையில், மதுகாஷயம் போன்றவற்றை விற்பனை செய்கிறவர்கள் போலீசாரால் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி** : பாதுகாப்புச் சட்டப் பிரகாரம், மதுக் கடைகள் வைக்கும் இடம் பொது இடங்களுக்கு அருகா மையில் இருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியமாக இருக் கிறது. அதை எடுக்கவேண்டுமென்று கேட்டால் கோர்ட்டுக்குப் போகிற அளவு நிலைமை மாறியிருக்கிறது. இது சம்பந்தமாக அரசு ஏதாவது திருத்தியமைப்பதற்கு முடிவு எடுக்குமா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : பொது மக்களிடமிருந்து வருகிற அது பற்றிய புகார்கள் விசாரிக்கப்பட்டு, கூடுமானவரை யில் அந்த இடங்களிலிருந்து அந்தக் கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன. ஒரு சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றால், அதையும் நாம் சந்திக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : அரசாங்கம் தயாரித்து விற்கின்ற சாராயம், குடிக்கின்றவர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் போதை தருவதாக இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அவர்கள் விருப்பத்திற்குத் தக்கபடி போதையைக் கூட்டி தயாரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அவர்கள் சார்பாகச் சொல்லப்பட்ட இந்தக் கோரிக்கை உரிய நேரத்தில் பரிசீலிக்கப் படும். ஆனால் ஒரு திருத்தம். 'அரசாங்கம் தயாரித்து விற் கின்ற சாராயம்' என்பது சரியல்ல. அரசாங்கம் சாராயம் எதையும் தயாரித்து விற்கவில்லை.

### *Sale of liquor*

*65 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to ban the sale of liquor on specific days; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : (அ) & (இ) அவ்வித உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

**திரு. என். டென்னிஸ்** : ஷாப் அஸிஸ்டென்ட்ஸ் ஆக்ட் பிர காரம் கொடுக்கக்கூடிய விடுமுறை நாட்கள் இதற்கும் விஸ்தரிக்கப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அப்படி உத்தேசம் இல்லை. ஆனால், இப்பொழுதிருக்கின்ற ஸேல்ஸ் நோட்டிபிகேஷன் படி, குறிப்பிட்ட ஒரு கடை, அல்லது எந்த ஒரு கடையானால், எல்லா வகை டெபோக்களையும் குறிப்பிடுகிற கிழமைகளில் நிறுத் தும்படியாக ஆணையாளர் ஆணையிடலாம் என்று இருக்கிறது. தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் அந்தக் கடைகள் மூடப்பட வேண்டும் என்று உத்திரவிடுவதற்கு அந்த நிபந்தனை வகை செய் கிறது. அதைப் போலவே, சட்டம், ஒழுங்கு. அமைதி இவை களுக்குக் கேடு வரும் வகையில் ஏதாவது கலவரங்கள், அமளி ஏற்படுமானால் அந்த நேரத்திலும் அதுபோன்ற கடைகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடாது என்று தடுப்பதற்கு நிபந்தனை விதிக் கப்பட்டிருக்கிறது.

[1972 சனவரி 28

*Retired Medical Officers*

* 66 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Assistant Surgeons Association has requested the Government in October 1971 to give up the practice of employing superannuated men as Heads of Family Planning, Health Services and Medical Education Department; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(ஆ) மருத்துவத் துறையிலுள்ள குறிப்பிட்ட சிறப்பியல் பிரிவில் தகுதியுள்ள மருத்துவர்கள் குறைவாக இருந்தாலோ அல்லது குறிப்பிட்ட தனித்திறமையுள்ளவராக இருந்தாலோ தான், ஓய்வுக்குப்பின் சில அதிகாரிகள் பணியில் நீடிக்க வைத்துக்கொள்ளப்படுகின்றார்கள் என்பதை சங்கத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : Sir, will the Government consider the utilisation of the services of retired men without affecting the promotional avenues of younger men?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது 55 வயதில் எல்லோரும் பதவியில் இருந்து ஓய்வுபெறவேண்டுமென்ற பொது விதி ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்துகொண்டிருக் கிறது. நிர்வாகத்தில் அமைந்து அந்த நிர்வாகத்திற்கு டாக்டர் கள் பலர் ஆர்வத்தோடு முன்வருவதில்லை என்ற காரணத்தினால், நிர்வாகம் செம்மையாக நடைபெற வேண்டும் என்கிற கருத்தில் தகுதி உடையவர் அந்தப் பதவிக்கு வரும் வரை தேவையானால் மீண்டும் பரிசீலனைக்கு உட்பட்டு பதவியில் உள்ளவர் ஓராண்டு காலத்திற்கு அதுவும் 58 வயது வரைதான் புது நியமனம் என்ற முறையில் அனுமதிக்கப்படுகிறார். இதன் காரணத்தினால் சர்வீசில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பு பாதிக்கப்படு கிறது என்று எந்தவகையிலும் கருத முடியாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** திறமையானவர்கள் என்ற காரணத் திற்காக ஓய்வு பெற்ற பிறகு எத்தனை பேர்களுக்கு வேலை நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாக அவ்வாறு அளிக் கப்படுவதில்லை. ஒன்றிரண்டு பதவிகளுக்குத்தான் இன்றியமை யாத் தன்மையைக் கருத்தில் கொண்டு பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறவர்களின் தகுதி, திறமையைக் கருதி புது நியமனம் என்ற முறையில் அளிக்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தமாதிரி நிபுணர்களை புது நியமனம் செய்வதற்கு என்ன பிரத்யேகமான வழி முறைகள் கையாளப்படுகின்றன, விதிமுறைகள் பின்பற்றப்படு கின்றன என்பதை அறியலாமா ?



1972 சனவரி 28]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சில பதவிகளில் அமர் வதற்கு இத்தனை ஆண்டு அனுபவம் இருக்கவேண்டும், இன்ன போஸ்ட் க்ராஜ்வேட் கோர்ஸ் பாஸ் செய்திருக்கவேண்டும் என்று இருக்கிறபோது இந்தத்தகுதி உடையவர் கிடைப்பது இல்லை. சில சமயம் மேல்நாடுகளுக்கு இந்தத் தகுதி பெற்றுவரச் சென்றி ருக்கலாம். அவர் வரும்வரை—இந்தத் தகுதி உடையவர் கிடைக் கும்வரை—ஒன்றிரண்டு வருடம்—ஒவ்வொரு ஆண்டாகத்தான் பதவியில் இருந்து ஓய்வு பெறுகிறவர்—அவரது தனிச் சிறப்பு—தகுதி காரணமாக—பதவி நீட்டிப்பு மறு நியமனம் என்ற அடிப் படையில் தரப்படுகிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முக்கியமான பதவி என்கிற போது டைரெக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸ், டைரெக்டர் ஆப் மெடி கல் எஜுகேஷன் ஆகிய இரண்டுதான் இருக்கிறது. டைரெக்டர் ஆப் ஹெல்த் சர்வீசுக்கு நியமிக்கப்படவில்லை என்று அறிகிறேன். டைரெக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** டைரெக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் என்பது வைத்தியம் புரிகிற பதவி அல்ல. நிர் வாகத்தை நடத்துகிறபதவி—யார் யார் எங்கு இருக்கவேண்டும் என்பதாக தீர்மானிக்கிற நிலையில் எல்லோருடைய தகுதியும்—ஒவ்வொரு இடத்தின் தனிச் சிறப்பும் நன்கு தெரிந்த ஒருவர் அந்தப் பதவியில் இருந்தால் தான். Medical education is a specialised educational subject என்பதனால், அப்படிப்பட்ட தகுதி உடையவர் ஒருவர் கூட இல்லை என்று சொன்னால் அரசாங்கம் மட்டும் எந்த நல்ல காரியத்தையும் சாதிக்க முடியாது. அதன் காரணத்தினால் தான் அந்தப் பதவியில் உள்ளவர் ஓராண்டுக்கு புது நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இது அரசின் கொள்கைப்படி கூட தவறு இல்லை.

*Government Hospital near Tambaram*

* 67 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open a Government Hospital near Tambaram; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) தாம்பரம் அருகில் 100 படுக்கைகளுடன் கூடிய ஒரு புதிய அரசு மருத்துவ மனை 27—7—1971 முதல் நடைபெற்று வருகிறது.

*Research in Indian Medicine*

* 68 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Central Council for Research in Indian Medicine and Homoeopathy, is opening Research Centres in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : (அ) ஆம்.

(இ) புதுடெல்லியிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு கீழ்க்கண்ட ஆய்வு அலகுகளை—பகுதிகளை—தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு ஒப்பளித்திருக்கிறது :—

(i) சித்த மருத்துவ முறையில் பிணி நீக்கும் பரிகார ஆய்வு கூடம், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை ;

(ii) சித்த முறை மூலிகைகளைத் தரப்படுத்தும் கூடம் காப்டன் சீனிவாசமூர்த்தி ரிசர்ச் இன்ஸ்டிடியூட், சென்னை, அடையாற்றில் அது இயங்குகிறது ;

(iii) சித்த நூல் ஆராய்ச்சி கூடம், இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை;

(iv) மூலிகை வளர்ப்பு கூடம், அரசு இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை ;

**திரு. கே. எ. வகாப்** : இந்த மருத்துவ ஆராய்ச்சி முறையிலே யூனானி மருத்துவத்திற்கும் அப்படி ஏற்படுத்தும் குறிப்பு அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, யூனானிக்கு இப்போது அப்படிப்பட்ட ஆராய்ச்சிக்கு தனி வாய்ப்பு அளிக்கிற குறிப்பு இல்லை. ஆயுர்வேதத்திற்கும் அப்படித் தனியாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. தமிழகத்தில் சித்த வைத்தியத்திற்கு என்று நாம் செய்யாவிட்டால்—இந்த சித்த வைத்திய முறையினால் பலர் பிழைத்துக்கொள்வது இருக்கட்டும்—இந்த சித்த வைத்திய முறையே உயிர் பிழைக்காது என்ற காரணத்தினால்—சித்த வைத்தியத்திற்கான ஆராய்ச்சிகள் இங்கே நடக்கின்றன. ஆகவே, பிற பிரிவுகளுக்கு வசதியில்லை. ஆயினும், ஆயுர்வேதம், யூனானி ஆகியவற்றில் அக்கறை உள்ளவர்கள்—ஒவ்வொரு பகுதிக்கும் 5 லட்சம் நன்கொடை சேர்த்துத்தந்தால் அவற்றையும் சென்னையில் ஏற்படுத்தலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : இந்த சித்த வைத்தியம் தமிழகத்தில் 4 சென்டரிலே இருந்து வருகிறதே—இதற்கு மத்திய அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறார்கள் ? ஜோத்பூர் மத்திய கல்லூரிக்கு தமிழ்நாட்டில் இருந்து நல்ல தகுதிபெற்ற ஒருவர் அனுப்பப்பட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : வடக்கே அமைக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய இந்திய மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சித்த மருத்துவ நிபுணர்கள் சென்று ஆராய்ச்சி நடத்திவருகிறார்கள். ஆனால், சித்த மருத்துவம் சிறப்பான நிலைக்கு வருவதை அங்குள்ளவர்கள் விரும்பவில்லை—முன்பு இருந்த சலுகைகள, வாய்ப்புகள் எல்லாம் குறைந்து வருகின்றன என்பதாக அங்குள்ள டாக்டர் ரமணன் தெரிவிக்கிறார். அவரைக் கூட இங்கே ஏதாவது ஒரு துறைக்குத் தலைவராக அழைத்துக் கொண்டுவிடலாமோ என்கிற எணணம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நான்கு சென்டரிலே ஆராய்ச்சிக்காக மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிவருகிறது. அந்தப் பணம் அதற்காகவே இங்கு செலவிடப்படுகிறது. சென்னையில் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் ' ரிசர்ச் என்க்குவயரி இன் யூனானி ' பிரிவில் பத்து படுக்கைகளும், ஆயுர்வேதப் பிரிவில் 10 படுக்கைகளும்—அதற்குரிய டாக்டர் தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இது இந்திய மருத்துவக் கழகத்தின் உதவியோடு செய்யப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேலு** : தலைவர் அவர்களே, கோவில் தர்மஸ்தாபனங்களின் சார்பாக தமிழகத்தில் எத்தனை சித்த வைத்திய மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன ? அவற்றிற்கு அரசின் பண உதவி ஏதாவது அளிக்கப்படுகிறதா ? அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, அண்மையில்தான் அந்த முயற்சி நிறைவேற்ற தொடங்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 14 திருக்கோவில்களில் சித்த வைத்திய மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டு, பி.ஐ.எம். பட்டம் பெற்ற டாக்டர்கள் அவற்றை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே இவை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் சில திருக்கோவில்களில் இம்மாதிரியான மருந்தகங்களை நடத்த முன் வ[illegible]கிறார்கள். இவற்றுக்கு அரசு நேரடியாக உதவவில்லை. அந்த அந்த வட்டாரத்திலுள்ள மக்களும் உதவி செய்கிறார்கள். திருக்கோவில்களின் சார்பாக நடத்தப்பெறும் இந்தப் பணி இந்தத் துறையின் மூலமாக நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் விரும்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

*Primary Health Centres*

* 69 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to convert Primary Health Centres in the State as Rural Hospitals?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : இல்லை.

* 70 **வினா.—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டும் வேலை தொடங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான திட்டமிட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகிவிட்டன. கட்டிடம் கட்டுவதற்கான நிலமும் பொதுமக்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளாகிவிட்டன என்று மாண்புமிகு அங்கத்தினர் கூறினார். இது அரசாங்கத்தினுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதாக இல்லை என்றார். கட்டிடம் கட்டப்படவில்லை என்பது குறை. அதற்கு வேண்டிய நிதிவசதியை தர முடியாததாக இருந்திருக்கலாம். அதைவிட கட்டிடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலம் தர வேண்டும். ஆனால் அவர்களோ தந்திருப்பது 3 ஏக்கர்தான். Only three acres are available for construction of buildings. ஐந்து ஏக்கர் நிலம் தரவேண்டும். மேலும், இதற்காக ஒரு அடையாளத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் தரப்பட வேண்டும். இந்தத் தொகையும இதுவரையில் தரப்பட்டதாக அரசாங்கத்தின் குறிப்பில் இல்லை. ஆகவே, அவர்கள் ஆக்க வேண்டிய பணிகளை முதலில் செய்து முடித்துவிட்டு, அரசாங்கத்தின் ஆக்க வேலைகளைப் பற்றிச் சொன்னால், அது பற்றி கவனிக்கலாம்.

* 71 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any scheme under the consideration of the Government to increase the bed facilities in the Primary Health Centre of Melmalaiyanur Panchayat Union; and

(b) if so, when?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் இப்போது 6 படுக்கைகள் உள்ளன. பக்கத்திலுள்ள செஞ்சி வட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையில் 16 படுக்கைகள் உள்ளன. எங்கள் பகுதிகளிலுள்ள ஏழை விவசாய மக்கள் நோய்வாய்ப்பட்டு, ஆஸ்பத்திரியில் அட்மிஷன் ஆகிறபோது வசதியில்லாத காரணத்தினால் அவர்களை மரத்தடியில் படுக்க வைக்கின்ற கோரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்யுமா ?





**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய பகுதிக்கு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கோருகிற உரிமை இருக்கிறது. இப்பொழுது உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோருகிற உரிமை கனம் அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. ஆனால், அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட வசதி இல்லை.

## காசநோய் மருத்துவ மனைகள்

*** 72 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை-செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழ்நாடு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** செங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனைக்கு 1970-71-ல் தமிழக அரசு வழங்கிய மானியத் தொகை ரூ. 37,920.81. அதன் விவரம் பின்வருமாறு--

| | |
|---|---|
| 1968-69-ஆண்டுக்காக | ரூ. 26, 920.81 |
| 1970-71-ஆண்டுக்கு முன்பணம் | ரூ. 11,000.00 |

*** 73 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் நடமாடும் காசநோய் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, மதுரை மருத்துவ மனைக்கு காசநோயால் பீடிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் கிராமங்களிலிருந்து தினசரி வருகிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இடவசதிக்காக பதிவு செய்துகொண்டவர்களுக்குக்கூட இடம் கிடைக்காத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் குறையைப் போக்க நடமாடும் காசநோய் மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தி, கிராமங்களுக்குத் தினசரி சென்று நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, காசநோய் தடுப்புத் திட்டம் என்பது ஒவ்வொரு மருத்துவமனையோடும் தனிப்பட்ட முறையில் இணைக்கப்பட்டு செயலாற்றப்படுகிறது. நடமாடும் மருத்துவமனையாக இயங்குவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய் தடுப்புக்கு இயங்கி வருகிற உந்து வண்டிகள் மூலமாக மாவட்ட அளவில் நடைபெறுகிறது. ஏதாவது

[1972 சனவரி 28

ஒரு கிராமத்தில் மக்களிடத்தில் இந்த நோய் அதிகமாக பரவி யிருக்கிறது என்றால், அது மாவட்ட டி.பி. ஆபீசருக்குத் தெரி விக்கப்படுமானால், அந்தப் பகுதியில் அதிகக் கவனம் செலுத்தி பல் வேறு பணிகள் செய்ய வழி செய்யப்படும்.

## கோவை மாவட்டத்திலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள்

***74—வினா. திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜ புரத்தில்) ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் எழுதித்தரும் மருந்துகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் அங்கத்தினர் கூறும் வகையில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் கோயமுத்தூர் E.S.I. மருத்துவமனையில் உள்ளிருந்து மருத்துவ சிகிச்சை பெறும் பிணியாளர்களுக்கு மருத்துவமனை யிலிருந்தே தேவையான ஸ்பெஷலிஸ்ட் மருந்துகள் வழங்கப் படுகின்றன. வெளியில் இருந்துகொண்டு மருத்துவம் பெறும் பிணியாளர்களுக்கு வல்லுநர்கள் கூறும் மருந்துகள் அந்த அந்த மருந்தகங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, கோவையில் ஈ.எஸ்.ஐ மருந்தகங்களில் டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகள் கிடைக்காத குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் குறை பாட்டைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, அது பற்றி பரிசீலிக்கப்படும்.

***75 வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் E.S.I. தலைமை ஆஸ்பத்திரியில் (சிங்காநல்லூர் வரதராஜபுரத்தில்) எலும்பு முறிவு கவனிக்கும் பிரிவில் நிரந்தரமாக ஸ்பெஷலிஸ்ட் டாக்டரை நியமிக்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவார்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) & (இ) கோயம் புத்தூர் E.S.I. மருத்துவமனையில் எலும்பு முறிவு (Orthopaedics) கவனிக்கும் பிரிவில், மருத்துவவல்லுநர் ( நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2—11—1971 அன்று மருத்துவமனையில் பணியேற்றுள்ளார்.



1972 சனவரி 28]

***76 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், சோமனூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருந்தகம் அமைத்திடுவதற்காக கட்டடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டும், பல மாதங்களாக மருந்தகம் திறக்கப்படாமலிருப்பதின் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் சோமனூரில் ஒரு மருந்தகம் அமைப் பதற்காக அரசு ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு விட்டன. அதற்காக ஒரு தனியார் கட்டிடமும் வாடகைக்கு எடுக்கப்பட்டது. ஆனால் சோமனூரில் இத்திட்டம் நீட்டிக்கப்படும்பொழுது அதனைச் சார்ந்துள்ள நீலாம்பூர், அரசூர் ஆகிய இடங்களுக்கும் சேர்த்து நீட்டிக்கப்படவேண்டும் என்று முடிவு பிறகு எடுக்கப்பட்டது. அதற்கான அரசு ஆணைகள் சமீபத்தில்தான் பிறப்பிக்கப்பட்டன. சோமனூர், சாமலாபுரம், நீலாம்பூர், அரசூர் ஆகிய பகுதிகளுக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை 29—1—1972 முதல் நீட்டிக்க, அரசு தற்போது முடிவு செய்துள்ளது. ஆகவே அன்று முதல் சோமனூர் மருந்தகம் செயல்படத் துவங்கும்.

## அரிசனக் குடியிருப்புத் திட்டம்

***77 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் தமிழ்நாடு அரசு உதவி கோரியுள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே. அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும், இதர வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் மத்திய அரசு கொடுத்துவந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டு விட்டதால், ஆயுள் இன்ஷூரன்ஸ் மூலமாக கடன் உதவி பெற்று, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மத்திய அரசு திட்டத்தின் அடிப்படையில் நாமான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 'டைப் டிசைன்' கொடுக்கப்பட்டு. பரிசீலனை செய்யப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்களிடத்திலிருந்து இதுவரை தகவல் எதுவும் வரவில்லை. எல்.ஐ.சி. மூலமாக கடன் உதவி பெற்று நூறு ரூபாய்க்குக் குறைந்தவர்களுக்கு ஒரு ரகம் என்றும், நூறு ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு ரகம்

என்றும்—இரண்டு தரப்பினருக்கும் எந்த அளவிற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசீலனைகளை அரசாங்கம் செய்து கொண்டு வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தற்சமயம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும். அதாவது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அரிசனங்களுக்கு வருடத்திற்கு 6 வீடுகள் என்ற அளவில்தான் கட்டிக்கொடுக்க முடிகிறது. பல இடங்களில் அரிசனங்களுக்காக நிலம் ஒதுக்கப்பட்டும்கூட வீடுகள் கட்டப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்ட இடங்களில்கூட வீடுகள் கட்ட முடியாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நகரங்களில் வீடுகள் கட்டும் சங்கங்கள் இருப்பதுபோல் இவர்களுக்கும் சங்கம் அமைத்து எல்.ஐ.சி. மூலமாக கடன் வாங்கி, இருபதாண்டுக் காலங்களில் கடனை அடைக்க வசதி செய்துகொடுத்தால் நலமாக இருக்கும். இப்படி வருடத்திற்கு ஆறு வீடுகள் என்ற நிலையில் போய்க்கொண்டிருந்தால், அரிசனங்களுக்கான வீடுகள் பற்றிய பிரச்சினை தீர நூறு ஆண்டுகளானாலும் பூர்த்தி செய்யமுடியாது. ஆகவே, இதுபற்றி அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே. வருடத்திற்கு ஆறு வீடுகள் என்று கட்டுகின்ற நிலைமை எல்லா இடங்களிலும் இல்லை. சில இடங்களில் அம்மாதிரி இருக்கலாம். சில இடங்களில் பத்து வீடுகள் என்றும் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 80 ஆயிரம் மனைக்கட்டுகள் வீடு கட்டாமல் போடப்பட்டிருக்கின்றன. வாரியத்தின் முதல் உறுப்பினர் தமிழகம் பூராவும் சுற்றுப்பயணம் செய்து. எந்தமாதிரியான வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். வீடுகள் கட்டுவதற்காக மாவட்ட வாரியாக சங்கங்களை அமைத்து, அவற்றை மாநிலச் சங்கத்தினுடன் இணைத்து, எல்.ஐ.சி. மூலமாக கடன் பெற்று வீடுகள் கட்டுவது என்பது ஒரு திட்டம் அல்லது ஸ்லம் கிளியரன்ஸ் மூலமாக அரசாங்கமே அதற்காக எல்.ஐ.சி யிலிருந்து நிதி வசதி பெற்று வீடுகளைக் கட்டித் தரலாம் என்பது ஒரு திட்டம். இந்த இரண்டு கருத்துக்களைப்பற்றியும் கூறியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. எப்படியும் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்கிற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடங்கள் கிடைக்காத காரணத்தினாலே சிரமங்கள் இருப்பதால் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட முடியாமல் இருக்கின்றது. அந்த மாவட்டத்திலே அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும் அவர்கள் வைத்திருக்கின்ற மாடு, கன்று இவற்றிற்கு தொழுவங்கள் கட்டிக்கொடுப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வீடுகள் அரிசனங்களுக்குக் கட்டிக்கொடுப்பது என்பது எல்லா மாவட்டங்களுக்கும்





சேர்த்து எடுக்கப்பட்டிருக்கின்ற பொதுவான கொள்கையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போனறு நில ஆர்ஜிதம் செய்வதிலே பல தகராறுகள் ஏற்படுகின்றன. எனவேதான் அந்த மாவட்டத்திலே பல குறைகள் ஏற்பட்டு வருகின்றன. வீடுகள் கட்டிக்கொடுப்பது என்ற பொதுவான திட்டம்தான் இருக்கிறது. மாடுகள் கட்டிக்கொள்வதற்காகத் தொழுவங்கள் கட்டித்தருகின்ற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. அவர்கள் மாடுகள் வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. ஒரு மாடு வைத்திருக்கின்றவர்கள் இருக்கலாம், அவர்களுக்காக தொழுவங்கள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறதா? ஆம் என்றால் அதற்கு என்ன காரணங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கைவிடப்பட்டது என்றோ வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடாது என்றோ இல்லை. பட்டாக்கள் கொடுப்பதிலே சில தடைகள் இருக்கின்றன. அந்தத் தடைகளை நீக்கிப் பட்டாக்கள் கொடுத்துவிட்டால் பிறகு வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, அரசாங்கம் அரிசனங்களுக்குக் குறிப்பிட்ட ஆண்டுக்குள்ளாக வீடுகள் கட்டிக் கொடுத்து வீட்டுப் பிரச்னையைத் தீர்த்துவிடவேண்டுமென்ற கொள்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குறிப்பிட்ட ஆண்டு என்று இப்பொழுது எதுவும் வரையறுக்கப்படவில்லை. திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இவை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு எந்த அளவுக்கு அதைத் தீவிரப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்குத் தீவிரப்படுத்தமுடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in each Block and also in each taluk there are thousands of Harijans. They have no houses. They are living in thatched huts. These huts often catch fire. The result is, a number of poor Harijans are burnt also. The construction of pucca houses may take a very long time. Therefore, in the meanwhile if thatched roofs of the huts are removed and tiled roofs are provided in their places they can sleep in their houses boldly and feel safe. I explained this to the Director of Harijan Welfare. He said that he would try the experiment in one or two villages. May I ask the Government whether they will consider this request and instruct the Director to take steps early to provide tiled roofs in the place of thatched roofs?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 940 ரூபாய் என்ற அடிப்படையிலே கட்டப்படுகின்ற வீடுகள் ஏறத்தாழ மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற முறையிலேதான் கட்டப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்படிதான் அரசாங்கம் இன்றைக்கும் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

**திரு எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 80 ஆயிரம் மனைக்கட்டுகள் கொடுத்தும் இன்னும் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலங்கள் எல்லாம் விளை நிலங்களாக இருந்தவைதான். விளைநிலங்கள் கொடுக்கப்பட்டதால் ஒரு பக்கம் உற்பத்தி குறைகின்ற நிலைமை இருந்தாலும் அவற்றைத் தூர்ப்பதற்கு அவர்களால் முடியாத நிலைமை இருக்கிறது. அன்றாடம் வாழ்க்கைக்கே கஷ்டப்படும் அவர்களுக்கு அவற்றைத் தூர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் அரசாங்கம் கடன் கொடுக்க—ஒரு மனைக்கு இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குக் கொடுத்தால் போதுமானது என்று நினைக்கிறேன்—அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** விளைநிலங்கள் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தூர்ப்பதற்கு 15 லட்சம் 20 லட்சம் என்ற அளவுக்குச் செலவாகும் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு அரசாங்கம் இப்பொழுது செய்வதற்கு வசதியில்லை. வீடுகள் கட்டிக் கொள்வதற்கு எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவோ ஏற்பாடுகள் செய்வதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்காக வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டும் இன்னும் எத்தனை ஏக்கர் அளவிற்கு வீடுகள் கட்டிக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்ற விவரங்கள் இருக்கிறதா ? கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வீடுகளைப் பழுதுபார்க்கக்கூடிய வகையில் மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அவற்றிற்கு பழுதுபார்க்கும் திட்டம் அரசாங்கத்திடம் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கிட்டத்தட்ட 86 ஆயிரம் மனைக்கட்டுகள்—நான் சொல்வது சரியாக இருக்குமானால்—கொடுக்கப்பட்டும் வீடுகள் கட்டமுடியாமல் இருக்கின்றன. பெருவாரியான மனைக்கட்டுகள் ஏற்கனவே இருந்த அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டவைகளில் விளைநிலங்கள் ஆகவும், 3, 4 அடி அளவிற்குப் பள்ளமாக இருக்கின்ற இடங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தூர்ப்பதற்கு அவர்களால் முடியாமல் இருக்கிறது. மேலும் குடியிருக்க லாயக்கில்லாத இடங்களாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே





அரசியல் காரணங்களுக்காக பள்ளமான இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் கட்டமுடியாத இடங்களும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு—1 லட்சத்து 50 ஆயிரம் மனைக்கட்டுகளாக அந்த நிலையில் இருந்தவற்றை—அவர்களுக்கு எச்சரிக்கை செய்து நீங்கள் வீடுகள் கட்டிக்கொள்ளவேண்டும், இல்லாவிட்டால் திரும்பவும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற முறையிலே எச்சரிக்கை செய்த பிறகு அந்த அளவு குறைந்து—அப்படி மிரட்டியதற்குப் பயந்து கட்டியவர்கள் போக—மீதம் 86 ஆயிரம் மனைக்கட்டுகள் இன்னும் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்த்துக்கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. ஏனென்றால் வீடுகள் அவர்களுக்குக் கட்டிக் கொடுப்பதற்கே அரசாங்கத்திடம் போதுமான பணம் இல்லை. எனவே பழுதுபார்ப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இல்லை. மேலும் அரசாங்கம் கட்டிக்கொடுத்து, பழுதுபார்ப்பது என்பது சரியல்ல என்று நினைக்கிறேன். வீடுகளைக் கட்டிக்கொடுத்து, பழுது பார்த்துக் கொடுப்பது என்று வந்துவிட்டால் அந்தப் பலன்களைப் பெறுகின்றவர்களுக்குப் பொறுப்பு உணர்ச்சி இல்லாமல் போய்விடும். வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டப் பிறகு அவற்றைப் பழுதுபார்த்துக்கொள்வது என்பது அந்தப் பலன்களைப் பெறுகின்றவர்களுடைய கடமையாகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 86 ஆயிரம் மனைக்கட்டுகளில்—கொடுக்கப்பட்டும்—இன்னும் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இடங்களைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட காலம் கொடுத்து அதற்குள் அவர்கள் கட்டிக்கொள்ளவேண்டும், இல்லாவிட்டால் அரசாங்கம் அவற்றை திரும்ப எடுத்துக்கொள்ளும் என்ற முறையிலே மீண்டும் எச்சரிக்கை செய்து அரசாங்கம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா ? கட்டப்பட முடியாத இடங்களைக் கைவிட்டுவிட்டு அவர்களுக்கு வேறு இடங்களைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திரும்ப எடுத்துக் கொள்வோம் என்ற முறையிலே எச்சரிக்கை ஏற்கனவே செய்யப்பட்டுத்தான்—அதன் காரணத்தால் பல பேர்கள் கட்டி, கட்டப்படாமலிருந்த அளவு இப்பொழுது குறைந்திருக்கிறது. எனவே, மீண்டும், அவர்களுக்கு எச்சரிக்கை விடுவது மூலமாக எந்தவிதமான பலனும் ஏற்படாது. எந்த வகையிலே அவர்களுக்குக் கட்டிக்கொடுப்பது என்றும் எந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வது என்றும் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பரிசீலனைக்குப் பிறகு அரசாங்கம் முடிவு செய்யும்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கின்ற முறையில் சுமார் ஒரு வீட்டுக்கு 940 ரூபாய் ஆகும் என்று சொல்கிறார்கள். நல்ல

ஓலை வீடு கட்டவேண்டுமென்றாலே 1,000 ரூபாய்க்கு மேலாகிறது. எனவே, தட்டு ஓடு வீடு என்றால் 900 ரூபாயில் கட்டமுடியாது. அப்படித் தட்டு ஓடு வீடுகள் கட்டிக் கொடுத்தால் சீக்கிரம் பழுதடைந்துவிடும். 2,000 ரூபாய் அளவில் அவர்கள் வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொண்டால்—தட்டு ஓடு வீடுகள் அல்லது கான்க்ரீட் போட்டு வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கான முறையில்—அது சீக்கிரம் பழுது அடையாது—அதிகமான அளவில் வீடுகளைக் கட்டிக்கொள்வதைக் குறைத்தாவது நல்ல முறையிலே சிறந்த வீடுகளை குறைந்த அளவில் கட்டிக்கொடுத்தால் நல்லது அல்லவா? அதன் காரணமாக பழுதுபார்க்கும் அவசியமும் ஏற்படாதே? எனவே, அரசாங்கம் அவ்வாறு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** 940 ரூபாய் அளவிற்குக் கட்டிக்கொள்கின்ற வீடுகள் சில இடங்களில் நல்ல முறையில் இருக்கின்றன. சில இடங்களிலே ஒப்பந்தக்காரர்களிடம் விடுவதின் காரணமாக குறைகள் ஏற்படுகின்றன. அல்லது பலன் பெறுகின்றவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளாததால் பழுதடைகின்றன. பணம் போதாது என்ற வகையிலேதான் 940 ரூபாயாக இருந்ததை 1,100 ரூபாயாக ஆக்கி இருக்கின்றோம். அவர்களும் இதற்காக ஒத்துழைக்க வேண்டும். உடல் உழைப்பு மூலம் அவர்கள் இதற்கு உதவி செய்யலாம். அல்லது அவர்கள் கையிலிருந்து பணம் போட்டு நல்ல முறையிலே கட்டிக்கொள்ளலாம். எனவே, இரு தரப்பிலும் இப்படிப்பட்ட வீடுகள் ஒழுங்காக அமைவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

### பல்லடம் வட்டம்

*** 78 வினா.—திரு சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பல்லடம் வட்ட ஜமாபந்தியை வரும் ஆண்டில் நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

*** 79 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம் என்பதை திருப்பூர் வட்டம் என மாற்றும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்:** இல்லை.



### இராதாபுரம் துணை வட்டம்

*** 80 வினா.—திரு. டி. கணபதி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தைத் தனி வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு

*** 81 வினா—திரு. ந. சோமசுந்தரம்:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கோயில், மடம் இவைகளுக்குச் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்:** தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 58/1961), 2, 73-வது பிரிவுகள், பொதுத் தன்மை வாய்ந்த சமயப் பொறுப்புக் கழகங்களாலும், பொதுத் தன்மை வாய்ந்த ஓர் அறக்கட்டளை அல்லது கல்வி நிறுவனத்தாலும் வைத்திருக்கப்படுகிற நிலங்களுக்கு மேற்படிச் சட்டத்தின் விதித்துறைகள் பொருந்துவதிலிருந்து விலக்கு அளிக்கின்றன.

மேற்படிச் சட்டத்தில் அடங்கியுள்ள பல்வேறு விலக்குகள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமா. வேண்டாமா என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக, சட்டமன்ற இரு அவைகளின் உறுப்பினர்களைக் கொண்ட இணைக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, இந்தக் குழு தன் பணியை எப்பொழுது தொடங்கி, எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தப் பரிசீலனையை முடிக்கும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்:** தலைவரவர்களே, சமீபத்தில் அந்தக் குழு கூடி மலை நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு அளித்திருப்பதை நீக்குவது என்று தீர்மானித்திருக்கிறது.

**திரு ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, கோயில், மடங்களுக்கு உள்ள சாகுபடி நிலங்கள் முறையாகச் சாகுபடி செய்யப்படுவதில்லை. சாகுபடியாளரிடமிருந்து சரியாக வரவு செலவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, கோயிலுக்கும்,

மடத்திற்கும் சொந்தமான நிலங்களை அரசு நடத்த, நஷ்டஈட்டை கோயில், மடங்களுக்கு வழங்கி, பிறகு உழவர்களுக்கு நிலங்களை வழங்கி, சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது பெரிய கொள்கைப் பிரச்னை. இந்தக் குழு மீண்டும் கூடி இதைப் பற்றி ஆராயும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்தியா முழுவதும் இதைப்பற்றிப் பரிசீலிக்க முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி முடிவு எடுப்பதாக இந்திய அரசு தெரிவித்திருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, தமிழகத்தில் கோயில், மடங்களுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் இருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் அங்கம் வகிக்கக்கூடியவர்களில் சட்டப்பேரவை, மேலவை அங்கத்தினர்கள் யார் யார் இருக்கிறார்கள் ? அதில் தெய்வ பக்தி உள்ளவர்கள் இருக்கிறார்களா ? அல்லது தெய்வ பக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் அதில் அங்கம் வகிக்கவில்லை என்றாலும் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே. எல்லோரும் தெய்வபக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். யாரும் நாத்திகர்கள் இருப்பதாக நான் அறியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திலிருந்து நமது மாநில அரசாங்கத்திற்கு இது சம்பந்தமாக ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா ? அப்படியிருந்தால் அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இவைகளைப் பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை.

*Financial Director in Tamil Nadu Industrial Development Corporation*

* 82 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that proposals have been sent to the Central Government for the posting of a Financial Director for the Tamil Nadu Industrial Development Corporation Limited in 1971; and





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம். தமிழ்நாடு அரசு இந்திய தணிக்கைத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து திரு. ஜி. துவாரகநாதன், ஐ.ஏ. & ஏ.எஸ். அவர்களை அயல் துறைப் பணி வரையறைகளின் கீழ் 28—6—1971 முதல் இரண்டு ஆண்டுக் கால அளவுக்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுநேர நிதி இயக்குநராக நியமித்துள்ளது. இவர் மேற்படி கழகத்திடமிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,800-லிருந்து 2,000 வரை என்ற வீதத்தில் சம்பளமும் விதிகளின்கீழ் அனுமதிக்கத்தக்க அகவிலைப்படியும் பிற படிகளும் பெற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

*Titanium factory in Tamil Nadu*

* 83 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Titanium Factory in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இந்திய அரசுக்குச் சொந்தமான 'தி இண்டியன் ரேர் எர்தஸ் லிமிடெட்' என்னும் நிறுவனம் 90 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் டிடானியம் டை ஆக்ஸைட் கொண்ட சுத்திகரித்த இல்மினைட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. அந்த ஆலை தமிழ் நாட்டிலோ, கேரளாவிலோ, ஒரிஸ்ஸாவிலோ நிறுவப்படுவது சாத்தியம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is an important question and a supplementary question may be allowed.

*Scooter factory in Public sector*

* 84 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a scooter factory in public sector; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கேள்விகளும் மிக முக்கியமான கேள்விகள்தான். 50 கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் துணைக் கேள்விகள் வேண்டும் என்றால் 20 கேள்விகள் மட்டும் பேரவையில் கேட்கச் சொல்லிவிட்டு, மற்றவைகளைப் பிரிண்ட் செய்துதான் வைக்க வேண்டியிருக்கும் என்று பலமுறை சொல்லியாகிவிட்டது. ஒன்று, கேள்விகள் கேட்கத்தான் வேண்டுமென்றால் கேளுங்கள், அதற்கும் சம்மதம்தான். அல்லது, எவ்வளவு கேள்விகள் கேட்பது என்று வைத்துக்கொள்ளலாம். 20 கேள்விகளைக் கேட்டுவிட்டு 30 கேள்விகளை பிரிண்ட் பண்ணிவைத்துவிடலாம்.

THIRU J. JAMES : Sir, Question-Hour is very important. At least one supplementary question may be allowed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வி வருகிறது என்றாலே அது இம்பார்ட்டண்ட் தானே.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஒரு கேள்விக்கு 20 சப்ளிமெண்ட்ரி கேள்விகள் வரையில் கொடுக்கிறீர்கள். ஒரு கேள்விக்கு என்றால் ஒன்றுமேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பேரவைத் தலைவரின் 'டிஸ்கிரிஷ'னைப் பொறுத்து முக்கியமான கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுகின்றன. It is a reflection on the Chair. 50 கேள்விகள் வினாப்பட்டியலில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர்கள் ஒப்புதலுடன் இலாக்காவினர் அதிகமாக விடைகள் அனுப்புகிறார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் துணைக்கேள்விகள் கேட்டு பதில் சொல்வது என்றால் அதற்கான நேரம் இல்லை. பார்லிமெண்டில் செய்வது போல் 5, 6 கேள்விகள் கேட்டுவிட்டு மீதியை பிரிண்ட் பண்ணி வைத்துவிட்டால் அதை 'பப்ளிஷ்' செய்யலாம். அரிசன் நலத்துறை பற்றிய கேள்வி முக்கியமான கேள்வி. எனவே, அதற்கு அதிகமான துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டன. அதேபோல் கோயில் நிலங்கள் ஏராளம் இருக்கின்றன. அதில் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்குக் கவலை இருக்கிறது. ஆனால் இந்தத் தொழிற்சாலைப் பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது. ஒரிஸ்ஸாவிலோ அல்லது தமிழ்நாட்டிலோ அது அமையும் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனைக்காவது கொஞ்ச நேரம் விடலாம். ஆகவே, தலைவரின் டிஸ்கிரிஷனின்படி சில கேள்விகளுக்குத் துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறதே தவிர, இந்தக் கேள்விக்கு என்று பாரபட்சம் காட்டுவது இல்லை. சில பிரச்னைகள் இருக்கின்றன. அரிசன மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவது பற்றிய கேள்விக்குத் துணைக்கேள்விகள் கேட்டுத்தான் ஆக வேண்டும். அதுபோல் கோயில் நிலங்கள் பற்றிய கேள்விக்கும் துணைக் கேள்விகள் பற்றித் தலைவர்கள் கூடி முடிவு செய்யலாம். அப்படிச் செய்தால் எனக்கும் கொஞ்சம் சுலபமாக இருக்கும்.

How I am to finish the rest of the questions before 10 o'clock?

THIRU R. PONNAPPA NADAR : Sir, the present practice may continue.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். டிடானியம் தொழிற்சாலை ஒரிஸ்ஸாவிலா அல்லது தமிழ்நாட்டிலா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அது கொஞ்ச நாட்கள் நடக்கட்டுமே. அதற்குக்கூட . . .

**திரு ஜே. ஜேம்ஸ்:** நம் நாட்டைவிட்டு வெளியே போகக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவேதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த **கேள்வி.**



*Arrack distilleries in Tamil Nadu*

• 85 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up arrack distilleries in the Co-operative sector in this State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ & இ) முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முனுசாமி அவர்களைப் பாராட்டுகிறேன். கேள்வி அனுமதிக்கலாம் என்றாலும் அவர்கள் கேள்வி கேட்கவில்லை. அப்படி உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் தான் பல கேள்விகள் அமைய முடியும்.

*Tamil Nadu Cements, Alangulam*

• 86 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that tender has been called for the supply of about 510 MT of Hyper Steel Grinding Balls and Chilled cast iron cylpets by the General Manager of Tamil Nadu Cements, Alangulam by the 1st week of August, 1971; and

(b) if so, to whom the supply was allotted?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) முடிவு எடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE : Sir, may I know how many persons applied for tenders and what are the norms by which the tender will be properly investigated and final allotment made?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** யார் யார் இதற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. நம்முடைய அரசுக்கு வந்த தகவலின்படி இன்னும் இதுபற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படவில்லை. பரிசீலிப்பதற்கு முன் இந்தப் பொருள்களால் இந்த ஆலைக்குப் பயன் இருக்குமா, இந்தப் பொருள்களை மற்ற ஆலைகள், சிமெண்ட் ஆலைகள் எப்படிப் பயன்படுத்துகின்றன என்பதையெல்லாம் கவனமாக எடுத்துக் கொண்டு முடிவு எடுக்க வேண்டுமென்று அரசு ஆலோசனை கூறியுள்ளது.

*Fertilizer plant at Tuticorin*

• 87 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Fertilizer Plant at Tuticorin is proposed under Joint Sector; and

(b) if so, the share of the private industrialist and nature of control?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 71 கோடியில் தனிப்பட்ட தொழில் அதிபர் திரு. எம். ஏ. சிதம்பரம் என்பவரும் தொழில் நிர்வாகக் குழு உட்பட பங்கு விற்பனை செய்வதில் அவருடைய குழுவினரும் ரூ. 4.6 கோடி பங்கு மூலதனம் செலுத்துவர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தனி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நிறுவன நடவடிக்கைகளின் நிர்வாகம் நிறுவன இயக்குநர் வாரியத்தின் பொறுப்பிலிருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த நிர்வாகப் பொறுப்பு அரசின் ஏகப் பொறுப்பாக இருக்கிறதா? அல்லது எம்.சி.டி. அவர்களுக்கும் பங்கிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் முதலிலேயே கூட்டுத் துறை என்று சொன்னேன். பலமுறை இங்கு விளக்கப் பட்டிருக்கிறது. நான் முன்பு கூறியதைப்போன்று மொத்தம் 17 கோடி ரூபாயில் ஈக்விட்டி பங்கைப் பொறுத்த அளவில் நம் அரசு, வாரியம் 4 கோடியே 42 இலட்சம் ரூபாயும், தனியார் சேர்ந்து 4 கோடியே 60 இலட்சம் ரூபாயும், மத்திய அரசாங்கத்தின் ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்டியூஷன் இவைகளெல்லாம் சேர்ந்து 7 கோடியே 98 இலட்சம் ரூபாயும் போடப்பட்டிருக்கிறது. நிர்வாகம் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய அரசு வாரியத்தின் சார்பில் 4 பேரும், தனியார் பங்குகளுக்காக 4 பேரும், புரொஃபஷனல் மேனேஜ்மெண்ட் குரூப் என்று 3 பேரும், மத்திய அரசாங்கத்தினுடைய ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் மூலம் 5 பேரும் இதிலே போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வருகிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் சார்பில் 5 பேரும், மாநில அரசாங்கத்தின் சார்பில் 4 பேரும் இருக்கிறார்கள். பொதுத்துறை தனியாருக்காக பல முறைகளில் 7 பேர் வரையில் கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் அந்த போர்ட் ஆஃப் டைரக்டர்ஸின் சேர்மனாக யாராவது இருக்க வேண்டுமென்று நிர்ணயம் உண்டா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** போர்ட் என்று போட்டால் சேர்மன் போட வேண்டும். இப்பொழுது திரு. சிதம்பரம் அவர்கள் அதனுடைய தலைவராகப் பணியாற்றுகிறார்கள்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that a sum of Rs. 4 crores is being given by this management. May I know whether this Government is aware that all this amount is not given by management alone but by other agencies of Government like so many other Financial Corporations. Is the entire money given by this private management or other amounts given by some other financial corporations also which are financial institutions ? I want to know the exact position. May I know all the details?



**மாண்புமிகு திரு செ. மாதவன்:** ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் பொறுத்தவரை மத்திய அரசு, மாநில அரசு பற்றித் தனியாகப் புள்ளிவிவரம் சொன்னேன். 7 கோடி 98 லட்சம். 4 கோடி 60 லட்சம் பொறுத்தவரை குறிப்பிட்ட பிரச்சினை இதுதான். Group comprising Chairman, Vice Chairman, other private Directors of the company, professional management associates, relations, friends, companies and farmers.
இவர்களும் சேர்ந்துதான் 4 கோடி 60 லட்சம். கேள்வியினுடைய சந்தேகம் மாநில அரசு மத்திய அரசு நடத்துகின்ற ஃபைனான்ஷியல் இன்ஸ்ட்யூஷன் மூலமாக இவர்கள் பணம் போட்டு தங்களுடைய பங்காக வைத்திருப்பதா என்பது. தவறான ஊகம் அது. மூன்றாவது ஐட்டமாகச் சொன்னார்கள்-- funds by way of fixed capital or underwriting by financial institutions and brokers, as organised by financial institutions, banks.
இது 7 கோடி 98 லட்சம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான்கு கோடி மூலதனம் போட்ட தனியார் துறையைச் சேர்ந்த சிதம்பரம் ஏன் சேர்மனாக இருக்க வேண்டும்? அரசாங்கம் அதிகப் பணம் போட்டிருக்கும் போது அரசாங்கத்தின் சார்பில் ஏன் சேர்மனைப் போட முன்வரக்கூடாது? இப்போது இருக்கும் சேர்மன் ஆண்டுக்கு ஒருமுறை மாற்றப்படுவாரா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** போர்டு ஆப் டைரக்டர்ஸ் கூடித்தான் தலைவரைப் பற்றி முடிவு எடுப்பார்கள். தனியார் ஒருவர் தங்களுடைய ஆற்றலாலே ஒரு தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். அவர்கள் 4 கோடி 60 லட்சம் போட்டாலும் அவர்கள் சார்பில் நான்கு இயக்குநர்கள்தான். நாம் அவர்களை விடக் குறைவாக, 4 கோடி 42 லட்சம் அளவுக்குப் போட்டிருந்தபோதிலும் நம்முடைய சார்பிலும் 4 டைரக்டர்கள் இருக்கிறார்கள். இதிலே மத்திய அரசாங்க இயக்குநர்களையும் சேர்த்துப் பார்க்கும்போது அரசாங்கத்தை மீறி எதுவும் நடந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது அரசின் கருத்தாகும்.

* 88 வினா.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அமைக்கப்பட இருக்கும் உர ஆலை அதன் அருகே அமைக்கப்பட இருக்கும் கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து இருக்க வேண்டுமென்று மத்திய அரசு நிபந்தனை விதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், நிபந்தனைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தூத்துக்குடியிலுள்ள இந்த உர உற்பத்திச் சாலை கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்ற கருத்திற்கு நம்முடைய மாநில அரசு எந்தவிதமான கருத்தைக் கொண்டிருக்கிறது ? அப்படி இல்லையென்றால் தனித்தனியாக அவற்றைச் செயல்படுத்த மாநில அரசாங்கத்தின் பங்கு என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது முழுக்க மத்திய அரசு நிபந்தனையோடு கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டதாகும். நாம் இதிலே முயற்சி எடுத்து இந்த உரத் தொழிற்சாலையோடு கனநீர் ஆலையும் வரவேண்டுமென்று வற்புறுத்தினோம். அப்போது காலஞ்சென்ற டாக்டர் சாராபாய் அவர்கள் பெருமுயற்சி எடுத்ததன் விளைவாக தூத்துக்குடி உரத் தொழிற்சாலையோடு இணைந்த வகையில் கனநீர் ஆலையையும் உருவாக்குவது வெற்றி பெற்றது.

### திருப்பூர் துணைச் சிறைச்சாலை

*** 89 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் துணைச் சிறைச்சாலையில் சமையல் அறை மதிற்சுவர் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திருப்பூர் துணைச் சிறைச் சாலையில் ரூபாய் 17,000/– செலவில் புதிய சமையல் அறையும், உணவுக்கூடமும், குளியல் அறைகளும் கட்டுவதற்கான உத்தரவு இவ்வாண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு மதிற்சுவர் கட்டும் வேலை தற்போது ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

### குட்டைகள் அமைப்பு

*** 90 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் S.F. No. 346, காசிபாளையம் கிராமம் வாரணசிபாளையத்தில் குட்டை அமைக்கும் வேலை தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ச. எண். 346, காசிபாளையம் கிராமம் வாரணசிபாளையத்தில் ரூபாய் 1,67,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் வருவாய்த்துறை (உணவு உற்பத்தி) வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆனால் இது ஒரு சிக்கனமற்ற திட்டமாகும்.



*** 91 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S.F. No. 98, மண்ணரை கிராமம் கஞ்சம்பாளையத்தில் குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை

### குளித்தலை வட்டத்திலுள்ள சிவாயம் குளம்

*** 92 வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், சிவாயம் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இத்திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

### சென்னையில் பாதாள இருப்புப்பாதைகள்

*** 93 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்,**
**திரு. சு. துரைசாமி,**
**திரு. என். கிட்டப்பா**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பாதாள ரெயில்வே அமைத்திட மத்திய அரசைக் கோரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னாலும் சென்னையில் இருக்கிற நெரிசலைப் போக்குகின்ற வகையில் பாதாள இருப்புப் பாதையை அமைக்க நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் திட்டம் தற்போது ரயில்வே இலாகாவால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

The General Manager, Southern Railway has reported that an organisation headed by the Chief Administrative Officer was set up by the Ministry of Railways to undertake the techno-economic feasibility study of mass rapid transit system in Madras. This organisation has commenced its field work recently and it is in the process of investigation. He has also stated that after the field study has been completed it will be possible to have system selection, viz., whether mass rapid transit system should be underground, elevated or over-surface.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பக்கிங்ஹாம் கால்வாய் தூர்க்கப்பட்டு அங்கு டியூப் ரெயில்வே போடப்படும் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது உண்மையா? ஆதாரங்கள் உண்டா? நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மத்திய அரசாங்கத்தின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ரயில்வே இலாகா அண்டர் கிரவுண்ட் ரயில் பாதையை அமைக்க ஏற்கனவே சர்வே செய்து வருகிறது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நமக்குக் கிடைத்திருக்கிற தகவல் ரயில்வே இலாகா பரிசீலித்து வருகிறது என்பதுதான். பரிசீலனை முடிந்த பிறகுதான் அண்டர் கிரவுண்ட் ரயில்வேயா, சர்ஃபேஸ் ரயில்வேயா என்று முடிவு செய்யப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மத்திய அரசு ரயில்வே அமைச்சர் அவர்கள் அண்மையில் தமிழ்நாட்டுக்கு வந்தபோது திருநெல்வேலி—கன்னியாகுமரி ரயில் பாதையை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

### கூட்டுறவுச் சங்கங்களுக்கு பத்திரப்பதிவுக் கட்டணம்

*** 94 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களுக்கு பத்திரப்பதிவு செய்வதில் பதிவுக் கட்டணம் விலக்களிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ரூபாய் ஐயாயிரத்துக்கு மேற்படாத பத்திரங்களைப் பதிவு செய்வதில், கூட்டுறவுக் கழகங்களுக்குப் பதிவுக் கட்டணத்தில் பாதி என்ற அளவுக்குச் சலுகை காட்டப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையோராக உள்ள கூட்டுறவுக் கழகங்களுக்கு பதிவுக் கட்டணத்தில் முழு அளவு சலுகை அளிக்கப்படுகிறது. கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களுக்கும் இந்தச் சலுகை உண்டு.

**திரு. கே. எ. வகாப் :** சில கட்டடக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம்மாதிரியான சலுகைகள் மறுக்கப்படுவது என்பது உண்மையா? உதாரணமாக, இராணிப்பேட்டையில் பாரி அலுவலர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் கட்டணச் சலுகை கோரியும் பெறமுடியவில்லை என்பது உண்மையா? அதற்கு கட்டணச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் சொன்னது ரிஜிஸ்ட்ரேஷன் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்டாம்ப் டியூட்டி பற்றிப் பேசுகிறாரோ என்னவோ தெரியவில்லை.





### கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு வைத்திய வசதிகள்

*** 95 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு E.S.I. போன்ற வைத்திய வசதிகள் செய்து தர அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனார்:** இல்லை.

### நீடாமங்கலம் கூட்டுறவு விவசாய வங்கி

*** 96 வினா.—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீடாமங்கலம் கூட்டுறவு விவசாய வங்கியில் கையாடல் காரணமாக 10—9—1971-ந் தேதி அன்று எழுத்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ & இ) ஒரு எழுத்தர் தற்கொலை செய்து கொண்டது உண்மை. கையாடல் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

**திரு. ந. சோமசுந்தரம் :** இந்த எழுத்தர் தற்கொலை செய்து கொண்டதன் மூலம் அந்த வங்கிக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இதனால் வங்கி உறுப்பினர்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை உத்தேசமாகவாவது அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விசாரணை நடந்து வருகிறது என்று சொன்னேன். இந்தக் கூட்டுறவுக் கழகத்திற்கு நண்பர் சோமசுந்தரம் அவர்கள் துணைத் தலைவர் என்று கருதுகிறேன். அவர்களுக்கு உத்தேசமாக எவ்வளவு என்பது மிக நன்றாகத் தெரியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவருக்குத் தெரிந்திருந்தாலும் சட்டமன்றத்திற்குத் தெரிய வேண்டுமென்ற வகையிலே அந்தத் தகவலைக் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எவ்வளவு என்ற தகவல் விசாரணைக்குப் பிறகுதான் தெரியமுடியும்.

**திரு. ந. சோமசுந்தரம் :** அந்த வங்கிக்கு ஒரு காங்கிரஸ்காரர் தலைவர் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அந்த வங்கிக்கு ஒரு தலைவர் உண்டு. அவர் காங்கிரஸ்காரரா என்பது தெரியாது.

[1972 சனவரி 28

### கிராமங்களில் மண்பாண்டத் தொழில்

* 97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மண்பாண்டத் தொழிலை எல்லா கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

* 98 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு கதர்—கிராமத் தொழில் வாரியம் மூலமாக தொழிற் கருவிகள் வழங்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, புது வகை சக்கரங்கள், அச்சுகள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

### *Price of mud pots in Salem district*

* 99 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the price of the mud pots has gone up in Salem district during August 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கதர்-கிராமத் தொழில் வாரியத்தால் செய்யப்படும் மண்பாண்டங்களுடைய விலையில் விலை ஏற்றம் எதுவும் இல்லை.

### மெரினாவில் புதிய கலங்கரை விளக்கு

* 100 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெரினா கடற்கரையில் புதிய கலங்கரை விளக்கு கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், எவ்வளவு தொகையில் கட்டப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே.

(அ) ஆம்.

(இ) ரூ. 13,23,000.



1972 சனவரி 28]

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்தக் கலங்கரை விளக்கம் எந்த இடத்தில் கட்டப்படவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மெரினா கடற்கரையில் கட்டப்படுவதாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மெரினா கடற்கரை என்றால், பல மைல் நீளம் இருக்கிறது. எங்கே கட்டப்படும் என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா? அதன் காரணமாக, இப்போது ஹைகோர்ட்டில் இருக்கும் கலங்கரை விளக்கத்தின் கதி என்ன ஆகும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அது ஹைகோர்ட்டுக்குப் பக்கத்தில் அல்ல. அதற்குத் தெற்குப் பக்கமாக உள்ள இடத்தில்—ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டுவதாக இருக்கிறது. அதை 50 அடி வடக்கே தள்ளிக் கட்டுவதா, அல்லது தெற்கே தள்ளிக் கட்டுவதா என்பதைப் பற்றி இன்னும் முடிவாகவில்லை.

### நவீன அரிசி ஆலைகள்

* 101 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது நவீன அரிசி ஆலைகள் எங்கெங்கு உள்ளன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த நவீன அரிசி ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர், தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை ஆகிய ஆறு இடங்களிலும், செங்கல்பட்டு, செய்யாறு, கள்ளக்குறிச்சி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் பொள்ளாச்சி ஆகிய ? இடங்களிலும் இருந்து வருகின்றன.

**திரு. பி. எஸ், மணியன் :** தலைவரவர்களே, இதில் நஷ்டத்தில் ஓடுகிற நவீன ஆலைகள் எவை? அந்த நஷ்டங்களைப் போக்குவதற்கு அரசு எடுக்க இருக்கிற முயற்சிகள் யாவை என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனார் :** எல்லா நவீன அரிசி ஆலைகளுமே நஷ்டத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகள் இப்போது தனித்தனியாக கூட்டுறவு கழகங்களின் மூலம் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைத்து நஷ்டமின்றி நடத்த, இவற்றையெல்லாம் உணவுத் துறையிடத்தில் ஒப்படைப்பதற்கான ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத்தலைவரவர்களே. இந்த அரிசி ஆலைகளில் நாளொன்றுக்கு எவ்வளவு மூட்டை அரிசி அரவை செய்யப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இவைகளில் இரண்டு ஒரு மணிக்கு நான்கு டன்கள் நெல்லை அரிசியாக்குகின்றன. மற்றவை ஒரு மணிக்கு இரண்டு டன்கள் நெல்லை அரிசியாக்குகின்றன.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், அல்லித்துறை கிராமத்தில் கட்டப்பட்டு இருக்கிற நவீன அரிசி ஆலை பல ஆண்டுகாலமாக இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அது சில சமயம் இயங்காமல் இருந்தது உண்டு. சில சமயம் இயங்கியது உண்டு. பெருவாரியாக நஷ்டத்தில் இயங்கி வருவதாகச் சொல்லலாமே ஒழிய இயங்காமல் இருந்தது இல்லை. இந்த நஷ்டத்தைப் போக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துதான் அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டியதொரு நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவரவர்களே, நெல்லையில் அமைந்துள்ள நவீன அரிசி ஆலை எப்போது அதனுடைய உற்பத்தியைத் தொடங்கும்? இவ்வளவுநாள் காலதாமதமாவதற்குக் காரணம் என்ன என்பதை கனம் அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அது இயங்கிக்கொண்டுதான் இருந்தது. இப்போது ஓடவில்லை. இதையும் விரைவிலேயே அரசு ஓடவிடும்.

**திரு. எம். முத்தையா:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அடிக்கடி அரிசியிலிருந்து வருகிற தவிட்டிலிருந்து உணவு உற்பத்தி செய்யப் போகிறோம் என்று கூறுவார்களே, அது எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவிட்டிலிருந்து உணவா, எண்ணெயா?

**திரு. மு. முத்தையா:** எண்ணெய்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, இந்த வினா அரிசி ஆலைகளைப்பற்றியது. நெல்லிருந்து அரிசி எடுக்கும்போது தவிடு வருவது உண்டு. அந்தத் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுப்பது தனி ஆலை. தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கிற ஆலை நல்ல லாபத்தில் ஓடுகிறது. ஆனால், இப்போது இந்த வினா அரிசி ஆலையைப்பற்றியது. அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயக்கி வருகின்றன. இவற்றை ஒருங்கிணைத்து இயங்கச் செய்ய வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது என்றுதான் சொன்னேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த நவீன அரிசி ஆலைகள் சமீப காலத்தில் தோன்றியவைதான். இப்படித் தோன்றிய எல்லா ஆலைகளுமே நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ஆலை தொடங்குகிறபோதும் அதை





மதிப்பிடுவதில் உள்ள கோளாறுதான் இப்படி நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது மதிப்பிடுவதில் இப்படிப்பட்ட கோளாறுகள் வராமல் செய்ய அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** முன்னால் மதிப்பீடு செய்யும்போது, 100 டன் நெல்லை அரைத்தால், இந்த நவீன ஆலை மூலம் 70 டன் அரிசி வரும், சாதாரண ஆலை மூலம் அரிசி அரைத்தால் 65 டன் வரும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறையில் அந்த அளவுக்கு வேற்றுமை இல்லை. ஆகவே, அவைகள் லாபத்தில் ஓடவில்லை. தரமான அரிசியை மக்களுக்குத் தரவேண்டுமென்பதற்காக இவைகளை அரசு ஏற்று நடத்த செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலைகள் நஷ்டத்தில் ஓடுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். நாம் மாவட்டங்கள் தோறும் அரிசி ஆலைகள் வைத்து இருக்கிறோம். அதனுடைய நோக்கங்கள் நிறைவேறுகிறதா? குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலையின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அரிசி ஆலைகளை ஓட்டும்போது அதில் லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொள்வதில்லை. தரமான அரிசியை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் ஒரு சீரமைப்புத் திட்டத்தை அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, அரசாங்கம் எடுத்து நடத்துகிற அரிசி ஆலைகளில், மற்ற தொழில்களில் நஷ்டம் நஷ்டம் என்று சொன்னால், அது தேசவுடைமையாக்குகிற கொள்கைக்கு ஒரு சவாலாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் முதலிலேயே சொன்னேன், அரசாங்கம் நடத்தவில்லை. அதைத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள்தான் நடத்தி வருகின்றன. அவற்றைச் சீரமைப்பதற்காகத்தான் ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது என்று சொன்னேன். அதை அரசாங்கம் நடத்தவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்த நவீன ஆலைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன என்று கூறினார்கள். நஷ்டம் வருவதற்கான காரணங்கள் ஆராயப்பட்டிருக்கின்றனவா? அந்தக் குறைகள் எதிர்காலத்தில் வராமல் இருப்பதற்காக என்னென்ன முயற்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன? இந்த ஆலைகளில் உற்பத்தியாகும் தரமான அரிசியை யாருக்கு வினியோகம் செய்யப்படுகிறது என்பதை அறியலாமா? இப்போது நியாயவிலைக்கடையில் வினியோகிக்கப்படும் அரிசியும் அங்கேதான் உற்பத்தியாகிறதா?

அது தரமான அரிசிதானா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. இந்தப் பிரச்னையை அரசாங்கம் சரியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கேள்விக்குறிக்கு பதிலாகத்தான் இந்த அரிசி ஆலைகளை அரசே எடுத்துக்கொள்ள ஆய்வு செய்து வருகிறது என்று சொன்னேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** நெல்லையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலை சில நாட்கள் செயல்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது எந்த ஆண்டு செயல்பட்டது? ஆரம்பித்த காலத்திலிருந்து மொத்தம் எத்தனை டன் அரிசி அரைக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எத்தனை டன் அரிசி அரைக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ளவேண்டுமானால் தனிக்கேள்வி போடுவதாக இருந்தால் பதில் சொல்ல முடியும். அரிசி ஆலை ஓடவே இல்லை என்று சொன்னது தவறு. அரிசி ஆலை ஓடியதை நானே பார்த்து இருக்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, அல்லித்துறையில் கட்டப்பட்டு இருக்கும் நவீன ஆலை சில நேரங்களில் ஓடியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அது ஒரு நாள் கூட ஓடவே இல்லை. அங்கே இருக்கும் பணியாளர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வாச்மேன் இருக்கிறார், டெம்பரரியாக அல்ல, பர்மனென்ட்டாக வைத்து இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசு அதை ஏற்று நடத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதுபோன்று இருக்கிற நவீன அரிசி ஆலைகளில் அரசாங்கமும் முதல் போட்டு இருக்கிற காரணத்தால், அந்த ஆலைகளை இயங்கவைக்க வேண்டுமென்ற முடிவு எடுத்து, அந்த ஆலைகளை உணவுத்துறையில் எடுத்துக் கொண்டு இயங்கச் செய்வது என்பதற்கான ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. இந்த ஆலைகளில் அரசாங்கம் ப்ரோகியூர் செய்து வைத்து இருக்கும் நெல்லை அரைத்து, அதை மக்களுக்கு அளிக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலித்து வருகிறது. இனிமேல் ஓடாமல் இருக்கும் எல்லா அரிசி ஆலைகளையும் ஓடச்செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Storage plants for potatoes*

* 102 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up potato storage plants in this State; and

(b) if so, the details thereof?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1,000 டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர் பதன சாதனங்களை ஊட்டியிலுள்ள விஜய நகரம் பண்ணையில் ஒன்றும் மற்றொன்று சென்னையிலும் நிறுவுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, potatoes are grown in large quantities in the Hosur taluk, next to the Nilgiris. The quality and taste of the potato is very fine and some good potato cultivators there have won prizes. As it is a delicate crop a cold storage plant is absolutely necessary. May I know whether a cold storage plant will be sanctioned for Hosur taluk?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, ஊட்டியில் கட்டவிருக்கும் அந்த வேலை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சமீபத்திலே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; விரைவில் வேலை துவங்கும், முடிக்கப்படும்.

*Ennore Thermal Power Station*

* 103 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether a large quantity of control, production metering and H. V. Bus duct equipments have been purchased for the Ennore Thermal Power Station during 1970-71-72; and

(b) the cost at which they were purchased?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, 1970, 71, 72-ம் ஆண்டுகளில் மீட்டர் வழங்கவில்லை என்றால், எப்படி அவை இயங்குகின்றன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்பொழுது வரவழைக்கப்படவில்லை. புதிதாக வழங்க ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது.

*Death of electricity worker at Cumbum*

* 104 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether an electricity worker died on 24th July 1971 at Cumbum in Madurai District while on duty due to electric shock;

(b) if so, the amount of compensation paid to his family: and

(c) the steps taken to prevent recurrence of such accidents?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) 1971 ஜூலை 18-ம் தேதி அன்று உத்தமபாளயம் வட்டம் மண்ணைபுரத்தில் ஒரு மின் உதவியாளர் மின்சாரம் தாக்கி இறந்தார்.

(இ) இழப்பீடு ரூ. 7,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(உ) விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு விதிமுறைகள் ஏற்கனவே உள்ளன. இந்த உதவியாளர் இவற்றை சரிவர அனுசரிக்காததனால்தான் இவ்விபத்து ஏற்பட்டது.

*New posts in Tamil Nadu Electricity Board*

* 105 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of posts sanctioned in 1970–71 for attending to the employees provident fund work in Accounts Wing of the Tamil Nadu Electricity Board;

(b) whether all the posts have been filled up; and

(c) if not, the reasons thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குப்பிரிவில் தொழிலாளர் வருங்கால வைப்புநிதிப்பணியைக் கவனிப்பதற்காகப் பதவிகள் எதற்கும் 1970-71-ல் ஒப்பளிப்பு வழங்கப்படவில்லை. இருந்தபோதிலும், மேற்சொன்ன, பணியைக் கவனிப்பதற்காகக் கீழ்க்கண்ட பணியாளர்களை நியமிக்க மின் வாரியம் 1969 செப்டம்பரில் ஒப்பளிப்பு வழங்கியிருந்தது :

| | |
|---|---|
| உதவி கணக்கதிகாரி | 1 |
| கண்காணிப்பாளர்கள் | 3 |
| உதவியாளர்கள் | 28 |
| இளநிலை உதவியாளர்கள் | 4 |
| தட்டச்சர் | 1 |
| சிற்றெழுத்தர் | 1 |
| கடைநிலை ஊழியர் | 2 |

(இ) ஆம்.

(உ) இவ்வினா எழவில்லை.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the employees belonging to the Accounts Wing have made representations to the Government and if so, the details of the representations and the action taken by the Government on those representations?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை.



**மின் துறையில் அங்கீகாரம் பெறாத சங்கம்**

* 106 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்குள் அங்கீகாரம் பெறாத சங்கம் விழா ஏதேனும் சமீபத்தில் நடத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**மதுரையிலுள்ள வாடகைக் கார்கள்**

* 107 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரையில் இதுவரை டாக்சி, ஆட்டோரிக்ஷாக்களுக்கு கட்டணத்தைக் காட்டும் மீட்டர் பொருத்தப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரையில் டாக்சிகளும், ஆட்டோரிக்ஷாக்களும் மீட்டர் இல்லாமல் ஓடுகின்றன. அதனால் பேரம் பேசும்போது தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, அதை தவிர்க்க, மதுரையின் எல்லைக்குள்ளாவது மீட்டர் பொருத்த வேண்டும் என்று அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதுரை எல்லைக்குள் 59 டாக்சிகளுக்கும், 11 ஆட்டோரிக்ஷாக்களுக்கும் மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. மதுரையின் சுற்றுப்புறத்தில் ஓடும் வண்டிகளுக்குத்தான் மீட்டர் பொருத்தப்படவில்லை. மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரு நகரங்களில் ஓடும் வண்டிகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**சென்னையில் கார்களின் வேகம்**

* 108. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை மாநகரில் கார்களின் வேகத்தை சாலைகளிலிருந்து கண்டு பிடிக்க புதிய கருவிகள் பயன்படுத்த அரசு ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கார்களின் வேகத்தை தெரிவிக்கும் ரேடார் கருவி 1971 ஆகஸ்டு மாதம் முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தவிர வேறு புதிய கருவிகள் பயன்படுத்த குறிப்புகள் எதுவும் இல்லை.

### தனியார் பேருந்துகளில் திருக்குறள்

*** 109 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பேருந்துகளிலும் திருக்குறள் எழுதி வைக்கும் ஆணை பிறப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளை ஒவ்வொன்றாக எழுதி வைக்கப் பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசுப் பேருந்துகளில் வெறுங் குறள்கள் மட்டும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றின் பொருளையும் எழுத அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழ் படித்தவர்களுக்கு பொருள் தெரியும்.

### மன்னார்குடி—ஆலங்குடி நகரப்பேருந்து.

*** 110 வினா.—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலம் வழியாக ஆலங்குடிக்கு டவுன் பஸ் விடுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய நலனை உத்தேசித்து, இந்தத் திட்டத்தை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலத்திற்கு 94 ட்ரிப்பும், நீடாமங்கலத்திலிருந்து ஆலங்குடிக்கு 66 ட்ரிப்புக்களும் ஓடுவதால் வேறு தேவையில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, there was a question relating to the running of lorry service after mid-night, to be answered by the Hon. Minister for Transport on the 25th instant and it was postponed. I want to know when it is going to be taken up?





**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** பட்டியலில் போட்டிருந்தால் தான் இன்றைக்கு வரும். பட்டியலில் இல்லாததால், இன்றைக்கு அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஒத்திவைக்கும் கேள்விகள், நிகழ்ச்சி நிரல் தயார் செய்யும்போது, சேர்த்திருந்தால்தான் அது அவைக்கு வரும். ஆனால் கண்டிப்பாக பதில் வரும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்வி.

### அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் மீது விவாதம் நடத்துவது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. During the meeting of the Business Advisory Committee, the hon. Member, Thiru Thangamani, wanted that the reports submitted to the Government should be discussed. The Hon. Speaker and the Hon. Chief Minister assured us that most of those reports can be discussed during the discussion on the Governor's Address. But the report relating to the incidents at the Annamalai University has not been placed . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஐ ஆம் சாரி. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசவேண்டியதை இப்பொழுது ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு பேசுவது சரியில்லை. உறுப்பினரை இடத்தில் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களை பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அல்லது அவையின் முன்னவர் அல்லது முதல் அமைச்சரிடம் சொல்லவேண்டும். அனுபவம் வாய்ந்த உறுப்பினர் இப்படி வரம்பு முறைகளைத் தெரிந்தவர்கள் எப்படி வேண்டுமானாலும் அவையின் இடத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்ல வருவது, பேரவையின் கவுரவத்திற்கும், தனி உறுப்பினருடைய கவுரவத்திற்கும் குறைவானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I am not referring to the Business Advisory Committee . . .

MR. SPEAKER : The hon. Member may resume his seat.

DR. H. V. HANDE : Sir, how can we discuss the report when it is not placed on the table of the House?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இப்படிச் சொல்வதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்த மாதிரி செய்தால், மன்றத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்கிறார்கள் என்ற முறையில், வருந்தத்தக்க முறையில் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்.

மன்றத்தின் விதிமுறைகளை, உரிமைகளைக் காப்பாற்றுவதில் கவலை இருக்கிறது எனக்கு. அதற்கான முறைகளும் இருக்கின்றன. மேலும் உறுப்பினர் இப்படிப் பேச விரும்பினால், மன்றத்தின் நடவடிக்கைகளை "அப்ஸ்ரக்ட்" பண்ணுகிறார்கள் என்று வேறு முறையில், எடுக்கக் கூடாத, விரும்பாத நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிவரும்.

### 3. ஒற்றி வைப்புத் தீர்மானங்கள்

#### (அ) ஆவடி டாங்க் தொழிற்சாலை தொழிலாளர் மீது காவல் துறையினர் தடியடி செய்ததாக கூறப்படுவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்த நிகழ்ச்சி, ஒற்றி வைப்புத் தீர்மானம். உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள், 42வது விதியின் கீழ் பேரவையின் மற்ற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டும் என்று கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

'மத்திய அரசு நிர்வாகத்தில் உள்ள ஆவடி டாங்க் பாக்டரியில் அமைதியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை எஸ். ஏ. பி. போலீசார் 27-1-72 அன்று தடியால் அடித்து படுகாயப்படுத்தி பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதால், பொது மக்களிடையே பதட்டமான நிலை உருவாகியிருப்பதால் பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோருகிறேன்'.

அதே மாதிரி, திரு. ஜேம்ஸ் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதோடு, என்னுடைய பெருமதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களும் ஒற்றிவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தார்கள். அதற்கும் ஒரு முறையிருக்கிறது. சபாநாயகர் வருவதற்கு முன்னால், பேரவைத் தலைவர் அறையிலே கொடுக்க வேண்டும். இப்பொழுது மன்றத்தில் ஐந்து நிமிஷத்திற்கு முன்பாகத்தான் அவர்கள் கொடுத்தார்கள். இருந்தாலும், மன்றத்திலே தாராளமாக நடந்து கொள்கிறோம். அவர்கள் கொடுத்த தீர்மானத்தையும் இதோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அனுமதித்திருக்கிறேன். திரு. சுப்பையா அவர்களுடைய தீர்மானத்தில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொள்கிறேன். முதலிலே திரு. சுப்பையா அவர்கள் இது எப்படி அவசரமானது என்பதை விளக்க வேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவரவர்களே, ஆவடி டாங்கி பாக்டரியில் 4,500 பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களை நிர்வாகம் திடீரென்று வேலை நீக்கம் செய்வது, சஸ்பென்ட் செய்வது சார்ஜ் ஷீட் கொடுப்பது சம்பளப் பிடித்தம் செய்வது, அபராதம் விதிப்பது, மிரட்டுவது போன்ற சட்டத்திற்கு விரோதமான செய்கைகள் செய்வது காரணமாக, தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை



வலியுறுத்தி இந்த 4,500 தொழிலாளர்களும், பல்வேறு தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும், ஒன்றாகச் சேர்ந்து அமைதியாக வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு நிர்வாகம் தயாராக இல்லாமல் போலீசார், எஸ்.ஏ.பி. போலீசைக் கொண்டு நேற்றைய தினம் கடுமையாக அடித்துப் படுகாயப்படுத்தி இன்றையதினம் பல்வேறு ஆஸ்பத்திரியில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு இன்றைக்கு ராணுவச் சட்டம் அமுலில் இருப்பது போல ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் பீதியுற்றிருக்கிறார்கள். அதன் காரணமாக அரசு இன்றைக்கு இதில் தலையிட வேண்டிய ஒரு அவசர அவசியம் ஏற்பட்டிருப்பது காரணமாகவும் போலீசாரது நடவடிக்கை குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன். இதற்காக சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைப்பது மிக மிக நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, 24-1-72 அன்று மாண்புமிகு அங்கத்தினர் சுப்பையா அவர்கள், நியாயமான கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது தேவையற்ற முறையில் போலீசார் அத்து மீறி நடந்து கொண்டதன் காரணமாகப் பல்வேறு தொழிலாளர்கள் தாக்குதலுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது போன்ற நிகழ்ச்சி இருப்பது இங்கு மாத்திரமல்ல, இந்த நிலை இந்த மாநிலத்தில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் இது மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை. இந்தப் பிரச்னை விவாதித்து இதற்கு ஒரு முடிவு காண்பதற்காக இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I have given notice of an adjournment motion to the effect that the business of the House be adjourned to discuss a serious matter of urgent public importance, viz., the serious situation arising out of the strike by the workers of the Avadi Tank Factory and subsequent clash between the Police and workers.

This has created a feeling of uncertainty among the workers and residents of that area. Sir, the workers of Avadi tank factory numbering 5,000 are on strike since 24th of this month consequent on the suspension of six workers in an illegal way. Yesterday the workers assembled near the factory. They never indulged in violence or caused any disturbance to the factory. But even without any prior notice, without any warning, even without the use of tear-gas, the police suddenly indulged in lathi charge. Several workers have been injured in the fighting and one Mr. Durgachalam has been taken to hospital in a serious condition. Another worker, Mr. Srinivasan has been severely beaten and his condition is also causing anxiety.

[Dr. H. V. Hande] [1972 சனவரி 28

Apart from going into the merits of the case, this is a matter which merits serious discussion by this House. That is why I say this House may be adjourned to discuss this question so that we may know exactly what are the problems and discuss the solutions which the trade-union leaders may offer. There is also another reason for which I want this House to be adjourned. We can discuss the reason for the use of extra force by the Police. Without any warning, without use of tear gas, they had resorted to lathi charge. For these two reasons, I want this House to be adjourned.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அளித்து போலீசார் எடுத்த நடவடிக்கையினைக் கண்டிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் கொஞ்சம் தாமதித்தாலும் ஏன் முதலிலேயே போலீசார் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனமாக இருந்தார்கள் என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் வருவதும், நடவடிக்கை எடுத்தால் ஏன் போலீசார் நடவடிக்கை எடுத்தார்கள் என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் தருவதும், இன்று உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாக இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆவடி டாங்கி தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் அதன் முன்னாள் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த செயலாளர் பார்த்தசாரதி என்பாருக்கும், அதிலே பணி செய்கின்ற கங்காதரன், தாமோதரன் என்பவர்களுக்கும் 23-1-72 அன்று ஒரு தகராறு ஏற்பட்டது. அதன் காரணமாக பார்த்தசாரதி போர்மன் கங்காதரனைத் தாக்கினார். இதன் காரணமாக பார்த்தசாரதி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார். தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். இதனைத் தொடர்ந்து 24-ம் தேதியன்று பாலசுந்தரம், நடராசன், சம்பந்தமூர்த்தி, நந்த கோபால் ஆகிய நான்கு பேர்களும் இந்த வேலைநீக்கத்திற்கு, தற்காலிக வேலை நீக்கத்திற்கு ஒரு எதிர் நடவடிக்கையாக வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று தொழிலாளர்களைத் தூண்டினர் என்பதற்காக தற்காலிகமாக அவர்களும், இந்த நான்கு பேரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஆவடி டாங்கித் தொழிற்சாலை என்பது மாநில அரசின் வசத்தில் இல்லையென்பதும், மத்திய அரசின் பொறுப்பில் உள்ள ஒரு தொற்சாலை என்பதும் அனைவருக்கும் தெரியும். நெருக்கடியான நேரத்தில் இது எவ்வளவு முக்கியமான ஒரு தொழிற்சாலை என்பதையும் அனைவரும் அறிவர். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசைத் தாக்கிப் பேச வேண்டும் என்பதற்காக நெருக்கடி நிலையைப் பற்றியோ அல்லது இந்தத் தொழிற்சாலை மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிறது என்பதைப் பற்றியோ, நாட்டு நலனைப் பற்றியோ அல்லது எதைப் பற்றியுமோ சிந்திப்பதற்கு நேரமில்லாமல் இருக்கலாம். இந்த வேலை நீக்கத்தை எதிர்த்து மெஷின் ஷாப் தொழிலாளர்கள் 200 பேர்



1972 சனவரி 28] [டாக்டர் மு. கருணாநிதி]

24-1-72 அன்று இரவு வேலை நிறுத்தம் செய்தது மட்டுமல்ல, அதே இடத்தைச் சேர்ந்த ஏறக்குறைய 500 பேர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தார்கள். இப்படி வேலைநிறுத்தம் செய்வது கூடாது என்று குடியரசுத் தலைவரும், பிரதம மந்திரி அவர்களும் வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள்.

நாட்டின் நெருக்கடி நிலையை உத்தேசித்து, நாட்டின் நலனில் அக்கறை உள்ளவர்கள் இப்படிப்பட்ட ஒரு போக்கை வைத்து வேலைநிறுத்தம் செய்வது விரும்பத்தக்கதுதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலும் இந்த ஆவடி டாங்கித் தொழிற்சாலை என்பது நாட்டுப் பாதுகாப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் இந்த வேலை நிறுத்தம் அந்தக் காரணங்களுக்காக அவசியம் தானா என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

இதைத் தொடர்ந்து அன்று மாலையில் ஒரு ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தினார்கள். இந்தத் தொழிற்சாலை பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற காரணத்தினால் தொழிற்சாலையைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட எல்லை வரையில் பாதுகாக்கப்பட்ட எல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இரண்டையும் மீறி தொழிற்சங்கத் தலைவர்கள் அங்கே ஒரு கூட்டத்தையும், ஒரு ஊர்வலத்தையும் நடத்தியிருக்கிறார்கள். இது பெரும்பாலும் இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால் செய்யப்பட்டது. ஏனென்றால் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இதிலே அநேகமாக இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

அன்று மாலை கங்காதரன் என்ற தொழிலாளி இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத காரணத்தினால் அவரை 5 பேர்கள் சென்று தாக்கினார்கள். வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத தொழிலாளியை 5 பேர் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு வேண்டுமென்றே தாக்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு தொழிலாளியைத் தாக்குவது எல்லாம் உள்ளபடியே தொழிற்சங்கத் தலைவர்களின் கவனத்திற்கு வருவதில்லை. வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் ஒரு தொழிலாளி நியாயமான காரணங்களுக்காக ஒதுங்கியிருந்தாலும் அவன் உடம்பிலே ஓடுவது நல்ல ரத்தம் அல்ல என்று கூறுவது தொழிற்சங்கத் தலைவர்களின் தீர்ப்பாக இன்றைக்கு இருக்கிறது.

இது சம்பந்தமாக ஆவடி டாங்கித் தொழிற்சாலை காவல் துறையினர் 24-ம்தேதி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி இருந்தும் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெனரல் மானேஜர் காவல்துறையினரைக் கேட்டுக்கொண்டு. இன்னும் அதிகமாக காவல்துறையினர் இருந்தால் தான் தொழிற்சாலைக்குப் பாதுகாப்பு இருக்கும். இல்லாவிட்டால் அதற்கு ஆபத்து ஏற்படும் நெருக்கடியான கட்டம் ஏற்படும் என்று சொன்னதற்குப் பிறகு தான் அங்கு காவல்துறையினர் அதிகமான அளவிற்குச் செல்ல நேரிட்டது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 சனவரி 28

25-1-72 அன்று காலை அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களில் 1,500 பேரில் 743 பேர் வேலைக்குச் சென்றார்கள். 91 தொழிலாளர்கள் கேஷுவல் லீவ் எடுத்தார்கள். 250 தொழிலாளர்கள் காலையில் 8½ மணியிலிருந்து 10½ மணி வரையில் தொழிற்சாலைக்குள் செல்லாமல், தொழிற்சாலைக்கு முன்னால் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அவர்கள் தங்கள் கோரிக்கைகள் நிர்வாகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடத்தப் படவேண்டும் என்று அந்தக் கூட்டத்திலே ஒரு தீர்மானம் போட்டார்கள். அவர்களுடைய தீர்மானம், அவர்களுடைய கோரிக்கை, தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். மற்றும் இரண்டொரு கோரிக்கைகளை வைத்தார்கள். 8-1/3 சதவிகித போனஸ் ஆண்டுதோறும் அளிக்கப்பட வேண்டும், சீனியாரிடி அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும், அடிப்படை ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளையும் வைத்தார்கள்.

ஜெனரல் மானேஜர் அவர்கள் நம்முடைய தொழிற்துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன், ஆனாலும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி இருப்பது என்பது தொழிற்சாலையின் கட்டுப்பாட்டை உத்தேசித்து ஒருவர் போர்மனை அடித்தால் அவர் மீது நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது, எனவே இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தொழில் அமைச்சர் மாதவன் அவர்களிடத்திலே விளக்கினார்கள்.

இதற்கிடையே 27-1-72 மாலை சுமார் 4½ மணிக்கு ஆவடி டாங்க் தொழிற்சாலை உள்ளேயிருந்து வேலை செய்துவிட்டு வந்த தொழிலாளர்கள் மீதும், வெளியே பாதையில் சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மீதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கற்களை வீசி அவர்களைக் காயப்படுத்தியிருக்கிறார்கள். பந்தோபஸ்திற்காக அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த காவல்துறையினர் கற்கள் வீசுவதை எவ்வளவோ தடுத்து நிறுத்த முயன்றும் கூட, கற்களை வீச வேண்டாம் என்று எவ்வளவோ கேட்டுக் கொண்டும்கூட, அந்தக் கோரிக்கை பிறையிற்று. காவல்துறையினர் மீதும் கற்கள் வீசப்பட்டன. இந்தக் கலவரத்தில் 16 தொழிலாளர்கள் காயமடைந்தார்கள். காவல்துறையினர், கற்கள் வீசுவதிலிருந்து தடுக்க எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 16 தொழிலாளர்கள் காயமடைந்தார்கள். ஒரு காவல்துறை ஆய்வாளர், 13 காவலர்கள் காயமடைந்திருக்கிறார்கள். இதன் பிறகு கற்கள் வீசுவதில் ஈடுபட்டிருந்தவர்கள் கலைத்து விடப்பட்டார்கள். இது சம்பந்தமாக ஆவடி டாங்க் காவல் நிலையத்தில் ஒரு கலவர வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சீனிவாசன்



1972 சனவரி 28] [டாக்டர் மு. கருணாநிதி]

என்ற உதவித் தலைவரும், 15 தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை மத்திய அரசுக்குச் சொந்தமானது.

இந்தத் தொழிற்சாலையின் பிரச்னைகளை மத்திய அரசின் தொழிலாளர் துறை கவனிக்க வேண்டும். சட்டம், ஒழுங்கு இவைகளைப் பொறுத்த மட்டில் மாநில அரசு கவனிக்கக் கடமைப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலேதான் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டிட காவல்துறையினர் எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கை நியாயமானது, பொருந்தமானது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம்தான் நாட்டில் முளைக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகின்ற அராஜாகத்தை ஒழித்திட முடியும் என்று அரசு எண்ணுகின்ற காரணத்தால், இந்த நடவடிக்கை எடுத்தது சரி என்று எடுத்துச் சொல்லி, இதற்கு மேலும் இது விவாதத்திற்குரிய பிரச்னையல்ல; ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் நான் பேசத் தயங்கியதற்குக் காரணம், அந்தத் தொழிற்சாலையின் எம்பிளாயீஸ் யூனியனின் தலைவராக நான் இருக்கின்றேன். அந்தத் தொழிற்சாலையில் ஜெனரல் மானேஜராக இருப்பவர், தொழிற்சாலை முறையாக இயங்கக்கூடாது என்று திட்டமிட்டு ஒரு சதி செய்யக்கூடிய அளவுக்கு முயற்சித்துக் கொண்டு வருகிறார். அந்த ஆவடி தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளிகள், யுத்த நெருக்கடி காலத்தில் காலை 8 மணி முதல் இரவு 3 மணி வரையில் 12 மணி நேரம் உழைத்தும் ஓவர்டைம் சம்பளம் வாங்காமல் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவர்களில் முக்கியமாக இருக்கக்கூடிய சில தொழிலாளிகளை ஏதாவது தொந்திரவுக்கு உள்ளாக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் தீவிரமாக விசாரித்தால் உண்மை என்ன என்று புரியும். அங்கே நான்கு தொழிற் சங்கங்கள் இருந்தாலும், எல்லாச் சங்கங்களும் ஒன்று சேர்ந்துதான் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஜெனரல் மானேஜரைப் பொறுத்த வரையில், மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சுக்லா அவர்கள் தெரிவித்ததற்குப் பிற்பாடும்கூட, அந்தத் தொழிற்சாலையின் கேட்டில் கூட்டம் நடத்தலாம் என்று சொல்லிய பிற்பாடும்கூட, எந்த விதமான கூட்டமும் அங்கே போடக்கூடாது என்று வரையறுத்து, அம்மாதிரி கூட்டம் போட்டால் அவர்கள் பேரில் நடவடிக்கை என்ற முறையை வைத்திருக்கின்றார்கள். நான்கூட அங்கே கூட்டம் போட்டுப் பேசியிருக்கின்றேன். எனக்குக் கூட மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து சம்மன் வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே. புரொகிபிடெட் ஏரியாவில் (Prohibited Area) கூட்டம் நடத்தலாம் என்று மத்திய அமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கிறாரா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, புரொகிபிடெட் ஏரியா என்று அல்ல, அங்கே தொழிற்சாலை கேட்டைப் பொறுத்த வரையில், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிற் சங்கத் தலைவர்கள் பேசலாம், கேட் கூட்டங்கள் போட வேண்டியது அவசியம்தான் என்பதை மாண்புமிகு மத்திய அமைச்சர் சுக்லா அவர்களே நேரில் என்னிடத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரும் அரசியல் தலைவர்களைக் கொண்டு வந்து அரசியல் கூட்டம் போடுவதை அல்ல அவர் விரும்பியது. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட, தொழிற்சங்க விஷயங்களைப் பேச அனுமதிக்கலாம் என்று மத்திய கமிட்டி உறுப்பினர்கள் சென்றிருந்தபோது சொல்லியிருக்கிறார் ஆனால் ஜெனரல் மானேஜர்-மேஜர் ஜெனரல் கிரி எந்த வித அனுமதியும் கொடுக்கத் தயாராக இல்லை. அங்கே பலவிதமான மோசமான ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது ஊன்றிப் பார்த்தால் தெரியும்.

கேந்திரமான தொழிற்சாலையாக இருக்கின்ற அந்தத் தொழிற் சாலையில் உற்பத்தித் துறையில் இடைஞ்சல் செய்கிறார் ஜெனரல் மானேஜர் அவர்கள். தொழிலாளிகள் அராஜகம் விளைக்கின்ற தொழிலாளிகள் அல்ல. மத்தியில் இருக்கின்ற சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டிருப்பவர்கள் அவர்கள். அமைதியான முறையில் உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறை உள்ளவர்கள். ஆகவே, இந்த விஷயத்தில் தமிழக அரசு கொஞ்சம் பொறுப்பு எடுத்துக் கொண்டு, வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்னையை மட்டும் பார்க்காமல், இந்தக் கேந்திர தொழிற்சாலையில் உற்பத்திக்குத் தடை செய்து கொண்டிருக்கிறது அங்கேயிருக்கின்ற நிர்வாகம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இது ஒரு முதலாளிகள்-தொழிலாளிகள் பிரச்னையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி எடுத்துக்காட்டியது போல. அவர்களே அந்தத் தொழிலாளர்களின் சங்கத்திற்குத் தலைவராக இருக்கின்றார் என்பது எனக்குத் தெரியும். அவரே கூட்டம் போட்டுப் பேசியிருக்கிறார், அதுவும் எனக்குத் தெரியும். அவர். அந்தச் சங்கத்தின் துணைத் தலைவர், இவர்கள் எல்லாம் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல அதில் இருக்கின்ற சில தொழிலாளர்கள் இப்படிப்பட்ட காரியங்களில். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் அமைச்சர் ஒருவரே பாதுகாக்கப்பட்ட எல்லைக்குள்ளே கூட்டங்களை நடத்தலாம். தொழிலாளர்கள் கூட்டங்களை நடத்தலாம் என்று கூறியிருப்பது எனக்கு வியப்பாக இருக்கின்றது அவர் ஒரு வேளை அனுமதித்திருக்கலாம். ஆனால் ஒரு முக்கியமான இடத்தில், தொழிலாளர்கள் கூட்டங்களை, அதுவும் கிளர்ச்சி அடிப்படையில் கூட்டங்களை நடத்துவது என்பது அவ்வளவு சுமுகமான நிலைமையை உருவாக்குமா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். கூட்டங்களை நடத்துவதுகூட பெரிய பிரச்னை அல்ல,



ஒரு தொழிலாளி, போர்மென் (Foreman) , மற்றொரு தொழிலாளியால் தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கப்பட்ட பிறகு, தாக்கியவர் மீது, அந்த நிறுவனத்தின், தொழிற்சாலையின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தது, அதுவும் தற்காலிக வேலை நீக்கம் செய்தது, அது தவறு என்று சொல்லி, கிளர்ச்சியின் அடிப்படை அங்குதான் ஆரம்பமாகிறது. ஆகவே, அதைக் கவனித்து தொழிலாளர்களை மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி சமாதானப்படுத்தினால், மற்றப் பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விஷயத்தில் சுமுகமாகப் போவதைப்பற்றி மாநில அரசிற்குச் சங்கடம் கிடையாது. மத்திய அரசின் தொழிற்துறையோடு பேச வேண்டிய விவகாரம் அது. அதில் மாநில அரசு எவ்வளவு உதவி செய்யமுடியுமோ அதைச் செய்யக்காத்திருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

**(ஆ) ஆயுதமேந்திய சிலர் சிம்ப்ஸன் தொழிலாளர் வீடுகளில் புகுந்து பெண்களைத் தாக்கியதும், பொருட்சேதம் விளைவித்ததும் குறித்து.**

MR. SPEAKER : Thiru James has given notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules that the business of this House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely :—

"That on 25th January 1972 a group of workers and outsiders armed with deadly weapons entered into the houses of Simpson workers residing at Thiru Vi. Ka. Nagar and R. V. Nagar in North Madras, beat the women folk with cycle chain and molested them and damaged their properties and consequently panic and insecurity prevailing there."

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தில் 25-ம் தேதி என்றிருப்பதை 24-ம் தேதி என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அது டைப் மிஸ்டேக்.

தலைவரவர்களே. 24-ம் தேதியன்று சிம்ப்சன் தொழிலாளர்கள் சாதாரணமான அமைதியான நிலையில் ஒரு ஷிப்ட் தொழிலாளர்கள் தொழிற்சாலையில் வேலைசெய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் குடியிருக்கும் ஆர்.வி. நகர், திரு. வி. க. நகர் போன்ற காலனிகளில் தொழிலாளர்கள் அல்லாதவர்கள் புகுந்து அங்கேயிருந்த தொழிலாளர்களின் மனைவி மக்களை சைக்கிள் செயின், இரும்புத் தடிகள் (Iron rods) போன்ற பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தாக்கி, அவர்களுடைய வீடுகளின்

கதவுகளை உடைத்து, இன்னும் வீடுகளிலிருந்த பொருள்களை எந்த அளவுக்குச் சேதப்படுத்தமுடியுமோ, அந்த அளவிற்கு சேதப் படுத்தியிருப்பதாக, வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் தகவல் கிடைத்து, உடனே அவர்கள் வேலையை விட்டு தங்கள் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்காக வீடுகளுக்கு வந்திருக் கிறார்கள். வீடுகளுக்கு வந்தவுடன் தங்கள் பெண்டுபிள்ளைகள் தாக்கப்பட்டிருப்பதை, அவமானப்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டு, இந்த மாநிலத்தில் இந்நிலையில் தொழிலாளிகள் அவதியுறுகிறார்களே என்று எண்ணி கலங்கி யிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 26—1—1972 அன்று பெரம்பூர் பகுதியில் துளசிங்கமுதலி தெரு, 11-ம் நம்பர் வீட்டில் குடியிருக்கும் பி.எம். சுப்பிரமணிய குமார், பி.எம். இனிய குமார், பி.எம். ரவி குமார் ஆகிய மூன்று சகோதரர்களும், வேலை இல்லாதவர்கள் அல்லது சமூக விரோதிகளால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இந்தியா பிஸ்டன்ஸ் கம்பெனியில் வேலை செய்பவர்கள். சம்பவத் தன்று சமூக விரோதிகள் அவர்கள் வீட்டிற்குள் புகுந்து, அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு, மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறார். இப்படிப்பட்ட நிலை இப்போது அங்குள்ள மக்கள் மனதில், குறிப்பாக சிம்ப்சன் தொழிலாளர் மனதில் மிகப்பெரிய கலவரத்தை ஏற்படுத்தியிருக் கிறது. அந்த அவல நிலையை எண்ணி, எப்பொழுதுமே தொழிலாளர்கள் மிகவும் கவலையோடு இருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல. அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரியும்.

ஆகவே, இந்த மிகவும் முக்கியம் வாய்ந்த, மக்களை மிகவும் கலக்கமடையச் செய்திருக்கும் இந்த நிலையைப்பற்றி, மக்களைக் கலக்கிக்கொண்டிருக்கும் இந்த நிலையைப் பற்றி விவாதிப்பதற் காக, இந்த அவையின் இதரப் பிரச்சனைகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று தலைவரவர்களே, உங்களை நான் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, செம் பியம் போலீஸ் நிலைய எல்லைக்குள் இருக்கும் திரு. வி. க. நகரில் மொத்தம் 670 வீடுகள் இருக்கின்றன. அதில் 18 வீடுகள் பூட்டப் பட்டுள்ளன.

24—1—1972 முதல் 28—1—1972 வரையிலுள்ள நாட்களில் ஒரே ஒரு புகார்தான் அந்தப் பகுதியிலிருந்து வந்துள்ளது. அந்தப் புகாரைக் கொடுத்தவர் மடுமாநகர், சின்னக்குழந்தை தெரு, 44-ம் எண் வீட்டில் வசிக்கும் நாகரத்தினத்தின் மகன் புண்ணியநாதன் என்பவராவார். 24—1—1972 காலை 9 மணி அளவில் சில ரௌடிகள் வீட்டிற்கு வந்து தன்னையும் தன் குடும்பத்தாரையும் தாக்க வந்ததாகவும், வீட்டிற்கு ரூ. 2,000 மதிப்பு அளவில் சேதம்





விளைவித்ததாகவும், 25—1—1972 அன்று மதியம் 12 மணிக்கு செம்பியம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். இது சம்பந்தமாக 7 பேர்களைக் குறிப்பிட்டார். போலீஸ் உடனடியாக விசாரணையை மேற்கொண்டது.

இவர் வீட்டைப் பார்த்ததில் அவர் புகார் செய்த அளவிற்கு சேதம் இல்லை. சேதம் மிகச் சொற்பமே என்று தெரிந்தது. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. இந்தப் புண்ணியநாதன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்; வயது 22 இவர் வேலை இல்லாமல் இருக்கிறார். இவர் குசேலருடன் நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளதாகவும், 'எக்ஸ்டிரிமிஸ்ட் கம்யூனிஸ்டு சிம்ப தைஸர்' என்றும் தெரிகிறது. இவர் தந்தை நாகரத்தினம் பி அண்டு சி மில்லில் வேலை செய்கிறார்.

24—1—1972-ல் செம்பியத்திலுள்ள சிம்பசன் குரூப் கம்பெனி களில் கலவரம் நடந்தது. இவருடைய வீடு எஸ்டேட்டுக்கும் அருகில் உள்ளது. இவர் 24—1—1972-க்கு முன் மூன்று நாட் களுக்கு அங்கு இல்லை என்றும், 24—1—1972 அன்று காலைதான் வந்தார் என்றும் தெரிகிறது.

"நகர போலீஸ் கண்ட்ரோல்" அறைக்கு ஒரு நாளைக்கு உதவி கோரி 20 முதல் 40 வரை 'போன் கால்கள்' வருகின்றன. ஆனால் 25—1—1972 முதல் 28—1—1972 வரை ஒரு 'கால்' கூட திரு.வி.க. நகரிலிருந்து வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போலீஸ் கமிஷனர் உத்தரவின்பேரில் உதவி போலீஸ் கமிஷனர் 27—1—1972 அன்று மாலை திரு.வி.க. நகருக்கும் சர்மா நகருக்கும் சென்று பார்த்ததில் நிலைமை சாதாரணமாக இருப்பதாகவும், மூடப்பட்டுள்ள 18 வீடுகளில் உள்ளவர்கள், அவர்கள் சொந்தக் காரர்கள் வீட்டிற்கு சாதாரணமாகச் சென்றிருப்பதாகவும் தெரிந்தது.

670 வீடுகள் உள்ள ஒரு நகரில் 18 வீட்டுக்காரர்கள் மட்டும் பயந்து போய் விட்டார்கள் என்பது எந்த அளவுக்கு உண்மையாக இருக்கமுடியும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது வியப்பாகவே இருக்கிறது. இதிலிருந்து தெரியவருகின்ற உண்மை என்ன வென்றால், பத்திரிகையில் வந்த செய்திகள் அரசியல் நோக்கோடு செய்யப்பட்டவை என்பதுதான். பொதுவாக, சாதாரண சிறிய புகார்களைக் கூட பத்திரிகை நிருபர்கள் போலீஸ் கவனத் திற்குக் கொண்டு வருவார்கள். ஆனால் இந்த இடத்தில் அவ்வாறு ரௌடிகள் கலவரம் செய்வதாக போலீஸ் கவனத்திற்கு அவர்கள் கொண்டு வரவில்லை.

எப்படியேனும் சிறு பிரச்சனைகளைப் பெரிதுப்படுத்திக் காட்டி, தகராறை வளர்த்து, இந்த சிம்ப்சன் நிறுவனத்தை மூடிவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு தொழிலாளர்கள் நலனில்

அக்கறை கொண்ட புண்ணியவான்கள் போல் சில பத்திரிக்கையாளர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். சிம்ப்ஸன் நிறுவனத்தைப் பற்றி எந்த அளவுக்கு பரபரப்பான செய்திகளை வெளியிட முடியுமோ அந்த அளவுக்கு வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பத்திரிக்கை நிறுவனத்தார் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் என்ன செய்தார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். அவர்கள் தங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, அமைச்சர் வெங்கடராமன் தூண்டிவிடுகிறார்; காமராஜர் தூண்டிவிடுகிறார் என்று சொல்லி, சென்னையிலிருந்த தங்கள் நிறுவனத்தையே வேறு மாநிலத்திற்கு மாற்றிவிட்டு, இங்கு அமைதி ஏற்பட்டவுடன் மீண்டும் தங்கள் நிறுவனத்தை இங்கே கொண்டுவந்த அந்த புண்ணியவான்கள் தான் இன்று இப்படிப்பட்ட பரபரப்பான செய்திகளை வெளியிடுகிறார்கள்.

எனவே, நான் அளித்துள்ள இந்த விளக்கத்திற்குப் பின்னால். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, பெரம்பூர் பகுதியில் துளசிங்கமுதலித் தெருவில் 11-ம் நம்பர் வீட்டிலுள்ள பி.எம். சுப்ரமணிய குமார், பி.எம்., இனிய குமார், பி. எம்., ரவி குமார் ஆகிய இந்த சகோதரர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எனது தீர்மானத்தில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது பற்றி விளக்கத்தில் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றி போலீஸில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுத்திருந்தால் போலீஸார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூறி விடலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** போலீஸார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி எங்களை விட அரசாங்கத்திற்குக் கூடுதல் தெரியும். புகார் கொடுத்தால் அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, போலீசில் புகார் கொடுக்கப்பட்டிருந்து, போலீஸார் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் அது மகா பாவமாகும். அப்படிப்பட்ட தகவல் இருந்தால் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த விளக்கத்திற்குப் பின்னால், மேலும் இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன் ஆகவே, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.



### (இ) திருச்சி கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சி போல் மாநிலமெங்கும் அரசியல் கூட்டங்கள் நடத்தமுடியாமல் ஏற்படும் நிலை குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules of an adjournment motion for adjourning the business of the House to discuss the following matter of urgent public importance :—

"Recent occurrences throughout the State where political meetings are disturbed in a concerted manner as in the case of meetings at Tiruchirappalli on 27th January 1972".

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு முன்னால் சற்று யோசித்துத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். காரணம் சமீப காலத்திலே இதற்கு முன்னரே எங்கள் கட்சிக் கூட்டமானது கலைக்கப்பட்டது. அப்படி எதாவது ஒரு கட்சி நடத்துகின்ற பொதுக்கூட்டமானது குழப்பம் விளைவித்து, கூட்டம் நடக்காமல் கலைக்கப்பட்டுக்கொண்டே இருக்குமானால் எந்த ஒரு கட்சியும் கூட்டமே நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே, எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து இதற்கு சுமுகமான ஒரு முடிவை மேற்கொள்வது நல்லது. அம்மாதிரி ஒரு முடிவு மேற்கொள்ளப்படுமானால் இந்த மாதிரியாக கூட்டம் நடத்த முடியாமல் போவது அல்லது கூட்டம் பாதியிலே முடிந்து போகக் கூடிய சூழ்நிலை தவிர்க்கப்படும். தகராறுக்கு வழியில்லாமல் போய்விடும்.

இராமநாதபுரம் ஜில்லாவில் தி.மு க பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களால் கலைக்கப்பட்டது. அது எனக்கு நன்றாகத் தெரியும். அத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு எங்களுக்குக் கூட கஷ்டமாகத்தான் இருக்கிறது. அது சென்னை முன்னாள் மேயர் கலந்து கொண்ட கூட்டம். அங்கே உண்மையிலே நடந்த நிகழ்ச்சி என்னவென்றால், மேயரைப் பேசவிடாது குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்யப்பட்டது அல்ல. அவருக்கு முன்னால் பேசியவர்களின் அவதூறான பேச்சுக்களே அதற்குக் காரணம். அவர்களின் பேச்சுதான் கலாட்டா உண்டுபண்ணுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. அதைப்பற்றி இன்றைக்கு போலீசார் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேமாதிரி எங்கள் தலைவர் தஞ்சை மாவட்டத்தில் பேசிய கூட்டத்தில் குழப்பம் உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஒவ்வொரு அரசியல் கட்சியும் இம்மாதிரி கலாட்டா செய்வதில் ஈடுபட்டால், பொதுக் கூட்டங்கள் எப்படி நடத்த முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவேதான் சொல்கிறேன், எந்த அரசியல் கட்சி கூட்டம் நடத்தினாலும், கூட்டத்தில் கலாட்டா செய்யக்கூடாதென்று. எங்கள் கட்சி அந்த முடிவை மேற்கொண்டிருக்கிறது. அதே போன்று எல்லாக் கட்சிகளும் அந்த முடிவை மேற்கொண்டால் நல்லது.

மேலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும்போது குழப்பம் ஏற்படாமல் இருக்க தகுந்த போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். அது தி.மு.க. கூட்டமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி நடத்தும் கூட்டமாக இருந்தாலும் சரி, அல்லது இந்திய கம்யூனிஸ்டு கட்சி நடத்துகிற கூட்டமாக இருந்தாலும சரி அல்லது வேறு எந்தக் கட்சியின் கூட்டமாக இருந்தாலும் சரி அந்தக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எந்தக் கட்சி பொதுக்கூட்டம் நடத்தினாலும், அந்தக் கூட்டம் தடைப்படுத்தப்படக் கூடாது என்ற காரணத்தினால்தான் நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

தாங்கள் இந்தத் தீர்மானத்தை உடனடியாக அங்கீகரித்து விடுவீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லாவிட்டாலும் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நான் மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்வது இதுதான். இனி வருங்காலத்தில் அரசியல் கட்சிகள் நடத்துகின்ற கூட்டங்கள்—அதிலும் சில முக்கியமான தலைவர்கள் பேசுகின்ற கூட்டங்கள் கலைக்கப்படுகின்ற அளவுக்கு, காரணம் இல்லாத அளவுக்கு ஆத்திரமோ, ஆவேசமோ ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். விரும்பியோ, விரும்பாமலோ இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது கூட்டம் கலைக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. இன்று பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால் திருச்சியில் ஒரு கூட்டம கலைக்கப்பட்டிருக்கிறது. இதுபோல கூட்டங்கள் கலைக்கப்படுகிற நிலைமை வளர்ந்துவிடக்கூடாது என்பதில் எல்லாக் கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. யார் ஏற்பாடு செய்த கூட்டமாக இருந்தாலும்கூட—இதை கண்டிப்பாக அரசாங்கம் கவனிக்க வேண்டும்—கூட்டம் கலைக்கப்படாமல் நடைபெறுவதற்கு ஏற்ற பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

அரசாங்கம்—அரசாங்க நிர்வாகம் ஆகியவற்றைப்பற்றி அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்யத்தான் செய்யும். அப்படி விமர்சனம் செய்கிறோம் என்று சொன்னால் ஒரு கட்சி இன்னொரு கட்சியைப் பற்றி விமர்சனம் செய்கிறபோது அதைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு நம் பண்பாடு வளர்ந்துவிடக் கூடாது. ஆகவே இதுபோல இனி எந்தக் கட்சிக் கூட்டம் நடந்தாலும் எந்த அரசியல் கட்சித் தலைவர் பேசுகின்ற கூட்டமாக இருந்தாலும் அது தாக்கப்படுவது, கலைக்கப்படுவது என்கிற நிலைமை இனி ஏற்படாதிருக்க ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அதற்கு இந்தத் தீர்மானத்தை விவாதிப்பதுகூட தவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது நான் எந்த எந்த விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்று கருதினேனோ, அவைகளில் பாதிக்குமேல் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. கே. டி. கே. தங்கமணி



அவர்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களை தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுவதும், விமர்சிப்பதும் அரசியல் விமர்சனங்கள் ஆகாது என்பதை அவர்களே எடுத்துச் சொன்னார்கள். அதையே நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்று அரசியல் எந்த அளவுக்கு விரைந்து போய்க்கொண்டிருக்கிறது என்று பார்த்தால், அரசியல் கட்சிகளை நடத்துகின்ற தலைவர்கள், செயலாளர்கள், கட்சியில் உள்ள பொறுப்பானவர்கள் இவர்களைப் பற்றி எல்லாம் மிகக் கீழ்த்தரமாகத் தாக்குவதோடு கூட—அவர்களுடைய குடும்பங்கள், பெண்டு பிள்ளைகள், தாய் தந்தையர்கள்—சகோதரி, மனைவி ஆகிய இவர்களைப் பற்றி எல்லாமும் பேசுகின்ற இழிந்த அளவுக்கு அரசியல் மேடைகள் போய்க் கொண்டிருக்கின்றன. இதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சொல்ல முடியும். பல மேடைப் பேச்சாளர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அப்படித் தாக்கிப் பேசுவது சரி என்று கூறவில்லை. அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எப்போது பேசுகிறார்கள், யார் யார் பேச்சுக்கு அப்படிப் பதில் அளிக்கின்ற முறையில் பேசுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி திராவிட முன்னேற்றக் கழக சொற்பொழிவாளர்கள் எங்காவது அடிப்படை கட்டுப்பாட்டை மீறி பேசினார்கள் என்றால் அவர்களைக் கண்டிக்க—அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள கழகத் தலைமை இன்றைக்கு தயாராய் இருக்கிறது. ஆனால் அதைப்போல ஒவ்வொரு கட்சியின் தலைமையும் தயாராய் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அந்த அந்தக் கட்சியில் உள்ளவர்கள் எவ்வாறு எல்லாம் எழுதுகிறார்கள், அந்த அந்தக் கட்சியில் உள்ள சொற்பொழிவாளர்கள் எவ்வாறு எல்லாம் பேசுகிறார்கள் என்பதை இன்றையதினம் அந்த அந்தக் கட்சித் தலைமையினர் கவனிப்பது இல்லை. மாறாக சில தலைவர்கள் தவறான முறைகளில் பேசி—எழுதி வருகிறவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து வருகிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. வத்தராயிருப்புக் கூட்டம் அவர்களுடைய கட்சியினரால் எவ்வாறு கலைக்கப்பட்டது என்பதை அவர்களே குறிப்பிட்டார்கள். இன்றையதினம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சூடான நிலைமை கம்யூனிஸ்டுக் கட்சி—திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டுக்கும் இடையே ஏற்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு வேகம் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன்.

திருச்சியைப் பொறுத்தவரையில் நடைபெற்ற சம்பவம்—இந்திரா காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் பேசியவர்கள் அரசாங்கத்தையும், அமைச்சர்களையும் மிகக் கேவலமான முறையில் தாக்கிப் பேசிய காரணத்தினால்--கூட்டத்தில் இருந்த ஒருவர்தான்—மூர்த்தி என்பவர் 'கர்ண கடூரமான வார்த்தைகளைப் பேசாதே'

என்று எழுந்து சொன்னதாகவும், அதன் காரணமாக மேடையில் இருந்தவர்களுக்கும்—அவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், கூட்டம் சுமுகமாக நடைபெற வேண்டும் என்பதற்காக போலீசார் கூட்டம் நடக்கக்கூடிய இடத்தில் இருந்து மூர்த்தியை அப்பால் வெளியேற்றிச் சென்றதாகவும் தெரிகிறது. வேறு கலவரம் நடந்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பிறகு கூட்டம் நடத்தியவர்கள் மூர்த்தி மீது போலீஸ் இடத்தில் ஒரு புகார் தாக்கல் செய்ததாகவும் அவர் மீது சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 75 பிரிவுப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது அந்தக் கூட்டத்தைப்பற்றி அறிக்கை விடுத்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடாருக்கு நன்றாகத் தெரியும்.

காவேரிநதி பங்கீடு சம்பந்தமாக சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்தபோது—திரு. எச். வி. ஹாண்டே இருந்தார்கள், திரு. ராஜாராம் போன்றவர்கள் எல்லாம் இருந்தார்கள். அந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில்—இன்று அறிக்கை விடுத்திருப்பவர் பேச எழுந்தவுடன் "இந்தியாவை ஆளுகின்ற கட்சியின் சார்பில் ஆணவத்தோடு பேசுகின்றேன்" என்பதாக பேச ஆரம்பித்தார். அவரது கட்சியைச் சேர்ந்தவரே—என் பக்கத்தில் இருந்தவர்—அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—இன்றைக்கு அவர்களோடு சேருகின்ற நிலையையும் பார்க்கிறோம்—அன்றைக்கு என்னிடம் சொன்னது "இப்படி கட்சிக்கு 4 ஆட்கள் வந்தால் போதும் அந்தக் கட்சி ஸ்வாஹா ஆகிவிடும்" என்றார்.

இப்படி அன்றையதினம் "இந்தியாவை ஆளுகின்ற கட்சியின் சார்பாக ஆணவத்தோடு பேசுகின்றேன்" என்று பேச ஆரம்பித்தவர்—அனைத்துக்கட்சி கூட்டத்திலேயே மற்றவர்கள் யாரும் விரும்பாத பல விஷயங்களை அன்றைக்குப் பேசினார்.

இதுபோன்ற நிலையினால்தான் ஒவ்வொரு கட்சியினுடைய அடிமட்டத்திலும் இருக்கிற தொண்டர்களிடையே இதுபோன்று ஒரு கட்டுப்பாடு இல்லாத நிலை கீழ்த்தரமாகப் பேசுகின்ற ஒரு நிலை உருவாகிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர்கள் அப்படிப் பேசுகின்றபோது கட்சித் தலைமை அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்று சொல்கிறபோது, மற்ற மற்ற கட்சித் தலைமையிலும் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஒரு சுமுகமான நிலை உருவாக முடியும்—கட்சிக் கூட்டங்கள் அமைதியாக நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்து, இந்த விளக்கத்தை அளிப்பதற்கு இந்தத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவில், இதற்குமேல் விவாதம் தேவையில்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்தத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



## (ஈ) மேட்டூர் பியர்ட்சல் கம்பெனியின் போக்கினால் தொழிலாளர் கட்டாயவேலை நீக்கமும் உற்பத்தி தடைப்பட்டிருப்பதும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. எம். சுரேந்திரன் எம்.எல்.ஏ., அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

"மேட்டூர் பியர்ட்சல் பஞ்சாலையில் 17—1—1972 முதல் தொழிற்சாலை நிர்வாகம் உற்பத்தியை தடைப்படுத்தியிருக்கிறது. மேற்படி தொழிற்சாலையில் வேலை செய்யும் சுமார் 1,800 தொழிலாளர்கள் அன்றாடம் தங்கள் வேலை நேரத்தின்படி உள்ளே சென்று வெளியே வந்துகொண்டிருக்கின்றனர்.

உற்பத்தி தடைப்படாமல் பாதுகாப்பதற்கான பாதுகாப்புச் சட்டம் இருந்துவரும் இந்த நேரத்திலும்கூட, மேற்படி நிர்வாகம் செய்யும் மேற்படி காரியத்தினால் அதில் வேலை செய்யும் தொழிலாளர்களும், இதர தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களும் பெரும் அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டிருக்கின்றனர்.

மேற்படி நிலைமையை நீடித்தால் மேட்டூரில் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளின் உற்பத்தியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களும் பாதிக்கப்படும்" என்பதாக ஒரு அவசரப் பொது முக்கியம் வாய்ந்த தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இதேமாதிரியான தீர்மானத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

'The obstinate stand of Beardsell Company, Mettur, for compelling workers in Textile Unit to do other work and enforced unemployment of 1,800 workers since 16th January 1972 resulting, in great unrest in Mettur area.'

முதலில் திரு. சுரேந்திரன் அவர்கள் ஒற்றிவைப்புக்கான கருத்தை விளக்கிப் பேசுவார்கள்.

* **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, மேட்டூரில் உள்ள நெசவாலைத் தொழிற்சாலை என்று சொல்வது, 'மேட்டூர் மல்' என்ற எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிற ஒரு பிரபல தொழிற்சாலையாகும். அந்தத் தொழிற்சாலையில் 14-ம் தேதியிலிருந்து உற்பத்தி செய்யப்படாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, எல்லா இடங்களிலும் தொழிலாளர்கள்தாம் வேலை நிறுத்தம் செய்துதான் உற்பத்தியைத் தடுப்பார்கள் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இங்கே மானேஜ்மெண்டானது 14-ம் தேதியிலிருந்து மெயின் ஸ்விட்சை ஆஃப் செய்துவிட்டு, இயந்திரங்களையெல்லாம் ஓட விடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை ஆரம்பித்து பல வருஷங்களாகி விட்டன. இதன் காரணமாக இத் தொழிற்சாலைக்குச் சம்பந்தமில்லாத வகையில் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கிறது. தெர்மோகோல் பிளான்ட்டும் சுமார் 5 வருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் அண்மையில் அலெக்சாந்திரா பின்லே என்கிற கம்பெனியுடன் கூட்டுச் சேர்ந்து, நூல் உற்பத்தி

யூனிட்டை ஆரம்பித்திருக்கிறது. மற்ற கம்பெனிகளின் வேலைகளையும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்திய காரணத்தால், என்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்த 80 தொழிலாளர்கள், மற்றத் தொழிற்சாலைகளின் வேலைகளை எங்களிடம் கொடுக்கக்கூடாது. நாங்கள் இதை ஏற்க முடியாது என்று கூறினர். நிர்வாகம் அவர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தது. சமரசப் பேச்சு நடத்திக்கொண்டிருந்த போதே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். மானேஜ்மெண்ட் ஆத்திரம் கொண்டு, மற்றத் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டு—இம்மாதம் 14-ம் தேதியிலிருந்து தொழிலாளர்கள் உள்ளே செல்வதும் பின்னர் வெளிவருவதுமாக—நிலைமையை உண்டாக்கியிருக்கின்றனர். பாதுகாப்புச் சட்டம் அமலில் இருக்கின்ற நேரத்தில், மானேஜ்மெண்டால் உற்பத்தி தடுக்கப்படுகிற நிலைமை இருப்பதைக் கண்டு அந்தப் பகுதி மக்கள் எல்லோருக்கும் ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அந்தப் பகுதியில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடந்துகொண்டிருக்கிறது. சத்தியாக்கிரகமும் நடந்துகொண்டிருக்கிறது. இது தொழிலாளர்களின் பெரிய பிரச்சினையாக மாறக்கூடும் என்பதால், இதை இந்தச் சபை ஆராய்ந்து. இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்பதற்காகத்தான் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, பேரவையின் மற்ற அலுவல்களை ஒற்றி வைத்து, இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்து, ஒழுங்கான பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, வேறு ஒரு தொழிற்சாலையை அமைத்து, அந்தத் தொழிற்சாலை செய்ய வேண்டிய வேலைகளை, இந்தத் தொழிலாளர்கள் செய்ய வேண்டும் என்கிறார்கள். இதற்கு எந்தவிதமான புது ஊதியமும் கிடையாது என்கிற அடிப்படையில் இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இதை மறுத்த தொழிலாளர்கள் 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதை முதலில் அனுமதித்தால் வேறு எல்லா வேலைகளையும் செய்யச் சொல்வார்கள் என்று அங்கேயிருக்கும் தொழிலாளர்கள் சார்பில் கூறப்படுகிறது. அங்கே இருக்கிற ஐ.என்.டி.யு.சி., எச்.எம்.எஸ்., சி.ஐ.டி.யு., திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஆகிய எல்லா தொழிற்சங்கங்களும் ஒரு குழு அமைத்து அமைதியான முறையில் 100 பேர் மட்டும் வேலை செய்வோம் என்றார்கள். மானேஜ்மெண்ட்டார் இவர்களையும் வேலை செய்ய அனுமதிக்காமல், எல்லோரும் செய்யவேண்டும் என்று 1,500 பேரையும் நிர்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது 3 பேர் மீது போட்டிருக்கிற சார்ஜை வாபஸ் வாங்கிவிட்டு, உடனடியாக பரிகாரம் காணவேண்டுமென்பது குறித்து விவாதிக்க இந்தப் பேரவையை ஒற்றிவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, மேட்டூரில் உள்ள நெசவாலையும் தெர்மோகோல் இயந்திர பிரிவும் மேட்டூர் பியர்ட்சல் கம்பெனியைச் சேர்ந்தது. தெர்மோகோல் இயந்திரப் பிரிவு சுமார் 5 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்டது. சமீபத்தில் நூல் உற்பத்தி செய்யும் பகுதி அலெக்சாந்திரா பின்லே கம்பெனியுடன் கூட்டாக நிறுவப்பட்டுள்ளது. இப்பொழுது எழுந்துள்ள தொழில் பிரச்சினை பொறியியல் பிரிவைச் சார்ந்த தொழிலாளர்கள் நூற்பாலையின் வேலையை மட்டும் செய்ய வேண்டுமா அல்லது தெர்மோகோல் மற்றும் அலெக்சாந்திரா பின்லே சம்பந்தப்பட்ட வேலையையும் செய்ய வேண்டுமா இல்லையா என்பதைக் குறித்தேயாகும். இதுவரையில தொழிலாளர்கள் எல்லா வேலையையும் செய்து வந்தார்கள் என்றும், இப்பொழுது அவர்கள் அந்த வேலையைச் செய்ய மறுக்கிறார்கள் என்றும் நிர்வாகம் கூறுகிறது தொழிலாளர்கள் தங்கள் வேலையைப் பற்றி 1962-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் ஆதலால் அவர்கள் மற்ற வேலைகளையும் செய்ய இயலாது என்றும் கூறுகிறார்கள்.

திரு. சங்கரன் என்னும் தொழிலாளி மேற்கூறிய வேலைகளை செய்ய மறுத்ததினால் நிர்வாகத்தினர் 14—1—1972 அன்று அவரை நான்கு நாட்கள் தற்காலிக வேலை நீக்கம் (Suspension) செய்தனர். இதை ஒட்டி பொறியியல் தொழிலாளர்கள் சுமார் 60 பேர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பொறியியல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் மற்ற பிரிவுகள் பயனுள்ளதாகவும் பாதுகாப்புடனும் இயங்காது என்ற காரணத்தால் நிர்வாகம் மற்ற பிரிவைச் சார்ந்த 1,396 தொழிலாளர்களை 17—1—1972 முதல் லே-ஆப் செய்தனர். இவ்வாலையிலுள்ள மொத்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1,700.

17—1—1972 அன்று சேலம் தொழிலாளர் துறை அலுவலர் இதுபற்றி தொழிலாளர் பிரதிநிதியுடனும், நிர்வாகத்துடனும் சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சு வார்த்தைகளினால் உடன்பாடு ஏற்படாததால் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் 21—1—1972 அன்று இரு தரப்பினருடன் கோவையில் பேச்சு வார்த்தை நடத்தினார். எந்தப் பிரிவைச் சார்ந்த வேலையாயினும் அது 8 மணி நேர வேலைக்குட்பட்டிருப்பின் அதைச் செய்ய தொழிலாளர்கள் மறுக்கக் கூடாது என்று நிர்வாகத்தினர் கூறினர். நூல் உற்பத்தி வேலை வேறு கம்பெனியுடன் கூட்டாக நடத்தப்படுவதனால் அவ்வேலையைச் செய்யும்பொழுது ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளிக்கு 50 பைசா வீதம் படி கொடுக்கப்படும் என்றும் கூறினார்கள். தொழிலாளர்கள் நூற்பாலை வேலைகளைத் தவிர இதர பிரிவைச் சார்ந்த வேலைகளை கவனிக்க இயலாது என்று கூறினார்கள்.

தொழிலாளர் துறை ஆணையர் இதுபற்றி மேலும் பேச்சு வார்த்தை நடத்த நிர்வாகத்தினரையும் தொழிற்சங்கங்களையும் 29—1—1972 அன்று சென்னைக்கு அழைத்திருக்கிறார்கள். இப் பேச்சுவார்த்தையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, இந்த விஷயம் குறித்து விவாதிப்பதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். இதற்காக பேரவையின் அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு. இந்த விஷயம் குறித்து, விவாதிக்க பேரவையின் அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுவதால், இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. வை. பாலசுந்தரம்** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறுகிற, திரு. செ. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திற்கு நன்றி கூறுகின்ற வகையில் என்னுடைய கருத்துக்கள் சில கூறலாம் என்று கருதுகிறேன்.

இன்றையதினம் நாம் எல்லாம் பெருமைப்படக்கூடிய பொன்னான நேரத்தில் இங்கே கூடியிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையல்ல என்று நான் கருதுகிறேன். இதை ஆளுநர் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்பாக பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்த நிலைமை இருந்தது. பல வல்லரசுகளின் பக்க பலம், பண பலம் இவையெல்லாம் தனக்கிருக்கிறதென்கிற இறுமாப்பின் காரணமாக பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்தது. ஆனால் இன்றைய நிலைமையில் உலக நாடுகள் நம்முடைய வீரத்தையும் தியாகத்தையும் தெரிந்துகொள்கிற நிலைமை அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள பல்வேறு இனமக்களை, பல்வேறு மொழிபேசும் மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள 50 கோடி மக்களைத் தன்னகத்தே பெற்றுள்ள இந்தியத் துணைக் கண்டம் மிகவும் பெருமைப்படுகிறது. இந்தியா தியாகபூமி. பாரதத் தாயின் 50 கோடி மக்களும் தங்களுடைய உள்ளத்தில் சீரிய லட்சியத்தை வைத்திருக்கிறார்கள். இந்த 50 கோடி மக்களுடைய மனபலம் பாகிஸ்தானுடைய பண பலத்தைத் தூள் தூளாக்கிக் காட்டியது. இந்த லட்சிய உணர்வு கடந்த போர் நமக்கெல்லாம் எடுத்துக்காட்டிவிட்டது.

அதன் அறிகுறியிலேதான் நாமெல்லாம் இந்தியர்கள், ஒன்று பட்ட இந்தியர்கள், ஒரே நாட்டோடு இன உணர்வு பட்ட இந்தியர்கள் ஆக நாம் வாழ்கிறோம் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான்



நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் போரினால் ஏற்பட்ட விளைவுகளையும். நாட்டு மக்கள் பெற்றிருக்கின்ற தியாக உணர்வுகளையும் தியாக சீலங்களையும் அவர் செல்கின்ற இடங்களிலெல்லாம் பேசுவதுமட்டுமல்லாமல் இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு பத்துக் கோடி ரூபாயைத் திரட்டித் தருவது என்று நாட்டு மக்களுக்கு அறிவித்து, நாட்டு மக்களும் அதனைச் சிந்தையிலே ஏற்று, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருகின்ற வகையிலே நாளுக்கு நாள் கோடி கோடியாக போர் நிதி குவிந்து கொண்டு வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அளவுக்கு நம்முடைய தமிழகம் நல்ல முறையிலே இந்தப் பாதுகாப்பு நிதியைச் சேமித்துத் தருகின்ற ஒருமித்த லட்சியமாகக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில் சிறந்த ஒரு தமிழகத்தை உருவாக்குகின்ற முயற்சியைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பசுமைப் புரட்சியின் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நம்முடைய தமிழகம் முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அதிலே தவறு இல்லை, மிகையில்லை 1968-69-ஆம் ஆண்டிலே 50.6 லட்சம் ஆக விளைந்தது; இன்றைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நடக்கின்ற இந்த ஆண்டிலே 73 லட்சம் என்ற அளவினைப் பார்க்கும்போது உணவு உற்பத்தியில் நாம் எவ்வாறு உயர்ந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகின்றபோது இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற வகையிலே பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் காட்டுகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம்தான், விவசாயிகளுக்கு நல்ல பல திட்டங்களை வகுத்துத் தருவதின் மூலம்தான் விவசாயிகளுக்கு நல்ல பல கடன் உதவிகளைச் செய்துதருவதன் மூலம்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற வகையிலே அரசாங்கம் குறுகிய காலக் கடன் என்ற வகையில் 1967-ஆம் ஆண்டிலே 47.41 கோடியாக இருந்ததை மாற்றி ஏறத்தாழ இன்றைக்கு 55 கோடியாக அதை உயர்த்தக்கூடிய நிலைமைக்கு வந்து இருக்கிறது இந்த அரசு என்பதைப் பார்க்கும்பொழுது அதனுடைய மதிப்பையும், விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு செய்து இருக்கிற நன்மையையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக, நீண்டகாலக் கடன் என்ற வகையிலே 1966-67-ஆம் ஆண்டிலே 2.37 கோடியாக இருந்ததை மாற்றி இன்றைக்கு 1971-72-ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 21 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறது இந்த அரசு என்றால் தொழிலாளர்கள் மத்தியிலே இந்த அரசு எத்தகைய சிறந்த மனப்பான்மையை, சிறந்த

லட்சியத்தைக் கொண்டு இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக இது திகழ்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் மின் ஏற்றத்தின் மூலம் சிறந்த பல சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிறது நம்முடைய அரசு. இந்தியத் துணைக் கண்டத்திற்கு சிறந்த வழி காட்டி என்ற வகையிலே சிறந்த சேவைகளைச் செய்து கொண்டு வருகிறது. 1966-67 ஆம் ஆண்டிலே 25 ஆயிரம் கிராமங்களுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்றால் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 48 ஆயிரம் கிராமங்களுக்கு மின் விளக்குகள் பொருத்தித் தரப்படக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி, 1973 ஆம் ஆண்டிற்குள்ளாகவே தமிழ்நாட்டில் மின்விளக்கு இல்லாத இடமே இருக்காது என்ற அளவிலே ஒளிமயமான கிராமங்களை உருவாக்கித் தந்திருக்கிறது இந்த அரசு என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இப்படிப்பட்ட அரிய சேவைகளையும் நல்ல பல சாதனைகளையும் செய்து வருகின்ற இந்த அரசின்மீது எப்படியாவது களங்கத்தைச் சுமத்த வேண்டுமென்ற எண்ணத்தில் காழ்ப்புணர்ச்சி கொண்டு, பொறாமையுணர்ச்சியோடு, சில கட்சிகள் ஜால வித்தைகளில் ஈடு பட்டுக்கொண்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டினை நான் சுமத்த விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே அமைதியான சமுகமான நிலைமை இருந்த போதிலும் தலைவிரித்தாடுகின்ற பிரச்னையாக தொழிற்சங்கப் பிரச்னை இருக்கிறது. தொழிற்சங்கங்களில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் எந்த அளவுக்கு ஈடுபடுத்தப்பட்டு கோர தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைய தினம், அஸ்தமித்துப்போய்விட்ட சில அரசியல் கட்சிகள் இழந்த செல்வாக்கை புதுப்பித்துக்கொள்ளவும், வளர்த்துக்கொள்ளவும் தொழிலாளர்களைப் பயன்படுத்துகின்றன என்பதை நான் பகிரங்கமாகக் கூறுவதற்குக் கடமைப் பட்டுள்ளேன்.

நாட்டில் சுமுகமான நிலைமையில் எல்லாம் நடந்துகொண்டு இருக்கிறது, யாரும் மறுக்கவில்லை. அப்படியிருக்க தொழிலாளர் கள் மத்தியில் ஒரு பிரச்னையைத் தூண்டிவிட்டு அரசியலில் ஆதாயம் கிடைக்காதா, இழந்துபோன ஸ்தானத்தை மீண்டும் பெற முடியாதா என்று ஏங்கி சில வெட்கக்கேடான நிலைமைகளிலே இறங்க வேண்டாமென்று அரசியல் கட்சிகளை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களின் மத்தியிலே ஒற்றுமையை உருவாக்குவதின் மூலமாகத்தான் சிறந்த சேவையை எதிர்பார்க்க முடியும். அப்படியிருக்க வேண்டுமென்றால் அரசியல் கட்சிகளின் தலையீடு நிச்சயமாக இருக்கக் கூடாது. அரசியல் கட்சிகளின் தலையீடு. ஆதிக்கம் தொழிற்சங்கங்களிலே இருக்குமானால் ஒற்றுமையுணர்ச்சி குன்றுவதற்கு ஆன சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்யும். அரசியல் கட்சிகளின் தலையீடு





இல்லாமலிருந்தால் தான் சுமுகம் ஏற்பட்டு வேலைவாய்ப்புகள் பெருகுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட முடியும். இன்றைக்கு உள்ள நிலைமையைப் பார்க்கின்ற பொழுது தொழி லாளர்களின் நன்மையைப் பாதுகாப்பதற்காக என்று கட்சி இருப்பதாக நான் நினைக்கவில்லை. தொழிலாளர்கள் மூலம் தனக்கு அரசியல் செல்வாக்கு வளராதா, தொழிலாளர்கள் மூலமாக தன்னுடைய கீர்த்தி ஓங்காதா என்ற அளவிலே எண்ணித் தான் சில அரசியல்வாதிகள் தொழிற்சங்கவாதிகளாக மாறிச் செய்கின்ற தில்லுமுல்லுகள்தான் இப்படிப்பட்ட செய்கைகளுக்குக் காரணங்களாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். கடந்த சட்ட மன்றக் கூட்டத்திலே முதல்வர் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். தொழிற் சங்கங்களிலே அரசியல் வாதிகளுடைய ஆதிக்கம் இருக்கக் கூடாது. தொழிலாளர்களே தான் தொழிற்சங்கங்களுக்குத் தலைமைதாங்கக்கூடிய முறையில் தொழிலாளர்களே தங்களுடைய தொழிற்சங்கங்களைக் கட்டிக் காக்கின்ற நிலைமை இருக்குமானால் இந்த அரசு அதற்கு ஆதரவு தெரிவிக்கும் என்ற நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். அதை ஏற்றுக்கொள்வதற்கு அரசியல் கட்சிகள் முன்வரவில்லை. தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு அரசியலிலே லாபம் சம்பாதிக்க நினைக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல விதத்தில் தொழிலாளர்களுக்குப் பாடுபடட்டும் வேண்டாமென்று சொல்லவில்லை, தொழிலாளர்களுக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று தூண்டிவிட்டு அதன் காரணமாக நீலிக் கண்ணீர் வடிக்கின்ற நிலைமையை நாட்டு மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாட்டு மக்கள் அவ்வளவு ஏமாளிகளாக இன்று இல்லை.

என்னென்ன நிலைமைகள் நடக்கின்றன. திரை மறைவில் எப்படிப்பட்ட ஜால வித்தைகள் நடக்கின்றன, என்னென்ன தில்லுமுல்லுகள் நடக்கின்றன, நீலிக்கண்ணீர் ஏன் என்பதை யெல்லாம் நன்றாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழக மக்கள். எனவே, அவர்களை எதிர்க் கட்சிகள் ஏமாற்றுகின்ற முயற்சியிலே நிச்சயமாக ஈடுபடக் கூடாது என்பதை நான் தெரி வித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்ன கருத்தையும் ஏற்றுக்கொண்டு நல்லமுறையில் செயலாற்ற வேண்டு மென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு நல்ல பல அம்சங்கள் பொருந்திய கருத்துக்களைக் கொண்டதாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அத்தகைய உரையை நிகழ்த்திய ஆளுநர் அவர்களுக்கு நன்றிகூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே தொழில் சம்பந்தப்பட்டவரையில், நிறுத்தப்பட்ட மில்களை எடுத்து நடத்த மத்திய அரசின் அனுமதி இல்லை என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசானது இல்லை

[திரு. என். மருதாசலம்] [1972 சனவரி 28

என்றாலும் கூட சென்னை அரசாங்கமும் இன்றைக்கு மத்திய அரசின் அனுமதி இல்லை என்று கூறுகிறார்கள். மத்திய அரசிலிருந்து எம்.பி. க்கள் இன்றைக்கு மத்திய அரசு இந்தத் தொழிலை எடுத்து நடத்த அனுமதி அளிக்கும் என்று கூறுகிறார்கள். இப்படியிருந்தால் மத்திய அரசை மாநில அரசு கூறுகிறது. மாநில அரசை மத்திய அரசு கூறுகிறது. இம்மாதிரியிருந்தால் தொழிலாளர்களின் நிலை என்ன ஆகிறது என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

இன்றைக்கு நீண்ட நெடுங்காலமாக மில்கள் சாத்தப்பட்டு, அந்த மில்களிலுள்ள பல தொழிலாளர்கள் இறந்துவிட்டார்கள், பல தொழிலாளர்கள் பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறார்கள், பல தொழிலாளர்கள் பண்டம், பாத்திரங்களை விற்று ஊரைவிட்டே ஓடிவிட்டார்கள். இந்த நிலையில் அந்த மில்களை எடுத்து நடத்த மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தியாவது இந்த மில்களை எடுத்து நடத்த அரசு முற்பட வேண்டும். அதேசமயத்தில், கோவைக்கு தொழில் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபொழுது அங்குள்ள தொழிலாளர்களை தொழில் அமைச்சரவர்கள் கேட்டார்கள். தொழில் அமைச்சர். இன்றைக்கு அந்தப் பகுதியில் எந்தத் தொழிற்சங்கம் மெஜாரிட்டி என்று கேட்டார்கள். எல்லாத் தொழிற்சங்கத்தையும் குறிப்பிட்டார்கள். எனவே அந்தத் தொழிலாளர்களின் மத்தியில் பல எண்ணங்கள் பாவியிருக்கின்றன. அதாவது தொழிலாளர்கள் இன்றைக்கு இந்த முன்னேற்றக் கழக சங்கம் மெஜாரிட்டியாக இருந்தால்தான் இந்தத் தொழில்களை எடுத்து ஓட்டுவார்களோ என்ற எண்ணம் தொழிலாளர்கள் மத்தியில், மெஜாரிட்டி தொழிலாளர்கள் மத்தியில், பாவியிருக்கிறது. என்னையும் கேட்டிருக்கிறார்கள். அந்த எண்ணம் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து போக வேண்டுமென்றால் மத்திய அரசை நிர்ப்பந்தித்து. கண்டிப்பாக தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க அந்த ஆலைகளை எடுத்து ஓட்டியாக வேண்டும்.

அடுத்து, ஆளுநர் அவர்களின் உரையில், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதேசமயத்தில் இன்றைக்கு அந்தத் தொழிலில் இருக்கும் தொழிலாளியே அதன் தலைவராக வர வேண்டும் என்பதைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலிலேயே உள்ள தொழிலாளி தலைவராக வந்தால் அந்த முதலாளியால் அந்தத் தொழிலாளி பழிவாங்கப்படுவான். அந்தத் தொழிலாளி பிரச்னையை எடுத்து முதலாளியிடம் பேச முடியாது. அட்ஜுடிகேஷனுக்குப் போக முடியாது, கோர்ட்டுக்குப் போக முடியாது. இந்த நிலையில் அந்தத் தொழிலாளி பழிவாங்கப்படுவான். இல்லையென்றால் அந்தத் தொழிலாளி முதலாளியிடம் பணிந்துவிடுவான். இந்த இரண்டுதான் நடக்கும்.



1972 சனவரி 28] [திரு. என். மருதாசலம்]

1948-லே கோவை காளீஸ்வரா மில்லில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன், வீவிங் தொழிலாளியாக. அப்பொழுது கோவை மில் தொழிலாளர் சங்கத்தில் சுமார் 40,000 தொழிலாளிகள் இருந்தார்கள். அதில் என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். இரண்டு வருஷ காலத்திற்குள் ஆள் குறைப்புத் திட்டம் என்ற பெயரில் என்னை நிறுத்தி விட்டார்கள். எனவே, மில் தொழிலாளியே தொழிற்சங்கத் தலைவராக வரும்பொழுது முதலாளிக்குப் பணிய வேண்டிவரும் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளியே தலைவராக வரக்கூடாது என்ற நோக்கம் எங்களுக்கு இல்லை. தொழிலாளிதான் தலைவராக வர வேண்டும், தொழிலாளிதான் இந்த நாட்டை ஆள வேண்டும். ஆகையால், தொழிலாளி தலைவராக வர வேண்டுமென்றால் மெஜாரிட்டி தொழிலாளர்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்கள் தலைவராக வர இந்த அரசிலே அனுமதி அளிக்க வேண்டும். ஏனென்றால் மெஜாரிட்டி தொழிலாளர்கள் அவர்கள் வெளி ஆளை விரும்பினாலும், அல்லது தொழிலாளர்களையே விரும்பினாலும் மெஜாரிட்டி தொழிலாளர்கள் யாரை விரும்பினாலும் அவரை தொழிற்சங்கத் தலைவராக ஏற்றுக்கொண்டு அரசும் அங்கீகாரம் செய்ய வேண்டும். இந்த முறையில்தான் தொழிற்சங்கங்கள் இருக்க வேண்டும்.

அதேசமயத்தில், இன்றைக்கு விவசாயத்தை எடுத்துக் கொண்டால் விவசாயம் என்பதுபற்றி இந்த ஆளுநர் உரையில் ஏதும் கிடையாது. விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று கூறப்படுகிறது. விவசாயத்தில் அதிக உற்பத்தி செய்தால்தான் இந்த நாட்டில் தானிய உற்பத்தி அதிகமாகும். ஆகவே இந்த விவசாயம் என்ற பகுதியில் இன்றைக்குக் கோவை ஜில்லாவிலும் சரி, அவினாசி, தாராபுரம் தாலுக்காக்களிலும் சரி தண்ணீர் இல்லாத பிரச்னை. இவைகளுக்காக நெல்லித்துறை திட்டம் என்ற திட்டம் கொண்டுவர திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப்பற்றி எந்தவிதமான பேச்சும் இல்லை. ஆகவே இந்தப் பகுதியில் நெல்லித்துறை திட்டம் என்ற திட்டத்தில் ஒரு கால்வாயைக் கொண்டு வந்து அந்தப் பகுதியைச் செழிப்பாக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில், உபாத்தியாயர்களைப் பொறுத்தவரையில், உபாத்தியாயர்கள் இன்றைக்கு 70-ஆம் வருஷத்திற்குக் கீழ்ப்பட்டு ஓய்வுபெற்றவர்களுக்குத்தான் பென்ஷன் தொகை என்று அரசில் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலாக ஓய்வுபெற்றவர்களுக்கு பென்ஷன் தொகை கிடையாது. இதற்குமுன் ஓய்வு பெற்றவர்கள் அதிகமாக இருக்கமாட்டார்கள், குறைவாகத் தான் இருப்பார்கள். ஆகையால், 1970-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் பென்ஷன் தொகை கொடுக்கலாம் என்று அந்தச் சட்டத்திலே திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உபாத்தியாயர்களுக்கு உதவி நிதியாக காங்கிரஸ் காலத்தில் சேர்த்து வைத்திருக்கிறார்கள் லட்சக்கணக்காக. அந்த உதவி நிதியிலே ரிடையர் ஆன உபாத்தியாயர்களுக்குப் பல உதவி நிதி வேண்டுமென்று கேட்டு அரசாங்கத்தினிடத்திலே எழுதியிருக்கிறார்கள். அதற்கு இதுவரையில் எந்தவிதமான பதிலும் வந்ததாகத் தெரியவில்லை. கொடுக்கப்படவுமில்லை. ஆகவே உடனடியாகக் கவனித்து—உபாத்தியாயர்கள் தரித்திரவாதிகள்—அவர்கள் தரித்திரத்தைப் போக்க அரசு நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த முனிசிபல் தொழிலாளர்களைப்பற்றிச் சொல்ல வேண்டும். இந்த நாட்டிலே மகா கீழ்த்தர சிப்பந்திகள் என்று அவர்கள் கருதப்படுகிறார்கள். இந்த நாட்டிலே அவர்கள் தங்கள் இரண்டு கரங்களாலும் மலத்தை எடுத்து, சுகாதாரத்தை ஏற்படுத்தி சிக்கு இல்லாமல் செய்து கொண்டு வருகிறார்கள் அந்த முனிசிபல் தொழிலாளிகள். அவர்களுக்குச் சம்பளம் என்னவென்றால், அந்தக் காலத்திலே வெள்ளைக்காரன் ஏற்படுத்திய சம்பளம், அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய் பெண்களுக்கு, ஆண்களுக்கு 17 ரூபாய் அதற்குமேல் கொடுப்பதெல்லாம் அலவன்ஸ் என்ற முறையில்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய், 17 ரூபாய்தான். ஆகவே அவர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கிடையாது. பிராவிடெண்ட் ஃபண்ட் கிடையாது.

அவர்களுக்கு போனஸ் என்று மாதம் 1 ரூபாய் பிடிக்கிறார்கள். அது, நின்ற காலத்திலே மாதம் 1 ரூபாய் என்று பிடித்தது 300, 400 ரூபாய் கிடைக்கும். ஆனால் அதுவும் வேலையிலிருந்து நின்றவுடன் கிடைக்காது. அந்தப் பணத்திற்கு உடனடியாக அரசாங்கத்திற்கு எழுதி அரசாங்க உத்தரவு வந்தால்தான் அந்தப் பணம் 300 ரூபாய் அல்லது 400 ரூபாய் கிடைக்கும். அதற்குள்ளாக ஓய்வுபெற்ற தொழிலாளி செத்து விடுவான். அவனது பேரன் பேத்திகள்தான் அதை வாங்க வேண்டியிருக்கிறது. ஆகையால் ஓய்வுபெற்ற தொழிலாளிகளுக்கு உடனடியாகப் பணம் கிடைக்க வேண்டுமென்றால் அரசு அந்த முனிசிபாலிட்டியே கொடுக்கலாம் என்று உத்தரவு இடவேண்டும்.

ஆகவே, இன்றைக்குத் தொழிலாளிகளின் நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது, குடியிருக்க வசதியில்லாமல் பலர் இருக்கிறார்கள். ஆகையால் மாகாண தொழிற்சங்கம் பல கோரிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறது. அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் விசாரணை செய்து அந்தக் கோரிக்கைகளை உடனடியாக அரசு அமல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, அந்தத் தொழிலாளிகள் கன்டின்ஜென்ட் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது. அவர்களுக்கு எந்த விதமான வசதியும் கிடையாது, சம்பளம்தான் கிடைக்கும், வேறு





எதுவும் கிடையாது. ஆகையால் அவர்கள் கன்டின்ஜென்ட் தொழிலாளர்கள் என்பதை மாற்றி சர்க்கார் சிப்பந்திகளாக அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்வார்கள்.

இன்று ஒவ்வொரு நகரமும் எந்த அளவுக்கு விரிவு அடைந்து வருகிறதோ அந்த அளவுக்கு முனிசிபாலிடி அலுவலகங்களில் பணியாற்றக் கூடிய ஆட்கள் எண்ணிக்கை பெருகவில்லை. 1946, 1948-ம் ஆண்டுகளில் எந்த அளவுக்கு முனிசிபல் தொழிலாளர்கள் இருந்தார்களோ அதே அளவுக்குத்தான் இன்றைக்கு நகரங்கள் இரட்டிப்பு மடங்கு விரிவு அடைந்த நிலையிலும் இருக்கிறார்கள். வேலைப் பளு அதிகம், சம்பளம் குறைவு. இந்த நிலையை மாற்றி அதிகமான அலுவலர்களை நியமிக்க அரசு உத்தரவு போட வேண்டும்.

கை நெசவுத் தொழிலாளர்கள் ஆங்காங்கு பத்து தறிகள். பதினைந்து தறிகள் வைத்திருக்கிறார்கள். சாதாரண கூலி வேலைத் தொழிலாளர்கள் கொஞ்சம்பேர் இருக்கிறார்கள். அந்த கூலி வேலைத் தொழிலாளர்கள் பத்துப் பதினைந்து தறிகள் வைத்திருக்கின்றவர்களிடத்தில் முந்நூறு, நானூறு ரூபாய் அட்வான்ஸ் வாங்குகிறார்கள். இந்த அட்வான்சைக் கொடுத்துவிட்டு அவர்களை அடிமையாகவே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கூலியும் கிடையாது. இதையும் அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் தொழிலாளர் நன்மையைக் கருதி, தொழிலாளர் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீதான விவாதத்திலே நானும் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

முதற்கண் இன்றைக்கு நாம் முப்படையினருக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை மறக்கக் கூடாது. அதைப் பற்றி இந்த அறிக்கையில் அழகாக அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாட்டின் மானத்தைக் காத்த அந்த மாவீரர்களுக்கு எதை எதைச் செய்து கொடுக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் வெறும் வார்த்தை அளவில் இல்லாமல் நடைமுறையில் செய்து கொடுக்க வேண்டும்.

இதற்கு முன்னே எக்ஸ்-சொர்விஸ்மென் காலனிஸ் என்று பல இடங்களில் அவர்களுக்கு நிலத்தைக் கொடுத்து பண்ணைகள் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிக் கொடுக்கப்பட்ட இடங்களைப் பார்த்தால் முக்கால்வாசிப் பண்ணைகள் விளையவே முடியாத நிலங்கள்; தண்ணீர் இல்லாத நிலங்கள்,

கடைசியில் எல்லாவற்றையும் விட்டு ஓடக் கூடிய இடங்களைத் தான் கொடுத்திருக்கிறார்கள். இனி அந்த நிலை இல்லாது நல்ல நிலங்களாக அவர்களுக்குத் துரிதமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

எனக்குப் பல மனுக்கள் வருவது வழக்கம். ' நான் ஒரு எக்ஸ் சர்விஸ்மேன். இந்தக் குறிப்பிட்ட இடத்தை எனக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் ஊரில் இருக்கிறவர்கள், தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற முறையில் என்னை பலாத்காரமாக வெளியேற்றப் பார்க்கிறார்கள்' என்ற முறையில் பல குறைபாடுகள் வருவதைப் பார்க்கிறோம். அத்தகைய சூழ்நிலை தமிழகத்தில் ஏற்படக்கூடாது. இந்த வீரர்களுக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அவ்வளவையும் செய்து தரத் தயாராக இருக்கிறோம் என்ற நம்பிக்கை ஏற்படும் அளவுக்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு அவர்கள் எந்த அளவுக்குப் படித்தாலும் இலவசக் கல்வி தர வசதி செய்து தரவேண்டும். மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் பொதுவாக இடம் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கல்லூரிகளில் வீரர்களைச் சார்ந்த குடும்பங்களுக்கு என்று தனியாக இடத்தை ஒதுக்கித் தரவேண்டும். அந்தப் பிள்ளைகளுடைய தந்தை எங்கோ எல்லைப் புறத்தில் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஆங்காங்கு அலைந்து சிபாரிசு தேட முடியாத நிலையில் அவர்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்கித் தரவேண்டும். இப்படிப் பலவித நடவடிக்கைகளையும் எடுத்து அந்த வீரர்களின் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டினுடைய ஒற்றுமை மிக மிக அவசியம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒற்றுமையாக இருந்ததன் விளைவாகத்தான் மகத்தான வெற்றி பெற முடிந்தது என்பதை இதே அறிக்கையிலேயே சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆனால் அதே சமயத்தில் இந்த வெற்றி பெற்று முடிந்தவுடன் அரசாங்கப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள்கூட 'சுய ஆட்சி தேவை' என்று சொல்வதைப் பார்க்கும்போது ஒரு புறத்தில் ஒற்றுமை, மறு புறத்தில் வேற்றுமை என்ற நிலையில் இவர்கள் பேசி வருவது நாட்டுக்கு நல்லதல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுய ஆட்சி என்பது போராடிப் பெறுவது என்ற முறையிலே பேசுவதைப் பார்க்கும்போது என்ன அப்படிப் போராடிப் பெற வேண்டிய சலுகைகள் இருக்கின்றன என்று நானும் ராஜமன்னார் குழு அறிக்கையைத் துருவித் துருவிப் பார்த்தேன். நிதி, நீதி, நிர்வாகம் போன்றவற்றில் இருக்கக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழிகளைத்தான் சொல்லி இருக்கிறார்கள். ஸ்டேட் லிஸ்டில் எவ்வளவு இருப்பது, சென்ட்ரல் லிஸ்டில் எவ்வளவு இருப்பது, கன்கரன்ட் லிஸ்டில் இருப்பது எவ்வளவு ஸ்டேட்டுக்கு வரவேண்டும், கன்கரன்ட் லிஸ்ட் தேவையா, தேவையில்லையா



1972 சனவரி 28] [திருமதி த. ந. அனந்தநாயகி]

என்ற இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைப் பார்க்கும்போது இது ஒன்றும் போராடிப் பெற வேண்டிய விஷயங்கள் அல்ல, முதலமைச்சர் பிரதமரை அடிக்கடி சந்திக்கிறார்கள், மற்ற அமைச்சர்களும் சந்திக்கிறார்கள்—இவர்கள் எல்லாம் உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்னைகளே தவிர, போராடிப் பெற வேண்டியவை அல்ல. ஆனால் சுய ஆட்சி தேவை என்று அரசாங்கப் பொறுப்பில் இருக்கின்றவர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லுகிறார்கள். குறிப்பாக, தொழிற் துறையில்தான் அடிக்கடி இந்தப் பிரச்சினை வருகிறது. மத்திய அரசாங்கம் லைசென்ஸ் தரவில்லை என்று அடிக்கடி கூறுகிறார்கள். ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்படுகின்ற தொழில்களுக்கு மத்திய அரசு லைசென்ஸ் தரத் தேவையில்லை. அந்நியச் செலாவணி பிரச்சினை வந்தால் அப்போது மத்திய அரசு அனுமதி தேவை. அந்நியச் செலாவணிப் பிரச்சினையை மத்திய அரசாங்கம் மூலம் செய்வதுதான் நல்லது. மாநில அரசாங்கத்தின் கையில் அந்த உரிமை இருக்க வேண்டுமென்று சொல்வது சரியா, தவறா என்பது பிரச்சினைக்குரிய விஷயம். ராஜமன்னார் குழு அறிக்கையில் 100 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு போடும் தொழிலில் மட்டுந்தான் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டுமென்று கூறுகிறார்கள். அது நடைமுறையில் சாத்தியமாகாது. அவர்கள் அறிக்கையில் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற முறையில் இப்படிக் கூறியிருக்கிறார்களா அல்லது மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கு இடையில் போட்டி ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கொடுத்திருக்கிறார்களா என்பதுதான் கேள்வி. தொழில் உரிமம் பிரச்சினையைச் சிக்கல் இல்லாமல் தீர்த்துக் கொள்ள முடியும்.

அந்நிய செலாவணிப் பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசுக்கு அனுப்பி குறித்த காலத்திற்குள் அதுபற்றி முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று காலக்கெடு வைத்துப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, போராட வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. இதிலே போய் முஜிபுர் ரகிமானைக் குறிப்பிட்டு அதே போல் போராடுவது என்றெல்லாம் பேசுவது பிரச்சினைக்கு மாறானதாகும். முஜிபுர் ரகிமான் வங்கத்தில் போராட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது ? சட்டப்படி தேர்தல் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டசபைக்கு வர முடியாத நிலை, ஆட்சியை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை. அங்கு குடியரசுத் தத்துவத்தையே குழி தோண்டிப் புதைத்த சர்வாதிகாரப் போக்கின் காரணமாக அந்த நிலை ஏற்பட்டது. இங்கே அப்படிப்பட்ட சூழ்நிலை கிடையாது. இங்குள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். இதைப் பற்றி நல்ல முறையில் மக்களுக்கு விளக்குவார்களானால், பிரசாரம் செய்வார்களானால் நன்றாக இருக்கும். ஆனால் இவர்கள் போடுகின்ற கோடு 'வெரி தின் லைன்' என்றுதான் சொல்ல விரும்புகிறேன். நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அளவுக்கு போகுமோ என்ற நிலை இருக்கிறது. சுய ஆட்சி

என்று இவர்கள் சொல்லுவதைப் பற்றிப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி பாமர மக்களுக்கு எவ்வளவு இருக்குமென்று பார்க்க வேண்டும். முஜிபுர் ரகிமானைப் போன்று கிளர்ந்தெழுந்து, போராட வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்துவது போன்று இது ஒரு மெல்லிய கோடாக இருக்கிறது. பிரிவினை விஷத்திற்கு இந்த அரசாங்கம் வித்திடுகின்றது என்றுதான் நான் கூற விரும்பு கிறேன். இவ்வளவு மெல்லிய கோட்டைப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி பாமர மக்களுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொதுமக்கள் ரொம்ப புத்திசாலிகள், அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பொதுமக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் அவர்களிடத்தில் தெளிவுபட இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டும். போர்க்கொடி உயர்த்த வேண்டுமென்ற வகையில் அவர்களுடைய உள்ளத்தில் உணர்ச்சிகளை ஏற்படுத்துவது நியாயமா? இன்னும் கொஞ்சம் தெளிவாக விளக்கினால் இந்த அளவுக்குகூட நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு இருக்காது என்பதை மிகத் தாழ்மையோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கவர்னர் உரையைப்பார்க்கிறபோது, மிக முக்கியமான பிரச்னைகள் இதிலே இடம்பெறவில்லை என்பதைக் கண்டு மிகவும் வருந்துகிறேன். குறிப்பாக, காவிரி நீர்ப்பிரச்னை, தமிழ்நாட்டின் எதிர்காலத்தை உள்ளடிக்கிய பிரச்னை, அதைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. "வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" தமிழ்நாட்டில் விவசாய சிறப்புக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட "வான் பொய்த்தும் தான் பொய்யாக் காவிரி" தண்ணீரைப் பெறுவதில், எவ்வளவோ அரும் பாடு பட்டும்கூட, உச்ச நீதி மன்றத்திலும் சரி, மைசூர் மாநில அரசுடனும் சரி தோல்வியைத்தான் அடைந்து இருக்கிறோம் என்பதை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டும். அந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கப்போகிறோம் என்பதை கவர்னர் அவர்கள் உரையில் ஒரு வரிகூட சொல்லாதது மிகவும் வருந்தத் தக்கதுதான். ஒருவேளை சொல்லவேண்டாம் என்று விட்டிருக் கலாம் என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்னை நீதி மன்றத்தில் இருந்தாலும், அதைப்பற்றி ஒன்றும் சொல்லாதது வருந்தத் தக்கதுதான்.

மக்கள் புத்திசாலிகள் இதைப் புரிந்து கொள்வார்கள் என்பதை இந்த அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நீங்கள் சொல்லாமல் இருந்தாலும், அதிலே என்னென்ன விளைவுகள் இருக் கிறது என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை. வேகமாக உருவாகிய ஒரு பிரச்னை. அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லை. இது அவர்களுடைய



கவனக் குறைவா அல்லது வேண்டாம் என்று ஒதுக்கப்பட்டு விட்டதா என்பதை அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த விவகாரம் நீதி மன்றத்தில் இருப்பதால், அது பற்றிய விவரம் கவர்னர் உரையில் குறிப்பிடப்படாமல் இருக்கிறது. ஆனால், அம்மையார் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றும் வெற்றி பெறவில்லை என்று சொன்னார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்று சொல்லலாம். கவர்னர் உரை யில் இல்லாவிட்டாலும் சொல்லலாம். அம்மையார் அவர்கள் ஆக்கப் பூர்வமான யோசனைகளைக் கூறுவார்களானால், அதை இந்த அரசு சிந்திக்கத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீதிமன்றத்தில் வழக்கு இருக் கிறது என்றாலும், நாம் கேட்ட இன்டரிம் இன்ஜங்ஷன் கிடைக் காததால், அவர்கள் அணையைக் கட்டிவிட்டு, அதற்குப் பின்னாலே நமக்கு பங்கு தரவேண்டுமென்று சொன்னால் அது கிடைக்குமா? நமக்கு என்ன வழி இருக்கிறது இந்தப் பிரச்னையைத் தீர்க்க, எப்படி முன்னேறப்போகிறோம் என்பதை யோசித்துப் பார்த்துச் செயல்படவேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்தப்பிரச்னையைப் பொறுத்த வரையில் எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு என்று சொல்லிக்கொள் கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அனைத்துக்கட்சித் தலைவர்களின் முடிவின்படிதான் நீதிமன்றத்திற்கு அரசு சென்று இருக்கிறது. அனைத்துக் கட்சியினர் எடுத்த முடிவின்படிதான் தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் நீதிமன்றத் திற்குச் சென்றிருக்கிறார்கள். இரண்டும் நீதி மன்றத்தின் முன் இப்போது இருக்கின்றன. அம்மையார் அவர்கள் வேறு சிறந்த யோசனைகளைச் சொன்னால், நிச்சயமாக புறக்கணிக்கமாட்டோம். ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டாம். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அனைத்துக்கட்சி கூட்டம் நடக் கிறபோது அழைப்பு அனுப்புங்கள். கட்டாயமாக சொல்கிறேன். ஒரு ஸ்பெஷல் இன்வைடியாக எனக்கு அழைப்பு அனுப்புங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** போனால் போகட்டும் பாவம், பொன்னப்ப நாடார் மூலம் சொல்லியனுப்பி விடுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கட்டாயமாகச் சொல்லியனுப்பு கிறேன். மைசூர் அரசாங்கத்தில், கவர்னர் அவர்கள் நம்மை விட வேகமாக வேலையில் இறங்கி விட்டார். அதற்காக நாமும் நீதி மன்றத்திற்குச் சென்று இடைக்காலத் தடை கிடைக்குமா என்று

ஏங்கி நிற்கிறோம். ஆகையால், நாளைக்குப் பிரச்னை எப்படி வரும் என்றால் 'இட்டீஸ் எ ஃபைட் அக்கம்பினி' என்று ஆகிவிடும். ஆகவே, இந்த நிலைமைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்துறையிலே, கூட்டுறவுத் துறையிலே இப்போது குறுகிய காலக்கடன், நீண்ட காலக்கடன் என்று கொடுக்கப்படுகிறது. வெறும் கடன் கொடுத்தால் பிரச்னை தீராது. கடன் ஒரு புறத்தில் கொடுத்தாலும் கிணறு வெட்டுவது, பம்பு செட்டு போடுவது, மின்சார இணைப்புத் தருவது போன்றவற்றிற்கும் அரசு உதவி செய்யவேண்டும். அரசாங்கமே ஒரு திட்டத்தை தீட்டி, கிணறு வெட்டி, மின்சார இணைப்பைக் கொண்டு வந்து கொடுத்து விவசாயிகளை ஊக்குவித்தால் அவர்களும் நல்ல மகசூலைத் தரமுடியும். கிணறு வெட்டிய பிறகு, பம்பு செட் கிடைப்பது இல்லை. மின்சார இணைப்புக் கிடைப்பது இல்லை. பம்பு செட் கொண்டுவந்தால் மின்சாரம் கொடுக்கப்படும் என்று சர்டிபிகேட் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த சர்டிபிகேட்டுக்கு எந்தவிதமான வேல்யூவும் இல்லை. பம்ப் செட்டு வாங்கிய பிறகு மின்சாரம் கொடுங்கள் என்று கேட்டால் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். மின்சார வாரியத்திற்கும், மற்றவர்களுக்குள்ளும் ஒரு 'கோ-ஆர்டினேஷன்' இல்லை. இணைப்பு வேலைகள் மிகவும் மெதுவாக நடைபெறுகின்றன. விவசாயத்திற்கு உடனடியாக நல்ல நீர்ப்பாசனம் செய்து தரவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்கு வேண்டிய அக்கறை காட்டவேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேறு ஏதாவது ஒரு திட்டத்தை கூட்டுறவு மூலமே ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் கடன் வழங்குவதற்கும் யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னை வளர்ப்புத் திட்டத்திற்காக கடன் வசதி கொடுக்கப்பட்டு வந்தது, திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டது என்று வதந்தி வருகிறது. இப்படி கடன் கொடுத்து விட்டு திடீரென்று நிறுத்திவிட்டால் அவர்கள் தொடர்ந்து எப்படி அந்தத் தொழிலில் ஈடுபடமுடியும்? தென்னை முக்கியமானது. ஆகவே, அதை வளர்ப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ப்புக்காக பல பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதிலே, சேது சமுத்திர திட்டம் ஒன்றாகும். அது ஏன் இன்னும் திட்ட அளவிலேயே இருக்கிறது என்று தெரியவில்லை. தூத்துக்குடி திட்டத்தோடு சேர்த்துத்தான் இந்த சேது சமுத்திர திட்டத்தையும் போட்டோம். சேது சமுத்திர திட்டம் நிறைவேற்றப்படுமானால், அது வர்த்தகத் தொடர்புக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. இங்கே இராமநாதபுரம் மாவட்டத்து அமைச்சரும் இருக்கிறார். அப்படி இருந்தும் கூட





அந்த சேது சமுத்திர திட்டம் ஏன் அப்படியே இருக்கிறது என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. அது மிகச் சிறந்த திட்டம். இதன் மூலமாக நம்முடைய வியாபாரத்துறை மிகவும் வளரும். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை உடனடியாக நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அடிக்கல் நாட்டுவதற்கு காட்டப்பட்ட அவசரம் அதை ஆரம்பிப்பதற்குக் காட்டப் படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எத்தனை நாள்தான் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்கும் என்று காத்துக் கொண்டிருப்பது? தொழில் அமைச்சர் அங்கே டெல்லியில் உட்கார்ந்தாவது அதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாங்கிக் கொண்டு வரவேண்டும். (குறுக்கீடு) 4 வருஷம் அங்கேயே உட்கார்ந்திருந்தாலும். பரவாயில்லை. அவர் சட்டசபைக்கு வராமல் இருப்பதற்குகூட நாம் ஸ்பெஷல் பர்மிஷன் கொடுக்கலாம். இப்பொழுது நாம் ஒரு சட்ட மன்ற உறுப்பினரைப் பார்ப்பது இல்லை. முன்னாள் சபாநாயகர் திரு. கோவிந்தன் அவர்களை, அப்படி அவர் வராமல் இருப்பதற்காக நாமும அனுமதி வழங்கலாம். இந்த சேலம் இரும்பாலை வந்தால் நம்முடைய நாட்டிலிருக்கும் வேலை இல்லாத் திண்டாட்டம் சிறிதளவு குறையும். இந்த மிக முக்கியம் வாய்ந்த திட்டத்திற்கு காங்கிரஸ் ஆட்சியிலேயே திட்டம் தீட்டப்பட்டு விட்டது. ஆகவே இந்தத் திட்டத்திற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்து, உடனடியாக அனுமதி பெற்று வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாலைகளைப் பற்றிச்சொல்ல விரும்புகிறேன். 5 லட்ச ரூபாய் திட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிற எல்லா பஞ்சாலைகளையுமே அரசு எடுத்து நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று பல பஞ்சாலைகள் மூடிக்கிடப்பதால் பல்லாயிரக்கணக்கான பஞ்சாலைத்தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு குறைவாக இருக்கும் இந்த நேரத்தில் இந்த பஞ்சாலைகளை ஓட விட்டால் நல்லது. இதை எடுத்து நடத்துவதில் ஏதாவது தொழில்துறை சிக்கல் இருந்தால், அந்த சிக்கலைத் தீர்க்க என்னென்ன வழிகள் உண்டோ அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் சொன்னால், முதலமைச்சர் அவர்கள் நீங்களே வழி சொல்லுங்கள் என்று சொல்வார்கள். எதிர்க்கட்சியாகிய நாங்கள், துரித நடவடிக்கை எடுங்கள் என்று தான் கூறி, உங்களை உற்சாகப்படுத்த முடியுமே தவிர, வழியை நீங்களேதான் கண்டுபிடித்து கொள்ளவேண்டும்.

தற்போது தொழில் துறையில் அமைதி இல்லை. அமைதி குறைவாக இருக்கிறது என்பதை சட்டசபை முன் வந்த 42-வது விதியின் கீழ் ஒற்றி வைப்புத் தீர்மானங்களே எடுத்துக்காட்டும்.

தொழில் துறையில் அமைதியில்லை என்று சொன்னால், அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசாங்கம் சற்று ஆழமாக யோசித்துப்பார்க்கவேண்டும். தொழிலாளர்களுக்கும் தேவை இருக்கும். மேனேஜ்மெண்டாரும் அவர்களுடைய சுயநலத்தைக் கருதி எப்படியெப்படியெல்லாம் அவற்றை தள்ளிப்போடலாம் என்று பார்க்கக்கூடும். இதை விட சர்க்கார் ஆபீசர்கள் மேனேஜ்மெண்டாரை விட மோசமாக தொழிலாளர்களை நடத்துகிறார்கள். கடுமையாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். சாதாரணமாக, **ஸ்டேட் கவர்ன்மெண்ட் அண்டர்டேக்கிங், சென்டிரல் கவர்ன்மெண்ட் அன்டர்டேகிங், மின்சார வாரியம் போன்றவற்றை** எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கும் அதிகாரிகள் தொழிலாளர்களுக்கு எத்தகைய தொல்லைகள் தருகிறார்கள் என்பதைப் பார்க்கலாம். அதுவும் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவன், டிரேட் யூனியனை சேர்ந்தவன் என்று சொன்னால், அதிகாரிகள் முதலாளிகளை விடக் கொடுமையாக நடந்துகொள்கிறார்கள். இந்தப்பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒரு புதிய ஸ்டேட் கவர்ன்மெண்ட் கமிட்டி **போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாளி தரப்**பிலே. தொழிலாளி தரப்பிலே, தொழிற்சங்கத் தரப்பிலே பேசி பிரச்னை என்ன என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், தொழிற்சங்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறுபட்ட கருத்துக்கள், அக்கறை இருந்தாலும் அரசியல் நோக்கத்தோடு ஈடுபடக்கூடாது. கட்சிக்கோட்பாட்டின் அடிப்படையில் தொழிற்சங்கத்தை நடத்தக்கூடாது. அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு இயக்கம் நடத்தக்கூடாது. அவர்களுடைய அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தொழிலாளர்களுக்கு பாதகம் விளைவிக்கக்கூடாது. இதை அரசாங்கம் யோசித்துப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் மேனேஜ்மென்டாரோடும் உட்கார்ந்து பேசி, அவர்களுடைய பிரச்னை என்ன என்பதை அறிந்து அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களே அந்தந்தத் தொழிற்சங்கத்தில் தலைவராக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும். அப்படி வருகிறவரை பிரச்னை தீராது அவர்களுடைய பிரச்னையை அவர்களே தீர்த்துக்கொள்வதற்கு பலம் தரக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்புறந்தான் இந்த ஏற்பாட்டைக் கொண்டு வரவேண்டும். ஒரு நோஞ்சான் தொழிலாளியைத் தலைவராக வைத்துக் கொண்டு, இயங்குவதென்றால், தொழிலாளிகள் இருப்பதையும் விட்டுவிட்டு அவதிப்படும் நிலைதான் ஏற்படும். ஆகவே, இதில் சற்று யோசித்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது நல்லது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழிற்சங்க வேலைகளில், கட்சி விருப்பு வெறுப்புக்கு இடங்கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, லா அண்ட் ஆர்டர். இன்றைக்கு சட்டம், ஒழுங்கு மிகமிக மோசமான நிலையில் இருக்கிறது. என்னுடைய **தொகுதியில், இரண்டு வாரங்களுக்கு முன்பாக,** ஒரு அம்மையாருடைய வீட்டில் புகுந்து இஷ்டம் போல் சோடாபுட்டி, கற்களை வீசி துன்புறுத்தியிருக்கிறார்கள். போலீஸ் எங்கு இருந்தது என்றே தெரியவில்லை. அப்பொழுது ஒரு போக்குவரத்து பஸ்ஸும் தாக்கப்பட்டிருக்கிறது. அது, முதல் அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். அது எங்கே நடந்திருக்கிறது? 'ஹார்ட் ஆப் தி சிடி' யில், சென்னை நகரத்தின் முக்கியமான, தலைநகரத்தில் முக்கியமான இடத்தில் ஒருவர் மீது சோடா புட்டிகளை வீசி, கற்களை எறிந்திருக்கும் சம்பவம் நடந்திருக்கிறது. இதனால் நிர்வாகத்தில் எங்கோ தளர்ச்சி இருக்கிறது என்பது தெரிகிறது. அவரவர் இஷ்டம்போல் அடிப்பது, உதைப்பது என்ற நிலைக்கு வந்துவிட்டது என்றால். சட்டம், ஒழுங்கு என்ன ஆயிற்று? நான் அமைச்சருடைய சட்டமன்றத் தொகுதிக்குச் சென்றிருந்தேன். அங்கே மக்கள் 'எங்களுக்கு பாதுகாப்பு இல்லையா' என்றார்கள். அமைச்சருடைய தொகுதியே இப்படி என்றால், ஆடிக்காற்றில் அம்மி பறக்கிறது என்றால், இலை சருகுகள் கதி என்னவாகும்? சட்டம் எங்கே? ஒழுங்கு எங்கே? இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் செயல்படுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி வருத்தப்படுகிறேன்.

ஒரு சில நாட்களுக்கு முன்னால், உங்கள் கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு நேர்ந்த கதி பற்றி ஸ்டேட்மெண்ட்டு கூட வந்திருக்கிறது. அவரை பலவந்தமாக நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அவர்கள் பெயிலில் வெளிவந்திருக்கிறார்கள். அந்த அம்மையாரிடம் கலவரம் செய்து, தடி, துப்பாக்கி இவற்றோடு சென்று பயமுறுத்தியிருக்கிறார்கள். அந்த அம்மையார் ஊரை விட்டே வெளியே போய்விட்டார்கள். இப்படி நடக்கிறது என்றால், சட்டம் இருக்கிறதா? அரசாங்கம் இருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய நிலையில் இருக்கிறோம். சட்டம் ஒழுங்கு விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தபடியாக வரும்போது, விலைவாசிகள். விலைவாசிகள் இன்றைக்கு விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிறது. உணவு அமைச்சருடைய கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டு வர விரும்புகிறேன். சர்க்கரை ரூ. 300-க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் மூன்று கிலோ என்றால் அது எப்படிப் போதும்? மூன்று கிலோ சர்க்கரையை வைத்துக் கொண்டு காப்பிக்குப் போடுவதா, மூக்குப் பொடி போடுவதா. பத்துபேர், ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு மூன்று கிலோ என்றால் எத்தனை நாள்களுக்கு ஆகும்? இரண்டு வாரத்தில் தீர்ந்து போகும். காப்பி போட்டே தெரியாத அமைச்சருக்குத் தெரியாது. வீட்டில் அம்மையாரைக் கேட்டுப் பார்த்தால் தெரியும். அதிலும் ரூ. 300-க்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு

கிலோ. இது பெரிய அநியாயம். ஒரு கிலோவை வைத்துக் கொண்டு என்ன செய்வது? விறகு, எண்ணெய், பருப்பு எல்லாம் விஷம் போல் விலை ஏறியிருக்கிறது.

நடுத்தர வகுப்பு மக்கள் அவதிப்படுகிறார்கள். காய்கறிகள் கூட விலையேறிக் கிடக்கிறது. அதுவும் கிலோ, வீசையில்லை. வீசை யென்றாலும், ஒன்றரை கிலோ ஆகும். ஒரு கிலோ கறிகாய்கள் மூன்று பங்கு வீசையின் விலை விற்கிறது இன்றைக்கு. மக்கள் எப்படிக் காலந்தள்ள முடியும்? பதவிக்கு வருவதற்கு முன்னால் கோஷமே, விலைகளை கட்டுப்படுத்துவோம் என்றார்கள். இப்பொழுது மெதுவாக மத்திய சர்க்காரிடம் பொறுப்பைத் தள்ளுகிறார்கள். எல்லாவற்றையும் மத்திய சர்க்கார் தலையில் போட்டால் எப்படி? ஒரு சில பிரச்சினைகளை அவர்கள் பொறுப்பு என்று சொல்லலாம். வேறுபலவற்றை இவர்களே தீர்க்க வேண்டும். அந்தக் கடமை நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கிறது. முக்கியமாக பொருள் களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் இவர்களுக்கு முக்கிய பொறுப்பு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். ரூ. 500 வருமானம் உள்ள குடும்பங்களுக்கு 'பாமிலி கார்ட்' கொடுத்துவிடுங்கள் சர்க்கரை, அரிசி, பருப்பு, மிளகாய் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு அவர்கள் திண்டாடாமல் இருக்கட்டும். ஐந்து பேர்கள், பத்துபேர்கள், கொண்ட குடும்பங்களுக்கு இவ்வளவு என்று கொடுத்தால், சப்ஸிடைஸ்ட் ரேட்டில், குறைந்த விலையில் கொடுத்தால், வியாபாரி களுடைய சூதாட்டத்தைப் போட்டிப்போட்டு தவிர்க்க முடியும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம். திறமையான முறையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க வேண்டும்.

ஒரு மாதத்திற்கு முன்பு ஒருசெய்தி பார்த்தோம். ரீஜனல் டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்ட்ரி சொன்னார்கள் என்று, 'முட்டை விற்கும் வேலையை பட்டதாரிகள் செய்யலாம்' என்று. பாவம் பட்டம் பெற்றுவிட்டு முட்டைதான் விற்க வேண்டுமா? கூடையில் முட்டையைப் போட்டுக்கொண்டுபோய், 'முட்டை, முட்டை' என்று விற்று கமிஷன் பெற்று பிழைக்கலாம் என்று திட்டம் போடுவது? இவையெல்லாம் பிரச்சினைக்கு ஏற்ற திட்டங்கள் இல்லை ,பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்தி இவர் கள் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மை யான எண்ணம்.

கவர்னர் உரை அரசாங்கத்தின் வாயாக வந்தது. அதில் பிரச் சினைகளைத் தீர்க்க திட்டங்கள் தருவார்கள் என்று எண்ணியது இன்னமும் கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. நடை முறையில் இருப்பவற்றை அப்படியே படித்துவிட்டு, சங்கத்தின் ஆண்டு அறிக்கையைப் போல் இருக்கிறதே அல்லாமல், கவர்னர் உரை பிரச்சினைகளுக்கு தரமான வழிகளைக் காட்டவில்லை என்பதால் ஏமாற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டி அமர்கிறேன்.





**திரு. சொ. காவேரி மணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை ஆதரித்து கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் கடுமையாக தாக்கப் பட்ட இந்த உரையில் இருக்கும் சிறப்பான அம்சங்களை எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த முறையில் பார்க்கும்போது,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

முத்தாரமாக, மணியாக, அழகாக, இந்த அரசின் காரியங்கள், இவற்றை நிறைவேற்றுவதில் அரசு எந்த அளவில் கவனம் செலுத்திவருகிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அரசின் செய்கைகள் பிரதிபலிக்கும் முறையில் இந்த உரை அமைந்திருக்கிறது. அது நாமெல்லாம் இந்த அவையில் பெருமைப் படக்கூடிய ஒரு விஷயம். அது மட்டுமல்லாமல், ஏழை எளிய வர்களுடைய வாழ்வை முன்னேற்றம் செய்ய விவசாயத் துறையில், தொழில் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று செய்யப்படும் காரியங்கள் பாராட்டப்பட்டிருக்கின்றன. இவை நாம் கண்கூடாகக் காணும் உண்மைகள். குறிப்பாக. விவசாயத் துறையில் அரசு ஆற்றிவரும் பணிகள் பற்றி பசுமைப் புரட்சி திட்டங்கள் பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் நிலவள வங்கிகளை ஏற்படுத்தி, விவசாயி களை எந்த எந்த முறையில் கடன்கள் கொடுத்து முன்னேறச் செய்ய வேண்டும் என்று செயல்படுவது நமக்குத் தெரியும். அந்தக் கடன்கள் விவசாயிகளுக்கு எந்த அளவில் பயன்படுகின்றன என்பதும் நமக்குத் தெரியும். அதே போல் உரங்கள் விநியோகமும் செவ்வனே நடந்து அந்த அளவில் அந்தத் துறை முன்னேறி வருகிறது. அதையும் ஆளுநர் பாராட்டியிருக்கிறார்கள். அதே போன்று தொழில் துறையில் நம் அரசு ஆற்றியுள்ள பணிகளையும், நாம் மத்திய சர்க்காரோடு வாதித்துக் கொண்டு இருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஏற்படக்கூடிய தொழில்கள் சம்பந்தப்பட்டவற்றையும் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். சேலம் உருக்காலை துவங்குவதில் தாமதம் இருந்தாலும் அதையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மணலியில் வரும் பெட்ரோ-கெமிகல் பற்றியும் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

அதோடு இந்த உரைக்கு முன்னால், பெரும் போர் நிகழ்ந்து இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அந்தப் போருக்கு அடுத்து வந்த முதல் உரை என்ற காரணத்தால், இந்த உரையில் அகில இந்தியத் தலைவர் இந்திரா காந்தி அம்மையார் ஆற்றியுள்ள பணிகள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நமக்கு ஆதரவாக இருந்தவர்கள், வெளிநாட்டவர்கள் செய்துள்ள உதவிகள் இவற்றையும் பாராட்டியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் இரண்டு நாட்களுக்கு முன் பேசிய உறுப்பினர் சொன்னார்கள். இந்த நாட்டு முதல்வர் டாக்டர் அவர்களையும்,

முஜிபுர் ரகிமான் அவர்களையும் ஒப்பிடுகிறோம் என்பதைச் சுட்டிக் காட்டி, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஒப்பிடு கிறார்கள் என்றார்கள். மிகப் பணிவோடு தெரிவிக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில், திராவிட நாடு திராவிடருக்கே என்று குறிப்பிட்டோம். பின்னால் சூழ்நிலைக்கு ஏற்ப அந்தக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் விட்டு விட்டது. நம்முடைய கலைஞர் அவர்கள் இன்றைக்கு மிகத் தெளிவாகச் சுட்டிகாட்டியிருக்கிறார்கள். மாநில சுயாட்சி யையும், மத்தியில் கூட்டாட்சியையும் பற்றித் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். என்றாலும் நாம் மாநில சுயாட்சி கேட்பதை அவர்கள் ஒரு பெரிய போராகக் கருதிக் கொண்டு இருக்கிறார்கள். நாம் வெளியிடுகிற கருத்தை அவர்கள் ஒரு பெரிய போராட்டமாக எண்ணி முதலமைச்சரவர்கள் கூறிய கருத்துக்களைத் திரித்தும், மறைத்தும் வேண்டுமென்றே இப்படி எல்லாம் சொல்லுகிறார்கள் என்பதை நான் நிச்சயமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களை முஜிபுர் ரகிமான் என்று நாங்கள் கூறுகிறபோது அதற்கான முழு முதற்காரணம் முஜிபுர் ரகிமான் மொழியின் மூலமாக ஒரு பெரிய குறிக்கோளை முன்வைத்தார். அதே போன்று டாக்டர் அவர்கள் மொழிப் போராட்டத்தில் பங்கு கொண்டு பலமுறை சிறை சென்று, அதன் மூலம் மக்களைத் தன் பக்கம் இழுத்து பாராட்டத் தக்க விதத்திலே ஒரு சிறந்த தலைவராக ஆகியிருக்கிறார்கள் முஜிபுர் ரகிமானின் குறிக்கோளை, கருத்துக்களை இந்திராகாந்தியவர்கள் கேட்டார்கள் அதே போன்று நம்முடைய கருத்துக்களையும் கேட்க வேண்டுமென்று தான் டாக்டர் அவர்களை முஜிபுர் ரகிமான் அவர்களோடு ஒப்பிட்டுக் கூறுகிறோம். அதைத் தவிர முஜிபுர் ரகிமான் என்று அவரைச் சொல்வதன் மூலம் யாரோ யாகியாகான் போல இருக் கிறார்கள். அதனால் அவரை எதிர்த்து நாங்கள் விடுதலை கேட்கிறோம் என்று வலிய வீம்புக்காக இழித்தும் பழித்தும், இல்லாதது பொல்லாததுகளை யெல்லாம் தெளிவற்ற முறையிலே சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தொடர்ந்து இன்னும் சொல்ல வேண்டுமானால் நம்முடைய ஆளுநர் அவர்களின் உரையிலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக் குழு ஆற்றி உள்ள பணிகளையும், அதே போன்று சதர்ன் ஸ்டக்சுரல்ஸ் லிமிடெட் அவர்கள் சாதித்து உள்ள சாதனைகளையும். இவைகளை ஆளுநர் அவர்கள் மிக மிகப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுக்காக இந்த உரையினைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் அடிக்கடி மதுரை வருகிற நேரத்திலே மதுரை விமான நிலையத்தில் இறங்கி வருவதை நாமெல்லாம் பார்த்துக்





கொண்டிருக்கிறோம். இந்த விமான நிலையத்தைச் சுற்றியுள்ள ஏறத்தாழ 20, 25 கிராமங்களில் இருக்கக் கூடிய முக்கியமான தொழில், மிக முக்கியமான தொழில் மனம் கமழும் மல்லிகை மலர் களை பம்பாய் பகுதிகளுக்கு அனுப்புவதாகும். அவர்கள் செய்கிற தொழில் எவ்வளவு கடினமானது என்பதை நாங்கள் பலமுறை பார்த்திருக்கிறோம். அவர்கள் ஒரு கூட்டு முயற்சியில் இந்தத் தொழிலை செய்வதில்லை. அதன் காரணமாக இந்தத் தொழிலில் ஒரு வளர்ச்சி ஏற்படவில்லை. அவர்களுக்கும் லாபகரமான முறை யில் இந்தத் தொழில் நடைபெற முடியவில்லை. ஆகவே நம்முடைய தொழிலமைச்சரவர்கள் இந்தத் தொழிலுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டுமென்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். மணங்கமழும் மல்லிகை மலர்கள் விளையும் இந்தப் பகுதி யில் ஒரு ஜாஸ்மின் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பாரதத்திலேயே பம்பா யிலே தான் ஜாஸ்மின் தொழிற்சாலை இருக்கின்றது. அதே போல தமிழகத்தில் ஒரு ஜாஸ்மின் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான மூலப்பொருள்களான மல்லிகை மலர்களை அதிக அளவில் தயாராக்க அரசாங்கம் புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். சமீபத்திலே தமிழக அரசு தனியார் வசம் உள்ள 50 பேருந்துகளை, இப்படி 50 பேருந்துகளை வைத்துக் கொண்டிருக்கும் தனியார் நிறுவனங்களைத் தேசிய மயமாக்கினார்கள். அதோடு அந்தப் போக்குவரத்திற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னர்களின் பெயர்களை வைத்து இருக் கிறார்கள். பல்லவா போக்குவரத்துக் கழகம், பாண்டியா போக்கு வரத்துக் கழகம் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது உண்மை யிலேயே பாராட்டப்பட வேண்டிய விஷயம். வரவேற்கத்தக்க விஷயம். இதற்காக நாம் பெருமைப்படுகிறோம்.

ஆனால் அரசாங்கம் 50 பேருந்துகளுக்கு மேல் வைத்திருப்பவர் களுடைய நிறுவனங்களை எடுத்துக்கொள்வது போல், ஸ்மால் ஆப்பரேட்டர்ஸின் பஸ்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட "ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ்"ஸிடம் பணி செய்கின்ற தொழிலாளிகள் இன்றைக்குத் தொல்லைக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த நிறுவனங்கள் இன்றைக்கு நல்ல முறையில் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலுக்கு நிதி உதவி செய்துள்ள பைனான்ஷியர்ஸ் இந்தச் சிறு ஆப்பரேட்டர் வைத்திருக்கும் பஸ்களை பல சந்தர்ப்பங்களில் பறிமுதல் செய்து விடுகிறார்கள். இப்படி இந்த பைனான்ஷியர்ஸ் இந்த பஸ்களைப் பறிமுதல் செய்து தங்களிடம் இந்தப் பேருந்துகளை வைத்துக் கொள்வதால் ஸ்மால் ஆப்பரேட்டர்ஸினால் இந்தத் தொழிலை நடத்த முடிவதில்லை. அதனால் இதில் பணி செய்து கொண்டிருக் கும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மதுரையிலே கிருஷ்ணா மோட்டார்ஸ் நிர்வாகம் 5 பேருந்துகளை வைத்து நடத்தி கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்திற்கு மூலதனம் கொடுத்திருந்த பைனான்ஷியர் இந்த 5 பேருந்துகளில் மூன்று பேருந்துகளை பறித்துக் கொண்டார். இதனால் அங்கு பணி செய்து கொண்டிருந்த 50 தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். நடுத்தெருவிலே நின்று கொண்டிருக்கிறார்கள். ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ் தங்கள் தொழிலைச் சரிவர நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிறுவனங்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது சர்க்கார் போக்குவரத்துக் கழகம் எடுத்துக் கொண்டால் அங்கு பணி செய்கின்ற தொழிலாளிகளுக்கு நல் வாய்ப்பாக இருக்கும். அவர்கள் வாழ்விற்கு ஒரு பாதுகாப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் பற்றி அரசு யோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு இந்த நல்வாய்ப்பினை அளித்தமைக்காக இப்பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இனிமேல் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் 5, 6 நிமிடங்களில் முடித்துக் கொண்டால் நலமாக இருக்கும். இன்னும் பேச வேண்டிய உறுப்பினர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சந்தர்ப்பம் தர வேண்டும். நாளைக்கு அவர்கள் பேச முடியாது. தலைவர்கள் பேசவேண்டி இருக்கும்.

*** திரு. கே. என். குமாரசாமி :** துணைத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களின் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த வங்காள தேச போராட்டத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தேசத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றி அதன் மூலம் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான வெற்றியைத் தேடித் தந்திருக்கிறோம். இதைப் பற்றி நாம் பெருமைப்படும் இந்த நேரத்தில் நம்முடைய முன்னேற்றத்திற்காகத் திட்டங்களை வகுத்து நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதிலே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற காரியங்கள் எந்த அளவிற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். பல வருஷங்களாக பல்வேறு பிரச்னைகளைப் பற்றி பல மெம்பர்கள் ஆலோசனை கூறியிருந்தாலும் அந்த ஆலோசனைகள் இன்றைக்கு எந்த அளவிற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்கும்போது மிகவும் சிறப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர பூரண முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது என்று சொல்கிற அளவிற்கு நிலைமை இன்றைக்கு மாறி விடவில்லை. காரணம் பல்வேறு பிரச்னைகள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. பிரச்னைகளை உண்மையிலே தீர்த்தாக வேண்டும் என்ற முறையில் அரசாங்கம்





பிரச்னைகளை அணுகவில்லை என்பதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. போதுமான அளவிற்கு அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படவில்லை.

விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தாலும் வறட்சிப் பகுதிகளில் இருக்கின்ற பிரச்னைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. அவற்றிற்குத் தீர்வு காண முடியவில்லை. வறட்சிப் பகுதி என்று சொல்கிறபோது விவசாயத் துறையிலே பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதிலே நாம் அக்கறை எடுத்துக் கொண்டு வருகிறோம். அதற்காகப் பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை மாற்றி அமைக்கின்ற முறையிலே மத்திய சர்க்காரோடு சேர்ந்து நடவடிக்கை எடுத்தால் இவற்றிற்குத் தீர்வு காணலாம். இதிலே நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொள்ளவேண்டும். போதிய அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். நீர்ப்பிரச்னை தீர்க்கப்படாததால் அந்தப் பகுதி மக்கள் பின்தங்கியவர்களாக, வறுமையில் ஆட்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளுக்கு இவற்றின் நீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காணாமல் முன்னேற்றத்தை அடைய முடியாது. அரசாங்கம் இந்தப் பகுதியின் பிரச்னையில் அக்கறை எடுத்துக்கொண்டு இந்த வறண்ட பகுதிகள் நீர் வசதி பெறுகின்ற வகையில் மாநிலங்களுக்கிடையிலான நதிப் பிரச்னையில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கோவை ஜில்லாவில் பாண்டியாறு, புன்னம்புழா சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம், கேரள அரசாங்கத்தோடு ஒரு முடிவிற்கும் வர முடியாமல் இருக்கின்றது. அன்றைக்கு அமைச்சரவர்கள் சொன்னார்கள் இந்தப் பிரச்னையை கேரள அரசாங்கத்தோடு விவாதித்து ஒரு நல்ல முடிவிற்குக் கொண்டு வருவேன் என்று. ஆனால் இந்த நதி நீர்ப் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது. எனவே மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல பாண்டியாறில் இருந்து மின்சாரம் எடுப்பதற்கு ஒரு திட்டம் கொண்டு வரப்போவதாக மின்சார அமைச்சர் போன சட்ட மன்றத் கூட்டத்திலே சொன்னார்கள். அப்படி மின்சாரம் எடுப்பதற்கான திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்னையில் மின்சாரக் கட்டணத்தைப் பற்றி இம்மன்றத்தில் சென்ற தடவையும் சொன்னோம். இந்தத் தடவையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு உத்திரவாதம் கொடுக்கின்ற முறையில் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து விடுகின்றோம், ஏற்றுவதில்லை என்று முதலில் சொன்னவர்கள்.

மீண்டும் என்ன காரணத்தினாலோ அக்கட்டணத்தை உயர்த்தி விட்டார்கள். இது சம்பந்தமாக ஒரு பெரிய கிளர்ச்சியே நடைபெற்றது. இன்றைக்கு விவசாயிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், இது நியாயம் தானா, நீங்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி விவசாயிகளுக்கு கஷ்டங்களை உண்டாக்கி விட்டீர்களே என்ற கேள்விக் குறியை எழுப்பிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இது சம்பந்தமாக வேறு ஒரு துறையில் உதவி செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மற்ற தொழில்களுக்கு கரண்டு ஓடுகின்ற அளவுக்கு என்ன கட்டணம் உண்டோ அதை வசூலிக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் பிரத்தியேக கட்டணம் மினிமம் எக்ரிமெண்ட் சார்ஜ் என்றும், அடிஷனல் செக்யூரிட்டி டிபாசிட் என்றும் இரண்டு வகையான கட்டணம் வசூலிக்கின்றார்கள். இது எந்த அளவிற்கு நியாயமாகும் என்பதை சிந்தித்து அந்தக் கட்டணங்களை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனை 6, 7 ஆண்டுகளானாலும் திருப்பிக் கட்டமுடியாமல், மழையில்லாத காரணத்தால் விவசாயமும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் ராஜாஜி மந்திரி சபை இருந்தபோது விவசாய கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்து, விவசாயிகளால் கட்டமுடியாத கடன்களை வஜா செய்ததன் மூலம் விவசாயிகள் காப்பாற்றப் பட்டார்கள். இன்றைக்கு பல விவசாயிகள் கடனில் மூழ்கிப் போகின்ற நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் வரட்சிப் பகுதியில் உள்ள விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களையாவது வஜா செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மிகவும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகியிருக்கிறார்கள் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

குடிநீர் பிரச்னை சம்பந்தமாக. குடி-நீர் வாரியம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. குடிநீர் துறையின் தலைவரவர்களும் எங்களுடைய பகுதியைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். இருப்பினும் இன்னும் சீக்கிரமாக அத்துறை தீட்டியுள்ள திட்டம் செயல்பட வேண்டிய ஆயத்தங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு இந்த ஆண்டிலாவது குடி-நீர் மக்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எல்லா கிராமங்களுக்கும் 1972-ஆம் ஆண்டுக்குள் குடி-நீர் வழங்கி விடுவோம். குடி நீர் பிரச்னையை தீர்த்துவிடுவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1972-ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. என்றாலும் குடி-நீர் பிரச்னை இன்னும் முழுவதும் தீர்ககப்படவில்லை. 1973-74-ஆம் ஆண்டுக்குள்ளாவது தீர்க்கப்படுமா என்று சந்தேகக் குறிகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் கிராம மக்கள். ஆகவே அந்த நிலைமையில் குடி நீர் பிரச்னையை தீர்க்க துரிதமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.





வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதுபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், வேலையில்லாத் திண்டாட்டம் முழுதும் நீங்கி, எல்லோருக்கும் வேலை கிடைக்குமா என்று சந்தேகம் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆகவே புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும். வேலை வாய்ப்பு இருக்கின்ற பிரதேசங்களில் வேலைவாய்ப்புத் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், அதற்கான முறையான திட்டங்களை அரசாங்கம் வைத்திருக்கின்றதா என்று பார்த்தால், ஒன்றும் கிடையாது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதிகமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி இப்பிரச்னையை சமாளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து மூடப்பட்டுள்ள ஆலைகளை திறப்பது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு அறிவிப்பை வெளியிட்டபோதிலும், இன்னும் ஒரு முடிவை மேற்கொள்ளாமல் இருக்கிறது. கோவையில் மூடப்பட்டுள்ள ஆலைகளை திறப்பது சம்பந்தமாகவும், அங்கே 10 ஆண்டுகள், 12 ஆண்டுகளாக டெம்பரரி தொழிலாளிகளாக பணியாற்றிக் கொண்டு வருபவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது சம்பந்தமாகவும். இன்றைக்கு வேலைப்பளு உச்ச கட்டத்திற்குப் போய், செய்யமுடியாத அளவுக்கு தொழிலாளிகள் திணறிக் கொண்டிருப்பது சம்பந்தமாகவும் அந்தத் தொழிலாளிகள் அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கை மிகவும் மந்தமாக இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் துரிதமாக தலையிட்டு அந்தக் கோரிக்கைகளை தீர்க்கவில்லை என்றால், அந்தப் பிரதேசத்தில் மிகவும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் தொழிற்சாலைகளில் அமைதியான நிலை தென்படவில்லை என்று கூறினார்கள். உண்மையில் முதலாளிகள் இன்றைக்கு தொழிலாளர்கள் மேல் எடுக்கும் நடவடிக்கை மிகவும் மோசமாகிக்கொண்டிருக்கிறது. தொழிலாளிகளை மட்டும் குறைகூறினால்போதாது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகள் தீரவில்லை. தொழிற்சாலைகளில் முதலாளிகள் தொழிலாளிகளிடையே சுமுகமான உறவு வரமுடியாத அளவிற்கு இன்றைக்கு சூழ்நிலைகள் இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலைகளில் அமைதி நிலவ வேண்டுமென்றால், போராட்டம் வருவதற்கு முன்னால் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் இருதரப்பாரும், அரசாங்கமும் எடுத்துக்கொள்ளுகின்ற முறையைப் பொருத்துத்தான் அமைதி ஏற்படும். முன்கூட்டியே பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அப்போதுதான் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற தொழிற்சாலைகளிலானாலும், தனியாரிடம் உள்ள தொழிற்சாலைகளிலானாலும் அமைதியான சூழ்நிலை ஏற்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மூடப்பட்ட ஆலைகளில் பல்வேறு பிரச்னைகள இருக்கின்றன. தனியார் துறைகளில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், அரசுத் துறையில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்படுத்தி, எல்லாத் தொழிலாளிகளுக்கும் சீரான வேலைப்பளு, சம்பளம், இதர சலுகைகள் என்ற நிலையை உருவாக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். இன்னும் காலம் இல்லாததால் நான் எடுத்துச் சொல்ல விட்டுப்போன பல விஷயங்கள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி நாட்டு மக்களுக்கு நல்வாழ்க்கை கிடைக்கின்ற நிலையை உருவாக்க முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அதை யாரும் இல்லை என்று மறுக்கமாட்டார்கள். கோவை போன்ற பிரதேசங்களில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்படும் என்று அறிவித்து, சிறிது காலம் போடப்பட்டு இன்றைக்கு திடீரென்று நிறுத்தப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் அதிக விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை மீண்டும் அமுலாக்க அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. மா. வே. நாராயணசாமி :** சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையை நிகழ்த்திய நேரத்திலே நம்முடைய தமிழக அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய பல்வேறு விதமான நல்ல நடவடிக்கைகளைப் பற்றி கோடிட்டுக் காட்டினார்கள். அதில் குறிப்பாக உணவு உற்பத்திக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் நம்முடைய அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய அருமையான பல்வேறு நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நாட்டிலே தொழில் வளர்ச்சி மிக நல்லமுறையில் அமைந்தாக வேண்டும். அப்போது தான் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்கு தீர்க்க முடியும் என்ற அடிப்படையிலே

(திரு எஸ். முருகையன் தலைமை)

தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்துக்கொண்டு வருகிறது அப்படி தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்திலே, நாட்டிலே தொழில் அமைதி இருந்திடவேண்டும். தொழில் அமைதி எல்லோராலும் கடைபிடிக்கப்பட்டாக வேண்டும். தொழிலமைதி பாதிக்கப்படுமானால், நிச்சயமாக தொழில் வளர்ச்சி தடைப்படும் என்பதனை இன்றைய தினம் எல்லோரும் உணர்ந்திருக்கின்றோம்.





தொழிலமைதி நாட்டில் கெடுகின்றது எதனால் என்று ஆராய்ந்தால், அதில் என்னைப் பொருத்தமட்டிலும் மூன்று காரணங்களை நான் திட்டவட்டமாகச் சொல்லிட முடியும். ஒரு காரணம், முதலாளிகள் தொழிலாளிகளை பழிவாங்கக்கூடிய நடவடிக்கைகள் பல மேற்கொள்வதும், தொழிலாளர்களுடைய உரிமைகளை மதிக்காமல் நடந்துகொள்ளுவதும் முக்கிய காரணமாகும். இரண்டாவது காரணம், தொழிற்சங்கங்கள் அதி தீவிரவாதத்தை வைத்து எதற்கெடுத்தாலும் போராட்டம், அந்தப் போராட்டம் நீண்டகால போராட்டமாக இருக்கவேண்டும் என்கிற அளவிலே அரசியல் நோக்கத்திற்காக அல்லது தங்களது சித்தாந்த வெற்றிக்காக தொழிற்சங்கங்களை தவறான திசையில் இட்டுச்செல்லுவது இரண்டாவது முக்கிய காரணமாகும். தொழில் அமைதியின்மைக்கான மூன்றாவது காரணம், தொழிற்சங்கங்களிலே தலைமை பதவிக்காக ஏற்படுகின்ற போட்டிகள். அதன் காரணமாக ஏற்படுகின்ற போட்டிச் சங்கங்களினால் தொழிலாளர்களிடையே பலவிதமான குழப்பங்கள் ஏற்பட்டு, தொழில் அமைதி கெட்டுவிடுகிறது. ஆக இப்படிப்பட்ட மூன்று முக்கியக் காரணங்களால் தான் தொழில் அமைதி நாட்டிலே கெடுகின்றது.

அண்மையிலே சிம்ப்ஸன் தொழில் நிறுவனத்தில் ஏற்பட்டிருக்கின்ற தகராறு பற்றி பலவாறாகப் பேசப்பட்டு வருகிறது. இது எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துள்ள நிறுவனம் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்த மன்றமும் நன்கறியும். இந்த நிறுவனத்தின் தொழில் அமைதி இன்மைக்கு நான் சொன்னதின் மூன்றாவது காரணமேயாகும். அந்தத் தொழிற் சங்கத்திற்கு யார் தலைமை ஏற்கவேண்டும் என்பதிலே ஏற்பட்ட போட்டிதான் ஒரு முக்கிய காரணமாகும். இதை யாரும் மறுக்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே தான், தலைமை போட்டிகளைத் தவிர்ப்பதற்காக, அதன் காரணமாக தொழில் அமைதி கெடுவதைத் தவிர்ப்பதற்காக அரசியல் நோக்கத்திற்காக அதிதீவிர அரசியல்வாதிகளின் சதிவேலைகள் தவிர்க்கப்படுவதற்காக தொழிலாளர்களே அந்தந்த தொழிற்சங்கத்திற்குத் தலைமை ஏற்கவேண்டும்; அதுதான் பொருத்தமாகும் என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை ஆளுநர் அவர்களும் தன் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு பலர் பல்வேறு விதமான எதிர்ப்புகளைத் தெரிவித்திருக்கிறார்கள். பல்வேறுவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே முக்கியமாக கூறப்பட்ட கருத்துக்களில் ஒன்று தொழிலாளியே தொழிற் சங்கத்திற்குத் தலைமைப்பொறுப்பு ஏற்றால் அந்தத் தொழில் நிறுவனத்தின் முதலாளியால், அந்தத் தொழிலாளி பழிவாங்கப்படுவார், அவரால் பணியாற்ற முடியாது என்பது. இரண்டாவதாக, முதலாளிகளோடு தொழிற்சங்கத் தலைவர் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பெறுவதில் சில நுணுக்கமான விவகாரங்களை வாதிட-

வேண்டிவரும்; தலைவராக வரக்கூடியவர் முக்கியமான விஷயங்களை மிக நுணுக்கமாக எடுத்துரைக்கும் தகுதிபெற்றவராக இருக்க வேண்டும்; அது தொழிலாளராக இருக்கக்கூடிய ஒருவரால் முடியாது என்று கூறினார்கள்.

மேற்குறிப்பிடப்பட்ட இந்த காரணங்களையும் வைத்துக்கொண்டு, தொழிலாளி தொழிற்சங்கத்திற்கு தலைமை ஏற்க முடியாது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாக இருக்காது. இதிலே ஏற்படக்கூடிய குறைபாடுகளை அனைவரும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, கூடிப் பேசி சுமுகமான ஒரு முடிவை உருவாக்க முடியும். இது அனைவரும் சேர்ந்து செய்தால் தான் முடியும். நமது முதல்வர் அவர்களும் இநதக் கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

தொழிலாளியால் தலைமை பொறுப்பை ஏற்று சரியாகச் செயல்படமுடியாது என்ற வாதம் என்னைப் பொறுத்தவரையில் சரியாகாது. அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் திருவொற்றியூரில் உள்ள இந்தியா டுபாக்கோ கம்பெனியில் தொழிலாளியாக இருந்தேன். பின் அந்த தொழிற்சங்கத்தின் தலைமைப் பொறுப்பையும் வகித்துள்ளேன். நல்ல முறையில் நடைபெற்று வரும் முக்கியமானத் தொழிற்சாலைகளில் திருவொற்றியூரில் உள்ள இந்தியா டுபாக்கோ நிறுவனமும் ஒன்று. அந்தத் தொழிற்சங்கம் இன்றையதினம் அங்குள்ள தொழிலாளர்களிலே ஒருவர் தலைவராக இருந்து நடத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளியே தொழிற்சங்கத் தலைவராக இருந்தால் அவர் முதலாளியால் பழிவாங்கப்படுகிறார் என்பது ஓரளவு உண்மைதான். ஆனால் இன்றையதினம் அந்த நிலையைப் போக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதற்கு வேண்டிய சட்டத் திருத்தங்களை எல்லாம் மேற்கொள்ளலாம். தொழிலாளியே தொழிற்சங்கத் தலைவராக வந்தால், அவருக்கு வேலைக்கு உத்தரவாதம் வேண்டும். அந்தத் தொழிலாளர் மீது முதலாளி பழிவாங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கக்கூடாது. ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் அரசாங்கத்தை கலந்து ஆலோசித்து, அதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தத் தொழிலாளருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டால் அந்தத் தொழிலாளர் தலைவருக்கு எவ்விதப் பாதகமும் ஏற்படாது. இந்நிலையை எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி, பேசி, உருவாக்கவேண்டும்.

இரண்டாவதாக, பல்வேறு நுணுக்கமான காரியங்களை ஒரு தொழிலாளரால் திறமையாகக் கையாள முடியாது என்று சொல்லப்படுகிறது. வெளியே உள்ள திறமையான ஒருவர் ஒரு தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தாலும், அவரால் தனிப்பட்ட முறையில் நுட்பமான காரியங்களை அணுக முடியாது. மிக மிகச் சிக்கலானப் பிரச்சனைகளைக் கூட அவர் உள்ளே இருக்கும் தொழிலாளர்களைக் கலந்து ஆலோசித்த பின்னால்தான் முதலாளியோடு



விவாதிக்க முடிகிறது. சாதாரண சம்பள விஷயமானாலும் சரி. உற்பத்தி பெருக்கமானாலும் சரி அல்லது வேலை நேரமானாலும் சரி அல்லது எந்தெந்த வேலையை எந்தெந்த அடிப்படையிலே செய்வது என்பதானாலும் சரி, அவற்றை எல்லாம் வெளியே இருந்து வருகின்ற சங்கத் தலைவரும், உள்ளே இருக்கக் கூடியத் தொழிலாளர்களும் கலந்து பேசிய பின்புதான் முடிவு செய்கிறார்கள்.

ஆகையால் நுணுக்கமான காரியங்களிலே தொழிலாளித் தலைவர் திறமையாகச் செயல்பட முடியாது என்று கூறுவது பொருத்தமாகாது. தொழிலாளித் தலைவருக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு அளிக்குமானால் அவரால் எந்தக் காரியத்தையும் எளிதாக அணுக முடியும், என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளித் தலைவரைக் கொண்டத் தொழிற்சாலையில் ஏதாவது தகராறு எழக்கூடிய நிலை வந்தால், அவற்றை அரசாங்க ஆலோசனையோடு தீர்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு ஆலோசனை வழங்குவதற்கு வேண்டுமென்றால் அரசாங்கம் நல்ல, சிறந்த வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்கலாம். அந்தக் குழுவில் சட்ட வல்லுநர்கள், தொழில் நிபுணர்கள், தொழிலாளர் தலைவர்கள் ஆகியோரை நியமிக்கலாம். இந்தச் சூழ்நிலையை உருவாக்கினால் தொழில் தகராறுகள் [illegible] தவிர்க்கலாம் என்று நிச்சயமாக எண்ணுகிறேன்.

தொழிலாளித் தலைவர் இல்லையென்றால், எக்ஸ்-ஓர்க்கரை தொழிற்சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. அதோடு 'நேஷனல் கமிஷன் ஆன் லேபர்' ரிப்போர்ட்டைப் பற்றியும் சொன்னார்கள். சிலர் இங்கு குறிப்பிட்ட மாதிரி, வெளியே உள்ள ஒருவர் [illegible] தலைவராக இருந்தால்தான், தொழிலாளர் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்றோ அல்லது தொழிலாளித் தலைவரால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என்றோ நேஷனல் கமிஷன் ஆன் லேபர் ரிப்போர்ட்டில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, குறிப்பிட்டு எதையும் அவர்கள் சொல்லவில்லை.

ஆகவே, தொழிலாளியே தொழிற்சங்கத் தலைவராக இருப்பதில் பொதுவாக இருக்கக்கூடிய இந்த இரண்டு தடைகளையும் நீக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்ய எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி, பேசினால் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு சுலபமாகத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில தலைவர்கள் சொன்னார்கள். முன்னாள் தொழிலாளராக இருந்தால்—எக்ஸ்-வொர்க்கர்—தொழிற்சங்கத் தலைவராக இருக்கலாம் என்பதாக. இப்படிப்பட்டவர்கள் பல சங்கங்களுக்குத் தலைவராக வர வசதி கிடையாது. தொழிலாளராகவே ஒரு

தொழிற்சாலையில் இருந்து—பழிவாங்கப்பட்டு—அதன் காரணமாக அந்தத் தொழிற்சாலைத் தொழிலாளர்களது அன்புக்குரியவராகி தலைவராகக் கூட வரலாம். அதுபற்றிக்கூட கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர வாய்ப்பிருக்கிறது. பொதுவாக நாட்டில் தொழில் அமைதி இருக்கவேண்டும். தொழிலாளி—முதலாளி தகராறு பெரும் அளவில் வளராமல் நேரிடையாக—சுமுகமாக பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் நல்லெண்ணம் படைத்தவர்கள் அனைவருமே ஆளுநர் அவர்கள் வெளியிட்டுள்ள நல்ல கருத்தை ஆதரிக்கிறார்கள். தொழில் துறையில் உள்ளவர்கள் அனைவருமே வரவேற்கக் கூடிய நல்ல கருத்தாகும் அது. நடைமுறையில் உள்ள சிக்கல்களை நீக்க சட்ட திருத்தங்கள் கொண்டு வரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலையில்லாத படித்த வாலிபர்களுக்கு சிறப்பான முறையில் சிறு தொழில்களை துவக்கக்கூடியவர்களுக்கு உதவி அளித்தும், அவர்கள் உற்பத்தி செய்வனவற்றை விற்பனைக்கு வாய்ப்பு ஏற்படுத்தியும் உதவி செய்யலாம். தொழில் நுட்பத் துறையில் அவர்களை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தைச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்முகத்தான் என் உரையைத் துவங்குவதற்கு முன்பாக "தாயினும் இனிய தாயகம் காக்க, தன்னுயிர் ஈந்த வீர மறவர்களுக்கு" குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கன்னர் ஆறுமுகம், செங்கல்பட்டு முரளி, பரங்கிப்பேட்டை ஹாஜா மொய்தீன் போன்றவர்களுக்கும், இவர்களைப்போல் வீரத் தியாகம் செய்த எண்ணற்ற வீர மறவர்களுக்கு அஞ்சலியைச் செலுத்திக்கொண்டு என் உரையைத் துவங்குகின்றேன்.

இங்கே பேசப்பட்டு நடைபெற்று முடிந்துபோன கடந்த காலப் போரிலே இந்த வீரர்கள் எல்லாம் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல புதியதோர் நாட்டை உருவாக்குவதற்காகவும் இந்திய தலைமை அமைச்சர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிக்கு இந்த நாட்டு மக்கள் சாதி மத இனபேதமன்றி ஒரே மனிதராக நின்று ஆற்றிய பணிகளை எண்ணி மகிழ்வடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட போரில் தமிழகத்தையும், தமிழக மக்களையும் அழைத்து நடத்திச் செல்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்னோடியாக நாம் நிற்கும் வகையில் பற்பல திட்டங்களை உருவாக்கினார். முஜிபுர் ரகிமான் விடுதலை செய்யப்படவேண்டுமென்ற தீர்மானம் மட்டுமல்ல—பங்களா தேசை ஒப்புக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றிய உணர்ச்சியும் பாராட்டப்படவேண்டியதாகும். பெருமை அளிக்கக் கூடிய ஒன்றாகும். அது மட்டுமன்றி தேசிய பாதுகாப்பு நிதிக்கு தமிழகத்தின் சார்பாக பத்துக்கோடியை அள்ளித்தருகிறேன் என்று துணிவோடு சொன்னார் என்றால் அந்தத் துணிவு நம்முடைய முதல்வர்





டாக்டர் கலைஞருக்குத்தான் இருக்க முடியும் என்பதை நினைத்துப் பார்த்து அவருக்கு உறுதுணையாக நாம் எல்லோரும் வேண்டியவைகளை எல்லாம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஆளுநர் அவர்கள் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி எடுத்துச்சொன்ன சிலபல கருத்துக்களை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். வேளாண்மை மிகுந்த நாடு நம் நாடு. அந்த வேளாண்மைத் துறையில் நாம் அடைந்திருக்கிற முன்னேற்றங்கள் இந்த நாடு முன்னேற்றப் பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல.

மக்களது முன்னேற்றத்திற்கு உணவு எப்படி அவசியமோ அப்படி அதற்கடுத்து உடை, அதற்கடுத்து இருக்க இடம், குடிக்க நீர் ஆகியவை அவசியமாகிறது. இவற்றை எல்லாம் அடைவதற்கு பற்பல வாரியங்களை ஏற்படுத்தி அந்த வாரியங்கள் மூலம் இந்தக் காரியங்கள் செம்மையான முறையில் செயல்பட்டு வருவதைக் கண்டு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். இன்னும் பற்பல திட்டங்கள் இந்த வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். அதை அவைகள் செய்யும் என்று நாம் நம்புவோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் மிகவும் உதவக்கூடியது கூட்டுறவுத் துறை. அந்தத் துறை மூலம் இன்னும் நல்லமுறையில் பல காரியங்களைச் செய்யும் வகையில் அது செயல்பட்டாக வேண்டும். சிறு விவசாயிகளுக்கு உதவுவது, பேஷன் என்றல்லாமல் உண்மை உணர்வுடன், சிறுசிறு விவசாயிகளுக்கும் இன்னும் சிறந்த முறையில் இந்தக் கூட்டுறவுத்துறை மூலமாக உதவி செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பற்றி ஆளுநர் அவர்கள் எடுத்துகூறியிருக்கிற விஷயங்களுக்காக நாம் நிச்சயமாக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தொழிற் துறை வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்ய நம்முடைய அரசும், மத்திய அரசும் பெரிதும் உதவியிருக்கிறது. தூத்துக்குடியில் வருகிற உரத் தொழிற்சாலை, கன நீர்த் தொழிற்சாலை பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் கூடச் சொன்னார்கள். அதேநேரத்தில் அப்படிப்பட்ட தொழில்களை எல்லாம் விஞ்ஞான முறையில் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த அணுசக்தி கமிஷன் தலைவர் விக்ரம் சாராபாய் இன்று நம்மிடையே இல்லையே என்று வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தொழில் துறையில் ஒரு அமைதி மட்டுமல்ல—தனியார் முதலீடு செய்வதற்கு இருக்கும் தயக்கத்தைப் போக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாலே பற்பல வகைகளிலும் இந்த நாட்டில்

தொழில் வளர்வதற்கு மிக்க வசதியாக இருக்கும். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கும் என்றால்தான் தனியார் முதலீடு தொழில் துறையில் அதிகமாகப் பெருகுவதற்கு வழியேற்படும். தனியார் தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் பல கோடிக்கணக்கான ரூபாய்களை போட்டிருப்பது மட்டுமல்ல, சிறுசிறு தொழில்களிலும் அவர்கள் மூலதனம் போடுவதற்கு வேண்டிய ஊக்கமளித்து தொழில் வளர்ச்சி நல்லமுறையில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே' என்பதாக சேலத்தைப்பற்றி பெருமையோடு பேசவேண்டிய நிலை இன்னமும் ஏற்படாததுபற்றி ஆளுநர் அவர்கள் தம் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சேலம் இரும்பு உருக்காலையை ஏற்படுத்துவதற்கு நாம் மத்திய அரசை துரிதப்படுத்த வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

இன்னும் வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைப் பகுதியில் கிடைக்கும் இரும்பு தரமானதாக இருக்கக்கூடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஜப்பான் நாட்டு ஒத்துழைப்பின்பேரில் அங்கே ஒரு தொழிற்சாலையை அமைக்கும் திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆளுநர் உரையில் அது இல்லை என்றாலும் எதிர்காலத்திலாவது உரிய நேரத்தில் அது சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்கிற என் வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிபற்றி பேசுகின்ற நேரத்தில் முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் வாலாஜாபேட்டையில் ஒரு தொழிற்சாலை 5 லட்சம் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு ஆண்டு காலமாகிறது. அதற்கான இயந்திரங்களை வாங்கும்போதே அவை சரியான முறையில் வேலை செய்வதை வைத்து பரீட்சித்துக்காட்டிய பின் அதற்கான பணத்தைப் பெறுவது என்பதாக உடன்பாடு இருந்தும் வேலை செய்யாத இயந்திரத்தைக் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். பணத்தையும் வாங்கிப் போய்விட்டார்கள். அந்த அளவில் நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது. நமது தொழில் அமைச்சர் அவர்கள் நிர்வாகத்திறமை மிக்கவர், அவர் இந்த குறையை போக்க வேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் வந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி 5 லட்சம் மூலதனம் செய்த தொழிற்சாலை ஒரு ஆண்டு காலமாக இயங்கவில்லை என்பதோடு கூட—இனி அதை இயங்கச் செய்வதற்கு இன்னும் ஒரு ஆண்டுக்காலம் ஆகலாம் என்கிற நிலைமை இருப்பது கண்டு வருந்தவேண்டியதாக இருக்கிறது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். முன்கூட்டியே தகுந்த எச்சரிக்கையுடன் இருந்தாகவேண்டும்.





இன்றையதினம் தொழில் துறையில் தொழிலாளர்கள்—முதலாளிகளிடையே நல்லுறவு சீர்குலைந்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் அரசியல் வாதிகள் ஏற்படுத்துகின்ற சிக்கல்கள்தான். இதைச் சிந்திக்க வேண்டிய நிலையில் நாடு இருக்கிறது. இதன் காரணமாக பலவிதமான தொழிற்சாலைகள் மூடப்படுகிற சூழ்நிலை உருவாகக்கூடாது என்பதற்காகத்தான் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம், அந்தச் சங்கத்திற்கும் ஒரு தொழிலாளியே தலைவராக வரும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வரவேற்கத்தக்க கருத்து. ஆனால், ஏனோ தெரியவில்லை—மதிப்பிற்குரிய சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் மற்ற காங்கிரஸ் அங்கத்தினர்களும் கூட தொழிலாளரே தலைவராக வருவதை ஆதரித்துப் பேசவில்லை. அவர்கள் ஆதரித்துப் பேசாதது ஆச்சரியம் இல்லை. தொழிலாளர்களுடைய விஷயத்தில் என்றைக்குமே பழைய காங்கிரசார் அதிக அக்கறை காட்டி வந்திருப்பதாக நாடு நினைக்கவில்லை. நானும் நினைக்கவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தொழிலாளர்களைப்பற்றி அதிக அக்கறை முஸ்லீம்லீக் கட்சிக்கு இருப்பதைப்பற்றி நாங்கள் எல்லாம் பாராட்டுகிறோம். சிம்சனில் என்ன நடந்தது, பழைய காங்கிரஸ்காரர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது குறித்து, சென்னை மாநகரம் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் இருப்பவர்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆகவே, வீணாக பழி சுமத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, நான் பழி சுமத்தவில்லை. என்ன நடந்தது என்பது நாடு பூராவுக்கும் தெரியும். அடுத்தாற்போல கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் தொழிலாளர்களின்பால் அதிக அக்கறை கொண்டிருப்பார்கள் என்பதால் அவர்களாவது ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம், அதன் தலைவர் தொழிலாளராகவே இருக்க வேண்டும் என்கிற கொள்கையை வரவேற்றிருப்பார்கள் என்று பார்த்தால். அவர்களும் ஒப்புக்கொள்ளவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, பொதுவாக தொழிற்சங்க விஷயத்தைப்பற்றி நண்பர் வகாப் எடுத்துப் பேச ஆரம்பித்தது எங்களுக்கெல்லாம் சந்தோஷம். பொதுவாக தொழிலாளர்களே இருக்க வேண்டுமென்ற நிலை இருந்த காரணத்தால் 1926-ம் சட்டம் வந்த பின்னால், இருக்கக்கூடிய திருத்தத்தில், அதிகாரபூர்வமான அங்கத்தினர்களையும் நிர்வாகக் கமிட்டியில் இருப்பவர்கள் மூன்றில் ஒரு பங்கு வெளியாரும் இருக்கலாம் என்று சட்டத்திலே இடம் இருக்கிறது. வெளியார் தொழிற்சங்கத்திற்கு தலைவராக இருக்க வேண்டுமா. அல்லது உள்ளே இருப்பவர்கள் தலைவராக இருக்க வேண்டுமா என்ற பொறுப்பு தொழிலாளர்களுக்கு இருக்கிறது. பல தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைவராக இருந்துகொண்டு நடத்திக்கொண்டு வருகிறார்கள். அங்கே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் மட்டு

மல்ல, அங்கே பணிபுரிந்து வெளியேறிய தொழிலாளர்களும் இருக்கலாம். எல்.ஐ.சி., பேங்க், என்.ஜி.ஓ. சங்கங்கள் போன்றவற்றில் எல்லாம் அவர்களே தலைவர்களாக இருந்து நடத்திக்கொண்டு போகிறார்கள். தனியார் துறையில் இன்றைக்குக்கூட சில இடங்களில் வெளியார் தலைவராக இருந்தால்தான் முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை ஒரு 'டாக்மேடிக் பொசிஷன்' ஆக எடுத்துக்கொள்ள முடியாது. தொழிலாளர்களே தலைவராக இருக்க வேண்டுமென்பது ஏ.ஐ.டி.யு.சி. யின் கருத்தாக இருக்கிறது. மேலும், தொழிலாளர் என்று சொல்லும்போது, அங்கே பணிபுரிகிற தொழிலாளி, முன்னர் அங்கே பணிபுரிந்து பழிவாங்கப்பட்டவரோ அல்லது ராஜினாமா செய்த மாஜி தொழிலாளியாகவோ இருக்கலாம். அவர்களையும் தொழிலாளர் என்றுதான் கூற வேண்டும். நண்பர் மா. வெ. நாராயணசாமி போன்றவர்களும் ஒரு தொழிலாளியாக இருந்தவர். எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் முன்பு ரயில்வே தொழிலாளியாக இருந்தவர். தொழிலாளராக உள்ளவர்கள் அரசியல் கருத்துக்கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவேதான் நான் பேசும்போதுகூட தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், தொழிற்சங்கத் தலைவராக யார் இருப்பது என்பது பற்றியும். ஜனநாயக ரீதியில் 'இவர்தான் தலைவராக இருக்க வேண்டும்' என்று கட்டுப்படுத்தக்கூடாது என்றேன். வெளியில் இருப்பவர்களும் தலைவராக இருக்கலாம்.

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. உங்கள் கட்சி உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் அமருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே. திரு. கே. டி.கே. தங்கமணி அவர்கள் பேரவையிலே, ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் இருக்க வேண்டும் என்றும், அந்தத் தொழிற்சாலையின் தொழிலாளரே அதன் தலைவராக வர வேண்டும் என்றும் அவர்கள் எண்ணத்தைத் தெரிவித்தார்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலைபார்த்த மாஜி தொழிலாளி வரவேண்டுமென்று இப்போது சொல்கிறார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா ? அப்படி சட்டமாவதைப்பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இதை ஒரு 'டிபேட்டிங் பாயின்டாக' மாற்ற நான் விரும்பவில்லை. பொதுவாக இப்போதைய நிலையை எடுத்துச் சொன்னேன். தொழிலாளர்கள் யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது குறித்து, அவர்களுக்கு முழு உரிமை கொடுக்க வேண்டும். பழிவாங்கப்பட்ட தொழிலாளியும் தலைவராக வரலாம். தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொழிலாளர்களின் உரிமை.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது மக்களுக்குள்ள உரிமை. அதேபோல் தொழிற்சாலையில் தொழிற்சங்கத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொழிலாளர்களின் உரிமை என்று கொடுத்துவிடலாம். வெளியார் தலைவராக இருக்கக்கூடாது. இந்தவகையில் சட்டத்தை அமலாக்கலாமா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** வெளியாரே இருக்கக்கூடாது என்று 'ரெஸ்ட்ரிக்ட்' பண்ணுவது என்பது இன்றைய நிலைமையில் சரியில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியானால் தாங்கள் அன்று கூறிய கருத்தை இப்போது மாற்றிக்கொண்டதற்கு என்ன காரணம் ? யாருடைய நிர்ப்பந்தம் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதிலே எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலே தொழிலாளரே தலைவராக இருந்தால் பிரச்சினை தீரும் என்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். அதுதான் இடைஞ்சலாக இருக்கிறதென்றால், அப்படிச் செய்யலாம் என்றேன். இன்றைக்கும் கூறுகிறேன். அது எந்த முறையில் பயன்படுத்தப்படுகிறது என்று சிந்தித்தால் அன்று சொன்னது பொருந்தும். அப்படிச் சொன்னது தவறுதலாக இருக்கிறதென்று சுட்டிக்காட்டியிருக்கலாம். தொழிற்சங்கத்தின் தலைவராக இருக்கக்கூடியவர்கள் மிகவும் பக்குவப்பட்டவர்களாக இருக்க வேண்டும். சில இடங்களில் வெளியார் தலைவராக இருக்க வேண்டுமென்று சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்குக்கூட ஆவடியில் இருக்கும் தொழிற்சங்கத்திற்கு என்னைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். சில இடங்களில் சில தொழிற்சாலைகளில் தலைவருக்கு அந்தஸ்து தருகிறார்கள். சிம்சன் போன்றவற்றில் தலைவருக்கு என்று விசேஷ அந்தஸ்து தருகிறார்கள். சில விஷயங்களில் தொழிலாளர்களே நேரில் பேசவேண்டியிருக்கிறது. சில விஷயங்களில் வெளியார் தலைவராக இருந்தால்தான் முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிகிறது. அப்படி ஒரு மசோதா வரும்போது. இன்னும் விரிவாக இதைக் குறித்துச் சொல்ல முடியும் என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே. தொழிலாளர்களுடைய தலைமை பிரச்சினைபற்றி வாதம் நடைபெற்றது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது, திரு. வகாப் அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகுறித்துப் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது என்று கூறினார்கள். நான் கூறிக்கொள்கிறேன், நண்பர் கே. டி. கே. தங்கமணி அவர்களைவிட தொழிலாளர் பிரச்சினையைப்பற்றிப் பேசுவதற்கு திரு. வகாப் அவர்கள் அதிகமான தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில். உழைப்பாளியின் வியர்வை உலருவதற்கு முன்பே ஊதியத்தைத் தந்துவிட வேண்டும் என்று கூறிய நபிகள் நாயகத்தைத் தலைவராகக் கொண்டவர் திரு. வகாப் அவர்கள். தொழிலாளருக்கும் எங்களுக்கும் தொடர்பு அதிகமாக உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் சொல்லாததையெல்லாம் நீங்கள் எதற்காகச் சொல்கிறீர்கள்?

**திரு. எம். ஏ. லத்தீப் :** பத்தாயிரம் தொழிலாளர்களைக்கொண்ட தொழிற்சங்கத்திற்கு நானே தலைவனாக இருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு தொழிற்சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறார். நான் துணைத் தலைவனாக இருக்கிறேன். முஸ்லீம் லீக் கட்சிக்கும் தொழிலாளர்களுக்கும் தொடர்பு இல்லையென்று சொன்னது சரியல்ல என்பதை கனம் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வகாப் அவர்களுடைய நேரம் அதிகமாகிவிட்டது. சீக்கிரம் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. கே. ஏ. வகாப் :** காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளைவிட முஸ்லீம் லீக் கட்சிக்கு தொழிலாளர் பிரச்சினையில் அதிக அக்கறை இருக்கிறது. எங்களுக்கு அக்கறை இருக்கிறதா இல்லையா என்பதை முஸ்லீம் லீகின் தலைவர் காயிதே மில்லத் அவர்களுடைய சரித்திரமே கூறும். அன்னார் இன்றைய தினம் ஜனாதிபதியாக வீற்றிருக்கக்கூடிய திரு. வி. வி. கிரி அவர்களுடன் நல்ல முறையில் தொழிலாளர்களுக்காகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். நாங்கள் தொழிலாளர்களுக்காக உழைக்கிறோம் என்பதை நாங்கள் உலகுக்குப் பறை சாற்றிக்கொள்ளவில்லை, விளம்பரப்படுத்திக்கொள்ளவில்லை. தொழிலாளர்கள்பால் முஸ்லீம் லீக் கட்சிக்கு அதிக அக்கறை இருக்கிறது. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்கிற நல்ல கருத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

அரசியல் கட்சிகள் எப்படியாவது தங்களுடைய செல்வாக்கை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக—பழைய காங்கிரஸாக இருந்தாலும், கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி—பல வழிகளில் வேலை செய்கின்றன. கட்சியின் நலனைவிட நாட்டின் நலனை உத்தேசித்துச் சங்கம் செயல்பட வேண்டும். எந்தத் தொழிற்சங்கமாயிருந்தாலும், கம்யூனிஸ்ட், காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக் எந்தக் கட்சி சார்புடையதாக இருந்தாலும் நாட்டின் நலனை உத்தேசித்து, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்கிற நல்ல கருத்தை ஏற்றுக்கொள்வது சாலச் சிறந்ததாகும். தொழிற்சங்கத் தலைவர் தொழிலாளரே தலைவராக இருக்க வேண்டுமென்கிற கருத்துச் சொல்லப்பட்டது. தொழிலாளர்களுடைய பிரச்சினையை அவர்களே நல்ல முறையில் நிர்வகிக்க முடியும். நல்ல திறமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஒரு வேளை அரசியல் கட்சிகளுக்கு இருக்கக்கூடிய பலம் எங்கே போய் விடுமோ என்று அச்சப்படுகிறார்கள். நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்கள் இந்த இரண்டு கருத்துக்களுக்கும் நல்ல ஆதரவு தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து வேலையில்லாத பிரச்னை. மிக முக்கியமான பிரச்னை. ஹைட்ரஜன் பாம், ஆட்டம் பாம் எவ்வளவு அபாயகரமானதோ அதே மாதிரித்தான் படித்தவர்களிடையே ஏற்படுகின்ற வேலையில்லாத் திண்டாட்டமும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் இலங்கையிலே படித்தவர்களிடையே ஏற்பட்ட வேலையில்லாத பிரச்னை பெரிய பிரச்னையாகக் கிளம்பிவிட்டது. அம்மாதிரி நம்முடைய நாட்டிலேயும் ஏற்படாத வகையிலே வேலையில்லாத பிரச்னையில் அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலைகள் அளிப்பதிலே முஸ்லீம் சமுதாயத்திற்கு அளிக்கப்பட வேண்டிய பங்கைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னோம். மத அடிப்படையில் இல்லை. முஸ்லீம் மக்களுடைய குறைகளைப் பேசுவதற்கு வேறு யாரும் இல்லை. முஸ்லீம் மக்களுடைய ஸ்தாபனம் முஸ்லீம் லீக்தான் என்ற முறையிலேதான் சொல்கிறோம். முஸ்லீம்கள் மிகவும் பிற்பட்ட நிலையிலே இருக்கிறார்கள், பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மற்றத் துறைகளிலும் வேலைவாய்ப்புத் துறையிலும் அவர்களுக்குச் சலுகைகளை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உருது பேசுகின்ற முஸ்லீம்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னபொழுது அவர்கள், காலம் கனியவில்லை என்று சொன்னார்கள். பிறகு கனிந்துவிட்டது என்று சொன்னார்கள். இரண்டுமே கனிந்துவிட்டன. கருணைமிக்க அவர்களுடைய உள்ளம்தான் கனியவேண்டும். சலவைத் தொழிலாளர்கள், நாவிதர்கள் இவர்களையும் ஷெட்யூல்ட் வகுப்பிலே சேர்க்க வேண்டும். அதைப்போன்றே உருது பேசுகின்ற முஸ்லீம்களையும் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கவேண்டும்—முதலமைச்சர் அவர்கள் உறுதி சொல்லியிருந்தாலும்—நாங்கள் அதை நம்பிக்கைக்குரிய வாக்குறுதியாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். உருது பேசுகின்ற முஸ்லீம் மக்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். உங்களுடைய கருணைமிக்க உள்ளம் இதற்கும் கனியட்டும் என்று கேட்டுக்கொண்டு. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மற்றவர்கள் எல்லாம் குறைவாக நேரம் எடுத்துக்கொண்டார்கள். நீங்கள் மட்டும் 20 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள், முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** இவை கூறி என் உரையை முடிக்கின்றேன்.

* **திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டில் மக்களுக்குத் தேவையானவற்றைக் கொடுக்கக் கூடிய விவசாயிகளுக்கு, அவர்கள் அதிகமாக உணவு உற்பத்தி செய்வதற்கு. தமிழக அரசாங்கம் பல கோடிக் கணக்கான ரூபாய்கள் கடனாக அளித்து, நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்

களை மக்களுக்கு அளித்திருக்கிறது என்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்திலே விவசாயிகளுக்குத் தேவையானது பாசன அபிவிருத்தியாகும். அணைகளைக் கட்டியாக வேண்டும், அந்த முறை இருந்தால்தான் விவசாயம் வளர்ச்சி யடையும். என்னுடைய தொகுதியிலே மருதா நதி அணை கட்டப் படவேண்டுமென்று பல ஆண்டுக்காலமாக கோரிக்கை விடப் பட்டது. அந்தக் கோரிக்கை இந்தச் சமயம் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மருதா நதி அணை என்றுதான் போட்டிருந்ததே தவிர அந்த அணைக்கு எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. அந்த அணைக்கு இந்த ஆண்டாவது போதுமான நிதி ஒதுக்கி வேண்டிய வேலைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சின்னக் கோம்பை அணை, பெரிய கோம்பை அணை என்ற அணைக்கட்டுகளையும் கட்டி முடித்தால்தான் என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் தொகுதியில் விவசாயம் வளர்ச்சியடையும். ஆத்தூர் விவசாய வளர்ச்சி அடைந்த பகுதி என்ற எண்ணம் சிலரிடத்திலே இருக்கிறது. ஆத்தூர் கிராமம்தான் விவசாயத்திலே வளர்ச்சியடைந்திருக்கிறதே தவிர, அந்தத் தொகுதியிலே இருக்கிற பல 34 கிராமங்கள் விவசாயத்திலே பின்னடைந்த நிலையிலே நீர் வசதியில்லாமல் விவசாயிகள் கஷ்டப் படக்கூடிய நிலைமையில்தான் இருக்கின்றது, எனவே மேற்கூறிய திட்டங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மின்சாரத்தைப்பற்றி ஆளுநர் அவர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த ஆண்டு எல்லாக் கிராமங்களிலேயும் மின்சாரம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குப் பம்புசெட்டுகள் அமைக்கக்கூடியவர்களுக்கு மின்சாரம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஒரு கால அளவு வைத்து மின்சாரம் அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்தால்தான் அவர்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வையும் ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார் கள். விலைவாசி உயர்வினால் ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுகிறார் கள். விலைவாசி ஏற்றத்தை ஓரளவாவது குறைக்கவேண்டும். என்னுடைய வட்டத்தில் ரூ. 1.70 காசிலிருந்து ரூ. 2.50 காசுகள் வரை அரிசியின் விலை இருக்கிறது. அதிகமாக ஏறியிருக்கக்கூடிய விலையைக் குறைத்தால்தான் ஏழை எளிய மக்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே கைத்தறி நெசவாளர்கள் பற்றி ஒரு வரிகூடக் குறிப்பிடாமல் இருப்பதைக்குறித்து கைத் தறித் தொழிலிலே ஈடுபட்டு இருக்கக்கூடிய என்போன்றவர்கள் வேதனை அடையவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நாம் பேசும் பொழுது எல்லாம் விவசாயத்திற்கு அடுத்தது கைத்தறிதான்



என்று பேசுகிறோம். ஆனால் அவர்களுக்குத் தேவையானதுபற்றி ஒரு வரிகூட குறிப்பிடாததை நினைக்கும்பொழுது வேதனைப்படக் கூடியதாக இருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் கஷ்டங்களைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதிக மாக அவர்களுக்கு நியாயமான விலையில் நூல்கள், செயற்கை பட்டு போன்றவை கிடைக்கச் செய்யவேண்டும். அவர்கள் அதிகமான விலையிலே வாங்கி உற்பத்திசெய்து விற்பனையாகும்பொழுது, விற்பனையாகாமல் கஷ்டப்படக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதற்கு, நூல், செயற்கைப்பட்டு போன்றவை நியாயமான விலையில் அவர்கள் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை அரசாங்கமே கொள்முதல் செய்து வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் அவற்றை விற்கச்செய்ய ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறித் தொழிலிலே ஈடுபடுகின்றவர்களுடைய குழந்தைகளின் கல்வி, உத்தியோகம், தொழில் இவற்றில் முதலிடம் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் என்ற அமைப்பை கைத்தறி நெசவாளர்களுக்கு உதவிசெய்வதற்காக அமைத்திருக்கிறார்கள். அந்த அமைப்பிற்காக 32 லட்சம ரூபாய்தான் முதலீடு செய்திருக் கிறார்கள். தமிழகத்திலே ஏறக்குறைய 5 லட்சம் கைத்தறி நெச வாளர்கள் இருக்கிறார்கள். 32 லட்சம் ரூபாய் முதலீடு என்பது போதாது. உதாரணமாக ஒரு கைத்தறிக்கு 6 ரூபாய் என்ற அளவிற்குத்தான் உதவி செய்யமுடியும். ஆகவே, அதிகமாக ஒரு கோடி ரூபாய் அளவுக்காவது நிதி ஒதுக்கி இந்தக் கார்ப்பரேஷன் மூலமாக கடன் உதவி கிடைக்க செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நிதிக் கழகத்திலே புதிதாக அங்கத்தினர் கள் சேர்க்கவேண்டுமென்றால் அதற்கு வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். புதிதாக அங்கத்தினர்கள் சேர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அவர்களுக்குக் கடன்கொடுக்கும்பொழுது கூட 11 சத வீதம் என்ற நிலைமையிலே வட்டி அவர்கள் கொடுக்கவேண்டிய நிலைமையிருக்கிறது. அந்த வட்டி வீதத்தைக் குறைத்து 5 சத வீதம் என்ற அளவிலே அவர்களுக்கு கடன் உதவிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவரவர்களே, தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் நமது மாநிலத்தில் பதவி ஏற்ற பின்னர் முதல்முதலாக சட்டமன்ற கூட்டத்தில் பேசியிருக்கிறார் கள். மொழியால் அன்னார் வேறு மாநிலத்தவராயினும் நாட்டுப் பற்றிலும் கடமை உணர்ச்சியிலும் தமிழக மக்களில் தாமும் ஒருவர் என்னும் உணர்ச்சியோடு அவர் பேசியிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களுக்குப் பணிபுரிவதில் உங்களுக்கு உறு துணையாய் இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன் என்பதாக அவர் கூறியுள்ள வாசகம் நம்முடைய மனங்களில் பதியத்தக்க ஒன்றாகும்.

பாகிஸ்தானின் ஆக்ரமிப்பை முறியடித்த சாதனையையும், வங்கத்தில் நடந்த இனக்கொலையைத் தடுத்து அந்த தேசத்திற்கு விடுதலையைத் தேடித் தந்த செயலையும் சுட்டிக் காட்டி இந்த பெரும் சாதனைகளுக்குக் காரணமான பாரதப் பிரதமரையும், பாரதத்தின் முப்படைகளையும் அவர் பாராட்டி இருப்பது மிகவும் பொருத்தமானதாகும். இந்த சோதனை மிக்க நேரத்தில் நம் தேச பக்தி மிக்க டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையிலுள்ள இந்த மாநில அரசு மத்திய அரசுடன் முழு அளவில் ஒத்துழைத்ததை ஆளுநர் மிகவும் பெருமையோடும் பெருமிதத் தோடும் சுட்டிக் காட்டியுள்ளார்.

போர் மேற்குத் திசையிலும். கிழக்குத் திசையிலும்தான் நடந்தது என்றாலும், தெற்கு திசையிலுள்ள தமிழக அரசு மிகுந்த தேச பக்தியுடன் தேசீய ஒருமைப்பாட்டு உணர்ச்சியுடனும் செயல் பட்டதாக மன்றம் பெருமைப்பட்டுக் கொள்ள உரிமை உண்டு. போர் நிதிக்கு அதிகப் பட்சத் தொகையாக பத்து கோடி ரூபாய் திரட்டுவது என்று வரம்பு வைத்துக் கொண்டு, போர் நின்று விட்ட நிலையிலும் அதனை சாதித்துக் காட்ட, நம்முடைய முதல்வர் மேற் கொண்டு வரும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு சமுதாய முன்னேற்றத்தில் கடந்த ஆண்டு சாதித்துள்ளவற்றையும் வரும் ஆண்டில் சாதிக்க இருப்பவற்றையும் ஆளுநர் தமது உரையில் எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். குறிப்பாக உணவு உற்பத்தி தன்னிறைவுப் பெறத் தக்க நிலை அடைந்திருப்பதை ஆளுநர் மன நிறைவுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். அதனை வரவேற்கும் அதே நேரத்தில் உணவுப் பண்டங்களின் விலைகள் மக்கள் வாங்கும் சக்தியும் மீறி உயர்ந்துக் கொண்டே இருப்பதை எடுத்துக் காட்ட வேண்டியது என் கடமை யாகும். உணவுப் பொருள் உற்பத்தியாளர்களின் நலன்களுக்கு, கேடில்லாமல் விலைவாசிகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது அரசின் கடமை என்பதை நினைவூட்டுகிறேன். ஆனால் விலைவாசிகளை கட்டுப்படுத்தும் சக்தியோ, சாதனங்களோ இந்த மாநில அரசுக்கு இல்லாத வகையில் அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப் பட்டிருக்கின்றன என்பதை நான் உணருகின்றேன்.

பிற்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்கான நிதி ஒதுக்கலை தமிழக அரசு ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்திருப்பதனை ஆளுநர் எடுத்துக் காட்டியிருக்கிறார். அதனை நான் வரவேற்கின்றேன். பிற்பட்ட வகுப்பினருக்கு ஆண்டுதோறும் சிற்சில சலுகைகள் வழங்குவதிலேயே முற்பட்ட ஜாதிகளுடன் அவர்களை சமத்துவ நிலைக்குக் கொண்டு வந்துவிட முடியும் என





நான் நம்பவில்லை. பிற்பட்ட ஜாதிகளைச் சார்ந்த தனி நபர்களுக்குச் சலுகைகள் வழங்குவதோடன்றி இந்த சமுதாயம முழுவதுமே உய்வதற்காக வழிகளைக்காண வேண்டும். பிற்பட்ட வகுப்பினர் நலக் குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வருமென்றும் நம்புகிறேன்.

மாநில அரசின் பொருளாதார நிலை சீர்கேடு அடைந்திருப் பதை ஆளுநர் மிகுந்த வேதனையோடு தனது உரையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். அந்த நிலை மாறுவதற்கான வழிகளையும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் அது போதுமானதன்று. மத்திய அரசிடம் மாநில அரசு பெற்றுள்ள கடன் தொகையின் ஒரு பகுதியை மானியமாக மாற்றுவதினாலேயே இந்த மாநில அரசின் பொருளாதார நிலை உயர்ந்துவிடப் போவது இல்லை. ஆளுநர் கூறியிருப்பது போன்று மத்திய அரசின் நிதி நிலைமையோடு, மாநில அரசின் நிதி நிலையும், நெகிழ்ச்சித் தன்மைப் பெற்றதாகச் செய்யப்பட வேண்டும். அதற்கான ஒரே வழி மத்திய அரசிடம் உள்ள ஆண்டு தோறும், பெருகிக் கொண்டே போகும் வருவா யுடைய வரியினங்கள் சிலவற்றை மாநில அரசுக்கு மாற்றித் தரு வதுதான். இதுபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடவில்லை.

பின் தங்கிய வகுப்புகளின் நலன்களில் அக்கறை காட்டுவதைப் போல் பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சியில் அரசு அக்கறை காட்ட வேண்டும். நீண்ட காலமாக திருத்தணி வட்டம் புறக் கணிக்கப்பட்டுள்ளது. ஆந்திர ராஜ்யத்தில் அந்தப் பிரதேசம் இருந்தபோது பல தலைமுறை காலம் புறக்கணிக்கப்பட்டது.

தமிழகத்தோடு இணைந்தபின் இங்குமங்குமாகப் பல அபிவிருத் திகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் திட்டமிட்ட வகையில் இந்த முன்னேற்றம் அமையவில்லை. பிற்பட்ட பிரதேசம் எனக் கொண்டு அதன் நலன்களை கவனிப்பதற்கென்று தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் ஆளுநர் உரையை மிகுந்த நன்றியறிதலோடு இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ளப் பிரேரணையை தமி ழரசுக் கழகச் சார்பில் ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் புதிய திட்டம், கொள்கைகள் இடம் பெற வில்லை. மாநிலத்திலே உள்ள பிரச்னைகள் பல ஆளுநர் உரையில் இல்லை. உரையின் ஆரம்பத்தில் போர் வெற்றியைப் பற்றிக் குறிப் பிடப்பட்டிருக்கிறது, அது வரவேற்கத்தக்கது. போரின் வெற்றியைப்போல் பொருளாதாரப் பிரச்னையில் நாம் வெற்றி காணவேண்டும். வறுமையை நம் முதல் பகைவன் என்று கருதி வறுமையை ஒழிக்கப் பாடுபட வேண்டும். ஆளுநர் அவர்களின் உரையில் பொருளாதாரப் பிரச்னை பொதுவாகக் கூறப்பட்டிருக் கிறதே தவிர அதற்குப் பரிகாரம் வழிவகைகள் குறிப்பிடப்பட வில்லை. மாநிலத்தை இன்றைக்கு எதிர்நோக்கி இருக்கும் பிரச்னை களாக உள்ள வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு

ஆகிய பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் கூறப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் வேலையில்லாப பிரச்னை என்றுமில்லாத அளவிற்கு இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் அவைகளைப் போக்க எடுக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆளுநர் உரையில் பத்தாவது பக்கத்தைப் பார்க்கும்பொழுது, "நடந்து முடிந்த ஆண்டில், வேலையில்லாப் பிரச்சினையை அரசு பல கோணங்களில் அணுகிப் பார்த்தது. இதில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது இளைஞர் அணி அமைக்கப்பட்டதாகும்" என்று கூறப்பட்டிருக்கிறது—இன்னும் இளைஞர் அணியில் ஏறத்தாழ 2,000 தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு நன்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுத்த முக்கிய நடபடி இளைஞர் அணி சேர்த்துக் கொள்ளப்பட்டவர் 2,000. இந்த மாநிலத்தில் அநேக லட்ச மக்கள் வேலையில்லாமல் திண்டாடும்பொழுது வெறும் 2,000 பேர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு கொடுத்திருப்பது என்பது அது ஒரு சிறிய நடவடிக்கை ஆகும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே பக்கத்தில், "படித்தவர்களிடையே நிலவிவரும் வேலையின்மையைப் போக்கும் பொருட்டு, தொழில் முனைவோர்கள் புதிய தொழில்களைத் தொடங்க, இந்திய அரசின் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் இவ்வரசு கருதுகிறது. இதற்கென ரூ. 48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் ஜனத்தொகையைப்பார்க்கும் பொழுது இந்த 48 லட்சம் ரூபாயை வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது மாநிலத்தின் ஜனத் தொகையைப் பார்க்கும் போது நபர் ஒன்றுக்கு வெறும் 10 காசுதான் ஆகிறது. ஆகவே, இந்தப் பெரிய பிரச்னைக்கு போதிய முக்கியத்துவம் கொடுத்ததாகக் காணப்படவில்லை. இதுபோலத்தான், விலைவாசி உயர்வும். இன்றையதினம் அத்தியாவசியப் பண்டங்களுக்கும் விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆதலால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வைத் தடுக்க பெரிய முயற்சிகள், திட்டங்கள் வகுத்ததாகக் கூறாமல், எந்தெந்தத் திட்டங்களினால் அரசு விலைவாசியைக் குறைத்திருக்கிறது என்று கூற இயலாமல் விலைவாசி விவரம் கவலை தருவதாகவே இருந்து வருகிறது என்று மட்டும் கூறப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்பொழுது விலைவாசியைக் குறைக்க இந்த அரசால் முடியுமா என்பதில் நம்பிக்கை இழந்ததுபோல் தோன்றுகிறது. எனவே உற்பத்தியைப் பெருக்கவும், நேர்மையான விநியோகம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் 10-வது பக்கத்தில் நாம் பார்க்கும்பொழுது, ஒரு தொழிலுக்கு ஒரு யூனியனும், தொழிற் சங்கங்களுக்குத் தொழிலாளர்களே தலைவராக இருக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறியிருப்பது அரசியல் சட்டம் ஆர்டிக்கிள்



19 (1) சி-யில் கூறப்பட்டிருக்கும் உரிமையைப் பறிப்பதாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அரசியல் சட்டத்தில் ஆர்டிகிள் 19 (4)-ல் கூறக்கூடிய ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்ஸ் (Reasonable Restriction) இருக்கலாம் என்று கூறப்பட்டிருப்பது, இவ்விதமான ஒரு முடிவைக் கட்டுப்படுத்தாது, அதைக் காத்துக் கொள்ளாது என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனெனில் ஆர்டிகிள் 19 (4)-ல் பப்ளிக் ஆர்டர், மொராலிட்டிக்கு பங்கம் ஏற்படக்கூடிய நிலைமையிருந்தால்தான் ரீசனபிள் ரெஸ்டிரிக்ஷன்சாக இருக்க முடியும். ஆனால் ஒரு தொழிற்சங்கம் அமைக்கப்படுவதற்குமுன் தொழிற் சங்கம் நடக்க ஆரம்பிப்பதற்கு முன் அதன் நோக்கங்கள் அறிவதற்கு முன் ஒரு தொழிற்சங்கமே அமைய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகையால், ஆர்டிகிள் 19 (1) சி-யின் பிரகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையைப் பறிப்பதாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள முயற்சிக்கிறேன்.

இது சம்பந்தமாக உயர்நீதி மன்றங்கள் பல தீர்ப்புகளை வழங்கி இருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் திரு. ராம கிருஷ்ணா வெர்ஸஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டு (1952 மெட்ராஸ் 253) என்பதிலே தீர்ப்பும், ஆந்திரா ஹைகோர்ட்டில் சீதாராமசாரி வெர்ஸஸ் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் (1958 ஏ.பி. 78) என்பதில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பார்க்கும் போது, அதன் ஸ்பிரிட்டைப் பார்க்கும்போது ஆர்டிகிள் 19 (1) (சி)-ல் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை அரசின் இவ்வித நடவடிக்கை பறிப்பதாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இது நடைமுறையில் வருமானால் இதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் காக்கும் திறமையான தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் அவர்களிடத்திலிருந்து பறிக்கப்படுகிறது. பொதுவாழ்வில் உள்ள தன்னலமற்ற திறமைசாலிகளின் சேவையும் இந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. தொழிலாளர்கள் மேல் அவர்கள் விரும்பாத காரியம் சட்டம் மூலம் சுமத்தப்படுகிறது. தொழிலாளர்கள் தாங்களாகவே ஒரு தொழிலாளியைத் தேர்ந்தெடுப்பது வேறு, தொழிலாளர்கள் மேல் நிர்ப்பந்தமாகத் திணிக்கப்படுவது வேறு. தொழிலாளர்களில் இருந்து தலைவராக வருகின்றவர்கள் தலைவர்களாக இருப்பதற்கு இப்போது பக்குவம் அடைந்திருப்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் கூற முடியாது. தொழிலாளர்கள் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். எஃபெக்டிவ் ஆக காரியங்களை எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் இருக்காது.

தேர்தல் வரும்போது கட்சி வந்துவிடுகிறது. நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கட்சி வந்துவிடுகிறது. எவ்விதமாகச் சட்டம் அமைந்தாலும் எஃபெக்டிவ் ஆக செயல்படாது என்பதை அறிய

வேண்டும். இதைத்தான் நாம் பஞ்சாயத்துத் தேர்தல்களிலே காண்கிறோம். ஆகையால் இத்தகைய ஒரு முடிவை எடுக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் நாம் வேளாண்மைத் துறையில் மாநிலம் பெரிய வெற்றி கண்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. சுதந்திர இந்தியாவில் ஆரம்ப காலத்தில் மத்திய அரசும் மாநில அரசும் பல திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளின் சின்னங்கள்தான் காட்சியளிக்கக்கூடிய அணைக் கட்டுகள். நவீன முறையில் பலவிதமான விவசாயத் திட்டங்கள் அன்றே வகுக்கப்பட்டன. இன்றும் அவற்றையேதான் பின்பற்றி வருகிறது. ஆனால் இன்று விவசாயத்தில் வேகம் குறைந்ததாக நடைமுறைகளில் காணப்படுகிறது. விவசாயிகளுக்கு எலெக்ட்ரிக் கனெக்ஷன் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. கடன் கொடுப்பதில், உரம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. விவசாயி களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடனை எல்லாம் விவசாயத்திற் காகத்தான் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்காணிக்க அரசு நடபடி எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார அபிவிருத்தியிலும் முந்தைய அரசின் திட்டங்களைத் தான் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. பல்ப் ஃப்யூஸ் ஆனால் மாதக் கணக்காக மாற்றப்படாத நிலைமை இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ரயில்வே இல்லாத குறை இருக்கிறது. சமீபத்தில் இதுபற்றிய அறிவிப்பில் இப்போது இதை எடுத்துக்கொள்ள "ரெயில்வே போர்ட்" தீர்மானித்தால் மூன்று ஆண்டுகளில் வேலை முடிந்துவிடும் என்று கூறப்படுகிறது. கன்னியாகுமரி ரயில்வே பாதைக்கு பிரையாரிடி கொடுத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தொழில் இல்லாத மாவட்டமாக இருக்கிறது. ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த பல வாய்ப்புகள் இருக்கின்றன. அதனை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். குளச்சல் துறைமுகம் தமிழ்நாட்டுக்கு மேற்குக் கடற்கரையில் இருக்கும் ஏக துறை முகம். அதை அபிவிருத்தி செய்ய அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். குழித்துறை ஆற்றில் மாங்காடு, ஞாறமிளைக்கடவு, தீக்குரிசி போன்ற இடங்களில் பாலங்களை கட்ட நடபடி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கு. இராசமாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்களின் பேருரைக்கு மாண்புமிகு திரு. கந்தப்பன் அவர்களின் நன்றி கூறும் தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





ஆளுநர் அவர்கள் நடந்து முடிந்த யுத்தத்தைப் பற்றிக் குறிப் பிட்டிருக்கிறார்கள். நாம் யுத்தத்திற்கு எந்த விதமான ஆயத்தமும் இல்லாதிருந்த நேரத்தில் அது நம்மைத் தேடி வந்த காரணத்தால் தர்ம யுத்தத்தை நடத்தி பெருவெற்றி பெற்றிருக்கிறோம். அந்த வெற்றியைப் பெறுவதற்கு உழைத்த முப்படைத் தளபதிகளுக்கும், தியாகம் செய்த படைவீரர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாநில அரசின் பொருளாதார நிலைமைபற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது இந்த மாநில மக்களுடைய வாழ்க்கையைச் செப்பனிடுவதற்குப் போதாத நிலையில் இருந்த போதிலும் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த மாநில அரசு வேளாண்மைத் துறையிலும், மற்ற தொழில் துறை களிலும் முயன்று நிறைவை ஏற்படுத்தி இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். ஒருகாலத்தில் அரிசி கிடைக்கவில்லை, சர்க்கரை கிடைக்கவில்லை, எண்ணெய் கிடைக்க வில்லை என்ற நிலை எல்லாம் மாற்றப்பட்டு இன்றையதினம் அது எல்லாம் தாராளமாகக் கிடைக்கிற அளவுக்கு, பொருளாதாரக் குறைபாடு இருக்கின்ற நிலையிலேயே, தங்களுடைய கவனத்தை இந்த அரசு செலுத்தி விரைவாக நடவடிக்கை எடுத்து நிறைவு செய்திருக்கிறது.

இந்த நிறைவு தமிழகத்தில் மேலும் அதிக அளவு தொடர்ந்து ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். இன்றைய நிலையில் கிராமங்களுக்கு பஞ்சாயத்துகள், அதிகாரம் இல்லாமல் யூனியன் இருப்பது போல்—நமது மாநில அரசு அதிகாரமற்ற முறையில் ஒரு மாநில பஞ்சாயத்தாக அதிகாரம் இல்லாமல் தமிழக அரசு இருக்கக்கூடாது என்பதற் காகவும், தன்னுடைய காரியங்களை மக்களுக்குச் செய்வதில், எந்தவித இடையூறும் இருக்கக்கூடாது என்பதற்காகவும், விரைந்து செயல்பட வேண்டுமென்பதற்காகவும், கூடுதலான உரிமைகள் வேண்டுமென்று கேட்கப்படுகிறதே தவிர, மத்திய அரசைப் பலவீனப்படுத்த வேண்டுமென்பதற்காக அல்ல, சீர் குலைக்க வேண்டுமென்பதற்காக அல்ல. நடந்து முடிந்த இந்த யுத்தம் 14 நாட்கள் நடந்த நேரத்தில் யாருமே கூறாத, கேட்காத நேரத்தில் தமிழக முதல்வர் அவர்கள் 10 கோடி ரூபாயை நாட்டின் பாதுகாப்பு நிதிக்காக தமிழகம் கொடுக்கும் என்று அறிவித்தார்கள். தமிழக மக்கள் வாழ்க்கையில் பின்தங்கிய வர்களாக இருந்தாலும் கூட, நமது தலைவர் கேட்கிறார் என்ற அடிப்படையில் அதை மனதார ஏற்று பெரு மழையின் வெள்ள மாகப் பாதுகாப்பு நிதி சேருகின்ற அளவுக்கு நாட்டு மக்கள் உள்ளத்தில் முதல்வர், கலைஞர் அவர்கள் இடம் பெற்றிருக் கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பத்து கோடி ரூபாய் அளவுக்கு, எந்த ஒரு மாநிலமும் இவ்வளவு பெரிய தொகை அளவிற்குக் கூட அல்ல. கொடுக்கிறேன் என்று கூட யாரும் சொல்லவில்லை. மத்திய அரசு வலிவுள்ளதாக இருக்க

வேண்டுமென்பதற்காகத்தான் முதல்வர் அவர்களால் அவ்வாறு அறிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் மாநில அரசு தன்னுடைய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள உரிமைகளைப் பெற வேண்டுமென்று சொன்னால் பிரிவினை வாதம் என்று சொல்லுகிறார்கள், வங்க தேசத்தைக் காட்டுகிறார்களே என்று எதிர்தரப்பிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இன்று கழகத்தை எதிர்த்து நிற்க முடியாது என்பதற்காக மத்திய அரசின் மூலமாக ஏதாவது தகராறை ஏற்படுத்தலாம் என்ற நோக்கத்துடன் சொல்லுகிறார்கள். அப்படிக் கூறுகிறவர்கள் இந்த நாட்டு மக்களுக்குத் தீங்கிழைப்பவர்களே தவிர வேறல்ல. ஏதோ பிரிவினை வாதத்தை மறைமுகமாகக் கூறுவதாக, உருவாக்கிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவது நல்லதல்ல. அதிகாரம் வேண்டுமென்று கேட்பதை யாருடைய வீட்டிலும் கொண்டு போய் வைத்துக் கொள்வதற்காக அல்ல. இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் உரிமைகள் கோரப்படுகின்றனவே தவிர வேறல்ல.

வேளாண்மைத் துறையில் எவ்வளவோ முன்னேறி வந்திருக்கிறோம். அதற்காக எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டப்பகுதியில் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. 6 வருடத்திற்கு முன்பு இரு போக சாகுபடி செய்து வந்தவர்கள் இப்போது தமிழக அரசின் பசுமைப்புரட்சி திட்டத்தின் காரணமாகவும், மின்சார பம்பு செட் வசதி, பாசன வசதி, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வசதி, பூச்சி மருந்து, உரங்கள் ஆகியவைகள் தந்ததன் மூலமாகவும் இருபோக சாகுபடி, முப்போகச் சாகுபடி, கோடை கால பயிர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். இன்றையதினம் விவசாயத்துறையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்து இருக்கிறோம். அந்த அளவுக்கு உற்பத்தி இருந்தபோதிலும், உற்பத்தி செய்கிறவர்கள் நிலை சில இடங்களிலும் தஞ்சை மாவட்டப் பகுதிகளில் மோசமாக இருக்கிறது.

கோவில், மடங்கள் போன்ற நிலங்களை குத்தகை, வார விவசாயம் செய்பவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் ஒரு போகச் சாகுபடி செய்வதற்கே வாய்ப்பை இழந்து இருக்கிறார்கள். மற்றும் கோயில், மடங்களில் உள்ளவர்கள் கூடுதல் குத்தகை, வாரம் கொடுக்க வேண்டும் என்பதால் இருபோக சாகுபடி செய்வதற்கு அனுமதி கிடைப்பது இல்லை. அவர்களுடைய நிலையை யாரும் கவனிக்காததால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் விரும்பிய சாகுபடியை செய்வதற்கும் கோயில், மடங்களின் அதிகாரிகள் அவர்களை அனுமதிப்பது இல்லை. அதற்கான தனி மசோதா ஒன்று கொண்டு வந்தால், அவர்கள் இருபோக சாகுபடியோ அல்லது மூன்று போக சாகுபடியோ ஐ.ஆர். 8 போன்றவைகளைப் பயிரிடுவதற்கோ, கரும்பு, பருத்தி முதலியவைகள் பயிரிடுவதற்கோ வசதி செய்து கொடுக்கலாம். இதற்கு அத்தியாவசியமான



பொருள்களை அவர்களுக்கு குறைந்த விலையில் வாங்கிக்கொடுக்க வேண்டும். அரசாங்கம் இப்போது பெரு நிலச் சொந்தக்காரர்களிடத்தில் உள்ள நிலங்களை எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த மாதிரி, கோவில், மடாலயங்கள் நிலத்தையும் அரசு ஒரு உச்ச வரம்பு நிர்ணயித்து, அவற்றை எடுத்துக்கொள்ளலாம். அதை எடுத்துக்கொண்டால், இதன் மூலம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து தர முடியும். அவர்களுக்கு வேண்டிய உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகளையும் அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி-கொள்ளிடம் ஆற்றின் நடுவில் மண்ணியாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. இந்த ஆற்றிலே உள்ள பிரச்னை என்னவென்றால், இதனுடைய நுழைவாயில் மணல் அதிகமாக வருகிறது. இப்படி மணல் அதிகமாக வருவதால் தண்ணீர் வருவது இல்லை. கொள்ளிடத்தில் தண்ணீர் வந்தாலும் இந்த மண்ணி ஆற்றில் தண்ணீர் வருவது இல்லை. அதனால் பாசன வசதி இந்த ஆற்றின் பகுதிக்கு சரியாக செய்ய முடிவதில்லை. இந்தத் தலைப்பை சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கோ. சி. மணி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நமது முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது, அவர்களே அதைப் பார்த்து இருக்கிறார்கள். இந்த வேலையைச் செய்து கொடுத்தால் திருப்பனந்தாள், பந்தநல்லூர் ஆகிய கடைமடைப் பகுதியில் நல்ல நீர்ப்பாசன வசதி ஏற்படும். இதற்கு ஒரு நல்ல திட்டத்தினை ஆராய்ந்து அதை அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தற்போது ஆற்றின் தலைப்பு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இதை உடனடியாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத் தொடர்ந்து கவனித்து விவசாயிகளுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரை இந்த அரசின் நல்ல எண்ணங்களையும், செயல்களையும் படம்பிடித்துக் காட்டுவது போல் காட்டுகின்றது. பல வகையான நன்மைகளை செய்யக் காத்திருக்கிற முதலமைச்சர் அவர்களோடு இந்த நாட்டு மக்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கு. அ. பொம்மன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் பேருரை மீது நடக்கக்கூடிய இந்த விவாதத்தில் கலந்து கொண்டு இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த உரையில் ஆளுநர் அவர்கள் கடந்த போரில் நம்முடைய முப்படையினர் ஆற்றிய போரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே நாம் ஜாதி, மதம்,

இனம், மொழி, கட்சி பாகுபாடின்றி அமைதியும் ஜனநாயகமும் நீடூழி நிலைத்து நிற்க வேண்டுமென்ற உறுதிமொழி அடிப்படையில், அதை மெய்ப்பிக்கின்ற வகையில் இந்தப் போரை குறுகிய காலத்திலேயே—14 நாட்களுக்குள்ளேயே—வெற்றியடையச் செய்து இருக்கிறார்கள். அதே சமயத்தில் நமது மாநில அரசு இந்தப் போரிலே உயிர் நீத்த வீரர்களின் குடும்பத்திற்கு பல சௌகர்யங்களைச் செய்து கொடுத்து இருக்கிறது என்றும் இந்த உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாஜி ராணுவத்தினரையும் நாம் மறக்கக்கூடாது. பல மாஜி ராணுவத்தினருக்கு இப்படிப்பட்ட சௌகர்யங்களை நாம் இன்னும் செய்யவில்லை என்று பல முறையீடுகள் வந்திருக்கின்றன. ஆகவே, இந்தப் போரில் தன்னுயிரை இழந்த போர் வீரர்களின் குடும்பத்தினருக்கும்—அந்த மாஜி ராணுவத்தினரின் குடும்பத்திற்கும்—இப்படிப்பட்ட சலுகைகள் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசின் நோக்கம், ஏழை எளியவர்களின் நலனை அபிவிருத்தி செய்வதுதான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நாம் வரவேற்க வேண்டியதுதான். ஆனால், இன்றைய தினம் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிறார்கள், பணக்காரர்கள் பணக்காரர்களாகவே இருக்கிறார்கள். இந்த ஏழைகளின் வாழ்வு மலரவேண்டுமானால், கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு செய்ய வேண்டிய பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். பல நல்ல திட்டங்களை நிறைவேற்றவேண்டும். கிராமங்கள் மலர்ந்தால்தான் நகரங்கள் மலரும். நகர்கள் மலர்ந்தால்தான் மாநிலம் மலரும். ஆகவே என்னென்ன நல்ல பல திட்டங்களை நிறைவேற்றினால் அந்த மக்களின் வாழ்வு மலருமோ அவற்றை நிவைேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் வேளாண்மையில், உணவு உற்பத்தியில் 3.84 சதம் உயர்ந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டு இருக்கிறது. பொதுவாக நல்ல வளர்ச்சியைக் கண்டிருந்தாலும், சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகியவற்றில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் சரியான விளைச்சல் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே மழை பெய்யாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே உள்ள விவசாயிகள் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அவர்கள் அவல நிலைமையில் இருக்கிறார்கள். அந்தப்பகுதியை ஏற்கெனவே, பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்று சர்க்காருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் விண்ணப்பம் செய்து இருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு அந்தப் பிரதேசத்தை பஞ்சப்





பிரதேசம் என்று அறிவித்து பஞ்சப் பிரதேசங்களுக்கு செய்ய வேண்டிய சகலபணிகளையும் உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடன்கள் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு விவசாயிகள் முடியாமல் திண்டாடுகிறார்கள். விவசாயிகள் வாங்கியுள்ள இந்தக் குறுகிய காலக்கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும், நீண்டகாலக் கடன்களுக்கு தவணையை அதிகரித்தும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தோ-ஜெர்மன் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் உருளைக்கிழங்கு விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு விதை கொடுப்பதற்கு அந்தப்பண்ணையில் விதையில்லை. அங்கே உள்ள விதைப் பண்ணைகளில் பனி விழுந்த காரணத்தால் கருகிப்போய்விட்டதால் விவசாயிகளுக்கு விதை கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு விதை கிடைப்பதற்கு கஷ்டமாக இருப்பதால், ஏற்கெனவே பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாத காரணத்தால், மேற்கொண்டு கடனை வாங்கி விவசாயிகள் விதை வாங்கி பயிர் செய்ய முடியவில்லை. ஆகவே, அந்தக் கடன்களை திருப்பி வசூல் செய்வதை கொஞ்சம் காலங்கடத்தியும், புதியதாக கடன்கொடுப்பதற்கும் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த பூச்சிகொல்லி மருந்து கிடைக்காமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்கு பூச்சிகொல்லி மருந்துகளை அரசாங்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றைப் பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகுக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** உருளைக்கிழங்குக்கு போடும் பெஸ்டிசைடா அல்லது வேறு பெஸ்டிசைடா, எது கொடுக்கவேண்டும்?

**திரு. கு. அ. பொம்மன்:** அடுத்தபடியாக, கிராம மின்சாரம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் மின்சார முழுமை விழாக்கள் கொண்டாடிவருகிறோம். நீலகிரியில் தான் அதிகமான மின் சக்தி உற்பத்தி செய்யப் படுகிறது. ஆனாலும், என்னுடைய தொகுதி தோட்டப் பகுதியாக இருப்பதால், தொழிலாளிகளுக்கு முதலாளிகள் மின் வசதிகள் செய்து கொடுப்பதில்லை. ஆகவே, மின்சாரத் துறை அமைச்சரவர்கள் முதலாளிகளோடு பேசி, தொழிலாளிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த உரையிலே கிராமப்பணிகள் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் ரோடு வசதி சரியாக இல்லை. பஞ்சாயத்து ஏரியாவில், ரோடுகள் போட பஞ்சாயத்துக்கு வசதி இல்லை. விவசாயப் பொருள்களைக் கொண்டு செல்ல, வாகன வசதி களும் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நிதி வசதியில்லாத நிலையில் பஞ்சாயத்துக்களும் இருப்பதால், அந்த ரோடுகளை சர்க்காரிலேயே மராமத்து இலாகாவிலே எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில். மற்ற ஜில்லாக்கள்போல் இல்லாமல், மலைகளாக இருப்பதால், சாதாரணமாக ஒரு ரோட்டுக்குக் கொடுப்பதைவிட இரண்டு மடங்கு நீலகிரிக்குக் கொடுக்க வேண்டும்.

கடைசியாக, அரிஜன மக்களுக்கு தொகைகள் ஒதுக்கி யிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரிஜனங் களுடைய ஜனத்தொகை அடிப்படையில் அது போதாது. அரிஜனங்களுக்கு நிலம், வீடு கொடுப்பதுபற்றி தனிக் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், வீடு நிலம் கொடுக்க வசதிகள் குறைவாக இருக்கிறது. கேட்டால் தடை உத்தரவு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பரிசீலனையை உடனடியாக செய்து முடித்து மக்களுக்கு வீடு, நிலம் கொடுக்க தக்க வழியில் ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகளைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதியில் அரிசி விளைவு மிகக் குறைவு. கூடலூர் பகுதியில்தான் ஒரு குறிப்பிட்ட இடங்களில் விளையும். மற்றப் பகுதிகளுக்கு வேறு வேறு ஜில்லாக் களிலிருந்துதான் வரவேண்டும். விலை அதிகமாக இருப்பதால், எங்கள் பகுதியில் 'பேர் ப்ரைஸ் ஷாப்'கள் அமைத்து, மக்களுக்கு அரிசி முதலியவற்றை விநியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்தோடு என் உரையை முடிக்கிறேன். ஆனால், போதிய நேரம் இல்லாததால் என் கருத்துக்களை பூராவும் சொல்ல முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, நாளைக்காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*

22. Notification issued with G.O. Ms. No. 15, Excise and Prohibition, dated the 17th August 1971 in regard to certain amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]





23. Notification issued with G.O. Ms. No. 2380, Home, dated the 30th August 1971 in regard to an amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

*B. Reports, Notifications and Other Papers*

26. Erratum issued with Roc. No. 164237/69, dated the 25th February 1970 to the notification published on page 420 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th December 1969, relating to bifurcation of Madampatti Town Panchayat.

இணைப்பு

[218ம் பக்கத்தில் 62-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

STATEMENT SHOWING THE PARTICULARS OF NO OBJECTION CERTIFICATE GRANTED FOR LOCATING SEMI-PERMANENT CINEMAS IN TAMIL NADU).

| Serial number. (1) | Name of the district. (2) | Name of taluk. (3) | Name of the village. (4) | Name of the licensees. (5) |
|---|---|---|---|---|
| I | THANJAVUR .. | 1. Nannilam .. | Nannilam .. | Thiru K. S. Sundaram, Kornad, Mayuram. |
| | | 2. Kumbakonam .. | Swamimalai .. | Thiru S. Ramaswami, Swamimalai. |
| | | 3. Aranthangi .. | Aranthangi .. | Thirumathi J. Hema, Aranthangi. |
| | | 4. Pattukottai .. | Nathanikottai .. | Thiru M. A. Muthuswamy, Athaloor, Peravurani. |
| | | 5. Pattukottai .. | Keeramangalam .. | Thiru V. R. Subramaniam, Keeramangalam. |
| II | RAMANATHAPURAM. | 1. Sattur .. | Sivagasi .. | Thiru K. S. Palaniappa Nadar, Sivagasi (Theatre isfunctioning from 15th July 1971.) |
| | | 2. Ramanathapuram. .. | Rameswaram .. | Thiru S. K. Janaludeen, Rameswaram. |
| | | 3. Rajapalayam Sub-taluk. .. | Seithur .. .. | Thiru N. Paul Nadar. |
| | | 4. Paramakudi .. | Parthibanoor .. | Thirumathi M. Perisha Beevi, Parthibanoor. |





| | | | | |
|---|---|---|---|---|
| III | CHINGLEPUT .. | 1. Saidapet .. | Nandambakkam .. | Jayanthi Talkies (Functioning at present). |
| | | 2. Pallipet Sub-taluk. .. | Podathurpet .. | Sanjeeviyar Theatre. |
| | | 3. Saidapet .. | Ambattur .. | Thirumathi R. Abranji Ammal. |
| | | 4. Maduranthakam | Maduranthakam .. | Thiru P. Ganapathi. |
| | | 5. Saidapet .. | Thiruvanmiyur .. | Thirumathi K. Savithri. |
| | | 6. Do. | Kodungaiyur .. | Thiruvalargal Punniakotti Naicker and Devilakshmanan. |
| | | 7. Do. | Saligramam .. | Thiru S. R. Elangovan, |
| | | 8. Do. | Pazhaverkadu .. | Thiru P. A. Kumaran. |
| | | 9. Do. | Nanganallur .. | Thiru W. Govindaraju. |
| | | 10. Do. | Old Gummidipoondi. .. | Thiru Obul Reddy. |
| | | 11. Do. | Kunnathur .. | Thiru M. Nithiyanandam. |
| | | 12. Do. | Nandivaram .. | Thiru M. V. Ramu. |
| | | 13. Do. | Zamin Pallavaram | Thiru D. Ramanujam. |
| | | 14. Do. | Thiruvanmiyur | Thiru D. Ramanujam. |
| IV | TIRUCHIRAPPALLI. .. | 1. Tiruchirappalli .. | K. Abisekapuram .. | Thiru B. Keerthikumar, Mannarpuram, Thiruchirappalli. |
| | | 2. Do. | Do. | Thirumathi N. Saroja, Palakarai, Thiruchirappalli. |
| | | 3. Musiri .. | Thathiengarpettai .. | Thiru P. Karuppiah. |

| Serial number. (1) | Name of the district. (2) | Name of the taluk. (3) | Name of the village. (4) | Name of the licencees. (5) |
|---|---|---|---|---|
| V | TIRUNELVELI .. | 1. Nanguneri .. | Panangudi .. | Thiru T. Narayanan, Kokkirakulam Tirunelveli Taluk. |
| | | 2. Ambasamuthiram. | Mukkudal .. | Thirumathi T. P. S. H. Rukmaniammal, Mukkudal. |
| | | 3. ,, | ,, | Thirumathi T. P. S. H. Selva Saroja, Mukkudal. |
| | | 4. ,, | Cherankoilpattu .. | Thiru P. V. Kuppuswamy Naidu. |
| VI | COIMBATORE .. | 1. Avanasi .. | Avanasi .. | Thiru P. G. Palanisami, Avanasi. |
| | | 2. Gobichettipalayam. | Varathampalayam | Thiru S. K. Lingiah, Sathyamangalam. |
| | | 3. Erode .. | Veerappanchatram | Thiru K. Palanisamy, Erode. |
| | | 4. Bhavani .. | Anthiyur .. | Thiru A. S. Ramanujam, Anthiyur. |
| | | 5. Coimbatore .. | Sanganur .. | Thiru A. Sundaram, Ganapathy. |
| | | 6. ,, .. | Ganapathy .. | Thiru M. Venkatasami, Ganapathy. |
| | | 7. ,, .. | Telungupalayam .. | Thiru P. R. Ramasami, Papanaickenpudur, Coimbatore. |
| VII | SALEM .. | 1. Rasipuram .. | Rasipuram .. | Thiru L. Nagamalai Udayar, Rasipuram. |
| | | 2. Namakkal .. | Namakkal .. | Thiru K. Raja, Namakkal. |
| VIII | MADURAI .. | 1. Nilakottai .. | Oruthattu .. | Thiru J. Swamidoss. |
| | | 2. ,, .. | Kumaram .. | Thiru S. C. Govindarajan. |
| | | 3. Madurai South .. | Madakulam .. | Thiru A. Thangavelu. |



| | | | | |
|---|---|---|---|---|
| | | 4. Nilakottai .. | Palamedu .. | Thiru C. Ramanathan and Govindan. |
| | | 5. Uthamapalayam | Chinnamanur .. | Thiru M. Subbian. |
| | | 6. Melur .. .. | Sendurai .. | Thiru M. Ayyakkannu Chettiar. |
| IX | NORTH ARCOT .. | 1. Tirupathur .. | Thokkiam .. | Thiru Krishnappa Chettiar, Gajjalanaickenpatti Village, Thirupathur Taluk. |
| | | 2. Arkonam .. | Kondapuram .. | Thiru V. M. Kuppuswamy Mudaliar, Kaveripakkam Village, Arkonam Taluk. |
| | | 3. ,, .. | Thakkolam .. | Thiru K. T. Kandaswamy Mudaliar, Thakkolam Village, Arkonam Taluk. |
| | | 4. Wallajah .. | Sholinghur .. | Thiru M. Arulaiyyan, Sholinghur, Walajah Taluk. |
| | | 5. ,, .. | Arcot .. | Thiru Kevalchand Sowcar, Arcot Town. |
| X | SOUTH ARCOT .. | 1. Gingee .. | Gingee .. | Thiru S. H. Syed Khudus, Gingee. |
| | | 2. Tindivanam .. | Mailam .. .. | Thiru V. Panneerselvam, Tindivanam. |
| | | 3. Kallakurichi .. | Thyagadurgam .. | Thiru P. Ramakrishnan, Thyagadurgam, Kallakurichi. |
| XI | DHARMAPURI .. | 1. Krishnagiri .. | Bendrahalli .. | Thiru P. S. Chakkaravarthi, Krishnagiri Taluk, Arasampatti Post. |
| | | 2. Uthangarai .. | Kadathur .. | Thiru K. Narayanan, Kadathur. |
| | | 3. Harur .. | Mallapuram .. | Thirumathi M. Bama, Mallapuram. |
| | | 4. Papparapatti .. | Papparapatti .. | Thirumathi Vallinayahiammal, Papparapatti. |
| XII | NILGIRIS | | Nil. | |
| XIII | KANYAKUMARI .. | | Nil. | |

XII தமிழ்நாட்டில் ஓரளவு நிலையான திரைப்பட அரங்குகள் அமைப்பதற்கு வழங்கப்பட்ட தடையின்மை சான்றிதழ்கள் பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை.—

| வரிசை எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | வட்டத்தின் பெயர். (3) | கிராமத்தின் பெயர். (4) | உரிமைதாரர்களின் பெயர். (5) |
|---|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் .. | 1. நன்னிலம் .. | நன்னிலம் .. | திரு. கே. எஸ். சுந்தரம், கொரடாச்சேரி, மாயூரம். |
| | | 2. கும்பகோணம் .. | சுவாமிமலை .. | திரு. எஸ். இராமசாமி, சுவாமிமலை. |
| | | 3. அறந்தாங்கி .. | அறந்தாங்கி .. | திருமதி. ஜே. ஹேமா, அறந்தாங்கி. |
| | | 4. பட்டுக்கோட்டை .. | நாட்டாணிக்கோட்டை .. | திரு. எம். எ. முத்துசாமி, ஆத்தூர் பேராயூரணி. |
| | | 5. பட்டுக்கோட்டை .. | கீரமங்கலம் .. | திரு. வி. ஆர். சுப்பிரமணியம், கீரமங்கலம். |
| 2. | இராமநாதபுரம் .. | 1. சாத்தூர் .. | சிவகாசி .. | திரு. கே. எஸ். பழனியப்ப நாடார், சிவகாசி (திரைப்பட அரங்கம் 15-7-71 முதல் செயல்படுகின்றது). |
| | | 2. இராமநாதபுரம் .. | இராமேஸ்வரம் .. | திரு. எஸ். கே. ஜெய்னுபதீன், இராமேஸ்வரம். |
| | | 3. இராஜபாளையம் .. | சேத்தூர் .. | திரு. என். பால் நாடார். |
| | | 4. பரமக்குடி .. | பார்த்திபனூர் .. | திருமதி எம். பெரிஷா பீவி, பார்த்திபனூர். |
| 3. | செங்கற்பட்டு .. | 1. சைதாப்பேட்டை .. | நந்தம்பாக்கம் .. | ஜெயந்தி டாக்கீஸ் (தற்போது செயல்படுகின்றது.) |
| | | 2. பள்ளிபேட்டை துணைவட்டம் .. | போகட்டூர்பேட்டை .. | சஞ்சீவியார் தியேட்டர் (தற்போது செயல்படுகின்றது). |
| | | 3. சைதாப்பேட்டை .. | அம்பத்தூர் .. | திருமதி. ஆர். அபரஞ்சி அம்மாள். |



| வரிசை எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | வட்டத்தின் பெயர். (3) | கிராமத்தின் பெயர். (4) | உரிமைதாரர்களின் பெயர். (5) |
|---|---|---|---|---|
| | | 4. மதுராந்தகம் .. | மதுராந்தகம் .. | திரு. பி. கணபதி. |
| | | 5. சைதாப்பேட்டை .. | திருவான்மியூர் .. | திருமதி கே. சாவித்திரி. |
| | | 6. ,, | கொடுங்கையூர் .. | திருவாளர்கள் புண்ணியகோடி நாயக்கர், தேவிலக்ஷ்மணன். |
| | | 7. ,, | சாலி கிராமம் .. | திரு. எஸ். ஆர். இளங்கோவன். |
| | | 8. ,, | பழவேற்காடு .. | திரு. பி. எ. குமரன். |
| | | 9. ,, | நங்கநல்லூர் .. | திரு. டபிள்யூ. கோவிந்தராஜு. |
| | | 10. ,, | பழையகும்மிடிபூண்டி | திரு. ஓபுல் ரெட்டி. |
| | | 11. ,, | குன்னத்தூர் .. | திரு. எம். நித்தியானந்தம். |
| | | 12. ,, | நந்திவரம் .. | திரு. எம். வி. இராமு. |
| | | 13. ,, | ஜமீன் பல்லாவரம் .. | திரு. டி. இராமானுஜம். |
| | | 14. ,, | திருவான்மியூர் .. | திரு. டி. இராமானுஜம். |
| 4. | திருச்சிராப்பள்ளி .. | 1. திருச்சிராப்பள்ளி .. | கே. அபிஷேகபுரம் .. | திரு. பி. கீர்த்தி குமார், மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி. |
| | | 2. ,, | ,, .. | திருமதி. என். சரோஜா, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி. |
| | | 3. முசிரி .. | தாத்தையங்கார்பேட்டை | திரு. பி. கறுப்பையா. |
| 5. | திருநெல்வேலி .. | 1. நாங்குனேரி .. | பனங்குடி .. | திரு. டி. நாராயணன், கொக்கிரகுளம், திருநெல்வேலி வட்டம். |
| | | 2. அம்பாசமுத்திரம் .. | முக்கூடல் .. | திருமதி டி. பி. எஸ். எச். ருக்மணி அம்மாள், முக்கூடல். |
| | | 3. ,, | ,, .. | திருமதி டி. பி. எஸ். எச். செல்வ சரோஜா, முக்கூடல். |
| | | 4. ,, | சேரங்கோயில் பத்து .. | திரு. பி. வி. குப்புசாமி நாயுடு. |

| வரிசை எண். (1) | மாவட்டத்தின் பெயர். (2) | வட்டத்தின் பெயர். (3) | கிராமத்தின் பெயர். (4) | உரிமைதாரர்களின் பெயர். (5) |
|---|---|---|---|---|
| 6. | கோயம்புத்தூர் | 1. அவனுசி | அவனுசி | திரு. பி. ஜி. பழனிச்சாமி, அவனுசி. |
| | | 2. கோபி | வரதம்பாளையம் | திரு. எஸ். கே. லிங்கையா, சத்திய மங்கலம். |
| | | 3. ஈரோடு | வீரப்பன் சத்திரம் | திரு. கே. பழனிச்சாமி, ஈரோடு. |
| | | 4. பவானி | அந்தியூர் | திரு. எ. எஸ். இராமானுஜம், அந்தியூர். |
| | | 5. கோயம்புத்தூர் | சங்கனூர் | திரு. வ. சுந்தரம் கணபதி. |
| | | 6. ,, | கணபதி | திரு. எம்.வேங்கடசாமி, கணபதி. |
| | | 7. ,, | தெலுங்குப்பாளையம் | திரு. பி. ஆர். இராமசாமி, பாப்பநாயக்கன் புதூர், கோயம்புத்தூர். |
| 7. | சேலம் | 1. ராசிபுரம் | ராசிபுரம் | திரு. எல். நாகமலே உடையார், ராசிபுரம். |
| | | 2. நாமக்கல் | நாமக்கல் | திரு. கே. ராஜா, நாமக்கல். |
| 8. | மதுரை | 1. நிலக்கோட்டை | ஒருதட்டு | திரு. ஜே. சுவாமிதாஸ். |
| | | 2. ,, | குமாரம் | திரு. எஸ். சி. கோவிந்தராசன். |
| | | 3. மதுரை தெற்கு | மடக்குளம் | திரு. எ. தங்கவேலு. |
| | | 4. நிலக்கோட்டை | பாலமேடு | திரு. சி. ராமநாதன், கோவிந்தன். |
| | | 5. உத்தமபாளையம் | சின்னமனூர் | திரு. சுப்பையன். |
| | | 6. மேலூர் | செந்துறை | திரு. அய்யாக்கண்ணு செட்டியார். |
| 9. | வட ஆற்காடு | 1. திருப்பத்தூர் | தோக்கியம் | திரு. கிருஷ்ணப்பச் செட்டியார், கஜ்ஜல நாயக்கன்பட்டி கிராமம், திருப்பத்தூர் வட்டம். |
| | | 2. அரக்கோணம் | கொண்டாபுரம் | திரு. வி. எம். குப்புசாமி முதலியார், காவேரிப்பாக்கம் கிராமம், |
| | | 3. ,, | தக்கோலம் | திரு. கே. டி. கந்தசாமி முதலியார், தக்கோலம் கிராமம், அரக்கோணம் வட்டம். |
| | | 4. வாலாஜா | சோழசிம்மபுரம் | திரு. எம். அருணயன், சோழசிம்மபுரம், வாலாஜா வட்டம். |
| | | 5. ,, | ஆர்க்காடு | திரு. கேவல்சா சௌக்கார், ஆர்க்காடு நகரம். |
| 10. | தென் ஆற்காடு | 1. செஞ்சி | செஞ்சி | திரு. எஸ். எச். சையத்குத்தூஸ், செஞ்சி |
| | | 2. திண்டிவனம் | மைலம் | திரு. பன்னீர் செல்வன், திண்டிவனம். |
| | | 3. கள்ளக்குறிச்சி | தியாகதுர்க்கம் | திரு. பி. இராமகிருஷ்ணன், தியாகதுர்க்கம், கல்லக்குறிச்சி. |
| 11. | தருமபுரி | 1. கிருஷ்ணகிரி | பெந்தஹள்ளி | திரு. பி. எஸ். சக்கரவர்த்தி, கிருஷ்ணகிரி வட்டம், அரசம்பட்டி அஞ்சல். |
| | | 2. ஊத்தங்கரை | கடத்தூர் | திரு. கே. நாராயணன் கடத்தூர். |
| | | 3. அரூர் | மல்லபுரம் | திருமதி எம். பாமா, மல்லபுரம். |
| | | 4. பாப்பாரப்பட்டி | பாப்பாரப்பட்டி | திருமதி வள்ளிநாயகி அம்மாள், பாப்பாரப் பட்டி. |
| 12. | நீலகிரி | | | இல்லை. |
| 13. | கன்னியாகுமரி | | | இல்லை. |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### சனிக்கிழமை, 1972 சனவரி 29.

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Meeting of National Development Council*

* 111 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Minister for Education who represented Tamil Nadu in the National Development Council meeting held at New Delhi on 26th September 1969 impressed on the National Development Council the need to include Tamil Nadu in the list of Backward States; and

(*b*) if so, whether our Government's request was acceded to?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** (அ) & (இ) 26—9—1969 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்ற முதலமைச்சர்களின் குழுக்கூட்டத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில், இதற்கு முந்தைய கூட்டங்களில் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்த முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும் மாநிலங்களிலும் பின் தங்கிய பகுதிகள் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் ஒரு மாவட்டம் தெரிந் தெடுக்கப்பட்டு அங்கு ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு உடனடி மானியம் அல்லது உதவித்தொகை வழங்க ஒத்துக் கொள்ளப் பட்டது. ஆயினும், இந்த அரசு ஒரு மாவட்டத்திற்கு ஈடாக அருகருகேயுள்ள சில பகுதிகளைத் தெரிந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியது. அவைகளைப் பின்தங்கிய பகுதிகளாக மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** உதவி சபாநாயகர் அவர்களே. இதனுடைய விளைவாக பொருளாதார ரீதியில் எவ்வளவு தொகை அதிகமாகக் கிடைக்கும் என்று முதலமைச்சரவர்கள் கூற முடியுமா ? இந்தத் தேசிய வளர்ச்சி மன்ற முதலமைச்சர்களின் குழுக்கூட்டத்தில் நம்முடைய மாநிலத்தின் சார்பாக வேறு முக்கியமான கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டனவா? அப்படி யிருந்தால், அதன் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொருளாதார ரீதியில் இப்பொழுது பத்து இடங்கள்—பத்து தாலூக்காக்கள்—பின் தங்கிய பகுதிகள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நாம் அங்கு வலியுறுத்திய முக்கியமான விஷயம், முன்னேற்றமடைந்துள்ள மாநிலங்கள் என்கிற அளவில் மாநிலங்களை அடியோடு முழுமையாக ஒதுக்கிவைத்துவிடக் கூடாது; முன்னேற்றமடைந்துள்ள மாநிலங்களிலும் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன; ஆகவே, அவைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் அரசு சார்பில் நாம் பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதற்கேற்ப, முதலில் 'மாவட்டங்கள்' என்று சில மாவட்டங்கள் முழுவதுமாக ஒத்துக்கொள்ளப் பட்டன. பிறகு, மாவட்ட நிலையில் ஆராய்ந்த வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இராமநாதபுரம், முதுகளத்தூர், சிவகெங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், மேலூர், திருமயம், ஆலங்குடி, கொளத்தூர் ஆகிய பத்து இடங்களையும், அதற்கு மேலாகக் கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர். நாங்குனேரி, விளாத்திகுளம் ஆகிய ஐந்து இடங்களையும் பரிந்துரை செய்தோம். ஆனால், இறுதியாக, நான் சொன்ன ஐந்து இடங்களை விட்டுவிட்டு, முதலில் சொன்ன பத்து இடங்களை மட்டும் ஏற்றுக்கொண்டார்கள். இந்தக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல் எவ்வளவு பொருளாதார வசதி செய்யப்படுகிறது என்றால், ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேற்படாமல், நிலையான முதலீடு உள்ள புதிய தொழில் அமைப்பதற்கு மூலதன முதலீட்டில் பத்திலொரு பங்கு தொகையை மத்திய அரசு மொத்த மானியமாகவோ அல்லது உதவித் தொகையாகவோ அவர்களுக்கு அளிக்கின்றது. ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு நிலையான மூலதன முதலீடு கொண்ட புதிய தொழிற்சாலை தொடங்குவதற்கு மானியம் அல்லது உதவித் தொகை அதனுடைய தகுதிக்கு ஏற்றவாறு மத்திய அரசு வழங்குகிற நிலை இருக்கிறது. இப்பொழுது ஒன்பது பேர் இந்தத் தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு முன்வந்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்தப் பின் தங்கிய பகுதிகள் என்ற நிலை ஏற்றுக்கொள்ளப்பட்ட இடங்களில் தொழில் சலுகைகளைத் தவிர வேறு என்ன சலுகைகள் கிடைக்கின்றன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது தொழில் சலுகைகளைப் பொறுத்த அளவிலேதான் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.



**திரு. எ. சுவாமிதாஸ் :** பின்தங்கிய பகுதிகள் என்று சில பகுதிகளை முதலமைச்சரவர்கள் இங்குக் குறிப்பிட்டார்கள். தொழில் நிலைமையைப் பொறுத்த அளவில், கன்னியாகுமரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியையும் இந்தத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர அரசு பரிந்துரை நல்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** படிப்படியாகக் கவனிக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தையும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தையும் பின்தங்கிய பகுதிகள் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறதே அதற்கும் அப்பாற்பட்டு அவர்கள் அளிக்கும் சலுகையா இது என்று அறிய விரும்புகிறேன்:

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கிழக்கு இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரண்டும் பின்தங்கிய பகுதிகள் என்று வேறு நிலையில் அறிவிக்கப்பட்டு அவைகளுக்குத் தனியாக இரண்டு கோடி ரூபாய் அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வேறு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the last Budget in the list given by the Government, Dharmapuri district also finds a place as a backward area. But now in the list furnished by the Hon. Chief Minister the name of the Dharmapuri District has not been mentioned. May I know whether this district has been included in the list given to the Central Government?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பல மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்கள் என்று தொழில்களைப் பொறுத்து அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாவட்டம் இந்த பத்து சத வீதம் மானியமாகப் பெறுவதற்கு தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு முடிவெடுத்தது. அதிலே நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த பகுதியை நாம் அறிவித்தோம். அவர்கள் எது எதை ஒத்துக்கொண்டார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அண்மையில் தர்மபுரி மாவட்டத்தையும் இந்த இராமநாதபுரம் மாவட்டத்தோடு இணைத்து பத்து சத விதத்திற்கு மானியம் கொடுப்பதற்கு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று திட்ட அமைச்சருக்கு நம்முடைய அரசின் சார்பில் எழுதப்பட்டது. அவர் அதற்குப் பதில் தந்திருக்கிறார். 'இப்போதைக்கு இது முடியாது; ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மாவட்டம்தான் என்று முடிவு செய்திருக்கிறோம்; இது மறுபரிசிலனை செய்யப்படும் போது தர்மபுரியைப் பொறுத்தும் பரிசீலிக்கப்படும்' என்ற முறையில் நம்முடைய மாநிலத்திற்குப் பதில் தந்திருக்கிறார்.

[1972 சனவரி 29

## சென்னை குதிரைப்பந்தய சங்கம்

* 112 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை குதிரைப் பந்தய சங்கத்தில் அரசு நியமன உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. சு. துரைசாமி :** இப்பொழுது அதில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? அரசாங்கம் நியமிக்கின்ற அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை எத்தனை? அரசாங்கம் நியமிக்கின்ற அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு உத்தேசம் உண்டா? அதனுடைய வருமானத்தைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த வகை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ரேஸ் கிளப் மானேஜிங் கமிட்டியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை இப்பொழுது 12. இதில் அரசாங்கப் பிரதிநிதிகள் இரண்டு பேர் இருக்கிறார்கள். அதை நான்கு பேராக ஆக்க வேண்டுமென்று அரசு எழுதியிருக்கிறது. அதில் தீர்மானம் போட்டு, அதற்குப் பிறகு அவர்களுடைய பொதுச் சபை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பார்கள். அதற்குப் பிறகு அரசுக்குத் தகவல் வந்து, அரசு மேலும் இரண்டு பேரை நியமிக்கும்.

**திரு. எம். தேவராசன் :** குதிரைப் பந்தயத்தால் அரசுக்கு நல்ல வருவாய் வருவதால், ஏற்கெனவே குதிரைப் பந்தயங்கள் நடந்துவந்து இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ள கோவை போன்ற நகரங்களில் மீண்டும் குதிரைப் பந்தயங்கள் நடத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** புதிதாக அப்படிப்பட்ட குதிரைப் பந்தயங்கள் நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, புதிதாக இல்லையென்றாலும் கூட, குதிரைப் பந்தயத்தை மொத்தமாக அரசே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது கால ஓட்டத்தில் நடைபெற வேண்டிய விஷயம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, இப்போது நடைபெறுகின்ற குதிரைப் பந்தயம் செட்டி நாட்டைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகிறது. அவர்களே நடத்துகின்ற காரணத்தால் அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ, என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதைத்தான் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு



1972 சனவரி 29]

அதிலே அரசாங்கத்தின் பிடிப்பு அதிகமாக இருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது யாருடைய சொத்தாக இருந்து வருகிறது என்பதைப்பற்றி எல்லாம் இப்போது நாம் கவலை கொள்ளவேண்டியதில்லை. அது யாராலும் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் நடைபெற வேண்டுமென்ற அளவுக்கு அரசாங்கம் பல நிபுணர்களைக் கொண்ட குழுவை நியமித்து, அவைகளை ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உறுதியாகச் சொல்லி இருக்கிறது. அவைகளைப் பற்றிக் குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதிலே யாருடைய ஆதிக்கமும் வாராமல் இந்த அரசு விரைவில் தக்க நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தக் குழுவிலே உத்தியோகப் பற்றற்றவர்களை நியமனம் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக இப்போது மானேஜிங் கமிட்டி உறுப்பினர்களில் 12 பேர் உத்தியோகப் பற்றற்றவர்களாக இருக்கிறார்கள். அரசின் சார்பில் இருவர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் 'ஹோம் செக்ரட்டரி', இன்னொருவர் ஐ.ஜி. ஆஃப் போலீஸ். மேலும் இருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது சம்பந்தமாக முன்பு இந்த அரசாங்கத்திடம் ஒரு கொள்கை இருந்தது. அந்தக் கொள்கையை இப்போது அரசாங்கம் அமுல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நமது மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால், குதிரைப் பந்தயம் நடைபெறக்கூடிய பிற மாநிலங்களுக்குச் செல்ல நாம் விரும்பாவிட்டாலும் 'பாஸ்போர்ட்' வாங்கிச் செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டால்தான், நமது மாநிலத்தில் அதை வெற்றிகரமாக நடத்த முடியும். இல்லாவிட்டால், தமிழ்நாட்டிலே உள்ள பணம் சுற்றியுள்ள பக்கத்து மாநிலங்களுக்குச் சென்றுவிடும். அதையெல்லாம் உத்தேசித்துத்தான் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அரசாங்கத்தில் உத்தியோகம் செய்கிறவர்கள் 'ஸ்டூவேர்ட்ஸ்' ஸாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பெண்களும் அரசாங்க ஊழியர்களாக இருக்கிறார்கள். எனவே, பெண்களும் ஸ்டூவேர்ட்ஸ்ஸாக நியமனம் செய்யப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 சனவரி 29

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்றியமையாதது என்று அம்மையார் அவர்கள் சொல்வார்களேயானால், அதைப் பற்றி யோசித்து, பெண்களையும் உறுப்பினர்களாக நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முற்படலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்திலே ஏழை எளியவர்களும், வசதியற்றவர்களும் கூட ஈடுபடுவதால் அந்தக் குடும்பங்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. நமது மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டால், 'பாஸ்போர்ட்' வாங்கி வேறு மாநிலங்களுக்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டால், வசதி படைத்தவர்களால்தான் அது முடியும். வசதியற்றவர்கள் போக முடியாது. ஆகவே இந்தச் சாதாரண மக்கள் நிலையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வேறு மாநிலங்களின் எல்லையில் இருக்கக்கூடிய வசதியற்றவர்கள், அப்போதும் போகத் தான் செய்வார்கள்.

## தமிழ்நாட்டில் கள்ள நாணயங்கள்

* 113 வினா.—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ள நாணயங்கள் (நோட்டுகள்) தயாரிக்கிற கோஷ்டி ஒன்று தமிழகத்தில் நடமாடிக்கொண்டு இருக்கிறதாக புகார் ஏதாவது அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழ்நாட்டில் இப்போது கேரளாவிலிருந்து அச்சிடப்பட்ட கள்ளநோட்டுகள் இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையைக் கேரள அரசாங்கமும் நம்முடைய அரசாங்கமும் சேர்ந்து நடவடிக்கை எடுத்துத் தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'ஸ்பெஷல் செல்' போட்டு, அதைத் தடுத்து நிறுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் உள்ள கள்ள நோட்டுக்கும் இங்குள்ள கள்ள நோட்டுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதைப்பற்றி புலன் விசாரணை நடைபெற்றது. இப்போது கேரளத்தோடு தொடர்பு கொண்டு, இரு மாநிலங்களிலுமுள்ள கள்ள நோட்டுகள் சம்பந்தமாக நமது மாநிலத்திலே புலன்விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இரண்டு மாநிலங்களும் சேர்ந்து இதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பது என்பது இயலாத காரியம்.



1972 சனவரி 29]

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether it is a fact that a private mint has been unearthed in Madras recently?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றி ஒன்றும் இப்போது எனக்கு விபரமான தகவல் இல்லை.

* 114வினா.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா :

(அ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் கோவையில் ஒரு வீட்டில் திடீர் சோதனை நடத்தப்பட்டு நகைகளும் நோட்டுகளும் கைப்பற்றப்பட்டனவா?

(இ) அவை திருடப்பட்ட பொருள்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இது விஷயம் மத்திய ஆயத்துறையின் புலனாய்வில் உள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அங்கு கைப்பற்றப் பட்ட நோட்டுகளில் கள்ள நோட்டு இருந்ததா என்று அறிய விரும்புகிறேன். அதோடு * தமிழ்நாடு பூராவும் அது பரவக் கூடிய நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் .** ஒரு மாவட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. எனவே * என்பதை எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அங்கு கண்டுபிடிக்கப் பட்ட நகைகளை வைத்து, கள்ளத்தனம் நடைபெற்றதாகத் தகவல் கிடைத்ததும், போலீஸார் சோதனை செய்து, புலன் விசாரணை நடத்தினர். கைப்பற்றப்பட்ட நகைகளை, அவற்றின் உரிமையாளர்கள் யாரும் அடையாளம் காட்டவில்லை. அதனால் கைப்பற்றப் பட்ட நகைகளை மத்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றி இருக்கிறார்கள். கள்ள நோட்டுகள் இருந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையில் அண்மையில் இதுபோன்ற ஒரு குற்றம் கண்டுபிடிக்கப் பட்டதாக கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உண்மை தான்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[1972 சனவரி 29

## Theft of electric motors

* 115 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a number of persons responsible for the theft of electric motors at various places have been apprehended in Madras City on or about the 10th June 1971; and

(b) if so, whether the motors were recovered?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது சிலர்கள் திருடுவது, மின்சாரச் சாதனங்களைத் திருடுவது போன்ற குற்றங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. ஒயர்களும், மின் கருவிகளும் திருடப்படுவதால், விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரியான திருட்டுகள் நடைபெறாமலிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இத்தகைய திருட்டுகள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகச் சிறப்பு சுற்று காவல் துறையினர் பிரிவு நிறுவப்பட்டு இருக்கிறது. அது சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்படுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் குற்றங்கள் நடைபெறாமல் இருக்க, சிறந்த கண்காணிப்புடன் காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் இப்போது ஒயர்கள், மின்சார மோட்டார்கள், இதர மின்சாரப் பொருட்கள் திருடப்பட்டது சம்பந்தமாகப் பல வழக்குகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஒயர்கள் திருடுவதை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு மெயின் லைன்களில் 'சிக்னல்' கம்பிகள் பொருத்தப்பட்டிருப்பது போல் கிளை லைன்களிலும் 'சிக்னல்' கம்பிகள் பொருத்தப்பட்டால் இந்தத் திருட்டுகளைத் தடுக்கலாம். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இருக்கின்ற நிதி நிலையைப் பொறுத்துத்தான் அத்தகைய ஏற்பாட்டினை எல்லா இடங்களிலும் கொண்டுவர முடியும். அதற்கு அதிகச் செலவு ஆகும். அதனால் நிதி வசதிக்கேற்பப் பின்னால் இதுபற்றி யோசிக்கப்படும். இருப்பினும் நான் ஏற்கெனவே கூறியமாதிரி, திருட்டுகளைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## வாலாஜா நகராட்சி பள்ளிகள்

* 116 வினா.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1972 சனவரி 29]

(அ) வாலாஜா நகரசபைப் பள்ளிகளை அரசு எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ). வாலாஜா நகராட்சி நடத்தும் உயர்நிலைப்பள்ளியை அடுத்த நிதி ஆண்டில் அரசு ஏற்றுக்கொள்ளும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அடுத்த நிதியாண்டில் எடுத்துக்கொள்வதற்கு முன்பே, இப்போதே அங்கு பணப் பற்றுக் குறை இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அரசு அடுத்த ஆண்டு எடுத்து நடத்துவதாக இருந்தாலும், இந்த ஆண்டு பண உதவியை அரசு நீட்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இது இந்த ஆண்டு மட்டுமல்ல; சென்ற சில பல ஆண்டுகளாகவே பற்றுக்குறை இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளை நடத்துவதில் அந்த நகராட்சி எவ்வளவோ முயற்சி செய்தும், பணப் பற்றுக் குறை தவிர்க்கமுடியாததாக இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிகளை அடுத்த ஆண்டிலிருந்து அரசே ஏற்று நடத்துவது என்ற முடிவு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

* 117 வினா.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான ஆரம்ப, உயர்நிலைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு சென்ற மே, ஜுன் மாதச்சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை.

(இ) ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மே மாதச் சம்பளம் 19—6—1971-ல் கொடுக்கப்பட்டது. ஜுலை மாத இறுதியில் மூன்று மாதச் சம்பளம் கிடைக்கப்பெறவில்லை என உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்ததன் பேரில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர், வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையாளரை நேரில் சந்தித்துப் பேசி பணப்பற்றுக்குறையினை நீக்க அரசு மான்யம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு (ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் ஜுன். ஜுலை மாதங்களுக்கான சம்பளமும் உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களின் மே, ஜுன், ஜுலை மாதச் சம்பளமும் 6—8—1971 அன்று வழங்கப்பட்டன.

[1972 சனவரி 29

**திரு. கே. ஏ. வகாப் :** இந்த நகராட்சியினுடைய வருவாயும், பொருளாதார நிலையும் மிகவும் குறைந்திருக்கிற காரணத்தினால அரசு கொடுத்து வருகிற உதவிகளுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இனிமேலும் ஆசிரியர்கள் துன்பத்திற்கு உள்ளாகாதிருக்க முதல் தேதியே சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தணிக்கையைப் பார்த்து அவர்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று இருந்தாலும் அங்குள்ள நிதி நெருக்கடியை ஆலோசித்து அவர்களுக்கு முன்பணமாகவே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அந்த நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான உயர்நிலைப்பள்ளியை அடுத்த ஆண்டு அரசே எடுத்துக் கொள்ள இருப்பதால், அதற்குப் பிறகு ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை அதற்கு அதிகச் சங்கடங்கள் இருக்காது என்று கருதப்படுகிறது. ஆசிரியர்களுக்குத் துன்பம் ஏற்படாத அளவில் தான் அவர்களுக்குச் சம்பளம் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதாக அரசு வற்புறுத்தி வருகிறது.

### அனந்தலிலுள்ள பள்ளிக் கட்டடம்

* 118 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா ஊராட்சி ஒன்றியம், அனந்தல் கிராமத்தில் ஆரம்ப துவக்கப்பள்ளி ஒன்று புதியதாக கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் திறப்பு விழா செய்தும் பள்ளி நடத்தப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) அரசு அங்கீகாரமில்லாத ஊராட்சி ஒன்றிய ஆரம்ப துவக்கப் பள்ளி ஒன்று அனந்தல் கிராமத்தில் புதிய கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** 'அரசு அங்கீகாரம் பெறாத பள்ளி' என்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நல்ல கட்டடத்தில் இந்தப் பள்ளிக்கூடம் அமைந்தும்கூட, அந்த ஊரிலேயே உள்ள தனியார் பள்ளி நிர்வாகியின் செல்வாக்கினால்தான் இந்தப் பள்ளிக்கு இன்னும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்து, உடனடியாக இந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு குளத்தூரில் ஒரு ஆரம்பப் பள்ளியைத் துவக்குவதற்குத்தான் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அனந்தல் கிராமத்தில் ஏற்கனவே பல ஆண்டுகாலமாக ஒரு தனியார் பள்ளி



1972 சனவரி 29]

சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாகவும், அங்கே 350 மாணவர்கள் படிக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனால் இந்த ஊராட்சி ஒன்றியத்தினர் கல்வி இலாக்காவின் அனுமதி இன்றியே அனந்தல் கிராமத்தில் ஒரு கட்டிடத்தைக் கட்டி குளத்தூரில் ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பள்ளியை இங்கே மாற்றியிருக்கிறார்கள். இந்தக் கட்டடத்தில் 76 பேர்களேதான் படிக்க வசதியும் இருக்கிறது. ஏற்கனவே தனியார் பள்ளியோ, ஊராட்சி ஒன்றியப்பள்ளியோ நடக்கிற இடத்தில் இருந்து 1 மைலுக்குள்ளாக வேறு ஒரு பள்ளியை அங்கீகரிப்பது இல்லை என்ற முறைக்கிணங்க இந்தப் பள்ளி அங்கீகரிக்கப்படவில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** அந்தத் தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தப் பள்ளியைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு குழந்தைகள் படிக்கவில்லை. மேலும் அந்தத் தனியார் பள்ளி சாதாரண கீத்துக் கொட்டகையில்—அதுவும் கீழே மணல்—சுகாதார வசதி யற்ற இடத்தில் நடக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சார்பில் கட்டப்பட்ட பள்ளி பக்கா கட்டடம். ஆகவே, மாணவர்களுடைய சுகாதார வசதி, மற்ற வசதிகளைக் கருதியாவது இந்தப் பள்ளிக்கு அரசு அங்கீகாரம் அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் :** என்னிடத்தில் தரப்பட்டுள்ள தகவல்படி தனியார் பள்ளியில் 350 பேர்கள் படிக்க இடமிருக்கிறது, இந்தப் பள்ளியில் 76 குழந்தைகளுக்குத்தான் இடமிருக்கிறது என்பது ஆகும். மேலும் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் சரியானதாக இல்லை, ஒழுக்கல் உள்ளதாக இருக்கிறது என்பதாகும். அதோடு கல்வி அதிகாரியின் அனுமதியின்றி குளத்தூரில் துவக்க அனுமதிக்கப்பட்டதற்கு அங்கே ஏற்படுத்தாது இங்கே மாற்றியிருக்கிறார்கள் என்பதும் ஒன்றாகும். இருக்கக்கூடிய பொது நிபந்தனைகளை நிறைவேற்றித்தர பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவர்கள் முன்வந்தால் இந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் அளிப்பதிலும் சங்கடம் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம்

* 119. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு முதல் தேதி சம்பளம் கிடைப்பது போல் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் மாதம் முதல் தேதியே சம்பளம் கிடைக்க அரசு ஆவன செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

[1972 சனவரி 29

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசு இதற்கென தனிக்குழு ஒன்று அமைத்து பரிசீலனை செய்து வருகிறது. பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1—1—1972-லிருந்து முதல் தேதியே சம்பளம் வழங்க ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 11—10—1971 அன்று ஆணை பிறப்பித்து உள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** 1—1—1972-இல் இருந்து ஆசிரியர்களுக்கு முதல் தேதியே சம்பளம் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும் இடையில் ஏற்பட்ட சில சிரமங்களை உத்தேசித்து அதை மாற்றிக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட தேதியில் சம்பளம் வழங்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார். நிதிப்பற்றாக்குறை காரணமாக முதல் தேதியே அவர்களுக்குச் சம்பளம் போய்ச் சேராமல் இருந்தது. அந்தக் குறைபாட்டைப்போக்க டிரஷரியில் இருந்து முதல் தேதியே அவர்களுக்குச் சம்பளம் வழங்கிவிடலாம் என்றும், பின்னர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கும் பணத்தில், பிடித்துக்கொள்ளலாம், புக் அக்கவுண்டாக மாற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்கு அதுபோன்ற விஷயங்களைப் பரிசீலித்து ஒரு முடிவு எடுப்பதற்குள்ளாகவே 1—1—1972-இல் இருந்து அவர்களுக்கு டிரஷரியில் இருந்து நேராகச் சம்பளம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள் பயிற்சி

***120. வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.டி. ஆசிரியர் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கும் போது ஆசிரியராகப் பணியாற்றிய முன் அனுபவம் கேட்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இந்நிபந்தனையை எடுத்துவிட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மொத்த இடங்களில் 80 விழுக்காடு ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஒதுக்கிவைக்கப்படுகின்றன. எஞ்சிய 20 விழுக்காடு இடங்கள் ஓராண்டுக்குக் குறைவாக அனுபவம் உள்ளவர்களுக்கும் அல்லது அனுபவமே இல்லாதவர்களுக்கும் ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

(இ) இல்லை.



1972 சனவரி 29]

**திரு. பி. எஸ். மணியன் :** ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் முன்பு கிடைக்காமல் இருந்த போது இந்த விதி இருந்தது. இன்றைக்கு பட்டம் பெற்ற ஆசிரியர்களே நிறையக் கிடைக்கிற சந்தர்ப்பம் இருப்பதனால் இந்த விதியை மாற்ற அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த விதியைப் பொறுத்தவரை—ஓராண்டுகாலம், இரண்டாண்டு காலம் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றி பயிற்சி பெற்றவர்கள் மேலும் அந்தத் துறையிலேயே ஈடுபட விரும்பினால் தங்களைத் தகுதியாக்கிக்கொள்ள பி.டி. பயிற்சி பெற்றாக வேண்டும் என்பதனால் பி.டி. பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்க்கும்போது ஓராண்டு, இரண்டாண்டு, மூன்றாண்டு பள்ளிகளில் பணியாற்றி அனுபவம் உள்ளவர்களுக்கு 80 விழுக்காடு என்று ஒதுக்கப்படுவது என்பது தான். நேரிடையாக 20 விழுக்காடு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு இருக்கிற இடங்கள். வந்திருக்கும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கிறபோது அந்தத்துறையிலேயே ஈடுபட்டிருப்பவர்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் இந்த விகிதாசார முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடமில்லை என்கிற நிலையில் ஒரத்தநாடு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சென்ற ஆண்டு சில இடங்களை நிரப்பாமல் இருந்தார்கள் என்பது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தனிக்கேள்வி வேண்டும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** துணைத் தலைவர் அவர்களே, பொருளாதார பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்றதற்குப் பிறகு வேலையில் சேராத நிலையில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதைத் தவிர்க்க அவர்களைச் சேர்த்துக்கொள்வதே இல்லை பயிற்சிப் பள்ளியில் என்கிற விதிமுறைகளை அரசு நிர்ணயிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக பொருளாதார பட்டம் பெற்றவர்கள் எல்.டி. இல் சேருகிற நிலை இல்லை. சேர்ந்து பயிற்சி பெற்றாலும் உயர்நிலைப்பள்ளியில் பொருளாதார பாடம் வராத காரணத்தினால் வேலையும் கிடைப்பதில்லை. ஆகவே பயிற்சிப் பள்ளியில் சேர்க்கப்படுகிற சூழ்நிலை கூட குறைவாகத்தான் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் சமீபத்தில் விதிமுறைகள் ஏதாவது மாற்றப்பட்டிருக்கிறதா? பட்டதாரிகளுக்கு

[1972 சனவரி 29

முதல் வகுப்பில் பாஸ் செய்தவர்களுக்கு முதலிடம் என்றும், இரண்டாவது வகுப்பில் பாஸ் செய்தவர்களுக்கு இரண்டாவது இடம் என்றும் ஏதாவது விதிமுறைகள் தற்போது உண்டாக்கப் பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓராண்டு, இரண்டாண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்து, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர விரும்பி, விண்ணப்பத்திருந்தால் அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படுகிறது. அதேபோல போஸ்ட் கிராஜுவேட்ஸ்களுக்கு முதல் சலுகையும், பி.ஏ., பி.எஸ்.சி., போன்ற வகுப்புகளில் படித்து விட்டு வருபவர்களுக்கு இரண்டாவது சலுகையும் அளிக்கப் படுகிறது. இரண்டாண்டுக் காலம் தொடர்ந்து ஆசிரியராகப் பயிற்சி பெற்றிருந்தால் முதல் சலுகை அளிக்கப்படுகிறது. பட்டப் படிப்பு வகுப்புகளிலும் முதல் வகுப்பில் தேறியவர்களுக்கு முதல் சலுகை என்றும், இரண்டாவது வகுப்பில் தேறியவர்களுக்கு இரண்டாவது சலுகை என்றும், மூன்றாவது வகுப்பில் தேறியவர்களுக்கு மூன்றாவது சலுகையும் அளிக்கப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி பெறாத தனித்தன்மையில் வருகிறவர்களில்கூட முதல் தரத்தில் எம்.ஏ., எம்.எஸ்.சி., போஸ்ட் கிராஜுவேட்ஸ்களில் முதல் தரத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு, இரண்டாவது தரத்தில் தேறியவர்களுக்கு முறையே சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ப. முத்துசாமி :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து தனியாக பி.ஏ. படித்து முடித்தவர்கள் ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பம் செய்கிறபோது, அவர்களுக்கு எந்த ஸ்தானத்தில் சலுகை அளிக்கப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. அதுபற்றிய விஷயம் கவனத்தில் கொண்டுவரப்படவில்லை. இதுகுறித்து கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது வகுப்புவாரி யாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கன்னியாகுமரி மாவட்டத் திலிருந்து வந்த பின்தங்கிய வகுப்பினர்கள் விண்ணப்பம் செய்திருந்தும் அவர்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை. இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவீதம் என்றும் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு 18 சதவீதம் என்றும் இட ஒதுக்கீடு செய்து முறையே ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார் கள். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து விண்ணப்பம் செய்து



1972 சனவரி 29]

கொண்டவர்கள் சரியானபடி விவரங்கள் கொடுக்கப்படாத காரணத்தால் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றும் சொல்லப் படுகிறது. இதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். என்ன சங்கடம் என்று குறிப்பிட்டால் தனி யாக ஆராய்ந்து, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. வீ. இராசகோபால் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்து பி.ஏ., படித்து பி.டி., படிக்க வருகிறவர்களுக்குத்தான் முதற்சலுகை அளித்து வருகிறார்கள். அவர்களுக்கே எல்லா இடங்களும் கொடுக்கப்பட்டுவிடுகின்றன. நேரடியாக பி.ஏ., படித்துவிட்டு, பி.டி., படிக்க வருகிறவர்களுக்கு முற்றிலும் இடம் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, பி.ஏ., படித்து விட்டு, பி.டி., படிக்க வருகிறவர்களுக்கு ஒரு சதவீத அளவில் இடம் ஒதுக்கித்தர அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வித் துறைக்காக தங்களை பல்லாண்டுக்காலம் அர்ப் பணித்துக் கொண்ட ஆசிரியர்களுக்குத் தகுதி இருந்து, வளர்ச்சி பெற வழியிருந்தால் வசதி செய்துகொடுப்பது நியாயத்தின் அடிப் படையில் எழுந்த ஒன்றாகும். அப்படி வருகிறவர்களை நிறுத்தி விட்டு மற்றவர்களுக்கு வசதி செய்துகொடுப்பது என்பது நியாயத்திற்கு முரணாகும். அவர்கள் உழைப்பின் முயற்சியால் முன்னுக்கு வருகிறார்கள். அப்படி மேலுக்கு வருகிறவர்களுக்கு ஊக்கம் அளிப்பதுதான் நியாயத்தின் கடமை.

*Thiruveelimilalai Siva Temple*

* 121 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that ancient paintings were discovered at Thiruveelimilalai Siva Temple in Thanjavur destrict by the State Archaeological Department ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநில தொல்பொருள் ஆய்வுத் துறையினால் திருவீழி மழலையில் கோயில் மண்டபத்தில் மேல் முகட்டில் பண்டைய ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மண்டபம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்பது தூண்களில் உள்ள கல்வெட்டு களால் தெரிகிறது. இம் மண்டபத்தை எழுப்பியவர் உக்கலுடை யான் எதிரொலிச் சோழ பல்லவரையன் என்று காணப்படுகிறது. ஆனால் இங்குள்ள ஓவியங்கள் விஜய நகர காலத்தவையாக காணப் படுகின்றன. மண்டபத்தின் முகடு முழுவதும் ஓவியம் பூசப் பட்டுள்ளது. மத்தியிலுள்ள ஓவியங்கள் இடையில் ஆங்காங்கே

பழுதடைந்துள்ளன. கீழ்ப்பகுதியிலும், மேல் பகுதியிலும் உள்ள ஓவியங்கள் கண்ணனை குழலூதும் கோவலனாகவும், அரவின்மீது ஆடும் அம்மானாகவும் சித்தரிக்கின்றன. இவை சுமார் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டுகள்

* 122 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம். வட ஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையால் 12 புதிய கல்வெட்டுக்கள் படியெடுத்து வரப்பெற்றன. இவற்றில் 6 பல்லவர் காலத்தையும் 1 முற்கால சோழர் காலத்தையும் சார்ந்தவை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we learn from newspapers that a lot of inscriptions were discovered in the Chingleput district during the last few months and these inscriptions throw great light on the history of South India. So, may I know whether the Hon. Minister will instruct the Archaeological Department to publish details about these inscriptions in newspapers for the use of the people who are interested in South Indian history?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ச்சி மூலம் பல இடங்களில் கல்வெட்டுக்களை ஆராய்ந்து, செய்திகளை செய்தித்தாள்களின் மூலமாகப் பரப்பி வருகிறார்கள். அப்படிக் கிடைக்கின்ற குறிப்புக்களை அடிப்படையாக வைத்து தென்னிந்திய வரலாற்றைத் தொகுப்பதற்குப் பயன்படும். குறிப்பாக செங்கத்தில் கிடைத்த 12 கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டில் முக்கியமான பண்டைய வரலாறு ஒன்று பொதிந்திருக்கிறது. அதாவது மகேந்திரவர்மன் 30 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்றுதான் பழைய வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் மகேந்திரவர்மன் 59-வது ஆண்டுக்காலம் பற்றிய புதிய குறிப்பு கிடைத்திருக்கிறது. ஆகவே அவன் 60 ஆண்டுக்காலம் வாழ்ந்திருப்பான் என்று தெரிகிறது. அவனுடைய தந்தை சிம்மவிஷ்ணுவைப்பற்றி, இதுவரையில் ஒரு குறிப்பும் கிடைக்காமல் இருந்தது. செங்கத்தில் அந்தக் குறிப்பும் கிடைத்திருக்கிறது. மேலும் முதல் பராந்தகன் வரலாறு பற்றிய கல்வெட்டும் கிடைத்திருக்கிறது. மேலும் பல கல்வெட்டுக்களில் பழைய கால போர்க்களக் காட்சிகளும், போர்க்களங்களில் போர் தளபதிகள் போரிட்ட காட்சிகளும், அவர்களுடைய தனித் தன்மையும், அவர்கள் மாண்ட தன்மையும், அவர்களுடைய அருமை பெருமைகளும் கிடைக்கப்பெற்றன. இவையெல்லாம் தென்னிந்திய வரலாறு எழுதுவதற்கு மிகவும் பயன்படும் என்ற காரணத்தால், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் இதில் மிக்க கவனம் செலுத்தி வருகிறார்கள்.





### ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்

* 123 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வளர்ச்சி வட்டாரங்களின் எல்லைகளை மீண்டும் வரையறுத்தல் பற்றிய பிரச்சினையை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பரப்பளவில் பெரியதாக இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கூட்டத்திற்கு வர வேண்டுமென்றால் முப்பது மைல்கள் கடந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1958-59-ல் ஊராட்சி ஒன்றியங்கள் பிரித்த நேரத்தில் மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. மொத்தம் 375-ல் ஒரு ஊராட்சி ஒன்றியம் தகராறில் இருக்கிற காரணத்தால் 374 ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது செயல்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் பல ஊராட்சி மன்றங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதால் சில சங்கடங்கள் வருகின்றன. அரசாங்கத்தின் நிர்வாகச் செலவும் அதிகமாகும். இவற்றையெல்லாம் அரசு ஆராய்ந்தாக வேண்டும். அப்படி இரண்டாகப் பிரிப்பதனால் நிர்வாகத்தை சீராக்க முடியுமா? அதனால் மக்களுக்கு நன்மை விளையுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். சில ஊராட்சி ஒன்றியங்கள் நீண்டு வளைந்து இருக்கின்றன. பரப்பளவு பெரியதாகவும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் எல்லா இடங்களிலும் சீராக நடைபெற முடியாமல் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு காலதாமதமாகிறது என்று குறிப்பிட்டார். பிரிப்பதனால் சில சங்கடங்கள் வரக்கூடும். பிரிக்காதிருக்கும் நிலையில் தான் தலைவனாக வர முடியும், பிரித்தால் தான் தலைவராக வரமுடியாது என்று சிலர் நினைக்கக்கூடும்,

ஆகவே, சில பல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தால் பலன் பெறுமா என்பதை யோசித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### Government Mental Hospital at Kilpauk

* 124 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Public Health be pleased to state—

(a) Whether there is any proposal to celebrate the Centenary of the Kilpauk Government Mental Hospital; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) சென்னையிலுள்ள அரசு மனநல மருத்துவமனையின் நூற்றாண்டு விழா 12—9—1971-லிருந்து 23—9—1971 வரை கொண்டாடப்பட்டது. அவ்விழாவையொட்டி அரசு மனநல மருத்துவமனையில் 18—9—1971-லிருந்து 23—9—1971 வரை ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது.

* 125 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the total number of in-patients now being treated at the Kilpauk Government Mental Hospital?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சென்னை அரசு மனநல மருத்துவமனையில் 19—10—1971-ம் நாள் நிலவரப்படி உள்ளிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,725.

### X-ray films for Government Hospitals in Madras

* 126 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether X-Ray films are being purchased from Messrs Hindustan Photo Films, a Union Government undertaking, by the Madras City Government Hospitals.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம். சில அளவுள்ளவை அவர்களின் முக்கிய விநியோகஸ்தர்களாகிய எக்ஸ்ரே அண்டு அலைடு பிராடெக்ஸ் இடமிருந்து வாங்கப்படுகின்றன.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, உதகையிலே இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் எக்ஸ்ரே பிலிம்ஸ் தரம் உள்ளவைதானா? வெளிநாடுகளிலிருந்து வருகின்றவை போன்று அவை தரமுள்ளவையாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவை பயன்படுத்தப்பட்டு தரமுள்ளவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அவை எந்த எந்த அளவு உள்ளவையாக தயாரிக்கப்



படுகின்றனவோ அப்படிப்பட்டவைகளை டெண்டர்கள்கூடக் கேட்காமல்—அது மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் என்ற நிலையில் வாங்கப்படுகின்றன. இது பொதுத் துறைத் தொழிலை ஊக்குவிக்கின்ற ஒன்றாகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம் மருத்துவ இலாகாவுக்கு முழு அளவுக்குப் போதுமான அளவுப் பொருட்களைத் தருவதாக இருக்கிறதா? இல்லையென்றால் வேறு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இவர்களால் செய்யப்படுகிற பிலிம்கள் முழு அளவுக்கு வாங்கப்படமுடியும். ஆனால் அவர்கள் தயாரிக்காத வேறு சில குறிப்பிட்ட பிலிம்கள் வேறு இடங்களிலிருந்து டெண்டர்கள் மூலமாக வாங்கப்படுகின்றன.

### New Medical Colleges

* 127 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether it is a fact that the Government have given up the proposal to open more Medical Colleges in this State ; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் முழுமையாக பணியாளர்களும் தகுதி பெற்ற ஆசிரியப் பெருமக்களும், அதற்குத் தேவையான பல்வேறு கருவிகளும் அமைத்து, மருத்துவக் கழகத்தின் ஏற்புதலைப் பெறவேண்டியுள்ளதாகையால் தற்போது புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கான பெருநிதி வசதி இல்லை எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே புதியதாக ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்கத் திட்டம் இருந்ததே அது நடைமுறையில் இருக்கிறதா அல்லது கைவிடப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பல்வேறு ஆலோசனைகள் இருக்கின்ற நிலையில் எதுவும் அரசாங்கம் நடைமுறைப் படுத்துகின்ற திட்டம் ஆக உருவாகவில்லை. எனவே, கைவிடப்படுகின்ற பிரச்னை எழவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த மாநிலத்தில் உள்ள மருத்துவ கல்லூரிகள் குறைவாக இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளினால் உருவாக்கப்படுகின்ற டாக்டர்களால் மாநிலத்தில்

உள்ள மக்களுக்கு எவ்வளவு சதவீதம் பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது? இன்னும் அந்த சதவீதத்தை அதிகப் படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர்—மக்கள் விகிதாச்சாரத்தைப் பார்க்கின்றபொழுது வேறு மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் அது சிறப்பாக அமைந்திருக்கிறது. 4,400 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற வீதத்திலே இப்பொழுது இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கு சிகிச்சைகள் அளிக்கக்கூடிய முறையில் தேவையான வசதிகள் அரசாங்கத்திற்கும் இல்லை, பொதுமக்களுக்கும் இல்லை. டாக்டர்களுக்கும் இல்லை. அலோபதி முறை, யூனனி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற அளிப்பதைத் தவிர, வேறு சித்த வைத்தியம், ஹோமியோபதி முறை, யூனனி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற வசதிகள் இருக்கின்ற பகுதிகளிலும் சிறந்த பணிகளை அவர்கள் ஆற்றி வருகின்றார்கள். எனவே அலோபதி டாக்டர்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு எவ்வளவு மக்களுக்கு அவர்கள் சிகிச்சை செய்கிறார்கள் என்று பார்ப்பது சரியல்ல.

THIRU K.M. SUBRAMANIAM: Is it not a fact that last year there had been considerable restriction in the admissions even in the existing medical colleges?

THE HON. THIRU K. ANBAZHAGAN: It is not a restriction upon the admission of students to medical colleges in the last year. Because the number of pupils who were admitted earlier is in large proportion that is actually admitted by the Central Medical Council, last year it was brought to limitation.

*Operation theatres in Thanjavur Medical College Hospital.*

* 128. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the date of commencement of the Thanjavur Medical College Hospital;

(b) the number of operation-theatres provided in the Hospital;

(c) whether all the operation theatres are under use; and

(d) if not the reasons thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) 19—11—1965.

(இ) நான்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் உள்ளன.

(உ) இரண்டு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் பயன் படுத்தப்படுகின்றன.



(எ) 1971 ஜூன் மாதம் முதல் 'டெடானஸ்' தோன்றியதால் இரண்டு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்கள் மூடப் பட்டுள்ளன.

DR. H. V. HANDE: May I know whether this Government proposes to increase the number of operation theatres because this is one central hospital for Tanjore, Trichy districts and there is a College also. May I know whether there is any programme with regard to stepping up the number of operation theatres, to increase the facilities, to air-condition certain theatres, etc. May I know the details?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவமனைகளிலே இன்றைய தினம் மிகுதியான வசதிகள், சாதனங்கள் பொருத்தப் படுகின்றன. தஞ்சையிலே உள்ள ஆப்பரேஷன் தியேட்டர் மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்படுவதால் அங்கே வசதிகளைப் பெருக்கவேண்டுமென்று அரசு உணரவில்லை.

*Building for Women and Children wing in Chingleput Hospital.*

* 129 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of Government to construct a new building for Women and Children's Hospital at Chingleput in the current year; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சார்ந்த தாய்-சேய் பகுதிக்காக ரூபாய் ஆறு லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடத் தைக் கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இக்கட்டிடம் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனையின் வட்டாரத்தில் கட்டப்படும்.

DR. H. V. HANDE: May I know whether it is not a fact that already the hospital attached to the college is not having enough number of patients, to justify its existence. In view of that, is it wise move to have another hospital? May I know whether any concrete steps would be taken to see that instead of crowding in Madras City, many patients could be diverted here so that the existence of extra building might be justified and more patients treated here?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தாய்-சேய் நல மருத்துவமனை என்பது எங்கே ஏற்பட்டாலும் கூட்டம் பொதுவாகவே குறைவாக இருக்காது. வேறுவிதமான சிறப்பு நல மருத்துவமனைகளிலே கூட்டம் குறைவாக இருக்கலாமே தவிர, இவற்றில் இருக்காது, காரணம் இவற்றில்

மெட்டர்னிடி வசதிகளும், பேமிலி பிளானிங் வசதிகளும் பெறப்படுகின்றன. செங்கற்பட்டு மருத்துவமனைப் பகுதியிலே கட்டடம் அமையுமானால் அவர்களுக்கு இங்குள்ள பேராசிரியர்கள் சென்று கண்காணிப்பது அவ்வளவு வசதியாக அமையாது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியினுடைய பகுதியிலே அந்தக் கட்டடம் எழுப்பப்படுவதற்கு அரசாங்கம் ஆணையிட்டு இருக்கிறது.

Dr. H. V. HANDE : Is it not a fact that the quality of treatment given in this hospital is not up to the mark when compared to the hospitals in Madras City. From what I say will it be possible for the Hon. Minister to have a personal investigation in the matter and see that the quality of treatment is stepped up there. I am also interested that more patients should go there. Will it be possible for the Hon. Minister to investigate the matter and see that the quality of treatment is stepped up so that more patients from South Arcot and North Arcot might come here. Can the Hon. Minister give such an assurance that he would investigate into the entire matter. I have brought it to the notice of the previous Ministry also but nothing seems to have been done so far?

The Hon. Thiru K. ANBAZHAGAN : First of all it is not a fact. Secondly every hospital cannot come up to the same standard as hospitals in which there are specialists like Women and Children Hospital, Egmore. Other hospitals cannot have the same standard because the Specialists are there. Therefore Dr. Hande need not press such matters, which no one can prescribe. Such standard cannot be prescribed by the Minister on any account.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : உபதலைவர் அவர்களே, செங்கற்பட்டிலே வரப்போகின்ற மருத்துவமனையிலே பெண்கள் படுக்கைகள் எத்தனை படுக்கைகள் இருக்கும்? குழந்தைகள் படுக்கைகள் எத்தனை படுக்கைகள் இருக்கும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை விவரம் என்னிடத்தில் இல்லை.

*Malaria Eradication Programme in Madras*

* 130 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to carry out the Malaria Eradication Programme in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சி 12·83 இலட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. அத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:—





(i) நகரில் உள்ள மொத்தம் சுமார் 50,000 கிணறுகளில் அந்த மலேரியா கொசு புழு ஒழிப்பு பணியை மேம்படுத்துதல்;

(ii) நோய்க்கு இலக்கான இடங்களைக் கண்காணித்தல்;

(iii) சென்னை மாநகராட்சி முழுவதிலுமுள்ள மருத்துவமனைகளிலும் மருத்துவ இல்லங்களிலும், மாநகராட்சி மருந்தகங்களிலும் இரத்தத் தடவல்களை சேகரிக்க பணியாளர்களை நியமிப்பதன் மூலம் கண்காணிப்பு வேலையை மேற்கொள்ளுதல்;

(iv) நோய் தொற்றிய இடங்களில், டி.டி.டி. மருந்து தெளித்தலும், எல்லா வகை மலேரியா நேர்வுகளுக்கும் அடிப்படை மருத்துவம் செய்தலும் ஆகும்.

Thiru K. M. SUBRAMANIAM : In spite of the fact that excellent work is being carried on by Malaria Eradication Programme, is the Government aware that mosquitoes are increasing in geometrical proportions because the drainage constructed in the City is only for 6 lakhs of people and today the total population is about 20 lakhs. Can the Government do anything to being down this mosquito nuisance, in view of this particular important fact?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தற்பொழுது நடைபெற்றுவரும் இந்த மலேரியா ஒழிப்புப் பணி என்பது மெயின்டனென்ஸ் ஸ்டேஜ் என்ற அளவில் மேலும் வளராமல் ஒரு கட்டத்தில் நிறுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் நிலையில் நடைபெறுகிறது. அது ஏறக்குறைய ஸ்கெலிட்டன் சர்வீஸ் என்று சொல்லும் அளவிற்கு ஒரு அளவு குறிப்பிட்ட சிறு எண்ணிக்கை உள்ளவர்கள் நடத்துகிறார்கள். பெரும் அளவில் நடைபெறக்கூடிய அளவில் திட்டத்தை ஏற்று நடத்த, எராடிகேஷன் ப்ரொகிராம் என்ற முறையில் இன்டென்சிவ் புரொகிராம் நடத்த இப்பொழுது மாநகராட்சி விண்ணப்பித்திருக்கிறது. மாநில அரசு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. மத்திய அரசாங்கமும், பம்பாய், கல்கத்தா, டெல்லி முதலிய நகரங்களுக்கு அவர்கள் தரும் அதே ஒத்துழைப்பை சென்னை நகருக்கும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி அந்த உதவியைத் தர இசைந்தால் முழு அளவில் இந்தத் திட்டம் சென்னை நகரில் நடைபெற வாய்ப்பு இருக்கிறது.

*Regional Family Planning Training Centre*

* 131 Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Regional Family Planning Centre has started functioning in Madras ;

(b) if so, the details thereof; and

(c) the places where such centres are functioning in this State?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) சென்னையிலுள்ள அரசினர் மேல்நிலைப்படுத்தப்பட்ட மண்டல குடும்பக்கட்டுப்பாடு பயிற்சி நிலையம், 1965-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

(இ) இப்பயிற்சி நிலையத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் வேலை பார்க்கும் மருத்துவ அதிகாரிகளுக்கும் மற்றும் பல்வேறு ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(உ) இதைப்போலவே மற்றொரு நிலையம், சேலத்தில் இயங்கி வருகிறது. மூன்றாவது நிலையம் ஒன்று மதுரை காந்தி கிராமில் கிராமிய நல, குடும்ப நல நிலையம் என்ற தனியார் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, வட்டார குடும்ப நலத் திட்டத்தில் சென்னை போன்ற பெரிய இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், இப்பொழுது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் நமது அரசு எடுத்திருக்கும் வேகத்திற்கேற்ற வகையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைத்து இந்த வட்டார நிலையத்தை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையம், குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவ மனைகளில் பணியாற்றுபவர்களுக்குப் பயிற்சியளிக்கும் எல். டி. காலேஜ் என்ற வகையில் டிரெயினிங் காலேஜ். டிரெயினிங் காலேஜ் எல்லாக் கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒன்றும் நடக்காது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணியாற்றுபவர்களுக்கு ஒரு கல்லூரிபோல் பயிற்சி அளிக்கப் படும் ஒரு நிலையம். தமிழகத்தில் மூன்று இடங்களில் ஏற்படுத்த மத்திய அரசு மக்கள் தொகை அடிப்படையில் ஒப்புக்கொண்டு இருக்கிறது, அந்தத் திட்டம் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் காரணமாக நாடாளுமன்றத்தில் நமக்கு ஒரு இடம் போய்விட்டது உண்மையா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**மாண்புமிகு திரு. க அன்பழகன்:** அப்படிப்பட்ட கேள்வியை இதிலிருந்து எழுப்புவது உள்ளபடியே அவ்வளவு பொருத்தமானது அல்ல.





### வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

* 132 **வினா—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—6—1970-ம் நாளன்று வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி நடராசன்:** (அ) ஆம்.

(இ) பீடிச் சட்டத்தை செயற்படுத்துதல், நிரந்தர வேலைக்கு உத்தரவாதம், வேலையில்லாத காலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல், 1968-69. 1969-70 ஆகிய ஆண்டுக்களுக்கான பூரிப்பு ஊதியம் முதலான கோரிக்கைகள் மீது பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

**திரு. கே. ஏ வகாப்:** தலைவரவர்களே, இப்பொழுது அவர்கள் கூறியுள்ள குறைபாடுகளெல்லாம் நீக்கப்பட்டு விட்டதா ? அப்படி நீக்கப்படவில்லையென்றால் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? பாவம், பீடித் தொழிலாளர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே சிரமப்பட்டு வருகிறார்கள். ஆகவே அவர்களின் கோரிக்கையை, குறிப்பாக கூலி உயர்வு, வேலை நிரந்தரம், சுகாதார வசதி ஆகிய இவற்றிலாவது அக்கறை செலுத்த, முதலாளிகளை அணுகி ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி நடராசன்:** தலைவரவர்களே, அந்த பீடித் தொழில் முதலாளிகள் நீதி மன்றத்திலே ரிட் போட்டிருப்பதால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய ஊதியம், பூரிப்பு ஊதியம் முதலியவைகளை முன்பணமாகக் கோர்ட்டில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

**திரு. கே டி. கே. தங்கமணி:** சார், பீடித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமாக ஒரு குழு அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு தன்னுடைய முடிவை சீக்கிரமாக அரசுக்குக் கொடுக்க அரசு ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, 6 திங்களுக்குள்ளாக அந்த அறிக்கையைத் தருமாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

### *Working system for beedi workers*

* 133 *Q.*—**Dr. H. V. HANDE** : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have any proposal to introduc six days a week working system to the Beedi workers; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**DR. H. V. HANDE** : May I know the reasons why there is such a delay with regard to introduction of beneficial measures and welfare measure among the beedi workers? Will the Government go on waiting till the Centre intervenes or gives some recommendation, or as an *ad hoc* arrangement is the Government prepared to comeforward with some sort of welfare measures to the beedi workers?

**மாண்புமிகு திரு. என். வி நடராசன்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே முன் கேள்விக்குச் சொன்ன விவரப்படி நீதி மன்றத்திலே வழக்கு உள்ளதால் ஒன்றும் செய்ய இயலவில்லை. விரைவில் அதைப்பற்றி முயற்சி எடுக்கப்படும்.

### பசுவந்தனை உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விடுதி

*** 134 வினா.—திரு எம். முத்தையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுக்கா பசுவந்தனை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக ஹாஸ்டல் ஒன்று வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆமெனில், அந்த விண்ணப்பங்கள் எப்போது வந்தது ?

(உ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ). (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இந்த பசுவந்தனை ஹைஸ்கூல் வந்து ஏறத்தாழ 10, 12 வருஷங்கள் ஆகின்றன. இதற்குப் பலமுறை ஹாஸ்டல் வேண்டுமென்று நானே அமைச்சரவர்களுக்கும், மாவட்ட அதிகாரிகளுக்கும் அப்ளிகேஷன் அனுப்பியிருக்கிறேன். அங்குள்ள மாவட்ட நல அதிகாரிகள், பசுவந்தனை ஹைஸ்கூலுக்கு அரிசன, பின்தங்கிய மாணவர்கள் 6, 7 மைல்களுக்கு அப்பாலிருந்து படிக்க வருகிறார்கள். எனவே இந்த ஹைஸ்கூலுக்கு ஹாஸ்டல் தேவை என்று அவர்களுக்கும் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்வது குறித்து வருந்துகிறேன். இப்பொழுது இல்லையென்றாலும் இனிமேலாவது இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாவட்ட நலத் துறை அதிகாரி பரிந்துரை செய்து அனுப்பிய பல விடுதிகளில் இந்த பசுவந்தனையும் ஒன்றாக வந்திருக்கிறது. அதனால் அது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த மனுவின் மீது அவர்கள் சிபாரிசு செய்தார்களா என்ற குறிப்பு இருக்கவில்லை. அவர்களது





குறிப்பிலே, அந்த இடத்தில் இருக்கும் பள்ளியில் வெறும் 27 மாணவர்கள்தான் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதிலும் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் அந்த மாணவர்கள் விடுதி அவசியமில்லை என்று அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே அதை வைத்து அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### காகித தொழிற்சாலைகள்

*** 135 வினா.—திரு. கு அ. பொம்மன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் காகித தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** (அ) இல்லை

(இ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, இம்மாவட்டம் தொழிற்சாலையில் மிகமிகப் பின்தங்கியிருப்பதாலும், அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய கச்சாப் பொருள்கள் நிறைய இருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஓரளவிற்குத் தீர்க்கும் முறையிலேயும் இங்கு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் புனராலோசனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** இதற்குத் தேவையான மூலப் பொருள் அதிக அளவிற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது.

*** 136 வினா.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில்லில் மாநில அரசு எவ்வளவு ரூபாய் முதலீடு செய்துள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் நாடு அரசாங்கம் சேஷசாயி பேப்பர் மில்லில் நேரடியாக முதலீடு எதுவும் செய்ய வில்லை. ஆனால் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்த பேப்பர் மில்லில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

**திரு. சு. துரைசாமி:** போனைக் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்க நிறுவனத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறோம். அந்தக் கம்பெனியை ஆரம்பித்தவர்கள்

எவ்வளவு பங்குத்தொகை போட்டு இருக்கிறார்கள்? அந்தப் பங்குத்தொகையைவிட அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலம் அளித்த தொகை அதிகமாயிருந்தால் அரசாங்கமே அதை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மற்றவர்கள் பங்குத் தொகை பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்தக் கூட்டுத்துறையிலே தொழிற்சாலை அமைப்பது என்பதற்கு முன்னாலேயே இம்மாதிரி சேஷசாயி பேப்பர் மில்லிற்கு 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு கோடி ரூபாயைத் திருப்பிப் பெறுவதற்கோ அல்லது அந்த ஒரு கோடி ரூபாய் கொடுத்திருப்பதால் அரசு கண்ட்ரோலை அதிகமாக வைத்து பள்ளிப்பாளையம் தொழிற்சாலையை நடத்த ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது கூட்டுத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. 1967-க்கு முன்னால் ஆரம்பிக்கப் பட்டது. அரசாங்கம் எந்தவிதமான பங்கு முதல் போடவில்லை. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூட்டிலே பணம் போடுகிறார்கள். இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மாநில அரசு நிதி நிறுவனம் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இதற்கேற்ற வகையில் இதிலே அவர்களுக்கு கண்ட்ரோல் இருக்கிறது.

### *All India Trade Test*

* 137 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the All India Trade Test is being conducted in Madras City during 1971–72 ;

(*b*) if so, the subjects in which they are conducted; and

(*c*) the places where they are conducted?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ), (இ) & (உ) சட்ட மன்றத்தின் முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

### அரக்கோணம் அருகிலுள்ள உருக்காலை

* 138 **வினு.—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ள ஸ்டீல் உருக்குத் தொழிற்சாலையின் வேலை துவக்கப்பட்டு விட்டதா?

(இ) இல்லை எனில், காலதாமதம் ஏற்படுவதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) தொழிற்சாலை இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. அது விரைவில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இயக்குதலில் ஏற்பட்ட குறிப்பிட்ட சில இடர்ப்பாடுகள் காரணமாகவும் தொழில் நுட்ப இடர்ப்பாடுகள் காரணமாகவும் இத்தொழிற்சாலை செயல்படத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. கருவிகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. தேவைப்படும் குறிப்பிட்ட சில வகை உருக்கு கிடைக்காததால் உள்நாட்டில் கிடைக்கும் உருக்கைப் பயன்படுத்துவதற்காக தொழிற்சாலைப் பிரிவுகளை மாற்றியமைப்பதற்குத் தேவையான காலமும் இத்தாமதத்திற்குக் காரணமாகும். உயர்வெப்பம் ஏற்கும் பொருட்கள் (Refractories) வழங்குவதில் பற்றுக்குறை ஏற்பட்டது. இருப்பினும், கட்டடப்பணி முழுவதும் முடிக்கப் பட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கனிப் பொருள் உலை சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. ஆனால் மின் அழுத்தப் பொறியில் சில குறைபாடுகள் ஏற்பட்டன. அவை சரி செய்யப்பட்டு வருகின்றன. 1972 ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** இதிலே இரண்டு ஆண்டு காலம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் பொறியாளர்களுக்கும், தலைமைப் பொறியாளருக்கும் இரண்டு ஆண்டு காலம் சும்மா இருந்து சம்பளம் கொடுத்தமாதிரி இருக்கிறது. இதிலே மேற்கொண்டு காலதாமதம் ஆகாமல் வேலை தொடங்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது புதிய தகவலாக இருக்கிறது. வேலை தொடங்கிய பிறகுதான் தேவையான ஆட்களை எடுக்க வேண்டும். என்ன வேலைகள் நடைபெறுகிறதோ அதற்குத் தேவையான ஆட்கள்தான் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** அரக்கோணம் உருக்குத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறபோது கேரள மாநிலத்தவருக்கு முதலிடம் அளிக்கப்படுவதாகப் புகார் இருப்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் நாட்டு மக்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் அந்தப் பகுதி மக்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

* 117-120-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

### அலங்காநல்லூர் பகுதியில் கனிவளங்கள்.

* 139 வினா.— திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் கிடைப்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன்:** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்த சர்க்கரை ஆலை நிர்மாணிக்கப்பட்ட நேரத்தில் நீர் ஊற்று ஆராய்ச்சிக்கு வந்த வெளிநாட்டு நிபுணர்கள் இந்த இடத்தில் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் இருப்பதாக எழுதி வைத்திருக்கிறார்கள். அது அந்தச் சர்க்கரை ஆலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பைப் பற்றி மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பல ஆண்டுகளாக அந்தச் சர்க்கரை ஆலையின் தலைவராக இருந்து வரும் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்குத்தான் அந்தத் தகவலை கூறி இருக்கிறார்கள். அதுபற்றி எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

### *Industrial potentialities in Tiruttani taluk*

* 140 *Q.*—Thiru E. S. Thyagarajan : Will the Hon the Minister for Industries be pleased to state—

(*a*) whether any investigations to explore the industrial potentialities in Tiruttani taluk have been made so far; and

(*b*) the results if any achieved in this regard?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### *Appointment of District Munsiffs*

*** 141 Q.—Dr. H. V. Hande : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(*a*) whether it is a fact that an interview has taken place by the Madras Public Service Commission for the selection of posts of District Munsiffs around the second week of September 1971 ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நேர்முக நியமனமுறை மூலம் மாவட்ட முன்சீப்புகளாக நியமிக்க 15 பேர்களைத் தெரிந்தெடுத்தது ; சார்நிலை மாஜிஸ்ட்ரேட்டுகளிலிருந்து 12 பேர் பதவி மாற்றல் மூலம் மாவட்ட முன்சீப்புகளாக நியமிக்கப்படத் தகுதி பெற்றவர் என்று பரிவுரை செய்தது. இந்த 27 பேர் அனைவரும் அரசின் ஏற்பளிப்பு பெற்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



Dr. H. V. Hande : Sir, may I know whether it is a fact that complaints were received by the Government that the norms which were originally fixed for this selection have been completely ignored and a new method has been adopted with regard to it ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட தகவல் இல்லை. அரசியலமைப்புச் சட்டப்படி நடத்தப்படுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் இருக்கின்றார். சேர்விஸ் கமிஷன் அங்கத்தினர்கள் உடன் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறோம். அவர்களுடைய சிபாரிசு எதையும் நாம் மறுக்கவில்லை.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலநீர்

* 142 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் பூமிக்கடியிலுள்ள நீரைக்கொண்டு விவசாயம் செய்ய நமது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நீர்ப்பாசன வசதிக்காக நிலநீரை இறைக்க மாவட்டத்தில் ஏற்கனவே 10,000 வடிகுழாய்க் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் உள்ளன. சர்வதேச வளர்ச்சிச் சங்கத்திட்டத்தின் கீழ் 7,000 வடிகுழாய்க் கிணறுகளும். 1,000 குறைந்த ஆழக் குழாய்க் கிணறுகளும், 90 நடுத்தர ஆழக் குழாய்க் கிணறுகளும் இந்த மாவட்டத்தில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தவிர விவசாய மறுநிதி உதவி நிறுவனத் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணியைப் பல வட்டங்களில் தொடங்கவில்லை. இதன் காரணமாக நிலவள வங்கிகள் கடன் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கிரவுண்ட் வாட்டர் செல் தன்னுடைய பணிகளை திருத்தணி போன்ற வட்டங்களில் தொடங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் ஒரு இயக்குநரின் கீழ் பணியாற்றி வருகிறது. தமிழ் நாடு முழுவதும் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது ஒரு நீண்டகாலத் திட்டமாகும்.

[1972 சனவரி 29

## சென்னை—கோவை துரித ரயில் வண்டி

*143 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும், சென்னைக்கும் இடையில் புதிதாக துரித (அதிவேக) ரயில் வண்டி விடுவது குறித்து மத்திய அரசினை வலியுறுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவையில் இருந்து சென்னைக்கு வருவதற்கு இப்போது ஒரே ஒரு வண்டி—நீலகிரி எக்ஸ்பிரஸ்தான் இருக்கிறது. அங்கிருந்து சென்னை வந்து செல்லும் மக்கள் தொகை அதிகமாக இருக்கும் காரணத்தால் ஒரு சூப்பர் எக்ஸ்பிரஸ் விடுவதற்கு மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவையிலிருந்து நீலகிரி எக்ஸ்பிரஸ் மாத்திரம் வருவதாகச் சொல்லுவது சரியல்ல.

At present five Express and Mail trains namely, Nilgiris Express, Kerala Express, Cochin Mail, West Coast Express and Mangalore Mail pass through Coimbatore.

அதிக வேக ரயில் விடுவது பற்றி ரயில்வே இலாகாவைக் கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ரயில்வே இலாகாவால் பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறேன்.

## அணைப்பட்டியில் பெரியாற்றின் குறுக்கே பாலம்

*144 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறுக் கால்வாயில் அணைப்பட்டி என்னுமிடத்தில் உள்ள பாலத்தைப் புதுப்பிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அந்த வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வேலைக்கு அரசு அனுமதி அளித்தபின் துவங்கும்.



1972 சனவரி 29]

## கதர் கிராமத்தொழில் வாரியம்.

*145 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பணிகள் நகரத்தோடு நின்றுவிடாமல் கிராமங்களுக்கு எட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

*146 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர்-கிராமத் தொழிலுக்காக 1971-72-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசு வழங்கிய உபரி மானியத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இன்னும் மானியம் வழங்கப்படவில்லை.

## பிற மாநிலங்களிலிருந்து கதர் வாங்கல்.

*147 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் நூற்பதற்கு வேண்டிய பஞ்சம் கதர்த் துணிகளுக்கு பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதை தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

## திருப்பூர் கூட்டுறவு பண்டகசாலை.

*148 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு மத்திய பண்டகசாலை எப்போது துவங்கப்பட்டது?

(இ) 15-6-67-ம் தேதி முடிய எத்தனை முறை தணிக்கையும் சோதனையும் செய்யப்பட்டது?

(உ) இந்த சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 1962ல் இந்தப் பண்டகசாலை துவங்கப்பட்டது.

(இ) தணிக்கை ஆண்டுதோறும் நடைபெற்றது. 1966-ஆம் ஆண்டு கணக்குபற்றிய சோதனையும் நடைபெற்றது.

(உ) ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** இந்தத் தணிக்கையின் மூலம் அந்த நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறதா? நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதை வசூலிக்க சம்பந்தப்பட்ட தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அது 1970-ம் ஆண்டு வரை இயக்குநர்களால் நடத்தப்பட்டு வந்தது. அதுவரை நஷ்டம் ரூ. 3,06,000. அதற்குப் பிறகு அரசாங்கம் தனி அதிகாரி போட்டு நடத்துகிறது. அதற்குப் பிறகு லாபம் ரூ. 9,000. முன்னால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய நடவடிக்கைகள் அரசின் ஆய்வில் இருக்கிறது.

### *Supermarkets*

* 149 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Thanjavur Co-operative Wholesale Stores is operating a Supermarket in Thanjavur; and

(*b*) if so, details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) தஞ்சை சிறப்பங்காடிக்கு அரசு நிதி உதவி ரூ. 2,10,000 வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறப்பங்காடி ரூ. 50,000 லாபத்தில் சிறப்பாகவே நடைபெறுகிறது.

(Thiru K. M. Subramaniam rose.)

MR. DEPUTY SPEAKER : The main question relates to Thanjavur and the hon. Member should put a supplementary question relating to Thanjavur only.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that these costly supermarkets and departmental stores are the luxuries of advanced countries and are mostly used by the upper middle classes. So, for the lower middle classes, will the Government think of opening cheaper sales shops?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, for the sake of middle classes, mini-supermarkets are being run. Already there are 29 such mini-supermarkets. We have now got sanction of the Central Government for another 100 such mini-supermarkets. These mini-supermarkets can cater to the needs of other middle class families.





THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Co-operation whether there is any proposal of Government to open supermarkets in all taluk headquarters?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The proposal is to open mini-supermarkets and not supermarkets in taluk headquarters.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட், சிறப்பு அங்காடியில் சில குறிப்பிட்ட பொருள்கள் அதாவது அமுல், அமுல் ஸ்ப்ரே, சைகிள் டயர் போன்ற பொருள்களைக் கேட்டால் அங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மெம்பர்களுக்குத்தான் கொடுப்போம். மற்றவர்களுக்கு கிடையாது என்று சொல்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகுகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தஞ்சை சூப்பர் மாக்கெட் நடத்துகிறவர்கள் இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பால் தகுந்த அளவில் கிடைக்கவில்லை என்றால், அவர்களிடத்தில் நேரில் சொல்லலாம்.

* 150 **வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலுள்ள சூப்பர் மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உள்ளது.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, மதுரையில் உள்ள சூப்பர் மார்க்கெட் இப்போது ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. அந்த மார்க்கெட் மதுரை மாவட்ட கூட்டுறவு வணிக விற்பனைச் சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகிறது. அந்தச் சங்கத்தின் அலுவலகம் கடைவீதிப்பகுதியில் இருக்கிறது. அங்கே நிறைய இடம் இருக்கிறது. அந்த இடத்தில் இந்த சூப்பர் மார்க்கெட்டை மாற்றுவது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட் விவகாரம் புரையோடிப்போய்விட்டது. இதை மாற்றினால் மட்டும் போதாது. மொத்தம் ரூ. 4 இலட்சம் நஷ்டம் ஆகியிருக்கிறது. இதைச் சீரமைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறினார்கள். அந்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதற்காக தனியான உத்தரவுகள் என்னென்ன பிறப்பிக்கவேண்டுமோ அவை இப்போது ஆய்வில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த சூப்பர் மார்க்கெட்டில் நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அங்கே இருக்கும் பணியாளர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்ட காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த விடையானது மதுரை சூப்பர் மார்க்கெட்டைப் பற்றியது. அதில் ஏராளமான குறைகள் இருக்கின்றன.

*Fruit Processing Unit in North Arcot district.*

* 151 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Fruit Processing Unit of the North Arcot District Co-operative Marketing and Supply Society has received orders, for supply of tomato juice and peeled tomatoes, from France during 1970–71–72; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ப்ரூட் பிராசசிங் யூனிட்டில் ஏற்கெனவே செய்யப்பட்ட பீல்டு பொடடோஸ், டொமடோ ஜூஸ் விற்பனை இல்லாமல் தேங்கி இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தக்காளிச் சாறு ஏற்றுமதி செய்வது பற்றி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஏற்கெனவே செய்யப்பட்ட தக்காளிச் சாறுக்கு வெளிநாட்டில் விற்பனை இல்லை. ஆனால் மாம்பழச் சாறு 20 டன்னுக்கு ஆர்டர் வந்து, சோவியத் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, வேலூரிலுள்ள அந்தப் பழப்பதனிடும் தொழிற் சாலை தன்னுடைய முழு அளவான வேலையைச் செய்ய முடியவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் முழு அளவுக்கு வேலை செய்ய வேண்டிய பழவகைகளை உற்பத்திச் செய்வதற்கு உடனடியாக ஒரு திட்டத்தை அரசு தயாரித்து. பழச்சாறு ஏற்றுமதி செய்ய அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தப் பழச்சாறு ஆலை முழுஅளவுக்கு வேலை செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால், மாம்பழச் சாறு ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும் அதற்கு போதிய அளவுக்கு மார்க்கெட் இல்லை. இப்போது பைனாப்பிள் அன்னாசிப் பழத்தை வெட்டி டின்னில் அடைத்து வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் ஒன்றை செயல்முறையில் நடத்தலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, தக்காளிச் சாறு அதிகமாகத் தங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் மதிப்பீடு என்ன? அவைகள் விற்பனை செய்வதில் காலதாமதமானால் நஷ்டம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் தேங்கியிருக்கிறது என்று சொல்லவில்லை. தக்காளிச் சாறை வெளிநாட்டினர் விரும்பி வாங்குவதற்குத் தயாராக இல்லை என்றுதான் சொன்னேன்.

**வங்கிகளின் குழுக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள்.**

* *152 வினா.—திரு. ந. சோமசுந்தரம் :* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் வங்கிகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (Reserved) தனி இடம் ஒதுக்குவதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாநில நிலவள வங்கியின் இயக்குநர் குழுவிலும், 16 மத்திய வங்கியின் இயக்குநர் குழுவிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்வதற்கான விதிகள் இப்போது அமலில் இருக்கின்றன.

*Transport of stags from Guindy*

* 153 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a number of stags have been transported from the Children's Park, Guindy, Madras to Javadi Hills near Vellore ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) ஆறு ஆண் புள்ளி மான்களும், மூன்று பெண் புள்ளி மான்களும், சென்னை கிண்டியிலுள்ள மான்கள் பூங்காவிலிருந்து வேலூர் வனக் கோட்டத்திலுள்ள சந்தவாசல் சரகத்தைச் சேர்ந்த அமர்தி ஒதுக்கக் காடுகளில் விடுவதற்காக, சென்ற ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டன.

*Hunting in forests of Tamil Nadu*

* 154 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether hunting is allowed in the forests of this State; and

(*b*) if so, the details thereof?

[1972 சனவரி 29

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு வனக்கோட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமங்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட வன அலுவலர்கள், உரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, உரிமங்களை வழங்குகிறார்கள்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, திருட்டுத்தனமாக வேட்டையாடுவதால் நமது நாட்டிலுள்ள புலியினம் அடியோடு அறவே அற்றுப் போய்விட்டது என்பது உண்மையா ? அதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்படிச் சொல்வது தவறு. வேட்டையாடுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். உரிமங்கள் பெறாமல் யாராவது வேட்டையாடினால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

### *Pay of employees of Electricity Department*

* 155 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the system and calculations that are adopted for fixing pay scales of the staff of the Mayavaram-Mannargudi-Tiruvarur Electrical Undertakings when it was acquired by the State Electricity Board;

(*b*) whether the arrears have been paid to the staff ; and

(*c*) whether any petition has been received for the payment of arrears and for reconsideration of scales of pay that have been fixed?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) தமிழ்நாடு மின்வாரியத்தின்கீழ் அனுமதிக்கப்படத்தக்க மொத்த ஊதியத்தில் இயன்ற வரையில் இழப்பு ஏதும் ஏற்படாதவண்ணம் பணியாளரது சம்பளம் நிச்சயிக்கப்படுகிறது.

(இ) வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத்தவிர, மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

(உ) ஆம்.

DR. H. V. HANDE : May I know whether the main grievance, i.e., the anomaly pointed out in the absorption orders passed by Government, whether that has been properly rectified? At the time of merger, they have passed an order. That anomaly was exposed and pointed out by the Union concerned. With regard to fixation of pay, the Board has to take the total emoluments, pay and D.A. for the employees' service under the licensee. Has this been brought to the attention of Government? Have the Government rectified it? This has been pending for a long time?



1972 சனவரி 29]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, டோட்டல் எமால்யூமன்ட்ஸ் குறையாத அளவுக்கு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். அசிஸ்டென்டாக தனியாரிடத்தில் ஒருவர் வேலை பார்க்கும்போது, ரூ. 255-இருந்தது என்று சொன்னால், மின்சார வாரியத்திற்கு வந்ததற்குப் பிறகு ரூ. 255-பெற்றவர்கள் ரூ. 309-பெறுகிறார்கள். மொத்தத்தில் எந்த அளவிலும் குறைக்கப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, மாயவரம்—திருவாரூர் எலெக்டிரிசிடி அண்டர்டேக்கிங்கை அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு சில சிப்பந்திகளுக்கு சம்பள பாக்கி வரவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா ? அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்து இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் ஏற்கெனவே இரண்டாம் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத் தவிர மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

### சிலைகள் திருட்டு.

* 156 *வினா*—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டின் கோயில்களில் உள்ள கலை நுணுக்கம் வாய்ந்த சிலைகள் திருடப்பட்டு வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இந்த சிலைகளைத் திருடுவதற்காக ஒரு தனிக்கூட்டமே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவற்றை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? இப்படிப்பட்ட நுணுக்கமான சிலைகள், அதிகம் விலையுயர்ந்த சிலைகள்—சில சிலைகள், ரூ. 75 லட்சம் வரைகூட விற்கிறது என்று சொல்கிறார்கள்—ஆகியவற்றை அரசாங்கமே ...

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

---

* 120–121-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 சனவரி 29

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. கே. ஏ. வகாப் :** அப்படிப்பட்ட சிலைகளைப் பாதுகாப்ப தற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, பேரவை யின் முன் வைக்கப்பட்டு இருக்கும் விவர அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அரசாங்கமே சிலைகளை விற்பதற்கான யோசனை எதுவும் இல்லை.

## *Kalyana Mandapam in Sri Kapaleeswarar Temple*

* 157 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Kalyana Mandapam of the Sri Kapaleeswarar Temple in Mylapore is leased at heavy rent;

(*b*) if so, the details thereof; and

(*c*) the details of the steps taken to rent it to poor people?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the terrible exploitation by the richer class by constructing *kalyana mantapams* and letting them out at very, very high rates, will this Religions Endowment Department consider constructing small *kalyana mantapams* for poor sections of the public?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, சாதாரண ஏழை எளிய மக்கள் கோவில்களில் சென்று திருமணம் செய்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. குறைந்த கட்டணமே வசூல் செய்யப்படுகிறது. ஏழை மக்களுக்குப் பயன்படும் வகை யில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

## அழகர்கோவிலுக்கு சாலை.

*** 158 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அழகர்கோவிலில் அடிவாரத்திலிருந்து மலை உச்சிவரை சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?



1972 சனவரி 29]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்தச் சாலை அமைப்புக்கு ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார். இந்த அழகர் கோவில் சாலைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இது எவ்வளவு காலத்திற்குள் அமைக்கப்படும். ஒரு மைல் தூரந் தான் இருக்கிறது என்பதால் சீக்கிரமே அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்த சாலை அமைக்க ஒப்புதல் சமீபத்தில்தான் தரப்பட்டிருக்கிறது. சுமார் 2 மைல், 3 பர்லாங்கு தூரத்திற்கு அமைக்கப்படவேண்டும். அதற்கான எஸ்டி மேட் தொகை ரூ. 3:17 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## *Contribution to Government Arts College at Tiruttani*

* 159 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Tiruttani Sri Subramania Swami Devasthanam has paid the contribution of Rs. 5,00,000 to the Government promised for opening a Government Arts College at Tiruttani?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை. நிதி வழங்கும் முறையினைப் பற்றி நிர்வாக அதிகாரி, அரசினை அணுகியுள்ளார்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, திருத்தணிக் கலைக் கல்லூரிக்கு கிடைத்திருக்கும் 20 ஏக்கர் நிலம் போதாது, மேலும் தேவைப்படுகிறது என்பதால், இன்னும் 20 ஏக்கர் நிலம் தேவஸ் தானத்திலேயே வாங்கித்தரக் கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற் படுத்திக் கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிதியைப் பற்றிய கேள்வி. இடம் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

## கோவில்களில் தமிழில் அர்ச்சனை.

*** 160 வினா.—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் அர்ச்சனை சுலோகங்களை ஒவ்வொரு கோயில்களிலும் தமிழில் எழுதி வைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு கோவில்களிலும் சமஸ்கிருத சுலோகங்களே

சொல்லப்படுகிறது ஏழை எளிய மக்களுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அந்த சுலோகங்களை தமிழில் எழுதி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, சம்ஸ்கிருத சுலோகங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழிலேயே சுலோகங்கள் இருப்பதால், தற்போது சில கோவில்களில் தமிழிலே எழுதி வைத்திருக்கிறார்கள். படிப்படியாக எல்லாக் கோவில்களிலும் அந்த அந்தக் கோயில்களே அப்படிச் செய்ய நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, கோவில்களில் அர்ச்சகர்களாக வருவதற்கு தகுதி என்ன? அவர்களுக்குப் பள்ளிக் கூடம் இருந்து, அதில் நற்சான்று இதழ்கள் வழங்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தற்போது அர்ச்சகர்களுக்கு பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அதில் எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் படித்து அர்ச்சகர்கள் ஆகலாம் என்று சட்டத்திலேயும் மாறுதல் செய்தோம். அது இப்பொழுது உயர்நீதி மன்றத்தில் அப்பீலில் இருப்பதால் தற்போது நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், கோவில்களில் அர்ச்சனை செய்யும் சுலோகங்கள் தெய்வங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அல்லது மனிதர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் என்று செய்யப் படுகின்றன? தெய்வங்களின் திருப்திக்கா அல்லது மனிதர்களின் திருப்திக்கா ? அப்படி அதிலே எது சரியானது என்பதைச் சொன்னால். மக்கள் திருப்திப்படவேண்டும் என்றால் தமிழ் மொழியிலும்; தெய்வத்திற்கு என்றால் எந்த மொழியில் வேண்டுமானால் இருக்கலாம் என்பதை ஒரு வழிமுறையாகச் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இறைவனைத் திருப்திப் படுத்தவா அல்லது பக்தர்களைத் திருப்திப்படுத்தவா என்பது அவரவர்களுடைய மனோநிலையைப் பொருத்ததாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையில் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### ஆவடி டாங்க் தொழிலாளர் மீது காவல்துறையினர் தடியடி நடத்தியதும், சங்க தலைவர்கள் உட்பட பலர் காயமுற்றதும் குறித்து.

MR. SPEAKER : Thiru R. Ponnappa Nadar has given notice of the following adjournment motion—

"That the business of the House do stand adjourned to discuss about an urgent matter of public importance, namely, the police lathi charge at Avadi on 28th January 1972 when many persons including the trade union leaders were injured at a meeting of the workers near the factory premises in the morning."

Thiru K. T. K. Thangamani has given notice of the following adjournment motion—

"That the business of this House stand adjourned to discuss an urgent matter of public importance, viz., unprovoked police attack on the Avadi Tank factory workers, who had assembled one mile away from the protected area seriously injuring 40 persons including Trade Union Leaders and consequent tension in the area."

Thiru A. Subramaniam has given notice of the following adjournment motion :

"That the business of the House today stands adjourned to discuss a definite matter of urgent public importance, viz, the serious situation that has arisen because of the police lathi charge and use of teargas against workers of the Avadi Tank Factory on Friday, as a result of which several people, including trade union leaders have been seriously injured and hospitalised, the arrest of many prominent trade unionists and the fear and scare that is prevailing among the people of the area."

Thiru J. James has given notice of the following adjournment motion—

"That the business of this House stand adjourned to discuss an urgent matter of public importance, viz. the police excess and indiscriminate lathi charge by the police on the workers of Avadi Tank factory and on the labour leaders on 28th January 1972—the lathi charge on the leaders was done by the police officials while they were inside a house. Large number of victims including the leaders are in the hospital."

**திரு. எம். சுரேந்திரன் :** கீழ்க்கண்ட தீர்மானத்தை, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் கொடுத்திருக்கிறார்கள் :

"28—1—1972-ல் ஆவடி டாங்கு தொழிற்சாலைத் தொழிலாளர் கூட்டத்தில் போலீசார் கண்ணீர் புகை, தடியடி நடத்தி தொழிலாளர் சங்கத் தலைவர்கள் உட்பட பலபேர் அடிபட்டு, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிலை சென்னை நகரிலும் விசேஷமாக ஆவடி பகுதியிலும் பெரும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. ஜனங்கள் பய உணர்வுடன் வெளியில் நடமாடவே பயப்படுகின்றனர்.

ஆகவே, அவசர பொது முக்கியம் வாய்ந்த இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்காக சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டும் என்று கோருகிறேன்."

*திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் முதலில் இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான விதிமுறைகளின் கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக விளக்கலாம்.*

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I have given the notice of the following motion—"I wish to move the adjournment motion standing in my name" and before moving that motion I would like to say only a few facts which may be quite relevant to the issue. Sir, the workers in that institution were on strike from 24th January 1972 and it is said that there are certain demands and the management has not been looking after those demands. It is said that was a clash among the workers on Thursday between rival groups and in which certain people were reported to have sustained injuries as well. Yesterday there was an adjournment motion and the Chief Minister was pleased to give certain details regarding those incidents and he also assured the House that in the interest of law and order all steps would be taken. He also appealed to the workers as well as to the trade union leaders and others that peace should be maintained at all costs.

Certain untoward incidents have happened yesterday in which I would say, lathi charge has been rssorted to and beating has been done indiscriminately. That is the report which I have in my possession. In the lathi charge certain trade union leaders like Mr. Kuchelar, Mr. Chinthan and Mr. K. M. Sundaram are also stated to have been injured and they are now admitted in the hospital. Besides, 34 others were also said to have sustained injuries. The report is that a certain section of workers wanted to hold a meeting in defiance of the ban order and as a result of that this lathi charge is said to have happened. Whatever be the merits of the case—I am not on the merits of the case at this juncture—suffice it for me to say that excessive force has been used because the trade union leaders were also beaten. What is the necessity for beating those trade union leaders who were also present there ? Many workers have also sustained injuries. Anyway excessive force has been used and teargas shells have also been fired. It is in the interest of the House and the industrial peace of our State that this urgent matter of public importance be discussed on the floor of the House. Sir, all parties have got a right to co-operate with the Government and meanwhile the Government should also assure the workers that a peaceful atmosphere will prevail. The Government should take only such steps which are needed to preserve law and order and they should not interfere in the day-to-day trade union activities. These are



matters which will be borne in mind when a detailed discussion regarding this issue will be taken up. Recurrence of these incidents will cause great anxiety and it will impair the industrial peace of our State. So, I would once again request that the business of this House do stand adjourned for discussion of this urgent matter of public importance. With these words, I resume my seat Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நேற்றைய தினம் இதே மாதிரியான ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நான் பேசியது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அப் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது கூட்டம் நடந்த இடம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருந்தது, ஆகவே அந்த பாதுகாக்கப்பட்ட பகுதிலே இப்படித் தொழிலாளர்கள் கூடி இருந்த காரணத்தினால் அந்தச் சம்பவம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் நேற்று கூட்டம் நடந்த இடமானது பாதுகாக்கப்பட்ட இடமல்ல. இந்த இடம் பாக்டரியி லிருந்து சுமார் 1½ மைல் தூரத்திற்கு அப்பால் ஆவடி இரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் உள்ளது. அந்த இடத்தில் கூட்டம் நடந் திருக்கிறது. இப்படி ஒரு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று 27-ம் தேதி முடிவு செய்து நேற்றையதினம் பல தொழிற்சங்கத் தலைவர்களும் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அம் மாதிரி பேசுவதற்காக அழைக்கப்பட்ட பேச்சாளர்களிலே நானும் ஒருவன். சட்ட மன்றம் இருந்த காரணத்தினால் நான் செல்லாமல் என் சார்பாக ஏ.ஐ.டி.யு.ஸி. செயலாளர் கே. எம். சுந்தரத்தை அனுப்பி வைத்தேன். இன்று அவரை ஆஸ்பத்திரியில் பார்க்கும் போது எனக்கே மிக வேதனையாக இருந்தது. நான் போயிருந் தால் எனக்கும் இத்தகைய கதிதான் ஏற்பட்டிருக்கும். அவர் மிக மோசமான முறையிலே அடிக்கப்பட்டு அவருடைய மண்டை உடைக்கப்பட்டிருந்தது.

அங்கு நடந்த சம்பவங்களைப் பற்றி சுந்தரம் அவர்களிடம் நேரிடையாகக் கேட்டு அவர் சொன்ன விவரங்களைப் பார்த்தால் சுமார் 800 தொழிலாளர்கள் கூடியிருந்தார்கள். அங்கு ஆவடியிலே 4 தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. சங்கங்களுக்குள் எந்தவிதப் போட்டியும் கிடையாது. அதிலே ஒரு சங்கம் மத்திய சம்மேள னத்தோடு இணைக்கப்பட்ட சங்கம். இந்த 4 சங்கங்களும் சேர்ந்து ஒரு குழு அமைத்து போராட்டம் நடத்துகின்றன. ஜெனரல் மானேஜர் அவர்கள் சில தொழிலாளர்களை சஸ்பென்ஷன் செய் திருக்கிறார்கள் என்று சொல்லி, அதோடு இணைந்த சில கோரிக்கை களை வைத்துத் தான் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்று சொல்லி அங்கு இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் நடந்து கொண் டிருக்கிறது. நேற்று கே. எம். சுந்தரம் அவர்கள் ¾ மணி நேரம் நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசி, இருக்கின்ற தகவல்களை யெல்லாம் எடுத்துக் கூறி, சட்ட மன்றத்தில் இந்தப் பிரச்சனை

ளைப்படும் என்று சொல்லி பல விவரங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஒரு இரண்டு பேர் பேசிய பிறகு தான் பின்னால் அங்கு ஆர்.டி.ஓ. வந்து இங்கு பேன் ஆர்டர் இருக்கிறது, கூட்டம் நடத்தக் கூடாது என்று சொன்னார்கள். அப்படி பேன் ஆர்டர் போடப்பட்டு இருந்தால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டாமென்று நானே நிச்சயமாக அவருக்குச் சொல்லியிருப்பேன். இன்றைக்குச் செய்திகளைக் கேட்கும் போது வேண்டுமென்றே லத்தி சார்ஜ் செய்யப்பட்டது என்று நினைக்க வேண்டி இருக்கிறது.

ஆகவே, லத்தி சார்ஜ் என்பது தொழிலாளர்களை பயமுறுத்துவதற்காக அந்த நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் போலீசார் செய்ததாகத் தான் என்று என்னாலே கருத வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குப் போகலாம் என்று ஏற்பாடு செய்து இருந்தார்கள். அந்த இடத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றித் தொழிலாளர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் எந்த அளவிற்கு இந்தச் சம்பவங்கள் நடந்தன என்ற விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் போலீஸ் அதிகாரியே சொன்னார்கள் இப்போது ஜெனரல் மானேஜர் அவர்களைப் பார்ப்பது சரியல்ல ஏனென்றால் அவர் யாரிடத்திலும் ஒழுங்காகப் பேசுவதில்லை என்று சொன்னார்கள். அவர் எப்படி இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு போகலாம் என்றும் சொன்னார்கள்.

இந்தத் தொழிலாளர் பிரச்னை சரியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று கருதி சட்ட அமைச்சர் அவர்கள் மத்திய டிபன்ஸ் புரொடக்ஷன் அமைச்சர் சுக்லா அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். தொடர்பு கொண்டபோது அவர்கள் சொன்னார்கள் இது பற்றி எனக்குத் தகவல் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் தொழிலாளர் சம்மேளத் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியவர்களுக்கு இது பற்றி விரிவாகத் தந்தி கொடுத்து இருக்கிறேன். . பேச்சு வார்த்தை மூலம் இந்தப் பிரச்னை தீர முடியும். ஆனால் இந்தப் பிரச்னையில் உள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கு தமிழக அரசின் போலீசார் சரியாக நடந்து கொள்ளாமல் இந்தப் பிரச்னையைச் சிக்கல் ஆக்குவதற்கு ஆன முறையிலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைப் பார்க்கும்போது வேதனைக்குரியதாக இருக்கிறது. நேற்று நான் ஆஸ்பத்திரியில் பலரைப் பார்த்தபோது பலர் அடிபட்டிருக்கிறார்கள். வேண்டுமென்றே இப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் அங்கு இருக்கக் கூடிய ஜெனரல் மானேஜர் நீங்கள் எப்படியும் அந்தத் தொழிலாளர்களை மிரட்டித்தான் தீர வேண்டுமென்று சொல்லி போலீசார் இந்த நிலையை எடுப்பார்களானால் இங்கு இதற்கு முன்னால் இருந்த



காங்கிரஸ் ஆட்சியிலே நடைபெற்ற தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களில் போலீசார் தங்கள் இஷ்டப்படி செய்வதும், வீடு, வீடாக நுழைந்து அங்குள்ளவர்களைத் தொந்தரவு செய்வதும் தான் என்னுடைய அனுபவத்திலே பார்த்தது ஞாபகத்திற்கு வருகிறது. இப்படிப் போலீசார் அத்து மீறியசெய்கையில் ஈடுபட்டது உள்ளபடியே கண்டிக்கத்தக்கது. இந்தச் செய்கை தொடராமல் இருக்கக் கூடிய முறையில் ஒரு உத்திரவாதத்தை இந்த அரசு அளிக்குமானால் அந்தத் தொழிலாளர் பிரச்னை லகுவாகத் தீர் வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நேற்றைய தினம் நடந்த சம்பவத்தைப் பற்றி நான் விசாரித்துப் பார்த்த மட்டில் அது போலீசாரின் அத்து மீறிய செயல் என்று தான் தெரிகிறது தொழிலாளர் தரப்பில் இருந்து எந்தவித மான ஆத்திரமூட்டும் செய்கையும் நடந்ததாகத் தெரியவில்லை. போலீசார் வேண்டுமென்றே இத்தகைய செய்கையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தான் தெரிய வருகிறது. எனக்குத் தெரிந்த மட்டில் ஒன்றிரண்டு பேர் அந்த இடத்திலே கலாட்டா பண்ண வேண்டுமென்று வந்திருக்கலாம். தொழிற்சங்கத் தலைவர்களும். தொழிலாளர்களும், நாடாளு மன்ற உறுப்பினர்களும் கூடி இதற்கு என்ன வழி என்று கூட்டம்கூடி யிருக்கிற நேரத்தில், இந்தப் பிரச்னைக்கு குந்தகம் ஏற்படுகின்ற முறையிலே இதைத் தீர்ப்பதற்கு சிரமத்தை உண்டாக்குகின்ற வகையிலே, மேலும் மேலும் இதில் சிக்கல் ஏற்படுத்துகின்ற வகையிலே, இந்தப் பிரச்னை என்ன என்று புரியாமல் ஆக்குவதற்கு தொழிலாளர்களிடையே பீதி ஏற்படுத்தக் கூடிய அளவிற்குப் போலீசார் அத்து மீறிய செயலில் இறங்கியிருக்கிறார்கள் என்பது, அந்தச் செயல் கண்டிக்கத்தக்கது என்ற முறையிலே தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மிக முக்கியமானது என்று நான் மீண்டும் ஒரு முறை வற்புறுத்தி விட்டு அமருகிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்:. பேரவைத் தலைவரவர்களே, நேற்றையதினம் ஆவடி டாங்கி பாக்டரித் தொழிற்சாலைத் தொழிலாளர் கூட்டத்திலே நடைபெற்ற சம்பவமானது எனக்குத்தெரிந்த மட்டிலே அங்கு ஒரு கூட்டம் கூடியதாகவும், அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்குப் போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகை நடத்தியதாகவும் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கூட்டம் நடந்த இடம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திற்கு வெளியிலே "நான்-புரொடெக்டட் ஏரியா" என்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர் கூட்டம் அமைதியாக நடந்தது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட அமைதியான கூட்டத்தைக் கலைப்பதற்குக் கடுமையான தடியடி, கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தி தொழிற்சங்கத் தலைவர்களைத் தாக்கி, தொழிலாளர்களையும் சேர்த்து அடித்து அவர்கள்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 சனவரி 29

படுகாயத்துடன் மருத்துவ மனைக்குப் போக வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால் ஏதோ பெரும் கோளாறு இந்தப் போலீசாருடைய நடத்தையிலே இருக்கிறது என்று தான் கருத வேண்டியிருக்கிறது.

அந்த வேலை நிறுத்தத்தின் தகுதி, அதில் உள்ளபிரச்னைகள் ஆகியவற்றுக்குள் நான் போக விரும்பவில்லை. அது சம்பந்தமாகப் பல முயற்சிகள் நடக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் நேற்று நடந்த சம்பவம் தொழிலாளர் கூட்டம் கூடுவதற்கான உரிமை உள்ளதா, அவர்கள் இப்படிக் கூட்டம் கூடுகிறபோது போலீசார் எந்த வகையிலே நடந்து கொள்ள வேண்டும் என்கிற பிரச்னைகள் எழுகின்றன. சட்டம் அமைதியைப் பாதுகாக்கின்ற பொறுப்பு போலீசாருடையது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்கள் இந்த நாட்டு குடிமக்கள் என்ற வகையிலே, தொழிலாளர்கள் என்ற வகையிலே சில அடிப் படை உரிமைகள் பெற்றிருக்கிறார்கள். அந்த உரிமைகளில் ஒன்று கூட்டம் கூடும் உரிமையாகும். இந்த உரிமையை அவர்கள் அனு பவிக்கும் நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதும், பாதுகாப்பதும் அரசின் கடமையாகும். தொழிலாளர்களின் இந்த உரிமையை மறுக்கின்ற வகையிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறு கின்றன. இந்த ஒரு சம்பவம் மட்டுமல்ல. இப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இந்த அரசில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு அரசிலும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு. தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படாமல். அதே நேரத்தில் சட்டத்தையும் அமைதியையும் நியாயமான முறையில் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி போலீசார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி. எல்லாத் தரப்பினருக்கும் நல்ல பல கருத்துக்கள் இருக்கும், போவைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டு விவாதம் நடக்குமானால், இந்தக் கருத்துக்களை அரசு அறிந்து நல்ல முடிவு எடுக்க இயலும் என்பதால் என் ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நேற்றையதினம் இந்த ஆவடி டாங்கித் தொழிற்சாலை வேலை நிறுத் தம் பற்றி இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது நான் விரிவாக விளக்கங்களை அளித்திருக்கி றேன். அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அளித்த மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் மத்திய அரசின் அமைச்சர் சுக்லா அவர்களே பாதுகாக்கப்பட்ட எல்லைக்குள் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் மத்திய அமைச்சரவர்களிடத்தில் தொடர்பு கொண்டு இது பற்றி விசாரிக்குமாறு நம்முடைய தொழில் அமைச்சர் திரு. மாதவன்



1972 சனவரி 29] [டாக்டர் மு. கருணாநிதி]

அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்கள் நேற்று இரவு மத்திய அமைச்சர் அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு பேசிய போது மத்திய அமைச்சரவர்கள் தான் அவ்வாறு தெரிவிக்கவில்லை என்றும், ஆவடி டாங்கித் தொழிற்சாலையினுடைய ஜெனரல் மானேஜர் அவர்கள் இப்படிக் கூட்டங்கள் நடத்துவது கூடாது என்று இந்த நேரத்திலே விரும்பினால் அது நியாயமாகும் என்றும், இதைப் போன்று வேலை நிறுத்தம் நடக்கின்றபோது, இந்த அள விற்கு தொழிற்சாலையில் உள்ள தொழிலாளிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறபோது அங்கு கூட்டங்கள் நடைபெறுவது முறையல்ல என்றும் மத்திய அமைச்சர் அவர்கள் கருதுவதாகத் தான் திரு. மாதவன் அவர்களிடத்திலே செய்தி மூலம் தெரிவிக்கப் பட்டது.

இப்போது வேலை நிறுத்தக்காரர்கள் வைத்துள்ள பிரச்னைகள் குறித்தும் அவர்கள் உடனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்தப் பிரச்னைகளை கவனிக்க வேண்டும் என்றும் தமிழக அரசின் சார்பாக மத்திய அரசு அமைச்சரிடத்தில் எடுத்துச்சொல்லப்பட் டதற்கு மத்திய அரசு அமைச்சர் மாண்புமிகு சுக்லா அவர்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அவர்கள் முதலில் வேலைக்குத் திரும் பட்டும்; அதற்குப் பிறகு அவர்கள் எழுப்பியிருக்கின்ற கோரிக்கைகளைப் பற்றிப் பேசலாம் என்கிற அளவுக்குச் சொல்லி ருக்கின்றார்கள். அதுவும் அந்தத் தொழிற்சங்கத்தினுடைய தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களிடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை அவர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே தங்கமணி சொன்னார் கள், இப்படி விவகாரம் இருக்கும்போது நாமே இதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது, குறுக்கே போலீசார் புகுவானேன் என்று கேட்டார்கள். குறுக்கே புகுவானேன் என்ற வார்த்தை வரை சரி. ஆனால் 'போலீசார்' என்பதற்குப் பதிலாக தொழிற் சங்கத்திற்கு சம்பந்தமில்லாத சில பேர் புகுவானேன் என்று அவர்கள் கேட்டிருப்பார்களேயானால் அது நியாயமானதாக இருக்கும். (கைதட்டல்). அதை ரகசியமாக எங்களிடத்தில் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர் களிடத்தில் சொன்னார்கள். "நாங்கள் நடத்திக் கொண்டிருக் கின்றோம்; இவர்கள் புகுந்து கலாட்டா செய்கிறார்கள்" என்று மெத்த வருத்தப்பட்டார்கள். எனக்கு அவர்களுடைய உள்ளம் நன்றாகத் தெரியும். இதுபோன்ற விபரீதங்களை சில பேர் வேண்டு மென்றே தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளச் செய்கிறார்கள் என்று அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். குறுக்கே புகுந்தது

போலீசார் அல்ல. இதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே.
தங்கமணி அவர்கள் ஈடுபடுகின்ற நேரத்தில் தாங்களும் புகுந்து
விளம்பரம் தேடிக்கொள்ள வன்முறையாளர் புகுந்த காரணத்தினால்
நேற்றைய சம்பவம் ஏற்பட்டு, இன்று இந்த ஒத்திவைப்பு
தீர்மானத்திற்கு அவசியம் ஏற்பட்டது.

நேற்றைய சம்பவங்கள் பற்றிய விவரத்தை இங்கே தர விரும்பு
கின்றேன்.

28—1—1972 அன்று காலை ஆவடி டாங்கி தொழிற்சாலை தொடங்
கப்பட்டது. பல தொழிலாளர்கள் வேலைக்கு புறப்பட்டு வந்த
போது பாதி வழியிலேயே வேலைக்குப் போகாதீர்கள் என்ற அச்
சுறுத்தலால் திரும்பச் சென்றுவிட்டார்கள். அன்று காலை சுமார்
11.45 மணிக்கு குசேலர். சிந்தன் ஆகிய இருவரும் 200 பேர்கள்
அடங்கிய தொழிலாளர்கள் கூட்டம் ஒன்றை தடை உத்திரவை
யும் மீறி ஆவடி ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள திடலில் நடத்தி
ஞர்கள். நேற்று நடைபெற்றக் கூட்டம் பாதுகாக்கப்பட்ட
எல்லைக்குள்ளே நடைபெற்ற கூட்டம் அல்ல என்று சொல்லப்பட்
டது. பாதுகாக்கப்பட்ட எல்லைக்குள்ளே நடத்தப்பட்டதல்ல.
என்றாலும் ரயில் பாதைக்கு அருகாமையில் தடையுத்திரவு
போடப்பட்டிருந்தது. அந்தத் தடை உத்திரவை மீறி நடத்தப்
பட்ட கூட்டம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.
உடனடியாக மாவட்ட கண்காணிப்பாளரும், காஞ்சீபுரம் கோட்
டாட்சித் தலைவரும் இதனை தொழிலாளர்களுக்கு எடுத்துச்
சொல்லி அவர்களை அமைதியான முறையில் கலைந்து போகச்
செய்யலாம் என்ற நம்பிக்கையோடு கூட்டம் நடந்த இடத்திற்கு
விரைந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் அவ்விடத்தை
நெருங்கிக் கொண்டிருக்கும்போது குசேலர் பேசிக் கொண்டிருந்
திருக்கிறார். அவர் பேச்சு எந்தமுறையில் இருக்கும் என்பது
இங்கே வீற்றிருக்கின்ற தலைவர்களுக்குத் தெரியும். காவல்துறை
யினரை எதிர்த்து மிகக் கடுமையாகப் போராடுங்கள், அவர்கள்
பல்லை உடையுங்கள், அவர்கள் கண்ணைப் பறியுங்கள் என்று
குசேலர் தொழிலாளர்களுக்குக் கூறிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.
அவருக்கு முன் பேசிய சிந்தன், கே. எம். சுந்தரமும் கூட அதே
பாணியில் தான் பேசியதாக அறியப்படுகிறது. காவல்துறையினர்
இடத்தை வந்தடைந்தவுடன் அங்கே கூடியிருந்த கூட்டத்தினர்
சரமாரியாக கற்களை வீசத் தொடங்கினார்கள். நன்முறையிலும்,
எச்சரித்தும் கூறப்பட்ட அறிவுரைகளையும் புறக்கணித்துவிட்டு,
காவல்துறையினர் மீதும், அவர்களது வாகனங்கள் மீதும் கற்கள்
எறியப்பட்டன. இதில் ஆவடி காவல்நிலைய இன்ஸ்பெக்டர்
திரு. ஸ்ரீராமன், மாநில புலனாய்வுத்துறை தனிப்பிரிவைச் சேர்ந்த
ஆய்வாளர் திரு. சேகர், மற்றும் ஒரு தலைமைக் காவலரும் காய





மடைந்தார்கள். காஞ்சீபுரம் கோட்டாட்சித் தலைவர் உடனே அக்
கூட்டத்தை சட்டவிரோதக் கும்பல் என்று பிரகடனப்படுத்தி
விலகிப் போகுமாறு உத்திரவிட்டார். 11 கண்ணீர்ப்புகை குண்டு
களும் 4 எறி குண்டுகளும் சுடப்பட்டன. கூட்டத்தினர் கண்ணீர்ப்
புகை பிரயோகத்தையும் சமாளித்துக்கொண்டு கற்களை தொடர்ந்து
வீசினார்கள். ஆகையால் கைத்தடியால் கூட்டத்தினர் விரட்டியடிக்
கப்பட வேண்டிய நிலை உருவாயிற்று. அந்தக் கலவரத்தில்
குசேலர், சிந்தன் உள்பட 34 கலகக்காரர்கள் காயமடைந்தார்கள்.
சட்டவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்களும், காயமடைந்தவர்
களும் ஆகிய 34 பேர்களும், மற்றும் 14 பேர்களும் கைது செய்யப்
பட்டுள்ளார்கள். இவர்களில் 40 பேர்கள் வேலைநிறுத்தப் போராட்
டம் செய்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. காவல்
துறை பேருந்துகள் 4 கல்லெறியப்பட்டு சேதமுற்றன. குசேலர்,
சிந்தன் உள்பட 9 பேர்கள் அரசாங்க தலைமை மருத்துவ மனைக்
கும், ஏனையோர் ஆவடியில் உள்ள காவல்துறையின் தனி ஆயுதப்
படை மருத்துவ மனைக்கும் எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை
யளிக்கப்பட்டார்கள். இன்ஸ்பெக்டர் ஸ்ரீராமன் ஆவடியில் உள்ள
காவல்துறை மருத்துவமனையில் அகப்பிணியாளராகச் சேர்க்கப்
பட்டுள்ளார். ஆவடி காவல் நிலையத்தில் இது குறித்து வழக்கு
ஒன்று குற்ற எண். 54/72 இ.பி.கோ. 147, 148, 353, 332, 427,
337, 307, 149 மற்றும் 188 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு
புலன் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய சம்பவத்தின் பின்விளைவாக அம்பத்தூர், திருவொற்
றியூர், எண்ணூர் போன்ற தொழிற்சாலைகள் நிறைந்த இடங்களி
லிருந்து தோன்றக்கூடிய எந்தவிதமான அவசர நிலைமையையும்
சமாளிக்கத் தக்கவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மாவட்ட காவல்
துறையினரால் செய்யப்பட்டுள்ளது. அருகில் உள்ள தொழிற்
சாலைகள் நிரம்பிய பகுதியையும் சுற்றிவந்து கண்காணிக்கத் தக்க
ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று காலையில் கூட 5.58-க்கு சில அரசாங்க பஸ்கள் தாக்கப்
பட்டிருக்கின்றன. ரூட் நம்பர் 61 பஸ் புரசைவாக்கத்தில் தாக்கப்
பட்டு முன்பகுதியில் உள்ள கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருக்
கின்றன. கல்வீசியதன் காரணமாக டிரைவருக்கும், கண்டக்டருக்
கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. ரூட் நம்பர் 37 பஸ்மீது கல்லெறி
யப்பட்டு விண்டு ஸ்கிரீன், முன்பகுதியில் உள்ள கண்ணாடி
உடைக்கப்பட்டிருக்கிறது. அங்கும் டிரைவருக்கும், கண்டக்
டருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. புரசைவாக்கத்திற்கு
அருகில் ரூட் நம்பர் 29-சி பஸ்மீதும் கற்கள் வீசப்பட்டு கண்ணாடி
உடைக்கப்பட்டிருக்கிறது. நல்ல வேளையாக டிரைவரும், கண்டக்
டரும் காயம் ஏதும் இல்லாமல் தப்பித்திருக்கிறார்கள். பஸ்ஸில்

செல்லுகிறவர்கள் டிரைவர்களும், கண்டக்டர்களும் தான் இந்தக் கிளர்ச்சிக்கார தொழிலாளர்களால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது இன்றைய காலை சம்பவமாகும்.

இப்படியே தொடர்பாக நடைபெறுகின்ற திட்டமிட்ட சம்பவங்களை அரசு பார்த்துக் கொண்டிருப்பது என்பது இயலாத காரியம் என்பதையும், காவல்துறை ஏற்ற நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, ஆவடி டாங்க் தொழிற்சாலை தொழிலாளர்கள் கோரிக்கையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல் பேசித் தீர்த்துக்கொள்ள மாநில அரசு எந்தெந்த வகையில் ஒத்துழைக்கவேண்டுமோ அந்த வகையில் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு மத்திய அமைச்சர் சுக்லா அவர்கள், தொழிலாளர்கள் முதலில் வேலைக்குத் திரும்பி விட்டால், பிறகு பேச ஏதுவாக இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். அதைத் தொழிற்சங்க தலைவர் யோசித்து நல்ல முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு விவாதம் தேவையில்லை என்று, தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நேற்று அந்தப் பிராந்தியத்தில் தடை உத்திரவு இருந்தது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் செய்தி நேற்று வெளிவந்த காலைப் பத்திரிக்கை எதிலாவது விளம்பரப் படுத்தப்பட்டிருந்ததா? அல்லது இப்போது சொல்லப்படுவதுதானா? ஜனங்களுக்குத் தெரியக்கூடிய அளவில் ஏதாவது காலைப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எந்த வகையிலே அறிவிக்கப்பட்டது என்ற விவரம் நான் தெரிவிக்க இயலாது. ஆனால் அங்கே சென்ற காவல்துறையினர் அங்கே தடை உத்திரவு இருக்கிறது, ஆகவே கூட்டம் நடத்த வேண்டாம் என்று நியாயமாக எடுத்துச் சொல்லச் சென்றிருக்கிறார்கள். சென்று கொண்டிருக்கும்போது, போலீசார் வருகிறார்கள், அவர்கள் மீது கல்லெறியுங்கள், அவர்கள் கண்ணைப் பிடுங்குங்கள், பல்லை உடையுங்கள் என்று கூட்டத்தினருக்குச் சொல்லப்பட்டு, கூட்டத்தினர், காவல்துறையினர் மீது கல் வீசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகையால் இவைகளுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



## (3) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் திருத்தங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் திருத்தங்களை முன்மொழியலாம். திருத்தங்கள் எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே என்னுடைய திருத்தத்தை முன்மொழிகின்றேன் என்று சொன்னால் போதும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following **amendment :—**

Add at the end, the following—

**' but regret to note that no mention is made about—**

(1) the positive steps taken by the Government to arrest the soaring prices of essential commodities such as rice, sugar etc.

(2) the growing deterioration of law and order in the State through political intervention in the Trade Union activities and industrial disputes.

(3) the mounting unemployment of the educated sections **resulting in student unrest and agitations.'**

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following amendment :—

Add at the end, the following—

(1) but regret to note that there is no reference to the urgently needed agrarian reforms ;

(2) but regret to note that there is no reference to the burning problems facing handloom workers and industry calling for suitable legislation;

(3) but regret to note that there is no firm commitment of reopening of closed Textile Mills which affects 10,000 workers;

(4) but regret to note that there is no reference to recent increase in retail and wholesale prices of rice, sugar and other necessaries ;

(5) but regret to note that there is no reference to abuses by Bus Operators especially S. M. T., Thanjavur, Anjaneya, Erode, to get round Government policy of bus take over and virtual closure and the need to take over;

(6) but regret to note that there is no reference to Bus Nationalisation resulting ultimately in the taking over of all the buses;

(7) but regret to note that there is no specific reference to U.S.A. abetting and inciting Pakistan and its hostility to our country;

(8) but regret to note that there is no reference to Cauvery water dispute and the prospect of settlement.

The amendment was duly seconded.

Dr. H. V. Hande : Sir, I move the following amendment :—

Add at the end, the following—

' but regret to note that the Governor's Address has failed—

(1) to mention about the need to give proper and full protection to employees working in Simpson Group of Companies;

(2) to indicate about the need to take effective steps against political parties interfering with the routine work of officials;

(3) to hold out any hopes for pensioners of all categories;

(4) to stress the need to avoid application of third degree methods in the police stations against the second in general.

The amendment was duly seconded.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இறுதியில் கீழ்க் காணும் திருத்தத்தைச் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழி றேன் :—

1. ஆனால், விரிவான நிலச்சீர்திருத்தங்களைப்பற்றி குறிப் பிடாதது வருந்தத்தக்கது.
2. ஆனால், கல்வி சீரமைப்பு சம்பந்தமாகக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.
3. ஆனால், வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற் காக வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்தும் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.
4. ஆனால், உணவுப் பண்டங்களில் விலைவாசியைக் குறைப்ப தற்கான நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

Thiru J. JAMES :—Sir, I move the following amendment :—

Add at the end, the following :

" but regret to note that the Governor's Address does not contain any scheme for the eradication of poverty, to solve the unemployment problem, to check up the rising prices and to achieve Socialism."

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இறுதியில் கீழ்க் காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளுமாறு முன்மொழி கிறேன் :—

1. ஆனால், தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களே தலைமை தாங்க வேண்டும் என்று கூறியுள்ளது வருந்தத்தக்கது.



2. ஆனால், விலைவாசியேற்றத்தைத் தடுப்பதற்காக அத்தியா வசியப் பண்டங்களின் மொத்த வர்த்தகத்தை அரசுடைமை யாக்கும் செயற் குறிப்பு எதுவும் தெரிவிக்காதது வருந் தக்கது.
3. ஆனால், ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும் கூடுதல் அதிகாரங்களும் வருவாய் வாய்ப்புக் களும் வழங்குவது பற்றி எதுவும் கூறாதது வருந்தத்தக் கது.
4. ஆனால், கோவை, சிங்காநல்லூர், பல்லடம் வட்டாரங்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கான நெல்லித்துறைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றிவிடுவதுபற்றி எதுவும் கூறாதது வருந்தத்தக்கது.
5. ஆனால், கைத்தறி நெசவாளர் நிலையை மேம்படுத்துவதற் கான திட்டங்கள் எதுவும் ஆளுநர் உரையில் இடம் பெறாதது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இறுதியில் கீழ்க் காணும் திருத்தத்தைச் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகி றேன் :—

1. ஆனால், நடந்து முடிந்த பாகிஸ்தான் போரில் எல்லா அரசி யல் கட்சிகளும் உணர்வு பூர்வமான ஒத்துழைப்பு நல்கி யதை ஆளுநர் உரையில் குறிப்பிடாமல் விட்டிருப்பது வருந்தத்தக்கது.
2. ஆனால், அரசாங்கத் தொடர்புடைய எல்லா நிகழ்ச்சி களும் ஜனநாயகக் கோட்பாடுகளை செம்மைப்படுத்தும் வகையில் அமைய வேண்டியதைப்பற்றி குறிப்பிட்டுக் கூறாமல் விட்டிருப்பது வருந்தத்தக்கது.
3. ஆனால், பொருளாதார மாற்றத்துக்கு அடிப்படை அம்சங் களான நில உரிமைகளை மாற்றியமைப்பது குறித்து காலவரையறை எதுவும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.
4. ஆனால், நகர சொத்துக்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிப் பதுபற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.
5. ஆனால், சட்டப்பேரவை முன்னால் சந்தேகத்துக்கிடமில்லா மல் அறிவிக்கப்பட்டு ரெவின்யூ போர்டை கலைப்பது குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடாமலிருந்தது வருந்தத்தக்கது.

[திரு. எம். சுரேந்திரன்] [1972 சனவரி 29

6. ஆனால், லட்சக்கணக்கான கைநெசவுத் தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய நூல் விலை ஏற்றத்தைக் குறித்தும் இயந்திரத் தறியினால் வேலையிழக்கும் கைத்தறியாளர்களின் புனர் வாழ்வு குறித்தும் ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

7. ஆனால், ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அனுபவ சாத்தியமான வழி முறைகளை ஆளுநர் உரையில் கூறாதது வருந்தத்தக்கது.

8. ஆனால், மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படும் வகையில் கல்வி போதனையை மாற்றி அமைப்பது குறித்து ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

9. ஆனால், தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்களே தலைமை தாங்க வேண்டும் என்று கூறியிருப்பது வருந்தத் தக்கது.

10. ஆனால், அரசாங்கமும், முதலாளிகளும் சேர்ந்து கூட்டு முறையில் தொழிற்சாலைகளை அமைப்பதாக ஆளுநர் உரையில் அறிவித்திருப்பது வருந்தத்தக்கது.

11. ஆனால், தொழிற்சாலைகளை உருவாக்கும் அணுகு முறையில் வேலையில்லாமையைப் போக்குவதை மைய மாகக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்தும் வகையில் ஆளுநர் உரை தென்படாதது வருந்தத்தக்கது.

12. ஆனால், பல தொழிற்சாலைகளில் பல தொழிலாளர்களை தற்காலிக தொழிலாளர்கள் என்று வைத்துக்கொண்டு அவர்களுக்கு சட்டப்பூர்வமாக அளிக்கவேண்டிய உரிமைகள் கூட மறுக்கப்பட்டு வருவதைப் போக்குவதுபற்றி ஆளுநர் உரையில் வழி ஏதும் கூறாதது வருந்தத்தக்கது.

13. ஆனால், நீக்கப்பட்ட மதுவிலக்கு சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் பலாபலன்களைப் பற்றியும், மக்களுக்கு இடைஞ்சலான இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் மதுபானக் கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுவது பற்றியும் ஆளுநர் அவர்கள் தமது உரையில் எதுவும் குறிப்பிடாமலிருப்பது வருந்தத்தக்கது.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the following amendment to the Governor's Address:—

Add at the end the following:—

"but regret to note that no mention has been made in the Governor's Address about the immediate need to provide a substantial grant to the Corporation of Madras to tackle the immediate problems of overflow of drainage water and repair to interior roads in the City."

The amendment was duly seconded.



1972 சனவரி 29]

MR. SPEAKER: The hon. Member Thiru K. S. Kothandaramiah is not in his place. So, his amendment is deemed to have been not moved.

How many minutes does the hon. Member Dr. H. V. Hande require?

DR. H. V. HANDE: About 30 minutes.

MR. SPEAKER: All right.

DR. H. V. HANDE: Sir, in support of the amendments moved on behalf of my party, I wish to state certain things.

First of all, I have given clearly four amendments. They are—

(i) but regret to note that the Governor's address had failed to mention about the need to give proper and full protection to employees working in the Simpson Group of Companies;

(ii) but regret to note that the Governor's Address had failed to indicate the need to take effective steps against political parties interfering with the routine work of officials;

(iii) but regret to note that the Governor's Address has failed to hold out any hopes for pensioners of all categories and

(iv) but regret to note that the Governor's address had failed to stress the need to avoid application of third degree methods in the police stations against the accused in general.

These four amendments are general. In addition I have got few more points with regard to the manner in which the administration is going on in our State. The Governor's Address has been far from satisfactory. It is probably one of the worst addresses delivered by the Governor. In the discussions we had so far, worthwhile discussions, many of our Members had pointed out the grave irregularities, the grave injustice perpetrated by this Government on the public of our State.

First and foremost (it is a serious thing) is the particular ideology viz., secessionism or separatism, which is being followed directly or indirectly. I am going to demonstrate it. The Government of Tamil Nadu publishes a particular book 'Tamilarasu' every fortnight. In one of its issues, an article has directly found its place. I was pained and shocked to see that article in a Government publication. In its silver jubilee number of 'Tamilarasu', the article is there, preaching Secessionism. That has appeared in a Government publication 'Tamilarasu'. I do not want to condemn the person who has written the article. Each person is entitled to have his own views. He is an elderly person and is entitled to his views. What has pained me is it has come in a Government publication, a

[Dr. H. V. HANDE] [1972 சனவரி 29

publication printed and published under the authority of the Ɉovernment of Tamil Nadu. This article is something shocking. I shall read from the article. The article goes on saying :—

குறிப்பாக, தமிழ் நாடு, இந்தியா என்கின்ற ஒரு காட்டு மிராண்டி மக்களை அதிகமாகக் கொண்ட ஒரு அரசியல் அமைப்பில் இருந்து சர்வ சுதந்திரமாய் விலகாமல் இருக்கும் வரை தமிழ் நாடு அறிவுத் துறையில் தேவையான அளவுக்கு வெற்றி பெற, முன்னேற முடியவே முடியாது என்பது எனது துணிவு.

I do not want to take much of the time of the Mouse.

இந்திய ஆட்சியிலிருந்து திராவிட நாடு விலக்கப்பட வேண்டு மென்று எக்ஸெட்ரா, எக்ஸெட்ரா.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : ஏன் பாதியில் நிறுத்தி விட்டீர்கள்? முழுவதும் படித்துவிடுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : இந்திய ஆட்சியில் இருந்து திராவிட நாடு விலக்கப்பட வேண்டும் என்று சொல்ல எவருமே இல்லை என்றால்—எவராலுமே முடியாது என்றால் தமிழ்நாட்டில் தமிழர்கள் அறிவியல் துறையில் தன்மானத்துறையில் முன்னேறி இருக்கிறார்கள், மாற்றமடைந்து இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா, என்றுதான் என்னையே நான் கேட்டுக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : பகுதியை விலக்கிவிட்டு திராவிட நாடு விலக்கப்பட வேண்டுமென்று படித்தீர்கள். அதனால் தான் சேர்த்துப் படிக்கவேண்டுமென்று சொன்னேன்.

Dr. H. V. HANDE : I have clearly said so in my first paragraph. I read that also before the Hon. Chief Minister came here. The Hon. Minister ought to have pulled up the concerned officials concerned. The department is under him. He has not done so. That is what shocks me. That is why I have been repeatedly making this charge. I am not blaming the person who has written the article. He is entitled to his views. Why should it be published in Government publication? The Hon. Chief Minister, under whose charge the department is functioning, has not pulled up the officials. The article has been published. That is why I directly charge this Government that they are encouraging secessionism or separatism: they are inciting the people to that by such publication. Directly they are doing that. That is my first charge.

I say, directly also they are inciting such a feeling. One has to read the Speeches of the participants in the Tanjore D.M.K. General Council meeting and Executive Committee meeting. The Hon. Chief Minister said one thing at first and later on he was forced to give another statement that they did not mean secessionism but that they are concerned more with the integrity of India. Yesterday when the hon. lady Member Thirumathi Anandanayaki was the Hon. Chief Minister butted in and said " (உறுப்பினர் ...ரிந்துகொண்டிருக்கிறார்கள்) I wanted to say something



1972 சனவரி 29] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

immediately but I did not want to notice any feeling at that time and I kept quiet. He has said "மாநில சுயாட்சி" Yes, they have understood what his sing-song 'Manila-Suyatchi' is and what is its result and what has happened subsequently. That is what we are concerned. We are not concerned with what is spoken at the National Development Council by the Chief Ministers and what our Chief Minister has pleaded for our Tamil Nadu for more political ideology, viz., secessionism that is being indirectly pursued political ideology viz., secessionism that is being indirectly pursued by this Government. At the General Council meeting at Thanjavur, some posters were there preaching secessionism. Later on the posters were removed. Why was it first allowed? Why was it not taken out earlier? Why should it be first allowed and then taken out?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, பத்திரிகைச் செய்திகளை மாத்திரம் வைத்துக்கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசக்கூடாது. அந்த போஸ்டர்களை தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் வந்து ஒட்டவில்லை. வேறு யாரோ ஒட்டியிருக்கிறார்கள். அவை ஒட்டப்பட்ட கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே, போலீசார் அவைகளை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டார்கள்.

Dr. H. V. HANDE : Only after reporters had met the Hon. Chief Minister and pointed it out, it was removed. Only after they drew the attention of the Hon. Chief Minister, this was removed. It was not removed as soon as it was pasted. Why was it not done? Why delay was there?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : போஸ்டர் என்று பத்திரிகையிலே போட்டதும் ஏதோ அச்சடித்தப் போஸ்டர் என்றுகூட நினைத்திருப்பீர்கள். அது அச்சடித்த போஸ்டர் கூட அல்ல. யாரோ கையால் எழுதி ஒட்டியிருக்கிறார்கள். அது திராவிட முன்னேற்றக் கழகம் ஒட்டியதல்ல. அதைப்போலவே 'மலையாளிகளைத் தமிழ் நாட்டைவிட்டு வெளியேற்றுங்கள்', 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற இப்படிப்பட்ட போஸ்டர்கள் கூட அடிக்கடி வெளியிடப்பட்டன. அதற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிடும் போஸ்டர்கள் கூட அதிகமில்லை. 5, 6 அல்லது 10 போஸ்டர்கள் இருக்கும். அவ்வளவுதான். அவைகளும் உடனடியாக அகற்றப்பட்டுவிட்டன.

Dr. H. V. HANDE : What I want to point out to the Hon. Chief Minister is, once this is unleashed, once the Pandora's box is opened, it snow-balls. Why should you first allow the passions to be whipped and then try to lessen it? That is my submission. First, the Hon. Chief Minister made a statement. Later on, he was forced to issue another statement, by the constant hub-hub

that was created. He was forced to make another statement that he did not mean by 'Manila Suyatchi' secessionism but that he believes in national integration, etc.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The Hon. Member is saying that the Hon. Chief Minister was forced. He is never being forced by anybody. The hon. Member is talking about what happened in the General Council meeting at Thanjavur and in the meeting of the Executive Committee. Both the meetings were not open to the public. Therefore, the hon. Member's statement about the General Council meeting and statement by the Hon. Chief Minister there are all out of place and altogether wrong. I take strong objection to the hon. Member's statement that the Hon. Chief Minister was forced.

மு.ப. 11-00

DR. H. V. HANDE : I am surprised that a very senior parliamentarian of the calibre of our Minister should have completely missed my point. "Forced" means forced by circumstances, not the Co-operation Minister forcing the Chief Minister like that—He is forced to come out—I did not mean anythiing.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* நான், உபயோகித்த பாஷையைப் பற்றிக்கூட கவலைப்படவில்லை. ஏதோ ஒரு சூழ்நிலையின் வற்புறுத்தலின் காரணமாக அதைச் சொன்னேன் என்று சொல்வது தவறு. என்றைக்கு மாநில சுயாட்சிக் கோரிக்கையை வைத்தோமோ அன்றுமுதல் நானும் சரி திரு. ம. பொ. சிவஞானம் ஆகட்டும், முதலாவது இந்திய ஒருமைப்பாடு, இந்திய ஒருமைப்பாட்டுக்கு பலமான அடிப்படையாகத்தான் மாநில சுயாட்சி என்பதை வற்புறுத்தி வந்துகொண்டிருக்கிறோம். சூழ்நிலையின் வற்புறுத்தல் காரணமாக என்றோ—அது எங்களது மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் புரியாதவர்கள் இருக்கிறார்களே அல்லது புரிந்தும் புரியாதுபோல நடிக்கிறவர்கள் இருக்கிறார்களே அவர்களுக்காகத்தான் விளக்கப்பட்டதே தவிர—அது ஏற்கனவே நாங்கள் எடுத்த முடிவுதான். முதலாவதாக இந்திய ஒருமைப்பாடு, இரண்டாவதாகத்தான் மாநில சுயாட்சி என்று வலியுறுத்தி வருகிறோம்.

DR. H. V. HANDE : The Hon. Minister for Co-operation was saying that I should not mention anything about what happened in Thanjavur. It has come in the papers. It was published. It was everybody's mouth. We are here to say something about those things. The Hon. Chief Minister himself says so many things that happened and also mentions about C.I.D. reports. So, I cannot understand the hon. Minister for Co-operation when he says that I should not mention anything about it.

It has not happened anywhere else. It has happened in our State and in public. So, I am entitled to say about it. Inspite of his experience he has missed my point. Let us leave it at that.





Another important point is this. Where did this conference take place? It took place in Sangeetha Mahal. Sangeetha Mahal cannot be used for political conferences. The Hon. Chief Minister has to say in his reply whether any such political conference has taken place in that Mahal before. I thought it was a sort of preserved sanctity for all Government and non-political conferences. I would have been very happy if it is not used for political purposes. Of course it is a minor point, but that is a point.

Then again, let me not forget what the Americans asked our Hon. Chief Minister when he had been to America. Naturally whenever they see the Chief Minister of Tamil Nadu there is a sort of a feeling among people outside that he is a symbol of a particular ideology. Probably it may be according to him a greater stress on '*Manila Suyatchi*'. But then, questions are asked like that. 'You ask for a greater State autonomy, what do you mean by that? Does it not stand in the way of unity of the country'. Such irksome questions would be asked. There is the Press and they ask such questions. Let me quote an example. When a foreigner comes to India, he never bothers to tell that he is from Usbeckistan. Ukkraine, Siberia, but that he is first and last Russian. Why should we whip up such feelings in this finest hour with regard to our foreign policy? Of course I am not talking about economic policy? I would like the Hon. Chief Minister not to strike any discordant note on this particular point of national integration. Instead, I would like him to evolve himself as a national leader. I have been repeatedly saying that I would be very happy if he evolves himself as an All-India leader. Tomorrow we do not know what will happen. Then everybody may go on saying 'We want Andhra Pradesh, We want Karnatak, We want Kerala, We want Mysore, We want Bihar.' There will be some confussion. Therefore, I want to strike a note of warning in this context.

THIRU S. KANDAPPAN : I want to raise a serious point of order. The hon. Member is insinuating against what has happened and what our Chief Minister has said in his interviews in various places in America. I am afraid it is a serious allegation and is an insinuation. In a vague manner he is hinting and suspecting the *bona fides* of the Chief Minister about the utterances he gave about integration. If the hon. Member wants to accuse he should say specifically and categorically as to where and when our Chief Minister has said anything that would go adverse to the integration of this country. I am sorry a member of his stature should make such a statement. I would also like to know as to why he was so much afraid of freedom of expression.

DR. H. V. HANDE : I am very much surprised that the hon. Member should say like that. I am not frightened about freedom of expression. You are afraid. I am very clear............ (interruption)

THIRU J. JAMES : Both the hon. Members are speaking at the same time. Is it in order ?

DR. H. V. HANDE : The Chief Minister did not talk of secession in America. I mentioned that very clearly. What did I say? I would be very happy if the Chief Minister becomes a national leader. I am not at all making any charge. I only said that what sort of questions, irksome questions that are likely to be asked because there is a sort of image. So, I would like him to evolve himself as an All-India leader. I will be very happy if the hon. Member carefully listens to my speech.

MR. SPEAKER : What is your point? What do you want to stress?

DR. H. V. HANDE : The Hon. Speaker is catching up with me and taking greater interest in my speech.

MR. SPEAKER : I will take interest in the speeches of all hon. Members and not only in Dr. Hande's speech. My point is, what do you want to impress upon?

DR. H. V. HANDE : I would make it very clear to the Hon. Speaker.

MR. SPEAKER : That is also what the hon. Member Kandappan wanted to know. If you want to be specific, be precise, be clear.

DR. H. V. HANDE : I specifically say that the Chief Minister should try successfully and progressively to wipe out the image that he is a State Leader and he must come up as an All-India leader. That is what I have been stressing. That is possible only if he, at least for some time, stops this kind of overstressing on '*manila suyatchi*'. For another reason also I doubt the *bona fides* of his argument of '*manila suyatchi*'. I do not know whether he really believes in it. That is a question which I would like to ask him. Because the Rajamannar Report is there. The Chief Minister has failed to cull out from it what are the things that are required, what are the things that he wants. He has failed to answer that question. That is one of the reasons why I doubt the *bona fides*.

Another point on which I would like to charge the Government is this. '*Manila suyatchi*' comes in handy for them to sidetrack whatever problems we have in our State. Often they say 'this could have been solved but for this'. They are quoting this as an alibi.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கூடாது, மாநில சுயாட்சி கூடாது என்ற கருத்து திரு. ஹாண்டே அவர்களுடைய தனிப்பட்ட கருத்தா அல்லது சுதந்திராக் கட்சியின் கருத்தா? மேலவையில் உள்ள திரு. சுவாமிநாதன் அவர்கள் அப்படி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு விரோதம் ஆகாது என்று கட்டுரையே எழுதியிருக்கிறாரே. அதுபற்றி திரு. ஹாண்டே அவர்களுடைய கருத்து என்ன?

DR. H. V. HANDE : Thiru Swaminathan and myself have discussed this very clearly. We have passed a resolution also. In the Legislature party we have passed a resolution clearly stating that we will be happy to back the Chief Minister whenever he asks for greater devolvement of funds. But my point is, do not make an issue out of it, do not say anything which would affect the sentiments of the people, do not whip up this feeling at this context of time. I am sure that the Chief Minister will agree with me to a considerable extent when I say that when once this feeling—'*unarchi*' starts, if we go on whipping up this sort of a feeling, there will be trouble. Now it may be all right, but afterwards, it may go out of your control.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மத்திய அரசிடம் இருந்து மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறீர்கள், ஆனால் அதற்கு மாநில சுயாட்சி என்ற பெயரை வைக்கவேண்டாம் என்று சொல்கிறீர்கள், அவ்வளவு தானே?

DR. H. V. HANDE : What I say is, no issue should be made out of it. We have opportunities to discuss. In fact my question was about the National Development Council, what were the things that were discussed there. We are helping the Government. I can give several examples. But my time is being taken up. Suppose what will happen if a person from a district, say, Coimbatore goes on saying that 'we want Coimbatore' another person would say we want Ramanathapuram. If that sort of feeling is whipped up, it will spread from one district to another. Of course a member can stress the needs of his district in the Assembly. When our Hon. Speaker was Finance Minister, we had asked 'we want this particular area to be declared drought area, we want that particular area to be declared drought area'. It is only in that spirit I am saying.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அப்படியானால் மாநிலங்களுக்கு இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டும் என்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யலாமா? கூடாதா ?

DR. H. V. HANDE : When we discuss the whole thing calmly we will come to an agreement. Let us not make an issue out of it. You have not even decided, you have not even found out, you have

not even culled out what are the things that are required from the Rajamannar Report. The Chief Minister has to reply to that point. As I said, a member can speak about his district in the House. They should not go and talk to the public and incite the people and make it a political affair or platform. They should not make an issue out of it. Then it may go out of control. A sample of it is Thanjavur Mahal incident which I referred to. That is just a '*munnodi*'.

Then again I was surprised to find a reference to Sheikh Mujibur Rehman and all sorts of things being discussed in the House. He might be the leader of Bangla Desh and let us not compare ourselves with different leaders of another country. Let us forget about it and let us come to what is happening in our State. We have democracy and we have got Members of Parliament sitting in Delhi and they can discuss all these things, and I leave it at that.

Then, in this House if I remember aright, during the last Budget session, I mentioned about the personality cult. I mentioned that in the hope that the Government would rectify themselves in accordance with what Tiruvalluvar had stated :—

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

I want to protect the Hon. Chief Minister and the persons belonging to his Party cannot say it. But I can say it because I have no axe to grind and I do not seek any favours from him. I think Tiruvalluvar had stated that only for me and I am very fortunate in that respect.

In this connection, I want to refer to 'Kudumba Kattupadu' poster. I am quite sure that it is not done with the knowledge of the Hon. Chief Minister. But I do not know why the departmental people should go to the extent of publishing the poster of the Chief Minister with the Tamil words—
"நாம் இருவர்—நமக்கு இருவர்"
That is absolutely unnecessary.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, 'நாம் இருவர்—நமக்கு இருவர்' என்று போட்டிருக்கின்ற விளம்பரத்தில் இந்தத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் இவ்வாறு கேட்டுக் கொள்கிறார் என்று பொருள் கொள்ளக்கூடாதா? இந்தப் படத்தை வைத்துக்கொண்டு என்ன தவறு கண்டார் என்று அறிய விரும்புகிறேன். அதில் என்ன தப்பு காண்கிறார்?

DR. H. V. HANDE : Now the Hon. Chief Minister has realised it and under his orders the posters are being removed. What I want to know is, why should such things be done. In



this connection I want to point out that when I was an Opposition Member of the Upper House, I defended the then Chief Minister, Thiru Bhaktavatsalam in regard to family planning and my D.M.K. friends there wondered why I had supported him being an Opposition Member. That is because I believe in family planning and I practise family planning and I preach family planning from 9 a.m. to 9 p.m. daily. My point is, why do you make people lose interest in it by exhibiting such posters. I have got such a poster with me and I would pass it on to him. He also made a statement in regard to this matter and that has been printed at the Government expense and then distributed to the public.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசினுடைய குடும்பநல இலாகா, தமிழ் நாட்டில் செய்திருக்கிற விளம்பரம் போதாது. இன்னும் அதிகமான அளவில் விளம்பரம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டு இருக்கிறது.

DR. H. V. HANDE : Definitely, but not this type of 'Vilambaram' I want the Government to do.

Then, there is also a lot of controversy with regard to another poster where the Prime Minister of India and the Chief Minister were seen together. The Hon. Chief Minister had stated that the poster was printed from a photo taken at the inauguration of the Salem Steel Plant. My submission is that the photo that was offered to the press for publicity is definitely not the photo taken at the Salem Steel Plant. But the Hon. Chief Minister had stated that it was taken at the Salem Steel Plant. It was taken on some other occasion.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சேலம் ஸ்டீல் பிளாண்ட் திறப்புவிழாவின் போது எடுக்கப்பட்ட படம் இல்லை என்று எந்த பேஸிஸில் சொல்கிறார்கள்? அது சேலத்தில் எடுக்கப்பட்டதா, இல்லையா என்பதை எப்படி அறிந்து கொண்டார்கள்?

DR. H. V. HANDE : I have got a copy of the photograph given for advertisement and in that photo the Chief Minister did not wear even glasses and he was on the left side. It is printed in the D.M.K. paper 'Rising Sun'. There may be another photograph where he might have worn black glasses. Here (the hon. Member was holding a photo) the Hon. Chief Minister does not wear glasses.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பத்திரிகையிலே போடப் பட்டிருக்கிறது. நான் கண்ணாடியுடன் இருக்கிற படம் சேலம் ஸ்டீல் பிளான்ட்டின்போது எடுக்கப்பட்ட படம் இல்லையென்று மறுக்கப்படுகிறது. இன்னொரு படம், நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில், திரு. சம்பந்தம் அவர்கள் மேயராக இருந்தபொழுது பிரதமர் அவர்கள் வந்தார்கள். அந்த நேரத்தில் எடுக்கப்பட்ட படம்.

DR. H. V. HANDE: That is the photo I am talking about Thiru Sambandham was the Mayor at that time and that was the photo which was given to the public and a question was raised with regard to that.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வால்போஸ்டரிலே போட்டார்கள், அதிலே என்ன தவறு ?

DR. H. V. HANDE: I am coming to that later. Why should such small things be returned by the Hon. Chief Minister and why should he bother about it?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாதுகாப்பு நிதிக்குப் பணம் திரட்டுகின்றபோது நாட்டின் பிரதமர் படத்தையும், முதலமைச்சர் படத்தையும் போடாமல், டாக்டர் ஹாண்டே அவர்களின் படத்தையா போடுவார்கள் ?

DR. H. V. HANDE: My point is, why should the Hon. Chief Minister say that that was a poster taken at the time of the inauguration of the Salem Steel Plant.

MR. SPEAKER: What is your point?

DR. H. V. HANDE: Why should he refute it ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தவறு இருக்கிறது. பொது நலத்திற்கு என்று சொன்னால் நலமாக இருக்கும்.

DR. H. V. HANDE: Why should he refute it?

THIRU N. GANAPATHY rose.

DR. H. V. HANDE: I am not yielding. . . .

THIRU N. GANAPATHY: Sir, on a point of order. The hon. Member makes an insinuous allegation against the Hon. Chief Minister that the poster does not relate to the photograph taken at the time of the inauguration of the Salem Steel Plant and that it related to the photograph taken when the Prime Minister was received at the Meenambakkam Airport by him and the then Mayor, Thiru Sambandham. Is he making that statement with full responsibility? Is he prepared to adduce any proof as to the correctness of the allegation he makes here and is he prepared to face the consequences arising out of the aligation made in the House ?

DR. H. V. HANDE: I have mentioned it clearly before. This was not taken at Salem Steel Plant. I did not say that it was not taken at the Meenambakkam Air-Port. I have got a copy of it. It was taken at Meenambakkam Air-Port. That was when he was the Hon. Minister for Public Works.

MR. SPEAKER: What is the point which the hon. Member is trying to make out ?



DR. H. V. HANDE: Why did not the Hon. Chief Minister refute then ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்னிடத்திலே நிருபர்கள் தெருவிலே ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைப் பற்றித் தான் கேட்டார்கள். பிரதமர் காரியாலயத்திலிருந்து இது குறித்துக் கடிதம் வந்ததா என்று கேட்டார்கள். இல்லையென்று சொன்னேன். பிறகு கடிதம் வந்தது. அதற்கு நாம் பதில் எழுதியிருக்கிறோம். மாநில சர்க்கார்கள் போஸ்டர்கள் போடக்கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை, விளம்பரங்களிலேதான் போடக் கூடாது என்று இருக்கிறது. பிரதமர் அவர்களுடைய படத்தைப் பல விளம்பரங்களிலே போட்டிருக்கிறார்கள். பிரதமர் மூன்று தளபதிகளுடன் கைகுலுக்கியவாறு படங்கள் போடப்பட்டன. பிரதமர் படம் வெற்றிலை, பாக்கு, சீவல் விளம்பரத்திற்கு எல்லாம் போடப்பட்டிருக்கின்றது. இந்தக் குறிப்பிட்ட விளம்பரத்தைக் கண்டித்து எழுதும் குமுதம், ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகளில் சீவல் விளம்பரத்திற்காக பிரதமர் படம் வெளியிடப்பட்டிருக்கின்றன. சீவல் விளம்பரத்திற்காக வரலாம், ஆனந்த விகடன் பத்திரிகையில் சுப்பிரமணியம் அவர்கள் படமும் இந்திரா காந்தி அவர்கள் படமும் (ஆனந்த விகடன் பத்திரிகையைக் காட்டி) வரலாம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் காப்பிகள் விற்கின்ற பத்திரிகைகளில் வரலாம், காமராஜர் படத்தையும் இந்திரா காந்தி படத்தையும் போட்டு " இருவரும் இணைவது எப்போது " என்று ஆபாசமாகப் போடும் போஸ்டர்கள் வரலாம். ஆனால் முதலமைச்சர் படத்தையும் பிரதமர் படத்தையும் வெளியிட்டு பாதுகாப்பு நிதிக்குப் பணம் திரட்டுவதில் என்ன தவறு என்று தெரியவில்லை. தவருக பிரதமர் காரியாலயத்திற்குச் சொல்லப்பட்டு, அதற்குப் பிறகு பதில் தெரிவித்தாகிவிட்டது. அதற்கு மேல் அப்படிப்பட்ட போஸ்டர்களும் போடவேண்டாம் என்று சொல்லப்பட்டு விட்டது. நாங்கள் பிரதமர் இந்திரா காந்தியை சகோதர உணர்ச்சியோடும், தாய்ப் பாசத்தோடும், இந்தியாவை ஆளுகின்ற பெண்ணுக்கு எவ்வளவு கௌரவம் அளிக்க வேண்டுமோ அவ்வளவு கௌரவத்தையும் அளித்துக் கொண்டு வருகின்றோம். முன்பு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எந்த எந்த அளவுக்கு விளம்பரம் செய்தார்கள், முதலமைச்சரைச் சந்திக்க இந்திரா காந்தி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வருவானேன் என்ற வெட்கங்கெட்ட பேச்சை வெளியிட்ட பத்திரிகைகளும்தான் தமிழகத்திலே இருக்கின்றன. அப்பொழுதெல்லாம் ஹாண்டே அவர்கள் அலறித் துடிக்கவில்லை. இப்பொழுது என் ஆத்திரம் வருகிறது என்று தெரியவில்லை.

DR. H. V. HANDE: The misfortune is that the Hon. Chief Minister has tried to give a peroration but that is completely beside the point. My point is that the poster was taken when he was P.W.D. Minister and not when he was Chief Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். அவர்கள் ஒரு கட்சியினுடைய பொறுப்பான தலைவராக இருக்கிறார்கள். நான் அவர்கள் இங்கே பேசியதைக் கவனிக்கிற வகையிலே, பத்திரிகையிலே இந்த அளவுக்கு வருமானால் அது சட்டசபையின் தரத்திற்கு பெருமையானதல்ல. முதலமைச்சர் அவர்களுடைய படம் வருவது தப்பு என்று நீங்கள் சொன்னால் அதைப்பற்றி விவாதிக்கலாம். சட்ட மன்றத்தின் தலைவர் என்ற முறையிலே நான் சொல்லிக் கொள்கிறேன். ஒரு உறுப்பினர் பேசும்பொழுது ரெப்படிஷன் ஆப் டீடியஸ் ஆர்க்யுமென்ட்ஸ், நிறுத்தாமல் தொடர்ந்து இருக்குமானால்—நான் முதலிலே தடுக்கக்கூடாது என்றுதான் இருந்தேன். ஆனால் நீங்கள் மறுபடியும் மறுபடியும் திரும்பத் திரும்ப அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்—முறையை விட்டு பேச்சுக்கள் இருக்குமானால் அவற்றை நிறுத்துவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் பொறுப்பு வாய்ந்த பெரிய கட்சியினுடைய தலைவர். முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சி எங்களுடைய கொள்கை என்று சொன்னார்கள், ஒற்றுமையிலே நம்பிக்கை இல்லை என்று நீங்கள் திரும்பத் திரும்ப சொன்னீர்கள்

DR. H. V. HANDE : Are you defending the Government? Are you a Minister? The Hon. Chief Minister is here to defend.

MR. SPEAKER : I ask Dr. Hande to resume his seat.

நான் கூறியதற்குப் பிறகு அவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிக்க வேண்டுமானால் எடுத்துச் சொல்லலாம். நான்தான் டிபன்ட் பண்ணவேண்டுமென்ற பரிதாபகரமான நிலையில் இந்த அரசு இல்லை. சட்ட சபையை டிபன்ட் பண்ணுவதற்குத்தான் சட்ட மன்றத் தலைவர். அரசை டிபன்ட் பண்ணக்கூடிய பரிதாபகரமான நிலையில் சபாநாயகரும் இல்லை. இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது சில வரம்பு முறைகள் உண்டு. அவைகள் நல்ல முறையில் இந்த மன்றத்திலே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. நம்முடைய சட்ட மன்றத்தின் விதிகள் தெளிவாக இருக்கின்றன :

The Speaker shall have all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder.

டிஸ்டர்பர் வருகிறபோது, டிஸ்டர்பர் வருகிற மாதிரியான நிலையில்—உங்களுடைய அரை மணி நேரப் பேச்சு டிஸ்டர்பர் வருகிற அமைப்பிலே இருப்பதால்—நான் தலையிட்டுச் சொன்னேன். அதை தாங்கள் பேரவைத் தலைமையை ரிப்ளக்ட் பண்ணுகிற மாதிரி சொல்வது சரியல்ல.





repetition either of his own arguments or of the arguments used by other Members in debate or is speaking for the purpose of obstructing business, may direct him to discontinue his speech.

என்ற இந்த விதிமுறையின் கீழ்தான்—அறிவுறுத்துவதற்கு நான் ஞானோபதேசியல்ல—இந்த மன்றத்தினுடைய பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நிலைமையில் இர்ரெலவண்ட் ஆகப் பேசினால் அல்லது டீடியஸ் ரெப்படிஷன் ஆகப் பேசினால்—முதலமைச்சர் அவர்கள் ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு நீங்கள் திரும்பத் திரும்ப அங்கே போட்டிருக்கிறது இங்கே போடப்பட்டிருக்கிறது என்று சொன்ன நிலைமையில்—தலைவர் என்ன சொல்லவேண்டுமோ அந்த முறையிலே தான் நான் சொல்கிறேன். பிரதமர் என்ன சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் பற்றியல்ல எனது கவலை. என் கவலையெல்லாம் இந்த மன்றத்தில் பேசப்படும் பேச்சு இர்ரெலவண்ட் ஆக, டீடியஸ் ரெப்படிஷன் ஆக இருக்கக் கூடாது என்பதைப் பற்றித்தான். "நீங்கள் அரசைப் பாதுகாக்கப் போகிறீர்களா?" என்பதையெல்லாம் வெளியிலே பேசிக்கொள்ளலாம். உங்களுக்கும் ஒரு கட்சி இருக்கிறது. எனக்கும் ஒரு கட்சி இருக்கிறது. ஆனால் இந்த மன்றத்திலே எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தின்கீழ் இர்ரெலவன்ட் பேச்சுகளை, டீடியஸ் ரெப்படிஷன் ஆக இருக்கும் பேச்சுகளை அனுமதிக்காத முறையில் தீர்ப்பு வழங்க வேண்டுமென்பதற்காகத் தான் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டுமல்ல, இந்த மன்றத்தினுடைய ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேரவைத் தலைவருடைய தீர்ப்பு இது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I now come to another point. That is also important. It is with regard to 'Annamalai incidents'. This particular thing must have been finished long ago. Government appointed a Commission and before the report of the Commission was finally published, the press had some inside knowledge about the contents of the report and extracts from that report appeared in several sections of the Press. I demand on the floor of the House why this Government had allowed this to happen.

MR. SPEAKER : You must finish, Dr. Hande, within five minutes.

DR. H. V. HANDE : Most of my time had been taken up by others.

MR. SPEAKER : I am counting.

நீங்கள் 22-வது நிமிடத்தில் முடித்திருக்க வேண்டும் இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடவேண்டும்.

DR. H. V. HANDE : I will finish within five minutes. I would have been happy of the Annamalai university Commission's report had been placed on the table of the House. We could then

have participated in a discussion on the same. I charge this Government for its failure to place the report on the table of this House in time. I shall not dilate much upon it.

I now come to another point. The Hon. Chief Minister sometime ago was going along Tiruchirappalli and inside the bridge which he had crossed, we understand a particular bomb was found. The Hon. Chief Minister said that he would have the matter investigated. I would like to know whether such investigation has been done, what did the explosives' expert say, whether he had given his report and whether action had been taken on it. My information is, that this particular thing was not an explosive at all; it was brought as a moment by a brigadier and there was not even a fuse there. The original fuse was not there and how could it have exploded? I request the Hon. Chief Minister to let us know the opinion of the expert, in his reply.

We understand that posters were again put with the Minister's
மு.ப. 11-30 photo and then the Chief Minister's photo. I have got it in my hands and I am prepared to give it to the Chief Minister. It is for him to find out properly why exactly that has taken place. Without taking the time of the House I will place these things which I have got in the hands of the Chief Minister.

The Hon. Chief Minister yesterday while replying to an adjournment motion talked about a particular section of the Press. I am not going into the details of that. But my submission is that the majority of the Press here in Tamil Nadu is actually taking the side of the Government. For instance, take the Tamil daily 'Thina Khanthi'? How many times when we oppose the Government, it gives us proper publicity? What is said by the Chief Minister or by those in the Treasury Benches, those things are publicised, but not the opposition point of view. Even the newspapers about which the Chief Minister was angry go on publishing mostly the Chief Minister's statement. When there is an adjournment motion we raise several points, but those points of views are not publicised properly. Even if the Chief Minister has abused them, they have published that. In spite of the fact that the Chief Minister is going on attacking them, those papers do not give us any support. They do not give publicity to our points of view. This is a very serious matter.

The Chief Minister was telling in the Legislative Council some months ago about the Yellow Press. Some time ago I mentioned a statement here. Then the Hon. Chief Minister rebutted it. The whole thing was publicised in a peculiar manner. Comments were given on something that took place in the House attacking my constituency, attacking me and attacking my constituents. The paper talked about my diet. It said that Dr. Hande was eating fish, I am taking all sorts of non-vegetarian diet, people coming to me are taking that diet and I also go to them and take that diet.





Then again whenever tenders are called for, it has been clearly stated that tender notifications should find a place only in Tamil Arasu. But we have got a Paper belonging to the ruling party in which it is published '*Arivippu enn* . . , by the Slum Board'. So, Government publicity machinery is completely in a way subsidising this sort of papers. I wish I were given a little more time. I can place all the records before the Chief Minister.

My charge is this. The administration that is going on in this '*Thalaimai cheyalaham*' has properly become out and out the administration of the party. The papers are publicising out and out the Government's policy alone and they do not publicise even a fraction of what I was trying to say. I can pass on papers of this type. I can go on giving extracts.

Then again, I would like the Hon. Chief Minister to tell us as to what happened to the report about Udayakumar incident. We were told that the body that was found belonged to Udayakumar. I have not got the report. I have got only the report of the report. I am at a disadvantage. The Chief Minister knows the report. I do not know the report except what has been stated in the Press. Nine months ago this has happened. On the floor of the House the Chief Minister has given as some details. Arguments have been advanced in this House to prove or to disprove that it was the body of Udayakumar. I have got extracts of two speeches, dated 29th July and then again 26th July where step by step in an argumentative manner the Chief Minister has argued that this particular thing is like this, that it is not Udayakumar's body. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உதயகுமார் பாடி அல்ல
என்று உறுதியாக நான் தெரிவித்திருக்கிறேனா ? அவருடைய தகப்
பனாரால் அடையாளம் காண முடியவில்லை என்றுதான் சொல்லி
யிருக்கிறேனே தவிர, இவைகளுக்கெல்லாம் சேர்த்துத்தான் நீதி
விசாரணை என்றுதான் சொல்லியிருக்கிறேனே தவிர, அது உதய
குமார் அல்ல என்று நான் எங்கேயாவது சொன்னேனா ? அப்படி
யிருந்தால் எடுத்துக் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

Dr. H. V. HANDE : Did I now say that the Chief Minister has said that it is not Udayakumar's body? I said persistently he has been arguing to give an indication that it is not Udayakumar's body. That is my charge.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உதயகுமாருடைய
தகப்பனார் என்று சொல்லப்படுபவர், அவரே எழுதிய கடிதம்
நான் அதை ஐ.ஜி. அவர்களுக்கு அனுப்பினேன். மகன்
என்பதாகத் தெரியவில்லை. மகன் எங்கேயோ காணமற்
போயிருக்க வேண்டுமென்று கலெக்டருக்குக் கடிதம் எழுதி நகலை

எனக்கு அனுப்பி இருந்தார். அதை நான் ஐ.ஜிக்கு அனுப்பினேன். அதைத்தான் பொதுக் கூட்டங்களிலும் சொல்லியிருக்கிறேன். நிருபர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்ட சபையிலும் அவருடைய தகப்பனாரும், மைத்துனரும் அடையாளம் தெரியவில்லை என்று கூறியிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேனே தவிர அது உதயகுமாருடைய சடலம் அல்ல என்று நான் கூறவில்லை ஆனால் தங்கள் பேச்சைப் பாதியில் நிறுத்துவதால். நான் சொன்னதைப் போலவும், நீதி விசாரணையின் முடிவுக்குப் பிறகு மாறாக இருப்பது போலவும் வெளியிலே இருப்பவர்கள் தவறாகப் புரிந்து கொள்ள ஆதாரவாயிருக்கும் என்பதால்தான் இதை நான் சொன்னேன்.

DR. H. V. HANDE: In this House argument was advanced to give an indication that it was not Udayakumar's body. Finally he left it to the '*Needhi vijaranai*'. But papers had published from their own sources—they have their sources of finding out things—Now we find the papers are correct.

A glowing tribute was paid to the Governor's address. Naturally, you have to do that. If I had been given a little more time, I would have explained everything and I have got a lot of facts. Any way I will reserve them for the Budget Session. In conclusion I say that the Governor's Address should be summarily rejected and our amendments must be taken up.

திரு. ஏ. ஆர். மாரி முத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தச் சபையிலே அமைதியான முறையிலே என்னுடைய உரையை ஆரம்பிக்க இருக்கின்றேன். கவர்னர் அவர்கள் இங்கு கொடுத்த உரையிலே பல முக்கியமான விஷயங்கள் பற்றிச் சரியான முறையிலே அணுகவில்லை என்ற நிலையிலே நான் இந்த உரையைப் பார்க்கின்றேன். இங்கு பல முக்கியமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நாட்டினுடைய எதிர்காலத்தை, அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்க, எல்லோருக்கும் வேலை கொடுத்து, வறுமையைப் போக்கும் முறையிலே, வறுமை போக வேண்டும், சமதர்மத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற சபதத்தைக் கொண்டிருக்கும் நிலையிலே அதற்காக அடிப்படையாகச் செய்ய வேண்டிய பல காரியங்களைக் கடந்த பல்லாண்டுகளாகச் செய்யாமல் விட்டிருக்கிறோம். இனியும் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லையே என்ற கருத்தை நான் இங்கு சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக சமுதாயத்திலே உற்பத்தி பெருகினால் ஒழிய வறுமையைப் போக்க முடியாது என்பதை நாம் எல்லோரும் உணர்வோம். இந்தக் கருத்தை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நாட்டிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கு எந்த வகையான காரியங்களை நாம் அடிப்படையாகச் செய்ய வேண்டுமென்பதிலே முதலிலே கவனம் செலுத்தியாக வேண்டும். அப்படி உற்பத்தியாகும் பொருள்களை, உற்பத்தியாகிற செல்வத்தை



சமமான முறையிலே சமுதாயத்திலே கீழ்த்தட்டிலேயிருக்கும் பாடுபடுபவர்களுக்கு, அவர்களது வறுமை போகும் அளவிலே விநியோகம் செய்யும் வகையில் நாம் வழிவகை செய்ய வேண்டும்.

ஆக மேலெழுந்தவாரியாக கடந்த பல்லாண்டுகளாக நாம் பல காரியங்களைச் செய்திருந்தாலும் கூட, அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சமுதாயத்திலே அறவே வறுமையைப் போக்குதற்கான வகையைச் செய்யவில்லை என்ற நிலையைத்தான் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அதற்கு அடிப்படையான காரணம் அதற்குத் தக்க ஸ்தாபன அமைப்பு கிடையாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

கடந்த அரசாங்கமும் சரி, இப்போது இருக்கின்ற அரசாங்கமும் சரி, அதிகாரிகளைக் கொண்டே நாட்டிலே பெரும் பலனைச் செய்து விட முடியும் என்று கருதினால் அது தவறு. கடந்த அரசாங்கத்திலே போட்ட பல ஐந்தாண்டுத் திட்டங்களிலே எவ்வளவோ பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்தும் நாட்டிலே அதற்கேற்ற பலனைக் காணவில்லை. இன்றைக்கும் நாம் பல கோடிக் கணக்கான ரூபாய்களை வறுமையை ஒழிக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் செலவழிக்கிறோம் என்றாலும் கூட, அதற்கேற்ற பலனைச் சமுதாயத்திலே காணமுடியவில்லை என்று சொல்லும் போது இதிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பது பற்றி அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய நாட்டிலே கிராமப் பகுதிகளில்தான் பெரும்பகுதி மக்கள் கொண்டதாக இருக்கும் காரணத்தால், இன்றைக்குப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விவசாயம் இருக்கும் காரணத்தால் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட மக்களின் வளர்ச்சியைப் பற்றிச் சரியான முறையில் கவனிக்க வேண்டும். ரூபாயை ஒதுக்கிவிட்டால் மட்டும் போதாது. நிதி வசதிகளைச் செய்துவிட்டால் மட்டும் போதாது. ஒதுக்கப்படுகின்ற நிதிவசதிகள் சரியான முறையில் பயன் படுத்தப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டும். அதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

அதற்காக நான் பல தடவைகள் இந்தச் சபையில் வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறேன். திட்டங்கள் வகுக்கப்படும்போது அந்த திட்டங்கள் கிராம மட்டத்தில் வகுக்கப்பட வேண்டும். கிராமத்தில் இருக்கின்ற மக்கள் தாங்களாகக் கூடி, தங்களுக்கு இன்னின்ன வேண்டுமென்று சொல்லக் கூடிய அளவில் அந்தத் திட்டம் வகுக்கப்படுமானால் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகை அவர்களுடைய முன்னேற்றத்திற்கான காரியங்களைத் தாங்களே மேற்கொண்டு செய்கின்ற அளவுக்கு வகுக்கப்பட்டதாக இருக்கும்.

இப்போது நாம் பஞ்சாயத்து ராஜ்யத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். பஞ்சாயத்துச் சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அந்தப் பஞ்சாயத்துச் சட்டம் எந்த அளவில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவியாக இருந்திருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது—நான் இப்படிக் குறிப்பிடுவதால் பஞ்சாயத்துச் சட்டம் அறவே பயன்படவில்லை என்று கருதுவதாக எண்ணிவிடக் கூடாது—பஞ்சாயத்தை எதற்காக அமைத்தோமோ, எந்த லட்சியத்திற்காக அமைத்தோமோ அந்த அளவுக்குப் பலனைத் தரவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

ஓட்டுப் போட்டதோடு தங்களுடைய கடமை தீர்ந்துவிட்டதாக கிராம மக்கள் கருதுகிறார்கள். ஓட்டை வாங்கிக் கொண்டு சபை அமைத்த உடனே தாங்கள் எப்படி இந்தப் பஞ்சாயத்தை நடத்துவது, மக்களை எப்படி அணைத்துக் கொண்டு போவது என்பதற்கான வழிவகைகள் சட்டத்தில் இல்லாத காரணத்தால், பல பஞ்சாயத்துக்கள் தங்களுக்குத் தேவையான காரியங்களை நல்ல முறையில் செய்ய முடியவில்லை.

பஞ்சாயத்துத் தேர்தல் என்று வந்தவுடன் இரண்டு பிளவுகள் கிராமங்களில் ஏற்பட்டு. அந்தப் பிளவுகளைத் தீர்க்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ஒருவருக்கொருவர் வம்பு செய்து கொண்டிருக்கும் நிலைமையில் கிராம வளர்ச்சிக்கான காரியங்களில் கவனம் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, பஞ்சாயத்துச் சட்டங்களில் சில திருத்தங்களை அடிப்படையாகச் செய்ய வேண்டும். ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஒரு எக்சிக்யூட்டிவ் பாடி என்று கருதி, ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களை கவுன்சிலாகக் கொண்டு வருவதற்கு மூன்று அல்லது நான்கு தடவை மக்கள் அவையைக் கூட்டி, அவர்கள் பட்ஜட்டை அப்ரூவ் செய்வதாகச் செய்தால் மக்களுக்கும் பஞ்சாயத்துக்கும் தொடர்பு ஏற்பட்டுவிடும். அதை ஏற்படுத்தி விட்டால் பஞ்சாயத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள மக்களுக்கு ஒரு வாய்ப்பு, மக்கள் பஞ்சாயத்தைப் பார்த்து இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்ல ஒரு வாய்ப்பு எல்லாம் ஏற்பட அடிப்படையாக அமையும்.

அதுமட்டுமல்லாமல், பஞ்சாயத்துக்குச் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். எதற்கெடுத்தாலும் மாநில அரசையும், அங்கிருந்து பணம் வரவேண்டுமென்ற நிலைமையையும் மாற்றி அவர்களுக்கே அதிகாரம் கொடுத்து, தங்களுடைய வருவாயைத் தாங்களாகவே பெருக்கிக் கொள்ள இன்னும் பல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இன்றுள்ள நிலை என்னவென்றால், ரோட்டிலே ஒரு மண் அரிப்பு ஏற்படுமானால் போகின்ற மக்கள் அதிலே நான்கு பெட்டி மண்ணை எடுத்துக்கூடப் போட முடியாத அளவுக்கு பொறுப்பற்ற நிலை சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை போக்கப்பட வேண்டும். இந்த நிலை போக்கப்படுவதற்கு அனுசரணையாக கிராமங்களில் இருக்கின்ற வயது





வந்த மக்கள் எல்லோரும் மாதத்தில் ஒரு நாள் கட்டாயமாக சமுதாய வேலை செய்ய வேண்டுமென்று கூறுவதற்கான அதிகாரம் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்கப்படுமானால் பெரும்பாலான பிரச்சினைகள் தீரும். நிதிவசதிக் குறைவை ஈடுகட்டக் கூட நிச்சயமாக அது பயன்படும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

(மணி அடிக்கப்பட்டது)

கொஞ்சம் டைம் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** என்னிடம் பேசப் பெயர் கொடுத்த உறுப்பினர்களுடைய நீண்ட 'லிஸ்ட்' இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கட்சித் தலைவன் என்ற முறையில் கொஞ்சம் டைம் கொடுங்கள்.

ஆகவே, பஞ்சாயத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்ய அரசு முன்வர வேண்டும். அது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இன்றைக்கு விவசாய சம்பந்தமாக எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் சாதாரண மக்களுடைய நிலையில் போய்ச் சேரவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நம்முடைய அதிகாரிகள், நமது விவசாயத் துறை நிபுணர்கள் சிறந்த முறையிலே பணியாற்றி பல அரிய கண்டுபிடிப்புகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக இன்றைக்கு நாட்டிலே நாம் விவசாயப் பொருள் அபிவிருத்தியைக் கண்டிருக்கிறோம். ஆனால் இதற்காக நாம் செலவழித்த பணம், அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சி இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை ஒத்துப் பார்த்தால் போதியதாக இல்லை, வளர்ச்சி அதற்கேற்றபடி இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த ஆண்டு 73 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று கூறும்போது மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் இதற்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சி, செலவழித்த பணம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், கிராமங்களில் சரியான ஸ்தாபன அமைப்பின் மூலம் செய்திருந்தால் அந்த உற்பத்தி அளவு 100 லட்சம் டன்னாக இருந்திருக்க வேண்டும். மக்களுக்குச் சரியான முறையில் எடுத்துச் சொல்லி, நல்ல முறையில் கொடுக்கும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான அமைப்பு முறை இல்லை.

ஆகவே, நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்வது—ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு இளைஞர் அணி அமைக்கப்பட வேண்டும். 18 வயதுக்கு மேல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் கட்டாயமாக இளைஞர் அணியில் சேர்க்கப்பட வேண்டும். அந்தந்தக் கிராமங்களில் முற்போக்கு காரியங்களைச் செய்ய, விவசாயத்தை அபிவிருத்தி செய்ய, தொழிற் துறையில் அபிவிருத்தி செய்ய அவர்கள்

ஒவ்வொரு குடும்பத்திலும் தொடர்பு கொண்டு அந்தந்தக் குடும்பத்தின் நிலைமைகளை அறிந்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க, ஏற்பாடு செய்ய வேண்டும். செய்ய முடியவில்லை என்றால், வெறும் அதிகாரிகளைக் கொண்டு அந்தக் காரியங்களைச் செய்வது என்பது சாத்தியமில்லை.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியாளரே பெருமுயற்சி எடுத்துக்கொண்டு கிராமங்கள்தோறும் கூட்டம் போட்டு திட்டங்களைப்பற்றிப் பிரசாரம் செய்தார்கள். எவ்வளவு பேர் அதை அறிந்து கொண்டு செய்தார்கள் என்று பார்க்கும்போது ஒரு சிலர்தான் இருக்க முடியுமே தவிர, எல்லோரும் அதைப் புரிந்து கொண்டு செய்தார்கள் என்று கூறமுடியாது. எவ்வளவு பேர் இதை எல்லாம் புரிந்து கொண்டு விவசாயம் செய்தார்கள் ? ஒரு விவசாயி ஒரு ஏக்கர் கடலை போடுவதற்கு ஒரு மூட்டை பொட்டாஷ் போட்டான் என்றால் அது தேவையே இல்லை. 30 கிலோதான் போட வேண்டும். 100 கிலோ பொட்டாஷ் போட்டால் அது வீணாகும். எந்த அளவுக்குப் போட வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளாமல் போடுவதன் மூலம் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதைத் தயவு செய்து கவனித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நிலையை மாற்ற அடிமட்டத்தில் இருந்து வேலை செய்வோமானால், புரட்சிகரமான முறையில் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த, வளர்ச்சியை ஏற்படுத்த, உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்த வசதி செய்தவர்களாவோம். இப்படி கிராம மட்டத்தில் காரியங்களைச் செய்யவில்லையென்றால், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்தாலும், உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் பெருமளவுக்குக் கீழ்நிலையில் இருக்கின்ற மக்களுக்குப் பயன் ஏற்பட்டுவிட முடியாது. இந்தச் சட்டங்களின் மூலம் பெருமளவுக்கு நிலங்கள் அரசுக்குக் கிடைக்கவில்லை. சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள பெருநிலம் படைத்தவர்கள் என்னென்ன தவறுகளைச் செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நிலத்தைச் சாகுபடி செய்கிற குத்தகைதாரர்கள் என்ற நிலையை மாற்ற வேண்டுமென்று பல்லாண்டுக் காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். குத்தகைதாரர்கள் என்ற நிலையை மாற்றி அவர்களை நிலத்திற்கு உடைமையாளர்களாக மாற்ற வேண்டும். அப்படி ஆக்கினாலொழிய குத்தகை நிலங்களில் சாகுபடி பெருக முடியாது. தர்ம ஸ்தாபன நிலங்களில் கூட குத்தகை சாகுபடி செய்தால் அந்த நிலங்களையும் முதலில் எடுத்து சாகுபடிதாருக்கு உரிமை செய்ய வேண்டும்.

நான் ஆய்ந்து பார்த்த வரையில், ஒரு குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தால்—இரண்டு ஏக்கர் நிலத்தை உச்சவரம்பாக வையுங்கள் என்று நான் கூறுவதாக எண்ண வேண்டாம்—மாதத்திற்கு 250 ரூபாய் வருமானம் கிடைக்க வழி செய்து கொள்ள



முடியும். ஆனால் இன்று இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் கடன்பட்டிருக்கக் கூடிய நிலையிலேதான் இருக்கிறார்கள். தமிழக விவசாயிகளுக்கு உதவிகள் இல்லையா, வசதிகள் இல்லையா என்று ஆராய்ந்து பார்க்கும்போது ஒன்று எனக்குத் தெளிவாகப்படுகிறது. அவனுடைய நிலங்கள் எல்லாம் துண்டு துண்டாக இருக்கின்றன அதனால் விவசாயிகள் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. பல்லாண்டுகாலமாக, 'கன்சாலிடேஷன் ஆப் லேண்ட் ஹோல்டிங்ஸ்' செய்ய வேண்டுமென்று இந்தச் சபையில் சொல்லி வந்திருக்கிறேன். அந்தக் கருத்தை பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். சட்டபூர்வமாக அதை ஆக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன். அரசாங்கம் அதைப்பற்றி கவனம் செலுத்தாமல் இருக்கிறது. உடனடியாகச் சட்டம் கொண்டுவருவதில் கஷ்டங்கள் இருந்தபோதிலும், தற்போது தீவிரமான பிரசாரத்தின் மூலமாவது எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். மக்கள் மனதில் ஒரு மனமாற்றம் ஏற்பட வேண்டும் அப்படிப்பட்ட பெரும் புரட்சிகரமான காரியத்தைச் செய்தாக வேண்டும். இருக்கும் உற்பத்தியை விட பல மடங்கு உற்பத்தியை நாம் காண முடியும். அதற்காக இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், அது சரியான முறையில் அமைக்கப்படவில்லை. கல்வித் துறை சரியான முறையில் இல்லாத காரணத்தால், படித்து விட்டு வெளியே வரும் மாணவர்கள், தாங்களாகவே தனியாக ஒரு தொழிலை ஆரம்பித்து வாழ்க்கை நடத்துகிற நிலைமை இல்லை அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. இந்தப் போக்கே. இந்த நிலைமையே இன்னும் பல்லாண்டுக் காலம் இருந்தால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்த்து, கல்வித் துறையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறை ஒவ்வொரு மாணவனையும் ஒரு தொழிலில் தகுதி படைத்தவனாக ஆக்கும் அளவில் கல்வியை கற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயின்று வெளியே வந்த மாணவர்கள் அனைவரும் தாங்களாகவே தொழில் நடத்தி சம்பாதிக்கின்ற தகுதியைப் பெறும் அளவுக்கு கல்வி பயிற்சி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே துரதிருஷ்டவசமாக ஏற்பட்டு இருக்கும் பரவலான ஒரு கருத்து 'உழைக்காமல் சாப்பிடுவது' என்பதுதான். அப்படிப்பட்ட ஒரு கருத்து சமுதாயத்தில் ஏற்பட்டு இருக்கிறது. உழைக்க வேண்டும் உழைத்துச் சாப்பிட வேண்டுமென்ற கருத்து ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். இந்தக் கருத்தை நாம் சமுதாயத்தில் உருவாக்க வேண்டும். இன்றைக்கும் நாம் பார்க்கிறோம், சிலர் தங்களுடைய

சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். எல்லோரும் உழைப்பதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும். எல்லோரும் உழைத்து உற்பத்தியைப் பெருக்கிக் கொடுத்தால் தான், நாம் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த சாத்தியமாகும் என்று கூறிக்கொள்கிறேன்.

தானியங்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது இதை முக்கியமாகக் கருத்தில் கொண்டு அரசாங்கம் சிந்திக்க வேண்டும். நாம் வருஷாவருஷம் தானிய உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம். ஆனால், விலைவாசியும் ஏறிக் கொண்டேபோகிறது. உற்பத்தி பெருகியிருப்பதால் நியாயமான விலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும். ஆனால், அப்படிக் கிடைப்பது இல்லை. இதிலே எங்கே கோளாறு இருக்கிறது? அதை அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் ஒன்று நாம் கொடுக்கிற புள்ளிவிவரங்கள் தவறாக இருக்க வேண்டும் அல்லது உற்பத்திப் பெருக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். உற்பத்திப் பெருகியிருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். உற்பத்தி பெருகியிருக்கும்போது ஏன் விலை யேறியிருக்கிறது? நம்மையறியாமல் எங்கேயோ வெளியே போய்க் கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விலைவாசி ஏற்றத்தை தடுக்க முடியவில்லை, குறைக்க முடியவில்லை. இந்த நிலைமை ஏன் என்றால், அரசாங்கத்தின் உணவுக் கொள்கை தவறானது என்பது என்னுடைய கருத்து, சென்ற ஆண்டு அறுவடை காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் ரூபாய் 30 என்று விற்ற நெல், பிறகு ரூபாய் 40 என்று விலையேறிவிட்டது. இதற்குக்காரணம் அரசாங்கத்தில் சரியான உணவுக்கொள்கை இல்லாததுதான். சரியான உணவுக் கொள்கையை அனுசரிக்காத காரணத்தால் தான் இன்றைக்கு உணவுப்பொருள்களின் விலை இப்படி ஏறியும் இறங்கியும் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைத் தவிர்க்க தனியார் நடத்தும் உணவு வியாபாரத்தை அரசாங்கம் ஏற்று நடத்த முன்வர வேண்டும். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கூட இதுபற்றி பேசப்பட்டது. அரசாங்கமே உணவு தான்ய வர்த்தகத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று பரிசீலிக்கப் பட்டது. ஆனால் அது அப்புறம் கைவிடப்பட்டுவிட்டது. இப் போதாவது அரசாங்கம் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அரசாங்கம் அந்த வர்த்தகத்தை ஏற்று நடத்துமானால் அன்றாடம் உழைக்கும் மக்களுக்கு கூலிக்கு வேலைசெய்யும் மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைக்கும் நிலை ஏற்படும். இல்லையென்றால் நடு நிலையில் இருப்பவர்கள்—உழைப்பவர்களுக்கு இல்லாமல், வாங்குகிற மக்களுக்கும் இல்லாமல்—வியாபாரிகள் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். இந்த நிலைமையை நீடித்து வைத்துக் கொண்டிருக்க முடியாது



இந்த உணவுப் பிரச்சினைக்கு சரியானதொரு பரிகாரம் தேட அரசாங்கம் சரியான முறையில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந் தேன். கேட்டபிறகு உடனே கீழே வரவேண்டுமென்று ஓடி வந்தேன். குறுவை சமயத்தில் நாம் எந்தக் காலத்திலும் லெவி போட்டது கிடையாது. இந்த அரசாங்கம் நிரந்தமான ஒரு உணவுக்கொள்கை வைத்துக் கொண்டிருக்கிறது. குறுவை சமயத்தில் மழை பெய்வது வழக்கம். இந்த ஆண்டு குறுவை சமயத்தில் தஞ்சை மாவட்டத்தில் மழை பெய்யவில்லை. மழை இல்லாத காரணத்தால் நெல் நல்ல விலைக்கு விற்றிருக்கிறது. நல்ல விலை விற்றதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட என்னிடத்தில் தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது சொன்னார்கள். இந்த ஆண்டு நெல் நல்ல விலைக்கு விற்று அதிக மான வருமானம் வந்திருக்கிறது என்று. உழவர்கள் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பெரிய குறை என்னவென்றால், தஞ்சை மாவட்ட மக்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், நெல் விலை குறைந்து விட்டால், அரசாங்கமே உயர்ந்த விலை கொடுத்து அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் அதிகமாகிவிட்டதால். அரசாங்கம் நெல்லை கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு விற்க வேண்டும், இந்த இரண்டையும் அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறுவை காலத்தில் லெவியை எடுத்து விடுவது வழக்கம். அந்த முறைப்படிதான் தஞ்சை மாவட்டத்தில் லெவியை எடுத்தோம். நானும், முதலமைச்சர் அவர்களும் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று இருந்தபோது. அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கலந்துகொண்டுதான் இந்த முடிவினை எடுத்தோம். மீண்டும் விலையேறிவிட்டது. விவசாயி களும் நல்ல பலனைப் பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத் ததற்குப் பின்னால், மீண்டும் சம்பா அறுவடைக்கு முன்பாக லெவி போட்டோம். இப்படி லெவி போடுவது வழக்கம். இது எப் போதும் செய்கிற நடைமுறை கொள்கைதான். இதில் மாற்றம் ஒன்றும் இல்லை. உணவுக் கொள்கையில் இந்த அரசு ஒரு சரி யான கொள்கையைத்தான் வைத்து இருக்கிறது. தவறுதலாக செய்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு தானிய வர்த்தகத்தை அரசு ஏற்று நடத்த வேண்டு மென்று சொன்னார்கள். உணவு தானியம் முழுவதையுமே அர சாங்கம் நடத்துவதில் உள்ள சிக்கல் என்னவென்றால். நாட்டிலே உற்பத்தியாகிற அவ்வளவு நெல்லையும் அரசாங்கமே கொள்முதல் செய்து, அரசாங்கமே அவற்றை அரைத்து அரிசியாக்கி, மக்கள்

எல்லோருக்கும் கொடுக்கும் முழுப் பொறுப்பையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பொருள்படத்தான் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அது சாத்தியமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். உழவர்கள் அவர்கள் பயிரிடுகிற அவ்வளவு நெல்லையும் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டு, அரசாங்கம் கொடுக்கிற அரிசியைத்தான் வாங்கிச் சாப்பிட வேண்டுமென்று கட்டாயம் செய்தால் அவர்கள் அதை விரும்புவார்களா? மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்களே அதற்கு இணங்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த முறை முடியாத காரியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விலை உயர்கிற நேரத்தில் அரசாங்கம் அதைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்த விலையில் நியாயவிலைக்கடை மூலமாக—அரசாங்கத்திற்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையில்—அரிசி கொடுக்கிறது. மொத்த வியாபாரத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வது முறையல்ல. அது அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கும் ஒரு கொள்கையும் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் சொல்லிக் கொண்டிருந்த கருத்து. விலை நிரந்தரமாக இருக்க வேண்டும். ஒரு சமயத்தில் உற்பத்தி அதிகமாகி வருகிறபோது, விலை குறைகிறது. பிறகு சில நாட்கள் கழித்து விலை ஒழுங்காக இருக்கும் சூழ்நிலை வர வேண்டும். சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில், நியாயமான விலையில் அரிசி கிடைக்கவேண்டும். நியாயமான விலை விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் கருத்தே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அரசாங்கம், சொந்த உபயோகத்திற்குப் போக உபரியாக வியாபாரத்திற்கு வரும் உணவு தானியத்தைத்தான் அந்த வர்த்தகத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினேன். நான் ஒரு கருத்து சொல்கிறேன். இப்போது அரிசி ரூ. 1.20 பைசா ஒரு லிட்டர் விற்கிறது. சாதாரண மக்கள் இந்த விலை கொடுத்து வாங்கிச் சாப்பிட்டு வாழ்க்கை நடத்த முடியுமா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய வாழ்க்கை இன்னும் அடித்தளத்திற்குப் போய்விடக்கூடாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்த உறுப்பினர் ஒரு லிட்டர் 1.20 பைசா விற்கிறது என்று சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் நிலைமை, ஒரு லிட்டர் 85 பைசா தான் விற்கிறது. இது அவருக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய மாவட்டத்தில் இப்படி விலை குறைந்து விற்பதால் விவசாயிகள் அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இந்த நிலைமை என்றில்லை மக்க



மாகவே கோவை மாவட்டத்தில் எப்போது விலை அதிகமாக இருக்கும். அங்கே உடுமலைப்பேட்டையில் ஒரு லிட்டர் 85 பைசா தான் விற்கிறது என்று நேற்றையதினம் சென்று வந்த மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் அரசுக்கு எழுத்து மூலமே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். உடுமலைப்பேட்டையில் 85 பைசா விற்கும்போது, தஞ்சையில் 85 பைசா என்று விற்கும்போது, இப்படி ஏதோ விலையேறிவிட்டது மாதிரி சொல்வது சரியல்ல. சம்பா அறுவடைக்குப் பிறகு விலை குறைந்து கொண்டு இருக்கிற நேரத்தில், போன மாதம் இருந்த நிலைமையை வைத்துக் கொண்டு பேச மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தயவுசெய்து நான் மிகைப்படுத்திக் கூறுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கும் தஞ்சையில் 90 காசுக்கு விற்கிறது. ஆனாலும், ரூ. 1.20-க்கு விற்றிருக்கிறது. இந்த வருஷத்தில், ரூ. 1.20-க்கு தஞ்சையிலேயே விற்றிருக்கிறது. நானே நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். நான் சொல்வதெல்லாம், நிரந்தரமான விலையை நிர்ணயம் செய்து, லிட்டர் 75 காசுக்காவது கொடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்தால், சாதாரண மக்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க வழி ஏற்படும்.

நகர்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டுவது பற்றி இதில் சொல்லவில்லை. அதற்கு வேகமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக்கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு, மாண்புமிகு திரு. கந்தப்பன் கொண்டு வந்திருக்கும் நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். கவர்னர் அவர்களுடைய உரையை நெஞ்சார, மனமார வரவேற்கிறேன். இந்த உரைக்கு நான் இரட்டிப்பு நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக காந்தியார் பிறந்த மண்ணிலே பிறந்த ஆளுநர் அவர்கள் தமிழ் நாட்டில் இந்த மண்ணிலே தென்னாட்டு காந்தி அறிஞர் அண்ணா பிறந்த நாட்டிற்கு வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் தமிழிலே பேசுவேன் என்று சொல்லி தமிழர்களுடைய நெஞ்சையெல்லாம் கவர்ந்திருக்கிறார்கள். இந்த உரையிலே அவர்கள் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, நம் மாநிலம் எதிர்காலத்தில் தரத்திலே உயரவேண்டும் என்றால், அடிப்படையான உரிமைகளை மைய அரசு செய்தாக வேண்டும் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த இரண்டு காரணங்களுக்காகவும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன்.

அவர்கள் தன் உரையிலே இரண்டு போராட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, எல்லையிலே யாகியாகான் நடத்திய போராட்டம். மற்றொன்று, ஆளுங்கட்சிக்கு தொல்லை கொடுக்க

வேண்டும் என்று சென்னையிலே நடத்தப்பட்ட போராட்டம், இந்த இரண்டையும் குறிப்பிட்டு, ஆளுநர் சொல்லுகின்ற நேரத்தில், எல்லைப்போர் குறுகிய காலத்தில் நிறைவு பெற்று, அந்த நேரத்தில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டிருந்தோம் என்பதற்காக தன் நன்றி உணர்ச்சியை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து, தமிழ் நாடு இந்தத் துறையில் எப்படியெல்லாம் கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை அகில இந்தியாவும் பார்த்துக் கொண்டிருந்தது. மீனம்பாக்கத்தில் டாக்டர் கலைஞர் வந்திறங்கியவுடன், ஆயிரம் ஆயிரம் பேர்கள் மாலைகளோடு வந்திருந்த போது, அவர்கள் இவ் வரவேற்பெல்லாம் வேண்டாம். நம்முடைய முயற்சிகள் போர்முகத்தில் இருக்க வேண்டும் என்று சொன்னதோடு அல்லாமல், போர் நிதி திரட்ட, உடனேயே கூட்டத்தையும் கூட்டினார்கள். அது மட்டுமல்லாமல், வேறு எந்த மாநிலமும் செய்யாத அளவுக்கு, சட்ட மன்றத்தில் வீர மறவர்களுக்கு நன்றி செலுத்தி, முதன் முதலாக நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார்கள். ரூ. 10 கோடி நிதி திரட்ட வேண்டும் என்கிற சீரிய பணியிலும் தமிழ் நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்பெல்லாம் போர் நடந்தது இதற்கு முன்பெல்லாம் ஆண்டு கொண்டிருந்தவர்கள் போர் வீரர்களுக்கு பின்னால் நிலம் கேட்டால், அது ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குப் போய், அவரிடமிருந்து தாசில்தாருக்குப் போய், பின்பு ஆர்.டி.ஓக்குப் போய், கலெக்டருக்குப் போய் காலதாமதங்கள் ஆகி, பல ஆண்டுகளுக்குப் பிறகு நிலம் கிடைக்கும். ஆனால் இன்றைக்கு நம்முடைய இந்த அரசாங்கம் தமிழ் நாட்டில் எந்த எந்த போர் வீரர்கள் போரில் ஈடுபட்டு உயிர் இழந்தார்கள் என்று கண்டு அவரவர்களுடைய வீடுகளுக்கு கலெக்டர், ஆர்.டி.ஓ., அமைச்சர்கள் எல்லாம் சென்று அந்த வீர மறவருடைய குடும்பத்தினரை நகரத்திற்குக் கொண்டு வந்து, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 5,000 என்று கொடுத்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில், ஒவ்வொருவருக்கும் உரிய பட்டாக்களும் கொடுத்திருக்கிறார்கள். மேடையிலேயே அறிவித்து உதவிகள் அவ்வப்பொழுது செய்திருக்கிறார்கள். என்னுடைய செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒருவர் போரில் மாண்டார். அவருடைய துணைவியாரையும் தாயாரையும் அழைத்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அவர்களுக்கு நிதி உதவியும் கொடுத்த காட்சியை ஆயிரம் ஆயிரம் பேர்கள் கண்டு களித்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விட, சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இங்கேயிருக்கின்ற அமைச்சர்களுடைய துணைவியார்கள், இன்னும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் லட்சக்கணக்கான பொருள்களைச் சேர்த்து முதல் அமைச்சரிடம் கொடுத்து, அவற்றை இந்தியப் பிரதமருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் நன்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்பொழுது இங்கே





வந்த திரு. மோகன் குமாரமங்கலம், திரு. சி. எஸ். போன்றவர்களும் வந்தபோது நன்றி சொல்லத்தான் வருகிறார்கள் என்று எண்ணியிருந்தோம்:

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் இங்கேயிருந்த குழப்பத்தை அதிகப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கினார்கள். இன்றைக்குக் காலையிலே கூட உறுப்பினர் திரு கே. டி. கே. அவர்கள் பேசினார்கள், ஆவடி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள், ஜெனரல் ஹாஸ்பிடலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று. ஆளும் கட்சியைச் சேர்ந்த முதல் அமைச்சராக இருந்தாலும் சரி, என்னைப் போன்ற தொண்டர் என்று இருந்தாலும் சரி, எந்தத் தொழிலாளருடைய சொட்டு ரத்தமும் சிந்தினால், அதற்காக நாங்களெல்லாம் நெஞ்சார வருத்தம் தெரிவிக்கக் காத்திருக்கிறோம். நானே ஜெனரல் ஹாஸ்பிடலுக்குப் போய்ப் பார்த்தேன். தொழிலாளர்கள் படுத்திருக்கும் படுக்கைக்குப் பக்கத்திலேயே காக்கி உடைபோட்ட போலீஸ்காரரும் போலீஸ் தொழிலாளியும் படுத்திருக்கிறார்கள். போலீஸ் தொழிலாளிகளைக் கற்களாலும், வேறு பலவற்றினாலும் தாக்கி படுகாயப்படுத்தி இருக்கும் சூழ்நிலை அங்கேயிருந்திருக்கிறது. அந்தப் போலீஸ் தொழிலாளர்களும், தமிழ் தொழிலாளர்கள் தான். அவர்களும் அந்த மருத்துவ மனையிலேயேதான் இருக்கிறார்கள். அந்தக் காட்சியையும் பார்த்தேன். மொத்தத்தில் தொழில் அமைதி வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை. எனக்கு முன்னால் பேசியவர்கள், குறிப்பாக டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் ஆளுங் கட்சியைத் தாக்க வேண்டும், குறை கூற வேண்டும் என்றே கருத்துக்களைச் சொல்கிறார்கள். சிறிய குறைபாடுகளையும் பெரிதுபடுத்தி அரசியல் நோக்கத்தோடு சொல்வது சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் ஒன்றில்தான் ஜனநாயகம் ஒரே நிலையில் இருக்கிறது. மார்ச் மாதம் முடிந்தால், இந்தியாவின் மேப்பே மாறிவிடும். எல்லா மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் வந்துவிடும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அது இந்திய நாடா அல்லது இந்திரா நாடா என்று கேட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்திரா நாடு என்று பெயர் மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏதோ ஒரு கருவேப்பிலைக் காம்பு போல் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ் நாட்டில் நடைபெறுகிறது. அந்த ஆட்சியையும் குலைக்க வேண்டும் என்று இங்கேயிருக்கும் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து செயல்படுகிறார்கள். கம்யூனிஸ்ட்கள் கூடச் சேர்ந்திருக்கிறார்கள்.

எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. 1957-ல் நம்பூதிரிபாட் அரசு ஏற்பட்டபோது, அதைக் கவிழ்க்க அன்றைக்கு இருந்த காங்கிரஸ்காரர்கள் வன்முறையில் இறங்கினார்கள், போராட்டங்கள் நடத்தினார்கள். மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள்

அது பற்றி தன்னுடைய திராவிட நாடு ஏட்டில் உருக்கம் உருக்கமாக எழுதினார்கள். மற்ற கழகத் தலைவர்களும் மேடைகளில் பேசினார்கள். இந்தியாவில் ஒரு மாநிலத்தில் இப்படிப்பட்ட அரசு இருப்பதைக் கவிழ்க்க செயல்படுவது துரோகம் செய்வது என்றும், ஜனநாயகத்தை மாய்க்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்தக் கம்யூனிஸ்டுகள்தான் இன்றைக்கு சத்தியமூர்த்தி பவனில் கூடுகிறார்கள். தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் தன் தளத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது, இவர்கள் என்ன ஜனநாயகத்தைப் பேசப் போகிறார்கள் என்று பரிதாபப்பட வேண்டியதாக இருக்கிறது.

ஆனால். ஒன்றைச் சொல்லுகிறேன், கேரளம் போல இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்க்க முடியாது. இங்கே கழகத்திற்குத் தனியான பாரம்பரியம் இருக்கிறது. கிராமங்களிலெல்லாம் பட்டி தொட்டிகளிலெல்லாம் 17,000 கிளைகளைக் கொண்டு 15 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. ஆகவே, "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?" என்று நான் எதிர்க் கட்சிக்குச் சொல்லிக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் ஆட்சியைக் கவிழ்த்திருக்கலாம், இந்த மாநிலத்தினைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதோ அல்லது இந்த அரசாங்கத்திற்குக் கெடுதல் உண்டு பண்ணுவதோ சாதாரணமாக முடியாது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு வேடிக்கை—இந்தத் தீர்மானத்திற்குத் திருத்தம் கொடுத்திருக்கிற திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இரண்டாவது திருத்தத்திலே "பொலிடிகல் இண்டர் வென்ஷன்" டிரேட் யூனியனிலே இருக்கக் கூடாது, அரசியல் தலையீடு கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆதியோடந்தமாகப் பார்ப்போமானால் போர் நேரத்திலே முதலமைச்சரவர்கள் கூட்டிய கூட்டத்திலே இந்தத் தலைவர்கள் சிம்ப்பனைப் பற்றிப் பேசினார்கள். டாக்கா நகரத்தைப் பிடிக்க வேண்டுமென்று நம்முடைய படைகள் அங்கே போர் நடத்திக் கொண்டிருந்த நேரத்திலே நம்முடைய படைத் தளபதி அரோரா போன்றவர்களும் மற்றவர்களும் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே இங்கே இருந்தவர்கள் சிம்சனைப் பிடிப்பதற்குப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்திலே டாக்காவைப் பிடிப்பதற்கு அங்கே போர். சிம்சனைப் பிடிப்பதற்கு இங்கே போர். இப்படிப்பட்ட நிலைமைகள் தான் இங்கே இருந்த சூழ்நிலை.

இவற்றை நான் மறுபடியும் சொல்வது மட்டுமல்ல. முதலமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத்தில் பொலிடிகல் இண்டர்வென்ஷன் கூடாது என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்ன கருத்தைத் தான் தெரிவித்தார்கள். தொழிற்சங்கத்திற்கு தொழிலாளர்களே தலைவர்களாக வர வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்தார்கள். நான் பல தொழிற் சங்கங்களுக்குத் தலைவனாக இருந்திருக்கிறேன். நம்முடைய



டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க பல தொழில் நிறுவனங்களில் இன்றைக்குத் தேர்தல்களை நடத்தி தொழிலாளர்களையே தலைவர்களாகக் கொண்டு வந்திருக்கிறோம். நமமுடைய போக்குவரத்துத் துறையை பல்லவா போக்குவரத்துக் கழகம், பாண்டியா போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைத்திருக்கிறோம். அங்கே யெல்லாம் இன்றைக்குத் தேர்தல்களை நடத்தி தொழிலாளர்களையே தொழிற்சங்கத் தலைவர்களாக ஆக்கியிருக்கிறோம். நாங்கள் விரும்பியிருந்தால் நாங்களே தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து இருக்கலாம். மற்றவர்களும் இதே மாதிரி இணைந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்னொன்றும் சொல்கிறேன். இந்த ஆட்சிக்கு நீங்கள் ஒரு வார்த்தை நன்றி சொல்ல வேண்டாமா? இன்றைக்கு நம்முடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது, முன்பு இருந்ததை விட இப்போது 3 லட்சம் டன் நெல் உற்பத்தி அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே மூன்று பம்புசெட்டுகள் ஓடினால் அதில் ஒரு பம்பு செட் தமிழகத்திலே ஓடிக் கொண்டு இருக்கிறது. அம்மாதிரி வேளாண்மை இன்றைக்கு நல்ல முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிறது. அதன் மூலம் உற்பத்தி பெருகுவதற்கு வேண்டிய வழி வகைகள் சொல்லப்பட்டிருக் கின்றன. இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் இன்றைக்குப் போஸ்டர்களைப் பற்றி, போஸ்டர்கள், சுவரொட்டிகள் ஆகிய வற்றிற்கு எதிராக இருப்பவர்கள் இவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரை ஒரு சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் கேட்டுக் கொள்வேன். நீங்கள் எது எதற்கோ போராட்டம் என்று சொல்கிறீர்கள். சேலம் இரும்பாலைக்காக ஒரு போராட்டத்தை நடத்துங்கள். 100 கோடி ரூபாய்க்கான இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் அதனால் நூற்றுக் கணக் கான இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் அதைச் சுற்றி உருவாக்கலாம். அது இன்றைக்குத் தடைப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு போராட்டம் நடத்துவதற்கு முன் வாருங்கள். தூத்துக்குடியிலே நாப்தா தொழிற்சாலை உருவாகுமானால் அதன் மூலம் நூற்றுக்கணக்கான பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் உருவாகலாம். அதற்காக ஒரு போராட்டம் துவக்க வாருங்கள். உங்களுடைய போராட்ட வீரர்கள் யார், யார் என்ற பட்டியலைக் கொடுங்கள். கோவையிலே 6 பஞ்சாலைக்ள் திறக்கப்பட வேண்டு மென்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இந்திரா காந்தியவர்கள் ஏதேதோ காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதைக் கவனிப்பதற்கு, அதற்கு வேண்டிய போராட்டம் நடத்துவதற்கு யார், யார் வர விரும்புகிறீர்கள்? அந்தப் பட்டியலைக் கொடுங்கள். இதற்கு எல்லாம் போராட்டம் நடத்தாமல் அங்கே ஆவடியில் போய் சலசலப்பு ஏற்படுத்துவது கேட் கூட்டம் போடுவது, இன்னும்

சொல்லப் போனால் தொழிற்சங்கத் தலைவராக இருக்கிற கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் போகாமல் வேறு சில பேர் போவதும் அவர்களை எதிர்த்து சில பேர் பேசுவதும் இத்தகைய குழப்பங்களை உண்டாக்குவதும், தமிழ் நாட்டிற்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டுமென்ற முறையிலே காரியங்கள் செய்வதுமாக இருக்கிறீர்கள். இந்தச் சூழ்நிலையில் பொதுவாகக் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சிகள் தங்களுடைய மனமாச்சரியங்களை விட்டு விட்டு இந்த ஆட்சி செய்கின்ற நல்ல காரியங்களை எண்ணிப் பார்த்தாக வேண்டும். கடைசியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தென்னாட்டிலேயே தமிழகத்தில் தான் ஜனநாயகம் நன்கு செயல்படுகிறது. ஆந்திராவைச் சேர்ந்த பிரம்மானந்த ரெட்டிக்கு இன்றைக்குத் தேர்தலில் சீட்டு இல்லை. சுகாதியாவிற்கு சீட்டு இல்லை. இவற்றையெல்லாம் பார்த்தால் நாளைக்கு மத்தியிலே இந்திரா அரசுதான் எல்லா மாநிலங்களிலும் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. போர் நேரத்திலே கண்ணகி. ஆதிபராசக்தி என்று போஸ்டர் போட்டவர்கள், இந்திரா காந்தியை இவர்களுக்கு ஒப்பிட்டுப் போஸ்டர் போட்டவர்கள் இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றிப் போட்ட போஸ்டரைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்தப் போஸ்டரைப் பற்றி அன்றைக்குப் பேசவில்லை கலைஞர் அவர்கள் இந்திரா காந்தியிடத்திலே நிதி அளித்த போது அதைப் பற்றிப் போஸ்டர் போடவில்லை. ஆகவே தயவு செய்து இதை எண்ணிப் பார்த்துப் பேச வேண்டுமென்ற கருத்தை நான் இந்த மன்றத்தின் உறுப்பினன் என்ற முறையிலே கூறிக் கொள்கிறேன். இந்த ஆட்சிதான் தமிழகத்திற்கு நன்மை செய்ய முடியும். இதை விட்டால் வேறு இல்லை. இந்த ஆட்சியின் சாதனைகளை நன்றி உணர்வோடு பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

* **திரு. கோ. இளங்கோவன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி, தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'தமிழ் நாட்டு மக்களுக்கு இந்த அமைச்சரவை பணிபுரிவதில் உறுதுணையாக இருப்பேன்' என்று மேதகு ஆளுநர் அவர்கள் அவருடைய உரையிலே குறிப்பிட்டிருப்பதற்காக நான் அதனை வரவேற்கிறேன்.

அடுத்து, ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கு இந்திய அரசு வழிகோலியிருக்கிறது என்று சொன்னால் அந்த வெற்றி வாய்ப்பு இந்திய அரசிற்குக் கிட்டியதற்குக் காரணம் மத்திய அரசுடன் மாநில அரசுகள் முழு ஒத்துழைப்பை நல்கியதாகும். குறிப்பாக, இந்த அரசு இந்திய அரசோடு தோளோடு தோள் நின்று செயல்பட்டிருக்கிறது. அதே நோக்கில் வறுமைப் பிணியை எதிர்த்து நாம் எடுக்கின்ற முயற்சிகளில் இந்த அரசோடு இந்தியப் பேரரசு ஒத்துழைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை



பொய்த்து விடாத வகையில் ஆளுநர் அவர்கள் காரியமாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏழை எளியவர்களுடைய வாழ்வு ஏற்றம் பெறத்தக்க வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களது அவல வாழ்வு ஆனந்த வாழ்க்கையாக மாற வேண்டுமென அவருடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏதோ சொல்லலங்காரத்திற்காகச் சொல்லாமல் புள்ளிவிவரங்களோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968-69-ஆம் ஆண்டில் நம்முடைய உணவு உற்பத்தி 50.6 லட்சம் டன்னாக இருந்தது. இன்றைக்கு அது 73 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. அது குறித்து நாம் பெருமைப் படாமல் இருக்க முடியாது. இதனைச் சொல்லுகிற நேரத்தில் மாற்றுக் கட்சித் தோழர்கள் உணவு உற்பத்தி பெருகியிருக்கலாம். ஆனால் அரிசி விலை இறங்கியிருக்கிறதா?—எனக் கேட்கிறார்கள். அரிசி விலை இறங்கா விட்டாலும் ஏறுமல இருக்கிறது என்பதனை மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு, உணவு உற்பத்தியில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழத்தக்க வகையில் அவர்களுக்கு குறுகிய காலக் கடன்கள், நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றை இந்த அரசு அதிகரித்திருப்பதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

உண்ண உணவு தேவை; அதே போல், உடுக்க உடை தேவை. உணவைப் பொறுத்தவரை தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது. ஆனால் பருத்தி விளைச்சலில் தன்னிறைவு பெறவில்லை, என்பதை உணர்ந்த தமிழக அரசு எதிர் காலத்தில் 2½ லட்சம் ஏக்கராவில் பருத்தி சாகுபடி செய்யவிருப்பதை நான் பாராட்டுகிறேன். விவசாயிகள் மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை அமைக்கும் முயற்சியிலே வெகு தீவிரமாக ஈடுபட்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பண்டங்களை மற்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு நல்ல சாலைகள் தேவைப்படுகின்றன. தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டச் சாலைகள் மேம்பாட்டிற்கும் அங்காடிக் கூட்டமைப்ப (Market Complex) க்கும் ரூபாய் ஒன்றரை கோடி ஒதுக்கியிருப்பதற்காக, இந்த அரசைப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டும் பயன்படுமென்று சென்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகிக் கேட்டபோது பூதலூர் ஒன்றியம் சேர்க்கப்படவில்லையெனச் சொன்னார்கள். எனவே பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தையும் அதில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் குடிசைகள் போட்டிருந்தால் அவர்கள் அந்த இடங்களைக் காலி செய்யத் தேவையில்லை, இந்த இடங்களை அவர்களுக்கே விரைவில் பட்டா செய்து தரப்படும் எனச் சட்டம் பிறப்பித்திருந்த போதிலும் சில பல இடங்களில் அவர்கள் குடிசைகள் போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு புலவர் தனது குடிசையைப்பற்றிச் சொல்ல வந்த நேரத்தில், 'நனை சுவர் கூரை கனைகுரல் பல்லி' என்றார். 'நனைசுவர்' என்றால் நனைந்த சுவராம்—நனைகின்ற சுவராம்—நனையும் சுவராம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களில் பல்லாயிரக் கணக்கானோர் நனைசுவர் கூரையில்தான் இருந்து வருகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் ஓர் ஊரை எடுத்துக் கொண்டால் ஊரில் உள்ள புறம்போக்கு நிலங்கள் அனைத்தையும் பெரிய பண்ணைக்குச் சொந்தக்காரர்களும், டிரஸ்டுகளுக்குச் சொந்தக்காரர்களும் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வருகின்றார்கள். அதை மாற்றி, ஏழை விவசாயிகளுக்கு மனைக்கட்டுகள் வழங்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித் தரவேண்டுகிறேன்.

குடிநீர் வசதி கிராமங்களுக்கெல்லாம் கிடைத்து வருகின்றது. அதற்காக இந்த அரசினைப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டு இடங்களில் நான்கு ஊராட்சிகளைச் சார்ந்த மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் இரண்டு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகளை அமைக்க 'குடிநீர் வாரியம்' முன்வந்திருக்கிறது. என்றாலும், என்ன காரணத்தாலோ அது சற்று தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, மேலும் தாமதம் இல்லாமல் விரைவில் செய்துதரும் சூழ்நிலையை அரசு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நம்முடைய அரசின் நன்முயற்சிகள் நல்ல வெற்றிகளைக் குவித்திட வேண்டுமென்று தமது இதயம் கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் பேரில் நான் கொடுத்திருக்கின்ற திருத்தங்களை யொட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஆளுநர் உரையில் சாதாரணமாக அரசாங்கத்தின் கொள்கை எடுத்து விளக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்த உரையைப் பொறுத்தமட்டில், இன்றைய அரசாங்கம் கொள்கையற்று இருப்ப





தாலோ என்னவோ என்று ஐயப்படக்கூடிய அளவில், எந்தவிதமான கொள்கையும் எடுத்துக் கூறப்படவில்லை என்று முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, மாநில சுயாட்சி என்ற கோஷம் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை நாம் யாவரும் அறிவோம். கழிந்த சில மாதங்களாக நம்முடைய அமைச்சர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு உண்மையிலேயே மாநில சுயாட்சி கேட்கிறதா அல்லது மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக அதிகாரங்களைப் பெறுவதுதான் இந்த அரசின் நோக்கமா, அல்லது தனிநாடாகப் பிரிவதுதான் அரசின் நோக்கமா என்று ஐயப்படக்கூடிய அளவில் அறிக்கைகள் அமைந்திருக்கின்றன என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையில், மின்சார வாரியத் தொழிலாளர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பாதுகாப்பு நிதி வழங்குவதற்காக நடத்திய பொதுக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வங்க தேச சுதந்திரப் போராட்ட வெற்றி, மாநிலங்களை அதிகாரம் செலுத்த முயலும் உயர்சக்தி எவற்றிற்கும் ஒரு படிப்பினையாகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு, தமிழரசுக் கழக வெள்ளி விழாவின் போது இன்னொன்றைக் குறிப்பிட்டிருக்கிறார் "மாநில சுயாட்சி பெற வேண்டும் என்று எங்கள் அண்ணா அவர்கள் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அந்தக் கொள்கையின் வெற்றிக்காக அரசுக் கட்டிலிலிருந்து வெளியேற வேண்டியிருந்தாலும், அதற்கும் தயாராக இருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார். மாநில சுயாட்சிக் கோரிய முஜிபுர் ரஹிமான் குடியரசுத் தலைவராக விளங்குகிறார் ஆக, அந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் உரையில் பங்களா தேசத்தின் தலைவர் முஜிபுர் ரகிமான் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அங்கு சுயாட்சி கேட்டு கொடுக்காத காரணத்தால் இன்று பங்களா தேசம் தனியாகப் பிரிந்து முஜிபுர் ரஹிமான் பங்களா தேசத்தின் தலைவராக வீற்றிருக்கிறார் என்று உதாரணம் காட்டப்பட்டிருக்கிறது.

அதோடு கூட நமது பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் ஒரு பொங்கல் விழா மலருக்கு கொடுத்த அறிக்கையில் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் அவர் தெரிவித்திருப்பது என்னவென்றால், கன்னியாகுமரி முனையில் பங்களா தேச விடுதலைப் போராட்ட வெற்றிவிழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. குமரிமுனையில் தமிழ் மொழியினை எண்ணும் நேரத்தில் சிறையில் வாடிய விடுதலை வீரர் முஜிபுர்

ரஹிமான் தான் கொண்ட மொழி உணர்ச்சியால் நாட்டு விடுதலை பெற்றார் என்ற அந்த நினைப்பும் எனக்குச் சேர்ந்து வருகிறது என்ற வாசகங்கள் அடங்கிய அறிக்கையை பொங்கல் மலருக்கு அளித்திருக்கிறார். அதுமட்டுமல்ல, இங்கு நமது ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்த நமது நண்பர் திரு. கந்தப்பன் அவர்கள் கோவையில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் என்ன கூறி யிருக்கிறார் என்றால் ;

"I could not envisage what would be the consequences if the demand for autonomy was spread. Indira would find her Waterloo in Tamil Nadu."

அத்தோடு நமது அங்கத்தினர் அரங்கநாதன் அவர்கள் திட்ட வட்டமாக அழுத்தம் திருத்தமாக அந்தக் கூட்டத்தில் தனிநாடு அடைந்தேயாகவேண்டும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆக இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த ஆட்சி சுயாட்சி கேட்கிறதா அல்லது தனிநாடு வேண்டுமென்று விரும்புகிறார்களா என்ற சந்தேகம் மக்களிடையே பரவலாக இருக்கிறது. ஆகவே அந்தச் சந்தேகத்தை மாற்ற ஆளுநர் அவர்கள் தமது உரையில் மாநில சுயாட்சியைப் பொறுத்த வரையில் இந்த அரசின் நோக்கம், கொள்கை என்ன என்பதை கூறியிருக்கவேண்டும் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வைப்பற்றி இங்கு உரையாற்றிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் ஒரே குரலில் நாட்டில் அத்தியாவசியப் பண்டங்களின் விலை அதிகமாக ஏறிக் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் கூறினார்கள்.

அது மட்டுமல்ல, ஆளுநர் அவர்கள்கூட தமது உரையில் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அவ்வாறு ஏறுவது கவலைக்கிடமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், டாக்டர் நோயாளியின் தலையணைக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு அழுது கொண்டிருந்தால் நோயாளியின் நிலை என்னவாகும் என்பதை அரசாங்கம் நினைத்துப் பார்க்க வேண்டும். அரசாங்கம் சக்தி இல்லாத அரசாங்கம் அல்ல. விலைவாசியைக் குறைக்கவேண்டு மென்று எதிர் கட்சியிலிருந்தபோது போராட்டம் நடத்தினார்கள். இப்போது அதைவிட அதிக சக்தியோடு போராட்டம் நடத்த வாய்ப்பிருக்கிறது. ஆகவே, போராட்டம் நடத்தியாவது, அல்லது வேறு முறையிலாவது விலைவாசியைக் குறைக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று அரிசி சாதாரணமாக படி மூன்று ரூபாய் என்ற அளவுக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று எண்ணுகிறேன்.





அரசாங்கம் விநியோகம் செய்கின்ற அரிசி படி ஒன்றுக்கு ரூ. 2.20 என்று விநியோகம் செய்யப்படுகிறதென்றால், இதைவிட அவலநிலை நாட்டில் இருக்கமுடியுமா என்று சிந்திக்கவேண்டும். இந்த ஆளுநர் உரையில் 1967-ஆம் ஆண்டு 1971-ஆம் ஆண்டு ஆகிய இரண்டு ஆண்டுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

1967-ஆம் ஆண்டு மழை இல்லாத காரணத்தால் வறட்சி ஏற் பட்டு உணவுப் பற்றாக்குறை இருந்தது. 1971-ல் எங்கே பார்த் தாலும் மழை பெய்து உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்திருக்கிறோம். இருந்தாலும் கூட உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பண்டங்களின் விலை அதிகமாக ஏறிக்கொண்டு போகிறது என்றால் இதன் ரகசியம் என்னவென்பதை நிச்சயமாக அரசு சிந்திக்க வேண்டும். கொள்ளைக்காரர்கள், கறுப்புச் சந்தை வியாபாரிகள் மீது அரசாங்கக் கண்காணிப்பு இல்லை, அல்லது அவர்களுக்கு உடந்தையாக அரசாங்கம் இருக்கிறது, அதனால் தான் உணவுப் பொருட்களின் விலை ஏறுகிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

அடுத்ததாக, வேலையில்லாத் திண்டாட்டம் இதுவரையில் இல்லாத அளவுக்கு அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. அருகாமையில் மத்திய அரசின் அறிக்கையைப் பார்த்தேன். 1967-ஆம் ஆண்டு இருந்ததைவிட 1971-ஆம் ஆண்டில் வேலையில்லாத் திண்டாட்டம் 100 சதவிகிதம் அதிகப்பட்டிருக்கிறது. படித்த இளைஞர்கள் வேலை தேடித்தரும் நிறுவனங்களில் தங்கள் பெயரை பதிவு செய்து கொண்டிருப்பவர்கள் எண்ணிக்கை இரண்டு மடங்காகியிருக்கிறது இதன் பிரதிபலிப்புத்தான் இன்று கல்லூரிகளில் பட்டமளிப்பு விழாக்களில் எல்லாம் அமைதியின்மை ஏற்பட்டு, மாணவர்கள் எங்களுக்குப் பட்டம் தேவையில்லை, வேலை வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வு காணவில்லை என்றால், நிச்சயமாக படித்த இளைஞர்கள் அதிக காலம் பொறுத்திருக்க மாட்டார்கள். இந்த நாட்டில் புரட்சி ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவேண்டுமென்றால், அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, இந்த நாட்டில் இப்போது தொழில் அமைதி இருக்கிறது என்று ஆளுநர் அவர்கள் உரையில் கூறியிருக்கிறார்கள். எந்த அளவில் நாட்டில் தொழிலமைதி இருக்கிறது என்று நாம் சென்னையில் உள்ள நிலைமையிலிருந்து அறிந்து கொண்டிருக் கிறோம். இதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தால், தொழிலாளர்கள் சுயமாக செயல்படுவதற்கு

அனுமதிக்கப்படுவதில்லை. அரசாங்கத் தலையீடு இருக்கிறது. ஆகவே நிச்சயமாக இந்த நிலை மாற்றப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இன்று நிலவி வருகிறது. இதை அரசாங்கம் நன்கு உணர வேண்டும். சிம்ப்ஸன் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு அடி, உள்ளே இருக்கிற தொழிலாளர்களுக்கு உதை என்று இந்த நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. இது எங்கே போய் முடியும் என்று நாம் சிந்திக்க வேண்டும். இவ்விதக் கொடுமைகளிலிருந்து தொழிலாளர்கள் காப்பாற்றப்படுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற நிகழ்ச்சி கழிந்த 24 ஆண்டு சரித்திரத்தில், தமிழ் நாட்டில் இருந்ததில்லை என்று இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலைக்குக் காரணமான, இன்றிருக்கிற தொழில் அமைச்சர் தன் பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது, திரு. கந்தப்பன் அவர்களும், திரு. அரங்கநாதன் அவர்களும் 'தனிநாடு அடைந்தே ஆக வேண்டும்' என்று பேசியதாக பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசினார்கள். இந்தச் சட்டமன்றத்திலே, சொல்லாத ஒன்றை பத்திரிகையில் வந்திருப்பதாகக் கூறி, பேசலாமா? இங்கே அப்படிக் கூறுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, முதலில் நண்பர் வீராசாமி அவர்கள் நான் கூறியதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அங்கத்தினர் கந்தப்பன் அவர்கள் நாடு விடுதலை அடையவேண்டுமென்று சொன்னதாக நான் கூறவில்லை. ஆனால் அவர் ஆற்றிய உரையை நான் பத்திரி கையில் பார்த்ததாகத்தான் சொன்னேன். அங்கத்தினர் அரங்க நாதன் அவர்கள் . . .

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, எவ்வகையிலும் சர்ச்சைக்குரிய பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் காட்டி, அதுதான் உண்மை என்று சொல்வது முறையாகாது. நான் அவ்வாறு பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மன்றத்தில் பத்திரிகைச் செய்திகளை எடுத்துக்காட்டி பேசுவது முறையல்ல. பத்திரிகைச் செய்தி சரியாகவும் இருக்கலாம்; தவருகவும் இருக்கலாம். எனவே அதை வைத்துக்கொண்டு இந்த





மன்றத்திலே விவாதிப்பது சரியல்ல. இது இம்மன்றத்தின் உறுப்பினர் எல்லோருக்கும் பொருந்தும். இதுதான் மன்றத்தின் விதியும் கூட.

**திரு. செ. கந்தப்பன் :** திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் பத்திரிகையில் பார்த்ததாகப் பேசியதுபோல் நம்முடைய கழக உறுப்பினர்கள் எவரும் பேசவில்லை என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எல்லாப் பத்திரிகைகளிலும் வரக்கூடிய செய்திகளும் தவருகவா இருக்கும்? ஸ்டாண்டர்டு பத்திரிகையில் வரக்கூடியச் செய்திகள் உண்மையாகவே இருக்கும். எனவே ஸ்டாண்டர்டு பத்திரிகைகளில் வரக்கூடிய செய்திகளை ஆதாரமாகக் காட்டி பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பல செய்திகள் பத்திரிகையிலே வரும். அது சரியாகவோ தவருகவோ இருக்கலாம். ஒரு சட்டமன்ற அங்கத்தினர் நேராகக் கூறுவதை விட பத்திரிகைச் செய்தி உண்மையாக இருக்காது. சம்பந்தப்பட்ட அங்கத்தினரே அவ்வாறு சொல்லவில்லை என்று கூறிவிட்டார். எனவே, அதை அத்துடன் விட்டுவிடவேண்டும். பத்திரிகைகளில் எது ஸ்டாண்டர்டு பத்திரிகை, எது ஸ்டாண்டர்டு இல்லாத பத்திரிகை என்று விவாதிப்பது நம்முடைய வேலையல்ல.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஸ்டாண்டர்டு பத்திரிகைகள் எவை என்று சொல்லிவிட்டால், அவைகளில் வரக்கூடியச் செய்திகளைச் சுட்டிக்காட்டி, அவர் இப்படிப் பேசியிருக்கிருர். இவர் அப்படிப் பேசியிருக்கிருர் என்று அடிக்கடி மேற்கோள் காட்டுவதற்கு வசதியாக இருக்குமென்று எண்ணுகிருர் போலும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அங்கத்தினர் திரு. கந்தப்பன் அவர்கள் பேசும்போது பல பத்திரிகைச் செய்திகளை இந்த மன்றத்திலே படித்துக்காட்டினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பத்திரிகைச் செய்திகளை மன்றத்தில் படிக்கவேண்டுமானால் முதலில் அவைத் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும். கந்தப்பன் அவர்கள் என்னுடைய அனுமதியைப் பெற்று பத்திரிகைக் குறிப்புகளைப் படித்துக் காட்டினார். அது யார் மனதையும் வருத்தப்படச் செய்யக்கூடியச் செய்தியாக இல்லை. ஆனால் ஒரே ஆதாரமாகப் பத்திரிகைச் செய்தியைப் படிக்கக்கூடாது. ஸ்டாண்டர்டு பத்திரிகை என்று எந்தச் செய்தித்தாளையும் சொல்ல முடியாது. சில பெரிய பத்திரிகையாளர்கள் கூட தவருனச் செய்திகளை

வெளியிட்டதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் எது ஸ்டாண்டர்டு பத்திரிகை, எது ஸ்டாண்டர்டு பத்திரிகை அல்ல என்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்வது பத்திரிகை தர்மமும் அல்ல. யாரும் மறுக்கமுடியாதச் செய்திகளை பத்திரிகைகளிலிருந்து எடுத்துக் காட்டினால் ஏற்றுக்கொள்ளலாம். அதை ஏற்றுக்கொள்ள இந்த மன்றம் தயாராக இருக்கிறது. ஆனால் முரணான கருத்துக்களை பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு யாரும் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது சட்ட மன்றத்தின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

## (4) அமைச்சர் அறிக்கை

## 'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், அரசு எடுத்துள்ள முயற்சிகளும் குறித்து தொழிலாளர் நல அமைச்சர் அளித்த அறிக்கை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பி அண்டு சி மில் தொழிலாளர்கள் சில நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருவதை இம்மன்றம் அறியும். அதன் காரணமாக, அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக இன்றைய தினம் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டிருக்கிறது. அதை மன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சங்க விதி முறைப்படி தொழிற்சங்கத் தலைவர் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு வழி வகுக்கும் முறையில் சென்னை தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கணபதி அவர்களும் அவரைச் சார்ந்த நிர்வாகிகளும் இன்று காலை பொறுப்புகளிலிருந்து விலகி விட்டதால் விரைவில் சங்கத் தேர்தலை சங்க விதி முறைப்படி நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஊதிய உயர்வு பற்றி நடுவர் தீர்ப்பின்படி தொழிலாளர்களுக்கு இதுவரை தந்திருப்பது போக மீதமுள்ள தொகையை தமிழ் புத்தாண்டு தினத்திற்குள் தந்துவிடுவதாக பி. அண்டு. சி. ஆலை நிர்வாகிகள் உறுதி அளித்திருக்கிறார்கள்.

மற்ற கோரிக்கைகளை சங்கத் தேர்தல் நடைபெற்ற பிறகு, சங்க நிர்வாகிகள் தங்களிடம் கலந்து பேசி, தீர்வு காணுவதற்கும் ஆலை நிர்வாகிகள் இசைந்திருக்கிறார்கள். எனவே, 'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் அனைவரும் உடன் வேலைக்குச் செல்லுமாறு தமிழக அரசு கேட்டுக்கொள்கிறது.

**திரு. ஜே ஜேம்ஸ் :** 42-வது விதியின்கீழ் நான் ஏற்கெனவே இது சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இன்னும் சபாநாயகர் முன்னால் இருந்து





கொண்டிருக்கிறது. ஆனால் அது சம்பந்தப்பட்ட அறிக்கையை இப்பொழுது அமைச்சர் அளித்துவிட்டார்கள். என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படாமல், அதற்குரிய அறிக்கையை மட்டும் வெளியிடுவது பொருத்தமாக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாநில ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் நமது நாட்டில் நடந்து முடிந்த இந்தியா பாகிஸ்தான் போரில் நல்லதொரு வெற்றியினை நமக்குத் தேடித் தந்த முப்படைத் தளபதிகளுக்கும், போர் வீரர்களுக்கும், இந்தியத் தலைமை அமைச்சரவர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதலையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா பாகிஸ்தான் போரில் நமது தமிழ் நாடு முழுவதும் மக்கள் ஓரணியாய் நின்று, நல்ல ஒத்துழைப்புத் தந்து, வெற்றிக்கு உறுதுணையாக நின்ற நமது தமிழ் நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழ் நாட்டு மக்களையும் நாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது மாநில ஆளுநர் அவர்கள் தமது உரையிலே, நமது தமிழ் நாட்டிலே குறிப்பாக கழக அரசு செய்திருக்கின்ற பல நற்பணிகளை மிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். தமது உரையில் முதலாவதாக விவசாய இலாகாவைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் 1968-69-ம் ஆண்டில் 50 6 லட்சம் டன் உணவு தானியம் விளைந்தது. ஆனால் 1971-72-ல் 73 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. இதிலிருந்து தமிழ் நாடு அரசு உணவு உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வந்திருப்பதை நாம் அறியலாம். இதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகின்றது.

> "மாடுகட்டி போரடித்தால் மாளாது செந்நெல்
> யானை கட்டி போரடிக்க தென்மதுரை".

என்று அந்தக் காலத்தில் பாடிய இந்த கவிதையை இங்கே குறிப்பிடுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று யானை கட்டி

போரடிக்காவிட்டாலும், டிராக்டர்கள் வைத்துப் போரடிக் கிறார்கள். விவசாயத்திலே உற்பத்தியைப் பெருக்குவதற்காக நவீன விதைகளான, மிகுபயன் தரக்கூடிய விதைகளான ஐ.ஆர். 5, ஐ.ஆர் 8, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22 போன்ற நெல் வகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன இந்த அரசும் தமிழக மக்களும் விவசாயத்தில் தீவிரக் கவனம் செலுத்தி, உற்பத்தியை இந்த அளவுக்குப் பெருக்கியதற்காக நாம் இந்த அரசையும் மக்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறைப்பற்றி குறிப்பிட்டுள்ளார் கள். 1966-67-ல் குறுகிய காலக் கடன் 31.41 கோடியாக இருந்தது. 1971-72-ல் 55 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1966-67-ல் நீண்டக் காலக் கடன் 2.73 கோடி என்றிருந்தது, 1971-72-ல் 21 கோடியாக உயர்ந்திருக்கிறது. மேலும் இத்துறைக்கு புத்துயிரும், புதுப் பொலிவும் அளிக்கப்பட்டு வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இதையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, மின்சார இலாகாவைப் பற்றி தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். 1966-67-ல் மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை 25,000 ஆக இருந்தது! 1971 டிசம்பர் முடிவில் 48,137 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல் 1971-ம் ஆண்டில் மின் இணைப்பு வழங்கப்பட்ட பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 63,416 ஆகும். 1972-ம் ஆண்டிற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்துவிட வேண்டுமென்ற தீவிர முயற்சியில் அரசும், மின்சார இலாகாவும் ஈடு பட்டிருக்கிறது. உள்ளபடியே இதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேபோல் தொழில் வளர்ச்சிப் பெருக்கத்தையும் இந்த அரசு நன்கு உணர்ந்து, அதற்கேற்ற வகையில் செயல்பட்டு வருகிறது. உரத் தயாரிப்புத் திட்டத்திற்காக தென் பகுதியில், தூத்துக்குடியில் ஒரு பெரிய உரத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. இந்தத் திட்டம் முடிவுற்றால் தென்பகுதி, நல்ல ஒரு வளம் கொழிக்கும் பகுதியாக, வளர்ச்சியில் சிறந்த பகுதியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இத்தொழிற்சாலை நிறுவப்படுவது மிகமிகத் தேவையான ஒன்றாகும். இதை நிறைவேற்றித் தருகின்ற இந்த அரசை நாம் பாராட்டுவதோடு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இதேபோல சேலம் இரும்பாலைத் திட்டமும் பல ஆண்டுக் காலமாக கிணற்றில் கிடந்த கல்போல எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் மத்திய அரசாங்கத்தினால் கணக்கம் காட்டப்பட்டுவருவதற்கு வருந்தும் வகையில் ஆளுநர் தம்





உரையில் கூறியிருப்பதை வரவேற்று அதற்காக அவரையும் அரசாங்கத்தையும் பாராட்டுகிறேன். சேலம் இரும்பாலை போன்ற முக்கியமான விஷயத்தில் கவனத்தைச் செலுத்தாது சிறுசிறு பிரச்சினைகளுக்கு எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து வருகிற மத்திய அரசின் போக்கு வருந்த வேண்டியதாக இருக்கிறது. இந்த அவையிலும் சரி, மேலவையிலும் சரி சிறுசிறு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகின்றவர்கள், எதிர்கட்சி உறுப்பினர்கள் இந்தச் சேலம் உருக்காலைப் பற்றி ஒன்றுமே பேசக்காணோம். மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இதற்கு அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்று இரண்டு மூன்றாண்டு காலம் ஆகியும் எந்தவிதமான முன்னேற்றமும் அங்கே ஏற்படவில்லை. இந்த அளவில் மத்திய அரசு தமிழகத்தின் மீது வெறுப்புணர்ச்சியைக் காட்டிக்கொண்டுதான் வருகிறார்கள் என்பதைப் பேரவையில் உள்ள உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழக அரசு மத்திய அரசோடு எந்த எந்த வகையில் எல்லாம் முடியுமோ அந்த அந்த வகைகளில் எல்லாம் ஒத்துப்போக முன்வந்தும் கூட தமிழக அரசை அவர்கள் மாற்றாந்தாய்க் குழந்தையாகத்தான் கருதுகிறார்கள்.

இந்த நிலையில் மாநிலங்களுக்கு இன்னும் சற்று அதிக அதிகாரம் வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரிக்கை வைத்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லாததும் பொல்லாததுமான குற்றச்சாட்டுகளையும், கற்பனைகளாக எல்லாம் எடுத்துப் பேசி வருவது மிகவும் வருந்தத்தக்கது. சேலம் இரும்பாலைத் தொழிற்சாலைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வேழவேந்தன் சொல்வது போல—எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மத்திய அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்த முன்வந்தால் அது சேலம் இரும்பாலைக்கும், நாட்டு மக்களுக்கும் செய்த நல்ல தொண்டாக அமையும், நமக்கு நல்ல பெயரையும் புகழையும் தேடித்தரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோலவே சேதுசமுத்திரத் திட்டமும் மத்திய அரசால் நீண்டநெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிற நிகழ்ச்சி—அதுவும் நாம் வேதனைப்படுகிற அளவுக்குத்தான் இருக்கிறது.

தமிழக ஆளுநர் அவர்கள் தம் உரையில் கூறிய குடிசைமாற்று வாரியம், குடி தண்ணீர் வாரியம், பல்லவ, பாண்டிய, சோழ, சேர போக்குவரத்து வாரியம், நிர்வாக சீர்திருத்தக் குழு, திட்ட ஆணைக்குழு என்பதாக பல வகைகளில் ஏற்படுத்தி, இந்த அரசு செயல்பட்டு வருவதை உண்மையில் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். படித்தவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம், கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஆகிய பல முன்னேற்றமான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருவதை நாம் காண்கிறோம். அப்படி எல்லாம்

இருந்தும் இந்த அரசைப் பாராட்டாது சிறுசிறு விஷயங்களுக்கு எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து எதிர்க்கட்சிக்காரர்கள் பேசி வருவது வருந்தத்தக்கதாகும்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றி இங்குள்ள மாண்புமிகு அங்கத்தினர்களுக்கும். முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றாகத் தெரியும். முதுகுளத்தூர் என்று சொன்னால் பொருளாதாரத் துறையில் மிகமிகப் பின்தங்கிய நிலையில் உள்ள பகுதி என்பது அனைவரும் அறிந்ததே. நீண்ட நெடுங்காலமாக பாகிஸ்தான் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வங்க மக்களைப் போல காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அந்தப் பகுதி மக்கள் பலவிதமான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். எது எதற்கோ அவசரத் தீர்மானம் கொண்டுவருகிற சிண்டிகேட் உறுப்பினர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கிற சிண்டிகேட் உறுப்பினர்கள் அவர்களுடைய ஆட்சியிலே கண்ணைக் கட்டி 17 பேர்களைச் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள் எங்கள் பகுதியில் என்பதை யாரும் மறக்க முடியாது. இப்போது இந்த ஆட்சியில் தொட்டதற்கு எல்லாம் நீதி விசாரணை என்று போடுகிறார்களே, அப்போது அந்த நிகழ்ச்சியைப் பற்றி நீதி விசாரணை கோரியபோது அதை ஏற்படுத்த முன்வந்தார்களா? இப்போது சிம்சன் தொழிலாளர் விஷயமாக மத்திய அமைச்சர் திரு. மோகன்குமாரமங்கலம் கருத்துத் தெரிவிக்க இங்கு வருகிறாரே. அப்போது மத்திய அமைச்சராக இருந்த கோவிந்த வல்லபபந்த் அவர்கள் கொசுவைப்போல நசுக்கிப்போட வேண்டும் என்று சொன்னார். அது அன்றிருந்த ஜனநாயக ஆட்சி. இன்றையதினம் எந்த அளவுக்கு ஜனநாயக மரபுகளுக்கு மதிப்பு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து பார்க்கவேண்டும். இந்த அரசு சாதாரண பிரச்சினைக்குக் கூட விசாரணை செய்ய நீதிபதியைப் போடுவதற்குத் தயங்குவது இல்லை. தொழிலாளர்களுடைய பிரச்சினை என்றால் உடனடியாக அவர்களிடையே பேசி ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த முன்வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவர் முத்துராமலிங்க தேவரை அந்தப் பகுதி மக்கள் பின்பற்றினார்கள் என்பதற்காக அந்தப் பகுதி பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அவருடைய பெயருக்கு முதல் எழுத்து 'மு', அவருடைய தந்தையாருக்கு முதல் எழுத்து 'உ' தேவரின் முன் எழுத்து என்ற காரணத்தினால் முதுகுளத்தூரும், உசிலம்பட்டியும் அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சியால் மிக மிகப் பிற்போக்கான நிலையில் வைக்கப் பட்டன. இப்போதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு கவனம் செலுத்தி அந்தப் பகுதிக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறது. அந்தத் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதே நேரத்தில் முதுகுளத்தூர் தொகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிறைவேற்றித்தரக் கோருகிறேன். பழைய நாராயணக்காவேரி, மலட்டாறு, கஞ்சம்பட்டி கால்வாய், கிருதமால் நதி வழியாக வைகைத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம். பரளையாறு திட்டம், கூத்தங்கால் திட்டம் முதலியவை களையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த அரசைத் தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே முதுகுளத்தூர், ஆப்பனூர், அபிராமம், கமுதி தரைக்குடி மண்டலமாணிக்கம், சாயல்குடி ஆகிய கண்மாய்களை D.C.R. திட்டத்தில் நிறைவேற்றித்தர வேண்டும் என்றும் கோருகிறேன்.

அந்தப் பகுதி சாலைகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. பாமக்குடி கீரந்தை சாலை முழுவதும், உத்தரகோசமங்கை சாலை முழுவதும், இதுபோல பல ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் மேம்படுத்தித்தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உப்புத் தொழிற்சாலை ஒன்று வாலிநோக்கம் மாரியூர் பகுதியில் ஏற்படுத்தும் திட்டம் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. அது போன்ற பின்தங்கிய பகுதியில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால்தான் அந்தப் பகுதி முன்னேற்றம் அடைய வாய்ப்பு ஏற்படும். தமிழக போக்குவரத்து மட்டுமல்ல, வேறு எந்த தனியார் போக்குவரத்து துரித வண்டி அங்கே கிடை யாது. இராமநாதபுரம்—நாகர்கோயில் துரித வண்டியைக் கூட 2 மாதங்களுக்கு முன் நிறுத்திவிட்டார்கள். திருச்சி—தூத்துக்குடி வண்டியும் நிறுத்தப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறை அவற்றுக்கு எல்லாம் மீண்டும் அனுமதியை வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் மறவர்கள் நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். கள்ளர் ரிக்ளமேஷன் திட்டத்தைப்போல், மறவர் புனர்வாழ்வு திட்டம் ஏற்படுத்தி ஒரு சிறப்பு அதிகாரியை நியமனம் செய்து முதுகுளத்தூர் பகுதியை அபிவிருத்தி செய்ய ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து. பேச அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*** திரு. கே. அரங்கநாதன் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் இன்று நாட்டுக்கு தேவையான நம்முடைய விவசாயம் முன்னேறியிருப்பதையும், பொருளாதாரத் துறையில் விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு நம் அரசு என்ன என்ன செய்திருக்கிறது என்பதையும் கூறியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அடுத்து கோவையில் இருக்கிற டெக்ஸ்டூல் கம்பெனியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் ஏறத்தாழ 2,500 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அந்தக் கம்பெனி செயல்படாமல் இருந்ததனால் 2,500 தொழிலாளர்களின் குடும்பங்கள் எவ்வாறு கஷ்டப்பட்டன என்பதை நான் நேரில் பார்த்து இருக்கிறேன். அவர்களுக்கு வாழ்வு அளித்த நமது கலைஞர் அவர்களை இன்றையதினம் அவர்கள் எவ்வாறு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

அடுத்து பஞ்சாலை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்து பஞ்சாலைகளை நம்முடைய அரசு மேற்கொண்டிருக்கிறது. இதிலே பணியாற்றுகின்ற கிட்டத்தட்ட, ஆறாயிரம், ஏழாயிரம் தொழிலாளர்கள் இருப்பார்கள். அவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் நம்முடைய அரசையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறார்கள், நம்முடைய அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளை வரவேற்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் வளர்ச்சிக்காக சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி நம்முடைய அரசு பல நன்மைகளைச் செய்து வருகிறது. தொழில் வளர்ச்சிக்காக மூலப்பொருள்களை ஏற்படுத்தித் தருகிறது. தொழில் வளர்ச்சிக்காக தேவையான கடன்களையும் கழகம் வழங்கிக்கொண்டிருக்கிறது. தொழில் துறை நல்ல முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அதற்காக இந்த அரசையும், நம்முடைய டாக்டர் அவர்களையும் பாராட்டி, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இளைஞர் அணி ஒன்றை அமைத்திருக்கிறது இந்த அரசு. வேலையில்லாத பட்டதாரிகளுக்கு இதன் மூலம் வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது.

அடுத்தபடியாக, ஓராண்டுக் காலத்திலே 48,137 கிராமங்களுக்கு நம்முடைய அரசு மின் இணைப்பு கொடுத்திருக்கிறது. நம்முடைய தமிழக அரசு எல்லாத் துறைகளிலும் முனைந்து செயல் பட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர், கோவையிலே நடைபெற்ற கூட்டத்தில் பிரிவினையைத் தூண்டி நானும், நண்பர் கந்தப்பனும் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். அந்தக் கூட்டத்தில் பிரிவினை வேண்டுமென்று நாங்கள் பேசவில்லை. நாட்டுப் பிரிவினையை எங்கள் கட்சியின் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கைவிட்டு விட்டார்கள். அண்ணாவிற்குப் பின்னாலே முதலமைச்சராக வீற்றிருக்கின்ற டாக்டர் அவர்களும் பிரிவினையை விட்டுவிட்டு மாநில சுயாட்சி வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். அதைத் தான் நாங்கள் கேட்கிறோம். ஏன் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகின்ற வகையில் பேசினோம். வங்காளத்தில் புரட்சி செய்தார்களே, அப்படி நாங்கள் தனி நாடு



கேட்கவில்லை. நாங்கள் கேட்பது மாநில சுயாட்சி. பொது
மக்களுடைய நன்மைக்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம்,
ஏன் கேட்கிறோம் என்பதற்கான விளக்கங்களைத் தந்து ஆதரவு
கேட்டோம். இதற்கு எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும்
எங்களை பிரிவினைவாதிகள் என்று சொன்னார்கள். எல்லாக்
கட்சியைச் சேர்ந்தவர்களும் மூடிய பஞ்சாலைகளைத்
திறக்காததற்குக் காரணம் இந்த ஆட்சிதான் என்று
கூறுகிறார்கள். பஞ்சாலைகளைத் திறந்து நடத்த பண உதவி
தேவை. நாங்கள் டெல்லியில் பண உதவி கேட்டோம்.
எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்டுக்கொண்டு செய்ய
வேண்டிய நிலைமை இருக்கிறது. இது சரியா, என்றுதான்
பேசினோம். ஆனால் பத்திரிகைகளில் பிரிவினையை மட்டும் போட்டு
மற்ற செய்திகளை விட்டுவிட்டார்கள். பத்திரிகைகளில் வருவது
எல்லாம் உண்மை என்று நம்புகிறீர்களா ?

தமிழகத்தில் இருக்கின்ற அரசு மக்களுக்காக இருக்கின்ற
அரசு. மக்கள் நன்மைக்காகவே இங்கே ஆட்சி செய்கிறார்கள்.
எந்தப் பெயர் வைத்து அழைத்தால் என்ன ? யாரோடு
ஒப்பிட்டால் என்ன ? எங்களுடைய தலைவரை முஜிபுர் ரஹ்மான்
அவர்களுடன் ஒப்பிட்டுக்கொள்ள நாங்கள் விரும்புகிறோம்.
எங்கள் தலைவர் இப்படி இருக்க வேண்டுமென்று நாங்கள்
விரும்புகிறோம். மாற்றுக்கட்சிகள் எங்கள் தலைவரை இப்படித்
தான் நீங்கள் அழைக்க வேண்டுமென்று சொல்வது எங்களை
எப்படிக் கட்டுப்படுத்த முடியும். கோவையில் பேசிய
கூட்டங்களில் எங்கள் தலைவர் அவர்களை, டாக்டர் அவர்களை
என்ன என்ன பேசினார்கள் ? இப்படி மாற்றுக் கட்சியினர்
பேசலாமா ! நாங்கள் பேசியதெல்லாம் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் வேண்டும் என்பதுதான். நாங்கள் பிரிவினையைப்
பற்றிப் பேசவில்லை.

அடுத்தபடியாக, படி அரிசி விலையைப் பற்றிச் சொன்னார்கள்.
கோவை மாவட்டத்தில் குறைந்த விலையில்தான் விற்கப்படுகிறது.
நாங்கள் குறைந்த விலையில் அரிசி வாங்குகிறோம். தொழிலாளர்கள்
இதை உணருகிறார்கள். அவர்கள் எல்லோரும் இந்த அரசைப்
பாராட்டுகிறார்கள். மற்ற கட்சிக்காரர்கள் எப்படியாவது இந்த
அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தின்
அடிப்படையில், பேசி வருகிறார்கள். கோவை மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் கூட்டங்களைப் போட்டு
இப்படி தாறுமாறாகப் பேசி வருகிறார்கள். ஆனால். ஐந்து
பஞ்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களும் அவர்
களுடைய குடும்பத்தினரும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.
இந்த அரசு தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிற அரசு. நான்
தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வெற்றி பெற்று வந்திருப்பவன்.
எல்லாத் தொழிலாளர்களும் இந்த அரசை மனதாரப்
பாராட்டுகிறார்கள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் லே-அவுட் பிரச்சினை நீண்ட காலமாக இருந்துவருகிறது. நான் முதலமைச்சர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 40 லே-அவுட்டுகள் எந்தவிதமான நடைபாதை வசதியும், விளக்கு வசதியும், மற்ற வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிவாழ் மக்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் நகரமன்றத்திற்கு வரியைச் செலுத்தி வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே அதிகக் கவனம் செலுத்தி இந்தக் குறையைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. கோவையில் தண்ணீர் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கு நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை வலியுறுத்தி சில வார்த்தைகளைப் பேச முன் வந்திருக்கிறேன். ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில், இந்தியா-பாகிஸ்தான் போர் பற்றிக் குறிப்பிட்டு, பாகிஸ்தானுக்கு ஆதரவாக அதற்கு ஊக்கம் கொடுத்துக்கொண்டிருந்த தேசங்களின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல், அதற்காக வருந்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பாகிஸ்தானுக்கு ஊக்கம் கொடுத்தவர்கள் யார் என்பது சகலருக்கும் தெரிந்த விஷயம். அமெரிக்காவும், மாசேதுங் தலைமையை சேர்ந்தவர்களும்தான் பாகிஸ்தானுக்கு பூரணமாக ஆதரவு கொடுத்து வந்தார்கள். இதனால் கோடிக் கணக்கான அளவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, ஆளுநர் அவர்களின் உரையில், இந்திய அரசு நமக்குக் கொடுத்திருக்கிற கடன்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இது குறித்து சகல மாநிலங்களைக் கொண்டு ஒரு ஆராய்ச்சிக் குழு அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் கடன்களைச் சுமந்துகொண்டிருக்கிறோம். அதை ரத்து செய்வது தான் நியாயம். தமிழக அரசு மத்திய அரசை அணுகி, தமிழகத்தில் புதிய திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக இன்றையதினம் கிராமங்களில் விவசாயிகள் பெரிய அளவில் கடன்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே,





கடன்களை ரத்து செய்வதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்தாக
வேண்டும். நம்முடைய அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தின்
தலைமையில் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகளாகின்றன. நிலச்
சீர்திருத்தம் பொறுத்தவரையில் இந்த அரசு அதிக அக்கறை
கொண்டிருந்தாலும்கூட 15 ஏக்கர் என்று வரம்பு கட்டியிருக்
கிறார்கள். உண்மையிலே 30 ஏக்கர் 15 ஏக்கர் ஆகியிருக்கிறது.
காங்கிரஸ் ஆட்சி காலத்தில் என்ன நடைமுறை அனுஷ்டிக்கப்
பட்டதோ அதேதான் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. சப்
ரிஜிஸ்திரார் ஆபிஸில் நிலத்தை தவறாக எழுதி வைத்துக்கொண்டு
சட்டத்தை சிலர் மீறி வருகிறார்கள். அரசாங்கத்தினுடைய
நோக்கம் என்னவென்றால், நிலச்சீர்திருத்தம் கொண்டுவந்து,
உபரியாக இருக்கும் நிலத்தை எடுத்து ஏழை விவசாயிகளுக்குக்
கொடுப்பதன் மூலம் உழவர்களின் வருவாய் பெருகும், கிராமப்
பொருளாதாரம் வளரும், கிராமம் செழிப்பு அடையும் என்பது
தான். இன்றையதினம் கோவில்கள், மடங்களுக்கு இருக்கக்கூடிய
நிலங்களை சட்டத்திற்குள் கொண்டுவந்து எடுத்துக்கொள்வது
மிக மிக உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதையும் தமிழக அரசு ஆலோசனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்வதன்
மூலமாக கிராமங்களில் இருக்கக் கூடிய கோடிக்கணக்கான மக்கள்
பலனடைவார்கள். அவர்கள் இந்த அரசிடம் விஸ்வாசம்
உள்ளவர்களாக இருப்பார்கள், யார் எதிர்த்தாலும் சரிதான்.
கிராம மக்களுக்குப் பொருளாதார வசதிகள் கிடைக்கக்கூடிய
வகையிலே, நிலம் கொடுக்கக்கூடிய வகையிலே சட்டங்களை
வேகமாகவும் தைரியமாகவும் செய்வோமேயானால் மக்கள் இந்த
அரசை ஆதரிப்பார்கள், யார் எதிர்த்தாலும் ஒன்றும் செய்ய
முடியாது. அப்படியில்லாமல் காங்கிரஸ் இருந்தது மாதிரி
இருந்தால், காங்கிரஸ் போனதுபோல் போகவேண்டிய நிலைமை
தான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்தில் உழக்கூடியவர்கள்தான் 70 லட்சம் டன்கள் வரை
உணவு உற்பத்தி செய்திருக்கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடிய
விவசாயிகளுக்கு அந்தப் பலன் கிடைக்கிறதா என்று ஆராய்ந்து
பார்த்தால் கிடைக்கவில்லை, வாங்கிப் பயன்படுத்துவோருக்கும்
கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் கிடைக்கவில்லை, அவர்களும்
அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது.
வர்த்தக சூதாடிகள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்
கிறார்கள். உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கும் பயன்படுத்தக்
கூடியவர்களுக்கும் இடையில் உள்ள தரகு முறையை
அனுமதிக்கக் கூடாது. அரசாங்கமே அதனை ஏற்றுக்கொள்ள
வேண்டும். கொள்முதல் துறையையும், விநியோகம் செய்யக்
கூடிய துறையையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய
நிலைமையிலேதான் மக்களுக்கு எல்லாம் நியாயமான விலையில்
கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 சனவரி 29

விலைவாசி உயர்வு பற்றிச் சொன்னால் எல்லா விலைகளும் உயர்ந்து இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையிலே அரசு முயற்சிகள் செய்யவேண்டும். சாதாரணமாக எல்லாப் பொருட்களுமே மக்களுக்கு நியாய விலையில் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அவையும் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

அரிசனங்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய முன்னேற்றத்தில் இந்த அரசு அதிக அக்கறை எடுத்துக்கொண்டாலும் பல்வேறு காரியங்களை எடுத்துக்கொண்டாலும் இன்னும் அவர்களுடைய முன்னேற்றம் எதிர்பார்த்த அளவில் இல்லை என்று சொல்லலாம். இன்றைய தினம் குடியிருப்புக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வருவாயும் இல்லை. வேலையும் முழு நேர வேலை கிடைப்பது இல்லை. எனவே அவர்கள் நல்லமுறையிலே முன்னேற்றம் அடையக் கூடிய முறையிலே அரசு ஆந்திரப் பிரதேசத்தில் ஏற்படுத்தியிருக்கிற மாதிரி ஒரு நிதியுதவிக் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி வீடுகள் கட்டிக்கொள்கின்ற உதவி, மேலும் பல உதவிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அரிசனங்களின் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. தமிழக அரசு வருமான வரம்பை இப்பொழுது உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரணமாக அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆசிரியராக இருந்தாலும்கூட அந்த உதவிப் பணம் கிடைப்பதில் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அந்த வருமான வரம்பை ஐந்து ஆயிரம் என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுப்பதன்மூலம் சகல பேர்களுக்கும் அந்த உதவிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

கீழ்த்தஞ்சையிலே விவசாயத் தொழிலாளர்கள் நியாயக் கூலி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூலியே போதுமான அளவுக்கு அவர்களுக்கு உதவிசெய்யவில்லை. இந்த நிலைமையில் இன்றைய தினத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்த்தால் அது மிகவும் குறைவானது. தஞ்சை மாவட்டத்தில் உள்ளதைப்போன்று தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய விவசாய தொழிலாளர்களுக்கும் நியாயமான கூலி கொடுக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

இறுதியாக, ஒன்றுகூறி முடிக்கலாம் என நினைக்கிறேன். நான் என்னுடைய திருத்தத்திலே எஸ்.எம்.டி. சம்பந்தமாகக் கூறியிருக்கிறேன். நேற்றைய தினம் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையிலே தொழிற்சங்கத்தோடு பேசி தொழிலாளர்களை மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாக அரசின் சார்பிலே வாக்களிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1972 சனவரி 29]

**திரு. மா. வெ. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய சிண்டிகேட் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் ஆளுநர் உரையிலே அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கப்படவில்லை, நோக்கம் விளக்கப்படவில்லை, எடுத்துச் சொல்லப்படவில்லை என்று தெரிவித்தார்கள். மிக அருமையான முறையிலே சிறந்தவகையிலே சுருக்கமாக குறள் போல் அரசாங் கத்தினுடைய நோக்கம் என்ன, என்பதுபற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. ஏழை எளிய பாமர மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதுதான் ஏழை எளிய பாமர மக்களின் வாழ்க்கையை ஏற்றமிகு வாழ்க்கையாக, எழில்மிகு வாழ்க்கையாக ஆக்குவதுதான் இந்த அரசினுடைய நோக்கம், அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதுதான் இந்த அரசினுடைய நோக்கம் என்று தெளிவாக கொள்கை விளக்கமாக, நோக்க விளக்கமாகக் கூறியிருந்தாலும்கூட அவர்கள் விளக்கம் சொல்லவில்லை என்று அவர்கள் சொல்வது பொருத்த மற்றதாகும். இந்த நாட்டிலே 7? சதவீதம் பேர்கள் நடுத்தர ஏழை எளிய பெருங்குடிமக்களாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றமடையவேண்டும், அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கழக அரசு எடுத்து இருக்கிற முயற்சிகளைப்பற்றி புள்ளிவிவரங்களோடு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே இருந்தது, விவசாயி கேட்கின்றபோது உரம் கிடைக்காது, கிடைத்தாலும் நிர்ணயித்த விலைக்கு நியாய விலைக்கு கிடைக்காது என்ற நிலை இருந்தது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே. ஆனால், இன்றைய தினம் விவசாயிகள் கேட்கின்ற உரம் எவ்வளவு வேண்டுமானாலும் நிர்ணயித்த விலைக்கு நியாய விலைக்கு, காலதாமதமின்றி தரமான உரம், வீரிய விதைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. பூச்சிக் கொல்லி மருந்துகள் தாராளமாகக் கிடைக்கின்றன. இது மட்டுமா என்று கேட்டால் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன் என்ற முறையிலே அவர் களுக்கு 1966-67-ஆம் ஆண்டிலே 31.44 கோடியாக இருந்ததை படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு 55 கோடியாக உயர்த்திக் கொடுக்கப்படுகின்றது.

அது மட்டுமல்ல. இந்த அரசினுடைய அரும்பெரும் சாதனைகளை நிலவள வங்கிகள் மூலமாக கேட்கின்ற விவசாயிகளுக்கு எல்லாம் அத்தனை பேர்களுக்கும் வெட்டப்படுகின்ற கிணறு களுக்கு எல்லாம் உடனே மூன்று மாதங்களுக்குள்ளாகக் கூட்டுறவுத் துறையின் மூலமாக—முன்பு இருந்த நிலைமையை மாற்றி, ஆபத்துக்குதவாத பிள்ளை, அரும்பசிக்குதவாத அன்னம்

என்ற முறையில் இருந்த கூட்டுறவுத் துறையை மாற்றி—அதில் இருந்த சகல சிக்கல்களையும் எடுத்து விதிமுறைகளைத் தளர்த்தி உடனடியாக நில வள வங்கிகள் மூலமாக கடன்கள் கிடைக்கக் கூடிய வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே சூதவை வங்கி என்று பெயர் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெயரை மாற்றிய போது எதிர்க்கட்சிக்காரர்கள் கிண்டலும் கேலியும் செய்தது உண்டு. அந்தப் பெயரைத் திருத்தி முன் கடன்கள் அடைப்பதற்காகப் பெரும் விழுக்காடு கொடுக்கப்பட்ட நிலைமையை மாற்றி புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்து வதற்கும் நிலச்சீர்திருத்தங்கள் செய்வதற்கும் இயந்திரங்களால் விசையேற்றம் அமைப்பதற்கும் 1967-ஆம் ஆண்டிலே 2 கோடியே 73 லட்சம் கொடுக்கப்பட்டு வந்தத் தொகையைப் படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு 21 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறது இந்த அரசு. அதிலும் குறிப்பாகவும் சிறப்பாகவும் முன்பிருந்த அரசுகளெல்லாம் ஒரு மாவட்டத்திற்குப் புதியதாகக் கிணறுகள் வெட்டினால் இத்தனை கிணறுகளுக்குத்தான் மானியம் என்ற ஒரு வரம்பை நிர்ணயித்தது. ஆனால் நம்முடைய அரசு, வெட்டப்படும் புதிய கிணறுகள் எத்தனையாகயிருந்தாலும், விதிமுறைகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் ஏற்பயிருந்தால் ஒவ்வொரு கிணற்றிற்கும், ஒவ்வொரு விவசாயிக்கும் 500 ரூபாய் மானியத்தொகை என்று அறிவித்திருப்பது இந்த அரசுதான். ஆகவே இத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் இந்த அரசு எடுத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே இந்த அரசு, இதற்கு முன்பிருந்த 1947-ம் வருஷத்திலிருந்து 1967-ஆம் வருஷம் வரையிருந்த அரசுகள் செய்த சாதனையைவிட, அதற்கு முன்பிருந்த அன்னிய ஆட்சி செய்த சாதனையைவிட மிக அதிகமாகச் சாதனைகளைச் செய்திருக்கிறது என்பதை ஆளுநர் அவர்களின் உரை தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 3.17 இலட்சம் விசையேற்றங்களுக்கு இந்த அரசு இணைப்புக் கொடுத்திருக்கிறது. ஆனால் நான் ஏற்கெனவே கூறியதைப்போல் அதற்கு முன்னிருந்த அந்நியர் ஆட்சியிலிருந்து நம்மவர் ஆண்ட 1967 வரையிலும் கொடுத்த மின் இணைப்பு 2,57,000. ஆனால் ஐந்து ஆண்டுகளிலே இந்த ஆட்சி கொடுத்த மின் இணைப்புகள் 3,17,000. ஆகவே இத்தகைய சீர்திருத்தங்களையெல்லாம் செய்து விவசாயத்திலே மறு மலர்ச்சி காண, புத்துணர்ச்சி உண்டாக, புது வேகம் உண்டாகும் வகையில் 1967-லே 48 இலட்சம் டன்னாகயிருந்த உணவு உற்பத்தி இன்றைக்கு 73 இலட்சம் டன்னாக, ஏறத்தாழ 50 சதவிகிதம் உணவு உற்பத்தியில் அதிகரிக்கும் நிலையைப் பார்க்கிறோம்.

அடுத்தது சேலம் இரும்பாலைத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் எனக்கு, நம் மாநிலத்தின் முன்னாள் ஆளுநராகயிருந்த திரு. விஷ்ணுராம் மேதி அவர்களின்



நினைவும் நம்முடைய முதல்வர் அவர்களின் நினைவும்தான் மாறி மாறி வருவது வழக்கம். அவர்கள் நம்முடைய மாநிலத்தில் ஆளுந ராக வருவதற்கு முன்னால் அசாம் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தார்கள். சுமார் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இல்லை என்றவுடன் முதல்வர் பதவியைத் துறப்ப தாக அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து சட்ட மன்ற உறுப் பினர்களும் தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறப்பதாக அறிவித்தார்கள். அதற்குப்பிறகு எண்ணெய் சுத்தி கரிப்பு ஆலை கிடைத்தது. அதைவிட மிகவும் வீர தீரமாகச் செயல்பட்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதிக்கப் பட்ட நேரத்தில் சேலம் இரும்பாலை உண்டு என்று சொன்னால் தான் தமிழகத்தின் சார்பில் திட்டத்திற்குச் சம்மதம் உண்டு, இல்லை என்றால் இல்லை என்று இரண்டே வார்த்தைகளைச் சொல்லி சேலம் திட்டத்தைப் பெற்றார்கள். (மணியடிக்கப்பட்டது).

துணைத் தலைவரவர்களே, சர்க்கரை ஆலை போன்ற இரண்டு மூன்று எனது தொகுதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி சொல்லி முடித்துக்கொள்ள எண்ணுகிறேன், அதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

இதேபோன்று பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இருக்கிறது. கவர்னர் உரையில் இது சொல்லப்படவில்லை, அது சொல்லப்பட வில்லை என்றெல்லாம் சொன்னார்கள். பிப்ரவரி மாதம் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் எங்கள் பகுதிக்கு வரவிருக்கிறார்கள். சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் அளவில் அமையவிருக்கும் சர்க்கரை ஆலை பிப்ரவரி மாதத்தில் உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது, தர்மபுரியில் அது அமையவிருக்கிறது. சுமார் ஒன்றே கால் கோடி ரூபாய் அளவில் சின்னாறு திட்டத்தின் கால்கோள் விழா 30 லட்சத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவை களெல்லாம் உரையில் சொல்லப்படவில்லை என்றாலும் இவைகளை யெல்லாம் ஆரம்பிக்கவிருக்கும் திட்டங்கள்.

தொழில் அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். தர்மபுரி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை அமையும் நிலையிலே அங்கிருக்கும் கரும்பின் சர்க்கரை சத்து பத்தரை சதவிகிதத்திலிருந்து பன்னிரண்டு சதவிகிதம் வரையிருக் கிறது. அகில இந்திய ரீதியில் இருக்கும் சராசரி சர்க்கரை சத்தின் அளவு ஏழு சதவிகிதம். ஏற்கெனவே அங்கிருந்த நிர்வாகி கள் 2,500 ஏக்கர் என்ற அளவிற்கு விவசாயிகளிடத்தில் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். வெல்லத்திற்கு விலை கட்டுப்பாடாகயிருந்த

காரணத்தால் ஆலையும் தாமதித்து நடக்கின்ற அல்லது உற்பத்தி தொடங்குகின்ற நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தாலும் பல விவசாயிகள் ஒப்பந்தம் செய்திருந்தாலும் வெல்லம் காய்ச்சி விட்டார்கள். இங்குமங்கும் இருக்கக்கூடிய கரும்புகள் ஆலைகளுக்கு வர வேண்டும். டன் ஒன்றுக்கு 80 ரூபாய் என்று அகில இந்திய ரீதியில் அங்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நிர்வாகமே வெண்டிச் சத்தத்தைத் தரவேண்டும், நிர்வாகமே அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், விவசாயிகள் மேல் அந்தப் பளு இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், அரசின் அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். அதைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்களே, மேதகு ஆளுநர் அவர்களால் இங்கே நிகழ்த்தப்பட்ட உரையினுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக ஒருசில கருத்துக்களைச் சபைமுன் வைக்க நினைக்கின்றேன்.

நமது நாட்டின் மாபெரும் வெற்றியைப்பற்றி, அன்மைக்காலத்தில் செருக்களத்தில் நம் நாடு அறுவடை செய்த செழிப்பைப்பற்றி, நம்முடைய நாடு உலக அரங்கில் இன்று பெற்ற இந்த மாட்சியை, உயர்வைப்பற்றி, பெருமையைப்பற்றி, ஏற்றத்தைப்பற்றி, இந்த ஏற்றத்தையும் பெருமையையும் பெறுவதற்கு இந்திய மக்கள் ஒன்றிணைந்து, ஒருமித்த கருத்துடன் ஆற்றிய அரும்பெரும் தியாகங்களைப் பற்றியும், அந்தச் செருக்களத்தில் செய்த மாபெரும் வீர தீரச் செயல்களைப்பற்றியும் புகழ்ந்து பாராட்டி ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே சாலச்சிறந்தது என்பதை இங்கே கூறி அந்தக் கருத்துக்களுக்கு நானும் என்னுடைய பாராட்டினையும், உணர்ச்சிகளையும் அந்தக் கருத்தோடு சேர்த்து என்னுடைய உரையை நான் மேற்கொண்டு தொடர்கிறேன்.

அருமைத் தலைவரவர்களே, இங்கு பேசிய கருத்துக்களில் மிக முக்கியமான கருத்து, மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவுகள் எப்படி இருந்திட வேண்டும், இந்த உறவுகளின் அடிப்படை எதுவாக இருந்திட வேண்டும் என்று குறிப்பாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாநிலத்திற்கும், மத்திய அரசிற்கும் இருக்கக்கூடிய உறவுமுறைகள் எப்படியிருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். ஆனால் நான் இன்று மிக வேதனையோடு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது ஒரு விஷயத்தைச் திருப்பத்திருப்பச் சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய முதலமைச்சரவர்களும், இந்த





அவையிலேயிருக்கின்ற மாண்புமிகு சில உறுப்பினர்களும்
அண்மைகாலத்தில் நடந்த கூட்டங்களில் ஒருசில கருத்துக்களைச்
சொன்னார்கள், அந்தக் கருத்துக்களின் பொருள் இதுதான், இது
தான், இதுதான் என்று திருப்பத் திருப்பச் சொன்னார்கள்.
எனக்குக்கூட வேதனையாகயிருந்தது. மாண்புமிகு உறுப்பினர்
திரு. கந்தப்பன் அவர்களும் நான் பேசியதன் கருத்து இதுதான்
என்று சொன்னார்கள். இல்லை, உங்களுடைய கருத்து இதுதான்
என்று மறுத்துச் சொல்வது எனக்கு வேதனையாக இருக்கிறது.

சுயாட்சி என்பது என்ன என்று அவர்கள் கேட்கிறார்கள்.
சுயாட்சி பற்றி அவர்களுக்குப் புரிந்திருக்கிறதோ இல்லையோ
எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய திட்டம் எனக்கு
மிக நன்றாகப் புரிந்திருக்கிறது. அவர்கள் திட்டம் என்ன
வென்றால் ஒரே கல்லிலே இரண்டு காய்கள் விழவேண்டும். அது
என்னவென்றால், இந்த மாநிலத்திலேயிருக்கும் அரசுக்கும் மத்திய
அரசுக்கும் மோதலை ஏற்படுத்த வேண்டும், அந்த மோதலின்
விளைவாக மத்திய அரசு ஏதோ ஒருவிதத்திலே ஒரு நடவடிக்
கையை இந்த மாநில அரசின்மீது எடுக்க வேண்டும். அதன்
வாயிலாக மக்கள் சக்தியை, மக்கள் உணர்ச்சியை, மக்களின்
ஆதரவை ஏகோபித்த அளவில் பெற்றிருக்கும் இந்த அரசுக்கு
விரோதமாக மத்திய அரசு ஏதாவது செய்துவிட்டால் மக்களின்
எழுச்சி மத்திய அரசுக்கு எதிராகக் கிளம்ப வேண்டும். அப்படி
ஏற்பட்டால் இந்த மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் கெட்ட
பெயர் ஏற்படும். ஆகவே இந்த நிலைமை இந்த மாநிலத்திலே மட்டு
மல்லாமல், மற்ற மாநிலங்களுக்கும் பாவி அதன்வாயிலாக
இன்றைக்கு இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பெற்றிருக்கும்
பெருமைக்குக் குறைவுகள் ஏற்பட வேண்டும். அந்த அம்மை
யாருக்கு மேலும் மேலும் உள்நாட்டுப்பிரச்சினைகள் ஏற்பட
வேண்டும் என்ற அந்த நோக்கத்தோடுதான் நம்முடைய அருமை
நண்பர்கள் பேசிவருகிறார்கள். அவர்களது திட்டம் எனக்கு மிக
நன்றாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, இந்தியாவிற்கு மாபெரும் துரோகத்தைச்
செய்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
இங்கே முதல்வர் கூறுகிறார்கள், அமைச்சர்கள் கூறுகிறார்கள்,
உறுப்பினர்கள் சொல்கிறார்கள், மாநில சுயாட்சி என்பது
மாநிலங்கள் மாநிலங்களாக இயங்குவதற்குத் தாங்கள் கோருகின்ற
உரிமைதானே தவிர இந்திய சம்ஷ்டியை விட்டு தனி நாடு
கேட்பது அல்ல என்று திருப்பித்திருப்பிச் சொல்லும்பொழுதும்
அப்படிக்கூறினால், வெளிநாட்டுக்காரர்கள், இந்தியாவிற்கு
விரோதிகள், பார்த்தீர்களா, பார்த்தீர்களா, அங்கே இந்தியாவிலே
ஒரு மாநிலம் இருக்கிறதாம், அந்த மாநிலம் தனி நாடு கேட்கிறதாம்
என்பதாக நாங்கள் சொல்லவில்லை. அங்கேயிருக்கும் சட்டமன்ற
உறுப்பினர்களே சட்டமன்றத்தில் பேசுகிறார்கள் என்ற அளவில்

வெளிநாட்டுக்காரர்கள் பேசுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வெளிநாடுகள் எல்லாம் அறிந்து கொள்ள வேண்டும்; ஆகுல் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பெருமை குறைந்திட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இன்று இவர்கள் பேசி வருகிருர்கள். இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேம். மாநில சுய ஆட்சி என்ருல் என்ன? அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மாநில சர்க்கார் மாநில சர்க்காராக இயங்க வேண்டுமென்ற முறையில் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றுதான் திருப்பித் திருப்பி விளக்கங்களைச் சொல்லியிருக்கிருர்கள். கன்கரண்ட் லிஸ்ட் என்று வைத்திருக்கிருர்கள். ஸ்டேட் லிஸ்ட் என்று இருக்கிறது. சென்ட்ரல் லிஸ்ட் என்று இருக்கிறது. ஒவ்வொரு லிஸ்டிலும், ஒவ்வொரு பட்டியலிலும், மத்திய அரசு பற்றிய பட்டியலிலும், மாநில அரசு பற்றிய பட்டியலிலும், கூட்டாய் இருக்கின்ற பட்டியலைப் பற்றியும் அதிகாரங்கள் விரிவாக அரசியல் சட்டத்திலே வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

இன்று பார்ப்போமாஞல் சாதாரண பாலம் கட்ட வேண்டுமென்ருல் வாணியம்பாடியில் ஒரு பெரிய பகுதி; அந்தப் பகுதி இதுவரையில் சமுதாயத்தில் கண்டிருக்கின்ற ஏற்றங்களை, திட்டங்களைக் காணுது இருக்கிற பகுதி அந்தப் பகுதி. அந்தப் பகுதியைப் பாலாறு பிரித்து விடுகிறது. அதை இணைக்க வேண்டும், அந்தப் பகுதி மக்களுடைய இதயங்களை இணைக்க வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையை இணைக்க வேண்டுமென்று கோரி அந்தப் பகுதியில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று பொதுப்பணித்துறை அமைச்சரை நாங்கள் கேட்ட நேரத்தில் அவர்கள் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டுமென்று சொன்ஞர்கள். என்ன ஆச்சரியம் ! ஒரு பாலம் கட்டுவதற்கு ஒரு மாநில அரசுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையாக இருக்கிறது என்ருல், இந்த ஆட்சி மக்களுக்குத் தேவையான இந்தக் காரியங்களைக் கூடச் செய்ய முடியாது முனிசிபாலிடி நிலைமையில் இருக்க வேண்டுமென்பதையா தமிழக மக்கள் விரும்புகிருர்கள்? தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு இங்கே வந்து பேசிக் கொண்டிருக்கின்ற மாண்புக்குரிய உறுப்பினர்கள் விரும்புகிருர்கள் ?

அருமைத் தலைவரவர்களே, மாநிலங்கள் மாநிலங்களாக விளங்க வேண்டுமென்ருல், அதற்கு மாநில சுய ஆட்சி தேவை என்பதைப் பற்றி முதல்வர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிருர்கள். மாநிலங்கள் முழு உரிமை பெற்று, அதிகாரத்தைப் பெற்று மாநிலங்களாக இயங்க வேண்டுமென்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிருர்களே தவிர, தனி நாடு கேட்டு அல்ல, அல்ல



என்று தெளிவாகச் சொல்கிருர்கள். அது கல்லுக்கும் புரிந்து விடும்; அந்தக் கல்லுக்கு உள்ள உணர்ச்சி கூட இல்லாமல் சிலர் புரியாமல் இருக்கிருர்களே என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

THIRU J. JAMES : Sir, on a point of order. The hon. Member has made a most damaging statement and that must be expunged.

MR. DEPUTY SPEAKER : He did not refer to a particular person directly. . .

THIRU J. JAMES : He has referred to certain persons who have spoken on the floor of the House. He has stated that even 'Kal' can understand but those persons cannot understand it. He definitely meant those persons who spoke on the floor of this House, and he directly meant me.

MR. DEPUTY SPEAKER : He did not refer to them directly.

திரு. எம். ஏ. லத்தீப் : அருமைத் தலைவரவர்களே, இந்தச் சபையிலே பலர் பேசினுர்கள். பி.எஸ்.பி.-யைச் சேர்ந்தவர்கள் பேசினுர்கள், மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசினுர்கள். அவர்கள் எல்லாம் கூட இங்கே வீற்றிருக்கிருர்கள். 'அது என்னைத்தான் குறிக்கிறது' என்று அருமை நண்பர் வெளிப்படையாகச் சொன்னது பற்றி நிச்சயமாக நான் மகிழ்ச்சியடைகிறேன். அது அவர்களைத்தான் குறிக்கிறது என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டு வருத்தம் ஏற்படுமாஞல் அதற்காக நான் வருந்தத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, இந்த மன்றத்தின் குரலாக, தமிழ்நாட்டின் குரலாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்—மற்றப் பகுதிகளைப் பற்றிப் பேசுவதற்கு இந்த அவையில் தயாராக இல்லை. தமிழ்நாடு முடிவு செய்திருக்கிறது, தமிழ்நாட்டு மக்கள் இன்று முடிவு செய்திருக்கிருர்கள். முன்னேற்றப் பாதையில் செல்லுவதற்கு மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரக் குவியல், முறை, தடங்கலாக இருக்கக்கூடாது என்று நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்வேன். அதை இந்தச் சமுதாயம், தமிழ்ச் சமுதாயம் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்பதை நான் இன்றைக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வளவு விளக்கமகச் சொல்லியிருக்கிருர்கள்? 'மத்திய அரசு உறுதியுடன் இருக்க வேண்டும், பொலிவுடன் இருக்க வேண்டும்; வலிவுடன் இருக்கவேண்டும் என்ருல் மாநிலங்களும் நல்ல முறையில் முழுமையான அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும்; மாநிலங்களுடைய உரிமைகளை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு வழிமுறைகள் பெற்றிருக்க வேண்டும்' என்று திருப்பித் திருப்பிச் சொல்லி இருக்கிருர்கள். அதை இந்த நேரத்தில் நினைவூட்டி நான் சொல்லுகிறேன்—மாநிலங்களில் அதிருப்தி நிலவுமாஞல்—

இந்த உணர்வு இங்கு மட்டுமல்ல; நாங்கள் என்ன பேசியது; முதல்வர் அவர்கள் என்ன பேசியது; என்னைப் போன்ற அரசியல் வாதிகள் என்ன பேசியது; ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருக்கக் கூடியவர் மத்திய அரசுக்கு விரோதமாகக் குரல் கொடுக்கிறார் என்றால் மாநிலங்களின் நிலைமை என்னவாக மாறி இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு போதாதா? தமிழகத்தில் இருக்கின்ற அத்தனைக் கட்சிக்காரர்களையும் வேண்டிக் கொள் கிறேன். கட்சி மாறுபாடுகளை மறந்து தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக நம்முடைய அதிகாரங்களைப் பயன்படுத்தும் வகையில் தேவையான அதிகாரங்களைப் பெற்றால்தான் தமிழ் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தையும், ஏற்றத்தையும் காணமுடியும் என்ற வகையில் அதற்கு நீங்கள் எல்லாம் உறு துணையாக இருக்கவேண்டும்.

அதற்கு மாறாக, இந்த அரசைப் பயமுறுத்திக் கொண்டு, இந்த அரசு செய்யும் நல்ல காரியங்களுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தால்—நிச்சயமாகச் சொல்லுகிறேன்—அரசியல்வாதி களாக யாரும் இன்று தமிழ்நாட்டில் நீடித்து இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் அவையின் வாயிலாக எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லுகிறார்கள். தொழிலாளர்கள் நல்ல முறையில் இருக்கவேண்டும்; தொழிலா ளர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அவ்வளவையும் பெற்று வாழ்ந்திட வேண்டுமென்ற விருப்பத்தை யாரும் சொல் லாமல் இருக்க முடியாது. காங்கிரஸ்காரர்களுக்கும் அந்த விருப்பம் இருக்கிறது, நான் ஏற்றுக்கொள்கிறேன். இங்குள்ள ஒவ்வொருவருக்கும் அந்த விருப்பம் இருக்கிறது, ஏற்றுக் கொள்கிறேன். அவ்வளவு கடுமைச் சித்தம் படைத்தவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளவில்லை. தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனைக் கட்சிக்காரர்களும் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். தொழி லாளர்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணவேண்டும்; அவர்கள் நல்ல உரிமைகளைப் பெற்று வாழ்ந்திட வேண்டுமென்று தான் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்திற்குத் தடையாக அரசியல் வந்துவிடுகிறது. அரசியல் என்ற ஒன்று இருக்கிறது, அது வந்துவிடுகிறது.

சிம்ப்சனில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் நிச்சயமாகத் தொழி லாளர் பிரச்சினை அல்ல. தொழிலாளர்கள் உரிமைக்காகப் போராடுவதாக இருந்தால், என்னைப் போன்றவர்கள் முன்னணியில் இருப்பார்கள். எந்தப் போராட்டமும் அரசியல் காரணமாகச் செய்யப்படுமானால் அந்தப் போராட்டம் நிச்சயமாக மறு போராட்டத்தை உருவாக்கும், குழப்பம் நாட்டில் விளையும்





என்பதை நிதானமுள்ளவர்கள், நாட்டின்மீது பற்றுள்ளவர்கள், தொழிலாளர்கள் மீது அக்கறை உள்ளவர்கள் உணருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அண்மையில் நடந்தது என்ன? டெல்லியில் இருந்து ஒருவர் வருகிறார். அவர் என்ன செய்ய வேண்டும்? தகப்பன் வெளியே போயிருக்கும்போது இரண்டு பிள்ளைகள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். தகப்பன் வெளியிலிருந்து வந்தவுடன் அவனை இரண்டு போடு என்று உபதேசம் செய்துவிட்டுப் போனால் எப்படி இருக்கும். தகப்பனாக இருக்கக்கூடியவர் இரண்டு பேரையும் அழைத்து சமாதானம் செய்வாரா, அவனை இரண்டு போடு என்று சொல்லுவாரா?

டெல்லியிலே பொறுப்பிலே இருக்கிறவர்கள் தமிழ் நாட்டுக்கு வருகிறார்கள். இங்கு என்ன நடக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடக்கிறது என்பது மக்களுக்குத் தெரிகிறது. வந்தவர்கள் எந்த அந்தஸ்தில் இருந்தாலும் சரி, அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மறுபடியும் மாநில விவகாரத்திலே தலையிட்டு தங்களுடைய அரசியலை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்தில் அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் எந்த நேரத்தில்? நம்முடைய நாட்டில் ஒரு ஒற்றுமையான உணர்வு ஏற்பட்டிருக்கக்கூடிய நேரத்தில். 'நமக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டு விட்டது; போரில் வெற்றி கண்டதால் மக்கள் எல்லாம் நம்மைத்தான் ஆதரிக்கிறார்கள். இந்த ஒரு மாநிலத்திலே தான் இவர்கள் இருக்கிறார்கள்' என்ற எண்ணத்தில் திட்டம் போட்டு இங்கு வந்து தங்களுடைய கட்சிக்காரர்களை அழைத்து வைத்துக் கொண்டு இதுதான் தருணம் என்று குழப்பத்தை விளைவிக்க நினைத்தார்கள். அவ்வாறு குழப்பத்தை விளைவிக்க விரும்பினால், அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பெயருக்குப் பின்னால் எவ்வளவு 'மங்கலங்கள்' இருந்தாலும் சரி, அவருடைய அரசியல் வாழ்க்கைக்குத் தமிழ் நாட்டு மக்கள் 'மங்களம்' பாடிவிடுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள். ஒன்றரை மணிக்குள் முடித்து விடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: யானைக்கு சோளப்பொறி போட்டது மாதிரி இந்த நேரத்தில் என்னைப் பேச அழைக்கிறீர்கள் என்று சொன்னேன். இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள், முடித்து விடுகிறேன்.

பொதுமக்களுக்கு, தமிழ் நாட்டின் பாரம்பரியத்தில் வளர்ந்த நம்முடைய தொழிலாளர் தலைவர்களுக்கு இந்த அவையின் வாயிலாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அரசியலுக்குத் தொழிலாளர்களை இழுக்காதீர்கள். தொழிலாளர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? அவர்கள் வேலையின்மை, ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் வீடுகளில் எல்லாம் என்ன நிலைமையில் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஒருவன் ஒரு நாளைக்கு வேலை செய்யவில்லை என்று சொன்னால், மறு நாளைக்கு அவனுக்கு உண்ண உணவில்லை. இப்படி அடிக்கடி ஒருவிதமான காரணமும் இல்லாமல் ஸ்ட்ரைக் என்றால், அது இந்த நாட்டில் குழப்பத்தை விளைவிக்கும். அவர்களுடைய வாழ்க்கையின் மீது அக்கரை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இருக்கிறது. இந்த அவையின் மூலமாக எல்லோருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். எல்லோரும் அமைதியாக இருக்க எல்லோரும் ஒத்துழையுங்கள். இன்று காலையில் நடந்ததைச் சொல்கிறேன். நான் இங்கே சட்ட மன்றத்திற்கு வருவதற்கு எப்போதும் டாக்சியில் தான் வருவது வழக்கம். ரூ 1.50 பைசா ஆகும். இங்கே ஊர்வலம் வருகிறது, அங்கே அடிக்கிறார்கள் என்று சொல்லி எங்கெங்கோ ஊர்வலம் போய்விட்டு இங்கே வந்தவுடன் டாக்சிக்காரன் ரூ. 3.70 கொடுங்கள் என்று கேட்கிறான். எவ்வளவு நஷ்டம் பாருங்கள். ஒருவனுக்கே இவ்வளவு நஷ்டம் என்றால், பொதுமக்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும். ஆகவே நாட்டிலே, பலாத்காரத்திலும், அநார்கிசத்திலும் ஈடுபடக்கூடாது. ஈடுபட யாராவது இங்கே தயாராக இருக்கிறார்களா? (இல்லை இல்லை என்ற குரல்கள்) இங்கே யாருமே தயாராக இல்லை. அமைதி காப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையிலே கனம் அமைச்சரவர்கள், விசேஷமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். தமிழகத்திலே முஸ்லீம்களுக்கு பேக்வார்ட் கிளாஸ் கமிஷன் அறிக்கைப்படி சொல்கிறேன்—அவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு விஷயத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என்ற குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அந்தக் குறையைப் போக்க, முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய காலத்திலேயே நீங்கள் என்றால் நாங்கள் என்று ஒன்றாக இருக்கின்ற காலத்திலேயே—நாங்கள் எவ்வளவுதான் ஆஹா போட்டாலும் ஓஹோ நீங்கள் அப்படித்தான் இருப்போம் என்று இருக்கிறீர்களே—இந்தக் குறை நீக்கப்பட வேண்டும். முதலமைச்சர் அவர்களே, குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, தமிழகத்திலே அதுவும் போலீஸ் துறையிலே —தங்களிடம் இருக்கும் போலீஸ் துறையிலே—அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். சில இடங்களில் பார்த்து இருக்கிறேன். அனுபவ பூர்வமாக பார்த்து இருக்கிறேன்.





அண்மையில் ஒரு இடத்தில் நடந்தது. அங்கே இருக்கும் போலீஸ் ஆபீசர் பாரபட்சமாக நடந்து கொண்டார்கள் என்று நிரூபணம் செய்யப்பட்டு, இன்று அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1948-ல் ஒரு ஜி.ஓ. இருந்தது. அந்த ஜி.ஓ.-வை அகற்றவேண்டும். முஸ்லீம்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஜீ.ஓ. என்று சொன்னீர்களே, அது என்ன?

திரு. எம். ஏ. லத்தீப்: அதாவது சென்ற காலத்தில் சுதந்திரம் அடைந்த பிறகு ஒரு திட்டத்தை வைத்து இருந்தார்கள். அதை நான் தனியாகச் சொல்கிறேன்.

It is not in the public interest to disclose it.

THE HON. THIRU A. P. DHARMALINGAM: It is not a G.O.

திரு. எம். ஏ. லத்தீப்: அதை அகற்றவேண்டும். என்னுடைய மூதாதையார் பாண்டிய நாட்டைச் சார்ந்தவர்கள். பாண்டிய நாட்டின் வம்சத்தில் வந்தவர்கள். நாங்களும் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள்தான். கால மாற்றத்தின் விளைவாக நாங்கள் பேசும் மொழியிலே மாற்றம் இருந்து இருக்கலாம். முதலமைச்சர் அவர்களே நான் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன், முஸ்லீம்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்போது விசேஷமாக இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தவேண்டும். போலீஸ் துறையிலும், மற்ற துறையிலும் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். உருதுபேசும் முஸ்லீம்களுக்கும் எல்லா வசதிகளையும் கொடுக்க வேண்டும். நான் கூட உருது பேசுபவன்தான். ஆனால் என்னுடைய தாய் மொழி தமிழ் தான். என்னுடைய வீட்டில் பேசுகிற தமிழைக் கேட்டால் நன்றாக இருக்கும். நானும் தமிழ் நாட்டைச் சார்ந்தவன் தான். என் உடம்பில் தமிழ் ரத்தம் தான் ஓடுகிறது. என்னை தமிழன் இல்லை என்று சொல்வதற்கு பதிலாக, என்னுடைய இருதயத்தில் கட்டாரியை எடுத்துக் குத்திவிடுங்கள். என்னைத் தமிழன் இல்லை என்று சொல்லிவிடாதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உருதுபேசும் முஸ்லீம்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களையும் ஒன்று திரட்டி, அந்த முஸ்லீம்களுக்கும் எல்லா சலுகைகளையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய நல்லகாலத்திலேயே இதை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல விவகாரங்களைப்பற்றி பேசுவதாக இருந்தேன். மாண்புமிகு தலைவரவர்களே அருள் கூர்ந்து 5 மனித்துளிகள் எனக்கு நீட்டித்துத் தந்ததற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையை என்னுடைய கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக ஏற்று, அருமை நண்பர்

*திரு. கந்தப்பன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு எங்கள் ஒப்புதலைத் தெரிவித்து, பொறுப்புடன் எல்லாப் பிரச்சினைகளிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம், நாட்டிலே அமைதிகாக்க எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** *பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 31-1-1972-ம் நாள் காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.*

*பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.*

## (5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

24. Notification issued with G.O. Ms. No. 2875, Agriculture, dated the 30th October, 1971 in regard to extension of term of office of the nominated members and appointment of new members of the Dharmapuri Market Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

### B. Reports, Notifications and Other Papers

**'Nil'.**





## இணைப்பு 1

(82 ம் பக்கங்களில் 137-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) & (உ).—(1) தொழில் செய்முறை, (2) கருதுகோள், (3) ஓர்க்ஷாப் கால்குலேஷன் அண்டு சையன்ஸ், (4) எஞ்ஜினீயரிங் ட்ராயிங் ஆகிய நான்கு பாடங்களில் கீழ்க்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் அவற்றின் எதிரில் கொடுக்கப்பட்டுள்ள தொழில்களில் அனைத்து இந்தியத் தொழில் தேர்வு 1971-ம் ஆண்டு ஜுலை மாதத்தில் நடத்தப்பட்டது.

| தொழில் பயிற்சி நிலையம்/ நிறுவனம். | தொழில். |
|---|---|
| (1) | (2) |
| 1 தொழில் பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32. | (1) பொறிப் பகுதி பொருத்துபவர்.<br>(2) கைக்கடிகாரம், சுவர்க்கடிகாரம் செய்பவர்.<br>(3) பற்றவைப்பவர் (காற்றைச் செலுத்திப் பற்றவைத்தல், மின்சக்தியினால் பற்றவைத்தல்).<br>(4) கம்மியர் (குளிர்பதனம் தட்ப வெப்ப நிலையைக் கட்டுப்படுத்தல்). |
| 2 தொழிற் பயிற்சி நிலையம், அம்பத்தூர், சென்னை-53. | (1) கருமான்.<br>(2) கட்டிடம் கட்டுபவர்.<br>(3) தச்சர்.<br>(4) கம்மியர் (மோட்டார் வண்டி).<br>(5) கம்மியர் (வானொலி மற்றும் டெலிவிஷன்).<br>(6) கம்பியில்லாத் தந்தி இயக்குபவர் (இரண்டு தாள்கள் மட்டும். அதாவது தொழில் செய்முறை மற்றும் கருதுகோள்).<br>(7) கட்டிடப் படவரைவாளர்<br>(8) இயந்திரப் படவரைவாளர்.<br>} மூன்று தாள்கள் மட்டும். அதாவது— 1. தொழில் செய்முறை, 2. கருதுகோல், 3. ஓர்க்ஷாப் கால்குலேஷன் அண்டு சையன்ஸ்.<br>(9) மின்சாரப் பணியாள்.<br>(10) கம்மியர் (கருவிகள்).<br>(11) பொறிப் பகுதி பொருத்துபவர்<br>(12) இயந்திர வேலையாள் (மில்லர்).<br>(13) பற்றவைப்பவர்.<br>(14) உலோகத்தகடு வேலையாள். |

[1972 சனவரி 29

| தொழிற் பயிற்சி நிலையம்/ நிறுவனம். | தொழில். | |
|---|---|---|
| (1) | (2) | |
| 3 தொழிற் பயிற்சி நிறுவனம் (பெண்களுக்கு மட்டும்), சென்னை-17. | (1) துணி வெட்டுதல், தையல் வேலை செய்தல். | தொழில் செய்முறை, கருதுகோள் ஆகிய இரு பாடங்களில் மட்டும். |
| | (2) பூத்தையல், தையல் வேலை செய்தல். | |
| | (3) புத்தகம் கட்டுதல். | |
| | (4) நேர்த்தியான வேலைப்பாடுகள் கொண்ட துணிகளின் நெசவு வேலை. | |
| | (5) சுருக்கெழுத்து-தட்டச்சு முறை (ஆங்கிலம்). | |
| | (6) கம்மியர் (கருவிகள்). | |
| | (7) கம்மியர் (வானொலி மற்றும் டெலிவிஷன்). | |
| 4 தொழிற் பயிற்சி நிலையம், வடசென்னை, சென்னை-21. | (1) கருமான். | |
| | (2) தச்சர். | |
| | (3) கட்டிடப்பட வரைவாளர். | மூன்று தாள்கள் மட்டும். அதாவது 1. தொழில் செய்முறை, 2. கருதுகோள் மற்றும், 3. ஒர்க்ஷாப் கால்குலேஷன் அண்டு சையன்ஸ். |
| | (4) இயந்திரப்பட வரைவாளர். | |
| | (5) மின்முலாம் பூசுபவர். | |
| | (6) பொறிப்பகுதி பொருத்துபவர். | |
| | (7) இயந்திர வேலையாள் (காம்போசிட்). | |
| | (8) இயந்திர வேலையாள் (மில்லர்). | |
| | (9) பற்றவைப்பவர். | |
| | (10) அச்சுவார்ப்பவர். | |
| | (11) மாதிரியமைப்புச் செய்பவர். | |
| | (12) குழாய் பொருத்துபவர். | |
| | (13) கடைசல் பிடிப்பவர். | |
| | (14) கம்பியாளி. | |



1972 சனவரி 29]

(*a*) Yes.

(*b*) and (*c*) The All India Trade Test was conducted during July 1971 in four subjects, viz. (i) Trade Practice, (ii) Trade Theory; (iii) Workshop Calculation and Science; and (iv) Engineering Drawing in the following Industrial Training Institutes in the trades mentioned against each:—

| *Serial number and name of the Industrial Training Institute/Centre* | *Trade* | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 Industrial Training Institute, Guindy, Madras-32. | (i) Fitter, | |
| | (ii) Watch and Clock maker, | |
| | (iii) Welder (Gas and Electric)- | |
| | (iv) Machanic (Refrigeration and Air-conditioning), | |
| 2 Industrial Training Institute, Ambattur, Madras-53. | (i) Blacksmith, | |
| | (ii) Building constructor, | |
| | (iii) Carpenter, | |
| | (iv) Machanic (Motor vehicle), | |
| | (v) Machanic (Radio and Television), | |
| | (vi) Wireless operator (Only 2 papers, viz. Trade Practical and Trade Theory), | |
| | (vii) Draughtsman (Civil) | Only 3 papers viz. (i) Trade Practical, (ii) Trade Theory and (iii) Work shop Calculation and Science. |
| | (viii) Draughtsman (Mechanical). | |
| | (ix) Electrician. | |
| | (x) Mechanic (Instrument). | |
| | (xi) Fitter. | |
| | (xii) Machinist (Miller). | |
| | (xiii) Welder. | |
| | (xiv) Sheetmetal worker. | |
| 3 Industrial Training Centre, Stree Seva Mandir for Women, Madras-17. | (i) Cutting and Tailoring | Only in Trade Practical and Trade Theory. |
| | (ii) Embroidery and Needle Work. | |
| | (iii) Book-Binding. | |
| | (iv) Hand weaving. | |
| | (v) Stenography (English) | |
| | (vi) Mechanic (Instrument). | |
| | (vii) Mechanic (Radio and Television), | |
| 4 Industrial Training Institute, North Madras, Madras-21. | (i) Blacksmith. | |
| | (ii) Carpenter. | |
| | (iii) Draughtsman (Civil), | Only 3 papers, viz, (i) Trade Practical. (ii) Trade Theory and (iii) Workshop Calculation and Science. |
| | (iv) Draughtsman (Mechanic). | |

| *Serial number and name of the Industrial Training Institute/Centre* | *Trade* |
| --- | --- |
| (1) | (2) |
| (4) Industrial Training Institute, North Madras. Madras-21—cont. | (v) Electroplater. |
| | (vi) Fitter. |
| | (vii) Machinist (Composite). |
| | (viii) Machinist (Miller). |
| | (ix) Welder. |
| | (x) Moulder. |
| | (xi) Pattern-maker. |
| | (vii) Plumber. |
| | (xiii) Turner. |
| | (xiv) Wireman. |

## இணைப்பு 2.

*39-ம் பக்கத்தில் 156-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.*

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கலைநுணுக்கம் வாய்ந்த சிலைகளின் திருட்டு அல்லது அவற்றை எடுத்துக்கொண்டு வேறு சிலைகளை வைத்தல் போன்ற செயல்களைத் தடுக்க, இந்து சமய அறக்கட்டளைகள் துறையின் துணை ஆணையாளர்களுக்கும், உதவி ஆணையாளர்களுக்கும் கீழ்க்கண்ட கட்டளைகளை இந்துசமய அறக்கட்டளைகள் துறை ஆணையாளர் பிறப்பித்துள்ளார் :—

1. வெண்கலம் பிற உலோகங்களாலான ஒவ்வொரு சிலையையும் பொறுத்த வரையில், அதன் பெயர், உயரம், மற்றும் சிறப்புக் கூறுகள் குறித்து விவரமான குறிப்பு ஒன்று தயாரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு சிலைக்கும் மூன்று நிழற்பட நகல்கள் எடுக்கப்படவேண்டும். சிலைகளின் நிழற்படங்களைக் கொண்ட மூன்று நிழற்படத் தொகுப்புப் புத்தகங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதன் ஒரு நகல் ஆணையாளரின் அலுவலகத்துக்கும் ஒரு நகல் உதவி ஆணையாளருக்கு அல்லது துணை ஆணையாளருக்கும் அனுப்பப்படவேண்டும். மூன்றாவது நகல் கோயிலில் வைத்து வரப்படவேண்டும்.

2. சிலைகளின் உயரம், எடை, அதில் அடங்கியுள்ள உலோகங்கள் முதலிய விவரங்களுடன் அந்தச் சிலைகளின் நிழற்படங்கள் ஒவ்வொரு கோயிலிலும் முதன்மையான இடத்தில் மாட்டி வைக்கப்படவேண்டும்.

3. திட்டமிட்டுக் களவாடும் திருடர்கள் சிலைகளை அப்புறப்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு கடவுளர் சிலைகள் பெருமளவுக்குக் காணப்படும் கோயில்களில் காவலாள் நியமிக்கப்பட வேண்டும்.



4. கோயிலில் உள்ள பயன்படுத்தப்படாத கடவுள் சிலைகள், இக்காரியத்திற்காக ஒவ்வொரு துணை ஆணையாளரின் கோட்டத் திலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மைய இடத்தில் வைக்கப்பட வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட கோயில்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் கொண்ட அறை அல்லது கட்டிடத்துக்கு வகை செய்யும்படித் துணை ஆணையாளர்களும், உதவி ஆணையாளர் களும் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலைகள் வைக்கப்பட் டிருக்கும் இடங்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

5. அறங்காவலர்கள், கடவுளர் சிலைகளைத் திருடர்கள் களவாட அச்சப்படும்படி பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

6. கடவுளர் சிலைத்திருட்டு குறித்த வழக்கு காவல்துறைக்கு அது குறித்த முழு விவரங்களுடன் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். கோயில் பணியாளர் யாருடைய கவனமின்மையால் இத்திருட்டு நடைபெற்றதோ அவர்மீது உடனடியாக நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கடவுளர் சிலைத் திருட்டு குறித்து புலன் விசாரணைப் பணி களுக்கென்று காவல் துறை சிறப்புப் பணியாளர்களும் செயல் பட்டு வருகின்றனர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## திங்கட்கிழமை, 1972 சனவரி 31.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திருமதி ஜகதம்பாள் வேலாயுதம் அவர்கள்
மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜெயங்கொண்டான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் 1962-லிருந்து 1967-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திருமதி ஜகதம்பாள் வேலாயுதம் அவர்கள் 29—1—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்துவிட்ட அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(அவையினர் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

### 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Upgrading of dispensaries into hospitals*

* 171 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whethe there is any proposal to upgrade the Arumanai Dispensary in Vilavancode taluk, Kanyakumari district into a Hospital with at least 50 beds?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. என். டென்னிஸ்:** அருமனை ஜனத்தொகை நெருக்கம் அதிகமான இடம். வேறு வசதியான மருத்துவ மனை பக்கத்தில் இல்லை. ஆகவே, அங்கிருக்கும் மருந்தகத்தை மருத்துவ மனையாக உயர்த்துவது அவசியம் என்று அரசு கருதி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 'டிஸ்பென்ஸரி' என்பது மருந்தகம். 'ஆஸ்பத்திரி' என்பது மருத்துவ மனை. மருத்துவ மனையாக ஆக்குவதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆனாலும், அந்த மருந்தகத்தி

னுடைய தேவையைக் கருதி, பதினைந்து படுக்கைகளைக் கொண்ட ஒரு 'வார்டு' அந்த மருந்தகத்தில் அமைக்கப்படுவதற்கு 74,000 ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்க 30—7—1971-இல் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உத்தரவிட்டதற்குப் பின்னால், அது பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட வேண்டும். அவர்கள் அதற்கான டெண்டர் கோரி, அதற்குப் பின்னர்தான் கட்ட வேண்டும். எனவே, அது மற்றொரு துறையின் பரிசீலனையிலும் நடைமுறையிலும் இப்பொழுது இருக்கும்.

* 172 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to upgrade the Tengapattanam Government Dispensary in Kanyakumari district into a Hospital; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.

THIRU N. DENNIS: Sir, may I know whether Government would construct separate wings for women in view of the large Muslim population in that area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்கம் மேற்கொள்ளுகிற எந்த ஒரு விதமான மருத்துவ வளர்ச்சிப் பணியும் சில முறைகளோடும் சில முன்னுரிமைப் பிரச்சினைகளோடும் சேர்த்து எண்ணப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள தேங்காப்பட்டணம் மருத்துவமனை அரசாங்கக் கட்டடமாக அமைந்திருக்கிறது. அதற்கு மேற்பட அதிகமாகச் செய்வதற்கு இப்பொழுது அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

### சூலூர் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்கூடம்.

* 173. வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி சூலூரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் பிரிவு ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

### திருவாரூர் அரசு மருத்துவமனைக்குக் கட்டடம்.

* 174. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுச் செலவு என்ன?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 10.90 லட்சங்கள் ஆகும்.

### *Buildings for Primary Health Centres*

* 175 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the Primary Health Centre of Vallam Panchayat Union, Gingee taluk is functioning in a rented building; and

(b) if so, whether there is any proposal under the consideration of the Government to provide it with a building of its own?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

* 176. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டியில் பிரதம சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்முடிப்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் முறைப்படி கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### *N.C.C. Training camp at Red Hills*

* 177 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any Medical Unit of the N.C.C. was held in Red Hills about December 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தேசிய மாணவர்படை, மாணவ, மாணவியரின் முதுநிலைப்பிரிவின், ஒருங்கிணைந்த ஆண்டுக்குரிய பயிற்சி முகாம் ஒன்று, முகாம் தளவாய், மேஜர் பி.எ., குரூஸ் அவர்களால், செங்குன்றத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் முதல் 1971 சனவரி 4-ம் நாள் வரை நடத்தப்பட்டது. இதில் சென்னை, மதுரை, வேலூர் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள மருத்துவ மாணவர்கள் பிரிவுகளும் இதர பிரிவுகளுடன் பங்கு கொண்டன.

THIRU N. DENNIS: May I know whether Government would take steps for conducting such camps in other rural areas?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது ரூரல் ஏரியாவா, அர்பன் ஏரியாவா என்ற பிரச்சினையைப் பொறுத்தல்ல. தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய பயிற்சியைத் தாங்களே வளர்த்துக் கொள்ளுவதற்கு ஏற்றவிதத்தில் அந்தப் பயிற்சியை முகாம் மூலமாகப் பெறுகிறார்கள்.

## Survey on adoption of Family Planning Methods

* 178 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the population Council of India is conducting any survey on adoption of the Family Planning methods in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

THIRU N. DENNIS: What are the findings?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கான பரிசீலனையை நடத்துவதற்கு முற்பட்டிருக்கிறார்கள். இந்திய மக்களுடைய பொதுவான மக்கள் உற்பத்தித் தொகையின் அளவினையும், அதேபோல் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ளுகிற அந்த முறைகளையும் ஆராய முனைந்து, தமிழ்நாட்டு மாநிலத்திலேயும் ஆராய்ந்து பார்ப்பதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய 'பாப்புலேஷன் கவுன்சில்' ஒரு திட்டம் இட்டிருக்கிறது. அதைப் பல்வேறு கிராமங்களில் உள்ள மக்களுடைய மனப்பான்மையைக் கண்டறிந்து, அவர்கள் கைக்கொள்ளக்கூடிய முறைகளையும், குடும்பக் கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் ஆராய்ந்து பல்வேறு பரிசீலனைகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர இருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக்கு அவர்கள் தமிழக அரசாங்கத்தினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார்கள். அவைகளை வழங்க தமிழக அரசின் அந்தத் துறை இயக்குநர் இசைந்திருக்கிறார்கள்.

* 179. வினா—திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கருத்தடை ஆப்பரேஷன் செய்துக்கொள்பவருக்கு அளிக்கப்படும் மானியத்தை உயர்த்தி குறைந்த பட்சம் ரூ. 50 அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

### அரசூரிலுள்ள கோழிப்பண்ணை.

* 180. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள அரசூர் கிராமத்தில் கோழிப்பண்ணை வளர்ப்புக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடம் மூடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அக்கட்டடத்தைப் பிரசவ விடுதியாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசூரிலிருந்து—ஆனால் இப்பொழுது இல்லாத—கோழி விஸ்தரிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்டத் தொடங்கி அடித்தளம் வரை கட்டி முடித்த பிறகு, அந்நிலையம் சிக்கனமான முறையில் செயல்படவில்லை என்று, மற்ற நிலையங்களோடு ஒப்பு நோக்கிய அந்தக் காரணத்தால் தெரிந்தபடியால், அது மூடப்பட்டது, அக்கட்டடத்தை கட்டி



முடிப்பதால் பயனுண்டா என்பதைக் குறித்த செயற்குறிப்பு கால்நடை இயக்குநரின் ஆலோசனையில் உள்ளது. தகுதியான திட்டமிடுவதற்கு வழிமுறை இல்லாத காரணத்தால் அந்த ஆலோசனை கூட முற்றுப் பெறவில்லை.

## Works of Local Library Authorities

* 161 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to expand the work of the Local Library Authorities; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (ஆ) இரண்டு நூலக ஆணைக்குழுக்கள்தாம் பிரிவுபடுத்தக் கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக்கின்றன. இப்பொழுதுள்ள நிதி நிலைமையில் நூலக ஆணைக் குழுக்கள் தம்முடைய பணிகளைப் பெரிய அளவில் விரிவுபடுத்துகிற சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆணைக் குழுவினுடைய வேலைகளை விரிவு படுத்தும் நிலைமை இருந்தாலும்கூட, மதுரை போன்ற இடத்தில் உள்ள நூலகத்தில் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக எந்த விதமான புதுப் புத்தகங்களும் தருவிக்கப்படவில்லை. அம்மாதிரி முக்கிய கேந்திரமான இடங்களிலெல்லாம் புதுப் புத்தகங்களைத் தருவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது மாவட்ட நூலக ஆணைக் குழுவினிடத்தில் இருக்கின்ற நிதி வசதி, அதனுடைய நிர்வாகச் செலவுக்குப் போதுமான அளவுக்கே இருக்கிறதனால், நூல்கள், மற்றவைகள் வாங்க வேண்டிய அளவுக்கு அமையவில்லை. அண்மையில் கோடைக்கானலில் கூடிய நூலக ஆணைக் குழுத் தலைவர்களுடைய மாநாட்டில், நூலக செஸ்ஸை மூன்று பைசாவிலிருந்து ஐந்து பைசா அளவுக்கு உயர்த்துவதால் செஸ் தொகை ஓரளவு உயர்வதோடு, அரசாங்கம் தரும் ஈட்டு மானியத் தொகையும் ஓரளவு கூடுதலாகும்; அப்படி வருகின்றபோது, அதிகமான அளவு நூல்கள் வாங்க வசதிகள் ஏற்படும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்போது, நூல்கள் வாங்கும் சூழ்நிலையை நூலக ஆணைக் குழுக்கள் பெறும். இப்பொழுது, பல்வேறு ஆணைக் குழுக்கள் நூல்கள் வாங்க முடியாத அளவுக்குத்தான் இருக்கின்றன. இந்தக் குறைபாட்டைப் போக்கத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, பெரும்பாலும் நூலகங்கள் நகரப்புறங்களில்தான் அமைந்திருக்கின்றன. எல்லோருக்கும் நூல்களைப் படிப்பதற்கு வசதியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் நூலகங்களை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாம் கொண்டிருக்கிற கொள்கைப்படி, அதன் அடிப்படையில் 5,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட இடங்களில் ஒரு கிளை நூலகம் ஏற்படுத்தப்படுகிறது. 1,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை உள்ள இடங்களில் வழங்கு நூலகங்களை அமைக்கலாம் என்று நாம் திட்டம் தீட்டி, அதற்கேற்ற முறையில் நடவடிக்கைகளை

மேற்கொண்டு வருகிறோம். இப்போது 13 மாவட்ட நூலகங்களும், 1,437 கிளை நூலகங்களும், 2,149 வழங்கு நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தேவைப்பட்டு வரும் இடங்களில் நிதிநிலைக்கு ஏற்றபடி புது நூலகங்கள் நிறுவப்படும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in many local libraries in local library authority areas in Hosur and Denganikotah and other areas declared as local Telugu areas minimum books in Telugu and other languages are not supplied. May I know whether the Government will take steps to see that books are supplied for the use of the people there?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தப் பகுதிகளில் தெலுங்கு நூல்கள் இல்லாத குறை இருக்குமானால் அங்கு போதுமான நூல்கள் வழங்கப்படுவதற்கு நூலகப் பிரிவு இயக்குநரோடு தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. ந. நாச்சியப்பன் :** தலைவரவர்களே, இப்போது மாவட்ட நூலகங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களிலே செஸ் நிதி வசூலிக்கிறார்கள். அந்த செஸ் நிதி நூலகங்களுக்குச் சரியாகப் போய்ச் சேரவில்லை என்று குறை சொல்லப்படுகிறது. ஆகவே, வசூலிக்கப்படுகின்ற செஸ் நிதி மாவட்ட நூலகங்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** செஸ் நிதியை வருவாய்த் துறை அதிகாரிகள்தான் வசூலிக்க முடியும். எனவே அவர்கள் மூலம் வசூலித்து, ஊராட்சி மன்றங்கள் நூலகங்களுக்கு வழங்குகின்றன. நேரடியாக நூலகங்களே வசூலிப்பதனால், சில குறைகள் போக்கப்படலாம். ஆனால் அவர்களால் வருவாய்த் துறை அதிகாரிகள் வசூலிக்கின்ற அளவுக்கு வசூலிக்க முடியாது. ஆகையால் வருவாய்த்துறை அதிகாரிகளே செஸ் நிதியை வசூல் செய்கின்ற நிலைமை இருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, மக்கள் அதிகமாக வாழக்கூடிய ஊராட்சிகளில் உள்ள நூலகங்களில், மக்கள் பயனடையும் வகையில், கலை, கலாச்சாரம், சரித்திரம் மற்றும் அறிவு வளர்ச்சிக்குச் சம்பந்தப்பட்டப் புத்தகங்கள் போதுமான அளவு இல்லாமல் இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்டக் குறைகளையெல்லாம் கண்டு, அதற்குத் தக்கப் பரிகாரம் தேடுவதற்காகத்தான் பொது மக்கள் பிரதிநிதிகள், மற்றும் முக்கியஸ்தர்கள் நூலக நிர்வாகக் குழுவில் இடம் பெறுகிறார்கள். ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள், நகராட்சி மன்றப் பிரதிநிதிகள், பொது மக்கள் பிரதிநிதிகள், மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் போன்றவர்கள் ஆங்காங்கே இருக்கின்ற நூலக நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தப் பகுதியில் என்னென்ன தேவை என்பதை உணர்ந்து சொல்கிறார்களோ அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### இயங்கும் நூலகங்கள்.

*162. **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்களை நிறுவுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாட்டில் இயங்கிவரும் நூலக ஆணைக்குழுக்கள், சில நடமாடும் நூலகங்களை நடத்தி வருகின்றன. ஆனால் மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்கள் நிறுவ, செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

* 163 *Q*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a number of Mobile Libraries in Coimbatore district have been closed; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஏப்ரல் 1970-லிருந்து ஆகஸ்ட் 1970 வரை 11 இயங்கு நூலகங்கள் இயங்கி வந்தன. இவைகளில் 5 இயங்கு நூலகங்கள் செப்டம்பர் 1970-லிருந்து இன்றளவும் இயங்கி வருகின்றன. 6 இயங்கு வாகனங்கள் அடிக்கடி சீர்கேடு அடைந்ததால் அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட நூலக ஆணைக் குழுச் செயலர் அறிவித்துள்ளார். பழுது பார்க்கும் செலவு அதிகரித்தமையால் பற்றாக் குறையுடன் இயங்கி வரும் நூலக ஆணைக் குழுவுக்கு இதன் மேல் மேன்மேலும் செலவு செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும், அதிகமான இடங்களுக்குச் சென்று, இருக்கும் இயங்கு நூலகங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, இயங்கு நூலக இயக்கத்தின் பயனை விரிவு செய்ய, நூலக ஆணைக் குழு ஆவன செய்யும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மாவட்டந்தோறும் இருக்கிற 'மொபைல் லைப்ரரி' வான்கள் ரிப்பேர் அடைவதால் அந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. எனவே வான்கள் ரிப்பேர் ஆகாமல் அல்லது ரிப்பேர் ஆன வான்களை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு கோவை மாவட்டத்தில் பதினொரு இயங்கு நிறுவனங்கள் வைத்திருக்கிறார்கள். அதில் ஐந்து இப்போது பணியாற்றி வருகின்றன, நிதிப் பற்றாக்குறை காரணமாக மீதமுள்ள ஆறு இயங்கு நிறுவனங்கள்—பழுதடைந்தவை—பழுதுபார்க்க முடியாததால் செயலற்று உள்ளன. விரைவிலே அவைகளை, நிதிவசதி ஏற்பட்டவுடன் செயல்படச் செய்தால் நிலைமை சீர்பட்டுவிடும். இப்போது மதுரை, சென்னை, கோவை முதலிய இடங்களில் இயங்கு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களிலும் ஒரு இயங்கு கிளை நூலகம் ஏற்படுத்துகின்றவகையில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அது, சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக் குழுவுடன் தொடர்பு கொண்டு முடிவு செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த இயங்கும் நூலகங்களுக்கு அதிகமாக உதவி செய்து வந்தால், அவை நல்லமுறையில் இயங்கி வரும். இப்படிச் செயலற்று முடங்கிக் கிடக்கும் இயங்கு நூலகங்களை அதனுல் பழுது பார்க்கப் பட்டு, இப்போதுள்ள குறைகள் போக்கப்படும். அதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இயங்கு நூலகங்கள் இயங்காமல் இருப்பதற்கு நிதிப் பற்றுக்குறைதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. போதிய நிதி வசதி ஏற்பட்டால் இந்தக் குறைகள் போக்கப்பட்டுவிடும். நிதி வசதியைப் பெருக்குவதற்காக இப்போது வசூலிக்கப்பட்டு வருகின்ற மூன்று காசு செஸ் நிதியை ஐந்து காசாக உயர்த்தியுள்ளார்கள். நிதி வசதி பெருகியவுடன் குறைகள் தவிர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மதிய உணவுத் திட்டம்

*164. விஞ—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டம் யாருடைய மேற்பார்வையில் தற்போது நடைபெறுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மதிய உணவு வழங்கு திட்டத்தில் உள்ள ஒரு மைய நிலையத்தின் நிருவாகம், உள்ளூர் நன்கொடையாளர்களால் அமைக்கப்படும் 'பொதுக் குழு', 'நிருவாகக் குழு' என்ற இரு குழுக்களினுல் நடத்தப்படுகிறது. அந்நிருவாகம் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டது.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** தலைவரவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் இரண்டு காசு வீதம் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. நடைமுறையில், எந்த ஊராட்சியைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கிறார்களோ, அந்த ஊராட்சியே அந்த இரண்டு காசு வீதத்தை—அந்தப் பங்குத் தொகையை கொடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இத்திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் 2 காசு, பொதுமக்கள் 2 காசு, அரசாங்கம் 6 காசு என்ற வீதத்தில் செலவு செய்யப்படுகிறது. எந்த எல்லையில் அந்தப் பள்ளி இருக்கிறதோ அந்தப் பகுதி மக்களும், ஊராட்சிகளும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஊராட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள பொதுக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். பொதுக் குழுவும், நிர்வாகக் குழுவும் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வையில், இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி வருகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது இந்த மதிய உணவுத் திட்டம் செயல்பட அரசாங்கம் 6 காசு, பொதுமக்கள் 2 காசு, ஊராட்சி மன்றங்கள் 2 காசு என்ற வீதத்தில் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் பல இடங்களில் பொதுமக்களிடம் இருந்து 2 காசு வீதம் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஊராட்சி மன்றங்கள் வாங்கியதாகக் கணக்கு காட்டுகிறார்கள். ஆகவே அதற்கு மாறுக அரசாங்கம் 8 காசு, ஊராட்சிகள்



2 காசு என்ற நியதியை ஏற்படுத்திஞல் நல்லது. அல்லது அரசாங்கம் 6 காசு, ஊராட்சிகள் 2 காசு என்று இருந்தால் போதும். கணக்கு எழுதப்படுவதிலே ஏற்படுகின்ற தவறுகளை நீக்குவதற்கு இந்த முயற்சியில் [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இத்திட்டத் திற்கு அரசாங்கம் 6 காசு, பொதுமக்கள் 2 காசு, ஊராட்சிகள் 2 காசு கொடுத்து வருகிறார்கள். இதை வைத்து மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. இத்திட்டத்திற்கு 'கேர்' நிறுவனம் ஓரளவு உணவுப் பொருள் கொடுத்துவருவதால், இத்திட்டத்தைச் சமாளித்து வருகிறோம். பொதுக்காரியங்களில் பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் இருக்கவேண்டும் என்பதற்காகவே, அவர்களிடம் இருந்து 2 காசு வசூலிக்கப்படுகிறது. மக்களுக்கும் அது தெரியவேண்டும் என்பதற்காகவே இந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். கணக்கு எழுதுவதில் தவறுகள் ஏற்பட்டால் அதை அனுமதிக்க முடியாது. அது தடுக்கப்பட வேண்டியதுதான். மீண்டும் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்யும்போது, ஊராட்சிகளோடு கலந்து, இதற்கு ஒரு முடிவு எடுக்கலாம்.

**திரு. நா. வெ. குருசாமி :** ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகிற பள்ளிகளில் மதிய உணவு திட்டம் நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்கிற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்றைய தினம் 30,668 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் இந்தத் திட்டம் சீராகவும், சிறப்பாகவும்தான் நடைபெறுகின்றன. இதில் அக்கறையோடு பணியாற்றுகிறவர்கள் இந்தத் திட்டத்திற்காக நிலங்கள் கூட நன்கொடை அளித்து—உணவுக்கு நிரந்தர வசதிவாய்ப்பு அளித்திருக்கிறார்கள். பலயிடங்களில் ஆசிரியர்களும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறார்கள். இவ்வளவு பெரிய திட்டத்தில் அங்கங்கே ஒன்றிரண்டு இடங்களில் குறைபாடுகள் இருக்கவும் கூடும். அவற்றை அங்கங்கே உள்ள கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*165. விஞ—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்திற்கு 'கேர்' ஸ்தாபனம் மூலம் கிடைக்கும் உதவிகள் என்ன ?

(இ) பொது சமையல் கூடங்கள் (central kitchens) தமிழ் நாட்டில் தற்போது எத்தனை அமைக்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மதிய உணவுத் திட்டத்திற்கு பல்கார் கோதுமை, சி.எஸ்.எம். சத்துணவு, சாலெட் எண்ணை முதலிய உணவுப் பொருட்கள் 'கேர்' நிறுவனத்தாரால் வழங்கப்படுகின்றன.

சுகாதார முறைப்படி உணவு தயாரிக்க ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு மத்திய சமையற்கூடம் கட்ட 'கேர்' நிறுவனம் முன் வந்துள்ளது. சமைக்கப்பட்ட உணவு ஒவ்வொரு பள்ளிகளுக்கும் எடுத்துச் செல்ல வார்திகளையும் நன்கொடையாக அளித்துள்ளது.

அந்த நிறுவனம் வழங்கும் உணவுப் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள, பிராந்தியக் கிடங்குகள் 'கேர்' உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன.

இவை தவிர 'கேர்' வார்திகளைச் செப்பனிடும் தொழிற்சாலை 'கேர்' உதவியுடன் அமைக்க, அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) இதுவரை 31 மத்திய சமையற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்னும் சுமார் 60 அமைக்க உத்தேசமுள்ளது.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்திய அமெரிக்க உறவு முறைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் 'கேர்' நிறுவனத்தின் உதவி தொடர்ந்து நமக்குக் கிடைக்காமல் போகலாம் என்கிற கருத்து நிலவுகிறதே, அது உண்மைதானா? மத்திய சமையற்கூடங்களில் கிச்சன் கட்டாத காரணத்தினால் பல சமையற்கூடங்கள் இயங்க முடியாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்திய அமெரிக்க அரசாங்கங்களிடையே ஏற்பட்டிருக்கிற மாச்சரியங்கள் அரசியல் தொடர்புடையவை. ஆனால் 'கேர்' நிறுவனம் என்பது ஒரு அறநிலைய அமைப்புபோல் இயங்கி வருகின்ற ஒன்றே தவிர அமெரிக்க அரசாங்கத்தோடு தொடர்புடையது அல்ல. அதன் உதவி தொடர்ந்து இருந்துவரும் என்றே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்த அறநிலைய—'கேர்' ஸ்தாபனத்தின் உதவி ஆண்டாண்டாக நமக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டேவரும் என்கிற எண்ணத்தில் நாம் இருந்துவிடவும் கூடாது. அவர்கள் எப்போதுவிட்டாலும் கூட விட்ட இடத்தில் இருந்து நாம் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு முன்வர வேண்டும் என்கிற எண்ணத்துடன்தான் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இன்னும் 60 இடங்களில் மத்திய சமையற்கூடங்கள் கட்ட இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கோவை மாவட்டத்தில் கட்டப்படக்கூடிய ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 31 இடங்களில் கட்டப்பட்டு விட்டன. சென்ற ஆண்டு 60 இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இதை ஒவ்வொரு மாவட்டமாக—கட்டிட தள்வாடங்களை எல்லாம் சுலபத்தில் மாற்றிக்கொள்வதற்கு வசதியாக—எடுத்துக்கொண்டு செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு என்பதாக முறையே கட்டிவருகிறார்கள். சேலம் முடிந்த பின் கோவை வரும். எப்படியும் இந்தத் திட்டத்தின்படி இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்த 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் மத்திய சமையற்கூடம் கட்டி முடிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மத்திய சமையற்கூடங்கள் கட்டும்போது முனிசிபல் நகரங்களுக்கு முதலிடம் கொடுத்து அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா? அங்கே கட்டினால் சுற்றுப்புறங்களில் தேவையான எல்லா வசதியும் கிடைக்க வழியேற்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முனிசிபல் நகரங்களில் உள்ள பள்ளிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு முனிசிபல் நகர மன்றங்களைச் சார்ந்ததாகும். நாம் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் உள்ள



பள்ளிக் கூடங்களுக்குத்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். ஆகவேதான் ஊராட்சி ஒன்றியம் இருக்கிற ஊரைக்கூட எடுத்துக்கொள்ளாது, அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அதன்காரணமையமான ஒரு இடத்தை எடுத்து அங்கே கட்டி வருகிறார்கள். அதன்காரணமாகத்தான் 2 வான்கள் மூலம் 2 மணி நேரத்தில் எல்லாப் பள்ளிகளுக்கும் உணவுப் பொருளை அன்றாடம் அனுப்பிவைக்க வசதியேற்படும். இந்த சமையற்கூடங்களை நகராட்சி மன்ற எல்லைக்குள் வைப்பது சாத்தியமாகாது.

**திரு. கா. வேழவேந்தன்:** இந்த மத்திய சமையற்கூடங்களில் இருந்து 2 மணி நேரத்தில் 2 வான்கள் மூலமாக எல்லாப் பள்ளிகளுக்கும் உணவுப் பாத்திரத்தை அனுப்பிவைக்க முடியும் என்றார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய சமையற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு வருவதற்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆயினும் கிராமங்களுக்குப்போகும் ரோடுகள் இல்லை என்பதாக இரண்டு, மூன்று மைல் தள்ளி பாத்திரத்தை வைத்துவிட்டுப்போவதும், அந்தப் பள்ளி மாணவர்களே வந்து எடுத்துக்கொண்டுபோவதுமாகச் சில இடங்களில் இருக்கிறதே, அதை உடனடியாக நீக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** குறிப்பாக ஸ்ரீபெரும்புதூர் ஏரியாவில் இதுபோல சில இடங்கள் இருக்கின்றன. ஆறுகள், ஓடைகள் குறுக்கிடுவதால் பள்ளிக்கூடத்திற்கே வான்கள் போக முடியாமல் இருக்கின்றன. இந்தக் குறைபாட்டை நீக்கவேண்டுமென்றால் உடனடியாக அங்கங்கே கிராம இணைப்புச் சாலைகள் போடவேண்டியதாக இருக்கிறது. அதற்காக இந்தத் திட்டத்தை நிறுத்த முடியாது.

**திரு. கா. காளிமுத்து:** தமிழகம் முழுவதற்கும் மத்திய சமையற்கூடம் கட்டும் விரிவான திட்டம் எந்தக் காலவரைக்குள் நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழகத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கு மத்திய சமையற்கூடம் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 31 இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. சென்ற ஆண்டு 60 அமைக்க திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டு ஒரு 70, 80 இடங்களில் கட்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அளவுக்குப் போனால் போகப்போக விரைவுபடுத்துவதன் மூலம் இரண்டு, மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Opening of new colleges*

*166 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a number of Colleges are to be opened in the year 1971–72 in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1971-72-ல் இரண்டு கல்லூரிகள் சென்னையில் துவக்கப்பட்டன.

(இ) குருநானக் கல்லூரி (ஆண்கள்) சென்னை—35.

பச்சையப்பன் கல்லூரி (பெண்கள்), சென்னை—32.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, கல்லூரிகளை புதிதாக ஆரம்பிக்கின்றபொழுது, அவற்றின் பெயர்கள் ஜாதிமதங்களின் பெயர்களைக் கொண்டவைகளாக இல்லாத அளவிற்கு ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா? ஏற்கெனவே இருக்கின்ற ஜாதிமதங்களின் பெயர்களை மாற்றியமைக்கின்ற குறிப்பு அரசிடம் ஏதாவது உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாகவே அரசியல் நிர்ணயச் சட்டத்தையொட்டியும், வளர்ந்துவருகிற ஜனநாயக உணர்வுகளையொட்டியும் ஜாதிமத உணர்வுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றுதான் செயல்படுகிறோம். ஆனால் மக்களில் சிலர் இன்னும் ஜாதிமத உணர்வுகளிலே கவனம் செலுத்துகிறவர்களாகவே இருக்கிறார்கள். ஜாதிமத உணர்வுகளின் அடிப்படையில்தான் சிலர் கல்லூரிகளை அமைப்பதற்கு உதவி செய்ய முன்வருகிறார்கள். நாம் கல்லூரிகளின் பெயர்களைப் பற்றிக் கவனிக்காமல், அந்தக் கல்லூரிகளின் நிர்வாகம், அந்தக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் முறை போன்றவற்றில் ஜாதிமத உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் இருக்க முயற்சி எடுத்துக்கொள்கிறோம். சிலபல இடங்களில் அப்படி தனியார் கல்லூரிகளை அமைக்கின்றபொழுது ஜாதிமத உணர்வுகளின் அடிப்படையில் பல லட்சக்கணக்கான ரூபாய்களை நிதி உதவி திரட்டவும் முற்படுகிறார்கள். அப்படி அமைக்கப்படுகின்ற கல்லூரிகளை குறிப்பிட்ட ஜாதிக்கு மட்டுமோ, குறிப்பிட்ட மதத்திற்கு மட்டுமோ பயன்படுத்தினாலும், மற்ற ஜாதியினருக்கு அங்கே இடம் மறுக்கப்பட்டாலும் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும். ஆனால் பொதுவாக உள்ள பெயர்களையே வைக்க வேண்டுமென்று நாம் சொல்லி வருகிறோம். பலருக்கு இதுகுறித்து நல்ல ஆலோசனைகளையும் சொல்லி வருகிறோம். சில பல இடங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

**திரு. க. நாகராஜன்:** தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த சென்னை நகரம் போன்ற இடங்களில் கல்லூரிகளை அமைப்பதால் மாணவர்களுக்கு மிகுந்த செலவாகிறது. ஆகவே, நெரிசல் குறைந்த பகுதிகளில் கல்லூரிகளைத் திறக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பரவலாகத்தான் கல்லூரிகளை ஆங்காங்கே ஆரம்பிக்கிறோம். சென்னையிலே 25 லட்சத்திற்கும் மேலான மக்கள் வாழ்கின்ற நிலையில் பல கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. அண்மைக்காலத்திலே பார்த்தால் மாவட்டத்திற்கு மாவட்டம் சுற்றுப்புறங்களில் கல்லூரிகள் அமைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளின் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் அந்தக் கருத்தை உட்கிடக்கையாகக் கொண்டு, கல்லூரிகளைத் திறப்பதில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, ஜாதிமதங்களின் பெயரால் இருக்கும் கல்லூரிகளின் ஜாதிமதப் பெயர்களை நீக்குவதற்காக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவ்வாறான பெயர்களை நீக்க வேண்டுமென்றுதான் நாம் சொல்லி வருகிறோம். அரசியல் நிர்ணய சட்டத்தில் சிறுபான்மையினர்களுக்குப் பாதுகாப்பு என்று



இடம் அளித்திருக்கிறோம். கூடுமானவரையில் அவர்களை நாம் பெருந்தன்மையோடு, ஜனநாயக உணர்வோடு அப்படிப்பட்ட பெயர்களை எடுத்துவிடலாம் என்று கேட்டுக்கொள்ளலாம். நாம் ஆங்காங்கு அப்படிப்பட்டவர்களுக்கு அறிவுரையும் கூறி வருகிறோம். சில பல இடங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே பல்வேறு விதமான புகார்கள் வருகின்றனவே, அதனால் இனி திறக்க இருக்கின்ற கல்லூரிகளாவது அரசினர் கல்லூரிகளாக திறக்க அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போதுள்ள 163 கல்லூரிகளில் 123 தனியார் கல்லூரிகளாகவும், 40 கல்லூரிகள் அரசினர் கல்லூரிகளாகவும் இருக்கின்றன. எல்லா கல்லூரிகளையும் அரசினரே திறக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு நிறைய செலவாகும். தனியார் துறையில் கல்லூரிகள் நிறுவப்படும்போது அரசாங்கம் அவர்களுக்கு கட்டடத்திற்காக 75 ஆயிரம் ரூபாய்தான் தருகிறார்கள். மற்றச் செலவுகளுக்கு அவர்கள் நிதி திரட்டிக்கொள்கிறார்கள். தனியார் கல்லூரிகளுக்கு அரசு சுமார் 75 அல்லது 80 சதவீதம் டீச்சிங் கிராண்ட் கொடுக்கிறது. மற்றதை அவர்கள் திரட்டிக்கொள்கிறார்கள். இவற்றை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், ஒரு கல்லூரிக்கு மொத்தம் 30 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. சென்ற ஆண்டில் திறக்கப்பட்டவைகளில் 3 அரசினர் கல்லூரிகளாகவும், 6 கல்லூரிகள் தனியார் துறையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தனியார் துறைக் கல்லூரிகள் சிறப்பாக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளைப் போக்க அரசாங்கமும், பல்கலைக் கழகமும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். மிகுந்த குறைபாடுகள் இருந்து, அவற்றைப்போக்க வழியில்லாத நிலையில், அப்படிப்பட்ட கல்லூரிகளை அரசாங்கமே ஏற்று நடத்தலாமா என்பதுபற்றி ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் கொடுத்துவிட்டார்கள். இன்னும் துணைக் கேள்விகள் அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் பெரும்பாலான கல்லூரிகள் தென்சென்னையில்தான் இருக்கின்றன. வட சென்னையில் ஒரே ஒரு கல்லூரி—அதாவது தியாகராயர் கல்லூரி ஆண்களுக்காக—மட்டும் இருக்கிறது. எதிர்காலத்தில் கல்லூரிகள் திறக்கப்படும்பொழுது வட சென்னையில் அமைக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தென் சென்னையில்தான் கல்லூரிகள் அமைப்பதற்கான, கல்லூரிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான இடவசதி இருக்கின்றது. வட சென்னையில் ஒரு துவக்கப்பள்ளி அமைப்பதற்குக்கூட இடம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஒரு துவக்கப் பள்ளிக்கு இரண்டு கிரவுண்டு நிலமாவது தேவை. வடசென்னையில் கல்லூரி வைப்பதற்கு இடம் கிடைக்காமல் தற்போது வியாசர்பாடிக்கு அப்பால்தான் அமைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வடசென்னை பகுதியில் கல்லூரி அமைப்பதற்கான இடம் அகப்படுவதாக இல்லை. எந்த பெருநகரங்களை எடுத்துக்கொண்டாலும், தொழிற்சாலை போன்றவைகள் அமைவது ஒரு பகுதியாகவும், அலுவலகங்கள், கல்லூரிகள் அமைவது வேறொரு பகுதியாக அமைந்து

விடுகின்ற பாங்கினை உலகெங்கணும் காணலாம். அப்படித்தான் தொழிற் சாலைகள், மற்றவைகள் வடசென்னைப் பகுதியிலும், அலுவலங்கள், கல்லூரிகள் போன்றவை தென்சென்னைப் பகுதியிலும் அமைந்திருக்கின்றன. தென் சென்னைப் பகுதியில் மக்கள் வாழ்கின்ற இடமாகவும், மேலும் மேலும் புதிய புதிய வீடுகள் எழுகின்ற பகுதியாகவும் அமைந்துள்ளது. வடசென்னையில் தொழிற்சாலைகள் நிரம்ப அமைந்துள்ளன. வடசென்னையிலே புதிய கல்லூரி வருவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

(ஓர் உறுப்பினர் எழுந்தார்).

MR. DEPUTY SPEAKER : The Hon. Ministers reply is exhaustive.

## அரசுக் கல்லூரிகளில் பி.காம். பட்டப் படிப்பு.

* 167 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கல்லூரிகளில் பி.காம். பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படு கிறதா?

(இ) ஆம் எனில், எந்தெந்தக் கல்லூரிகளில்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1. சரபோஜி அரசர் அரசினர் கல்லூரி, தஞ்சை.

2. அரசர், கல்லூரி, புதுக்கோட்டை.

3. பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

3. அரசினர் கல்லூரி, கோயம்புத்தூர்.

5. அறிஞர் அண்ணு அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, செய்யார்.

6. திரு. கொளஞ்சியப்பர் அரசினர் கல்லூரி, விருத்தாசலம்.

7. அறிஞர் அண்ணு அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, நாமக்கல்.

8. சிக்கண்ணு அரசினர் (ஆண்கள்) கலைக்கல்லூரி, திருப்பூர்.

9. அரசினர் கலைக்கல்லூரி, மேலூர்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள கலைக்கல்லூரியில் பி.காம். படிப்பை இந்த ஆண்டாவது நடத்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு பி.காம். ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று பல்கலைக் கழகத்திடம் கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனை கல்லூரி களில் பி.காம். படிப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறது? அவைகளில் தனியார் துறைக் கல்லூரிகள் எத்தனை? அரசாங்கக் கல்லூரிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முழு விவரக் குறிப்பு இல்லை. பி.காம். படிப்பு வசதி செய்ய பெரும் செலவு ஏற்படுகிறது. அரசினர் கல்லூரிகளில் பி.காம். இல்லாத குறையைப்போக்க சென்ற ஆண்டில் 9 கல்லூரிகளில் இப்படிப்பு படிக்க வசதி செய்துகொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 12 கல்லூரிகளில் பி.காம். படிப்பு வசதி செய்வ தற்கான செயற்குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது.



திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள சிக்கண்ணு அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். வகுப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. பி.காம். படிக்க நிறைய மாணவர்கள் வருகிறுர்கள். ஆகவே, அங்கே மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற் கான அடிப்படையான வசதியைப் பொறுத்து பல்கலைக் கழகம்தான் அனுமதி வழங்க வேண்டும். அவ்விதம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக் கிறது, எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்திற்குச் சுட்டிக்காட்டினுல் தக்க அனுமதி கிடைக்கும்.

## நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

* 168 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற பி.டி. படித்தவர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள் ஆய்வி லுள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறுர்கள். நடுநிலைப்பள்ளிகளில் எல்லாம் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி போன்றவற்றில் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாகப் போடுவது பொருத்தமானது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது. பி.டி. படித்தவர்களைத்தான் எல்லாப் பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று ஆணையிடுகின்ற நிலைமை இல்லை. பி.டி. படித்தவர்களாக தலைமை ஆசிரியர்கள் இருந்தால் பள்ளியின் நிர்வாகமும், மாணவர்களின் தரமும் உயரும், நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதால் அந்தக் கருத்து ஆராயப்பட்டு வருகிறது.

## *Polytechnics for women*

* 169 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Central grant has been received by the Women 's Polytechnies in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் உள்ள எல்லா மகளிர் பல தொழில் கல்வி நிலையங்களுக்கும் மத்திய அரசு உதவி தொடரா செலவினத்தில் 75 சதவிகிதமும் தொடரும் செலவினத்தில் 50 சதவிகிதமும் செலவினத்தில் முதல் ஐந்து வருடங்களுக்கு கிடைக்கின்றது.

THIRU N. DENNIS : May I know whether such polytechnics would be opened in other places in this State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மேலும் பல தொழில் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்படுவதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுது கூட கிட்டத்தட்ட 33, 34 பாலிடெக்னிக்கள் இருக்கின்றன. அவற்றிலே போதுமான அளவுக்கு மாணவர்கள் வராத அளவுக்கு இருக்கிறது. அந்த கோர்ஸ்களையும் மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்புகளும் இருக்கின்றன. இப்பொழுது 3 இடங்களில் பெண்களுக்கான தொழிற் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. மேலும் தேவைப்படுமானால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து ஆராய பரிசீலனை செய்யலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே பல பாலிடெக்னிக்குகளில் படித்த மாணவர்களில் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு எல்லாம் வேலைகொடுக்கக்கூடிய திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேதான் பாலிடெக்னிக்குகளில் படித்த மாணவர்களுக்கு ஓரளவுக்கு வேலையில்லாத நிலைமை இருந்தது. அதற்குக் காரணம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுவது குறிப்பிட்ட காலத்திலே தொடங்கப்படாததுதான். அதன் காரணமாக வேலைவாய்ப்புகள் நின்றிருந்தன. இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கான வேவாய்ப்புகள் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது எஞ்சினியரிங், பாலிடெக்னிக் படித்த மாணவர்களுக்குப் பெரும்பாலும் வேலை கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு என்று அப்ரன்டீஸ்ஷிப் கொடுக்கப்பட்ட போதுகூட—நான் குத்து மதிப்பாகச் சொல்கிறேன்—900 பேர்களுக்கு கொடுத்தும், 200, 300 இடங்களுக்குத்தான் மாணவர்கள் வந்தார்கள். மற்றவர்கள் வரவில்லை. பல் வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் வேலை வாய்ப்பு கொஞ்சம் குறைந்த நிலை இருந்தது. இப்பொழுது வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** படிப்பு முறையையும் பாடத் திட்டத்தையும் மாற்றியமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்ன என்ன முறையில் மாற்றப்போகிறார்கள்? இப்பொழுது இருக்கிற முறையிலே உள்ள சங்கடங்கள் என்ன என்பதை தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிவில் எஞ்சினியரிங், மெக்கானிக்கல் எஞ்சினியரிங், எலக்ட்ரிகல் எஞ்சினியரிங் என்று பல முறைகள் நாம் வைத்திருந்தாலும், இப்பொழுது அதிகமாக எலக்ட்ரானிக்ஸ் என்ற



சப்ஜெக்ட்டுக்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. அண்மைக்காலத்தில் ரேடியோ, டெலிவிஷன் இவைகள் எல்லாம் பெருகி வருகின்ற நிலைமையிலே அவற்றிற்கு ஏற்றவகையிலே மாறுதல் செய்ய வேண்டியிருக்கிறது. மேலும் கெமிக்கல்ஸ்க்கும் அதிகமான வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்பொழுது வாய்ப்பு எது எதற்கு இருக்கிறதோ அவற்றிற்கேற்ற முறையிலே திருத்தியமைப்பதற்கான முயற்சிகளில் தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

## பள்ளிகளின் ஆய்வு முறை

*170 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாவட்ட கல்வி அதிகாரிகள், துணை ஆய்வாளர்கள், பள்ளிகளைப் பார்வையிடும் முறையைத் தீவிரப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present there is only one District Educational Officer for each district to inspect the schools. He is not able to do justice to all subjects. If District Educational Officers qualified in science subjects and arts subjects are appointed, they will be doing sufficient work. May I know whether the Government will take this point into consideration and appoint subjectwar District Educational Officers?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று, பொருளைப் பொறுத்து, அதாவது சப்ஜெக்ட்டைப் பொறுத்து டி.இ.ஓ. அமைப்பது என்பது இப்பொழுது நடைபெறக்கூடியதாக இருக்காது. இப்பொழுதே அதிகமான அளவுக்கு மேற்பார்வையிடுகின்ற அளவுக்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது. அந்த வகையிலேதான் தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. அதிகமாக நியமிக்க செயற்குறிப்பு இருக்கிறது. அவர்களுடைய எண்ணிக்கை பெருகிய அளவில் அதிகமான அளவுக்கு மாவட்டக் கல்வி அதிகாரிகளை நியமிக்கின்ற நிலைமை வருகிறபோது பணிகளைப் பிரித்துத் தரலாம். இப்பொழுது ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. என்ற முறையிலேதான் நியமிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எ. சுவாமிதாஸ் :** கல்வி மாவட்டத்திற்கு ஒரு டி.இ.ஓ. நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அவர்கள் அபிஷியல் ஒர்க்கர்ஸ்லைக் கவனித்துவர வேண்டியிருக்கிறது. பார்வையிடுவதற்கு அவர்களால் முடியாது, எனவே பார்வையிடுவதற்காக தனியாக ஒரு டி.இ.ஓ. நியமிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி அமைப்பதிலே ஒன்றும் கேடில்லை. நிதிப் பற்றாக்குறை தான் காரணமாக இருக்கிறது. அதிகமான அளவுக்கு டி.இ.ஓ.-க்கள் அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணத்திலேதான் 3, 4 மாவட்டங்களுக்கு ஒரு கல்வி தலைமை அதிகாரி என்று இருந்த நிலைமையை மாற்றி இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு டி.இ.ஓ. நியமிக்கப்பட்டு இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற எண்ணமும் இருக்கிறது. நிர்வாக காரியங்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால் அதிகமாகப் பார்வையிட முடியாத நிலைமை இருக்கிறது. நிதி நிலைமை சரியாகுமானால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, ஆய்வுமுறையைத் தீவிரமாக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆய்வுமுறையிலே தீவிரம் காட்டுவதற்கான முறையைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அடிக்கடி பள்ளிக்கூடங்களைப் பார்வையிட முடியாத காரணத்தினால் பார்வையிடுவது என்பது ஆண்டுக்கு ஒருமுறை என்ற அளவிலேதான் ஆகிவிடுகிறது. அடிக்கடி பார்வையிடுகின்ற காரணத்தினால் குறைபாடுகள் ஏற்படாமல் பார்க்கவும் குறைபாடுகள் ஏற்பட்டாலும் உடனடியாகக் கவனிக்கவும், அதனால் மாணவர்களுக்கோ மற்றவர்களுக்கோ சங்கடங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும், பள்ளி நிர்வாகம் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெறவும், சில பல தகராறுகள் வந்தால் அவை முற்றி அந்தப் பள்ளிக்கே குந்தகம் ஏற்பட்டுவிடுகிறது, அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்கக்கூடிய வகையிலும், எந்த வகையிலே சீர்திருத்தி அமைக்கலாம் என்பதை ஆய்கின்ற முயற்சியை பள்ளி இயக்குநர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: கல்வி அதிகாரிகள் பள்ளிகளைப் பார்வையிடுவது வசதியான இடங்களுக்கு மட்டும் அதிகமான சந்தர்ப்பங்களிலே சென்று பார்வையிடுகிறார்கள், போக்குவரத்து வசதிகள் இல்லாத பாலமலை போன்ற இடங்களிலே உள்ள பள்ளிகளைப் பார்வையிடுவதில்லை என்ற புகார் வருகிறது. கல்வி அதிகாரி எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை பள்ளிகளைப் பார்வையிட வேண்டுமென்ற நிபந்தனை, விதி ஏதாவது இருக்கிறதா? அந்த விதி கடைப்பிடிக்கப்படுகிறதா? கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை அரசு ஆராய்ந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கொருமுறை பார்வையிடவேண்டுமென்று இருக்கிறது. துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதிகமான அளவுக்குப் பார்வையிட வேண்டுமென்று அங்காங்குள்ள இன்ஸ்பெக்டர்கள், டி.இ.ஓ.-க்கள் இவர்களுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இதற்கான விதிமுறைகளும் இருக்கின்றன. அவர்கள் எந்த வகையிலே பார்வையிட வேண்டும், வசதியில்லாத இடங்களுக்குக் குறைவான அளவுக்குத்தான் பார்வையிடுகிறார்கள், அப்படித்தான் இருக்கிறது. வசதியான இடங்களுக்கு அதிகமாகச் சென்று பார்வையிடுகிறார்கள், இயற்கையாகவே அப்படி அமைந்துவிடுகிறது. குறைபாடுகள் ஏற்படாமல் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறைபாடுகளை நீக்கத்



தக்க நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க வேண்டும் என்றும், பார்வையிட்டதற்குப் பின் எப்படிப்பட்ட முறையிலே அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று எல்லாம் திட்டவட்டமான விதிமுறைகள் இருந்துவருகின்றன.

திரு. கா. காளிமுத்து: நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் எதிர்பாராத வகையில் திடீரென்று பார்வையிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்வியமைச்சர் போகிற சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. வருகிறேன் என்று சொன்னால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும்.

### *Demands of Tamil Nadu Plantation workers*

* 181. Q.—Thiru K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Plaitation workers of Tamil Nadu including Anamalai and Nilgiris have given 22 demands through their unions; and

(*b*) if so, the steps taken by the Government to meet their **demands?**

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளின் பேரில் சென்னையில் தொழிலாளர் நல ஆணையரும், கோவையில் தொழிலாளர் நல துணை ஆணையரும் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக, 11—2—1971-ம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி ஊதிய உயர்வு, மகப்பேறு நலன், பணிக்கொடை, வாராந்திர விடுமுறைக்கு ஊதியம், குறைந்த விலைக்கு அரிசி வழங்குதல் ஆகிய கோரிக்கைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்ததின் மூலம் 13—9—1971-ம் தேதி கோவை துணை ஆணையர் முன் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு, சம்பளத்தில் சந்தா பிடிப்பது ஆகிய கோரிக்கைகளைப் பற்றி உடன்பாடு ஏற்பட்டது.

மேற்கொண்டு நடந்த பேச்சு வார்த்தைகள் மூலம் 27—10—1971 அன்று வேலை மாற்றம், தோட்ட சுத்தி, தொழிலாளருக்குச் சீருடை, ஊக்குவிக்கும் ஊதியம், மேற்பார்வையாளரின் குறைகள், பதவி உயர்வு, சம்பளப் பட்டுவாடா, வீட்டு வசதி, இரவுப்படி, தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்குச் சீருடை, மகப்பேறு நலனுக்கு உதவி ஆகிய பிரச்சினைகளைப் பற்றி தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இருந்த போதிலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளைப்பற்றி கோவை துணை ஆணையரிடமிருந்து அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு ஆண்டுக்காலமாக ஆனைமலை தோட்டத் தொழிலாளர் ஊதிய உயர்வுபற்றி கோரிக்கை வைத்து, பிறகு ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்து பிறகு அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரியாக 3 முறைகள் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. இப்பொழுது அதே

மாதிரி கோரிக்கைகள் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கமிஷனர் அவர்களை அங்கே அனுப்பி இதற்கு விரைவிலே ஒரு முடிவு ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, 12 (3) அடிப்படையில் ஏற்படுத்தும் ஒப்பந்தம் எல்லாச் சங்கங்களையும் கட்டுப்படுத்தும். அப்படியிருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துப்படி ஆணையாளரை அனுப்பி அதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படும்.

**திரு. சோ. கருணைநாதன்:** தலைவரவர்களே, தொழிலாளர்களின் சில கோரிக்கைகளைச் சட்டப்படி ஏற்றுக்கொண்டுவிட்டபிறகு, அதைச் செயல்படுத்துவதற்கு தோட்ட முதலாளிகள் மறுக்கிறார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவரங்களைத் தெரிவித்தால் அது பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்தத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எத்தனைபேர்? அங்கு செயல்படும் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை? இந்தத் தொழிற்சங்கங்களில் எத்தனை தொழிற்சங்கங்கள் இந்த உடன்பாட்டை ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டார்கள் என்பதை அறிவிப்பார்களா? அதோடு ஒத்துக்கொள்ளாத சங்கங்கள் எந்தெந்தக் காரணங்களுக்காக ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறுவார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு மணி நேரப் பேச்சுக்கான பெரிய கேள்விகளைப் போடுகிறீர்களே? இவ்வளவுக்கும் பதில் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, குன்னூர் தோட்டத் தொழிலாளர் அசோசியேஷனும், வால்பாறை தோட்டத் தொழிலாளர் சங்கமும், ஆனைமலை காப்பி மற்றும் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் சங்கமும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்று தெரிகிறது. எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, இந்தத் தோட்ட அதிபர்கள் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின் விளக்குகள் அமைத்துத்தர வேண்டும். ஆனால் இதுவரையில் நீலகிரி கிளெண்டல் எஸ்டேட் தவிர வேறு எந்த எஸ்டேட்டுகளுக்கும் மின் விளக்குகள் அமைத்துத் தரப்படவில்லை. அதற்காக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அந்த எஸ்டேட்டுகளில் சில பகுதிகளில் மின்துறை இலாகாவிலிருந்து அவர்கள் கேட்டிருந்த ஒத்துழைப்பு தரப்படவில்லை என்பதால் தாமதப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மின்துறையோடு தொடர்பு கொண்டு பரிசீலிக்கப்படும்.



## கூட்டுறவு நூற்பாலைகளின் தொழிற்சங்கங்கள்

*182 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நூற்பு ஆலைகளின் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதில் ரகசிய வாக்கெடுப்பு முறையைப் பின்பற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், சங்க அங்கீகாரம் சம்பந்தமாக ஏதாவது மசோதா அரசு கொண்டு வருவதற்கு ஆலோசனை உண்டா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, கூட்டுறவுத் நூர்பு ஆலைகளின் தொழிலாளர் சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்குவதில் இரகசிய வாக்கெடுப்பு முறையைப் பின்பற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை. எனினும், 15-4-1971-இல் முதல் அமைச்சர் முன்பு நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து, தொழிற்சங்கங்களுக்கு ஏற்பளிப்பு வழங்கும் காரியத்திற்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையைச் சரிபார்க்கும் நடைமுறை தொடர்பான பொருள்குறித்து அமைச்சரவை ஆய்வு செய்தது. ஒழுங்குமுறை விதிக் கோவையின்கீழ் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்க, தொழிற் சங்கப் பதிவேடுகளைச் சரிபார்ப்பதன்மூலம் நிச்சயித்தறிந்துள்ளபடி, உயர்ந்த அளவு உறுப்பினர்களை உடைய தொழிற் சங்கத்துக்கு தொடர்ந்து ஏற்பளிப்பு வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, கோவையிலே அனைத்துத் தொழிற்சங்கங்களும் சேர்ந்து 10 அம்ச திட்டம் ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்களா? அதை அரசு பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, அதைப்பற்றி விவரம் ஒன்றுமில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், ஒரு சங்கம் அரசாங்கத்திலே விதிகளின்படி பதிவு செய்யப்பட்டபிறகு அதை அந்தந்தத் தொழிற்சாலையிலே இருக்கும் மேனேஜ்மெண்ட்கள் அங்கீகரிக்காமல் இருப்பது என்பது பல நாட்களாகப் பலவிடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருந்து, அதிலே அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்றால், அதை அங்கீகரிக்கும்படி மேனேஜ்மெண்ட்களைக் கட்டாயப்படுத்தும் முறையில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திட்டவட்டமாக இந்தந்த இடங்களில் இப்படிச் செய்யப்படுகிறது என்று தெரிவிப்பார்களானால், அரசு அதைப் பரிசிலனை செய்யும்.

## 'வேதாரண்யம்' பெயர் மாற்றம்

* 183 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் (வேதாரண்யம் வட்டம்) 'வேதாரண்யம்' என்ற பெயரை திருமறைக்காடு என்று மாற்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

## துணை வட்டங்களை வட்டமாக உயர்த்தல்

* 184 வினா—திரு. எம். முத்தையா: உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணை வட்டங்களை தரம் உயர்த்தி தனி வட்டம் ஆக்குவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்?

(இ) ஓட்டப்பிடாரம் துணைவட்டத்தை தரம் உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஒரு துணை வட்டத்தை தனி வட்டமாக தரம் உயர்த்தும்போது, பொதுவாக அத்துணை வட்டத்தின் பரப்பளவு, மக்கள் தொகை, இட அமைப்பு பணம் செலுத்தவும் இதர நிருவாக சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் பொதுமக்கள் வட்டத் தலை நகருக்குச் செல்ல வேண்டிய தூரமும் அதனால் மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் ஆகியவற்றைப் பொதுவாகக் கருத்திற்கொண்டு ஒரு முடிவெடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

* 185 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தை தனி வட்டமாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

## *Salt areas in Tuticorin*

" 186 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works, be pleased to state.—

(*a*) whether the Central Government has undertaken to hand over the salt areas in Tuticorin to the State Government; and

(*b*) if so, details thereof?

THE HON. THIRU S. MADHAVAN: Yes. Precise details regarding the extent of land, the compensation amount to be paid to the Government of India for the above lands, etc., are yet to be received from the Government of India.



திரு. என். டென்னிஸ்: சார், உப்பு உற்பத்தியை மாநில அரசாங்கம் ஏற்று நடத்தும் உத்தேசம் எதுவும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலே சிலபேர் அந்த உப்பு உற்பத்தியைச் செய்து வருகிறார்கள். அதைப்போல தனியார் செய்து வரும் இடங்களையெல்லாம் அரசு தொழில் வளர்ச்சிக்காகவும், துறைமுக வளர்ச்சிக்காகவும் எடுத்து இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களையும் நம்மிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி ஒப்படைக்கப்பட்ட பிறகு அந்த நிலங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி முடிவு செய்யலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, தூத்துக்குடியில் அந்த உப்பளங்கள் இருக்கும் பகுதிகளின் அருகாமையில் உள்ள பலரும் அவர்களுடைய குடிகளை அமர்த்தியிருக்கிறார்கள், அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், பலமுறை அவர்கள் அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்திருக்கிற கோரிக்கை உப்பளங்களை அகற்றாமல் பார்க்க இந்த நில ஆர்ஜிதம் கைவிடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது முன்னாலே பல ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட ஒரு முயற்சி. நாம் கொடுத்திருக்கும் உறுதிமொழி, அரசாங்கம் நில ஆர்ஜிதம் எடுத்துக்கொண்டாலும், இந்த நிலங்கள் உடனடியாக வேறு தொழிற்சாலை அல்லது அதற்குரிய வளர்ச்சிக்குத் தேவைப்பட்டாலொழிய அவர்களை வெளியேற்றுவதிலிருந்து நாம் கண்காணிப்போடு நடத்திக் கொள்வோம். அவர்களுக்கு அந்த உறுதியைத் தந்திருக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் இந்த நிலங்களை மாநில அரசுக்குக் கொடுப்பதற்கு என்ன நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது 1935-ஆம் ஆண்டு கவர்ன்மண்ட் ஆஃப் இண்டியா ஆக்ட்படி எப்படியோ போய்ச் சேர்ந்திருக்கிறது. நாம் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்கள் சொல்லியிருப்பது, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'ஆன பிரின்சிபிள்' நாம் ஒத்திருக்கிறோம். நஷ்ட ஈட்டை நாம் ஆராயும்பொழுது, நம் மாநிலத்திற்குச் சொந்தமான அந்த நிலம் எப்படி முதன்முதலாக மத்திய சர்க்காரிடம் சென்றது என்று ஆராய்ந்து நஷ்ட ஈட்டைத் தீர்மானித்துக் கொள்வதிலே நாம் கவனமாக இருப்போம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அவர்கள் இப்பொழுது காம்பன்சேஷன் கேட்டிருக்கிறார்களா? அப்படியென்றால், எவ்வளவு அமௌண்ட்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நஷ்ட ஈடு தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கொள்கையளவில் ஏற்று இருக்கிறோம். அப்படி அந்த நஷ்ட ஈட்டைத் தருவது என்பதைப்பற்றி பின்னால் தீர்மானித்துக்கொள்ளலாம், நிலத்தைக் கைப்பற்றியபிறகு என்றிருக்கிறோம்.

## கைவினைப்பொருள் தொழிலாளர்கள்

*187 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் கைவினைப் பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் மேன்மையடையும் விதத்தில் தீவிர திட்டமேதும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, புகழ்பெற்ற நம் தமிழகத்தின் கைவினைப் பொருள்களைச் செய்யும் தன்மை மக்களிடத்திலே பாதுகாக்கப்படாமல் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, அதற்காக ஒரு தீவிரத் திட்டத்தை தயாரித்தால் ஒழிய, அதாவது அந்தக் கைவினைப் பொருள்கள் தயாரிப்பது வளர்ச்சியடையாது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி கேளுங்கள். 'அதாவது' 'அதாவது' என்று சொல்கிறீர்களே!

திரு. கே. எ. வகாப்: அப்படிப்பட்ட தீவிரத்திட்டத்தை அரசு செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெரும்பாலும் இந்த ஹேண்டிகிராப்ட்ஸ் ஆர்டிகிள்ஸ் பொறுத்தவரையில் கிராமங்களில் பரவலாக இது உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களுக்குப் போதிய அளவு கடன் வசதி செய்து கொடுக்கின்ற திட்டங்களை நாம் உருவாக்கிட வேண்டும். அதற்கடுத்தபடியாக, உற்பத்தி செய்யப்படுபவைகளுக்கு, விற்பனை செய்வதற்கு சந்தை இல்லாமல் அல்லல் படுகிறார்கள். இந்த இரண்டையும் கவனித்து முடிவு செய்து இப்பொழுது பல மாவட்டங்களில் 9 டிபார்ட்மெண்டல் எம்போரியம் வைத்துக்கொடுக்க முடிவு செய்து வைத்திருக்கிறோம். இதைக் கொஞ்சம் மாற்றி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் ஒரு எம்போரியம் அமைத்து அதன்மூலம், மாவட்டத்தில் உள்ள உற்பத்தி செய்பவர்களோடு தொடர்புகொண்டு கடன் வசதிகள் செய்து கொடுத்து, உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனைக்கும் வகை செய்யும் முறையில் தகுந்த திட்டமாக்குகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக்கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லியாகிவிட்டது. இல்லாததற்கு இவ்வளவு கேள்விகளா?



திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, எம்போரியங்கள் மூலம் இந்த கைவினைப் பொருள்களுக்கு உதவி செய்வதுபற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்பொழுது கிராமத்திலேயிருக்கும் இம்மாதிரி தொழில் செய்பவர்கள் ஆங்காங்குள்ள கூட்டுறவுச்சங்கங்களில் கடன்பெற முடியவில்லை. அதற்குக் காரணம் அது விவசாயிகளுக்கு மட்டும் கொடுக்கிறது. இவர்களுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் கடன் அளித்தால் அவர்கள் செய்யும் பொருள்களைச் செய்து பிழைப்புக்கு வழி ஏற்படும். அதற்கு ஆவன அமைச்சரவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்கள் யாரோ சொன்ன தகவலைத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில்தான் இப்படிப்பட்ட கைவினை இயக்குநர் கூட்டுறவுச் சங்கங்களை வைத்து நடத்துகிறார்கள். இதற்காகப் பணம் கொடுக்க, நம்முடைய ஸ்டேட் கோவாப்பரேடிவ் வங்கியின்மூலம் கடன் கொடுக்கப்பட வேண்டுமென்ற புதிய ஆணை ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின் பேரில் பிறப்பித்திருக்கிறோம். அதற்கு முன் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பேங்குகள் நம் தமிழகத்தில் செயல்பட்டு ஏற்கனவே இருந்து வருகின்றன.

## வண்ணப்புடவைகள்

*188 வினு—திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலர் சேலைகளை கைத்தறிக்கே ஒதுக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், அது எப்பொழுது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கலர் நூலை உபயோகப்படுத்தி கோடு அல்லது கட்டம் போட்ட ரகமும் அல்லது 2½ அங்குலத்துக்கும் அதிகமான அகலக் கரை கொண்ட கலர் சேலைகளும் கைத்தறிக்கு ஒதுக்கி பம்பாய் துணிநூல் ஆணையர் அவர்களால் பஞ்சு துணி கட்டுப்பாடு சட்டம், 1948-ன் கீழ் உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி. கலர்ப் புடவைகளை இம்மாதிரி கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று சொன்னதற்குப் பின்னாலும் விசைத் தறியிலும், இங்கே மில்களிலும் கூட அம்மாதிரி உற்பத்தி செய்யப்படுவதைத் தடுக்க மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கத்தின் ஆணையின்படி பொதுவாக கலர்ச் சேலைகளைத் தடுப்பது என்று இல்லாமல் அதற்கு ஒரு விதி போட்டு 2½ அங்குல பார்டர் என்று போட்டிருக்கிறார்கள், கோடு அல்லது கட்டம் போட்ட ரகம் என்ற வார்த்தைகளைப் புகுத்தியிருக்கிறார்கள். பவர்லூம்ஸைப் பொறுத்தவரை ஐந்து விசைத்தறிகளை வைத்திருப்பவர்களுக்குச் சலுகை என்று சொல்லி இருக்கிறார்கள். ஆணையைப் போட்டு விட்டு விதிவிலக்குகளும் ஏராளமாக இருக்கிற காரணத்தால் இது சரிவர இந்திய நாட்டிலே எங்கும் அமல் நடத்தப்படவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த ஆணை மீறப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய மாநிலத்தை மட்டும் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்காமல்

எல்லா மாநிலங்களையும் சேர்த்து பொதுவான கொள்கையை மத்திய அரசாங்கம் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த ஆணையைத் தீவிரமாக அமல் படுத்த முடியும்.

### சென்னையில் இயங்கும் நீதிமன்றங்கள்

* 189 விஞு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் நடமாடும் நீதிமன்றங்கள் தற்போது எத்தனை இயங்குகின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சென்னையில் நான்கு நடமாடும் நீதி மன்றங்கள் இயங்குகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** சென்னையிலே நடமாடும் நீதிமன்றங்கள் இருந்து, குற்றவாளிகளை உடனடியாக விசாரித்து தண்டனை கொடுக்கிறார்கள். அதுபோல் வட்டங்களில் குற்றம் செய்பவர்களை உடனுக்குடன் தண்டிக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உடனுக்குடன் தண்டனை கொடுத்தால் நல்லது அல்ல. விசாரித்துத்தான் தண்டனை கொடுக்க வேண்டும். அதிக மான வழக்குகள் பெரிய நகரங்களில் வருவதால் அந்த நகரங்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்த நடமாடும் நீதிமன்றங்கள் சென்னையைத் தவிர வேறு எந்த நகரங்களில் இருக்கின்றன ? அப்படி வேறு நகரங்களில் இல்லையென்றால் மதுரை, கோவை, திருச்சி, சேலம் போன்ற அதிக ஜனத் தொகையுடைய நகரங்களில் நடமாடும் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே சில நகரங்களுக்கு இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அந்த விவரம் இல்லை. எந்தெந்தப் பெரிய நகரங்களில் இதுபோன்ற வழக்குகள் அதிகமாக வருகின்றனவோ அங்கெல்லாம் இந்த முறை பின்பற்றப்படும்.

### *Water in Buckingham Canal.*

* 190 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that waters flowing in the Buckingham Canal in Madras City is becoming red; and

(*b*) if so, whether any experiments have been conducted thereon?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம். சில சமயங்களில் பக்கிங்ஹாம் கால்வாயில் மாநகராட்சி குழாய்கள்மூலம் கழிவு நீரை விடுவதாலும், அக்கழிவு நீரிலும் மற்ற கழிவுப்பொருள்களிலும் மருந்து மற்றும் பல



ரசாயனப் பொருள்கள் கலந்திருப்பதாலும் கால்வாயில் செல்லும் நீர் சிவப்பு நிறமாக மாறுகின்றது.

(இ) கால்வாய் தண்ணீர் சிகப்பாக மாறுவது தற்காலிகமே தவிர நிரந்தரமான தன்மையில்லாமையால், பரிசோதனைகள் ஏதும் செய்யப் படவில்லை.

### சாத்தனூர் அணை

* 191. விஞு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணைக்கட்டை மேலும் அழகுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) சாத்தனூரில் உள்ள பூங்காக்களை மேலும் அழகுபடுத்த ரூபாய் 1.80 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

நீர்த்தேக்கத்தின் நடுவே உள்ள தீவில் புதிய பூங்காக்கள் உண்டாக்க ரூ. 1.50 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Over bridge near Adamankottai*

* 192 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct over bridges across Railway crossings at Dharmapuri-Adamankottai and Mc.Donald Choultry on Sankari road;

(*b*) if so, the details thereof and the estimated cost of construction;

(*c*) the respective share of the Central Government and the State Government; and

(*d*) when the work is likely to be started and completed?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) அதியமான் கோட்டைக்கு அருகிலும் மகுடஞ்சாவடியிலும் உள்ள பாலங்களின் மதிப்பீடுகள் முறையே ரூ. 3,53,698, ரூ. 5,17,313-ம் ஆகும்.

(உ) முழுச் செலவும் இரயில்வேயினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(எ) திருத்திய மதிப்பீட்டுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற்றுக் கொடுக்கும்படி 29—11—1971 அன்று இரயில்வேயினர் மாநில நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இது செயல்பட விருக்கிறது. மகுடஞ்சாவடியின் அருகில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது.

## பேருந்து சாலைகள்

* 193 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேருந்துகள் செல்லும் சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி பஸ் போக்குவரத்து உள்ள ரோடுகளை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்த பின்னும் சில சாலைகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றனவே. துரிதமாக அவற்றையும் எடுத்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பஸ் போக்குவரத்துச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுக்குச் சில மைல் நீளச் சாலைகள் எடுத்துக்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 1972-73-ம் ஆண்டில் ஆயிரம் மைல்களை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு நீண்டகாலத் திட்டமாகும். மூவாயிரம் மைல்கள் பஸ் போக்குவரத்துச் சாலைகள் இருக்கின்றன. நிதி நிலைமையை அனுசரித்து மற்ற விஷயங்களையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : இந்த பஸ் போக்குவரத்தில் இருக்கும் பாதைகளை குறைந்தது ஓராண்டு அல்லது இரணடு ஆண்டுகளுக்குள் எடுத்துக்கொள்ள சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கு. அ. பொம்மன் : கிராமப்புறங்களில் இருக்கும் சாலைகள் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருப்பதால் அந்த ரோடுகளையும் மராமத்துத் துறை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பஞ்சாயத்துச் சாலைகளைப் பற்றித்தான் சொல்லுகிறேன். பஞ்சாயத்துச் சாலைகளில் பஸ் போக்குவரத்துச் சாலைகளை அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சிறப்புத் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறப்புத் திட்டத்தின் விவரங்களைச் சொல்ல முடியுமா? காலவரையறையைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது சொல்லுவது இயலாது.





திரு. நா. வெ. குருசாமி : பெரியாறு, தேக்கடி, வைகை அணை போன்ற முக்கியமான இடங்களுக்குச் செல்லுகின்ற மதுரை—குமிழி சாலை சரிவர இல்லை. வைகை அணைக்குச் செல்லவேண்டுமென்றாலே 40 மைல் செல்ல வேண்டும். அந்தச் சாலை அகலப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி யூனியன் சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது பற்றி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது ஏற்கனவே இருக்கும் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவது பற்றி. தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் தரப்படும்.

## பெரியாறு அபிவிருத்தித் திட்டம்

* 194 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் எத்தனை கோடி ரூபாயில் போடப்பட்டுள்ளது ?

(இ) எப்பொழுது அதன் வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் 1966-67-ஆம் ஆண்டில் ரூபாய் 4.25 கோடிக்கு மதிப்பிடப்பட்டது.

(இ) மத்திய நீர் மின் விசைக்குழுவின் ஒப்புதல் கிடைத்தபின் இத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## பச்சையாறு அணைத் திட்டம்

* 195 வினா— திரு. டி. கணபதி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பச்சையாறு அணைத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதிப்பீடு பாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப்படும்.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் : நெல்லை மாவட்டத்திலே மிக வறண்ட பகுதி இந்த நாங்குநேரி பகுதி. எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லை. ஆகவே, உடனடியாக விவசாயத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் இப்போது தலைமைப் பொறியாளர் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி தேவையாக இருக்கிறது. தலைமைப் பொறியாளர் அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்த பிறகு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றப்படும்.

### அறிஞர் அண்ணா சதுக்கத்தை அழகுபடுத்தல்

* 196 வினா—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரறிஞர் அண்ணா சமாதிக்கு அருகில் அழகிய நீர் ஊற்று அமைப்பதற்கு ஜெர்மன் அரசு உதவியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசில் உள்ள நகரத்தின் மேயர், சென்னை மாநகராட்சிக்குப் பரிசாக அளித்த நீர் ஊற்றுப்பொறி ஒன்றினை இவ்வரசு மாநகராட்சியிடமிருந்து பெற்றுள்ளது. இதை அமைப்பதற்கான தக்க இடம் ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

### Building Materials Display Centre

* 197 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state the grounds on which items are selected for display at the Building Materials Display Centre, Chepauk, Madras?

மாண்புமிகு திரு. எஸ் .ஜே. சாதிக்பாட்சா: ஒரு கட்டிட அமைப்பின் பாகமாக உள்ள பொருள்கள் அல்லது அதன் கட்டுமானப்பணிக்குப் பயன்படுகிற பொருள்கள் அல்லது கட்டிடங்களின் தோற்றத்திற்கு அழகூட்டப் பயன்படுத்தப்படுகிற பொருள்கள் குறிப்பிட்ட வாடகையைச் செலுத்துவதன் மேல் கட்டிடப் பொருள்கள் காட்சிக்கூடத்தில் காட்சிப் பொருட்களாக ஏற்கப்படுகின்றன.

* 198 *Q.*—THIRU P. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the staff employed ta the Building Materials Display Centre; and

(*b*) the cost of maintenance of this Centre?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஒரு வழிகாட்டியும், ஒரு உதவியாளரும் கட்டிடக் காட்சிப் பொருள்கள் கலைக்கூடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

(இ) ஆண்டொன்றுக்கு ரூபாய் 10,000.

திரு. ரா. ரா. முனுசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த கட்டிட காட்சிப் பொருள்கள் கலைக்கூடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் போதவில்லை, அதனால் பல பேர் ஒரு நாள் பூராவும் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஆட்களை அதிகரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: போதுமான வசதி இருந்து வருகிறது. நமக்கு கிடைத்து இருக்கும் கணக்குப்படி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8,000 தான். ஆனால் செலவு ரூ. 10,000 ஆகிறது. ஏற்கெனவே அரசுக்கு ரூ. 2,000 இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கேயிருக்கிற பணியாளர்களே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.



### Irrigation Research Station at Poondi

* 199 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any financial assistance is being given to the Irrigation Research Station, Poondi, by the Indian Council of Agricultural Research, New Delhi; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பூண்டி நீரியல் ஆய்வு நிலையத்தில் குழாய் கிணறுகள்/சாதாரண கிணறுகள் பற்றிய பொறியியல் நுணுக்கங்கள் சம்பந்தமான ஆராய்ச்சி நடத்துவதற்கு இந்திய விவசாய ஆய்வுக்குழுவால் ரூ. 3.25 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் இந்திய விவசாய ஆய்வுக்குழுவே ஏற்றுக்கொள்கிறது. 15—11—70 முதல் துவங்கப்பட்டுள்ள இத்திட்டம் 31—12—1974-ல் முடிவடையும்.

### Farm Record Book

* 200 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any system of Farm Record Book has been introduced in the State by the Agriculture Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) தஞ்சாவூரில் பண்ணைப் பதிவுக் குறிப்பு முறையை அமுலில் கொண்டுவருவது பற்றிய ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### பேரீச்சை மரங்கள் பயிரிடுதல்

* 201 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் மணற்பாங்கான மண்டபம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் பேரீச்சை மரங்களை பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

### வாழை ஆராய்ச்சிப் பண்ணைகள்

* 202 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது இம்மாநிலத்தில் வாழை பரிசோதனைப் பண்ணைகள் எத்தனை இருக்கின்றன?

(இ) இப்பண்ணையில் வடார்க்காடு மாவட்டத்தில் பயிரிடுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரகங்கள் எவை, எவை?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறையிலும், மதுரை மாவட்டத்தில் மங்களம்கொம்பு என்ற இடத்திலும், திருச்சி மாவட்டத்தில் உய்யக்கொண்டான், திருமலைக்கிராமத்திலும், வடஆற்காடு மாவட்டத்தில் வடவிரிஞ்சிபுரத்திலும் ஆராய்ச்சிக்காக நான்கு பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

(இ) குட்டைப்பச்சை வாழை, பெரிய பஞ்சை வாழை, ரொபஸ்டா, லெகாடன் முதலிய வாழை ரகத்தில், வடஆற்காடு வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப்படும். மேலும், மற்ற நவீன புகழ்பெற்ற, வணிக வாழைகளான வாலரி, போயோ, 81-86 ஆகிய ரகங்களை வெளிநாட்டிலிருந்து பெற்று இந்நிலையத்தில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப் படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, வத்தலகுண்டில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் ? அதற்கு பயன்படும் நிலப்பரப்பு எவ்வளவு ? அதை விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, மங்களம்கொம்பு என்னும் ஊரில் 30 ஏக்கர் பரப்பில் இவ்வுப ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. வத்தலகுண்டில் அல்ல. பழனி அடிவாரத்தில் இருக்கும் மங்களம்கொம்பு என்று சொன்னேன். இவ்வாராய்ச்சி நிலையத்தில் வாழையின் வகைகள், அவற்றின் குணங்கள், சத்துமிக்க மலைவாழை வகைகள் ஆகியவை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இத்துடன் வாழையின் பொருளாதார முக்கியத்துவம், மண்வளத்தைப் பெருக்க பசுந்தாள் உரங்களை வாழையின் ஊடுபயிராக பயிரிடுதல், மண்ணின் சாரத்தன்மையைப் பராமரித்தல், மலை வாழைக்கு ஏற்ற கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள், வாழையில் தோன்றும் முக்கிய பூச்சி நோய்கள் பற்றியும் ஆராயப்படும்.

எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் என்பதற்கு குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

### கல்பாக்கம் அணுமின் நிலையம்

* 203 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின் நிலைய மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறதா ?

(இ) இல்லை எனில், என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** துணைத் தலைவரவர்களே, அதற்கான கடிதப்போக்குவரத்து மத்திய அரசுடன் நடந்து வருகிறது.

**திரு. சு. துரைசாமி :** துணைத்தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவையான மின்சாரம் இப்போது இல்லாமல், அண்டை மாநிலமான மைசூரிலிருந்து நாம் பெற்று வருகிறோம். மைசூரில் இருக்கும் மின்சாரத்தை மகாராஷ்டிரத்திற்கு கொடுக்கப்போவதாகப் பார்த்தேன். ஆகவே, கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின்சாரம் முழுவதையுமே தமிழ்நாட்டிற்குக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தை மாநில அரசு வற்புறுத்துமா?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்காக முடிவு எடுப்பதற்காகத் தான் மத்திய அரசுடன் கடிதப்போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கல்பாக்கத்தில் மின்சார உற்பத்தி எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 1975-ல் முதல் கட்ட வேலை முடியும். செகண்ட் யூனிட் 76-ல் முடியும் என்று குறிப்பு இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே. இந்தக் கல்பாக்கம் அணு மின்சக்தி தொழிற்சாலை தன்னுடைய பணியைத் துவக்குவதன் மூலமாக சில பேர்களுக்கு, சுமார் 100 பேர்களுக்கு, வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, ஏற்கெனவே காலதாமதமாகி இருக்கிற காரணத்தால், அதை விரைவாக துவக்க—இந்த வேலைவாய்ப்பு நிலைமையை எண்ணிப் பார்த்தாவது —அரசாங்கம் முன் வருமா ? அதிலே தலைமை அணு மின் சக்தி நிலையம் என்ன ஏற்பாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ? ஏனென்றால் பாம்பே நிறுவனத்தினர் இதற்கான காரணம் தங்களால் இல்லை என்று சொல்லியிருக்கிறபோது, இது தாமதப் படுவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தாமதம் என்பது அல்ல. அது முடிய திட்டமிட்டதற்கு மேல் ஒரு ஆண்டு ஆகும் என்று சொல்கிறார்கள். இப்போது வேலை நடந்து வருகிறது.

### விவசாய பாசனத்திற்கு மின் விசை

* 204 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை ஜில்லாவில் விவசாய பாசனத்திற்கு மின்விசை கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுவது உண்மையா ?

(இ) காலதாமதமின்றி மின்விசை கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) குறிப்பான நேர்வு எதுவும் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, திருச்செந்தூர் பகுதியில் இப்போது மின் இணைப்பு கொடுப்பது கொஞ்சமாக இருப்பதால், அதை அதிகரிக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 60,000 கிணறுகளுக்கு மின்இணைப்பு கொடுப்பது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே அந்த வட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக் கிறதோ அவ்வளவுதான் கொடுக்க முடியும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்கில் கூட இது பற்றி பேசப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் அதற்கு ஆவன செய்வதாக சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அரசு அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. மொத்தமாக 14,000 விண்ணப்பங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்றன. இப்போது இருக்கும் நிதி நிலை பொறுத்தவரை 60,000 பம்பு செட்டுகளுக்குத்தான் இணைப்பு கொடுக்க முடியும். யாருமே கொடுக்க முடியாத அளவுக்கு நாம் இப்போது மின் இணைப்பு கொடுத்து வருகிறோம். இப்போது ரூ. 14 கோடி பம்பு செட்டுக்களுக்காக செலவழித்து வருகிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் விவசாயிகள் மின் இணைப்பு பெறுவதற்கு மனு போட்டதற்குப் பின்னால் நில விவசாய வங்கிகள் மூலம் பம்பு செட் வாங்க கடன் பெற்று,. 3, 4 ஆண்டுகள் சென்ற பிறகு கூட அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். ஆகவே, இனிமேலாகிலும் மின்சார இணைப்பு துரிதமாக வழங்க அரசு முன் வருமா? மனு போட்ட 6 மாதத்திற்குள்ளாகவே மின் இணைப்பு வழங்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. கடனை வாங்கிக் கொண்டு, அதே சமயம் மின் இணைப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இரண்டிற்கும் 'கோ-ஆர்டினேஷன்' இருக்கவேண்டும். 5 லட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன. 5 லட்சத்திற்கும் உடனடியாக மின் இணைப்பு ஒரு ஆண்டில் கொடுத்து விட முடியாது. எவ்வளவு விரைவாக திட்டம் செய்தாலும் முடியாது. ரிட்டர்ன் 10 சதவிகிதம் தரவேண்டும். 60,000-க்கு மேல் யாருமே கொடுக்க முடியாது. மேற்கொண்டு இதை அதிகரிக்கலாமா என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** மின்சாரம் தருவதற்கு தடையில்லாச்சான்று வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று பெறுவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தத் தடையில்லாச் சான்று வேண்டாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்படி உத்தேசம் இல்லை.

### லாரி, பஸ் போக்குவரத்து

* 58 வினு—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரவு 2 மணி முதல் காலை 4 மணி வரை லாரி, பஸ்கள் சாலைகளில் செல்லுவதை தடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், கார்களுக்கும் இத்தடை பொருந்துமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தற்போது இல்லை.

(இ) வினுவிற்கிடமில்லை.





**திரு. கே. எ. வகாப் :** தற்போது இல்லையென்றால் எதிர்காலத்தில் வரும் என்ற பாணியில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக அந்த முறை வரவேண்டும். ஏனென்று கேட்டால் அந்த நேரத்தில் தான் டிரைவர்கள் தூங்குகிற நேரமாக இருக்கிறது. ஆகவே, அதை ஆலோசனை செய்து விரைவில் இதற்கான உத்தரவு போட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த குறிப்பிட்ட நேரத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையான விபத்துகள் நடைபெறுகின்றன என்பதை அரசு ஆராய்ந்தது மட்டுமல்லாமல், 1 மணியிலிருந்து 4 மணி வரை நாம் சோதனை நடத்தினால் போதும், அந்தச் சோதனைகள் நடத்துவது நடை முறையில் சாத்தியமா என்பதைப் பற்றி அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இரவு இரண்டு மணி முதல் 4 மணி வரையில் லாரி ஓட்டக்கூடாது என்று விதி போடாமல் இரண்டு டிரைவர்கள் போட்டு ஓட்டவேண்டும் என்று உத்தரவு போடமுடியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இரண்டு டிரைவர்கள் லாரிகளிலே போவது அனுமதிக்கப்படவேண்டுமென்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருந்துவந்தது. ஆனால் அதிலே உள்ள சிரமங்கள் என்னவென்றால் சில பெரிய லாரி நிறுவனங்கள் ஆட்களை ஷிப்ட் முறையில் மாற்றுகிறார்கள். டி.வி.எஸ். ஏபி.டி. போன்ற நிறுவனங்கள் இப்படி செய்கின்றன. இந்த இரண்டு டிரைவர்கள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், ஒரு டிரைவர் படுத்து தூங்குவதற்கு வசதி செய்து தரவேண்டும். அந்த வசதிகள் செய்து தருவதில் கஷ்டம் இருக்கிற காரணத்தால், அந்த உத்தரவு போடுவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, இரவில் செல்லும் ஆம்னிபஸ்கள் அதி வேகமாக செல்கின்றன என்பதை அரசு அறியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஆம்னிபஸ்களை பொறுத்த வரையில் கிட்டத்தட்ட இப்போது 46 பஸ்களில் அரசாங்கம் சோதனை செய்து, சோதனைகள் மூலம் கைப்பற்றி இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே அனைவரும் அறிவர். ஆம்னிபஸ்கள் இப்போது இதே நெருக்கடி நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன. இதிலே டிரைவர்களை மாற்றுவதற்கு வசதி இல்லாமல், அவர்கள் ஒரே நேரத்தில் 2 டிரைவர்களை வைத்து ஓட்ட முடியவில்லை.

### தொலைதூர அரசுப் பேருந்துகளில் குளிர்சாதன வசதி

* 205 வினு—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

நீண்டதூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் 'குளிர் சாதன வசதி' செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ்களிலே சீட் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சீட் முறையானது கஷ்டமாக இருக்கிறது. 2-க்கு மூன்று சீட் அமைத்திருக்கிறார்கள். இதை 2-க்கு 2 ஆக அமைத்து அதில் கைவைப்பதற்கு இடங்கள் வைத்து நல்ல முறையில் இருக்கவேண்டும். இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில் இந்த வசதி செய்ய முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இப்போது அண்மையிலே கட்டப்பட்டு விடப்பட்ட பேருந்துகள் 33-க்கு 2 வகையில் நல்ல வசதியோடு இருக்கும், மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்துகளில் இன்னும் வசதிகள் வைக்காத காரணம் அந்த மெஷின்கள் எல்லாம் வாங்குவதற்கு கூட ஏற்பாடுகள் நடைபெற்றபோது அண்மையில் நடந்த யுத்தத்தின் காரணமாக அவைகளை பெற முடியவில்லை. அவைகளைப் பெறுவோமானால் எல்லா பஸகளிலும் 3-க்கு 2 வகையில் இருக்கின்ற பேருந்துகள் வசதியாக இருக்கும். இருந்தாலும் கூட 2-க்கு 2 சீட்டுகள் என்ற அளவில் டூரிஸ்டு லக்சரி கோச்சுகள் என்ற முறையில் அரசாங்க போக்குவரத்துத் துறையில் ஒரு 10 அல்லது 15 பேருந்துகள் கட்டுவதற்கு ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

### தொலைதூர துரிதப்பேருந்துகளின் பெயர்கள்

* 206 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தொலைதூர துரிதப் பேருந்துகளுக்கு தமிழ் மன்னர்களின் பெயரையும் தலைவர்களின் பெயரையும் வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இல்லை.

### *Lorries emitting smoke*

* 207 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that lorries and cars were booked by police in the City of Madras around the first week of September 1971 due to their emitting too much of smoke; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) 1971, செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் சென்னை மாநகரத்தில் அதிகமான அளவு புகையை வெளிவிடும் காரணத்திற்காக லாரிகள் மீது மட்டுமே காவலர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கார்கள் பொதுவாக அதிகமான அளவு புகையை வெளிவிடா என்ற காரணத்திற்காக, கார்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

(இ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் மும்முர ஊக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை





அமைச்சரைத் தலைவராகக்கொண்டு காற்று தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1971, செப்டம்பர் முதல் வாரத்தில் இது குறித்து 212 லாரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

DR. H. V. HANDE: Sir, may I know whether action is being taken against State Transport Buses also. Also whether it is a fact that a large number of State Transport Buses are quite old and therefore they emit a lot of smoke. As the Police Department are not able to take action against them, what the Government propose to do in the matter. Also, what are the rules and regulations governing it?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, எனக்கு கிடைத்த தகவல்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அரசாங்கத்துக்கு இல்லாத அக்கறை சுதந்திரா கட்சி உறுப்பினருக்கு இருப்பதால் ஆட்சேபனையில்லை. இருந்தாலும் அரசாங்க பஸ்களை அத்தகைய வழக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. அவைகளில் புகை கிளப்ப முடியாத அளவுக்கு சீர்திருத்த முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

DR. H. V. HANDE: Sir, I take exception to the expression of the Hon. Minister regarding party politics. Even the Members of the Public Accounts Committee wanted the Government to rectify these defects and therefore there is no party politics involved in the matter. My question is whether any action has been taken by the Government wherever buses are in a dilapidated condition and are emiting smoke?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Speaker, one of the officials of the Transport Department is also a member of the Committee that has been formed. He is taking precautionary measures as far as possible in the Transport Department.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இதை பார்க்க வேண்டுமென்று பொதுவாக குழுக்கள் போடப்பட்டு அந்த குழுக்கள் செயற்படுவதற்கு முயற்சிகள் அரசாங்கப் போக்குவரத்து துறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும், நாம் எல்லோரும் நன்றாக இருக்கவேண்டுமென்று விரும்பினாலும் கூட வியாதி நீடிக்கிறது. அதே போல் இந்த வியாதி நீடிக்கிறது.

### அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பூதியம்

* 208 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளில் உள்ளது போல், அரசுப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் ஊக்கப்படுத்தும் வகையில் வசூல் படி (Collection Batta) அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையிலுள்ள போக்குவரத்து மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகிய இவ்விரு பிரிவினருக்கும் பொருந்தக் கூடிய ஒரு படித்தான ஊக்க போனஸ் அளிக்கும் திட்டத்திற்கான செயற் குறிப்பு ஒன்று துறையின் ஆய்விலுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் தொழிலாளருக்கு இந்தக் காலம் வரலாற்றிலே 35 லட்சம் ரூபாய் போனஸ் தரப்பட்டு அவர்கள் மேலும் ஊக்கத்துடன் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் அவர்களிடத்தில் வேலை வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டுமென்றும் ஒரு திட்டத்தை வெகு வேகமாக அமுல்படுத்துவதற்கு முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தொழிலாளர்கள் ஊக்கத்தோடு பணியாற்றுகிறார்கள். அது உண்மை. அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை ஊட்டுகின்ற வகையிலும் புரிப்பூதிய திட்டத்தை தரவேண்டும் என்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை ஆராய்ந்து வருகிறது. தொழிற்சங்க தலைவர்களும் ஏதேனும் திட்டங்கள் கொண்டுவருவார்களேயானால் அதைப் பற்றி பரிசீலிப்போம் என்று தொழிற்சங்க தலைவர்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, தனியார் பேருந்துகளைவிட அரசு பேருந்துகளில் கட்டணம் அதிகமாக இருப்பதால் நீலகிரி மாவட்டத்தில் அரசு பேருந்துகள் காலியாகவே ஓடுவது அரசுக்குத் தெரியுமா? இதை தனியார் பேருந்துகள் போல் குறைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கட்டண விகிதத்தைப் பொறுத்த வரை தனியார் பேருந்துகள், அரசு பேருந்துகள் ஒரே கட்டணத்தை வசூலிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆகவே எந்தத் தனியார் பேருந்துகளாவது குறைவாகக் கட்டணம் வசூலிப்பார்களேயானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தனியார் பஸ்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இப்போது வருமானம் குறையாது, அரசாங்க பேருந்துகளுக்கு கிடைக்கின்றது.

### மீனாட்சி அம்மன் கோவில்

*** 209 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் காலி இடம் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அந்த இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காலி இடத்தைப் பயன்படுத்த என்ன திட்டம் மேற்கொள்ளப் படும் என்று கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சுற்றியுள்ள காலி இடத்தை ஒரு பூந்தோட்டம் ஆக்கவும், காலி இடங்களில் கடைகள் அமைக்கவும், ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. ஏனென்றால் கடைகள் அந்த இடத்தில் உள்ள சிற்பங்களை மூடிவிடுகின்றன. அந்தக் கடைகளை வெளியே வைத்தால் ஒரு வகையில் கோவிலுக்கு வருமானம் வருகிறது. மற்றொரு பக்கத்தில் கோவிலைப் பாதுகாக்கும் வகையில் கோயிலைச் சுற்றிலும் கடைகள் கட்டுவது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. பி. கந்தசாமி :** பேரவைத் தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தென் இந்தியாவிலேயே புராதன கோவில் என்று தெரிந்திருந்தும் அரசு அதைச் சுற்றியுள்ள அநேக பாகங்களில் பூந்தோட்டங்கள் ஆக மாற்றுவது பெரிய புனிதத் தன்மையை (ஸாங்க்டிடி) பாதிக்கும் வகையில் இருப்பதால் இந்தக் கொள்கையை அரசு கைவிட முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கோவிலுக்குள்ளே கடைகளை வைக்காது வெளியே வைக்கும் காரணத்தால் கோவிலின் புனிதத்தன்மை எந்த வகையிலும் கெடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### கோவில் தேர்கள் கட்ட பயிற்சி

*** 210 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்களில் திருத்தேர்கள் செய்வதற்கான பயிற்சிப் பள்ளிகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (3) ஒத்திவைப்புத் தீர்மானம்

**போலீஸ் காவலில் மருத்துவ மனையில் இருந்த தொழிலாளர் தலைவர்களை சிலரை மத்திய அமைச்சர் திரு. கே. ஆர். கணேஷ் சென்று பார்த்ததாகச் சொல்லப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. எ. வகாப் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோருகிறேன் என்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

"28-1-72-ஆம் நாளன்று ஆவடி டாங்கி தொழிற்சாலை முன்னால் நடந்த கலகத்தின் விளைவாகப் போலீசாரும் தொழிலாளர்களும் காயமடைந்ததாகவும் கலகம் விளைவித்த தொழிலாளர் தலைவர்கள் திரு. குசேலர், திரு. சிந்தன்

உட்பட 48 பேர்கள் கைது செய்யப்பட்டு காயமடைந்த குசேலரும், சிந்தனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர் என்றும், 20-1-1971-ம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் இந்த அவையில் அறிவித்துள்ளார். ஆனால் அத்தலைவர்களை மத்திய மந்திரி திரு. கே. ஆர். கணேஷ் அவர்களும் இன்னும் பிறரும் சென்று கண்டதாகவும், மேலும் அத்தலைவர்கள் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன. இச்செய்தி தொழிலாளர் தலைவர்கள் போலிஸ் காவலில் உள்ளவர்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்ததற்கு முரண்பாடாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் 29-1-1972-ல் இந்த மன்றத்தில் அறிவித்தது உண்மை நிலையை ஒட்டியதா என்ற அவசரமான விஷயத்தை விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்தவைக்கக் கோருகிறேன்" என்று.

**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கொண்டுவந்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானமானது இப்பொழுது நாட்டிலே நடந்துவருகின்ற குழப்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவு காண்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பான நேரமாக இருக்கும். இங்கே மாநில சுயாட்சி என்று பேசினாலே அதற்குப் பலவித காரணங்களைக் கூறுகின்ற நேரத்திலே மத்தியிலே இருக்கிற அமைச்சர் அவர்கள் மாநில விவகாரத்திலே ஊடுருவி வருகிற தன்மை இதிலே காணப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். நாம் மாநில சுயாட்சி பற்றி பேசுகிறபோது மத்திய ஆட்சியிலே தலையிடுகின்ற தன்மையெல்லாம் அவர்கள் பெரிதுபடுத்திப் பேசுகின்றார்கள். இன்றையத் தினம் தமிழக மாநிலம் எடுப்பார் கைப்பிள்ளையைப் போல் இருக்கிறதோ என்று எண்ணக்கூடிய அளவிலே செயல்கள் நடப்பதை பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிகின்றோம். இங்கே பத்திரிகையிலே வந்திருக்கிற செய்திகளையெல்லாம் பார்க்கின்றபோது—மிகப் பயங்கரமான முறையிலே செய்திகளைப் போடுகின்றார்கள் என்றுகூட சொல்வேன்—இங்கே தொழிலாளர்களுடைய நிலைமைகளையெல்லாம் பற்றிய செய்திகளைப் பார்த்தால் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானம் எப்படி அவசியம் என்று சொல்லுங்கள்.

**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிவிப்பை செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த அறிவிப்புக்கு மாறுபட்ட ஒரு சூழ்நிலை நடந்திருக்கிறது. மத்திய மந்திரி கே. ஆர். கணேஷ் என்பவர் கைது செய்யப்பட்டு மருத்துவ மனையிலே இருக்கிறவர்களைச் சென்று பார்த்திருக்கின்றார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அவர் ஒரு அறிக்கையையும் விட்டிருக்கிறார். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே 29—1—1972 அன்று சொல்கிறபோது அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். கைது செய்யப்பட்டிருப்பவர்களை சென்று பார்க்க வேண்டுமென்றால் கோர்ட்டின் அனுமதி பெறவேண்டாமா, போலிசாரின் அனுமதி பெறவேண்டாமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், அப்படி சென்று பார்ப்பவர்கள் அமைச்சர்கள் என்பதற்காக அவர்களுக்கு ஏதாவது தனியாக பிரஜா சலுகை இருக்கிறதா என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன். ஆகவே மத்திய மாநில உறவு நிலை பற்றி அறிய ஒரு சந்தர்ப்பத்தை இந்த சமயத்திலே பயன்படுத்திக்கொள்ள



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதைப் பற்றி விவாதிப்பதற்கு சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் ஒரு வேளை நான் இந்த அவையிலே கூறியதே தவறான செய்தியோ என்கின்ற ஒரு பிரச்சினையை கிளப்பி இருக்கிறார்கள். குறிப்பிடப்பட்ட குசேலர், சிந்தன் போன்றவர்கள் கைது செய்யப்பட்டதும் உண்மைதான், அவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதும் உண்மைதான், அவர்கள் மருத்துவ மனையிலே இருப்பதும் உண்மைதான். அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கிளப்பப்பட்டன அந்த சந்தேகங்களுக்கு நான் அவைகள் உண்மைதான் என்று கூறியதன் மூலம் விடையளித்திருப்பதாகவே கருதுகின்றேன்.

கைது செய்யப்பட்ட அவர்கள் காயமுற்றிருக்கின்ற காரணத்தினால் மருத்துவ மனையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக, கைதுசெய்யப்பட்டு ரிமாண்டிலே உள்ள குற்றவாளிகளாக இருந்தாலும் அல்லது சிறையிலே உள்ள குற்றவாளிகள் வேறு காரணங்களுக்காக அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்து மருத்துவமனையிலே இருந்தாலும் அவர்களைப் பார்க்கச் செல்வதற்கு, எப்படி சிறையிலே இருப்பவர்களைப் பார்க்க செல்வதற்கு அனுமதி பெற வேண்டுமோ அதைப்போல, அனுமதி பெறவேண்டும் என்கின்ற விதிமுறைகள் இருக்கின்றன. இதற்கிடையிலே கைதுசெய்யப்பட்டு மருத்துவ மனையிலே இருப்பவர்களைப்பற்றி பத்திரிகைகளிலே இப்பொழுது தவறான செய்திகள் எல்லாம் வந்திகொண்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்கள் என்றே செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் தனிப்பட்ட முறையிலே இப்படிப்பட்ட தவறான செய்திகளை வெளியிட்டு சட்டமுறைகளுக்குப் புறம்பாக நடந்துகொள்கின்றவர்கள் மீது என்ன நடவடிக்கைகளை சட்டப்படி மேற்கொள்வது என்பது பற்றி அரசு ஆலோசித்து வருகின்றது.

அதுமாத்திரமல்லாமல், மருத்துவ மனையிலே இருக்கிற குசேலரின் உடல்நிலை மிக மோசமாகிவிட்டது என்ற பரபரப்பான செய்திகளைப் போடுகின்றன. மருத்துவத் துறையிலேயிருந்து வந்திருக்கிற தகவலின்படி அவர்களுக்கு லேசான காயங்கள்தான் இருப்பதாகவும், பத்திரிகையிலே வந்ததைப்போல் மோசமான நிலைமைகள் எதுவும் இல்லை என்றும் தெரிய வருகின்றன. அதை நான் இந்த அவைக்கு, பத்திரிகைகளிலே அப்படிப்பட்ட செய்திகள் வந்திருக்கின்ற காரணத்தால், தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அமைச்சர் சென்று பார்த்ததைப்பற்றி குறிப்பிடப்பட்டது. நேற்று காலையில் 11 மணி அளவில் திரு. கே. ஆர். கணேஷ் அவர்களும், டாக்டர் விஜய லட்சுமி அம்மையார் அவர்களும் மருத்துவ மனைக்குச் சென்றிருக்கின்றார்கள். அங்கே சென்று அவர்கள் மேற்கண்டவர்களைப் பார்ப்பதற்காக போனபோது அவர்கள் அமைச்சர் என்று தெரியாத காரணத்தினால் போலிசார் தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் போன மெய்காப்பாளர்கள் அவர்கள் அமைச்சர் என்று கூறியபிறகு, போலிசாரும் அவர்களை அதற்குமேல் தடுப்பது முறையல்ல என்கின்ற அளவில், நாகரிகம் கருதி, அவர்களைப் பார்த்துச் செல்வதற்கு அனுமதித்திருக்கிறார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 சனவரி 31

பத்திரிகைகளில் அவர்கள் பார்த்து நலம் விசாரித்தார்கள் என்கின்ற அளவோடு இல்லாமல், இன்று காலையிலே வந்த சில காங்கிரஸ் பத்திரிகைகளிலேகூட, கலவரத்தைப்பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றெல்லாம் செய்தி வந்திருக்கிறது. தமிழ்நாடு அரசைப் பற்றியும், காவல் துறையைப் பற்றியும், கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் வந்த அமைச்சரிடத்திலே கண்டன முழக்கங்களைச் செய்தார்கள் என்றெல்லாம் பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. இது பொறுப்புள்ளவர்கள் கட்டிக் காக்க வேண்டிய மரபுக்கு நல்லதல்ல. மத்திய அமைச்சர் கணேஷ் அவர்கள் மேற்கண்ட குற்றவாளிகளைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியிருப்பாரானால், அவர்கள் அரசுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ முறைப்படி தெரிவித்திருக்கலாம். இன்னும் சொல்லப்போனால், 10½ மணி அளவுக்குக்கூட மாண்புமிகு இராமச்சந்திரன் வீட்டுத் திருமணத்தின்போது இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் அவர்களும் நானும் பக்கத்திலேதான் உட்கார்ந்திருந்தோம். அப்பொழுதுகூட இப்படிப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் அதிகாரிகள் மூலம் இந்த விதிமுறைகளை அனுஷ்டித்து இருந்திருக்கலாம். அரசோ அதிகாரிகளோ தக்க வசதிகளைச் செய்துகொடுத்திருப்பார்கள். மருத்துவ மனைக்கும் முன்கூட்டியே செய்தி சொல்லி அனுப்பப்படவில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அங்கும் முன்கூட்டியே செய்திகூட அனுப்பாமல் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். வந்திருக்கிறவர் மத்திய அமைச்சர் என்று தெரிந்த காரணத்தால் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் எல்லா மத்திய அமைச்சர்களையும் போலிஸ்காரர்களோ அல்லது அதிகாரிகளோ அடையாளம் கண்டுகொள்வதென்பது எளிதான காரியம் அல்ல. எல்லா மாநிலத்திலும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. எந்தவித அசம்பாவிதமும் இல்லாது பார்த்துப்போன வரையிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனாலும் அதற்கென்று இருக்கிற விதிமுறைகளை மத்தியிலே இருக்கிற பொறுப்புள்ள அமைச்சர் அவர்களே மீறுவது என்பது முறையல்ல, தேவையற்றது என்று தெரிவித்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை விவாதிக்க இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியம் அல்ல என்று, தலைவரவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், பொதுவாக மத்திய அமைச்சரோ அல்லது மாநில அமைச்சரோ . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறேன், இந்த மன்றத்திற்கென்று சில முறைகள் உண்டு. என்று . . ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள்தான் விளக்கம் கேட்கவேண்டும். இருந்தாலும் நான் இப்பொழுது உங்களை அனுமதிக்கின்றேன். உங்களைப் போன்றவர்கள் நல்ல மரபுகளைப் பின்பற்றினீர்களானால், பல நேரங்களிலே நடக்கிறமாதிரி, தரம் குறைந்துகொண்டு வருகிறது நமது மன்றத்தில், அப்படி நடக்காமல் இருப்பதற்கு உதவிகரமாக இருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது சம்பந்தமாக ஏற்கனவே நான் இரண்டு முறை ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிற காரணத்தால்தான் அது தொடர்பாக இருக்கிற நிலையிலே சொல்ல நான் நினைக்கிறேன். பொதுவாக மத்திய அமைச்சரோ மாநில அமைச்சரோ யாராவது ஒருவரை மருத்துவ மனையிலே பார்ப்பதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. இந்த மத்திய அமைச்சரைப் பொறுத்தவரையிலே எனக்குத் தெரிந்தமட்டும் எந்த மாதிரியான அறிக்கையும் கொடுத்து சிக்கல் உண்டாக்கியதாகத் தெரியவில்லை. ஆகவே இப்படி அமைச்சர்களுக்குள்ளே இருக்கக்கூடிய மரபுகளைப்பற்றி கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 சனவரி 31 [டாக்டர் மு. கருணாநிதி]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நேற்று வந்தவர் அறிக்கைகள் கொடுத்து சிக்கல் உண்டாக்கவில்லை என்று கூறி முன்புவந்தவர் அறிக்கைகள் கொடுத்து சிக்கல் உண்டாக்கியதை மறைமுகமாகக் கண்டித்ததற்கு நான் கே.டி.கே. தங்கமணி அவர்களை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் மருத்துவ மனையிலே அமைச்சர்கள் போய் பார்க்கக்கூடாது என்பதல்ல. மருத்துவ மனையிலே யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். ஆனால் கைது செய்யப்பட்டு குற்றவாளியாக ஒருவர் இருக்கிறார். அவரைப் போய்ப் பார்க்கிறபோது மத்திய அமைச்சருக்கு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது. கடமை இருக்கிறது. ஏனென்றால் அவரை அடையாளம் தெரியாது. யார் வேண்டுமானாலும் மத்திய அமைச்சர் என்று சொல்லிப் போய்விட முடியுமா? திரு. கே. ஆர். கணேஷ் அவர்களை இங்கே யாருக்கும் தெரியாது. திரு. சவான், திரு. ஜகஜீவன்ராம் போகிறார்கள் என்றால், அவர்கள் சென்றதும் போலிசார் வழிவிடுவார்கள். திரு. கணேஷை டாக்டர் விஜயலட்சுமி அம்மையாருக்கு தெரியும் அல்லது ஒரு சிலருக்குத்தான் தெரியுமே யல்லாமல் மற்றவர்களுக்கு அதிகமாக அவர்களைத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. அப்படிப்பட்ட ஒருவர் மருத்துவ மனைக்குச் செல்வதும், அவர் தடுக்கப்பட்டபோது டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் இவர் மந்திரி என்று சொல்வதும், பத்திரிகையிலே செய்தி வந்தது. மந்திரி தடுக்கப்பட்டார். என்ற செய்தி ஏன் வரவேண்டும்? அது மாநில அரசுக்கு அகவுரவமா அல்லவா? ஒரு மாநில நிர்வாகத்தில் ஒரு மத்திய அமைச்சர் சில முடிவுகளை தெரிந்துகொள்ள செல்லும்போது அவர் தடுக்கப்பட்டார் என்ற செய்தியே கூட மாநில அரசுக்குப் பொறுப்புள்ள செய்தியாகும். மாநில அரசைக் கேள்வி கேட்க வேண்டிய செய்தியாகும். நாளைக்குக் கேட்கலாம். ஒரு மத்திய அமைச்சர், பொறுப்புள்ள அமைச்சர். மருத்துவ மனைக்கு ஒரு கைதியைப் பார்க்கச் செல்கிறபோது தடுக்கப்படலாமா என்று கேட்டால், மாநில அரசின் சார்பாக மத்திய அரசுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவேதான் சொல்கிறேன். முறைப்படி தெரிவித்திருந்தால், தக்க ஏற்பாடுகள் செய்திருக்கலாம். அதுபற்றி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தால், ஒரு அதிகாரியும் அவரோடு போய் இருப்பார். மத்திய அமைச்சரையும் முதலில் அங்கே யாரும் தடுத்திருக்கமாட்டார்கள். பின்னால் அவருடன் சென்ற விஜயலட்சுமி அவர்கள் கூறியதன் பேரில்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையும் ஏற்பட்டிருக்காது. மத்திய அமைச்சர் திரு. கணேஷ் அவர்களை எல்லா அதிகாரிகளும் அறியாததே இந்நிலைக்குக் காரணம் என்பதையும் அங்கத்தினர்கள் அறிய வேண்டும். மத்திய அமைச்சர் அங்கே போகக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. போகலாம். ஆனால் போகும்போது முறைப்படி சென்றிருக்க வேண்டும்; விதிமுறைகளை மீறி இருக்கவேண்டாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: With your permission, may I make one submission? The Hon. Chief Minister was saying that the Hon. Minister K. R. Ganesh is known only to Dr. Vijayalakshmi. There is some insinuation in that. I would humbly request the Hon. Chief Minister not to entangle names, so that bad inference may not be drawn. Also this is not in good taste. That is all what I want to say.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்படியே தவறான 'டேஸ்ட்' வரவேண்டுமென்று அவர்கள் பேசுவது குறித்து நான் மிக்க வருந்துகிறேன். அவர்களுக்கு இப்படியொரு 'டேஸ்ட்' நாட்டிலே பரவ வேண்டுமென்ற எண்ணம். ஆகையால்தான் இப்படிச் சொல்கிறார்கள். நான் சொன்னது டாக்டர் விஜயலட்சுமி. அவர்கள் அங்குள்ளவர்களிடம் 'இவர் மத்திய அமைச்சர் கே. ஆர். கணேஷ்' என்று சொன்னதின் காரணத்தினால்தான் அங்குள்ளவர்களுக்கு அவர் யார் என்று தெரிந்தது. மத்திய அமைச்சர் கே. ஆர். கணேஷ் அவர்களை எனக்குத் தெரியும். இங்குள்ள அமைச்சர்களுக்குத் தெரியும். அங்குள்ளவர்களுக்கு எப்படித் தெரியும்?

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் எழுந்தார்கள்) (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டமாதிரி, 'நீங்கள் ஒரு மந்திரியா?' என்று கேட்டு விடாதீர்கள்.

இந்த மன்றத்தின் தரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருவதற்கு நாம் இடம் அளிக்கக்கூடாது. மாண்புமிகு அங்கத்தினர்களுடைய பேச்சுக்களும், குறுக்கீடுகளும் நம்முடைய விதிமுறைகளுக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய அக்கறை எல்லாம்.

எது எதற்கு விளக்கம் கேட்பது என்பதற்கு சில நியதிகள் இருக்கின்றன. சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த நியதிக்குட்பட்டு விதிமுறைகளுக்குட்பட்டு விளக்கம் கேட்பதுதான் நல்லது.

முந்தாநாள் நடந்துவிட்ட நிகழ்ச்சி பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு விளக்கம் கேட்பதற்கு என் அனுமதியைக் கேட்டார்கள். நானும் அவருக்கு அனுமதி அளித்தேன்.

கைதாகி, மருத்துவ மனையில் இருக்கக்கூடிய ஒருவரை மருத்துவ மனையில் சென்று பார்ப்பதற்கு என்ன விதிமுறைகள் இருக்கின்றன என்று கேட்டார்கள். அது அவர்களுக்கே நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். காரணம் அவரும் கைதாகி சிறையில் இருந்திருக்கிறார். நானும் சிறையில் இருந்திருக்கிறேன். ஜெயில் விதிமுறைப்படி, கைது செய்யப்பட்டிருப்பவர்களை, சிறையிலேயோ அல்லது உடல் நலமில்லாத காரணத்தினால் அப்போது அவர் மருத்துவ மனையிலிருந்தால் மருத்துவ மனைக்குச் சென்றோ பார்ப்பதற்கு சில நியதிகள் இருக்கின்றன. கைதாகி, மருத்துவ மனையில் இருப்பவரை எப்போது வேண்டுமானாலும் போய் யாரும் பார்க்கலாம் என்பது முடியாத காரியம். அனுமதியின்றி, கைது செய்யப்பட்டவரைப் பார்க்க மருத்துவ மனைக்குச் சென்றபோது, அங்குள்ளவர்கள் தடுத்தார்கள் என்பதாக அங்குள்ள அதிகாரிகளைக்



குறை கூறி விவாதிப்பது சற்றும் பொருத்தமுடையதல்ல. இது இங்குள்ள எத்தனையோ பேர்களுக்கும் தெரிந்திருக்கும். காரணம், இங்குள்ள எத்தனையோ பேர்கள் ஜெயிலில் இருந்திருக்கிறார்கள். நானும் இருந்திருக்கிறேன். உறுப்பினர் அவர்களும் இருந்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் இருந்திருக்கிறார்கள். மற்ற அமைச்சர்களும் இருந்திருக்கிறார்கள். கைதிகளைச் சென்று பார்ப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் எல்லோருக்கும் பொருந்தும். இங்குள்ளவர்களானாலும், மத்தியில் உள்ளவர்களானாலும் அந்த விதிமுறைகளுக்குட்பட்டேதான் செயல்பட வேண்டும். அதுதான் மரபு. எந்தச் சந்தர்ப்பத்திலும் சில அடிப்படை விதிமுறைகளை யாரும் மீறாதிருப்பதுதான் நல்ல ஜனநாயக அடிப்படைகளை ஏற்படுத்துவதற்கு வழியாக இருக்கும்.

அப்படி இருக்கும்போது இந்தச் சாதாரணப் பிரச்சினைபற்றி குறுக்கீடுகளுக்கு அவசியமில்லை. விளக்கம் கேட்டிருக்க வேண்டியதில்லை. இதுபோன்ற காரியங்களினால் நம் மன்றத்தின் தரம் குறைந்துவிடக் கூடாது என்பதனால் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் அவ்வப்போது மன்ற விதிகளை நினைவு படுத்தி வருகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## (4) அரசினர் சட்டமுன்வடிவு.

### 1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர், 1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (5) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று இந்த விவாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில் உரையோடு முடிவடைய இருக்கிறது. இன்னும் இந்த விவாதத்தில் திரு. ஏ. ஆர். பெருமாள், திரு. மொய்தீன், திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் பேசவேண்டியிருக்கிறது. அதற்குமுன் திரு. மணலி கந்தசாமி அவர்களும், திரு. குருசாமி அவர்களும் உரையாற்றுவதற்கு வற்புறுத்திக் கேட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் இருவரும் நான் சொல்லாமலேயே சுருக்கமாகப் பேசி, முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. நா. வெ. குருசாமி :** பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக் கொள்ளலாமென்று ஆசைப்படுகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில், குறிப்பாக நெசவாளர்களைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அதுகுறித்து நான் வருந்துகிறேன். என்னுடைய தொகுதியில் சக்கம்பட்டி, சுப்புலாபுரம் முதலிய இடங்களில் உள்ள நெசவாளர்கள் தற்சமயம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கஷ்டமான சூழ்நிலையில், நெசவுத் துறையில் விசைத்தறிகள் புகுத்தப் பட்டு வருகின்றன. அதனால் அந்த நெசவாளர்கள் மேலும் கஷ்டப் படுகிறார்கள். அந்த நிலையைப் பார்ப்பதற்கே பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு மாற்றுத் திட்டமாக ஏதாவது ஒரு தொழிற்சாலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், அதன்மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இளைஞர் அணி என்று ஒரு இயக்கம் செயல்பட்டு வருகிறது. அதில் 2,000 இளைஞர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த 2,000 பேர்களில் என் தொகுதியிலிருந்து ஒருசிலரையாவது சேர்த்திருக்கிறார்களா என்றால் அது கேள்விக்குரிய விஷயமாகவே இருக்கிறது. இனிமேலாவது இந்தக் குறையைப் போக்கி, ஒரு தொகுதிக்கு இவ்வளவு இளைஞர்களைச் சேர்த்துக்கொள்வது என்ற திட்டத்தின் அடிப்படையில் இளைஞர் அணிக்கு இளைஞர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாலை வசதியை எடுத்துக் கொண்டால், பெரும்பாலான சாலைகள் மிகவும் மோசமான நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. மதுரை-குமிழி சாலையை எடுத்துக்கொண்டால் 1947-க்கு முன்னால் இருந்ததைப் போலவே இன்றைக்கும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட சாலைகளை நல்லமுறையில் சீர்படுத்தி, விரிவுபடுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறையை எடுத்துக் கொள்வோமானால், பம்ப் செட்டுகளும், வீதி விளக்குகளும் அதிகமாக இருக்கும் இடங்களிலும் 100 கே.வி. ட்ரான்ஸ்பார்மர்களை வைத்திருக்கிறார்கள். அதனால் மோட்டார்களும், விளக்குகள் எரிந்து கெட்டுப் போய்விடுகின்றன அல்லது எரியாமல் கெட்டு விடுகின்றன. எனவே, இந்த 100 கே.வி. ட்ரான்ஸ்பார்மர்களை மாற்றி,



மேலும் மின்சாரக் கருவிகள் பழுதடையாமல் இருக்க மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியைச் சேர்ந்த சேத்துப்பாறை, குப்பாம்பாறை ஆகிய இடங்களில் புதிய திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும், இதனால் ஜெயமங்கலம், சில்வார்ப்பட்டி, குள்ளபுரம் ஆகிய இடங்களில் வசதிகளை விஸ்தரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் உரையின் மூன்றும் பக்கத்தில் ஏழை எளிய மக்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் திட்டங்[illegible]ந்து செயல்பட வேண்டுமென்றும், அது கவர்னர் உரையில் மட்[illegible]ச் செயல் படுத்த அரசாங்கம் ஆவனச் செய்ய வேண்[illegible]றும் கேட்டுக்கொ[illegible] என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்[illegible]

*** திரு. சி. மணலி கந்தசாமி :** மா[illegible]கு பேரவைத் தலைவ[illegible], மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீ[illegible]னக்கு இருக்கிற சில கருத்[illegible] எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த அறிக்கையிலே இருக்கிற ஒரு விஷ[illegible]க் குறிப்பாகச் சுட்[illegible]ட்ட விரும்புகிறேன். குறைந்தபட்சத் தேவைகளை [illegible] செய்[illegible] நாம் நெடுந்தூரம் செல்லவேண்டுமென்ற விஷயத்தை [illegible]த்தில் வை[illegible]க்கொண்டு இந்த அறிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்பது என் அபிப்பிராயம். அப்படிப் பார்த்தால் தான் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள முடியும். உணவு உற்பத்தியிலே இன்றைக்கு சற்றேறக்குறைய 73 லட்சம் டன் அளவை எட்டியிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மை. சுமார் 40 கோடி ரூபாய் செலவு செய்து இந்த ஐந்து வருட காலத்தில் அதிகமான உழைப்பினால் இந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். இது உண்மை.

சென்ற காலத்தில் சுமார் 53 லட்சம் டன் அளவில் இருந்த உற்பத்தி அளவு இப்போது 73 லட்சம் டன் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று அறிகிறோம். ஆனால் அந்த அளவுக்கு உணவு தானியங்களின் விலைவாசிகள் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறதா என்றால் இல்லை. நாம் உற்பத்தி அளவை மட்டும் பார்த்து பெருமைப்படக் கூடாது. விலைவாசிகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். வெறும் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டே போவதுதான் நம் கடமை என்பது அல்ல. உற்பத்தியைப் பெருக்கித் தருகிற அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கை இன்பமயமாக மாறுவதற்கு ஏற்ற சூழ்நிலையையும் நாம் ஏற்படுத்தித் தந்தாக வேண்டும். அதற்காக அடிப்படை சமுதாயச் சீர்திருத்தம் உடனுக்குடன் கொண்டுவருவதுதான் நியாயமாக இருக்கும். நாம் அதைச் செய்வதில்லை. அத்துறையில் கடந்த 11 மாதங்களாக நாம் சுறுசுறுப்புக் காட்டவில்லை என்பது தான் என் அபிப்பிராயம்

விலைவாசியைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில்—நான் மாநில அரசை மட்டும் சொல்லவில்லை—மத்திய அரசையும் சேர்த்துச் சொல்கிறேன்—மிக அதிக அளவில் நாட்டில் ஒரு குழப்பத்தையே ஏற்படுத்தக்கூடிய வகையில் உயர்ந்து கொண்டே போகிறது. அதைத் தட்டிக் கழித்துப் பிரயோசனம் இல்லை.

புள்ளிவிவரங்களைக் காட்டி மடை அடைத்தாற்போல பேசிப் பயன் இல்லை. விலைவாசிகள் உயர்வதும்—அதன் காரணமாக தொழிலாளர்கள் பஞ்சப்படி உயர்வு கோருவதும், உற்பத்திப் பொருள்களின் விலையில் அந்த உயர்வைக் கூட்டி முதலாளிகள் கொள்ளை அடிப்பதும் தான் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் விலைவாசி உயர்வினால் ஏற்படுகிற குழப்பத்தை லகான் பிடிக்க என்ன செய்தாக வேண்டும் என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. வேண்டுமானால் ஒரு சர்வகட்சி மகாநாட்டை நடத்துவது கூடப் பொருத்தமாக இருக்கும். 73 லட்சம் டன் உணவு தானியத்தைப் பெருக்கிவிட்டோம், இவ்வளவு பம்புசெட்டுகளை வைத்தோம் என்பது எல்லாம் ஒரு சாதனையாகவே கருத முடியாத அளவு பண்டங்களின் விலையேற்றம் போய்க் கொண்டிருக்கிறது. இந்த அரசு அமைந்த பிறகு கிராமங்களில் உள்ளவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கியது தான் ஒரு நல்ல சமுதாயப் பிரச்சினை. முற்றபடி விரிவாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்த அரசுக்கு என்ன தயக்கம் இருக்கிறது? எப்படியும் சிலர் எதிர்க்கத்தான் செய்வார்கள். சொத்துரிமைக்காரர்கள், நில உடைமைக்காரர்கள் விரோதமாக இருக்கலாம். ஆனால் உங்களுக்கு வாக்களித்த கோடானுகோடி மக்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் விரிவான நிலச் சீர்திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தாக வேண்டும்? அப்படிச் செய்ய முன்வந்தாலொழிய ஜனநாயகத்தின் அஸ்திவாரமே நிலைக்காது, துலங்காது என்றே நான் கருதுகிறேன். வெகுவிரைவில் விரிவானதொரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இந்த அரசு அரங்கேற்ற வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம்—ஒரு குழப்ப உணர்ச்சியை இந்த அரசின் மீது ஒரு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு சிலர் வேலை செய்தபோதிலும் அவர்களிடம் இருந்து இந்த அரசைப் பாதுகாத்துக்கொள்ள அது ஒரு கேடயமாக இருக்கும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

வர்த்தகத்துறையை எடுத்துக்கொள்ளுங்கள்—சும்மா தட்டிக்கழிப்பதில் பிரயோசனம் இல்லை. இன்றைய தினம் மிக மோசமான அளவுக்கு வர்த்தகச் சூதாடிகள் மக்களைச் சுரண்டி அதிகமான பணத்தைக் குவித்து வருகிறார்கள். சமீபத்தில் மத்திய சர்க்காரினாலே—இந்த மாநிலத்தில் அரிசியோடு கலப்பதற்காக கற்களை உடைக்கும் இயந்திரம் ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தோம். விலைவாசி 15 காசு உயர்ந்ததா, எட்டு காசு உயர்ந்ததா என்பது அல்ல பிரச்சினை. அறுவடை காலத்தில் விலை குறைகிறது. தஞ்சை மாவட்டத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். இன்றைய தினம் அங்குள்ளவர்கள் எத்தனை பேர்கள் அதிக அளவுக்கு விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் தெரியுமா? இன்றைய சூழ்நிலையில் மில் வைத்திருப்பவர்கள்—நெல் வியாபாரம் செய்கிறவர்கள் லட்சம் லட்சமாகக் குவித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, தொழில் அமைதியைப்பற்றி பேசுகிறோம். தொழில் அமைதி தானாக ஏற்படுவது அல்ல. சிலரால் தூண்டிவிடப்பட்டு அமைதியைக் குலைத்துவிட முடியும் என்பது அல்ல. இப்படிச் செய்தாலும் ஒருசில மாதங்கள் — ஒருசில காலம் தான் முடியும்.

கடந்த சில மாதங்களாக தொழில் துறையில் நம் மாநிலத்தில் இருந்து வருகிற நிலைமை மிக வேதனை தரக்கூடிய விஷயம். முதல் அமைச்சர் சிந்திக்க



வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களை வெளியே இழுத்துவந்து மண்டையிலும், கைகளிலும் அடிப்பது நாகரிகம் அல்ல. போலீஸை சரிவர கட்டுப்படுத்தவில்லை. போலீஸ் அடக்குமுறைகளைப்பற்றி எனக்குந் தெரியும். எனக்கு போலீசிடம் காழ்ப்பு உணர்ச்சி கிடையாது. ஆயினும் நான் சொல்வேன்—அவர்கள் அத்துமீறி நடக்கிறார்கள். முன்கூட்டியே அறிவிப்பதற்குப் பதிலாக கூட்டம் உள்ள இடத்திற்குச் சென்று அது சட்டத்தை மீறிய கூட்டம் என்று அறிவிப்பது—அதன் காரணமாக கூட்டத்தினர் அமைதி இழந்து கல் எறிவது, அதையே சாக்காகக் கொண்டு இவர்கள் தடியடிப் பிரயோகம் செய்வது—இப்படிப்பட்ட அடக்குமுறைகள்—அத்துமீறிய செயல்கள் நல்லதுதானா? எந்த விஷயமும் இதனால் முற்றுப்பெறப்போவதில்லை. இதைச் சிந்திக்க வேண்டும்.

தோழமைக்கட்சியாக நாங்கள் இணைந்தபோது திரிகரண சுத்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தான் சேர்ந்தோம். ஏதோ ஏழு சீட்டுக்காக, எட்டு சீட்டுக்காக சேரவில்லை. அக் கட்சியில் உள்ள சிலபேர்கள் அதைச் சொல்லி இழுத்துப் பேசுகிறார்கள். உண்மையாக காமராஜரோ, ஜனசங்கமோ, ராஜகோபாலாச்சாரியாரோ கொண்ட அந்தக் கூட்டு வெற்றிபெறக் கூடாது என்றே அன்றைக்கு உங்களோடு இணைந்தோம். இதைப் புரிந்துகொள்ளாமல்—ஒருவரையொருவர் ஏசிப் பேசுவது நல்லதல்ல. நமக்குள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாது பேசுகின்ற போக்கு குழப்பத்தைதான் உண்டாக்குகிறது. திரு. சிந்தன் அவர்களுடைய அரசியல் எனக்கு நன்றாகத் தெரியும். அதை நான் என்றைக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை. திரு. குசேலர் அவர்களுடைய அரசியலையும் நான் என்றைக்கும் ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் இன்றைய தினம் அவர்கள் ஒரு பத்தாயிரம் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் தலையிடுகிறார்கள் என்றால் அவர்களைக் கைது செய்யலாம்—சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அவர்களை வெளியே இழுத்துவந்து போலீசார் மண்டையிலும், கைகளிலும் அடிப்பது என்கிற அடக்கு முறையை அவிழ்த்துவிடுவது அநாகரிகமான செயல்—தொழிலாளர்களுடைய மத்தியில் குழப்ப உணர்ச்சியைத்தான் வளர்க்கும். போலீசார் அத்துமீறிய காரியங்கள் செய்து வருகிறார்கள். உதாரணமாகச் சொல்கிறேன். சமீபத்தில் திட்டச்சேரி என்கிற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு கூட்டத்தில் பேசினேன். அந்த ஊரில் உள்ள ஏரோப்ளேன் சாகிப் என்கிற பணக்காரருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு போலீசார் சில ஏழைகளின் குடிசைகளைப் பிரித்து எறிந்தார்கள். அதுமட்டுமல்ல. அங்கே இடித்த மண்சுவர்களின் மண்ணுங் கட்டிகளைக்கூட லாரியில் ஏற்றிச் சென்றார்கள். மறுநாள் ரெவின்யூ ஆபிசர் அவர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்ற வேண்டாம் என்பதாக உத்தரவு அனுப்புகிறார். முதல்நாளே ரெவின்யூ இலாக்கா அனுமதியை போலீசார் கேட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் தன்னிச்சையாக எதேச்சாதிகாரமாக நடக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொல்கிறேன். நாட்டு மக்களுக்கு மிகுந்த சேவை செய்து வளர்ந்த கட்சி. கட்சிக்காக மண்ணெண்ணெய்யை உடலில் கொட்டிக்கொண்டு செத்தவர்கள் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு மக்களுடைய நன்மையை, சேவையை மட்டுமே கொண்டு வளர்க்கப்பட்ட கட்சி. பதவிக்கு வந்தவுடன் பலனை மட்டுமே கருதி—இதைப் பயன்படுத்திக்

கொள்கிற போக்கு வளர்ந்துபோவது நல்லதா என்பதைச் சிந்திக்க வேண்டும். இது நல்லது அல்ல, அவர்களது கட்சியையும் வளர்க்காது. அதுபற்றிய விவரங்களை எல்லாம் சொல்லலாம். அதற்கு அவசியம் இல்லை என்றே விட்டு விடுகிறேன். **போலீஸ் துறையை கட்டவிழ்த்துவிடாமல் ஒரு கட்டுப்பாட்டுக்குள்** வைத்திருக்க கடமைப்பட்டவர் முதல் அமைச்சர். அத்துமீறி அவர்கள் செயல்படப் பார்த்துக்கொண்டிருப்பது மக்களுக்கு உங்களிடத்தில் உள்ள கொஞ்ச நஞ்ச ப்ரேமையையும் அழித்துவிடும். விலைவாசிகள் ஏறிக்கொண்டே போனால் அதன் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் எழும். இதையெல்லாம் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எல்லா தொழிற்சங்கங்களும் சேர்ந்து பொது வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்கிறார்கள். அரசாங்கத்தின்மீது காழ்ப் புணர்ச்சி கொண்டவர்கள் யாராவது இருக்கத்தான் செய்வார்கள். நம்முடைய கூட்டணியைப் பிரிக்கப் பார்ப்பார்கள். கூட்டணியைப்பற்றிப் பலவாறாகப் பேசுவார்கள். நாங்கள் இந்தக் கூட்டணி நீடிக்க வேண்டுமென்று விரும்பு கிறோம், அதற்காகப் பாடுபடுகிறோம். கூட்டணிக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசி உடன்பாடு காண வேண்டும். அதற்காக எங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏதோ உங்களிடமிருந்து பிரிந்து வேறு யாருடனோ போய்ச் சேர வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இல்லை. கூட்டணி பலமாக இருக்க வேண்டுமென்பது தான் எங்கள் நோக்கம்.

இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளுக்குப் பூரணபரிகாரம் காணக்கூடிய விதத்தில் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் மத்திய ஆட்சியிடத்தில் அதிகாரம் இருக்கிறது என்று பேசிக்கொண்டிருக்கிறோம். பல நேரங்களில் முதலமைச்சர்கள் மாநாடு, உணவு அமைச்சர்கள் மாநாடு என்று நடக்கின்றனவே, அந்த நேரங்களில் எல்லாம் நம்முடைய பிரச்சினைகளை ஏன் எடுத்துச் சொல்லக்கூடாது? நம் மாநிலத்தின் பிரச்சினைகளை விரிவாக ஏன் எடுத்து வைக்கக்கூடாது? நாம் செய்தது ஏல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருப்பதுதான். அப்படி உற்பத்தி பெருகினாலும் விலைவாசி ஏறுகிறது. அறுவடைக் காலத்தில் நியாயமான விலையில் கிடைக்கிறது. பின்னர் விலை ஏறிவிடுகிறது. நியாயமான விலையில் விளைபொருள் கிடைக்க வியாபாரிகள் வழிவகை செய்ய வேண்டு மென்பதற்காக தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் பொதுமக்களின் ஆதரவு உங்களுக்குப் பெருகும். பொதுமக்களுடைய ஆதரவு உங்களுக்கு இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படுகிறார்கள், பேசுகிறார்கள் என்றால் அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அதற்காக நாம் நியாய விரோதமாகச் செயல்படக்கூடாது. சில தலைவர்கள் அன்றைக்குக் கூட்டத்திலிருந்து வந்த வுடன் நேரடியாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். டி.எஸ்.பி. அவர்கள் குசேல ரையும், சிந்தனையும் தாறுமாறாகத் தாக்கியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய தலைமையில் அரசு நடக்கும்போது இப்படியா அவர்கள் தாக்கப்படுவது? அவர்கள் மார்க்சிஸ்ட்டாக இருக்கட்டும், அல்லது நக்சலைட்டாக இருக்கட்டும். யாராக இருந்தாலும், அதுவும் ஒரு போலீஸ் அதிகாரி அவர்களுடைய மண்டையை உடைக்கிறார், அவர்களைத் தாக்குகிறார் என்றால், பொதுவாழ்வில்



ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய தன்மையை நாம் எப்படி காப்பாற்ற முடியும்? இந்த அளவிற்கு போலீஸ் அதிகாரிகளுக்கு இடம் கொடுப்பது உங்களுக்கே நல்லது அல்ல என்பதை நல்லெண்ணத்துடன்தான் நான் கூறுகிறேன்.

இந்தக் கூட்டணி நீடிக்க வேண்டும், ஒழுங்காக இருந்து செயல்பட வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இவ்வளவையும் நான் சொல் கிறேன். கூட்டணி நீடிக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இதைப் பணிவாகத் தெரிவித்துக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். பெருமாள்**. தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

அண்மையில் ஏற்பட்ட போரிலே இந்தியா மகத்தான வெற்றி பெற்றிருக் கிறது. பாகிஸ்தான் என்று ஒன்று உண்டான காலத்திலிருந்து, நீண்ட நெடுங்காலமாக இந்தியாவுக்கு அது தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. இந்தியாவை முன்னேறவிடாமல், இந்தியாவின் பொருளாதா ரத்தைச் சீர்குலைக்கும் வகையில் பாகிஸ்தான் ஏராளமான தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டு வருகின்றது. அதற்கு முடிவு கட்டுகின்ற வகையில்தான் வங்காள தேசப் பிரச்சினை எழுந்தது. நாமாக சண்டைக்குப் போகவில்லை; நாம் சண்டைக்கு இழுத்துவிடப்பட்டோம். நியாயத்தின் பெயரால், ஜன நாயகத்தின் பெயரால், மனிதாபிமானத்தின் பெயரால் இந்தப் போர் நடந்தது. இந்தப் போரிலே நாம் மகத்தான வெற்றி பெற்றோம். அரும்பெரும் தியாகங் களைச் செய்து, போரை நடத்திச் சென்ற முப்படைத் தளபதிகளையும் தமிழ் நாட்டின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

போர்க்கால நடவடிக்கைகள் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியா பூராவுக்கும் பொதுவானது. தமிழ்நாடு தன்னுடைய பங்கினைச் செவ்வனே ஆற்றியிருக்கிறது. நாம் செய்யவேண்டியதை குறைவு இல்லாமல் செய்தோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மிகவும் அக்கரை கொண்டார். இந்தப் போரில் தான் ஒரு போர்வீரனாகவே இருந்து செயல்பட்டார். எந்தவிதமான குறையும் வைக்காமல் நாம் போர் நடவடிக்கைகளுக்கு, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவியிருக்கிறோம். நாம் உறுதி கூறியிருக்கிற 10 கோடி ரூபாய் அளவு மிக விரைவாக நெருங்கிக்கொண் டிருக்கிறது. நம்முடைய அருமையான சட்டமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு உறுதுணையாக இருந்து உருப்படியான ஆலோசனைகளையும் சொல்லியிருக் கிறார்கள். இந்த அளவில் தமிழ்நாடு எவ்விதக் குறைவும் இல்லாமல் இந்திய அரசுக்கு உதவி செய்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக, இங்கே பேசியவர்கள் அரசு செய்கின்ற தவறுகளை ஆதாரப் பூர்வமாக சுட்டிக்காட்டுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தோம். பொறுப்புள்ளவர்கள்கூட பேசும்போது, 'தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும்' என்று சொன்னதாக வைத்துக்கொண்டு, அந்தப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசினார்கள்.

[திரு. எ. ஆர். பெருமாள்] [1972 சனவரி 31

அடுத்தபடியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட, பிரதமர் படத்தையும், நம்முடைய முதல்வர் படத்தையும் ஒன்றாகப் போடலாமா, சிம்சன் பிரச்சினையிலே இப்படி நடந்துகொள்ளலாமா என்று சிறுசிறு பிரச்சினைகளைப்பற்றித்தான் பேசினார்கள். இப்படிப்பட்ட சிறிய பிரச்சினைகளுக்கு பெரிய உரு கொடுத்துப் பேசினார்கள். முதல்வர் படத்தையும், பிரதமர் படத்தையும் போட்டு பாதுகாப்பு நிதிக்காக சுவரொட்டிகள் போட்டதில் என்ன தவறு? அப்படி போட்டதனால் ஏதாவது அதிசயம் நடந்திருக்கிறதா? நாட்டின் பிரதமர் படத்தையும், மாநிலத்தின் முதல்வர் படத்தையும் ஒன்றாகப் போடுவதில் என்ன தவறை அவர்கள் கண்டார்கள்? அப்படிப் போட்டது மிகமிகப் பெரிய குற்றம்போல், மிகப் பெரிய கொடுமையை அரசு செய்துவிட்டதுபோல் பேசினார்கள். இந்தக் காரியத்திற்காக இது தவறு, இந்தக் காரணத்திற்காக இந்தப் படம் தவறு என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அந்தப் படத்தினால் பிரதமரின் கௌரவத்திற்கு குறைவு ஏற்படும் என்று யாரும் ஆதாரம் காட்டவில்லை? அப்படி யாராவது ஆதாரம் காட்ட முடியுமா? அப்படி சுவரொட்டி போடுவது தவறு என்று பத்திரிகைகளில் வேறு விதமாக எழுதுகிறார்கள். பேசும்போது வேறு விதமாகப் பேசுகிறார்களே தவிர, இந்தக் காரணத்திற்காக இது தவறு என்று ஆதாரத்தின் அடிப்படையில் சொல்ல யாரும் முன்வரவில்லை. நாம் சொல்லிக்கொள்வதெல்லாம், நம்முடைய மாநிலத்தின் முதல்வர் அவர்கள் பிரதமர் பக்கத்தில் இருந்து போட்டோ எடுத்துக்கொள்ள தகுதி இல்லாதவர் என்று கருதுகிறார்களா? அல்லது நம்முடைய முதல்வர் அவர்களின் அருகில் இருந்து போட்டோ எடுத்துக் கொள்ள பாரத நாட்டின் பிரதமர் அருகதையற்றவர் என்று கருதுகிறார்களா? எந்த அடிப்படையை வைத்துக்கொண்டு தவறு என்கிறார்கள். இதில் எந்த விதமான தவறும் இல்லை. அவர்களுடைய கருத்திலேதான் கோளாறு இருக்கிறது என்று தோன்றுகிறது. நம்முடைய நாட்டின் பிரதமர் அவர்களை ஆதிபராசக்தியாக நாங்கள் பார்க்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவருக்குப் பக்கத்தில் இருப்பது முருகக் கடவுளை நினைவூட்டுகிறது. பாரதப் பிரதமரை ஆதிபராசக்தியாகவும், நம் முதல்வரை முருகக் கடவுளாகவும்தான் என் கருத்தில் அது படுகிறது. அப்படித்தான் எனக்குப் படுகிறது. அவர்களுடைய கருத்தில் எப்படிப் படுகிறதோ, எனக்குத் தெரியவில்லை. தவருகப் பார்ப்பதால்தான் தவருகத் தெரிகிறது. தவறு அவர்களுடைய கருத்தில் தான்.

நாட்டில் ஒரு பெரிய யுத்தம் நடந்து முடிந்திருக்கிறது. அதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இதனால் பாகிஸ்தான் அடியோடு ஒடுங்கிவிட்டது என்றோ, சீர்குலைந்துவிட்டது என்றோ நாம் உறுதியாகக் கூறிவிட முடியாது. இப்போது வருகின்ற செய்திகள் எல்லாம் மிகப் பயங்கரமான எதிர்காலத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. வங்க தேசத்தோடு உறவு வைத்துக் கொள்ளும் நாடுகளின் உறவை பாகிஸ்தான் துண்டித்துக்கொண்டு வருகின்றது. இன்றைக்குக்கூட பாகிஸ்தான் காமன்வெல்த்திலிருந்து வெளியேறியிருக்கிறது. சர்வதேச நிலைமை மிகப் பயங்கரமாக உருவாக்கிக்கொண்டு வருகிறது மீண்டும் ஒரு பெரும் போர் வர இருக்கிறது. அமைதியாக இருக்கும் தமிழகத்தின் ஆட்சிக்கு ஊறுவிளைவிக்க முடியுமா? இந்த அரசைக் கவிழ்க்க முடியுமா என்று சிலர் நப்பாசையுடன் பார்க்கிறார்கள்.



1972 சனவரி 31] [திரு. எ. ஆர். பெருமாள்]

சமீபத்திலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்திலே பெருந் தலைவர் பேசினார். என்ன கூட்டம் என்று நான் சொல்லவேண்டியதில்லை. பேசிய நபர் யார் என்று நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. எப்படி நாம் எல்லாம் ஒன்றுபட்டு இணைந்து பாடுபட்டு சிம்ஸன் தொழிலாளர் பிரச்னையிலே, காட்டூர் கோபால் ராஜினுமா செய்யவைக்க முடிந்ததோ அதே ஒற்றுமையைப் பயன்படுத்தி எல்லோரும் ஒன்றுகப் பாடுபட்டால் இந்த அரசையும் கருணாநிதியையும் ராஜினுமா செய்ய வைக்கமுடியும் என்று பேசினார் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், ராஜினுமா செய்ய வைக்கமுடியும் என்று காமராஜர் அவர்கள் சொன்னதாகச் சொல்கிறார்கள், பெருந்தலைவர் சொன்னதாகச் சொல்கிறார்கள். யார் சொன்னது என்று சொல்லட்டும் . . .

**திரு. எ. ஆர். பெருமாள்:** காமராஜர் பேசியதாக நான் சொல்லவில்லை. பெருந்தலைவர் என்று சொன்னால் காமராஜரைத்தான் குறிப்பிட முடியும்? அம்மையார் அவர்களுக்கு வேண்டுமானால் அவர்கள் பெருந்தலைவராக இருக்கலாம். தமிழகத்திலே உள்ள தலைவர்களில்—எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்—பெருந்தலைவர் பேசினார் என்று சொன்னேன். அது பேசப்பட்டதா? இல்லையா? அதை அவர்கள் சொல்லட்டும். இந்த அரசில் ஊழல் மலிந்து விட்டது, ஊழல்கள் உள்ள இந்த அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் ஒரே அணியாகத் திரண்டு நிற்போமானால் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆதாரம் காட்டிப் பேசவேண்டும், பெருந்தலைவர் என்றால் யார் என்று சொல்லட்டும், வெட்ட வெளிச்சமாகப் பேசட்டும், மறைமுகமாகப் பேசவேண்டாம் . . .

**திரு. எ. ஆர். பெருமாள்:** யார் பேசினார் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. அப்படிப் பேசப்படவில்லை என்று அம்மையார் அவர்கள் கூறட்டும். இந்த அரசில் ஊழல்கள் மலிந்துவிட்டது, ஊழல்கள் பெருகிவிட்ட இந்த தமிழக அரசு இல்லாத அளவுக்கு ஆக்குவதற்கு எப்படி சிம்ஸன் தொழிலாளர் பிரச்னையில் ஒன்றுகப் பாடுபட்டு காட்டூர் கோபாலை இறக்கினோமோ அதே போன்று ஒன்றுபட்டு பாடுபட்டால் இந்த அரசை இல்லாமல் ஆக்கிவிட முடியும் என்று பேசப்பட்டதா இல்லையா? யார் பேசினார்கள் என்று சொல்லுங்கள் என்று கேட்டால், நான்கூட்டத்திற்குப் போகவில்லை, கூட்டத்திற்குப் போயிருந்தால் நிச்சயமாகச் சொல்வேன். கேட்ட செய்தியை வைத்துக்கொண்டு சொல்கிறேன். பேசப்பட்டது உண்டா இல்லையா என்பதைப்பற்றிச் சொல்லுங்கள் . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, on a point of order. Can the hon. Member rely on hearsay information? He should have definite information. . .

MR. DEPUTY SPEAKER: It is not a court, of course. He is expressing his views. . .

THIRU R. PONNAPPA NADAR: He cannot speak with impunity.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, ஒருவர் பேசினார் என்று சொல்வதற்கு ஒரு உறுப்பினருக்கு உரிமை உண்டு. கட்டாயப்படுத்தி இன்னார்தான் பேசினார் என்று சொல்லச் சொல்ல நிர்ப்பந்தப்படுத்த உரிமை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் சொல்கிறேன், சபாநாயகர் சொல்லவேண்டியதையெல்லாம் உறுப்பினர்கள் சொல்வது அவ்வளவு சரியல்ல.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** நான் படித்த கதை ஒன்று எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது. யாரோ ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தாராம். மேலே ஒரு கொக்கு பறந்துகொண்டு இருந்ததாம். மேலே பறந்துகொண்டிருந்த கொக்கு அந்த முனிவரின் தலைமேல் ஆபாசப்படுத்திவிட்டதாம். முனிவருக்குக் கோபம் வந்து அந்தக் கொக்கை முறைத்துப் பார்த்தாராம். உடனே கொக்கு அந்த இடத்திலேயே எரிந்து சாம்பலாய்விட்டதாம். அந்தக் கோபத்தோடு முனிவர் எழுந்து வள்ளுவர் வீட்டிற்கு வந்தாராம். வள்ளுவர் வீட்டிலே உணவு அருந்துவதற்காக உணவு கேட்டு அம்மா என்று கேட்டாராம். வள்ளுவருடைய மனைவியான வாசுகி அம்மையார் அவர்கள் வருவதற்கு கொஞ்சம் தாமதம் ஏற்பட்டுவிட்டதாம். வாசுகி அம்மையார் அவர்கள் தாமதமாக வந்ததால் அந்த அம்மையாரையும் பார்த்து முனிவர் ஒரு முறை முறைத்துப் பார்த்தாராம். ஆனால் வாசுகி அம்மையார் கொக்கு என்று நினைத்தாயோ கொங்கணவா என்று சொன்னாராம். கொக்கை எரித்துவிட்டோம். ஆனால் வாசுகியை ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று முனிவர் வருந்தினாராம். அதைப்போன்று அவர்களும் காட்டூர் கோபாலை ராஜிநாமா செய்ய வைத்துவிட்டோம், இந்த அரசையும் ராஜிநாமாச் செய்ய வைக்க முடியும் என்று நினைக்கிறார்கள். பேசியவர் யார் என்று நான் பார்க்கிறேன். பிரச்சினையை நான் பார்க்கவில்லை, அது நியாயமா, தவறு என்ற விவாதத்திற்கு நான் போகவில்லை. அவர்கள் யார் என்று பார்த்தால் ஒரு ஆண்டுக்கு முன்னாலே மக்களால் தூக்கியெறியப்பட்டவர்கள், செல்லாக் காசாக ஆக்கப்பட்டவர்கள், உங்களுடைய திறமை, கொள்கை, லட்சியம், அரசு எங்களுக்குத் தேவையில்லை என்று மக்களால் தூக்கியெறியப்பட்டவர்கள் இன்றைய தினம் அப்படிப் பேசுகிறார்கள். அவர்கள் ஏதோ மிகப் பெரிய நியாயத்தை உணர்ந்தவர்கள் போலவும், ஜனநாயகத்திற்கு அவர்கள் மதிப்பு அளிக்கக்கூடியவர்கள் போலவும், அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக நின்றவர்கள் போலவும், பாட்டாளி, உழவர்கள் இவர்களுக்காக அர்ப்பணித்துக்கொண்டவர்கள் போலவும் பேசுகின்றார்கள். ஆனால் அவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்களை மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் எந்தப் பிரச்சனைப் பற்றிப் பேசினாலும் மக்கள் நியாயத்தை உணர்கிறார்கள், யார் பேசுகிறார்கள் என்பதையும் உணர்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது முதலமைச்சர் அவர்களுடைய படத்தை விளம்பரத்திற்காகப் போடுகிறார்கள் என்று கூறினார்கள். அவரை ஒரு சிறந்த பார்லிமெண்டேரியனாக, சிறந்த பாராளுமன்ற முறையிலே திறமை படைத்தவராக இருக்கிறார் என்று எண்ணியபொழுது ஆளுநர் உரையிலே பேசுகின்றபோது அவர், முதலமைச்சர் படம், தஞ்சை சுவரொட்டிபற்றி பேசி பேப்பரிலே விளம்பரப்படுத்தப்படும் செய்தியாக வரவேண்டுமே என்றுதான் பேசினார் . . . .





**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எனது அருமை நண்பர் அவர்கள் இப்பொழுது விளம்பரத்திற்காக முயற்சி செய்வது நன்றாகத் தெரிகிறது. நான் குறிப்பிட்ட விஷயங்களைத்தான் சொன்னேன். நான் நீண்டகாலமாக அவர்களை அறிவேன். நீண்டகாலமாக அவர்கள் முயற்சி எடுப்பது தெரிகிறது. இந்த முயற்சியில் அவர் வெற்றியடைவார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு பேர்களாலும் பேரவைக்கு நல்ல விளம்பரம்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** அதைத்தான் நான் அவர்களிடம் நேரிலும் சொன்னேன், சட்டமன்றத்திலும் சொல்கிறேன். அடிப்படை நோக்கம் தமிழகத்திலே நடைபெறுகிற அமைதியான அரசை மக்கள் மத்தியிலே தவறான எண்ணங்களையும் கருத்துக்களையும் எப்படியாவது ஏற்படுத்தி கவிழ்த்துவிட முடியும் என்ற நப்பாசை தவறாகவோ சரியாகவோ ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆசை அவர்களுக்கு வருவதிலே தவறில்லை. தமிழகத்தினை ஒரு கட்சிதான் நிரந்தரமாக ஆளவேண்டுமென்று நாங்கள்தான் ஆளப்பிறந்தவர்கள் எங்களைத் தவிர வேறு யாரும் உட்காரக்கூடாது என்ற ஆணவம் எங்களுக்குக் கிடையாது. யாரை மக்கள் விரும்பித் தேர்ந்தெடுத்து அனுமதியளித்திருக்கிறார்களோ அவர்களை தூக்கியெறியவேண்டுமென்ற நப்பாசையில் மக்களுடைய விருப்பத்தைப் பெறாதவர்கள் சூழ்ச்சியால், வஞ்சகத்தால், சதியால் கவிழ்த்துவிட முடியும் என்று நினைப்பவர்கள் அவர்கள் கவிழ்வதற்கும் தயாராக இருக்கவேண்டும். என்ன பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. வரப்போகிற தேர்தல்களில் எந்த எந்தக் கட்சிகள் எங்கெங்கேயோ மாறப்போகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் மக்கள் மாறப்போவதில்லை. கட்சிகள் மாறலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவிலே வெற்றிபெற்று வந்தவர்கள், 1967-லே வெற்றிபெற்றவர்கள் 1971-ஆம் ஆண்டிலே என்ன கதியானார்கள் என்று நான் சொல்லவேண்டியதில்லை. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வெற்றிபெற்ற மதுரை மேற்குத் தொகுதி இருக்கிறது. மதுரை மேற்குத் தொகுதியிலே 1967-ஆம் ஆண்டிலே கூட்டணியை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நின்றது, டெபாஸிட் இழந்தது அங்கே அந்தக் கட்சி. ஆனால் அதே தொகுதியிலே கூட்டணியோடு அந்தக் கட்சி இணைந்து போட்டியிட்டது. தங்கமணி வெற்றிபெற்றார், ஆனால் சங்கரய்யா எதிர்த்து நின்று டெபாஸிட் இழந்தார். 1967-ஆம் ஆண்டிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியை எதிர்த்து நின்றது. திரு. தங்கமணி அவர்கள் போட்டியிட்டார்கள். திரு. தங்கமணி அவர்களுடைய தியாகம் என்ன? அரசியல் வரலாறு என்ன? அப்படியிருந்தும் 1967 தேர்தலில் சங்கரய்யாவிடம் டெபாசிட் இழந்தார்கள். ஆனால் 1971-ஆம் ஆண்டு தேர்தலில் தோசையைப் புரட்டிப் போட்டது மாதிரி சங்கரய்யா டெபாசிட் இழந்தார், தங்கமணி அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தோழமையாக, 7 கட்சிக் கூட்டணியாக நாம் ஒன்றாக நின்றால்தான் மீண்டும் இந்த அரசாங்கத்தை காங்கிரசிற்கோ அல்லது காங்கிரசை ஆதரிக்கும் பிற்போக்குவாதிகளுக்கோ நுழையவிடாமல் செய்ய முடியும். ஒற்றுமையாக இருந்து உரிமையைக் கேட்பதில், உறுதியான குரலில் கேளுங்கள். ஆனால் உரிமையைக் கேட்கும்பொழுது கூட்டணியைப் பலவீனப்படுத்தும் முறையில் கேட்காதீர்கள் என்று தோழமைக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டொரு பிரச்னைகளைப்பற்றிப் பேசாமல் போனால் அங்கேபோய்ச் சத்தம் போடுவார்கள். பெருமாள் அரசியலைப்பற்றி மட்டும் பேசிவிட்டு வந்தாரே தவிர நம்முடைய தொகுதியைப்பற்றியே பேசவில்லை என்று சொல்வார்கள், அதற்காகத்தான் பேசுகிறேன். காரியாப்பட்டி பகுதியிலுள்ள கிருதமால் நதி திட்டத்தைப் பற்றி நான் நீண்ட காலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராயிருந்த காலத்திலிருந்து சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அந்த கிருதமால் நதிக்காக ஒரு மாநாட்டைக் கூட்டியாவது முதுகளத்தூர் தாலுக்கா, காரியாப்பட்டி போன்ற இடங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யும் முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். கிருதமால் நதி நீர்ப் பாசன வசதிக்கான மாநாட்டை நடத்த வேண்டுமென்றும் அதற்கு முதல்வர வர்களையும், பொதுப்பணித் துறை அமைச்சரவர்களையும், சட்ட அமைச்சரவர் களையும் அழைக்க வேண்டுமென்று அங்கேயுள்ள மக்கள் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் நேரடியாகவே இந்தத் தேதியைக் கொடுங்கள் என்று கேட்டிருக்கலாம், ஆனால் இன்றைக்குச் சட்டமன்றத்தின் மூலமாகவே கேட்டுக்கொள்கிறேன், ஏதாவது 2, 3 மாத கால அளவில் தேதி கொடுத்து ஒரு மாநாட்டைக் கூட்டி அதில் நதிப் பிரச்னையைப்பற்றி ஆராயச் செய்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யும்படி, மக்கள் நம்பும்படியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பல்லங்குளம், காரியாப்பட்டி பகுதிகளில் தென்னம்பட்டி திட்டம் ஒன்று இருக்கிறது. இதற்கு 14 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அதற்கு நீண்ட காலமாகத் தாமதம் ஆவதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. அதையும் விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு அமர் கிறேன், வணக்கம்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்களின் உரையின்மீது சில கருத்துக்களை என்னுடைய கட்சியின் சார்பில் நான் வெளியிட விரும்புகிறேன்.

என்னுடைய பேச்சின் தொடக்கத்திலேயே நான் ஒன்றை இந்த அவைக்கு மிகவும் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் ஒரு மைனாரிட்டி கட்சியின் பிரதிநிதி. மைனாரிட்டி கட்சியின் பிரதிநிதி என்று சொன்னவுடன் ஒரு வகுப்பின் பிரதிநிதி என்று அதற்குப் பொருள் கொள்ளக் கூடாது. வகுப்பின் பிரதிநிதி அல்ல, ஒரு மைனாரிட்டியின் பிரதிநிதி. ஒரு ஜனநாயக சர்க்காரின் பிரதிநிதித்துவ முறைகள் கொடுக்கப்படும்பொழுது ஒரு சமூகத்தினுடைய நியாயமான உரிமைகளைத்தான், அடிப்படையான அந்தஸ்த்துகளைப் பெறுவதற்காகக் கோருகின்ற ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர் கள் என்று முதலில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிக் கூறிக் கொள்வது வகுப்பு உணர்ச்சியோடு அல்ல, பிரதிநிதித்துவ உணர்ச்சியோடு தான். பிரதிநிதித்துவ உணர்ச்சியைச் சொல்வது ஜனநாயக மரபுக்கு மாற்றானதும், முரணானதும் அல்ல. எப்படித் தாழ்த்தப்பட்டவர்கள் என்று பிரிக்கிறோமோ, அப்படிப் பிரிக்கிறபோது அது வகுப்பு அல்ல, அவர்கள் தாழ்ந்திருக்கிறார்கள், தரத்திலே குறைக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது குறைந் திருக்கிறார்கள் என்ற காரணத்தாலேயே நாம் அவர்களுக்கு என்று சில பிரதி





நிதித்துவத்தைக் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறோம். அது முற்றிலும் நியாயம், பொருத்தம். அது போலவே மைனாரிட்டி சமூகத்தினுடைய பிரிவு களில் ஒன்றான முஸ்லீம்களின் உரிமை. ஒரு நூல்கூட அதிகம் கேட்கவில்லை, கொஞ்சம் குறைந்தாலும் பாவாயில்லை. அந்த பிரதிநிதித்துவம் அதற்கு இருக்க வேண்டும். அது கவர்னர் உரையில் இல்லை என்பது வேதனையாக இருக்கிறது என்பதை அன்போடும், மரியாதையோடும், தன்னடக்கத்தோடும் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசப்பட்ட விவாதத்தில் மாநில சுயாட்சி பற்றி பேசப்பட்டது. நான் விளங்காமல் அவையைக் கேட்கிறேன், விளக்க அல்ல. (குறுக்கீடு) சபாநாயகரைத்தான் கேட்கிறேன், அல்லது சபாநாயகர் அனுமதி யோடு தாங்களே சொல்லலாம். அதனால் தான் முதலில் கேட்கிறேன். இந்த மாநில சுயாட்சியின் பொருள் என்ன? மத்திய சர்க்காரோடு கூட்டாக அமைந் திருக்கிற மாகாணங்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவது என்பது தான் மாகாண சுயாட்சி என்பதன் பொருள் என்று நான் நினைக்கிறேன். மாகாண சுயாட்சி என்று சொன்னவுடனேயே அதற்குத் தவறான கருத்துக்களை உள்ளே புகுத்தி, அது பிரிவினை உணர்ச்சிக்கு வித்திடும் என்று சொல்பவர்களை மிகவும் அன்போடு கேட்கிறேன். இது திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகு தான் இந்த மாகாண சுயாட்சிபற்றிப் பேசப்பட்டதா? இதற்குமுன் பேசப்படவில்லையா? என்று கேட்கிறேன், பேசப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் கட்சியை சேர்ந்த மிகப்பெரும் தலைவரான கண்ணியத் திற்கும் மரியாதைக்கும் உரிய ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த காலத்திலேயே இதைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. நான் ஒப்புக்கொள்கிறேன், பெரும் தலைவரான என்னுடைய அரிய அரசியல் நண்பரும், சகாவுமான இன்றைக்குப் பெருந்தலைவர் என்று கருதப்படுகின்ற காமராஜர் ஆட்சி செய்த காலத்தில் . அதைப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. எல்லாக் காலங்களிலும் மாகாண சுயாட்சி பேசப்பட்டிருந்தும் பிரிவினைப் பேச்சு அந்தப் பேச்சில் இல்லை, அந்தப் பேச்சில் பிரிவினை உணர்ச்சி தொனிக்க வில்லை, ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இன்று மாகாண சுயாட்சி கேட் பதிலேதான் பிரிவினை உணர்ச்சி தொனிக்கிறது என்று மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் பேசியதாகச் செய்தி தினமணிப் பத்திரிகையில் வந்திருக் கிறது. நேற்று என்னுடைய கல்யாண அவசரத்தில் பார்த்தேன், பெரிய தலைப்பாக போட்டிருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள், பிரிவினைக்கு இது வித்திடுகிறது என்று. எப்படி?

மிகத் தெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்தியா ஒன்று, உபகண்டத்தோடு இணைந்து மாகாணத்திற்கு வேண்டிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவதுதான் மாகாண சுயாட்சி என்று திருச்சியிலே கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய, மன்னிக்க வேண்டும், தஞ்சாவூரில் கூடிய பொதுக் குழு தெளிவாகத் தீர்மானித்திருக்கிறது. முதல்வரும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். பல்முறை சொல்கிறார், நாங்கள் பிரிவினையை விரும்பவில்லை. இந்தியாவோடு இணைந்து இருக்கத்தான் விரும்புகிறோமே தவிர, ஆனால் சின்னச்சின்ன பிரச்னைகளுக் கெல்லாம் மத்திய சர்க்காரை அணுக வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஒரு உரிமையைத் தெளிவாகப் பிரித்துத் தந்துவிட வேண்டும், அதுதான் மாகாண சுயாட்சி கோருகிறோம் என்று தெளிவுபடுத்திய பிறகும், நான் நிரபராதி, நான் குற்றம் செய்யவில்லை என்று நான் சொல்வதாக இருந்தாலும் நீ குற்றம் செய்த

வன்தான், குற்றம் செய்தவன்தான், குற்றம் செய்தவன்தான் என்று சொல்வது என்னைக் குற்றவாளியாக்கவும் சொல்லலாம், அல்லது நான் அந்தக் குற்றவாளியாகவே மாற வேண்டுமென்பதற்காகவும் சொல்லலாம். இரண்டு வகைகளிலேயும் உண்டு. நான் இல்லை என்று சொல்லியபிறகும், அப்படித்தான் என்று சொன்னால் அதற்கு ஆதாரம் வேண்டும். இன்ன காரணத்தால் நீங்கள் பிரிவினை உணர்ச்சியைப் பேசுகிறீர்கள் என்று காரணம் சொல்ல வேண்டும், அப்படியும் இல்லை. இப்படிப்பேசி மத்திய அரசோடு இருக்கிற கொஞ்சநஞ்சம் இருக்கிற இணக்கத்தையும் பிரித்து எடுத்து, இந்த மாநில சர்க்கார் நடந்துகொண்டிருப்பதில் குழப்பம் விளைவித்து அதன்மூலம் பலன் பெறலாம் என்று நினைத்துப் பேசுவதையோ அல்லது எழுதுவதையோ கண்டு மக்கள் இனிமேல் ஏமாற மாட்டார்கள் என்பதில் எனக்கு மிகுந்த பெருமை உண்டு.

இன்னொரு விஷயம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்னை. தொழிலாளர்கள் பிரச்னையில் எங்கள் அனுதாபம் உண்டு, எங்கள் தொழிலாளியும் அதில் உண்டு. ஆனால் வெறும் தொழிலாளர் நலன் மட்டும்தான் இருக்கிறதா அந்தப் போராட்டத்தில் என்று தெளிவு செய்தால் அடியேனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதில் உள்நோக்கம் கலந்திருக்கிறது. உள்நோக்கம் என்பது என்ன என்பதை விளக்க விரும்பவில்லை. அதில் தணிந்து போகக்கூடியதை, நான் தண்ணீர்தான் ஊற்றுகிறேன் என்று சொல்லி, டின்னிலே கொண்டு வந்தால் பெட்ரோல் என்று தெரியும் என்று கருதி பக்கெட்டில் கொண்டு வந்து பெட்ரோலை, தண்ணீர்தான் ஊற்றுகிறேன் என்று சொன்னால் அது எப்படி இருக்கும்?

யார் யார் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விரோதிகளோ, யார் யார் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டுச் சேர்ந்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று கருதினார்களோ, யார் யார் உள்ளங்களில் இந்த எண்ணம் இருந்ததோ, எந்தெந்தப் பத்திரிகைகள் அந்தக் கருத்தைக் கொண்டிருந்தனவோ அவர்களுக்கெல்லாம் ஒரு புதிய காதல் தொழிலாளர்கள் மீது ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். என்ன காதல் அவர்களுக்கு! அதிலும் தினமணிக்கு ஏற்பட்டிருக்கும் காதல், ஆகா! ஆகா! என்ன காதல்! எவ்வளவு விஷயங்களை எடுத்துச் சொல்லுகிறார்கள்? "இவ்வளவு கொடுமையா? இந்த மாதிரியா நடக்கிறது? இந்த மாதிரியா சொன்னார்கள்?" என்றெல்லாம் எழுதுகிறார்கள். 'ஹாண்டே காராசாரமாக இப்படி முழக்கினார்', முழக்கியது வாஸ்தவந்தான், நான் இல்லையென்று சொல்லவில்லை.

DR. H. V. HANDE: Sir, the hon. Member has been saying that the persons who were not interested in the workers have suddenly taken interest in them and persons whc had attacked the D.M.K. have come and joined together. Now the Right Communist Party is also there. The situation is now different and so, the hon. Member cannot make such a blanket statement. . . .

அதிலே வலது கம்யூனிஸ்டுகள்கூட இருக்கிறார்கள். முன்பு கூட்டணியில் 1971-ல் சேர்ந்து தேர்தலுக்கு நின்றார்கள். முஸ்லீம் தோழர்களும் தொழிலாளர் பிரச்சினையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே மொத்தமாகச் சொல்லுவது சரியாக இருக்காது.



திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: நானும் அதைத்தான் தெளிவாகச் சொன்னேன். ஹாண்டேக்கு மட்டுமல்ல; என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். அந்த பெட்ரோலை நானும் ஊற்றக்கூடாது. பக்கட்டிலே இருப்பதால் ஊற்றிவிடக் கூடாது. அது பெட்ரோலா, தண்ணீரா என்று கவனிக்க வேண்டும். என்னையும் சேர்த்துதான் சொல்லுகிறேன். தொழிலாளர்களுடைய பிரச்னையில் எல்லோருக்கும் அக்கறை உண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தில்—அமைச்சர்களாக இருப்பவர்கள் மன்னிக்க வேண்டும்—இவர்கள் அத்தனை பேரும், பெரும்பகுதியானவர்கள் மாணவர்களாக இருந்த நேரத்தில் இவர்களுடைய தலைவர்களில் தொழிலாளர்கள் போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. அந்தக் காலத்திலிருந்து பங்கு பெற்றிருக்கிறார்கள். நாங்கள் அடிப்பட்டிருக்கிறோம். நீங்கள் எல்லாம் இந்தியர்கள் அதிகாரத்தில் இருந்த நேரத்தில் இந்தியர்களுடைய தடியால் அடிப்பட்டவர்கள். நாங்கள் வெள்ளைக்காரன் காலத்தில் இந்தியர்களிடம் அடிப்பட்டவர்கள். நடந்துதான் இருக்கிறது, இல்லை யென்று சொல்லவில்லை.

ஒரு பிரச்சினையை அணுகும்போது அது எந்தக் காரணத்திற்காக அணுகப் படுகின்றதோ அதை ஒத்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களின் பெயரால் தொழிலாளர்களைப் பிரித்து, தங்களுடைய நலன்களை உள்ளே புகுத்தி, குழப்பத்தை அதன்மூலம் வளர்த்து அதிலிருந்து பலன் பெறக்கூடிய சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் கட்சிகள் எதுவாக இருக்குமானாலும்—ஹாண்டே அவர்கள் அவ்வாறு இருக்க முடியாது—அவை தங்களுடைய குறிக்கோளை மாற்றிக் கொண்டு தொழிலாளரின் பொதுவான நலன்களில் மட்டுமே அக்கறை கொள்ள வேண்டும். அதற்கு என்னையும் அழையுங்கள், எங்கள் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்; அவர்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன்.

அருமை நண்பர் பெருமாள் அவர்கள் பேசும்போது அந்தப் பெயரைத் தன்னுடைய திருவாயால் சொல்லவில்லை. அதை நானும் படித்தேன். நான் மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். உயர்திரு காமராஜ் அவர்களுடைய சிறப்புமிக்க பேச்சில் அந்தக் கருத்து அடங்கி இருந்ததை நானும் படித்தேன். அவ்வாறான எண்ணம் அவருக்கு இருக்கலாம். தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் அதை நம்பி பெட்டியைக் கழட்டிக் கொண்டுபோய் கெட்டுப்போகிற எஞ்சினில் கொண்டுபோய் மாட்டிவிடாதீர்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். அது முதலிலேயே பழுது பட்டிருக்கிறது. இப்போது தண்டவாளத்திலேயே இல்லை. ஆகையால் அந்த எண்ணம் வேண்டாம். 'திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கவிழ்த்துவிடலாம், ஆகையால் கூட்டுச் சேருங்கள்' என்று சொல்லி இருக்கிறார். அது அவருடைய விருப்பமாக இருக்கலாம். அதை வேண்டுமானால் வரவேற்கிறேன்—விருப்பத்தை. ஆனால் அது நடக்காது என்று சொல்ல எனக்கு உரிமையுண்டு. நிச்சயமாக நடக்காது. மீண்டும் சொல்லுகிறேன், நடக்காது. ஏன்? இது மக்கள் சர்க்கார். 'பார்க்கலாம்' என்று சொல்லும் சர்க்கார் அல்ல. 'பார்க்கிறேன்' என்று சொல்லும் சர்க்கார். 'சரி, பார்க்கலாம்' என்று சொல்லும் சர்க்கார் அல்ல; 'சரி, பார்த்துவிட்டேன்' என்று சொல்லும் சர்க்கார். ஆகவே, மக்கள் அவ்வளவு விரைவில் ஏமாற மாட்டார்கள் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

அன்புக்குரிய தலைவர் அவர்களே, இந்திய உபகண்டத்திலேயே மிக அமைதியாகவும், தெளிவாகவும் ஒரு ஆட்சி நடக்கிறது என்றால்—மனித உள்ளத்தோடும், மனச்சாட்சியோடும் சொல்லுங்கள்—அது தமிழ்நாட்டில்தான். இந்த

நிலை மற்ற எந்த மாநிலத்திலும் இல்லை. எல்லோரும் நாலைந்து நாட்களாகப் பத்திரிகைகளைப் படித்திருப்பீர்கள். தேர்தலில் நிற்பதற்கு ஆள் பொறுக்கு வதிலே மந்திரிகளுடைய தலைகள் தலைகீழாகக் கவிழ்க்கின்றன.

ஆகையால் இவ்வளவு அமைதியோடு நடந்து கொண்டிருக்கும் சர்க்காருக்கு ஏதாவது குறை இருக்குமானால்—நான் கையாண்டு வருகிற முறையைச் சொல்லுகிறேன்—முதல்வர் அவர்களிடத்தில் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் அதை நான் அசெம்பிளியில் குறிப்பிடுவது இல்லை; மந்திரிகளிடத்தில் சொல்ல வேண்டுமென்றால் அசெம்பிளியில் குறிப்பிடுவது இல்லை. என்னுடைய சக நண்பர்கள் அவையில் குறிப்பிடுகிறார்கள், அதைக் கூட நான் விரும்புவது இல்லை. எந்தக் குறை இருக்கிறதோ, அந்த அமைச்சரிடத்தில் சென்று நான் சொல்லுவது வழக்கம். அவரையும் புரிய வைப்பது, இப்படிப் பேசுன்றீர்களே, இப்படி மாற்றம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லுவது பொருந்தும். இதுதான் கோழமைக் கட்சியினுடைய சரியான உணர்வு.

மதிப்புமிக்க அம்மையார் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. எதிர்க் கட்சியாக இருந்தாலும் இங்கே குற்றச்சாட்டைச் சாட்டி சிக்கல்களை விரிவு படுத்துவது என்று இல்லாமல் . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது கவர்னர் பெருமான் உரையின் மீது விவாதமா அல்லது சட்டசபை அங்கத்தினர்கள் யார் யார் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று பேரவைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறாரா?

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** நான் அந்த உரையின் மீதுதான் பேசுகிறேன். அது யாருக்கும் அறிவுரை அல்ல. அறிவுரையாகப் பேசவில்லை, என்னுடைய அபிப்பிராயத்தைப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் ஒரு கருத்தைச் சொல்லுகிறார். நீங்கள் பேசும்போது வேண்டுமானால் அதை மறுக்கலாம்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** கருத்தைச் சொல்லக்கூடாது என்பது என்னுடைய உரிமையில் தலையிடுவது. நீங்கள் ஒரு படித்த அட்வகேட். நான் பள்ளிக்கூடத்தில் படிக்காதவன். எனக்கு விளங்குகிறது—இந்த அவையில் நான் ஒரு சட்டசபை மெம்பருக்கு உள்ள உரிமை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து பேசுகிறேன். அம்மையார் அவர்கள் அதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அங்கத்தினரின் பேச்சு சாதாரணமாகப் பேசுவது போல் இருந்தாலும், 'நீங்கள் படித்த அங்கத்தினர் ஒன்றும் புரியவில்லை; நான் படிக்காதவன், எல்லாம் புரிந்திருக்கிறேன்' என்று சொல்லுவது போல் இருக்கிறது. சுவையுள்ள பேச்சு என்று கருதிக் கொண்டு என்னை விட வயதானவர்கள் என்ற காரணத்தால் இவ்வாறு பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** நிச்சயமாக நீங்கள் படித்தது உண்மை. நான் படிக்காதது உண்மை. நீங்கள் அட்வகேட் ஆனதும் உண்மை, நான் பள்ளிக்கூடம் போகாததும் உண்மை. இந்த இரண்டு உண்மைகளைச் சொல்லு



வதில் என்ன தவறு? குறைத்து மதிப்பிட்டுச் சொல்லவில்லை. மீண்டும் சொல்லுகிறேன். நீங்கள் படித்தவர்கள், நான் படியாதவன். ஆகையால் இந்த வேளையில் அமைதியாகவும், கொஞ்சம் பரந்த கண்ணோட்டத்தோடும் போகவேண்டும். மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சி . . .—என்ன பெயர் சொல்லுகிறார்கள்—ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சொல்லிக் கொள்வேன். நீங்களும் எடுத்துச் சொல்லத் தான் வேண்டும். சொல்லும் நோக்கம் இருக்கிறதே, அது எனக்கு அம்மையார் அவர்கள் சொன்னதுபோல் இருக்க வேண்டும். எனக்கு அறிவுறுத்தி வயதுக்கு முதியவர் என்று சொன்னார்கள். அதைப் போல் வயதுக்கு முதிய கட்சி, அந்த முதிர்ந்த கட்சி தன்னுடைய கருத்தை முதிர்ந்த உணர்ச்சியோடு வெளிப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். நான் வாலிபனாக இருந்தபோது நல்ல ஆரோக்கியத்தோடு இருந்தேன். இப்போது 65 வயது ஆகிறது. வீட்டில் போய் படுத்தேன். பிரஞ்ஞை இல்லை. காரணம் வயது. காங்கிரஸ் கட்சிக்குப் பெருமை உண்டு. அது உங்களுக்கு முந்தி இருந்தே பெருமை உண்டு. அந்தக் கட்சியை வளர்த்தவர்கள் இருக்கிறார்கள். நான் ஒன்று சொல்கிறேன். நீங்கள் எல்லாம் இப்போது வந்தவர்கள். மண்டைக்குநேரே, நெஞ்சுக்கு நேரே, வெள்ளைக்காரர் துப்பாக்கியை வைத்துக்கொண்டு நின்றபோது "போலோ மகாத்மா காந்திக்கு" என்று சொன்னவன் நான். நீங்கள் யாரை இன்று பெரும் தலைவர்கள் என்று சொல்கிறீர்களோ அந்தத் தலைவர்களும் நானும் கிராமம் கிராமமாகச் சென்று கதர்த் துணியை தோளில் போட்டுக்கொண்டு விற்றுக்கொண்டிருந்தவன். அந்த வீரம் மிக்க பரம்பரையிலிருந்துதான் நீங்கள் வளர்ந்து வந்து இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த உணர்வோடு தான் நீங்கள் இருக்கவேண்டும். எனக்கு உரிமை உண்டு அதைச் சொல்வதற்கு (மணியடிக்கப்பட்டது) இருங்கள், எனக்கு 5 நிமிடம் போட்டுக் கொடுத்தாக வேண்டும். கண்ணியத்தோடும், கவுரவத்தோடும் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். வேறு வித்தியாசமாக நான் சொல்லவில்லை. அப்படி சொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லை.

நான் இது நாள் வரை தலைவர்வர்கள் என்னுடைய பேச்சில் தலையிட்டு முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு முன்பு நிறுத்திவிடுவது வழக்கம். இன்றைக்கு இடையிடையே குறுக்கீடு இருந்ததால் என்னுடைய பேச்சு நீண்டு விட்டது. நான் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள மாட்டேன். இன்றைக்கு இப்படி கேட்டு விட்டதால் அவர்களுக்கும் நல்லதாகப்போய் விட்டது. என்னுடைய உள் எண்ணத்தையும் வெளிப்படையாக சொல்வதற்கு காரணமாக இருந்தது என்று கூறிக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி திட்டம் பிரிவினை உணர்ச்சியோடு கூடியதல்ல என்று மிக விளக்கமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லி, அதற்கு எங்களுடைய கட்சியின் ஆதரவு உண்டு, உண்டு (கைதட்டல்). அதைப்போலவே, சிம்ப்சன் தொழிலாளி மட்டுமல்ல, எந்த கழகத்திலுள்ள எந்தத் தொழிலாளியானாலும், அந்தப் பகுதியிலுள்ள அவர் களுடைய நியாயமான, நேர்மையான உள்நோக்கம் இல்லாத, சுயநலம் இல்லாத போராட்டங்களில் அவர்களுக்கு ஏற்படுகிற குறைபாடுகளிலும், இடற்பாடு களிலும், எனக்கும் என்னுடைய கட்சிக்கும் பரிபூர்ணமான ஒத்துழைப்பு உண்டு என்று சொல்லிக்கொண்டு இந்த கவர்னர் உரையை எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்று, அமைகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பல நாட்களாக நடந்து கொண்டிருக்கக்கூடிய கவர்னர் பெருமானின் உரைமீதான விவாதத்திலே இறுதியாக என் கட்சியின் சார்பாக பேசுவதற்கு நான் இங்கே முற்படுகிறேன். பேசுவதற்கு முன்னதாக இந்த மன்றத்திலே எங்கள் கட்சியைப் பற்றி சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களைப் பற்றியும், பல்வேறு அபிப்பிராயங்களை பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிவகாசி உறுப்பினர் அவர்கள், காந்தியைக் காணாத காங்கிரஸ்காரர்கள் என்று எள்ளிநகையாடக் கூடிய முறையில் எங்களைப் பார்த்துப் பேசினார்கள். நாங்கள் அதற்காக வேதனைப்படுகிறோம். ஒன்று கூற விரும்புகிறேன். எங்கள் கட்சி பழமையான கட்சி. பழமையான கட்சி, புதிய தலைவர்கள் என்று எல்லாம் முஸ்லீம் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். எங்களுடைய கருத்து மாறுவிட்டாலும் பொறுப்பாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். நல்ல கருத்தாக இருக்கவேண்டுமென்று எல்லாம் எங்களுக்கு புத்திமதி கூறினார்கள். பொதுவாக எதிர்க்கட்சியாக இயக்குபவர்கள் அரசாங்கத்தை இடித்துப் பேசினால் தான், நல்லாட்சி மலர்வதற்கு ஏதுவாக இருக்கும். சாதாரணமாகச் சொல்வார்கள், இன்று எதிர்க்கட்சியே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்கிறார்கள். பல குற்றச்சாட்டுகள், பல பத்திரிக்கைகளில் வந்து இருக்கின்றன. எங்களைப் போன்றோர் மிதவாதிகள் என்று எள்ளி நகையாடி பத்திரிக்கைகளில் எழுதப்பட்டு வருகிறது. நாங்கள் அதைப்பற்றி வேதனைப்படவில்லை.

பொதுவாக இன்று நடந்த விவாதத்தை நாம் பார்க்கிறபோது, கவர்னர் பெருமான் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் ஒரு தீர்மானத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று ஆளும் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு இந்த கவர்னர் பதவி தேவையில்லை என்று சொல்லிருக்கிறது. கவர்னர் உரையை பல முறை பகிஷ்காரம் செய்து இருக்கிறார்கள். அந்த அமைப்புத் தேவையில்லை என்று இன்றைய அமைச்சரவையில் இருக்கும் அத்தனைபேரும் அன்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது சொல்லிக்கொண்டிருந்தது என்னுடைய மனக்கண்முன் நிற்கிறது. இது இந்த மாமன்றத்தின் ஏடுகளிலும் பதிவாகி இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு வேளை காலத்தின் மாற்றத்தால் ஏற்பட்ட மாறுதலாக இருக்கலாம். கவர்னர் பதவியை மட்டும் அவர்கள் இன்று மதிக்கவில்லை, இன்று கவர்னரோடு பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு—அமைச்சர்கள் அதிகமாக கலந்துகொண்டு—இருக்கிறார்கள். இதைக் காண்கிறபோது ஒரு வேளை கருத்து மாறுபாடு ஏற்பட்டு இருக்கலாம். கவர்னர் பதவியை ஒரு அமைப்பு என்ற முறையிலே ஒப்புக்கொண்டிருக்கலாம் என்று கருதுகிறேன்.

நான் கவர்னர் உரையின் மீது பேசுவதற்கு முன்னதாக பொதுவான ஒன்றிரண்டு கருத்துக்களைப் பற்றி விளக்குவதற்கு முற்படுகிறேன். நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து விளக்கம் என்ற தலைப்பிலே ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியதாக நான் பத்திரிக்கைகளில் பார்த்தேன். அந்தப் பேச்சிலே இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக ஏதோ சதி ஆளும் காங்கிரசிலே இருப்பவர்கள் செய்கிறார்கள், அதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எல்லாம் இருக்கிறது. அது உண்மைதானா என்பதைப் பற்றி நான் இங்கே எடுத்துக் கூறத் தேவையில்லை. ஜனநாயக முறைப்படி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற இந்த நாட்டிலே, இருக்கிற ஆட்சேபணைகளை எடுத்துக் கூறுவதற்கு எப்போதும்



வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக, இன்று ஆளும் கட்சியை எதிர்த்தோ அல்லது விமர்சனம் கூறினாலோ, ஏதோ கவிழ்ப்பதற்காக சதி செய்கிறார்கள் என்றக் குற்றச்சாட்டை கூறுகிறார்கள். அந்தக் கூற்று தேவையில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று அதிகமாக, மாநில சுயாட்சி, மாநில சுயாட்சி என்று பேசப்பட்டது. மாநில சுயாட்சி என்பது பிரிவினையின் போர்வையில் நடைபெறுகிறதா அல்லது அதிக அதிகாரம் வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விளக்குகிற தன்மையில் இருக்கிறதா என்பதைப் பற்றி இந்த அவையிலே இருக்கிற எல்லா அங்கத்தினர்களும் நல்ல முறையில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் தனி திராவிட நாடு வேண்டுமென்று ஒரு கொள்கை வைத்திருந்தது. ஆனால் படிப்படியாக சட்டம் வந்தபோது தனி நாடு தேவையில்லை, ஒரு பெடரேஷனாக இருக்கவேண்டும், ஒரு கூட்டு அமைப்பாக இருக்க வேண்டும் என்ற மாற்றத்திற்கு அவர்கள் வந்து இருக்கிறார்கள். இப்போது, மாகாண சுயாட்சி தேவை என்ற முறையிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாநில சுயாட்சி தேவைதானா என்பதைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டப்படி என்னென்ன மாறுதல் ஏற்படவேண்டும் என்பதைப் பற்றி எல்லா கட்சி அங்கத்தினர்களும் ஆராயவேண்டும். இன்று இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை நல்ல முறையில் திருத்தியமைக்க வேண்டுமென்பதைப் பற்றி நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும். பிரிவினை போர்வையில் இந்த மாதிரியான கொள்கைகள் பேசப்பட்டால், அதைக் காங்கிரஸ் கட்சி எப்போதும் அனுமதிக்காது. இந்த தேசத்தை துண்டாடுவதற்கு நாங்கள் ஒத்தாசையாக இருக்க மாட்டோம் என்று கூறிக்கொள்கிறேன். பாரத தேசத்தை ஒன்றாகக் காண்கிறோம். இந்த தேசத்தின் விடுதலைக்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களுடைய ரத்தத்தால், அவர்கள் நடத்திய விடுதலைப் போரால் சுதந்திரமாக இருக்கிறார்கள். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பதற்கு ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி என்றுமே முனைந்து இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற பல தலைவர்களும் பிரிவினை உணர்ச்சியில் பேசியிருக்கிறார்கள், என்ற குற்றச்சாட்டை நான் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். பலரும் இன்று வங்க தேசத்தில் நடந்த விடுதலைப் போரைப்பற்றி பேசியிருக்கிறார்கள். வங்க தேசத்தில் முஜிபுர் ரஹ்மான் அவர்கள் 6 அம்ச திட்டங்களை வைத்து மத்திய அரசாங்கம் இப்படி இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்களே அது மாதிரி தமிழகத்தில் இருக்கவேண்டுமென்று கருதுகிறார்களா, அல்லது இராஜமன்னார் குழு அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில மாற்றங்கள் தேவை என்று சொல்லியிருக்கிறார்களே, அந்த மாற்றங்கள் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அரசாங்கம் முதலில் எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவுமல்லாமல், பலரும் இன்று பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட பல மாற்றங்களைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர்கள் கூறியதை மறுத்து நான் மேற்கொண்டு

எதுவும் கூறத்தேவையில்லை. தமிழக அரசு வெள்ளிவிழா மலரில் பெரியார் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்ற கருத்தில் எழுதி இருக்கிறார்கள் அவ்வாறு திராவிடநாடு கேட்பது ஒரு கொள்கையாக இந்த அரசு கொண்டிருக்கிறதா என்கிற கொள்கை விளக்க கருத்தைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியாக தி.மு.க. சொல்லும் விஷயத்தை எத்தகையது என்று நாம் எல்லாம் உணரவேண்டும். இன்று இருக்கின்ற அமைப்பிலே தனியாக இருக்க முடியாது. இன்று மொழிப்பெயரால் பிரிவினை அல்லது பல சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இல்லை என்று என்ருல் சொல்ல முடியாது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சையில் நமது மொழியில் எழுத வேண்டுமென்று எல்லோரும் இங்கு பரவலாக கருத்து கூறப்பட்டு வந்தது. அது என்ன ஆயிற்று? அப்படி முடியாது என்ருல் பிராந்திய மொழிகளில் இந்தத் தேர்வு எழுத அவர்களுக்கு வேண்டிய அவகாசம் இல்லை, வாய்ப்பு இல்லை என்று யு.பி.எஸ்.ஸி. இன்று தெரிவித்திருக்கிறது. இதை எல்லாம் பற்றி ஆலோசனை செய்ய உறுப்பினர்கள் அதற்கு வேண்டிய பரிகாரம் காண வேண்டிய பொறுப்பும் கடமையும் இன்று ஆளும் கட்சியில் இருக்கும் தி.மு.க. வைச் சேர்ந்தது. அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

ஆனல் எந்தக் காரணத்தை ஒட்டியும் இந்தப் பிரிவினையை தூண்டக் கூடாது. பிரிவினையைத் தூண்டும் சக்திகளைக் கூட அதிலே விடக்கூடாது. அதிலும் குறிப்பாக இன்று தி.மு.க. ஆளும் கட்சியாக வந்திருக்கிறது. மக்களுடைய ஆதரவு தி.மு.க.வுக்கு வந்திருக்கிறது. மக்களால் தூக்கி எறியப் பட்டவர்கள் என்று தரக்குறைவாக கூறுகிருர்கள் என்று ஆட்சேபனை இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்று கூற விரும்புகிறேன். தி.மு.க. 1957-ல் எத்தனைப்பேர்கள் இருந்தார்கள், என்பதும் அதன் பிறகு 1967-ல் எவ்வளவு பேர்கள் வந்திருக்கிருர்கள் என்பதும் நமக்குத் தெரியும். அதற்கு பிற்பாடு ஏற்பட்ட கூட்டணி அமைப்புத் தான் தி.மு.க. பெரும்பான்மைக்கு ஸ்தானங் களை கைப்பற்றுவதற்கு முழு முதற் காரணமாக இருந்தது. இந்த மாதிரியான கொள்கை மாற்றங்கள் பற்றி பார்வேர்டு பிளாக் தலைவர் கருதுவது எல்லாம், வங்கத்திலே சி.பி.எம். ஓட்டு பெறவே அவர்களோடு இருக்கிருர்கள். இந்த மாதிரி கருத்துக் கொள்கை இருக்கத்தான் செய்யும்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவரவர்களே, சி.பி.எம்.மோடு கூட்டு வைத்துக் கொள்ள பேச்சு வார்த்தையை ஒட்டி அகில இந்திய பார்வர்டு பிளாக் மூக்கையாத் தேவர் கல்கத்தாவுக்கு தொலைபேசியில் பேசி, ஆர். காங்கிரஸோடு தான் அலயன்ஸ் வைத்துக்கொள்ள வேண்டும், சி.பி.எம். மோடு வைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறியிருக்கிருர்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் அந்தச் செய்தியைப் பார்க்கவில்லை. ஆனல் நேர்மாருக சி.பி.எம்.மோடு உறவு கொண்டிருக்கிருர்கள். பார்வேர்டு பிளாக் தலைவரோடு தொலைபேசியில் பேசியிருக்கிருர். அவர்கள் சி.பி.எம். ஊழியர்களாக மாறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை செய்ய வேண்டியதில்லை என்று கருதுகிறேன். அரசியல் மாறுதல் பலவிதமாக ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதைப்பற்றி பேசவேண்டியதில்லை. பொதுவாக "மக்களால்





தூக்கி எறியப்பட்ட கட்சி" "பெரும் தலைவர்" என்று இப்படி பேசி
விட்டார்கள். அவர்களைச் சார்ந்த கட்சிக்காரர்கள் மறைமுகமாக தாக்க
வேண்டிய தேவையில்லை. எங்களுடைய கருத்து என்னவேண்டுமென்ருலும்
இந்த மன்றத்திலே வெளியிடுவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஊழல்,
ஊழல் இருக்கிறது என்று எங்கள் கட்சித் தலைவர் எடுத்துக் கூறினுர்.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். நானுகக் கூறவில்லை. இன்று ஆளும்
கட்சியுடன் தோழமை கட்சியாக இருக்கின்ற கம்யூனிஸ்டு கட்சி 25—9—70-லே
அவர்களுடைய பொதுக் குழுவிலே, மாநில செயற்குழு நிறைவேற்றிய தீர்மா
னத்தை அவர்களுடைய அனுமதியோடு இந்த அவைக்கு கூற விரும்புகிறேன்.
தமிழகத்திலே அமைச்சர்களின் சொத்துக்கள் பற்றியும் அதிலும் குறிப்பாக
இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதியை வைத்து விசாரணை தேவை
என்று அந்த தீர்மானத்தில் திரு. எம். கல்யாணசுந்தரம், செயலாளர், அவர்கள்
கையெழுத்துப் போட்டு பிரசுரமான தீர்மானம் ஒன்று நம் கையில் இருக்
கிறது. ஜனசக்தி பத்திரிக்கையில் வந்திருக்கிறது. தமிழ்நாடு அமைச்சர்கள்
சொத்துக்கள் பற்றி எல்லாம் விசாரணை நடத்த வேண்டுமென்றும் அதிலே
ஏதோ சங்கடங்கள் இருக்கின்றன. வீராணம் திட்டம், கூவம் சீரமைப்புத்
திட்டம், என்ற பல குற்றச்சாட்டுக்களை திரு. எம். கல்யாணசுந்தரம் தங்கள்
குழுவில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிருர்கள். ஏதோ ஆளும் கட்சி
காங்கிரஸ்ஸில் இருக்கிறவர்கள் மாதிரி அந்தக் குற்றக் கணையை வாசிக்
கிருர்கள் என்று சொல்வதற்கு இல்லை.

அதுமட்டுமல்ல. ஆளும் கட்சிக்காரர்கள் என்னென்ன குற்றச் சாட்டுகள்
செய்திருக்கிருர்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்று அமைச்
சரவையில் ஒரு சில மாற்றங்கள் சமீபத்தில் நடந்தன. ஒரு சில இலாக்காக்கள்
ஒரு சில அமைச்சர்களிடமிருந்து மாற்றி திரும்ப கொடுத்ததை நீங்கள் மறக்க
வில்லை என்று நினைக்கிறேன். இதை நன்ருக அறிவீர்கள். ஏதோ பூசல்
இருக்கிறது அமைச்சரவையில், அபிப்பிராயபேதம் இருக்கிறது என்பது ஒரு
வேளை பகிரங்கமாக முதலமைச்சர் மறுத்தாலும், நாட்டிலே எல்லோரும் பலவித
மாக பேசிக்கொண்டிருக்கிருர்கள் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அவர்
களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

இனி அடுத்தபடியாக இங்கு முக்கியமாக பேசவேண்டிய இந்த அரசாங்
கத்தின் தொழில் கொள்கைபொறுத்த வரையில் இந்த அரசாங்கம் தொழி
லாளர் அரசாங்கமென்று பல முறை பறைசாற்றிக்கொண்டு இருந்தது. ஆனல்
தொழிலாளர்கள் மத்தியிலே என்னென்ன பேசப்படுகிறது, தொழிலாளர்கள்
என்னமுறையில் இந்த அரசாங்கத்தைப்பற்றி நினைக்கிருர்கள் என்பதை
எல்லாம் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

சிம்ப்சன் விவகாரத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பொதுமக்களுக்கு
நன்ருகத் தெரியும். அதிலும் குறிப்பாக, ஒரு சில மாதங்கள் தொடர்ந்து
இந்த சிம்ப்சன் விவகாரம் இந்த தமிழ் நாட்டிலே தொழில் அமைதிக்கு கேடு
விளைவித்திருக்கிறது, என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த இந்த டிரேட்
யூனியன் தலைவர்கள் என்னென்ன முறையில் இந்த ஸ்தாபனத்திலே பல வித
மான காரியங்களைச் செய்தார்கள், என்பது எல்லாம் விரிவாக எடுத்துக்
கூறவேண்டிய தேவையில்லை. பொதுவாக அங்கே இருந்த தொழிலாளர்கள்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 சனவரி 31

இந்தத் தலைமையை விரும்பவில்லை, அவர்கள் ஏற்படுத்திய தலைமையை அவர்கள் விரும்பவில்லை. ஆதலால் மாறுதல் வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். சமாதான முறையில் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. இது தொழில் பிரச்னையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக போலீஸ் அதிகமாக தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டை இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன். ஒரு கூட்டத்திலே நமது அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார். தமிழ்நாட்டு போலீசை பொறுத்தவரையில் "கருணை" பிளஸ் "அருளாக" இன்று போலீஸ் நிர்வாகம் இருக்கிறது என்று அவர்கள் கூறியதாக பத்திரிக்கையில் பார்த்தேன். ஆனால் இந்தத் தொழிலாளர்பால் எவ்வளவு கருணையாக நடந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. ஏராளமான மண்டை உடைந்த தொழிலாளர்கள் சாட்சியம் சொல்ல காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான அடக்கு முறை அட்டூழியம் எந்த காலத்திலாவது நடந்தது உண்டா என்று தொழிலாளர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். ஆதலால் இந்த மாதிரி தகராறுகள் வருகின்ற போது சுமுகமான முறையில் அதைப் பேசித்தீர்க்கவேண்டும். பொதுவாக, ஆட்சி பொறுப்பு இதிலும் வந்துவிட வேண்டுமா என்று தன்னுடைய பொறுப்பை மாநில அரசு தட்டிக் கழிக்க இயலாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அமைச்சர் இங்கே வந்துவிட்டார்கள் என்றால் இங்கு மாநில அமைச்சரோடு அவர் பேசாமல் தொழிலாளர்களை நேரடியாக தொடர்பு கொண்டு என்னென்னமோ காரியங்கள் செய்து விட்டார்கள் என்று குற்றம் சாட்டுவது மட்டும் போதாது. அது மட்டும் அல்ல இந்த சிம்ப்சன் விவகாரத்தில் இந்த அரசாங்கம் தொழிலாளருக்கு பெரும் அநீதியை விளைவித்து இருக்கிறது. இந்த மாதிரியான அராஜகத்தை தூண்டிவிடுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். இது அரசியல் காழ்ப்பு உணர்ச்சியோடு நடத்தக் கூடிய சதித் திட்டம் இதிலும் பதிந்து இருக்கிறது, என்று சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர் மத்தியிலே வேறு தொழில் தலைவர்கள் தாறுமாறாக தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அதிலே மண்டை உடைந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற நிலைமை தமிழ்நாட்டின் நல்ல பெயருக்கு நல்லதல்ல, என்று கூறிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்று இந்த விவகாரத்திலே தலையிட்ட அமைச்சரைப் பற்றி பத்திரிக்கைகள் என்ன என்ன கூறி இருக்கின்றது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், இன்று பத்திரிகைகள் எல்லாம் ஒழுங்காக இருக்கவில்லை. சில பத்திரிக்கைகள் எல்லாம் வேண்டும் என்றே காரியங்களெல்லாம் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்று அவர்கள் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஆனால் ஒரு அமைச்சரைப்பற்றி சிம்ப்சன் விவகாரத்திலே தலையிட்ட காரணத்தினால் அவரைப் பற்றி முரசொலிப் பத்திரிகையிலே என்ன எழுதியிருக்கின்றார்கள் என்பதை இங்கு நான் கூறுவதற்கு கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். பத்திரிகையைப் படிக்கவில்லை. 3—1—72-லே 'யார் இந்த மங்கலத்தார்' என்ற தலைப்பிலே முரசொலிப் பத்திரிகையிலே எடுத்துக் கூறியிருக்கிறது. இப்போதைய இரும்பு (உருக்கு) அமைச்சர் குமாரமங்கலம் யார், தெரியுமா? காலஞ்சென்ற மதிப்புக்குரிய டாக்டர் சுப்பராயன் மைந்தர். கன்னடத்துப் பிராமணத்தாயின் சேய். அது மட்டுமல்ல, என்று சொல்லி



1972 சனவரி 31]

சிலபல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறது. அவர் செய்தது பெரிய ர்வமா? அவர்கள் அமைச்சராக இருக்கின்றார்கள். இந்த அரசுக்கு ந்திராக நடந்துகொண்டிருந்தால் நீங்களே அவரோடு தொடர்பு கொண்டு "இது சரியல்ல, நியாயமல்ல" என்று சொல்லியிருக்கலாம். ஜாதியைப் பேசி, தந்தையையும் தாயையும் இழுத்து இந்த மாதிரியாகக் கூறி முரசொலிப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. தங்களுடைய கட்சிப் பத்திரிகை. இதுமாதிரியாக முரசொலி போன்ற பத்திரிகைகள் எல்லாம் பிரசுரம் செய்கின்றது என்றால், மஞ்சள் பத்திரிகைகள் வேறு விதமாகச் செய்கின்றது என்று சொல்லித் தப்பித்துக் கொள்வது நியாயமல்ல, தர்மமல்ல, அறமுமல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்களெல்லாம் ஆளும் காங்கிரஸ்காரர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறோம் என்று சொல்லவில்லை, இந்த மாதிரி யார் சொன்னாலும் இது விரும்பத் தக்கது அல்ல, வெறுக்கத் தக்கது என்ற காரணத்தினால் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதிலேயும் குறிப்பாக இன்று பத்திரிகைகளையெல்லாம் முதல்வர் அவர்கள் எச்சரிக்கின்ற தன்மையிலே பல அறிக்கைகளை யெல்லாம் விடுகின்றார்கள். தங்களுடைய கட்சிப் பத்திரிகையும் இந்த மாதிரியான தப்பான பாதையிலே செல்லக்கூடாது, அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். திருந்தவேண்டும் என்று அறிவுரை வழங்குவதற்கு தாங்கள் கடமைப்பட்டவர்கள் என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இது மட்டுமல்ல. இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன. பொதுவாக மத்திய அமைச்சர்களைப்பற்றி நாம் இந்த மன்றத்திலே கூறுகின்றபோதானாலும், வெளியிலே கூறுகின்றபோதானாலும், நம் முதலமைச்சர் அவர்கள் மிகவும் அடக்கத்தோடும் கண்ணியத்தோடும் பேசுகின்றார்கள். ஆனால் உங்களுடைய தரப்பிலே இருக்கிற பலரும், கட்சித் தோழர்களும் தொண்டர்களும், பலவாராக பேசிக்கொண்டிருக்கிறார்கள், இது நல்லதல்ல. இந்த மாதிரியான போக்கு தமிழகத்துக்கும், ஏன் இந்தியாவுக்கும், உகந்தது அல்ல என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் கவர்னர் பெருமானின் உரையைப்பற்றி, அதிலே இருக்கின்ற ஓரிரு காரியங்களைப்பற்றி கூறுவது பொருத்தம் என்றே கருதுகின்றேன். இங்கு மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தை 1972-லே விரிவு படுத்தி அதை முடித்து விடுவதாக போன பட்ஜட் கூட்டத்திலே எடுத்துக் கூறினார்கள். ஆனால் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே 1972-73 என்று அதைத் தள்ளி வைத்திருப்பதை நான் பார்க்கின்றேன். ஏன் இந்த மாதிரியான நிலைமை இருக்கின்றது என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, சேலம் ஸ்டீல் பிளான்ட்டைப் பற்றி எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். தேர்தலுக்கு முன்னதாக இந்த சேலம் ஸ்டீல் ப்ளான்ட்டுக்கு கல்நாட்டு விழா எல்லாம் உடனடியாகச் செய்யவேண்டும் என்று அவசர அவசியமாக செய்து முடித்து தேர்தல் முடிந்துவிட்டது. நீங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றீர்கள். ஆனால் இப்பொழுது மத்திய அமைச்சரவையிலே இருக்கின்ற அமைச்சர்கள் இது வருவதற்கு இன்னும் அதிக காலதாமதம் ஏற்படும் என்ற முறையிலே கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நமது அரசாங்கத்தின் தரப்பிலே 10 கோடி ரூபாய் செலவிலே ஒரு பெல்லட்டைசேஷன் பிளான்ட் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு அதற்கு வேண்டிய வேலைகள் எல்லாம் துவங்கி

இருக்கின்றது. சேலம் உருக்காலை வரவில்லையே, இது வராத காரணத்தினால் இந்தத் தொழில் எவ்வளவு பாதிக்கப்படுகின்றது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரியான காரியங்களைப் பற்றியெல்லாம் நாம் சற்று நிதானமாக சிந்திக்க வேண்டும். தஸ்தூர் கம்பெனியாரின் அறிக்கையின் கடைசி விவரம் என்ன? வரும் என்று சொல்கிறார்களா அல்லது என்ன சொல்கிறார்கள் என்பதை எல்லாம் இந்த மன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்கள் என்று நான் கருதுகின்றேன்.

அடுத்தபடியாக, நான் இங்கே கூறவிரும்புவது உணவுப் பிரச்சினையைப் பற்றி. இதைப்பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையிலே பெருமிதத்தோடு பல புள்ளிவிவரங்களையெல்லாம் தந்திருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றார்கள், இந்த ஆண்டிலே 73 லட்சம் டன் குறிக்கோள் நிறைவேறி விடும் என்று. ஆனால் நான் ஒன்று கூற விரும்புகிறேன். உணவு தான்யங்கள் எல்லாம் அதிகமாக உற்பத்தி ஆகி இருக்கிறது. உணவு தேங்கி இருக்கின்றது என்று இருந்தாலும் இன்று அரிசியின் விலை என்ன ஆகி இருக்கின்றது என்று நீங்கள் பார்க்கவேண்டும். வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையிலே நீங்கள் பார்த்தீர்களானால் அன்று விலைவாசிப் போராட்டம் நடத்தியதைவிட இன்று விலைவாசிகள் எல்லாம் உயர்ந்து இருக்கின்றது. ஆனால் அரசாங்கத் தரப்பிலே இருந்து நீங்கள் மவுனம் சாதித்திருக்கிறீர்கள். மத்திய ஆட்சியின் பொருளாதாரக் கொள்கையினால் இந்த மாற்றம் எல்லாம் ஏற்படுகின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் ஒன்று கூற விரும்புகிறேன். மறைந்த முதலமைச்சர் உயர்திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்திலே 12—4—1967-லே பேசினார்கள். 14—4—1967 முரசொலிப் பத்திரிகையிலே அது வெளி வந்தது. கடம்பத்தூரிலே ஒரு பொதுக் கூட்டத்திலே பேசியிருக்கின்றார்கள். 55 லட்சம் டன் தமிழ் நாட்டுக்கு உணவு இருந்தால் இந்த தமிழ்நாட்டிலுள்ள எல்ல தேவைகளும் பூர்த்தியாகிவிடும் என்று கூறியிருக்கின்றார்கள். ஆனால் நேர்மாறாக கடந்த வருஷத்திலே 70 லட்சம் டன்னாக இருக்கின்றது. 70.3 லட்சம் டன்னாக இருக்கின்றது. இந்த வருஷம் 73 லட்சம் டன்னாக குறிக்கோள் எய்திவிடுவோம் என்றெல்லாம் கூறி இருக்கின்றீர்கள் ஏன் இப்படி விலைவாசி எல்லாம் உயர்ந்துகொண்டு இருக்கிறது? உணவுப் பொருள்களின் விலை என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள கொள்கை இதற்குக் காரணமாக இருக்கின்றது. துண்டுவிழுகின்ற பட்ஜட்டை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். மத்தியிலே 220 கோடி ரூபாய் துண்டுவிழுகின்ற பட்ஜட்டை செய்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. நம்முடைய வரவு செலவு முறையினால் நமக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமது கழிந்த பட்சத்திலே நமக்கு ஓப்பனிங் பாலன்சாக 23 கோடி ரூபாய் இருந்தது என்று புள்ளி விவரங்கள் எல்லாம் எடுத்துக் கூறுகின்றது. நமக்கு வருவாய்த் துறையிலேயும் துண்டு விழும் பட்ஜட்டாக இருக்கின்றது என்று எடுத்துக் கூறினார்கள். ஆனால் நாம் புதிய புதிய வரிகளையெல்லாம் போட்டிருக்கின்றோம். விற்பனை வரிக்கு 2% 5% சர் சார்ஜ் போட்டிருக்கிறோம். அக்ரிகல்சுரல் இன்கம் டாக்சைக் கூட்டி இருக்கின்றோம். எலக்ட்ரிசிடி டாரிபை 12.4 பைசாவாக உயர்த்தி இருக்கின்றோம். ஆனாலும் துண்டுவிழுகின்றது.





அதுமட்டுமல்ல, ப்ரொகிபிஷனை ரத்து செய்ததன் காரணமாக சுமார் 21 கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது என்ற விவரத்தையும் கூற விரும்புகிறேன். இப்படியெல்லாம் அதிகமாக பணம் வந்ததற்குப் பின்னால்கூட தமிழ்நாட்டிலே ஏன் இவ்வளவு விலைவாசி உயர்ந்து கொண்டிருக் கிறது? நமது வரிக் கொள்கைதான் காரணம் என்பதை இந்தச் சந்தர்ப் பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமக்கு ஓவர் டிராப்ட் எந்த முறையிலே இருக்கின்றது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மார்ச் 10, 1969-லே நமது மாநிலத்தின் ஓவர் டிராப்ட் ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கியது 2,368 லட்சமாக இருந்தது. ஆனால் பாராளுமன்றத்திலே 16 நவம்பர் 71-லே தந்த அறிக்கையின்படி 58.55 கோடி ரூபாய் தமிழ்நாடு இந்த ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கின்றது என்ற விவரத்தையும் கூறியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. 8 ராஜ்யங்கள் கூறியதிலே அதிகமாக ஓவர் டிராப்ட் வாங்கியிருப்பது தமிழ்நாடு என்று சொல்லி இருக்கின்றார்கள். இப்படி நாம் பார்க்கின்றபோது பொதுவாக பல வரிகளையெல்லாம் கூட்டியிருக்கின்றார்கள். வரி கூட்டினது மட்டுமல்ல. பர் காபிடா டாக்ஸ் கூட 1969-70-லே 52 ஆக இருக்கின்றது, என்ற புள்ளி விவரத்தையும் தந்திருக்கிறார்கள். ஒரு தலைக்கு 52 ரூபாய் வரி செலுத்தக்கூடிய தன்மை இருக்கின்றது என்று கூறலாம். பொது வாகப் பார்க்கின்றபோது பஸ் கட்டணம் உயர்ந்து இருக்கின்றது. எக்ஸ்பிரஸ் பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது. விற்பனை வரி கூடி இருக்கின்றது. விவசாய வரி கூடி இருக்கின்றது. எலெக்ட்ரிக்சிடி டாரிப் கூடி இருக்கின்றது. மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. ஏன், படிப்படியாக வரிகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன, ஆனால் விலைவாசி விழுந்தபாடாக இல்லை? இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் சொல்கிறார்கள், மத்தியிலே இருக்கிற ஆட்சி. 'வியூஸ வித் கன்சர்ன்' என்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறி இருக்கின்றார்கள். இதற்கு உடனடியாக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? இருக்கின்ற படி அரிசித் திட்டத்தை கைவிட்டாகிவிட்டது. மலி வான அரிசியைக் கொடுக்கின்ற திட்டத்தை கைவிட்டாகிவிட்டது. ஃபேர் பிரைஸ் ஷாப் துவக்குவதற்கு மத்திய அரசாங்கத்திலேயிருந்த தாக்கீது வந்திருக்கிறதாக பத்திரிகையிலேயெல்லாம் பார்க்கிறோம். இந்த மாதிரியாக விலைவாசி எல்லாம் விஷம் போல் உயர்ந்துகொண்டிருக்கிறது. அன்றெல்லாம் கூறினார்கள், அமைச்சர்கள் பெயரைச்சொல்லி, அரிசி விலை என்ன ஆச்சி என்று, புளி விலை என்ன ஆச்சி என்று, கருப்பு கட்டி விலை என்ன ஆச்சி என்று உங்கள் கட்சித் தோழர்கள் தொண்டர்கள் எல்லாம் பேசினார்கள். ஆனால் இப்பொழுது பொதுமக்கள் அமைதியாக இருக்கின்றார்கள். அதைவிட அதிக மடங்கு விலை வாசி உயர்ந்திருக்கிறது. சீனி எல்லாம் எப்படி வினியோகம் செய்யப்படு கிறது. மத்திய அரசோடு நாம் உடனடியாக பேசி நமக்குக் கிடைக்கின்ற சீனியை உடனடியாக விநியோகம் செய்ய வேண்டும் ஏதோ நமக்குக் கிடைக்க வில்லை என்று மட்டும் சொல்லிவிட்டு நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிப்பது பொருத்தம் அல்ல என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமக்கு 8 லட்சம் டன் சீனி கழிந்த டிசம்பர் மாதத்திலே தந்திருப்பதாக உணவு அமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே அவர்களுடைய பெயரிலே வந்த செய்தியிலே இருக்கின்றது. ஆனால் இன்ன் இரண்டு ரூபாய்க்குச் சீனி கிடைக் கின்றதா அல்லது அதிகமாக விலை கொடுக்கவேண்டுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு பத்திரிகைச் செய்தியைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அதாவது 8 லட்சம் டன் சர்க்கரை விநியோகம் செய்வதற்காக வந்ததாகச் சொன்னார்கள். அது தவறான செய்தி. ஏறக்குறைய 9 ஆயிரம் டன் சர்க்கரைதான் கொடுக்கப்பட்டது. அதை கிலோ இரண்டு ரூபாய்க்குமேல் விற்கக்கூடாது என்று சொல்லி, ஆங்காங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்துள்ளோம்.

மேலும் அரிசி விலையைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதிலே என்ன குறை இருக்கிறது? இப்போது என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று சொன்னால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியும். 'ஃபேர் பிரைஸ் ஷாப்' மூலமாக ஏற்கெனவே குறைந்த விலையில் சென்னை, கோவை மாவட்டங்களில் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தேவைப்பட்ட மற்ற இடங்களுக்கும் கொடுத்து இருக்கிறோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் கொடுத்திருக்கிறோம். கன்னியாகுமரியில் கூட இப்போது கொடுத்து வருகிறோம். எங்கே குறை இருக்கிறது, எங்கே அதிகமாக விற்பனைச் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரிசி ரூபாய் 2.20-க்கு விற்கப்படுகிறது. சென்னைப் பகுதியிலேயே விற்கப்படுகிறது. அது சாதாரண ரகத்தைச் சேர்ந்தது. முதல் ரக அரிசி மூன்று ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

அது மட்டுமல்ல. சீனி ஏதோ இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கப் படுவதாகச் சொன்னார்கள். 9 ஆயிரம் டன் சீனியையும் கொடுத்துவிட்டோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை மட்டும் கூறினால் போதாது. வியாபாரிகளைப் பற்றியும் சொல்லவேண்டும். குறிப்பாக நான்கு வியாபாரிகள் இடம் மொத்தமாகச் சீனி விநியோகம் செய்யும் பொறுப்பை ஒப்படைத் திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அது தவறான கருத்து. வேண்டுமென்றே பழி சுமத்துகிறார்கள். நான்கு வியாபாரிகளிடம் சீனி வியாபாரத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று பொறுப்புள்ள ஒரு கட்சித் தலைவர் சொல்வது சரியல்ல. நமது மாநிலத்தில் விநியோகம் செய்வதற்காக வந்த 9 ஆயிரம் டன் சீனியும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்யப்பட்டது. வியாபாரிகள் மூலமாக சீனி விநியோகம் செய்யப்படவில்லை. சீனி விநியோகத்திலே எந்தவிதமான தவறும்நடைபெறவில்லை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: That refers to the controlled sugar. What about the uncontrolled sugar?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நான் பொறுப்புணர்ச்சியோடுதான் கூறினேன். இங்கிருக்கின்ற விலைவாசியைப் பற்றிச் சொன்னார்கள். அதிக விலைக்கு விற்கவில்லை என்று சொன்னார்கள். நான்கு வியாபாரிகள் சீனியை அதிக விலைக்கு விற்றிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 9 ஆயிரம் டன் சீனி விநியோகத்திற்கு வந்தது. அது கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.



அவர்கள் மீண்டும் நான்கு வியாபாரிகள் மூலம் விற்றதாகச் சொல்கிறார்கள். அந்த நான்கு வியாபாரிகள் யார் என்பதைச் சொல்லமுடியுமா? வீண் பழி சுமத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** என்னுடைய கையிலே இருக்கின்றத் தகவல்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆதாரமே இல்லாமல் பேசுவதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஒரு சில குறிப்புகளை இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

"*Rise in Wholesale Price Index, New Delhi, January 26*

The official wholesale prices index (with the year ended March 1962 as 100) registered a rise of 1.1 per cent to 189.5 durini the week ended January 1, against 1875 (revised) for the previous week. The general index at this level was higher by 2.8 and 3.8 per cent respectively when compared to the corresponding weeks of a month ago and a year ago."

"*Cost of living in Madras*

The consumer price index number for industrial workers in Madras (with base 1960 as 100) for December 1971 was 188 points. The estimated index on the old base (base: 1935-36 as 100) derived from 1960 series works out to 895 points, the linking factor being 4.76"

பொதுவாக இதைப் பார்க்கின்றபோது, இன்று இருக்கக்கூடிய விலைவாசிகளைப் இந்த 'லிவிங் இன்டக்ஸ்' அடிப்படையிலே, மத்திய அரசாங்கம் தந்திருக்கிற புள்ளிவிபர அடிப்படையிலே கூறுகிறேன், இன்று விலைவாசிகள் உயரவில்லை என்று சொன்னால் நான் அதை நம்புவதற்கு தயாராக இல்லை என்று.

ஏதோ சீனி, அரிசி எல்லாம் தாராளமாக விநியோகம் செய்யப்படுவது போல் அமைச்சரவர்கள் சொன்னார்கள். சரியான விலைக்கு சீனியும் கிடைக்கவில்லை; அரிசியும் கிடைக்கவில்லை. ஏதோ பெல்ட் ஏரியாவில் கொடுக்கப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே எப்படிக் கொடுக்கப்படுகிறது என்பதைப்பற்றி எனக்குத் தெரியும். பெல்ட் ஏரியா என்று சொன்னால் அங்கே யாருக்குக் கொடுப்பது, யாருக்குக் கொடுக்கக் கூடாது என்ற விதிமுறை இல்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே நியாய விலைக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இரண்டரை ரூபாய் கொடுத்து கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது சாதாரண மக்களுக்கு வெளியிலே என்ன விலைக்குக் கிடைத்திருக்கும் என்பதைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படி விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டே போனபோதிலும் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. அதைவிட்டுவிட்டு ஏதாவது கேட்டால் மத்திய அரசாங்கத்தை கையைக் காட்டிவிட்டு, தங்கள் பொறுப்பை புறக்கணித்து விடுகிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 சனவரி 31

அடுத்தபடியாக, இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். வறுமை இன்று அதிகமாக இருக்கிறது இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வறுமையால் பாதிக்கப்பட்டு, ஒரே குடும்பத்தில் ஐந்துபேர் தற்கொலை செய்து கொண்டதாக 24-12-1971 தேதியிட்ட தினமணிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. திருப்பத்தூர் வட்டத்தில் கிடவுப்பாளையம் என்ற கிராமத்தில் சுந்தரமும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் என்று செய்தி வந்திருக்கிறது.

பொதுவாக இன்று தமிழ்நாட்டில் மிகக் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. விலைவாசியைக் குறைத்துவிட்டோம்; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட்டோம் என்று பறைசாற்றினால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்திக்காட்டவேண்டும். ஏதோ இரண்டாயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டமே ஒழிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில்லை. எஞ்சினியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நீடிக்கிறது. ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. ஆறாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஆசிரியர் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். எப்போது வேலை கிடைக்கும், எப்போது தம் ஏழ்மைநிலை மாறும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்ன என்ன திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏதோ பல தொழிற்சாலைகள் வரப்போவதாகச் சொல்கிறார்கள். தொழிற்சாலைகள் எந்த அளவுக்கு வரப்போகின்றன; எந்த அளவுக்குச் செயல்படப் போகின்றன என்பதைப் பின்னால் பார்க்கத்தான் போகிறோம். தொழிற்சாலைகள் வந்தால் போதாது. தொழில் அமைதி இருக்கவேண்டும். இன்றைக்குத் தொழில் அமைதி இல்லை. தொழிலாளர்கள் ஒரு பதட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் செய்கின்ற தொழிலையும் ஒழுங்காகச் செய்யமுடியவில்லை.

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் நமது முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், தொழிலாளர்கள் வீட்டிலே தாக்கப்படுவதாகச் சொல்வது வெறும் கற்பனைக் கதையென்று. தொழிலாளர்கள் வீட்டிலே தாக்கப்பட்டால், அவர்கள் போலீசுக்கு ரிபோர்ட் கொடுத்திருப்பார்களே; அப்படி ரிப்போர்ட் கொடுத்தால் போலீஸ் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். திரு. வி. க. நகரிலும் இன்னும் சில பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். அவர்கள் சமூக விரோதிகளால் தாக்கப் படுவதாகவும், போலீசிலே சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள்.

முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் போலீஸ் ஸ்டேஷனிலே யாரும் கம்பிளெண்ட் செய்யவில்லை என்று. வீட்டிலே தாக்குதலுக்குள்ளாகுபவர்கள் பெண்கள். பெண்கள் எப்படி போலீஸ் ஸ்டேஷனில் கம்பிளெண்ட் கொடுப்பார்கள் என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.



1972 சனவரி 31]

பொதுவாக இந்தமாதிரிக் குற்றச்சாட்டுகள் எல்லாம் வெறும் கற்பனைக் கதை என்று எண்ணுகிறார்கள். ஏனென்றால் இது எதிர்க்கட்சிச் சேர்ந்தவர் சொல்வதாயிற்றே. அதனால் வீண் பழி சுமத்துவதாகத்தான் சொல்வார்கள். அதிலும் குறிப்பாக இந்த நாட்டிலே இருக்கின்ற பெண்கள் சமூகத்திற்குப் போதிய பாதுகாப்பில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னால், அது கற்பனைக் கதை என்று சொன்னால் இதை எங்குபோய் சொல்வது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. போலீசார் என்ன என்ன காரியங்களுக்கு எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை பத்திரிகைகளைப்பார்த்தாலே தெரியும். சமீபத்தில் மதுரையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதுபற்றி பத்திரிகையில் வந்துள்ள விவரத்தை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மதுரையில் இடது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 2 பேர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை ஆகிவிட்டார்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சுவர் ஒட்டிகளை ஒட்டினார்கள் என்பது. ஒரு அமைச்சர், ஒரு மேயர், ஒரு அம்மையார் மீது குற்றம் சுமத்துகிற சுவரொட்டிகளை அவர்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக ஒட்டினார்கள்—எப்படி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தது என்பது எல்லாம் நீதிமன்றத்தில் தீர்மானம் ஆகவேண்டிய விஷயம்—என்பதாகும். அதில் கூறியிருக்கிற கருத்துகள் உண்மையா? அல்லது ஆதாரமற்றதா என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க போலீசார் இதுபோன்ற காரியங்களை—அத்து மீறி கட்டுப்படுத்துவதன் மூலம் பல சந்தர்ப்பங்களில் மிகைப்படுத்திவிடுகிறார்கள். இன்றையதினம் போலீஸ் துறை கட்டுப்பாட்டை மீறிப் போகிறது என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்..

திரு. ஏ. ஆர். பெருமாள்: இடது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒட்டிய போஸ்டர் "ஒரு மாநில அமைச்சர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு நகரத்தந்தை ஆகியோரிடமிருந்து ஒண்ணேமுக்கால் கோடி கள்ளப் பணம் கண்டுபிடித்தாக உலவுகிற வதந்தி உண்மையா?" என்பதாகும். மாநில அமைச்சர் திரு. ஆதித்தனார், பார்வேட் ப்ளாக் நாடாளுமன்ற உறுப்பினர், நகரத்தந்தை வணக்கத்திற்குரிய மதுரை முத்து—இதற்காகத்தான் போலீஸ்காரர்கள் அந்தச் சுவரொட்டி ஒட்டியவர்களைக் கைதுசெய்தார்கள்.

திரு. ஆர். பொன்னப்பநாடார்: அந்த விவரங்கள் எல்லாம் எனக்கும் தெரியும். வேண்டுமென்றேதான் அந்த விவரங்களை நான் இங்கே கூறவிரும்பவில்லை. "maccounted money Rs. 17 crores" என்பதாக போலீஸ் தரப்பில் கூறியிருக்கிறார்கள்.

(ஆளும் கட்சித் தரப்பில் இருந்து குறுக்கீடு)

நான் தங்கள் அனுமதியின்பேரில் பத்திரிகையில் வந்திருக்கும் செய்தியையே படித்துவிடுகிறேன்.

"25-12-1971 தினமணியில் மதுரை டிச. 24—மதுரையில் இரு இடது கம்யூனிஸ்டுகள் கைதாகி ஜாமீன் விடுதலை" என்ற தலைப்பில்

" ஒரு அமைச்சர், ஒரு மேயர், ஒரு பார்லிமெண்ட் உறுப்பினர் ஆகிய மூன்று பேரிடமிருந்து ரூ. 1.7 கோடிக்குக் கணக்கில் வாராத பணத்தை மத்திய சுங்க இலாகா கைப்பற்றியதாகவும், இந்த மூன்று பேருக்கும் ஸ்விட்சர்லாந்து பாங்கு ஒன்றில் கணக்கு இருப்பதாகவும் அந்தச் சுவரொட்டியில் கூறப் பட்டிருந்ததாகப் போலீசார் கூறினார்.".

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். " இன்ன இன்ன விஷயங்கள் சுவரொட்டியில் காணப் பட்டதாகத்தான் போலீசார் கூறினார்களே தவிர—அன் அக்கவுண்டெட் மணி 1.7 கோடி கண்டுபிடிக்கப்பட்டதாக போலீஸ்தரப்பில் கூறினார்கள் என்று உறுப்பினர் சொன்னது சரியல்ல. அதுபோல போலீஸ் தரப்பில் கூறப் பட்டிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகத் தான் குறுக்கிட்டேன். ஆனால் உறுப்பினர் சுரொட்டியிடத்தில்தான் இருக்கிறார்களே தவிர வேறு குற்றச்சாட்டுக்கள் புகவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** என் கட்சிக்காக சுவரொட்டி ஒட்ட வேண்டுமென்றாலும் நான் தயாராகத்தான் இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் என்பதனால் அதை இழிவு என்று கருதவில்லை. சுவரொட்டியில் அது மாதிரியாக கூறப்பட்டிருப்பதாக போலீஸ்தரப்பில் கூறியிருக்கிறார்கள் என்று தான் நான் சொன்னேன். சுவரொட்டி ஒட்டுபவர்களைக் கைது செய்வது, அதில் உள்ள விஷயங்களைச் சொல்வது என்பது எல்லாம் போலீஸ்துறையினரின் அத்துமீறிய செயல்களாகும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபோன்ற ஆதாரமற்ற அவதூறான சுவரொட்டிகள் ஒட்டுவதுபற்றி காங்கிரஸ்கட்சித் தலைவர் என்ன நினைக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்பநாடார் :** அவதூறான, ஆதாரமற்ற சுவரொட்டிகள் சரி என்று நான் என்றைக்குமே கருதியதில்லை. ஆதாரமற்ற செய்திகளைப் பரப்பக்கூடாது என்பதே என் கருத்து என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். என்னிடத்திலும் பலபேர்கள் வந்து சொல்கிறார்கள், மேலவையில் முதல் அமைச்சர் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். உண்மை நிலவரம் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆதாரமில்லாத இதுபோன்ற சுவரொட்டிகளில் அடங்கியுள்ள விஷயங்கள் என்ன என்பதாக எல்லாம் போலீஸ் தரப்பில் வெளியிடுவது சரியல்ல என்ற காரணத்திற்காகக் கூறினேன்.

அடுத்ததாக, ஆளுநர் அவர்கள் தம் உரையில் நடந்து முடிந்த இந்திய பாக் போரில் நமக்குக் கிடைத்த வெற்றியைப்பற்றிபாராட்டுகின்ற முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மத்திய ஆட்சிப் பொறுப்புடைய திருமதி இந்திரா காந்தி அம்மையாரைப்பற்றியும், தமிழக முதல் அமைச்சர் அவர்களைப்பற்றியும் வெகுவாகப் பாராட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பாராட்டை முழுமையாக ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்தப் பாராட்டு ஒரு கட்சிக்குரியது அல்ல—ஒரு சிலருக்குரிய பாராட்டு அல்ல. இதில் பர்சனாலிடி கல்ட் தேவையில்லை. சீன இந்தியப் போருக்குப் பிறகு அப்போதிருந்த தலைவர்கள் நாட்டைப் பலப்படுத்த ராணுவத்துறையில் எடுத்திருக்கும்படியான நடவடிக்கைகளை எல்லாம் நாம் மறந்துவிடுவதற்கில்லை. அவை நாடு அறிந்த



உண்மை. நாம் அறிந்த உண்மை. ஆகவே நம்முடைய தேசத்தின் வெற்றிக்கு எல்லாக் கட்சிகளும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் நல்லமுறையில் ஒத்துழைத்தார்கள் என்பதை கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து அரசாங்கம் வெளியிடுகிற சுவரொட்டிகள் எல்லாம் பற்றி நான் பேசவிரும்பவில்லை. எந்த நேரத்தில் எடுத்த படம் என்பது எல்லாம் இப்போது விவாதிக்க வேண்டியதில்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் மேடையில் தரக்குறைவாகப் பேசுகின்ற பேச்சை நிறுத்திக்கொள்வது விரும்பத்தக்கதாக இருக்கும் என்று மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்பு நிதிக்கு 10 கோடி வசூலித்துக்கொடுக்க முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் எந்த முறையில் வசூலிக்கப்படுகிறது என்பதை முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திண்டிவனம் கிராம உத்தியோகஸ்தருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை ஒன்று பிரின்ட் செய்யப்பட்டு எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலமாக இருந்தால் ஏக்கருக்கு 10 ரூபாய் புஞ்சையாக இருந்தால் ஏக்கருக்கு 2 ரூபாய் வீதம் பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்யவேண்டும் என்பதாக. வசூல் செய்கிறார்களே, இதற்கு ரசீது கொடுக்கப்படுவதில்லை. எங்கள் பகுதியில் வியாபாரிகளிடம் இருந்து 300, 500 என்று வாங்குகிறார்கள். அதற்கும் ரசீது கொடுக்கப்படுவதில்லை. அரசாங்கத்தில் இருந்து லைசென்சு பெற்று அரிசி விநியோகம் செய்யவேண்டும். அப்படி அனுமதி கோருகிறவர்கள் 500 ரூபாய் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்கவேண்டுமென்று ஆட்சித்தலைவரே கூறினார்கள். பெரும்பாலோர் கொடுத்துவிட்டார்கள். சரியான முறையில் காலாகாலத்தில் அவற்றுக்கான ரசீது வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். பங்களா தேஷ் நிதிக்காக 5 பைசா ஸ்டாம்ப் என்று விற்கப்படுவதுபோல வசூலிக்கிற பணம் சரியான முறையில் கணக்குவர தக்க ஜி.ஓ. ஒன்று போடுவது சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சந்தேகத்திற்கே இதுபோன்ற காரியங்களில் இடம் வைக்கக் கூடாது.

" Ceasar's wife should be above suspicion "
என்பதுபோல சந்தேகத்திற்கு இடமில்லாத முறையில் இந்தப் பாதுகாப்பு நிதி வசூல் செய்யப்படவேண்டும் என்பதை நான் வற்புறுத்துகிறேன். தேசப் பாதுகாப்புக்கு நிதி வழங்கவேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க ஒரு அதிகாரி நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்.

In 'The Hindu' dated 3rd October 1971 Dr. P. Chinnadurai, Regional Deputy Director of Animal Husbandry, Thanjavur, Tiruchirappalli and South Arcot, "Graduates to sell eggs".
என்று சொல்லியிருக்கிறார்கள். படித்த பட்டதாரிகள் எல்லாம் முட்டை வியாபாரம் செய்யவேண்டும். அதன் மூலம் மாதம் 200 ரூபாய் கிடைக்கும் என்கிற புதிய திட்டத்தைச் சொல்லியுள்ளார்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முட்டை விற்பது மிக்க அவமானகரமானது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதுகிறார்களா பால் விற்பனை செய்யும் இடங்களில் முட்டையும் சேர்த்து விற்பனை செய்ய முன்வந்திருக்கிறார்கள். படித்த, வேலையில்லாதவர்கள், வேலையில்லாத காலத்தில் இப்படிப்பட்ட வேலைகளில் அவர்கள் ஈடுபடுவது தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்களா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, முட்டை வாங்குவதோ, விற்பதோ இழிவு என்று நான் சொல்லவில்லை. இதற்கு படித்து பட்டம் பெற்றவர்கள் தேவைதானா? சர்வ சாதாரண நபர்கள் இந்த மாதிரியான வேலையைச் செய்துவிடலாமே? இதற்கு எழுத்தறிவு வேண்டப்படுவது இல்லை, பட்டம் வேண்டுவது இல்லை. சாதாரணமானவர்கள் இதைச் செய்து விடுவார்கள். எல்லாத் தொழில்களையும் எல்லோரும் செய்யலாம். ஆனால் அதிகாரிகள் இப்படி. அறிக்கை விடுவது நியாயம் இல்லை என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்.

அடுத்தபடியாக, இளைஞர் அணியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இளைஞர் அணி 'ஸ்டார்ம் ட்ரூப்பர்ஸ்'போல பலம் பெற்று மாறிவிடுமோ என்று பலரும் ஐயப்படுகிறார்கள், பயப்படுகிறார்கள். ஏதோ ஒரு லட்சியத்தை விளக்குவதற்காக உள்ள அணி என்று விளக்கம் தருகிறார்கள். ஆனால் பொது மக்கள் மத்தியில் இதைப்பற்றி உள்ள பயத்தைக் கோடிட்டுக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்னும் பல காரியங்கள் சொல்லப்பட இருக்கின்றன. அதையும் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல பிரச்சினைகளிலே மிக மிக முக்கியமானது விலைவாசிப் பிரச்சினை. இதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை. அரசாங்கம் இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக உத்தியோக சம்பந்தப்பட்டது. இதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. குறிப்பாக உத்தியோகத்திலே ஆட்களை அமர்த்துவதிலே கட்சிக் கண்ணோட்டத்துடன் செயல்படுகிறார்கள் என்று பொதுமக்களிடையே பரவலான எண்ணம் இருந்து வருகிறது. மெட்ராஸ் கார்ப்பொரேஷனிலே கவுன்சில் செக்ரடரி என்கிற பதவிக்கு ஆள் தேவையாக இருந்தது. அபேட்சகர்கள் 8 பேர் பி. எல். பட்டதாரிகள் வந்தார்கள். அசெம்பிளி இலாகாவிலிருந்து கூட ஒரு அதிகாரி அபேட்சை மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால் அங்கே ஒரு லாகிராஜ-லேவெட் ராஜா முகம்மது என்பவரை அந்த வேலைக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது ஒப்புதலுக்கு வந்திருக்கிறது. அனுபவம் உள்ள பலரும் அங்கே இருந்தபொழுதும், அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்துடனேயே செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கட்சிக்குப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு மட்டும்தான் பதவியா என்று கார்ப்பொரேஷனில் பி.எல். பட்டம் பெற்ற பலரும் மனம் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். தகுதிபெற்ற பலர் அங்கே இருக்கிற நேரத்தில், அனுபவமுள்ள பலர் இருக்கிற நேரத்தில் புதிதாக வந்தவருக்குக் கொடுக்க வேண்டுமா என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, " one union for one industry " என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு தொழிலில் ஒன்றுக்கு மேற்பட்ட யூனியன்கள் இருக்கக்கூடாது என்கிறார்கள். தொழிலாளர்கள் மத்தியிலே உழைக்கின்ற தலைவர்கள் இருந்து தொழிலாளர்களுக்கு வேண்டியதைச் செய்து நல்ல கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் புதிது புதிதாக யூனியன்களைத் துவக்கி குழப்பங்களை உண்டாக்கி வருகிறார்கள். தொழில் அமைதியைக் கெடுத்து வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறேன். சிம்சனில் இன்று தொழில் நல்ல முறையாக இயக்குவதற்கு வழி இல்லை. இன்றைக்கு தொழிலாளர்கள் மத்தியில் பலவிதமான மனக்கஷ்டங்கள் இருக்கின்றன. இன்னும் தொழில் அமைதியின்மை நீடித்திருக்க வழி இருக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர் பிரச்சினை பற்றியும், தொழில் கொள்கை பற்றியும் சம்பந்தப்படுத்தி சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். கழக அரசானது தொழிலாளர்களுக்கும், தொழிலதிபர்களுக்குமிடையே ஏற்படும் வேறுபாடுகளிலே தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்தது என்று ஏதாவது ஒரு சம்பவத்தைக் கூற முடியுமா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் பிரச்சினைபற்றியெல்லாம் நான் விரிவாக விளக்க வேண்டிய தேவை இல்லை. டிரேட் யூனியன் ஆக்டின்படி யாரும் தொழிற்சங்கம் வைத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட யூனியன்களுக்கு அங்கீகாரம் கொடுப்பதிலே சிக்கல் இல்லை. ஆனால் மைனாரிடி யூனியன்கள் செல்வாக்கினால் அங்கிகாரம் பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்வதற்கில்லையென்றால், குற்றம் சாட்டுவதை விட்டுவிட வேண்டும். மீண்டும் சொல்கிறேன், ஆதாரத்தோடு சொன்னால் அதைத் திருத்த அரசு முற்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு கூறுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே திராவிட முன்னேற்ற பஸ் தொழிலாளர் சங்கம் என்று ஒரு மைனாரிடி யூனியன் இருக்கிறது. ஆனால் பெரும்பாலான தொழிலாளர்கள் இடதுசாரி கம்யூனிஸ்டுகளைத் தலைமையாகக் கொண்ட சங்கத்தில் இருக்கிறார்கள். ஆளும் கட்சியினர் அங்கே மைனாரிட்டி தரப்பினராக இருக்கிறார்கள். ஆனால் அதில் இருக்கும் பலரும் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இதையெல்லாம் பகிரங்கமாக சொல்ல வேண்டுமானால் பல ஆதாரங்களோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல தொழிலாளர் யூனியன் மைனாரிட்டி யூனியனா, மெஜாரிட்டி யூனியனா என்பதை எந்தக் கணக்கை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள் ? இடதுசாரியினர் மெஜாரிட்டி யூனியனாக இருந்திருந்தால் எத்தனை கலவரங்கள் இதுவரை நடந்திருக்கும் என்பதை அவர் அறிவாரா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பாலான யூனியன்கள் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கையில் இருக்கின்றன. நாங்கள் அவர்களை ஆதரிக்கவில்லை. அவர்கள் நல்ல நேரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அமைச்சர் அவர்களுக்கு முழுமையான தகவல் தர சித்தமாயிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நீங்களே அவர்களை ஆதரிக்காமல் இருக்கும்போது, நாங்கள் எப்படி அவர்களை ஆதரிக்க முடியும்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, முன்பு நீங்கள் ஆதரித்தவர்கள். கழிந்த தேர்தலிலே உங்கள் கூட கூட்டணிக் கட்சியாகத்தான் இருந்தார்கள். அப்படி இல்லையென்று யாராவது சொல்ல முடியுமா?

அடுத்தபடியாக, நீதிவிசாரணையின் அறிக்கைகள் பல வந்திருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிய நீதிவிசாரணை அறிக்கை வந்திருக்கிறது. இன்றையதினம் நமக்குத் தந்திருக்கிற அறிக்கையிலே உயர்நீதிபதி அவர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இறந்தது உதயகுமார் தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது விவாதம் தேவையில்லை.

"On question No. 2 that the dead body found in the reservoir is in all probability that of K. P. Udayakumar, but he did not die due to Police excess and that he should have died as a result of drowning only on the night of 23rd July 1971."

என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இந்தநிகழ்ச்சி நடந்தவுடனே ஜூலை 24-ம் தேதியன்று ஓர் அவசரத் தீர்மானம் கொடுத்திருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, உதயகுமார் உயிரோடு இருந்த போட்டோவையும், பிணத்தினுடைய போட்டோவையும் காட்டினார்கள். அதுமட்டுமல்ல, உதயகுமாரின் தந்தை முதலமைச்சர் அவர்களுக்கும், போலீஸ் இலாகாவுக்கும் எழுதிய கடிதங்களைக் காட்டி, உதயகுமார் எங்கேயாவது நக்சலைட்டாக தலைமறைவாகப் போய்விட்டிருப்பான் என்றெல்லாம் கூறினார்கள், நீதிவிசாரணை நடந்தது. இப்பொழுது நீதிபதியின் தீர்ப்பு வந்திருக்கிறது. இறந்தது உதயகுமார் தான் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் in all probability என்று சொல்லியிருக்கிறார்கள். preponderance of probability என்று தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். உதயகுமார் உயிரோடு இருக்கின்றான் என்கிற கருத்து நிரூபிக்கப்படவில்லை. உதயகுமார் உயிரோடுதான் இருக்கிறான், இப்போது தலைமறைவாக இருக்கிறான், நக்சலைட்டாக இருக்கிறான் என்று இந்த அவையிலே பேசப்பட்டது என்னென்ன விதமான மேடைப் பேச்சுக்கள் எல்லாம் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் எப்போதாவது இந்த அவையிலோ, நிருபர்களிடத்திலோ, பொதுக்கூட்டத்திலோ பேசும்போது இறந்தது உதயகுமார் அல்ல என்பதைக் கூறியிருக்கிறேனா?





**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** போட்டோவை இந்த மன்றத்தில் காட்டினீர்கள். உதயகுமார் உயிரோடு இருந்த காலத்திலே எடுக்கப்பட்ட போட்டோ வேறாக இருக்கிறது. பிணத்தின் போட்டோ வேறாக இருக்கிறது என்று சொன்னபோது, அவனுடைய தந்தையார் இறந்தது உதயகுமார்தான் என்று சொன்னதாகச் சொன்னீர்கள். அவனுடைய தந்தையார் முதலமைச்சருக்கும், போலீசுக்கும் அப்படித் தெரிவித்திருப்பதாகச் சொன்னீர்கள். 'இறந்தது உதயகுமார் அல்ல' என்று நீங்கள் சொன்னதாக நான் சொல்லவில்லை. நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்கவேண்டும். முழுப் பூசணிக்காயை சோற்றில். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உண்மையைத் தெரிந்துகொள்வதற்குத்தான் நீதிவிசாரணை வைக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அவையிலே தெரிவித்தேன். நீதி விசாரணையின் மூலம் உண்மை தெரியவந்தது. அப்படி உண்மையை மறைத்துவிட வேண்டுமென்று நினைத்திருந்தால், நீதி விசாரணை வைக்கப்பட வேண்டிய தேவையே இருந்திருக்காது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்பொழுதாவது உண்மை புலப்பட்டது என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு மிகவும் நன்றி கூறி இந்தப் பிரச்னையிலே அதிகமாக நான் புக விரும்பவில்லை.

நீதி விசாரணையின் முறையிலே என்ன மாற்றம் செய்ய வேண்டுமென்று நான் ஆலோசனை கூற விரும்புகிறேன். உயர்திரு பி. இராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். அவர்கள் உயர்நீதிபதியாக இருந்தவர், பெருமாநல்லூர் துப்பாக்கிச் சூடு நடந்ததுபற்றி விசாரணைசெய்து குறிப்பிடும்பொழுது—ஒரு பகுதிக்குச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்பதற்காக நான் அந்தப் பகுதியை மட்டும் தங்கள் அனுமதியோடு படிக்க முன்வருகிறேன்—

'The Commissions of Inquiry Act empowers the appropriate Government, which will include the State Government in the case of Commissions appointed by it, to make rules to carry out the purposes of the Act. The State Government of Madras has not done so, whereas the Central Government has promulgated certain rules, called the "Central Commissions of Inquiry (Procedure) Rules, 1960" dated the 7th May 1960. Some of the provisions in these rules have been adopted for guidance by Commissions appointed by the State in other Enquiries. It appears desirable that similar rules should be framed by the State Government also for guidance of future Commissions of inquiry appointed by the State.'

இப்படிப்பட்ட கருத்தினை சிறந்த நீதிபதியாக இருந்த அன்னார் வெளியிட்டு இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக விதிமுறைகளைத் திருத்துவதற்கு இதை ஒரு ஆலோசனையாக நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையானது 1971-ஆம் ஆண்டு டிசம்பரிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று கருதுகிறேன். உடனடியாக அரசாங்கம் சட்ட இலாகா மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1972 சனவரி 31

பொதுவாக இந்தமாதிரியான அறிக்கைகள், பல அறிக்கைகள் எல்லாம் வந்திருக்கின்றன, ஒருமணி நேரமாவது இந்தச் சட்டசபையிலே ஒதுக்கி அவற்றை—ஒரு அறிக்கையை அல்லது பல அறிக்கைகளைத் தொகுத்து வைத்து—விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு விஷயத்தை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தூத்துக்குடியிலே இருக்கிற துறைமுகத்தை நம்முடைய கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. யின் பெயரால் அழைக்க வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையைக் கூறிக்கொள்கிறேன். எப்படி பம்பாயிலே உள்ள அலெக்ஸாண்ட்ரா டாக், இந்திரா டாக் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறதோ அப்படியே தூத்துக்குடித் துறைமுகத்திற்கும் , வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கப்பல் தொழிலில் ஈடுபட்ட வ.உ.சி. அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவர்களுடைய பெயரைச் சூட்டவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி பம்பாயிலே செய்தார்களோ அப்படி தேசத்திற்காகத் தன்னைத் தியாகம் செய்து அர்ப்பணித்த அன்னாருடைய பெயரை வைக்க வேண்டும். அலெக்ஸாண்ட்ரா டாக், இந்திரா டாக் ஆகலாம் என்றால் தூத்துக்குடித் துறைமுகம் ஏன் வ.உ.சி. பெயராலே அழைக்கப்படக் கூடாது என்பதைச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ. க்களைப் பொறுத்த அளவிலே சிடி காம்பன்சேட்டரி அலவன்ஸ் செங்கற்பட்டு, கோயம்புத்தூர் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக உள்ளூர்ப் பிரச்னை. தங்கள் கட்சிக்காரர்கள் என்ன முறையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்கு ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கி இருக்கிறது: அங்கே வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறவர்களையெல்லாம் நன்கொடை என்ற பெயரால் கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், குறிப்பாக குமரி மாவட்ட தி.மு.க. வளர்ச்சி நிதி என்ற பெயரால் அங்கே ஒரு டிராமா நடத்தினார்கள், அதற்காக அங்கே வேலைசெய்கிற சிப்பந்திகளையும் அதிகாரிகளையும் கட்டாயப்படுத்தி, வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நீதி விசாரணை ஏற்பாடு செய்தால் நாங்கள் சொல்வதற்கு தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சியின் பெயரால் அப்படிச் செய்யக்கூடாது. அதற்குத் தலைவராக இருக்கிறவர் முன்னால் சட்டசபையில் இருந்தவர், இப்பொழுது இந்த அவையிலே இல்லை. அவர்கள் அமைச்சர்களைக்கூட மிரட்டுகிறார்கள், வாருங்கள் அங்கே பார்த்துக் கொள்ளலாம் என்று ஒரு அமைச்சரை மிரட்டியதாக எனக்குத் தெரியும். அது சரியல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக வாதாடினார் என்று ஒரு வக்கீலை—இரண்டு மூன்று குண்டர்களை காரில் ஏற்றிக்கொண்டு போய்—கன்னத்திலே அடித்தார்கள். இப்படிக் கட்சிக்காரர்கள் எங்கள் ஜில்லாவிலே செய்து கொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்களைப்பற்றி எனக்குத் தெரியாது. கட்சிக்காரர்கள் மிரட்டுகிறார்கள் என்றெல்லாம் கடிதங்கள் வந்திருக்கின்றன. இதுமாதிரி தொடர்ந்து நடப்பதை அனுமதிக்கக்கூடாது, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 சனவரி 31] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

பொதுவாக, கவர்னர் பெருமான் உரையிலே, சாதாரணமான அறிக்கையாக இருக்கிறது, விலைவாசியைக் குறைப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் அதிகமான அக்கறை மாநில அரசாங்கம் எடுக்கவில்லை, என்பதை நாங்கள் எங்களுடைய மூன்று திருத்தங்களின் மூலமாக எடுத்துக் கூறியிருக்கிறோம். பலவிதமான குற்றச்சாட்டுகள் பல இடங்களிலிருந்து வந்திருக்கின்றன. அவை ஆதாரமற்றது என்று மறுக்கின்ற பொறுப்பு ஆளுங் கட்சியைச் சார்ந்தது என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்

*** மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமகனார் அவர்கள் சட்டப் பேரவை, சட்ட மேலவை கூட்டுக் கூட்டத்திலே ஆற்றிய உரையினையொட்டி இந்த மாமன்றத்தில் இது வரையிலும் நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட 49 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிவித்து இருக்கிறார்கள்.

கவர்னர் அவர்களுடைய உரையின் தொடக்கத்தில், "நமது முப்படையினரின் வீரதீரத்தாலும், நமது பிரதம மந்திரி அவர்களின் ஒப்புவமையற்ற, பதட்டமடையாத, தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது" என்று போரின் முடிவு குறித்து பொறுப்போடு குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய பொழுது இதிலே நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தியையும், தமிழ்நாட்டு முதலமைச்சரையும் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கதுதான் என்றாலும் இப்படியெல்லாம் பர்சனாலிடி கல்ட் வளர்க்கப்படக் கூடாது என்று தெரிவித்தார்கள். ஒருவேளை இதனை யொட்டித்தானோ என்னவோ நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் செயற் குழுக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளுக்கும் வீரர்களுக்கும் மாத்திரம் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்திற்கு என்று மட்டும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருடைய பெயரும், பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்களுடைய பெயரும் விடப்பட்டு இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன். ஆனால் இது அண்மையிலேதான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கும் என்று கருதுகிறேன். போர் முடிந்தவுடன் இந்த மாமன்றத்திலே நாம் ஒரு தீர்மானம் எடுத்தபொழுது உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், இந்திரா காந்திக்குக் கிடைத்த வெற்றி தாய்க்குலத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று சொன்னார்கள். நான் கூடச் சொன்னேன், தாய்க்குலத்தின் பெருமையை உலகம் எல்லாம் உணர்ந்தும் நீங்கள் தாமதமாக உணர்ந்ததற்காக நன்றி என்று சொல்லியிருக்கிறேன். இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் பெர்சனாலிடி கல்ட் என்ற வகையிலே அவ்வளவு புகழ்ந்த காங்கிரஸ் கட்சியினர் திடீரென்று, இந்திரா காந்தி அவர்களைப் புகழ்வது பெர்சனாலிடி கல்ட் என்று குறிப்பிடுவது வியப்புக்கும் வேதனைக்கும் உரியதாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் பாராட்ட வேண்டிய நேரத்திலே பாராட்டினோம். நீங்கள் அதையே வைத்து விளம்பரம் தேடிக்கொண்டிருக்கிறீர்கள், அதுதான் பெர்சனாலிடி கல்ட். திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் பாராட்டவேண்டிய நேரத்திலே பாராட்டாமல் இருப்பதே கிடையாது.

[1972 சனவரி 31

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த அருமையான கருத்தை அப்படியே இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் முதலமைச்சரைப் பாராட்டுகின்ற பாவத்தை அவர் எங்கும் செய்ததாகத் தெரியவில்லை. இந்த உரையில் போர் வீரர்களின் குடும்பத்தினரைப்பற்றிக் குறிப்பிட்டு அவர்களுக்கு எல்லாவகையிலும் உதவியளிக்கத் தமிழ் நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதெனக் கூறிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தமிழ் நாடு அரசைப்பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் நல்லவேளையாக என்னுடைய பெயர் இதிலே குறிப்பிடப்படவில்லை என்பதும், முதலமைச்சர் என்னும் வார்த்தை இந்த இடத்திலே வரவில்லை என்பதும் கவனிக்கத் தக்க ஒன்றாகும். ஆனால் பிரதமர் இந்திரா காந்தியை மாத்திரம் தான் பாராட்டப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை, இரவீந்திராத் டாகூர் அவர்கள் குறிப்பிட்ட பொன்மொழியை எடுத்துக்காட்டி, "இழிக்கப்பட்ட இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் தங்கள் தன்மானத்தை நிலை நாட்டியுள்ளது மட்டுமன்றி, தங்கள் நாணயத்தைக் காப்பாற்றி ஜனநாயக அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளனர்" எனக் கூறிக்கொள்வதில் நாம் பெருமைப்படலாம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, "இந்தியாவில் புகலடைய வேண்டி வந்தது. இலட்சக் கணக்கான மக்கள் அவதியால் அல்லலுற்று ஓடி வந்தபோது அஞ்சேல் என அவர்களுக்குத் தஞ்சமளித்துக் காப்பாற்றுவதற்கு இந்த நாடு முழுவதும் ஓரணியாகத் திரண்டு நின்றது" என்று நாட்டு மக்கள் ஓரணியாகத் திரண்டதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அடுத்து, "இந்திய மக்கள் அனைவரும் மனமார்ந்த ஒத்துழைப்பு நல்கியிரா விட்டால், நமக்கு ஏற்பட்ட சுமையினைத் தாங்க, ஆதாரங்கள் அனைத்தையும் திரட்ட முடியாமற் போயிருக்கும்" என்று இந்திய மக்களைத்தான் உரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற அடிப்படையிலே எழுந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் இந்த நேரத்தில் நானும் மீண்டும் ஒருமுறை தமிழ்நாட்டின் சார்பாக இந்தப் போரின் வெற்றிக்கு முழுமுதல் காரணமாக யிருந்த முப்படைத் தளபதிகளையும், வீரர்களையும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களையும், பாதுகாப்பு அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்களையும், இந்த வெற்றிக்கு ஈடுகொடுக்கின்ற அளவில் ஓரணியிலே நின்ற நம்முடைய நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்ளுவதிலே நான் மிகுந்த பெருமை அடைகிறேன் என்று இங்கே அறிவிக்கின்றேன்.

வீர மரணம் அடைந்த தமிழ்நாட்டுப் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகள் உடனடியாகச் சென்று சேரவில்லை என்ற கருத்து இங்கே பேசிய சில உறுப்பினர்களால் இரண்டொரு நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப் பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தப் போரில் மாண்ட வீரர்களின் எண்ணிக்கை இதுவரையிலே கிடைத்த ஒரு கணக்கின்படி 98 பேர்களாகும். இந்த 98 பேரோடு இந்தக் கணக்கு நின்றுவிடுமா என்றால் நிற்காது, அதனால்தான் இதுவரையிலே கிடைத்த கணக்கின்படி என்று நான்



1972 சனவரி 31] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

குறிப்பிட்டேன். அந்த 98 பேர்களில் 61 பேர்களின் குடும்பங்களுக்கு குடும் பத்திற்கு 5,000 ரூபாய் வீதம் தமிழக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்த அந்த உதவித் தொகை அளிக்கப்பட்டாகிவிட்டது. மீதமுள்ள குடும்பங்களில் சரி யான வாரிசுதார் யார் என்பதைப் பரிசீலனை செய்கின்ற அந்த வகையிலே சற்றுக் காலதாமதம் ஆகிறது என்பதை நான் எடுத்துக் கூறி, அதுவும் விரைவில் வழங்கப்பட பரிசீலனைகள் முற்றுப்பெறும் என்ற தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற பல கருத்துகள் அல்லது தமிழ்நாடு அரசு செயல்படும் பல திட்டங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் வகையிலே இருந்திடவில்லை என்று இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கோடிட்டுக் காட்டினார்கள்.

30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த உச்சவரம்பினை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று ஆக்கியிருப்பது சமதர்ம திட்டத்தின் அடிப்படையில் தான் என்பதை அப்படிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கரும்புக்கு, மேய்ச்சல் நிலங்களுக்கு இதுவரையிலேயிருந்த விதிவிலக்கு அகற்றப்பட்டதாக இந்த அரசு முடிவெடுத்து அறிவித்திருப்பதும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு அடையாளம்தான் என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவேயிருந்த உச்சவரம்பின் காரணமாக தப்பித்துக் கொள்ளும் வகையிலே நாட்டிலே பலபேர் பினாமி என்னும் அளவிற்கு சட்டத் திலேயிருந்து மறைந்துகொள்ள செய்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் கவனித்த தோடு, அதிலிருந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதன் அடிப்படையில் அந்த பினாமிதாரர்களை யெல்லாம் பிடிக்கின்ற வகை யிலேயும் இந்த அரசு நல்ல முயற்சிகளிலே ஈடுபடும் என்று நான் திட்டவட்ட மாக அறிவித்திருக்கின்றேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். வெகு அண்மையிலே நடைபெறவிருக்கும் நிலச் சீர்திருத்த அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இவைகளைப் பற்றியும், நிலச் சீர்திருத்தத்தைப்பற்றியும் நாம் விவாதிக்க இருக்கிறோம். அதில் தரப்படும் கருத்துக்களின் அடிப்படையில் நல்ல முடிவுகளை தமிழ் நாட்டில் நிலச் சீர்திருத்தத்தையொட்டி எடுக்க இருக்கிறோம். இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற் கான அடையாளங்களே தவிர வேறு அல்ல.

பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்குப் பல்லாண்டுக் காலமாக இருந்த பிரச்னை அவர்களுடைய குடியிருப்பு மனைகள் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்படாமல் இருந்ததாகும். அதை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததற்கிணங்க அந்தக் குடி யிருப்பு மனைகளை தஞ்சை மாவட்டத்திலேயிருக்கும் விவசாயத் தொழிலாளர் களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அதைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதுவும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது என்பதற்கேற்ற அறிகுறியேயாகும்.

10 பேருந்து வண்டிகளுக்குமேல் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது என்று வரையறுத்து அதற்கு ஒரு உச்சவரம்பினைக் கொண்டுவந்து, டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ஏ.பி.டி., ராமன் அண்ட் ராமன் போன்ற பெரிய பஸ் நிறுவனங்களையெல்லாம் தேசிய உடைமையாக ஆக்கியிருப்பதும் இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கி விரைந்து நடைபோடுகிறது என்பதற்கான அடையாளங்களேயன்றியில் வேறல்ல.

நம்முடைய சென்னை மாநகரத்திலே 600 குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றியமைத்து குடிசைவாழ் மக்களுக்கு நல்ல கல் வீடுகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு தொடங்கப்பெற்று இதற்கு 40 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிடப்பட்டு இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் குடிசைகளாகயிருந்த இடங்களில் நல்ல கல் வீடுகளும், மாடிக் கட்டிடங்களும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களே தவிர வேறல்ல

தமிழ்நாட்டிலே பல ஆண்டுக் காலமாக அலைக்கழித்து வரும் பிரச்னை பிச்சைக்காரர்களின் தொல்லை. பிச்சைக்காரர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லை மட்டுமல்ல, பிச்சை எடுப்பவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள், இந்த இரண்டு தொல்லைகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும், பிச்சைக்காரர்களைக் காப்பாற்றும் முறையில் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து இந்த ஆண்டு 3 விடுதிகளும், தொடர்ந்து பல விடுதிகளைத் தமிழ்நாட்டில் அமைக்க நாம் எடுத்திருக்கும் முறை இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்கிறது என்பதற்கான அடையாளமே தவிர வேறல்ல.

பின் தங்கியோர் நலனுக்காக 1966-67-இல் அவர்களுடைய நலனுக்காக மாநில அரசின் சார்பாக செலவழிக்கப்பட்ட தொகை 91 இலட்சம் ரூபாய். ஆனால் 1971-72-இல் அது 3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அரிசன மக்களுக்காக 1966-67-இல் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கு, நலனுக்கு, மாநில அரசின் சார்பாக 3.59 கோடி ரூபாய் என்றிருந்தது 1971-72-இல் 5.3 கோடி ரூபாயாக அரிசன நலனுக்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. அருமை நண்பர் வடிவேல் அவர்கள் அன்றைக்குப் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், 3 கோடி 5 கோடியாக உயர்ந்திருப்பதைப் பாராட்டுகிறேன், அதேநேரத்தில் அரிசன மக்களின் தொகையும் உயர்ந்திருக்கும் என்பதை முதலமைச்சர் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். நான் உடனடியாக அந்தப் புள்ளிவிவரங்களைத் தேடிக் கண்டுபிடித்தேன். 1966-67-இல் 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்காக, அரிசன மக்களுக்காக செலவழிக்கப்பட்டபொழுது இருந்த மக்கள் தொகை 60.6 இலட்சம்பேர். 60.6 இலட்சம் அரிசன மக்கள் இருந்தபொழுது 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1971-72-இல் 73.96 இலட்சந்தான் அரிசனமக்கள் இருக்கிறார்கள். ஆக, 13 லட்சம் பேர்கள்தான் ஜனத்தொகையில் உயர்ந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 2 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி மாநில அரசின் சார்பில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். 'கிராமத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன்கள் போய்ச் சேருவதிலே அவர்கள் தரவேண்டிய வட்டித் தொகை அதிகமாக இருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நீங்கள் 3 சதவிதிகம் வட்டிக்குப் பெற்று அதை 9 சதவிகிதம் வட்டிக்குக் கிராமப்புறத்து விவசாயிகளுக்குத் தருகிறீர்களே. அது நியாயமல்ல' என்று எடுத்துரைத்தார்கள்.

நான் அவர்களைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் நிலைமையை விளங்கவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட அந்த வட்டி விகிதம் பழைய வட்டி விகிதங்கள் ஆகும். புதிய வட்டி விகிதங்கள், குறுகிய காலக் கடனுக்கு ரிசர்வ் பாங்கியில் இருந்து மாநில வங்கிக்கு 4 சதவிகிதம் வட்டி என்ற வகையில் பணம் தரப்படுகிறது. இதற்கு நான் விளக்கம் சொல்ல விரும்புறேன். அந்த 4 சதவிகிதம், மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குச் செல்லும்போது 4.50 சதவிகிதமாக மாறுகிறது. அது மாவட்ட வங்கியிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் செல்லும்போது 6.50 சதவிகிதமாக மாறுகிறது. கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விவசாயிக்குச் செல்லும்போது 8.70 சதவிகிதமாக அந்த வட்டி மாறுகிறது.

இப்படி அதிகமாகிறதே என்று கேட்டால் இந்த மூன்று கட்டங்களிலும் ஏற்படுகின்ற நிர்வாகச் செலவுகள், சங்கத்திலே பங்கு வைத்திருக்கக்கூடியவர்களுக்குத் தரப்படுகின்ற டிவிடென்ட் போன்றவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, 3 சதவிகிதம் 9 சதவிகிதம் ஆயிற்று என்று சொல்லுவது சரியல்ல. 4 சதவிகிதம் என்பது 8.70 ஆக மாறுகிறது. அது மூன்று கட்டங்களிலுள்ள நிர்வாகச் செலவுகளின் காரணமாக இப்படி உயர்ந்திருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அந்த விவசாயிகள் வெளியே கடன் வாங்கினால் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும், எவ்வளவு அதிகமான வட்டி கொடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதவர்கள் அல்ல. கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கிராம விவசாயிகள் இந்தக் கடனைப் பெறுவதால் அவர்கள் பயனடைகிறார்களே அல்லாமல், வேறல்ல.

பொதுவாகப் பேசிய எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் பலரும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டதைப் பற்றிக் குறை கூறினார்கள். குறை கூறினார்களே அல்லாமல் அதை வன்மையாகக் கண்டித்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன். மின் கட்டண உயர்வு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 1.2 காசுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, 10.8 காசு என்று இருந்ததை 12 காசு என்று நாம் உயர்த்தியிருக்கிறோம். இப்படி உயர்த்திய பிறகும் மின் வாரியத்திற்கு 6, 7 கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு மாநிலங்களில் இதைவிட மின் கட்டணம் விவசாயிகளுக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மகாரஷ்டிராவில் 18 காசு; பீகாரில் 18 காசு; குஜராத்தில் 16 காசு; ஹரியானாவில் 16 காசு;

அஸ்ஸாமில் 16 காசு; உத்தரப் பிரதேசத்தில் 15 காசு; ஆந்திராவில் 12 காசு; மைசூரில் 12 காசு.

கேரளாவில் குறைவாக இருக்கிறதே என்று கேட்கக் கூடும். கேரளாவில் இறைவைப் பாசனம் அதிகமில்லை. கிணற்றுத் தண்ணீரை எடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலைமை இல்லை. அது மாத்திரமல்ல, டிஸ்ட்ரிப்யூஷன் செலவும் கேரளாவில் அதிகம் இல்லை.

ஆகவே, 1.2 காசு என்ற அளவுக்கு நாம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது பெரிய உயர்வு அல்ல என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். கவர்னர் உரையில் கைத்தறியாளர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று குறிப்பிட்டார்கள். இது வழக்கமாக நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலிருந்தே சொல்லுகின்ற ஒரு சம்பிரதாயம் உண்டு.

கவர்னர் உரையில் எல்லாவற்றையும் சொல்லிவிடுவது என்பது இயலாத காரியம். தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாப் பிரச்சினையையும் பற்றிக் கவர்னர் உரையில் சொல்லுவது என்றால் கவர்னர் ஒரு மூன்று நாட்கள் இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்க வேண்டிய கஷ்டம் அவருக்கு ஏற்படும். அந்த அளவுக்குப் பெரிய புத்தகத்தைப் படிக்க வேண்டியிருக்கும். அப்போதும் சில விஷயங்கள் விட்டுப் போய்விடக் கூடும்.

கவர்னர் உரையில் சொல்லப்படாத விஷயங்களை எடுத்துச் சொல்லத்தான் மாமன்றத்திலே விவாதம் நடக்கிறது. ஆகவே, எல்லாவற்றையும் சொல்லி விட்டால் விவாதிப்பதற்கு விஷயமே இல்லாமல் போய்விடக் கூடும் என்பதால் சில விஷயங்கள் விட்டு வைக்கப்படுகின்றன.

கைத்தறியாளர்களைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 750 லட்சம் ரூபாய். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,060 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு கோடி ரூபாய்க்குப் பதிலாக பத்து கோடி ரூபாய் அளவுக்கு நெசவாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மாத்திரம் 1967-68 முதல் செயல்படுகின்ற முதன்மையான திட்டமாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, அரசே நேரடியாகப் பங்குகொள்ளும் திட்டமாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலதனத்தில் அரசே பங்கு கொள்ளுகின்ற அளவுக்குத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் காரணமாகப் பயனடைந்த சங்கங்கள் 469. இதற்காக 26 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அரசு உதவி செய்கிற காரணத்தால் ரிசர்வ் பாங்கியில் இருந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதி அளித்து வளர்ச்சியடைந்திருக்கின்றன. அந்த வளர்ச்சியைப் பார்க்கும்போது 1966-67-ல் 371 லட்சமாக இருந்தது 1971-72-ல் 606 லட்சம் என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.



புது ரகத் துணிகளை உற்பத்தி செய்ய புதிய நவீன முறைகளைக் கையாண்டு நெசவாளர்கள் பயிற்சி பெற புதிய பயிற்சி நிறுவனங்கள் 1969-70-ல் தொடங்கப்பட்டு ஆண்டுதோறும் அதிலே நூற்றுக் கணக்கானவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதற்காக இதுவரை செலவாகியிருக்கும் தொகை மாத்திரம், 1969 முதல் 1971 வரை 11 லட்சம் ரூபாய் ஆகும். அதிலே, 1969-70-ல் 353 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; 1970-71-ல் 2,160 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; 1971-72-ல் 2,500 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 5,013 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இப்போது நெசவாளர்களுக்கு இருக்கும் முக்கிய குறைபாடு—அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கிற ஊதியத்தை விட தனியாரிடத்தில் வேலை செய்கிற நெசவாளர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது என்பதாகும். கூட்டுறவுச் சங்கங்களில் தரப்படுகின்ற ஊதியத்தையும் வரையறுத்து நிர்ணயிக்கவும், கூட்டுறவுக்கு வெளியில் உள்ள நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதும் அவசியம் என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால், அதற்காக என்று குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அந்தக் குழு இந்த ஊதிய விகிதத்தைப் பற்றி விரைவில் அறிவிக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாமன்றத்தின் மூலமாக நெசவாளர் குடும்பங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் தகராறுகளைப் பற்றி இந்த மன்றத்தில் விரிவாகப் பேசப்பட்டது. நம்முடைய மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் வழக்கத்திற்கு மாறாக கொஞ்சம் வேகமாகக் கூட அதைப் பற்றிப் பேசி விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பெரும்பாலான தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலே அரசு எப்போதும் வீண் கவுரவப் பிரச்சினையாக எந்த நேரத்திலும் பார்த்தது கிடையாது என்பதைத் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்றாக உணருவார்கள். ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று வன்முறைச் செயல்கள் நடைபெறுகிற அளவுக்கு நிலைமை போயிருக்கலாம். ஆனால் மொத்தத்தில் பார்த்தால் கடந்த நாலைந்து ஆண்டுகளாக தொழில் தகராறுகள் பெரும்பாலும் பேசியே தீர்க்கப்பட்டிருக்கின்றன.

பெரியவர், அன்புக்குரிய மணலி கந்தசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள். 'அன்புக்குரிய' என்று சொல்லுவதால் யாரும் சந்தேகப்பட வேண்டாம். அவர்கள் என்னுடைய அன்புக்கும், மதிப்புக்கும் கூட உரியவர்கள். அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். அவர்களுடைய வயதுக்கு மேல் ஆவேச உணர்ச்சியோடு, 'அந்தத் தலைவர்களுடைய அரசியலை வெறுக்கிறேன்; ஆனால் அப்படி அவர்கள் அடிபட்டதை எல்லாம் கண்டிக்காமல் இருக்க முடியாது' என்று சொன்னார்கள். எந்தக் காரணத்திற்காக, யார் அடிபட்டாலும் காயமுற்றாலும், அதற்காக வருந்தாத எஃகு உள்ளம், கல் மனம் நம் யாருக்கும் இல்லை. நம் தமிழ்நாட்டின் அரசியலில் அதைத்தான் நாம் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். யார் யார் அடிபட்டார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சுந்தரம் அவர்களை விட்டு விட்டார்கள். அதைச் சொன்னால் அவர்களுடைய கட்சியைப் பற்றிச் சொன்னதாக வந்துவிடும் என்று அவர்கள் விட்டு விட்டார்களோ என்னவோ? நான்

அதை விட்டு விட்டால் அவர்கள் ஒருவேளை கோபித்துக் கொள்ளக் கூடும் என்று அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவருக்கும் சேர்ந்து நான் வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

அதே நேரத்தில் பெரியவர் மணலி போன்றவர்கள் 54 திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிலாளர்களாலேயே தாக்கப்பட்டு மருத்துவ மனையில் இருக்கிறார்களே, அவர்களைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் பெரியவருடைய வார்த்தையில் இருபுறத்திலும் அனுதாபம் பிறந்திருக்கிறது என்று மகிழ்ந்திருக்கக் கூடும். ஒருவேளை நேரம் போதாத காரணத்தால் அவசரத்திலே அவர்கள் விட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேனே அல்லாமல், திராவிட முன்னேற்றக்கழகத் தொழிலாளர்களானாலும், கம்யூனிஸ்ட் தொழிலாளர்களானாலும், காங்கிரஸ் தொழிலாளர்களானாலும், வேறு எந்தக் கட்சியைச் சார்ந்த தொழிலாளர்களானாலும் அவர்களுக்காக அனுதாபப்படக்கூடிய பரந்த மனம் படைத்த தொழிற்சங்கத்தலைவர் தான் திரு. மணலி கந்தசாமி என்பதை நான் நன்றாக அறிவேன். அவர்களிடத்திலே எனக்கு ஒரு தனி மரியாதை உண்டு. எனக்கு மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் கூட அவர்களிடத்திலே ஒரு நல்ல மதிப்பும், மரியாதையும் உண்டு. ஏன் அந்த மரியாதை, மதிப்பு வைத்து இருக்கிறோம் என்றால். . . . அவர் பேசும்போது சொன்னார் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் ஆயிரம் குற்றங்கள் இருந்தாலும் நாங்கள் காமராஜரோடோ அல்லது இராஜாஜியோடோ என்றைக்குமே சேர்ந்து விடமாட்டோம் என்று. அவர் அப்படிச் சொன்னது எங்களுக்கு உறுதிமொழி அளிப்பது மாதிரி இருந்தாலும், அவர்கள் கட்சியில் இருக்கும் பிளவு மனப்பான்மைக்கு விட்ட ஒரு எச்சரிக்கை என்றே நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு தூய உள்ளம் அவருக்கு இருக்கிற காரணத்தால்தான், அவர்களிடத்திலே எங்களுக்கு என்றைக்குமே ஒரு தனி மரியாதை, மதிப்பு உண்டு.

ஆகவே, தொழில்தகராறுகள் பேசிதீர்க்கப்படவேண்டுமென்ற அளவில் இந்த அரசு தங்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் மூலம் மெய்பித்துக்காட்டி வருகிறது. அதற்கு ஏற்ப, தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த அரசோடு மேலும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன், அந்த யூனியன் தலைவர் தொழிலாளியாக இருக்கவேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் கருத்தைப் பற்றி பல தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்போதே உடனடியாக பதில் சொல்ல விரும்பாமல், அந்தத் தலைவர்களின் கருத்துக்களைப் புறக்கணிக்கக் கருதாமல், அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவைகளை ஆராய்ந்து, அடுத்து நடைபெறவிருக்கிற சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படுகின்ற கூட்டத்தில், அது பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். ஆகவே, எல்லோருடைய கருத்துக்களையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அது பற்றி பிறகு மீண்டும் ஒரு முறை விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலையைப் பற்றி எல்லாக் கட்சியின் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை இவ்வளவு தாமதப்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்று கேட்டார்கள். அவர்கள் கூட சொன்னார்கள், தேர்தல் காலத்தில் சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, தேர்தலில்



வெற்றி பெற்று விட்டார்கள் என்று சொன்னார்கள், திரு. நாடார் அவர்கள். சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் விழா நடத்துகிறபோது, தேர்தல் வரும் என்று ஜாடையாகக் கூட தெரியாது. இது எல்லாம் அவர்களுடைய பழைய வழக்கம். திருச்சிக்கு அருகேயுள்ள திருமானூரில் பெரிய பாலம் ஒன்று கட்டுவதற்காக தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் திருமதி இந்திரா காந்திக்கு தந்தி கொடுத்து, சாங்ஷன் வாங்கி அடிக்கல் போட்டார்கள். அடிக்கல் அப்படியே இருந்தது. அந்தப் பக்கமாக போன சில பேர், இது ஏதோ காளியோ, மாரியம்மனோ என்று கருதி, அதற்கு மஞ்சள் பூசி, பொட்டு வைத்து, தேங்காய் உடைத்து பிறகு தான், ஆஹா, இது அடிக்கல், இது தேர்தல் நேரத்திற்காகப் போடப்பட்டு இருக்கலாம் என்று விஷயம் புரிந்தது அந்தப் பாலம் கட்டப்படாமலேயே இருந்தது. அவர்கள் செய்யத் தவறியதையெல்லாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது என்பதை . நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலையைப் பொறுத்தவரையில், அது ரூ. 300 கோடிக்கு நடைபெறவேண்டுமென்ற வாதத்தில் நாம் எப்போதும் பின்வாங்கியது இல்லை. அதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அது மாத்திரமல்ல. கஞ்சமலைத் தாதுவை எடுத்துத் தான் அந்த உருக்காலை வரவேண்டுமென்று சொல்கிற அந்தப் பிரச்னையிலும் நாங்கள் பின்வாங்கவில்லை. கஞ்சமலைத் தாதுவை எடுத்து ஜப்பான் நாட்டுக்காரன் அங்கே தொழிற்சாலை வைக்க முடியும் என்று சொல்கிறபோது, கஞ்சமலைத் தாதுவைக்கொண்டு உருக்காலை இங்கே அமைக்கலாம் என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன் டில்லியில் நடைபெற்ற அலுவலாளர்கள் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. நாம் மகிழ்ச்சியடையத் தக்க அளவுக்கு விரைவில், அந்தத் திட்டம் நாம் கோருகிற வகையில் தொடங்கப்படவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கைதட்டல்)

சில குறைபாடுகள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டன. அவர்கள் கூட சொன்னார்கள், பத்திரிக்கைகள் எல்லாம் மிரட்டப்படுகின்றன. பத்திரிக்கைகளுக்கு விளம்பரங்கள் எல்லாம் கொடுக்கப்படுவதில்லை. ஆளும் கட்சிப்பத்திரிக்கைகளுக்குத்தான் தரப்படுகின்றன என்ற செய்திகள் எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் விளம்பரங்கள் கொடுப்பது என்ற முறையில் இந்த அரசு நடந்து கொள்ளவில்லை. தமிழரசு பத்திரிக்கையில் குத்தகை, ஒப்பந்தம் ஆகிய விளம்பரங்கள் வரும் என்று அறிவித்து அரசு ஆணை பிறப்பித்த அதே நோக்கிலே அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் சில அவசர நிலையை ஒட்டி வேறு பத்திரிக்கைகளிலும் வெளியிடலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கொப்ப, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் மாத்திரம் 200-க்கு மேற்பட்ட விளம்பரங்கள் திரு. ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சி பத்திரிகையான 'முரசொலிக்கு' 90 விளம்பரங்களும், இந்து பத்திரிகைக்கு 115 விளம்பரங்களும், மெயில் பத்திரிக்கைக்கு 150 விளம்பரங்களும், ஸ்டேட்ஸ்மன் பத்திரிக்கைக்கு 50-க்கு மேற்பட்ட விளம்பரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிக்கைகளுக்கு மட்டும் அந்த விளம்பரங்கள் தரப்படவில்லை என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய முரசொலிக்கு 90 அட்வர்டைஸ்மெண்ட்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Hon. Chief Minister has told the names of papers given advertisements. What about the Opposition papers like Navasakthi, Nathigam, etc.? I think the standard of Murasoli and these papers are the same. I have got a copy of 'Murasoli', wherein I have been personally attacked. You give advertisements to such papers. Then, why not you give advertisements to papers who criticise the Government openly. That is my question.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், ஹிந்து ஆகிய பத்திரிக்கைகள் கூடத்தான் அரசாங்கத்தை விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் என்பதற்கு அர்த்தம் புரியாமல் பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

DR. H. V. HANDE: Personally I have been attacked. I have been called 'Ularuvayan' about what discussion took place in the Assembly. That is how 'Murasoh'—functions Not even that. My constituency voters also had been attacked. Perhaps it is not known to them that the same constituency pepole had elecdted a DMK member in 1967. Such is the manner in which, what happened here in the Assembly, is described in 'Murasoli'. I have been personally attacked. You give Government advertisements to such papers. When such is the case, why can't you give advertisements which criticise the Government, the Opposition papers. Why should advertisements be given only for papers which support the ruling party? I want to know why the advertisements are not given to papers which criticise the Government. I do not get straight answers to my questions.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒருவரை விமர்சனம் செய்வதற்கும், அவதூறாக செய்திகளை வெளியிடுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. பத்திரிக்கைக்காரர்கள் மிரட்டப்படுகிறார்கள், பழி வாங்கப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே மாத்திரமல்ல, காங்கிரஸ் கட்சி செயற்குழு கூட அப்படி தீர்மானம் போட்டு இருப்பதாக அறிகிறேன். ஆனால் அரசாங்கத்தை, அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதுகிற எந்தப் பத்திரிகை மீது அரசு வழக்குப்போட்டு இருக்கிறது? அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதாமல், அவதூறான விஷயங்களை எழுதுகிற நோத்தில், அதற்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது, நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் தங்களை நிரபராதிகள் என்று நிரூபித்துக்கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார்கள்.

ஆகவே தான், முதலிலே நவசக்தி பத்திரிக்கை மீது வழக்கு போடப்பட்டது—1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில். அப்போது நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தேன். மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறவர்கள் எல்லாம் தலையிலே ஹெல்மெட் போட்டுக்கொள்ள வேண்டும். அதைப் பற்றி பொது மக்கள் அபிப்பிராயம் என்ன என்று அறிந்து, பல மருத்துவர்கள்



சொன்ன யோசனையின் பேரில், ஹெல்மெட் போட்டுக்கொண்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டால்—தலையில் அடிபட்டால் கூட—உயிருக்கு ஆபத்து இருக்காது என்பதை உணர்ந்து, பொதுமக்கள் அபிப்பிராயம் அறிய ஒரு அறிக்கை விடப்பட்டது. அந்தப் பத்திரிக்கைக்காரர்கள் என்ன எழுதினார்கள் தெரியுமா? "குல்லாய் போடுகிறார் கருணாநிதி" என்று எழுதி யாரோ ஹெல்மெட் விற்பவனுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுப்பதற்காக இப்படி மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் எல்லாம் ஹெல்மெட் போடவேண்டுமென்று சொல்கிறார் கருணாநிதி என்று எழுதப்பட்டது. அதை எதிர்த்துத்தான் வழக்காடி, அந்த வழக்கிலே அதை எழுதிய அதனுடைய ஆசிரியருக்கும், அதனுடைய உரிமையாளருக்கும் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டு, அதை அவர்கள் கட்டிருக்கும் சம்பவம் நடைபெற்று வருகிறது.

அதைப்போலவே இன்னொரு பத்திரிக்கை. 'இவர்கள் சந்தித்தால்' என்ற தலைப்பில் ஆபாசக் கற்பனை செய்து எழுதியதன் காரணமாக வழக்கு நடத்தி—ஜெயக்கொடி பத்திரிக்கை மீது—பத்திரிக்கை ஆசிரியருக்கு 3 திங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தலைமை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். உயர்நீதிமன்றத்திலும் அது உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டைப் பங்கு போடுகிறார்கள் தி.மு.க. மந்திரிகள் என்று ஒரு செய்தி வந்தது. அதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கில் தீர்ப்பளித்தார்கள். அமைச்சர்கள் வழக்குமன்றத்துக்குச் செல்ல நேரிட்டது. அதிலும் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகும் "ஏமாந்த மக்களைக் கற்பழிக்க, களவாட, குடித்துவிட்டுக் கும்மாளம் போட அவர்களுக்கு வாக்களித்து விட்டீர்கள்" என்ற தலைப்பிலே ஒரு பகிரங்கமான செய்தியை ஒரு பத்திரிக்கை வெளியிட்டு இருந்தது. அதுவும் அதே ஜெயக்கொடி பத்திரிக்கைதான். அதன் மீது வழக்கு போடப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

பிறகு "நாத்திகம்" பத்திரிகையில் "மந்திரிகள் சொத்துக் கணக்கு" என்கிற தலைப்பில் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்றை எழுதினார். வழக்கு போடப்பட்டு 3 திங்கள் சாதாரண சிறைத் தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் செஷன்ஸ் நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் தீர்ப்பு அளித்தார்கள். பிறகு அதே நாத்திகம் பத்திரிகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் டாக்டர் எமதர்பார். சவக்கிடங்கில் சேர்க்கப்பட்ட பெண்மணி பிரசவித்தாள். இவ்வாறெல்லாம் தவறான செய்தியை வெளியிட்டது. அதற்கு வழக்குத் தொடரப்பட்டு 6 மாதம் அவருக்குச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று செஷன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்து உயர்நீதிமன்றத்தில் அது உறுதி செய்யப்பட்டது.

இப்படியே பல அவதூறான விஷயங்கள். இப்படி 9 தடவை வழக்கு போடப்பட்டது. ஒவ்வொரு வழக்கிலும் அபராதம் கட்டினார்கள், அல்லது சிறை சென்றார்கள், அல்லது மன்னிப்பு கேட்டார்கள் என்கின்ற அளவுக்கு அவர்கள் பத்திரிக்கை ஆசிரியர்கள் மீது வழக்கும் போடப்பட்டது அல்லாமல் இந்த அரசாங்கத்தின் தேசிய உடமை தவறானது என்று அரசாங்கத்தின் பக்கமோ அல்லது அமைச்சர்கள் பக்கமோ எங்களுடைய பேச்சுக்களை விமர்சித்தார்கள் என்பதற்காக யார் மீதும் எந்த வழக்கும் போடவில்லை. ஆனால், அவதூறான செய்திகளை வேண்டுமென்றே வெளியிட்ட பத்திரிக்கைகள் மீது வழக்குகள் போடப்பட்டன.

டாக்டர் ஹாண்டே அவர்களைப்பற்றி முரசொலியில் உளருவாயன் என்று எழுதி இருந்தால் அவர்கள், "நான் உளருவாயன் இல்லை, நன்றாகப் பேசக் கூடியவன்" என்று முரசொலியின் மீது வழக்குப் போடலாம்.

தலைவரவர்களே, அடுத்து கோவை மில்களைத் திறப்பதைப் பற்றிய பிரச்சினை. இங்கு அதைப்பற்றி அக்கறை உள்ளவர்களால் பேசப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய, பெரிய பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். கோவை மில்களைத் திறப்பது தொழிலாளர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பது . . .

**DR. H. V. HANDE**: Why should advertisements be given only to papers belonging to the Ruling Party?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: விளம்பரங்கள் கொடுப்பதுபற்றி அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டும்.

DR. H. V. HANDE: Nowhere in the whole of India......

**MR. SPEAKER**: The Hon. Chief Minister is not yielding. The hon. Member Dr. Hande should resume his seat.

DR H. V. HANDE: I may explain......

**MR. SPEAKER**: I ask the hon. Member to resume his seat......

DR. H. V. HANDE: The ruling party papers. . . . .

**MR. SPEAKER**: I must again tell that the hon. Member Dr. H. V. Hande should resume his seat.

THIRU R. PONNAPPA NADAR: We shall not generate heat in the Assembly.

**MR. SPEAKER**: Dr. Hande should now resume his seat.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: விளம்பரங்கள் கொடுப்பது என்பது காலகாலத்திற்கு அரசாங்கம் எந்த முறையைப் பின்பற்றி வந்திருக்கிறதோ அதே முறையைத்தான் இந்த அரசாங்கம் பின்பற்ற வேண்டி இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. விளம்பரங்கள் கொடுப்பது அரசாங்கத்தைப் பொறுத்த விஷயம். அதற்குக் கொடு, இதற்குக் கொடு என்று சிபாரிசு செய்வதை யாரும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது போன்ற இப்படிப்பட்ட பெரிய பிரச்சினைகளைப்பற்றி கவனிக்கின்ற பெரியவர்கள் பல பேர் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யானை வேட்டை செல்கிற நேரத்தில் முயல் வேட்டை ஆடமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எழுப்பியிருக்கின்ற குறிக்கோள்களில் ஒன்று மூடிய ஆலைகளைப் பற்றிய பிரச்சினை ஆகும். கோவையில் தற்போது மூடப்பட்டிருக்கும் ஆலைகளில் நாம் இந்த அரசின் சார்பால் 5 ஆலைகளைத் திறந்து இருக்கிறோம். அந்த 5 ஆலைகளைத் திறந்தபோது கிட்டத்தட்ட 93.33 லட்சம் ரூபாய் மாநில அரசின் சார்பாக முதலீடு செய்து அந்த ஆலைகளை நாம் திறந்தோம். அப்போது மத்திய அரசின் சார்பிலே ... ... அவர்கள்



நமக்குத் தரவேண்டிய பங்குத் தொகை 47 லட்சத்தில் இன்னும் அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகை, அந்த 5 ஆலைகளைத் திறப்பதற்கு, ரூ. 20 லட்சம் அளவுக்கு வரவேண்டியிருக்கிறது. மேலும் மூடப்பட்டிருக்கிற 6 ஆலைகளைத் திறக்கவேண்டுமென்று நானும் நமது தொழில் அமைச்சரும் டெல்லியிலே பலமுறை வலியுறுத்தி இருக்கிறோம். ஒரு முறை அந்தத் தொடர்புடைய ஒரு அமைச்சர் நீங்கள் விமானம் ஏறுவதற்கு முன்பாக 3 மணிக்கே இந்த உத்திரவு போட்டு உங்களுக்கு நான் அனுப்புகிறேன் என்று கூடச் சொன்னார்கள். விமானம்தான் வந்தது. உத்திரவு இதுவரையில் இல்லை. இப்போது மூடப்பட்ட 6 ஆலைகளை எடுத்து திறந்து நடத்த வேண்டுமானால், சோமசுந்தரா மில்லில் நடைமுறை மூலதனம் 26.30 லட்சம் ரூபாய், அதை நவீன இயந்திரமயமாக்குவதற்கு ரூ. 25.50 லட்சம். காளீஸ்வரா மில்ஸ்—32 லட்சம் நடைமுறை மூலதனம், நவீன இயந்திரமயமாக்க ரூ. 27 லட்சம், கோயம்புத்தூர் மில்லுக்கு ரூ. 60 லட்சம் நடைமுறை மூலதனம், நவீன இயந்திரமயமாக்குவதற்கு ரூ. 80 லட்சம், ஆக மொத்தம் நடைமுறை மூலதனம் 118 லட்சம் ரூபாய், நவீன இயந்திரமயமாக்க ரூ. 132 லட்சம் தேவைப்படுகிறது. மாநில அரசு இந்த 3 மில்களைத் திறக்க நம்முடைய சத விகிதம் 49 : 51 என்பதில் 49 என்கின்ற பங்கு நாம் தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்று மாநில அரசின் சார்பாக சம்மதம் கொடுத்திருக்கிறோம். சோமசுந்தரா மில்ஸ் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. மற்ற இரண்டு மில்களின் இயந்திரத்தின் மதிப்பீட்டுக்கு முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய அரசு நமக்கு கூறியிருக்கிறது.

அடுத்து, 3 மில்கள்—பங்கஜா மில் நடைமுறை மூலதனம் ரூ. 24 லட்சம் தேவை. பாலமலை ரங்கநாதர் மில்லுக்கு நடைமுறை மூலதனம் ரூ. 8.62 லட்சம் தேவை. இவைகளை அவசரச் சட்டத்தின் கீழ் எடுக்க மத்திய அரசைக் கேட்டோம். உயர்நீதிமன்றத்திலே (லிக்விடேஷன் செய்ய) அந்த வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த மில்களைப் பற்றிய உயர்நீதிமன்றத்தின் உத்திரவு பெறப்படும். அதற்குப் பிறகுதான் எடுத்துக்கொள்ளலாம். செங்கோட்டையில் இருக்கிற பாலராமவர்மா டெக்ஸ்டைல் மில்லின் நடைமுறை மூலதனம் 9.40 லட்சம் ரூபாய். இதை நவீன இயந்திரமயமாக்க ரூ. 30.25 லட்சம், நம்முடைய பங்கை நாம் செலுத்தத் தயார் என்று சொல்லி விட்டோம். ஆனால் அவர்கள் செலுத்தாவிட்டால் 2, 3 கோடி போனால் போகிறதென்று மாநில அரசே எடுத்து நடத்துங்களேன் என்று சொல்லத்தான் நமது தங்கமணி அவர்களின் உதடுகள் துடித்துக்கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அந்த அளவுக்கு நம்மிடம் நிதி வசதி இருக்கிறதா என்பது ஒன்று, நிதி வசதி இருந்தாலும் மத்திய அரசு அனுமதியில்லாமல் செய்ய முடியுமா என்பது ஒன்று. இன்றைக்கு இருக்கிற ஐ.டி.ஆர். ஆக்ட் படி மத்திய அரசு அதை ஏற்று மாநில அரசுக்கு அனுமதி கொடுத்தால் தான் நம்மால் எடுத்து நடத்த முடியும். இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு—முக்கால் பகுதிக்கு மேல் மத்திய அரசின் தொடர்புடைய பிரச்சினையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திட வேண்டும்.

எந்தக் காரணத்திற்காக அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல் கோவையில் இருக்கும் கட்சி சார்பற்ற எல்லா தொழிற்சங்கத் தலைவர்களும்

ஒரு கிளர்ச்சியிலே ஈடுபடவேண்டும் என்கிற போர்க்கொடியை உயர்த்தி இருக்கிறார்களோ, அது ஒரு அறப்போர் தான் என்றும், இது அமைதியான போர்க் கொடி என்றுதான் கருதுகிறேன். ஆனால் இந்தப் போர்க் கொடி உயர்த்துவதற்கு முன்பாக மத்திய அரசு ஒரு நல்ல செய்தியை மாநில அரசின் மூலமாக கோவை மில் தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கும் என நான் நம்புகிறேன். அதை மத்திய அரசு உடனடியாகச் செய்யவேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாகவும், தொழிற்சங்கத் தலைவர்களின் சார்பாகவும், இங்கே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சார்ப்பாகவும் மத்திய அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசியைப்பற்றி இங்கே பேசப்பட்டது. விலைவாசி எல்லாப் பொருட்களுக்கும் உயர்ந்துவிடவில்லை. விலைவாசியினுடைய உயர்வு அல்லது தாழ்வு என்கின்ற புள்ளிவிவரங்களையெல்லாம் நான் வைத்திருக்கிறேன் என்றாலும், அவைகளை இங்கு விவரமாக எடுத்துச் சொல்வதற்கு நேரமில்லை என்று கருதுகிறேன். ஆகவே அடுத்தக் கூட்டத்தொடரில் விலைவாசிகளைப்பற்றி நான் எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகின்றேன். உதாரணமாக மிளகாய், புளி, எண்ணெய்—தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்—போன்ற பொருட்களுக்கு விலை நல்ல அளவுக்கு இன்றைக்கு குறைந்திருக்கிறது. அரிசியின் விலையும் குறையத் தொடங்கியிருக்கிறது. நாம் அரிசியே கிடைக்காத ஒரு காலத்திலே வாழ்ந்து இப்பொழுது அரிசி கிடைக்கின்ற ஒரு காலத்திற்கு வந்திருந்தாலும், அதிலே ஏற்பட்ட சில நிலவரங்களின் காரணமாக அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்றாலும், அது வெகு விரைவிலே, பிப்ரவரியிலே அரிசியின் விலை வீழ்ச்சியடையும் என்ற ஒரு நல்ல செய்தியை நாம் காணமுடியும். சில பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ரூபாய் என்று இருந்தது போன ஆண்டு. இந்த ஆண்டு 3 ரூபாய் என்று ஆகிவிட்டதை மாத்திரம் நாம் கணக்கிலே வைத்துக்கொள்ளக்கூடாது. இரண்டு ரூபாய் மூன்று ரூபாயாகிவிட்டது என்று அந்தச் புள்ளிவிவரத்தைச் சொல்கிறீர்கள். அதே நேரத்தில் பணப்புழக்கம் எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அந்தப் பணப் புழக்கம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கிறதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் ஆவது பெரிதல்ல. அந்த மூன்று ரூபாயைக் கொடுத்துப் பொருளை வாங்கக்கூடிய அளவுக்கு வாங்கும் சக்தி நமக்கு ஏற்படுமேயானால், இரண்டு ரூபாய் மூன்று ரூபாயானாலும், மூன்று ரூபாய் நான்கு ரூபாயானாலும் கவலையில்லை.

இன்றைக்கு வெளிநாடுகளுக்குச் செல்கிறோம். அங்கே செல்கின்ற நேரத்தில் அங்கே டாக்சி ஓட்டுகின்ற டிரைவரைப் பார்த்து, 'உன்னுடைய சம்பளம் என்ன' என்றால், அவர் தருகின்ற டாலர் கணக்கையோ பவுன் கணக்கையோ பார்த்தால், நம்முடைய ரூபாய் கணக்கில் 3,000 ரூபாய் சம்பளமாகக் கிடைக்கிறது. ஆகா, 3,000—ஆ! என்று எண்ணுகின்ற அதே நேரத்தில் உன்னுடைய வீட்டு வாடகை என்ன என்றால் 1,000 ரூபாய் என்கின்ற அளவுக்கு கணக்குச் சொல்கிறார்கள். ஆகவேதான் வாங்குகிற சக்தி, பணப் புழக்கம் இவைகளை மனதிலே வைத்துக் கொண்டுதான் விலைவாசியின் உயர்வை நாம் கணக்கிட வேண்டும். இரண்டு மூன்றாகிவிட்டது அல்லது மூன்று



ஐந்தாகிவிட்டது என்று சொல்கின்ற நேரத்தில் அதை வாங்குகிற அளவுக்கு வாங்கும் சக்தி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது சாதாரண ஏழை எளிய மக்களை முழுமையும் போய்ச் சேர்கின்ற அளவுக்கு அது ஏற்படவில்லை. அப்படி ஏற்பட வேண்டுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் போக நல்ல தொழில்கள் உருவாக வேண்டும். நல்ல தொழில்கள் உருவாவதற்கு மத்திய அரசு மாநில அரசுகளுடைய கோரிக்கைகளை தாமதமில்லாமல் நிறைவேற்ற வேண்டும். மாநில அரசின் கோரிக்கைகள் தாமதப்படுகின்ற காரணத்தாலேதான் நல்ல வேலை வாய்ப்புகளை, நாம் இளைஞர் அணியிலே 2,000 பேர், ஆசிரியர்கள் என்ற பெயரில் 6,000 பேர், புதிய போலீஸ்காரர்கள் என்ற பெயரில் 2,000 பேர் என்று ஆயிரக் கணக்கிலே வேலை வாய்ப்புக்களை அளித்தாலும், லட்சக்கணக்கிலே இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்ற பேருண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஆகவே, தொழில் துறையிலே மாநில அரசுகள் இன்னும் கொஞ்சம் கைகளிலே இருக்கின்ற கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு வேகமாக நடைபோட வேண்டும். அப்படி வேகமாக மாநில அரசுகள் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமை கொண்டிருக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம் கேட்கின்றார்கள். நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் என்ன, என்ன அதிகாரங்கள் என்று தொகுத்துச் சொல்லும்போது ஒவ்வொரு அதிகாரப் பட்டியலையும் ஒரே நேரத்தில் சொல்வதற்கு இயலாத காரணத்தினால் மொத்தமாகத் தலைப்பிட்டு மாநில சுயாட்சி என்று கேட்கின்றோம். இந்த மாநில சுயாட்சி இந்தியாவிலேயிருந்து தமிழ்நாட்டைப் பிரித்துக்கொள்ள வேண்டும் என்கின்ற அடிப்படையில் எழுந்தது அல்ல. இன்றைக்கு "ஆகா! மாநில சுயாட்சி கேட்கலாமா, பார், பார்! விட்டேனா!" என்றெல்லாம் பலபேர் சவால் விடுகின்றார்களே, நான் அவர்களுக்குச் சொல்கின்றேன். அவர்களெல்லாம் இணைந்திருந்தபோது, 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் பிரகடனத்திலே சொல்லி இருக்கின்றோம். "இந்திய அரசியல் முறை கூட்டாட்சி முறை என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிக பட்சம் சாய்ந்து இருப்பதால் அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும், மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால் அதே நேரம் இந்தியா வலுப் பெற்றதாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்த மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம். அரசியல் துறை அதிகாரங்களும் நிதித் துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டும் என்ற ஆசையால் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை

மத்திய அரசிடமிருந்து மேற்கொண்டபிறகு எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்கு தொண்டாற்ற முடியும் என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்". இது 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாகும். அரசியல் சட்டம் அதற்காகத் திருத்தப்படவேண்டும் என்கின்ற கோரிக்கையை உள்ளடக்கிய தேர்தல் பிரகடனமாகும்.

அதே நேரத்தில் Communist Party of India Election Munifesto -ல் என்ன சொல்கிறார்களென்றால் The Constitutional provision relating to Centre-State relations should be amended to provide for more powers to the State consistent with the basic unity of the country ". இதையேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நாம் அப்பொழுதே வெளியிட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும், "மைய மாநில அரசுகளின் துறைகளின் பட்டியல் விவரமாக பிரிக்கப்பட்டிருந்தாலும் உண்மையான அதிகாரம் மத்திய அரசின் கையிலேதான் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகளின் உத்தரவுகள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றே அமுல்படுத்தப்பட வேண்டியிருப்பதால் அவைகளுக்கு மதிப்பு கிடையாது. பொருளாதார சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில அரசு மத்திய அரசிடம் கையேந்தும் நிலை இருக்கிறது. பொருளாதாரத் திட்டங்களுக்கும், வேளாண்மைத் திட்டங்களுக்கும் மத்திய அரசின் தயவை எதிர்பார்த்தே நடக்கவேண்டியிருக்கிறது".

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போது மத்தியில் குவிந்திருக்கும் ஏராளமான அதிகாரக் குவியல் மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து ஒரு போலீஸ் ஆட்சியை உருவாக்கும் ஒரு பயங்கரமான நிலை உருவாகும் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை செய்கின்றது என்கின்ற அளவிலே மார்க்சிஸ்ட்டுகளுடைய தேர்தல் அறிக்கை தொடங்கி இப்படி முடித்திருக்கின்றார்கள்.

அதைப்போலத்தான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1967 மார்ச் திங்கள் 19-ம் தேதி வெளியிட்ட கருத்துக்களை அப்பொழுது கல்கி பத்திரிகையிலே தலையங்கமாக எழுதியிருக்கிறார்கள். தலைப்பே, 'உண்மை சமஷ்டி வருக வருகவே'. இது தலைப்பு. அதிலே எழுதியிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஒரு பிரதேசத்திற்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லை என்றும் மேலெழுந்தவாரியாக சிலர் நினைத்துவிடலாம். அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படையை இராஜாஜி அவர்களே தெளிவு செய்திருக்கிறார். இங்குதான் இராஜாஜியின், கருத்து வரப் போகிறது. எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்ற அகில இந்தியப் பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆள்வதை யூனிட்டரி முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை 'பெடரல்'





சமஷ்டி முறை என்றும் சொல்வார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுகிறது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகர சபையின் ஸ்தானத்திற்கு கொண்டு வந்துள்ளது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புக்களை மத்தியிலே மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேர்கிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியாகும்". இது 19-3-1967 அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை முகப்பில்தாங்கி 'கல்கி' இதழில் வெளிவந்தது.

அது மாத்திரமல்ல. இன்னும்கூட தீவிரமாக இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி, அப்பொழுது 'நம்நாடு' பத்திரிகையில் எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்கிறார், "பாரத சர்க்காருக்கே எல்லா வளமும் அதிகாரமும் ரத்த ஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்திற்கு பாதகம் விளைவிக்கும். திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன் முன்னேற்றத்தை முக்கியமாக கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்றால் உடனே ஜாதி பேதம், பிராமணத் துவேஷம் என்று எண்ணத் தோன்றும். அதற்குக் காரணங்களை ஆராயத் தேவையில்லை. ஆகவே, திராவிடத்தை, 'ஜனகணமன' என்று நாம் பாடும் நாட்டு வணக்கப் பாட்டில் சொல்லப்பட்ட திராவிடத்தை கவனித்துக் காத்துவருவோமாக. இதை ஜாதித் துவேஷக் கூட்டத்தாருக்குமட்டும் மானியமாக விட்டுவிடாமல் எல்லோரும் ஒன்றுபட்டு வேலை செய்யவேண்டும்" என்று இராஜாஜி அவர்கள் திராவிடத்திற்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இரு கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும், கூட்டணியிலேயிருந்து பிரிந்துபோனபிறகு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டியதில்லை என்றும் கூறுவது கட்சியின் பொதுக் கொள்கைக்கு ஊனம் உண்டாக்கும் செயலாகும். 'ஒன்றாக இருந்தோம் சொன்னேன்' என்றால் அப்படிச் சொல்லப்படுகின்ற அந்தக் கொள்கைகளுக்கு எந்த விதமான மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடும்.

மாநிலங்களுக்கு அதிக, அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் தலைமை நீதிபதி திரு. கே. சுப்பாராவ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு. கே. சந்தானம் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரி பாட் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சுதந்தராக் கட்சியின் ஓரிசா முதல்வர் திரு. சிங் தேவ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு. காமராஜ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று டாக்டர் ஆர். சி. கூப்பர் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும் என்று. திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, சுதந்திராக் கட்சியின் தூண்பாக இருக்கிற

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 சனவரி 31

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னால் சொல்லி இருக்கிறார்கள். முன்பு ஒன்றாக இருந்தபோது அது, இப்போது இல்லை என்றார்களே, இப்போதும் சாமிநாதன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. அதற்காக இவ்வளவு ஆதாரங்களைத் தேடிக்கொண்டுவந்து பேசியிருக்கவேண்டியதில்லை. ஆனால் அது பிரிவினையில் கொண்டு போய் விட்டுவிடக்கூடிய அளவில் இருக்கக்கூடாது என்பதைத்தான் சொல்கிறோம். உங்களுடைய மாநாட்டு வரவேற்பிலே உள்ள செய்தி அப்படி இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவ்வளவு சுலபமாகப் புரியும் என்றிருந்தால், நான் வேலை மெனக்கெட்டுப்போய் இவ்வளவு ஆதாரங்களையும் தேடிக்கொண்டு வந்திருக்கவேண்டியதில்லைதான் (பலத்த சிரிப்பு).

ஆனால் திருமணம் என்று சொன்னவுடன் குழந்தை பிறந்துவிடுமே; குழந்தை பிறந்தால் தாயின் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே; தாயின் உயிர் போய்விடுமே என்று நினைத்துக்கொண்டிருந்தால் நாட்டில் திருமணமே நடைபெறாது போய்விடும். அதைப்போலதான் மாநில சுயாட்சி என்று சொன்னவுடனே மாநிலப் பிரிவினைக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள். எப்படி திருமணம் என்றவுடன், குழந்தை பிறந்துவிடும்; குழந்தை பிறந்துவிட்டால் தாயின் உயிர் போய்விடும் என்ற பயம் ஏற்படுகிறதோ, அதைப் போலதான் மாநில சுயாட்சி என்றதும், பிரிவினை ஏற்பட்டு விடும்; இந்தியா உடைந்து விடும், சின்னாபின்னமடைந்துவிடும் என்று நினைப்பதும் என்று சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இன்றைக்கு, இந்தியா பலவீனப்படக்கூடாது; இந்தியா சிதறுபடக்கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். திராவிடநாடு பிரிவினை கேட்ட நேரத்திலே, எங்களை யார் யார் எதிர்த்தார்களோ; எங்கள் மீது யார் யார் குற்றஞ்சாட்டினார்களோ அவர்களையெல்லாம் விட இன்றைக்கு நாங்கள் ஒருபடி மேலே சென்றிருக்கிறோம் என்பதை சந்தேகவாதிகளுக்கு விளக்கிட விழைகின்றேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், 1969-ஆம் ஆண்டு எங்களையெல்லாம் ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்துவிட்ட நேரம், அண்ணா அவர்களைப் பிரிந்து ஆறாத் துயரில் நாங்கள் எல்லாம் மூழ்கியிருந்த நேரம் நாடு நெருக்கடியான நிலையில் இருந்தது. எங்களுக்குப் பிரிவினை எண்ணம் இருக்குமானால் அந்த நேரத்திலே நாங்கள் பிரிவினையை வலியுறுத்தியிருப்போம். ஆனால் நாங்கள் செய்ததென்ன? இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம். இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்தால், மத்தியிலே அரசு கவிழும். அப்போது இந்தியா இருந்த நிலையில் மத்தியிலே ஆட்சி கவிழ்ந்தால், இந்தியா உடைபடும்; சிதறுண்டு சின்னா பின்னமாகும். அந்த நிலையை நாங்கள் விரும்பாததால் இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம்.



1972 சனவரி 31]

அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே இருந்த சிலர், நாங்கள் திராவிடநாடு பிரிவினைக் கேட்டபோது எங்களை எதிர்த்தவர்கள், எங்கள்மீது குற்றஞ்சாட்டினவர்கள், "திராவிட நாடு பிரிவினைக் கேட்டீர்களே; இப்போது இந்திரா காந்தியின் பின்னால் ஏன் செல்கிறீர்கள்? உங்கள் கொள்கையை இப்போது வலியுறுத்துவதுதானே" என்று எங்களைத் தூண்டிவிட்டார்கள்.

அவர்கள் தூண்டிவிட்டமாதிரி, அந்த நேரத்தில் நாங்கள் பிரிவினைக் கோரிக்கையை திராவிடநாடு கோரிக்கையை—வலியுறுத்தியிருந்தால் இந்தியா பலவீனப்பட்டிருக்கும். இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்திருக்கும். இந்தியப் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கும். ஒரு அமைதியற்ற நிலை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக இந்தியாவே தூள் தூளாகப் போகக்கூடியச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். இந்திராகாந்தி அம்மையாரின் கரம் வலுப் பெற்றதால் இந்தியா உடைபடாமல், அமைதி குலையாமல், பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாமல் இருந்தது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் பங்கு உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிட விரும்புகிறேன். இதை நாங்கள் நன்றி எதிர்பார்த்துச் செய்யவில்லை. கைமாறு கருதி நாங்கள் இதைச் செய்யவில்லை. எங்களுடைய தூய நட்பின் அடிப்படையிலேதான் இதைச் செய்தோம்.

இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுவிழக்கச் செய்து, மத்திய அரசைக் கவிழ்த்து, மாநில சுயாட்சி பெறவேண்டும் என்பதல்ல கழக அரசின் நோக்கம். அப்படிப்பட்ட அரசியல் லாபம் தேடுபவர்கள் நாங்களல்ல என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். எனவே, இந்திரா அம்மையாரின் அரசுக்கு உறுதுணையாக இருந்து, மத்திய அரசுக்கு உட்பட்ட மாநில சுயாட்சி பெற்று, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற வேண்டுமென்ற இந்த வேண்டுகோளுக்கு, இந்தக் கோரிக்கைக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் கிடைக்குமென்ற உறுதியோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: **My point was coming closely as it does.**

MR. SPEAKER: The hon. Member will please resume his seat.

பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவர் பேசும்போது உறுப்பினர்களாக இருக்கட்டும்; அமைச்சர்களாக இருக்கட்டும்; அல்லது முதலமைச்சராக இருக்கட்டும்; யாராக இருந்தாலும் அவர் எழுந்து நின்று பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்கலாம். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் விதி 65-ஐ நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**Rule 65 says—**

"When for the purpose of elucidating a point during discussion, any member has occasion to ask a question of another member who is speaking, he may ask the question with the permission of the Speaker."

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 சனவரி 31

இடையிலே கேள்விகள் கேட்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், நமது விதிமுறைகளுக்கு உட்பட்டு கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I am raising a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். இதற்குக் கூட பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' கேட்கவேண்டும். நீங்கள் மிக்க அனுபவம் வாய்ந்த உறுப்பினர். இதைக்கூட உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. அனுமதி பெற்று நீங்கள் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' கேட்கலாம்; அது உண்மையான 'பாயின்ட் ஆஃப் ஆர்ட' ராக இருக்கவேண்டும். அதல்லாமல் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று சொல்லி, அந்த 'பிரிட்டெக்ஸ்ட்'இல் வேறு பொருட்கள் பற்றிப் பேசுவதில் ஈடுபடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : My point is this. Whenever we speak, the Hon. Ministers get up and invariably and automatically we yield the floor. Similarly when I requested the Hon. Chief Minister, the same courtesy should be shown. He raised the point and I specifically stressed that—I am on a point of order—coming as it does closely on the heels of secession (' *pirivinai* ') I questioned the very *bona fides* of the Chief Minister That is what I said and I wanted to elicit an answer when the Hon. Chief Minister was on his feet. I just requested the Speaker. When the Chief Minister sat I got up and it is the Speaker who gives us permission to get up or not, whereas when we speak, it looks as though we become second class members because the Ministers would get up and speak when we speak. We do not get the same opportunity. I wanted to get up twice.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு பொருளைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அந்த வாக்கியத்தை முடிக்காமல் இருக்கும்போது இடையிலே கேட்கக்கூடாது. வாக்கியத்தை முடித்தப்பின்னல் கேட்கலாம்.

DR. H. V. HANDE : Immediately I sat. This particular ' *manila suyatchi* ' slogan comes closely on the heels of secession article in that magazine. That is why it makes us question the *bona fides*. There are a lot of problems, that is the labour problem, etc., To side—track...

THE HON. THIRU K. ANBAZHAGAN : When raising a point of order the hon. Member cannot go into the merits of the question.

MR. SPEAKER : Have you finished your point of order?

DR. H. V. HANDE : It will not come to a point of discussion. After the Chief Minister resumed his seat I wanted to say something. Because the Chief Minister has to complete his sentence, even though I got up I realised he has not completed his sentence and I sat down.



1972 சனவரி 31]

MR. SPEAKER : What is the point of order in your getting up?

DR. H. V. HANDE : Just as the Ministers get an opportunity to get information from us, a similar opportunity I wanted to get.

MR. SPEAKER : What is the point of order that arises from that?

DR. H. V. HANDE : I should have been allowed that question.

MR. SPEAKER : The hon. Member will please resume his seat. I shall give a ruling on that point of order.

நான் திரும்பத் திரும்ப விதிமுறைகளைக் கூட ஞாபகப்படுத்த வேண்டி இருக்கிறது. இந்த மன்றம் இப்படியெல்லாம் தரம் குறைந்து போகிறது என்பதைத் திரும்பத் திரும்ப கவனப் படுத்த வேண்டியிருக்கிறது. ஒரு மெம்பர் பேசுவதற்குச் சில உரிமைகள் உண்டு. நான் உறுப்பினர்களை மட்டுமல்ல, அமைச்சர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அது சம்பந்தமான விதி 64-ஐ இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

Rule 64 says—

"A member desiring to make any observations on any matter before the House shall rise from his seat and being called by the Speaker, address his remarks to him from his place. At any time if the Speaker rises, any member speaking shall resume his seat."

When the Speaker rises, no member shall speak. No member including Ministers can continue his speech. Immediately he must resume his seat.

இந்த விதியின்படி இந்த மன்றத்தின் மரபு காக்கப்பட வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்களுக்கும் பேரவைத் தலைவர் என்ற முறையில் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து விதி 65 இன்படியும்.

'When for the purpose of elucidating a point during discussion, any member has occasion to ask a question of another member who is speaking, he may ask the question with the permission of the Speaker.'

என்பதாக மாண்புமிகு அமைச்சர்களுக்கும் பேரவைத்தலைவர் இஷ்டப்பட்டு அனுமதித்தால் தான் பேச முடியும் என்பதாக இருக்கிறது. திரு. ஹாண்டே குறுக்கிடுவதற்கு முதல் அமைச்சர் இணங்காமல் இருந்திருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது மற்றொருவர் குறுக்கிடுவது என்றால் அவர் பேரவைத் தலைவரின் முன் அனுமதியுடன் தான் குறுக்கிட முடியுமே தவிர பாயின்ட் ஆப் ஆர்டராக இருந்தாலும் பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி யாரும் குறுக்கிட்டுப் பேச முடியாது. இந்தப் பேரவையின் மரபை மாண்புமிகு உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் நினைக்கலாம். திருமதி அந்தநாயகி அவர்கள் குறுக்கிட்டுப்பேசவில்லையா, அதற்கு முதல் அமைச்சர் பதில் அளிக்க வில்லையா என்பதாக. திருமதி அனந்தநாயகி அவர்கள் என்னுடைய அனுமதியின் பேரில் தான் குறுக்கிட்டார்கள். இல்லையா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** ஆக, பேரவையின் தலைவரின் அனுமதி யின்றி இனி அமைச்சர்களோடு நேரிடையாகப் பேச சபை நடவடிக்கைகளில் குறுக்கிடக்கூடாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தங்கள் அனுமதியோடு ஒரு க்ளாரிபி கேஷன் பெற விரும்புகிறேன்.

MR. SPEAKER : Yes.

**திரு. ஆர். பொன்னப்பநாடார் :** பெரியார் அவர்கள் தமிழரசுப் பத்திரி கையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்களே, அதை அரசாங்கம் ஏற்றுக்கொள் கிறதா? அல்லது அதைக் கண்டித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபோன்ற பிரச்சினைக்குரிய கட்டு ரைகள் தமிழரசுப் பத்திரிகையில் வெளியிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. பெரியார் எழுதியிருக்கிற கட்டுரை கூட அரசியல் ரீதியில் அவருக்கே உரித்தான நடையில் பஞ்சமர்கள், சூத்திரர்கள் என்கிற பிடிப்பில் இருந்து விடுபடவேண்டுமானால் இந்தியா ஒன்றாக இருந்தால் முடியுமா என்று கேட்கிற அளவில்தான் முடிக்கப்பட்டிருக்கிறதே தவிர திராவிட நாடு வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. எனினும் இது போன்ற ஆட்சேபத்திற்குரிய கட்டுரைகளை இனி வெளியிடக்கூடாது என்பதாக எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனு மதியுடன் ஒரு கேள்வி. முதல் அமைச்சர் சொல்கிறபோது 6 மில்களைத் திறப் பதற்கு மத்திய அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுவதாகச் சொன் னார்கள். 12 மில்கள் இருக்கின்றனவே, மீதமுள்ள 6 மில்களைப்பற்றி எந்தவித ஏற்பாடும் செய்யப்படவில்லையா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதலிலே அனைத்துக்கட்சித் தலைவர் கள் கூட்டத்திலேயே 6 மில்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்பதுதான் முடிவாயிற்று. இவை நல்லபடியாகத் திறக்கப்பட்ட பிறகு மற்ற 6 மில்களைப்பற்றியும் கவனிக்கலாம்.

MR. SPEAKER : Now the hon. Member, Dr. Hande, can seek one clarification (Laughter).

DR. H. V. HANDE : Sir, I am very grateful to the obliging Speaker. Tomorrow is the last day we are meeting. Within the next 20 days, would it not be better to improve the industrial climate in the Madras City? Would it not be better to see that the hot atmosphere outside is removed?



அப்படியின்றி ஒரு காரசாரமான நிலைமையே நீடித்தால் அது நம் மாநிலத் தொழில் வளர்ச்சியையே பாதிக்காதா? இதுபற்றி அரசு என்ன யோசனை சொல்ல முடியும் என்று கேட்க விரும்புகிறேன். வழக்குகளைத் திரும்பப் பெற்று தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன் வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வழக்குகளைத் திரும்பப் பெறுவது வழக்குகளின் தன்மையைப் பொறுத்தது. ஆனால் தொழில் அமைதியை ஏற் படுத்த அனைத்துக்கட்சித் தலைவர்களோடு கலந்து பேச அரசு தயாராய் இருக் கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, may I know whether the Government realise that there is a lot of difference between asking for more powers to the State and the State Autonomy?

MR. SPEAKER : That is all over.

Now, as a matter of convention the amendments moved in respect of the Governor's Address are not usually pressed and I think the hon. Member are not pressing their amendments.

THIRU K. T. K. THANGAMANI : Sir, we can press at least one amendment and the House need not be divided on that issue.

MR. SPEAKER : The general convention is that they are not pressed. In view of the assurance given or the discussion that has taken place, usually they are not pressed. I think the hon. Members who have moved their amendments are not pressing them.

All the amendments were, by leave, withdrawn.

MR. SPEAKER : Now I will put the Motion of Thanks to the vote of the House.

"That an Address be presented to the Governor in the following terms :—

'That the Members of the Tamil Nadu Legislative Assembly assembled in this Session are deeply grateful to the Governor for the Address which he has been pleased to deliver to both the Houses of the Legislature assembled together on the 22nd January 1972'."

The motion was put and carried.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்து டன் முடிவடைகின்றன மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப் பட்டது.

(6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

25. Notification issued with G.O.P. No. 2752, Revenue, dated the 21st September 1971, in regard to an amendment to the Tamil Nadu General Sales Tax Rules, 1959 published in the *Tamil Nadu Government Gazette,* dated the 1st April 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

***B. Reports, Notifications and Other Papers.***

***Nil.***

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

**செவ்வாய்க்கிழமை, 1972 பிப்ரவரி 1.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

**நேபாள மன்னர் திரு. மகேந்திரா அவர்களின் மறைவு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமது அண்டை நாடான நேபாளத்தின் மன்னர் திரு. மகேந்திரா அவர்கள் நேற்றையதினம் (31—1—1972) மறைந்த செய்தியை இப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தியாவின் வடபுலத்தில் நம் நாட்டுடன் நட்புரிமையுடன் இருந்து நம்முடன் வாணிபம், கலாசாரம் முதலியவற்றில் தொடர்பு கொண்டு இயங்கிவரும் நாடுகளில் நேபாளமும் ஒன்றாகும். அந்நாட்டு மன்னரின் மறைவுக்கு இப்பேரவையின் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் நாம் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

### 2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 211 முதல் 215 வரை எண்ணுள்ள வினாக்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி, தள்ளிவைக்கப்படுகின்றன.

*Posts of Civil Surgeons in the Office of Director of Medical Services.*

*228 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether a number of posts of Civil Surgeons in the Office of the Director of Medical Services have been vacant for many months now;

(b) if so, the details thereof; and

(c) the reasons therefor?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தற்சமயம் எந்தப் பதவியும் அந்த அலுவலகத்தில் காலியாக இல்லை.

(இ) & (உ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1972 பிப்ரவரி 1

**திரு. என் டென்னிஸ் :** தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு அதிகமாக இடங்கள் காலியாக இல்லாமலிருக்க அரசு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இது மருத்துவத் துறையாக இருப்பதால் இதிலே பல பகுதிகள் மாவட்ட மருத்துவ அதிகாரியாக உள்ளவர்களைக் கொண்டு பல நேரங்களில் நிரப்பப்பட வேண்டியிருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு மற்றொரு அதிகாரியை நியமிக்காவிட்டால் மாவட்ட நிர்வாகம் அந்த நேரத்தில் செம்மையாகவும் சீராகவும் நடைபெறுவது கடினம். எனவே, இவற்றிலே கொஞ்சம் கால தாமதம் ஏற்படத் தான் செய்யும். இருந்தாலும், நிர்வாகத்தினுடைய நலனை முன்னிட்டு அந்தத் தாமதத்தை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

### *Government Hospital at Kuzhithurai*

* 229 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to shift the Kuzhithurai Government Hospital from its present location to a more convenient place; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** குழித்துறையிலிருக்கும் மருத்துவ மனை சிறிய கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. விஸ்தரிக்கப்பட வேண்டிய பூமி அந்தக் கட்டடம் இருக்கும் இடத்தை யொட்டி இல்லை. ஆகையால் அந்த மருத்துவ மனையை வசதியான இடத்திற்கு மாற்றி விஸ்தரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்ற பொறுப்புள்ளவர்கள் அந்தப் பகுதியில் ஒரு சிறந்த கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களானால், அரசாங்கம் அப்பொழுது மாற்றுவதற்கு முயற்சிக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்பொழுது இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிற இடம் முன்னுள் ட்ராவலர்ஸ் பங்களாவாக இருந்தது. அது வசதியில்லாதவொரு பகுதியாக இருக்கிறது. குழித்துறை தாலுக்கா தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு சௌகரியமான ஒரு இடத்திலே மாற்றுவதாக முன்பு ஒரு செயற்குறிப்பு இருந்ததே, அதையாவது இப்பொழுது இந்த அரசு புனர்ப்பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், புதிதாக எந்த இடத்திலே ஒரு மருத்துவ மனை அமைப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள தேவைக்கேற்ப பெரும் பொருள் செலவழித்து, தகுந்த முறையில் கட்டடங்கள்



1972 பிப்ரவரி 1]

அமைத்தால் தான் அங்கே மருத்துவ மனையை மாற்றுவதற்கு மக்களால் வரவேற்கப்படும். அதற்கு அந்தந்த வட்டார மக்களுடைய பெரும் உதவி—நன்கொடை—இருந்தால்தான் அரசாங்கம் ஒரு பகுதியை ஏற்று ஓரளவு காரியங்களைச் செய்ய முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த லாட்டரியிலிருந்து வருகின்ற வருவாயையாவது இந்த ஆஸ்பத்திரிக்குக் கொடுப் பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த லாட்டரியைத்தான் பெரிதும் எதிர்பார்த்து இந்த இலாக்காவை ஏற்றுக் கொண்டேன். ஆனால், அந்த லாட்டரியே 'லாட்டரி' அடித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், 'டிபென்ஸ் பண்டு' முதலிய பல்வேறு காரியங்களுக்கு அந்த நிதி சென்று விடுகிற காரணத்தால் அந்த வகையிலே நிதி கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும், மாவட்டத்திற்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம் கிடைக்கிறபோது, அதைப் பங்கிட்டால் ஒரு வட்டத்திற்கு 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபாய் கூட வராது. ஆனால், மருத்துவமனை முறையாகக் கட்ட வேண்டுமானால் 5 லட்சத்திலிருந்து 10 லட்சம் ரூபாய் வரை தேவைப்படுகிறது.

### *Free air in General Hospital*

* 230 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the free air in the General Hospital is polluted by the smoke from the Railway Engines in the Central Station; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### திருப்பூருக்கு மேலும் ஈ.எஸ்.ஐ. மருந்தகம்

* 231 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் E. S. I. திட்டத்தின் கீழ் கூடுதலாக ஓர் மருந்தகம் அமைத்துத் தரவேண்டும் என கேட்டு திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் 1971, ஏப்ரலில் விண்ணப்பித் துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) அங்கத்தினர் கொடுத்துள்ள விண்ணப்பம் சுகாதார-குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருப்பூரின் தென்பகுதியில் பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நன்மையைக் கருதி திருப்பூரில் தற்போதுள்ள இரண்டாவது (E.S.I.) மருந்தகத்தை இரு பகுதிகளாகப் பிரித்து கூடுதலாக மருந்தகம் ஒன்று தென் பகுதியில் நிறுவுவது குறித்து, சுகாதார—குடும்ப நலத்துறை இயக்குநர் ஆலோசித்து வருகிறார். மருந்தகத்திற்காக தனியார் கட்டிடம் ஒன்று வாடகைக்கு அமர்த்தும் முயற்சியும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே. திருப்பூரின் தென் பகுதியில் பனியன் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் இருக்கும் பகுதியிலே சீக்கிரத்தில் அந்த மருத்துவமனை துவக்கப்படுமா? என்றைக்கு அந்த மருத்துவமனை துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, கூடிய விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

### நெல்லை மாவட்டத்திலுள்ள ஆதீன நிலங்கள்

* 233 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருவாடுதுறை ஆதீனம் நிலங் களுக்கு வடக்கு கோடை மேல் தெற்கு கோடை மேல் அழகியன் கால் நதி யுன்னிகால் பாசனத்திற்கு மணிமுத்தார் அபிவிருத்தி தீர்வை வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### கீழ்தஞ்சாவூர் வருவாய்த்துறை நிர்வாகம்

* 234 வினா திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்தஞ்சை போலீஸ் நிர்வாகம் தனியாக பிரிக்கப் பட்டது போல், ரெவின்யூ நிர்வாகத்தையும் தனியாகப் பிரிவினை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இப்போது இந்த மாவட்டமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலையில், இதையாவது இரண்டாகப் பிரிக்க அட்மினிஸ்ட்ரேஷன் ரீஃபார்ம் கமிஷனுக்கு ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இல்லை.

### ஈரோட்டில் தையல் பூ வேலை செய்யும் நிலையம்

* 235 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம், ஈரோடு, பவானி துணிகளுக்குப் பெரிய மார்க்கெட்டாக இருப்பதால் அங்கு மிஷின் மூலம் எம்ப்ராய்டரி செய்கின்ற (மிஷின் மூலம் பின்னுகின்ற) தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனை யிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

### பல்லடத்திற்கு சுருட்டுத் தொழிற்சாலை

* 235 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் அரசாங்கத்தின் மூலம் சுருட்டுத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

### *Ground Water Project*

* 237 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. the Minister held discussion in January 1968 with the U.N. Mission on matters relating to the second phase of the U.N. Ground Water Project; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இந்தப் பேச்சுவார்த்தையின் பொழுது குழு, ஒருசில குறிப்புகள் மீது எழுத்து மூலமாக விளக்கம் கேட்டது. விளக்கம் வேண்டப்பட்ட குறிப்புகளும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட பதிலும், அவைமுன் வைக்கப்பட்ட அறிக்கையில் @ கொடுக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் நிலைத் திட்டம் பற்றிய விவரங்களும் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

---

@ 678–693ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Apart from the statement laid on the Table of the House, does the Government have any proposal to do something on its own to find out proper methods to tap the sources of the ground-water and utilise it for the State. May I know whether the Government have got any proposals ? If so, may I know the details ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தனியாக ஒரு திட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் என்று ஒரு தனி டைரக்டரின்கீழ் அது இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று டைரக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவருடைய அறிக்கை தயாராவதற்கு குறைந்தது இரண்டு மூன்று வருஷங்களாவது ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: May I know whether the Government has any proposal to immediately tap the ground water sources because it may take a long time—two to three years, whether in any particular point or in one place the Government has started to tap the ground-water sources properly? Even four or five years ago several reports have come to the Table of the House on behalf of previous Governments and those Governments promised that they would properly investigate. May I know whether the Government has got any immediate programme in the next six months or one year to at least tap particularly in some areas ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, யு.என்.டி.பி. அறிக்கை முடிவாக அரசாங்கத்திற்கு வரவில்லை. ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ள இடங்களில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நம்முடைய மாநிலத்தில் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் மூலமாக இன்வெஸ்டிகேஷனை நடத்திக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த நில-நீர் திட்டமானது தஞ்சை போன்ற தாழ்வான மாவட்டங்களில் மட்டும்தான் செயல்படுகிறதா ? வடார்க்காடு போன்ற வறண்ட பிரதேசங்களில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுவதில்லையா ? ஆர்ட்டீஷன் வெல்ஸ் போன்ற நீரூற்றுக்களை எங்கேயாவது கண்டு பிடித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, யுனைடெட் நேஷன் டெவலப்மெண்ட் ஆர்கனைசேஷன் மூலமாக காவேரி டெல்டா பகுதியில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய கிரவுண்ட் வாட்டர் டிவிஷனும் செயல்பட்டு வருகிறது. ஆர்ட்டீஷன் நீரூற்றுக்களைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, கிரவுண்ட் வாட்டர் செல் தனியாக ஒரு டைரக்டரேட்டின் கீழ் இயங்கி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.





கோவை மாவட்டத்தில் சில இடங்களில் தண்ணீர் மிக ஆழத்தில்
இடைக்கிறது. அங்கே அவர்கள் ஆராய்ச்சி செய்தார்களா?
இல்லாவிட்டால் ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, சில பகுதிகளில் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். வறண்ட பகுதியில்கூட ஆராய்ச்சி நடத்துகிறார்கள். சூளூர் சிங்காநல்லூர் போன்ற பகுதிகளில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு, குடிதண்ணீர்ப் பிரச்சினை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

* 238 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government is preparing a Water Atlas to show ground-water resources; and

**(*b*) if so, the details thereof ?**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) & (இ)** தற்பொழுது தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டுவரும் நிலநீர் ஆய்வுகள் முடிவடைந்தவுடன் அதாவது இன்னும் மூன்று ஆண்டுகள் கழித்துத் தயார் செய்யப்படும்.
நில-நீர் பட ஏடு

செஞ்சி வட்டத்திலுள்ள நந்தன் கால்வாய்

*** 239 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் நந்தன் கால்வாயை புதிதாக தூர் வாரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக் கால்வாயிலிருந்து பல கிளைக் கால்வாய்கள் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ)** நந்தன் கால்வாயைப் புதுப்பிக்கும் திட்டம்தான் அரசு பொதுப் பணித்துறை ஆணை: எண். 1947; நாள் 26—9—1970-ல் ரூ.31.89 லட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன.

அஞ்சாம்பேடு சுண்ணாம்பு கால்வாய் அணைத்திட்டம்

*** 240 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கும்முடிப்பூண்டி தாலுகா வட்டம், அஞ்சாம்பேடு சுண்ணாம்பு கால்வாய் சிறு அணைத் திட்டத்தை முடிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது.

[1972 பிப்ரவரி 1

## சென்னை—கன்னியாகுமரி நெடுஞ்சாலை

* 241 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—கன்னியாகுமரி நெடுஞ்சாலைப் பணிகளின் ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டனவா ?

(இ) ஆம் எனில், சாலை அமைப்பு வேலைகள் எப்பொழுது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) & (இ) கிழக்கு கடற்கரை சாலை நேர்பாட்டில் சில வேலைகளைப் பொறுத்த வரையில் ஆய்வு வேலைகள் முடிவடைந்துள்ளன. இவ்வேலைகள், ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட உடன், தொடங்கப்படும். மீத முள்ள வேலைகளுக்கான ஆய்வு வேலைகள் நடந்து வருகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே. ஏற்கெனவே, காசி—கன்னியாகுமரி நேஷனல் ஹைவேஸ் நெ. 7, நீண்ட நெடுங் காலமாக ஒரு பத்தாண்டுக் காலமாக இருக்கிறது. மதுரை—கன்னியாகுமரி நெடுஞ்சாலை போடப்படும் என்று சொல்லப்பட்டு வருகிறது. இன்னும் சர்வேயில்தான் இருந்து வருகிறதா ? அல்லது குறிப்பிட்ட தேதிக்குள் முடிவடைந்து விடுமா ? மேலும் மெட்ராஸ்—கன்னியாகுமரி ஹைவேஸ் திட்டம் விரைவில் செயல்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச்சாலை மிகமிக முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் இதைப்பற்றி பல தடவைகள் வற்புறுத்தி வருகிறோம். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு 14 கோடி ரூபாய் செலவாகு மென்று முதலில் மதிப்பிடப்பட்டது. இதனால் அதிகமான அளவில் செலவாகுமென்பதால் இதை இரண்டாகப் பிரித்து அனுப்பினால் பரிசீலிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. யூனியன் மந்திரி வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் இரண்டாகப் பிரித்து அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே இரண்டு திட்டங்களாகப் பிரித்து, 8 கோடி ரூபாய், 6½ கோடி ரூபாய் மதிப்புள்ள இரண்டு திட்டங்களைப் போட்டு அனுப்பினோம். அதற்கும் இதுவரை எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. மாநில அரசாங்கத்தின் திட்டத்தின்படி கடனை வேண்டுமானால் தரலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். கடனைத் தாருங்கள் என்று நாங்கள் கேட்டோம். அதுவும் விரைவாக வந்து சேரவில்லை. பல தடவைகள் நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக வற்புறுத்தி வருகிறோம். ஆனால் மத்திய அரசாங்கம் இதில் போதுமான அளவு கவனம் செலுத்தி நிதி உதவி தரவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் நமக்கு உதவியும் தரவில்லை கடனை வழங்கப் போகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை



1972 பிப்ரவரி 1]

உடனடியாக வழங்குவதற்கு மாதிரி, மாநிலங்களுக்குக் கொடுப்பது போல அளிப்பதற்கு, நம்முடைய அரசாங்கத்தினிடம் ஏதேனும் குறிப்பு இருக்கிறதா ? அதுமட்டும் அல்ல, இன்னும் நிறைய பாலங்கள் கட்டாமல் இருக்கின்றன. அதையாவது கட்டுவதற்கு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, மிஸ்ஸிங் லிங்க்ஸ்—அதாவது விடுபட்ட பகுதிகளுக்காக சுமார் 172 லட்சம் ரூபாய் கொடுத்தது. நாம் குறிப்பிட்டபடி முழு திட்டம் நிறைவேற்ற முழு அளவு உதவி கிடைக்கவில்லை. கடனாகவாவது கொடுங்கள் என்று கேட்டோம். அதுவும் இன்னும் கிடைக்கவில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சமீபத்தில் நெடுஞ் சாலைப் பணிகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதற்கும், பல புது வேலைகள் செய்யப்படுவதற்கும் (பணம் ஒதுக்கப்பட்டிருக் கிறதா ? நெடுஞ்சாலைத் துறையில் தலைமைப் பொறியாளர் என் கிற புதிய பதவி உண்டாக்கப்பட்டுள்ளதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர் களே, நேஷனல் ஹைவேஸ் ஈஸ்ட் கோஸ்ட் திட்டம் வரவில்லை. மத்திய அரசாங்கம் 40 கோடி ரூபாய் நமக்கு ஒதுக்கியிருக்கிறது. அந்தத் தொகையைச் செலவழிக்க தனி பொறியாளரை நியமித்திருக்கிறது. நேஷனல் ஹைவேஸ் வேலைகளைக் கவனிக்க அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, நேஷனல் ஹைவேஸுக்காக தரப்படுவது போன்ற உதவியை கன்னியாகுமரி —சென்னை நெடுஞ்சாலைக்கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து மத்திய அரசை நாடும் செயற்குறிப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பல தடவை நாடியிருக்கிறது. இன்னும் நாடுவதற்குத் தயாராக இருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையிலே நேஷனல் ஹைவேஸுக்காக 40 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்தால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். 40 கோடி ரூபாயை எந்த எந்த ரோடுகளுக்காக செலவிடுவதற்கு அரசாங்கம் எண்ணியிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே நான் குறிப்பிட்டமாதிரி தேசிய நெடுஞ்சாலையை விசாலப்படுத்து வதற்கும், மேம்படுத்துவதற்கும்தான் செலவிடப்படும். எந்த, எந்த ரோடுகள் என்பது ஒரு நீண்ட பட்டியலாக இருக்கிறது என்பதால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

[1972 பிப்ரவரி 1

மதுரை—அலங்காநல்லூர் சாலை.

* 242 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—அலங்காநல்லூர் சாலையைச் செப்பனிடுவதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளரால் அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இவ்வேலையை நடப்பு ஆண்டில் எடுத்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மதுரை—அலங்காநல்லூர் சாலையை செப்பனிடுவதைக் குறித்து மதுரை டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில்கூட விவாதிக்கப்பட்டது. அரசும் இதற்குப் பணம் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பணம் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் ? எக்காலத்திலே இது முடியும் என்று அறியவிரும்புகிறேன். அது சதுப்பு நிலமாக இருப்பதால் அங்கு சர்க்கரை ஆலைகளுக்குக்கூட வண்டிகள் போகமுடியாத இடைஞ்சல்கள் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : In G.O. Ms. No. 2145, Public Works, dated 13th October 1971 the Government approved the proposal formulated by the Chief Engineer (Highways and Rural Works) in June 1971 for effecting improvements in the three reaches of Madurai-Alanganallur Road as detailed below and sanctioned an expenditure of Rs. 10 lakhs therefor, treating the work as a 'New Service' Scheme as desired by the Chief Minister :—

1. Madurai-Palamedu road (K.M. 6.2 to 12.8 lying in Madurai Division).

2. Madurai-Palamedu road (K.M. 12.8 to 24.4, Dindigul Division).

3. Thanichaim-Alanganallur road (K.M. 0/0 to 10/0 Dindigul Division).

ஆகவே பத்துலட்சம் ரூபாய்க்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.



1972 பிப்ரவரி]

*Ulundurpet—Salem road*

* 243 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the contractors of the widening of roads of the Ulundurpet—Salem road between 74 to 86 K.M. have surrendered their contract during 1971 January;

(b) whether the surrender has been accepted; and

(c) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை இவ்வேலையை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் அவருடைய விருப்பப்படி அவர் ஒப்பந்தம் முடிக்கப்பட்டு, அவர் டிபாசிட் தொகையை இழந்தார், மறு ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு அவ்வேலை வேறு ஒருவருக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : பல வேலைகளுக்கு போட்ட எஸ்டிமேட் குறைவாக இருப்பதால் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது. வேலையில் காலதாமதம் ஏற்படாமலிருக்க வேலைக்கு ஏற்ற முறையில் எஸ்டிமேட் ரேட் நிர்ணயம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. மூலக் கேள்வி ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களைத் திரும்ப ஒப்படைத்து விட்டனரா என்பதுதான். அந்த ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது என்று பதில் சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு விவரங்கள் இபபொழுது இல்லை.

செங்காளிபாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம்.

* 244 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளம் பிர்க்காவில், துடியலூர், கோவில்பாளையம் சாலையிலுள்ள செங்காளிபாளையம் பள்ளத்தில் பாலம் கட்ட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக நானே அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். நேரடியாகவும் பேசியிருக்கிறேன். அரசாங்க அதிகாரிகள் கீழ்

மட்டத்திலே இன்னும் தாமதம் செய்வதாகத் தெரிகிறது. அதைத் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** செங்காளி பாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்ட முடிவுசெய்யப்பட்டு ஒரு லட்சம் ரூபாயில் முடிப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் மட்டத்தில் காலதாமதம் ஏற்படவில்லை. எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதில் கால தாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு பரிசீலிக்க நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

### *Linking of Cauvery, Krishna and Godavari rivers*

* 245 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that the Government has asked the Union Government to study the feasibility of linking the three rivers, Cauvery, Krishna and Godavari ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, காவிரி, கிருஷ்ணா, கோதாவரி மூன்று ஆறுகளையும் இணைப்பதன் மூலமாக தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே இது குறித்து இதுவரையிலும் எதுவும் செய்யாவிட்டாலும் அரசு ஆரம்ப ஆய்வையாவது மேற்கொள்ள இப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கங்கை—காவிரி இணைப்பு மத்திய சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது. நம்முடைய குறிப்பு அதற்கு அனுப்பவில்லை என்றாலும், தமிழ்நாட்டிற்கு வந்திருந்த இரிகேஷன் கமிஷனிடத்திலே நாம் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். கங்கை—காவிரி இணைப்பின் முதல் கட்டமாக கிருஷ்ணா காவிரி ஆறுகளை இணைப்பதன்மூலம் நல்ல பலனை அடைய முடியும் என்று சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையிலே பார்த்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். கேரளாவிலிருந்து சில ஆறுகளை தமிழ்நாட்டுக்கும், மைசூர் மாநிலத்திற்கும் கொண்டுவரமுடியும். அதன் மூலம் செலவுகூடக் குறையும் என்று ஒரு பொறியாளர் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சமீபத்திலே இந்திரா காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே வட மாநிலத்திலுள்ள ஆறுகளையும், தென் மாநிலத்திலுள்ள ஆறுகளையும் இணைக்கும் திட்டம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது கடிதம் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மத்திய அரசாங்கத்திடமிருந்து இதற்காகத் தனிக் கடிதம் வரவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போயிருந்த பொழுது அங்குள்ள அமைச்சர் கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்து இது குறித்துப் பேசினார்கள். அவர்கள் கங்கை—காவிரி இணைப்பு நல்ல பலனைத்தரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு வரவேற்பு சொல்லி அத்திட்ட ஆய்விற்கான செலவுகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு உதவிகள் செய்யவேண்டும், அப்படிச் செய்தால் இன்வெஸ்டிகேஷன் சார்ஜை ஈடுசெய்ய முடியும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு காவேரி—கங்கை இணைப்பின் முதல் கட்டமாக கிருஷ்ணா, காவிரி இவற்றை இணைப்பதின் மூலம் நல்ல பலன் ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது. கேரள ஆறுகளையும் காவிரியையும் இணைப்பதன் மூலம் பலன் அதிகமாகக் கிடைக்கும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, thanks to the efforts of Dr. K. L. Rao, the proposal is assuming concrete shape and the only thing is that they have to keep in view the irrigation needs of the entire state. I am a student of Geography and I wish to state that the channel of the Ganges after the Andhra Pradesh has to be linked with the Cauveri *via* the table land portion of our Statt, namely, the Dharmapuri district. Mettur Dam is only 20 miles from the Hogenakkal ' Cauveri and it can be linked with South Pennar and other rivers. So, will the Government see that the channel is linked with the Hogenakkal Cauveri in the Hosur Taluk

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திரு. கே. எல். ராவ் அவர்கள் கொடுத்திருக்கிற திட்டத்தின்படி கங்கை-காவிரி இணைப்பு மூலம் கிருஷ்ணாவுக்கு [illegible] தண்ணீர் கொண்டு வந்து அங்கிருந்து காவிரி ஆற்றின் மூலம் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரமுடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில்—நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போன்று—

**In the preliminary memorandum presented to the Irrigation Commission by the Tamil Nadu Government, the need for taking up in advance the lower portion of the Grand Feeder Canal viz., the linking of the Krishna with the Cauvery for the benefit of the Southern States has been stressed.** Pending detailed investigation of the upper portion of the Grand Feeder Canal from the Ganga to the Krishna.

சொல்லியிருக்கிறோம். அது அல்லாமல், நம்முடைய பொறியாளர், பூண்டி (Research Station உள்ள பொறியாளர் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார். கங்கை-காவிரி இணைப்பு வேலையை எடுப்பதற்கு முன்பு கிருஷ்ணா, கோதாவரி, காவிரி இணைப்பை எடுத்துக்கொண்டால் அந்தத் தண்ணீரை மேட்டூர்

அணையிலோ அல்லது சின்னாறு அணையிலோ சேர்த்தால் மிகுந்த பலன் கிடைக்குமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், சென்ற கூட்டத்தொடருக்கு முந்திய கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது இந்த ஸ்ரீசைலம் டேம் சம்பந்தமாக நமக்கும் ஆந்திர மாநில அரசுக்கும் பேச்சு வார்த்தை நடக்கிறது என்றும், அதில் ஓரளவிற்கு ஒற்றுமை வந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? அது அமலுக்கு வந்தால் காவிரி, கிருஷ்ணா, கோதாவரி இணைப்பிற்கு முதல் பாதையாக இருக்குமல்லவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி நம்முடைய அதிகாரிகள் ஆந்திர அதிகாரிகளோடு பேச்சு நடத்தியிருக்கிறார்கள். அதன் விவரங்களை இப்பொழுது என்னால் சொல்ல இயலவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் அதிகாரிகள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி முடிவிற்கு வரவில்லை என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : This is about drinking water for Madras, and not about irrigation.

THIRU K. T. K. THANGAMANI : Last time when this matter came up the whole question of how to link up Caubery, Krishna and Godavari was taken up and as part of it, taking drinking water from Srisailam to Madras was taken up.

MR. SPEAKER : The question is about drinking water for Madras.

THIRU K. T. K. THANGAMANI : Yes, I know. Even for that the Andhra Government is not willing to oblige. That is the point I wanted to draw.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கேரளாவிலிருந்து தமிழ் நாட்டிற்குக் குறைந்த செலவில் தண்ணீர் கொண்டுவரலாம் என்று என்ஜினியர்கள் கருத்து தெரிவித்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள், இது சம்பந்தமாகக் கேரள அரசுடனாவது அல்லது மத்திய அரசாங்கத்துடனாவது இந்த அரசு ஏதாவது தொடர்பு கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கருத்து நேற்றுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. இந்தக் கருத்தைத் தொடர்ந்து நம்முடைய அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று நம் அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, கேரளாவிலுள்ள ஆறுகளையும், தமிழகத்திலுள்ள ஆறுகளையும் இணைப்பது மிக எளிதாக இருக்கிறது என்று குறிப்பிருப்பதாக அமைச்சரவர்கள்





கூறினார்கள். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு, பாண்டியாறு புன்னம்புழாவை நீண்டகாலமாகத் தமிழகத்திற்குத் திருப்பி விடுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறதே அதை விரைவில் முடித்து பாண்டியாறு புன்னம்புழா நீர்ப்பாசனத்தை விரைவில் திருப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினரின் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, வட மாநிலத்தில் உள்ள ஆறுகளைத் தென் மாநிலத்தில் இணைப்பதாகத் தேர்தல் அறிக்கையில் வந்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இப்பொழுது காவிரி நீரின் நிலை மைசூர் மாநிலத்தில் அணை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை மத்திய அரசு ஏன் என்று கேட்கவில்லை. ஆகவே மத்திய அரசு வடநாட்டில் ஓடுகின்ற கங்கை, கோதாவரி இதனுடைய கால்வாய்களைத் தமிழ்நாட்டுடன் இணைக்க முற்படுமா? அப்படி இணைக்க முற்படும் என்று இந்த அரசு நம்புகிறதா? இல்லையென்றால் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோதாவரியையும் வடநாட்டிற்குக் கொண்டு போகிறீர்களே?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மத்திய சர்க்கார் நம்புகிறார்கள் இணைக்க முடியுமென்று. அப்படி ஏற்பட்டால் நீர்ப்பாசன வசதி பெருகும் பொழுது அதை நாமும் வரவேற்கிறோம்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, கோதாவரி, கிருஷ்ணா, மற்றும் மைசூரில் ஓடுகின்ற நதிகள், கேரளாவில் ஓடுகின்ற நதிகள், தமிழகத்தில் ஓடுகின்ற நதிகள் ஆகியவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டால் திராவிட நாடு என்ற ஒற்றுமை மேம்படும் அல்லவா? அதற்காகவாவது உடனடியாக முயற்சி எடுக்க இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திராவிட நாடு பிரச்சினை இப்பொழுது இல்லை. இப்பொழுது இருக்கும் பிரச்சினை நீர்ப்பாசனத்தைப் பெறுவதுதான். எந்த அளவிற்குத் தண்ணீர் பெறுவது என்பதுதான் இப்போதிருக்கும் பிரச்சினையாகும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** • •

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. * இது எக்ஸ்பஞ்ச் செய்யப்படுகிறது, பத்திரிக்கைகளிலும் பிரசுரிக்க வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

அணையிலோ அல்லது சின்னாறு அணையிலோ சேர்த்தால் மிகுந்த பலன் கிடைக்குமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : சார், சென்ற கூட்டத்தொடருக்கு முந்திய கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது இந்த ஸ்ரீசைலம் டேம் சம்பந்தமாக நமக்கும் ஆந்திர மாநில அரசுக்கும் பேச்சு வார்த்தை நடக்கிறது என்றும், அதில் ஓரளவிற்கு ஒற்றுமை வந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? அது அமலுக்கு வந்தால் காவிரி, கிருஷ்ணா, கோதாவரி இணைப்பிற்கு முதல் பாதையாக இருக்குமல்லவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : அதுபற்றி நம்முடைய அதிகாரிகள் ஆந்திர அதிகாரிகளோடு பேச்சு நடத்தியிருக்கிறார்கள். அதன் விவரங்களை இப்பொழுது என்னால் சொல்ல இயலவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் அதிகாரிகள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி முடிவிற்கு வரவில்லை என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : This is about drinking water for Madras, and not about irrigation.

THIRU K. T. K. THANGAMANI : Last time when this matter came up the whole question of how to link up Caubery, Krishna and Godavari was taken up and as part of it, taking drinking water from Srisailam to Madras was taken up.

MR. SPEAKER : The question is about drinking water for Madras.

THIRU K. T. K. THANGAMANI : Yes, I know. Even for that the Andhra Government is not willing to oblige. That is the point I wanted to draw.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்குக் குறைந்த செலவில் தண்ணீர் கொண்டுவரலாம் என்று என்ஜினியர்கள் கருத்து தெரிவித்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள், இது சம்பந்தமாகக் கேரள அரசுடனாவது அல்லது மத்திய அரசாங்கத்துடனாவது இந்த அரசு ஏதாவது தொடர்பு கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தக் கருத்து நேற்றுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. இந்தக் கருத்தைத் தொடர்ந்து நம்முடைய அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று நம் அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா** : தலைவரவர்களே, கேரளாவிலுள்ள ஆறுகளையும், தமிழகத்திலுள்ள ஆறுகளையும் இணைப்பது மிக எளிதாக இருக்கிறது என்ற குறிப்பிருப்பதாக அமைச்சரவர்கள்



கூறினார்கள். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு, பாண்டியாறு புன்னம்புழாவை நீண்டகாலமாகத் தமிழகத்திற்குத் திருப்பி விடுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறதே அதை விரைவில் முடித்து பாண்டியாறு புன்னம்புழா நீர்ப்பாசனத்தை விரைவில் திருப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மாண்புமிகு உறுப்பினரின் கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி** : தலைவரவர்களே, வட மாநிலத்தில் உள்ள ஆறுகளைத் தென் மாநிலத்தில் இணைப்பதாகத் தேர்தல் அறிக்கையில் வந்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் இப்பொழுது காவிரி நீரின் நிலை மைசூர் மாநிலத்தில் அணை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை மத்திய அரசு ஏன் என்று கேட்கவில்லை. ஆகவே மத்திய அரசு வடநாட்டில் ஓடுகின்ற கங்கை, கோதாவரி இதனுடைய கால்வாய்களைத் தமிழ்நாட்டுடன் இணைக்க முற்படுமா? அப்படி இணைக்க முற்படும் என்று இந்த அரசு நம்புகிறதா? இல்லையென்றால் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கோதாவரியையும் வடநாட்டிற்குக் கொண்டு போகிறீர்களே?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மத்திய சர்க்கார் நம்புகிறார்கள் இணைக்க முடியுமென்று. அப்படி ஏற்பட்டால் நீர்ப்பாசன வசதி பெருகும் பொழுது அதை நாமும் வரவேற்கிறோம்.

**திரு. கே. ஏ. வகாப்** : தலைவரவர்களே, கோதாவரி, கிருஷ்ணா, மற்றும் மைசூரில் ஓடுகின்ற நதிகள், கேரளாவில் ஓடுகின்ற நதிகள், தமிழகத்தில் ஓடுகின்ற நதிகள் ஆகியவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டால் திராவிட நாடு என்ற ஒற்றுமை மேம்படும் அல்லவா? அதற்காகவாவது உடனடியாக முயற்சி எடுக்க இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : திராவிட நாடு பிரச்சினை இப்பொழுது இல்லை. இப்பொழுது இருக்கும் பிரச்சினை நீர்ப்பாசனத்தைப் பெறுவதுதான். எந்த அளவிற்குத் தண்ணீர் பெறுவது என்பதுதான் இப்போதிருக்கும் பிரச்சினையாகும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : • •

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. * இது எக்ஸ்பஞ்ச் செய்யப்படுகிறது, பத்திரிக்கைகளிலும் பிரசுரிக்க வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

### கோயம்புத்தூர் விமான தளம்

* 246 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் விமான தளத்தை மேம்படுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, பெரிய விமானங்கள் அங்கே வருகின்ற வாய்ப்பு ஏற்படும் சமயத்தில் இறங்குவதற்கு இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது, எனவே அந்தக் குறைபாட்டைப் போக்க இந்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்பொழுது வருகின்ற விமானங்களுக்குப் போதுமான தளம் என்றுதான் கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறப்பான கருத்துக்களைச் சொல்வார்களேயானால் நிச்சயமாக மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் உதகைக்கு ஏராளமான உல்லாசப் பயணிகள் வருவதால் அங்கே விமானதளம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சேலம் தூத்துக்குடி விமான தளங்கள் கேட்கப்பட்டதே முடிவாகவில்லை. இவைகள் பூர்த்தியானபிறகு வேண்டுமானால் ஊட்டிக்குச் செல்லலாம்.

### *Railway facilities for Kanyakumari*

* 247 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to move the Union Government to secure proper railway links for the people of Kanyakumari ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை (நாகர்கோயில், கன்னியாகுமரி வழியாக) புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை சேர்க்கும்படி மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இரயில்வே போர்டு வந்து 3 ஆண்டுகளுக்குள் பூர்த்தியாகிவிடும் என்று குறிப்பிடப் படுகிறது. இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாநில அரசு பல கட்டங்களில் வற்புறுத்தி வருகிறது. நாங்கள் வற்புறுத்துவது மட்டும் அல்ல. மத்திய சார்க்காரிடத்திலேயும் வற்புறுத்தினால் தான் விரைவில் நடத்த முடியும். சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த இரயில்வே அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Is this Government aware of the fact that the Planning Commission has given the green signal for this scheme and that they have pointed out that it will be included in the next budget ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படி ஒரு கருத்து எங்களுக்கும் தெரிந்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் தான் இந்தியாவிலேயே இரயில்வே தொடர்பு இல்லாமல் இருக்கும் ஜில்லா. ஆகவே, இதற்காக பிரையாரிட்டி கொடுத்து இந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமென்று அக்கறை கொண்டிருப்பதாகவும் ஆனால் தமிழக அரசு அதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கவில்லை என்ற கருத்து கூறப்படுகிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எந்த அடிப்படையில் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. இது மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய பணியாகும். நம்முடைய பணியெல்லாம் லேண்ட் அக்குவிசிஷன் செய்து கொடுப்பதாகும். அக்குவிசிஷன் கொடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டிருந்தாலும் நாங்கள் வந்ததற்குப்பிறகு தான் இப்படி வற்புறுத்தி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சமீபத்தில் இரயில்வே அமைச்சரவர்கள் தெரிவித்ததாகச் சொல்லி பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியபடி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கருத்தையும் மத்திய அரசாங்கம் தெரிவித்து இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அதாவது மாநில அரசு ரெகமண்ட் செய்திருக்கும் திட்டங்களில் இதற்கு முதல் பிரையாரிட்டி கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்லாம் கொடுத்து கதை முடிந்தபிறகு சொன்னால் என்ன பிரயோஜனம்.

### மணியாச்சி இரயில் நிலையத்துக்கு மறு பெயர்

* 248 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணியாச்சி இரயில்வே நிலையத்திற்கு தியாகி வாஞ்சிநாத ஐயர் நினைவாக அவர்

பெயரை வைக்கவேண்டி மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் பரிந்துரை செய்துள்ளதா?

(இ) இல்லையெனில், அவர் பெயரால் வேறு ஏதேனும் நினைவுச் சின்னம் எழுப்பும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) இல்லை.

### *Subsidy for cotton growers*

* 249 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether subsidies are given to the cotton growers growing long staple cotton in the State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இழை நீளமுள்ள பருத்திவகைகளான எம்.சி.யு. 4., எம்.சி.யு. 5 சுஜாதா பருத்தி பயிர் செய்ய் விவசாயிகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களில் மான்யம் வழங்கப்படுகிறது.

(1) பூச்சி மருந்துகளுக்கு—25 சதவிகிதம் முதல் மூன்று ரவுண்டுகள் மருந்து தெளிப்புகளுக்கு 33-1/3 சதவிகிதம் பின்னர் வரும் மருந்து தெளிப்புகளுக்கு.

(2) களைக் கொல்லி மருந்துகளுக்கு—33-1/3 சதவிகிதம்.

(3) விசைத் தெளிப்பான்களுக்கு—25 சதவிகிதம் ரூ. 200-க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது.

(4) செயல்முறை விளக்கங்களுக்கு—அரை ஹெக்டேர் பாத்தி ஒன்றுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் முதலிய பொருட்களுக்கு முழுவிலையாக ரூ. 200 மட்டும் கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்றும் கூட வட இந்தியாவிலும், வெளிநாட்டிலும் இருந்துதான் தமிழகத்திற்கு லாங் ஸ்டேபிள் காட்டன் இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கிறது. இம்மாதிரியான பருத்தியானது தேனி பகுதியிலும், திண்டுக்கல் பகுதியிலும், திருப்பூர் பகுதியிலும், ராஜபாளையம் பகுதியிலும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் இந்த வசதிகள், உதவிகள் கொடுக்கப்படுமா? அப்படிக் கொடுக்கப்படுமானால் எந்த அளவுக்கு இப்போது உற்பத்தி அதிகமாக இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்தில் 1,50,000 ஏக்கருக்கும் நெல்லை மாவட்டத்தில் 50,000 ஏக்கருக்கும் பூச்சி மருந்து தெளிக்க





சலுகை முழு அளவுக்கு அளிக்கப்படுகிறது. அதைப் போலவே 50 சதவிகிதம் விதைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது. 33-1/3 சதவிகிதம் பூச்சி மருந்துகளுக்காகக் கொடுக்கப்படுகிறது. இப்போது அந்தத் தீவிர சாகுபடித் திட்டம் அந்த இரண்டு மாவட்டங்களிலும் இருந்து வருகிறது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் டி.ஆர்.எஸ். 72 என்ற பருத்தி 50,000 ஏக்கர் நஞ்சையில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் பயிரிட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு மானியம் கேட்கப்பட்டிருக்கிறது. திருச்சி மணப்பாறை பகுதியில் 50,000 ஏக்கரில் தீவிர சாகுபடித் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரை மாவட்டத்தில் தேனி, திண்டுக்கல் பகுதிகளிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜபாளையம் பகுதியிலும் இப்போதே கம்போடியா காட்டன், லாங் ஸ்டேபிள் காட்டனை உற்பத்தி செய்து வருகிறார்கள். தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்போது அந்த உத்தேசம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** நீண்ட இழைப் பருத்தி விளைவிப்பவர்களுக்கு உதவி அளிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த உதவி மாநிலம் பூராவிலும் எந்த இடத்தில் இந்த ரகப் பருத்தியை விளைவித்தாலும் கொடுக்கப்படுகிறதா அல்லது குறிப்பிட்ட இடங்களில் மட்டுந்தான் கொடுக்கப்படுகிறதா? இந்த உதவியைப் பெற வேண்டுமென்று சொன்னால் எந்த முறையில் பெறவேண்டும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் இரண்டு லட்சம் ஏக்கர்களில் இந்தப் பருத்தியைப் பயிரிட அரசு எல்லா விதமான மானியங்களையும் விவசாயிகளுக்கு வழங்கி தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைத் துறை மூலமாக அவர்களுக்குத் தேவையான உதவிகளும், பூச்சி கொல்லி மருந்துகளும் அளிக்கப்படுகின்றன.

**திரு. என். கணபதி :** தஞ்சை மாவட்டத்தில் 50,000 ஏக்கர் நஞ்சை நிலத்தில் தீவிர பருத்தி சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டம் இருப்பதாகவும், மத்திய அரசை மானியம் கேட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மானியம் எவ்வளவு? எவ்வளவு விரைவில் கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போதுதான் மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் போலவே தஞ்சை மாவட்டத்திலும் தனியாக பருத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தப் பகுதிக்கும் அதே சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** புதிய ரகமான நீண்ட இழைப் பருத்தியில் சுஜாதா என்ற பருத்தி நீண்ட இழைகளைக் கொடுத்தாலும், இழைகள் கெட்டியாக இல்லாத காரணத்தால் அதைப் பஞ்சாலைக்காரர்கள் வாங்க கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதுபோல் புகார்கள் வரவில்லை. எம்.சி.யு. 4, 5 என்பவை 165 நாட்களில் எடுக்கப்படுகிறது. சுஜாதாவுக்கு 180 நாட்கள் ஆகிறது. கொஞ்சம் அதிக நாள் போகிறது என்ற காரணத்தால் இருக்கலாம். இழையைப் பற்றி எந்தவித குறைபாடும் யாரும் சொல்லவில்லை. அது பற்றி எனக்கு ஏதும் வரவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** சுஜாதா ரகப் பருத்திக்கும் இந்த உதவி செய்த போதிலும் விவசாயிகள் போதுமான அளவுக்குப் பயிரிட முன்வருவதில்லை. நல்ல இழைப்பருத்தி என்று ஆலைக்காரர்கள் சொல்லுகிறார்கள். அந்த ரகத்திற்கு அதிகமான உதவி செய்ய அரசு முன்வருமா? இதைப் பயிரிடுகின்ற ஏக்கர் பரப்பை அதிகப்படுத்த ஊக்கம் அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விவசாயிகள் விரும்பினால் ஊக்கம் அளிக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டமும் இணைக்கப்பட்டிருக்கிறதா? இன்றைக்கு தேனி பகுதியில் மட்டும் ஒரு சீசனுக்கு 10,000 கண்டுக்கு மேல் உற்பத்தி ஆகிறது. எம்.சி.யு. 4 5 சுஜாதா என்ற வகையில் லாங் ஸ்டேபிள் காட்டனைப் பயிரிடுவதற்கு உதவி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதுரையில் நெல்லைப் பொறுத்தவரையில்தான் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மறுபடியும் பருத்தியைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் வேளாண்மைத் துறை இயக்குநரை அதுபற்றிக் கேட்டு, பரிசீலனை செய்யுமாறு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**THIRU K. M. SUBRAMANIAM :** Mr. Speaker, Sir, may I know what is the total increase in the acreage of cultivation of long-staple cotton during the last three years, that is, from 1969 to 1971 ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1969-70-ல் 3.375 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு ஏக்கர்களில் என்ற விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.





**திரு. சு. துரைசாமி :** நம்முடைய தமிழகத்தில் பஞ்சுப் பற்றாக் குறை இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய முறையில் பருத்தி உற்பத்திக்கு 25 சதவிகிதம், 33-1[3 சதவிகிதம் என்ற முறையில் மானியம் அளிக்கப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பூச்சி கொல்லி மருந்துகளை வாங்குகின்ற நேரத்தில் விவசாயிகளுக்கு மிச்சம் இருக்கும் பணத்தைக் கடனாகக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** விவசாயத்தைப் பெருக்குவதுதான் வேளாண்மைத் துறையின் கடமை. கடன் கொடுப்பதைப் பற்றிக் கூட்டுறவு அமைச்சரைக் கேட்க வேண்டும்.

## சென்னையில் காய்கறி பயிரிட சிறப்புத் திட்டம்.

* 250 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடி மாதத்தில் சென்னை நகரில் காய்கறி பயிரிட சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** இப்போது காய்கறிகளின் விலைகூட அதிகமாக ஏறிக் கொண்டே போகிறது. சென்னை நகரில் ஆடி மாதத்தில் நல்ல சீசனாக இருக்கும் நேரத்தில் பங்களாக்களில் தற்போது மலர்ச் செடிகளை வளர்ப்பதைக் குறைத்துக் கொண்டு காய்கறிகளை பயிரிட வேண்டுமென்பதற்காக ஒரு தீவிர திட்டத்தை அரசு கொண்டு வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** காய்கறி பயிரிட ஆடி மாதத்திற்கு என்று எந்தவித சிறப்புத் திட்டமும் கிடையாது. சென்னை நகரில் வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிட ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் சர்க்கார் போட்ட திட்டம் சரிவர இயங்கவில்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமைச்சர்களுடைய பங்களாக்களில் அதிகமான காலி இடங்கள் இருக்கின்றன. அங்கே காய்கறி பயிர் செய்து நியாய விலைக் கடைகளில் விற்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அமைச்சர்கள் இருக்கும் இடங்களில் காய்கறிகள் மாத்திரமல்ல, எல்லாப் பயிர்களுமே பயிரிடப்படுகிறது. அங்கு அடிக்கடி பல அங்கத்தினர்களும் மற்றவர்களும் வருகிற காரணத்தால் என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வசதியாக இருக்கும் என்று

காரணத்தால் பயிரிடப்படுகிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் என்னுடைய இடத்தில் கூட கேழ்வரகு நட்டிருக்கிறது; சோளம் போடப்பட்டிருக்கிறது. பருப்பு வகைகள் போடவும் பரீட்சார்த்தமாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அங்கத்தினர் விரும்பினால் அதைப் பார்த்து தங்களுடைய இல்லங்களிலும் அந்த முறையைக் கையாளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய கேள்வி, அங்கத்தினர்களுக்குக் கொஞ்சம் கொடுப்பார்களா என்பது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அமைச்சர்கள் வீட்டில் கேழ்வரகு போட வேண்டிய அவசியம் கிடையாது. சென்னை நகரத்தில் வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவை எக்கச்சக்க மாக விலை விற்கின்றன என்பது அமைச்சர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆகவே, காய்கறிகளை அமைச்சர்கள் இல்லங்களில் போட்டு நியாய விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அமைச்சர்கள் இருக்கும் பகுதி எப்படிப்பட்ட பகுதி என்பது கனம் அங்கத் தினர்களுக்குத் தெரியும். உப்புத் தண்ணீர் நிறைந்த பகுதி. அங்கு கேழ்வரகுதான் வருமே தவிர, மற்ற காய்கறிகள் வராது.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, is the Government aware that there is steady increase in the prices of vegetables in Madras City and what action the Government is proposing to take to bring down the prices?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்போது குளிர் பதனிடும் நிறுவனம் ஒன்று ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. விரைவில் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன. அது முடிந்தவுடன் ஊட்டியில் இருந்தும், மற்றப் பகுதிகளில் இருந்தும் காய்கறிகளைக் கொண்டு வந்து வைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போது காய்கறிகள் சூப்பர் அங்காடியில் மட்டுந்தான் நியாய விலையில் விற்கப்படுகிறது. அங்கு போய் வாங்கி வரவேண்டுமென்றால் போய் வரச் செலவு காய்கறி விலையைப் போல் இரண்டு மடங்கு ஆகிவிடுகிறது. ஆகவே, காய் கறிகளை எல்லா கோவாப்பரேட்டிவ் சொசைடிகள் மூலமாகவும் நியாய விலையில் விற்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அந்தக் காய்கறிகள் வந்தவுடன் அதுபற்றிக் கவனிக்கப்படும்.



### தமிழ்நாடு உழவர்கள் குழு

* 251 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகள் குழு ஒன்றைப் பிற மாநிலங்களின் விவசாயப் பணிகளை அறிந்து வருவதற்காக அனுப்பி வைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

### *Building for Training School for Women at Vellore*

• 216 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have undertaken the construction of a two storeyed building in the Government Training School for Women at Vellore; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஆம். கட்டடம் கட்டுவதற்கான செலவிற்காக ரூ. 2.60 லட்சம் 1969-ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கட்டடம் கட்டப்பட்டு வேலூர் அரசினர் மகளிர் இடைநிலை பயிற்சி தலைமை ஆசிரியைக்கு பொது மராமத்துத்துறை யினரால் 28—4—71-ல் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் பதினாறு வகுப்புகள் நடத்த கூடுதலான வசதி அளிக்கப்பட்டுள்ளது.

### மாயூரத்திலுள்ள ஏ. வி. சி. கல்லூரிக்கு மானியம்

* 217 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி- உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72-ம் கல்வி ஆண்டில் மாயூரம் ஏ.வி.சி. கல்லூரி அரசினரிடம் கோரியுள்ள மானியத்தொகை எவ்வளவு?

(இ) கடன் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1970-71-ம் ஆண்டுக்கான கல்வி மானிய முன்பணமாக ரூ. 1,08,300. புகுமுக வகுப்பு சம்பள ஈட்டு மானியம் 1971-72 (இரண்டு தவணைகளுக்கு) முன்பணமாக ரூ. 81,000. ஆக மொத்தம் ரூ. 1,92,300 கொடுக்கப் பட்டிருக்கிறது.

(இ) கடன் கேட்டு எவ்வித விண்ணப்பமும் வரவில்லை.

## உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடம்

* 218 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், விஜயாபுரம் உயர்நிலைப் பள்ளி கட்டடக் குழுவிடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கு 11—6—71-ம் தேதியிட்ட விஞ்ஞான கூடம் பற்றி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளியின் விண்ணப்பத்தை பரிசீலித்ததில், மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததாலும், மற்ற பல பள்ளிகளில் அதிகமான எண்ணிக்கை இருந்தும் அறிவியல் சாதனங்கள் குறைவாக இருப்பதன் காரணமாகவும் இந்த ஆண்டு மேற்கண்ட உயர்நிலைப் பள்ளியை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நகரத்தை ஒட்டியிருக்கிற கிராமங்களில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்கள் நகரத்திற்கு வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் விஞ்ஞானக் கூடம் இருக்குமானால், ஆங்காங்கு இருக்கும் கிராம மக்கள் ஆங்காங்கு இருக்கும் அந்தப் பள்ளிகளிலேயே பயிலுவதற்கு வாய்ப்பு இருக்கும். அந்தப் பள்ளிக்கூடங்களே பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலித்து விஞ்ஞானக் கூடங்கள் அமைத்துக்கொண்டால், அதற்கு அரசாங்கம் உதவியளிக்க முன்வருமா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கிற முழு செலவையும் அரசே ஏற்றுக்கொண்டு மானியம் வழங்குகிறது. கட்டடம் கட்டுவதற்காக ரூ. 25,000/-ம், கருவிகள் வாங்குவதற்காக ரூ. 15,000/-ம் கொடுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 60-70 பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கு வசதி செய்யப்படுகிறது. அந்த வகையில் 500 மாணவர்களுக்கு மேல் உள்ள பெரிய பள்ளிகள் —1000-1500 மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகள்—என்று பல பள்ளிகள் இருக்கின்றன, அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இல்லாத பெரிய பள்ளிகளுக்கு முதலில் இந்த வசதி செய்து தரப்படுகிறது. குறிப்பிட்ட பள்ளிக்கு போதுமான அளவு மாணவர்கள் இல்லாத காரணத்தாலும், அதிகப்படியான மாணவர்கள் உள்ள பள்ளிக்கு முதலிடம் அளிக்கவேண்டிய காரணத்தாலும், முறையோடு இவற்றை ஏற்படுத்திக் கொண்டு வருகிற காரணத்தாலும், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தக்குறை நீங்க வழியேற்படும்.





* 219 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லாலாப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 6—1—1969-ல் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

## பள்ளி, கல்லூரிகளில் பாடமுறை

* 220 வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி இவைகளில் பகுத்தறிவு, விஞ்ஞான வளர்ச்சியினை போதிக்கும் வகையிலும், அதற்கு முரணான கொள்கைகளைப் பரப்பாத வகையிலும் பாடமுறை களைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அறிவியலுக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்தவகையில் பாடபுத்தகங்கள் அமைய வேண்டுவதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இம்மாதிரியான உயர்நிலைப் பள்ளிகளிலே அறிவியலுக்கும், பகுத்தறிவுக்கும் ஒத்த வகையில் பாடப்புத்தகங்கள் இருக்கக்கூடிய நேரத்தில், முக்கிய மாக காலஞ்சென்ற தலைவர்கள் ஜீவா, பாரதிதாசன், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் போன்றவர்களின் பாடல்களும், அவர்களுடைய கருத்துக்களும் பள்ளிப் பாடப்புத்தகங்களில் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தப் பாடப்புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதற்கான முறை ஓரளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிக்குழு அமைத்து, ஒவ்வொரு துறையிலும் உள்ள வல்லுநர்கள் அவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்து வருகிறார்கள். பொதுவாகவே, நாட்டுக்கு உழைத்த தலைவர்கள், உலகுக்கு உழைத்த உத்தமர்கள், வரலாற்று சார்புமிக்கவர்கள், புலவர்கள், நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்களின் வரலாறுகள் ஆகியவைகூட பாடப்புத்தகங்களில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் அமைக்கப்பட்டிருக்கும் குழு ஆராய்ந்து முறையோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசு பகுத்தறிவு, விஞ்ஞான அறிவு ஆகியவற்றை வளர்ப்பதற்காக வைத்திருக்கும் முறையைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தேசிய உணர்வு, உள்ளுணர்ச்சி வாழ்க்கை உண்மைத் தத்துவங்கள் ஆகியவற்றை உணர்த்தும் வகையில் கல்வியை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மொழிப் பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையிலும் கருத்துக்கள் அடங்கிய பாடங்கள் பாடப் புத்தகங்களில் பொதுவாகத் தரப் பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கருத்துக்களைத் தொகுத்து வருகிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, பள்ளிகளில் முதல் வகுப்பில் விஞ்ஞான வகுப்பில் பாடங்கள் நடத்தப் படுகிறபோது சந்திரகிரஹணம் ஏற்படுவதற்கான காரணம் பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் ஏற்படுகிறது என்று சொல்லித் தருகிறார்கள். ஆனால், அடுத்த வகுப்பில் தமிழ் ஆசிரியர் பாடம் நடத்துகிறபோது பாம்பு போய் சந்திரனைக் கவ்விக் கொள்வதால் சந்திர கிரஹணம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்படி மாணவர்களுடைய மனதில் சின்ன வயதிலேயே குழப்பங்கள் ஏற்படுத்த வேண்டுமா? அப்படிப்பட்ட பாடங்கள் தேவைதானா ? பகுத்தறிவுப் பாடங்களை மட்டுமே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று அரசு உத்திரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதல் வகுப்பிலே அறிவியல்பற்றிச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இரண்டாவது வகுப்பிலே அது கட்டுக்கதை என்று சொல்லி, அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, இப்போது கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தமிழ்ப் பாட புத்தகங்களில் கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், வில்லிபுத்தூரார் புராணம் ஆகியவற்றை இலக்கியங்களாக வைத்திருக்கிறார்கள். புலவர் குழந்தை அவர்கள் எழுதிய ராவண காவியம் போன்ற மறுமலர்ச்சி இலக்கியங்களும் பாட புத்தகமாக வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். இன்னென்ன பாடங்களைத்தான் வைக்கவேண்டுமென்று யாருக்குமே அரசு உத்தரவிட, ஆணையிட முடியாது. அந்தந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் அடங்கிய குழு அந்தப் பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிறது. மாணவர்களுடைய அறிவு வளர மிகவும் உறுதுணையாக இருக்கும் இலக்கியங்களைத்தான் அந்தக் குழுக்கள் தேர்ந்தெடுக்கின்றன. ராவண காவியம் போன்ற நூலுக்கு இருந்த தடை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அது பாட



புத்தகமாக வைத்துக்கொள்ள பொருத்தமா, இல்லையா. எடுத்துக் கொள்ளலாமா, கூடாதா என்பதைப் பற்றி அந்தக் குழுதான் ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கவேண்டும்.

**Thiru R. PONNAPPA NADAR :** Sir, there is a growing feeling that there is a fall in the standard of collegiate education. So is there any proposal to modernise the syllabus in the colleges and also to see that improved standard of education is imparted at a high level ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்லூரிகளிலே பாடமுறைகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டு மென்று பல்கலைக்கழகத்தினர் ஓரளவுக்கு பாடத் திட்டங்களைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள். புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்சி., ஆகிய வகுப்புகளில் இம்மாதிரி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பள்ளிப் பாடங்கள் ஓரளவுக்குப் பயன்படக் கூடிய வகையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மற்ற பல்கலைக்கழகங்களை விட—அதற்கு ஈடாக—ஓரளவுக்கு மேலாக —பாடங்கள் இருக்கவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிப் படிப்பிலும், கல்லூரிப் படிப்பிலும் நல்ல சீர்திருத்தத்தை காண்பதற்கு அரசு எடுத்துள்ள முயற்சிகள் எல்லோருக்கும் தெரியும். அதன் முடிவு இந்த பள்ளி இறுதி ஆண்டுக்குள் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அடுத்த ஆண்டுக் குள்ளாக அதைக்கொண்டு வரவேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அவர்கள் அறிக்கை தந்து, மறுபடியும் விற்பன்னர்கள், வல்லுநர்கள் குழு அதைப் பரிசீலனை செய்து, அவர்கள் ஆய்வு செய்த பிறகு முடிவு எடுக்கவேண்டுமென்று அரசு எண்ணியிருக்கிற காரணத்தால், எடுத்த எடுப்பிலேயே அதைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட முடியாது. அதோடு அதை பொதுமக்களின் கருத்துக்கும், கல்வித்துறையைச் சார்ந்த வல்லுநர்களின் பார்வைக்கும் வைத்து, அவர்களின் ஆலோசனை கேட்ட பிறகு அடுத்த ஆண்டு கொண்டு வரலாம், அல்லது அப்படிக் கொண்டு வர முடியாவிட்டால், அதற்கு அடுத்த ஆண்டு கொண்டு வர முயற்சி செய்யப்படும். எந்த அளவுக்குக் கொண்டு வர முடியுமோ அந்த அளவுக்குக் கொண்டு வர இந்த அரசு தக்க நடவடிக்கைகளை, முயற்சிகளை எடுத்து வருகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பகுத்தறிவுப் பாடங்கள், வரலாற்றுத் தலைவர்களின் பாடங்கள் ஆங்காங்கு இடம்பெறும் என்று சொன்னார்கள். பகுத்தறிவு என்று சொன்னாலே, தந்தை

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசு பகுத்தறிவு, விஞ்ஞான அறிவு ஆகியவற்றை வளர்ப்பதற்காக வைத்திருக்கும் முறையைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் தேசிய உணர்வு, உள்உணர்ச்சி வாழ்க்கை உண்மைத் தத்துவங்கள் ஆகியவற்றை உணர்த்தும் வகையில் கல்வியை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிப் பற்று, நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையிலும் கருத்துக்கள் அடங்கிய பாடங்கள் பாடப் புத்தகங்களில் பொதுவாகத் தரப் பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் கருத்துக்களைத் தொகுத்து வருகிறார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பள்ளி களில் முதல் வகுப்பில் விஞ்ஞான வகுப்பில் பாடங்கள் நடத்தப் படுகிறபோது சந்திரகிரஹணம் ஏற்படுவதற்கான காரணம் பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் ஏற்படுகிறது என்று சொல்லித் தருகிறார்கள். ஆனால், அடுத்த வகுப்பில் தமிழ் ஆசிரியர் பாடம் நடத்துகிறபோது பாம்பு போய் சந்திரனைக் கவ்விக் கொள்வதால் சந்திர கிரஹணம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இப்படி மாணவர்களுடைய மனதில் சின்ன வயதிலேயே குழப்பங்கள் ஏற்படுத்த வேண்டுமா? அப்படிப்பட்ட பாடங்கள் தேவைதானா ? பகுத்தறிவுப் பாடங்களை மட்டுமே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று அரசு உத்திரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன : முதல் வகுப்பிலே அறிவியல்பற்றிச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இரண்டாவது வகுப்பிலே அது கட்டுக்கதை என்று சொல்லி, அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இப்போது கல்லூரி களிலும், பள்ளிகளிலும் தமிழ்ப் பாட புத்தகங்களில் கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், வில்லிபுத்தூரார் புராணம் ஆகியவற்றை இலக்கியங்களாக வைத்திருக்கிறார்கள். புலவர் குழந்தை அவர்கள் எழுதிய ராவண காவியம் போன்ற மறுமலர்ச்சி இலக்கியங்களும் பாட புத்தகமாக வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். இன்னென்ன பாடங்களைத்தான் வைக்கவேண்டுமென்று யாருக்குமே அரசு உத்தரவிட, ஆணையிட முடியாது. அந்தந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் அடங்கிய குழு அந்தப் பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து பரிந்துரை செய்கிறது. மாணவர்களுடைய அறிவு வளர மிகவும் உறுதுணையாக இருக்கும் இலக்கியங்களைத்தான் அந்தக் குழுக்கள் தேர்ந்தெடுக்கின்றன. ராவண காவியம் போன்ற நூலுக்கு இருந்த தடை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அது பாட





புத்தகமாக வைத்துக்கொள்ள பொருத்தமா, இல்லையா, எடுத்துக் கொள்ளலாமா, கூடாதா என்பதைப் பற்றி அந்தக் குழுதான் ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கவேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, there is a growing feeling that there is a fall in the standard of collegiate education. So is there any proposal to modernise the syllabus in the colleges and also to see that improved standard of education is imparted at a high level ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரிகளிலே பாடமுறைகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டு மென்று பல்கலைக்கழகத்தினர் ஓரளவுக்கு பாடத் திட்டங்களைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள். புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்சி., ஆகிய வகுப்புகளில் இம்மாதிரி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பள்ளிப் பாடங்கள் ஓரளவுக்குப் பயன்படக் கூடிய வகையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மற்ற பல்கலைக்கழகங்களை விட—அதற்கு ஈடாக—ஓரளவுக்கு மேலாக —பாடங்கள் இருக்கவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிப் படிப்பிலும், கல்லூரிப் படிப்பிலும் நல்ல சீர்திருத்தத்தை காண்பதற்கு அரசு எடுத்துள்ள முயற்சிகள் எல்லோருக்கும் தெரியும். அதன் முடிவு இந்த பள்ளி இறுதி ஆண்டுக்குள் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அடுத்த ஆண்டுக் குள்ளாக அதைக்கொண்டு வரவேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் அவர்கள் அறிக்கை தந்து, மறுபடியும் விற்பன்னர்கள், வல்லுநர்கள் குழு அதைப் பரிசிலனை செய்து, அவர்கள் ஆய்வு செய்த பிறகு முடிவு எடுக்கவேண்டுமென்று அரசு எண்ணியிருக்கிற காரணத்தால், எடுத்த எடுப்பிலேயே அதைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட முடியாது. அதோடு அதை பொதுமக்களின் கருத்துக்கும், கல்வித்துறையைச் சார்ந்த வல்லுநர்களின் பார்வைக்கும் வைத்து, அவர்களின் ஆலோசனை கேட்ட பிறகு அடுத்த ஆண்டு கொண்டு வரலாம், அல்லது அப்படிக் கொண்டு வர முடியாவிட்டால், அதற்கு அடுத்த ஆண்டு கொண்டு வர முயற்சி செய்யப்படும். எந்த அளவுக்குக் கொண்டு வர முடியுமோ அந்த அளவுக்குக் கொண்டு வர இந்த அரசு தக்க நடவடிக்கைகளை, முயற்சிகளை எடுத்து வருகிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பகுத்தறிவுப் பாடங்கள், வரலாற்றுத் தலைவர்களின் பாடங்கள் ஆங்காங்கு இடம்பெறும் என்று சொன்னார்கள். பகுத்தறிவு என்று சொன்னாலே, தந்தை

பெரியாரைத்தான் இந்தத் தலைமுறையில் குறிக்கும். அப்படிப் பட்ட தலைவருடைய வரலாற்றை, அவரது நல்ல கொள்கைகளை விளக்கும் வகையில் பாடங்கள் வைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலேயே கூறியபடி அரசாங்கத்திடம் அந்த அதிகாரம் இல்லை. நல்ல கருத்துக்கள், நல்ல தலைவருக்கு உரிய இடம் அளிப்பதற்கு, அந்தக் குழுக்கள் ஆராய்ந்து முடிவு செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, விஞ்ஞானப் பாடங்களில், கணக்குப் பாடங்களில் பிற மாநிலங்களைவிட இந்த மாநிலம் பின் தங்கியிருப்பதாகக் கூறுகிறார்கள். பிற மாநிலங்களை விட நம் மாநிலம் இந்தப் பாடங்களில் முன்னிலையில் இருப்பதற்கு நல்ல பாடத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா? அதோடு மட்டுமல்லாமல், முன்பெல்லாம் மாணவர் களுக்கு 'மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்' என்று ஒரு வகுப்பு ஒதுக்கி அதிலே நல்ல போதனைகளைச் சொல்லிக் கொடுப்பார்கள். அதை மீண்டும் புகுத்துவதற்கு, மாணவர்களிடையே நல்ல ஒழுக்க நெறியை வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கணக்கியல், அறிவியல் பாடங்களை மாற்றியமைக்கும் முறையில் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. 1 முதல் 5-வது வகுப்பு வரையில் உள்ள நிலைமைகளை ஆராய தலைமை ஆசிரியர்கள் சங்கத்தில் சொல்லப்பட்டது. அவர்களும் இப்பொழுது ஓரளவுக்கு நல்ல முறையில் இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். ஒழுக்கப் பாடங்கள் போதிக்க தனியாக வகுப்பு இருக்கிறது. ஆனால் அது வேறு வகையில் பயன்படுத்தப் படுகிறது. அப்படி இல்லாமல் ஒழுக்கப் பாடத்திற்குப் பயன் படுத்தப்படவேண்டும் என்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாடத் திட்டங்களைச் சரிசெய்ய குழுக்கள் இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். ஏனைய பல்கலைக்கழகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய பல்கலைக்கழகத்தில் 19-ம் நூற்றாண்டு எண்ணங்கொண்ட குழுக்களே இருக்கின்றன. டெல்லி போன்ற பல்கலைக்கழகங்களில் வளர்ந்தோங்கி வரும் பௌதிகம் போன்ற பிரிவுகளில் அவ்வப்போது ஏற்படும் முன்னேற்றங்களை உள்ளடக்கிய அளவில் செய்யப்படுகின்றன. ஆனால் நம்முடைய பல்கலைக்கழகத்தில் இந்தியாவில் மற்ற பல்கலைக்கழகங்கள் ஒப்புக் கொண்ட பிறகே, நிதானமாக பாடத் திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. அதனாலேயே நாம் பின் தங்குகிறோம். ஆகவே தான் நம்முடைய சாதனை அகில இந்திய போட்டியில் பின்தங்கி இருக்கிறது என்பதும் உண்மை. ஆகவே, காலப்போக்கை நோக்கி முற்போக்கானவர்களைக் கொண்ட குழுக்களை அமைக்க அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எல்லா வகையிலும் அப்படித்தான் என்று சொல்ல முடியாது. மருத்துவத் துறையில், பொறியியல் துறையில், நம் மாநிலம் முதன்மையாகவே இருக்கிறது. தொழில் நுட்பத் துறையிலும், அகில இந்தியக் கேடயத்தை இரண்டு, மூன்று ஆண்டுகளாக நம் மாநிலமே பெற்றுவருகிறது. நம் மாநிலத்தில் பயிற்சி பெறுபவர்கள் முதலாவதாக இருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இருந்துவரும் அறிவியல் பாடம் போன்றவற்றை மாற்றி அமைக்க வேண்டும் என்று சென்ற ஆண்டு பல்கலைக் கழகம் முயற்சி எடுத்து, பலவகைகளில் மாற்றங்கள் செய்திருக் கிறது. 'ரிப்ரஷர்' கோர்ஸ் என்று வைத்து, ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டம் போட்டு, அதற்கு அரசாங்கமும் 1 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்து, 20, 25 நாட்களுக்கு மறு பயிற்சி தந்து, தயாரிக்கும் அளவில் முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு முதல் புதிய பாடத் திட்டங்கள் அமுலுக்கு வந்து, விரைவில் செம்மைப்படும் சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. அந்த முறைகளை சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டிருக்கின்றன.

**THIRU M. A. LATHEEF:** It seems that there has been growing sense of indiscipline and irresponsibility on the part of the student community and I am told it happens because of lack of faith they have in the higher and moral values of life. This was due to the fact that there has been an optional study of the moral and religious education. Will the Government therefore consider to make them compulsory for one hour at least in a week?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதற்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்றாலும், மாணவர்கள் அமைதி யின்மைக்குப் பல்வேறு காரணங்கள் அமைந்து விட்டிருக்கின்றன. இது இங்கு மட்டுமில்லாமல் உலகம் பூராவிலும் பல்வேறு வகைகளில் ஏற்பட்டிருக்கிறது. அதைச் சமாளிக்க முடியாத நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைச் சமாளிக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். முன்பே கூடச் சொன்னேன். பல இடங்களில் ஒழுக்கப் பாடங்களுக்கு பீரியடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வேறு வகைகளில் பயன்படுத்தி விடுகிறார்கள். பள்ளிகளில் நிச்சயமாக வாரத்தில் ஒரு பீரியட் என்று இருப்பதைச் செம்மைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**DR. H. V. HANDE:** Is it not a fact that quite a number of student organisations have given representation to the University for a change of syllabus and if it is so, may I know the details thereof? In recent times an indication has been given that they are going to reduce the 11 year school course into 10 year school course. In certain States like Kerala, it is so and from higher secondary they go direct to colleges for degree course. May I know whether this Government has got an idea

to completely change the number of years for the school course and if so, whether they would change the syllabi according to the wishes of the students?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாணவர்கள் அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் தந்தார்கள் என்று இல்லை. பொதுவாகவே, சிலபஸில் மாற்றம் வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் அவற்றை ஆராய்ந்து வருகிறார்கள். 10-வது வரையிலா, 11-வது வரையிலா என்பதையெல்லாம் ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுப்பார்கள். திட்டக் குழுவின் அடிப்படையில் 'டாஸ்க் போர்ஸ்' என்கிற பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஆராய்ந்து அறிக்கை கொடுத்த பிறகு அரசாங்கம் அதை ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

### தமிழ்நாட்டில் பொம்மைக் கண்காட்சி

* 221 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பொம்மைக் கண்காட்சி அமைக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எங்கு எப்போது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அரும்பொருட்காட்சி மனையில் புதிதாக கட்டடம் கட்டி இப்பொம்மைக் கொலு வைக்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஊராட்சி வளர்ச்சிக்காகத் தனித்துறை

* 222 வினா.—திரு. க. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் உள்ள சமுதாய-நலத்திட்ட அமைப்பைப் பிரிந்து தனி அதிகாரியின்கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம் மாவட்ட அளவிலும் கோட்ட அளவிலும் ஊராட்சி வளர்ச்சிக்காகத் தனித்துறை ஒன்று ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.



### மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியம்

* 223 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக எண்ணிக்கையுள்ள ஊராட்சி மன்றங்களடங்கிய ஊராட்சி ஒன்றியம் எது?

(இ) குறைந்த எண்ணிக்கையுள்ள ஊராட்சி மன்றங்களடங்கிய ஊராட்சி ஒன்றியம் எது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம். அதில் 74 ஊராட்சிகள் அடங்கியுள்ளன.

(இ) கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பம் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இம் மூன்று ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பது ஊராட்சிகள் அடங்கியுள்ளன.

### வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

* 224 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) T வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நீரேத்தான், தாதம்பட்டி, போடிநாயக்கன்பட்டி, குலசேகரன் கோட்டை ஆகிய ஊராட்சி மன்றங்கள் ஒரே ஊராக T. வாடிப்பட்டியில் உள்ளனவா?

(இ) ஆம் எனில், இந்நான்கு ஊராட்சி மன்றங்களையும் ஒன்றாகச் சேர்த்து T வாடிப்பட்டி எனும் பேரூராட்சி மன்றத்தை ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) T வாடிப்பட்டிக்கு ஓர் பேரூராட்சி அமைப்பதற்கான குறிப்புரை பரிசீலனையில் உள்ளது.

### அரிசன ஆணையர்கள்

* 225 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களாக தாழ்த்தப்பட்டவர்கள் தற்போது எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 22 பேர்கள்.

[1972 பிப்ரவரி 1

* 226 விளு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள நகராட்சிகளில் உள்ள ஆணையர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது எத்தனை பேர்?

## கட்டளை-ரெங்கநாதபுரம் சாலை

* 227 விளு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-திருச்சி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கட்டளை-ரெங்கநாதபுரம் சாலை எப்போது ஜல்லி ரோடாகப் போடப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலைமையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இச்சாலை 1963-64-ம் ஆண்டில் சல்லி ரோடாக போடப்பட்டது.

(இ) ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இச்சாலையை சரிவர பராமரிக்க இயலவில்லை.

## மாவட்டங்களில் மீன் விற்பனை நிலையங்கள்

* 232. விளு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப்பாரா ;

மாவட்டந்தோறும் அரசின் சார்பில் மீன் விற்பனை நிலையங்கள் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

## உழவர்களுக்கு குடியிருப்புத் திட்டம்.

* 252 விளு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வீடு கட்ட அரசாங்கம் இவ்வாண்டு பணம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்காக தனிப்பட்ட கூட்டுறவு வீடு கட்டும்



1972 பிப்ரவரி 1]

சங்கம் கிடையாது. அவர்கள் கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களில் அங்கத்தினர்களாகி அத்திட்டத்தின்படி அளிக்கப் படும் கடன் வசதி பெறலாம்.

(இ) இவ்வாண்டு பத்து லட்சம் ரூபாய் கிராம வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கடன் வழங்க ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இப்பொழுது கிராமங்களிலுள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2 சம்பளம் வருகிறது. அவர்களுக்கு அது உணவுக்கே சரியாகி விடுகிறது. வீடுகள் கட்ட முடியவில்லை. சொந்த இடம் இருந்தாலும், வீடு கட்ட அவர்களுக்கு வசதிகள் இல்லை. கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களோ மற்றவை களோ உதவிகள் செய்வதில்லை. வட்ட அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ வீடுகள் கட்டி விவசாயத் தொழிலாளி களுக்குக் கொடுக்க கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, வீட்டுவாரியத்தின் மூலமாக, எல்.ஐ.சி. லோன் வாங்கி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இராசாரம் :** தலைவர் அவர்களே, விவ சாயிகளுக்கு வீடு கட்டும் திட்டம் என்று தனியாக இல்லாவிட்டா லும், கிராமப் புறங்களில் விவசாயிகளுக்கு கட்டப்படுகின்றன. வீட்டு வாரியத்தின் மூலம் தினசரி ஒரு ரூபாய் வீதம் ஐந்தாண்டு களுக்குக் கட்டுகிறவர்களுக்கு என்று திட்டங்கள் வெளியிட்டு, நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். அதில் விவசாயிகள் பங்கு பெறலாம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர் கள் விவசாயிகள் பங்கு பெருகிறார்கள் என்று சொன்னார்கள். விவசாயி தொழிலாளர்கள் பொறுத்த வரையில் அவர்கள் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்பதை அரசு ஒப்புக் கொண்டுதான் விவசாயி தொழிலாளர்களுக்கு மனை கட்டித் தருகின்ற திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக எல்லா தொழிலாளர்களைப்போல் சப்சிடைஸ்டு ஹவுசிங் ஸ்கீம் அடிப்படையிலே கட்டித்தர யோசனை அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அப்படிப் பட்ட திட்டங்கள் எதுவும் தற்போது இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** விவசாயக் கூலிகள் அதிகமாக இருக்கும் மாவட்டம் தஞ்சை மாவட்டம் தான். அவர்களுக்கு பரீட்சார்த்தமாக எப்படி சென்னை நகரில் வீடு கட்டித்தருகி றோமோ அதே மாதிரி வீடு கட்டி—கொஞ்சம் கொஞ்சமாக நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொடுப்பது விவசாயிக்கு முடியாது. சம்பா திப்பதே இரண்டு ரூபாய் என்றால் எப்படி ஒரு ரூபாய் கொடுப் பது. எதாவது ஒரு வழி செய்து அந்த விவசாயிகளுக்கு வீடு கட்டித்தருமா இந்த அரசு என்று கேட்க விரும்புகிறேன்.

[1972 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, கிராமங்களில் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. நூரல் ஹவுசிங் ஸ்கீமும், இன்னொன்று கிராமப்புற வீட்டு வசதி வீடு கட்டும்' சங்கமும். 2 கோவாபரேடிவ் சங்கங்களை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். ரூபாய் மூன்று ஆயிரத்தில் வீடு கட்டித் தருகிறோம். அந்த மூன்று ஆயிரம் வீடு கட்டத் தருவதை 20 ஆண்டு காலத்தில் அவர்கள் அந்த வீட்டினுடைய தொகையை தவணைகளாக செலுத்துகின்ற முறையை இந்த கிராமப்புற கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வைத்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் நிறைய கிராமங்களில் பதிவு ஆகி இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே. விவசாய தொழிலாளர்கள் அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டப்படும் நிலையில் இருக்கும் போது, குறிப்பாக கணபதிய்யா பிள்ளை கமிஷன் குறிப்பிட்டதைப் போல் ரூ. 300 தான் விவசாயத் தொழிலாளர்களின் வருமானம். அப்படி இருக்கும்போது அன்றாடம் ஒரு ரூபாய் எப்படி கட்டுவார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து இருப்பார் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நாங்கள் ஒரு ரூபாய் கட்டும் அளவுக்குத்தான் சொல்லியிருக்கிறோம். ஆனால் அந்த விவசாயியே ஒரு ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை.

**திரு. இராம அரங்கண்ணல் :** தலைவரவர்களே, தினசரி ஒரு ரூபாய் சேமிக்க வேண்டும் என்கிற திட்டம் மத்திய தர மக்களுக்கு போடப்பட்ட திட்டம். விவசாய தொழிலாளர்களுக்கு ஒரு தனியான திட்டம் என்று இரண்டையும் பிரித்துச் சொல்வது தான் நோக்கமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இது எல்லோருக்கும் வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணத்தால் சில திட்டங்களை தமிழக அரசு தீட்டிக்கொண்டு இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளும் வகையில் அந்த வீடு கட்டும் திட்டம்தான் இந்த ரூ. 3,000 வீடு கட்டிக் கொள்ளும் திட்டம். கிராமப் புறங்களில் நாங்கள் பட்டாக்களை வழங்கி வருகிறோம். பட்டா வழங்கப்பட்ட மக்களைப் பொருத்த வரையில் மானியம் இலவசமாக கிடைக்கும் வகையில் திட்டங்களை இந்த அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. அதற்கு மத்திய அரசு தந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற வீட்டு மனைகளை அவர்களுக்கு உரிமை ஆக்குகின்ற திட்டம் அமுலுக்கு



1972 பிப்ரவரி 1]

வந்திருக்கிறது. எனவே இருக்கின்ற வீட்டு மனைகளில் வீடு கட்டித் தருகின்ற திட்டம் அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தற்போது வீட்டு மனைகளை தந்துகொண்டு இருக்கிறோம். வீடு கட்டும் திட்டம் 203 கிராமங்களில் உருவாகி இருக்கிறது, என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருத்தணியில் சுற்றுலா மாளிகை

* 253 வினா.—திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் போற்றும் மலைக்கோயில் பெற்றுள்ள திருத்தணியில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே. தமிழகத்திலே அதிக வருமானம் உள்ள 6 கோயில்களில் திருத்தணி ஒன்று என்ற காரணத்தால் நாளுக்கு நாள் பக்தர்களின் எண்ணிக்கை பெருகுகின்ற காரணத்தாலும் அங்கே ஒரு பயணிகள் விடுதியை அமைக்க அரசு இனியாவது முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சுற்றுலா வாரியம் மூலமாக கட்டடம் கட்டப்பட்டு இருக்கிதா, என்றுதான் கேள்வி. அதற்கு சுற்றுலா இல்லம் இப்போது தேவையில்லை. என்கின்ற எண்ணத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் அறநிலை பாதுகாப்பு இலாகாவின் மூலமாக அங்கே வருகிற பக்தர்கள் தங்குவதற்கு நல்ல வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, சுற்றுலாத் துறை மூலமாக திருத்தணியிலே அப்படி சுற்றுலா இல்லங்களை அமைக்க விரும்பாவிட்டால், அதை செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காட்டிற்கு ஏராளமான பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அது தீவாக இருக்கிறது. அங்கேயாவது இந்த சுற்றுலா இல்லம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தற்போது அப்படிப்பட்ட பிரச்சினை அரசினுடைய கவனத்தில் இல்லை. அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்ட எண்ணங்களை அரசுக்கு தெரிவிப்பாரானால் அதை விரைவிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1972 சனவரி 1

**திருமதி த. ந. அனந்தநாயகி:** லட்சக்கணக்கான பக்தர்கள் இப்படி க்ஷேத்திரங்களுக்கு போய் வருகிறார்கள். ஆகவே, அந்த க்ஷேத்திரங்களில் அதிக கவனம் செலுத்தி அங்கே பாதாள சாக்கடை, குடி நீர் வசதி போன்றவைகளை செய்து தரவேண்டு மென்ற முறையில் அரசு முயலுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, என்னுடைய இலாகாவில் நான் பார்க்க வேண்டியது சுற்றுலா பயணிகள் தவிர பாதாள சாக்கடை அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வரும் பக்தர்கள் டூரிஸ்டுதான் என்று வைக்கலாம். சமயப் பற்றோடு டூர் செய்கிறார்கள். அவர்களுக்கு கட்டாயம் இந்த வசதிகள் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பக்தர்களை பாதுகாக்கும் முயற்சியிலே பல நல்ல காரியங்கள் தமிழகத்திலே நிறைவேற்றி வருகிறோம். அதிலே சுற்றுலாத் துறையும் பாதுகாத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம்

* 254 **வினா.—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு சந்தனக் கட்டைகள் ஏலம் விட்டதன் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு?

(இ) அது முந்தைய ஆண்டை விட எந்த அளவுக்குக் குறைந்துள்ளது அல்லது அதிகரித்துள்ளது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம் விட்டதன் மூலம் 1970-71 ஆண்டு கிடைத்த வருவாய் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| நிறை | வருவாய் |
|---|---|
| 965 டன்கள் | ரூபாய் 83,04,130-00. |

(இ) 1969-70 ஆண்டு ஏலம் விடப்பட்ட 891 டன்கள் நிறையுள்ள சந்தனக் கட்டைகள் மூலம் ரூபாய் 82,67,862—50 வருவாய் வந்தது. முந்தைய ஆண்டைவிட, 1970-71 ஆண்டில் முன்னைவிட 74 டன்கள் சந்தனக் கட்டைகள் அதிகமான விற்பனை செய்யப்பட்டு அதிக வருமானம் ரூபாய் 36,267—50 கிடைத்துள்ளது.



1972 பிப்ரவரி 1]

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக் கட்டைகள் ஏலம் விடுவதில் கிடைத்த வருமானம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது சந்தனக் கட்டைகள் எந்தெந்த இடங்களில் கிடைத்தன. அப்படி எந்தெந்தக் கடைகளில் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? அதே நேரத்தில் சந்தனக் கட்டைகள் அந்தப் பகுதியில் இருந்து கிடைக்கும் கட்டைகள் மிக அதிகமாக திருட்டுப் போகிறது என்று புகார் இங்கே வந்து கொண்டு இருக்கிறது. அந்த மாதிரி திருடுபோன சந்தனக் கட்டைகளின் மதிப்பு அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானத்தை விட பன் மடங்கு அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. அதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் இருக்கும் சந்தனக் கட்டைகள் மூன்று இடங்களில் விற்கப்படுகின்றன. வட ஆற்காடு, கோவையில் விற்பனையாகிறது. இந்தியாவிலேயே சந்தனக் கட்டை வியாபாரி கள் இருக்கிறார்கள். அந்த சந்தனக் கட்டைகளை அவர்கள் ஏலத்தில் எடுக்கிறார்கள், எந்த விதமான சந்தேகத்துக்கும் இடம் இல்லாமல் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. களவு பற்றி சொல்கிறார். களவு கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றன. சில வழக்குகளில் தண்டனை கொடுத்திருக்கிறார்கள்.

### விவசாயிகளுக்கு மின் கட்டணம் குறைப்பு

* 255 **வினா.—திரு. சி. மணலி கந்தசாமி:** மாண்புமிகு மின் சாரத்தைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகளுக்கும், வறட்சியுள்ள பகுதிகளுக்கும் உள்ள மின் கட்டணத்தை ரத்து செய்ய அல்லது குறைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது சாதாரண விவசாயி களுக்கு 12 பைசா என்று ஏற்றிருக்கிறார்கள். சில விவசாயி கள் 12 பைசா தரக்கூடிய நிலைமையில் இல்லை. இதை குறைக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, நேற் றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு உரையாற்றியபோது மின்சார கட்டணத்திலே உயர்வு இல்லை, என்று தகுந்த காரணம் சொல்லியிருக்கிறார்கள். இதைக் குறைக்கின்ற உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறார். அதனால் நீங்கள் ஒரு வரியிலே பதில் சொன்னால் போதும்.

### மின் துறையில் முடியுருமல் நிலுவையான பணிகள்

* 256 விஞ.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ஆண்டுக்கு மேல் முடிக்கப்படாமல் நிலுவையிலிருக்கும் Work Orders எத்தனை ?

(இ) அதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) 12,450.

(இ) முடிவுருமல் நிலுவையில் இருப்பதற்கான காரணங்களாவன—

(1) பணி ஆணைகளின் கீழ்வரும் பெருந்திட்டங்களில் சில, இன்னும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(2) பெரும்பான்மையான நேர்வுகளில், தொடர்புள்ளவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் தயார் நிலையில் இல்லை.

(3) சிறப்பான. இயல்பான திட்டங்களின் கீழ் ஏற்படும் தேவையைச் சரிக்கட்ட, பகிர்மான மின் மாற்றிகள், மின் கடத்திகள் முதலியன அரிதான பொருள்கள் போதுமான அளவில் கிடைக்காமை.

(4) ரயில் பாதைகளுக்குக் குறுக்காக மேல்நிலை மின் சம்பிகளை அமைக்க ரயில்வே துறையிலிருந்து ஒப்புதல் இன்னும் கிடைக்காமை.

(5) சாலை ஓரங்களில் கம்பங்கள் நடுவதற்கு நெடுஞ்சாலைத் துறை மறுப்புகள் தெரிவித்துள்ளமை.

(6) சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் பிணைய வைப்பீட்டுத் தொகைகள் செலுத்தாமை.

### கார் எண் தகடுகளில் தமிழில் எண்கள்

* 257 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மோட்டார் எண் தகடுகளில் தமிழ் எண்களையும் எழுத அனுமதி அளிக்கும் சட்டமியற்றுவது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

### T. வாடிப்பட்டியில் அரசு பேருந்துகள் நிறுத்துமிடம்

* 258 விஞ—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள T வாடிப்பட்டியினை அரசு பேருந்துகள் நிறுத்துமிடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.





### *Traffic dislocation in Nandanam area*

* 259 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that traffic was dislocated in the Nandanam area in Madras City about 1st September 1971 due to clash between the students and the bus crew; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருவாரூர் கோவில் தேர்

* 260 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

ஓடாமல் இருந்த திருவாரூர் தேரினை ஓட விடுவதற்காக அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஒன்றும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : விலையுயர்ந்த கோயில் தேர்களுக்கெல்லாம் சிலபேர் தீ வைப்பதிலே மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தேர்களையெல்லாம் பாதுகாப்பதற்கு அறநிலைய பாதுகாப்பு இலாகா ஏதாவது நடவடிக்கை எடுக்க விரும்புமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தீ வைப்பதனால் யாருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதுபற்றி நமக்குத் தெரியாது. ஆனால் தீவிபத்துக்களை தடுக்கின்ற வகையிலேயும், அவைகளைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்

### திருமங்கலம் நாடார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் தாக்கப்பட்டதும். பள்ளி மூடப்பட்டதும் குறித்து

MR. SPEAKER : The hon. Member, Thiru K. T. K. Thangamani, has given notice under rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules for adjourning the business of the House to discuss the following matter of urgent public importance :—

'Serious situation in Thirumangalam in Madurai district consequent upon closure from 24th January 1972 of Nadars' High School affecting more than 1,000 students following manhandling of a Teacher by the staff at the instance of Management, and students' protest demonstration.'

[1972 பிப்ரவரி 1

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், தனியாருடைய பள்ளிகளில் என்ன அவலநிலை இருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. எம். பக்ததாஸ் என்ற எம்.இ.எட். M. Ed. பட்டம் பெற்ற ஆசிரியர். 1970-ஆம் வருஷம் நியமிக்கப்பட்டிருக்கிறார். பிறகு 1971-ஆம் வருஷமும் அவர் தொடர்ந்து நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவரிடத்திலே தன்னுடைய குடும்பத்தினுடைய அலுவல் காரணமாக நான் ராஜிநாமா செய்கிறேன் என்று கடிதத்தையும் வற்புறுத்தி வாங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு மே மாதம் இறுதி வரையிலே அவர் அங்கு பணியாற்றுவதற்காக ஏற்கனவே உத்தரவு இருந்திருக்கிறது. அவருக்கு ஒரு டெர்மினேஷன் நோட்டிசைக கொடுத்தவுடனே உடனடியாக அவர் டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனுக்கு மனு செய்திருக்கிறார். அவர் மனு செய்ததற்குப் பின்னால் திடீரென்று இன்றைக்கே நீ வேலையை விட்டுப் போய்விட வேண்டும் என்று அவருக்கு உத்தரவு சாதரா செய்திருக்கிறார்கள். அவர் ஹெட்மாஸ்டரிடத்திலே போய் இம்மாதிரி சட்டவிரோதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களே, ஏற்கனவே மேலதிகாரிகளுக்கு இருக்கக்கூடிய உதவியாளர்களை வைத்துக்கொண்டு 'மேன் ஹாண்டில்' பண்ணியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதை அறிந்த மாணவர்கள் உடனடியாக வெளியே வந்திருக்கிறார்கள். ஆயிரம் மாணவர்கள் வெளியே வந்து, இம்மாதிரி ஆசிரியருக்கே இந்த நிலை ஏற்படும் என்று சொன்னால். மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன நிலை ஏற்படாது என்ற நிலை வந்திருக்கிறது. இன்னும் டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் அவர்களுக்கு பல விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் தொந்தரவுக்கு ஆளாக்கப்படுகிறேன் என்று. அவர் செய்த தவறெல்லாம் இந்தத் தனியார் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிக்கூடத்திலே ஆசிரியர் என்ற முறையில் நேர்மையாகப் பணியாற்றியது தான். அந்தப் பெருந் தவற்றைத்தான் செய்திருக்கிறார். அப்படித் தவறு செய்த காரணத்திற்காக அவர் இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பள்ளி மூடப்பட்டு, ஆயிரம் மாணவர்கள் வரையிலும் பள்ளிக்குப் போகாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே நமக்கு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், பால் கமிட்டி சிபார்சுப்படி தனியார் துறையிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளையெல்லாம் எடுக்கப்போகிறோம் என்று அவை சீக்கிரமாக எடுக்கப்படவேண்டும் என்பதற்கும், இம்மாதிரியாக நேர்மையுள்ள இளம் ஆசிரியர்கள் இப்படி வெளியேற்றப்படக்கூடிய, இந்த தூராக்கிரமமான சம்பவங்களை தடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது நடவடிக்கை எடுக்காது தவறி இருக்கிறது என்று இந்த ஒரு விஷயத்தை நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். ஆகவே, இது விவாதிக்கப்படுமேயானால் இப்படித் தனியார் பள்ளிகளிலேயும், இன்னும் சில சமயத்திலே அரசினர் பள்ளிகளிலேகூட ஏதாவது



1972 பிப்ரவரி 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஒரு காரணத்தாலே ஆசிரியரை பாதிக்கக்கூடிய சம்பவங்கள் ஏற்படுகின்றன. இது மாதிரி மண்டபத்திலேகூட ஏற்பட்டு பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன். இம்மாதிரி பள்ளி மாணவர்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய வகையிலேயும், நியாயமாக இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அநியாயம் விளைவிக்கக்கூடிய வகையிலேயும் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த விவரங்களோடு விவாதிப்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற முறையில் இந்த சபையின் அலுவலை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே. மதுரைமாட்டம் திருமங்கலம் நாடார் உயர் நிலைப்பள்ளி நிர்வாகத்தினர் ஒரு ஆசிரியருடைய வேலை நீக்க அறிவிப்புக் கொடுத்தனர். அதற்கான காரணகாரிய விளக்கம் என்ன என்பதைப்பற்றி நாம் தனியாக ஆராயவேண்டும். அதன் காரணமாக மாணவர்களால் வேலைநிறுத்தம் செய்யப்பட்டு, 24—1—72-ல் இருந்த அந்த மாணவர்கள் பள்ளிக்கு வர மறுத்தனர் என்று குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் பள்ளி கல்வி இயக்குனர் அவர் களுக்கு முறையீடு செய்திருக்கிறார் என்றும் தகவல் கிடைத்திருக் கிறது. அதைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று முழு விவரக் குறிப்புகளும் விசாரணையின் மேல் தெரியக்கூடும். ஆனால் பள்ளிக்கு வர மறுத் தனர் என்ற முறையில் பள்ளித் தலைமை ஆசிரியர் அவர்களும், நிர்வாகத்தினரும் 26-ந் தேதி பெற்றோர்களையும் மாணவர்களுடைய தலைவர்களையும் கூப்பிட்டு வைத்து. நிலைமைகளையெல்லாம் விளக்கி அவர்களோடு பேசினார்கள். 27-ந் தேதி மாணவர்களெல்லாம் கூடி 31—1—1972 முதல் பள்ளிக்கு வருவதாக முடிவெடுத்தார்கள். அதன்படி நேற்று, 24—1—1972 லிருந்து மூடப்பட்ட பள்ளி நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட பள்ளியிலே 1,168 மாணவர்களிலே. 1,096 மாணவர்கள் நேற்று பள்ளிக்கு வந்திருக் கிறார்கள். ஆகவே மூடப்பட்ட பள்ளிகள் திறக்கப்பட்டு நடை பெறுவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆசிரியரின் முறையீட்டின் பேரிலே நியாயமான நடவடிக்கைகளை எடுக்க பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் முறைப்படியான காரியங்களை மேற்கொள்வார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப் பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபற்றி முழு விசாரணையும் விரைவிலே நடத்தி தக்க தீர்ப்பு வழங்குவதற்காக முயற்சிகளை எடுத்துள்ளோம். ஆனால் மூடப்பட்ட பள்ளி திறக்கப்பட்டு வழக்கம்போல பணியாற்றுகிற நிலைமை நேற்று முதல் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இதை மேலே விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

மேலும். டாக்டர் பால் அவர்களுடைய தலைமையின் கீழே அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு சட்ட வடிவு கொடுக்கப் பட்டு, அடுத்த தொடர் கூட்டத்திலே இந்த அவைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட பிறகு, அதன்படி நடவடிக்கை எடுக்க

வாய்ப்பு வசதிகள் ஏற்படும். ஆகவே பள்ளி நடந்துவருகிற காரணத்தாலும் அந்த ஆசிரியருடைய முறையீடு கவனிக்கப் படுகிற காரணத்தாலும் இதை மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர் களுடைய விளக்கத்திற்குப்பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானத்திற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. கவன ஈர்ப்பு

### சிங்கநல்லூர் நகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப் படாமை குறித்து

**MR. SPEAKER :** Now the hon. Member ,Thiru N. Dennis will call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance.

**THIRU N. DENNIS :** Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the non-payment of salary to the teachers of the Singanallur Municipal Schools from November 1971 onwards causing them inconvenience.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சிங்காநல்லூர் நகராட்சியில் ஆரம்பக் கல்விக் கணக்கில் ஏற்பட்டுள்ள பற்றுக் குறையினை ஈடு செய்யும் வகையில் 1966-67 முதல் 1969-70 வரைக் கான ஆண்டுகளுக்கு பற்றுக்குறை உதவித்தொகை அளிக்கக் கோரி வேண்டுகோள் அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு மாநில தலக்கணக்காயரின் உதவியுடன் இப்பிரச்னையை ஆராய்ந்ததில் சிங்கநல்லூர் நகராட்சியானது அரசின் உதவித் தொகையினைப் பெறும் தகுதியை இழந்துள்ளது என முடிவெடுத்துள்ளது. இந் நகராட்சியின். நிதிநிலையை ஆராய்ந்ததில் இந்நகரவையின் பொதுக் கணக்கு மிகக் கூடுதலாக இருப்புடனேயே இவ்வாண்டு களில் முடிந்திருக்கிறது. இந்நகராட்சி கூடுதலாக பொதுக் கணக்கிலிருந்தே இப்பற்றுக் குறையினை நிறைவு செய்திருக்கலாம்.

மேலும் சமீபத்தில் அரசாணை எண். 1766 கல்வி 14—10—1971-ல் அரசு இந்நகராட்சிக்கு ரூ. 1,23,852. (ஒரு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய்) 1971-72-ஆம் ஆண்டுக்கு முன்னுதவித் தொகை அளித்துள்ளது. இதில் கல்வி வரி மட்டுமே ஒன்றேகால் இலட்சம் வரி பாக்கியுள்ளது. இந்த பாக்கி வரி ஒன்றேகால் லட்சம் ஒழுங்காக வசூலிக்கப்பட் டிருந்தால் இந்த நெருக்கடி இந்த நகரவைக்கு ஏற்பட்டிருக்காது எனக் கருதப்படுகிறது. டிசம்பர் மாதச் சம்பளம் மட்டுந்தான் இன்றும் கொடுக்கப்படவில்லை என்றும். இதில் ரூ. 50 மட்டும் முன் பணமாகக் கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

(The hon. Member Thiru A. Subramaniam rose.)



**MR. SPEAKER :** You may represent Singanallur constituency. But according to our Assembly Rules, only the hon. member who has given call attention notice under Rule 41, can put questions and elicit some information.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தனிப்பட்ட முறையில் சில மெம்பர் களுக்குக் காட்டும் சலுகைப்போல் எனக்கும் கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

**MR. SPEAKER :** That does not confer any right on you to put questions simply because you are from Singanallur.

கால் அட்டன்ஷன் நோட்டீஸ் கொடுத்திருப்பவர் கன்னியா குமரியைச் சேர்ந்த மெம்பர். ஏதாவது கேட்கவேண்டுமானால் அவர்தான் கேட்கலாம். நீங்கள் சிங்காநல்லூரைச் சேர்ந்தவராக இருப்பினும் நமது சட்டமன்ற விதிகளின்படி நீங்கள் இதில் இப்பொழுது பேச முடியாது. அமைச்சரிடம் ஏதாவது இதுபற்றி கேட்கவேண்டும் என்று நினைத்தால், அமைச்சரின் அறையில் போய் தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொள்ளலாம்.

## 5. அரசினர் தனித்தீர்மானங்கள்.

### (அ) 1971-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (25-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை முன் மொழிகின்றேன் :

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (25-வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசமைப்புச் சட்ட (இருபத்தைந்தாவது திருத்த) முன்வடிவு 1971-ஆம் ஆண்டின் இறுதியில் நாடாளுமன்றத்தின் ஈரவைகளாலும் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு சட்டமன்றமும் ஏற்று உறுதி செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்துள்ளேன்.

அரசமைப்புச் சட்டத்தில் இந்தத் திருத்தத்திற்கான தேவையினை விளக்கிக் கூற விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொது நலனுக்கென ஒருவரது சொத்தினைக் கட்டாயமாக எடுத்துக்கொள்ளுவதென்றால் அதற்கான இழப்பீட்டுத் தொகையை அறுதியிட்டோ அல்லது அத்தொகை எந்தக்

கொள்கைகளின் அடிப்படையில் அறுதியிடப்பட வேண்டுமென்றே கூறும் சட்டத்தின் படியான அதிகாரம் வேண்டும்; அறுதியிடப்பட்ட இழப்பீடு போதுமானதாக இல்லை என்று காரணங்காட்டி இத்தகைய சட்டம் எதையும் எதிர்த்து எந்நீதி மன்றத்திலும் வாதாடுவது இயலாது. இவ்வாறு அரசமைப்புச் சட்டத்தின் 31 (2) பிரிவு கூறுகின்றது.

வங்கிகளை நாட்டுடைமையாக்குவதற்கான மத்திய அரசின் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கிடப்பட்டது. கட்டாயமாக எடுக்கப்படும் சொத்தின் மதிப்பு எவ்வளவோ அதற்குச் சமமாகவே சட்டம் அளிக்கும் இழப்பீடு இருத்தல் வேண்டும் என்று அவ்வழக்கிலே உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இதனால் இழப்பீடு போதுமானதாக இல்லை என்று காரணங்காட்டி வழக்கிட இயலாது என்று கூறும் 31 (2) பிரிவு செயலற்றதாகி விட்டது. ஆதலால், சட்டத்தால் அறுதியிடப்பட்ட இழப்பீடு போதுமானதாக இல்லை என்ற காரணங்காட்டி நீதிமன்றத்தில் வழக்கிடலாம் என்ற நிலை எழுந்துள்ளது.

எனவே, இப்பொழுது 31 (2) பிரிவில் உள்ள "இழப்பீடு" (Compensation) என்ற சொல்லிற்குப் பதிலாக "தொகை" (amount) என்ற சொல்லைப் பயன்படுத்தி அப்பிரிவிற்கான திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அத்தொகை ரொக்கப் பணமாகவோ, வேறு முறையிலோ அளிக்கப்படலாம் என்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

சொத்தினை ஈட்டி, வைத்து, வழங்கும் அடிப்படை உரிமையைக் கூறும் 19 (எஃப்) என்ற பிரிவு இத்தகைய சட்டம் எதையும் பாதிக்காது என்றும் திருத்தம் வகை செய்கின்றது.

அரசமைப்புச் சட்டத்தின் மூன்றும் பாகம் மக்களின் அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) )பற்றியும், நான்காம் பாகம் அரசியல் நெறிமுறைகள் (Directive Principles) பற்றியும் கூறுகின்றன. நான்காம் பாகத்தில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகள் நாட்டை ஆளுவதற்கு அடிப்படையானவை என்றும், அந்நெறிமுறைக் கொள்கைகளுக்கேற்ப சட்டங்கள் இயற்றுதல் அரசின் கடமை என்றும் அரசமைப்புச் சட்டத்தின் 37-வது பிரிவு தெளிவாகக் கூறுகின்றது. ஆனால், இந்நெறிமுறைக் கொள்கைகளின்படி இயற்றப்படும் சட்டங்கள் பலவும் மூன்றுவது பாகத்தில் காணப்படும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டவை என்ற காரணங்காட்டி நீதிமன்றத்தினரால் செல்லாதன என்று தீர்ப்பளிக்கப்படுகின்றன. எனவே. மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத் தேவைகளுக்கென வழி வகுக்கும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப சட்டங்கள் இயற்றி அமுல் நடத்துவது தடைப்படுகின்றது.

இந்த இக்கட்டான நிலையைத் தவிர்ப்பதற்கென 31 (சி) என்ற புதிய உட்பிரிவு இத் திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது.



சமுதாயச் செல்வ வளங்களின் உடைமையும் (ownership) கட்டாள்கையும் (Control) பொதுநலனுக்கு உகந்த வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும், பொது நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செல்வமும் உற்பத்திச் சாதனங்களும், ஒரு சிலரிடம் குவிந்துவிடாத முறையில் பொருளாதார அமைப்பு இயங்க வேண்டும் என்றும், (39) (பி) (சி) பிரிவுகள் கூறுகின்றன. இந்நெறிமுறைகளின்படி இயற்றப்படும் சட்டங்கள், அடிப்படை உரிமைகளைக் கூறும் 14, 19, 31-வது பிரிவுகளுக்கு முரண்பட்டிருக்கின்றன என்ற காரணத்தால் செல்லாதனவாய் ஆகிவிடமாட்டா என்று விதிக்கும் வகையில் 31 (சி) என்ற புதிய உட்பிரிவு உள்ளது.

குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெற்று மாநிலச் சட்ட மன்றங்களும் இத்தகு சட்டங்களை இயற்றலாம் என இத்திருத்தம் வகை செய்துள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் நான்காம் பாகத்தில் 39-வது பிரிவில் வரையப்பட்டுள்ள அரசியல் நெறிமுறைகளை அரசியல் அறநெறிகள் என்றே கூறலாம்.

அரசியல் அறநெறி என்ன என்பதை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்ந்துள்ளன.

'அரசர் தாமே அருளறம் பூண்டால்
பொருளும் உண்டோ பிறபுரை தீர்த்தற்கு,
அறம் எனப்படுவது யாது? எனக் கேட்பின்,
மறவாது இது கேள்: மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும், உறையும், உறையுளும் அல்லது
கண்டது இல். . . .

என்று புலவர் சாத்தனார் தமது மணிமேகலைக் காப்பியத்தில் கூறுகின்றார். மக்கள் அனைவருக்கும் உண்டியும், உடையும், உறையுளும் கிடைக்கச் செய்வதுதான் அரசின் அறம் என்ற கோட்பாட்டினை ஒட்டியே நம் அரசமைப்புச் சட்டத்தின் 39-வது பிரிவில் அரசியல் நெறிமுறைகள் விளங்குகின்றன. ஆனால், அடிப்படை உரிமைகள் என்று கூறப்படும் உரிமைகளுக்கு முரண்பாடு என்ற காரணத்தால் இந்த அரசியல் நெறிமுறைகள் இதுவரை உரிய வகையில் செயல்படவில்லை. இந்தப் பெருங்குறைபாட்டினை நீக்குவதற்கு இத்திருத்தங்கள் வகை செய்கின்றன.

எனவே, இன்று இந்த அவை முன்னுள்ள திருத்தங்கள் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம், மாநிலச் சட்ட மன்றங்கள் ஆகியவை

[திரு. செ. மாதவன்] [1972 பிப்ரவரி 1

தம் கடமைகளைத் தடையின்றி ஆற்றும் வகையில் சமுதாய, பொருளாதார நீதியைக் குறிக்கோளாகக் கொண்ட சட்டங்களை இயற்றுவதற்கு இத்திருத்தங்கள் வழி வகுக்கின்றன.

எனவே, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த அரசமைப்புச் சட்டத்தின் (இருபத்தைந்தாவது திருத்த) முன் வடிவை ஏற்று உறுதி செய்யுமாறு இந்த அவையினை நான் வேண்டு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் முன்மொழிந்துள்ள தனித்தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்த 25-வது அரசியல் சட்டத் திருத்தத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே அரசியல் சட்டம் 39-வது பிரிவின்படி பல நெறிமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டு மக்கள் நன்மையடைய வேண்டும். ஏழை மக்களெல்லாம் பயனடைய வேண்டும் என்ற முறையிலே நெறிமுறைகள் வகுக்கப் பட்டிருக்கின்றன. அரசியல் சட்டம் 39-வது பிரிவில் எப்படி அதற்கென நெறிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்போமானால் "that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;,

நம் நாட்டின் வளம் எல்லாம் பொது மக்களுக்கே உரித்தனவாக இருக்க வேண்டும். அடுத்து

'that the operation of the economic system does not result in' the concentration of wealth and means of production to the common detriment,

பணம் எல்லாம் ஒரே இடத்தில் குவியக்கூடாது. குவியல் முறையிலே யாருக்கும் பணம் போய் சேரக் கூடாது. பொது மக்களுக்குப் பொதுவான 'ஃபண்டமெண்டல் ரைட்ஸ்' இருக் கின்றன. நெறிமுறைகள் இருக்கின்றன. அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் நடை முறையில் கொண்டுவர வேண்டும். அது தான் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இப்போது வந்திருக் கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு 'ஃபண்டமெண்டல் ரைட்ஸ்' அளிப்பதில் முக்கியத்துவம கொடுப்பதைக் காட்டிலும் நெறிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று உறுதி செய்கிறது.

நம் நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் பெரும்பாலும் ஏழை களாகவே இருக்கிறார்கள். அந்த மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். உலகிலேயே நம்முடைய அரசியல் சட்டத்தைப்



1972 பிப்ரவரி 1]

பற்றிப் பெருமைப்படுகிறார்கள் என்றாலும் இந்த 'டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்' பாதிக்கப்படாத முறையில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

சமீபத்திலே 'லேடால்' கமிஷன் என்று ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் 25 நாடுகளுக்குச் சென்று பரிசீலனை செய்து, 5 நாடுகளைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இந்தியா, சீனா, சிலி, சிலோன், மெக்சிகோ போன்ற நாடுகளில் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாடுகளிலுள்ளவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாக இருக்கிறார்கள், சிலர் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள் என்ற தகவலையும் கொடுத்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் அந்த நிலையைப் போக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் சோஷலிசம் பேசுவதில் பயனுண்டு. அப்போதுதான் ஏழைகளுக்கு நல்வாழ்வு கிடைக்கும். அதற்கு இப்படிப்பட்ட சட்டங்கள் பயன்படும்.

நான் வீட்டுவசதி வாரியத்தில் அங்கத்தினராக பல வருடங்களாக இருந்து வருகிறேன். அப்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஆங்காங்கே இருக்கக்கூடிய வெறும் மனைகளை 200 ஏக்கர், 300 ஏக்கர் நிலங்களை வாங்கவேண்டிவரும். இந்த விபரம் அவர்களுக்குத் தெரிந்து விட்டால், உடனே அந்த நிலங்களுக்கு இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு விலையை அதிகரித்து, அதற்குத் தகுந்த பத்திரங்களையும் தயாரித்து விடுவார்கள். அதன் பின்னால் அந்த நிலங்களுக்கு அதிகத் தொகை கொடுக்க வேண்டிவரும். நான்கு தடவைகளுக்கு மேல் நிர்ணயித்த விலைக்கு மேல் அதிகமாக காம்பன்சேஷன் என்று நிலக்காரர்களுக்குக் கொடுக்கும்படி நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இந்தச் சட்டத்தின் மூலம் அது போன்ற இடைஞ்சல்கள் அகற்றப்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஏழைகளின் வாழ்வு வளம் பெறும் அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப் படும் என்பதாக சுதந்திரம் அடைந்ததில் இருந்து, 1947-ல் இருந்தே சொல்லி வருகிறோம். அதுபோல ஒன்றும் நடக்கவில்லை. டாடா, பிர்லா, போன்றவர்களின் தொழில் முதலீடு அன்றைய தினம் 50 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு எல்லாம் 650 கோடிக்கு சொத்து பெருகி யிருக்கிறது என்றால் பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகத் தான் ஆகியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 75 முதலாளிகள்தான் வளம் பெற்றிருக்கிறார்கள்—இதுவரை நாம் போட்ட திட்டங்கள் எல்லாம் இவர்களுக்குத்தான் அதிகப் பயனை அளித்திருக்கிறது

என்பதைக் கண்டு இருக்கிருர்கள். அந்த நிலையில் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாகத் தான் பல புரட்சிகரமான காரியங்களைச் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

இதுபற்றி திரு. நேரு அவர்களே, 1955-ல் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிருர்கள்.

"If we are aiming as, I hope, we are aiming—and we repeatedly say we are aiming—at changes in the social structure, then, inevitably, you cannot think in terms of giving what is called full compensation."

சர்க்காருக்குத் தேவைப்படுமானுல் முழு மதிப்புக் கொடுத்து வாங்குவது இயலாத காரியம்.

"Why? Well, firstly because you cannot do it. Secondly, because it would be improper to do it, unjust to do it, and it should not be done even if you can do it, for the simple reason that all these social matters, laws, etc., are aiming to bring about a certain structure of society different from what it is at present. In that different structure, among the other things that will changes is this—the big difference between the 'haves' and 'have nots'. Now if we are giving full compensation, well, the haves remain the 'haves' and the 'have note', 'have note'."

என்பதாக விளக்கமாகப் பேசி முழு நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்பதாக பேசியிருக்கிருர்கள். ஆனுல் அந்த உன்னத லட்சியத்தைச் செயல்படுத்த இந்தத் திருத்தம் அவசியமாகிறது. மழையை எதிர்பார்த்து நிற்கும் விவசாயிகளைப்போல ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பல நல்மைகளைச் செய்ய வேண்டும் என்கிற வேட்கையோடு இருக்கிற அரசுகளுக்கு இதுபோன்ற திருத்தம் மிகமிக அவசியமாகிறது. ஆகவே, நமது உன்னதமான லட்சியத்தை அடைவதற்கு ஒரு பெரும் வாய்ப்பை அளிக்கும் இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை வரவேற்று நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் வகையில் பேரவையில் கொண்டு வரப்பட்டிருக்கும் தீர்மானத்தை வரவேற்று ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதுபோன்ற முற்போக்கான காரியங்களைச் செய்வதற்கு ஆதாரமாக அமைச்சர் அவர்கள் தமிழக இலக்கியத்தில் இருந்தே சான்றுகள் எடுத்துக் காட்டிஞர்கள். தேர்தல் காலத்தில் நாம் கொடுத்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் ஒன்று முன்பும் வந்தது. அதற்கடுத்து 25-வது திருத்தச் சட்டம் வருகிறது. இவை இரண்டும் மத்திய அரசு தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை செயல்படுத்த எவ்வளவு அக்கறையோடு வேகமாகச் செயல்படுகிருர்கள்





என்பதை எடுத்துக்காட்டுகிறது. நம்முடைய மாநிலத்திலும் தமிழக அரசு இனியாவது முற்போக்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் இல்லாத காரணத்தினுல் தகர்த்து எறிந்து வந்தன என்பதை நாம் அறிவோம். கேரளத் தகர்த்து எறிந்து வந்தன என்பதை நாம் அறிவோம். கேரளத்தில் தனியார் காடுகளை எடுப்பதற்கு வந்த சட்டம், மேற்கு வங்க நிலச் சீர்திருத்தச் சட்டம், கோக்கிங்கோல் மைன்ஸ் சம்பந்த மான சட்டம் எல்லாம் நீதி மன்றத்தில் எவ்வாறு அடிப்பட்டன என்பதை நாம் அறிவோம். இதுபோன்று நீதிமன்றம் நம்முடைய புரட்சிகரமான சீர்திருத்தச் சட்டங்களுக்கு எல்லாம் தடையாக இல்லாதபடி செய்வோம் என்பதாக வாக்குறுதி தேர்தல் நேரத்தில் மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. நாம் இழப்பீடு என்று நிர்ணயிக்கிற தொகை கூட நீதிமன்றத்திற்குப் போகிறபோது பன்மடங்கு நாம் நிர்ணயித்ததை விட அதிகமாகிவிட்டதை எல்லாம் அறிவோம். சிலி நாட்டுக் குடியரசில் கூட அமெரிக்காவுக்குச் சொந்தமான காப்பர் மைனிங் நாட்டுடமை யாக்கப்பட்டபோது அவர்கள் இழப்பீடாக 670 மில்லியன் டாலர் என்று நிர்ணயித்தது—இருக்கக்கூடிய மதிப்பின் அளவு மட்டும் அல்ல—அதில் இருந்து அவர்களுக்கு வந்துகொண்டிருந்த ப்ராபிட் என்ற அளவில் 670 மில்லியன் டாலராக நிர்ணயிக்கப்பட்டபோது அவர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து அசந்து போனுர்கள் என்பதை நாம் அறிவோம்.

இதுபோல இழப்பீடுத் தொகையை நிர்ணயிக்க நீதிமன்றத் திற்கு அதிகாரம் இருக்கக் கூடாது. ஹிஸ்டாரிகல் கண்டிஷனுக, அரசியல் தீர்ப்புப்படி மாற்றம் ஏற்படுகிற நிலையில் அரசியலில் உள்ள நிர்வாகத்தின் முடிவே முடிவானதாக இருக்கும்படி இந்தத் திருத்தம் கொண்டு வருவதன் மூலம் இனி எவ்வித இடர்பாடும் இருக்க முடியாது. இந்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் பெறுகிற நிலையில் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் பார்லிமெண்டில் எடுத்து வைத்த வாதங்கள் எல்லாம்—தமிழ் இலக்கியத்தில் சாத்தனர் எடுத்துச் சொன்னதைவிட காலத்திற் கேற்ற முறையில் முற்போக்காக அமைந்தது குறித்து அவரை நாம் மாத்திரம் அல்ல—நாடே பாராட்டுகின்ற நிலை ஏற்பட்டது. நம்முடைய கருத்துக்களின் பிரதிபலிப்பாக திரு. மோகன் குமாரமங்கலம் அங்கே பேசினுர் என்பதைவிட தமிழக முற்போக்குச் சக்தியின் குரலாகவே அவர் பேசினுர் எனக் கூறலாம். சமீபத்திலே நடந்த நிகழ்ச்சி காரணமாக இந்த அரசுக்கு அவரோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம். அது வேறு விவகாரம்.

தேசியமயமாக்கியதை நாங்கள் வரவேற்கிறோம். அதிலும் தீவிர அக்கறை காட்டப்படுகிறது என்பதை அறியும்போது மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள். ஏகபோகத்தைக் கட்டுப்படுத்தவே மத்திய அரசின் இந்தச் சட்டம் வழிசெய்கிறது. ஏகபோகத்தை ஒழிக்கவே நாமும் விரும்புகிறோம் என்றாலும் தமிழகத்தில் இன்னமும் ஏகபோகமாக சொத்து வைத்திருக்கிறவர்களை நமக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. ஒரு காலத்தில் இருந்த சட்டம் இன்னொரு காலத்திற்குப் பொருந்துவதும் அல்ல. இந்தச் சட்டத்தை வரவேற்கிற உணர்வோடு இதன் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழகத்தில் விரிவானதொரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தையும் இந்த அரசு கொண்டுவந்தாக வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறேன். மத்திய சர்க்காரம் அதற்கு வழிவகுத்துவிட்டது. ஆகவே, இனி அது போன்ற சட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு தயக்கம் காட்டக்கூடாது. நாம் மக்களுக்கு இங்கே அளித்த வாக்குறுதிகளையும் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு ஆளும் கட்சித் தரப்பினர் முன்வந்தாக வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அண்மையிலேகூட சில வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகள் எல்லாம் கெட்டு விட்டிருந்தன. ஆவடி டாங்க் பாக்டரி நிகழ்ச்சி மிகவும் வருந்தத் தக்கது. அதை நாம் மறக்க முடியாது. சட்டம், ஒழுங்கு அமைதி என்று நாம் சொல்லும்போது, அந்தத் தொழிலாளர்கள் 'இதுதானா சட்டம், இதுதானா ஒழுங்கு' என்று கேட்கும் நிலை இருக்கிறது. ஒரு பக்கத்தில் இதை வேதனையோடுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடிபட்ட தொழிலாளர்களை நம்முடைய அமைச்சர்களோ, மற்றவர்களோ மருத்துவமனையில் போய்ப் பார்க்கவில்லை. இது தொழிலாளர்களின் மத்தியில் பெரிய மனக்கசப்பை உண்டுபண்ணி யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்கள் மத்தியில் இது ஒரு அதிருப்தியை உண்டுபண்ணியிருக்கிறது.

அவர்களைப் பார்க்க மத்திய அமைச்சர் ஒருவர் போனார், அவர் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார். அவர் போய்ப் பார்க்கலாமா என்கிற வாதம் கிளப்பப்பட்டு பேசப்பட்டு வருகிறது. இவை எல்லாம் வேதனை தரக்கூடியவை மத்திய அமைச்சர் போகலாமா என்கிற வார்த்தைகளையெல்லாம் விட்டுவிட்டு, மாநில அமைச்சர்களும், மத்திய அமைச்சர்களும், ஒருங்கிணைந்து, முற்போக்கான கொள்கைகளுக்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், ஏற்கெனவே இருந்த காழ்ப்புணர்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு, முற்போக்குத் திட்டங்களைச் செய்ய வேண்டும்.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தைப் பற்றிப் பேசும்போது, இது ஒரு புரட்சிகரமான திருத்தம் என்று கூறினார்கள். அதற்கு எல்லோரும் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சபை முன்னால் இருக்கும் 25-வது அரசியல் சட்ட திருத்தத்தை ஆதரித்துப் பேச முன்வந்துள்ளேன்.

அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான அவசியத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தெளிவாகக் குறிப்பிட்டார்கள். பல்வேறு பெரும் தனம் படைத்தவர்கள் இந்த சமுதாயத்தின் மேல்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். வெகு நீண்ட காலத்திற்கு அப்படியே இருக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் இதற்கு எவ்வளவு பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம், பொதுமக்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால்தான் கடந்த தேர்தலிலே இந்தத் திருத்தங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, இம்மாதிரியான திருத்தங்களைப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றி, மக்களுக்கு முற்போக்கான காரியங்களைச் செய்ய வாக்களிக்க வேண்டுமென்று நாம் கோரியபோது, மக்கள் எல்லாம் தெளிவாகப் புரிந்து கொண்டு, தங்களுடைய எதிர்காலம் சுபிட்சமாக இருக்க வேண்டுமென்பதற்காக ஓட்டளித்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு இருக்கிறதென்பதை நாம் அறிகிறோம்.

இதற்குக் காரணம் என்ன? இதற்கு முன்னால் இந்த உரிமை பார்லிமெண்டுக்கு இருந்ததா, இல்லையா என்பதைப் பார்க்கும் போது, அது இருந்தது. இந்தத் திருத்தம் இருந்ததற்கு முன்னாலே நாம் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இந்தச் நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். சட்டசபை நிர்ணயித்தபடி நாம் காம்பன்சேஷன் கொடுத்திருக் கிறோம். காம்பன்சேஷன் என்றால் என்ன என்று வியாக்கியானம் கொடுத்து, முழு மானியம் அளிக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பின்படி இந்த அரசியல் சட்ட திருத்தம் ஏற்பட்டு விட்டது.

இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பெரும் மாறுதல் களுக்கெல்லாம் காரணம், இந்த நாட்டிலே இருக்கிற உழைப்பாளி வர்க்கம்தான் என்று சொன்னால் அதை மறுத்துவிட முடியாது. உழைத்து உழைத்து உருக்குலைந்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கி, யாரோ உல்லாச நிலையில் இருப்பதற்காக உழைப்பாளி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 பிப்ரவரி 1

உழைக்கிறான். அந்த நிலை மாறி தாங்களும் வாழவேண்டும், உழைப்பின் பலன் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்கிற நிலை ஏற்படும்போது உல்லாச நிலையில் இருப்பவர்கள் அந்த நிலையிலிருந்து கீழே இறங்கத் தயாராக இல்லை. வெகு நீண்டகால மாக நாட்டிலே பல அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மத ஸ்தாபகர்கள் எல்லாம் சொல்லி வந்திருக்கிறார்கள். 'ஏழைகளுக்குக் கொடுத்து, நீயும் சாப்பிடு' என்றுதான் எல்லா சம்பிரதாய நூல்கள் எல்லாம் இதை நன்கு வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றன. அநேகம் பேர் இதைக் காதிலே கேட்டு விட்டு, செயல்முறையில் நடைமுறைப்படுத்தாத நிலையில்தான் நாம் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதையேதான் வள்ளுவப் பெருந்தகையும்,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்று கூறியிருக்கிறார். இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றவர்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். அந்தக் காலத்திலே சொன்ன நீதி நெறிமுறைகளைக் கடைப்பிடித்தால் இதில் ஒருவித சிரமமும் இருக்காது. நம்முடைய சொத்து போகிறதே, நம்முடைய உல்லாச போகங்கள் போகிறதே என்று சிலர் கூறுகின்றனர்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் விளக்கிச் சொல்லியுள்ளார். நாம் இரந்து உயிர் வாழக்கூடாது, உழைத்து உயிர் வாழவேண்டும். இரந்து வாழும் நிலை இருக்கக்கூடாது என்கிறார். எல்லாவற்றிற்கும் என்ன காரணம் என்றால், ஒவ்வொருவரும் தன்னுடைய சொத்து, தன்னுடைய உடைமை என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள். உழைக்கும் வர்க்கத்தை தன் சொந்த நலன்களுக்குப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். வெகு காலத்திற்கு முன்னால் இயேசு கிறிஸ்து, முகம்மது நபி, புத்தர் போன்றவர் எல்லாம் என்ன கூறினார்கள். ஆசையேதான் எல்லாவித துன்பத்திற்கும் காரணம் என்று கூறினார்கள். இதையே பல மகான்களும் உபதேசித்திருக் கிறார்கள். ஒருவனிடத்தில் ஏராளமான சொத்துக்கள் சேருகின்றன என்றால், அது பல உழைப்பாளிகளுடைய உழைப்பினால்தான். உழைப்பாளியினுடைய ரத்தம் சிந்தித்தான் வேறொருவன் சொத்து சேர்க்க முடிகிறது. இதைக் குறித்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூட கூறியிருக்கிறார்.



1972 பிப்ரவரி 1] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

"பொழுது தோறும்
புனலுக்கும் சேற்றிற்கும்
கக்கு விஷப் பாம்பினுக்கும்
பிலத்தினுக்கும் இடையறா நோய்களுக்கும்
பலியாகி கால் கைகள் உடல்கள் இற்றும்
பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டை
சலியாத வருவாயும் உடையதாகத் தந்தவர்"

தொழிலாளர்கள் என்று உழைப்பைப் பற்றியும், உழைக்கும் தொழிலாளர்களைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். உழைப்பாளிகள் இல்லாவிட்டால் செல்வம் இல்லை. உழைப்புதான் செல்வம். இதைத்தான் மார்க்ஸ் அவர்களும் 'சர்பிளஸ் வால்யூ' என்று கூறுகிறார். உழைப்பாளி உழைக்கும்போது, அந்த உழைப்பின் பலனில் ஒரு சிறு பகுதியை கூலியாகக் கொடுத்துவிட்டு, மற்ற பகுதிகளைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இவ்வாறு உழைப்பாளி களின் உழைப்பைக் கொண்டு பெரும் பெரும் செல்வந்தர்களாக மாறுகிறார்கள். இதனால் பெரும் மூலதனம் போட்டு பெரும் தொழில்களை நடத்துகிறார்கள். பெரும் பண்ணைகளை நடத்து கிறார்கள். ஆகவே, உழைக்கும் வர்க்கத்திற்கு தக்க ஊதியம் கிடைக்க வேண்டும், அவர்களும் மற்றவர்களைப்போல் வாழ வேண்டும். முதலாளிகளுடைய கருத்துப்படி பார்த்தால் கேபிடல் பார்மேஷன் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இந்தச் சட்டத்தின்படி அந்த தொழில் ஸ்தாபனங்களை எடுத்துக்கொண்டால் பெரிய அநியாயம், அக்கிரமம் என்று சொல்கிறார்கள். capital is nothing but accumulated labour காபிடல் என்பது சேர்த்து வைக்கப்பட்ட சொத்து உழைப்பு. யாரோ உழைத்து, யாரோ உல்லாச வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். கைத்திறனும் மெய்த்திறனும் கொண்டு உழைத்து உழைத்து உருக்குலைகிறான் உழைப்பாளி. பிறர் உழைப்புகளையெல்லாம் ஒரு மொத்தமாகத் திரட்டி, சேர்த்து வைத்துக் கொண்டு, அது என்னுடைய செல்வம், அது எனக்குத் தான் சொந்தமானது, என்னுடைய மூலதனம் என்று சொல்வது காலத்திற்கொவ்வாதது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மகாத்மா காந்தியடிகள்கூட, "உன்னுடைய தேவையை மட்டும் நீ வைத்துக்கொள், பிறருடைய உழைப்பை எதிர்பார்க்காதே, பிறருடைய உழைப்பினால் வாழாதே. பிறருடைய வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருக்காதே" என்றுதான் சொல்லியிருக்கிறார். "மக்களுடைய நலனுக்காக உன்னுடைய உபரி சொத்துக்களை அரசாங்கம் எடுக்கும்போது மகிழ்ச்சியோடு தர வேண்டும்" என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மகாத்மா காந்தியார் அவர்கள் தனிச் சொத்துரிமை கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு காந்திஜி இருந்திருப்பாரேயானால், தனிச்

சொத்துரிமை கூடாது என்பதைத்தான் வலியுறுத்திச் சொல்லியிருப்பார். பெரும் சொத்து வைத்திருப்பவர்கள் அதைச சரிவர நிர்வகிக்கவில்லை. டிரஸ்ட் வைத்திருப்பவர்களும் சரியாக நிர்வகிக்க வேண்டும். அனுபவ ரீதியாகப் பார்த்தால் பெரும் சொத்து வைத்திருப்பவர்களில் பத்து சதவிகிதம் பேர் கூட அதைச் சரியானபடி பராமரிக்கவில்லை.

ஆகவே, சரியான முறையிலே சொத்துக்களைப் பரிபாலித்து நல்ல முறையிலே நாட்டு மக்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே அவர்கள் நடக்கவில்லையென்றால் அரசாங்கம் அந்தச் சொத்துக்களை எடுத்துக்கொள்வதிலே தவறில்லை.

பல பேர்கள் சொல்கிறார்கள், என்னுடைய சொத்தை 7 தலைமுறைக்கு விற்றுத் தின்பேன் என்று விற்றுச் சாப்பிடுவதற்காகவா சொத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? நாட்டு மக்களுக்கு அவை பயன்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும்; இல்லையென்றால் எடுத்துக் கொள்ளலாம்.

இந்தத் திருத்தம் சரியானது. மக்களுடைய தேவைகளை அவை நிறைவேற்றித் தரக்கூடிய வகையில் பயன்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். தனிச் சொத்துரிமையை எடுத்துவிடப் போகிறீர்களே, எடுத்துவிடப் போகிறீர்களே என்று கூக்குரலிடுகிறார்கள். நாம் இப்பொழுது அதை எடுக்கவில்லை. தனிச் சொத்துரிமை மக்களுடைய நலனுக்கு மாறுபட்டதாக இருக்கக்கூடாது. தனி நலன் இரண்டாவதாக வைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் இந்தத் திருத்தம் பிரதிபலிக்கிறது.

டைரக்டிவ் பிரின்சிபில்ஸ் என்ற கொள்கையை மக்களுடைய நலனைக் காக்க எந்தெந்த வகையிலே பயன்படுத்த வேண்டுமோ அந்தந்த வகையிலே பயன்படுத்தி மக்களுடைய நலன்களைக் காக்க வேண்டும். சொத்துக்களுக்காகக் கொடுக்கப்படும் காம்பன்சேஷன் சட்டசபையால், மக்கள் மன்றத்தால்தான் நிர்ணயிக்கப்படக்கூடியது, அந்த உரிமை கோர்ட்டுக்குக் கிடையாது என்பதைச் சொல்வதுதான் இந்தத் திருத்தம் ஆகும். இது ரொம்ப அவசியமானதாகும். காம்பன்சேஷன் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்றால் பொருள் எடுக்கப்பட்ட பிறகு அதற்காகப் பணம் கொடுப்பது என்றால் பணம் அங்கே போய் மறுபடியும் சேர்ந்து விடுகிறது, ஆகவே எடுத்தும் பிரயோஜனமில்லை. காம்பன்சேஷன் கொடுத்துத்தான் சமுதாயத்திலே மாறுதலை ஏற்படுத்த வேண்டுமென்றால் அது இந்தக் காலத்திலே நடக்காது, சமூக அமைப்பு அப்படியேதான் இருக்கும். மக்கள் நிலையும் மாறாது.

எனவே, இந்த 25-வது திருத்தம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. மக்களின் நலனுக்காக அரசாங்கம் எந்தச் சொத்தையும் எடுத்தால் யாரும் கோர்ட்டிற்குச் செல்ல முடியாது.



மக்கள் மன்றம், சட்ட மன்றம் எந்தத் தொகையைக் கொடுகக வேண்டுமென்று முடிவு செய்கிறதோ அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

எது எதற்கோ ரிட் போடுகிறார்கள், கோர்ட்டுக்குப் போகிறார்கள், வாய்க்கால் வெட்டினால் போகிறார்கள், 10 செண்ட் நிலத்தை எடுத்துக்கொண்டால் கோர்ட்டிற்குப் போகிறார்கள். மக்கள் நிலையில் நல்ல மாறுதலை ஏற்படுத்த வேண்டும், மக்கள் வாழ வேண்டும், வறுமை போக வேண்டும், உலக நாடுகளிலே பெறுகிற வளர்ச்சியைப் பார்க்கிறபோது அவர்களோடு நாமும் சமமாக வளர்ச்சியைப் பெறுவதற்கும் இந்தத் திருத்தம் உதவிகரமாக இருக்கும். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த மாற்றத்தை சட்டத் திருத்தத்தை நிச்சயமாக எல்லோரும் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். யாராவது எதிர்த்தால் அவர்கள் பத்தாம் பசலியாக இருப்பார்கள், அவர்கள் யதார்த்த நிலையை மறந்துவிட்டு எங்கோ வேறு உலகத்திலே சஞ்சரித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. மக்கள் அதைச் சகித்துக்கொள்ளமாட்டார்கள். பலாத்காரம செய்வார்கள் என்று நான் கூறவில்லை. அவர்கள் தூள் தூள் ஆக்கி விடுவார்கள். மக்களுடைய நலனுக்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தின் மூலம் வறுமையை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலேயும் நாடாளுமன்ற மேலவையிலேயும் நிறைவேற்றப்பட்டு, நமது சட்டமன்றத்தின் ஒப்புறுதிக்காகக் கொண்டுவரப்பட்டு இருக்கிற 25-வது அரசியல் திருத்தத்தை ஆதரித்து சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்களையும் வழங்க முன்வருகிறேன்.

உச்ச நீதிமன்றம் கோலக்நாத் வழக்கிலும், வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட வழக்கிலும், ராஜ மானியங்கள் ஒழிக்கப்பட்ட வழக்கிலும் தந்த தீர்ப்பை வைத்துத்தான் 1971-ஆம் ஆண்டிலே தேர்தல் நடந்து முடிந்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைக் காட்டிலும் மக்கள் தீர்ப்பே பெரியது, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாகத்தான் 24-வது திருத்தமும், 25-வது திருத்தமும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன்.

நாடாளுமன்றத்திலே கழக உறுப்பினராக இருக்கின்ற திரு. செழியன் அவர்கள் கூறியதைப்போல் இருபத்தைந்தாவது சுதந்திர தின விழாவைக் கொண்டாடுகிற பொழுது நாம் 25-வது

திருத்தத்தைக் கொண்டு வருகிறோம், இதன் மூலம் 25-வது சுதந்திர தின விழாவிற்கு நாம் ஒரு வெள்ளி விழாக் கொண்டாடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வளர்ந்து வருகிற தலைமுறையினரின் உள்ளங்களில் ஊறிய எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலே சட்டங்களிலே மாற்றங்கள் செய்வது தேவைதான்.

அன்றைக்கு இருந்ததுபோலவே சட்டம் அப்படியே இருக்க வேண்டுமென்று யாரும் கூறுவது பொருத்தமல்ல. சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள், நாடாளுமன்றத்திலே நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பல அரசியல் விற்பன்னர்கள் உருவாக்கிய அந்தச் சட்டத்தை ஒரு வினாடியிலே நீங்கள் மாற்றலாமா என்று கேட்கிறார்கள். சட்டம் என்பது சாஸ்வதம் அல்ல. சூரியன் உள்ள வரை மாறாது, சந்திரன் உள்ளவரை மாறாது என்று சொன்னவைகள் எல்லாம் ஓடைக்கரையிலே துணி துவைக்கும் கற்களாக மாறி வருகின்றன. நாட்டு மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற வகையிலேதான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

சமுதாய மறுமலர்ச்சிக்கு உச்ச நீதிமன்றம் ஒரு தடைக்கல்லாக இருக்கக் கூடாது, ஏழை எளிய மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கு நீதிமன்றம் குறுக்கே நிற்கும் நந்தியாக இருக்கக்கூடாது. ஏழை நந்தனுக்கும் சர்வ வல்லமை படைத்த சிவனுக்கும் இடையே உள்ள நந்தியாக நிற்கக் கூடாது என்ற வகையிலேதான் பெரும்பான்மையான ஆதரவோடு இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேறியிருக்கிறது.

சுதந்திரம் பெற்று இருபத்தைந்து ஆண்டுக் காலம் ஆகியும் ஏழ்மை முழுமையாக ஒழியவில்லை, உயரத்திலே கொடியிலே பறக்கும் அசோகச் சக்கரத்தை ஏழை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விடக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. நாட்டினுடைய செல்வம் 75 குடும்பங்களின் கையிலே சிக்கிக் கிடக்கிறது. இந்த நிலை பற்றி ஆராயப் பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. நாட்டிலே இருக்கின்ற 2,289 கம்பெனிகளில் 1,306 கம்பெனிகள் 75 குடும்பங்களின் கையிலே இருக்கின்றன. பாராளுமன்றம் இதைப் பற்றிக் கவனிக்கவில்லை. இதைப் பற்றி சூடான விவாதங்கள்தான் எழுப்புகிறது என்று இதைப் பற்றி டாக்டர் லோகநாதன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏழை எளிய மக்களின் இன்னல்களைப் போக்க வேண்டுமென்ற வகையிலேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையிலே இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டிருப்பது எதிர்காலத்திற்கு நல்லதல்ல, ஜனநாயகத்திற்கு



நல்லதல்ல, ஜனநாயக அடிப்படையை அது தகர்த்துவிடும் என்பதைத்தான் நக்ஸல்பாரி இயக்கம் அபாய விளக்காகக் காட்டிக் கொண்டிருக்கிறது. மக்களாட்சி மரபுகள் கெடாமல் அவர்களுடைய நலனுக்குத் தேவையான மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது.

இது அடிப்படைச் சொத்துரிமையைப் பாதிக்கிறது என்ற வாதம் நாடாளுமன்றத்திலே எழுப்பப்பட்டது. நாட்டிலே உள்ள மக்கள் 90 விழுக்காடு மக்களிடத்தில் சொத்துரிமை இல்லை. மீதமிருக்கிற பத்து விழுக்காடு மக்களில் 9.9 விழுக்காடு மக்களிடத்தில் ஓரளவு சிறிய அளவுக்குத்தான் சொத்துக்களின் அதிபர்கள் இருக்கலாம். 0.1 விழுக்காடு மக்களிடத்தில்தான் ஏகபோக அதிபர்கள், கம்பெனிகளுக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள் அவர்களுடைய நலனுக்குத்தான் அது பாதகமாக இருக்குமே தவிர நாட்டிலே நலிந்திருக்கிற மக்களுக்கு அது ஆபத்தல்ல. எனவே இது தேவைதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் திருத்தத்தை முன்மொழிந்து சட்ட அமைச்சர் அவர்கள் பேசியபொழுது சாத்தனாரின் மேற்கோளோடு விளக்கம் தந்தார்கள். இங்கே பேசிய உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தமிழிலக்கியத்தில் இருந்த மேற்கோள் என்பதால் அதைப் பற்றிக் கேலியாக நினைக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன் அவர்கள் பேசியதைப் பேசும்பொழுது மோகன் குமாரமங்கலம் அவர்கள் பற்றிக் குறிப்பிட்டபொழுது அவர்களுக்கிருந்த உற்சாகம் அமைச்சர் அவர்கள் சாத்தனார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இல்லை. திரு. கே. டி. கே. அவர்கள் மணிமேகலையை விரும்பிப் படித்து ஆராய்ச்சி செய்து கட்டுரை வெளியிட்டிருக்கிறார்கள். அது எல்லோருக்கும் பொதுவானது, தமிழ் மண்ணுக்குச் சொந்தமானது, நம்முடைய ரத்தத்தோடு பிறந்தது என்ற அளவிலேதான் அதைக் கொண்டுவந்து காட்டியிருக்கிறார்கள்.

சமதர்மத்தை நோக்கி அடியெடுத்து வைக்கும்பொழுது அமைதியான வழியில் ஆக்கப்பூர்வமான வழியில் மக்களை வாழ வைக்கக்கூடிய வகையில் வந்திருக்கிற வரலாறு மிக்க சட்டத் திருத்தமாகும் இது. இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்கத்தான் வேண்டுமென்றால், பணக்காரர்கள் பணக்காரர்களாகத்தான் இருப்பார்கள். ஏழைகள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். புதிய மாற்றங்கள் உருவாக முடியாது. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்ட நேரத்திலே போதுமான அளவுக்கு நாம் இழப்பீட்டுத் தொகையாகத் தரவில்லை. நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது அதற்குத் தேவையான இழப்பீட்டுத் தொகை

தரப்படவில்லை. ஒவ்வொன்றுக்கும் இழப்பீட்டு தொகை அளித்து, இந்த நாட்டில் சமதர்ம சமுதாயத்திற்கான மாற்றத்தைக் காண முடியாது. பல புதிய மாற்றங்களை, முன்னேற்றத்திற்கான வழிவகைகளைக் காண, நாட்டு மக்களின் எண்ணத்திற்கு ஏற்றதாக இருக்கக்கூடியது இந்தத் திருத்தம் என்பதைத் தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான 25-வது அரசியல் சட்ட திருத்தத்தை ஆதரித்துப் பேசும்பொழுது எல்லாக் கட்சிகளும் ஒன்றாகத் தங்கள் குரலை அதற்கு ஆதரவாக எழுப்புவதைப் பார்க்கும் பொழுது இங்கே நாட்டிலேயிருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும், இந்த நாட்டு மக்கள் எல்லாவிதமான அத்தியாவசியத் தேவைகளையும் பெற்றுச் சிறப்பாக வாழவேண்டுமென்பதிலே வேறுபட்ட எண்ணம் கொள்ளாதவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. (குறுக்கீடு) எல்லா அரசியல் கட்சிகளும் என்றால் மெஜாரிட்டி அரசியல் கட்சிகள். ஒருவேளை சுதந்திரா கட்சி ஆதரிக்கிறதோ என்னவோ, அவர்கள் பேசும்போது தெரியும். ஆனால் இதை ஆதரிக்காமல் இருப்பதற்கு நியாயம் இல்லை. அவர்கள் கூட மக்களுக்காக இருக்கிற அரசியல் கட்சி, மக்களைக் காப்பாற்றுவதற்கு ஆதரவு தரவேண்டும். நாம் எல்லோரும் அரசியல்வாதிகள்தான் என்றாலும் 'இன் தி இண்டரஸ்ட் ஆஃப் தி பப்ளிக்', மக்களுக்கு நன்மைகள் செய்யும் விதத்திலே பார்க்க வேண்டுமேயொழிய நமக்கு என்ன நன்மைகள் ஏற்படும் என்று பார்ப்பது நியாயமும் அல்ல, தர்மமும் அல்ல என்று நான் எண்ணுகிறேன். அந்த வகையிலே 25-வது திருத்தம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

பேங்குகள் தேசியமயமாக்கப்பட்ட வழக்கிலே சுப்ரீம் கோர்ட்டிலே கொடுக்கப்பட்ட முடிவைப் பார்த்த பிறகு நாம் துரிதமாக எடுக்கும் சமதர்ம நடவடிக்கைகளுக்கெல்லாம் முட்டுக் கட்டைகளாக எந்த முட்டுக்கட்டைகள் இருந்தாலும் அவற்றை முறியடித்துவிட்டு சமதர்மத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணித்தான் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. குறிப்பாக இழப்பீட்டுத் தொகை என்பதைப் பார்க்கும்பொழுது சட்டசபையிலேயும், பாராளுமன்றத்திலேயும் எந்தத் தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்கிறார்களோ அந்தத் தொகைதான் முடிவானது. அதற்கு மேல் இந்த முடிவு நியாயம் அல்ல, நேர்மை அல்ல, அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றத்திற்குச் செல்ல வழி இருக்கக் கூடாது என்ற எண்ணத்திலேதான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மிகவும் சிறந்த கருத்து. ஆனால் இதை அமல் நடத்துவதிலே எல்லா அரசியல் கட்சிகளும் வெகு திறமையாக, நேர்மையாக நடத்தினால்தான் இந்தத் திருத்தத்திற்கு மதிப்பு





இருக்க முடியும். நாட்டிலே இதை அமல் நடத்தும்பொழுது ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்து இதை அமல் நடத்தினால் இந்தத் திருத்தம் கடைசியிலே மக்களின் நம்பிக்கையை இழந்து விடும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நாம் நிலத்தை எதற்காக எடுக்கிறோம்? பப்ளிக் பர்ப்பஸ் என்று சொல்லி, மக்களின் காரியங்களுக்காக என்று சொல்லி சிலவிடங்களில் நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறோம்.

Acquisation for Harijan housesites is for a public purpose.

அதேபோல் ஒரு பெரிய தொழில் அதிபர் தொழிற்சாலைக்கு நிலம் வேண்டுமென்றாலும் அதையும் பப்ளிக் பர்ப்பஸ் என்று சொல்லி செய்யப்படுகிறது. இந்தச் சட்டத்தினுடைய நோக்கமே ஒருவரிடத்திலேயே பணம் சேரக்கூடாது.

There should not be concentration of wealth. Monopoly must be curbed.

இப்படிப்பட்ட நல்ல எண்ணங்களால் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படிக் கொண்டு வரும்பொழுது பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக ஆகிவிடக்கூடாது, அவர்கள் கையிலே பணம் தேங்கக்கூடாது என்பதற்கான அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

உதாரணமாகத் தமிழகத்திலே எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கிறோம்? அவைகளுக்காக நூற்றுக்கணக்கான ஏக்கரா நிலங்களை நாம் ஆர்ஜிதம் செய்கிறோம். யாரிடத்திலே தெரியுமா? பெரிய ஜமீன்தார்களிடத்திலேயோ, இனாம்தார்களிடத்திலேயோ, மிட்டா மிராசுகளிடத்திலேயோ அல்ல. பாவம் சாதாரண 1 ஏக்கர், 2 ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கும் ஏழை விவசாயிகளிடத்திலே சென்று அந்த நிலம் தேவைப்படுகிறது என்று சொல்லி ஆர்ஜிதம் செய்கிறோம். 'ஃபார் பப்ளிக் பர்ப்பஸ்' என்று சொல்லி செய்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் அம்பத்தூர் டி.ஐ. சைக்கிள் பேக்டரிக்குப் பல ஏக்கர்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம். இப்படி ஆங்காங்கு ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்திலே, தொழிலதிபர்கள், அவர்கள் நல்ல புத்திசாலிகள், தங்கள் தேவைக்குமேல் பத்து மடங்கு அதிகப்படியான நிலத்தை ஆர்ஜிதம் செய்துகொள்ள முன் வருகிறார்கள். கேட்டால் இன்னும் பத்தாண்டுகளில் விரிவடையும், 20 ஆண்டுகளில் இன்னும் பெரிதாக ஆகும், அதற்கு இடம் தேவைப்படும் அல்லவா. இவைகளுக்கு எல்லாம் 200 ஏக்கர்கள் தேவைப்படும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கத் தில்கூட, இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் மகனுக்கு சிறிய கார் தொழிற்சாலைக்காக 350 ஏக்கர்கள் தேவைப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் இங்கேதான் மோட்டார் தொழிற்சாலைக்கு 30 ஏக்கர்கள்தான். சுமார் பத்து மடங்கு அதிகம் கேட்கிறோம் என்றால் இந்த முறையெல்லாம் நியாயம்

அல்ல. ஏன் இதைத் திட்டவட்டமாகக் கூறுகிறேன் என்றால் ப்பளிக் பர்ப்பஸ் என்ற போர்வையிலே இதைப் பலர் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். பெரிய தொழிலதிபர்கள் பற்றித் தெரியும், தொழிற்சாலைக்குத் தேவைப்படுவதைவிட பத்து மடங்கு அதிகமாக வாங்கி மாந்தோப்பு, தென்னந்தோப்பு என்று போட்டு விவசாயம் செய்யக்கூடிய அவர்களுக்கெல்லாம் இந்த பப்ளிக் பர்ப்பஸ் என்ற போர்வையில் குறைந்த நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிட்டு தங்களுடைய வசதிகளுக்காக வாங்குகிறார்கள் என்று சொன்னால் அதிலே ஆர்ஜிதம் செய்ததிலே மிகவும் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஆபத்து. 25-வது சட்டத்திருத்தம் என்று கூறி, நாங்கள் கொடுப்பதுதான் மதிப்பீட்டுத் தொகை என்று சொல்லி

Do not hit the small farmers and small monied people.

பெரிய பிர்லா, டாட்டாக்களிடம் மோதுங்கள் வரவேற்கிறோம். ஆனால் சமதர்ம சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி, 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று வைத்திருக்கும் விவசாயிகளிடத்திலே போய் நிலத்தை ஆர்ஜிதம் செய்து உங்களுக்கு வேண்டிய பெரிய தொழில் அதிபர்களுக்கு உதவினால் இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கமே அடிபட்டுப் போய்விடும்.

அதேபோன்று கொள்கை ரூபமாக இருக்கக்கூடிய ஆபத்துக்களும் வரும். என்னைப் போன்றவர்கள் கோயில் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று யோசிப்பவர்கள். அதற்குக் காரணம் கோயில்களின் மூலம் மக்கள் நன்மை அடைகிறார்கள்; சமயப்பற்றுள்ளவர்கள் நன்மை அடைகிறார்கள், சமயப்பற்றில்லாதவர்களுக்கு நன்மையில்லாதது போல் தெரியும். 25-வது சட்டத் திருத்தம் இருக்கிறது என்று சொல்லி கோயில் என்பது பழமை, ஆலயமாவது, ஆண்டவனாவது என்ற கொள்கையின் அடிப்படையில் இருப்பவர்கள் ஆலயச் சொத்துக்களை இரண்டு ரூபாய்க்குக் கொடு என்று சொன்னால் என்ன ஆவது? அதிலேயும் அரசாங்கம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். 25-வது சட்டத் திருத்தப்படி செய்யலாம் என்று கூறி, ஏழைகளுக்கு இல்லாதது கோயில் சொத்து என்று செய்யக்கூடாது. ஆனால், அந்த ஏழைகளுக்குக் கொடுப்பதிலும் வரையறைகள் உண்டு. பக்திமான்களாக உள்ள ஏழைகளுக்குத்தான் கொடுக்க வேண்டும். பணக்காரர்களுக்கு அல்ல. எந்த வகையிலே பக்தியுள்ளவர்களுக்குப் போகிறது என்றால் ஆலயத்தில் பல கலைகள் வாயிலாகவும், திருவிழாக்கள் போன்ற நேரங்களில் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற வாயிலாகவும் இப்படிப் பலவகைகளிலே செலவழிப்பதற்கு யோசித்துத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போய் குடிசை மாற்று வாரியத்திற்கு என்று சொல்லி, வீடு கட்டும் திட்டத்திற்கென்று சொல்லி, ஏழைகளுக்காக என்று சொல்லி இரண்டு ரூபாய் என்று



கோயில் நிலங்களுக்குக் கொடுத்து, அப்படி காம்பன்சேஷன் கொடுத்து, அவ்வாறு செய்தால் அது ஒரு பெரிய கொள்கையையே இடித்துச் தள்ளியது போலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே 25-வது திருத்தத்தை இந்த அரசாங்கம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

கேரளாவிலே அங்கேயிருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களையெல்லாம் நாங்கள் எடுக்கப்போகிறோம் என்று சொல்லி சுப்ரீம் கோர்ட்டுக்குப்போய் தோல்வியடைந்திருக்கிறது. ஆனால் இந்தச் சட்டப்படி அப்படிச் சட்டம் போட்டு அமல் நடத்த முடியும். அதுவும் நம்முடைய அரசாங்கத்தில் 183 பேர்கள் கைதூக்க இருக்கிறார்கள் என்று சொல்லும்பொழுது ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆகவே 25-வது சட்டத்திருத்தத்தைப்பற்றிப் பேசும்பொழுது இவையெல்லாம் வெட்ட வெளிச்சமாக விளக்கப்பட வேண்டும். The will of the Legislature must be know சாதாரணமாக சட்டத்தைப் பார்க்கும்பொழுது ஒன்றும் தெரியாது. ஆனால் எதையெதை விரும்பினார்கள், எப்படிப்பட்ட விருப்பங்கள் இருந்தன என்பதெல்லாம் நாளைக்கு இந்த டிபேட்டைப் பார்த்தால் தெரிய வரும். மந்திரிகள் என்ன வாக்குறுதி தருகிறார்கள், எப்படி ஒத்துழைப்பு தருகிறார்கள் என்பதெல்லாம் விளக்கமாயிருந்தால் புரிந்துகொள்ள முடியும்.

பெரும்பணக்காரர்களை அடக்க இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் சிறிய பணக்காரர்களை ஒழித்துவிட்டு பெரிய பணக்காரர்களை மேலும்மேலும் பெரிய பணக்காரர்களாக ஆக்க இதைப் பயன்படுத்திக்கொண்டால் கட்டாயமாக அது சமதர்மத்திற்குப் புறம்பானது, அதை நாடு ஒத்துக்கொள்ளாது. இதைத் திட்டவட்டமாகச் செய்ய என்ன திட்டம் என்ற அறிவிப்பை அமைச்சரவை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அறிவிப்பு இருந்தால் தாராளமாக நல்லெண்ணத்தில் நடந்து கொள்ளும் என்ற எண்ணம் ஏற்படும். ஏனென்றால் அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யும் பொழுது பலர் உள்நோக்கத்தோடு செய்கிறார்கள்.

கிராமத்தில் இருக்கக்கூடிய கர்ணம் அங்கிருக்கக்கூடிய சாதாரண விவசாயிகளைப் பிடிக்கவில்லை என்றால் நல்ல விளைச்சல் நிலமாக இருந்தாலும் காட்டிக் கொடுத்துவிடுவார்கள்.

கட்டுக்கள் இவ்விதம் விளைநிலங்களாக எடுக்கப்பட்டு கடைசியில் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. காரணம் என்ன? பள்ளமான இடம், நீர்வளம் இருக்கிற இடத்தை எல்லாம் மனைக்கட்டுக்களுக்காக எடுத்திருக்கிறார்கள். அரிசன காலனிக்கு என்று அவற்றை அரசாங்கம் அக்வைர் செய்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரிசன மக்கள் அந்த இடம் தேவை என்று சொன்னால்தான் அக்வைர் செய்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அந்த இடங்களை எடுக்கும் போது அதிலே பல உள்நோக்கங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஒருவர் பம்ப் செட் வைத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்: அந்த நிலத்தை வீடு கட்டுவதற்காக என்று எடுத்துக் கொண்டார்கள். அந்த விவசாயி தனக்குச் சொந்தமான மேடான புஞ்சை நிலத்தைச் சும்மா தருகிறேன் என்று சொன்னார். ஆனால் அதைக் கேட்காமல் விளை நிலத்தைத் தான் அக்வைர் செய்தார்கள். இவ்வாறு அக்வைர் செய்வதைப் பற்றிக் கேட்க நீதிமன்றத்திற்குக் கூட அதிகாரம் இல்லை. பப்ளிக் பர்ப்பஸ் போனஃபைடி என்று சொல்வார்கள். மாலஃபைடி என்று எப்படி ப்ரூவ் பண்ணுவது? இதிலே நீதிமன்றங்கள் தலை யிட வேண்டுமென்றால் இரண்டு விஷயங்கள்தான் இருக்கின்றன.

'Either it must be *mala fide* acquisition or it should not be for a public purpose'.

இந்த இரண்டும் இல்லை. அரிசனங்களே கேட்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் அந்த அரிசனங்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும், நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவராகவும் இருந்தால், இந்த நிலந்தான் வேண்டுமென்று அவர்கள் கேட்டு அதை அக்வைர் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. சும்மா தருகிறேன் என்று சொல்லக்கூடிய நிலத்தைக் கூட எடுக்க மறுக்கிறார்கள். கிராமத்தில் இந்தப் பகுதிக்கும், அந்தப் பகுதிக்கும் என்ன பத்து மைலா போகப் போகிறார்கள்? இதையெல்லாம் யோசிக்க வேண்டும். 80,000 மனைக் கட்டுகள் சும்மா இருக்கின்றன என்றால் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் தரிசாக இருக்கின்றன என்பதைப் எண்ணிப் பார்க்க வேண்டும். வீடு கட்டவசதி இல்லையென்றால் அந்த நிலங்களைத் திருப்பி யாவது கொடுக்க வேண்டும். இந்த அரசு இதிலே மிக யோசித்துச் செயல்பட வேண்டும். இதிலே உள்நோக்கம் எதுவும் இருக்கக் கூடாது.

இப்போது இருக்கும் ஆட்சியில் கட்சி அடிப்படையில்தான் எல்லா வேலைகளும் நடக்கின்றன. அரிசிக் கடை கொடுத்தால் கூட கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் தருகிறார்கள், மற்றவர் களுக்குத் தருவதில்லை. அந்தக் காலத்தில் ஃபுட்கிரேயின் லைசென்ஸீஸ், கார்ப்பரேஷன் லைசென்ஸி, சேல்ஸ்டாக்ஸ் அஸெஸீஸ் ஆகியவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இருந்தது, இப்போது அதெல்லாம் ஒன்றும் கிடையாது. தங்கள் கட்சிக்கு வேண்டியவர்களாக இருந்தால் தருகிறோம் என்ற முறையில் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வரையில் லைசென்ஸ் இல்லாதவர்களுக்கு எல்லாம் விற்பதற்குக் கடை கொடுக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. லைசென்ஸ் இருக்கிறவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** பல அரிசிக் கடை வியாபாரிகள் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். நியாயமாக வழங்கப்படவில்லை. அரிசிக் கடை அனுமதிக்கே இந்த நிலை என்றால் அரசாங்கத்தின் கையில் இந்தத் திருத்தத்தின் மூலம் அதிகாரம் வந்துவிட்டால் காங்கிரஸ்காரர்கள், தங்களுக்கு எதிராக இருக்கக்கூடிய கட்சிக் காரர்கள் நிலமாகப் பார்த்து எடுத்துக் கொண்டு ஒரு ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்து அவர்களைத் தெருவிலே நிற்க வைக்கும் எண்ணத்திலே காரியம் செய்வார்களோ என்று பயமாக இருக் கிறது. நான் கேட்டுக் கொள்வது ஒன்றுதான். இதை விருப்பு வெறுப்புகளுக்குப் பயன்படுத்தாமல் உண்மையிலேயே ஏழை மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கவோ அல்லது உங்கள் கட்சியைப் பலப்படுத்தவோ இந்தத் திருத்தத்தின் மூலம் பெறக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று தாழ்மை யோடு கேட்டுக் கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir, I fully agree with the statement made by the Hon. Minister for Law when he stated that this is a historic piece of legislation. This is not only a historic piece of legislation but it will also change the entire course of history of India. Hitherto we have been upholding the so-called rights of individuals. But hence forward India has decided to uphold and to uphold scrupulously that the rights of the society as a whole will always be paramount as compared to the rights of individuals. This legislation, I have no doubt in my mind, will bring about a bloodless revolution, a revolution to meet the aspirations of the people of India. The aspirations of the people of India have always been, as the Hon. Minister for Law has pointed out, that the basic necessities should be provided.

Now, the woeful and the unfortunate situation that we have been seeing in India is that some people are eating and some people go without anything to eat. Some live in palatial houses but there are hundreds and thousands of people in India who are sleeping, who are having their life or habitation, who are having their family and who are having procreations in the streets of big cities like Madras and villages of this great country. We have got a very big heritage and our respected Hon. Minister for Law has pointed out the great and rich heritage of Tamil Nadu and our sages were great men who wanted that basic necessities of all the people in this country should be provided.

But in spite of the passing 2,000 years, as the Hon. Minister for Law, has pointed out, still in our country we are having clothless, under-fed people and people without any shelter or accommodation whatsoever. Therefore, in order to change this situation and in order to give a fatal blow to the so-called bourgeoise society

wherein only a few are favoured and all the resources of the country are controlled by them—the resources which are intended for the common betterment of the people of this great country, we want to bring about a Constitutional change and for that purpose we have made some provisions in the Constitution, wherein it is clearly stated that the resources of the community should be so utilised or channelized as to subserve the needs of the common people of this country. Those provisions are laid down in Article 39 of the Costitution—Directive Principles.

We have got the greatest respect for the Judiciary right from the District Munsif Court to the Supreme Court. As a matter of fact, I am also a part and parcel of the Court, and whatever decision is taken in a Court of Law, we have to respect it. Sir, when the Constitution was amended in 1955, it was laid down that whenever the properties belonging to the institutions are requisitioned or acquired by the State, the compensation awarded to them shall be non-justiciable.

It is not a new thing that we are bringing forth by means of this new 25th amendment of our Constitution. It was written even in the fourth amendment of the Constitution as early as in 1955. Moving the resolution on the Fourth Constitution Amendment Bill, the late lamented Pandit Jawaharlal Nehru observed "We have been trying and we have been aiming and I have no doubt in my mind that we have been aiming, to bring about a change, a revolution in the social structure of this country and that revolution is intended to see that the gap between the 'haves' and 'havenots' is removed. But what happened? Why has it not been removed? Why it continues to be there? Why the 'haves' continue to be 'haves' and 'have-nots' continue to be 'have-nots'?".

Even in the intended legislation, if you feel that whenever a property is taken, due compensation should be given. That means, whenever the Government seeks to take some property for the common good and for purpose of society, compensation should be given and that compensation should be fixed according to the market value. When it is fixed according to market value, the then Prime Minister observed, that it would mean giving the 'money-equivalent' to the property. You are giving 'money-equivalent to property' when you seek to interpret 'compensation' as 'money equivalent'. Then how can the gap between the 'haves' and 'have-nots' be removed? Therefore, whenever you give the compensation according to the 'money-equivalent' of the property, when you requisition, when you take property, the then Prime Minister Jawaharlal Nehru said "You cannot remove disparities; you cannot remove inequalities; you cannot give death blow to the anarchy, to the ancient forces of political and economic exploitation of the country". Therefore, Pandit Jawaharlal Nehru has



rightly observed that in this amendment, Government seeks to give compensation but this compensation was never to be questioned in a court of law". This happened as early as 1955.

But what happened afterwards? The aspirations of the people were not understood. The decisions of the supreme legislative body of this country, the Parliament, were not understood. The Supreme Court consistently tried to over-rule the decision of the peoples' representatives, the greatest and supreme legislative body of this country. What happened? Even Justice Subba Rao in his first judgment upheld the fourth amendment and observed in his famous judgment that the word 'compensation' is justiciable. What happened afterwards? The same Justice Subba Rao over-rule himself. He did not overrule anybody else. He said in a later case in the Shantilal Mangaldas case that it is non-justiciable; whenever Government requisitioned a particular property the word 'compensation' is used. Even in the fourth amendment it is used.

So far as 'compensation' is concerned, whenever it is given according to the estimation of the Government, estimation of the public authority, then that compenastion is not justiciable—he himself observed. What happened afterwards? The Supreme Court again overruled itself. This sort of ping-pong decisions and see-saw decisions by the Supreme Court itself, one time deciding in a particular way and another time in the opposite way showed clearly and gave a conclusive proof that there has been political motive behind these judgments. With great respect to the judiciary, I may state that I am also a member of the bar as Mr. Ganapathy. I am as much serious as Mr. Ganapathy and Mrs. Anandanayaki.

THIRU N. GANAPATHY: With the permission of the Chair, I would like the Member to use milder terms in criticising Courts.

THIRU M. A. LATHEEF: I am using milder words and using milder expression. I am using two superlatives. Even most harshest expressions were used in Parliament in respect of the Supreme Court. The Supreme Court did not understand the trend and it is because of it, it has ridiculed itself; it has not only ridiculed itself but it has ridiculed the entire confidence of the people; it has shattered the confidence of the people in the efficacy, in the efficiency, in the imparitiality, in the utility and usefulness of the judicial tribunals of this country. The Parliament decides in one way and the Supreme Court decides in another way. After such long history and after such great confusion and long period of untold miseries the Government of India came forward with spirited measures to give a good chit to the dying economy, to give peace to the soaring economy. In the famous, I would say notorious 'Bank Nationalisation' decision, the Supreme Court led the country to the necessity of.................

THIRU R. PONNAPPA NADAR : Sir, it is better we avoid the expression 'notorious decision'. It would not be in good taste if we use such expression against the highest judiciary of the land. Instead of saying 'notorious decision' you can say, famous decision'. Otherwise it will not be fair.

THIRU M. A. LATHEEF : I do not agree with the respected leader of the Congress Party that it is a 'famous decision'. I maintain it. May be it is not agreeable to him.

THIRU R. PONNAPPA NADAR : Is the House going to adopt the word 'notorious decision' or 'famous decision'. I would like you to give your ruling or clarification on that.

MR. DEPUTY SPEAKER : Since it is the highest Court of the land அந்த மாதிரி வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம். Mr. Latheef is also an advocate.

THIRU M. A. LATHEEF : I have been using it because I am an advocate. I am angry because I am an advocate. I am disappointed because I am an advocate. Because I am an advocate, I understand the implications of the course of activities of the highest judicial tribunal, for which I have the highest respect. I will not lag behind in giving respect even to the smallest judicial tribunal of this country but I submit to you, Sir, that the country was led to the necessity of even going to the extent of dissolving Parliament, even to the extent of dissolving State Legislatures, the only purpose being to overrule the effect of the decisions of the Supreme Court.

What happened ? The country gave a clear mandate and the people of India in their entirety decided that they shall not wait for a longer period. They have been suppressed and they have been wallowing in the beds of poverty for such a long time. Only with this motive the 24th Amendment and 25th Amendment have been introduced in Parliament and they have been passed and upheld with such a large majority in the Parliament and subsequently ratified by so many State Legislatures. Today it has been brought forth for ratification here. In this amendment we want to amend the so-called fundamental rights.

Our Constitution deals with so many fundamental rights which I respect fundamentally. There should be fundamental rights. There is no doubt about it. Article 14, Article 19, Article 30, Article 31—all these deal with so many kinds of fundamental rights and more particularly the Article with which we are concerned today deals with the rights to property. The word 'property', Mr. Deputy Speaker, Sir, how is it pronounced ? 'property'—that means it should be used properly always. The property shall be property until it is used property and when it is not used properly it ceased to be property' because. it brings about so many complications in the society.



It is only from this point of view that this piece of legislation has been introduced in Parliament. But we have got a pride to say that not only in Parliament, but also in the State Legislatures, but in the people's forums before the people—not only in '*chatta mandram*' but also in '*makkal mandram*' we have been saying that we want social justice. The Courts may uphold legal justice and I am for legal justice. I am paid to get legal justice to the people, but I want that social justice is established and accomplished in this country and accomplished as early as possible. Otherwise, there will be revolution. What has been a bloodless revolution—God forbid—the revolution will become 'blood' revolution'. Because, how many people come to these M.L.As.—these unfortunate M.L.As. ? When you get up in the morning, you see 10 youths are coming from Vaniyambadi, Ambur, Pallapatti, Kanyakumari and saying 'I have passed this and I have passed that in 1965'. What he has passed ? He has passed B.E. in first class in 1965. The hard-earned money of the fathers and mothers had been spent on the education of these boys. They obtained first class Degrees thinking that they would get proper employment. But even after the expiry of so many years, people come and say 'Sir, 1965–66 *pass seidene, first class vanginen, innum velai kidaikkavillai*'.

THIRU S. KANDAPPAN : If there are people who have passed Civil Engineering in first class, there is ample scope for them. I am prepared to absorb them.

THIRU R. PONNAPPA NADAR : The offer is open to all?

THIRU M. A. LATHEEF : I place on record my deepest sense of gratitude to my hon. Friend Mr. S. Kandappan for having put forth this offer and I duly agree with the same on behalf of my clients.

Therefore, what happened? There has been frustration among the people. Take the student community. Why there has been such a frustration ? Why there has been such a sense of irresponsibility and indiscipline among the people? Another question is, students may not go to the classes for some valid reason, but students do not go to the classes claiming that they will not write the examination. It is a very strange phenomenon that we are passing in this country, a very dangerous phenomenon indeed and we must take note of this. Unless and until proper thing is done to check all these tendencies by means of taking radical measures, there will be revolution. We should be ready to face this revolution and it is only to bring about this revolution this Constitutional Amendment—25th Amendment—and the inclusion of the new Article in the Constitution—Article 31—wherein it has been stated clearly that the word 'amount' shall be substituted for

the word 'compensation' and that the amount shall be fixed according tc the law and according to such principles and such manner as may be prescribed by the law. Finish! (Cheers).

(Mr. Deputy Speaker sounded the gong to call the next member).

THIRU M. A. LATHEEF: I will finish, My Lord, within five minutes.

MR. DEPUTY SPEAKER: We have got six or seven more Members who want to speak. The hon. Member is an Advocate, but he is not now addressing the Court.

THIRU M. A. LATHEEF: With the greatest sense of responsibility I have, Mr. Deputy Speaker, Sir, I submit that we must face the reality of the world and we must understand that we must support all these radical measures. Article 31 has laid down certain principles and this piece of legislation is a great historical piece of legislation. The Government is vested with some radical powers, extraordinary powers. After the President of India has given his assent to this amendment not only the Central Government, but the State Government shall be vested with extraordinary powers and I do hope that these powers shall be used always with the greatest sense of responsibility, with the greatest sense of awareness to the society as a whole and not to any individual or any groups of individuals, and with the greatest sense of welfare of the society and not the welfare of any particular group in the society who have been sucking the blood of the community so far.

I submit to you, Mr. Deputy Speaker, that hereafter there is no place in the country for any vested interests who claim fundamental rights to suck the blood of the community and to use the resources of the community for themselves, leaving thousands and thousands, millions and millions of people of this country underfed, leaving them hungry, leaving them clothless. The property shall be requisitioned by the Government to promote and to further the causes of social welfare. I hope this Government and the Government in the Centre shall use this weapon to requisition the properties with the greatest sense of responsibility.

At the same time I will be failing in my duty, Mr. Deputy Speaker, if I do not observe nothing on some of the points that have been raised by my learned friend Thiru Subbu in this House. Mr. Subbu was arguing that we must always see that the rights of the people are honoured. There are no two opinions so far as this is concerned and the rights of the people should be honoured. We also say that the rights of the people should be honoured. You can stretch your hand wherever you want. But you can stretch your hand only up to the point where the other man's nose begins.



You can stretch your arms only when you do not touch the other man's nose. If you say that you have got a fundamental right to function as you want, then I say that your right of functioning as an individual or as a group of individuals, no doubt, is guaranteed and is respected by the society. But at the same time the society wants you to respect its right.

You see that people nowadays talk of rights, rights, rights. There is a very fundamental principle in jurisprudence that every right is accompanied by a duty and there cannot be any right without a duty and there cannot be any duty without a right.

Therefore, if you want to assert your right, no doubt you have got the right to assert your right but at the same time you have got the duty to respect the rights of others. You must allow the society to live in a peaceful atmosphere. You have got the duty to see that the society prospers in a peaceful atmosphere. You have got the fundamental duty to see that your right does not jeopardise the rights of others.

Sir, what is sought to be done today was preached 1,400 years ago by the Holy Prophet Mohamed. He was the first Socialist who had stated that there could not be any property right for anybody and that all were equal in the eyes of God. He wanted social equality, political equality, cultural equality, etc.

Sir, I am very happy that the principles for which I always stand are being put into the statute book. I support the Bill with the hope that the rights of the people and particularly the rights of the minorities and the institutions run by them will be scrupulously safeguarded by the Government. I appreciate the assurance given by the Prime Minister of India on the floor of the Parliament that she would see that the rights of the minorities would always be safeguarded. I hope that that assurance would be safeguarded and it is dependent upon the goodwill and large-heartedness of the majority community.

With these observations, I support the Bill which has been brought forward before this House for ratification. I, on behalf of myself and on behalf of my party, extend wholehearted support to the Bill. Thank you, Sir.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த 25-வது அரசியல் சட்டதிருத்த மசோதாவை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். அப்படி ஆதரித்துப் பேசுவதற்கு முன்னுல் எனக்கு முன்னுல் பேசிய பல நண்பர்கள் மிகத் தெளிவாக முழுமனதோடு அதனை ஆதரித்து, சில திருத்தங்கள் சொன்னுர்கள். நானும் சொல்வதற்கு முன்னுல் இது ஒரு மிகப் புரட்சிகரமான நல்லதொரு பொருளாதார சமுதாய மாற்றத்துக்கு எதிர்காலத்தில் நல்ல மாறுதல் என்று சொன்னுர்கள். சுதந்திரம் வருவதற்கு முன்னுல் நாம் ஆங்கிலேயர்களால் நசுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்ந்த

காலத்தில் சுதந்திரம் வாங்கினோம். வாங்கிய சுதந்திர நாட்டிலே தனி மனிதனுக்கு உணவில்லை என்ற நிலைமை இருந்தது. அப்படிப் பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்பதற்கு புரட்சிகரமான திட்டங்களை பாராட்டி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தை இன்று நடைமுறையில் நிறைவேற்றும் பணியில் கடந்த 20 வருஷமாக சட்டத்தில் இயற்றப்பட்டு இருந்தாலும் கான்ஸ்டிடூஷனில் உள்ள காரண்டியால் நடைமுறையில் செயல்படாமல் பேப்பர் அளவிலே இது பேசப்பட்டு வந்தது. what was preached in the past has not been translated into auction. அப்படிப் பேசப்பட்ட சட்டத்தை சோஷலிசத்தை இன்று நடைமுறையில் செயல்படுத்த புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்த இந்திராகாந்தி அவர்களைப் பெருமையோடு பாராட்டுகிறேன். அதை உருவாக்குவதற்கு ஆதரவு கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராட்டுகிறேன். இந்த மன்றத்தில் இன்றைக்கு இந்தத் திட்டத்தை வரவேற்று ஆதரவு தந்ததை நாம் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதுபோல் இங்கே காம்பன்சேஷன் என்ற நிலை போடப் பட்டிருக்கிறது. தீர்மானத்திலே காம்பன்சேஷன் என்ற நிலை வருகிறபோது கடந்த கால கான்ஸ்டிடூஷனல் ஹிஸ்டரியைப் பார்த்தால், பல உயர் நீதி மன்றங்களில் பலவிதமான கேஸ்கள் தொடரப்பட்டும் அது ஜஸ்ட் காம்பன்சேஷன், ரீசனபிள் காம்பன்சேஷன் என்ற நிலை ஏற்பட்டு, பலமான விவாதங்கள் வழக்குகளில் நடைபெற்று இருப்பதை நாம் காணும்போது, அவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்பொருட்டு தனி மனித சொத்துரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கான்ஸ்டிடூஷனில் உள்ள புரொட்டக்ஷனை வைத்துக் கொண்டு இந்த பாதுகாப்பின் அடிப்படையில் லட்சோப லட்ச மக்கள் எல்லாம் தெருக்களிலே தள்ளப்பட்டு, ஒரு சிலர் மட்டும் வசதிகளோடு, வாய்ப்புகளோடு வாழ்ந்து வருகிறார்கள். அதற்காகச் சட்டப் பாதுகாப்பு கொடுத்து வந்த அந்த நிலையை நீக்கும் பணியில் ஏழை எளியவர்களுக்கும் இந்த நாட்டில் பலன் கிட்ட வேண்டும்; அவர்களுக்கும் வாழ்க்கையில் இன்பம் இருக்க வேண்டும்; சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு இருக்கும் மனிதனை நாம் கவனிக்க வேண்டும் என்று காந்தி அடிகள் சொன்ன யோசனையை இப்போது செய்த மாறுதலால் இந்திரா அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அரசியல் கட்சித்தலைவராக இருந்து பேசிக்கொண்டு வந்ததால்தான், ஜனநாயக மரபுப் படி கொண்டு வந்ததால் அந்த அம்மையார் மனிதாபிமானத்தோடு, அன்பின் காரணமாக கொண்டு வந்திருக்கிறார்கள். என்பதைக் குறிப்பிடுகிறேன். இதைத்தான் சுவாமி விவேகானந்தா அடிகள் சொல்லியிருக்கிறார் " சர்வீஸ் டு ஹ்மானிடி ஈஸ் சர்வீஸ் டு காட் " என்று மதத்தின் பெயரால், தெய்வத்தின் பெயரால் சொன்னார்கள்.



அப்படிப்பட்டவைகளை நடைமுறையில் பயின்றதால்தான் இந்திரா காந்தி அவர்களைப் பொறுத்த வரையில் சுவாமி விவேகாநந்தா தத்துவத்தின் படி, அன்பே சிவம், சேவையின் மூலமாக அன்பைக் காண்கிறேன், ஆண்டவனைக் காண்கிறேன் என்ற நிலையில் பணியாற்றுவதைப் பார்க்கிறோம். சொத்தை எடுத்தால் அதற்கு காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும், அந்த அதிகாரம் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொன்னதை நாங்கள் பழைய நினைவோடு நினைக்கிறோம். அன்று வாழ்ந்த மன்னர்களை, நம் பழம் பெரும் மன்னர்களைக் குறிப்பிடும்போது 'இறை' என்றுதான் வைத்திருந்தார்கள். 'இறை' என்றால் ஆண்டவன் என்று பொருள். ஆகவே, சிவம் என்றுதான் இங்கே சொல்லுகிறோம். தமிழகத்தில் சிவத்தை ஆண்டவன் என்று சொல்கிறோம். ஆகவே, அன்பு மயமாக ஆண்டவனைக் கண்டவர்கள் அந்த ஆண்டவனை மையமாக வைத்து மக்களுக்கு சேவை செய்கிறவர் ஆண்டவனைத் தேடி அலையவோ, செல்லவேண்டிய நிலையோ இல்லை என்றுதான் இங்கே காணுகிறோம். ஆண்டவனோடு மன்னனை வைத்திருந்தார்கள். அதற்கு ஒரே காரணம் மக்களுக்கு அப்பால் சாமானிய மக்களுக்கு அப்பாற்பட்ட சக்தி, மிக உயர்ந்த தத்துவத்தோடு போதித்து, அறவழியிலே நாட்டின் மன்னனை பார்க்க முடிந்தது என்பதுதான். மனுநீதி சோழனைக் காணலாம், அவனுடைய மகன் தன் தேரை ஏற்றி கன்றைக் கொன்றுவிட்டான். இது சாதாரண விஷயம் என்று மன்னன் விட்டிருக்கலாம், மன்னனுக்கு தீமை வந்தாலும், மக்களுக்கும் பிராணிகளுக்கும் தீமை வந்தாலும் எல்லோருக்கும் ஒரே நீதிதான் என்ற முறையில் தன்னுடைய ஒரே பிள்ளையை தேரின் சக்கரத்திலேயே கொன்றான் என்ற நீதியைக் காண்கிறோம். அன்று மன்னர்கள் வாழ்ந்த காரணத்தால் இறையோடு ஒப்பிட்டு இருக்கிறார்கள். அப்படிப் பட்ட இறைவனை அன்பு நிலையில், அறநிலையோடு பார்க்க வேண்டும். ஒரு உயரிய நோக்கத்தோடு, இங்கே மிகப் பெரிய அதிகாரம் (டிஸ்கிரிஷனரி பவர்ஸ், அன்லிமிடெட் பவர்ஸ்) அதிகாரம் குவிந்து கிடக்கிறது. ஆகவே நமக்கு இப்பட்டிப்பட்ட சட்டம் மிக அவசியம். லட்சோப லட்ச மக்களை பழைய சட்டம் வாட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு சிலர் மாத்திரம் நன்றாக வாழ்கிறார்கள் என்ற நிலையை மாற்றுவதற்கு பொறுத்துப் பார்த்து அதை ஒழித்தார்கள்.

பாங்குகள் தேசியமயம் ஆக்கப்பட்டன. பாங்கு என்றால் என்ன என்ற விவரம் புரியாத ஏழை எளிய மக்கள் ரிக்ஷாத் தொழிலாளி கூட பாங்குகள் தேசீயமயத்தால் நன்மை அடைந்ததைக் காணலாம்.

இந்த நிலையெல்லாம், இப்படிப்பட்ட ஒரு மகோன்னதமான, மிகப் புரட்சிகரமான திட்டத்தின் மூலமாகத்தான், சட்டத் திருத்தத்தின் மூலமாகத்தான் வந்திருக்கிறது என்பதைக்

காண்கிறபோது நான் மிகவும் பாராட்டுகிறேன். பெருமைப் படுகிறேன். அதை நடைமுறையில், செயல் முறையில் அமுல் படுத்துகிறபோது, அங்கே இருக்கின்றவர்கள் மிகப் பெருந் தன்மையோடு, நியாய புத்தியோடு, அன்புள்ளத்தோடு, அறத்தை மையமாக வைத்து நடத்தவேண்டும்.

அன்று மன்னனாக, மாமன்னனாக இருந்தவர்கள் நிலை மாறி இன்று மக்களாட்சியாக மாறி இருக்கிறது. மக்களாட்சியில் மன்னன் நிலையிலிருந்து செயல்படுபவர்கள் அமைச்சர் பெருமக்கள், அவர்கள் கட்சி பாகுபாடு அற்ற முறையில், எந்தக் கொடி எந்தக் கொள்கை என்ற நிலையை மறந்து, மக்களே தெய்வம், மக்களுக்கு, மக்கள் என்ற நிலை வருகிறபோது நம்முடைய குழந்தைகள் என்ற நிலையில் தந்தையினுடைய நிலையிலிருந்து அவர்கள் செயல்படவேண்டும் என்று நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதேயேதான் இன்று டிசென்ட்ரலை சேஷன் ஆப் பவர்ஸ் என்ற நிலையில் மத்திய அரசிலே குவிந் திருக்கிற அதிகாரத்தை எல்லாம் பிரித்துத் தரவேண்டும் என்று நம்முடைய பெருமைக்குரிய டாக்டர் அவர்கள் நேற்று விவரமாக மாநில அரசின் நிலை குறித்துப் பேசுகிறபோது பேசினார்கள். அரசியல் அதிகாரங்களையெல்லாம் பிரித்துத் தரவேண்டும், நடை முறை சிக்கல்களை மாற்ற வேண்டும், மக்களுக்கு அதிகமான நன்மை விரைவாகச் சேரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தான் என்று நிரூபித்தார்கள். இதேயே நேதாஜி அவர்கள் 'ஆல் பவர்ஸ் டு பீப்பில்' மக்களுக்கே எல்லா அதிகாரமும் என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிற போது

I want socialism based on nationalism. That socialism must be in accordance with the best traditions and conditions of India. That should suit the will of the people and should be in accordance with the tastes of the people.

என்று விவரமாகக் கூறினார்கள். இந்திய கலாச்சாரம், மக்களுடைய மனோநிலை இவைகளுக்கு உகந்த முறையில் இருக்கிற சோஷலிசத்தை நிறுவ வேண்டும் என்று விவரமாகச் சொன்னார்கள். அதே தத்துவத்தை நோக்கிச் செய்த ஒரு புரட்சிகரமான திட்டந்தான் இந்தச் சட்டம் என்ற விவரத்தை நான் கூறி, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டுவந்ததற்காக, மத்திய அரசைப் பாராட்டுவதோடு, இங்கே அது செயல்படுவதற்கு உறுதுணையாக இருக்கிற கழக அரசையும் நான் பாராட்டுகிறேன். அதை ஆதரித்துப் பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பாராட்டி அமர்கிறேன். வணக்கம்.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Deputy Speaker, Sir, I rise to express my opinion regarding the 25th amendment of the Constitution. We do not disagree or dispute





over an egalitarian society. Particularly this amendment that has been brought in and passed by Parliament has sought to add a new Article 31 (c). Article 31 (c) which is going to find a place in the Constitution is going to be a land mark in the history of the Constitution of India. I can say that an individual's right to private property must yield to the right of society to acquire the property, for a public purpose. We agree with that. But there are vast property owners. There must be a distinction between vast property owners and minorities who own smaller properties. It is to be used for 'public purpose' according to this amendment. Property which is requisitioned or acquired must be for 'public purposes'. Then it is welcome.

Apart from that they have substituted in this amendment the word "amount" for the word "compensation". What is the 'amount' that is going to be given is for the Parliament and the law to decide. It is stated clearly that this amout may be in cash or otherwise. It can be given even in bonds spread over for 10 years or a number of years. An individual, whose property is acquired, cannot be allowed to wait for a long period. It is for this Hon'ble House and for the Government to see that there is no such 'prolonged period' in the payment of the amount.

This Article 31 (c) is going to be a landmark in the history of the Constitution of India. It is a very vital part of the 25th Amendment Bill. It gives a position of predominance and practical importance to the Directive Principles of State Policy.

This amendment has been there before Parliament. Much water has already flowed under the bridge. But all the more, what is needed is that the amending powers should be used with care and caution, with brakes and limitations. I am sure that this Hon'ble Government and this Hon'ble House will direct its energies to do so. When taking property or acquiring property, as the other Members of this House have stated, we must be careful to see that small minorities or landholders are not affected. For a public purpose we should acquire property from vast-propertied people. In this due care and caution should be taken. I am happy and sure that Government will direct its energies to implement the provisions in the correct and proper manner. Therefore I support this amendment on behalf of my party.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் முன்மொழிந்துள்ள இந்த அரசியல் அமைப்புச் சட்ட 25-ஆவது திருத்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற நம்முடைய சட்ட மன்ற பேரவைத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக சட்டப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட இந்த ஒரு தீர்மானத்தில் பங்கெடுத்துக் கொண்டு நம்முடைய வழக்கறிஞர் நண்பர்கள் தங்களுடைய எதிர்காலத்தில் தங்களுடைய பிழைப்பிலே கணிசமான அளவு பாதிக்கும், ஓரளவுக்கு வழக்குகள் குறையும், தங்களுடைய வருமானம் குறைவுபட்டாலும் கூட இந்த முற்போக்குத் திட்ட தீர்மானம் அமுலுக்கு வந்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்கின்ற அடிப்படை எண்ணத்தில் மாண்புமிகு வழக்கறிஞர் நண்பர்கள், உறுப்பினர்கள், இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை, நானும் வழக்கறிஞன் என்ற முறையில் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் பாங்குகள் தேசியமயமான நேரத்திலும் ராஜமானிய கோரிக்கை பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட வேண்டிய நேரத்திலும் அதற்கு ஆதரவு தெரிவிக்காமல் அதன் பயனாக ஒரு மாபெரும் பொதுத்தேர்தல் நம்முடைய பாரத நாட்டில் நடைபெற்று, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதம மந்திரியாகப் பதவியேற்று, பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் பிறகு போட்டு, அந்தத் தீர்மானம் 'ஏகமனதாக' என்று சொல்லக் கூடிய அளவில் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தை இன்றைய தினம் ஆதரித்துப் பேசக்கூடிய அளவில் நம்முடைய நண்பர்கள் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றபோது மக்கள் எந்தப் பக்கம் இருக்கின்றார்களோ, எந்த மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறோமோ, அந்த மக்களை எண்ணி, தாங்கள் முன்னால் செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக இன்றையதினம் இந்த முற்போக்குத் தீர்மானங்களுக்குத் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய அருமை நண்பர் லத்தீஃப் அவர்கள் மிகத் தீவிரமாக இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்லிய நேரத்தில் கையிலே அவர்கள் வைத்துக் கொண்டிருந்த பேப்பர் வெண்மை ஆனதுதானா அல்லது சிகப்பானதுதானா என்று சொல்லக்கூடிய அளவில் அவ்வளவு தீவிரமாக தன்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய தீவிரத்தை நான் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அவர்களுடைய தீவிரத்தை நான் புரிந்து கொள்ள முடிகின்றது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பச்சை வண்ணம் போட்டிருந்தார்.



**திரு. என். கணபதி :** பச்சையைப் போட்டுக்கொண்டுதான் அவ்வளவு தீவிரமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதைப் பார்க்கும்போதே தெரிந்துகொண்டேன். அவ்வளவு தீவிரமாக தன் குரலில், மிகப் புரட்சிகரமான திட்டங்களை—புரட்சிகரமான திட்டங்களை என்று சொல்லும்போது புரட்சி, புரட்சி என்று அடித்து அடித்துப் பேசினார்கள். அவருடைய பேச்சின் ஆழமான கருத்தை நான் பாராட்டுகிறேன்.

வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் சமதர்மத்தை, சோஷலிஸத்தை உருவாக்க வேண்டுமானால் முதலில் எல்லோருக்கும் இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும். இதை மக்கள் அறிவார்கள், நாம் அறிவோம், இந்தச் சட்டசபையும் அறியும். அந்த அளவிலே வெகுவாகத் தீர்மானங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

ஆனால், அதே நேரத்தில் நம் நாட்டின் உச்ச நீதி மன்றத்தையும், அதில் பதவி வகிக்கின்ற நீதிபதிகளையும் அவ்வளவு கடுமையான வாக்கியங்களால் தாக்கியிருக்க வேண்டியதில்லை. நீதி மன்றங்களிலே நீதிபதிகள் தீர்ப்புகள் வாசிக்கிறார்கள். தீர்ப்புகளை வாசிக்கின்றபோது, அப்போதிருக்கின்ற சூழ்நிலைகளை உற்றுப் பார்த்து, சுற்றுச் சார்புகளைப் பார்த்து தீர்ப்புகளை வாசிக்கின்றனர். குற்றவாளி ஒருவன் தான் செய்த தவறிலிருந்து திருத்திவிடக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், மீண்டும் அந்தக் குற்றத்தைச் செய்யமாட்டான் என்று தெரிந்தால், சுற்றுச் சார்பு நிலைக்கேற்றவாறு தீர்ப்பு வழங்கப்படுகிறது. தவறு செய்பவன் திருந்திவிடுவானானால் அவனை மன்னித்துவிடலாம் ; அவன் தண்டிக்கப்பட வேண்டியவனல்ல என்பதைத்தான் திருக்குறளும், நபிகள் நாயகம் அளித்த குரானும் வலியுறுத்துகின்றன. இதையெல்லாம் கருத்திற் கொண்டுதான் தீர்ப்பு வழங்கப்படுவதால் அது கண்டிக்கத்தக்கது அல்ல என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

THIRU M. A. LATHEEF : Even a Judge of the Supreme Court has observed that the law is one generation behind society, lawyers are two generations behind society and judges are three generations behind society. I want to remind the hon. Member that this observation has been made not by myself, but by a very learned judge of the Supreme Court itself. I want to bring this to the serious consideration of the hon. **Member.**

MR. DEPUTY SPEAKER : It is better not to bring the Supreme Court as a controversial subject here. It is not nice on our part to do so.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் அவர் முதலிலே பேசியபோது இருந்த தொனிக்கும், இப்போது விளக்கம் அளிக்

கின்றபோது இருக்கின்ற தொனிக்கும் நிரம்ப வித்தியாசம் உள்ளது. அந்த வித்தியாசத்தை என்னால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது; அவையும் அதைப் புரிந்துகொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். இப்பொழுதிருக்கின்ற இந்த அமைதியான வேகத்தை அவர் உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது வந்திருக்கின்ற இந்த அரசியல் சட்டத் திருத்தத்தினால் பல நன்மைகள் கிடைக்கவிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. இதிலே பலருக்கு மாறுபட்ட கருத்துக்களும் இருக்கும் என்பதில் ஐயமில்லை உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'கும்பக்கோணம் எலெக்டிரிக் கார்ப்பரேஷன்' திரு. சி. ஆர். இராமசாமி அவர்களுக்குச் சொந்தமானது. அந்தக் கார்ப்பரேஷனை நமது அரசு அரசுடைமை ஆக்கியது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு மின்சார வசதி செய்து தருவதற்காக நம்முடைய அரசு ஒரு திட்டத்தை தீட்டி, அந்தக் கார்ப்பரேஷனை அரசுடைமையாக்கியது. அதை எதிர்த்து அதன் சொந்தக்காரர் ஹைகோர்ட்டிலே ரிட் பெட்டிஷன் போட்டார்கள். ஹைகோர்ட்டிலே அவர் போட்ட ரிட் பெட்டிஷன் செல்திறனற்றது என்று முடிவாயிற்று. அதற்குப் பின்னால் அவர் சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் தாக்கல் செய்து, ஸ்டே வாங்கியிருக்கிறார். அதனால் காலம் கடத்தப்பட்டு வருகிறது.

கோர்ட்டில் போட்டிருப்பதற்கு முக்கியமான காரணம் ஏதாவது உண்டா என்றால் இல்லை. அவர் கூறியிருக்கிற காரணம் அரசாங்கம் கொடுக்கிற காம்பன்சேஷன் குறைவாக இருக்கிறது என்பதுதான். அந்த ஒரே ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை ஏறக்குறைய 4, 5 ஆண்டுக் காலமாக அலைக் கழித்து வருகிறார் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நல்லவேளையாக இந்தப் பிரச்சினையை ஞாபகப்படுத்தினார்கள். கும்பகோணம் எலெக்டிரிக் கார்ப்பரேஷன் சொந்தக்காரர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகத்தானே அதை உடனடியாக எடுத்துவிட்டீர்கள். நல்ல எண்ணத்தோடு எடுத்திருந்தால், ஏன் இன்னுமிருக்கின்ற 7, 8 கம்பெனிகளை எடுக்காமல் விட்டுவைத்திருக்கிறீர்கள்? இதை யெல்லாம் வைத்துக் கொண்டுதான் இந்த 25-வது சட்ட திருத்தத்தையும் துஷ்பிரயோகம் செய்வீர்கள் என்று சொல்கிறோம்.

**திரு. என். கணபதி :** அம்மையார் அவர்கள் அவர்களுடைய கட்சிக்காரருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். அரசாங்கம் இன்றைக்கு முற்போக்குத் திட்டங்களைப் போட்டு, செயல்பட்டு வருகிறது என்றால் அது ஒரு கட்சியின் நலனைக் குறித்து அல்லது ஒரு கட்சிக்காரரின் நலனைக் குறித்துப் போடப்படும் திட்டமல்ல. இந்த நாட்டு மக்களுக்கு ஏற்றவகையிலே நன்மைகளைச் செய்ய



வேண்டுமென்ற எண்ணத்திலேதான் முற்போக்குத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இந்த உண்மையை சகோதரி அவர்கள் உணர்ந்து, அவருடைய கட்சிக்காரர்களையும் அதற்கு ஆதரவு கொடுக்கச் செய்து. அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலனைக் கருதி, இப்படிப்பட்ட பல்வேறுபட்ட முற்போக்குத் திட்டங்களைப் போட்டு செயல்படுத்துகையில், இந்த நஷ்ட ஈட்டுத் தொகை போதாது என்பதனால் காலங் கடத்துவது சரியல்ல. 'தட் இஸ் நாட் ஜஸ்ட் ஈக்குவலன்ட், மணி ஈக்குவலன்ட் இஸ் நாட் ஜஸ்ட் ஈக்குவலன்ட்'. இந்த ஒரே காரணத்திற்காக ஒரு முக்கியமான திட்டம் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. 5, 6 வருடகாலமாக காலங் கடத்தப்பட்டு வருகிறது. இம்மாதிரியான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு இந்த அரசியல் திருத்தச் சட்டம் வழிவகை செய்யும். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஆதரித்து, வரவேற்று, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் சார், அரசியல் சட்டம் 25-வது திருத்தம் நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, அதற்கு அங்கிகாரம் அளிக்க வேண்டுமென்பதற்காக நமது சட்ட அமைச்சர் அவர்கள் இங்கு கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கக்கூடிய முறையில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திருத்தம் வருவதற்கிருந்த பின்னணிகளைப் பற்றி சில விபரங்களையும் இந்தத் திருத்தத்தைப்பற்றிப் பேசுகின்ற நேரத்திலே சில மேற்கோள்களைக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னாலே நாட்டிலே ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றி அறிந்தவர்கள் இம்மாதிரியான அரசியல் சட்டத் திருத்தங்கள் எல்லாம் கொண்டுவரப்படும் என்பதைப் பற்றி அன்றைக்கே எதிர்பார்த்தார்கள். கொண்டுவந்தால்தான் நல்லது என்று நாங்கள் அப்போதே சொல்லியிருக்கிறோம். இதிலே மாறுப்பட்ட கருத்தைக் கொண்டவர்களும் இருந்தார்கள். அவர்கள் அப்போதே இப்படியெல்லாம் வரும் என்று சொல்லி தங்கள் எதிர்ப்பையும் தெரிவித்தார்கள். இந்த விஷயம் நம் அனைவருக்கும் தெரியும். அந்த முறையிலே நமது நாட்டிலே நெருக்கடி ஏற்பட்டு, யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. பாராட்டுவதற்குரியதாகும்.

அதே நேரத்தில் இந்த 25-வது திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது ஒரு சிலரிடம் இருந்து எதிர்ப்புகளும் வந்தன. இருந்தபோதிலும், பெரும்பான்மையோடு சட்டம்

நிறைவேற்றப்பட்டது. சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னாலே எப்படி இருந்தது என்பதைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

முதலிலே வந்த திருத்தத்தைப் பொறுத்த வரையிலே சிறுபான்மை என்றோ, அல்லது சிறுபான்மையினராக இருக்கக் கூடிய சிலரின் சொத்துக்களை எல்லாம் எடுக்கக் கூடாது என்றோ முதலிலே சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவில் இல்லை. அதற்குப் பின்னால் மத்திய அரசே—ஆளும் காங்கிரஸ் கட்சியினரே—இம்மாதிரி மூன்று திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள்.

முதலாவது திருத்தம் சிறுபான்மையினர் சொத்துக்களுக்குப் போதிய பாதுகாப்பு கொடுப்பது.

இரண்டாவது திருத்தம், நஷ்ட ஈடு என்று இல்லாமல் போனாலும் கூட தொகைகளை ஒதுக்குகின்றபோது அத் தொகை போதுமானதாக இருக்க வேண்டும்.

மூன்றாவது திருத்தம் இப்படிச் சொத்துக்களை ஏற்றுக் கொள்கிறபோது ஒவ்வொரு சட்டமன்றமும், அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்றபோது எப்படி அரசியல் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு மடங்கு ஆதரவு இருக்க வேண்டுமோ அதுபோலவே மூன்றில் இரு மடங்கு ஆதரவுடன் செய்ய வேண்டும். இந்த மூன்று திருத்தங்களையும் ஏற்கனவே 25-வது திருத்தத்தைக் கொண்டு வந்த கட்சியைச் சார்ந்தவர்களே கொண்டு வந்தார்கள் என்பதையும் அதற்கு எந்த வகையில் நாடாளுமன்றத்தில் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் அறிவோம். நான் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியும், இங்கே ஆளும் கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழக பார்லிமெண்ட் கட்சியும் சோஷலிஸ்டுக் கட்சியும் விடாப்பிடியாக ஏற்கனவே இருந்த திருத்தத்தை ஆதரிக்கின்றோமே தவிர இந்தத் திருத்தங்களை நாங்கள் எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதாக வலியுறுத்தினார்கள். அப்படி வலியுறுத்தியதன் பயனாகத்தான் 3-ல் 2 பங்கு என்கிற ஷரத்தும் அடிக்வஸி என்ற ஷரத்தும் கைவிடப்பட்டன என்பதை இங்கேயும் ரெக்கார்டு பண்ண வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

ஆயினும், மைனாரிட்டிகளுடைய சொத்துக்கள் சம்பந்தமான சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது இன்றைக்கு பிர்லாகூட மைனாரிட்டி கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். அல்லது நான் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர், எங்களுக்கும் விதிவிலக்கு வேண்டும் என்று பலர் கேட்க ஆரம்பித்துவிட்டால் ஆபத்து ஏற்படும், கல்வி சம்பந்தமான கட்டிடங்கள் அல்லது சொத்துக்கள் சம்பந்தமாக—பொதுக் காரணத்திற்காக இந்தத் திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோமே—இந்தத் திருத்தத்தைப் பயனற்ற முறையில் செய்துவிடக்கூடும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.





குறிப்பாக, மக்கள் சபையில் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. இந்திரஜித் குப்தா, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. இரா. செழியன் வெகு அழுத்தமாகப் பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதே சபையில் திரு பூபேஷ் குப்தா பேசியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அச்சடித்து—அதுவும் டிசம்பர் மாதத்தில் நடந்த விவாத நடவடிக்கை விவரங்கள்—அவர்கள் செய்த பிரசங்கங்கள்—கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு நடந்த சட்டப் பேரவை விவாத நடவடிக்கைப் புத்தகங்கள்கூட இன்னும் அச்சிட்டு வரவில்லை. அதை பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து தமிழக அரசு சட்ட மன்ற நடவடிக்கைகளை வெகுதுரிதமாக அச்சிட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு விவரங்களுக்கு வருகிறபோது அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிப் பேசுகின்றபோது ஒன்று சொன்னார்கள். எனக்குக் கூட தமிழ் இலக்கியத்தில் உள்ள கருத்துக்களை ஏதாவது ஒரு முறையில் சபைக்கு முன்னால் கொண்டு வருவது நல்லது என்கிற அபிப்பிராயம் தான். ஆபுத்ரன் புண்ணிய ராஜனாகி மணிமேகலையைப்போல் அறம் செய்யப்போகின்ற நிலையில்,

“ அறம் எனப்படுவது யாது ” எனக் கேட்பின்,
மறவாது இது கேள் : மன் உயிர்க்கு எல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும், அல்லது
கண்டது இல் ” என—

என்பதாகச் சொன்னதாக வருகிறது. 1500 வருஷங்களுக்கு முன்னாகவே இந்த நாட்டில் உள்ள அரசனின் கடமை என்ன என்பதைச் சொல்ல வருகிறபோது நாட்டில் உள்ள மக்களுக்கு எல்லாம் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுப்பது பெரிய கடமையாக அன்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதே அளவில் இன்றைக்கு சாத்தனார் இருந்திருந்தால் கண்டிப்பாக வேலை செய்ய முன்வருகிறவர்களுக்கு வேலையும்—அதற்கான உத்தரவாதமும் கொடுப்பதும் கடமை என்று சொல்லி இருப்பார்கள். அந்த மாதிரியான வகையில்தான் இந்த 25-வது திருத்தத்தை ஆதரிக்க வேண்டிய நிலையில் அதனைப் பாராட்டுகிறேன்.

அதற்குப் பின்னால் இந்தத் திருத்தத்திற்கு வருகிறபோது ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சென்ற தேர்தல் காலத்தில் 3 அரசியல் கட்சிகள் எந்த முறையிலும் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடாது என்ற உறுதியோடு இருந்தார்கள். அதற்குப் பிறகு நாடாளுமன்றத்தில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 பிப்ரவரி 1

திருத்தங்கள் வருகிறபோது இரண்டு கட்சிகள் உறுதியாக உலகத்தில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் நாங்கள் மாற மாட்டோம் என்று இருந்தார்கள். ஒரு கட்சியினர் நாங்களும் ஒத்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது எங்கள் கட்சித் தலைவர் அறிக்கை கொடுக்கிறபோது, அரசியல் சட்டத்தில் எந்த முறையில் திருத்தம் செய்ய வேண்டுமென்று விஷயத்தை சொல்லி இருக்கிறார்கள். உங்கள் அனுமதியின் பேரில் அதைப் படிக்கிறேன்.

"The Fundamental Rights chapter should be so amended as to provide for a wider range of curbs and restraints on monopolists, big landlords and other vested interests including the right of the State to nationalise their concerns and other property with which they exploit the masses and build up their economic power, without compensation. When Parliament or a State Assembly decides to pay any compensation, it will be for them to decide in all cases the quantum of compensation and also the manner of payment. The Supreme Court and the judiciary should have no jurisdiction even to entertain any complaint in regard to this issue of compensation. Parliament and the State Assemblies should have the final say.

In this connection, the Communist Party of India wishes to make it clear that it does not stand for the abolition of the right to property. On the contrary, the Communist Party of India demands that so far as the common man, including the small property holder is concerned, his property be given full protection against the onslaughts of the capitalists, landlords, money lenders and also of interests of these exploiters."

இந்த முறையில் வேறு சில விஷயங்கள் சொல்லப்படுகின்றன. சோவியத் யூனியனில் தனியார்களுக்கும் சில சொத்து உரிமை இருக்கிறது என்பதை திரு. செழியன் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எல்லா சொத்துக்களையும் எடுத்துவிட வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி சொல்லவில்லை. பரம்பரை பரம்பரையாக சொத்து உரிமை என்ற பெயரால் கோடிக் கணக்கில் வைத்திருப்பதுதான் சரியல்ல என்பது கட்சிக் கருத்து. அதைப்பற்றி திரு. செழியன் அவர்கள் பேசும்போது

Article 10 of the Russian Constitution says:

"The personal property right to citizens in their incomes and savings from work, in their dwelling-houses and subsidiary husbandaries, in articles of domestic economy and use and articles of personal use and convenience, as well as the right of citizens to inherit personal property, is protected by law".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, தானே உழைத்து அதன் பயனைக் கொண்டு சிறிய அளவில் சொந்தத் தேவைக்காக வைத்திருக்கிற சொத்துக்களைக் கூட எடுத்துவிட வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி சொல்லவில்லை. இன்றைக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய சோவியத் யூனியனிலும் சொல்லவில்லை.



1972 பிப்ரவரி 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு ஏன் இம்மாதிரி திருத்தங்கள் தேவைப்பட்டன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். முதன் முதலில் கோலக்நாத் கேஸ் வருவதற்கு முன்னால் அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட 4-வது திருத்தத்தின் மூலமாக பொதுக்காரியங்களுக்கு சிலவற்றை எடுத்துக் கொள்கிற உரிமை இருந்தது. ஜமீன்தாரி ஒழிப்புச்சட்டத்தின்போதுதான் 4-வது திருத்தமே வந்தது. அதற்குப் பின்னாலும் கூட இந்தத் திருத்தம் அவசியம் என்பது பாங்குகளை எடுத்தபோது சுப்ரீம் கோர்ட் கொடுத்த நஷ்டஈட்டுக்கு அதிகமாக 22 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்த நிலை நமக்குத் தெரியும். அதனால்தான் இந்தத் திருத்தமே தேவையாயிற்று. திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் டைரெக்டிவ் ப்ரின்சிபிள்ஸ் பற்றி எடுத்துக் காண்பித்தார்கள். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்

"The State shall, in particular, direct its policy towards securing that the citizens, men and women equally, have the right to an adequate means of livelihood.

That the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good

"that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment.

wealth is not concentrated in a few individuals but well distributed.

equal pay for equal work, etc., etc.

ஏதாவது ஓரிடத்தில் அதிகமாகச் சொத்துக் குவியல் இருக்கக் கூடாது என்ற கருத்து டைரக்டிவ் பிரின்சிபிளில் இருக்கிறது. அதை அமல்படுத்த வேண்டுமென்று வருகிறபோதுதான், இந்தத் திருத்தம் இல்லை என்றால் சிக்கல் ஏற்படும். குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சில விவரங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இந்தியாவில் போடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக பலன் மக்களுக்குக் கிடைக்கவில்லை, என்ற நிலை வந்தபோது அன்றைக்கு பிரதமராக இருந்த நேரு அவர்கள் மொனாபலீஸ் கமிஷன் என்று ஏற்படுத்தினார்கள். அந்த மொனாபலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் நம்முடைய நாட்டில் 75 மொனாபலி ஹவுஸ்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள்.

அந்த மாதிரி முதலாளிகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். மொனாபலீஸ் கமிஷன் கொடுத்த பட்டியலிலே தமிழகத்திலே உள்ள முதலாளிகளின் பட்டியலைக் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். மொத்தம் 17 பேர்களைச் சேர்த்திருக்கிறார்கள். சேலத்திலே உள்ள மார்டின் பர்ன் 3-வது வரிசையில் இருக்கிறார்; எ.சி.சி. சிமெண்ட் 5-வது வரிசையில் இருக்கிறார்; தமிழகத்திலே பல பத்திரிக்கைகளை நடத்திக் கொண்டு, வங்காளத்திற்கும்

டார்ஜிலிங்குக்கும் சென்றால் ரோடு பூராவும் எனக்கே சொந்தம் என்று சொல்லிக்கொள்கிற கோயங்கா 14-வது வரிசையில் இருக்கிறார்; சேஷசாயி 24-வது வரிசையில் இருக்கிறார்; டால்மியா 25-வது வரிசையில் இருக்கிறார்; சமீபத்தில் நாம் பஸ்களை எடுத்துக் கொண்ட டி.வி.எஸ். 27-வது வரிசையில் இருக்கிறார். இப்பொழுது தேசியமயமாக்க வேண்டுமென்று பேசிக் கொண்டிருக்கிற சிம்ப்ஸன் கம்பெனியார் 28-வது வரிசையில் இருக்கிறார்கள், பங்கிங்காம் கர்னாடிக் மில் சொந்தக்காரர் 31-வது வரிசையில் இருக்கிறார்; திரு. ஜி. வெங்கடசாமி நாயுடு அலுமினியம் பாக்டரி நடத்துபவர் 32-வது வரிசையில் இருக்கிறார்; ஏ. அண்ட் எஃப். ஹார்வி 40-வது வரிசையில் இருக்கிறார்; திரு. கருமுத்து தியாகராச செட்டியார் 42-வது வரிசையில் இருக்கிறார்; திரு. கே. சி. பி. ராமகிருஷ்ணன் 45-வது வரிசையில் இருக்கிறார்; திரு. ரெங்கசாமி நாயுடு 47-வது வரிசையில் இருக்கிறார்; பாரி அண்டு கோ 51-வது வரிசையில் வருகிறது; ஜி. டி. கோத்தாரி 53-வது வரிசையில் இருக்கிறார்; தமிழகத்தில் இருக்கக்கூடிய கோத்தாரி 67-வது வரிசையில் இருக்கிறார்; திரு. எம். சிடி. எம். செட்டியார் அவர்கள் 72-வது வரிசையில் இருக்கிறார்; இப்படிப்பட்ட முதலாளிகள் எல்லாம் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்று அந்தக் கமிஷனின் பட்டியல் கூறுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல பத்திரிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய திரு. ஆதித்தனார் அவர்கள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் அறிவிப்பார்களா? /

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, நான் இப்போது மொனாபலீஸ் கமிஷன் பட்டியலைப் படித்தேன். இந்தியாவிலே உள்ள முதலாளிகளின் பட்டியல் கொடுக்கப்பட்டது. அதிலே தமிழகத்திலே 17 முதலாளிகள் என்று பட்டியல் கூறுகிறது. இப்படிப்பட்ட கோடீஸ்வரர்கள் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய சொத்துக்களையெல்லாம் அரசு ஏற்று நடத்தக் கூடாது என்று சொல்பவர்களுக்குப் பதிலாகத்தான், காம்பன்சேஷன் முழு அளவில் கொடுக்க வேண்டும் என்று சொல்பவர்களுக்குப் பதிலளிப்பதற்காகத்தான் 25-வது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இந்தத் திருத்தத்தின்படி தேவையான சொத்துக்களைக் கொடுத்துவிட்டு மற்றவற்றை அரசாங்கம் எடுக்கலாம் என்றிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இப்படிச் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. மகாத்மா காந்தி அவர்கள் இறந்த வீடான பிர்லா மாளிகை நினைவுச் சின்னமாக வைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். அந்த வீட்டிற்கு நஷ்ட ஈடாக 55 லட்சம் ரூபாய் தரப்பட்டது. அந்த அளவு ரூபாய் கூட கொடுக்கக் கூடாது என்பது என் கருத்து. ஒரு சிறிய



விவசாயியின் நிலத்தை எடுக்கும்போது நாம் மிகக் குறைந்த அளவில் காம்பன்சேஷன் கொடுக்கிறோம். ஆனால் 100 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தாராளமாக காம்பன்சேஷன் கொடுக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, May I know whether the grant of one licence has been referred to the Monopolies Commission after the appointment of the Monopolies Commission by the Government of India?

MR. DEPUTY SPEAKER: Your question is not clear.

THIRU K. M. SUBRAMANIAM: The Monopolies Commission was appointed to see that monopoly is not held by 72 persons. I would like to know whether the Central Government have referred the issue of at least one licence to the monopoly commission?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மூலமாக இந்தக் கேள்வியைப் பாராளுமன்றத்திலே எழுப்பலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ஏகபோக முதலாளிகள் இந்தக் காலத்திலே உருவாகியிருக்கிறார்கள். இது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம். கடைசி நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுத்து மூலமாக முதலாளிகளைப் பற்றி எழுதியிருக்கிறார். அண்ணா அவர்கள் யாரையும் கடிந்து பேசமாட்டார், கடிந்து எழுத மாட்டார். அப்படிப்பட்டவரே "இப்போது 22 ஏகபோக குடும்பங்கள் இருக்கின்றன" என்று எழுதியிருக்கிறார். அவர்கள் முதலாளிகளை முதலைகள் என்றும் திமிங்கலம் என்றும் கடிந்து எழுதியிருக்கிறார். "இந்தப் பண முதலைகள் ஒழியும் நாள் நமக்கு மகிழ்ச்சியான பொங்கல் விழாவாகும்" என்று பொங்கல் விழா செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

இந்த ஏகபோக முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய சொத்துக்கள் மக்களுடைய நலனுக்காகா இருக்க வேண்டுமென்று எடுக்கும்போது நஷ்ட ஈட்டுத் தொகை என்கிற கேள்வியே இருக்கக் கூடாது. அவர்கள் இதுவரை எவ்வளவோ லாபம் சம்பாதித்திருப்பார்கள். எவ்வளவு பணம் திரட்டியிருக்கிறார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தால், அதுவே பெருந்தொகையாக இருக்கும். அவர்கள் சம்பாதித்தது லட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் இருக்கும். இப்பொழுதுள்ள சிம்ஸன், டி.வி.எஸ். கம்பெனிகளை எடுத்துக்கொண்டால் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. சிறு முதலாளிகளாக இருந்தால் நஷ்ட ஈடு கொடுப்பதில் தவறு இல்லை, ஆட்சேபனை இல்லை. தேசத்தின் நன்மையைப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தில் 31-வது பிரிவிலே 'No man shall be dispossessed of property except by law' என்று சொல்லியிருப்பதைப் பார்க்க வேண்டும். Law can be promulgated by the State Legislature also

ஆகவே, தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் திட்டமிட்ட முறையில் தமிழக அரசு எந்தெந்த தொழில்களை ஏற்று நடத்த முன்வருகிறதோ, அவற்றுக்கான வசதியும் வாய்ப்பும் ஏற்படும். தொழிலாளர்களுக்கான பிராவிடெண்ட் நிதி 30 லட்சம் ரூபாய் கொடுக்காத முதலாளிகளும் இந்த நாட்டில் இருக்கிறார்கள். ஈ.எஸ்.ஐ. நிதிக்குத் தொழிலாளர்கள் பணம் கொடுத்தும், முதலாளிகளின் பங்கைப் போடாதவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் 'அன்-சோஷியல் எலிமென்ட்ஸ்'. இவர்களைக் குறித்து மிக்க கவனம் செலுத்த வேண்டும். இதில் எந்தவித கட்சிப் பிரச்சினையும் கிடையாது.

நிலச் சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிடும்போது, அம்மையார் அவர்கள் பேசும்பொழுது மடங்களுக்கும் கோயில்களுக்கும் இருக்கும் சொத்துக்கள் புனிதமானவை, அவற்றைத் தொடக் கூடாது என்றார்கள். நான் ஒன்றும் மறுத்துப் பேச விரும்பவில்லை. அண்மையில் இருக்கக்கூடிய கேரள மாநிலத்தில் கோயில்களின் சொத்துக்களையெல்லாம் அரசே ஏற்றுக் கொண்டு, கோயில் செலவுகளுக்கு வேண்டிய ஐந்து லட்சம் ரூபாயோ, பத்து லட்ச ரூபாயோ எவ்வளவு தேவையோ அவைகளைக் கொடுத்து வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டார்கள். அதையும் தமிழகம் செய்ய வேண்டும். ஒரு சில விஷயங்களில் நான் பெரியாரைப் போற்றுகிறேன். அவருடைய கருத்து சிலவற்றில் ஒன்றுபடுகிறது. தமிழகத்தில் அவருக்கு ஆதரவு இருக்கிறது. கோயில் சொத்தை எடுக்கக் கூடாது, அதற்காக ஒரு தர்மகர்த்தா கோயிலுக்குள் உண்ணாவிரதம். இருக்கிறார் என்றால் அதற்காக தமிழகம் பூராவும் ஆதரவாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அது எப்படி சாத்தியமாகும்? கோயில்களுக்கும், மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும் தேவையானவற்றைக் கொடுக்கக்கூடிய நிலையில் உச்ச வரம்பு கட்ட வேண்டும். கோயில் சொத்துக்களை யெல்லாம் அரசு ஏற்று, அந்த ஸ்தாபனங்களின் வேலைகள் குறைவின்றி நடைபெற தேவையான அளவு கொடுக்க வேண்டும் என்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

இப்போது கேரள அரசு அவசரச் சட்டம் கொண்டு வந்தது. அந்நியருக்குச் சொந்தமாயுள்ள தேயிலைத் தோட்டங்களை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அது திரும்பி அனுப்பப்படவில்லை நம்முடைய மாநிலத்திலும் ஆனைமலை, நீலகிரி போன்ற இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் அந்நியருக்குச் சொந்தமாக இருந்து வருகின்றன. இதன் மூலம் நமக்கு ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கும். ஆகவே, அவைகளை அரசு ஏற்று நடத்தவும் இந்தச் சட்டம் இடம் வருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர்





அவர்கள் சாத்தனார் மேற்கோளை ஆரம்பத்தில் எடுத்துக் காட்டினார்கள். இன்றைக்கு சமுதாயத்திலே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறுதலுக்கேற்ப நடந்து கொள்வதுதான் பரிகாரம். அரசு பல நடவடிக்கைகளை எடுக்கும்போது எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஆதரித்து நிற்பார்கள். நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் வீரமாகப் போராடியிருக்கிறார்கள். மத்திய அரசிலே நல்லபடியாக பணியாற்றியிருக்கிறார்கள் அவர்களே இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு திருத்தங்களை அவர்கள் வாபஸ் வாங்கியதன் காரணமே கஷ்டமான நேரத்தில் 1969-லே நம்மை ஆதரித்த கட்சி இப்பொழுது விடாப் பிடியாக இருக்கிறார்கள் என்ற காரணத்திலேதான் நின்றது, அந்தப் பெருமை நமக்கு இருக்கிறது. அந்தப் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு தமிழகத்திலே என்ன என்ன சட்டங்களை நாம் கொண்டுவர வேண்டுமோ அவற்றையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்னும் பல காரியங்களைப் பற்றிப் பேச வேண்டியிருந்தாலும் பல மேற்கோள்களைச் சொல்லா விட்டாலும் கூட ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

சொத்துக்களை எடுக்கின்றபோது பலருக்கும் வருத்தம் வருகிறது. நான் உங்கள் அனுமதியோடு ஒரு மேற்கோளைப் படிக்க விரும்புகிறேன்.

'A form of property that preceded the bourgeois form; there is no need to abolish that; the development of industry has to a great extent already destroyed it, and is still destroying it daily... You are horrified at our intending to do away with private property. But in your existing society, private property is already done away with for nine-tenths of the population; its existence for the few is solely due to its non-existence in the hands of these nine-tenths. You reproach us, therefore, with intending to do away with a form of property, the necessary condition for whose existence is, the non-existence of any property for the immense majority of society' என்று 125 ஆண்டுகளுக்கு முன்பே மார்க்ஸ் எழுதியிருக்கிறார். ஒரு சிலருடைய கையிலே இருக்கும் சொத்துக்களைப் பெருவாரியான மக்களின் கையிலே கொடுக்கக் கூடிய முறையிலே அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன், வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை மிகக் கடுமையாக சுதந்திராக் கட்சியின் சார்பாக எதிர்த்துச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 பிப்ரவரி 1

முதன்முதலாக இங்கு பேசிய நண்பர்கள் இந்தத் திருத்தம் வந்துவிட்டால் ஏழை எளியவர்களுக்கு நன்மைகள் ஏற்படலாம் என்ற தோரணையிலே பேசினுர்கள். என்னைப் பொறுத்த வரையிலும் இது பயங்கரமான தீர்மானமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திர்மானத்திற்குப் பிறகு நம்முடைய நாட்டிலே ஒரு பயங்கரமான நிலைமை ஏற்படுகிறது. நம்முடைய நாட்டிலே ஏகாதிபத்தியம், டோட்டாலிடேரியன் ஸ்டேட் இருக்க வேண்டுமா, இல்லாவிட்டால் சரிசமமான உரிமைகள் வழங்கப்பட்ட நாடாக இருக்க வேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

சோஷலிசம் பேசிக் கொண்டு பல நாடுகள் இருக்கின்றன. தங்கமணி அவர்கள் ரஷியாவிலே ப்ராப்பர்டி ரைட் இருப்பதாகச் சொன்னுர்கள். ரஷியாவைப் பார்த்து சீனு என்ன சொல்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். இந்த நிலைமை படிப்படியாக வளர்ந்து கொண்டு வருகிற நேரத்திலே கடுமையான டோட்டாலி டேரியன் ஸ்டேட் ஆகத்தான் வந்து முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே நிச்சயமாக கூறித்தான் ஆக வேண்டும். நீங்கள் ஜனநாயகம் நமக்குத் தேவையில்லை என்றுல் இதைக் கொண்டு வாருங்கள், ஆட்சேபணையில்லை. இதைக் கொண்டு வருவதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயகம் எப்படிப் போகிறது என்பதை ஒரே ஒரு எடுத்துககாட்டு மூலம் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

டெல்லியிலே நடந்த ஜந்தர் மந்தர் விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம், அதிகமாக நான் அதைப் பற்றியெல்லாம் பேச விரும்பவில்லை. எந்த ஒரு முக்கியமான இடத்தையும் பெற்றுக் கொள்ளலாம், அதற்காக அரசியல் சாசனமோ அல்லது சட்டங்களோ தேவையில்லை என்ற நிலைமை வந்துவிட்டால் பயங்கரமான நிலைமை வந்து சேரும். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தத் திருத்தத்திற்கும் ஜந்தர் மந்தர் நிகழ்ச்சிக்கும் என்ன தொடர்பு என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ப்ராபர்டி ரைட் இல்லை என்ற நம்பிக்கையிலே மெஜாரிட்டி இருந்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மை தான் வளரும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மனப்பான்மை வளர்ந்தது, மக்கள் மன்றமும் ஆதரிக்கவில்லை, நாடாளுமன்றமும் ஆதரிக்கவில்லை

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதைத்தான் சொன்னேன். இப்பொழுது நாடாளுமன்றம் ஆதரிக்காமல் இருக்கலாம். படிப்படியாக அங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதைத்தான்



1972 பிப்ரவரி 1] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

நான் இந்த நேரத்திலே எச்சரிக்கையாகச் சொல்கிறேன். ப்ராப்பர்ட்டி ரைட்ஸ் சட்டத்திலே இருக்கின்றன, இருக்கும் என்ற மனப்பான்மை வந்திருந்தால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த எண்ணமே ஏற்பட்டிருக்காது. படிப்படியாக இந்த மனப்பான்மை வளரக்கூடிய நிலைமையைத்தான் பார்க்கிறோம்.

முதலமைச்சர் அவர்கள் பேசியதை நான் ஒத்துக்கொள்கிறேன், அதை நான் பாராட்டுகிறேன். இப்பொழுது இருக்கலாம், ஆனுல் எதிர்காலத்திலே எந்த அளவுக்குப் போகக்கூடும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், மொத்தம் உள்ள 522 உறுப்பினர்களிலே, 360 பேர்கள், கிட்டத்தட்ட 400 ; 450 பேர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ; வலிமை வாய்ந்த இந்த நிலைமைக்குப் போவதற்குக் காரணம் இதுதான். எதிர்காலத்திலே தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலைமை வந்தாலும் வரும். கோர்ட்டிற்குப் போக முடியாத நிலைமையும் வந்துவிடும். சமீபத்திலே எந்த அளவுக்குக் கோர்ட்டைத் தாக்கிப் பேசப்பட்டது என்பதைப் பார்க்கிறோம். இந்த மன்றத்திலே, அந்த மன்றத்திலே கோர்ட்டைப் பற்றிப் பேசப்பட்டது. கோர்ட்டைப் பற்றிப் பேசி அவமதிக்கக்கூடிய நிலைமை வளர்வதைப் பார்க்கிறோம். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இயற்றப்படுகிற சட்டங்களை வைத்துக்கொண்டுதான் நீதிமன்றங்கள் நடைபெறுகின்றன. இங்கே திரு. லத்தீப் அவர்கள் நீதிபதிகளைப் பற்றி வேகமாகப் பேசினுர். அதை ஆளுங்கட்சி உறுப்பினர் திரு கணபதி அவர்கள் மறுத்து பேசினுர்கள். பாராளுமன்றத்திலே நீதிபதிகளைத் தாக்கிப் பேசுகின்ற எண்ணம் எழுந்தது. ஆனுல் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் இயற்றப்பட்ட சட்டங்களுக்குட்பட்டு நீதிபதிகள் தீர்ப்புகள் வழங்குகின்ற நேரத்திலே நீதிபதிகள் குறைக்கு ஆளாக்கப்படக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. எந்தக் கருத்தையும் பெரும்பான்மையினர் சொன்னுல் உடனே சிறுபான்மையினர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நியாயம்தான் வெற்றி பெறும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திரு கணபதி அவர்கள் இங்கே கண்டித்ததையும் முதலமைச்சர் அவர்கள் சொன்னதையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன் மகிழ்ச்சியடைகிறேன். ஐ ரியலி சப்போர்ட் இட் ஆனுல் பாராளுமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, அங்கே கண்டிக்கவில்லை பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். நான் எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன் என்றும் இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் சொன்னுல் ஆளுங்கட்சியாக இருக்கிறவர்கள் கண்டிக்கிறுர்கள். ஆனுல் அங்கே ஆளுங்கட்சி கண்டிக்கவில்லை. நிலைமை எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் நான் இதை எடுத்துக் காட்டாகச் சொல்கிறேன்.

(திரு லத்தீப் அவர்கள் எழுந்தார்கள்)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். அப்புறம் சொல்லுங்கள் நான் முடித்த பிறகு சொல்லுங்கள்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member has not yielded and how can you compel him?

THIRU M. A. LATHEEF: He has yielded.

நான் நீதிபதிகளுக்கு அவமானம் அளிக்கக் கூடிய வகையிலே பேசினேன் என்று . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member should ask for my prior permission. It is not enough if the hon. Member has yielded.

**திரு. எம். ஏ. லத்தீப்:** எல்லா வகையிலும் இப்படித்தான் நடக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன் . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member should not advise the Chair. He should take my prior permission.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தங்கள் அனுமதியோடு இப்பொழுது பேசுகிறேன். நீதிபதிகளுக்கும் நீதிமன்றங்களுக்கும் குறைவு ஏற்படும் விதத்திலே நான் பேசினேன் என்ற ஒரு எண்ணத்தை மக்களிடத்திலேயும், இந்த மன்றத்திலேயும் ஏற்படுத்த என்னுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சுதந்திராக் கட்சியின் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே முயற்சிக்கிறார்கள். அதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறேன். எனக்கு அந்தப் பொறுப்புணர்ச்சி உண்டு. நீதிபதிகளுக்கு நாட்டு மக்களும், அதுவும் நாட்டுமக்களின் பிரதிநிதிகளாகயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களே மரியாதையைக் கொடுக்காவிட்டால் அவர் களிடத்திலேயிருந்து நாம் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்? நீதிபதிகளைத் தனிப்பட்ட முறையிலேயோ, கண்டனமாகவோ, அவமானமாகவோ நான் பேசவில்லை.

நான் சொன்னது. சுப்ரீம் கோர்ட்டே தன்னுடைய சொந்த ஒரு தீர்ப்பை 4 முறைகள் இப்படி மாற்றியிருக்கிறது. ஒரே சட்டம், கான்ஸ்டிடியூஷனல் அமெண்ட்மெண்ட் (ஃபோர்த்) என்ற நான்காவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஒரே அடிப்படையை வைத்துக்கொண்டு 4 விதமாகத் தீர்ப்புச் சொல்லி யிருக்கிறார்கள். 4 பேர் ஜட்ஜ்களாகயிருந்த காலத்தில், ஒரே சட்டத்தில் எப்படி மாறுதல் வருகிறது? இதற்குப் பொது மக்களால் பேசப்படும் காரணம் அரசியல் வந்து விடுகிறது என்று பேசுகிறார்கள். இம்மாதிரி நடப்பது அவர்களுக்கே சரி அல்ல. நீதிமன்றங்களின் மரியாதையிலும், கௌரவத்திலும் எனக்குள்ள மிகுந்த அக்கறையின் காரணமாக அப்படிச் சொன்னேனே தவிர, திரும்பத்திரும்ப, தலைவரவர்களே, நான் தங்களுக்குத் தெரிவித்துக்



கொள்கிறேன், நான் வழக்கறிஞன் என்ற முறையில் நீதிமன்றங் களையும், நீதிபதிகளையும் மிகுந்த மரியாதையோடு நடத்த வேண்டுமென்பதில் நான் யாருக்கும் சளைத்தவன் அல்ல. அதுவும் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நான் நிச்சயம் சளைத்தவன் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள் பேசும்பொழுது நோடோரியஸ் ஜட்ஜ்மெண்ட் என்று சொன்னார்கள். அது சர்ச்சைக்குரிய ஒன்று. 3 ஜெனரேஷன் களுக்குப் பிறகு ஜட்ஜ்கள் இருக்கிறார்கள், வக்கீல்கள் 2 ஜென ரேஷன்களுக்குப் பிறகு இருப்பதாகச் சொன்னார்கள். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் (குறுக்கீடு) நாங்கள் சொல்லவில்லை என்று சொல்லலாம். ஆனால் . . .

MR. DEPUTY SPEAKER: He has only quoted and it is not his own word.

யாரோ சொன்னதை எடுத்துச் சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அது ரொம்ப எளிதானது. ஒருவர் இப்படிச் சொன்னார் என்று சொல்லிவிடலாம். முதலமைச்சர்கூட இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் யாராவது சொன்னார்கள், தங்கள் தொகுதியில் பரவலாகப் பேசிக்கொண்டார்கள், பொது மக்கள் பேசிக்கொண்டார்கள் என்று சொல்லலாம். அதை அவர் சொன்னார், வாபஸ் வாங்கிக்கொள்ளவில்லை. அதை மூடி மறைக்கத் தேவையில்லை. நீதிபதிகள் 3 ஜெனரேஷன்களுக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்று ஒருவர் சொன்னார் என்று சட்ட மன்றத்திலே குற்றம் சாட்டுவது சரியா?

**திரு. எம். ஏ. லத்தீப்:** ஆதாரம் இங்கேயே இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நீங்கள் சொன்னீர்கள், என்னுடைய கருத்தை நான் சொல்வதற்கு உரிமை இல்லை என்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெரிய விவகாரம் பற்றி, சுப்ரீம் கோர்ட்டைப் பற்றிப் பேச வேண்டாம். சுப்ரீம் கோர்ட்டைப் பற்றி இந்த மன்றத்திலே நடக்கும் விவாதத்திலே இழுக்க வேண்டாம். நீதிபதிகள் பற்றித் திரும்பத்திரும்பப் பேச வேண்டாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம். பலபேர் இங்கு பேசிக்கொண்டிருந்தார்கள். ஏதோ நம்முடைய நாட்டிலே முற்போக்காக இருப்பவர்கள் பல நன்மைகளைச் செய்யக்கூடிய அப்படிப்பட்ட நிலைமைகள் இந்தத்

திருத்தத்தால் வரலாம் என்று சொன்னார்கள். நான் குறிப்பாகச் சொல்கிறேன். எந்த ஒரு நன்மை ஏற்படுகிறது என்றாலும் அதற்கு சுதந்திராக் கட்சியோர் அல்லது நானோ பின்வாங்கவில்லை. ஆனால் இந்த ஒரு திருத்தத்தால்தான் ஏற்படுகிறதா என்றால் இல்லை.

இந்தத் திருத்தத்தால்தான் இந்த நன்மைகள் ஏற்படுகின்றனவா என்றால் இல்லை என்பது என் கருத்து. நன்மைகள் ஏற்படுகின்றது என்றால் யார்தான் வேண்டாமென்று சொல்வார்கள் ? உலகத்திலேயுள்ள எல்லோரும் நன்மைகள் ஏற்பட வேண்டுமென்றுதான் சொல்வார்கள். ஆனால் நான் சொல்வது, இங்கே ஏற்கனவே பல கருவிகளை மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் கொடுத்திருக்கிறோம். அதைச் சரியாகப் பயன்படுத்தாமல், ஏதோ இந்தத் திருத்தம் வாராமல் இருக்கிற காரணத்தினாலேதான் நல்ல பல திட்டங்களைக் கொண்டுவர முடியவில்லை, மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்த முடியவில்லை என்று சொல்வதைத்தான் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏற்கனவே இன்கம் டாக்ஸ் உரிமையை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறோம். எத்தனை பேர்களிடத்திலே இன்கம் டாக்ஸ் போட்டு எத்தனை பேர்களிடத்திலே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் ? இன்றைக்கு எவ்வளவு கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்தால் இன்கம் டாக்ஸ் வாங்கிக்கொள்ளாமல் தேங்கிக் கிடக்கிறது ? கணக்குப் போட்டால் கிட்டத்தட்ட ஒரு ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு வரும். இன்கம் டாக்ஸ் போட்டுக் கிடைத்திருந்தால் நம்முடைய எல்லா மாநில அரசாங்கங்களுக்கும் பிரித்துக் கொடுத்திருந்தால் எவ்வளவோ பணம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும். எப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பை நழுவ விட்டிருக்கிறார்கள்.

அடுத்து, வெல்த் டாக்ஸ் சரியாகப் போடப்படவில்லை. பிராப்பர்ட்டி டாக்ஸ் சரியாகப் போட்டு சரியாகக் கணக்கு இருந்துவிட்டால் இன்றைக்கு சட்டத்தின் பிரகாரம் ஒருவரும் பணம் சேர்க்கவே முடியாது. எப்படிப் பணம் தேங்கிக் கிடக்கிறது ? ஆங்காங்கே அரசாங்கத்தை ஏமாற்றி அதனால் ஆங்காங்கே ஒவ்வொருவர் 4 கார்கள், 5 கார்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்காக அரசியலமைப்புச் சட்டத்திலே, நிர்மாணச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்தால்தான் பிடிக்க முடியும் என்பது அல்ல. எத்தனை தடவை, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி பாராளுமன்றத்திற்கு கருத்துக்களை அள்ளி வீசி இருக்கிறார்கள் ? நடைமுறைக்கு அவைகளை எடுத்துக்கொண்டார்களா ? ஏன் நழுவ விட்டார்கள் ? ஆனஸ்டாக அரசாங்கம் நடத்தி, நேர்மையாக வரிகளை வசூல் செய்தால் எப்படிப் பணம் தேங்கிக் கிடக்கும் ஒருவரிடம் ? மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல பெரிய



பெரிய பணக்காரர்கள் எப்படி இருக்க முடியும் ? வெல்த் டாக்ஸ் சரியாக வாங்கவில்லை என்பதுதான் அர்த்தம் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயம். இப்பொழுது அது தெரியாது. போகப்போகத் தெரியும், 5 ஆண்டு, பத்து ஆண்டுக் காலத்திற்குப் பிறகு தெரியும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிலைமை எப்படி என்று பார்க்க வேண்டும். எல்லா விஷயங்களிலும் தங்களுக்குப் பங்கு இருக்க வேண்டும், ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் தங்களுக்குப் பங்கு பரவலாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்ற நிலைமை, வளர்ந்து கொண்டே வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதன் முன்னோடியாகத்தான் இதை நான் கருதுகிறேன். ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பிரச்சனையிலும் நுழைந்து எப்படி எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று அதிலேயெல்லாம் தலையிடும் நிலையெல்லாம் ஏற்படுகிறது.

இதைப் பேசுவதால் எனக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது ? எதற்காகச் சொல்கிறேன் என்றால் போகப்போக எல்லா எதிர்க்கட்சிகளும் அப்படித்தான் ஆகப்போகிறது. பெரிய பணக்காரர்கள் எதிர்க்கட்சி அருகில்கூட வரமாட்டார்கள், அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படப் போகிறது. எங்கே ஆளுங்கட்சியாகயிருந்தாலும் அந்த ஆளுங்கட்சிக்குப் போக வேண்டுமென்ற ஆசை வரும் நிலைமை ஏற்படும். (மணியடிக்கப்பட்டது) நான் ஒருவன்தான் எதிர்த்துப் பேசுகிறேன், கொஞ்ச நேரம் கொடுங்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் பிராப்பர்ட்டீஸ் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஆளுங்கட்சிக்குப் போக வேண்டுமென்ற அப்படிப்பட்ட ஒரு மனப்பான்மை வளருமே தவிர பிராப்பர்ட்டீஸ் வைத்துக் கொண்டிருப்பவர்கள் எதிர்க்கட்சியின் பக்கம் வரும் நிலைமையையே பார்க்கமுடியாது. அதை மறுக்க முடியாது. ஏனென்றால் பயம். எதிர்க்கட்சியோடு நாம் இருப்பதைப் பார்த்தால் பணம் போய்விடுமே, அரசாங்கம் தகராறு செய்யுமே என்ற கவலை வளர்ந்து வருகிறது. எனக்கு எந்தவிதமான கவலையும் இல்லை. நேஷனலைஸ் செய்வதிலே, எதை எடுத்துக்கொண்டாலும் எனக்குத் தனிப்பட்ட முறையில் கவலையில்லை. எதிர்காலத்தில் வரும் பயங்கரத்தைச் சொல்வதுதான் என்னுடைய கடமை. அரசாங்கத்திற்குச் சொல்கிறேன், படிப்படியாக ஒவ்வொன்றையும் நேஷனலைஸ் செய்வது என்று செய்து, இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவந்து அதன் காரணமாக எவரும் பயன்படுத்திக்கொள்ளுகின்ற நிலைமை ஏற்பட்டால் கடைசியில், ஒரு புலி மனிதனுடைய மாமிசத்தை ருசித்தவுடன் அதையே சாப்பிட வேண்டுமென்ற ஆசை அதற்கு வருமாம், அம்மாதிரி அரசாங்கத்திற்கும் இதுவும்

போதாது, இதுவும் போதாது என்று வருகின்ற நிலை தெரிகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. பல விஷயங்களைச் சொன்னார்கள். மால் பிராக்டிஸ், தவறான போக்குகளைப் பொறுத்த வரையில், அவை நடைபெறத்தான் போகிறது. ஏனென்றால் நம்முடைய நண்பர் ஒரு கருத்தைக் கொடுத்திருக்கிறார்கள், சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கையாகவும் சொன்னார்கள்.

ஒரு பெரிய கருவியை ஒப்படைத்த பிறகு அதை அரசாங்கம் சரியான வகையில் பயன்படுத்துமா என்கிற அச்சந்தான் எனக்கு ஏற்படுகிறது. இந்த கருவியை மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ் மூலமாக மாநில அரசாங்கத்திற்கோ கொடுத்து விட்டாலோ சரியான முறையிலே பயன்படுத்த மாட்டார்கள் என்ற பயம் எனக்கு மட்டுமல்ல; இங்கே பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள்கூட சில விஷயங்களைக் குறிப்பாகக் கூறி எப்படி எப்படி எல்லாம் நடைபெறலாம் என்று சொன்னார்கள்.

அரசாங்கத்தின் சார்பாகச் செய்யப்படக்கூடிய வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்று அமைச்சரே நேரடியாகப் பார்க்க முடியாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு படிப்படியாகக் கிராமத்திற்குச் செல்லுகின்ற நேரத்தில் பல தவறுகள் நடக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

இன்றைக்குக் காலையில் கூட டெலிபோன் வந்தது. டிஃபென்ஸ் ஃபண்ட் கலெக்ஷனில் பயமுறுத்தல் நடக்கிறது. விக்டிமைசேஷன் செய்கிறார்கள் என்று டெலிபோன் வந்தது. இந்த மாதிரி நல்ல காரியமாக இருந்தாலும் எந்த அளவுக்கு நடைமுறையில் தவறான நிலைமை ஏற்படலாம் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** டிஃபென்ஸ் ஃபண்ட் பற்றிச் சொன்னார்கள். ஏதாவது ஊழல் நடைபெற்றிருக்கிறதா? என்ன ஊழல்? எந்த அதிகாரி? என்ற ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் செய்யாறுக்குச் சென்றிருந்தேன். அங்கு ஐந்தாறு பேர் வந்து என்னிடம் சொன்னார்கள், நாளைய தினம் முதலமைச்சர் கூப்பிட்டுக் கேட்டால் அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கூட அவர்களிடம் சொன்னேன். அங்கு சில அதிகாரிகள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் டிக்கட் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். பிறகு இரண்டு ரூபாய் இறை கொடுத்ததாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட தவறுகள் ஆங்காங்கு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நல்லெண்



ணத்தோடு இந்தக் காரியத்தை மேற்கொண்டிருந்தாலும் ஆங்காங்கு சில இடங்களில் இப்படிப்பட்ட தவறான நிலைமைகளும் ஏற்படுகின்றன என்பதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செய்யாறு பற்றி மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தயவு செய்து அதைப் பற்றி எழுதிக் கொடுக்க வேண்டும். கோயம்புத்தூரைப் பற்றியும் சொன்னார்கள். இரண்டையும் பற்றி அவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கோவையில் ரேஷன் கார்டு கொடுக்கும் நேரத்தில் ஒரு ரூபாய் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். கோவையிலிருந்து செய்தி வந்தது. பத்திரிக்கையில் கூட வந்திருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதையெல்லாம் நான் ஒரு பெரிய குறையாகச் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன் சொல்லவில்லை. எப்படி ஒரு கருவியை ஒப்படைத்தால் என்னென்ன நிலைமைகள் எல்லாம் ஏற்படும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். ஜஸ்டிஷியபிளாக இருக்கலாமா, வேண்டாமா? ஜஸ்டிஷியபிளாக இல்லாமல் இருந்தால் எந்த வித நிலைமை ஏற்படும் என்ற அச்சத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். கோர்ட்டுக்குப் போய் கோர்ட் தீர்ப்புக் கொடுக்கக் கூடிய பிரச்சினை இல்லையென்று முடிவு செய்துவிட்டால் நாளைய தினம் அதிகாரி தவறு செய்தாலும், அதிகாரி தவறான மதிப்புப் போட்டாலும் அதிகாரியினுடைய தவறை எடுத்துக்காட்டி கோர்ட்டுக்குப் போகக் கூடிய உரிமை இல்லை என்றால் சாதாரண அதிகாரியிடத்தில் எவ்வளவு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய சாதாரண ஏழைகளுடைய நிலை என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதால் ஏராளமான வேலை வாய்ப்பு ஏற்படும் என்று பல மெம்பர்கள் கூறினார்கள். இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடுகிறது. அந்த நிலையை நாம் பல ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சட்ட மன்றத்திலும், பாராளுமன்றத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தத் திருத்தத்தைக்கொண்டு வருவதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்குப் பதிலாக வேலையில்லாத் திண்டாட்டம் பெரிய அளவுக்குத் தாண்டவமாடப் போகிறது என்ற பயங்கரமான எச்சரிக்கையை இந்த மாமன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 பிப்ரவரி 1

இப்போது நேஷனலிசேஷன் செய்யும் நேரத்தில் சரியான வகையில் காம்பன்சேஷன் இல்லை. அரசாங்கம் எதை வேண்டுமானுலும் நிர்ணயித்து காம்பன்சேஷனைக் கொடுக்கலாம் என்று நிலைமை இருக்கிறது. சரியான வகையில், சரியான காம்பன்சேஷன் கிடைக்காது என்ற நிலைமை வந்தால் நம்முடைய தமிழ் நாட்டில் இன்வெஸ்ட்மென்ட் கிளைமேட் நிச்சயமாக பெரிய அளவு பாதிக்கப்படும் என்ற கவலையை நான் இந்தச் சட்டமன்றத்தில் கூற விரும்புகிறேன். நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் தொழிலமைச்சராகவும் இருக்கும் காரணத்தால் அவர் இந்த விஷயத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும். இனிமேல் சரியான காம்பன்சேஷன் கிடைக்காது என்ற காரணத்தால் யாரும் தைரியமாக இன்வெஸ்ட்மெண்ட் செய்ய முன்வரமாட்டார்கள். நமக்கு எதற்கு வம்பு என்று படிப்படியாக இன்வெஸ்ட்மெண்ட் கிளைமேட் கெட்டுவிடக்கூடிய அளவுக்குப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டு அதன் மூலம் அன்-எம்ப்ளாய்மெண்ட் பிராப்ளம் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு வளரத்தான் போகிறது என்ற பயங்கரமான எச்சரிக்கையைச் சொல்ல விரும்புகிறேன்.

It is said to be good for the people; but the question is whether it is really good for the people.

என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அண்மையில் பாராளுமன்றத்தின் சார்பில் ஒரு கமிஷன் போட்டிருந்தார்கள். நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்தில் குறிப்பாக விடுகள் கட்டவும், மற்ற விஷயங்களுக்காகவும் லாண்ட் அக்விசிஷன் கமிட்டி என்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் போட்டார்கள். அதிலே பேராசிரியர் என். ஜி. ரங்கா அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். இப்போது சட்டசபை உறுப்பினராக இருக்கும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் பாராளுமன்றத்தில் இருந்தபோது அதிலே உறுப்பினராக இருந்தார்கள்.

அந்தக் கமிஷன் என்ன முடிவு செய்தது? லாண்ட் அக்விசிஷன் செய்து ஒரு விலை நிர்ணயம் செய்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, மார்க்கெட் வால்யூ உயர்ந்த பிறகு லாண்ட் அக்விசிஷனுல் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு ஹவுசிங் போர்டு ஸ்கீமில் இரண்டு கிரவுண்ட், மூன்று கிரவுண்டாவது கொடுக்கிறார்களா என்றால் இல்லை. நில ஆர்ஜிதம் செய்யும்போது எக்கர் 2,000 ரூபாய் என்று வாங்குகிறார்கள். பிறகு கிரவுண்ட் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வசூலிக்கிறார்கள். ஒருவருடைய நிலத்தை எடுத்துக் கொண்டு மற்றவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு விநியோகம் செய்யும்போது நிலத்தைக் கொடுத்தவருக்கு ஒரு கிரவுண்ட கூடக் கொடுக்க முடியாத நிலை இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று நடந்த நிலைமையை நான் நன்றாக அறிவேன். சென்னைக்கு அருகிலேயே நடந்திருக்கிறது,



1972 பிப்ரவரி 1] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

வில்லிவாக்கத்திற்குப் பக்கத்தில் பல இடங்களை இப்படி எடுத்துக் கொண்டார்கள். பலர் கண்ணீர் விட்டார்கள். இப்போது கோர்ட்டுக்குப் போகலாம் என்று இருக்கக்கூடிய நிலையிலேயே இந்த நில ஆர்ஜிதம் செய்வதை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாத நிலையில் என்ன நிலைமை என்று பார்க்கும்போது எதிர்காலத்திலே கோர்ட்டுக்குப் போகமுடியாத நிலை என்று ஏற்பட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று எச்சரிக்கையாகக் கூற விரும்புகிறேன்.

விக்டிமைசேஷன் ஆஃப் ஆப்போசிஷன் பார்ட்டீஸ் என்ற நிலை நிச்சயமாக ஏற்படும். எதிர்க்கட்சிகள் விக்டிமைஸ் ஆகத்தான் போகிறது. இப்போதே அப்படிப்பட்ட புகார்களை சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் அதிகாரக் குவியல் குவிந்துவிட்டால் விக்டிமைசேஷன் செய்யக் கூடிய பயங்கரமான வாய்ப்பு ஏற்பட்டுவிடும். விக்டிமைசேஷன் செய்யவில்லை என்று சொல்லுவது வேறு. விக்டிமைசேஷன் செய்தால் கோர்ட்டுக்குக் கூடப் போக முடியாத நிலைமையில், "என்னுடைய உரிமைக்காக வாதாடுகிறேன்" என்று சொல்லக் கூடிய அடிப்படை உரிமையையும் பறித்துக் கொண்டால், நிச்சயமாக நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் அடிமைகளாகும் நிலைதான் ஏற்படும்.

நான் ஒருவன் இதை எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் இப்படிப் பேசுவதால் எனக்குக் கிடைக்கக்கூடிய ஓட்டுக் கூட குறையலாம்.

நானும் பல்லாண்டு காலமாகச் சொன்னேன். தொழிற் சங்கத்தைப் பொறுத்தவரையில் அங்கே வேலைசெய்யக்கூடியவர்களே தொழிற்சங்கத் தலைவராக இருக்க வேண்டும். அப்படி நான் சொன்னபோது என்னைப் பிற்போக்குவாதி என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். நல்ல யோசனை சொன்னுல் அப்படி சொல்கிறீர்கள். இப்போது கழகம் சொன்னபோது என்ன நடந்தது? அதற்கு கழகத்தின் மீது குறை சொல்லவில்லை.

நாட்டிலே இருக்கும் நிலைமைகளைச் சொல்கிறேன். ஆறா, இது ஒரு புரட்சிகரமான சட்டம் என்று சொல்லாததால் எனக்கு 10 ஓட்டு கிடைக்காமல் போகலாம். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஒரு டாக்டரிடத்தில் ஒரு நோயாளி வருகிறபோது அவருக்கு செய்ய வேண்டிய சிகிச்சைகள் மாத்திரை கொடுப்பதோ, சஸ்திர சிகிச்சை செய்வதோ, எதை செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் 2—3 நாளைக்கு மாத்திரை மாத்திரம் சாப்பிட்டால் போதும், நோய் குணமாகிவிடும் என்று டாக்டர் சொன்னுரேயானுல், தற்காலிகமாக அந்த டாக்டர் பாபுலர் ஆகலாம். முதலில் சொன்ன டாக்டர் அன்பாபுலர் ஆகலாம் நான் அதைப் பார்த்து இருக்கிறேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரைக் கேட்டால் சொல்வார், சார், நீங்கள்

சொன்னமாதிரி மாத்திரை இன்ஜக்ஷன் போட்டுக்கொள்ளாமல் போய்விட்டேன். தவறு செய்துவிட்டேன், இப்போது கஷ்டப் படுகிறேன் என்று சொல்வார்.

இந்த நாட்டிலே இருக்கும் நிலைமையை எடுத்துச் சொல்கிறேன். இப்படிச் சொல்வதால் எனக்கு எந்தவிதமான அடிப்படை லாபமும் கிடையாது. நான் இன்னும் புரட்சிகரமான விஷயங்களைச் சொல்லி இன்னும் பாபுலராக முயற்சி எடுத்துக் கொள்ளலாம். நான் அதை விரும்பவில்லை. இதனால் ஏற்படக் கூடிய பயங்கரமான விளைவுகளை நான் எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் ஆகிறது. நீங்கள் ஏற்கெனவே அதிகமாகப் பேசிவிட்டீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இன்னும் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். இப்போது எந்த அளவுக்கு யதேச்சாதிகாரமான நிலை டெல்லியில் ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அமைச்சரவையில் இருப்பவர்களுக்கு சீட் இல்லை என்று சொல்கிறார்கள். நான்கூடச் சொன்னேன், நீங்கள் ஒரு ஆல் இந்தியா லீடராக இருந்து போட்டி போடுங்கள் என்று. எந்த அளவுக்கு இப்போது அதிகாரக் குவியல் மத்தியில் ஒருவர் கையில் போயிருக்கிறது என்று பார்த்தோம். எல்லா இடத்திலும் முதலமைச்சராக இருக்கக் கூடியவர்களுக்குப் பதவி இல்லை என்று சொல்லக் கூடிய ஒரு நேரத்தில், இத்தகைய அதிகாரங்கள் ஒரு அரசாங்கத்தின் கையில் கொடுக்கக் கூடியது நல்லதுதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவேதான், இப்படிப்பட்ட இந்தத் தீர்மானம் இங்கே வரும் நேரத்தில், அதை எங்கள் கட்சியின் சார்பாக, நாட்டில் இருக்கும் பொதுமக்களின் நன்மையைக் கருதி, வேலைவாய்ப்பு எதிர் காலத்தில் எப்படி பாதிக்கப்படும் என்பதைக் கருத்தில் கொண்டு, இதைச் சொல்கிறோம். நமக்குள்ளே கருத்து வேறுபாடு இருந்தாலும், அந்தக் கருத்து வேறுபாட்டை மதிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, நான் சொன்ன கருத்து லோக் சபையின் அந்த அறிக்கையிலே 13-வது பக்கத்திலே இன்று மத்திய சட்ட அமைச்சராக இருக்கிற மாண்புமிகு எச். ஆர். கோகலே அவர்களால் கூறப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த அவர், இன்று மத்திய அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருக்கிறார். திரு. கோகலே அவர்கள் சொல்கிறார்கள் :

It is rightly said, Sir, that law is one generation behind society and lawyers are two generations behind society. I may add that judges are three generations behind society.................



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போதும், அவ்வளவு போதுமே.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அதற்குப் பிறகு ஒரு சென்டன்ஸ்தான், அதுவும் அவர் சொன்னதுதான்.

**Mr. DEPUTY SPEAKER :** I have already argued on your behalf.

**Thiru M. A. LATHEEF :** The Member who said this was an eminent Member who spoke on this. These are the words uttered by the then Member of Rajya Sabha and at present a sitting, eminent and distinguished Judge of the Supreme Court—I am referring to Mr. Justice Hegde ......... அதைத்தான் நான் சொன்னேன்.

**Dr. H. V. HANDE :** That is exactly my point. Even in Parliament, they have said this and there is freedom in Parliament. Can we not say anything here? என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படும்.

**Thiru R. PONNAPPA NADAR :** Sir, I do not want to take the valuable time of this august House. I will answer some of the few criticisms levelled, which is the subject-matter of discussion.

On behalf of our party we whole-heartedly support this move. In supporting this move, we have expressed certain suggestions and we hope they may be examined by this Government as well as the Central Government. Much of the discussion has centred round the decision that has been rendered in the Bank Nationalisation case by the Supreme Court and as a result there has been some constitutional difficulties and to set them right, this has been brought forward. Parliament wanted to restore the position which prevailed before the Fourth Constitution Amendment Bill. They wanted to restore the *status quo ante*. So far as the decision of the Supreme Court is concerned, we are entitled to criticise it. But we do not have the choice to insinuate the Judges. I would in this connection refer to Article 121 which says that no discussion shall take place in Parliament with reference to the conduct of any judge. We should not talk of the conduct of any judge. We can just criticise any decision given by any learned judge. Of course, the erudition, the legal erudition of a judge canno be belittled by legislators sitting here. We have to study the judgment. We can criticise. I do not say that the decisions given by Their Lordships are inviolable. But we should say such things with restraint. We should know that judiciary is another limb of the Cinstitution just as Legislature is another limb of the Constitution. All these limbs should work in unison so that there will be harmony. That is what we should remember.

[Thiru R. Ponnappa Nadar] [1972 பிப்ரவரி 1

The Supreme Court is the highest judiciary of the land and whatever decision may be rendered by it, we will have to respect it. If any decision has been given and if we want any other thing, we will have to change the Constitution. That has been done by the 24th Amendment. That has been done by the 25th Amendment also. It has to be done in a constitutional manner. I am sure there is no need to generate any heat so far as the discussion is concerned.

So far as property rights are concerned, they are not absolute. They are not sacrosanct and are not inviolable. That is my submission. So far as a man is concerned, when he is born in society, society has a right to regulate by law what property the member should have. That is the interpretation which I would put forward. So far as property rights are concerned, I am sure no political party wants to do away with the right to property. I do not want to enter into a discussion on the question of property, the right to have property. etc. So far as our Constitution is concerned there is Article 19 (1) (*f*) which says that citizens shall have right to acquire, hold and dispose of property. That is a fundamental right. If there is contradiction between Article 19 and Article 14 of the Constitution, it could be made justiciable in a court of law. That is made clear under Article 31 of the Constitution.

So far as fundamental rights are concerned, I would say that fundamental rights are paramount. So far as directive principles of State policy are concerned, Article 39 (*b*) says the State shall direct its policy towards securing that the ownership and control of the material resources of the community are so distributed as to subserve the common good. That should be the objective.

I may here say that many parties were saying that we were reactionaries just before elections and that we have changed the political colour after elections. I am here to join issue with my friends that there are certain things which are enshrined in the fundamental principles. Take for instance the example with regard to prohibition. It is said in the directive principles, that the State shall endeavour to bring about prohibition throughout the territory of the land. Are we following it? That is the question which I ask.

Another point which I want to ask my learned Friend who is representing the Muslim League and who is the whip of the party is this. There is Article 44 of the Directive Principles that "The State shall endeavour to secure for the citizens a uniform civil code throughout the territory of India ". Is he entitled to say or will he agree that there shall be no personal law, there should be no Muslim law, there should be no Mohammadan law, there should be no Hindu law or Christian law. We want a uniform Civil Code. Is my hon. Friend prepared to do it?



1972 பிப்ரவரி 1] [Thiru R. Ponnappa Nadar]

Another point which I want to stress is regarding the trusts and charitable institutions. So far as the trusts and charitable institutions are concerned, they can acquire property and they can administer the trust for the benefit of the beneficiaries. Sir, there are certain difficulties. There are certain bogus trusts. There are certain religious trusts. All these things will have to be just scrutinised. So far as the trusts are concerned that is, one way of evading the law, that is one way of evading the payment of tax. We should just see whether it is real or not. That test will have to be applied.

I do not want to take the time of the House. There are certain unreal trusts and such unreal trusts will have to be scrutinised with the greatest caution. I am sure that when our Government initiate other legislation they will bear in mind this point as well.

So far as the amendment just now before the House is concerned, it is only maintenance of *status quo*. The amount and compensation is a disputable proposition. The dictionary meaning has been referred to by Mahavir Thyagi when he referred to this Constitutional Amendment in Parliament.

(Mr. Speaker in the Chair)

I do not want to reiterate those arguments. But so far as this amendment is concerned, we should just keep in mind Article 30 of the Constitution because the minority question may come in. We should make a distinction between institutions which are run by the minority and institutions in which minorities are exclusively studying or deriving benefits. Such a distinction should be maintained because the right to maintain an institution by the minority is not denied. When other communities, the general public, have got access to the charitable institutions or educational institutions, such a distinction will have to be maintained. That is the point which we will have to bear in mind. I am sure a distinction will have to be maintained. Minority cannot have any absolute right. It is only a qualified right. They can have schools of their choice, they can have their religious institutions, they can have their linguistic rights. All these things are not denied. But care should be taken to maintain the distinction when we initiate legislation.

This Bill has been supported by eminent Members of the Bar. Thiru M. C. Sethalwad, the leader of the Indian Bar has given his qualified support.

Certain portions of Article 31-C are said to be nebulous and exception has been taken by the Law Minister, and other Ministers. I am sure that in interpreting the Constitution the Courts will come in even though there is a specific ouster. If there is colourable exercise of jurisdiction or if there is fraud or *mala fide*, I am sure, still there would be jurisdiction vesting in the

[Thiru R. Ponnappa Nadar] [1972 பிப்ரவரி 1

Court. That is the point which I want to stress. There is no absolute ouster because in the matter of administration of this law sufficient care should be taken. It has been said that one electricity corporation has been nationalised, but he, being a Congress man has taken the matter to the Supreme Court and exception has been taken to that.

Sir, Article 14 will have to be read in this connection. If you are nationalising, nationalise, but why pick and choose? Why do you choose the institution belonging to that man alone ? There are other institutions. When you lay your hands, lay your hands on all the persons. That is the point which I want to stress. Article 14--I want to reiterate deals with the equality before law. It states—"The State shall not deny to any person equality before the law or the equal protection of the laws within the territory of India ". Is it equal protection or is it equality before the law? That is the point which we will have to consider. We do not oppose nationalisation. When you nationalise, nationalise the whole of the institutions. When you nationalise bus transport we support you, but do not pick and choose. If you do not like Ramaswami you should not choose, you should not choose that institution alone. These are the points which will have to be borne in mind.

In the matter of paying compensation, the amount, it is not just compensation, it is not market value. All these concepts are given a go-by. When the amount is fixed, care should be taken by the Gvernment in scrutinising the proposals, the land acquisition proposals as well as other proposals given by responsible officers. There may be laches, there may be lapses and we will have to scrutinise them with the greatest caution and care to see that justice is metedout to all sections of the people.

Sir, land acquisition is a fertile field. There may be a spate of litigation in the Court. I do not want to say about all these things before this august body. Suffice it for me to say that in the matter of administration of this land acquisition, grestest care will have to be taken.

There is another difficulty. As regards land acquisition certain Estate owners are given fabulous sums as compensation so far as Chittar-Pattanamgal schemes are concerned, but the poor people, the small fries only get small sums and they do not have the money and courage to challenge it in a Court of law. Disparity and inequality before law should not be there. With these words, I wholeheartedly support this resolution before the House. Greatest care should be taken so that there shall not be any colourable exercise of power so far as compensation in any matter is concerned. So far as property rights are concerned, we have got the Ceiling Act and other Land Reforms Acts. All these have been held to be valid by the Supreme Court and now they



1972 பிப்ரவரி 1] [Thiru R. Ponnappa Nadar]

have taken a different view in the Bank Nationalisation case. I do not think there is anything wrong. I do not think that there is anything far reaching. I do not think that simply because the Government is clothed with powers and legal authority, there would be authoritarianism or there would be dictatorship. We shall not think like that because when a party is in power, they will be in power for a particular period only. After every five years there would be an election and we have got a right to change our rulers and such a right is also given under our Constitution. I am sure that we shall exercise it with due diligence.

With these words, Sir, I commend this resolution for the acceptance by the House.

Thiru M .A. Latheef rose......

Mr. SPEAKER : The hon. Member will please resume his seat. The Hon. Minister will now reply to the discussion.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தை நம்முடைய மாநில மன்றத்தின் சார்பில் ஆதரிக்க வேண்டும் என்ற இந்தத் தீர்மானத்தை, பெரும் பாலும் எல்லா உறுப்பினர்களும் ஆதரித்து, இங்கே நல்ல பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறுர்கள். ஆதரிப்பதிலும், எவ்வளவு வேகமாக ஆதரிக்க முடியும் என்பதும் நிரூபிக்கப்பட்டது. இவ்வளவு ஏராளமான ஆதரவோடு இருக்கும் இந்தத் தீர்மானத் தின் பேரில் அரசின் சார்பில் எந்தக் கருத்தும் சொல்லத் தேவை யில்லை என்றே கருதுகிறேன். இங்கே எழுப்பப்பட்ட கருத்துக் களுக்கெல்லாம் அங்கத்தினர்களே நல்ல முறையில் பதில் தந்து, நாட்டு மக்களுக்காக வாதாடிய காட்சியையும் பார்த்தோம். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் இப்படிப்பட்ட தீர்மானத்தின் பேரில் சில பல குறைகள் சொல்ல முடியும் என்று ஒரு சில அங்கத்தினர்கள் தங்கள் திறமையையும் காட்டினுர்கள். ஆனுல் நிச்சயமாக இந்தத் தீர்மானத்திற்கும், அந்தக் குறைகளுக்கும் எந்தவிதமான சம்பந் தமும் இல்லை என்பதும் அவர்களுக்கே தெரியும்.

இந்தத் திருத்தத்தில் இரண்டு அம்சங்கள் கூறப்பட்டன. ஒன்று சொத்துக்களை எடுக்கும்போது கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை பற்றியது. இந்தத் திருத்தத்தின் மூலமாக அந்தக் கருத்தை வலியுறுத்தப் போவதாகக் கருத வேண்டாம். அது நீதி மன்றங்களிலே ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. அதே கருத்து பற்றி அண்மையில் உச்ச நீதி மன்றத்தில் மாறுபட்ட கருத்துச் சொன்னதால், இந்தத் திருத்தம் தேவைப்பட்டது. அதை நாம் உணருகிறோம். நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்றும், யாருடைய சொத்தையும் எப்பொழுது வேண்டுமானுலும் எடுத்து கொள்ளலாம் என்றும் வாதாடுவது பொருத்தமாக இருக்காது. இதிலே அரசியலைப் புகுத்தி கட்சிக்காரர்கள் சொத்தானுல் எடுக்கலாமா என்பது போன்ற கேள்விகளும் எழுப்பப்பட்டன. அது எப்படி இந்தத் தீர்மானத்தின் பேரில் எழுப்பப்பட்டது என்பதே புரிய

வில்லை. அதே பிரிவிலே, 31-ல் முதல் பிரிவு திருத்தப்படவில்லை. யாருடைய சொத்தையும் சட்டத்தின் மூலமாகத் தான் எடுக்க முடியும். அத்தகைய சட்டத்திற்குப் புறம்பாக யாரும் எடுத்துவிட முடியாது. அப்போது இயற்றப்பட்ட சட்டங்கள் தான் இருக்கின்றன. நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நாம் எடுக்கவில்லை என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்தாக வேண்டும்.

எலக்டிரிசிடி அண்டர்டேகிங்ஸ் பற்றிச் சொன்னார்கள். பல அண்டர்டேகிங்ஸை நாம் எடுத்து, பல பேர் நீதி மன்றங்களுக்குப் போய் இருக்கிறார்கள். அதுபோல சட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்வது சமுதாயத்துக்கு நன்மையை ஏற்படுத்த முடியும் என்றே நினைத்து செய்தார்கள். அதை செயல்படுத்த முடியாது, நீதிமன்றக் குறிக்கீடுகளால், அந்த நன்மை சமுதாயத்துக்குக் கிடைக்காமல் செய்ய முடிகிறது. இதைத் தடுக்க வேண்டும் என்பது தான் நம் எண்ணம்.

1948-ம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப் பட்டது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு 'இந்தச் சட்டத்திற்கு விளக்கம் கொடுக்கிறேன்' என்று சொல்லி நீதி மன்றங்கள் அந்த சட்டத்தின் நன்மை ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்க முடியாமல் செய்ய முடிந்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதே போல 1963-ம் ஆண்டில் இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு அந்தச் சட்டத்தையும் செயலாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நிச்சயமாக இந்தத் திருத்த சட்டத்தின் கீழ் ஒரு சட்டம் இந்த மன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ கொண்டு வரும் போது மக்கள் மன்றம் அதைக் கண்காணித்துக்கொண்டு இருக்கிறது. அது சமுதாயத்துக்கு விரோதமான சட்டமா, அரசியல் கட்சிகளுக்கு விரோதமான சட்டமா, தனி மனிதனுக்கு விரோதமான சட்டமா, என்று பார்க்கப்படும். மக்கள் நன்மைக்கு தேவை இல்லாத ஒரு சட்டத்தை உருவாக்கினால் அதை எதிர்த்து வாதாடுவதற்கு முடியும். இந்த நாட்டு மக்கள் சக்தியின் முடிவில் நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை திரட்டப்படும்போது, அதைக் கண்டு பயப்படலாம். எனக்கு அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

இந்தச் சட்டத்தில் தீமை அளிக்கக் கூடிய அம்சம் இல்லை என்பதை நான் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். இரண்டாவது அம்சம், இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய காலத்திலேயே சுதந்திரப் போராட்டத்திற்குப் பாடுபட்ட தலைவர்கள் எல்லாம் இங்கு கூறிய கொள்கைகளைத்தான், அரசியல் நெறிமுறையைத்தான் வலியுறுத்தி இருக்கிறார்கள். அந்த குறிக் கோள்கள் (டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்) அடிப்படையில் அரசியல்





அமைப்புச் சட்டத்திலே போடப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்ற, பல ஆண்டுகளாக இந்த நாட்டின் தலைவர்கள் முயற்சி எடுத்து வந்திருக்கிறார்கள். அதைத் தடுக்க அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் சாசனத்தைப் பயன்படுத்தினால் அது கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் அந்த இரண்டாவது அம்சத்தை இந்தத் திருத்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். புதுப் பிரிவு 31-சியில் அந்த இரு அம்சங்கள் நாட்டு மக்களுக்கு மிகத் தேவையான அம்சங்கள். அதை வலியுறுத்தும் முறையிலே அங்கத்தினர்கள் வாதாடியது நிச்சயம் வரவேற்கத்தக்கதுதான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

புரொஹிபிஷன் பற்றி சொன்னார்கள். எங்கேயாவது இந்தக் கொள்கை தேவையில்லை என தமிழக அரசு வாதாடி இருக்குமானால் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்புவதிலே பொருத்தம் இருக்கலாம். நான் சொல்வது எல்லாம் இந்தக் குறிக்கோள்கள் (டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ்) அடிப்படையில் இந்தக் கொள்கைகளை நிலைநிறுத்துங்கள். அப்பொழுதுதான் இந்தச் சட்டத்தை உயர்ந்த முறையில் அமுலாக்க முடியும் என வாதாடுகிறோம். இந்தச் சட்டம் தேவை இல்லை, இந்தக் கொள்கை தேவையில்லை என்று எந்தக் காலத்திலும் இந்த அரசின் சார்பிலே வாதாடியதாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

அதேபோல முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் இருக்கும் தனிப்பட்ட சட்டத்தை மாற்றுவதற்காக ஒப்புக்கொள்வார்களா என்று கேட்டார்கள். எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய அரசியல் சட்டத்தில் தனி மனிதனின் உரிமையைப் பாதுகாப்பதில் நிச்சயம் இன்றைக்கும் இடம் இருக்கிறது. இதற்கு இப்போது வேலை இல்லை என்று யாரும் வாதாட வேண்டாம். அது போல அவர்கள் விரும்பிய கருத்துக்களை வைத்துக்கொள்வதில், பர்சனல் லாஸ் வைத்துக் கொள்வதில் கஷ்டமா? அப்படிப்பட்ட சட்டங்களிலே எல்லாம் தலையிட வேண்டாம் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அதிலே தலையிடுவதற்கு விரும்புகிறோமா என்றால் இல்லை. எல்லா மதத்திற்கும் இருக்கக் கூடிய சட்டங்கள் போல நம்முடைய மதத்துக்கும் உயர்ந்த முக்கியத்துவம் வர வேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ள சட்டம் வந்தது. முஸ்லிம் சமுதாயப் பெருங்குடி மக்கள் சிறுபான்மையானாலும், அவர்களே உணர்ந்து, நமக்கு என்று தனிச் சட்டம் வேண்டாம், நாமும் இந்த நாட்டு மக்களோடு சேர்ந்து வாழ்வோம் என்ற அறநெறிக் கொள்கையைச் சொல்லி அம் மக்கள் முன்வந்தால் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட உணர்ச்சியை மதிக்கக் கூடியவர்களாகத் தான் சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள்

நாட்டிலே இருக்கிறார்கள். ஆகவே அதைக் காட்டி இதைச் செய்ய வேண்டாமென்று வாதாடுவது நல்லது அல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பொருளாதாரக் கொள்கையைப்பற்றி மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். ஆதிக்கம் எந்த உருவத்திலும் வரவேண்டாம். அது அரசியல் ஆதிக்கமாக இருந்தாலும், மொழி ஆதிக்கமாக இருந்தாலும், பொருளாதார ஆதிக்கமாக இருந்தாலும், தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய பொருளாதார ஆதிக்கத்தை வைத்து இந்தச் சமுதாயத்துக்கு எதிராகச் செயல்பட முடியும் என்ற நிலை இந்த நாட்டிலே இருக்குமானால் அதை எதிர்ப்பதிலே தி.மு.க. அரசு கொஞ்சம் கூடத் தயங்காது என்பதை நான் வெளிப்படுத்த ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் தனிப்பட்ட நபர்களின் அரசியல் ஆதிக்கம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு அரசாங்கத்துக்கே ஒரு ஆதிக்கத்தைக் கொடுத்து பொருளாதார ஆதிக்கம் வளர்க்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை நான் ஆதரிக்கவில்லை. அதை நான் தெளிவாக இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சொல்லிக்கொள்கிறேன். பொருளாதாரக் கொள்கை திட்டத்தில் ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய ஒரு சமத்துவ சமுதாயத்தை அமைக்கவே இவ்வரசு பாடுபட்டு வரும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்து அப்படிப்பட்ட கொள்கைக்கு ஆதரவாகக் கொண்டுவரப்படுகிற இந்தத் திருத்தச் சட்டத்தினால் தமிழ்நாட்டுக்கும், இந்திய நாட்டுக்கும் பயன் ஏற்படும் என்று தெரிவித்து இந்தத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்த மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு எல்லாம் நன்றி கூறி இதை ஏக மனதாக இந்த அவை நிறைவேற்றித்தர முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் ஹண்டே உள்பட எல்லோரும் இதை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. காரணம் அவர்களிடத்திலே சொல்லிக்கொண்டு இருந்தேன். அவர்கள் மட்டும் சுதந்திரா கட்சியில் இல்லாது இருப்பார்களேயானால் எந்த அளவுக்கு உயர்ந்த கருத்துக்களைக் கூறி இந்தத் திருத்தத்தை ஆதரித்து இருப்பார் என்று எனக்குத் தெரியும். காரணம், ஏழைகளுக்கு வாதாடி வரும்போதெல்லாம் அவர் துளிக்கூட பின்வாங்க மாட்டார். அவர் சந்தேகப்படுவது எல்லாம் ஏழைகளுக்கு வாதாட இருக்கிறோம், சட்டங்கள் கொண்டு வருகிறோம், என்று எண்ணிக்கொண்டு சில பேரைத் தாக்குவார்களோ என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். லட்சோப லட்ச உழவர் மக்களுக்கு நன்மை அளிக்க வந்த ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை டாக்டர் ஹண்டே அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். பல லட்ச இனாம்தாரி நிலங்களை உழவர்களுக்குக் கொடுத்த, அப்பெருநிலச் சொந்தக்காரர்களுக்கு எதிராகக் கொண்டுவந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தை எதிர்ப்பாரா என்றால், எதிர்க்கவே துணிய மாட்டார்கள்.



எதிர்க்கும் அளவுக்கு பிற்போக்குக் கொள்கையைக் கொண்டவர் அவர் என்று நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். நிச்சயம் சட்ட மன்றத்திலே என்ன பேசினாலும் அவருடைய உள்ளம் எல்லாம் ஏராளமான முற்போக்குக் கொள்கைகள் நிறைந்து கிடக்கின்றன. ஏழைகள்பால் இரக்க உணர்ச்சி அவருடைய உள்ளத்திலே கொப்பளித்துக் கொண்டிருக்கிறது. அவர் சுதந்திராக் கட்சியில் இருக்கிறார் என்ற ஒன்றைத் தவிர வேறு எந்தவிதமான கருத்து வேறுபாடும் அவரிடத்தில் இல்லை என நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே, தமிழ் நாட்டு மக்களின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை எந்த விதமான ஆட்சேபணையும் இல்லாமல் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (25-வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

அரசினர் தனித்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 6 நடைமுறைக் கேள்வி

### ஒரு சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு முன் அதைப் பற்றிய விவரங்களை அறிய போதிய முன் அறிவிப்பு கொடுக்காதது குறித்து

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I would like to raise a point of order. Rule 95 says—

'At any time after the publication of a Bill in the Gazette, the member-in-charge of the Bill may, after giving five days' notice, make one of the following motions in regard to the Bill, viz. :—

(a) that it be taken into consideration;

Provided that any member may object to any such motion being made unless copies of the Bill have been made available to the members for at least two days before the day on which the motion is made, and such objection shall prevail unless the Speaker allows the motion to be made...'

சார், இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே நேற்றுத்தான் இது அறிமுகப்படுத்தப்பட்டது. சட்ட மன்றத் தொடர் ஆரம்பித்த அன்றே இதை அறிமுகப்படுத்தியிருக்கலாம். அப்பொழுது கொடுத்திருந்து இன்றைக்கு கன்சிடரேஷனுக்காக எடுத்திருந்தால் பொருத்தமாக இருக்கும். எனக்கு

இது நன்றாகத் தெரியும். 138 ஆவது பிரிவின்படி இதை அனுமதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னாலும், இந்த மசோதாவினுடைய உள்பொருளுக்கு நான் இப்போது போகவில்லை. நல்ல மசோதாவாக இருக்கலாம். ஆனால் விவாதத்திற்கு வருகிறபோது நான் முழுமனதோடு ஆதரிக்கலாம். ஆனாலும் இம்மாதிரியாக மசோதாக்கள் வருகிறபோது இந்த மசோதாக்கள் ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களுக்குத் திருத்தம் என்று நிலை வருகின்ற காலத்திலே அதைப் படிப்பதற்கும், அதனுடைய நிலையைப் புரிந்துகொள்வதற்கும், சட்ட மன்றத்திலே இருக்கக் கூடிய எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை சொல்லி அதன் மூலம் நிறைவேற்றுவதற்காக சந்தர்ப்பம் கொடுக்கிற முறையிலே தான் இந்த மாதிரி விதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இருக்கக்கூடிய விதிகளை மாற்றுவதற்காக என்ன நிலை இருக்கிறது என்று தெரியவில்லை. ஒரு சமயம், இந்த மாதம் 27 28-ந் தேதி மறுபடியும் சட்ட மன்றம் கூடுவதற்கு முன்பாக ஏதாவது இந்த நிலை மாறிவிடும் என்று இருக்கிற காரணம் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம். அம்மாதிரி இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. இப்படி ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருக்கின்றோம். இது ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நிலை ஏற்கின்ற போதே யாரையும் வெளியேற்றும் நிலை ஏற்படாது. ஆகவே இந்த மசோதா கன்சிடரேஷனுக்கு அடுத்த தொடரிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த 95 ஆவது விதிகளின் கீழ் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே. இங்கே சட்டம் கொண்டுவந்தால் விவாதம் செய்வது சுருக்கமான காலத்திலே இருக்கிறது என்று சமீபத்திலே நமது உயர்நீதி மன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இந்த ஸ்டாம்ப் ஆக்ட் சம்பந்தமாக ஒரு ரிட் ஆனது நமது உயர்நீதிமன்றத்திலே தீர்ப்புக்கு வந்தபோது, அது ஒரு 5 நிமிட நேரந்தான் சபையின் பரிசீலனையில் இருந்தது. மிகவும் குறுகிய காலத்திலே பரிசீலனையில் இருந்தது. ஆதலால் மசோதாக்களை எல்லோரும் சரியான முறையிலே படிக்கவில்லை என்று சொல்லக்கூடிய கருத்தைக்கூட அந்த நீதிபதி அவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். பொதுவாக. முன்கூட்டியே இந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டுவந்திருக்கலாம். நான் 22-ந் தேதியிலேயிருந்து இந்தச் சட்ட மன்றத்தைத் துவக்கி இருக்கிறோம். நேற்றையத் தினம்தான் இந்த காப்பி எங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இதைப் பார்த்துப், படித்து. விரிவாக இதைப் பற்றி கூறுவதற்கு எங்களுக்கு அவகாசம் இல்லை. அதை ஒரு ஆட்சேபகரமாகச் சொல்லவில்லை. ஆனாலும் ஒரு வேளை ஒரு மாத காலம் தவிர்க்க முடியாது என்று இருந்தால் அரசாங்கம் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்



கொள்ளலாம். அவசியம் இல்லை என்று கருதினால் இதைத் தள்ளி வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசனையை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE :** Sir, I would like to say a few words in support of what the hon. Members, Thiru Thangamani and Thiru Ponnappa Nadar have stated. I also feel that it would be better if this Bill is brought forward in the next session so that we can properly discuss it. A copy of the Bill was in our hands only last night and we have practically no time to go through it and the original Act. So I request the Chair to see that it is brought forward at the next session.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI :** Sir, though the hon. Members who spoke before me have stated that time should be given to consider the Bill, I feel that this Bill stands on a peculiar footing, in that the tenants would be affected if the Bill is not passed into law. I am sure if Thiru Thangamani Nadar had known this fact, he would not have asked for time. We are for the tenants and landlords would take undue advantage if it is not passed in view of the judgment of the Supreme Court. Though the protection given under Section 9 of the orginal Act may be used by the tenants for their benefit, the proviso to Section 12 of the Act takes away the bentfits and landlords would take advantage of it and they are vigilant in regard to this matter. To save the tenants the Bill should be passed in this session itself.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே. இந்த சட்டத்தைப் பொறுத்த அளவுக்கு புதிதாக நான் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல. திரு. பொன்னப்ப நாடார் உட்பட, திரு. ஹாண்டே அவர்களுடைய கட்சிக்காரர் உட்பட சட்ட மன்ற உறுப்பினர்களெல்லாம் இந்தக் கருத்தை வலியுறுத்தி உடனடியாக பல குடியிருப்பவர்களுக்கு பாதகமான ஒரு தீர்ப்பை உருவாக்கிவிடக் கூடாது நாட்டிலே என்ற கருத்தை எதிர் கட்சியின் சார்பாகவும் எடுத்துக்கூறி, பல பேர் சென்னை மாநகரத்திலே இருந்து அரசாங்கத்திற்கு மனுக்கள் அனுப்பியதற்குப் பின்னாலேதான் இந்தச் சட்டம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது ஏழைகளுக்கு சாதகமான சட்டம் என்பதை அவர்களே அரசுக்குத் தெரிவித்திருக்கிற காரணத்தாலே இதை ஆட்சேபிக்கக்கூடாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, 1921-ஆம் ஆண்டு இந்த சட்டம்—பிரின்சிபல் ஆக்ட்—கொண்டுவரப்பட்டபோது இந்த 12-ஆவது பிரிவு போடப்பட்டது. அதற்குப் பின்னாலே 1955-ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னாலே இதே போல் குடியிருப்பவர்களுக்கு, உழுபவர்களுக்கு சாதகமான சட்டங்கள் கொண்டு வந்தபோது இந்த 12-ஆவது

[திரு. செ. மாதவன்] [1972 பிப்ரவரி 1

பிரிவிலே இருக்கக்கூடிய பிரொவிசோ—விதிவிலக்கு, நமது சுதந்தர நாட்டு சட்டத்திலே போடப்படவில்லை. வெள்ளைக்காரன் ஆட்சியிலே கொண்டுவந்த காலத்திலே அந்தச் சட்டத்திலே போட்ட இந்தப் ப்ரொவிசோ ஏழைகளுக்கு இதுபோல் ஒப்பந்தத்தின் மூலமாக சட்ட பூர்வமாக கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையை வைத்து விடக்கூடாது என்பதுதான் நமது நோக்கம் ஆகும். 60-40 உழவர்களுக்கு சாதகமான சட்டம் கொண்டுவந்து விட்டு, அதே உழுபவன் ஆதிக்கம் உள்ள நிலச்சுவான்தாரிடத்திலே ஒப்பந்தம் போட்டுக் கொண்டால் சட்டத்திற்கு விரோதமா என்றால், அந்தச் சட்டத்தாலே பயனில்லை என்று வாதாடினோம். ஆகவேதான், ஒப்பந்தத்திற்கு மீறி 60-40 ஏழையின் நன்மையைக் கொண்டு வரவேண்டும் என்று அன்றைக்கிருந்த காங்கிரஸ் கட்சி கொண்டுவந்தது. அதைப் போல குடியிருப்பவர்களுக்கு பாது காப்பாக, ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட் கொண்டுவந்திருக்கிறோம். குடியிருப்பவர்களை வீட்டுச் சொந்தக்காரர்கள் கொடுமைப் படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் சட்டப்படி குடியிருப்புக்கு உரிமை கொடுத்துவிட்டு ஒப்பந்தத்தின் மூலமாக சொந்தக்காரர் வெளியேற்றிவிடலாம் என்று சட்டம் இருக்கக்கூடாது என்று விதி விலக்கிலே கொடுத்திருக்கிறோம். ஆகவே நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம், இன்றைக்கு நிறைவேற்றப்படா விட்டால் இதனுடைய விளைவு பல குடியிருப்புக்காரர்களின் உரிமை பாதிக்கப்படும். பெரும் பணம் போட்டு வீடு கட்டவில்லை என்றாலும், சிறு அளவுக்கு பணம் போட்டாலும் அவர்களின் உரிமை பாதிக்கப்படும் என்பதும், நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. உடனடியாக இதனை விவாதம் இல்லாமல் நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் நினைத்தோம். ஆகவே வாதம் எழுப்பிவிட்ட காரணத்தாலே இந்த பதிலைச் சொல்கிறோம். இந்த நல்ல நோக்கத்தோடு கொண்டு வரக்கூடிய சட்டத்தை எல்லோரும் சேர்ந்து உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு சொல்கிறேன், சட்ட அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து பேசியவர்கள் ஏழை ஜனங்களுக்கு வரக்கூடிய நல்ல சட்டத்தை எதிர்க்கின்றோம் என்ற தொனியிலே பேசியது சரியில்லை என்று நான் சொல்ல விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் அப்படிப் பேசிய தாகச் சொல்லவில்லை. இந்த சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அவர்களே வற்புறுத்தியிருக்கிறார் கள். அதையொட்டித்தான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.



1972 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டரே முடியவில்லை. அதற்கு உதவியாகச் சொல்கிறீர்கள் என்றுதான் நினைத்தேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த சட்டமானது இவ்வளவு அவசியமாக இருக்குமானால் 22-ம் தேதியே இதை முன்மொழிந் திருக்கலாம். நாங்கள் யாரும் இதை எதிர்க்கவில்லை. இதைப் பற்றி எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் படிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றுதான் கூறினோம். அதுவல்லாமல் சிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட் வேண்டாம் என்று சொல்லவில்லை. உயர்நீதி மன்றத்திலே இந்த தீர்ப்பு வந்து பல மாதங்கள் ஆகியிருக்கும். இந்தச் சட்டசபைத் தொடர்க் கூட்டத்திற்கு முன்பாக வந்திருக்கும். ஏன் அரசாங்க சட்ட இலாக்கா துரிதமாக கொண்டு வரவில்லை. அப்பொழுது சட்டசபை இல்லை என்றாலும் இதை ஆர்டினன்ஸ் மூலம் செய்யும் உரிமையும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. நான் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. இவ்வளவு அவசியமான பில்லை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வரக் கூடாது என்ற ஆட்சேபணையைக் காட்டிக் கொள்ளத்தான் சொல்கிறேன், வேண்டாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். அந்த ஒழுங்குப் பிரச்சினையின் விதி முறையைப் பொறுத்த வரையில் அது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல. தேர் இஸ் நோ பாயின்ட் ஆப் ஆர்டர். அதனுடைய தோற்றந்தான். ஆனால், அவர் கூறிய விஷயத்திலேதான் ஒரு பொருள் இருக்கிறது என்பதையும் நான் இந்த அவையிலே ஒத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக ஒரு மசோதா வரவேண்டுமானால் 5 நாள் இருக்க வேண்டும். அந்த 5 நாள் இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் 2 நாளாவது வேண்டும் என்று விதி. ஆனால் இரண்டு நாள் கூட தேவையில்லை 138-ஆவது விதியில் ஒன்று இருக்கிறது அதுவும் இந்த மாதிரியான

'The Speaker may, in his discretion, dispense with the provisions of this Chapter regarding notice, periods of notice or interval between any two stages of legislation, and may, in his discretion, allow any motion regarding a Bill or any amendment to be moved without notice, or after such shorter interval as he may think fit'.

நெருக்கடிகளுக்குத் தேவை என்றுதான் பேரவைத் தலைவருக்கு அந்த உரிமை கொடுத்திருக்கிறது. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இரண்டு நாட்கள் இல்லாவிட்டால்கூட அனுமதிக்கலாம். 'unless the Speaker allows motion to be made என்று தான் இருக்கிறது. ஆகவே விதிமுறைகளைப் பொறுத்த வரையிலே பாயின் ஆப் 'ஆர்டர் இல்லை. இருந்தாலும் நேற்றைக்கு அறிமுகப் படுத்தியதை அதற்கு முந்தின நாள் அறிமுகப்படுத்தியிருந்தால்

திரு. தங்கமணி அவர்களுக்குப் பேச வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இது ஒரு நல்ல காரியம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால்தான் பேரவையிலே இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவர் சொன்னதிலே நல்ல பொருள் இருக்கிறது. நியாயமான நிலைமை இருக்கிறது. திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், ஏழைகளுக்காக இந்தச் சட்டம் என்று. அந்தக் காரணத்தால் தான் பேரவைத் தலைவர் இப்பொழுது அனுமதித்திருக்கிறார்கள். ஒரு இரண்டு, மூன்று நாட்கள் முன்பாக இருந்தால் இந்தப் பேரவை இன்னும் நன்றாக விவாதிப்பதற்கும், ஏழைகளுக்காக அரசாங்கம் எடுத்திருக்கிற அக்கறை மக்களுக்கு சேர்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் உதவியாக இருக்கும் என்ற வகையிலே நான் அவர்களுக்கு இதை எழுப்ப ஒரு வாய்ப்பு இல்லாமலேயே செய்திருக்கலாம் இரண்டு நாட்களுக்கு முன்னால் அறிமுகப்படுத்தியிருந்தால் என்று கூறி இதனை முடிக்கின்றேன்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவு

### 1972-ம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவரவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகரக் குடியிருப்போர் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1972) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டில் நகராட்சி நகரங்களிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் இருக்கின்ற குத்தகைக்காரர்கள் பிறர் நிலத்திற்குத் தாம் நியாயமான வாடகை கொடுக்கும்வரையில் தாம் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் பிறருடைய நிலங்களில் கட்டிடங்கள் கட்டியுள்ளனர். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க 1921-ம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

குத்தகைக்கு எடுத்துள்ள நிலங்களில் கட்டிடங்கள் சட்டுவதில் பெருமளவுத் தொகைகளை முதலீடு செய்துள்ள குடித்தனக்காரர்களுக்கு 1921-ம் ஆண்டு சென்னை மாநகரக் குடித்தனக்காரர் பாதுகாப்புச் சட்டத்தில் வழங்கியுள்ள பாதுகாப்பு மறுக்கப்படுகின்றது என்று அரசுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தில் அண்மையில் நடந்த வழக்குகளில் தலைமை

* 31—1—72 தேதியில் தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



உயர்நீதிமன்றம் பொருள் விளக்கம் கொடுத்துள்ளபடி 12-வது பிரிவின் வரம்பு நிபந்தனையினால் அவர்களுக்குப் பெருந் தொல்லை ஏற்படுகின்றது. குத்தகை ஒப்பந்தம் முடிவடைவதன் மேல் நிலத்தையும் நிலத்திலுள்ள கட்டிடத்தையும் திருப்பிக் கொடுப்பதென்று நிலச் சொந்தக்காரர்களுடன் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்ற காரணத்தை முன்னிட்டு அவர்களுக்கு மேற்படி பாதுகாப்பு அளிக்க மறுக்கப்பட்டது. இம்முறையீட்டை அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் ஒப்பந்த நாளுக்குப் பின்னர் கட்டியுள்ள கட்டிடங்களைப் பற்றிய நிபந்தனைகளை கொண்டுள்ளதும் மேற்படி சட்டத்தின் கீழ் குத்தகைதாரர் உரிமைகளை வரையறுப்பதுமான ஓர் ஒப்பந்தத்தை குத்தகைதாரர்கள் நிலச் சொந்தக்காரர்களுடன் செய்து கொண்டிருந்தாலும், இராவிடினும் சட்டத்தில் கொடுக்கப்பட்ட பாதுகாப்பினை குத்தகைக்காரர்கள் அனைவரும் துய்க்க வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. ஓர் ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனை ஏதுவும் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை நீக்குகின்ற அல்லது வரையறுகின்றதாக இருக்குமாயின் அது செல்திறனற்றதாகும் என்பதற்கேற்றவாறு விதித்துறை ஒன்று அண்மையில் நிறைவேற்றப்பட்ட பலதரப்பட்ட குத்தகைக் சட்டங்களில் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் நிறைவேற்றப்பட்ட குத்தகைச் சட்டங்களையொட்டி அமையும் வகையிலும், அத்தகைய குத்தகைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லையை தவிர்க்கவும் 1921-ஆம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12-வது பிரிவின் வரம்பு நிபந்தனையை முந்திய ஒரு காலத்திலிருந்து நீக்குவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த நாளுக்குப் பின்னர் கட்டப்பட்ட கட்டிடங்களைப் பொறுத்தமட்டில் ஓர் ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனை ஏதும் தமிழ்நாடு 1922-ம் ஆண்டு 3-வது சட்டத்தின் கீழ் குத்தகைக்காரர் உரிமைகளை எந்த அளவுக்கு நீக்குகின்றதோ அல்லது வரையறுக்கின்றதோ அந்த அளவுக்கு அந்த நிபந்தனை செல்திறனற்றதாகும். செல்திறனற்றதாக கருதப்படும் என்று வகை செய்யும் விதித்துறை செய்யப்பட வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. எனினும் நிலச் சொந்தக்காரர் நிலத்தையும் கட்டிடங்களையும் முன்னரே தம்வசம் எடுத்துக்கொண்டுள்ள நேர்வுகள் இயற்றக் கருதியுள்ள சட்டத்தினால் பாதிக்கப்பட மாட்டா.

மேற்கண்ட முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு 1972-ம் ஆண்டு சென்னை மாநகர் குத்தகைக்காரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1972) முகவுரைக்கப்பட்டு பரிசீலனைக்காக இம்மாமன்றத்தின் முன் உள்ளது.

இப்பிரேரணையை ஏற்குமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்ட முன்வடிவில் இரண்டு இரண்டு நிமிடங்கள்தான் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Since I have no time. (I did not have the original Bill) I want a clarification. The Hon. Minister read the objects of the Bill. I want a clarification from him. It is stated in the statement of objects and reasons as follows :—

"The landlord may pay compensation to the tenant under section 3 of the Act for the building or receive the value from the tenant for the land under section 9 of the Act". Which gets preference? Suppose the tenant wants to pay. Will that get preference? Suppose the landlord wants to have the tenant evicted and if he is prepared to pay him the compensation? Will that get preference? 90 per cent of the tenants want to buy the land and will that get preference?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரு. தங்கமணி அவர்களும் பேசியபின்னால் சேர்த்து பதில் சொல்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, ஏற்கெனவே நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த திருத்தம் ஒரு நல்ல திருத்தம் தான். ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டிலே இம்மாதிரி நில வாடகை வைத்துக்கொண்டு அதிலே மனைகட்டி குடியிருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திலே அந்த நிலத்தையும், மனையையும் விட்டுவிடவேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருந்தால் அதைக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதை மாற்றக்கூடிய வகையில் 'சோ லாங் ஆஸ் உய் கண்டிநியூஸ் டு பே ஃபேர் றெண்ட் ஃபார் தி லாண்ட்' அந்த நில வாடகைக் கொடுத்துக்கொண்டே இருப்பவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட மாட்டார்கள். அந்த அளவுக்கு இந்தச் சட்டம் வகைசெய்கிறது.

இந்தச் சட்டத்தினால் குத்தகைதாரர்களுக்கு இன்றைக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எதிர்பார்த்து, இம்மாதிரியான ஒரு முடிவு வரும் என்று நினைத்து, அந்தத் தீர்ப்பு வருவதற்கு முன்னாலேயே பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் அமுல் படுத்தப்படுவதற்கு முன்னால், பலவந்தமாக, பலாத்காரமாக பலர் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கு இருக்கக் கூடிய 'கிளாஸ் 5-ன்படி' பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் இப்படிப்பட்ட சட்டம் வரும் என்று கருதி, குறிப்பிட்ட கால வரையறைக்கு முன்பே அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க சட்டத்தில் வகைசெய்ய வேண்டுமென்று கேட்டு. இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன்.



DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, while we welcome this Bill there are one or two things which I want to bring to the attention of the Hon. Minister.

There is a sort of widespread feeling that tenants are really poor people and landlords are rich people. There is a particular section of tenants, a small class (the hon. Lady Member Mrs. Anandanayaki may agree with me) who had profited from the land, bought theatres and who are well off. They get sizable income when compared to the landlord who gets only a meagre income. This small class of tenants had minted a lot of money. He has invested it in productive channels, in theatres, etc. The landlords are poor, in this case. Under this enactment, there is no protection for such poor landlords. Otherwise I welcome the provisions of the Bill which will give protection to a large majority of poor tenants. But what about the rich tenants, the small class about whom I have now spoken. Some of them own theatres. How can this class of tenant call himself 'poor'. I know one particular tenant who owns 2-3/4 grounds in Salem and one theatre in Madras. Yet he is a tenant. He has been a tenant in Madras for quite a number of years. He has taken lands from several parts of the State. Of course I do not want to mention the name, since it would not be decent. (Interruption). His name is Varadarajan, owners of Central Victoria and New Globe here. If it is possible for the Government to analyse, how exactly they can sift these problems, it will be well and good. Legally it is very difficult to sift these two categories of persons, persons who are really poor tenants and persons who are rich tenants. I will be very happy if the Hon. Minister gives consideration to this aspect to divide these people into two classes, those who are rich tenants who can afford or who are well-to-do and who have been able to make profits and invest and those who are poor tenants and who have been of much assistance to the landlords who have profited. I will be happy if the Hon. Minister gives consideration to this aspect. I can assure that I welcome this Bill for this reason. There are thousands and thousands of small tenants in my own constituency in Wall Tax Road Mr. Bomman also requested the Government and I also request the Government—In my constituency in Wall Tax Road a number of people will be benefited by this Bill—to consider the two aspects—tht rich tenants and the poor tenants—and do something for the poor tenants. On our part, on behalf of our party we give full support to this Bill. Thank you, Sir.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, in welcoming this Bill I would like to answer the point that has been raised by my learned friend Dr. Hande. It has been said that there are certain tenants who get more benefits. But all those questions will have to be considered by the Court.

[1972 பிப்ரவரி 1

Because an application will have to be made under Section 9 of the Act to the Court. An amendment to Section 9 (1) (vide Section 6 of Act 13 of 1960) has been made and Clause (*a*) says that the Court can direct " to sell for a price to be fixed by the Court, the whole or part of, the extent of land specified in the application ".

That was the amendment that had been carried out in 1960. There are poor tenants who have constructed and their position stands on a different level. I am sure that the buildings that have been put up by the tenants will have to be protected. We always want to support the weaker sections of the community and when they have put up pucca structures, and other contract made by these tenants to the contrary will not be taken into account and I think that the amendment is proper, but it has been struck down by the Court. But suffice it for me to say that in a legislation which benefits the tenants we will have to take a lenient view. We are here out to help the poorer sections of the community, the weaker sections of the community and we want an egalitarian society. So much so, poor people who have put up small structures will have to stand on a different footing from the richer persons who have put up cinema theatres and all those equities can be decided by the Court and I do not think that there will be any difficulty or any legal implement in the matter of such adjudication. With these observation, Sir, I support the amendment that has been brought by the Government.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எல்லா தரப்பினரும் ஆதரித்திருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகும். நம்முடைய டாக்டர் ஹண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். 1960-ம் ஆண்டு திருத்தத்தின் படி ஒரு சில பேருக்கு நன்மை கிடைக்கும் என்று அவருடைய வாதத்திற்குப் பதிலாக 'மார்க்கெட் வேல்யூ' என்று கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியிருக்கிறது. இல்லாவிட்டால் வேறுமாதிரி பலனைக் கொடுத்து விடும் என்ற எண்ணத்தின் அடிப் படையில்தான் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டத்தின் படி குடியிருப்புக்காரர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்பட்டிருக் கிறது. சட்டமே டெனன்ட்ஸ்களுக்காகத்தான் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

பெரிய பெரிய நகரங்களில்தான் இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் ஏராளமான பேர் பாதிக்கப்பட்டிருப்பதால் . திருத்தச் சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கூறினார்கள். 1970-ம் ஆண்டு வரை இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு குடியிருப்பவர்களுக்குத் தான் சாதகமாக தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அண்மை யிலே வழங்கப்பட்ட தீர்ப்பிலே கொஞ்சம் மாறுதலாக வந்த



1972 பிப்ரவரி 1]

காரணத்தாலே இந்தத்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இது வந்ததற்குப் பின்னால் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன். பெரும்பாலானவர்கள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினால் பாதிக்கப்படுவார்கள் என்கிற நிலையில், எதிர் காலத்தில் இந்தச் சட்டம் பயன்பட பொதுவாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஏழைகளாக இருந்து அவர்கள் நிலச்சொந்தக் காரர்களாக இருந்தால் அவர்களுக்கும் இது பயன்படும். உண்மை யிலே ஒருசில பெரிய பெரிய நிலச்சொந்தக்காரர்கள், பெரிய பணக்காரர்களுக்கு மட்டும் இந்தச் சட்டம் பயன்படும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்புவார்களானால். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வாபஸ் வாங்கிக்கொள்கிறோம். ஒரு சிலர் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கும் 1960-ம் ஆண்டு திருத்தச் சட்டத்திலே பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER : The questions is—

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 5, were put and carried. Clause I, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir I move—

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 1 of 1972) be passed."

The motion was put and carried, and the Bill was passed into law.

### 5 அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி

**தமிழ் நாடு 1950-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்து விதிகளை திருத்த பிறப்பிக்கப்படவிருக்கும் வரைவு விதிகள் குறித்து.**

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1950-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்து விதிகளின் பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3 (i), 10 (ii விதிகளைத் திருத்தும் வகையில் 1923-ம் ஆண்டு 3/1923) 7-வது பிரிவின்கீழ் மாநில அரசால் பிறப்பிக்கப்பட விருக்கிற கீழ்க்கண்ட வரைவு விதிகள் மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கூறியுள்ளவாறு ஏற்கப்படுவதாக.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1972 பிப்ரவரி 1

## வரைவு அறிவிப்பு

1923-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்துச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 3/1923) 7-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாடு ஆளுநர் அவர்கள், தமிழ் நாடு 1950-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளுக்கு, கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார். மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கூறியுள்ளவாறு இத் திருத்தங்கள் சட்ட. மன்றத்தின் இரு அவைகளின் தீர்மானத்தின் மூலம் ஏற்கப்பட்டுள்ளன.

## திருத்தம்

மேற்சொன்ன விதிகளில்—

1. 3-வது விதியின் (i) துணை விதியில் (c) பகுதிக்குப் பிறகு, கீழ்க்காணும் பகுதி சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

அதாவது—

"(d) உற்பத்தி நிறுவனங்களுக்கோ அல்லது கழிவுப் பஞ்சு வியாபாரம் செய்கிற ஆண்டுப் பொது உரிமம் வைத்திருக்கும் பிறருக்கோ விற்பனை செய்ய ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்குள் வியாபாரம் செய்யும் கழிவுப் பஞ்சு வியாபாரிகள் கழிவுப் பஞ்சை உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட நிலையில் கொடுக்கலாம்."

2. 10-வது விதியில்.

( ). ( ii( துணை விதியின் (d) இனத்தில் இருக்கும் "கழிவுப் பஞ்சு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கழிவுப் பஞ்சு (உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட நிலையில்)" என்னும் சொற்களையும், அடைப்புக் குறிகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்;

(i) (ii) துணைவிதியின் (e) இனத்தில் "உற்பத்தி நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக முழுவதும் அழுத்தப்பட்ட பஞ்சுப் பேல்களை இறக்குமதி செய்ய வியாபாரிகளுக்கும்" என்னும் சொற்களுக்குப் பிறகும், "எண்ணெய் பிழிவதற்காக, பஞ்சு விதைகளை இறக்குமதி செய்வதற்கு பஞ்சு விதை எண்ணெய் ஆலைகளுக்கும்" என்னும் சொற்களுக்கு முன்பும். "கழிவுப் பஞ்சை உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட பேல்களாக விற்பனை செய்கிற பஞ்சு வியாபாரிகளுக்கும்" என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்."

விளக்கக் குறிப்பு 28—1—1972-ம் நாளன்று அனுப்பப் பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே தங்கமணி :** தலைவர் அவர்களே, 1923-ம் வருஷத்தில் இந்தச் சட்டம் கொண்டுவந்த சமயத்தில் திருநெல்வேலியில் இருக்கக்கூடிய பருத்தி உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப் படவேண்டுமென்று, கம்போடியா பருத்தி உற்பத்தியாளர்கள்



1972 பிப்ரவரி 1]

களுக்கு பாதுகாப்பு ஏற்படும் வகையில் ஒரு சட்டம் ஏற்பட்டது. பல விதிகள் வந்திருக்கின்றன. குறிப்பாக பருத்தி விதைகள் இறக்குமதி செய்பவர்களுக்கு பல சிக்கலான விதிகள் இருந்தன. வேஸ்ட் பருத்திக்கும் இந்த விதி வரும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பிட்ட பிரச்சினையிலே பருத்தி விதை ஓரிடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்குப் போனால் பொதுவாக மொத்த மதிப்புக்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தனித்தனியாக ஒரு பகுதியாக எடுத்து லைசென்ஸ் வழங்க வேண்டியதில்லையென்றும், அப்படி பருத்தி போக்குவரத்து சம்பந்தமான விதிகளைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, 1923-ஆம் ஆண்டு பஞ்சு போக்குவரத்துச் சட்டம், அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ், வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து உரிமம் வழங்கப்பட்டாலன்றி மற்றபடி, சாலை, ரயில், ஆறு அல்லது கடல் வழியாக இம்மாநிலத்தில் கம்போடியா (செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களையும் திருநெல்வேலி பகுதிக்கு வெளியே மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் பகுதிகளையும் கொண்டது), திருநெல்வேலி (திருநெல்வேலி மாவட்டத்தையும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் பகுதிகளையும் உள்ளடக்கியது) ஆகிய பாதுகாப்புப் பகுதிகளிலும் இப்பகுதிகள் மூலமாகவும் பருத்தி, பஞ்சு, விதை முதலியவற்றை எடுத்துச் செல்வது தடை செய்யப்படுகிறது.

1950-ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறையின் 7—12—1950 நாளிட்ட 2295-ஆம் எண் அரசு ஆணையில் தமிழ்நாடு பருத்திப் போக்குவரத்து விதிகள் வெளியிடப்பட்டன. வேளாண்மைத் துறையின் 8—10—1968 நாளிட்ட 2972 ஆம் எண் அரசு ஆணையின் படியும் திருத்தியமைக்கப்பட்ட 1950 ஆம் ஆண்டு பஞ்சுப் போக்குவரத்து விதிகளின் 3(i) விதி. மேற்கூறிய விதிகளின்கீழ் பருத்தியை எடுத்துச் செல்வதற்கு உரிமம் வழங்கப்படுவதற்கான நோக்கங்களைக் குறிப்பிடுகின்றது. தயாரிப்பு நிறுவனங்களுக்கு அல்லது கழிவுப் பஞ்சு விற்பனை செய்யும் ஆண்டுப் பொது உரிமதாரர்களுக்கு விற்பனை செய்வதற்காக பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குள் வணிகத்தை மேற்கொண்டுள்ள கழிவுப் பஞ்சு விற்பனையாளர்கள் கழிவுப் பஞ்சை உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட நிலையில் எடுத்துச் செல்ல இவ்விதியின்கீழ் உரிமம் வழங்குவதற்கு விதித்துறை ஏதும் இல்லை. கழிவுப் பருத்தியை இறக்குமதி செய்வதற்கான கட்டணத்தை 10(i) விதியின்கீழ்க் குறிப்பிடுகையில் கழிவுப்பருத்தி உதிரியாக இருக்கவேண்டுமோ அல்லது அழுத்தப் பட்ட நிலையிலிருக்க வேண்டுமோ என்பது குறிப்பிடப்படவில்லை.

கழிவுப் பருத்தியை உதிரி நிலையில் இறக்குமதி செய்வதற்காக, ஏற்கெனவேயுள்ள 3 (i), 10 (ii) விதிகளில் விதித்துறை ஏதுவுமில்லாததால் ஆலைகளில் தேக்கமடைந்துள்ள கழிவுப் பஞ்சை (உதிரி நிலையில்) ஒருவகை செய்வதில் ஆலைகளுக்கும், வணிகர்களுக்கும் இடர்பாடுகள் பல ஏற்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கங்கள் எல்லாம் தேவையில்லை, உறுப்பினர் அவர்கள் ஒரு அஷ்யூரன்ஸ் கேட்டார்கள், அதற்குப் பதில் சொன்னால் போதுமானது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி அஷ்யூரன்ஸ் கொடுப்பதற்கில்லை.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை காலவரையறையின்றி ஒற்றி வக்கப்படுகிறது.

பின்னர் பேரவை காலவரையின்றி ஒற்றிவைக்கப்பட்டது.

### 8. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

26. Notification issued with G.O. Ms. No. 1617, Home, dated the 16th June 1971, in regard to an amendment to the Tamil Nadu Motor Accidents claims Tribunal Rules, 1961. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

### *B. Reports, Notifications and Other Papers.*

* 27. Report of Justice Thiru N. S. Ramaswami, Judgt, High Court, Madras. Commission of Inquiry on the untoward incidents at Annamalai Nagar on 23rd July 1971.

28. Return of Assets submitted to the House by the Hon. the Minister for Food and Revenue, Hon. Minister for Backward Classes and Members of the Legislative Assembly. (vite-names below)

*As on 31st March 1971.*

1. HON. THIRU P. U. SHANMUGAM.
*Minister for Food and Revenue.*

2. HON. THIRU K. RAJARAM,
*Minister for Backward Classes.*

*** Laid on the Table of the House on 31st January 1972.**





*Members*

1. THIRU C. V. M. ANNAMALAI
2. THIRU M. A. ABUSALI
3. THIRU RAMA. ARANGANNAL
4. THIRU M. RATHINASABAPATHY
5. THIRU M. R. KANNAN
6. THIRU S. SAHADEVAN
7. THIRU N. DHARMALINGAM
8. THIRU E. K. DURAISAMI
9. THIRU V. PALANIVELU
10. THIRU K. BALAKRISHNAN
11. THIRU MANALI C. KANDASAMI
12. THIRU N. MANICKAM
13. THIRU P. MUTHUSAMY
14. THIRU A. MUNIYANDI
15. THIRU A. M. MOHIDEEN
16. THIRU K. RANGANATHAN
17. THIRU C. PANDURANGAM
18. THIRU N.KRISHNAN

29. Four Returns of Assets as on 31st March 1971 submitted to the House by the Hon. Members of the Legislative Council

E (563-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட 237-ம் எண்ணுள்ளவினாவின் விடையைக் காண்க.)

| விளக்கம் வேண்டப்பட்ட குறிப்பு. | தமிழ் நாடு அரசின் நடவடிக்கைகள் |
| --- | --- |
| 1. வேளாண்மைத்துறை செயலாளருக்கு திட்ட வேளாண்மை ஆலோசகர் என்று மறுபெயரிட வேண்டும்.<br><br>2. வேளாண்மை இயக்குநர், வேளாண்மை இணை இயக்குநர் (பொறியியல்) ஆகியோரைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் தொழில் நுட்பக் குழு விரிவுபடுத்தப்பட வேண்டும்.<br><br>3. நிலநீர் ஆய்வுகள் வேளாண்மை வளர்ச்சியை பயன் படுத்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதில் உதவி புரியவும் ஒத்துழைக்கவும் தஞ்சாவூரில் மாவட்ட உள்ளூர் குழு ஒன்றை அமைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இதன் தலைவராகவும், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை (தஞ்சாவூர்), வேளாண்மைத் துறை இணை இயக்குநர் (பொறியியல்), வேளாண்மைத்துறை இணை இயக்குநர் (முழுமுர வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்), மற்றும் அவ்வப்போது தேவையெனக் கருதப்படுபவர்கள் அதன் உறுப்பினர்களாகவும் இருப்பர். | இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. விரிவான திட்டத்திற்காக தீட்டப்பட்டிருக்கின்ற செயல்முறைத் திட்டத்துடன் இது இணைக்கப்படும். |
| 4. வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ள அதற்கு நேரான வேளாண்மைத் துறை பணியாளர்களைத் தவிர ஐக்கிய நாடுகள் வேளாண்மை வல்லுநர்களுக்கு உதவி செய்வதற்காக உதவிப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அலுவலக வசதி, ஆய்வுக் கூடங்கள், பரிசோதனை நிலங்கள் போன்ற தேவையான வசதிகளுடன் வேளாண்மை ஆராய்ச்சிக்கு உதவக்கூடிய வசதிகளை வேளாண்மைத்துறை கொடுக்கும். | வேளாண்மைத் துறையில் அதற்கு நேரான பணியாளர்களைத் தவிர, மற்ற பணியாளர்களை நியமிப்பதைப் பொறுத்த வரையில், அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் முழு நேரப் பணியாளர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தற்போதுள்ள பணியாளர்களே, அவர்களுக்குரிய வேலையுடன் தேவையான உதவிகளும் செய்வார்கள் என்றும், இத் திட்டம் நிறைவேற்றப் பட்டவுடன், முழுநேரப் பணியாளர்கள் அவசியமாக இருந்தால் அவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், வேளாண்மைத் துறைச் செயலாளர் தற்கால ஏற்பளிப்பு வழங்கியுள்ளார், இதைக் குழு உறுதிப்படுத்தியது.<br><br>வேளாண்மை ஆராய்ச்சிக்கு வேண்டிய உதவியை பொறுத்த வரையில், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும், அரசு விதைப் பண்ணைகளிலும், தேவையான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என வேளாண்மைத்துறைச் செயலாளர் தெரிவித்துள்ளார். |
| 5. செயல்முறை முகவரமைப்பு ஏற்றுக்கொள்ளும் வகையில் காவிரி கழிமுகப் பகுதியில் அலுவலகம் கட்டுவதற்காக தோராயமாக 5,500 ச. அடி-ம், பணிமனை துளையிடும் கருவிகள் ஆகியவை அமைப்பதற்காக (தோராயமாக 9,000 ச. அடி) அரசு இடவசதி அளிக்கும். | இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்ட இயக்குநர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் தேவையான இடத்தை கண்டு பிடிப்பதில் உதவி செய்வார்கள் (மாநில அரசுக்கு எவ்வித செலவும் ஏற்படவில்லை). |

| விளக்கம் வேண்டப்பட்ட குறிப்பு. | தமிழ் நாடு அரசின் நடவடிக்கைகள். |
| --- | --- |
| 6. பணி நல்ல முறையில் நடைபெறவேண்டி, ஐக்கிய நாடுகள் வளாண்மை வல்லுநர்கள் இருவரின் பணி நிலையம் காவிரி ழிமுகப் பகுதியில் இருக்க வேண்டும் என கோரப் ட்டிருப்பதால் அவர்களுக்கு தரமான வாழ்க்கை வசதிகளை அரசு சய்து கொடுக்கும். | இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தனது நற்திறனைப் பயன்படுத்தி தேவையான இடவசதியைக் கண்டுபிடிப்பார் (இதில் மாநில அரசுக்கு எவ்விதச் செலவும் ஏற்படாது) |
| 7. காவிரி கயவாய்ப் பகுதியில் வேளாண்மை வளர்ச்சிக்காக ள்நாட்டு நிதி உதவியை அல்லது வெளிநாட்டு நிதி உதவியைக் கட்பதற்கான மனுவுக்கு ஏற்ற சாத்தியக்கூறுகள் பற்றிய றிக்கை தயாரிக்கப்படுவதற்கு இத்திட்டத்தின் முடிவுகள் பன்படுமென ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்திற்கு றுதியளிக்கப்பட வேண்டும். அத்தகைய நிதி உதவி எந்த றையில் பெறப்பட வேண்டும் என்பது வரையறுக்கப்பட வண்டும். | ( a ) ஆய்வுப் பணிக்குப் பின்னர் செய்து முடிக்கப்பட்டது என்ன ?<br>(b) எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்கள் யாவை என்பதை பற்றி சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்படும் என்று வல்லுநர்கள் குழுவிற்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கை நமது அதிகாரிகளாலேயே தயாரிக்கப்படும். அல்லது ஐக்கிய நாடுகள் வல்லுநர்களின் உதவி தேவையென மாநில அரசு கருதினால் மட்டுமே அவர்களது உதவியுடன் இவ்வறிக்கையை நமது அதிகாரிகள் தயாரிப்பார்கள். சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் தேவையான பொழுது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதி உதவியுடன் உற்பத்தித் திட்டத்தை மேற்கொள்ளும். அவ்வப்போது தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரும் அரசுத் திட்டங்களுக்கு இணங்க திட்டத்தின் அளவு, அதற்குத் தேவையான நிதி ஆகியவற்றின் விவரங்களை பின்னரே தெரிவிக்க இயலும். மேற்கூறியவற்றிற்கு உட்பட்டு கோரப்படும் உறுதிகள் வழங்கப் படலாம். |

| விளக்கம் வேண்டப்பட்ட குறிப்பு | தமிழ் நாடு அரசின் நடவடிக்கைகள் |
| --- | --- |
| 8. விமானத்திலிருந்து புகைப்படமெடுத்தல்—<br>அந்தந்த இடங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு இந்திய ரசினால் செய்யப்படுகின்ற வான ஆராய்ச்சி நடத்துவதற்காக 5,00,000-யை (டாலர் 65,000-க்கு சமான ரூபாய்), உள் ப்பந்தம் என்ற தலைப்பின் கீழ் செய்யப்படும் என்று புதிய பண்டுகோளில் தமிழக அரசு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் ட்டுள்ளது. சென்னை மாநிலத்தில் கனி வள ஆய்வுத் திட்டம் நாடர்பாக வானிலிருந்து நிழற்படம் எடுக்கும் பணியைச் சய்துவரும் துணை ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் இத்திட்டத்தின் ானிலிருந்து நிழற்படம் எடுக்கும் பணியையும் மேற்கொள்ள வண்டும் என்று முதலில் கருதப்பட்டது. இதற்காகத் துணை ப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படும் தொகை ரூபாய்களில் சலுத்தப்பட வேண்டும். ஆனால் துணை ஒப்பந்தக்காரர்கள் ரபாய் நாணயத்தில் தொகை ஒப்புக்கொள்ளவில்லை என்று றியப்படுகிறது. ஜனவரித் திங்களில் ஹண்டிங்ஸ் என்பவர்கள் ங்கு தங்கி இருக்கும்போது அவர்களுடைய பணியைப் பயன் டுத்திக்கொள்வது நன்மை பயக்கும் என்று இக்குழு கருதுவதால் புந்த ஒப்பந்தத்திற்கு உண்டாகும் செலவு அமெரிக்க டாலரில் சலுத்தப்பட வேண்டும். (இப்பொருள் மீது 1968 ஜனவரி 1-ஆம் நாளிட்ட கடிதத்துடன் முடிவடைந்த கடிதப் 'பாக்குவரத்தைப் பார்க்கவும்.) | இது ஒப்புக் கொள்ளப்பட்டது. இதற்காக மாநில அரசுக்கு ஆகும் செலவு சுமார் ரூபாய் 4.58 லட்சமாகும். அமெரிக்க நாடு இதற்கு தேவைப்படும் அன்னியச் செலாவணியை பெறும். |
| 9. அரசுக்கு நேரான நிறுவனத்தின் உதவித் தொகை ஐக்கிய ாடுகள் வளர்ச்சித் திட்டத்திற்கு ரொக்கமாகக் கொடுக்கப்பட வண்டும் என்று இக்குழு கருதியது. அப்போதுதான் திட்டப் | இது கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தயாரிக்கப்பட விருக்கும் செயல்முறைத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும். |

ணிகள் விரைவில் நிறைவேற்றப்படுவது சாத்தியமாகும். த்தொகை துணை உதவிக்காக கேட்கப்பட்டுள்ள புதிய வண்டுகோளில் காட்டப்பட்டுள்ளதில் அரசுக்கு நேரான மொத்த தவித் தொகையில் 10 சதவீதமாக இருக்கும்.

**10.** தற்போது மாநிலத்தில் உள்ள துளையிடும் திறனிலிருந்து திக அளவுப் பயனைப் பெறுவதற்கு 100,000 டாலர்கள் (1,500 டிக்குத் துளையிடும் திறனுள்ள இயந்திரம்) பெறுமான ருவிகளைப் பயன்படுத்த அரசு கருதியுள்ளது. மொத்தத்தில், ாநிலத்தில் தற்போது உள்ள துளையிடும் இயந்திரங்களுக்கு ளைக் கருவிகளை வாங்க இதில் பதிவாகியுள்ள இனத்தைப் பயன் படுத்துவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும் என்பதே இதன் நாக்கமாகும்.

சென்னை மாநிலத்தின் முன்னரே பயனில் உள்ள துளையிடும் எந்திரங்களுக்கான உதிரிப் பாகங்களை வாங்குவது (திட்ட வேண்டுகோள் விண்ணப்பத்தில் வகை செய்துள்ளவாறு) பயனுள்ளதா என்ற வினு விவாதிக்கப்பட்டது. தற்போது செயலற்று இருக்கும் துளையிடும் இயந்திரங்களுக்கு உதிரிப் பாகங்களை வகை செய்வதால் அதிக அளவுச் செயல்திறனை அடையலாம் என்ற திட்ட மேலாளர் வலியுறுத்தினுல், துளையிடும் இயந்திரத்திற்குப் பதிலாக உதிரிப் பகுதிகளைப் பயன்படுத்த கோரும் கருத்துரையை ஒப்புக்கொள்வதற்கு முன்னர் வேளாண்மைத் துறையில் தற்போது உள்ள பல்வேறு எந்திரங் களில் உதிரிப் பகுதிகளில் செயல்திறனை அறிய விரும்புவதாக என்று வேளாண்மைத் துறைச் செயலாளர் தெரிவித்துள்ளார். உதிரிப் பாகங்கள் இல்லாததனுல், ஒரே துளையிடும் எந்திரம் மட்டும் செயலற்றிருப்பதால் அவரால் கண்டறியப்பட்டது. உதிரிப் பாகங்கள் வாங்கிப் போடுவதற்கு மாருக புதிதாக ஒரு துளையிடும் இயந்திரத்தை நிறுவலாம் என்று பொதுப்பணித் துறைச் செயலாளர் நினைத்தார். இறுதியாக, செயல் திட்டத்தில் புதிய துளையிடும் எந்திரம் வகை செய்யப்படலாம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**11.** தற்போது உள்ளதும், புதிய விண்ணப்பத்தில் கேட்கப் பட்டுள்ளதுமான துணை உதவிகள், எதிர்பாராத ஒதுக்கீடுகள் கியவற்றில் பரிவுரை செய்யப்பட்டுள்ள திருத்தி அமைக்கப்பட்ட துக்கீடுகளை அரசு மறு ஆய்வு செய்கிறது. இச் சுருக்கத்தின் ல் ஒன்று இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மேற்கொள்வதற்கும் அதனுடைய அனு மதிக்கும் இடையே உள்ள இடைவெளியை நிறைவு செய்வதற்கு எதிர்பாராச் செலவு நிதியின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கம் பரிவுரை செய்யப்பட்டது. முன்னர் கேட்கப்பட்ட உதவிக்கும் தற்போது பரிவுரை செய்யப்பட்டுள்ள உதவிக்கும் இடையே சிறிதளவு வேறு பாடு காணப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தை 1968 ஜனவரி அல்லது பிப்ரவரித் திங்களில் தொடங்கவிருந்தது. ஆனுல் அவ்வாறு தொடங்கப்படவில்லை. அதனுல்தான் இந்த வேறுபாடு என்று திட்ட மேலாளர் தற்போது தெரிவித்துள்ளார். எனினும் முறையான அனுமதியைப் பெற்று திட்டம் முழு அளவில் செயல் படும்போதும், தற்போது உள்ள நிலையிலும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து உதவி அளிப்பதன் மூலம் சிறு தொகையை உடனடியாக செலவிட ஐக்கிய நாடுகள் குழு பரிவுரை செய்துள்ளது. ஓரளவுக்கு இதனுல் செலவு அதிகரித்துள்ளது. இச் செலவை ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாகும். ஆனுல் முதற்கண் செய்யப்பட்ட விதித் துறை அடுத்த தரப்பினரைப் பொறுத்தவரை மாறவில்லை. பரிவுரை செய்யப்பட்ட திருத்திய நிதி ஒதுக்கீடு ஒப்புக் கொள்ளப்படலாம்.

**12.** ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் இது குறித்து ரையறுத்துள்ள கால அளவு ஜூன் திங்களாகும். எனவே டெல்லியிலிருந்து பிப்ரவரி 15-ஆம் நாளுக்குள் அனுப்ப வண்டும் என்பதைக் கருத்தில் கொண்டால், பிப்ரவரித் திங்கள்

பொதுப்பணித்துறைச் செயலாளர் இது குறித்துத் தம்மால் இயன்றதை செய்வதாக வாக்களித்தார்.

**ஊற்று நீர்த்திட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாம் நிலை திட்டம் பற்றிய விவரங்கள்.**

ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப் பட்ட பகுதிகளில் ஊற்று நீர் ஆய்வு செய்வதற்காக திட்டத்திற்கு தமிழ் நாடு அரசு 1966 பிப்ரவரித் திங்களில் அனுமதி அளித்தது. மூன்றாண்டுக்கால அளவிலான இத்திட்டம் மற்றவற்றிற்கிடையே, ஊற்றுநீர் வாயில்கள் பற்றி ஆய்வு செய்வதற்கும், (i) சென்னை மாநகர் அதன் சுற்றுப்புறங்கள், (ii) பாலாற்றுப் படுகை, (iii) நெய்வேலி பகுதி, (vi) காவிரி கயவாய்ப் பகுதி ஆகிய இடங்களில் இவ்வாயில்களை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு பற்றிய மதிப்பீடு தயார் செய்வதற்கும் வகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் காவிரியின் கயவாய்ப் பகுதிக்குப் போதுமான அளவில் கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, மாநில அரசு காவிரியின் கயவாய்ப் பகுதியில் நிலநீர் ஆய்வினை விரிவுபடுத்துவதற்காக இரண்டாம் நிலைத் திட்டத்திற்கு கூடுதல் உதவி அளிக்க வேண்டுமென இந்திய அரசின் மூலமாக ஐக்கிய நாடுகள் மன்றத்திடம் கேட்டுக்கொண்டது. 1969-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாளன்று தமிழ் நாட்டில் உள்ள காவிரி கயவாய்ப் பகுதியில் ஊற்றுநீர் ஆய்வினை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தில் ஐக்கிய நாட்டுக் குழுவும் இந்திய அரசும் கையொப்பமிட்டுள்ளது.

2. ஊற்று இயல் ஆய்வு பற்றியும், ஊற்றுநீர் வளம் பற்றியும் மதிப்பீடு செய்வதற்கு இத் திட்டம் வகை செய்கிறது. முதல் நிலையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் தொடர்ச்சியாக இந்த அடங்கல் ஊற்றுநீர் ஆய்வு இருக்கும். ஊற்றுநீர் மேம்பாட்டு வளம் பற்றிய மதிப்பீடானது, வேளாண்மை ஆய்வும், மண்வள ஆய்வும் சேர்ந்ததாகும். இத்திட்டம் 2½ ஆண்டு கால அளவிலானது. ஐக்கிய நாடுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து நாடுகள் வல்லுநர்கள் குழு உதவியுடனும் தமிழ் நாடு பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை ஆகியவற்றில் தொழில் நுட்பப் பணியாளர்களின் உதவியுடனும் காவிரி கயவாய் பகுதியின் ஆய்வு மேற்கொள்ளப்படும். இத்திட்டம் நடைபெறுகையில், உள்ளூர் பணியாளர்கள் ஊற்றுநீர், ஒருங்கிணைப்பு ஆய்வு ஆகியவற்றின் நவீன முறைகளில் பயிற்சி அளிக்கப்படுவார்கள். இத்திட்டத்தின் தலைமையிடம் தஞ்சாவூரிலும் கிளை அலுவலகம் சென்னையிலும் இருக்கும்.

இத்திட்டம் 13,21,159 டாலர்கள் அல்லது ரூ. 99.09 லட்சம் செலவுக்கு வகை செய்கிறது. அதுகுறித்த விவரம் பின்வருமாறு :—

| | கொடுக்கப்பட்டுள்ள உதவி | |
|---|---|---|
| | அமெரிக்க டாலர். | ரூபாய் லட்சத்தில். |
| (அ) சிறப்பு நிதிமுலம் ஒதுக்கீடு .. | 7,70,300 | 57·77 |
| **அந்த நிதியில்—** | | |
| (i) அமெரிக்க சிறப்பு நிதி உதவித் தொகை 664,090 டாலர் அல்லது ரூபாய் 49·80 லட்சம். | | |
| (ii) அதவித் தொகையில் அரசின் பங்கு டாலர் 61,200 அல்லது ரூபாய் 4·59 லட்சம். | | |
| (iii) உள்ளூர் பணியாளர் செலவு குறித்து அரசின் உதவித் தொகை டாலர் 45,100 அல்லது ரூபாய் 3·38 லட்சம். | | |
| (இ) கருவிகளாகக் கொடுக்கப்பட்ட உதவியில் அரசின் பங்கு .. .. | 5,50,859 | 41 32 |
| மொத்தம் .. | 13,21,159 | 99.09 |

LASSIFICATION SOUGHT BY THE UNITED NATIONS MISSION REGARDING GROUND-WATER AND THE REACTION OF THE TAMIL NADU GOVERNMENT.

| *Point of clarification.* | ***Reactions of the Government of Tamil Nadu.*** |
|---|---|
| (1) | (2) |
| (1) That the Secretary of Agriculture be designated as roject Agriculture Adviser. | This was agreed to and will be incorporated in the Plan of operation for the expansion project to be drawn up. |
| (2) That the Technical Committee of the Project be xtended to include the Director of Agriculture and the Joint Director of Agriculture (Engineering). | |
| (3) That a local district committee be set up in Thanjavur o guide and co-ordinate the integration of future groundwater studies and exploitation of agricultural development. The Chairman of this Committee would be the District Collector, and the other members of the Committee would be the Superintending Engineer of Public Works Department (Thanjavur) and the Joint Director of Agriculture (Engineering), the Joint Director of Agriculture (I.A.D.P.) and such others as may be found necessary from time to time. | |
| (4) That the Agriculture Department outside the counterpart staff now listed in the request provide support staff for the United Nations Agricultural experts. The Agriculture department would furnish in addition all necessary facilities such as offices, laboratories and experimental lands that might be needed to support the agricultural studies. | As regards provision of agricultural staff outside the counterpart staff, Secretary, Agriculture raised the presumption that they need not necessarily be full time officers, that the existing officers will provide necessary support in addition to their existing work and that if, after working the programme, it was found necessary to have full time officers they will be provided. This was confirmed by the Mission. |

Regarding provision of facilities to support agricultural studies, Agriculture Secretary stated that all necessary facilities will be provided in the Agricultural Research Stations and State Seed Farms.

| | |
|---|---|
| (5) That the Government provide office space (approximately ,500 square feet) and yard space for workshops and drilling gs (approximately 9,000 square feet) at a location in the auvery Delta acceptable to the executing agency. | This was accepted. The Project Director and the Collector will help find out the necessary accommodation. (No expenditure to State Government is involved). |
| (6) Since it has been requested that the duty station of the vo United Nations Agricultural experts be in the Cauvery elta for maximum working efficiency, the Government would rovide living accommodations of suitable standard for these ople. | This was accepted. The Collector will use his good offices in finding out necessary accommodation. (No expenditure to the State Government is involved). |
| (7) United Nations Development Programme would like to assured that the findings of the project will lead to a eparation of a feasibility report suitable for eventual applican for seeking internal or external financing for overall agriltural development of the Cauvery Delta. The manner in iich any such finance is to be obtained should be defined. | The Mission was assured that this investigation will be followed up by the preparation of a feasibility report of (*a*) what has been done and (*b*) future lines of Developments. The feasibility report will be prepared by our own Officers or by seeking the assistance of United Nations experts only if considered necessary by the State Government. The Mission was also assured that after the preparation of the feasibility report, the Tamil Nadu Government will take up actual production schemes, with internal financing or external financing as may be found necessary. The details regarding the magnitude of the Project and the finance required could be spelt out only at a later stage and consistently with the Governmental Plans that are being made and executed from time to time on the subject. Subject to the above observation the assurance sought for could be given. |
| (8) *Aerial Photography.*—In the new Request under the leading " sub-contract " it is stated that the Tamil Nadu Government have made available Rs. 5,00,000 (rupees equivaent of about $ 65,000) in local currency for aerial survey to be un by the Government of India from local resources. It was originalily thought that the aerial coverage might be undertaken by the Sub-contractors who would be doing the aerial photographic work in connection with the Mineral Investigation Project in Tamil Nadu. The Payment towards the aerial coverage by the sub-contractors group could be made in rupees. But now it is learnt that the sub-contractors are not likely to accept rupees. Since the Mission considers that if may be desirable to avail the services of Huntings while they are here in January in which case the cost towards its contract is to be paid in U.S. Dollars (please refer to previous correspondence on the subject ending with letter, dated 11th January 1968). | This was accepted. The cost to State Government will be about Rs. 4.58 lakhs and the United Nations will find the required Foreign exchange. |
| (9) The Mission considers that a part of the Government counterpart contribution should be paid in cash to United Nations Development Programme so that a higher degree of lexibility can be had for the Project's operations. This amount would be to the tune of 10 per cent of the total Government counterpart contribution shown in the new Request for supplementary assistance. | This was agreed to in principle and will be incorporated in the Plan of Operation to be drawn up. |

(10) That the Government consider utilising the $ 100,000 equipment items in the Request (for a 1,500 feet capacity drilling rig), in a manner designed to attain the utmost efficiency from the existing drilling capacity in the State. In essence, the intention here is for the Government to give consideration for the utilisation of this entered item for the purchase of spare parts for existing drilling rigs in the State.

The question whether it would be advantageous to go in for spare parts for rigs already in usein Madras State (as provided in the Project request) was discussed. The Project Manager stressed that by providing spare parts optimum efficiency could be achieved for the rigs that might be idle now, otherwise. The Secretary, Agriculture stated that he would like to find out the actual state of affairs regarding spares for various machines in the Agriculture Department before he could accept the suggestion to provide spares instead of a rig. It was ascertained by him that there is only one rig not functioning for want of spares. Secretary, Public Works Department felt that a new rig might be provided nstead of spare parts. Finally, it was agreed that a new rig might be provided in the Plan of Operation.

(11) That the Government review the revised allocations recommended from the contingency allocation and for supplementary assistance in the existing and the new request. A copy of this summary is attached herewith.

The additional allocation recommended under contingency financing is to cover the gap between the taking up of the project and its sanction. There is a slight variation between the original request and the assistance now recommended. The Project Director has since explained that the original anticipation was to have commenced the expanded project by about January or February 1968, but the same could not come through. However the U.N. Mission has recommended to incur a certain amount immediately by way of contingency financing between now and the actual time when the revised expansion will get into full swing after proper sanction. This has resulted in a certain amount of increase in expenditure which will inevitably have to be met by United Nations while basically on the counterpart side the provisision originally made would remain the same. The revised allocation recommended may be accepted.

(12) In view of the fact that the final submission to the United Nations Development Programme must be made from New Delhi by 15th February 1968 in order to meet the June deadline of the Governing Council, it will be necessary for the Government to give its written expression of views on the points covered in this memorandum by the first week of February at the latest. It would greatly assist in expediting the processing of the Request if the Government of Madras when it submits its views to the Government of India could simultaneously and un-officially also convey these views directly to the Chief of this Mission (Resident Representative, United Nations Development Programme, New Delhi).

Secretary, Public Works Department promised to do his best.

DETAILS OF THE SECOND PHASE PROJECT OF THE UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME, GROUND-WATER, PROJECT.

In February 1966, the Government of Madras (Tamil Nadu) approved and sanctioned a plan of operation for ground water investigation in selected areas of this State with the aid of United Nations Special Fund. The project which was of three years duration envisaged, among other things, an investigation of ground water resources and an apprisal of the technical and economical feasibility of developing these resources in the following four areas, namely: (1) Madras City and its environs, (2) Palar River Basin, (3) Neyveli area and (4) Cauvery Delta. As the project did not provide adequate coverage for the Cauvery Delta, this Government made a request to the United Nations through the Government of India for additional assistance for a second phase project for expansion of ground-water investigation in the Cauvery Delta. The United Nations and the Government of India have signed a plan of operation for the expansion of ground water investigation in the Cauvery Delta of Tamil Nadu on 30th May 1969.

2. The project envisages an investigation of the hydro-geology of the Cauvery Delta and an assessment of its ground-water development potential. The comprehensive Hydro-geological study will be a continuation of those undertaken in Phase I. The assessment of ground water development potential will include agricultural and soil study. The project will be of 2½ years duration. The investigation in the Cauvery Delta will be carried out with the assistance of a Team of International Experts provided by the United Nations and working in conjunction with technical staff from the Tamil Nadu Public Works Department and Agriculture Department. In the course of the project local personnel will be trained in modern methods of ground water and allied investigation. The project headquarters will be at Thanjavur with a sub-office at Madras for purposes of liaisoning.

3. The project envisages an outlay of U.S. $ 1,321,159 or rupees 99.09 lakhs as indicated below:—

| | *Expressed in* *U.S. $.* | *In lakhs of Rupees.* |
|---|---|---|
| (a) Allocation by the special fund ... | 770,300 | 57.77 |
| *Consisting of—* | | |
| (i) Special Fund Contribution U.S. $ 664,090 or Rs. 49.80 lakhs | ... | ... |
| (ii) Government counterpart contribution in cash U.S. $ 61,200 or Rs. 4.59 lakhs ... ... | ... | ... |



| | *Expressed in* *U.S. $* | *In lakhs of Rupees.* |
|---|---|---|
| (iii) Government contributions towards local operating costs U.S. $ 45,100 or Rs. 3.38 lakhs ... ... | ... | ... |
| (b) Government counterpart contribution in kind ... ... ... | 5,50,859 | 41.32 |
| Total ... | 13 21,159 | 99.09 |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th to 31st January and 1st February* 1972.

VOLUME XV (Nos. 1 to 6).

A


*Pages.*

ABDUL JABBAR, THIRU V. M.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 63-67

ABUSALI, THIRU M. A.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 204-206

ADITANAR, THIRU SI. PA.—
Governor's Address (M) .. .. .. .. .. 195, 392

ADMINISTRATION—
Community Development organisation, constitution under separate authority .. .. .. .. .. .. .. 588
Jamabandi in Palladam taluk, Abolition .. .. .. 234
Palladam taluk, change of name as Tiruppur taluk .. .. 234
Radhapuram sub-taluk, upgrading .. .. .. .. 235
Revenue administration in East Thanjavur, separation .. .. 562, 563

AGRICULTURE—
Agricultural Council, setting up in State .. .. .. 18
Agriculturists' Delegation to other States for study of methods. 581
Date trees, cultivation in sandy places like Mandapam and Rameswaram .. .. .. .. .. .. .. .. 485
Farm Record Book, introduction .. .. .. .. .. 485
Seed Farms, setting up in Tamil Nadu by Seed Farms Corporation .. .. .. .. .. .. .. .. .. 17
Vegetables, special programme for cultivation in Madras City .. 579 580

Pages.

AIR PORTS—
*See* ports.

ALAGAMUTHU, THIRU T. P.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 28

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Bill for consideration, insufficient notice (Point of order) .. 665
Clash among employees of Simpson Group of Companies (A.M.) .. .. .. .. .. .. .. .. 153-154
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, Ratification (R) .. .. .. .. .. .. .. .. 616-621, 634, 640
Governor's Address (M) ... ... ... ... ... ... 281-290 425, 507, 514, 535

ANBAZHAGAN, THIRU K.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 425, 528, 530

ANNA SQUARE—
Fountain (colour) near Arignar Anna Square, German Government's assistance ... ... ... ... ... ... 484

ARCHAEOLOGY—
Pallava inscriptions in Chengam area, excavation ... ... 348-349
Siva Temple, Thiruveelimilalai, discovery of ancient paintings 347-348

ARUMUGAM, THIRU S—
Governor's Address (M) ... ... ... ... ... ... 68-74

ATOMIC POWER—
Kalpakkam Atomic Power Station, utilisation of entire electricity ... ... ... ... ... ... ... ... 486-487

B

BALASUNDARAM, THIRU V.—
Governor's Address (M) ... ... ... ... .. ... 274-277

BILL(S)—
City Tenants' Protection (Amendment) Bill, 1972—
Int., ... ... ... ... ... ... ... ... ... 499
Consid., ... ... ... ... ... ... ... ... 668-673
Consid. Cl., Motion to pass/passed ... ... ... ... 673

BOARD(S)—
Khadi and Village Industries Board, extension of services to villages ... ... ... ... ... ... ... ... 365



Pages.

BOMMAN, THIRU K. A.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 319-322
Paper Mills, establishment at Gudalur ... ... ... ... 359-360

BOOKS AND PUBLICATIONS—
Books, gift by United Kingdom Government under "Book Presentation Scheme" ... ... ... ... ... ... 114

BRIDGES AND CULVERTS—
Bridge across Periyar canal at Anaipatti, reconstruction ... 364
Bridge at Sengalipalayam Pallam, construction ... ... ... 569-570
Overbridges across Railway crossings at Dharmapuri-Adamankottai and Mc. Donald Choultry on Sankari road, details re. construction ... ... ... ... ... ... 481

BUILDING(S).
Building Materials Display Centre, grounds for selection of items for display ... ... ... ... ... ... 484
Building Materials Display Centre, staff employed and cost of maintenance ... ... ... ... ... ... ... 484
Government buildings, Tamil names ... ... ... ... 131
Business of the House ... ... ... ... ... ... ... 27

C

CALLING ATTENTION—
Teachers of Singanallur Municipal Schools, non-payment of salary ... ... ... ... ... ... ... ... 600-601

CANAL(S)—
Buckingham canal, in Madras City waters becoming red ... 480-481

CATTLE—
Nuisance in Madras, preventive steps ... ... ... ... 113-114

CEMENT—
Tamil Nadu Cements, Alangulam, tender ... ... ... 239

CHAIR—
Announcements—
B.O.H. ... ... ... ... ... ... ... ... 27
Governor's Address, amendments to Motion of Thanks ... ... 86

CHAIR—
Rulings and Observations—
GOVERNMENT MOTIONS—
Attack on inmates of the Houses of Simpson Workers in North Madras by some Armed people and damages toproperty—
Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... ... 266

A—cont.


*Pages.*

AIR PORTS—
*See* ports.

ALAGAMUTHU, THIRU T. P.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 28

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Bill for consideration, insufficient notice (Point of order) .. 665
Clash among employees of Simpson Group of Companies (A.M.) .. .. .. .. .. .. .. .. 153-154
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, Ratification (R) .. .. .. .. .. .. .. .. 616-621, 634, 640
Governor's Address (M) ... ... ... ... ... ... 281-290 425, 507, 514, 535

ANBAZHAGAN, THIRU K.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 425, 528, 530

ANNA SQUARE—
Fountain (colour) near Arignar Anna Square, German Government's assistance ... ... ... ... ... ... 484

ARCHAEOLOGY—
Pallava inscriptions in Chengam area, excavation ... ... 348-349
Siva Temple, Thiruveelimilalai, discovery of ancient paintings 347-348

ARUMUGAM, THIRU S—
Governor's Address (M) ... ... ... ... ... ... 68-74

ATOMIC POWER—
Kalpakkam Atomic Power Station, utilisation of entire electricity ... ... ... ... ... ... ... ... 486-487

B

BALASUNDARAM, THIRU V.—
Governor's Address (M) ... ... ... ... .. ... 274-277

BILL(S)—
City Tenants' Protection (Amendment) Bill, 1972—
Int., ... ... ... ... ... ... ... ... ... 499
Consid., ... ... ... ... ... ... ... ... 668-673
Consid. Cl., Motion to pass/passed ... ... ... ... 673

BOARD(S)—
Khadi and Village Industries Board, extension of services to villages ... ... ... ... ... ... ... ... 365




B—cont.


*Pages.*

BOMMAN, THIRU K. A.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 319-322
Paper Mills, establishment at Gudalur ... ... ... ... 359-360

BOOKS AND PUBLICATIONS—
Books, gift by United Kingdom Government under "Book Presentation Scheme" ... ... ... ... ... 114

BRIDGES AND CULVERTS—
Bridge across Periyar canal at Anaipatti, reconstruction ... 364
Bridge at Sengalipalayam Pallam, construction ... ... ... 569-570
Overbridges across Railway crossings at Dharmapuri-Adamankottai and Mc. Donald Choultry on Sankari road, details re. construction ... ... ... ... ... ... 481

BUILDING(S).
Building Materials Display Centre, grounds for selection of items for display ... ... ... ... ... ... 484
Building Materials Display Centre, staff employed and cost of maintenance ... ... ... ... ... ... 484
Government buildings, Tamil names ... ... ... ... 131
Business of the House ... ... ... ... ... ... ... 27

C

CALLING ATTENTION—
Teachers of Singanallur Municipal Schools, non-payment of salary ... ... ... ... ... ... ... 600-601

CANAL(S)—
Buckingham canal, in Madras City waters becoming red ... 480-481

CATTLE—
Nuisance in Madras, preventive steps ... ... ... ... 113-114

CEMENT—
Tamil Nadu Cements, Alangulam, tender ... ... ... 239

CHAIR—
Announcements—
B.O.H. ... ... ... ... ... ... ... ... 27
Governor's Address, amendments to Motion of Thanks ... ... 86

CHAIR—
Rulings and Observations—
GOVERNMENT MOTIONS—
Attack on inmates of the Houses of Simpson Workers in North Madras by some Armed people and damages toproperty—
Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... ... 266

Pages.

**CHAIR**—*cont.*

**Rulings** and Observations—*cont.*

CLASH AMONG WORKERS OF SIMPSON GROUP OF COMPANIES AND ITS CONSEQUENCES—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 154

DISTURBANCE AT POLITICAL MEETINGS IN THE STATE AS IN THE CASE OF MEETINGS IN TIRUCHIRAPPALLI—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 270

INFORMATION ABOUT ADJOURNMENT MOTIONS—

Members should not try to seek information in the House about the adjournment motions given notice of by them. Intimation of the rejection of the motions in the Chamber of the Speaker would be expeditiously sent to the members concerned ... ... ... ... ... ... ... 154-155

MANHANDLING OF A TEACHER OF NADARS' HIGH SCHOOL, TIRUMANGALAM AND CLOSURE OF THE SCHOOL—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister ... ... ... ... ... ... ... 600

POLICE LATHI CHARGE ON THE WORKERS OF THE TANK FACTORY, AVADI—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 263

POLICE LATHI CHARGE ON THE WORKERS OF TANK FACTORY, AVADI AND CONSEQUENT INJURY TO WORKERS AND LEADERS—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 384

OBSTINATE STAND OF BEARDSELL CO., METTUR AND ENFORCED UNEMPLOYMENT OF WORKERS—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister for Labour ... ... ... ... ... ... ... 274

UNION MINISTER THIRU K. R. GANESH'S VISIT TO THE HOSPITAL AND INTERVIEW WITH SOME TRADE UNION LEADERS WHO WERE UNDER DETENTION—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the **Chief Minister** ... ... ... ... ... ... ... 499



Pages

***Bills***—

**CHAIR**—*cont.*

**Rulings** and Observations—*cont.*

LACK OF NOTICE—

With reference to a point of order raised by a Member about lack of notice for the consideration of a Bill, the Chair observed that though there was some force in the member's point, it was not a point of order. Under the rules the Chair had powers to dispense with the provisions relating to notice ... ... ... ... ... ... ... 663-668

*Business of the House*—

REPORTS SUBMITTED TO GOVERNMENT, DISCUSSION—

With reference to a point of order raised by a Member about the discussion on a report submitted to Government, the Chair observed that the member wanted information on a subject which should be decided in the Business Advisory Committee and which should be brought to the notice of the Leader of the House or the Chief Minister. If a member took the floor for such purposes it only undermined the dignity of the House and the Member.

When the Member repeated the point, the Chair observed that if the Member were to persist in seeking such information, it would be construed as an attempt to obstruct the proceedings and he would be constrained to take appropriate, unpleasant action to uphold the rules of procedure, and privileges of the House ... ... ... ... ... ... 255-256

*Debate*—

INTERRUPTIONS—

Even if the Member who held the floor yielded, another Member could interrupt him, only with the consent of the Chair ... 646

All interruptions by Ministers or Members even on a point of order, could be made only with the consent of the Speaker ... 553-556

REFERENCE TO SUPREME COURT—

It was better not to bring the Supreme Court into any controversial subject as it was not proper on their part to do so ... ... ... ... ... ... ... ... 636, 647

REPETITION—

When the Chair pointed out to the Leader of the Swatantra Party that he should avoid tedious repetitions in his speech the Member asked "Are you defending the Government? Are you a Minister?". The Chair observed: "The Government was not in such a pathetic situation as to be defended by the Speaker. The Speaker had no doubt to defend the House, its rules of procedure and its conventions. The Speaker had all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder. When the Chair intervened to prevent disorder it was not in order for the Member to make remarks which were a reflection on the Chair.

Pages.

**CHAIR**—*cont.*

**Rulings** and Observations—*cont.*

CLASH AMONG WORKERS OF SIMPSON GROUP OF COMPANIES AND ITS CONSEQUENCES—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 154

DISTURBANCE AT POLITICAL MEETINGS IN THE STATE AS IN THE CASE OF MEETINGS IN TIRUCHIRAPPALLI—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 270

INFORMATION ABOUT ADJOURNMENT MOTIONS—

Members should not try to seek information in the House about the adjournment motions given notice of by them. Intimation of the rejection of the motions in the Chamber of the Speaker would be expeditiously sent to the members concerned ... ... ... ... ... ... ... ... 154-155

MANHANDLING OF A TEACHER OF NADARS' HIGH SCHOOL, TIRUMANGALAM AND CLOSURE OF THE SCHOOL—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister ... ... ... ... ... ... ... ... 600

POLICE LATHI CHARGE ON THE WORKERS OF THE TANK FACTORY, AVADI—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 263

POLICE LATHI CHARGE ON THE WORKERS OF TANK FACTORY, AVADI AND CONSEQUENT INJURY TO WORKERS AND LEADERS—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... 384

OBSTINATE STAND OF BEARDSELL CO., METTUR AND ENFORCED UNEMPLOYMENT OF WORKERS—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Minister for Labour ... ... ... ... ... ... 274

UNION MINISTER THIRU K. R. GANESH'S VISIT TO THE HOSPITAL AND INTERVIEW WITH SOME TRADE UNION LEADERS WHO WERE UNDER DETENTION—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Chief Minister ... ... ... ... ... ... ... ... 490



Pages

*Bills*—

**CHAIR**—*cont.*

**Rulings** and Observations—*cont.*

LACK OF NOTICE—

With reference to a point of order raised by a Member about lack of notice for the consideration of a Bill, the Chair observed that though there was some force in the member's point, it was not a point of order. Under the rules the Chair had powers to dispense with the provisions relating to notice ... ... ... ... ... ... ... 663-668

*Business of the House*—

REPORTS SUBMITTED TO GOVERNMENT, DISCUSSION—

With reference to a point of order raised by a Member about the discussion on a report submitted to Government, the Chair observed that the member wanted information on a subject which should be decided in the Business Advisory Committee and which should be brought to the notice of the Leader of the House or the Chief Minister. If a member took the floor for such purposes it only undermined the dignity of the House and the Member.

When the Member repeated the point, the Chair observed that if the Member were to persist in seeking such information, it would be construed as an attempt to obstruct the proceedings and he would be constrained to take appropriate, unpleasant action to uphold the rules of procedure, and privileges of the House ... ... ... ... ... ... 255-256

*Debate*—

INTERRUPTIONS—

Even if the Member who held the floor yielded, another Member could interrupt him, only with the consent of the Chair ... 646

All interruptions by Ministers or Members even on a point of order, could be made only with the consent of the Speaker ... 553-556

REFERENCE TO SUPREME COURT—

It was better not to bring the Supreme Court into any controversial subject as it was not proper on their part to do so ... ... ... ... ... ... ... ... 636, 647

REPETITION—

When the Chair pointed out to the Leader of the Swatantra Party that he should avoid tedious repetitions in his speech the Member asked "Are you defending the Government? Are you a Minister?". The Chair observed: "The Government was not in such a pathetic situation as to be defended by the Speaker. The Speaker had no doubt to defend the House, its rules of procedure and its conventions. The Speaker had all powers necessary for the purpose of enforcing the rules and preventing disorder. When the Chair intervened to prevent disorder it was not in order for the Member to make remarks which were a reflection on the Chair.

C—cont.

Pages.

**CHAIR**—*cont.*
Rulings and Observations—*cont.*
*Debate*—cont.
REPETITION—*cont.*

Under the rules, 'The Speaker, after having called the attention of the House to the conduct of a Member who persists in irrelevance or in tedious repetition either of his own arguments or of the arguments used by other Members in debate or is speaking for the purpose of obstructing the business, may direct him to discontinue his speech.

His only concern was to prevent irrelevant, tedious repetition of arguments in the House ... ... ... ... ... 400-401

DECORUM—

Members shohld not advise the Chair ... ... ... ... ... 646

When the Speaker rises, no Member, including a Minister shall speak and they must immediately resume their seats ... 555

EXPRESSIONS USED IN THE HOUSE—

" Are you defending the Government? Are you a Minister?" —remarks addressed by a Member to the Speaker—Deprecated ... ... ... ... ... ... ... ... ... 400

'Notorious'—in the sentence—" in the famous, I would say notorious 'Bank Nationalisation' decision, the Supreme Court held...............". The Member was advised not to use such an expression in respect of the highest Court of the land ... ... ... ... ... ... ... ... ... 623-624

EXPUNCTION—

A general disparaging remark about a particular district was held to be not in order and was ordered to be expunged ... 339

QUESTIONS AND ANSWERS—

On 25th January 1972, the Chair announced that though a particular question had been included in the list of questions for the day, it was disallowed on account of the fact that the matter referred to in the question also formed the subject matter of some adjournment motions which would be taken up later on the same day ... ... ... ... ... ... ... 123

SUPPLEMENTARY QUESTIONS—

With reference to a Member's remark that the Chair allowed 20 supplementary questions on one question but did not allow even one question for another, the Chair observed that the Member's remark was a reflection on the Chair. Supplementaries were allowed by the Chair at his discretion, based on the importance of that question. There was therefore no question of partiality. If they wanted more number of questions they had necessarily to restrict the number of supplementary questions. Otherwise, only a small number of questions could be answered and the answers to the rest of the questions would have to be printed in the proceedings ... ... ... ... ... ... ... ... 237



Pages.

C—cont.

QUOTATION—
*Newspapers*—
As far as possible, it is better not to read from newspapers. Also it is not necessary to quote from newspapers and it is enough if only a reference is made to it ... ... ... 39-40

CITIES—
Madras City, improvements ... ... ... ... ... 114-115

COLLEGE(S)—
A.V.C. College, Mayuram, grant claimed from Government ... 581
Chikanna Government Arts College, starting of evening classes ... ... ... ... ... ... ... 115
Coimbatore Medical College, training in Dentistry ... ... 1-2
Engineering Colleges, commencement of " Sandwich course". 115-116
Government Colleges, B.Com. Degree Course ... ... ... 468-469
Medical Colleges (New), opening ... ... ... ... ... 351-352
Number to be opened in 1971-72 in Madras City, details *re.* 465-468
Syllabus, revision ... ... ... ... ... ... ... 583-588

CONSTITUTION—
Constitution (Twenty-fifth Amendment), Bill, 1971, ratification. (R) ... ... ... ... ... ... ... ... 601-663

CO-OPERATIVE SOCIETIES—
Agricultural Bank, Nidamangalam, suicide by clerk due to defalcation ... ... ... ... ... ... ... 245
Banks, reservation of seats of directors for depressed classes 369
Co-operative Stores, Tiruppur, irregularities ... ... ... 365-366
Exemption from registration fees ... ... ... ... ... 244
Marketing and Supply Society, North Arcot District, Fruit Processing Unit, Orders from France ... ... ... ... 368-369
Medical facilities to employees ... ... ... ... ... 245
Supermarket, Thanjavur, operation by Co-operative Wholesale Stores ... ... ... ... ... ... ... ... 366-368

CORPORATION—
Industrial Development Corporation—posting of Financial Director ... ... ... ... ... ... ... ... 236-237

COTTON—
Cotton Transport Rules, 1950—draft amending rules (R) ... 673-676
Growers, subsidy for long staple ... ... ... ... ... 576-579
Textile Mills, requirement ... ... ... ... ... ... 125-127

COUNCIL—
National Development Council meeting, inclusion of Tamil Nadu as Backward State ... ... ... ... ... ... 333-335

COURT(S)—
District Munsif's Court in Gingee taluk, establishment ... 12-13
Mobile Courts in Madras City, number ... ... ... ... 480
Sub-Court at Karur, establishment ... ... ... ... 13

Pages.

C—cont.

CRIMES—
Theft, electric motors ... ... ... ... ... ... 340

CURRENCY AND COINS—
Counterfeit coins, wang in Tamil Nadu ... ... ... ... 338 339
Jewels and currency notes, seizure in a house at Ciombatore ... 339

D.

DAM(S)—
Mini-dam-scheme, Sunnambu Anjambedu,—Sunnambu channel mini-dam, completion ... ... ... ... ... ... 565
Sathanur Dam, further beautification ... ... ... ... 481

DENNIS, Thiru N.—
Agricultural Council, setting up ... ... ... ... ... 18
Arumanai Dispensary in Vilavancode taluk, upgrading into hospital ... ... ... ... ... ... ... ... ... 455-456
Books, gift by United Kingdom Government under "Book Presentation Scheme" ... ... ... ... ... ... ... 114
Buckingham Canal in Madras City, waters becoming red ... 480-481
Cattle nuisance in Madras, preventive steps ... ... ... 113-114
Children's Park, Guindy, transport of stags to Javadi hills ... 369
Eve teasers, arrest near Sembiam ... ... ... ... 217
Fake Rice cards case, suspension of Civil Supplies Department officials ... ... ... ... ... ... ... ... ... 124-125
Family Planning, Survey on adoption of methods by Population Council of India ... ... ... ... ... ... ... 458
Forests, hunting ... ... ... ... ... ... ... ... 369-370
Fruit Processing Unit of North Arcot District Co-operative Marketing and Supply Sciety Limited, orders from France... 368-369
Government Hospital, Kuzhithurai, shifting ... ... ... 560-561
Government Hospitals in Madras, purchase of X-Ray film ... 350-351
Governor's Address (M) ... ... ... ... ... ... ... 313-316
Housing Schemes for Harijans, Union Government's financial assistance ... ... ... ... ... ... ... ... ... 8-10
Industrial Development Corporation, posting of Financial Director ... ... ... ... ... ... ... ... ... 236-237
Irrigation Research Station at Poondi, financial assistance by Indian Council of Agricultural Research ... ... ... 485
Khadi and Village Industries Board, increase of price of mud pots ... ... ... ... ... ... ... ... ... 246
Labour strike in Madras Harbour ... ... ... ... 6-7
Liquor, permission for manufacture in private sector ... ... 218-219
Liquor sale, ban on specific days ... ... ... ... ... 221



D—cont.

Pages.

DENNIS, Thiru N.—cont.
Madras City, improvements ... ... ... ... ... 114-115
Malaria Eradication Programme, Madras City ... ... ... 354-355
Medical Colleges (New), opening ... ... ... ... ... 351-352
Medical Services, vacancies of posts of Civil Surgeon ... 559-560
Mosquito menace in Madras City, preventive steps ... ... 119-120
N.C.C. (Medical Unit), training camp at Red Hills ... ... 457
Police Benevolent Fund, increase ... ... ... ... ... 109-110
Polytechnic for women, Central grant ... ... ... ... 469 471
Potato storage plants, setting up ... ... ... ... ... 250-251
Primary Health Centres, conversion into rural hospitals . 225-226
Raffles, allotment of sale proceeds to medical institutions ... 112-113
Railway links for Kanyakumari, steps ... ... ... ... 574-575
Salt areas in Tuticorin, handing over to State Government by Central Government ... ... ... ... ... ... ... 476-478
Scooter Factory in Public sector, setting up .. ... ... 237-238
State Transport, traffic dislocation in Nandanam area ... 597
Superannuated officers, employment as Heads of Departments. 222-223
Super Market, Thanjavur, operation by Co-operative Wholesale Stores ... ... ... ... ... ... ... ... ... 366 368
Tax on gases used for catering, details ... ... ... ... 11
Teachers of Singanallur Municipal Schools—Non-payment of—salary (C.A.) ... ... ... ... ... ... ... 600
Tengaipattinam, conversion as minor port ... ... ... 133-134
Tengaipattinam Government Dispensary, upgrading into hospital ... ... ... ... ... ... ... ... ... 456
Thiruvaduthurai Mutt lands, Tirunelveli district, collection of Manimuthar settlement levy ... ... ... ... 562
Titanium Factory, starting ... ... ... ... ... 237
Toddy and arrack, quality control ... ... ... ... ... 219-221
Ulundurpet-Salem Road, surrender of contract for widening. 569

DHARMALINGAM, Thiru A.P.—
Cotton Transport Rules, 1950, draft amending rules (R) ... 673-674
675-676

DURAISWAMY, Thiru S.—
Additional dispensary under Employees' State Insurance Scheme at Tiruppur town, opening ... ... ... ... 561-562
Air Port at Coimbatore, development ... ... ... ... 574
Chickanna Government Arts College, evening classes ... 115

*Pages.*

DURAISWAMY, THIRU S.—cont.
Coimbatore Medical College, training in Dentistry ... ... 1-2
Community Development Organisation, Constitution under separate authority ... ... ... ... ... ... 583
Co-operative societies, medical facilities to employees ... 245
Co-operative Stores, Tiruppur, irregularities ... ... 365-366
Electricity Department, number of work orders pending ... 596
Government Headquarters Hospital at Coimbatore, water scarcity ... ... ... ... ... ... ... ... 2-3
Building Committee, Vijayapuram High School, application *re.* Science Laboratory ... ... ... ... ... ... 582
Jamabandi system in Palladam taluk—abolition ... ... 234
Kalpakkam Atomic Power Station, utilisation of entire electricity ... ... ... ... ... ... ... ... 486-487
Madras-Coimbatore Express Train, introduction ... ... 361
Medical check up (compulsory) for school children, introduction ... ... ... ... ... ... ... ... 117-119
Old age pension, increase ... ... ... ... ... ... 111-112
Palladam taluk, change of name as Tiruppur taluk ... ... 234
Pond Scheme at Kanjampalayam, execution ... ... ... 243
Pond Scheme at Varanasipalayam, execution ... ... ... 242
Ports in Tamil Nadu, expansion ... ... ... ... 131-133
Race Club, Madras, increase in number of Government nominated members ... ... ... ... ... ... ... ... 336-338
Railways (underground) in Madras City, construction ... 243-244
Sub-Jail, Tiruppur, construction of kitchen and compound walls ... ... ... ... ... ... ... ... 242
Textile Mills, cotton requirement ... ... ... ... ... 125-127

E

ELANGOVAN, THIRU G.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 418-420

ELECTRICITY—
Agricultural pump sets in Tirunelveli district, delay in giving power connection ... ... ... ... ... ... 487-488
Electricity department, number of work orders pending ... 596
Electricity worker at Cumbum, death due to shock ... ... 251-252
Ennore Thermal Station, purchase of equipments . . ... 251
Tariff, cancellation or reduction for small farmers and draught affected areas ... ... ... ... ... 595





*Pages.*

ELECTRICITY BOARD—
Accounts wing, number of posts for provident fund work ... 252
Office premises, use by unrecognised union ... ... ... 253

EMPLOYEE(S)—
Mayavaram-Mannargudi-Tiruvarur Electrical Undertakings, fixation of pay scales ... ... ... ... ... ... 370-371
Medical services, vacancies of posts of Civil Surgeons ... 559-560
Municipal Commissioners, number belonging to Scheduled Castes ... ... ... ... ... ... ... ... 590
Panchayat Union Commissioners, number belonging to Scheduled Castes ... ... ... ... ... ... ... ... 589
Superannuated officers, employment as heads of departments. 222-223

EXHIBITION—
Dolls exhibition, conduct of ... ... ... ... ... 588

EXPUNCTION(S)—
Governor's Address (M) ... ... ... ... ... ... 72
Rivers, linking of Cauvery, Krishna and Godavari ... ... 573

F

FACTORIES—
Bus tyres, new factory ... ... ... ... ... ... 15-16
Glass bottles, establishment factory ... ... ... 16-17
Scooter Factory in public sector, setting up ... ... ... 237-238
Sodium Di-carbonate Factory, Wallajahpet ... ... ... 14
Titanium Factory, starting ... ... ... ... ... 237

FAMILY PLANNING—
Grant to persons undergoing sterilisation operation, increase of ... ... .. ... ... ... ... ... 458
Regional Training Centre ... ... ... ... ... 355-356
Survey on adoption of methods by Population Council of India ... ... ... ... ... ... ... 458

FELICITATIONS—
Minister for Education and Local Administration (Dr. V. R. Nedunchezhiyan), felicitations on conferment of Honorary doctorate degree ... ... ... ... ... ... 26

FERTILISERS—
Fertiliser Plant, Tuticorin—integration with Heavy Water Plant ... ... ... ... ... ... ... 241-242
Fertiliser Plant, Tuticorin, setting up under joint sector ... 239-241

*Pages.*

FISH—
Sales Depots in every district, starting ... ... ... ... 590

FOREST(S)— ...
Hunting ... .. ... ... ... ... ... 369–370

## G

GANAPATHY, THIRU N.—
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... 623, 631–635

Governor's Address (M) ... ... ... ... ... ... 398

GANAPATHY, THIRU T.—
Pachaiyar Dam Scheme, stage ... ... ... ... ... 483

Radhapuram sub-taluk, upgrading ... ... ... ... 235

GURUSWAMY, THIRU N. V.—
Governor's Address (M) ... ... ... ... ... 500–501

## H

HANDICRAFTS—
Workers in rural areas, intensive scheme for improvement of ... ... ... ... ... ... ... ... ... 478–479

HANDLOOMS—
Powerlooms, increased .. ... ... ... ... 127–130

Printed colour sarees, earmarking production exclusively for ... ... ... ... ... ... ... ... ... 479–480

HARIJAN WELFARE—
Housing schemes, financial assistance from L.I.C. ... ... 229–234

Housing schemes for Harijans, Union Government's assistance ... ... ... ... ... ... ... 8–10

HANDE, DR. H. V.—
Avadi Tank Factory, alleged police excesses on striking workers (P.M.) ... ... ... ... ... ... ... 257–258

Beedi workers, six days a week working system ... ... 357–358



*Pages.*

HANDE, DR. H. V.—*cont.*
Bill for consideration, insufficient notice (point of order) ... 665
City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... 671
Clash among employees of Simpson Group of Companies (A.M.) ... ... ... ... ... ... ... ... 140–142
Constitution (Twenty-fifth Amendment), Bill, 1971, ratification, (R) ... ... ... ... ... ... ... 643, 644, 645, 646, 647–655

District Munsiffs, selection ... ... ... ... ... 362–363
Electricity Board (accounts wing), number of posts sanctioned for provident fund work ... ... ... ... ... ... 252
Government General Hospital, Madras, switching off of fans during winter period ... ... ... ... ... ... 4–5
Governor's Address (M) ... ... ... ... ... ... 386, 389–404, 509, 512, 544, 545, 553, 554, 555, 556, 557

Housing accommodation for employees in private firms provision by Government ... ... ... ... ... ... 134–137
Lorries and buses emitting too much of smoke, prosecution by police ... ... ... ... ... ... ... 490–491
Mayavaram–Mannargudi–Tiruvarur Electrical Undertakings, fixation of pay scales of employees ... ... ... 370–371
Mobile hospital, Gummudipoondi, closure ... ... ... 120–121
Mobile Libraries in Coimbatore district, closure ... ... 461–462
National Development Council meeting, inclusion of Tamil Nadu as backward State .. ... ... ... ... 333–335

Over bridges across Railway crossings at Dharmapuri–Adamankottai and Mc. Donald Choultry on Sankari road, details, re. construction ... ... ... ... ... ... ... 481
Point of order *re.*—Discussion on reports submitted to Government ... ... .. ... ... ... ... 255–256
Prohibition offenders, release ... ... ... ... 13–14
Tamil Nadu Cements, Alangulam, tender ... ... ... 239
Thanjavur Medical College Hospital, operation theatres number ... ... ... ... ... ... ... ... 352–353
U. N. Ground Water Project, discussion with U.N. Mission ... 563–565
Women and Children Hospital, construction of new building ... ... ... ... ... ... ... ... 353–354

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS—
Commissioner's Office, Managers ... ... ... ... 24–25
High Schools, starting . ... ... ... ... 25

Pages.

HOSPITALS AND DISPENSARIES—
Additional dispensary under Employees' State Insurance Scheme at Tiruppur Town, opening ... ... ... ... 561–562
Arumanai Dispensary in Vilavancode taluk, upgrading into hospital ... ... ... ... ... ... ... ... ... 455–456
Employees' State Insurance Headquarters Hospitals in Coimbatore district, supply of drugs prescribed by specialists ... 228
Employees' State Insurance Hospital in Coimbatore district, appointment of orthopædist ... ... ... ... ... 228
Employees' State Insurance Hospital, Somanur, non-opening. 229
General Hospital, pollution of air by railway engine smoke ... 561
Government Dispensary, Tengapattanam, upgrading into hospital ... ... ... ... ... ... ... ... ... 456
Government General Hospital, Madras, switching off of fans during winter period ... ... ... ... ... ... 4–5
Government Headquarters Hospital at Coimbatore, water scarcity ... ... ... ... ... ... ... ... 2–3
Government Hospital, Gingee, establishment of Pathological laboratory ... ... ... ... ... ... ... ... 5–6
Government Hospital, Gingee, establishment of X-ray Unit ... 6
Government Hospital, Gingee, opening of Ophthalmic Unit ... 5
Government Hospitals in Madras city with air conditioned theatre, number ... ... ... ... ... ... ... 3–4
Government Hospitals in Madras, purchase of X-Ray films 350–351
Government Hospital, Kuzhithurai, shifting ... ... ... 560–561
Government Hospital near Tambaram, opening ... ... ... 223
Government Hospital, Sulur, opening of operation theatre ... 456
Government Hospital, Thiruvarur, construction of new building for ... ... ... ... ... ... ... ... ... ... 456–457
Government Mental Hospital, Kilpauk, centenary celebrations. 350
Mobile hospital, Gummudipoondi, closure ... ... ... ... 120–121
Mobile T.B. Clinic in Madurai, provision ... ... ... ... 227–228
Primary Health Centres, Conversion into rural hospitals ... 225–226
Primary Health Centre, Gummudipoondi, construction of building for ... ... ... ... ... ... ... ... ... 457
Primary Health Centre, Melmalaiyanur, increase of bed facilities ... ... ... ... ... ... ... ... ... 226–227
Primary Health Centre, Vallam Panchayat Union, provision of own building ... ... ... ... ... ... ... ... 457
Sholavandan Panchayat Union Hospital, upgrading ... ... 121–122
Thanjavur Medical College Hospital, number of operation theatres ... ... ... ... ... ... ... ... 352–353



Pages.

HOSPITALS AND DISPENSARIES—cont.
Thanjavur-Sengipatti Tuberculosis Sanatorium, Government grant ... ... ... ... ... ... ... ... ... 227
Women and Children Wing in Chingleput Hospital, construction of new building ... ... ... ... ... ... 353–354

HOSTEL(S)—
Students of Pasuvanthanai High School, opening ... ... 358–359

HOUSING—
Construction of houses through Agricultural Workers Co-operative Societies ... ... ... ... ... ... ... 590–593
Housing accommodation for employees in private firms, provision by Government ... ... ... ... ... ... 134–137
Housing Schemes for Harijans, Union Government's financial assistance ... ... ... ... ... ... ... 8–10

I

IDOLS—
Theft, prevention ... ... ... ... ... ... ... ... 371–372
Unearthed in Thiruvathigai ... ... ... ... ... 138–139

INDIAN MEDICINE—
Indian Medicine and Homoeopathy, opening of Research Centres ... ... ... ... ... ... ... ... 224–225

INDUSTRIES—
All-India Trade Test, conduct in Madras City ... ... ... 360
Cigar industry by Government at Palladam, establishment. 563
Embroidery Unit in Erode, establishment ... ... ... 563
Industrial potentialities in Tiruttani taluk, investigation ... 362
Papanasam Paper Mills, particulars ... ... ... ... 130–131
Potassium Chlorate Plant, Thiruvedagam ... ... ... 15
Steel Plant near Arkonam, commencement of production ... 360–361

IRRIGATION—
Ground water in Thanjavur district, utilisation ... ... ... 363
Nandan channel, Gingee taluk, desilting and reclamation ... 565
Pachaiyar Dam Scheme, stage ... ... ... ... ... 483
Periyar Improvement Scheme, estimated cost ... ... ... 483
Periyar system, water levels ... ... ... ... ... 17
Pond Scheme at Kanjampalayam, execution ... ... ... 243
Pond scheme at Varanasipalayam, execution ... ... ... 242
Research Station at Poondi, financial assistance by Indian Council of Agricultural Research ... ... ... 485
Rivers linking of Cauvery, Krishna and Godavari ... ... 570–573
Sivayam tank, Kulitalai taluk, reclamation ... ... ... 243

IRRNGATION—*cont.*

Thiruvaduthurai Mutt lands, Collection of Manimuthar Betterment levy .. .. .. .. .. .. .. 565
U.N. Ground Water Project, discussion with U.N. Mission .. 563-565
Water Atlas to show ground water r sources, preparation .. 565

**J.**

JAIL(S).

Sub-Jail, Tiruppur, construction of kitchen and compound walls 242

JAMES, THIRU J.—

Avadi Tank Factory Workers, alleged police excess on workers on strike (A.M.) .. .. .. .. .. .. 257
Avadi Tank Factory, Police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leaders (A.M.) .. .. .. .. .. .. .. 375
B. & C. Mills, Madras (St.) .. .. .. .. .. .. 375
Governors' Address (M) .. .. .. .. .. .. 386, 420–424, 425, 443
Simpson workers, panic and insecurity due to attack by armed group at their houses (AM) .. .. .. .. .. 263–264, 266

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) .. .. .. .. .. .. .. .. .. 630–631

JUDICIARY—

District Munsiffs, selection .. .. .. .. . 362–363

**K.**

KALIMUTHU, THIRU K.—

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R). 613-616
Governor's Address (M) .. .. .. .. .. 185–189

KANDAPPAN, THIRU S.—

Governor's Address (M) .. .. .. .. .. .. .. 28-43, 393, 424, 425

KANDASAMI, THIRU MANALI C.—

Electricity tariff, cancellation or reduction for small farmers and draught affected areas .. .. .. .. .. .. .. 595
Governor's Address (M) .. .. .. .. .. .. .. 501-505
Handlooms, earmarking production of printed colour sarees exclusively for .. .. .. .. .. .. .. 479–480





KANDASWAMY, THIRU K.—

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R). 627–630
Governor's Address M) .. .. .. .. .. .. 197–203

KANDASWAMY, THIRU M.—

Governor's Address (M) .. .. .. .. .. .. 51–56

KARIVENGADAM THIRU M. V.—

Governor's Address (M) .. .. .. .. .. .. 173–174

KARUNAINATHAN, THIRU J.—

Governor's Address (M) .. .. .. .. .. .. 437–440

KARUNANIDHI, DR. M.—

Avadi Tank Factory, Police excess workers on strike (A.M.). 258–263
Avadi Tank Factory, Police lathi charge on the workers resulting in injury to several workers including Trade Union Leaders (A.M.) .. .. .. .. .. .. 380–384
Bill for consideration, insufficient notice (Point of Order) .. 666
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R). 644, 645, 650
Governor's Address (M) .. .. .. .. .. .. 80, 83, 84, 167, 169, 184, 189, 284, 285, 306, 307, 390, 391 392, 395, 397, 398, 399, 403–404 528, 532, 533, 535–553, 556
Political meetings—disturbance in a concerned manner as at Tiruchirappalli (A.M.) .. .. .. .. .. 268–270
Simpson Group of Companies, Clash among employees (A.M.) 144–152, 153, 154
Simpson workers, panic and insecurity due to attack by armed group at their houses (AM) .. .. .. .. .. .. 264–266
Visit of Central Minister Thiru K. R. Ganesh to Hospital to see labour leaders under detention (A.M.) .. .. 495–496, 497–498

KAVERI MANIAM, THIRU S.—

Governor's Address (M) .. .. .. .. .. .. 291–294

KHADER BATCHA ALIAS VELLAICHAMY—

Governor's Address (M) .. .. .. .. .. .. 427–431

KHADI—

Khadi and Village Industries Board, excess grant by Government 365
Khadi and Village Industries Board extension of ceramic industry to all villages .. .. .. .. .. .. .. 246
Khadi and Village Industries Board, increase of price of mud pots .. .. .. .. .. .. .. 246
Khadi and Village Industries Board, supply of tools and implements to those in ceramic industry .. .. .. .. 246
Purchase of cotton from other States, avoidance .. .. 365

**K—*cont.***


KITTAPPA, THIRU N.—

| | |
|---|---|
| Agriculturists' Delegation to other States on study of methods .. | 581 |
| A.V.C. College, Mayuram, grant, claimed from Government .. | 581 |
| Cars in Madras City, new instruments to detect speed .. .. | 253 |
| Government Hospital at Thiruvarur, construction of new building for .. .. .. .. .. .. .. .. .. | 456–457 |
| Ground water in Thanjavur district, utilisation .. .. .. | 363 |
| Harijans financial assistance from LIC for Housing Schemes .. | 229–234 |
| Khadi, avoidance of purchase of cotton from other States .. | 365 |
| Khadi and Village Industries Board, excess grant by Govt. .. | 365 |
| Khadi and Village Industries Board, extension of ceramic industry to all villages .. .. .. .. .. | 246 |
| Khadi and Village Industries Board, extension of services to villages .. .. .. .. .. .. .. | 365 |
| Khadi and Village Industries Board, supply of tools and implement to those in ceramic industry .. .. .. .. .. | 246 |
| Mobile Courts in Madras City, number .. .. .. .. | 450 |
| Motor number plates, legislation for writing Tamil numbers ... | 596 |
| Municipal Commissioners, number belonging to Scheduled Castes ... ... ... ... ... ... ... ... | 590 |
| Panchayat Unions, bifurcation .. .. .. .. .. .. | 349–350 |
| Panchayat Union Commissioners, number belonging to Scheduled Castes ... ... ... ... ... ... ... ... | 589 |
| Railways (underground) in Madras City, construction ... | 243–244 |
| State Transport, appointment of women drivers and conductors ... ... ... ... ... ... ... ... | 19–24 |
| State Transport long distance express buses, naming after Tamil Kings and leaders ... ... ... ... ... ... | 490 |
| Temple car at Tiruvarur, expenditure for repairs .. .. | 597 |
| Temple cars, starting of schools for training persons in construction of ... ... ... ... ... ... ... ... | 493 |
| Tuberculosis Sanatorium, Thanjavur–Sengipatti, Government grant ... ... ... ... ... ... ... ... | 227 |

KOTHANDARAMIAH, THIRU K. S.—

| | |
|---|---|
| Governor's Address (M) ... ... ... ... ... ... | 174–176 |

KUMARASAMI, THIRU K. N.—

| | |
|---|---|
| Cigar industry by Government at Palladam, establishment ... | 563 |
| Counterfeit coins, gang in Tamil Nadu ... ... ... ... | 338–339 |
| Date trees, cultivation in sandy places like Mandapam and Rameswaram ... ... ... ... ... ... ... | 485 |
| Government Hospital at Sulur, opening of operation theatre .. | 456 |




**K.—*cont.***


KUMARASAMI, THIRU K. N.—

| | |
|---|---|
| Governor's Address (M) ... ... ... ... ... ... | 294–298 |
| Houses, construction through Agricultural Workers' Co-operative Societies .. .. .. .. .. .. .. | 590–593 |
| Machine Embroidery Unit in Erode, establishment .. .. | 563 |
| Poultry Farm at Arasur, closure and conversion of building into maternity centre .. .. .. .. .. .. | 458–459 |
| Steel Plant, near Arkonam, commencement of production .. | 360–361 |
| Temples, publication of Tamil Slokas for Archana in Tamil .. | 373–374 |


**L**


LABOUR—

| | |
|---|---|
| Beedi workers, six days a week working system ... ... | 357–358 |
| Industrial disputes, referred for adjudication, details .. .. | 7–8 |
| Neyveli Lignite Corporation workers, demand for bonus ... | 122–123 |
| Plantation workers, steps taken by Government to meet demands of ... ... ... ... ... ... ... ... | 473–474 |
| Strike in Madras Harbour .. .. .. .. .. | 6–7 |
| Trade Unions of Co-operative Weaving Mills, recognition by secret ballot system ... ... ... ... ... ... | 475 |

LANDS—

| | |
|---|---|
| Landholdings, probe by Director of Tenancy Records ... ... | 10–11 |
| Temple lands, ceiling ... ... ... ... ... ... | 235–236 |

LATHEEF, THIRU M. A.—

| | |
|---|---|
| Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... | 621–627, 633, 646–647, 654, 655 |
| Governor's Address (M) ... ... ...... ... ... ... | 307, 308, 440–448 |

LAW AND ORDER—

| | |
|---|---|
| Eve teasers, arrest near Sembiam ... ... ... ... | 217 |

LIBRARY—

| | |
|---|---|
| Local Library Authorities, expansion of work of ... ... | 459–460 |
| Mobile Libraries, districtwise establishment of .. .. .. | 461 |
| Mobile Libraries in Coimbatore district, closure ... ... | 461–462 |

LIGHTHOUSE—

| | |
|---|---|
| Construction at Marina sea-shore .. .. .. .. .. | 240–242 |

*Pages.*

LIQUOR—
- Arrack and toddy, quality control ... ... ... ... 219–221
- Arrack distilleries, setting up under co-operative sector ... 239
- Permission for manufacture in private sector ... ... ... 218–219
- Sale, ban on specific days ... ... ... ... ... ... 221

LOCAL BODIES—
- Panchayat, constitution of Town Panchayat T. Vadipatti, integrating certain panchayats ... ... ... ... ... 589
- Union with largest and lowest number of village panchayats 589
- Panchayat Unions, bifurcation ... ... ... ... 349–350

M

MADHAVAN, THIRU S.—
- Bill for consideration, insufficient notice (point of order) ... 665–666
- City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... 672–673
- Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... 601–604, 659–663

MALAICHAMY, THIRU P.—
- Dolls Exhibition, conduct of .. .. .. .. .. 588
- Fountain (colour) near Arignar Anna Square, German Government's assistance ... ... ... ... ... ... ... 484
- Pallava inscriptions in Chengam area, excavation .. .. 348–349

MANIAN, THIRU P. S.—
- Azhagar Koil, laying of road from foot hill to top ... ...
- Bridge across Periyar Canal at Anaipatti, reconstruction ... 364
- Bus roads, taking over by Highways Department ... ... 482–483
- Buses (private), writing of Kural couplets ... ... 254
- Cinema theatres (semi-permanent), places of location ... ... 218
- Fish Sales Depots in every district, starting ... ... ... 590
- Glass bottles, establishment of factory ... ... .. ... 16–17
- Government Colleges, B.Com. Degree Course ... ... ... 468–469
- Hindu Religious and Charitable Endowments Department, starting of high schools in every district ... ... ... 25
- Karnam, Valayapatti, complaints against ... ... ... 123–124
- Madras-Kanyakumari Highway, survey works ... ... 566–567
- Madurai-Alanganallur Road, estimates for repair ... ... 568
- Meenakshi Amman Temple, construction of shops in vacant sites around ... ... ... ... ... ... ... 492–496



*Pages.*

MANIAN, THIRU P. S.—*cont.*
- Midday Meals Scheme in Panchayat Union Schools, persons in-charge ... ... ... ... ... ... ... ... 462–463
- Mineral deposits in Alanganallur Co-operative Sugar Factory area ... ... ... ... ... ... .. ... 362
- Mobile Libraries, districtwise establishment of ... ... ... 461
- Mobile T. B. Clinic in Madurai, provision ...... ... ... 227–228
- Panchayats, constitution of T. Vadipatti Town Panchayat—integrating certain panchayats ... ... ... ... ... 589
- Panchayat Union with largest and lowest number of village panchayats ... ... ... ... ... ... ... 589
- Periyar Improvement Scheme, estimated cost ... ... ... 483
- Periyar system, water levels ... ... ... ... ... 17
- Potassium Cholorate plant, Thiruvedagam ... ... ... 15
- Prosperity Brigade, formation of all women wing ... ... 8
- Rice mills (modern), places of location ... ... ... ... 247–250
- Sholavandan Panchayat Union Hospital, upgrading ... ... 121–122
- State Transport, declaration of T. Vadipatti as a bus stop ... 596
- State Transport buses (long distance), provision of air-conditioned facilities in ... ... ... ... ... ... ... 489–490
- Taxis and auto-rickshaws in Madurai, non-fixation of meters ... 253
- Teachers (B.T.) training, teaching experience as condition ... 344–347

MANU NEETHI—
- Manu Neethi Scheme, Nandiyallam in North Arcot district .. 11–12

MARIMUTHU, THIRU A. R.—
- Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... 609–613, 386
- Governor's Address (M) ... ... ... ... ... ... 404–411, 412, 413

MARUDHACHALAM, THIRU N.—
- Electricity Board, use of office premises by unrecognised union 253
- Employees' State Insurance Headquarters Hospital, in Coimbatore district appointment of orthopaedist ... ... 228
- Employees' State Insurance Headquarters Hospital in Coimbatore district, supply of drugs prescribed by specialists ... 228
- Governor's Address (M) ... ... ... ... ... ... 277–281
- Schools and colleges, revision of syllabus ... ... ... 583–588

MIDDAY MEALS SCHEME—
- Nature of aid received from CARE and number of central kitchens ... ... ... ... ... ... ... ... 463–465
- Scheme in Panchayat Union Schools, person in-charge ... 462–463

Pages.

MILLS—
Paper Mills, establishment at Gudalur ... ... ... ... 359-360

MINES AND MINERALS—
Mineral deposits in Alanganallur Co-operative Sugar Factory area ... ... ... ... ... ... ... ... 362

MOHAMMED KADHER MOIDEEN, Thiru S.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 191-195

MOIDEEN, Thiru THIRUPPUR A. M.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 396, 508 510-515

MOSES, Dr. M.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 67-68

MOTION(S)—
Adjournment Motions—
Avadi Tank Factory, police excesses on striking workers .. 256-263
Avadi Tank Factory, police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leader's .. .. .. .. .. .. .. .. 375-384
Enforced un mployment and consequent unrest .. .. 271-274
Nadars' High School, Thirumangalam, manhandling of a teacher and closure of the school ... ... ... ... 597-600
Political meetings, disturbance in a concerted manner as at Tiruchirappalli ... ... ... ... ... ... ... 267-270
Simpson Group of Companies, clash among employees .. .. 140-154
Simpson workers, panic and insecurity due to attack by armed group at their houses .. .. .. .. .. 263-266

Visit of Central Minister, Thiru K. R. Ganesh to hospital to see labour leaders under arrest and custody .. .. .. 493-499
Governor's Address, Motion of Thanks ... ... ... 28-85 154-203, 274-322, 385-448, 500-557
Governor's Address, Motion of Thanks, amendment to (Ann.). 86

MUNUSAMI, Thiru R. R.—
All India Trade Test, Conduct in Madras City .. .. .. 360
Arrack distilleries, setting up under Co-operative sector .. 239
Building Materials Display Centre, staff employed and cost of maintenance .. ... .. ... ... ... 484
District Munsiff's Court, in Gingee taluk, establishment ... 12-13



PAGES

MUNUSAMY, Thiru R. R.—cont.
Ennore Thermal station, purchase of equipments ... ... 251
General Hospital, pollution of air by Railway engine smoke ... 561
Government Hospital, Gingee, establishment of Pathological laboratory .. .. .. .. .. .. .. 5-6
Government Hospital, Gingee, stablishment of X-Ray Unit ... 6
Government Hospital, Gingee, opening of Ophthalmic Unit ... 5
Hindu Religious Endowment Commission's Office, Managers. 24-25
Idols unearthed in Tiruvathigai ... ... ... ... 138-139
Mobile hospital, Gummudipoondi, closure ... ... 120-121
Nandan Channel, Gingee taluk, desilting and reclamation ... 565
Primary Health Centre, Melmalaiyanur, increase of bed facilities ... ... ... ... ... ... ... 226-227
Primary Health Centre, Vallam Panchayat Union, provision of own building ... ... ... ... ... ... 457
Regional Family Planning Training Centre .. .. .. 355-356
Water Atlast to show Ground Water resources preparation .. 565

MUTHIAH, Thiru M.—
Agricultural pump sets in Tirunelveli district, delay in giving power connection ... ... ... ... ... 487-488
Hostel for students of Pasuvanthanai High School, opening. 358-359
Maniyachi Railway Station, renaming as Tyagi Vanchinatha Iyer Railway Station .. .. ... ... ... 575-576
Sub-taluks, criteria to upgrade into taluks ... ... ... 476

N

NACHIAPPAN, Thiru A. M. T.—
Governor's Address (M) ... ... ... ... ... 309-311

NAMES—
Vedaranyam, change of name as Thirumaraikkadu .. .. 476

NARAYANASAMI, Thiru M. V.—
Governor's Address (M) .. .. .. .. .. .. 298-302

NATARAJAN, Thiru N. V.—
Enforced unemployment and consequent unrest (A.M.) ... 273-274
Governor's Address (M) ... ... ... ... ... 167 171-172, 531
Strike in B. & C. Mills, Madras (St.) ... ... ... 496

Pages

N.C.C. (MEDICAL UNIT)—
Training camp at Red Hills ... 457

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Facilitations on conferment of Honorary Degree .. 26
Nadars' High School, Thirumangalam, Manhandling of a teacher by staff, and closure (A.M.) .. 599-600
Teachers of Singanallur Municipal Schools, Non-payment of salary (C.A.St.) .. 600

## O

OBITUARY REFERENCE—
Jagadambal Velayudham, Thirumathi, former Member of Tamil Nadu Legislative Assembly .. 455
Mahendra, Thiru, King of Nepal ... 559
Periyannan, Thiru K., former M.L.A. ... 1
Raghava Menon, Thiru R., former M.L.A. ... 1
Subramania Pillai, Thiru I. K., former M.L.A. ... 1

## P

PANEL OF CHAIRMAN .. 28

PAPERS LAID ON THE TABLE—
Abkari Ordinance, 1971, Notification ... 86
Agricultural Produce Markets Act, 1939 Notification ... 448
City Municipal Corporation Act, 1919, Notification ... 86-87
Commission of Inquiry, on untoward incidents at Annamalai Nagar, report ... 676
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971—
As introduced in Lok Sabha has passed by Houses of Parliament Lok Sabha debate, Rajya Sabha debate ... 207
District Municipalities Act, 1920, Notifications ... 87
Entertainments Tax Act, 1939, Notifications ... 87-88
General Sales Tax Act, 1959; Notification re., amendments ... 86, 558
Government Gazette, 17th December 1969.—erratum to notification requesting bifurcation of Modampatti Town Panchayat 323
Governor's Address to Members of Legislature (English and Tamil) .. 90
Indian Stamp Act, 1899, Notifications ... 88, 89, 90
Legislative Assembly, (Fifth Assembly—Third Session, First meeting), resume of work ... 89





Pages

PAPERS LAID ON THE TABLE—cont.
Liquor (Licence of permit) Rules, 1960 Notifications re. amendments ... 322, 206
Livestock Development Committee, 1970, notification ... 676
Motor Accidents Claims Tribunal Rules, 1961, Notification, re. amendment ... 206
Motor Vehicles Act, 1939, notification re. amendment ... 323
Motor Vehicles, 1940, Notification re. amendment ... 88
Panchayats Act, 1958, notification ... 206
Plantations Labour Rules, 1955, notification re. amendment ... 86, 88
Prohibition Act, 1937, Notifications re. amendments ... 88, 206
Public Service Commission Regulations, 1954, Notification re. amendments ... 676-677
Return of Assets, certain Ministers and Members ... 87, 206
Slum Areas (Improvement and Clearance) Act, 1971, Notifications ... 88
Stamp (Prevention of undervaluation of Instruments) Rules, 1968, Notification re amendment ... 88
Tamil Conference at Paris (Third International), speech by Thiru I. Mahadevan, I.A.S. ... 90

PENSION—
Old age pension, increase ... 111-112

PERUMAL, THIRU A. R.—
Governor's Address (M) ... 505-510, 518, 527

PLANTATION—
Banana Research Station, number ... 485-486

POINTS OF ORDER—
Bill for consideration, insufficient notice ... 663-668
Discussion on Reports submitted to Government ... 255-256

POLICE—
Benevolent Fund, increase ... 109-110
Crimes in Tamil Nadu, incidence of high percentage ... 109
Muslims in Police Department, percentage of representations. 110-111

POLYTECHNICS—
Women's Polytechnics, Central grant ... 469-471

PONNAPPA NADAR, THIRU R.—
Avadi Tank Factory, Police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leaders, (A.M.) .. 375, 376-377

*Pages.*

PONNAPPA NADAR, THIRU R.—*cont.*
Bill for consideration, insufficient notice (Pt. of order) ... ... 664–665, 666, 667
City Tenants' Protection (Amendment) Bill, 1972 .. .. .. 671–672
Clash among employees of Simpson Group of Companies (A.M.) 143–144
Constitution (Twenty-fifth Amendment), Bill, 1971, ratification, (R) .. .. .. .. .. .. .. .. .. 624, 625, 655–659
Governor's Address (M). .. .. .. .. .. .. 305, 385, 507, 516–535, 556
Visit of Central Minister Thiru K. R. Ganesh to see labour leaders under detention (A.M.) .. .. .. .. 496–497

PORTS.
Air Port at Coimbatore, development .. .. .. .. .. 574
Expansion in Tamil Nadu .. .. .. .. .. .. .. 131–133
Thengaipattinam, conversion as minor port .. .. .. .. 133–134

POULTRY.
Poultry Farm at Arasur, closure and conversion of building into maternity centre .. .. .. .. .. .. .. 458–459

PROHIBITION.
Offenders, release .. .. .. .. .. .. .. 13–14

PROSPERITY BRIGADE.
All-women wing, formation .. .. .. .. .. .. 8

PUBLIC HEALTH.
Malaria Eradication Programme, Madras city .. .. .. 354–355
Mosquito menace in Madras city, preventive steps .. .. .. 119–120


## R


RACE CLUB.
Madras, increase in number of Government-nominated members. 336–338

RAFFLES.
Sale proceeds, allotment to medical institutions .. .. .. 112–113

RAILWAY(S).
Madras–Coimbatore Express Train, introduction .. .. .. 364
Muniyachi Railway Station, renaming as Tyagi Vanchinatha Iyer Railway Station .. .. .. .. .. .. .. 575–576
Railway links for Kanyakumari, steps .. .. .. .. 574–575
Underground railways in Madras city, construction .. .. 243–244







*Pages.*

RAJA, THIRU A. M.
Government Hospitals in Madras city with air conditioned theatre, number .. .. .. .. .. .... .. 3–4
Temples in Bhavani and Gobichettipalayam taluks, lands .. .. 137–138

RAJAMANICKAM, THIRU K.
Governor's Address (M) .. .. .. .. .. .. 316–319

RAJANGAM, THIRU N.
Governor's Address (M) .. .. .. .. .. .. 154, 155–159

RAJU, THIRU J. S. [redacted]
Governor's Address (M) .. .. .. .. .. .. 161–165

RAMACHANDRAN, THIRU S.
Governor's Address (M) .. .. .. .. .. .. 47–48, 531

RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.
Constitution (Twenty-fifth Amendment), Bill, 1971, ratification, (R) .. .. .. .. .. .. .. .. 604–606

RANGANATHAN, THIRU K.
Governor's Address (M) .. .. .. .. .. .. 431–434

RESOLUTION(S).
Constitution (Tewnty-fifth Amendment), Bill, 1971, ratification. 601–663
Cotton Transport Rules, 1950, draft amending rules .. .. 673–676

RICE MILL(S).
Modern, places of location .. .. .. .. .. .. 247–250

ROAD(S).
Bus roads, taking over by Highways Department .. .. .. 482–483
Kattalai—Renganathapuram Road, metalling .. .. .. 590
Madras–Kanyakumari Highway, Survey Works .. .. .. 566–567
Madurai–Alanganallur Road, estimates for repair ... ... 568
Ulundurpet–Salem Road, surrender of contract for widening .. 569


## S


SALT.
Salt areas in Tuticorin, handing over to State Government by Central Government .. .. .. .. .. .. 476–478

SANCTUARY.
Chidren's Park, Guindy. Transport of stage to Javadi Hills .. 369

SANDALWOOD.
Auction in North Arcot District, income .. .. .. .. 594–595

Pages.

S—*cont.*


**SANGUMUTHU THEVAR, THIRU S.**

| | |
|---|---|
| Building Materials Display Centre, grounds for selection of items for display .. .. .. .. .. .. .. | 484 |
| Colleges, number to be opened in 1971–72 in Madras City and details re .. .. .. .. .. .. .. .. | 465–468 |
| Crimes in Tamil Nadu, incidence of high percentage .. .. | 109 |
| Educational institutions in Rajapalayam, teaching of Telugu .. | 116–117 |
| Electric Motors, theft .. .. .. .. .. .. .. | 340 |
| Farm Record Book, introduction .. .. .. .. .. | 485 |
| Government buildings, Tamil names .. .. .. .. .. .. | 131 |
| Government Hospital near Tambaram, opening .. .. .. | 223 |
| Government Mental Hospital, Kilpauk, centenary celebrations .. | 359 |
| Governor's Address (M) .. .. .. .. .. .. .. | 189–191 |
| Indian Medicine and Homoeopathy, opening of Research Centres. | 224–225 |
| Kalyana Mandapam of Sri Kapaleeswarar Temple, leasing .. | 372 |
| Land holdings, probe by Director of Tenancy Records .. .. | 10–11 |
| Local Library Authorities, expansion of work of .. .. .. | 459–460 |
| Papanasam Paper Mills, particulars .. .. .. .. .. | 130–131 |
| Powerlooms, increase .. .. .. .. .. .. | 127–130 |
| Seed Farm, setting up in Tamil Nadu by Seed Farms Corporation. | 17 |
| Siva Temple, Thiruveelimilalai, discovery of ancient paintings. | 347–348 |
| Taxi travel for Cinema goers during nights, arrangements .. | 18 |
| Temple funds, utilisation for improvement of sanitary facilities. | 25 |
| Training School for Women (Government), Vellore, construction of building .. .. .. .. .. .. .. .. .. | 581 |

**SARATHI, THIRU M. P.**

| | |
|---|---|
| Banana Research Station, number .. .. .. .. .. .. | 485–486 |
| Sandalwood, auction in North Arcot District, income .. .. | 594–595 |

**SCHOOL(S).**

| | |
|---|---|
| Educational institutions in Rajapalayam, teaching of Telugu .. | 116–117 |
| Elementary School (newly constructed) at Ananthal, non-functioning .. .. .. .. .. .. .. .. .. | 342–343 |
| 'High School' Building Committee, Vijayapuram, application for Science Laboratory ... ... ... ... ... ... | 582 |
| High School, Lalapettai, construction of Science Laboratory ... | 583 |
| High Schools, starting by Hindu Religious and Charitable Endowments, Department in every district ... ... ... | 25 |
| Medical check-up (compulsory) for school children, introduction. | 117–119 |
| Middle Schools of Panchayat Unions, appointment of B.Ts. as Headmasters .. .. .. .. .. .. .. .. | 469 |
| Mode of inspection, intensification .. .. .. .. .. .. | 471–473 |




S—*cont.*

Pages.


**SCHOOL(S)**—*cont.*

| | |
|---|---|
| Municipal Schools, Wallajapet, taking over by Government .. | 340–341 |
| Primary and High Schools of Wallajapet Municipality, non-payment of salaries to teachers .. .. .. .. .. | 341–342 |
| Syllabus, revision .. .. .. .. .. .. | 583–588 |
| Training School for Women (Government), Vellore, construction of building .. .. .. .. .. .. .. .. | 581 |

**SERVICES—**

| | |
|---|---|
| Fake Rice cards case, suspension of Civil Supplies Department officials .. .. .. .. .. .. .. .. | 124–125, 673 |

**SHANMUGAM, THIRU P. U.—**

| | |
|---|---|
| City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... | 668, 669, 673 |
| Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, Ratification (R) ... ... ... ... ... ... ... ... | 619, 620, 651 |
| Governor's Address (M) ... ... ... ...... ... ... | 77, 411–412, 413, 524, 525 |
| Madras City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... | 499 |

**SOMASUNDARAM, THIRU N.—**

| | |
|---|---|
| Co-operative Agricultural Bank, Nidamangalam, suicide by clerk due to defalcation ... ... ... ... ... ... | 245 |
| Co-operative Banks, reservation of seats of Director for depressed classes ... ... ... ... ... ... ... | 369 |
| State Transport town bus to Alangudi from Mannargudi via. Nidamangalam ... ... ... ... ... ... ... | 254–255 |
| Temple lands, ceiling ... ... ... ... ... ... ... | 235–236 |
| Vedaranyam, change of name as Thirumaraikkadu ... ... | 476 |

**SOUNDARA PANDIAN, THIRU P.—**

| | |
|---|---|
| High School, Lalapettai, construction of science laboratory ... | 583 |
| Kattalai—Renganathapuram Road, metalling ... ... ... | 590 |
| Middle Schools of Panchayat Unions, appointment of B.Ts. as Headmasters ... ... ... ... ... ... ... | 469 |
| Part-time Craft Instructors, appointment as full-time Instructors ... ... ... ... ... ... ... ... | 115 |
| Schools, intensification of mode of inspection ... ... ... | 471–473 |
| Sivayam tank, Kulitalai taluk, reclamation .. .. .. | 243 |
| Sub-Court at Karur, establishment ... ... ... ... ... | 73 |

**SRINIVASAN, THIRU T. P.—**

| | |
|---|---|
| Governor's Address (M) ... ... ... ... ... ... ... | 176–181 |

Pages.

STATE TRANSPORT—
Bus depot at Wandiwash ... ... ... ... ... ... 18–19
Bus stop at T. Vadipatti ... ... ... ... ... 596
Town bus to Alangudi from Mannargudi *via* Nidamangalam. 254–255
Traffic dislocation in Nandanam area due to clash between students and bus crew .. .. .. .. .. .. 597
Women drivers and conductors, appointment ... ... ... 19–24

STRIKES AND LOCKOUTS—
B. & C. Mills, Madras (St.) ... ... ... ... ... ... 426
Beedi workers in North Arcot District, strike ... ... ... 357
Labour strike in Madras Harbour ... ... ... ... ... 6–7

SUBBIAH, THIRU A. K.—
Avadi Tank Factory, alleged Police excesses on striking workers (A.M.) ... ... ... ... ... ... ... 256–257
Governor's Address (M) ... ... ... ... ... ... 434–436

SUBRAMANIAM, THIRU A.—
Bridge at Sengalipallam, construction ... ... ... ... 569–570
E.S.I. Dispensary at Somanur, non opening ... ... ... 229
Governor's Address (M) ... ... ... ... ... ... 165–173, 386–387
Avadi Tank Factory, Police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leaders (A.M.) ... ... ... ... ... ... ... 375 379–380
Railways (underground) in Madras City, construction ... ... 243–244
Rivers, linking of Cauvery, Krishna and Godavari ... ... 570–573

SUBRAMANIAM, THIRU K. M.—
City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... 670
Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... ... 641
Governor's Address (M) ... ... ... ... ... ... 43–51, 388

SUNDARAM, THIRU O. N.—
Governor's Address (M) ... ... ... ... ... ... 159–161

SUPPU, THIRU K.—
Constitution Twenty-fifth Amendment), Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... ... 606–609
Trade Unions of Co-operative Weaving Mills, recognition by secret ballot system ... ... ... ... ... ... ... 478



Pages.

SURENDRAN, THIRU M.—
Avadi Tank Factory, Police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leaders (A.M.) ... ... ... ... ... ... ... ... ... 375
Beardsell and Company, Mettur, enforced unemployment and Consequent unrest (A.M.) ... ... ... ... ... 271–272
Governor's Address (M) ... ... ... ... ... ... 56–63, 189, 387–388

T

TALUK(S)—
Gummudipundi sub-taluk, conversion into separate taluk ... 476
Sub-taluks, criteria to upgrade into taluks ... ... ... 476

TAXES—
Tax on gases used for catering details .. .. .. .. 11

TAXIS—
Taxis and autorickshaws in Madurai, non-fixation of meters 253
Taxi travel for cinema goers during nights, arrangements 18

TEACHERS—
Middle Schools of Panchayat Unions, appointment of B.Ts. as Headmasters ... ... ... ... ... ... ... ... 469
Panchayat Union Schools, disbursement of salary on ... ... 343–344
Part-time Craft Instructors, appointment as full time-Instructors ... ... ... ... ... ... ... ... ... 115
Singanallur Municipal Schools, non-payment of salary (C.A.) ... 600–601
Training (B.T.), teaching experience as condition ... ... ... 344–347

TEMPLE(S)—
Archana in Tamil, publication of Tamil slokas ... ... ... 373–374
Azhagar Koil, laying of road from foot hill to top ... ... 372–373
Bhavani and Gobichettipalayam taluks, lands ... ... ... 137–138
Car at Tiruvarur Temple, expenditure for repairs ... ... 597
Funds, utilisation for improving of sanitary facilities ... 25
Meenakshi Ammal Temple, construction of shops in vacant sites around ... ... ... ... ... ... ... ... 492–493
Sri Kapaleeswarar Temple, Kalyanamandapam, leasing ... 372
Sri Subramania Swami Devasthanam, Tiruttani, contribution to Government Arts College ... ... ... ... ... ... 373
Temple cars, starting of schools for training persons in construction of ... ... ... ... ... ... ... ... 493

THANGAMANI, THIRU K. T. K.—
Avadi Tank Factory, alleged police excess on striking workers ... ... ... ... ... ... ... ... ... 261–262

Pages.

THANGAMANI, THIRU K. T. K.—cont.

Avadi Tank Factory, Alleged Police lathi charge on workers resulting in injury to several workers including Trade Union Leaders, (A.M.) ... ... ... ... ... ... ... 375, 377–379, 384

Beardsell and Company, Mettur, enforced unemployment and consequent unrest (A.M.) ... ... ... ... ... ... 272

Bill for consideration, insufficient notice (Point of order) ... 662–664

City Tenants' Protection (Amendment) Bill, 1972 ... ... 670

Clash among employees of Simpson Group of Companies (A.M.) ... ... ... ... ... ... ... ... 142–143, 153

Constitution (Twenty-fifth Amendment) Bill, 1971, ratification (R) ... ... ... ... ... ... ... ... ... 635–643

Cotton growers, subsidy for long staple cotton .. .. .. 576–579

Cotton Transiport Rules, 1950, draft amending rules (R) ... ... ... ... ... ... 674–675

Electricity worker at Cumbum, death due to shock ... ... 251–252

Fertiliser Plant, Tuticorin—under joint sector ... ... ... 239–241

Governor's Address (M) ... ... ... ... ... ... 74–85, 305–307, 385, 556, 557

Industrial disputes referred for adjudication, details ... 7–8

Nadars' High School, Thirumangalam, Manhandling of a teacher by staff, and closure (A.M.) ... ... ... ... 597–599

Neyveli Lignite Corporation workers, demand for bonus ... 122–123

Plantation workers. steps taken by Government to meet demands of ... ... ... ... ... ... ... ... 473–474

Political meetings, disturbance in a concerted manner as at Tiruchirappalli (A.M.) ... ... ... ... ... ... 267–268

Visit of Central Minister Thiru K. R. Ganesh to Hospital to see labour leaders under detention (A.M.) .. .. .. 496–497

THEATRES—

Cinema theatres (semi-permanent), places of location ... ... 216

THYAGARAJAN, THIRU E. S.—

Family Planning, increase of grant to persons undergoing sterilisation operation ... ... ... ... ... ... ... 458

Governor's Address (M) ... ... ... ... ... ... ... 311–313

Industrial potentialities in Tiruttani taluk, investigation ... 362

Sri Subramania Swami Devasthanam, Tiruttani, contribution to Government Arts College ... ... ... ... ... ... 373

Tourist Home, Tiruttani, construction ... ... ... ... 593–594



TOURISM—

Tourist Home, Tiruttani, construction ... ... ... ... 593–594

TRANSPORT—

Buses (private), writing of 'Kural couplets' ... ... ... 254

Cars in Madras City, new instruments to detect speed ... 253

Lorries and buses emitting too much of smoke, prosecution by police ... ... ... ... ... ... ... ... 490–491

Lorry and bus traffic on roads between 2 a.m. and 4 a.m., prohibition ... ... ... ... ... ... ... ... 488–489

Motor number plates, legislation for writing Tamil numbers ... 596

State Transport buses (long distance), provision of air-conditioned facilities in ... ... ... ... ... ... 489–490

State Transport long distance express buses, naming after Tamil Kings and leaders ... ... ... ... ... 490

State Transport, workers, incentive bonus for ... ... ... 491–492

V

VADIVEL, THIRU S.—

Governor's Address (M) ... ... ... ... ... ... 181–185

Revenue administration in East Thanjavur, Separation ... 562–563

VEERASAMI, THIRU N.—

Governor's address (M) ... ... ... ... ... ... 424

VEGETABLES—

Potato storage plants, setting up ... ... ... ... 250–251

VENKATASWAMY, THIRU B.—

Governor's Address (M) ... ... ... ... ... ... 195–197

VEZHAVENDAN, THIRU K.—

Anjambedu—Sunnambu channel mini-dam, completion ... 565

Governor's Address (M) ... ... ... ... ... ... 413–418

Gummudipoondi sub-taluk, conversion into separate taluk ... 476

Primary Health Centre, Gummidipundi, construction of building for ... ... ... ... ... ... ... 457

State Transport workers, incentive bonus for ... ... ... 491–492

VILLAGE OFFICER(S)—

Karnam, Valayapatti, complaints against ... ... ... ... 123–124

VR11.31 N72



31 N72.15

W

WAHAB, Thiru, K. A.—
Beedi workers in North Arcot district, strike ... ... ... 351
Bus tyres, new factory ... ... ... ... ... ... ... 15-16
Co-operative Societies, exemption from registration fees ... 244
Elementary School (newly constructed) at Ananthal, non-functioning ... ... ... ... ... ... ... 342-343
Engineering Colleges, commencement of 'Sandwich Course' ... 115-116
Fertiliser Plant, Tuticorin, integration with Heavy Water Plant ... ... ... ... ... ... ... ... 241-242
Governor's Address (M) ... ... ... ... ... ... 302-305, 308-309
Handicraft workers in rural areas, intensive scheme for improvement of ... ... ... ... ... ... ... 478-479
Jewels and currency notes, seizure in a house at Coimbatore ... 339
Lighthouse at Marina sea-shore, construction ... ... ... 246-247
Lorry and bus traffic on roads between 2 a.m. and 4 a.m., prohibition ... ... ... ... ... ... ... ... 488-489
Manu Neethi Scheme, Nandiyalam in North Arcot district ... 11-12
Midday Meals Scheme, nature of aid received from CARE and number of central Kitchens ... ... ... ... 463-465
Municipal Schools, Wallajapet, taking over by Government ... 340-341
Muslims in Police department, percentage of representation ... 110-111
Primary and High Schools of Wallajapet Municipality, non-payment of salaries to teachers ... ... ... ... ... 341-342
Sathanur Dam, further beautification of ... ... ... ... 481
Sodium di-carbonate Factory, Wallajapet ... ... ... ... 14
State Transport, bus depot at Wandiwash ... ... .. 18-19
Teachers of Panchayat Union Schools, disbursement of salary on 1st of every month ... ... ... ... ... ... 343-344
Theft of idols, prevention ... ... ... ... ... ... 371-372
Vegetables, special programme for cultivation in Madras City ... ... ... ... ... ... ... ... ... 579-580
Visit of Central Minister Thiru K. R. Ganesh to hospital to see labour leaders under detention (A.M.) .. .. .. 494-495

61540